திருக்குறள்

மணிவிளக்க் வுரை

(இரண்டாம் பகுதி)

உரையாசிரியர்:

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை,

எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (ஆங்கிலம்), விசாரத் (இந்தி), எல்.டி.

அலமேலு நிலையம்

'அன்னை இல்லம்'

8, அப்பாத்துரையார் தெரு,

தேனாம்பேட்டை :: சென்னை-18.

முதற் பதிப்பு—ஜூன் 1968.

உரிமை :
திருமதி. அலமேலு அப்பாத்துரை

விலை ரூபாய் 20

அச்சிட்டோர் :
செல்வம் அச்சகம், தேனாம்பேட்டை, சென்னை-18.

பதிப்பாளர் பணிவுரை

தமிழில் உலகப் பொது மறையாம் திருக்குறளுக்கு முழுதளவான விருத்தியுரை இல்லாக் குறையையும், 20-ம் நூற்றாண்டுக்குரிய அறிவுலகப் புத்தாராய்ச்சியுரை இல்லாக் குறையையும் நீக்க வல்ல பேருரை இத் திருக்குறள் மணிவிளக்க வுரை, தன்மொழிப் பற்றும் தன்மொழி யறிவும் ஒரு சிறிதும் கைவிடாது தமிழ்ப் பணிக்கும் அறிவுப் பணிக்கும் தம் வாழ்வை ஒப்படைத்து, அதனால் இன்னல் பல அடைந்துள்ளவர் பன்மொழிப் புலவர் அப்பாத்துரை எம். ஏ. (தமிழ்), எம். ஏ. (ஆங்கிலம்), விசாரத் (இந்தி), எல். டி., என்பதைத் தமிழுலகில் அறியாதார் இல்லை. பல வெளியீட்டகங்கட்கும் இருநூற்றுக்கு மேற்பட்ட தமிழ்-ஆங்கில ஆராய்ச்சி ஏடுகளைத் தந்த அவரது இவ்வாழ்க்கைப் பெரும் பணியை பல இடையூறுகளுக் கிடையிலும் வெளியிட முன் வந்து, இவ் இரண்டாம் பகுதியைத் தமிழக நன்மக்களுக்குக் காணிக்கை ஆகப் படைக்க முன்வந்துள்ளோம்.

தமிழக மக்களும், மக்கள் தலைவரும், தமிழக அரசும் எம் சிறு தலைப் பெரும் பணிக்கு ஊக்கமளித்து மீந்த பகுதிகளையும் விரைவில் முடித்து வெளியிட உதவுவார்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
அலமேலு நிலையத்தார்.

பொருளடக்கம்

1.	அறத்துப்பால் - முன்னுரை.		1
2.	பொதுவற (இல்லற) இயல் - முன்னுரை.		13
3.	அதிகாரம்	5 இல்வாழ்க்கைச் சிறப்பு	27
4.	,,	6 வாழ்க்கைத் துணை நலம்	159
5.	,,	7 மக்கட்பேறு	319
6.	,,	8 அன்புடைமையின் சால்பு	573

திருக்குறள்
மணிவிளக்க வுரை

அறத்துப்பால்
முன்னுரை

இயற்கை அமைதி என்னும் நிலத்தளத்தின்மீது, குடும்ப சமுதாய அமைதிகள் என்னும் தூண்கள், சுவர்கள் எழுப்பப் பெற்று, அவற்றின் மீது இன அமைதி என்னும் கூட கோபுர முகடுகள் கட்டமைக்கப்பட்ட பாரிய உயிர்க் கட்டடமாக நாம் அறத்தை உருவகப்படுத்திக் காணலாம்.

கடவுளின் எல்லையற்ற ஆற்றல் ஊழ். ஆனல் அது இயக்க மற்றது, வளர்ச்சியற்றது. அதன் இயங்குகிற, வளர்கிற—இயக்குகிற, வளர்க்கிற உயிர்க் கூறே அறம். திருவள்ளுவர் அதனை ஒரு வளரும் பண்பாக, பண்பு மலர்ச்சி யியக்கமாக, மனித இனத்தை வளர்த்து மனித இனத்தாலேயே வளர்க்கப் படும் ஓர் இயக்கமாக நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

அறம் முப்பாலில் ஒரு பால், முதற் பால். ஆனல் அது முப்பாலும் அளாவிய, முப்பாற் கூறுகளும் அடங்கிய ஒரு பால் ஆகும். இயற்கை அமைதி அதன் அறக் கூறு; அது நேர்மை என்னும் பண்பில் ஊன்றிய கூறு. சமுதாய அமைதி அதன் பொருட் கூறு: அது அறிவு, மெய்ம்மை ஆகியவற்றில் ஊன்றிய கூறு. குடும்ப இன அமைதிகளே ஆதன் இன்பக் கூறு: இது காதல், அன்பு, அருள் ஆகிய பண்புகளில் ஊன்றிய கூறு ஆகும்.

அறம் மனித இன நாகரிகத்துடன் நாகரிகமாக வளர்ந்து வந்துள்ள, வளர்ந்து வருகிற ஒரு பண்பு; வளர்ந்து வந்துள்ள, வளர்ந்து வருகிற ஒரு தத்துவம் ஆகும். அறம் என்ற தமிழ்ச் சொல் அந் நாகரிக வரலாற்றில் படிப்படியாக வளர்ந்து வந்துள்ள அக் கருத்துப் படிவத்தின் ஓர் இயங்கு படப் பிடிப்பு என்னலாம். ஏனெனில் தமிழில் அதன் பல்வேறு சொற்பொருள்கள் நாகரிகத்தின் பல்வேறு படிகளுக்குரிய கருத்துப் படிவங்களையே காட்டுகின்றன. உலகின் மற்ற மொழிகளிலும் நாம் இப் படிகளில் சில பலவற்றைக் காண லாம். ஆனல் எந்த மொழியையும்—தமிழ் மொழியையே கூடத் தாண்டி, அதனை ஒரே இயக்க வளர்ச்சி யாகவும், பண்பு மலர்ச்சியாகவும், ஒரு புதிய, முழுமையான, திட்ட மிட்ட வாழ்க்கை இயக்கத் தத்துவமாகவும் ஆக்கிப் படைத் துச் சென்றுள்ளவர் திருவள்ளுவர் ஒருவரே என்னலாம்.

அறம்: இயங்கு கருத்துக்குரிய இயங்குபடமாகிய சொல்.

அறம் என்ற சொல்லின் முதல் படித்தளத்துக்குரிய பொருள்கள் கடவுள், கடவுளாற்றலாகிய ஊழ், ஊழ்த்திறஞ் சான்ற மாரு மெய்ம்மை, ஊழ்த் திறம் வாய்ந்த மாரு விளை வுடைய சான்ருேரின் திண்ணிய சொல், பொருள்களின் தனி இயல்பு அல்லது இயற்கைக் குணம் ஆகியவையே. இச்சொற் பொருள்களிடையே, ' அறம் வெல்லும் ' என்ற முதுரையில் முதல் மூன்று பொருள்களையும்; 'அறம் பாடுதல்' என்ற வழக் காற்றில் நான்காவது பொருளையும் நாம் காணலாம். புத்தர், மகாவீரர் கால வழக்காற்றில் இச் சொல்லுக் கிணை யான சமஸ்கிருத மரபுச் சொல் (தர்மம்) ஐந்தாவது பொரு ளிலேயே—மாரு இயற்கை இயல்பு என்ற பொருளிலேயே— பேரளவில் வழங்கி வந்தது. அறம் என்ற சொல்லின் இரண் டாவது படித் தளத்துக்குரிய பொருள் நேர்மை, மர பொழுங்கு முறை, சட்ட முறை, நீதி ஆகிய கருத்துக்களைச் சுட்டுகிறது. 'இது அறமன்று' என்று கூறும்போது, நாம் இன்றும் இச் சொல்லை நேர்மை என்ற பொருளில் வழங்கு கிருேம். அறங்கூறவையம் (வழக்கு மன்றம்) என்ற பழந் தமிழ் இலக்கிய வழக்கில் சட்ட முறை நீதி என்ற பொருளும்

பதிவு செய்யப்பட்டுள்ளது. மூன்றுவது படித்தளத்துக்குரிய பொருள்கள் நல்லொழுக்கம், ஒழுக்கச் செயல், நல்வினைகளில் ஒன்றுன ஈகை, சமுதாயத் தொண்டு ஆகியவையே யாகும். கி. பி. 12-ம் நூற்றுண்டுக்கு உரியவராகக் கருதப்படத் தக்க ஔவையாரின் ஆத்திச்சூடியில் அறம் என்ற சொல் ஈகை அல்லது நற்செயல் என்ற பொருளிலேயே வழங்கியுள்ளது. மேலையுலகிலும் அறம் என்பதற்குரிய ஒரு சொல்[1] முன் இரண்டு பொருள்களையும், மற்றொரு சொல்[2] பின் இரண்டு பொருள்களையும் ஒருங்கே சுட்டுதல் காணலாம்.

அறம் என்ற வள்ளுவச் சொல் மேற்கூறிய எல்லாப் பொருள்களையும் உள்ளடக்கியதன்றி, அவற்றை ஒரே வளர்ச்சிப் பண்பாக்கிக் குறிக்கிறது. அதுமட்டு மன்று. அவ் வியக்க வளர்ச்சியின் அணி மகுடமாக, அது அவருக்கே உரிய தோர் ஐந்தாம் படிப் பொருளையும் இணைத்துக் கூறுகிறது. அதுவே நேர்மையில் ஊன்றி, அன்பில் படர்ந்து, அருள் பூத்து, இன்பப் பழம் பழுக்கும் ஒரு பொற்பூங் கொடியாகத் திருக்குறளில் தவழும் அன்பு — பண்பு — சால்பு — அருள் மலர்ச்சிக் கருத்து ஆகும். இவ் வள்ளுவக் கருத்து சமஸ்கிருதத்திலும் இந்தியாவின் எல்லா மொழிகளிலும் பரவி, அறம் என்பதற்கும் அதற்குரிய சமஸ்கிருதச் சொல்லுக்கும் (தர்மம்) சமயம், சமயப் பணி, ஆன்மிகத் துறை ஆகிய பொருள்களைத் தந்துள்ளது. அறநிலையம் என்றும் தர்ம காரியம் என்றும் தர்மாத்மா (மகாத்மா) என்றும் வள்ளுவப் பொருள் சுட்டி இச் சொல் இன்றும் வழங்குவது காணலாம்.

ஒரே திருக்குறளை மொழி பெயர்க்கப் புகுந்த பல மேலை யுலக, கீழையுலக மொழிபெயர்ப்பாளர்களிடையே, அறம் என்ற ஒரே சொல், அவரவர் மனப்பான்மைக் கேற்ப, வாழ்க்கைமுறை (தர்மம்), நேர்மை [3], ஒழுக்கம் [4], கடமை [5], நன்னடத்தை [6], நற்குணம் [7] எனப் பலவாருகச் சொல்லுருப் பெற்று விளங்குதல் இதனுலேயே என்னலாம்.

---

1. Ethics, Morality 2. Charity 3. Righteousness
4. Ethics, Morality 5. Duty
6. Good conduct, Good behaviour 7. Virtue

வள்ளுவ அறம்: ஒரு வாழ்க்கைத் திட்டம்.

திருவள்ளுவரின் ஒழுக்க முறையும் அதன் பின்னணியான திருக்குறளின் வாழ்க்கை முறையும் இரண்டுமே நன்கு ஒருங்கு இணைந்துத் திட்டமிடப் பட்டவை ஆகும். அதுமட்டு மன்று. அவர் திட்டமிட்ட ஒழுக்க முறைக்கு அடிப்படையா யமைந்த வாழ்க்கை முறை மிகப் பரந்தகன்ற சமுதாய, இன அமைப்பின் மீது கட்டமைக்கப்பட்ட ஒன்றாகும். அந்தச் சமுதாயம் நாடு மொழி, கால இட வேறுபாடுகளுக் குரிய சிறு தனிச் சமுதாயங்களல்ல, அவற்றை எல்லாம் உள்ளடக்கிய மனித சமுதாயம், அதன் வேர் மூலமாய் அமைந்த உயிர்ப் பெரும் சமுதாயமே யாகும். அது போலவே அந்த இனம் நாடு மொழி, கால இட வேறுபாடு களுக்குட்பட்ட சிறு தனி இனங்களில் ஒன்றன்று: அவற்றை யெல்லாம் தன்னகங் கொண்ட மனிதப் பேரினம், அதனை உள்ளடக்கிய உயிர்ப் பெரும் பேரினம் ஆகும். திருவள்ளுவர் வாழ்க்கை முறைத் திட்டமும் ஒழுக்க முறைத் திட்டமும் இதனாலேயே உலகின் உயர் குறிக்கோளாளர்கள் அனைவரின் உயர் கனவுகள், கனவார்வங்கள் ஆகியவற்றை நெடுந் தொலை மேற்சென்று தாண்டி, எல்லையற்ற அகல் விரி வுடைய கனவார்வக் குறிக்கோளாகவே திகழ்கின்றது. அதே சமயம் அது தனி மனிதனை, தனி உயிரை இவற்றுடன் தொடர்பற்ற தனிக் கூறாகக் கொண்ட வெறும் கருத்தியல் திட்டமாக அமையாமல், அவ்வினத்துக்கும் சமுதாயத்துக் கும் உரிய நேர் கூறான ஒரு குடும்ப உறுப்பாகவே கருதியத னால், வேறு எந்தச் சமய, சமுதாய, அரசியல் முறை ஒழுக்கத் திட்டங்களையும்விட, நடைமுறை வாழ்வுக்கு உகந்ததாகவும் அமைந்துள்ளது.

திருவள்ளுவர் வாழ்க்கை ஒழுக்கமுறை சூழல் சாராத, உயிருடன் உயிர்த் தொடர்பற்ற தனிநிலை முறை[1] அன்று, அச் சார்புகள் மிக்க தொடர்பியல் முறை[2] ஆகும்: அது திட்டமற்ற கூட்டியல் முறை[3] அன்று, திட்டமிட்ட கூட்

1. Absolnte or Isolated system 2. Relative system
3. Agglomerate

டிணைவு முறை[1] ஆகும்; அது உறுப்பு நலனை மறுத்த தொகுதி முறையும்[2] அன்று, தொகுதி நலன் கருதாத பகுதி முறையும்[3] அன்று; அது ஒரு தொடர்பியல் சரிசம நிலை—ஒருமைப்பாட்டுக் கூட்டிணைவுத் திட்டவியல் ஒழுக்க முறை[4] ஆகும்.

திருவள்ளுவரின் அற முறைக்குரிய இப் பேருண்மையைச் சொல்லளவிலேனும் மேலீடாகப் பரிமேலழகர் கண்டனர் என்பதில் ஐயமில்லை. ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மனு முதலிய நூல்களில் கூறிய அற வகை மூன்றில், 'உயிர்க்குறுதி பயக்கும்', 'தேய இயற்கை கடந்த ஒழுக்கமே' தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் 'அறம் என எடுத்துக்கொள்ளப் பட்டது' என அவர் முடிப்பது இதனாலேயே என்பது பொது முன்னுரையிலேயே விளக்கப்பட்டுள்ளது. ஆனால் அத்துடன் அடுத்து அவரே 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் ஆம்' என்றார். மனு முதலிய நூல் என்பது அவர் சார்பும் காலச் சார்பும் அவர் கால வரலாற்றறிவுமே புலப்படுத்தின என விலக்கினும், 'இரு வகை' என்ற அவர் பாகுபாடு அவர் உள்ளக் கருத்தே யாதல் சாலும். திருவள்ளுவரின் திருக்குறளில் பொதுவாகவும், அறத்துப் பாலில் சிறப்பாகவும் அறப் பண்புகள் விதிகளாகவும் விலக்குகளாகவும் கூறப்பட்டிருக்கின்றன என்பது உண்மையே. ஆனால் கூர்ந்து நோக்கினால், அவரது விதிகளும் விலக்குகளும் இரண்டுமே ஆக்கப் பண்புகளாகக் கூறப்படுதல் தெளிவாகும். ஏனெனில் உரையாசிரியர்களும் அடிக்கடி மனம் மொழி மெய்களின் செயல்கள் சுட்டினாலும், திருவள்ளுவர் இயேசு பெருமானையும் காந்தியடிகளையும்போல, செயல் கடந்து சொல்லுக்கும், சொற் கடந்து கருத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பது தெளிவு. அத்துடன் உள்ளத்தின் ஆழத்தில் கருத்துப் பதிந்து அதனால் ஏற்படும் ஆழ்ந்த நன்மை தீமை வேர்ப் பண்புகளையும் அவர் துருவி

---

1. Planned or Organized unity 2. Totalitarianism
3. Individwalism 4. Correlated and Co-ordinated ethical system

ஆய்கிறார் என்பதும்: இதனால் அவரது ஆக்கப் பண்புகள் யாவும் ஆக்கவளப் பண்புகள் என்பதும்; விலக்குப் பண்புகள் யாவும் காப்பு வளப் பண்புகள் என்பதும் விளங்கும்.

இது பின் அதிகார முன்னுரைகளில் விளக்கப்படும்.

திருக்குறளின் அறத்துப் பால் முழுவதும் வெற்று ஒழுக்க நூல் அன்று, ஆழ் விரிவான உயிரியல், உளவியல், ஆய்வா ராய்வுச் சிந்தனைகளின் முடிபுகள் ஆகும் (ஐந்தாம் அதிகார முன்னுரை காண்க). இதனால் ஒழுக்கம் என்பது விதிவிலக் கான செயல்கள் என்று கருதும் பரிமேலழகர் போன்றோர் அறத்துப் பாலின் மேற்பரப்புக் காண முடியுமேயன்றி, அதன் ஆழ அகலம் காண்டலரிது—அதன் சொல்லுரை காண முடியுமே யன்றி, கருத்துரை காண்டல் அரிது.

வள்ளுவ அறமும் மனித இன நாகரிகமும்.

திருவள்ளுவரின் முப்பாற் பாகுபாட்டில் அறம் என்பது ஒரு பாலின் அளவில் நின்றுவிடாமல் முப்பாலும் அளாவி நிற்கிறது என்பதைக் காணாதவர் இல்லை என்னலாம். இதனா லேயே அவ் வேடு அறம் மட்டுமன்றி, பொருளும் இன்பமும் கூறினும், பெரும்பாலார் அதனை 'அறநூல்' என்றே குறிப் பிடுவது வழக்கமாகியுள்ளது. கடைச் சங்க காலத்திலிருந்தே அதை 'அறம்' என்றே பலர் கருதியும் வந்துள்ளனர். ஆயினும் திருவள்ளுவரின் அறம் எப்படி முப்பாலும் அளா வியதோ, அப்படியே அவரது பொருளும் அவரது இன்பமும் முப்பால் அளாவிய பண்புகளே யாகும்: அவற்றிடையே நாம் காணத்தகும் வேறுபாடெல்லாம் திசை வேறுபாடுகள், காட்சிக் கோண வேறுபாடுகள் மட்டுமே. அம் முறையில், பொது முன்னுரையில் குறித்தபடி, திருக்குறளில் அறம் என்பது குடும்ப மூலமாகத் தனி உயிர் சமுதாயத்துக்கும் இனத்துக்கும் ஆற்றவேண்டிய தொண்டாகவும்; பொருள் என்பது அதுபோலவே குடும்ப மூலமாகத் தனி உயிருக்குச் சமுதாயமும் இனமும் ஆற்ற வேண்டிய தொண்டாகவும்; இன்பம் என்பது குடும்பம் மூலமாகத் தனி உயிருக்கும்

சமுதாயத்துக்கும் இனம் ஆற்றவேண்டிய தொண்டாகவுமே காட்சி யளிப்பன ஆகும்.

திருவள்ளுவரின் முப்பால் ஒருமைப்பாடு ஆற்று உருவகத்தின் மூலமும், முப்பாற் குழம்பு உருவகத்தின் மூலமும் ஏற்கெனவே பாயிர முன்னுரையிலும் முதல் அதிகார முன்னுரையிலும் விளக்கப்பட்டுள்ளது. முந்திய உருவகத்தில் அறம் முப்பால் வரிசைப்பட நின்று முதலாவது பாலாகவும் (அறை-மலை); பிந்திய உருவகத்தில் அது பாயிர வரிசைப்பட நின்று மூன்றாவது பாலாகவும் (மருந்து); தமிழ்ச் சொல் வடிவில் (அறம்-ஆறு, இரண்டும் 'அறு' என்பதன் தொழிற் பெயர்கள் என்ற முறையில்) அது முப்பாலின் நடுப்பாலாக வும் முத்திற வரிசைப்பட அமைந்துள்ளதும் இங்கே கவனிக்கத்தக்கது. ஏனெனில் திருவள்ளுவரின் முப்பாற் கோட்பாட்டிலுள்ள ஒரு மறைத் தத்துவத்தையே இது சுட்டிக் காட்டுகிறது.

திருவள்ளுவரின் முப்பாற் கோட்பாட்டுக்கும் மனித இன நாகரிக வளர்ச்சிக்கும் மிக நெருங்கியதொரு தொடர்பு உண்டு. அறம், பொருள், இன்பம் என்பன உயிரின் வளர்ச்சியில் மூன்று படிகள் ஆகும். அவ் வழியில் உயிரானது அறத்தால் பொருளும், பொருளால் இன்பமும் எய்துகிறது. ஆனால் இது தனி உயிரின் வளர்ச்சி மட்டுமே; அதுவும் இந்த மூன்று படிகளுடன் முற்றுப் பெற்றுவிடவில்லை. ஏனெனில் மீண்டும் இன்பத்திலிருந்து அறமும், அறத்தினின்று பொருளுமென முப்பால் வளர்ச்சி சக்கராகாரமாகச் சுற்றிச் செல்கிறது. இந்த ஒவ்வொரு சுற்றும் தனி உயிர் வளர்ச்சியில் ஒரு தளம், அதன் ஆன்மிக, அதாவது வீட்டுப்பால் வளர்ச்சியில் ஒரு படி குறிக்கிறது. அதுமட்டு மன்றி, அதுவே மனித இன நாகரிக வளர்ச்சியில் ஒரு படியாகவும் இயங்குகிறது. இவ்வாறு முப்பால் வளர்ச்சி ஒரு முடியாத நிறைமுடிவு நோக்கி, ஓயாது சுற்றிச் சுற்றித் திருகிச் சென்று கொண்டே மேல் நோக்கி உயர்ந்து கொண்டிருக்கும் ஒரு திருகேணி போன்றதாகும். இத் திருகேணியின் மேல்

நோக்கிய போக்கே நாகரிகம். அதனையே குறிக்கோளாகக் கொள்ளும் பண்பே விடு, ஆன்மிக வாழ்வு.

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை குறித்துக் காட்டும் நிலையில், இசைக் கலையில் குரல் முதலிய ஏழு நரம்புகளும் இசை வட்டணையில் ஐந்தாவது ஐந்தாவதாகச் சுற்றிச் சுற்றி ஏறும்போது, ஒவ்வொரு நரம்பும் குரல் தானம் பெற்று முறையே ஒவ்வொரு தானப்படி ஏறி பண் திறத்தில் உயர்வது போல, முப்பாலின் ஒவ்வொரு வட்டணையிலும் உயிரும் சமுதாயமும் இனமும் இயங்கு படியிலிருந்து இயக்கு படிக்கு மாறி ஒரு படி உயர்ந்து செல்கின்றன. இந்தப் படிமாற்றத்தை மற்றப் பால்களைவிட அறத்துப் பாலே மிகத் தெளிவாகக் காட்டுகிறது. ஏனெனில் அறத்துப் பாலில் பொதுவறவியல் என்னும் இல்லற வியல் முதல் வட்டணைக்குரிய இயங்கு படியாகவும், அதன் சிறப்பறவியல் அல்லது துறவற வியல் முப்பால் வாழ்வில் வாழ்பவனுகிய பொதுநிலைச் சமுதாய இன உறுப்பினனுக்குரிய இரண்டாம் வட்டணை சார்ந்த இயக்குபடியாகவும் அமைகிறது. முந்திய வட்டணையில் இயங்குபடி முற்றும் கடந்து இயக்குபடி யடைந்துவிட்ட முப்பால் வாழ்வின் சிறப்புறுப்பினருக்குரிய படியாகவும், அறவாழ்வின் ஆட்சியாளருக்குரிய இயக்குபடியாகவும் சிறப்பற வியலான துறவறவியல் அமைகிறது.

சமயத் துறையில் ஆன்மிக வளர்ச்சி என்று கூறப்படுவதும்; மனித இன வரலாற்றில் நாகரிகம் எனப்படுவதும்; உயிர் நூல்[1] வரலாற்றில் உயிர் மலர்ச்சி[2] என்று கூறப்படுவதும் உண்மையில் முப்பால் வாழ்வு என்னும் இத் திருகேணியின் சுற்றுக்கள்தோறும் ஏற்படும் தள உயர்வுப் போக்கே யாகும்.

திருக்குறளோடு இன்பத்துப் பாலில் அறவழி இன்பமான ஊடலில் முடிந்து, அறத்துப் பாலில் இன்ப வழி அறமாகிய இல்லறத்தில் தொடங்குகிறது. இவ்வாறு முடிந்த இடத்தில் தொடங்கி, தொடங்கிய இடத்தில் முடிவது முப்பால் மட்டு

1. Biology 2. Evolution

மன்று, பாயிரமாகிய அக முப்பால்களின் நிலையும் இதுவே—அது திசையில் மட்டுமே மாறுபடுகிறது. முப்பால் திருகேணியின் ஒவ்வொரு சுற்றுக்கும் இடையேயுள்ள உயர்வே வீட்டுப் பால் என்பதையும். அது சுற்றின் முடிவாயினும் தள உயர்வில் ஒரு படியே என்பதையும் காணலாம். வீட்டுப்பால் இவ்வாறு எல்லையற்ற வளர்ச்சியின் ஒரு தளப் படியாய் அமைதலினலேயே, அது எல்லையற்ற இன்பம் எனச் சிறப்பிக்கப்படுகிறது.

பாலின் பெயரும் பாகுபாடுகளும்.

அறத்துப்பால் என்பது அறமாகிய பிரிவு அல்லது அறமாகிய பண்பு என்று பொருள்படும் இரு பெயர்ப் பண்புத் தொகை ஆகும். பால் என்பது பிரிவு. இதனைப் பகு என்ற வினைப்பகுதி யடியான 'பகல்' என்ற தொழிற் பெயரின் திரிபு என்பர், பழைய உரையாசிரியர்கள். இங்கே அது முப்பாலாகிய முழு வாழ்க்கையின் ஒரு பிரிவு என்று பொருள் படும். இச் சொல்லைப் பான்மை அல்லது தன்மை என்ற பொருளில் பண்பு என்றும் பொருள் கொள்ளலாம். அறத்துப் பால் என்பதில் அத்து இடையே சாரியை. அறம் என்ற நிலைமொழியில் மகரம் கெட்டு, நின்ற அகர ஈற்று முன் அத்துச் சாரியையின் அகரமும் கெட்டது. சாரியையின் பின் பகர வல்லொற்று மிகுந்தது.

அறத்துப் பாலைக் கூறுவது என்ற முறையில் ஏட்டில் பாயிர நீங்கிய பகுதியின் முதற் பெரும் பிரிவு அறத்துப்பால் என ஆகுபெயராய் வழங்கிற்று.

திருவள்ளுவர் அறத்துப்பாலில் கூறிய அறம் ஒன்றே. அது அன்பை அடிப்படையாகக் கொண்டு, அந்த அன்பின் மலர்ச்சியான அருளை நோக்கி வளர்வது. இந்த இலக்கணம் இல்லறத்துக்கு மட்டுமன்று, துறவறத்துக்கும் உரியதே யாகும். இதைத் திருவள்ளுவர் ஐயத்துக் கிடமில்லாமலே (76) வகுத்துரைத்துள்ளார். ஏனெனில் அறத்தின் இரு வகைகளாகவே கொள்ளப்படும் இல்லறம், துறவறம் ஆகிய வற்றுக்கு மட்டுமன்று, அறத்துக்கு மாருனதன்ருயினும்,

வேருகவே கொள்ளப்படும் மறத்துக்கும் (வீர வாழ்வுக்கும்) கூட அவ்வன்பே அடிப்படையாகும் என்று அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அறத்துப்பாலின் முதல் இரண்டு இயல்களேயும் உரையாசிரியர்கள் இல்லறவியல் என்றும் துறவறவியல் என்றுமே தலைப்பிட்டுச் சுட்டியுள்ளனர். இதுவே திருவள்ளுவர் தந்த தலைப்பாகவும் இருக்கலாம், இருக்கக் கூடாதென்றில்லை. ஆனல் இத் தலைப்பே இல்லறத்துக்கு எதிரானது துறவறம், இல்லறம் துறந்ததே துறவறம், இன்பம் துறந்ததே துறவறம் என்ற கருத்துக்களைத் திருவள்ளுவர் காலத்துக்குப் பின்னல் தமிழகத்தில் மட்டுமன்றி, நாகரிக உலக முழுவதும் பரப்பக் காரணமா யிருந்தது என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் வேத உபநிடத காலங்களில்கூட இந்தக் கருத்தின் தடம் எதுவும் கிடையாது. ஆகவே இத்தகைய எண்ணங்கள் பரந்து நிலைத்த காலத்தவரான உரையாசிரியர்களின் முன்னேர்களோ, உரையாசிரியர்களோ இத் தலைப்புக்குக் காரணமாக இருந்திருக்கவும் இடமுண்டு. எப்படியும் இல்லறம் என்பதே அறம் (49), துறவறம் சிறப்புமிக்க இல்லறம்—இல்லறமாகிய மலரின் இன்கனியே துறவறம்—இதுவே திருவள்ளுவர் கருத்தாதலால், அது முனைப்பாகத் தோன்றும் வண்ணமே இம் மணிவிளக்கவுரையில் அறத்துப்பாலின் முதல் இரண்டு இயல்களும் பொதுவறவியல், சிறப்பறவியல் என்ற தலைப்புக்களிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இவையே திருவள்ளுவர் வழங்கிய தலைப்புக்களாக இருந்திருத்தலும் கூடியதே யாகும்.

திருக்குறள் ஏட்டில் பாயிரம் அதாவது வீட்டுப்பால் ஒன்று, பால்கள் மூன்று என நாற்பாற் பாகுபாடு உண்டு. இதனை யாவரும் அறிவர், தலைப்புக்கள் மூலம் எல்லாப் பதிப்புக்களும் உரைகளும் இதைக் காட்டுகின்றன. ஆனல் பாயிரத்திலும், பால்களிலும், இயல்களிலும், அதிகாரங்களிலுமே இதே வகை நாற்பாற் பாகுபாடுகள் உண்டு. இம்மணிவிளக்கவுரையில் பாயிரத்திலும், பாயிரத்தின் அதிகாரங்ளிலும் இந் நாற்பாற் பாகுபாடு ஏற்கெனவே சுட்டிக்

காட்டப்பட்டுள்ளது. இனியும் பால்தோறும் இயல்தோறும் அதிகாரந்தோறும் இது சுட்டிக் காட்டப்பட விருக்கின்றது.

அறத்துப்பாலைப் பொறுத்தவரையில், முதல் நான்கு அதிகாரங்களும் பொதுவற இயலிலேயே சேர்க்கப்பட்டாலும், உண்மையில் அறத்துப்பால் முழுமைக்கு முரிய பொதுப் பாயிர அதிகாரங்களே ஆகும். மரபு பின்பற்றி அவற்றின் விளக்கம் பொதுவறவியல் முன்னுரையிலேயே தரப்பட விருக்கின்றது. இவை கடந்த பொதுவற வியலின் பதினாறு அதிகாரங்களும் அறத்துப்பாலின் அறவாழ்வுத் தொடர்பிணையும்; சிறப்பறவியலின் பதின்மூன்று அதிகாரங்களும் அப் பாலின் பொருள் வாழ்வுத் தொடர்பிணையும்; தனி இயலாகக் காட்டப்பட்ட ஊழ் அதிகாரம் அப்பாலின் இன்ப வாழ்வுத் தொடர்பிணையும் விதந்தோதுபவை ஆகும். அறத்துப்பாலின் பாயிரமாகிய முதல் நான்கு அதிகாரங்களும் அவ் வறத்துப் பாலுக்குரிய வீட்டுப்பால் வாழ்வுத் தொடர்பு கூறுவன என்பது கூறாமலே அமையும்.

☆

பொதுவற இயல்

(இல்லற இயல்)

முன்னுரை

திருவள்ளுவர் காலத்தில் உயிர் நூலும்[1], உயிர் நூலின் விளைவாக மேலையுலகில் 19-ம் நூற்றாண்டில் தோன்றிய உயிர் மலர்ச்சிக் கோட்பாடும்[2], இவற்றின் பயனாக நம் நாளிலேயே மெல்ல வளர்ந்து வருகிற உளநூலும்[3], அவ்வுள நூல் சார்பான அற நூலும்[4] வளர்ந்திருந்தனவோ, இல்லையோ, நாம் அறியோம். ஆனால் அவ் வறிவு நூல் துறையினர் கண்டு வரும் சிந்தனைகளின் சுவடுகளை யெல்லாம் நாம் அறத்துப்பாலிலும் பொதுவற வியலிலும் காணலாம்.

உயிர் மலர்ச்சியில் குடும்பத்தின் வளர்ச்சியிலிருந்தே அன்பு என்ற ஒரு பண்பும், சமுதாயத்தின் வளர்ச்சியிலிருந்தே நேர்மை என்ற ஒரு பண்பும், இன வளர்ச்சியிலிருந்தே அறிவு என்ற ஒரு பண்பும் வளர்ந்துள்ளன. இம்மூன்றன் கூட்டே அறம் (5-ம் அதிகார முன்னுரை காண்க). இதை நன்கு உணர்ந்தவராதலாலேயே, திருவள்ளுவர் அறத்துப் பாலைக் குடும்பத்திலிருந்து தொடங்கி, சமுதாய, இன நோக்கிப் படிப்படியாக வளர்த்துச் செல்கிறார். திறம்பட்ட ஓர் உளவியலறிஞனைப் போலவும், உளவியலறிந்த கலைஞனைப் போலவும் அவர் அறப் பண்புகளைச் செயற்படிவங்களாக, செயல் கடந்த மனித மொழியின் சொற்படிவங்களாக மட்டுமன்றி, மாந்தர் உள்ளத்தில் எழுந்து வளரும் கருத்து, உணர்ச்சி, உணர்வுப் படிவங்களாக மலர்ச்சியுறுவித்துக் காட்டுகிறார்.

---

1. Biology 2. Theory of Evolution 3. Psychology
4. Psychological Ethics

இல்லறமும் துறவறமும்.

திருவள்ளுவர் கோட்பாட்டின்படி, அறம் ஒன்றேதான், அதுவே இல்லறம் (49). எனவே இல்லறம் அறத்தின் ஒரு வகை யன்று, அதுவே அறம், அறத்தின் அடிப்படை. ஆனால் இல்லறமாகிய அறத்தில் இரண்டு படிகள் உண்டு. ஒன்று பொதுவறம், அதுவே பொதுவாக இல்லறம் என்று கூறப் படுவது. மற்றது சிறப்பறம், அதுவே பொதுவாகத் துற வறம் என்று குறிக்கப்படுவது. பொதுவறம் அறத்தின் மலர்ச்சி, சிறப்பறம் அதன் இன்கனி. மலரினின்றே கனி பிறப்பது போல, பொதுநிலை இல்லறத்திலிருந்தே சிறப்பு நிலை அறமாகிய துறவறம் பிறக்கிறது. அதே சமயம், கனியே விதையாகி, அடுத்த தலைமுறை மலர்சசி ஊக்குவது போல, துறவறமே இல்லறத்தின் மறுமலர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது.

அறத்தின் அடிப்படை அன்பு (76). அது காதலி லிருந்தே பிறக்கிறது. இல்லறமாகிய பொதுவறத்திலேயே அது தளிர்த்துக் கொடியாகப் படர்கிறது. காதல் தலைவன் தலைவியரிடையே கர்தலாகப் பொங்கி எழுந்த இந்த அன்பு குடும்ப எல்லையில் தேங்கித் ததும்பி நின்று, சமுதாய எல்லை யில் பாசமாகப் பரவி, இன எல்லையில் அருளாகக் கனிவுறு கிறது. காதற் படியில் அது இன்பத்துப் பாலுக்கு உரிய தாகிறது. அன்பு, பாசப் படிகளில் அது பொதுவறமாகிய இல்லறத்துக்கும், அருட்படியில் சிறப்பறமாகிய துறவறத் துக்கும் உரியதாகிறது. துறவறம் இல்லறத்தின் ஓர் உட் கூறே யானாலும், சிறப்பு முறையில் அதிலிருந்தும் பிரித் தெடுத்துக் கூறப்படுவது இதனாலேயே யாகும்.

பொதுநிலை அறமாகிய இல்லறத்துக்கும் சிறப்பு நிலை அறமாகிய துறவறத்துக்கும் இடையே யுள்ள வேறுபாடு, அன்புக்கும் அருளுக்கும் இடையேயுள்ள வேறுபாடேயாகும். அன்பின் மலர்ச்சி அருள். அன்பு இல்லறத்தில் மலர்ச்சியுறும் பண்பு. அது தனி உயிருக்கும் தனி மனிதருக்கும் இயல்பான தற்பற்று, தன்னலங்களில் தொடங்கி, குடும்பம் சமுதாயம், இனம் எனப் படிப்படியாக விரிவுற்று அலையலையாகச்

சூழ்ந்து பரவிச் செல்வது. இவ்வாறு தனி உயிராகிய மைய நின்று, இனமாகிய எல்லையற்ற வட்டத்தினை நாடிப் புற நோக்கிய பண்பாக அது இயல்கின்றது. ஆனால், அன்பின் மலர்ச்சியான அருளோ பொது நலத்திலேயே தொடங்கி, இனத்திலிருந்து சமுதாயத்துக்கும், சமுதாயத்திலிருந்து குடும்பத்துக்கும், குடும்பத்திலிருந்து தனி உயிருக்குமாக, அக நோக்கிப் படிப்படியாகச் செறிவுற்று வளர்வது ஆகும். துறவறத்துக்கு இயல்பாக உரிய பண்பு இந்த அருளே.

திருவள்ளுவர் இல்லறத்தைக் குறிக்கும்போது அதையே முழு அளவில் சிறப்பிக்கிறார் (48). துறவறத்தைக் குறிக்கும் போது அதையே சிறப்பிக்கிறார் (263). இம் மாறுபாட்டை உரையாசிரியர்களோ, புத்துரையாசிரியர்களோ கூட முற்றிலும் விலக்கிவிட முடியவில்லை. அறிஞர் ஆல்பெர்ட் சுவைட்சரோ [1], திருவள்ளுவர் துறவறத்துக்கு மதிப்பளித்தாலும் இல்லறத்தையே சிறப்பிப்பதாகக் கொள்கின்றார். பெரும்பாலான உரையாசிரியர்களின் விளக்கமும் இதுவே. ஆனால், இது முரண்பாட்டை விளக்குகிறதே தவிர, விலக்கிவிடவில்லை என்று காணலாம். அதே சமயம் துறவறத்தினைத் திருவள்ளுவர் சிறப்பிப்பது அது சிறப்பான இல்லறம் என்பதனாலேயே; இல்லறத்தினைச் சிறப்பிப்பது அது பெரும்பான்மையோருக்குரிய அறம் என்பது மட்டுமன்றி, அதுவே துறவறத்தினுக்கும் அடிப்படையான அறம், அதுவே துறவறத்தை உள்ளடக்கிய தாயறமாய் நின்று, காதல், அருள், அந்தண்மை ஆகிய இயல்பான வளர்ச்சிக்குரிய அறநிலைக் களம் ஆகிறது என்பதனாலேயே ஆகும். இதை நோக்க முரண்பாடும் வேறுபாடும் முற்றிலும் மறைந்து விடுகின்றன.

துறவறத்தாரை ஈன்று புறந்தரும் அறம் இல்லறமே—துறவறத்தாரைப் பெற்றெடுக்கும் பெருமையுள்ள கற்பரசியராம் தாய்மாரைப் புறக்கணிக்கும் எந்த அறமும் சிறப்பறமும் ஆகாது, பொது அறமே ஆகமாட்டாது என்பதும் இங்கே கருதத் தக்கது.

---

1. Albert Schweitzer

முற்றத் துறந்தவராக, துறவுக்கே இலக்கணமாகக் கருதப்படும் பட்டினத்தார் போன்ற பெரியார் தாயைத் துறக்காமலே துறவிகளானவர், தாய்ப்பாசத்தில் மற்ற எவரினும் குறைந்தவரல்லர் என்பதும் இங்கே நினைவு கூரத்தக்கதாகும். தமிழ்த் துறவியர் பலர் எல்லாம் துறந்தும் தாய் மொழி அன்பு துறவாது நின்ற தன்மையும் இங்கே கருதி நோக்கத் தக்கதாகும்.

குடும்பம்: அறவாழ்வின் மையக் கடவுட் பண்புத்தளம்

இல்லறம் இன்பத்தில் பிறந்து, இன்பச் சூழலிலே வளர்ந்து, இன்பத்திலேயே நின்று, இன்பத்தையே குறிக்கோளாகக்கொண்டு, குடும்ப சமுதாய இன வாழ்வெங்கும், மனித சமுதாயம், மனித இனம் மட்டுமின்றி, உயிர்ச் சமுதாயம், உயிரின மெங்கும் இன்ப அலைகளை இயக்கிப் பரவ விடும் அமுதப் பொங்கற் பண்பு ஆகும். இத்தகைய பொங்கற் பண்பினுக்குரிய அமுத நிலைக்களம் குடும்ப வாழ்வே. இதனால்தான், திருக்குறளேட்டுக்குப் பாயிரமாக அமைந்த நான்கு அதிகாரங்களும் முப்பால் முதல்வனை கடவுளையும், கடவுட் சார்பான கடவுள் வடிவப் பண்புகளையும் கண்கண்ட கடவுளாகிய ஆதிபகவன் மேலேற்றி அவன் வடிவங்களாக விரித்துரைத்துள்ளதுபோல, அறத்துப்பாலின் முதல் நான்கு அதிகாரங்களும் அறத்துப் பாலுக்குப் பாயிரமாக அமைந்து அக்குடும்ப வாழ்வையே கடவுட் பண்பாக, கடவுட் பண்புகளின் கருவூலமாகச் சிறப்பிக்கின்றன. இக் குடும்பப் பண்பை அவர் பொதுவறத்தை இயக்கும் கடவுட் பண்பாக மட்டும் கூறிவிடவில்லை—பொதுவறத்தையும் சிறப்பறத்தையும் உள்ளடக்கிய முழு அறத்தையும் இயக்கும் கடவுட் பண்பாகவே குறித்துள்ளார் என்பது மறவாது நினைவில் கொள்ளத்தக்கதாகும. ஏனெனில், உரை மரபினைப் பின்பற்றி இங்கே அவ்வதிகாரங்களை இம் மணிவிளக்கவுரையும் அறத்துப்பாலின் பொதுவற வியலின் முன்னுரையிலேயே குறிப்பிட நேர்ந்தாலும், மேலே அறத்துப்பால் முன்னுரையில் சுட்டியபடி அவை அறத்துப்பாலின் பொதுப் பாயிரமே

யாகும்—பொதுவறவியல். சிறப்பறவியல் ஆகிய இரண்டனுக்கும் உரிய பாயிரமேயாகும்.

அறத்துப்பாலின் பாயிர அதிகாரங்கள்.

இன்பத்துப் பாலில் திருவள்ளுவர் இன்பத்தை இயக்கும் கடவுட் பண்புகளின் மையமாகப் பெண்ணையே, காதலணங்கையே, குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். ஆனல் காதல் துணைவர் குடும்பமாக இணைந்தபின், காதல் துணைவி கற்புடை மனைவியாகி, இயக்குபவள் என்ற நிலையிலிருந்து உயர்ந்து இயக்குவிப்பவள் ஆகிவிடுகிறுள். இயக்குபவருக்கு உள்ள பொறுப்பு இயக்குவிப்பவருக்குக் கிடையாது என்பது உலகமறிந்த செய்தியே—இயக்கும் அரசனுக்கு முதன்மையும், இயக்குவிக்கும் அமைச்சனுக்கும் அவனை இயக்குவிக்கும் மக்களுக்கும் மன் குடியாட்சியில்கூடத் துணைமையே இன்று வரை மரபாகி யுள்ளது. இம் முறைப்படியே, முன்னர்க் கடவுள் வாழ்த்து அதிகாரத்திலே தோன்ருத் துணையான கடவுள் தோன்றுந் துணையான ஆதிபகவன் வடிவிலேயே சிறப்பிக்கப் பட்டதுபோல, அறத்தை இயக்கும் தோன்ருத் துணையான வாழ்க்கைத் துணைவியின் கடவுட் பண்பை இங்கும் திருவள்ளுவர் தோன்றும் துணையாகிய இல்வாழ்வானுகவே சிறப்பிக்கிருர். வாழ்வாங்கு வாழும் இல்லறத்தானைக் கடவுட் கூருன தெய்வம் (50) என்று அவர் கூறுவது இதனுலேயே. குடும்ப எல்லையினுள் வாழ்க்கைத் துணைவியே அவனை இயக்கினுலும், குடும்பத்தினை நேர் உறுப்பாகக் கொண்ட சமுதாயத்தில் அக் குடும்பப் பொறுப்பு வகிக்கும் வெளிநாட்டமைச்சன் நிலையில் இருப்பவன் இல்வாழ்வானே. வெளிநாட்டமைச்சர் பீடும் பெருமையும் முற்றிலும் உள் நாட்டில் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் அல்லது அரசர் பெருமையே யாகும். சமுதாயத்தில் இல்வாழ்வானுக்கு ஏறுபோல் பீடுநடை அளிப்பவள் வாழ்க்கைத் துணைவியே (59) எனத் திருவள்ளுவர் கூறியது இதனுலேயே.

அறத்துப்பாலின் முதலதிகாரம் இவ்வாறு அப்பாலுக்குரிய பாயிர முதலதிகாரமாகவும், அதன் இறை வாழ்த்து அதிகாரமாகவும் அமைந்துள்ளது.

திருக்குறட் பாயிரத்தின் இரண்டாம் அதிகாரத்தில் கடவுளுருவான ஆதிபகவனின் அருளாற்றல் மழைமுகிலாகச் சிறப்பிக்கப்பட்டதுபோலவே, அறத்துப்பாலின் இரண்டாம் அதிகாரத்திலும் குடும்ப எல்லைக் குள்ளிருந்து குடும்பத்தை ஆளும் மழை முகிற் சின்னமான கற்பரசியாகிய வாழ்க்கைத் துணைவி சிறப்பிக்கப்படுகிருள். அறத்துப்பாலின் இரண்டாம் அதிகாரம் இவ்வாறு அறத்துப்பாலுக் குரியதொரு வான் சிறப்பு அதிகாரமாய் இயல்கிறது. வான் சிறப்பு அதிகாரம் இன்பத்துப் பாலின் பாயிர அதிகாரம் என்னதையும், இங்கே அதற்கிணையான அதிகாரத் தலைவி இன்ப வாழ்வின் அரசியே, காதலின் மூலமாக ஒருயிரை இயக்கியே ஒருலகை இயங்குவிக்கும் திறமுடைய தேவியே என்பதையும் இங்கே ஓர்தல் வேண்டும்.

திருக்குறட் பாயிரத்தின் மூன்றும் அதிகாரமாகிய ஒழுக்கத்து நீத்தார் பெருமை சமுதாய வாழ்வில் பொருளுக் கெல்லாம் மூலமான பொருளாகிய, பொருள் வாழ்வை இயக்கும் ஒழுக்கத்து நீத்தாரைச் சிறப்பிப்பதுபோல, அறத்துப்பாற் பாயிரத்தின் மூன்றும் அதிகாரமான மக்கட்பேறும் இன்பத்தில் பிறந்த அறவாழ்வின் பயனும், குடும்ப வாழ்வின் பொருளுக் கெல்லாம் பொருளான மக்களை அதாவது புதல்வர் புதல்வியரைச் சிறப்பித்தது. இன சமுதாயத்தின் பொருளைப் பொருளாக்கும் ஒழுக்கத்து நீத்தார்போல, குடும்பச் சூழலிலிருந்து அச் சமுதாயச் சூழலில் பொருளைப் பொருளாக்குபவர் மக்கள்; சமுதாயத்துக்குக் குடும்பம் அளிக்கும் செல்வங்களின் சிறந்த செல்வமாக விளங்குபவர்கள் அம் மக்களே யாவர்.

திருக்குறட் பாயிரத்தின் நான்காம் அதிகாரமாகிய அறன் வலியுறுத்தல் முப்பாலேட்டின் அறத்துப்பாலுக்குரிய பாயிரக் கூறும், அற வாழ்வை இயக்கும் கண்கண்ட வேத உருவான அறத்தைச் சிறப்பிப்பது போல, அறத்துப்பாலின் நான்காம் அதிகாரமாகிய அன்புடைமை அறவாழ்வின் அடிப்படைப் பண்பாக, குடும்பத்தில் பிறந்து குடும்ப சமுதாய இனங்களில் எல்லாம் அற அலையாகப் பரவும் திற

முடைய பண்பாக, அன்பு என்னும் அறவுருவான கடவுட் பண்பைச் சிறப்பிக்கிறது. அறமில்லாமல் அறவாழ்வு இல்லை, வாழ்வுமில்லை—அன்பில்லாமல் அந்த அறமுமில்லை, வாழ்வுமில்லை என்பது காணலாம்.

பொதுவற வியல்: இயலின் பாயிர, முப்பாற் பாகுபாடு.

திருக்குறளேட்டின் முதல் 38 அதிகாரங்களுமே அறத்துப்பால் என்று பழைய உரைப் பதிப்புக்கள் காட்டினாலும், ஏட்டின் பொதுப் பாயிரமும் வீட்டுப்பாலுமான முதல் நான்கு அதிகாரங்களும் போக எஞ்சிய 34 அதிகாரங்களே அறத்துப்பாலுக்கு உரியன என்பது பாயிர முன்னுரையில் எடுத்துக் கூறப்பட்டது. அதுபோல, அம் முப்பத்து நான்கு அதிகாரங்களிலும் எல்லா உரைப் பதிப்புக்களிலும் இம் மணிவிளக்க வுரைப் பதிப்பிலும்கூட முதல் 20 அதிகாரங்களுமே பொதுவற வியல் அல்லது இல்லற வியல் என்று காட்டப்பட்டாலும், அவற்றுள் முதல் நான்கு அதிகாரங்கள் அறத்துப்பாவின் பொதுப் பாயிரமாதலால், அவை போக மீந்த 16 அதிகாரங்களே மெய்யான வள்ளுவ ஒழுங்கு முறைப்படி பொதுவற வியல் சார்ந்தவை யாகும். ஆயினும் அறத்துப்பாலின் அப் பொதுப் பாயிர அதிகாரங்கள் அறத்தின் பொது அடிப்படையாக மட்டுமன்றி, பொதுவறத்துக்கும் அடிப்படையாகவே அமைந்து பொதுவற வியலின் பாயிர அதிகாரங்களுக்கும் பாயிர அதிகாரங்களாகவே கருதப்படத் தக்கவையாக விளங்குகின்றன.

நேரான பொதுவற வியலின் 16 அதிகாரங்களிலும்கூட, முதல் நான்கு அதிகாரங்களும் பொதுவற வியலின் பாயிர இயல்புடையனவாகவே கருதத் தக்கவை. இந் நான்கனுள்ளும் முதலாவது (9-வது விருந்தோம்பல் அதிகாரம்) திருக்குறளேட்டின் இறைவாழ்த்து அதிகாரத்தையும் அறத்துப்பாலின் (5-வது) இல்வாழ்க்கைச் சிறப்பு அதிகாரத்தையும் போல, பொதுவறமாகிய இல்லறத்துக்குரிய கடவுட்பண்பாக விருந்தோம்பலை நமக்கு அறிவிக்கிறது. அறத்துப்பாலின் பொதுப் பாயிர இறைப் பண்பாளனை இல்வாழ்வானுக்

குரிய சிறப்புப் பண்பு இதுவே. விருந்தளிக்கும் இல்வாழ்வானுக்கு வேளாளன் என்ற ஒரு தனிப் பெயர் தமிழிலிருப்பதும், மேலை மொழிகளில் இதற்குரிய தனிச் சொல் (ஆங்கிலம்: ஹோஸ்ட்[1]) தமிழ்ப் பண்பும் வள்ளுவப் பண்பும் சிறிதும் கெடாமல் இன்னும் சிறக்க அமைந்திருப்பதும் இங்கே கருதத் தக்கது ஆகும். வள்ளுவப் பண்பு எவ்வளவு தொலைக் கோடி வரை எவ்வளவு பழமையான காலத்திலேயே சென்றுள்ளது என்பதை இச்சொல் காட்டுகிறது.

விருந்தோம்பலுக்குரிய இனியவை கூறல் பொதுவறவியலுக்குரிய வான் சிறப்பு அதிகாரமாகவும், அதே சமயம் அறத்துப்பாலின் வாழ்க்கைத் துணை நல அதிகாரத்தோடொத்த மழை முகிற் பண்பாகவும் அமைந்துள்ள அருமைப்பாடு கூர்ந்துணரத் தக்கது. விருந்தோம்பலாகிய கடவுட் பண்பிலே வாழ்க்கைத் துணைவியின் ஆட்சிக்கே யுரிய பண்பாகவும் அது திகழ்கின்றது. விருந்தோம்புபவன் இல்வாழ்வானே யானாலும், அவன் விருந்தோம்பற் பண்பின் உயிர்க் கூறு அவன் அருட் சக்தியாகிய வாழ்க்கைத் துணைவியின் இன் சொல்லே யாகும் என்பதில் எவர்க்கும் ஐயம் ஏற்பட வழியில்லை. விருந்தோம்பலில் கணவனின் கடுமையைக்கூட வென்றுவிடத் தக்கது மனைவியின் இன் சொல். ஆடவர் உள்ளத்தில் அறப் பண்பு இல்லாத இடத்தில்கூட, பெண்டிர் இன்சொல் அந்த ஆடவர் உள்ளமும் மாற்றி உலகில் அறம் நிறுத்தும் தன்மையுடையது. இதை அறிந்தே போலும் தமிழகத்தில் அம்மையப்பனுகிய கடவுளின் அம்மைக் கூற்றுக்கு மட்டுமே அறம் வளர்த்த நாயகி (சமஸ்கிருதம்: தர்மசம்வர்த்தனி) என்ற பெயர் வழங்கி வருகிறது. கடவுளின் அம்மைக்கூறு அளித்த ஆழாக்கு நெல்லைக் கொண்டே காராளராகிய தமிழக வேளாளர் உலகில் வேளாண்மை (உழவும், விருந்தோம்பலும்) வளர்த்தனர் என்பது தமிழகப் பழ மரபுக் கதை.

விருந்தோம்புபவன், விருந்தேற்பவர் ஆகிய இரு சாரார் உள்ளத்திலும் விருந்தோம்பற் பண்பின் பயனுக

1. Host

நின்று நிலேக்கும் அறப்பொருளே நன்றி. பொதுவறவியலின் அடுத்த அதிகாரப் பொருள் அதுவே. ஏட்டின் பொருட்பாற் பாயிர அதிகாரமான ஒழுக்கத்து நீத்தாருடனும், அறத்துப் பாலின் பொருட்பாற் பாயிர அதிகாரமான மக்கட் பேறுடனும் இது முற்றிலும் இயைவது காணலாம். மக்கட்பேறு அதிகாரத்தில் திருவள்ளுவர் மீண்டும் மீண்டும் மக்களேப் பொருளென்றும் (63), தந்தை மகற்கு ஆற்றும் நன்றி என்றும் (67), மக்கள் அறிவுடைமை இனிது (68) என்றும் கூறுவதும் இங்கே இயைவித்துக் காணத் தக்கதாகும்.

அறத்துக்கு அன்பு உயிரானல். அந்த அன்புக்கும் அறத்துக்குமே நடுவு நிலேமை உயிராகும். உப்பில்லாத இனிப்பு புரைபட்டு அழிவதுபோல, நடுவு நிலேமை இல்லாத அன்பும் அறமும் நிலேத்த பண்புகளாகாமல் பதங்கெட் டழியும். நடுவு நிலேமை பொதுவற இயலின் அறன் வலியுறுத்தல் அதிகாரமாகவும்,அன்புடைமை அதிகாரமாகவும் அமைகின்றது. உண்மையில் நடுவு நிலேமை என்பது அறப் பண்பு அளாவிய அறிவுப் பண்பு அல்லது அறிவுப் பண்பு அளாவிய அறப் பண்பு என்று கூறலாம். அதிலும் பொதுவறமாகிய இல்லறத்தில் அறப் பண்பு அல்லது இன்பம் தனி உயிராகிய மையத்திலிருந்தே இனமளாவப் பரவுவதனல், நடுவு நிலேமை யின்றேல் அது அன்பலே பரப்பாமலும், பரப்பினும் சரிசமமாக இனமெங்கும் பரப்ப வழி யில்லாமலும் கெடுவதாகும்.

பொதுவற வியலில் பாயிரப் பண்புடைய நான்கு அதிகாரங்களேயும் அடுத்து மூன்று அதிகாரங்கள் (13-15 அதிகாரங்கள்) அவ் வியலின் அறவாழ்வுப் பகுதியாகவும்; அடுத்த ஆறு அதிகாரங்கள் (16-21 அதிகாரங்கள்) அவ் வியலின் பொருள் வாழ்வுப் பகுதியாகவும்; கடைசி மூன்று அதிகாரங்கள் (22-24 அதிகாரங்கள்) அவ்வியலின் இன்ப வாழ்வுப் பகுதியாகவும் அமைந்துள்ளன. அறத்துப்பாலின் பொதுப் பாயிர அதிகாரங்கள் அறத்தின் நிலேக்களமான குடும்ப வாழ்க்கை என்னும் கடவுட் பண்பையும்; பொதுவற வியலின் பாயிர அதிகாரங்கள் அக்குடும்ப வாழ்வில் அமைய

வேண்டிய குறிக்கோள் தன்மை வாய்ந்த கடவுண்மைப் பண்புகளையும் கூறின. எனவே அவற்றின் பின் வந்த மேற் குறிப்பிட்ட பொதுவற வியலின் முப்பாற் பகுதிகளும் முறையே அவ்வறத்தின் அடிப்படை அல்லது பின்னணிப் பண்புகளையும்: அதன் எதிர்மறை வடிவான தேக்கவளப் பண்புகளையும்; அதன் பொங்குமாவளப் பண்புகளையும் விரித்து விளக்குவன ஆகும்.

பொதுவற இயலின் பாயிரப் பண்புடைய நான்கு அதி காரங்களும் (9—12) அப்பொதுவற இயலின் விட்டுப் பால் கூறுகளும் பகுதி என்று கூறத் தேவை இல்லை.

திருவள்ளுவர் முகிலுக்கும் உழவுக்கும் பெண்மைக்கும் முப்பாலேடு முழுவதுமே திரும்பத் திரும்ப முனைப்பான முதலிடம் கொடுத்துள்ளார் என்பது காணலாம். அறம், பொருள், இன்பத்தின் வடிவாக அவர் அம்முப் பண்புகளையும் கண்டார் என்று கூறலாம். எனவே, மேற்கூறிய அறத்துப் பாலின் முப்பாற் கூறுகளை முகிற் கூறு, உழவுக் கூறு, பெண் மைக் கூறு என்றும் வகுத்துக் காணலாம். மூன்றையுமே உழவுப் பண்பாகக் கொள்வதானல், அறத்துப் பாலின் தொடக்கத்திலுள்ள பொதுப் பாயிரம் உழவுக்குரிய மழைப் பண்பாகவும்; பொது வறவியலின் பாயிரம் அதன் நீர்ப்பாச னப் பண்பாகவும்; அதன் அறவாழ்வுக்குக் கூறு விதைப்புப் பண்பாகவும் பொருள் வாழ்வுக் கூறு அதன் களையெடுப்பு, உரப் பண்புகளாகவும்; இன்ப வாழ்வுக் கூறு அதன் அறு வடை, விதைப் பண்பாகவும் உருவகித்துக் காணத்தக்கவை ஆகும்.

இயலின் பெயர்

பெதுவற இயல் என்ற இயலின் பெயர் பொதுவறத் தைக் கூறும் இயல் என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆகும். இயல் என்பது இங்கே இயலினை அதாவது இயல்பினை உரைக்கும் ஏட்டுக் கூறு. இத் திருக்குறளேட்டில் பெரும் பிரிவுகள் பால் என்றும், அடுத்த கிளைப்பிரிவுகள் இயல் என்றும் வகுக்கப்பட்டுள்ளன.

அதிகாரமே சிறு பிரிவாய் இயல்கின்றது. தொல்காப்பியத்தில் அதிகாரமே பெரும் பிரிவாகவும் இயல் சிறு பிரிவாகவும் அமைந்துள்ளது. ஆனால், சிலப்பதிகாரத்தில் ஏடு முழுமையுமே பிண்டமாக அதிகாரம் எனும் பெயர் கொண்டு, காண்டமும் காதையும் படிப்படியாகச் சிறு பிரிவுகளாயின.

பொதுவறம் என்பது பொதுமை வாய்ந்த அறம் எனப் பண்புத் தொகை.

பொதுவற இயலின் மறு பெயராய் வழங்கும் இல்லறவியல் என்ற பெயரின் இலக்கணமும் இது போன்றதே. இல்லறம் இல்லில் இருந்து செய்யப்படும் அறம் அல்லது இல்லத்தை மையமாகக்கொண்டு இயற்றப்படும் அறம் என ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவோ, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவோ கொள்ளத் தக்கதாகும்.

பொதுவற இயலாகிய இல்லறவியல் இன்பத்தில் பிறந்த இல்லறத்தில் தொடங்கி, இன்பத்தில் இசைந்திழைந்த அன்பு நேர்மையாகிய அறவாழ்வுக் கூற்றிலேயே சென்று முடிவது காணலாம். அற ஏட்டின் முப்பா லாழி (சக்கரம்) போலவே, அறத்துப் பாலின் முப்பாலாழியும் திருகேணியாகச் சுழலும் முப்பா லாழி என்பதையும், ஒரு சுற்று முடிவில் இன்பத்திலிருந்து அடுத்த சுற்றுத் தொடக்கத்துக்குச் செல்லும் இன்ப வளமே வீட்டுப் பால் என்பதும், பாயிரம் இவ்வாறு ஏட்டிலமைந்தது போலவே, பாலிலும் வீட்டு வாழ்வுக் கூறாய் அமைந்தது என்பதும், சிந்தித்து உணரத்தக்கன ஆகும்.

தமிழில் 'வீடு' குடும்ப அறத்தின் நிலைக்களமாகிய இல்லத்தையும், பேரின்பத்துக்குரிய முத்தியையும் ஒருங்கே குறித்துக் காட்டுவது என்பது இங்கே சிறப்புறப்பொருந்தும் மெய்ம்மை ஆகும்.

தமிழர் வாழ்க்கைக் கோட்பாட்டிலோ திருவள்ளுவர் வாழ்க்கைக் கோட்பாட்டிலோ, தனி மனிதர் அதாவது குடும்பத்தில் பிறந்தும் குடும்ப உறுப்பினராகாத மனிதர் சமுதா

யத்திலும் உறுப்பினராகார், இனத்திலும் உறுப்பினராகார் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. மக்கட் குடியாட்சியில் அவர்கட்குப் பங்கு கிடையாது என்பதைக் குடியாட்சி என்ற தமிழ்ச் சொல்லே காட்டும். ஆனால், அதே சமயம் சமுதாயத்தையே தம் குடும்பமாகக் கொண்ட துறவோரும், இனத்தையே தம் குடும்பமாகக் கொண்ட அந்தணரும் சமுதாய உறுப்பினராகாமலே சமுதாய ஆட்சிக்குரியவர்கள்—உறுப்பினருக்குரிய உரிமைகள் இல்லாமலே அதன் கடமைப் பொறுப்புக்களை ஆற்றுபவராக மதிக்கப்பட்டு, தெய்வங்களாகப் பூசிக்கப்படத் தக்கவராவர் என்பது முப்பாலேட்டை வாசிப்பவர்கள் மறவாது மனங்கொள்ளத் தக்க செய்தி ஆகும்.

பண்டைத் தமிழகத்தின் ஊராட்சி மரபின் எஞ்சிய சின்னங்களாக விளங்கும் ஊரம்மன் கோயிலின் ஆட்சியில், வள்ளுவ அந்தணர் மரபின் எஞ்சிய சின்னங்களாகவே அமையும் நம் தமிழ்ப் பிராமணப் பெருங்குடி மக்கள் வரி அளிப்பதற்குரிய ஊர் மக்களாகக் கருதப்படாமலே, தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிக் குழுவில் மதிப்பு வாய்ந்த இடம் வகிப்பவராகின்றனர் என்பது இங்கே சிந்தித்துக் காணத்தக்க மெய்ம் மரபு ஆகும். பெருஞ்சோழர் ஆட்சியிலும் விசயநகர ஆட்சியிலும்—உரையாசிரியர் காலங்களிலேயே—இவ் வள்ளுவ மரபு இடையே சிறிது மறக்கப்பட்டுப் பிராமணரும் வாக்காளராகக் கருதப்படத் தொடங்கி யிருந்தனர் என்பது காண்கிறோம்.

பால், இயல், அதிகாரப் பெயர்கள்

திருக்குறளின் ஏட்டுப் பாயிர அதிகாரங்கள் நான்கும் முறையே வாழ்த்து, சிறப்பு, பெருமை, வலியுறுத்தல் என்ற வாழ்த்தியற் பண்புச் சொற்களுடன் முடிகின்றன. அறத்துப் பால் பாயிர அதிகாரங்களின் பெயர்களும் இதை நினைவூட்டும் வகையில் நலம் என்றும் பேறு என்றுமே முடிகின்றன. பிற அறத்துப் பாற் பாயிர அதிகாரங்களும் பொதுவற வியற் பாயிர அதிகாரங்களும் இதுபோலவே

தொடக்கத்தில் அமைந்திருத்தல் சாலும் என்று கருத இடமுண்டு. இதை உன்னியே இம்மணி விளக்க வுரையில் இல்வாழ்க்கை (5-ம் அதிகாரம்) அன்புடைமை (8-ம் அதிகாரம்) விருந்தோம்பல் (9-ம் அதிகாரம்), இனியவை கூறல் (10-ம் அதிகாரம்), செய்ந்நன்றி யறிதல் (11-ம் அதிகாரம்), நடுவு நிலைமை (12-ம் அதிகாரம்) ஆகியவற்றின் தலைப்புக்கள் இல்வாழ்க்கைச் சிறப்பு, அன்புடைமைச் சால்பு, விருந்தோம்பல் மாட்சி, இனியவை கூறற் சிறப்பு, நன்றி நலம், நடுவு நிலைமை மாண்பு என இயைவித்துக் கொள்ளப்பட்டுள்ளன.

☆

அதிகாரம் 5 இல்வாழ்க்கைச் சிறப்பு

அறத்துப் பாலுக்குரிய பாயிர முதலதிகாரமாக, அறத்துப்பாலின் இறை வாழ்த்தாக அமைவது இல்வாழ்க்கைச் சிறப்பு என்ற இவ்வதிகாரம்.

கடவுளினிடமாக நின்று அற வாழ்வை இயக்கும் பொறுப்புடைய மையப் பண்பாக அமைபவன் இல்வாழ்வானே. இல்வாழ்க்கைக்குரிய கடவுட் பண்பாக இவ்வதிகாரம் அவனையே சிறப்பிக்கிறது.

தனி உயிர் சமுதாய வாழ்வுக்கும் இன வாழ்வுக்கும் ஆற்றும் தொண்டே அறம். இதற்குக் குடும்பம் இன்றியமையா அடித்தளம் ஆகும். ஏனெனில் தனி உயிர் இத்தொண்டினைக் குடும்ப மூலமாகவே ஆற்ற முடியும். உடல் மூலமாக வன்றித் தனித்து இயங்க மாட்டாத உயிர்போல, குடும்ப மூலமாக வன்றி எவரும் அற வாழ்வில் பங்குபெற முடியாது.

இனத்தின் இனம் என்றும், இன விதை என்றும் கூறத்தக்க இனத்தின் சிற்றுருப்பு, குடும்பம். சமுதாயத்திலும் அதுபோல அது ஒரு சிற்றுறுப்பே. ஆயினும் அந்த இரண்டையும் இணைத்து, இரண்டினூடாகவும் அலைபாய்ந்து ஊடுருவி நின்று, அந்த இரண்டையுமே தோற்றுவித்துவிடும் ஆற்றல் வாய்ந்த கடவுட் பண்புடைய உறுப்பாக அது அமைந்துள்ளது.

இயற்கை, இனத்தைத் தோற்றுவித்த பேரினம், இனம், சமுதாயம் ஆகியவற்றின் முழுமை வாழ்வின் சென்ற கால அனுபவங்களையெல்லாம் விதையாகத் திரட்டி, வருங்கால அனுபவங்களையெல்லாம் 'ஆலமர் வித்தின் அருங்குறள்'

ஆகப் பண்படக்கம் செய்தமைத்துள்ள, 'அண்டமுண்டு அண்டமுமிழும் அணு உறுப்பாய்' இது அமைந்துள்ளது.

அறம்: குடும்பம்—இன்றியமையாத் தொடர்பு

அறத்துக்கும் குடும்ப வாழ்வுக்கும் இடையேயுள்ள இன்றியமையாத் தொடர்பு பற்றியோ—இல்லறத்துக்கும் குடும்ப வாழ்வுக்கும் இடையேயுள்ள இன்றியமையாத் தொடர்பு பற்றியோ கூட—உரையாசிரியர்கள் கருத்துச் செலுத்தியுள்ளனர் என்று கூற முடியாது. அறத்தையும் குடும்பத்தையும் அவர்கள் ஓர் அழகிணைப்பாக மட்டுமே கருதினர் என்று தோற்றுகிறது. அறம் பற்றிய வள்ளுவக் கருத்திலும், குடும்பம் பற்றிய தமிழ்ப் பண்பிலும் வள்ளுவப் பண்பிலும் அவர்கள் கருத்துச் செலுத்தாததே இதன் காரணம் என்னலாம்.

திருவள்ளுவரின் அறம் தனி மனிதனை மட்டுமே சார்ந்த பண்பன்று. அதன் பயனும் உரையாசிரியர் கருதியதுபோல தனி மனிதனின் மறு பிறப்புப் பயனை மட்டுமே சார்ந்த தன்று. இன சமுதாயப் பொங்கு மாவள நோக்கிய தனி உயிரின் வாழ்க்கை முறைத் திட்டமே அறமாதலால், அதன் பயனும் அவன் நலனை உள்ளிட்ட இன சமுதாய நலனே யாகும். பாயிரத்தின் அறத்துப்பாற் பாயிர அதிகாரமான அறன் வலியுறுத்தலிலேயே திருவள்ளுவர் ஐயத்துக் கிட மில்லா நிலையில் அறத்தைக் கடவுளுடனும் வீட்டின்பத்துட னும் தொடர்பு படுத்தியுள்ளதும்; உரையாசிரியர்கள்கூட அக்கருத்தை அங்கே (36, 38: 38-ம் குறட்பாவிற்கான பரிமேலழகர், மணகுடவர் உரை: அவை சுட்டிய இம்மணி விளக்க வுரையின் தனிக்குறிப்புப் பகுதி காண்க) ஏற்று உரை செய்துள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கன ஆகும்.

உரையாசிரியர்கள் அறம் பற்றிக்கொண்ட கருத்தில் தெளிவும் வரையறையும் கிடையாது. ஆனால், திருவள்ளுவர் கருத்துக்கும் அவர்கள் கருத்துக்கும் மலைமடு அளவான வேறு பாடு உண்டு என்பது வெளிப்படை. பரிமேலழகர் அறம் என்பதை மனு நூலின் தண்டம் வழக்கு நீங்கிய ஒழுக்கம்

என்றே விளக்கினர். மணக்குடவரும் 'இல்லறமாவது இல்லின் கண் இருந்து தானம் முதலியன செய்தல்' என்று இல்லறத்தை விளக்குவது நோக்க, அவர் அறம் என்பதைத் தானம் அல்லது ஈகை என்றே, அது போன்று இல்வாழ்வாருக்கு உரைக்கப்பட்ட வினைமுறை நீதி என்றே, அல்லது நற்செயல்கள் என்றேதான் கொண்டார் என்று தெரிகிறது.

இல்வாழ்க்கை என்பதற்குப் பரிமேலழகர் 'இல்லாளோடு கூடி வாழ்தல்' என்றே பொருள் கூறியமைந்தார். ஆனால், தமிழரின் இல்வாழ்க்கை அல்லது குடும்ப வாழ்வு இல்லாளோடு கூடியிருத்தல் மட்டுமன்று. இது இல்லாள் ஒருத்தியுடன் இல்வாழ்வான் ஒருவன் கூடியிருக்கும் வாழ்வு: ஒருவன்—ஒருத்திக் குடிவாழ்வு. அது மட்டுமன்று, அது காதலில்லாக் குடிவாழ்வு மன்று; கைக்கிளை, பெருந்திணைச் சார்பான ஆணுரிமைக் காதல் வாழ்வு மன்று, ஏனெனில், குடும்ப வாழ்வைத் தமிழர் கற்பு வாழ்வு என்றனர்.

கற்பு வாழ்வு என்பது பெண்ணுரிமைக் காதலான களவியல் மீது கட்டமைந்த பெண்ணுரிமைக் குடிவாழ்வு ஆகும். எல்லாப் பழந்தமிழ் ஏடுகளும் வலியுறுத்தும் இந்தத் தமிழர் குடும்ப வாழ்வின் இலக்கணத்தைத் திருவள்ளுவரின் முப்பால் அமைப்பே வலியுறுத்திக் காட்டுகிறது. களவியலும் கற்பியலுமாய் அமைந்த வள்ளுவரது இன்பத்துப்பாலின் தொடர்ச்சியே அறத்துப்பால்; பெண்ணின் இன்ப உரிமைத் தலைமை குறிக்கும் ஊடலில் முடிந்த முப்பால், ஆணின் அற உரிமைத் தலைமை குறிக்கும் இல்லறத்துடன் தொடங்கியது இதனாலேயே யாகும்.

திருவள்ளுவரின் அறக்கோட்பாடும் குடும்பப் பண்பும் விளங்கக் கண்டு கொண்டபின் கூட, அறத்துடன் குடும்பத்துக்கு உரியதாக அவர் கொள்ளும் இன்றியமையாமையைக் காண்டல் அரிது என்னலாம்: ஏனெனில், அது அவரது கடவுட் கோட்பாட்டுடனும் முப்பாற் கோட்பாட்டுடனும்,

அவற்றில் உள்ளடங்கிய நம் கால இயல் நூலாரின் உயிர் மலர்ச்சிக் கோட்பாட்டுடனும்[1] தொடர்புடையதாகும்.

செயல்களில் உடனடிப் பயனுடையவையும் உண்டு: நீடித்த தொலைப் பயனுடையவையும் உண்டு: நிலையான பயனுடையவையும் உண்டு (குறட்பா 2—'பயன்'...விளக்க வுரைப் பகுதி காண்க). நிலையான பயனுடையவையே, அதாவது தனி மனிதரையும் குடும்ப சமுதாய எல்லையையும் தாண்டி இன முழுமையிலும் முக்காலத்துக்கும் அழியாப் பயனுடைய செயல்களே தமிழிலும் வள்ளுவர் கருத்திலும் 'வினை' எனப்படும். நிலையான பயனுடைய நல்வினையே அறம்.

நிறைவுரு நிறைவுநோக்கி என்றும் வளர்ந்துகொண்டே செல்லும் இன நல வளர்ச்சிப் பண்பின் எல்லையற்ற குறிக் கோளுருவினர் கடவுள். அறம் தனி மனிதரையும் குடும் பத்தையும் சமுதாயத்தையும் இனத்தையும் அக்குறிக் கோளுருவினரான கடவுளை நோக்கிக் கொண்டு சென்று கொண்டே யிருப்பதனால், வள்ளுவ அறத்துக்கும் வள்ளுவக் கடவுளுக்கும் ஒரு நேர் தொடர்பு, காரண காரியத் தொடர்பு ஏற்பட்டுவிடுவது காணலாம்.

உயிரின் இந்த அகமலர்ச்சியே அறம். அந்த அக மலர்ச்சியின் எல்லையே கடவுள். இவ்அகமலர்ச்சிக்கு உதவும் அறப்பண்பாகிய அன்பு, குடும்பம் என்ற தளத்திலன்றி, தமிழ்க் குடும்பம் அல்லது வள்ளுவக் குடும்பம் ஆகிய தளத்தி லன்றி, வேறு எதிலும் வளர்வதில்லை.

வள்ளுவக் கோட்பாட்டின் இந்தக் கடைசி முடிபை நம் கால அறிவியல், சிறப்பாக உயிர் நூல் சார்ந்த உயிர் மலர்ச் சிக் கோட்பாடு விளக்குவதாகும்.

இயல் மலர்ச்சி காட்டும் படிப்பினை

தொடக்க நிலை உயிர்களில் நாம் காதலையும் காண முடி யாது; குடும்ப சமுதாய அமைப்புக்களையும் காண முடியாது.

1. Evolution

கால உணர்வால் வரும் 'நாம் ஓர் இனம்' என்ற எண்ணத்தின் தடத்தையும் காண முடியாது. இந்நிலையில் உயிர்கள் உயிர்களை உண்டன. இனம் தன்னை உண்டது; இனங்கள் மற்ற இனங்களையும் உண்டன. ஆண்-பெண் பால் வேறுபாடு ஏற்பட்ட பின்கூட, உயிரினம் பிள்ளையை, பிள்ளை பெற்றோரைத் தின்றன. ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் தின்றன. தேள் தன் காதற் கேளிக்கையின் முடிவிலேயே அயர்ச்சி தீர ஆண் தேளையும், பெற்றவுடன் களைப்புத் தீரத் தன் முதல் பிள்ளையையும் தின்பதே அதன் இன இயல்பு. இதே இயல்புகளை மீன், பாம்பு, பூனை, நாய் ஆகியவற்றினிடமும் காணலாம். கானுங்கோழி போன்ற இனங்களில் காதற் கேளிக்கையின் நடுவிலேயே தற்செயலாகக் குருதிச் சுவை தட்டினால் ஆண் பெண்ணைத் தின்றுவிடும் என்று அறிகிறோம் !

சம்ஸ்கிருத ஏடுகளும் தற்கால மேலையுலகும் 'காதல்' என்ற சொல்லால் உணரும் பண்புகூட இந்தத் தன்னினக் கொலை, தற்குடும்பக் கொலையைத் தடுத்துவிட வில்லை என்பதை மேற்கூறிய உயிர் நூல் விளககம் காட்டும். ஏனெனில், அன்பாக வளரும் காதல் வள்ளுவர் காதல் மட்டுமேயாகும் !

இனம் தனக்குத் தொலைவான இனத்தைத் தின்பதை இன்றுகூட நம்கால உலகம் கொடுமை என்று கருதவில்லை. அணிமை யினத்தைக் கொன்று தின்பதைக் கொடுமை என்றும், தன் இனத்தையே கொன்று தின்பதை வெங்கொடுமை அல்லது அரக்கத் தன்மை[1] என்றும் கூறுகிறோம்.

உயிரினத்தின் தொடக்க நிலை அரக்கத் தன்மையிலிருந்து சமணரின் முழு நிறை கொல்லாமை, சமண முனிவர், தமிழ் முனிவர் ஆகியோரின் சித்த உணவு (வித்து முண்ணுது சருகு உதிர் கனி உண்ணல்), யோக உணவு (ஒருயிர்ப் பொருளும் உண்ணாமை) ஆகிய வள்ளுவரின் ஊனுண்ணாக் கொல்லா மரபு நோக்கிய வளர்ச்சி ஏற்பட்ட வகை யாது ?

---

1. Cannibalism

இது வெறுங் காதலன்று, வெறுங் குடும்பமன்று, தமிழ்க் காதற் குடும்பங்கூட அன்று: வள்ளுவரின் காதற் குடும்பமே யாகும். இதை உயிர் நூல் கொண்டே நாம் காணலாம்.

காதற் குடும்பம் என்றால் என்ன?

காதல் வாழ்வின் பயனாக ஏற்பட்ட குடும்பம், தமிழ்க் குடும்பம். இதுவே தொல்காப்பியரும் சங்க இலக்கியமும் போற்றும் குடும்பம் ஆகும். ஆனால், இத்தகைய குடும்பம் கூடக் காதலை வளர்க்கலாம், அன்பை வளர்க்க முடியாது. அறத்தை வளர்க்க முடியாது. உயிர் நூல் இதனைக் காட்டு கிறது.

காதற் குடும்ப வாழ்வில் மனித இனத்தைவிட, தமிழினத்தைவிட முன்னேறியவை என்று கூறத்தக்க விலக்கு பறவைகள் உண்டு. காதலர்க்கு உவமையாகக் கவிஞர் எடுத்துக் காட்டும் மானும் புறாவும் அன்றிலும் இதற்குச் சான்றுகள். அவற்றிடையே உச்ச உயர் காதல் உண்டு. ஆனால், அவற்றிடையே குடும்பங் கடந்த அன்பும் அறனும் உண்டு என்று எவரும் கூறமாட்டார்கள்.

உயிரினங்களிலே வள்ளுவ அன்புக்கு மிகப் பொருத்தமான சான்று தேடினால் அதை யானையினிடத்திலே தான் காண முடியும். ஒருவன்-ஒருத்திப் பண்பு, குழந்தை குட்டி பேணும் பண்பு, பெண்ணையும் முதுமையையும் ஏலா உயிர்களையும் பேணும் பண்பு ஆகிய எல்லாவற்றையும் நாம் யானை இனத்தில் காணலாம்,

யானைக்குக் குடும்ப வாழ்வு உண்டு. சமுதாய வாழ்வு உண்டு. இன உணர்வு உண்டு. இம்மூன்றும் அளாவியதே வள்ளுவ அன்பு. அது இனத்தின் உறுப்பாகவும் சமுதாயத்தின் உறுப்பாகவும் அமைந்த காதற் குடும்பத்தில் மட்டும் தான் வளர முடியும் என்பதை இது காட்டுகிறது.

குடும்பப் பண்பு வளராமல், சமுதாயப் பண்பு மட்டும் வளர்ந்த இனங்கள் உண்டு. இங்கே நேர்மை, சமத்துவம், பாசம் முதலிய பண்புகள் வளரக் காண்கிறோம். ஆனால்,

இங்கே கொடுமையும் கடுமையும் மிகுதி. ஓநாய், நாரை ஆகியவற்றை இதற்குச் சான்றுகளாகக் கூறலாம். ஓநாய்ச் சமுதாயத்தை ஆங்கில இயக்கியப் பேரறிஞர் ஒருவர் ஓநாய் குடியரசு [1] என்றே வருணிக்கிறார். நாரை, அன்னம் போன்ற மண்டலப் பறவைகள் அணியணியாக உலக முழுவதும் சுற்றிக் கூட்டு வாழ்வில் கட்டுக்கோப்புக் குலையாமல், மனிதரும் வியக்கும் ஒழுங்குறுதியுடன் வாழ்வது காணலாம். ஆனால், ரோம நாட்டவரையும் கிரேக்க நாட்டு ஸ்பார்ட்டா நகரத்தாரையும்போல, ஏலாதவர், உறுப்புக் குறைந்தவர், முதிரா அறிவுடையவர்களை 'இன நலம்' கோரியே அவை இரக்கமின்றிக் கொன்றொழித்துவிடும் பண்பு மேற்கொண்டவை.

சமுதாய வாழ்வில் இன்னும் முன்னேறிய இனங்கள் எறும்பும் தேனீயும்ஆகும். இடைக்கால இந்தியாவின் வருண ஆசிரம நெறியை இவ்விரண்டிலுமே—சிறப்பாக எறும்பினத்தில் காணலாம்.

சமுதாய மட்டும் வளர்த்த இவ்வினங்களில் யானையினத்தில் காணப்படும் வள்ளுவ அன்பு நோக்கிய பண்பை நாம் காண முடியாது என்பது வெள்ளிடைமலை.

வள்ளுவ அன்புக் கோட்பாடு

வள்ளுவ அன்பு என்ன என்ற கேள்வியையும் அதற்குரிய விடையையும் மேற்கூறிய விளக்கமே சுட்டிக்காட்டும்.

காதற் குடும்பத்தில் காதலிலிருந்து அன்பு பிறக்கும். ஆனால், அது குடும்ப அன்பு. அக்குடும்பம் சமுதாய உறுப்பானால், அந்த அன்பு படிப்படியாகச் சமுதாயத்தின் எல்லையில் பரவும். சமுதாய வாழ்வு நேர்மை, சமத்துவம் ஆகிய பண்புகளை வளர்க்கிறது. சமதளமான நீர்ப்பரப்பில் அலைகள் வட்ட வட்டமாகப் பரவிக்கொண்டே இருப்பதுபோல, சமுதாய உறுப்பாகிய குடும்பத்தின் அன்பு குடும்பத்தைச் சுற்றி வட்ட வட்டமாகச் சமுதாய நேர்மையுடன் கலந்து மக்கட் பாசமாக விரிந்து செல்கிறது.

---

1. Repubtic of wolves

சமுதாயம் இன உணர்வுடைய, யானையைப்போலக் கால உணர்வுடைய சமுதாயமானல், இந்தக் குடும்ப அன்பு சமுதாயமாகிய சமதளப் பரப்பில் வட்ட வட்டமாக விரிந்து செல்வது மட்டுமன்றி, வளி மண்டலமெங்கும் உருண்டா காரமாக வானெலி அலைகள்போல விரிந்துகொண்டே செல்லும்.

வள்ளுவர் அன்பு என்பது குடும்பத்தை மையமாகக் கொண்டு, சமுதாயப் பரப்பிலும், இனம் என்ற கால இட வரம்பற்ற முழுமையிலும் [1] ஓயாது இடைவிடாது பரவிச் சென்றுகொண்டேயிருக்கும் ஓர் அலைபாய் வியக்கம் ஆகும்.

வானெலி அலைகள் ஏதாவது தடைப் பொருள்களில் முட்டினலும், வளி மண்டல எல்லை யளாவி விட்டாலும், எதிரலைகள் அல்லது பட்டெறி அலைகள் [2], ஆகும். அதுபோல் அன்பலைகள் எங்கும் எல்லாத் திசைகளிலும் எதிரலைகள், பட்டெறி அலைகள் பரப்பியே செல்வன. இது மட்டுமன்று. துறவறத்தில் இந்த அன்பலைகள் இன எல்லையளாவி எதிரலை களாய், பட்டெறி அலைகளாய், அருள் என்ற பெயர் பெறு கின்றன. அவை அன்புடன் கலந்த இன்ப அலைகள் ஆகும்.

இன்ப வாழ்வினை இயக்கும் மையப்பண்பாய் அமைபவள் பெண்ணே யாயினும், இன்ப அறமாகிய இல்லறத்தில் அவள் இயக்குவிப்பவளாகி, ஆணுகிய இல்வாழ்வானே இயக்கும் மையப் பண்பாகிருன் என்பது மேலே பொதுவற வியல் முன்னுரையில் விளக்கப்பட்டது. குடும்ப ஆட்சி பெண்ணி டமே இருந்தாலும், அற வாழ்வில் குடும்பம் சமுதாய உறுப் பாகவே இயங்குவதாலும், குடும்பத்தின் சார்பில் சமுதாயத் தில் அக்குடும்பத்துக்குரிய பொறுப்பை வகிக்கும் இல்வாழ் வானே அற வாழ்வைக் குடும்பத் தலைவனுக இயக்கும் பொறுப்புடையவனுகிருன். அப்பொறுப்பில் மிக முனைப் பான கூறு பொது வற வியலின் அற வாழ்வுப் பகுதிக்குரிய முதலதிகாரத் தலைப்பாய் அமையும் விருந்தோம்பலே

1. Space-time continuum 2. Counter-waves or Refractory waves

யாகும். விருந்தோம்புபவன் என்ற முறையிலேயே தமிழில் இல்வாழ்வானுக்கு வேளாளன் என்ற தனிப் பெயர் இருப்பதையும், உலகளாவிய தொலை மொழிகளிலும் இப்பண்பு பரவி, இதேபோல ஒரு தனிச்சொல் (ஆங்கிலம்: ஹோஸ்ட் 1) இருப்பதையும் மேலே கண்டோம்.

'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்'

என்ற பழந்தமிழ் உரையும் இச்சொல்லின் இம்மூலப்பண்பு உணர்த்துகிறது.

அதிகாரப் பெயர்

இவ்வதிகாரத்துக்குப் பழைய உரையாசிரியர்கள் 'இல்வாழ்க்கை' என்றே தலைப்பிட்டுக் காட்டியுள்ளனர். ஆயினும் பொதுவறவியல் முன்னுரையில் சுட்டிக்காட்டியபடி, பாயிரப் பண்புடைய அதிகாரங்களெல்லாம் வாழ்த்துப் பண்பு குறிக்கும் சொல்லை இறுதியாகக்கொண்டு அமைந்ததை நோக்கி, இவ்வதிகாரம் இவ்வுரைப் பதிப்பில் இல்வாழ்க்கைச் சிறப்பு எனக் கொள்ளப்பட்டது. இப்பெயர் இல்வாழ்வான் மாட்சி என்று இருந்தாற்கூட இன்னும் பொருத்தமாக அமையும் என்னலாம். ஏனெனில் இவ்வதிகாரம் பொதுவற இயலை மட்டுமன்றிச் சிறப்பறவியலையும் உட்படுத்திய அறத்துப் பாலுக்கே இறை வாழ்த்தாக அமையும் பாயிர முதலதிகாரம் ஆகும். இல்வாழ்வானே அதிகாரத்துக்குரிய இறைப் பண்பாதலால், அவனைச் சிறப்பித்து வாழ்த்தும் அதிகாரத்துக்கு இல்வாழ்க்கைச் சிறப்பு என்ற பெயர் பொருந்துமாயினும், இல்வாழ்வான் மாட்சி என்பது இன்னும் சிறப்புறப் பொருந்துவதாகும்.

பேராசிரியர் முனைவர் இலக்குவனாரின் திருக்குறள் எளிய பொழிப்புரைப் பதிப்பில் இவ்வதிகார உரைப் பகுதிக்கு அவர் 'இல்லாளோடு கூடி வாழ்தலின் சிறப்பு' எனவே, தலைப்புத் தந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

1. Host

பொதுவறவியல் 'இருந்தோம்பி' என்று வினைச் சொல்லுடனும், சிறப் பறவியல் 'அருட் செல்வம்' எனப் பண்புப் பெயருடனுமே தொடங்க, அவற்றுக்குப் பொதுவான அறத்துப்பால் பாயிரம் அறிவுப் பண்பாக இல்வாழ்வான் என்று தொடங்குகின்றது. இதனால், அறவாழ்வு முழுவதையும் இயக்கும் கடவுட் பண்புகள் அனைத்தையும் இயக்கும் கடவுட் பண்பாளன் இல்வாழ்வானே என்பது குறிக்கப்பட்டது.

இல்வாழ்க்கைச் சிறப்பு என்னும் அதிகாரப் பெயரில், இல்வாழ்க்கை என்பது இல்லத்தில் வாழ்வதற்குரிய வாழ்க்கை எனப் பொருள்படுகிற ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை ஆகும்.

இல் என்பது இடம் குறித்த பெயராய், பின் வீட்டுக்கு ஆகுபெயராயிற்று. 'இல்' என்பது போலவே இடவேற்றுமை உருபான 'உள்' இன்றும் தமிழகப் பிராமணர் பேச்சு வழக்கில் 'வீடு' என்ற பொருளில் வழங்குவது காணலாம். 'இல்லம்' கூட்டுக்குடும்ப மனை என்ற பொருளிலும், கூட்டுக்குடும்பம் என்ற பொருளிலும் மலையாளத்தில் வழங்குகிறது. இல் என்ற தமிழ்ச் சொல்லுக்கும் பழந்தமிழ்த் தாயகப் பகுதியான இலங்கையின் பெயர்களுக்கும் (இலங்கை-ஈழம்) தொடர்பு உண்டு என்று ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றனர். மனித இனத்தில் முதன் முதலாக உழவும் நிலைத்த குடி வாழ்க்கையும் கண்டவர் தமிழராதலின், குடிமனையின் பெயராலேயே தம் முதல் இனப் பெயர், நாட்டுப் பெயர்கள் குறித்தனர் என்னலாம்.

வாழ்க்கை என்பதில் 'கை' தொழிற் பெயர் விகுதி, ககரம் இதன் முன்னர்ப் புணர்ச்சியில், இரட்டித்தது 'வாழ்' என்னும் பகுதி 'குடும்பமாகச் சமுதாயத்தில் கூடி நின்று இன வாழ்வில் பங்குகொள்ளுதல்' என்னும் பொருளே உடையதென்பது பொது முன்னுரையில் விளக்கப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கைச் சிறப்பு என்பது இல்வாழ்க்கைக்குரிய சிறப்பு என நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை என்றோ; இல்வாழ்க்கையின் சிறப்பு என ஆறும் வேற்றுமைத் தொகை என்றோ கொள்ளுதல் கூடும்.

முன்னதே சிறப்புடையது. சிறப்பு என்பது பண்புப் பெயர். சிற என்னும் வினையடியான 'பு' விகுதி பெற்ற தொழிற் பெயர் எனினும் அமையும். அவ்வழி விகுதி முன் புணர்ச்சி யில் பகரம் இரட்டித்ததெனலாம்.

இல்வாழ்க்கைச் சிறப்புக் கூறும் அதிகாரம் அப்பெயர் பெற்றது ஆகுபெயர் ஆகும்.

அதிகாரப் பெயர் இல்வாழ்வான் மாட்சி என்பதாக அமையின், இல்வாழ்வான் ஏழாம் வேற்றுமைத் தொகையா கவும், இல்வாழ்வான் மாட்சி அதனடியான ஆறும் வேற்று மைத் தொகையாகவும், அது கூறும் அதிகாரத்துக்கு ஆகு பெயராகவும் கொள்ளத் தக்கது ஆகும்.

அதிகார நுதல் பொருள்

அற வாழ்வில் கடவுளின் பேராளாக நின்று இறைப் பண்பாய் இயலும் இல்வாழ்வான் முப்பால் வாழ்வுக்கும் உரியவனேயாயினும் இவ்வதிகாரத்தில் முதல் மூன்று குறட் பாக்களும் (41—43) அவனது இன வாழ்வுத் தொடர்பினை யும்; அடுத்த மூன்று குறட்பாக்களும் (44—46) அவனது பொருள் வாழ்வுத் தொடர்பினையும்; அதனைத் தொடர்ந்த மூன்று குறட்பாக்களும் (47—49) அவனது அற வாழ்வுத் தொடர்பினையும்; இறுதிக் குறட்பா (50) அவனது முப்பால் வாழ்வுத் தொடர்பினையும் விதந்தோதுகின்றன.

41. இல்வாழ்வான்: முப்பால் முதல்வர்களின் இன்றியமையாத் துணைவன்

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

பொ-ரை: குடும்பத் தலைவன் என்று பாராட்டப் படும் தகுதிக்கு உரியவன் முப்பால் வாழ்வினைத் தோன்றாத் துணையாக நின்று இயக்கும் பண்பினை

யுடைய முப்பால் முதல்வர்களான (துறவோர், ஒழுக்கத்து நீத்தார், அந்தணர் என்ற) மூவகையினருக்கும் அவர்களது இனநலத் தொண்டு நெறிகளில் அவர்களுக்கு இன்றியமையாத உதவியாளன் ஆவான்.

க-ரை: கடவுட் பண்பாளரையும் காக்கும் பொறுப்புடைய கடவுட் பண்பாளன் இல்லறத்தான்.

இலக். கு: இத் குறட்பாவின் வாசகம் ஒன்று. இதன் சொற்கள் இரண்டு.

அவை யாவன.

1. இல்வாழ்வான் என்பான் (இது எழுவாய்).
2. இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை (இது பெயர்ப் பயனிலை).

இக்குறட்பாவில் 'என்பான்','மூவர்க்கும்' என்ற சீர்களின் இறுதி அசைகள் மீதும், நல்லாற்றின் என்பதன் முதலசை மீதும் ஓசை எடுத்திசைத்தது. 'துணை' ஒன்றே நலிந்திசைத்த சீர். மீதமெல்லாம் படுத்தலிசைப்பு. இவற்றுள் நின்ற என்பது இறுதி நலிவிசைப்பாகிய இறங்கிசைப்பு.

இல்வாழ்வான் என்பான் என்ற தொகை பெயர்ச் சொல்லாய் எழுவாயாக நின்றது. இல்வாழ்வான் என்பதும் என்பான் என்பதும் ஒருவரையே குறித்ததனுல் இத் தொகை ஒரு பொருள் குறித்த இரு பெயரொட்டுத் தொகை. என்பான் என்பது வினையாலணையும் பெயர். 'என்' இங்கே எனப்படுதல், என்று சிறப்பிக்கப்படுதல் என்னும் செயப்படு பொருள் குறிப்புத்தந்தது.

இல்வாழ்வான் என்பதில் வாழ்வான் காலப் பொதுமை குறித்த எதிர்கால வினையாலணையும் பெயர். வாழ், பகுதி. இல்லத்திலிருந்து வாழ்பவன் என்னும் பொருளில் இல்வாழ்வான் என்பது ஏழாம் வேற்றுமைத் தொகை.

இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை என்பது பெயர்ப் பயனிலையாய் முன் தொகையை எழுவாயாகக் கொண்டது. நின்ற என்பது பெயரெச்சமாய், துணை என்ற பெயர்ப் பயனிலையின் பெயர் தழுவிற்று. நல்லாற்றின் என்ற ஏழாம் வேற்றுமைப் பொருள் நின்ற என்ற வினை தழுவிற்று. இதில் 'இன்' ஏழாம் வேற்றுமை உருபு, நல்லாறு பெயர். குற்றியலுகர ஈறு வேற்றுமையில் முன் மெய் இரட்டிக்கப்பெற்றது. நல்லாறு பண்புத் தொகை.

இயல்புடைய மூவர்க்கும் என்பதில் 'கு' நான்காம் வேற்றுமை உருபு. உம் இங்கே முற்றும்மை. மூவர் எண்ணுப் பெயராதலால், இது மூன்றில் விலக்கிலா முழுமை குறித்தது. மூவர் என்பது மூன்று என்பதன் அடியான உயர்திணைப் பன்மைப் பெயர். இவ் வேற்றுமைப் பொருளும் உம்மையும் நின்ற என்ற பெயரெச்சத்தின் வினைப் பகுதித் தழுவித் தொகைப்பட்டன. இயல்புடைய என்பதில் உடைய என்பது உடைமை என்ற பண்புப் பெயரடியான குறிப்புப் பெயரெச்சம். இயல்பு என்பதின் இறுதியில் இயல்பினை உடைய என இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து நின்றது.

வி - ரை: அறவாழ்வில் கடவுளின் மையப் பண்புருவினனை இல்வாழ்வான் முப்பால்களுக்கும் உரியவனாயினும், இக் குறட்பா உட்பட அதிகாரத்தின் முதல் மூன்று குறட்பாக்களும் (41—43) அவனது இன வாழ்வுத் தொடர்பையே சிறப்பிக்கின்றன. மூன்று குறட்பாக்களுமே இன வாழ்வுக்கு அவனது இன்றியமையாமையை வலியுறுத்துகின்றன, அவ் வழி, இக்குறட்பாவினால் முப்பால்களையும் இயக்கும் கடவுட் பண்பாளர்களை இயங்குவிப்பவன் இல்வாழ்வானே என்பது விதந்தோதப்படுகிறது.

இல்வாழ்வான் என்பான் என்பது 'குடும்பத் தலைவன் என்று பாராட்டப்படும் தகுதிக்குரியவன்' என்று பொருள்படும்.

இல் எபன்து வீடு. இது 'அம்' என்னும் ஒன்றன்பால் ஈறு பெற்று இல்லம் எனவும் வழங்கப்படும் (அதிகார முன்னுரை காண்க).

வாழ்வான் என்பது இங்கே வாழ்வாங்கு வாழ்பவனை (50), வளம்படச் சிறப்புடன் வாழ்பவனையே குறித்தது. வாழ்தல் என்பது தமிழில் குடும்பமாக, சமுதாயத்துடன் கூடி வாழ்தலையும், இளவளம்பட வாழ்தலையுமே குறிக்கும். இங்கே 'இல்' என்று கூறப்படாமலே இச்சொல் பொருள் தரத்தக்கதாதலால், 'இல்' சிறப்புடன் வாழ்வதையே இங்கே சுட்டி நின்றது.

'என்பான்' இங்கே 'எனப்படும் தகுதிக்குரியவன்' எனச் செயப்படுபொருளில் வழங்கிற்று. இல்வாழ்வையுடைய வன், இல் வாழ்வின் ஆட்சிப் பொறுப்புடையவன் என்ற பொருள் தந்து இது பின்வரும் சிறப்புக்கு முன் அறிமுகச் சொல்லாய் நின்றது. 'என்' பொருள் விளக்கும் வினைப் பகுதியாதலால், இங்கே முழுத்தொகை இல்வாழ்வானின் முழுத் தகுதியும் பெற்ற வினையே சுட்டிற்று.

இயல்புடைய மூவர் என்பது இங்கே முப்பால் வாழ்வினைத் தோன்றாத் துணைகளாகப் பின்னின்று இயக்குவிக்கும் பண்பினையுடைய முப்பால் முதல்வர்களாகிய மூவரைக் குறித்தது. முப்பால்களிலும் தோன்றும் துணைகளாக முன்னின்று இயக்கும் தலைவர்களையும் பண்புகளையும் வள்வளூர் முறையே அறவாழ்வை உள் நின்று இயக்கும் துறவோர், பொருள் வாழ்வை உள்ளூர நின்றியக்கும் ஒழுக்கத்து நீத்தார், இன்ப வாழ்வினை உள்ளூர நின்றியக்கும் அந்தணர் என்று வகுத்தனர். கடவுட் பண்புடைய இம் முதல்வர் மூவர்க்கும் உலக வாழ்வில் ஆதாரமாய் உதவுபவன் இல்வாழ்வானே என்று இக்குறட்பா அவன் சிறப்புக் கூறிற்று.

இயல்பு என்ற தமிழ்ச் சொல் சூழலுக்கியைய மாறிய மையும் தன்மை, அச்சூழலை மாற்றியமைக்கத்தக்க தன்மை ஆகிய இரண்டையும் குறிப்பதாகும். தன்மை என்ற சொல் லைப்போல அது தனிப் பண்பையோ, நிலையான பண்பையோ குறிக்கவில்லை. சூழலிடையே மாறுபடும் பண்பையே குறித்தது.

இனத் தலைவராகிய மூவர் முப்பால் வாழ்வுகளிலும் நின்று அவ்வப்பால்களில் சமுதாயத்தையும் இனத்தையும்

தம்வழி இயக்குபவராயினும், அவர்கள் அவ்வாறு இயக்கும் ஆற்றல் உடையவரேயானாலும், தோன்றாத் துணையாக நின்றே அவர்கள் இயக்குவதனால், அவர்கள் இயக்கும் ஆற்றல் இயல்பு எனப்பட்டது. அந்த ஆற்றலை உலக மக்கள் நுகர்ந்து அவர்களை அன்புடன் மதிப்பராயினும், அதனை ஆற்றல் என அவர்கள் உணரமாட்டார்கள். தலைவர்களும் அதுபோல அதைத் தம் ஆற்றல் என்று கருதாமல், தம் இயல்பான கடமை என்றே கருதிச் செல்வார்.

அவர்கள் ஆற்றல் நீடு முயற்சியினாலேயே வருவதாயினும், அது இனப் பயிற்சியாய், அவர்கட்கு இயல்புபோல் ஆகிவிடுகிறது என்பது கருத்து.

ஒளி இயல்பாகவே இருள் நீக்குவதும், நீர் இயல்பாகவே ஒழுகுவதும் போல, தலைவர்கள் ஆற்றலால் செய்யும் செயல்கள் யாவும் அவர்களுக்கு இயல்பாகிவிடுகின்றன என்பது 'இயல்புடைய' என்பதனால் சுட்டப்பட்டது.

மூவர் என்பது இவ்வாறாக முப்பால் முதல்வராகிய துறவோர், ஒழுக்கத்து நீத்தார், அந்தணர் ஆகியோரைக் குறித்தது. துறவோர் அறவாழ்வின் ஆட்சியாளராக அறத்துப்பாலிலேயே சிறப்பறவியல் முழுவதும் குறிக்கப்படுபவராவர். ஒழுக்கத்து நீத்தார் பொருட்பாற் பாயிர அதிகாரமாகிய ஒழுக்கத்து நீத்தார் அதிகாரத்தில் விளக்கப்பட்டனர். பொருட்பாலில் அவர்கள் மரபினரான பெரியார், சான்றோர் பண்பாளர் சுட்டப்பட்டனர். ஆனால், இன்பப் பாலுக்குரியவர் அந்தணர் என்பது நேர்முகமாகச் சுட்டப்படவில்லை. காதலரிடையே பாங்கராக, வழிப்போக்கராகச் சங்க இலக்கியத்திலும் பிறண்டும் வரும் அந்தணர் இவர்களே. ஒழுக்கத்து நீத்தார் பெருமை அதிகார இறுதிக் குறட்பாவிலும் இவர்கள் பாயிர மையப் பண்பாளராகச் சுட்டப்பட்டனர். அத்துடன் அவர்கள் அந்தண்மைப் பண்பே, இன்பத்துப் பால் பாயிர அதிகாரமான வான் சிறப்பில் மழை முகிலாகச் சுட்டப்பட்டது.

நல் ஆற்றின் என்பது இனத் தலைவர்களாகிய 'அம் மூவரது இன நலம் நாடிய வாழ்வாகிய இனத் தொண்டு நெறிகளிலே' என்னும் பொருளை உடையது.

ஆறு என்பது ஒழுக்கம் அல்லது வாழ்க்கை நெறி. 'நல்' என்ற அடை இங்கே அவர்கள் இன நல நாட்டம் சுட்டிற்று.

இன் என்பது இங்கே ஏழாம் வேற்றுமை உருபு. ஆனால், அதுவே இங்கே மூன்றும் வேற்றுமை உடனிகழ்வுப் பொருளும் சுட்டிற்று. மூவரின் வாழ்வில் இடையறாது துணையாதலை இது குறித்துணர்த்திற்று.

நின்ற என்பது துணைமையின் நிலைத்த பண்பினைச் சுட்டி, இடையறாமையை வலியுறுத்திற்று. உறுதியான என்ற கருத்தையும் அது சுட்டிற்று. இவ்விரண்டும் சேர்ந்தே இன்றியமையாத என்னும் கருத்தும் தந்தன.

துணை என்பது எப்போதும் உடனிருந்து காத்துப் பேணும் உதவிப் பண்பு சுட்டிற்று,

துணைமை தமிழில் 'இருமை' என்ற பொருளுமுடையது. துணை ஒன்றற் கொன்று அல்லது ஒருவர்க் கொருவர் பாது காப்பாக அமையும் சமத்துவ அடிப்படையான அணுக்கத் தோழமை குறித்தது. முப்பால் முதல்வர்கள் ஒவ்வொருவருடனும் அவரது அணுக்கத் துணைவராயிருந்து இல்வாழ்வான் தரும் ஒத்துழைப்பை இது குறித்தது.

முகில் தனக்கு மூல ஆதாரமான கடலுக்கும் ஆதாரமாயமைவது போல, இங்கே இல்வாழ்வான் தன் அற வாழ்வுக்கு மூல ஆதாரமான அற முதல்வருக்கும் ஆதாரம் ஆவான் என்று சிறப்பிக்கப்பட்டது காண்க.

சிறப்புரை: தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரால் தான் உலகம் நின்று நிலைபெறுகிறது. உலகு வாழ வாழும் அவர்கள் தம் வாழ்வில் கவனம் செலுத்தாமல் இருப்பதே இயல்பு. அத்தகையோரை வாழ்விப்பதன் மூலம் உலக வாழ்வுக்கே பேருதவி செய்பவன் இல்லறத்தான் ஆவான்.

பொருள்வளம் : (1) பெரும்பான்மைச் சீர்கள் படுத்தலோசையாகவும், ழகரம் உட்பட்ட இடையெழுத்து வண்ணமாகவும் இக் குறட்பா இயன்று, யாழிசையின் ஓசை நயம் உடையதாய், முப்பால் தலைவர்களின் எழில் வாழ்வின் இன்ப நயத்தினை ஓசையாலேயே சுட்டுதல் வாசித்துக் காணத் தக்கதாகும்.

(2) 'இல்வாழ்வான் என்பான்' என்பதில் இறுதி அசை எடுத்திசைப்பதனாலேயே, இல்வாழ்வான் எனப்படும் தகுதியுடையவன் என்ற பொருளும், அத் தகுதியின சிறப்பும் தொனிக்கின்றன. மூவர்க்கும் என்பதன் இறுதி அசை எடுத்திசைப்பதனால், முப்பாலை இயக்கும் முதல்வரை அவன் ஒருபால் வாழ்வில் நின்றே இயக்குபவன் ஆகிறான் என்ற கருத்தும், அந்த ஒரு பாலாகிய அறத்துப்பால் அம் முப்பால்களுக்கும் அடிப்படை ஆகும் என்ற கருத்தும் குறிக்கப்படுகின்றன.

(3) நல்லாற்றின் என்ற சீரில் முதலசை எடுத்திசைக்கின்றது. அதன் எதிரிணையான 'இல்வாழ்வான்' படுத்தலிசைப்பாகும். இல்வாழ்வான் வேறு தன் செயலாக எதுவும் செய்யாமல், தன் இல்வாழ்வை நன்கு நடத்துதல் மூலமே, பெருஞ் சிறப்புடைய முப்பால் முதல்வர் அரும்பெரும் பணியை ஊக்குவதன் வாயிலாக அப் பெருஞ் செயலைச் செய்தவன் ஆகிறான் என்ற தொனிப் பொருள் இங்கே குறிக்கப்படுகிறது. மூவர் தம் பெரும் பணியைத் தம் இயல்பாகக் கொண்டதுபோல, இல்வாழ்வானும் இவ் வரும் பணியைத் தனி முயற்சியில்லா இயல்பாகக் கொண்டவன் ஆகிறான் என்பதும் நயம்படச் சுட்டப்பட்டது.

(4) நின்ற துணை என்பதில் நின்ற என்பதனாலேயே நிலையான உறுதியான துணை, இன்றியமையாத் துணை என்ற பொருள்களை மட்டுமன்றி, தான் நின்றதன் மூலமே அவர்களை நிறுத்திய, நடத்திய துணை என்றும்; துணை என்றதனாலேயே, அவர்கள் பணியைத் தன் பணியாகக் கொண்ட உடன் தோழமைப் பண்பு உடையவன் என்றும் குறிக்கப்பட்டன.

கடவுட் பண்புடையோரின் வானளாவிய உயர் பணிகட்கும், உலக வாழ்வில் நிற்றற்குரிய ஆதாரமானவன் இல்வாழ்வான் என்பதையே நின்ற என்ற சொல் குறிப்புவளமாகத் தெரிவிக்கின்றது.

(5) இவ் வதிகாரம் அறத்துப் பாலின் இறைவாழ்த்துப் பண்புடையதாகவும்; பின் வரும் விருந்தோம்பல் அதிகாரம் பொதுவறவியலின் இறைவாழ்த்துப் பண்புடையதாகவும் அமைந்துள்ளன என்பது அறத்துப்பால் முன்னுரை, பொதுவறவியல் முன்னுரைகளில் கூறப்பட்டன. அவ்வழி இக் குறட்பா அவ் வதிகாரத்துடன் தொடர்புடையதாகும். முப்பால் முதல்வர்களுமே இனத் தலைவர்கள்; தம் குடும்ப சமுதாய வாழ்வில் முதன்மையான அக்கரை செலுத்தாமல், பொது இன வாழ்விலும் பொது சமுதாய வாழ்விலுமே அக்கரை செலுத்துபவர்கள் ஆவர். அவர்கள் சமுதாய உறுப்பினர் அல்ல, சமுதாய, இன உறுப்பினர்கள்கூட அல்ல—சமுதாய, இனத் தலைவர்கள்.

விருந்தினர் உண்மையில் இத்தகையவர்களே. குடும்ப சமுதாய இனங்களில் உறுப்பினராகவே இல்லாது அவற்றுக்கு உழைக்கத் தக்க 'நன்றி'

அல்லது இனநலம் உடைய அவர்களைப் பேணுவது, இல்வாழ்வானின் விருந்தோம்பற் பண்பின் ஒரு தலையாய பங்கு ஆகும்.

தனிக் குறிப்புக்கள்: (1) 'இயல்புடைய மூவர்' என்பதற்குப் பரிமேலழகர் அற இயல்பினையுடைய ஏனை மூவர் என்று பொருள் கொண்டார். வருண ஆசிரம நெறியில் ஆசிரமவாணராகிய மாணவ நிலையினர் (பிரமசாரி), இல்வாழ்வான் (கிருகஸ்தர்), துறவு நிலையினர் (வானப் பிரஸ்தர்), துறவி (சன்னியாசி) ஆகிய நால்வரையும் திருவள்ளுவர் உளத்திற்கொண்டு, மற்ற மூவரையும் கூறினார் என்ற கருத்தில் அவர் ஏனைய மூவர் என்றார். இது பொருத்தமாகத் தோற்றவில்லை. இதில் அவர் கண்ட 'அற இயல்பும்' என்ன என்பது புரியவில்லை.

மற்றப் பெரும்பாலான உரையாசிரியர் நிலையும் இதுவே.

தம் உரையில் தமக்கே ஐயப்பாடு ஏற்பட்டது என்ற பெருமை இவ்வுரையாசிரியர்களிடையே பரிமேலழகர்க்கு மட்டும் உண்டு என்னலாம். ஏனெனில், 'இவருள் முன்னை இருவரையும் (பிரமசாரி, வானப் பித்தர் ஆகிய இருவரையும்) பிறர் தம் மத மேற்கொண்டு கூறினர்' என்று அவர் விளக்கவுரையில் கூறியுள்ளார். இல்லறமும் துறவறமுமன்றித் திருவள்ளுவர் மற்ற இரு ஆசிரமங்களையும் அறமாகக் கொள்ளவில்லை என்று அவர் இங்கே கண்டு குறித்துள்ளார்.

'நல்லாற்றின் நின்றதுணை' என்பதற்கு அவர், 'இவர் இவ்வொழுக்க நெறிகளை முடியச் செய்யுமளவும் ஆச்செலவிற்குப் பசி நோய் குளிர் முதலியவற்றான் இடையூறு வாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் உதவி அவ்வந்நெறிகளில் வழுவாமல் செலுத்துதலான்' என்றார்.

'தத்தம் நிலைகுலையாமல் உணவு முதலாயின கொடுத்துப் பாதுகாத்தலின்' என இதுவே கூறினர் மணக்குடவர்.

'வழிபாட்டின் தன்னிலை நின்ற துணை' என்றார் காலிங்கர்.

பேராசிரியர் முனைவர் இலக்குவனார் இதே சொற் பொருள் கூறி, மூவரை மாணவர், தொண்டர், அறிவர் என்று தனித் தமிழ்ப் படுத்தினார்.

புலவர் குழந்தை மூவர் என்பது வரு குறட்பாவில் குறித்த மூவரையே தொகுத்துரைத்ததாகக் கொண்டார். இது சிறப்புரையன்று.

இக்குறட்பாவிலும் வருகுறட்பாக்களிலும் பேரளவுபகுத் தறிவுக் கொத்த உரை காண்பவர் கவிஞர் இராமலிங்கனார் ஒருவரே என்னலாம். அவர் இயல்புடைய மூவர் என்பதனை இல்லறத்துக்கு இயல்பான தொடர்புடைய மூவர் எனக் கொண்டு உறவினர், நண்பர், ஏழைகள் என்று பொருள் உரைத்தார். இது தீதற்ற உரையாயினும் வெள்ளைமை யுரையாகக் கருதத்தக்கது.

(2) 'திருவள்ளுவர் வடநூற் பொருளை எண்ணினரா? என்ற தலைப்புடன் திரு. எம். சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ., எல். டி. அவர்கள் இயற்றியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுதியில், 'இயல்புடைய மூவர் யார்?' என்ற வினாவடி வான ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை இடம் பெறுகிறது. பரிமே ழகர் கருத்துத் திருவள்ளுவர் கருத்துக்கும் தமிழ் இலக்கியக் கருத்துக்கும் முரண்பட்டது, பொருத்தமற்றது என்பதனை அவர் மிக விரிவாக ஆராய்ந்து எண்பிக்கிறார். முடிவுரையில் தம் கருத்தாக, மூவர் என்பது 'அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்' என்ற தமிழ் மரபுப் பாகுபாட்டின்படி, அந்நால் வகையினருள் வேளாளர் நீங்கலான ஏனை மூவரே என்று முடித்துள்ளார்.

தம் கருத்துக்கு அரணாக அவர் முதலில் உழவர் சிறப்புப் பற்றி வள்ளுவரும் பிற தமிழரும் கூறியவற்றைக் காட்டு கிறார். இரண்டாவதாக, மூவர் அந்தணர், அரசர், வணிக ரெனத் தாம் கொண்ட, அதே கருத்துடைய மூன்று பாடல் களைக் கம்பர் பாடல்களிலிருந்து எடுத்து மேற்கோள் காட்டு கிறார்,

அவையாவன ;

(1) கம்பர்: ஏரெழுபது :

அந்தணர்க்கு வேதமுதல்: அரசர்க்கு வெற்றி முதல்;
முந்தியசீர் வணிகருக்கு முதலாயமுதல்; உலகில்
வந்தஉயிர் தமக்கெல்லாம் மருந்தாக வைத்தமுதல்
செந்தமிழ்க்கு முதலாய திருவாளர் செய்முதலே'

(2) கம்பர்: ஏரெழுபது :

சீர் வளரும்; மறைவளரும்; திறல்வேந்தர் முடிவளரும்;
பேர்வளரும்; வணிகருக்குப் பெருநிதியம் மிகவளரும்;
ஏர்வளரும்; திருவளரும்; இசைவளரும்; கடல்சூழ்ந்த
பார்வளரும், காராளர் பயிர்வளரும் திறத்தாலே!

(3) கம்பர்: திருக்கை வழக்கம் :

வல்லமைசேர்
மைம்மா முகில் உலகை வாழ்விக்கும் மேன்மைபோல்
மாமறையோர், மன்னர், வணிகர் முதலாகத்
தாம்மலையா மற்கொடுத்துத் தாங்கும் கை !

அறிஞர் சோமசுந்தரம் பிள்ளையவர்களின் இவ்வாராய்ச்சிக் கட்டுரையில் பரிமேலழகர் கருத்தைக் கண்டிக்கும் பகுதி முற்றிலும் ஏற்கத் தக்கதே எனப் பலரும் ஒப்புவர். உழவு பற்றிய கருத்தும் தமிழர் மரபுக் கருத்தென்பதை எவரும் ஏற்பது உறுதி. அவர் முடிபும் ஏற்புடையதே என்னல் தகும். அவர் காட்டிய கம்பர் மேற்கோள்கள் அழகியவை, அவர் முடிவுக்குப் பேராதரவானவை என்பதிலும் ஐயமில்லை. உண்மையில் திருக்குறளின் இக்குறட்பாவுக்கு அறிஞர் சோமசுந்தரனார் கருதிய பொருளைத் தாமும் கொண்டு, கம்பரும் மேற்கோளாகக் காட்டிய இப் பாடல்களை இயற்றினார் என்று கூடக் கூறலாம்.

அறிஞர் வாதத்திலுள்ள குறை ஒன்றே ஒன்றுதான்—அதுவே பரிமேலழகரின் குறையும் ஆகும். 'இயல்புடைய மூவர்' என்பதற்குப் பரிமேலழகர் 'அற இயல்பினையுடைய

ஏனை மூவர்' என்றது போலவே அறிஞரும் கொள்ள வேண்டி வருகிறது. அத்துடன் 'இயல்புடைய' என்ற அடை பரிமேலழகர் வகையில் பொருந்துமளவுகூட அறிஞர் முடிபில் பொருந்த வில்லை, மூன்ருவதாக, பரிமேழகரிடம் காணுத ஒரு பெருங்குறை அறிஞர் ஆராய்ச்சியில் இடம்பெறுகிறது. 'இல்வாழ்வான்' என்பதைப் பரிமேலழகர் ஆசிரம நெறியிலும் இல்வாழ்வானுகவே (கிருகஸ்தனுகவே) கொண்டு ஏனை மூவர் என்ருர். ஆனுல், அறிஞரோ, 'இல்வாழ்வான்' என்பதை 'வேளாளர் அல்லது உழவன்' என்று வலிந்து எடுத்துக் கொண்டு 'ஏனை மூவர்' என்று வாதிடுகிருர்.

வேளாளன் என்பதற்கு விருந்தளிப்பவர், இல்வாழ்வான் என்ற பொருள்கள் உண்டு என்பது உண்மையே. ஆனுல், அறிஞரும் வேளாளரை அப்பொருளில் பயன்படுத்தவில்லை. அவர் காட்டிய மேற்கோள்களும் அக்கருத்துடையன அல்ல.

பரிமேலழகர் இடர்ப்பாடோ, அறிஞர் இடர்ப்பாடோ இல்லாத நல்லுரைகள் கவிஞர் இராமலிங்கனர் உரையும் இம்மணி விளக்கவுரையுமே ஆகும். பின்னது வள்ளுவக் கருத்துக்கும் கருத்தாழத்துக்கும் உகந்ததாகும் என்றும் காணலாம்.

42. இனமிழந்தவர்க்கு இனம், வாழ்விழந்தவர்க்கு வாழ்வு இல்வாழ்வான்.

[1]துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
[3]இல்வாழ்வான் என்பான் [2]துணை.

பொ-ரை: வாழ்வில் கசப்படைந்து அதைக் கை விட்டுவிட விரும்பியவர்களுக்கும், வாழ்க்கையை நுகர மாட்டாத நிலையிலுள்ள ஏலாதவர்க்கும், இல்வாழ்க்கை வாய்ப்புக்களை இழந்தவர்கட்கும் உரிய ஆதாரமாய் விளங்குபவன் குடும்பத் தலைவனே.

க-ரை: இனத்தில் குறைப்பட்டார்க் குதவி செய்து இனக் குறை அகற்றுபவன் இல்வாழ் வான்.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்று. இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன:

1. துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் துணை (இது எழுவாய்).

2. இல்வாழ்வான் என்பான் (இது பெயர்ப் பயனிலை).

இக் குறட்பாவில் 'துறந்தார்க்கும்', 'இல்வாழ்வான்' ஆகிய இரு சீர்களே முதலசை எடுத்திசைத்து வந்தன. 'இறந்தார்க்கும்', 'துணை' ஆகிய இரு சீர்களும் நலிந்திசைக்கப்பெற்றன. மீந்தவை படுத்திசைக் கின்றன. அத்துடன் துவ்வாதவர்க்கும் என்ற ஒரு சொல் இடை முறிந்து இரு சீர்கள் ஆகின்றது. தவிர, 'இறந்தார்க்கும்' நலிந்திசைப் பிலும் முதற் கண்ணே மிகுதி நலிந்திசைத்து ஏற்றிசைப்பாய் இரங் கள் தொனியில் வந்தது காணலாம்.

துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் துணை என்பது பெயர்ச் சொல், எழுவாயாய் நின்றது. உம்மை மூன்றும் எண்ணும்மையாய், பின் முற்றும்மையாய் இணைந்தன. 'கு' மூன்றும் நான்காம் வேற்றுமை உருபுகள். இவ்வேற்றுமைப் பொருள்களும் உம்மைகளும் துறந்தார் முதலியோர்க்கும் உரிய துணை ஆவான் என்ற பொருளில் துணை என்ற பெயர்ப் பயனிலையின் பெயருடன் சென்று முடிந்து, முழுவதும் உருபொடு தொடர்ந்த பயன் தொக்க தொகை ஆயிற்று.

துறந்தார், இறந்தார் இரண்டும் இறந்த கால வினையாலணையும் பெயர்கள்; துற. இற ஆகியன வினைப் பகுதிகள். துவ்வாதவர் என்பது 'து' என்னும் வினைப் பகுதி யடியான எதிர்மறை வினையாலணையும் பெயர்.

இல்வாழ்வான் என்பான் என்பது பெயர்ப் பயனிலை. இதன் பின் தேற்ற எகாரம் தொக்கு நின்றது. இல்வாழ்வான் என்பதும் என்பான் என்பதும் ஒரு பொருளே சுட்டிய இரு பெயரொட்டுத் தொகை. 'என்' அறிமுகப் பொருள் வினை—என்ற கூறப்படும் தகுதியுடையவன் என்ற பொருளில் வந்தது. இல்வாழ்வான் முந்திய குறட்பாவில் கண்ட அதே இலக்கண முடையது.

வி - ரை: அற வாழ்வில் மையப் பண்புருவினனான இல்வாழ்வான் முப்பால்களுக்கும் உரியவனாயினும் இக்குறட்பா உட்பட முதல் மூன்று குறட்பாக்களும் (41—43) அவனது இன வாழ்வுத் தொடர்பையே சிறப்பிக்கின்றன. மூன்று குறட்பாக்களுமே இனவாழ்க்கு அவனது இன்றியமையாமையை வலியுறுத்துகின்றன. அவ்வழி, இக்குறட்பாவினால், இனக்குறைபாடகற்றும் அவனது நேரடித் தொண்டு விதந்தோதப்படுகிறது.

இக்குறட்பாவின் கருத்துக்கும் அறன் வலிபுறுத்தல் அதிகாரம் ஏழாம் குறட்பாவின் (37) கருத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு கூர்ந்து காணத் தக்கது.

துறந்தார்க்கும் என்பதில் துறந்தார் என்பது வாழ்வில் கசப்படைந்து அதை விட்டுவிட விரும்புபவர்களைக் குறிக்கும்.

துறந்தார் என்ற சொல் வழக்கமாகத் திருக்குறளில் தன்னலம் துறந்த துறவோரைக் குறிக்கும. முன் குறட்பாவில் கூறப்பட்ட மூவருள் அறத்துப்பாலை இயக்கும் முதல்வர் அவர்களே. ஆனால், இக்குறட்பாவில் அது அவர்களைக் குறிக்கவில்லை. உரையாசிரியர்கள் கொணட வாழ்க்கை வெறுத்த தன்னலத் துறவிகளையும் அது குறிக்க முடியாது. பின்னால் துவ்வாதவர், இறந்தார் ஆகியவற்றுடன் வருங் குறிப்பால், இங்கே இது காதல் தோல்வி, பொருள் இழப்பு, வேண்டியவர் மறைவு, பேரிடர் ஆகிய வாழ்க்கை முறிவுகளின காரணமாக வாழ்வில் வெறுப்பும் கசப்பும் கொண்டவர்களைக் குறிக்கும். இத்தகையவரை மீண்டும் வாழ்வில் ஈடு

படுத்தி வாழவைக்கும் பொறுப்பு சமுதாயத்துக்கும் இனத்துக்கும் உரியது. ஏனெனில், அவர்கள் வாழா விட்டால் வரும் இழப்பு அவர்கட்கு மட்டுமன்று: இன சமுதாயங்களுக்கும் இழப்பே. சமுதாய இனங்களின் பொறுப்புடைய உறுப்பினன் என்ற முறையில் இல்வாழ்வான் இப்பொறுப்பு ஏற்று அவர்கட்கு உதவுபவன் ஆவான்.

துவ்வாதவர்க்கும் என்பதில் துவ்வாதவர் வாழ்க்கை நுகர விரும்பியும் நுகரும் வாய்ப்பறறவர்களைக் குறிக்கும்.

'து' என்னும் வினைப்பகுதி: தின்றல், துய்த்தல் அல்லது நுகர்தல் என்னும் பொருளுடையது.

நுகர முடியாமைக்குப் பணமின்மை, கல்வியின்மை, நோய், உறுப்புக்குறை, அறிவுக் குறை ஆகியவை காரணம் ஆகலாம். இன்றைய நாகரிக உலகில் அரசியலாரே இப் பொறுப்புக்களை ஏற்க முன்வந்திருப்பது காணலாம். புதிய அறிவியல் வளர்ச்சிகளின் காரணமாக, உறுப்பிழந்தவர்களுக்குக் குழைம அறுவைக்கலை[1] மூலம் உறுப்பு இழப்பீடு செய்தல், குருடர் பள்ளி, செவிடர், ஊமர் பயிற்சி நிலையம் ஆகிய ஏற்பாடுகள் முதலியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்கள் அரசியல் இன்று செய்ய முனையும் ஏற்பாடுகளை யெல்லாம், அவ்வரசியலின் அடிப்படை உறுப்பான குடும்பத் தலைவன் பொறுப்பாகத் திருவள்ளுவர் குறித்தவையே என்று காணலாம்.

இறந்தார்க்கும் என்பதில் இறந்தார் இல்வாழ்க்கை வாய்ப்புக்களை இழந்தவர் ஆவர்.

இறந்தார் என்பது மாண்டார் என்று பொருள்படுவதுண்டானாலும், வாழ்வு கடத்தலே அதன் சொற்பொருளாகும். உரியார் மாளப் பெற்றோரும் வாழ்வு கடந்து நிற்பவரேயாதலால், இது இங்கே உரியார் இறக்கப்பெற்றவர் என்று பொருள்படுகிறது. மனையிழந்த ஆடவர், கணவனை யிழந்த கைம்பெண்டிர், தாய் தந்தையரிழந்த சேய்கள்,

---

1. Plastic Surgery

சுற்றமற்றவர், தம் ஊரிழந்து நாடிழந்து வந்தவர் ஆகியோர் இவ்வகைப்பட்டவர் ஆவர்.

துணை என்பது உடனிருந்து காத்துப் பேணும் ஆதாரமாக விளங்குபவன் என்னும் பொருள் உடையது.

துணைமை என்பது தமிழில் இருமையைக் குறித்த தென்பதும்; துணை ஒன்றற்கொன்று அல்லது ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக அமையும் அணுக்கத் தோழமை குறித்தது என்பதும் முன் குறட்பா விளக்கவுரையிலே சுட்டப்பட்டது. துறந்தார், துவ்வாதார், இறந்தார்க்கு அவர் யாரோ எவரோ என்றிராமலும்; ஐயோ என்று இரங்கும் இரக்க உணர்ச்சித் தடம் சிறிதும் இல்லாமலும்; 'உடுக்கை இழந்தவன் கைபோல' (788) உரிமையுடன், ஒத்த அன்புடன் உடனிருந்து குறை அகற்றுவதுடன் நில்லாது குறை உணராதிருக்கச் செய்பவன் என்பது இங்கே குறிக்கப்பட்டது.

துணை என்னும் சொல் முன் குறட்பாவிலும் இக்குறட்பாவிலும் தொடுத்து வந்தாலும், முன் இரண்டற்ற ஒருமை நிலையையும், இங்கே இரண்டாகும் ஒருமை நிலையையும் குறித்தது காணலாம், முந்திய துணை இன ஆதாரத்துக்கு ஆதாரம் என்ற நிலை சுட்டிற்று. பிந்திய இது இனத்தின் குறைபாடு தோன்றாது நிரப்பும் ஆதாரம் என்று கூறிற்று.

முன் 'துணை' குறட்பாவில் பயனிலையாக வந்து இல்வாழ்வான் பண்பு சிறப்பித்தது. இங்கே துணை எழுவாயாக வந்து துணைமை இல்வாழ்வானாலே சிறப்பிக்கப்படுவது போன்ற குறிப்புத் தருவது காண்க. தோன்றாத் துணைக்குத் தோன்றும் துணையாய் உதவுவதிலும் சிறந்தது. தோன்றும் துணையாயினும் தோன்றாத் துணை போலிருந்து செய்யும் உதவி என்பதை இது குறித்துக் காட்டுவதாகும்.

இல்வாழ்வான் என்பான் என்பது தேற்ற ஏகாரத்தை அவாய் நிலையாகப் பெற்று, இல்வாழ்வான் என்று கூறப்படும் தகுதியுடையானே என்னும் பொருள்பட நின்றது.

இத்தொகையும் முன்குறட்பாவிலும்இக்குறட்பாவிலும் வந்து ஒரே சொற்பொருள்பட நின்றாலும், முந்திய குறட்

பாவில் எழுவாயாகிப் படுத்திசைப்பாகவும், இக்குறட்பா வில் பயனிலையாய் எடுத்திசைப்பாகவும் வந்து சுவையும் பொருளும் தொனியும் வேறுபட்டன. முந்திய குறட்பாவில் அவன் தகுதி பொறுப்பால் வந்த தகுதி; இக்குறட்பாவில் அது அன்பால், இனப் பாசத்தால் வந்த தகுதி என்பது இவ் வேறுபாட்டால் சுட்டப்பட்டது.

> சிறப்புரை: இல்வாழ்வான் தன் வாழ்வு காப்ப துடன்நில்லாது, வாழ்வில் குறைபட்டாரது வாழ்வின் குறையும் நிரப்பிக் காப்பவன் ஆவான். தன் வாழ்வின் ஒரு பகுதியாகவே இச் செயல்களைச் செய்யும் அவன் ஓசை படா அன்பு நலம் இனக் குறை அகற்றுவதன் மூலமே இனத்துக்குப் புது வலிவும் புதுத் தெம்பும் புது வளமும் அளித்து விடுகிறது. ஏனெனில் அவன் அன்புச் செயல் இனத்தில் அன்பலை பரப்புகிறது. இது இனத்தின் செல்வத்தின் செல்வம். இரண்டாவதாக, குறையுற்றார் நிறைவு பொங்கல் நிறைவாகும். அது இனத்தால் இழக்கப் பட்ட விருந்த பண்பை மீட்டும் எழிரட்டியாக்கிப் பொங்கு வளம் பெறுகிறது.

பொருள்வளம்: *(1)* அழகைக் கெடுக்கும் மறுவே பேரழகுருக்களில் அழகை எடுத்துக் காட்டுவதை அறியாதார் இல்லை. அதற்காகவே முகத்தில் மறுக் குறியிட்டுக் காட்டும் அழகி அழகர்களை அறிவோம். முந்திய குறட்பாவிலும் இக் குறட்பாவிலும் திருவள்ளு வர் வழக்கத்துக்கு மாறுகக் கூறியது கூறற் பண்பு இடம் பெறுவது காண்கிறோம். ஆனால் இந்த மறுவின் குறிப்பு வளங்கள் சொல்லில் அடங்காதன என்ன லாம். இவற்றுட் சில அரை குறையாகவே மேலே விளக்க வுரையில் காட்டப்பட்டுள்ளன.

முந்திய குறட்பாவில் 'இல்வாழ்வான் என்பான்' என்பது குறட்பாவின் முதலடியில் முதற் சீராகவும்

எழுவாயாகவும் வந்தும், 'இல்வாழ்வான்' படுத்திசைத்தும், 'என்பான்' என்பதிலும் ஈற்றசை எடுத்திசைத்தும் வந்தன. இக் குறட்பாவிலோ அது இரண்டாம் அடியின் முதலாக, பயனிலையாக வந்தும் 'இல்வாழ்வான்' என்பதே முதலிசை எடுத்திசைத்தும், 'என்பான்' முழுவதும் படுத்திசைத்தும் வந்தன. தோன்றாத் துணை முதல்வர்களைத் தோன்றும் துணையாக நின்று காக்கும் செயல் பெரிதாயினும், தோன்றாத் துணையினிடமாகவே நின்று அவர்கள் பண்பைச் செயற்படுத்தும் துணைமைச் செயல் சிரியது என்பதையும்; முன்னது பொறுப்புச் சார்ந்த கடமை, பின்னது உரிமை சார்ந்த அவா வளம், இன்ப வளம் என்பதையும் இது குறித்தது. பயன் விஞ்சிய நிலையையே திருவள்ளுவர் இங்கே பயனிலையாகவும் குறித்தார் என்று கூறலாம். இதற்கேற்ப, 'துணை' இரு குறட்பாக்களிலுமே இல்வாழ்வான் கையறியாச் செயலை நலிவிசைப்பு ஆக்கிக்காட்டினாலும், முதல் 'துணை'யின் முன் 'நின்ற' என்பதை இறங்கிசைப்பாக்கியும், பின் 'துணை' முன் 'வாழ்வான்' என்பதைப் படுப்பிசைப்பு நீட்டிக் காட்டியும் முன்னதன் உயர்வையும், நிலைபெற்ற பயனையும், பின்னதன் சிறப்பையும் வளர்ச்சிப் பொங்கற் பயனையும் அளவிட்டுணர்த்தியும் தெய்வக் கவிஞர் இங்கே கவிதை மாயம் செய்துள்ளார் என்னலாம்.

(2) 'துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் துணை' என்பது ஒரே தொகை நிலை, ஒரே சொல் என்பது இலக்கணக் குறிப்பில் காட்டப்பட்டது. ஆனால் கடைசிச் சொல் துண்டுபட்டு, இடையே பயனிலையான 'இல்வாழ்வான் என்பான்' என்பதைக்

கொண்டு, ஈற்றில் தனி நிற்றல் காணலாம். இயல்பாக இனத்திலிருந்து துண்டுபட்டு நிற்கும் இவர்கள் நிலையை இத் துண்டுபாடும்; இடையே 'இல்வாழ்வான் என்பானுல்' அவர்கள் இணைக்கப்பட்டு, அவர்கள் இனத்தையும் இன வாழ்வையும் பெற்று நிற்கும் நிலையை எழுவாயாக 'இல்வாழ்வான் என்பான்' நின்று இணைக்கும் நிலையும் காட்டும்.

இதுமட்டு மன்று.

துறந்தார், துவ்வாதார், இறந்தார் ஆகிய மூன்று சாராரும் இன இழப்பு நிலையிலும் 'இல்வாழ்வான் என்பானின்' நுணை பெறுதலிலும் ஒரு நிலைப்பட்ட வரே யாவர். ஆனுல் திருவள்ளுவர் துறந்தாரை எடுத்திசைத்துக் காட்டினுர்: இறந்தாரை நலிந்திசைத்துக் காட்டினுர்: துவ்வாதாரையோ, இரு சீரிடையே துண்டுபடுத்திக் காட்டினுர்.

துறந்தார் தாமே வலிந்து இனத்தைத் துறக்க இருந்தவர்கள். அத் துறப்புக்குரிய குற்றமும் அவர்களதே. முதலசை எடுத்திசைப்பால் திருவள்ளுவர் இதனைக் காட்டினுர்.

இறந்தார் இனத்தில் இழிந்து நின்ற நிலை அவர்களாக முனைந்து வருவித்துக் கொண்ட நிலை அன்று, அது அவர்கள் குறையன்று. யாரையாவது குற்றம் சொல்வதானுல் இனத்தைத்தான் குற்றம் சொல்ல வேண்டும். இதை உணர்ந்தவர் திருவள்ளுவர். இன்றும் ஆங்கில மொழி இத்தகு நிலையை வள்ளுவப் பண்புடனே 'அவர் பழி செய்தவர் அல்லர், பழிக்கு ஆளானவரே!'[1] என்று கூறுவது காணலாம். இதனு

---

1. He has not sinned, he is sinned against!

லேயே முப்பாற் கவிஞர் இறந்தார்க்கும் என்பதை நலிவிசைப்பாக்கியதுடன் அமையாமல், திருக்குறளி லேயே மிக மிக அருகலாக, நலிவிசைப்பிலும் மிகு நலிவிசைப்பு என்ற ஒன்றைப் புகுத்தி, நலிவிசைப்பி லேயே இச் சீரை ஏற்றிசைப்பாக்கி, தம் எல்லை யில்லாத் தெய்விக அருளிரக்க வுணர்ச்சியை இந்த ஒரு சீருக்குள் கொட்டி, இந் நிலைக்கு இரங்கினார்.

உலக இலக்கியத்திலேயே, இலக்கியச் சுவையின் உச்ச உயர்முகடெட்டிய ஒரு சில கலைஞரின் ஒரு சில கலைப் படைப்புக்களில் ஒரு சில கலைக் கட்டங்களில் தான் இவ் விழுமிய கவிதைக் கட்டத்தை[1] நாம் காண முடியும். ஆங்கிலப் புனைகதை யாசிரியன் தாமஸ் ஹார்டியின் 'டெஸ்'[2] என்ற ஏட்டின் இறுதியை நாம் இத்தகு கட்டங்களுக்குச் சான்றாகக் கூறலாம்.

முதலடியின் நடுவில் இரு சீராகப் பிரிந்து நிற்கும் 'துவ்வாதவர்' இனத்தில் இழிந்து நிற்கும் நிலை முற்றிலும் அவர்கள் குற்றமுமன்று, முற்றிலும் இனத் தின் குற்றமு மன்று. அவர்கள் ஏலாதவர்களாக, ஏழைகளாகப் பிறந்தது அவர்கள் குற்றமன்று, இனத் தின் குற்றம். ஆனால் அவர்கள் ஏலாதவர்களாக, ஏழைகளாக இருப்பது இனத்தின் குற்றமன்று, அவர் கள் குற்றம். நடுவுநிலையிற் சிறந்த ஒழுக்கவியல் உள நூலாராகிய திருவள்ளுவர் இங்கே இனத்தை ஒரு நிறை கோல் தட்டிலும், தனி உயிரை ஒரு நிறைகோல் தட்டிலும் வைத்து, இருவரையும் மெல்லக் கடிந்து கொண்டாலும், இருவர்க்குமே தண்டனை அளிக்க விரும்பாமல், தன் பேராளாக இல்வாழ்வானை

1. The Sublime 2. Tess of Thomas Hardy

அனுப்பி, இருவர்க்குமே மன்னிப்பும் அளித்துப் பரிசும் அளித்துள்ளார் என்பது இங்கே காணத் தக்கது ஆகும்.

மேலை உலகில் முதலாளித்துவச் சார்பான பொருளியல் அறிஞரும், கீழை உலகில் புத்தர் பிரானுக்குப் பிற்பட்ட கால இடைக்கால ஆன்மிக அறிஞரும் இரு வேறு வகையில், ஆனால் ஒரே பண்பு முறையில், ஏழ்மைக்குரிய குற்ற முழுவதையும் ஏழைகள் மீதே சாட்டியுள்ளதையும்; அதே சமயம் பொதுவுடைமை அறிஞரும், கிறித்தவ சமயத்தின் சில முனைத்த கிளையினரும், அவர்களை ஒத்த பிற சமய, சமுதாயத் தனிக் குழுவினரும் கொண்ட கொள்கைப்படி[1] இரு வேறு வகையில், ஆனால் ஒரே பண்பு முறையில் இனத்தை மட்டுமே குற்றஞ் சாட்டியுள்ளதையும் இங்கே காண்டல் வேண்டும். திருவள்ளுவரின் கால எல்லை கடந்த, முக்காலத்துக்கும் உரிய, உலகளாவிய நடுநிலையையும் நாம் இங்கே காணலாம்.

ஓர் அரசன் ஆட்சியில் தாய், பிள்ளை, மருமகள் ஆகிய மூவரும் ஓயாது சண்டையிட்டு ஒருவரை ஒருவர் குறை கூறினர். அதனால் வந்த வழக்குகளைக் கேட்டுக் கேட்டு அரசன் சலித்துக் கொண்டான். மதியமைச்சனிடம் தன் குறை கூறினான். அமைச்சன் மூன்று அரிசி மூடைகளை ஒருவர் அறியாது மற்றவருக்கு என்ற முறையில் ஒவ்வொருவருக்காக மூவருக்கும் அனுப்பி வைத்தான். குறை கூறுமிடத்தில் பாராட்டும் பாசமும் வளர்ந்தன. 'மன்னன் மதியமைச்சனிடமிருந்து,

---

1. Theory of election

'வறுமையே தீங்குகளுக்கு மூலம்' என்ற படிப்பினையைக் கற்றுக் கொண்டான்.

தற்கால அரசியல்களும் அறிஞர்களும் கண்டு வரும் இப் படிப்பினையைத் திருவள்ளுவர் அன்றே அறிந்திருந்தார். அவர் வழிவந்த பழங்காலப்புராணக் கதைக் கலைஞரும் அறிந்து வந்துள்ளனர் என்று இக் கதையால் காணலாம்.

குற்றம் யார் மாட்டாயினும் அன்புடையார் அதனை ஆய்ந்துணர முடியாது அதற்குரிய தண்டனையைத் தாமே ஏற்று அனைவர்க்கும் நலம் செய்யவே முந்துவர் என்ற இயேசுபிரான் வாழ்க்கைப் படிப்பினையையும்; புத்தர்பிரான் வாழ்க்கைப் படிப்பினையையும்; சமண முதல்வர் இடபதேவர் வாழ்க்கைப் படிப்பினையையும்; வள்ளுவர் பெருமான் 'இல்வாழ்வான் என்பான்' மேல் வைத்தே கூறியுள்ள அழகு காண்க.

(3) இக் குறட்பாவில் முதற் சீரில் தன் குற்றம், இறுதிச் சீரில் இனக் குற்றம், இடைச் சீரில் இரு திசைக் குற்றம் என்ற நிலை காட்டி, குறட்பாவின் முதலடி ஒரு நிறைகோல்போல் நிற்றல் காணலாம். ஆனால் அதில் முனைத்த குற்றம் 'துறந்தார்' பாலதே, அவர்கள் தம் குற்றத்துக்காகத் தம்மைக் கடிந்து கொள்வதற்கு மாறாக, முகப் பளிங்கினை முட்டுவார் போல, இனம் துறக்க முற்பட்டவர் ஆவர். நிறைகோலின் நடுநிலை நேர்மையாளனாக, இனம்போல் நிற்க வேண்டிய 'இல்வாழ்வான் என்பான்,' பொருள் வாழ்வில் ஒழுக்கத்து நீத்தார் போலவும், இயேசுபிரானையும் அவர் கூறிய கதையில் வரும் ஊதாரி மகனின் தந்தையைப் போலவும், நேர்மையைக்

கருணையின் பக்கம், அதுவும் குற்றவாளியின் பக்கம், திருப்பி வைக்கிறன். மூவர்க்குமே நடுநிலைத் தீர்ப்புச் சொல்பவனான அவன், அத் தீர்ப்பினைக் கூருது உள்ளத்துள் வைத்து, 'துறந்தார்' சார்பில் தன் பரிசைச் சற்றுப் பெருக்கிவிடும் பண்பை, இக் குறட்பா ஓசையும் எதுகையும் காட்டுகின்றன. ஏனெனில் துறந்தாருடன் எதுகை பெறுவது இறந்தார். ஆனால் துறந்தாரின் முதலசை எடுத்திசைப்பை நாம் இல்வாழ்வானிடத்திலே காண்கிறோம்.

தனிக் குறிப்புக்கள்: *(1)* இக் குறட்பாவின் பொருள் கோள் வகையில் உரையாசிரியரிடையே வேறுபாடுகளும் தடுமாற்றங்களும் எல்லையற்றன என்னலாம்.

பரிமேலழகர் 'துறந்தார்' என்பதனைக் 'களைகணானவரால் துறக்கப்பட்டார்' என்றும், 'துவ்வாதவர்' என்பதனை 'நல்கூர்ந்தார்' என்றும், 'இறந்தார்' என்பதை 'ஒருவரும் இன்றித் தன்பால் வந்து இறந்தார்' என்றும் பொருள் படுத்தி யுள்ளார்.

'துறந்தார்' என்பதற்கும் 'இறந்தார்' என்பதற்கும் பரிமேலழகரின் பொருளே கொண்டனர்—ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஆர். ட்ரூ, மலையாள மொழிபெயர்ப் பாசிரியர் வெண்ணிக்குளம் ஆகியோர்.

மணக்குடவரும், பரிதியாரும்; அவர்களைப் பின்பற்றிப் பேராசிரியர் முனைவர் மு. வரதராசனர், ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர், இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் பேராசிரியர் முனைவர் சங்கர ராஜு நாயுடு ஆகியோரும் துறந்தாரைத் துறவிகள் என்று கூறி, இறந்தார் என்பதைப் பரிமேலழகர் போலவே கொண்டனர்.

ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தச்சசாமி 'இறந்தார்' என்பதனை 'இல்வாழ்வானுடைய இறந்த உற

வினர் [1]' என்றார். ஆனால் 'துறந்தார்' என்பதற்குப் பரிமேலழகர் பொருளே கொண்டார்.

பேராசிரியர் மூவர் இலக்குவனார் 'துறந்தார்' என்பதற்குப் 'பிறர் நலம் பேணுவதற்காகத் தன்னலத்தை விட்டவர்' என்றும், 'இறந்தார்' என்பதற்கு 'இல்வாழ்க்கை கடந்த அறவோர்' என்றும் கூறினார். இந்த இரண்டிடையே அவர் என்ன வேறுபாடு கண்டார் என்பது விளக்கம் பெறவில்லை.

கவிஞர் இராமலிங்கனாரும் புலவர் குழந்தையும் 'துறந்தார்' என்பதனை மணக்குடவர் போலவே 'துறவி' எனக் கொண்டனர். ஆனால் 'இறந்தார்' என்பதன் வகையில் அவர்கள் 'அளவு கடந்த வாழ்க்கை நடத்திக் கெட்டுப் போனவர்கள்' என்றும், 'பாதுகாப்போர் இல்லாதவர்' என்றும் முறையே பொருள் கூறிச் சென்றனர்.

இரு சொற்களின் உரையிலும் வெளிப்படையாகத் தம் உள்ளக் குழப்பத்தைக் காட்டும் உரையாசிரியர் காலிங்கரே. துறந்தார் என்பதற்கு அவர், 'ஒருநியம் அறறதால் உடன் துறந்தார்க்கும், கடவுளைப்பற்றி நாணினை ந் துறந்தார்க்கும், குடிப் பிறந்தாரால் ஒரோர் காரணத்தினால் வெகுண்டு துறக்கப்பட்டார்க்கும்' என அவர் மூவகையானவர்களைப் பொருளாகக் கூறினார். இதுபோல 'இறந்தார்' என்பதற்கும், 'கல்வியினால் மிக்கோர்க்கும், அநாதராய் இறந்தார்க்கும்' என்று இரு வேறு வகையினரையே இணைத்துப் பொருள் கண்டார். இரு பொருளுடன்கூட அமையாமல், 'மற்றும் இறந்தாராவார், இவ்வுலகத்திண்கண் வறுமையைக் கடந்து மிக்க செல்வத்தை யுடையார், இவர்க்குத் துணையுமாம்' என்று அவர் கட்டுரைத்துள்ளார். ஒரு சொல்லுக்கு எப்படி இத்தனை வேறு வேறு பொருள்கள் இணைய முடியும் என்பதை இத்தகைய 'அவியல்' உரை கண்ட அவர் விளக்கவில்லை.

(2) துவ்வாதார் என்பதற்குப் பரிமேலழகரும் பிறரும் கிட்டத்தட்ட ஒரே தன்மையாக 'நல்கூர்ந்தார்,' 'வறியவர்',

1. His dead relations

'உணவருந்தாதவர்' என்றே பொருள் கூறினர். ஆனால் உரையிலேயே அடைமொழியாக மணக்குடவர் 'துறவாது நல்குரவாய்' என்றும்; பரிதியார், 'போன சென்மத்தில் தன்மம் செய்யாமல் தேகி (சமஸ்கிருதச் சொல்: தாருங்கள் என்று தானம் வேண்டுதல் குறிப்பது) என்பார்' என்றும்; காலிங்கர், 'முற்பிறப்பில் ஏற்றவர்க்கு ஈயாது இறந்தவறி யோர்' என்றும் கூறினர். அறச் செயலைக்கூட ஒரு திசையில் பாவத்தின் பயனாகவும், மற்றொரு திசையில் ஆதாய வாணிகச் சிந்தையாகவும் கருதிய இடைக்காலப் போலி நாகரிகத்தின் இழிதகவு எத்தகையது என்பதை இவ்வுரைகள் சுாட்டு கின்றன.

சங்க காலப் புலவர்கள்கூட வள்ளுவ அறப் பண்பை உரையாசிரியர் அளவுக்கு மறந்துவிட வில்லை—ஏனெனில் 'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்' எனக் கொள்ளும் அறத்தை அவர்கள் 'அறவிலை வாணிகம்' என்றே கண்டனம் செய்தனர்.

43. இனத்தின் முக்கால 'வாழ்வு ஏர் உழவன்' இல்வாழ்வான்

**தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.**

பொ-ரை: கூரிய இன உணர்வுடைய அறிஞர், கலைஞர் ஆகியோரின் குழாம், இனத் தொண்டின் புகழால் தெய்வமாக வணங்கப்படும் முன்னோர், குடும்ப சமுதாயத் தொடர்பின்றிப் புதிய வரவினரான இன விருந்தினர், சமுதாயத் தொடர்புடைய உறவு முறையினர், தன் குடும்பம் ஆகிய இந்த ஐந்து கழனி கள் வாயிலான வாழ்வுப் பயிராகிய அறத்தைப் பேணிக் காத்தல் (இல்வாழ்வானின்) தலைமையான கடமை ஆகும்.

க-ரை: கலைஞர் குழு, இனத் தொண்டர் குழு, இனப் பேராளராகிய விருந்தினர் குழு, சமுதாயச் சுற்றம், குடும்பம் ஆகியவை இன வாழ்வின் ஐம்பெருங் குழுக்கள். அவை இன வாழ்வின் வளத்துக்குரிய ஐம்பெருங் கழனிகள் போல்வன. அவை ஐந்தையும் பேணி வளர்க்கும் இன உழவனாக இல்வாழ்வான் அமைகிறான். அவன் ஐம்பெருங் கடமையும் இதுவே.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்றே. இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன:

1. தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் (இது எழுவாய்).
2. தலை (இது பெயர்ப் பயனிலை).

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் என்ற தொகைநிலை பெயர்ச் சொல்லாய் எழுவாயாய் வந்தது.

ஓம்பல் என்பது ஓம்பு என்னும் வினைப் பகுதியடியாக 'அல்' விகுதி பெற்று வந்த தொழிற் பெயர். ஆறு என்பதன் ஈற்றில் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. ஐம்புலத்து ஆறு என்பது ஐம்புலத்தினுக்கும் உரிய ஆறு என நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. ஐம்புலமாகிய ஆறு என ஒரு பொருள் சுட்டிய இரு பெயரொட்டுப் பெயர் என்னலும் ஆகும்.

ஐம்புலம், ஐந்து ஆகிய புலம் என எண்ணுத் தொகை.

'ஆங்கு' இடப் பெயர். இது ஏழாம் வேற்றுமை உருபு தொக்கதாய், அவ் வேற்றுமைப் பொருளில் ஓம்பல் என்ற தொழிற் பெயரின் வினைப் பகுதி தழுவிற்று.

'என்று' என்பது வினையெச்சம். இது இடைச்சொல்லாய், ஐம்புலம் என்ற எண்ணுத் தொகையின் எண்ணைத் தழுவிற்று. அதே சமயம் இதன் வினைப் பகுதியாகிய 'என்' அறிமுக வினையாதலால், தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் ஆகிய ஐந்து பெயர்ச் சொற்களையும் தொகுத்து ஒரே உம்மைத் தொகையாக்கி ஐம்புலம் என்ற தொகைநிலைப் பெயருடன் இணைத்து, அவற்றை ஒரு பொருள் சுட்டிய இரு பெயர்த் தொகை ஆக்கிற்று.

'தென்புலத்தார்' என்பது 'தென்புலம்' என்ற பெயரடியான பலர்பாற் பெயர். 'ஆர்' அப்பால் விகுதி. அத்துச் சாரியை முன் பெயர்ப் பகுதியின் மகரம் கெட, நின்ற ஈற்றகரத்தின் பின் சாரியை அகரம் கெட, சாரியை ஈற்று உகரமும் உயிர் முன் கெட்டது. 'தென் புலம்' என்பது உரிச்சொல் தொகை. 'தென்' என்பது கூர்மை. இனிமை உணர்த்தும் உரிச்சொல். இதனைத் தெற்கு என்பதன் திரிபாகக் கொண்டு திசைப் பெயர்த் தொகை என்பதும் உண்டு. ஆனால் 'தென்' என்பதன் மூலப் பொருள் கூர்மை; இனிமை என்பதே. இந்திய மாநிலத்தின் இயல்பு நோக்கி இக் கூர்மை, இனிமை, தமிழ் நோக்கி அறிவுக் கூர்மை; கலை இனிமை என ஆகுபெயராகிய தென் திசை உணர்த்திற்று.

தலை என்பது தலையான பண்பு அல்லது தலையான கடன் என்ற பொருள்படும் பண்பாகு பெயர். தலை போன்ற பண்பு என உவம ஆகுபெயராகவும் கொள்ளலாம்.

வி - ரை : அற வாழ்வில் கடவுளின் மையப் பண்புருவின னை இல்வாழ்வான் முப்பால் வாழ்வுகளுக்கும் உரியவனா யினும், இக்குறட்பா உட்பட அதிகாரத்தின் முதல் மூன்று குறட்பாக்களும் (41—43) அவனது இனவாழ்வுத் தொடர் பையே சிறப்பிக்கின்றன. மூன்று குறட்பாக்களுமே இன வாழ்வுக்கு அவனது இன்றியமையாமையை வலியுறுத்து கின்றன. அவ்வழி, இன வளத்துக்குரிய எல்லா இனக் குழுக் களையும் பேணி வளர்ப்பவன் இல்வாழ்வானே என்பதை இக் குறட்பா விதந்தோதுகிறது.

இக்குறட்பா பொதுவறவியலின் முதற் பாயிர அதிகார மான விருந்தோம்பலுக்கு வாயில் செய்கின்றது. இங்கே கூறப்படும் ஐந்து இனவாழ்வுப் பெருங் குழுக்களுள் விருந்தே மையக்குழு என்பது காணலாம். ஐந்தும் இங்கே இனக்குழு வாகக் கூறப்படினும், விருந்துடன் முடியும் முதல் மூன்றுமே நேரடி இனங்களுக்குரியவை. இவற்றுள் முதற் குழு முக் காலத்துக்கும் உரியது. இரண்டாவது, சென்ற காலத்துக் குரியது, நிகழ்கால வருங்காலங்களை ஆள்வது. மூன்றுவது குழு நிகழ்காலத்துக்குரியது, வருங்காலத்தை ஆள்வது என் பது குறித்து நோக்கத்தக்கது. நான்கும் ஐந்தும் முற்றிலும் நிகழ்காலத்துக்குரியன. ஆயினும் எதிர்கால வளர்ச்சிக்குரிய சமுதாயம் வளர்ப்பன.

தென்புலத்தார் என்பது கூரிய இன உணர்வுடைய அறி ஞர் கலைஞர் குழாம் என்னும் பொருளுடையது. இனத்தில் முக்காலத்துக்கும் உரிய இனக்குழு இது. இனத் தொடர்புக் குரிய மொழியையும், மொழி சார்ந்த உணர்ச்சி அனுபவங் களையும், மொழிவழி வளரும் அறிவையும் இறந்த காலங்களி லிருந்து நிகழ்காலத்துக்குக் கொண்டுவந்து பேணியும், நிகழ் காலத்தில் வளர்த்து வருங்காலத்துக்கு உரியதாகத் தொடர விட்டும், வருங்கால வளர்ச்சியை ஊக்கியும் இனத்தின் முக் கால வாழ்வு வளர்ச்சியைப் பேணும் மனித இன நாகரிகப் பெருங்குழு இதுவே. இக்குழு செய்யும் செயல்கள் இக்குழு விலுக்கு மட்டும் உரிய கடமைகள் அல்ல, இன முழுவதற் கும் உரிய கடமை ஆகும். குறைவற்ற நிறை வளர்ச்சியுடைய இனத்தில் இன முழுவதுமே, இல்வாழ்வார் எல்லாருமே செய்ய வேண்டும் கடமைதான் இது. ஆனல், குடும்பத்தில் பிற தனி உயிர்கள் அனைவரின் சார்பாக, இல்வாழ்வான் கடமையாற்றுதல் போலவே, இன உறுப்பினரான எல்லா இல்வாழ்வாரும் செய்ய வேண்டும் செயல்களை இனக் குடும் பத் தலைவர்களான இக்குழுவினர் ஆற்றுகின்றனர். எனவே, இக்குழுவைப் போற்ற வேண்டிய இல்வாழ்வானின் பொறுப்பு என்பது, இல்வாழ்வான் அதன் பொதுவுறுப்பினன் என்ற முறையில் சிறப்புறுப்பினருக்கு உதவ வேண்டிய இன்றியமை யாப் பொறுப்பேயாகும்.

இல்வாழ்வானே தென்புலத்தார் குழுவில் ஒருவனாக இருந்து செய்ய வேண்டிய செயலை அவன் செய்ய வாய்ப்புப் பெறா நிலையில் செய்பவர்க்கு அவன் இயன்ற உதவி செய்கிறான். தென்புலத்தார் குழுவினரும் தம் சார்பில் மட்டுமன்றி, எல்லா இல்வாழ்வார் சார்பிலும் பேராளாக நின்றே முக்கால இன வளர்ச்சி தொடர்ச்சி பேணுகின்றனர், இனம் வளர்க்கின்றனர்.

தென்புலத்தார் என்ற சொல்லில் தென் என்பது தென் திசையை மட்டுமன்றி, இனிமையையும் கூர்மையையும் இன்பத்தையும் குறிக்கும் வேர்ச் சொல் ஆகும். இம் மூன்று பொருளுமே தென்றல், தென் மொழி என்பவற்றில் அமைந்திருப்பதையும்; தமிழில் கடவுளும் மூவரசருள் முந்தியவரான பாண்டியரும் தென்றலுக்கு உரிய தெய்வமான மன்மதனும் ஒருங்கே 'தென்னன்' எனப்படுவதையும் காணலாம்.

புலம் இக்குறட்பாவில் தென்புலத்தார் என்ற தொகையிலும், ஐப்புலத்தாறு என்ற தொகையிலுமாக இரு தடவை வழங்கியுள்ளது. அறிவு, புலனறிவு, நுண்ணறிவு, வயல், நிலம், தேசம் ஆகிய பொருள்கள் இச்சொல்லுக்கு உண்டு. இவற்றுள் முதல் அடியில் வரும் புலம் நுண்ணறிவு என்ற பொருளையும், இரண்டாம் அடியில்வரும் புலம் வயல், நிலம் அல்லது கழனி என்ற உருவகப் பொருளையும் தந்தது. இன வளம் தரும் இனப்பகுதி என்பதே உருவக மூலமாகத் தெரிய வரும் கருத்துப் பொருள் ஆகும்.

தென்புலத்தார் என்பது இவ்வாறு நுண்ணறிவால் இனவள ஆக்கமும் தொடர்ச்சியும் பேணும் அறிஞர், கலைஞர் மரபுக் குழுவினைக் குறித்தது. சங்க காலங்களில் அரசரும் வேளிரும் செல்வரும் சங்கமும்; இக்காலத்தில் பொதுமக்களும் பள்ளி கல்லூரி பல்கலைக்கழகங்கள் ஆகிய நிறுவனங்களும், பத்திரிகை வானொலி முதலிய அமைப்புக்களும், அரசியலும் வகித்துவரும் கலை இயல் கல்விப் பொறுப்புக்களைத் திருவள்ளுவர் குடியாட்சி மரபில் நின்றே இல்வாழ்வானிடம் ஒப்படைத்துள்ள பொருத்த நயம் கண்டு பாராட்டத் தக்கது ஆகும்.

தெய்வம் என்பது இனத் தொண்டின் புகழால் தெய்வ மாக வணங்கப்படும் முன்னோரைக் குறித்த சொல் ஆகும். இதுவும் தென்புலத்தாரைப் போலவே முக்காலத்துக்கும் உரிய குழு ஆகும். ஏனெனில், தெய்வங்களின் வாழ்வு இறந்த காலத்துக்குரியதானாலும், அவர்களின் புகழ் நிகழ் காலத்துக்கும் வருங்காலத்துக்கும் உரியதாகும். அப்புகழ் அம்முன்னோர்களின் பண்பை நினைவூட்டி, அதேபண்பு இனத் தில் நீடிக்கவும் வளரவும் வகைசெய்கிறது.

தென்புலத்தாரைப் போலவே தெய்வமும் தொடர்ச் சிக்குரிய குழுவே; ஆனால், முந்தியது பண்பு பேணுவதையும் வளர்ப்பதையும் முதன்மையாகக்கொண்டதாயினும், அதன் பழமை வேர் கண் கூடானதன்று. அதன் இனப் பின்னணி யும் தெளிவாகத் தெரிவதன்று. இந்நிலையை இன்றைய சமு தாய நாகரிகத்திலேயே நாம் காணலாம். யார் முதன் முத லில் மொழியை உருவாக்கினர், யார் முதன் முதலில் சமை யற் கலையை உருவாக்கினர் என்பது போன்ற செய்திகளை நாம் மறந்துவிட்டோம். உலகளாவிய பல தமிழகப் பண் பாடுகளின் தமிழக மூலத்தை நாம் மறந்துவிட்டதும் இதனா லேயே யாகும். தெய்வப் பின்னணி இதைப் பேணும்.

திருவள்ளுவரைத் தெய்வமாகப் பேணிய பழந்தமிழ் மரபு சங்க காலத்தில் அழிந்ததனாலேயே, இன்றைய நாகரிக உலகம் தன் ஒரு கடவுட் கருத்துக்கும் நாகரிகப் பண்பாடு களுக்கும் மூலவர் திருவள்ளுவர் என்பதை மறந்து வாழ்கிறது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். இது வருங்காலத் தமிழக ஆராய்ச்சி, உலக ஆராய்ச்சிக்குரிய செய்தியாகவே இன்னும் உள்ளது.

விருந்து என்பது குடும்ப சமுதாயத் தொடர்பின்றிப் புதிய வரவினரான இன விருந்தினர் குழுவைக் குறிப்ப தாகும்.

விருந்து என்ற தமிழ்ச் சொல் அதற்கிணையான பிற சொற்களைவிட ஆழ்ந்த வள்ளுவப் பொருள் கொண்டது என் பதைத் தொல்காப்பிய மரபு வழியே உரையாசிரியர்கள்

கண்டு விளக்கியுள்ளனர். 'விருந்து' என்ற செய்யுள் வகைக்குத் தொல்காப்பியர்,

> 'விருந்தே தானும்
> புதுவது கிளர்ந்த யாப்பின் மேற்றே'

என்று சூத்திரம் செய்துள்ளார். விருந்து என்ற சொல், 'முன் இல்லாப் புதுமை' என்ற சொற்பொருளையுடையது என்பதை இது காட்டுகிறது. தொல்காப்பியர் காலத்தில் கலை இலக்கியத் துறைகளிலே இப்புதுமை ஒரு கலைக் கூறாகப் பேணப்பட்டது என்பதை அவ்விலக்கணம் காட்டுகிறது—அந்த மரபு சரிவர இலக்கியத்தில் பிற்காலங்களில் பேணப்பட்டதாகக் கூற முடியாது; ஆனால், இசைத்துறையில் இன்றளவும் அது மேல்திசை இசைத்துறைக்கு இல்லாத கீழ்த்திசைச் சிறப்பு மரபாகக் கருநாடக இசையின் மரபில் இன்னும் இயங்கி வருவது காணலாம்—இராக விரிப்பில் கற்பனைத் திறமாக அது வழங்கி வருகிறது.

பொதுப் பொருளில் இல்வாழ்வானின் இல்லத்துக்கு வந்து வரவேற்கப்படுபவர் எல்லாரும் விருந்தினர் தாம். இந்த பொதுப் பொருளில்தான் இது இன்று வழங்கப்படுகிறது. 'மருந்தும் விருந்தும் மூன்று நாள்' என்ற தமிழ்ப்பழமொழி இப்புதுப் பொருளே நோக்கியதாகும். ஆனால், இன்றும் உரியவர் வந்தால், 'நீங்கள் விருந்தினரல்லர், வீட்டுக்காரரே தாம்' என்று நாம் கூறுவதுண்டு. விருந்தாக வரும் உறவினர், சமுதாயத்தினர் திருவள்ளுவர் வகுப்பு முறையில் விருந்தினர் அல்லர்; சுற்றம் என்ற பின்வரும் 'ஒக்கல்' வகையில் சேர்க்க வேண்டியவர். முன்பின் தொடர்பற்று, வருதற்கு ஏதுவற்று, இனத் தொடர்பு ஒன்றே தொடர்பாக வருவோரைத்தான் திருவள்ளுவர் இங்கே விருந்து என்று குறித்தார்.

வருதற்கு உரிமையுடைய சுற்றத்துக்கும், வருதற்கு ஏதுவுடைய சமுதாயத்துக்கும் அப்பாற்பட்ட இன வருகையாளரையே திருவள்ளுவரின் விருந்து குறிக்கும். இங்கே ஏது என்பது தொழில் தொடர்பு: இன்று உதவினால் நாளை நமக்கு உதவுவார் என்ற மனப்பான்மை, இன்று உறவாகா விடினும் நாளை உறவாகலாம் என்ற நிலை, மொழி நாடு சமயம்

முதலியனவற்றில் பொதுமை காரணமான பாச எல்லை முதலியன ஆகும். விருந்து வகை இவற்றிற்கு அப்பாற்பட்டதாதலாலேயே இனவரவாளர் என்று விருந்தினர் பொருள் செய்யப்பட்டனர்.

உன் பகைவனை நேசி[1] என்ற இயேசுபிரானின் விவிலிய மறைக் கட்டளையும்; 'காக்கை குருவி எங்கள் சாதி' என்று பாடிய கவிஞர் பாரதியின் பண்பும்; காண்பதெல்லாம் கடவுளாகக் கொண்டு போற்றும் அப்பரடிகள் போன்ற பத்தரின் பத்திப் பண்பும் இவ்வள்ளுவ விருந்தோம்பலின் பண்புக்கு மிக அடுத்த பண்புகள் ஆகும்.

ஒக்கல் என்பது சமுதாயத் தொடர்புடைய உறவு முறையினர். மேலே சுட்டியபடி விருந்தினரல்லாத அனைவரையும் அதாவது சுற்றத்தாரையும், ஏதுவுடையாரையும் உளப்படுத்தி. இது குடும்பத்துடன் உடனடி உறவுடையவரையும், குடும்பம் சூழ்ந்த சமுதாய முழுவதையும் குறிப்பதாகும். குடும்பம் சூழ்ந்த சமுதாயத்தினர் உடனடியான அல்லது நேரடியான உறவினரல்லராயினும், சுற்றமுறைத் தொலை உறவினரே யாவர்.

தான் என்பது தன்னை உளப்படுத்தி தன் தனிப் பொறுப்புக்கும் பேராண்மைக்கும் உரிய தன் குடும்பம் ஆகும். 'தான்' என்ற சொல் தனி உயிரை மட்டும் இங்கே குறிப்பதாகக் கொள்ளுதல் தவறு. ஏனெனில், அகநிலை (ஆன்மநிலை) குறித்த இடத்திலன்றிப் புறநிலை குறித்த இடங்களிலெல்லாம் தனி உயிர் குடும்பத்தின் பேராளாகவன்றித் தனித் தன்மை உடைய தன்று. ஒக்கல் என்பது தன்னைச் சூழ உள்ள, தன் கடமை எல்லைக்குரிய உறவினர் குழுவைக் குறிக்குமாதலால், தன்னோடு தன் நேர் பொறுப்பிலுள்ள குடும்பம் 'தான்' என்பதில் அடங்கும் என்பது தேற்றம்.

என்று என்பது 'என்றிவ்வாறாக' என்று தொகுத்துச் சொல்லி ஐந்து என்ற எண் தழுவி 'இந்த ஐம்புலத்தாறு' எனச் சுட்டி நின்றது.

---

1. Love thine enemy

ஆங்கு என்பது 'அங்கே', 'அதுபோல' என்ற பொருள்களில் பொதுவாக வழங்கும் சொல். இங்கே அதிகாரப் பகுதி (41—43 குறட்பாக்கள்) சுட்டிய இனம் குறித்து, 'இனத்தில்' என்ற பொருளில் வந்தது.

ஆங்கு என்ற சொல் வழங்கியதனால், மேற்கூறிய ஐந்து புலங்களை யல்லாமல், இனத்தில் வேறு ஆறாவதாக ஒரு புலம் கிடையாது என்பது வலியுறுத்தி, அந்த ஐந்தும் சேர்ந்து இன முழுவதும் உட்படுத்தி விட்டன என்பது காட்டிற்று.

ஐம்புலத்தாறு என்பது ஐந்து கழனிகள் போன்ற இன வாழ்வுப் பயிராகிய அறம் என்று பொருள் படுவதாகும்.

புலம் இங்கே மேலே சுட்டப்பட்டபடி உருவகமாகக் கழனி அல்லது இன வயல் குறிக்கிறது. இனவாழ்வுப் பயிர் வளத்துக்குரிய பகுதி என்ற கருத்தை இதுவே சுட்டிற்று.

பின்வரும் தலை என்ற சொல்லின் குறிப்பாக, புலம் இங்கே ஐம்புலன்களையும் சுட்டிற்று. இதனைப் பொருள் வளப் பகுதி விளக்குவது காண்க.

ஆறு இங்கே வாழ்க்கை நெறி, அறம் சுட்டிற்று.

ஓம்பல் என்பது பேணிக் காத்தல். மரபினைத் தொடர்பறாது காத்தல் என்பது இதன் பொருள்.

தலை என்பது தலையாய கடமை, இல்வாழ்வானின் தலைமையான கடமை ஆகும் எனப் பொருள்பட்டது.

சிறப்புரை: இன வாழ்வைச் சமுதாய வாழ்வுடனும், சமுதாய வாழ்வை இன வாழ்வுடனும், இரண்டையும் குடும்ப வாழ்வுடனும் இணைப்பவன் இல்வாழ்வானே. இம் மூன்றன் முக்கால வாழ்வுத் தொகுதிகளின் ஐம்பெரும் பிரிவுகளான பண்பாடு, தேசியம், அனைத்துலகப் பண்பு, சமுதாய வாழ்வு, குடும்ப வாழ்வு ஆகிய எல்லாவற்றையும் தளர்வுறாமல் பேணுவது இதனால் அவன் தலைசிறந்த கடமை ஆகிறது.

பொருள்வளம்: (1) தென்புலத்தார் என்பதும் ஐம்புலத்தாறு என்பதும் எதிரெதிரிணையாக வழங்கப் பட்டுள்ளன. ஒன்றுடனொன்று எதுகையாகவும் அமைந்துள்ளன. ஐம்புலத்து ஆறுகளும் சரிசமமாகக் கூறப்பட்டாலும், அவற்றுள் தலைமை வாய்ந்தது தென் புலத்தார் ஆறே யாகும். அது முதன்மையாகக் கூறப் பட்டதும் எதுகையாக எதிரிணையாக அமைந்ததும் இதனாலேயே என்னலாம்.

தென்புலத்தார் ஆறு ஆகிய இப் புலமே மொழி சார்ந்த புலம். கலை[1], இயல்கள்[2], இலக்கியம்[3] ஆகிய மூன்றையும் இது உள்ளடக்கி, மனித இன நாகரிகம் முழுமையையும் பண்பாட்டுருவில் குறித்தது காண, இம்முதன்மை இன்னும் வியந்து பாராட்டுவதற்குரிய வள்ளுவப் பண்பு ஆகிவிடுகிறது.

ஐம்புலத்து ஆறுகள் ஐந்திலும் நீண்ட தனிச் சீராக அச் சீர் முழுதும் நிறைக்கும் சொல்லும், உயர் திணையில் அமைந்ததும் தென்புலத்தார் என்பதே. இது ஐம்புலங்களில் அவரது முக்கியத்துவத்தை மட்டு மன்றி. ஐந்தில் மற்ற நான்கையுமே இயக்கும் திற முடையவர் அவரே என்பதனையும் குறித்தது.

(2) ஐம்புலங்களில் தென்புலத்தாருக்கு அடுத்த படியான பண்பு தெய்வம் என்பதே. இதனை இது இரண்டாமிடத்தில் கூறப்பட்டதனால் மட்டுமன்றி, முத லதைப் போலவே தனிச் சீராகக் கூறப்பட்டதனாலும், அம் முதலதனுடன் மோனையுறக் கூறப்பட்டதனாலும் உணர்கிறோம்.

---

1. Art 2. Sciences 3. Literature

இப் புலமே தேசியப் புலமாகும். நாகரிகம் படர் கொடிபோல உலகளாவப் பரந்துபட்ட ஒன்ருனுலும், அது வேர் விட்டு வளர்வதற்குரிய பண்பாட்டு நிலம் தேசியமே யாகும். தவிர, பரந்துபட்ட நாகரிகம் பல மொழிகளிலும் பால்போல் பரவினுலும், தோன்றி வளரும் மொழியிலேயே அது நெய்போல் செறிவுற்று இடையருது நிற்கும். உலகளாவிய பன்மொழி நாக ரிகத்திலும் ஒரு மொழி அல்லது ஓரின மொழிகளே கொண்ட தேசியத்தாலேயே பண்பாடு செறிவுற்றுக் காலமளாவ வளர முடியும்.

இவ்வகையில் உலகளாவிய நாகரிகத்திலும் கால மளாவிய தேசியம் முக்கியத்துவத்தில் குறைந்ததன்று.

தென்புலத்தார் என்ற சீர் பரந்து நீண்டு அகன் றுள்ளதும், உயர்திணையா யமைந்துள்ளதும்; தெய் வம் என்ற சீர் முழுச் சீராயினும் குறுகியுள்ளதும், அஃறிணையாக அமைந்துள்ளதும் இவற்றின் தராதர முக்கியத்துவம் காட்டுவதாகும். நாகரிகம் மற்ற நான் கையும் தூண்டுவதாயினும் அது நின்று நிலேத்து, கடவுளேப் போலவே முக்காலமளாவ வளரச் செய்யும் பண்பு தேசியமே என்பதை இக் குறட்பாவின் சீர் வடிவும் சொல்லும் குறித்தன.

(3) விருந்து, ஒக்கல் ஆகிய இருபுலங்களும் ஒரே சீருக்குள் நெருக்கிக் கூறப்பட்டன. விருந்து நடுநாயகப் பண்பாக நடுவில் கூறப்பட்டாலும், இனமளாவிய அப் பண்பு சிறப்பறமாகிய துறவற நோக்கியது. ஒக்கலோ, குடும்பச் சார்பாக, சமுதாய ஏதுச் சார்பா கப் படர்வதாதலால், பொதுவறமாகிய இல்லறத் துக்குச் சிறப்புரிமை யாவது. இந்த இரு பண்புகளும்

சேர்ந்ததே அறம் என்பதனை இந்த இரு புல ஒரு சீர்ச் செறிவு சுட்டிற்று.

(4) தான் இறுதியாகக் கூறப்பட்டதுடன், குடும்பத்தைச்சுட்டினும் இல்வாழ்வானையே குறித்தலொருமையாக வந்தது. இல்வாழ்வானே குடும்பத்தின் இயக்கு தலைவன், பேராள் என்பதனையும், மற்ற நான்கையும் செய்யும் பொறுப்புடையவன் அவனே என்பதனையும் தொனிப் பொருளாகக் கொண்டே இது ஒரு தனி நெடிலசை யாயிற்று. ஆயினும் குடும்பம் இயக்கியே இல்வாழ்வான் இதைச் செய்கிறான் என்பதையும், குடும்ப முழுவதிலும் அவன் பண்பே அளாவி நிற்க வேண்டு மென்பதனையும் தான் என்ற நெடிலசை 'என்று ஆங்கு' என்ற ஐந்தனிணைப்புச் சொற்கள் அளாவி நிற்றலால் குறித்துக் காட்டிற்று.

(5) இல்வாழ்வான் தலையாய கடன் என்று பொருள்படும் 'தலை' என்ற சீரில் இல்வாழ்வான் என்ற சொல்லோ, கடமை என்ற சொல்லோ இல்லாமல் 'தலை' உறுப்புப் பெயர் போல நின்றது. குறட்பா முழுதும் படுத்தலிசைப்பான நிலையில் இக் குறுஞ்சீர் சற்று ஏற்றிசைப்பாகவும் முடிந்துள்ளது. இல்வாழ்வான் குடும்பத்துக்குத் 'தலை' போன்றவன் என்பதையும்; ஐம்பொறி புலன்கள் மூலம் உடலுக்குப் புற வாழ்வளிக்கும் தலைபோல, குடும்பத்துக்கு இன வாழ்வில் ஐம்புலங்களின் தொடர்பும் தருபவன் அவனே என்பதையும் இச் சொல் குறித்தது.

புலம் என்ற சொல் வயல், அறிவு என்ற இரு பொருளும்பட இரு தடவை வழங்கினும், மூன்றுவது

பொருளாகிய புலனையும் இங்கே சுட்டி நிற்கும் குறிப்பு நோக்கத் தக்கது ஆகும்.

(6) புலம் என்ற சொல் இவ்வாறு இக் குறட் பாவில் முப்பாற் பொருளுடையதோர் உயிர்ச் சொல் லாக விளங்குகிறது. அறிவு என்ற பொருளிலும் கூரிய இன உணர்வு என்ற பொருளிலும் அது தென் புலத்தார் என்பதில் வழங்கப்பட்டு; இன வாழ்வுப் பயிர் வளம் தரும் கழனி போன்ற பரப்பு என ஐம் புலத்து ஆறு என்பதில் புலம் என வழங்கி; தலை என்ற குறிப்பால் இந்த இன வாழ்வின் ஐந்து பகுதி களும் இன வாழ்வு வளத்துக்குரிய கழனிகள் போன் றன என்ற உருவகக் குறிப்புடன், அவை பேணும் கடமை இல்வாழ்வானின் இன வாழ்வில் ஐந்து இனப் புலன்கள் போன்றன என்ற தொனியையும் தந்தது. ஐந்து புலன்களையும் இயக்கும் தலைபோல, ஐந்து கடமைப் புலன்களும் இயக்குபவன் இல்வாழ் வான் என்பதும் சுட்டப்பட்டது.

(7) ஐம்புலத்து ஆறு என்பதில் ஆறு என்ற சொல் அறம் என்ற பொருளையும் அறவழி என்ற பொருளையும் நேரடியாகச் சுட்டி, ஐம்புலம் பேணுதல் இல்வாழ்வானின் ஐந்து அறக் கடமைகள் எனத் தெரி வித்தது. அதுவே அறத்துப்பாலைப் பொருட்பாலுடன் இணைத்து, அரசர்க்குரிய ஆறு கடமைகளை நினைவூட்டு வதாகவும் அமைந்துள்ளது. நாடும் ஒரு வீடேயாத லால், நாட்டின் தலைவனாகிய அரசனும் ஓர் இல்வாழ் வானே யாவான். ஆனால் அவன் இல்வாழ்வாரை யெல்லாம் ஆள்பவனாதலால், இல்வாழ்வாரைப் பேணும் கடமையை ஆறுவது கடமையாகக் கொண்டு,

மற்ற ஐம்புலத்துடன் இது சேர்த்து ஆறு புலமாகக் கொண்டான் என்று திருவள்ளுவர் கருதினரோ என்று எண்ண இடமுண்டு.

மற்ற உயிர்கள் ஐயறிவுயிர், மனிதன் ஆறறிவுயிர். ஐம்புல ஆறுடைய மக்களை ஆளும் அரசன் இது போலவே ஐயறிவை ஆளும் ஆறும் அறிவு பெற்ற மனிதனுடன் ஒப்புடையவனாகிறான். ஆறுவது கடமையே அதற்கீடாக அவன் பேணும் ஆறில் ஒரு பங்கு இறை ஆகலாம்: இந்த நயம் ஆராயத் தக்கது.

உரையாசிரியர்களில் பரிமேலழகரும் மணக்குடவரும் இதே அறத்துப்பால்—பொருட்பால் தொடர்பைச் சுட்டியுள்ளனர். ஆனால் இருவரின் விளக்கங்களும் ஒன்றுபடினும் அவரிடையே நுணுக்க நய வேறுபாடும் உண்டு.

இல்வாழ்வான் தன் வருவாயை ஆறு கூறாக்கி, இந்த ஐம்புலக் கடமைகளுக்கும் ஐந்து கூறு செலவிட்டு; அரசனுக்கு ஆறும் கூறு கடமையாகக் கொடுக்கிறான் என்பது இருவரிடையேயும் உள்ள பொதுக் கருத்து ஆகும். 'அரசனுக்கு இறைப்பொருள் ஆறில் ஒன்றாயிற்று, இவ் வைம்புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலான்' என்பது பரிமேலழகரின் அழகிய விளக்கவுரை. 'தனக்கு உண்டான பொருளை ஆறு கூறாக்கி, ஒரு கூறு அரசர்க்குக் கொடுத்து, ஒழிந்த ஐந்து கூறினும் தான் கொள்வது ஒரு கூறு என்றதற்குத் தன்னையும் எண்ணினர்' என்று அதனுடன் போட்டியிட்டு அழகுபடக் கூறினர் மணக்குடவர்.

இல்வாழ்வானும் ஓர் அரசனே, குடும்பம் என்ற ஒரு சின்னஞ் சிறு நாட்டின் அரசன். நாடாளும் அரசன்

தனக்கென ஆறிலொரு பங்கு திறை கொள்வது போலவே, இந்த வீடாளும் அரசனும் தன் திறையாக ஆறிலொரு பங்கு தனக்கெனக் கொள்கிறன் என்று மணக்குடவர் கருதியிருக்கலாமோ என்று எண்ண இடமுண்டு.

இது இம் மணிவிளக்க வுரையின் ஊகமன்று என்பதனை அவரே விளக்க வுரையின் முடிவில் கூறும் வாசகம் காட்டுகிறது.

'இது தலையான இல்வாழ்க்கை வாழும் வாழ்வு கூறிற்று. என்னை? இவை யெல்லாம் ஒருங்கு செய்யப் படுதலின், மேற்கூறிய அறுவரும் விருந்தினது வகை யினர் என்று கொள்ளப்படுவர்' என்று அவர் விளக்க வுரை முடிக்கிறார்.

திருவள்ளுவர் திருக்குறளுக்கே பொருள்வளம் காட்டப் புகுந்த நாம் இக் குறட்பா வுரை வகையில் மணக்குடவர் உரைக்கே பொருள்வளம் கூறலாமோ என்று கருத இக் குறட்பாவின் அவர் உரை இடம் தருகிறது. ஐம்புலத்தாறுக்கும் நடுநாயகமாகத் திரு வள்ளுவர் 'விருந்தை' வைத்ததனுலும், ஐம்புலத்தாறு என்பதில் ஆறு என்றதனுலும், கூறிய ஐம்புலத்தாரும் கூருத ஆரும் புலத்தாரும் அறுவருமே விருந்தின் வகை கள் தாம் என்று திருவள்ளுவர் கருதியதாக மணக் குடவர் கருதியே இம் முடிபுரை வகுத்தார் என்ன லாம்.

மணக்குடவர் சுட்டும் பொருள்வள மெய்ம்மை சிந்திக்கத் தக்கது, மேலும் ஆராயத் தக்கது. ஆனுல் அது கருத்தில் மிக மிக அழகிது என்பதில் ஐயமில்லை.

விருந்து இனம் சார்ந்த பண்பு. அது துறவறம் நோக்கிய பண்பு. ஐம்புலமும் ஆறும் புலமும் சேர்ந்து ஆறுமே விருந்தானால், சீரிய இல்லறமே துறவறமாய் விடுவது காண்கிறோம். இல்லறத்தில் சிறந்த இல் லறமே துறவறம் என்ற வள்ளுவக் கருத்துக்கு இப் பொருள்கோள் இயைந்ததே யாகும்.

தனிக் குறிப்புக்கள்: (1) ஐம்புலத்து ஆறு ஓம்பல் என்ப தற்கு ஐந்து வகை இடத்தும் அறநெறி தவறாமல் பேணுதல் என்றே பெரும்பாலான உரையாசிரியர் கூறினர். பரிதியார் 'ஐந்து மரபையும் இரட்சித்தல்' என்றார். இவ்விரு சார்பு உரைகளிடையே பொருள் முடிபில் வேற்றுமை சிறிதே என்றாலும், அறம் என்ற சொல்லுக்கு இம் மணி விளக்க வுரை கொண்ட பொருள் மூலமே இவ்வுரை இரு பொருளை யும் ஒரு பொருளாக்க முடிகிறது என்று காணலாம். ஏனெ னில், இந்த ஐவகையினர் வாழ்வே பயிர், அதைப் பேணுவதே இல்வாழ்வான் அறம் ஆகிறது என்பது தேற்றம்.

ஐவருக்கும் உரிய கடப்பாடு நிறைவேற்றுவதே[1] என் பது ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் வி. ஆர். இராமச் சந்திர தீட்சிதர் கொண்ட பொருள்: ஐ வகையினர்க்கும் இதமான அறமே அறம் என்றனர் இந்தி, மலையாள மொழி பெயர்ப்பாசிரியர்கள், வெண்ணிகுளம், பேராசிரியர் சங்கரராஜு நாயுடு ஆகியோர்.

(2) ஐம்புலம் என்பதில் ஐந்து என்பதை ஒட்டிய பரிமேலழகர், மணக்குடவர் உரைச்சிறப்பும் அதன் வள மும் மேலே பொருள் வள இறுதிப் பகுதியிலேயே விளக்கப் பட்டுள்ளது.

(3) 'ஐம்புலம்' என்பதற்குப் பரிமேலழகர் ஐந்திடத் தும் என்று பொருள் கூறி, 'ஐவகையும் அறம் செய்தற்கு இடனாகலின், ஐம்புலம் என்றார்' என விளக்கினார். ஏனை

---

1. To fulfil the obligation to

உரையாசிரியர் பொருளும் இதுவே. அனைவருமே 'அறம் செய்தல்' என்பதும் 'ஓம்பல்' என்பதும் ஒரே பொருளாகக் கொண்டனர். ஓம்புதல் என்பது ஓம்பல் என, இது கூறியது கூறலாதல் ஓர்க. மேலே தனிக் குறிப்பு (1) காண்க.

(4) தென்புலத்தார் என்பதற்குப் பரிமேலழகர், பிதிரர் என்று பொழிப்புரைத்தார். 'பிதிரர்' ஆவார், படைப்புக் காலத்து அயனால் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி. அவர்க்கிடம் தென் திசையாதலின், தென்புலத்தார் என்றார்' என்பது அவர் விளக்கம்.

உரையாசிரியர் பலரும் இச்சொல்லே பொழிப்பாகக் கூறினர். மணக்குடவர் 'பிதிரர்' என்றும், பரிதியார் 'பிதிர் லோகத்தார்' என்றும் உரைத்தனர். காலிங்கரும் இதே சொற் பொருள் கூறினும், 'தன் குடியில் இறக்கப்பட்ட பிதிர் கள்' என்று கூறி, ஆவி உலகில் வாழும் இறந்தவர் ஆவிகள் என்ற புராணக் கருத்துப்படக் கூறினார்.

'பிதிரர்' என்றோ, 'தென் புலத்தார்' என்றோ வாளா கூறும் உரையாசிரியர்கள் பரிமேலழகர் புராணக் கருத்தைக் குறிக்கொண்டனரா, காலிங்கர் புராணக் கருத்துக் குறிக் கொண்டனரா என்பது தெரியவில்லை. புலவர் ந. சி. கந்தையா மட்டும் 'இறந்து தேவராகிய முன்னோர்' என்று கருத் துரைத்தார். இதற்கேற்ப இவர் தெய்வத்தைக் கடவுள் உருக்கொண்டாருள் ஒருவர் என்று கூறுவதும் இங்கே குறிப் பிடத்தக்கது.

பேராசிரியர் முனைவர் இலக்குவனாரும் புலவர் குழந்தை யும் பகுத்தறிவுக் கருத்து நாடித் தென்புலத்தார் என்பதை தென்னாட்டவர் எனக் கொண்டனர். பேராசிரியர் இதற்கு விளக்கமாக, 'தம் நாட்டு மக்களைப் போற்ற வேண்டியது தவிர்க்கலாகாக் கடமை என்பதனை வலியுறுத்தவே தென் புலத்தாரையும் சேர்த்துள்ளது குறிப்பிடத் தகுந்தது' என்று கூறியுள்ளார். புலவர் குழந்தையும் தம் விளக்கவுரை யில், தென்புலத்தார்—தமிழர். வடபுலத்தாரும் இருந்த தால், தென்புலத்தான் என்றார். தென் மொழி என்பது

போல. தமிழினப் பற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்பது என்று கருத்துரைத்துள்ளார்.

கவிஞர் இராமலிங்கனார் தென்புலத்தார் என்பதற்கு மூதாதைகள் என்று பொருள் தந்தார். முன்னோர்களை நினைத்துச் செய்ய வேண்டிய பூசனைகள் என்று விளக்கியதன் மூலம், அவர் காலிங்கர் குறித்த புராணக் கருத்தையும், இக் காலத் தமிழர் இறந்த ஆவிகளின் பெயரால் நடத்தும் நீத்தார் நினைவு வினைகளையுமே சுட்டினார் என்று தோற்று கிறது.

(5) 'தெய்வம்' என்பதற்குப் பரிமேலழகர் பன்மைப் பொருள் கொண்டு தேவர் என்று பொழிப்புரைத்தார். 'தெய்வம் என்பது சாதி ஒருமை' என்பது அவர் இவ்வகை யில் தரும் இலக்கண விளக்கம். மணக்குடவர் பொருளும் இதுவே. காலிங்கரும் 'கடவுளர்' என்று இப்பொருளே கண்டனர். ஆனால், பரிதியார் இதனை ஒருமையாக வாளா தெய்வம் என்றனர். புலவர் ந. சி. கந்தையாவும் பேராசிரி யர் இலக்குவனாரும் 'கடவுள்' என்றனர்.

புலவர் குழந்தை தென்புலத்தார் என்பதைத் தென் னாட்டார் என்றே கொண்டதற்கேற்ப, தெய்வத்தை முன் னோர் என்றார்.

(6) விருந்து என்பதற்குப் பரிமேலழகர் விருந்தினர் எனப் பொழிப்புரைத்தார். 'விருந்து என்பது புதுமை; அஃது ஈண்டு ஆகுபெயராய்ப் புதியராய் வந்தார் மேல் நின்றது. அவர் இருவகையர்; பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும். அஃதின்மையிற் குறியாது வந்தாரும் என' என விளக்க முரைத்தார்.

பரிமேலழகர் உரையில் அவர் கூறிய இருவகையில் பின்னதே விருந்து என்ற தமிழ்க் கருத்தாகும், திருவள்ளுவர் கூறியதும் அதுவே என்பதும் விளங்கும்.

ஐம்புலத்துடன் அரசனும் சேர்த்து அறுவராக்கி, அறுவ ரையுமே விருந்தினது வகையினர் என்று மணக்குடவர் விளக்கவுரையில் கூறியது மேலே பொருள் வளப் பகுதியில்

எடுத்துக்காட்டப்பட்டது. விருந்து என்பதற்கு இங்கும் பின் வரும் விருந்தோம்பல் அதிகாரத்திலும் இம்மணி விளக்க வுரை கொள்ளும் பொருளின் நீடு தமிழ் மரபை இப்பழய உரையாசிரியர் கூற்று வலியுறுத்துவதாகும்.

புலவர் குழந்தை இப்பழய மரபே சுட்டியுள்ளார். 'விருந்தினர்—புதியவர்', 'விருந்து—புதுமை', அது ஆகு பெயராய் விருந்தினரை உணர்த்திற்று; 'நட்பும் சுற்றமும் அல்லாது புதிதாக நம் வீட்டுக்கு வருபவர்' என்பது அவர் விளக்கம்.

'புதிதாகத் தம்மிடம் உதவிநாடி வந்தோர்' என்பது புலவர் ந. சி. கந்தையா விளக்கம் ஆகும்.

(7) ஒக்கல் என்பதற்குக் கிட்டத்தட்ட எல்லா உரை யாசிரியர்களுமே 'சுற்றம்' என்றனர். கவிஞர் இராமலிங் கனார் 'குடும்பத்திலுள்ளவர்' என்றார்.

(8) 'தலை' என்பதற்குப் பரிமேலழகர், பேராசிரியர் இலக்குவனார், புலவர் குழந்தை ஆகியோர் 'இல்வாழ்வானுக் குச் சிறப்பான அறமாம்' என்று உரை செய்தனர். மணக் குடவர், 'தலைமையான இல்வாழ்க்கை' என்றும்; காலிங்கர், 'இல்வாழ்க்கைக்குத் தலைமை' என்றும் கூறினர். புலவர் ந. சி. கந்தையா, 'சிறந்த நற்செயல்' என்றும்; பேராசிரியர் மு. வரதராசனார் 'சிறந்த கடமை' என்றும், கவிஞர் இராம லிங்கனார் 'மிகச் சிறந்த முறை' என்றும் உரைத்தனர்.

(9) தான் என்ற சொல் பற்றிய மணக்குடவரின் அழ கிய விளக்கக் குறிப்பு மேலே பொருள் வளப்பகுதியிலேயே தரப்பட்டுள்ளது. இதே சொல்வகையில் பரிமேலழகர், கவி ஞர் இராமலிங்கனார் ஆகியோர் விளக்கவுரைகள் குறிப்பிடத் தக்கவை. 'எல்லாவறங்களும் தானுளனாய் நின்று செய்ய வேண்டுதலின், தன்னை ஓம்பலும் அறனாயிற்று' என்று பரிமே லழகரும், 'கடைசியாகத் தன்னலத்தையும் கவனித்துக் கொள்ள வேண்டும்' என்று கவிஞரும் கூறினர்.

தன்னலம் அறம் அன்று என்ற கருத்தை அறிந்திருந்தும் பரிமேலழகரும் அவரைப்போலவே அணிமைக்காலம் வரை

நம்கால உலக மக்கள் பலரும் சமயத்துறையில் அறவிலை வாணிகக் கோட்பாடாகிய தன்னலப் புண்ணியம், தன்னலக் கடவுள் வழிபாடு, தன்னலத் துறவறம், தன்னல முத்தி ஆகியவற்றையே கண்மூடி ஏற்றமைந்துள்ளது வியப்புக் குரியதாகும்.

44. அறவழியிலன்றிப் பொருள் ஈட்டாதே!
ஈட்டியதைத் தேவைக்கேற்றபடி பகுத்துண்டு வாழ்!
இன அழிவு தராத அறமுறை இதுவே!

[2]பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்து ஆயின் [1]வாழ்க்கை
[3]வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

பொ-ரை: [1]மக்களது இல்வாழ்க்கையானது [2]பொருள் ஈட்டுவதில் தவறான முறைகளை நாடாது விலக்கி, அப் பொருளை எல்லாருக்கும் தேவைக்கேற்ற நிலையில் சரிசமமாகப் பங்கிட்டுக் கொடுத்து நுகரும் முறைமையுடையதாக அமையுமானால், [3]அவர்களின் இனவாழ்வின் மரபுக்கு எத்தகைய கேடும் என்றும் வராது.

கு-ரை: இன வாழ்வுக்கு ஆக்கம் தரும் திட்டமே அறம். அது ஈட்டுவதிலும் நுகர்வதிலும் சரிசம நேர்மையின் அடிப்படையில் அமைய வேண்டுவதாகும். ஆகவே பொருள் ஈட்டுவதிலும் அதை நுகர்வதிலும் அந்த அற முறைப்படி எல்லாருக்கும் சரிசமப் பங்கீடு அமையுமானால், இனத்துக்கு என்றும் கேடு வராது.

இலக்-கு: சார்பு வாக்கியம் ஒன்று உட்பட இக் குறட்பாவின் இணை வாசகம் ஒன்று. அதன் சொற்கள் நான்கு.

அவையாவன :

(அ) சார்பு வாக்கியம்.

1. வாழ்க்கை (இது சார்பு வாக்கிய எழுவாய்).
2. பழி அஞ்சிப் பாத்தூண் உடைத்து ஆயின் (இது சார்பு வாக்கியப் பயனிலை).

(ஆ) முடிபு வாக்கியம்.

1. வழி எஞ்சல் (இது முடிபு வாக்கிய எழுவாய்).
2. எஞ்ஞான்றும் இல் (இது முடிபு வாக்கியப் பயனிலை).

வாழ்க்கை என்பது மக்களுடைய வாழ்க்கை. மக்களுடைய என்பது அவாய் நிலையாய் வந்தது. இது எழுவாய் ஆகிச் சார்பு வாக்கிய வினை எச்சப் பயனிலை தழுவிற்று. இது 'கை' விகுதி பெற்ற தொழிற் பெயர். 'வாழ்' இதன் வினைப் பகுதி. விகுதி முன் ககரம் இரட்டித்தது.

பழி அஞ்சிப் பாத்தூண் உடைத்து ஆயின் என்ற தொகை அதன் ஈற்றுச் சொல்லை ஒத்துக் காரணப் பொருள் வினையெச்சமாய் வாழ்க்கை என்பதை எழுவாயாகக் கொண்டு சார்பு வாக்கியப் பயனிலையாய் நின்றது. இவ் எச்சம் முடிபு வாக்கியப் பயனிலை கொண்டு முடிந்தது.

'ஆயின்' என்பதில் 'இன்' காரணப் பொருள் வினை எச்ச விகுதி. 'ஆ' பகுதி. 'கு' இடையே எழுத்துப் பேறாய் நின்று கெட்டு, யகரம் தோன்றிற்று. 'உடைத்து' என்பது 'உடைமை' என்ற பண்படியான குறிப்பு வினையாலணையும் பெயர். 'து' ஒன்றன் பால் விகுதி. இப் பெயர் எழுவாயாய் 'ஆயின்' என்ற வினை எச்சப் பகுதியுடன் இணைந்து இணைப் பகுதியாய்த் தொகையுற்றது.

பாத்தூண் என்பதன் பின் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. இவ் வேற்றுமைப் பொருள் 'உடைத்து' என்ற வினையாலணையும் பெயரின் பகுதி தழுவிற்று. 'பாத்து' என்பது

'பகுத்து' என்பதன் திரிபு. இது 'பா' அல்லது 'பகு' என்ற வினைப் பகுதி யடியான வினை எச்சம். இவ் வினை யெச்சம் 'உண்' என்ற பகுதி தழுவி அதனுடன் ஒரே இணைவினைப் பகுதியாயிற்று. 'பாத்துண்' என்பதில் 'ஊண்' என்பது இறுதி வினைப் பகுதியின் முதனிலை நீண்ட தொழிற் பெயரே ஆகும்.

பாத்துண் என்பது கேட்டெழுத்து, கூடியாட்டம், எடுத்துக் காட்டு ஆகியவை போன்ற வினை எச்சத் தொகை ஆகும்.

'பழி அஞ்சி' என்பதில் 'பழி' என்பதன் ஈற்றில் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. 'அஞ்சி' என்பது 'அஞ்சு' என்ற வினைப் பகுதி யடியான வினை எச்சம். இகரம் உகர ஈற்று வினைப் பகுதிகளுக்குரிய வினை யெச்ச விகுதி. இவ் விகுதி இடைநிலை ஏற்பதில்லை. இவ்வெச்சம் 'பாத்துண்' என்ற தொழிற்பெயரின் பகுதி தழுவித் தொகைப்பட்டது.

வழி எஞ்சல் என்பது பெயர், முடிபு வாக்கிய எழுவாயாய் 'எஞ் ஞான்றும் இல்' என்பதைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது. 'வழி' என்ற பெயர் தொகையினுள் எழுவாயாய், 'எஞ்சல்' என்ற தொழிற் பெயரின் வினைப் பகுதியுடன் முடிந்தது. 'எஞ்சல்' என்பது 'எஞ்சு' என்ற வினைப் பகுதியடியான தொழிற் பெயர். 'அல்' அப் பெயர் விகுதி.

எஞ்ஞான்றும் இல் என்பது அதன் இறுதிச் சொல்லான 'இல்' என்பதை ஒப்ப, வினை முற்றாய், வழி எஞ்சல் என்பதை எழுவாயாகக் கொண்டு நின்றது. 'இல்' என்பது 'இல்லை' என்பதைப் போலவே 'இன்மை' என்ற பண்படியான குறிப்பு வினை முற்று. இது விகுதி இல்லாது பகுதியேயாய் வந்த வினைமுற்று ஆகும். எஞ்ஞான்றும் என்பதில் உம்மை முற்றும்மை. எகர வினாச் சுட்டு முன்னர் வந்து இன முழுமையின் தனித்தனி ஒருமை சுட்டிற்று. எஞ்ஞான்றும் என்பதன் ஈற்றில் ஏழாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. இவ் வேற்றுமைப் பொருளும் முற்றும்மையும் 'இல்' என்ற வினைமுற்றுத் தழுவின. ஞான்று, பெயர்ச் சொல், இதன் முன் 'எ' வினா விடைச் சொல் ஆகும்.

வி - ரை: அறவாழ்வில் கடவுளின் மையப்பண்புருவான இல்வாழ்வான் முப்பால் வாழ்வுகளுக்கும் உரியவனுயினும், இக்குறட்பாவும் அடுத்த இரு குறட்பாக்களும் (44—46) அவனது அறவாழ்வுத் தொடர்பையே சிறப்பிக்கின்றன. அவ்வழி இக்குறட்பா பொருள் ஈட்டுதலிலும் நுகர்வதிலும் இரு வழிகளிலுமே அறவழிதான் இனவாழ்வை அழியாது குறைபடாது காக்கும் என்பது வலியுறுத்துகிறது.

அறவாழ்வு சிறப்பிக்கும் அதிகாரப் பகுதியான இம் மூன்று குறட்பாக்களும் (44—46) அதிகாரத்தில் அரிமா நோக்காக இயங்கி, முந்திய இனவாழ்வுக் கூறுடனும் பின் வரும் பொருள் வாழ்வுக் கூறுடனும் தொடர்புபட்டு நிற்றல் காணலாம். அவ்வழி இக்குறட்பா இவ்அறவாழ்வுக் கூறுடன் இனவாழ்வுக் கூற்றினைத் தொடர்புபடுத்துவதாகும்.

பொருள் வாழ்வுக்கு அறமே அடிப்படை என்பதையும், அறவழி ஈட்டாத பொருளும் அறவழி செலவு செய்யாத பொருளும் இன அழிவு உண்டுபண்ணும் என்பதையும் கூறும் இக்குறட்பா அறத்துப் பாலைப் பொருட்பாலுடனும் இன்பத் துப் பாலுடனும் இணைத்து, முப்பாலும் ஒருபாலின் முக் கூறுகளே என்ற வள்ளுவ முப்பாற் கோட்பாட்டு மெய்ம் மைக்குச் சான்று பகர்தல் நோக்கத்தக்கது.

வாழ்க்கை என்பது மக்களது வாழ்க்கை என்று பொருள் படும். அதிகாரம் இல்வாழ்வானைக் குறித்ததாயினும் இங்கே வாழ்க்கை அவனது தனி இல்வாழ்க்கையன்று என்று சுட்டுவ தற்கே கவிஞர் பெருமானுன திருவள்ளுவர் இங்கே வாழ்வு அதாவது தனிமனிதன் வாழ்க்கையை வாழ்க்கை என்று வாளா வழங்கினுர். இல்வாழ்க்கை என்று வழங்கினும் இங்கே சீருக்குக் குலைவில்லை. கிட்டத்தட்ட இதே சொற் சூழலில் அடுத்த குறட்பா இதுவே வழங்கியுள்ளது. இன வாழ்வுக் கூறு முடிந்தவுடன் இது முதற் குறட்பாவாதலால், இங்கு இல்வாழ்வானது இனவாழ்வு, அதாவது இனவழி நின்று சமுதாயம் இயக்கி அறவழி இனவாழ்வின் போக்கு நடத்தும் முறைமையையே இக்குறட்பா கூறிற்று.

வாழ்க்கை என்பதும் வாழ்வு என்பதும் வாழ்தல் என்பதும் இலக்கண முறையில் வாழ் என்ற ஒரே வினைப் பகுதியின் தொழிற் பெயர்களானாலும், 'கை' தமிழில் செயலையும் (தெலுங்கு—சே: கை, செயல்; கன்னடம்: கை—செய், கை) ஒழுக்கத்தையும் குறிக்கும் சொல்லாதலால், இங்கே இச்சொல் வாழ்க்கைப் போக்கு அதாவது இன சமுதாயங்களுடன் இணைந்து செல்லும் அமைதி குறித்தது.

இன சமுதாயங்களுடன் கூடி வாழ்வதே வாழ்வு. வாழ்க்கை என்பது இதனால், பிறரைக் கூடிவாழும்படி அறத்தில் இயக்கித் தானும் கூடி வாழ்ந்து அறத்தில் இயங்குவது சுட்டிற்று.

பழி என்பது அறக்கேடு. இது பாவம் என்ற சொல்லை விட ஆற்றல் வாய்ந்த சொல். பாதகம், சண்டாளத்தனம் என வழங்கும் பண்புக்கேட்டை இது குறித்தது. பஞ்சமா பாதகம் என்பது ஐம்பெரும் பழி ஆதல் காண்க. பாவம் அறமுறை கோடுதல். அதனால் வரும்தீங்கு செய்தவனையே மிகுதி பாதிப்பதால், இனம் அவனை இயக்கி அவன் நல்வழிப் பட வகை உண்டு. ஆனால் பழி, பழி செய்தவன் இனத்தையே பாதித்து அவன் சூழலை அழித்த பின்னரே அவனைத் தாக்கும். நின்ற நிலத்தை அரித்துவிடும்[1] என்ற ஆங்கில மொழிச் சொல் மரபு பழியின் விளைவு குறிப்பதாகும்.

அஞ்சி என்பது அச்சங்கொண்டு என்ற சொற் பொருள் தருவது. இங்கே அஞ்சுதல் தொலைவிலேயே கண்டு விலகிச் செல்லுதல் ஆகும். பழி என்ற சொல்லின் கொடுந் தீங்கை இச்சொல் ஒலித்தல் அளவிலேயே சுட்டிக்காட்டிவிடுகிறது. பாம்பைக் கண்டஞ்சிப் பதறி விலகியோடுதல்போல, பழியைக் கண் நோக்கித் தீண்டிவிடாமல் விலகி ஓடுக என்கிறார் திருவள்ளுவர்.

பழியை மனம் மொழி மெய் என்ற முக்கரணங்களாலும் விலக்க வேண்டும் என்ற கருத்தை அஞ்சுதல் என்ற சொல் வலியுறுத்தியுள்ளது. அத்துடன் அடிப்படைக் கரணமான

1. Cut the ground from under one's feet

மனமே இச்சொல்லால் முனைப்புறுதல் காணலாம். அஞ்சுதல் உள்ளத்தால் உள்ளவும் அஞ்சுதல் என்னும் கருத்தே தந்தது.

வாளா பழி அஞ்சி என்றே இங்கே கூறப்பட்டாலும், பின்வரும் பாத்தூண் என்ற குறிப்பால், ஈட்டுவதில் பழியஞ்சி என்பதும்; பாத்து என்ற குறிப்பால், பழி அஞ்சுதலின் பயனாக, அறவழியில் அதாவது சரிசம நேர்மை அடிப்படையில் ஈட்டி என்பதும் வருவிக்கத்தக்கன ஆகும்.

கொள்ளையடித்தல், திருடுதல், வஞ்சித்தல், ஒருவர் உழைப்பை ஒருவர் சுரண்டுதல், மட்டுமீறிய ஆதாயம்நாடல், அரசியற் கடமைகளை மழுப்பி ஏய்த்தல், கள்ள வாணிகம் ஆகிய எல்லாப் பொருளியல் பொல்லாங்குகளும் பொருள். வாழ்வுக்கும் அதன் கூறுகளான அரசியல், சமுதாயக் வாழ்வுகளுக்கும் உரியன வாயினும், அறத்துப்பாலின் இவ்வதிகாரத்தின் அறக்கூறு சார்ந்த இக்குறட்பாவினுள்ளேயே அடங்கி விடுதல் காணலாம். வள்ளுவர் முப்பால்கள் திசை வேறுபாடுகளே தவிரப் பொருண்மை வேறுபாடுகளல்ல என்பதையும் இது சுட்டிக்காட்டும்.

பாத்துண் என்பது தேவைக் கேற்ற நிலையில் சரிசமமாய்ப் பங்கிட்டுக் கொடுத்து நுகர்வித்து நுகரும் முறைமை என்பதாகும்.

பாத்து என்பது பகுத்து என்பதன் திரிபு என்று மேலே இலக்கண விளக்கவுரையில் கூறப்பட்டது, வாழ்பவன் வாழ்வு தனி வாழ் வன்று; குடும்பம், சுற்றம், சமுதாயம், இனம் சூழ்ந்த வாழ்வு. ஈட்டிய பொருளின் நுகர்வும் இது போலக் கூட்டு நுகர்வாகிறது. இது சரி சம நேர்மை அடிப்படையில் நிகழ்வதே அறம். சரிசம நேர்மை என்பது தேவை நிலைக்கேற்ற சரிசம நிலை ஆகும்.

பாத்து ஊண் என்பது பகுத்து உண்ணுதல் ஆகிய உணவு, பகுத்து உண்ணும் உணவு முறைமை என்ற சொற்பொருள் தந்தது. உண்ணுதல் இங்கே நுகர்தல் சுட்டி வந்தது. ஆகவே, வாழ்வுக்கு அவரவர்க்கு ஏற்ற முறையிலே பகுத்துக்

கொடுத்து எல்லாரையும் கூட்டி ஒரு வாழ்வாக வாழ்வித்தல் வேண்டும் என்பது குறிக்கப்பட்டது.

வாழ்பவர் எல்லோரும் ஒரே வாழ்வின் உறுப்புக்களே. கை ஈட்டி வாய் உண்ணினும், கை ஈட்டுதலும் முழு உடம்புக்காகவே, வாய் உண்ணுதலும் முழு உடம்புக்காகவே. இது போல, ஈட்டுபவன் இல்வாழ்வானுனாலும், நுகர்பவர் அவன் குடும்பத்தினரானாலும், இரண்டும் முழு சமுதாய இனத்துக்காகவே யாகும். உடம்பில் எந்தச் சிற்றுறுப்புக் குறைபட்டாலும் நலிவுற்றாலும் நோயுற்றாலும், கேடு அவ்வுறுப்புக்கு மட்டுமன்று, முழுதுடலுக்கே. ஈட்டுதல் நுகர்தல் இரண்டிலும், வாழ்விலும், எவர் நலமும் முழு இன நலனே, எவர் கேடும் முழு இனக்கேடே. எல்லாரும் ஒவ்வொருவருக்காக, ஒவ்வொருவரும் எல்லாருக்குமாக என்பதே தற்காலச் சரிநிகர் வாழ்வு நெறி (சமதர்ம) வாணர் புதிது கண்ட கருத்து ஆகும். பழைய வள்ளுவப் பண்பும் இதுவேயாகும்.

'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்' என்று பாடிய பாரதியார் கருத்தை ஒரு குறட்பாவிலே மட்டும் (1062) காண்பர் பலர். அது திருக்குறளின் முப்பாற் பரப்பு முழுவதிலும் ஊடுருவி நிற்கும் கருத்து. இக்குறட்பாவில் அது முழுநிறை பொதுவுடைமை சமநெறிக் கோட்பாடாக அமைவது காணலாம்.

உடைத்து ஆயின் என்பது உடையதாக அமையுமானால் என்று பொருள்படும்.

முடியாத காரியங்களை, கூறுபவரே செய்யாத, செய்ய எண்ணாத, செய்யத் துணியாத காரியங்களையும் கட்டளைகளாகக் கூறிவிடுவது அற நூலார் பலரின் இயல்பு. சான்றோராகிய அறவாணர் வாழ்ந்து காட்டி, இங்ஙனம் செய்க என்பர். திருவள்ளுவர் அற நூலார் மட்டுமன்று, பொருள் நூலார், இன்ப நூலார், அருள் நூலாராதலால், அவர் எப்போதும் செயலினும் சொல்லை, சொல்லினும் கருத்தை, கருத்தினும் குறிக்கோளை வலியுறுத்துபவர் ஆவர். இங்ஙனம் கூறுவதே நல்லார்க்கும் பொல்லார்க்கும் பொதுவான நீதி, நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவு நின்ற நீதி ஆகும்.

இதனைப் பல குறட்பாக்களில் காணலாம், இக்குறட்பாவிலும் முனைப்பக் காணலாம்.

இவ்வாறு அமைதலின் அருமை அறிந்தவர் திருவள்ளுவர்: 'உடைத்தாயின்', உடையதாக அமையுமானால் என்று அவர் இதனாலேயே கூறினர். அருமை, முயற்சியருமையாயினும், அம்முயற்சி யருமை முயன்று காணப்பட வேண்டும் ஒன்று என்றும், அது அருமை நய அழகுடையதே என்றும் உடைத்தாயின் என்ற சொல் கலைஞர் பாணியில் கூறுகிறது. 'என்ன அழகான பழம், இனிப்புச் சொல்லிமுடியாது, தின்று பார்!' என்று கூறுவதுபோல் இருக்கிறது, இது. 'என்ன விலை கொடுத்தும் பணமுள்ளவர் வாங்கி உண்ணத்தக்கது. பணமில்லையா, அதனால் என்ன, கொஞ்சம் சுவைத்தாலே எவ்வளவோ பலன், தொட்டால்கூடப் பலன், பார்த்தால் கூடப் பலனுண்டே' என்று வாணிகக் கவிஞர் பாணியில் இங்கே திருவள்ளுவர் பேசுகிறார்.

திருவள்ளுவர் நீதியின் அருமைக்குச் சிறப்பு அது குறிக்கோள்காட்டி, ஆதாயம் காட்டி, ஆசையூட்டிச் செயலுக்குத் தூண்டுவது என்பதே. 'குறிக்கோள் முழுவதும் எட்ட முடியவில்லையா? தரக்கேடில்லை. எட்டிய மட்டும் ஆதாயம். கொஞ்சம் எட்டிப் பிடித்தபின், எட்டாத கொம்பு தானே வளைந்து எட்டும் தொலைக்கு வந்து அதுவே உங்களை வரவேற்கும்' என்று மந்திர மாயாவியாக வள்ளுவ அறம் நம்மிடம் வந்து பேசுகிறது.

வழி என்பது இனவாழ்வின் மரபு ஆகும்.

வழி என்ற தமிழ்ச் சொல் வாழ், வழங்கு, வழக்கம் என்ற சொற்களுடனும்; வாழை என்ற சொல்லுடனும்; வழிபடு, வணங்கு என்ற சொற்களுடனும் தொடர்புடையது ஆகும். மழை, மழ (இளமை), மடப்பம் (இளமை மயக்கம்) என்ற சொற்களுடன் கூட அது தொடர்புடையதாகலாம். வழி என்பது இங்கே குடும்ப சமுதாய இன மரபுக் கால்வழியைக் குறித்தது என்பதை இத்தொடர்கள் காட்டும்.

தமிழ்ப் பத்திக் கவிஞர்கள் 'வாழையடி வாழையென வந்தத் திருக்கூட்ட மரபு' என்று பாடியபோது வெறுஞ்

சொல்லழகு, கருத்தழகு, உருவக அணி அழகுகளை மட்டும் பொழியவில்லை, தமிழ்ச் சொல்லாராய்ச்சி யழகிலும் ஈடு பட்டே உள்ளனர் என்று காணலாம். தமிழ்ச் சொல்லா ராய்ச்சி வழி அவர்கள் செல்லவில்லையானால், தமிழில் பாடாமல் வேறு மொழியில் பாடியிருந்தால், மரங்களில் எத்தனையோ மரங்கள் இருக்க, வாழையைப்போய் அவர்கள் தாம் விரும்பும் பண்பு குறிக்கும் மரம் என்று தேடிப்பிடித் திருக்க முடியாது.

வாழை மாதிரி ஏன் மற்ற மரஞ்செடி கொடிகள் இப் பண்பு பேணுவதில்லை ?

அது வாழும் மரம், ஆகவே வாழை. பெண்கள் தம் கையால் வாழை மரத்தை வெட்டக் கூடாது என்ற சமுதாய மரபு இன்றும் தமிழ்க் குடும்பங்களில் நிலவுகிறது.

பெண்ணில்லாமல் திருமணம் செய்வோர் வாழை மரத் துக்குத் தாலி கட்டும் மரபும் தமிழகத்தில் உண்டு.

வழி என்பது வாழ்க்கை மரபுக் கால்வழி: குடும்ப சமு தாய இனங்களுடன் கூடி வாழ்ந்து, வளர்ந்து, இடையறுமல் நீண்டு செல்லும் கொடி மரபு. அதன் தொடர்ச்சியும் வளர்ச்சியுமே அதற்கு உயிர். தொடர்ச்சி யற்றுவிட்டால், வாழ்வு போய்விடும். வளர்ச்சி யற்றுவிட்டாலும் முதுமை தட்டி, வாழ்வு ஓய்ந்துவிடும்.

இத்தொடர்ச்சியும் வளர்ச்சியும் காப்பது அறம், சரிசம நேர்மைப் பண்பு: 'தனி ஒருவனுக்கு உணவு இலையெனில், சகத்தினை அழித்திடுவோம்' என்று பாடிய கவிஞன் பாரதி யாரின் பாடற் பண்பு.

எஞ்சல் என்பது குறைபடுதல்.

தமிழில் எஞ்சல்என்பது மிஞ்சல் என்பதன் எதிர்சொல்' மிஞ்சாதிருத்தலே எஞ்சல் என்பதை இது சுட்டிக்காட்டு கிறது. திருவள்ளுவரே இக்கருத்தை மக்கட்பேறு அதிகாரத் தில் (68) குறிப்பிடுவது மாணலாம். தந்தையைவிட மகன் அறிவு மிக்கவனாய், வளமிக்கவனாய் இராமல் போனால், குடும் பம் வாழும் குடும்பமன்று, தாழ்வு தொடங்கிவிட்டது' என்

பது வள்ளுவக் கருத்து, வள்ளுவ வாழ்க்கைக் கோட்பாட்டுப் பண்பு.

எஞ்சல் இல்லை என்பது இடையறுதல் இல்லை, தொடரும்; வளராது குறைபடவோ, நிரல் படவோ செய்யாது; தொடர்ந்து வளரும், மரபு வளர்க்கும் என்ற கருத்தைத் தருதல் காண்க.

இவ்வளர்ச்சியே அறம்.

எஞ்ஞான்றும் என்பது என்றும், எந்த நாளிலும் என்று பொருள்படும்.

இன்று அறவழி ஈட்டி அறவழி செலவு செய்து வாழ்ந்தால், கேடு எந்த நாளிலும் இல்லை என்று கூறும் வள்ளுவத் துணிச்சல் இங்கே கூர்ந்து காணத்தக்கது.

அறவழி முழுதும் வாழ்பவன் வாழ்வில் இன்று கேடில்லை என்பது மட்டுமன்று, அறப்பயன்! ஏனெனில், அறவழியின் பயனுக்கு மரபு வளர்ச்சி இருப்பதுபோல, அறவழிக்கும் மரபு வளர்ச்சி உண்டு. அறவழி வாழ்பவன் குடும்பமும் சமுதாயமும், இனமும் அறவழியில்தான் நிற்கும். அது வாழையடி வாழை, வாழையடுத்துக் கிளைவிடும் வாழை என்ற பண்புடையது என்பது இங்கே சுட்டப்பட்டது.

அறம் பற்றிக் கூறும் ஏடெல்லாம் அறநூல் என்று வழங்கப்படுகிறது. இதனாலேயேதான் போலும், 'நூல்' என்ற சீரிய பழந்தமிழ்ச் சொல் விஞ்ஞானம் என்ற தொல் பழம் பொருள் இழந்து ஏடு என்ற பொருளில் இன்று மருவி வழங்கலானது! வள்ளுவர் ஏடு உண்மையிலேயே அறநூல், அறம் பற்றிய அமைதிகளாய்ந்து கூறும் விஞ்ஞானம். தீ என்றும் சுடும் என்று கண்டு கூறுதல்போல, அறப் பண்பு என்றும் இத்தகையது என்று கூறும் விஞ்ஞான அறமே திருவள்ளுவர் அறம். இது மட்டுமன்று. மற்ற விஞ்ஞானங்கள் நிலையியல் விஞ்ஞானங்கள் [1]: வள்ளுவர் விஞ்ஞானம் வரலாற்று நிலை வளர்வியல் விஞ்ஞானம், முக்கால இனவளர்

---

1. Static sciences

வியல் விஞ்ஞானம்[1], முழு துலக அறிவும் அளாவிய மெய் விளக்க நிலை விஞ்ஞானம்[2] ஆகும்.

இல் என்பது இல்லை என்பதாம். இது ஓரெழுத்தசை யாய் நின்று 'ஒரு நாளும் இல்லை' என்ற உறுதிப்பாடு தருதல் காணலாம்.

சிறப்புரை: நட்புப் போட்டியின்றி வேறு தன் னலப் போட்டியோ, சுரண்டலோ அற்ற பொருளியல் வாழ் வும்; படிப்படியாக அன்பில் விரிந்து சென்று எல்லாரை யும் வாழ உதவி, வாழத் தூண்டி, வாழ்வித்து வாழும் குடும்ப சமுதாய இன வாழ்வுமே அறம். இது பேணும் குடும்ப சமுதாய இனங்களில் மரபுக் கேடோ தளர்ச் சியோ ஏற்படாது; என்றும் வளர்ந்து செல்லும் வளர்ச்சிப் போக்கே நிலை வளமாக அமையும்.

இக் குறிக்கோள் வழிபட்டு ஆமளவும் முயல்க.

பொருள்வளம்: *(1)* இக் குறட்பாவில் எதுகை மோனைகள் முனைப்பல்ல. இருக்கும் எதுகை மோனை களை இது நன்கு எடுத்துக் காட்ட உதவுகிறது.

பழி அஞ்சி என்பது வழி எஞ்சல் என்பதற்கு இரட்டை எதுகையாக நின்றது. இவையே இரட்டை எதிரிணை ஆகும். பழிக்கு வழி எதுகையும், எதிரிணை யும் ஆகும்; அஞ்சி என்பதற்கு எஞ்சல் எதுகையும், எதிரிணையும் ஆகும். இரண்டு சீர்களும் செறிவுற்று விரைந்து முடுகிச் செல்வதும் காணலாம்.

பழி அஞ்சலின் துடிதுடிப்பைப் பழி அஞ்சி என்ற சீரிலும், வழி எஞ்சலின் வராமையுறுதியை வழி எஞ்சல் என்ற சீரிலும் காண்கிறோம்:

---

1. Four-dimensional dynamic science
2. All-comprehensive dynamic science

வழி வாழ்வோடு இயைந்து, அறத்தோடு இயைந்தது.

பழி பாழோடு இசைந்தது. வாழ்வுக்கு மாறானது, அறத்துக்கு மாறானது.

பழி அஞ்சுதலால் வாழ்வும் வழியும் குறையாது வளரும்.

அறம் பேணுதலால் வாழ்வும் வழியும் வளம் பெறப் பெருகும். இது எதுகை எதிரிணை வளம்.

பழி அஞ்சி என்பதும் பாத்தூண் என்பதும் ஒரு புறம்; எஞ்ஞான்றும் என்பதும் இல் என்பதும் மற்றொரு புறம் மோனைகளாக உள்ளன. முதல் வரும் மோனை அவ் அடியின் முற்பாதி மோனையாகவும்; பின் வரும் மோனை அவ் அடியின் பிற்பாதி மோனையாகவும் அமைந்துள்ளன.

பழி அஞ்சுதலும் பாத்தூணும் ஒரே அறப் பண்பு என்பதை முதல்வரு மோனை காட்டுகிறது. இந்த இரண்டும் ஒரே அறப் பண்பின் இரு திசைக் கூறுகள். ஆதலால் இம் மோனை, இரண்டின் பண்பையும் இரண்டின் மேலேற்றி நான்கு பண்புகள் கூறுகின்றன.

பாத்து ஈட்டுதல் அறத்தின் ஒரு பாதி.

பாத்து உண்ணுதல் அறத்தின் மறு பாதி.

பாத்து ஈட்டாமை பழியின் ஒரு பாதி.

பாத்து உண்ணாமை பழியின் மறு பாதி.

இதுமட்டு மன்று.

பாத்து ஈட்டி, பாத்து உண்ணுதலே அறம், உண்மை அறம்.

பாத்து ஈட்டியும் பாத்து உண்ணுவிட்டால் பழி.

பாத்து ஈட்டாமல் பாத்து உண்ணினும் பழி.

பாத்து ஈட்டாமலும் பாத்து உண்ணுமலும் போயின், கொடும் பழி.

இங்ஙனம் இந்நாற் பண்புகளில் பழியின் இரு பாதியும் கலந்த கொடும் பழியும், ஒரு பாதிப் பழி மறு பாதி அறம் கலந்த வெம் பழியும் ஒருநிலைப்படப் பழியே யாதல் காணலாம். இரு பாதி அறமும் நிறைந் ததே உண்மையான அறம் ஆகும்.

அறம் ஒன்று, பழி மூன்றுதலை இங்கே காண் கிரேம்.

முதல் மோனை வளம் இது.

எஞ்ஞான்றும் இல் என்ற மோனையில் மேலே காட்டியபடி, அறம் ஒன்று, இரு பாதி அறமும் நிறைந் தது, அது பாத்து ஈட்டிப் பாத்து உண்ணும் வாழ்வு, அதில் வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்லை என்பதும்; மற்ற மூவழிகளும் ஒருங்கே பழி வழிகளே, அவற்றி ஞல் வழி எஞ்சல் அஞ்ஞான்றே, அன்றே தொடங்கி விடும் என்பதும் இப் பின் வரும் மோனைப் பொருள் வளம் ஆகும்.

(2) அடுத்த குறட்பாவில் காண்பது போல இங்கே ‘இல் வாழ்க்கை’ என்ற சொல் வழங்காமல், ‘வாழ்க்கை’ என்றே வழங்கப் பட்டதன் பொருள் வளம் மேலே விளக்க வுரையிலேயே சுட்டப்பட்டது. இல் வாழ்வான் பாத்தீட்டிப் பாத்தூண் வாழ்க்கை வாழ்ந்தால், அந்த இல் வாழ்வான் வாழ்க்கை வழி மட்டுமன்று, அவனேடு குடும்ப சமுதாய இனத்

தொடர்புடையார் வாழ்க்கை வழிகளும் எஞ்சுதல் இல்லாதனவாகும் என்பது குறிக்கப்பட்டது.

> 'யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை,
> யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை,
> யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி,
> யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே!'

என்றும்,

> 'காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே!'

என்றும் திருமூலர் பிரான் வகுத்த திருமந்திரப் பாக்கள் இங்கே நினைவுகூரத் தக்கன.

தனிக் குறிப்புக்கள்: (1) இக்குறட்பாவுக்குக் காலிங்கர் உரை வெற்றுரை என்றும், பரிதியார் உரை வெள்ளையுரை என்றும் கூறலாம். ஏனெனில், காலிங்கர் முன் குறட்பாவில் கூறிய ஐவகையாருக்கும் பகுத்துண்ணும்போது பழிவராமல் பகுத்துண்ணுக என இக் குறட்பாவை முன் குறட்பாவுக்கு ஒரு புறனடை ஆக்கினார். பரிதியாரோ வாழ்க்கையை 'அபகீர்த்திவராமல் நடத்தி விருந்தோம்பல் உண்டாகிய வாழ்க்கை எக்காலத்தும் நடத்தும்' என்றார்.

மணக்குடவர் 'இல்வாழ்க்கையாகிய நிலை பழியையும் அஞ்சிப் பாத்தூணையும் உடையதாயின், தனது ஒழுங்கு இடையறுதல் எக்காலத்திலும் இல்லை' என்றார். ஆனால், கருத்துரை காலிங்கரதாகவே அமைந்துள்ளது.

'பொருள் செய்யுங்கால் பாவத்தை அஞ்சி ஈட்டி அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினோர்க்கும், தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தான் உண்டலை ஒருவன் வாழ்க்கை உடைத்தாயின்' எனக் குறட்பாவின் முதற் பகுதிக்குப் பரிமேலழகர் பொருள் கண்டார்.

எல்லா உரையாசிரியர்களுமே இதை முன் குறட்பாக்களின் பொருளோடு இணைத்து இதனைப் புறனடை ஆக்கி, இதன் விழுமிய தனிப் பொருளைக் காணாது விலக்கியமைத்-

தனர். ஆயினும் பழி அஞ்சு என்பதற்குப் பரிமேலழகர் கொண்ட உரையே சிறந்தது, பொருத்தமானது என்பது தெளிவு. இம்மணி விளக்கவுரை அப்பொருளே ஏற்றுள்ளது காணலாம்.

(2) வழி எஞ்சல் இல் என்பதற்குக் கிட்டத்தட்ட இம் மணிவிளக்கவுரையின் சொற்பொருளை ஒத்து, ஆனால் 'வழி' என்பதை இல்வாழ்வானின் தனி மரபு வழியாக்கிப் பரிமே லழகர் பொருள் உரைத்தார். 'அவன் (இல்வாழ்வானின்) வழி உலகத்தில் எக்காலத்தும் நிற்றலல்லது இறத்தல் இல்லை' என்பது அவர் விளக்கவுரை. வாழ்க்கை 'தனது ஒழுங்கு இடையறுதல் எக்காலத்திலும் இல்லை' என்று மணக் குடவரும்; 'இல்வாழ்க்கை எக்காலத்தும் நடக்கும்' என்று பரிதியாரும்; 'இல்லறத்தினது ஒழுகலாறு குறைபட்டு ஒழிதல் எஞ்ஞான்றும் இல்லை என்று காலிங்கரும் உரை செய்துள்ளனர்.

45. இல்வாழ்க்கைக்கு அன்பே பண்பு: அறமே பயன்.

[2]அன்பும் அறனும் உடைத்துஆயின் [1]இல்வாழ்க்கை
[3]பண்பும் பயனும் அது.

பொ—ரை: [1]குடும்ப வாழ்க்கையானது [2]குடும்பத் திலும் உறவினரிடத்திலும் அன்பையும் குடும்பச் சூழ லாகிய சமுதாயத்தில் நேர்மையளாவிய அன்புப் பண் பாகிய அறத்தையும் உடையதாக நடைபெறுமானல், [3]அந்த இல்வாழ்க்கையின் பண்பாகவும் பயனுகவும் அமைவது அந்த அன்பு அற இணேவே யாகும்.

க-ரை: குடும்ப வாழ்வின் பண்பு அதாவது சமுதாயத்துக்கு அது அளிக்கும் உயிர்நிலேச் செல்வம் அன்பு. அச் செல்வத்தின் பயனுகச் சமுதாயத்திலிருந்து குடும்ப வாழ்வுக்குக் கிடைக்

கும் வளம் அறம். ஏனெனில் அந்த அறமே இன வாழ்வில் இன்பமாகப் பரவி, மீண்டும் குடும்பம் தழைக்கச் செய்கிறது.

இலக்கு. சார்பு வாக்கியம் ஒன்று உட்பட இக்குறட்பா வின் இணை வாசகம் ஒன்றே. இதன் சொற்கள் நான்கு.

அவையாவன :

அ சார்பு வாக்கியம்.

1. இல்வாழ்க்கை இது சார்பு வாக்கிய எழுவாய்).
2. அன்பும் அறனும் உடைத்தாயின் இது சார்பு வாக்கியப் பயனிலை.

(ஆ) முடிபு வாக்கியம்.

1. பண்பும் பயனும் இது முடிபு வாக்கிய எழுவாய்).
2. அது இது முடிபு வாக்கியப் பெயர்ப் பயனிலை.

இல் வாழ்க்கை என்பது பெயர்ச் சொல். சார்பு வாக்கிய எழு வாய். இல்லில் இருந்து நடத்தப்படும் வாழ்க்கை என இது ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை. வாழ்க்கை என்பது தொழிற்பெயர். வாழ். பகுதி. கை. விகுதி

அன்பும் அறனும் உடைத்து ஆயின் என்பது அதன் ஈற்றுச் சொல் ஒப்ப. வினை எச்சமாய் முடிபு வாக்கியப் பெயர்ப் பயனிலையுடன் முடிந்தது. இது சார்பு வாக்கியப் பயனிலை. 'ஆயின்' என்பதில் 'இன்' காரணப் பொருள் வினை எச்ச விகுதி. 'ஆ' பகுதி. 'உடைத்து' என்பது 'உடைமை' என்னும் பண்படியான குறிப்பு வினையாலணையும் பெயர். 'து' இங்கே ஒன்றன்பால் விகுதி. இவ் வினையாலணையும் பெயர் 'ஆயின்' என்பதன் பகுதியுடன் இணைந்து இணைப் பகுதியாயிற்று.

அன்பும் அறனும் என்பதில் அன்பு. அறன் பெயர்கள். உம்மை இரண்டும் எண்ணும்மையாக நின்றே முற்றும்மையாக இரண்டையும் இணைத்து ஒரே தொகுதியாகச் சுட்டின. அன்பு, அறன் ஆகிய

இரண்டன் தொகுதியை என்பது பொருள். இரண்டன் இறுதியிலும் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. இவ்வேற்றுமைப் பொருள் 'உடைத்தாயின்' என்பதில் 'உடைத்து' என்பது தழுவிற்று.

பண்பும் பயனும் என்பதிலும் பண்பு, பயன் ஆகிய இரண்டும் பெயர்கள். உம்மை இரண்டும் எண்ணும்மையாக நின்றே முற்றும்மையாய் இரண்டன் தொகுதி சுட்டின. பண்பு, பயன் ஆகிய இரண்டன் தொகுதி என்பதே பொருள். இத் தொகை தொகுதிப் பெயராதலால் ஒருமையாய் நின்று அது என்னும் ஒருமைப் பெயர்ப் பயனிலை கொண்டது.

அது என்பது படர்க்கை ஒன்றன்பாற் பெயர். இங்கே படர்க்கை ஒன்றன்பாற் சுட்டுப் பெயராய், அன்பும் அறனும் உடைமை குறித்தது.

பண்பும் பயனும் என்ற தொகுதிப் பெயர் எழுவாயாய், அன்பும் அறனும் என்ற தொகுதிப் பெயர் சுட்டிய 'அது' பயனிலையானதனால், அன்பே பண்பு, அறமே பயன் என்ற இரண்டு எழுவாய் பயனிலைத் தொகுதிகளும் தனித் தனி நிரல் நிறையாகச் சுட்டப் பட்டன.

வி - ரை: அறவாழ்வில் கடவுளின் மையப்பண்புருவான இல்வாழ்வான் முப்பால் வாழ்வுகளுக்கும் உரியவனாயினும், இக்குறட்பா உள்ளடங்கலாக அதிகாரத்தின் மூன்று குறட்பாக்களும் (44—46) அவனது அறவாழ்வுத் தொடர்பையே சிறப்பிக்கின்றன. அவ்வழி இக்குறட்பா இல்வாழ்க்கையின் பயனே அறம், அதன் பண்பே அறத்தின் உயிர் நிலையான அன்பு என்பதை விதந்தோதுகின்றது.

அறவாழ்வு சிறப்பிக்கும் அதிகாரப் பகுதியான இக் குறட்பா உட்பட்ட மூன்று குறட்பாக்களும் (44—46) சிங்க நோக்காக நின்று முந்திய இனவாழ்வுக் கூறுடனும் பின் வரும் பொருள் வாழ்வுக் கூறுடனும் தொடர்புபட்டு நிற்பதனை முன் குறட்பா விளக்க வுரை சுட்டியுள்ளது. அவ்வழி

இக்குறட்பாவும் இவ் அற வாழ்வுக் கூற்றுடன் முந்திய இன வாழ்வுக் கூற்றினைத் தொடர்புபடுத்துவதாகும்.

இல்வாழ்க்கை என்பது குடும்ப வாழ்வு, இல் என்பது வீடு. இல்வாழ்க்கை வீட்டிலிருந்து நடத்தப்படும் வாழ்வு, இல்லற வாழ்வு.

வாழ்தல் என்பதே கணவன் மனைவியராக, குடும்பமாக, சமுதாயமாக, இனமாகக்கூடி வாழ்வதைக் குறிக்கும் சொல். இல் என்ற அடைமொழி இல்லாமலே வாழ்க்கை கிட்டத் தட்ட இத்தனையும் குறிக்கக்கூடும். ஆனாலும் குடும்பத்தை மையமாகக் கொண்ட வாழ்வு என்ற பொருளும் தொனிக் கும்படி இங்கே இது இல்வாழ்க்கை எனப்பட்டது. முன் குறட்பாவில் வரும் 'வாழ்க்கை' என்ற சொல்லிலிருந்து இது வேறுபடுவது இவ்வகையிலேயே. தவிர, இல்வாழ்க்கை என்ற குடும்ப வாழ்க்கை ஒன்றே இன்பத்தில் பிறந்து அன்பு கனிவித்து, அறம் படர்விக்கிறது.

அன்பும் அறனும் உடைத்து ஆபின் என்பது 'குடும்பத்திலும் உறவினரிடத்திலும் அன்பையும், குடும்பச் சூழலாகிய சமு தாயத்தில் அறத்தையும் உடையதாக நடைபெறுமானால்' என்று பொருள்படும்.

நேர்மை அளாவிய அன்புப் பண்பே அறம். ஆகவே, அன்பு அறம் ஆகிய இரண்டும் அரும்பு, மலர் என்பவை போன்று ஒரே பொருளின் இரண்டுபடி வளர்ச்சிப் பண்பு களேயாகும். அம்முறையில் அன்பு சமுதாய அகவட்ட மாகிய குடும்ப, உறவுச் சூழல்களிலும், அறம் குடும்பத்தின் புறவட்டமாகிய சமுதாயத்திலும், இனத்திலும் செயலாற்று கின்றன.

உடைத்து என்பதன் வினைமுதல் இல்வாழ்க்கை. இல் வாழ்க்கை என்பது குடும்பத்திலிருந்துகொண்டு சமுதாய உறுப்பாகச் சமுதாயத்தில் இல்வாழ்வான் நடத்தும் வாழ்க் கையேயாகும். இதனால்தான் அன்பறம் என்ற மலர்ச்சிப் பண்பில் இல்வாழ்க்கை தன் அகவட்டமாகிய குடும்பத்தில் அன்பு நிறைந்தும், புறவட்டமாகிய சமுதாய வாழ்வில்

7

அறம் செறிந்தும் இருப்பது ஆகும் என்று இங்கே சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

பண்பு என்ற சொல்லுக்கு ஒரு பொதுப்பொருள் உண்டு. அது குணம் என்பதனோடு ஒரு பொருட் சொல்லாக வழங்குவது. ஆனால், அதன் தனிப் பொருள் சிறப்புப் பொருளே. அது சூழாற்றல் தாக்குதலாலும்[1] அதற்கெதிரான உள்ளாற்றல் எதிர்வாலும்[2] நீடித்துப்பயின்று ஆக்கப்பட்டு, அம்முறையில்சூழலேயியக்கும் திறம் ஆகும். இயல்பான குணத்துக்கு இல்லாத உயிராற்றலும் வளர்ச்சியாற்றலும் இதற்கு உண்டு. ஆதலால், இது ஒரு பொருளுக்கு அமையின், அது பயன் மிகுந்த ஆற்றலாக, அதன் உயிர்ப் பண்பாக, இயல்பான செல்வமாக அமைவது ஆகும்.

பண்பு என்பதற்கு இக்குறட்பாவிலுள்ள பொருள் பயன் வளமுடைய உயிராற்றல் அல்லது இயல்பான செல்வம் என்பதாகும்.

அறத்தின் விதைத்திறக் கூறான பண்பு குடும்பத்தினுள்ளே நிரம்பியிருக்குமானால், அது குடும்பத்தின் சமுதாய வாழ்வுக்கு அதாவது இல்வாழ்வுக்கு ஒரு பண்பு அதாவது பயன் வளமுடைய உயிராற்றல் அல்லது இயல்பான செல்வம் ஆகும்.

பண்பும் அது என்று கூறப்பட்டது இதனாலேயே.

பயன் என்பது பொங்குமாவளமுடைய நிலையான இன விளைவு (குறட்பா 2 விளக்க வுரை காண்க).

குடும்பத்தின் புறச் சூழலாகிய சமுதாயத்தில் அறம் நிரம்பி யிருந்தால், அதுவே இல்வாழ்க்கையின் பொங்குமா வள மாகும். ஏனெனில், அந்த அறச் சூழலிலே அரசியல் தழைக்கும். அன்பற அலைகள் இனத்தில் இன்ப அலைகளாகப் பரவி வளர்ந்து, குடும்ப வாழ்வு அவற்றின் பயனாக மேன் மேலும் இனவாழ்வாகச் செழிக்கும்.

---

1. Stimulus from environment 2. Response from within

பண்பு செல்வ வளத்தின் விதைக்கூறு. பயன் அந்தச் செல்வ வளம்.

இல்வாழ்க்கையின் புறச் சூழலான சமுதாயத்தில் அக் குடும்பம் அன்பு மூலமாக வளர்க்கும் அறமே அவ் வில் வாழ்க்கையின் பயன் ஆகும். ஏனெனில், அது குடும்பத்துக்கு இன்ப வளமாக வளர்கிறது.

பயனும் அது என்று கூறப்பட்டது இதனுலேயே.

அது என்பது இங்கே முன்பு கூறப்பட்ட அன்பு அற இணைவு சுட்டிற்று. இயல்பாகப் பண்பும் பயனும் பயனிலை யாகவும், 'அது' எழுவாயாகவும் அமைவது. இங்கே பண்பும் பயனும் எழுவாயாகி, 'அது' பயனிலையாகி வந்ததனுல், அது என்பதன் பின் தேற்ற ஏகாரம் அவாய் நிலையாய்த் தொனித் தது. பண்பும் பயனும் அதுவே, பிறிதன்று என்ற பிரி நிலைப் பொருளும் இதன் கண் வந்தது.

அன்பும் அறமும் என்பது சுட்டிய 'அது' பயனிலையாக வும், பண்பும் பயனும் எழுவாயாகவும் வந்ததனுல், தனித் தனியே அன்பே பண்பு என்ற கருத்தும் அறமே பயன் என்ற கருத்தும் புலப்படுத்தப்பட்டன.

சிறப்புரை: அன்புருவில் அறத்தைத் தோற்று விப்பது குடும்பம். அதுவே குடும்பத்தின் உயிர்நிலைப் பண்பு. அந்த அறத்தைப் பயனுகக் கொண்டதும் குடும் பமே. அறமே குடும்பத்துக்குத் தேவையான பொருள் இன்ப வளங்களைத் தரும்.

குடும்பம் அறத்தின் விதைப் பண்ணை. ஏனெனில் குடும்பம் வளர்க்கும் அன்பே அறத்தின் விதை. அதே சமயம் அந்த அறமே குடும்பத்தின் விதை வளம். ஏனெ னில் அந்த அன்புக்கு மூலமான இன்பம் தருவது அதுவே.

பொருள்வளம்: (1) முன் குறட்பாவில் 'வாழ்க்கை' என்று வாளா கூறி, இக் குறட்பாவில் இல்வாழ்க்கை

என்று கூறியதனால் ஏற்படும் சொற்பொருள் வளம் விளக்க வுரையிலேயே சுட்டப்பட்டது. ஆனால் 'குடும்பத்திலிருந்து நடத்தப்படும் வாழ்க்கை' என்று அங்கே கூறப்பட்ட பொருள், இக் குறட்பாவில் அன்பும் அறனும் என்பதற்கியைய இரு திசைப்பட்டு, அன்பு அறத்துக்குரிய நிலைக்களங்களாகிய குடும்பமும் சமுதாயமும் என்பதைச் சுட்டுவதாகும். அது மட்டுமன்று. பண்பும் பயனும் என்றும் கூறப்பட்டதற்கிசைய, அது முத்திசைப்பட்டது என்று கூறல் வேண்டும். நிலத்தில் நடந்தும், நீரில் நீந்தியும், வானில் பறந்தும் இயங்கும் முப்புலப் பறவை போல, அது குடும்பம், சமுதாயம், இனம் ஆகிய முப்பரப்புக்களையும் அளாவுகின்றது. குடும்பத் தளத்தில் அது வேரூன்றி, சமுதாயத் தளத்தில் படர்ந்து, இனப் பரப்பில் பரவிச் செல்கின்றது. குடும்பத்தில் அது அன்புவேரூன்றி, சமுதாயத்தில் நேர்மையாகிய சட்டங்கள் மீது படர்ந்து மலர்ந்து அறமாகி, அது இனத்தில் இன்பமாகக் கனி வளம் வழங்குகிறது. குடும்ப அன்பு குடும்பங் கடந்து அன்பலை பரப்பி அறம் வளர்ப்பது போல, சமுதாய அறம் சமுதாயங் கடந்து இன்ப அலை பரப்புகிறது. இனத்தின் இந்த இன்ப அலையே மீண்டும் குடும்பத்தில் அன்பை வளர்க்கிறது.

இல்வாழ்க்கை, அன்பும் அறனும், பண்பும் பயனும் என்பவற்றின் குறிப்புப் பொருள் வளம் இது.

(2) அன்பும் அறனும் என்ற இரு சீர்களும் பண்பும் பயனும் என்ற இரு சீர்களும் குறுகிய சீர்களாகவும், ஓசை யெதுகையாகவும், எதிரெதிரிணைகளாகவும் இக் குறட்பாவில் வழங்கியுள்ளன. அன்பு பண்பாகவும், அறம் பயனாகவும் கூறப்படுவது இல்

வாழ்க்கைக்கே. இல்வாழ்க்கை இங்ஙனம் முப்பால்களுக்கு மட்டுமன்றி நாற்பால்களுக்கும் மையப் பண்பாகக் காட்டப்பட்டுள்ளது. ஏனெனில் பண்பு என்பது அதன் புறப்பால் வளர்ச்சி; அது அன்பு, அறம், பொருள், இன்பம் என்று விரிந்து மலர்ச்சியுறுவது. பயன் என்பது அதன் அகப்பால் வளர்ச்சி, அது இன்பத்திலிருந்து அன்பு நோக்கியது. முப்பாற் சுற்றில் இங்ஙனம் இல்வாழ்க்கையே நடுப்பாலாய், புறப்பால் அகப்பால் இணைப்பதா யிருப்பதாலேயே, தமிழில் அகப்பால் வீட்டுப்பால் என்று இல்வாழ்வே சுட்டிய பெயரால் குறிக்கப்பட்டது.

(3) அறம் அல்லது நல்வினை என்பதைத் துறக்க இன்பமோ மறுமை இன்பமோ போன்ற தன்னல விளைவுகளுக்கு வழியாகக் கொள்வர் பிற சமய அறிஞர், ஒழுக்க அறிஞர். இதனை விலக்கவே திருவள்ளுவர் இக் குறட்பாவில் அறமே பயன் என்றார். அறம் பிறிதொரு குறிக்கோளுக்குரிய கருவி யன்று; அதுவே குறிக்கோள் என்பது கருத்து.

தவிக்குறிப்புக்கள்: (1) அது என்பதனை அவ் அன்பும் அறனும் உடைமை என்றே இம் மணி விளக்கவுரையைப் போலக் கிட்டத்தட்ட எல்லா உரையாசிரியரும் கொண்டனர். ஆனல், அது என்பதை இவ்வுரைபோலப் பயனிலையாகக்கொண்டவர்கள் மணக்குடவரும், பேராசிரியர் முனைவர் மு. வரதராசனரும், பேராசிரியர் முனைவர் இலக்குவனருமே யாவர். பரிமேலழகரும் பிறரும் அது என்பதை எழுவாயாகக் கொண்டனர். இதில் பொருள் மாறுபாடு இல்லை, வலியுறுத்து மாறுபாடு மட்டுமே உண்டு.

(2) பரிமேலழகர், பேராசிரியர் இலக்குவனர் ஆகியோர் அன்பு என்பது பண்பு என்றும், அறம் என்பது பயன்

என்றும் நிரனிறையே பொருள் கொண்டனர். பிறர் அன்பும் அறனும் ஒரு தொகுதியாகவும், பண்பும் பயனும் ஒரு தொகுதியாகவுமே கொண்டனர். இம் மணி விளக்கவுரை தொகுதியாக இலக்கணம் கொண்டு,நிரனிறையாகப் பொருளும் கூறியது காணலாம்.

(3) 'அன்பும் அறனும்' என்பதற்குப் பரிமேழகர் 'தன் துணைவி மேற்செய்யத்தகும் அன்பினையும், பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்தினையும்' என்றார், கவிஞர் இராமலிங்கனார், 'எல்லாரிடத்தும் அன்பும் அவரவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையும்' என்று கூறினார். 'யாவர் மாட்டும் அன்பு செய்தலையும் அறஞ் செய்தலையும்' என்பது மணக்குடவர் உரை. மணக்குடவரையே மிகப் பெரும்பாலோர் பின்பற்றி இரண்டையும் ஒரு தொகையான செயலாக்கினர்.

இம்மணி விளக்கவுரை அன்பு-அறம் ஆகிய இரண்டையும் ஒரு இயங்கு பண்பாகக்கொண்டதனாலும், அதே சமயம் அது அன்பிலிருந்து குடும்ப எல்லையில் தொடங்கி அற நோக்கி விரிந்து செல்வதாகக் கொண்டதனாலும், இவ்வுரை இருசார் உரைகளுக்கும் நடுநிலையும், அதே சமயம் இரண்டும் கடந்த வள்ளுவப் பண்பும் உடையததால் காணலாம்.

'பண்பும் பயனும்' என்பதற்குப் பரிமேலழகர், பேராசிரியர் மு. வரதராசனார் ஆகியோர், 'பண்பும் பயனும்' என்றே உரைத்தமைந்தனர். மணக்குடவர் 'குணமாவதும் பயனாவதும்' என்றும்; புலவர் ந. சி. கந்தையா, 'குணமும் பேறும்' என்றும்: புலவர் குழந்தை 'தன்மையும் பயனும்' என்றும் உரை கூறினர்.

கவிஞர் இராமலிங்கனார் 'இல்வாக்கையின் முறையும் உலகத்துக்குப் பயனுள்ளதும்' என்று பொழிப்புரைத்து, விளக்கமும் தந்தார். 'அதுதான் இல்வாழ்க்கையின் தன்மை; தமக்கும் உலகத்துக்கும் நல்ல பயன்களைத் தரக்கூடியதும் அதுவே' என்பது அவர் விளக்கம்.

பரிதியார், 'நேசமும் தன்மமும் உண்டாகிய இல்லறம் இம்மைக்குச் செல்வம், மறுமைக்கு மோட்சம் தரும்' என்று கருத்துரைத்தார்.

'அன்பும் அறனும் உடைய இல்வாழ்க்கையில் இப்பண்புகளே கடமையும் பயனுமாகிய இரண்டுமாகும், அதாவது கடமையும் அதுவே. பயனும் அதுவே'[1] என்பது ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஆர். ட்ரூ என்பவரின் பொருளுரை. இது பொதுப் பொருளே கூறினும், சீரிய அழகிய பொருள் என்பதில் ஐயமில்லை. இங்கே அன்பும் அறனும் ஒரு தொகுதியாகவும், பண்பும் பயனும் தனித்தனி அத்தொகுதிக்குரிய பண்பாகவும் கூறப்பட்டது.

(5) 'பயன் வேறு வேண்டாம். தனக்கும் பிறர்க்கும் உண்டான முகமலர்ச்சி தானே அமையும்' என்ற சீரிய அழகிய கருத்து மணக்குடவர் விளக்கவுரைப் பகுதிஆகும். அறம் கருவியன்று, இலக்கே, அதற்கு வேறு பயன் வேண்டா என்பது இதன் கருத்து.

46. அறவழி இல்வாழ்வு தரும் ஆதாயத்தைப் பிற வழி எதிலும் பெற முடியாது.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்?

பொ-ரை: *(ஒருவன்) அறத்தின் நெறிமுறையின் படி குடும்ப வாழ்க்கையை நடத்திச் செல்வானானால், (அவன்) அறத்துக்கு மாறான பிற வழிகளிலே சென்று பெரு முயற்சி செய்தாலும் அதற்கீடாகப் பெறத்தக்கது என்னதான் இருக்க முடியும்?*

---

1. If the married life possesses love and virtue, these will be both its duty and reward.

க-ரை: சிறந்த அறத்தை விரும்புகிறுயா? குறைவற்ற ஆதாயத்தை விரும்புகிறுயா? எதை விரும்பினுலும் இல்லறத்தையே நாடுக. அதுவே இரண்டையும் தரும். ஆதாயம் கருதி அறத்துக்கு மாருன துறைக்குச் செல்ல வேண்டா.

இலக். கு: சார்பு வாக்கியம் ஒன்று உட்பட, இக்குறட்பாவின் இணை வாசகம் ஒன்று. இதன் சொற்கள் அவாய் நிலைச் சொல் ஒன்று உட்பட நான்கு.

அவை யாவன:

(அ) சார்பு வாக்கியம்:

1. [ஒருவன்] (இது சார்பு வாக்கிய எழுவாய்).
2. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் (இது சார்பு வாக்கியப் பயனிலை).

(ஆ) முடிபு வாக்கியம்:

1. [அவன்] புறத்தாற்றின் போ ஒய்ப் பெறுவது (இது முடிபு வாக்கிய எழுவாய்).
2. எவன் (இது முடிபு வாக்கியப் பெயர்ப் பயனிலை).

இக்குறட்பாவில் 'ஆற்றின்' என்ற சொல் மூன்றடுக்கி ஒரு சொல்லணி இன்பம் தந்தது. ஆனுல் இது அணியாக மட்டுமன்றிக் குறிப்பு வளமுமுடையதாக அமைந்துள்ளது.

ஒருவன் என்பது சார்பு வாக்கியத் தொடக்கத்திலும், அதுவே குறித்த 'அவன்' என்பது முடிபு வாக்கியத் தொடக்கத்திலும் அவாய் நிலையாகக் கொள்ளத் தக்கன. 'ஒருவன்' சார்பு வாக்கியத்தில் எழுவாய் ஆகும்.

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்' என்பது அதன் ஈற்றுச் சொல்லான 'ஆற்றின்' என்பதனை ஒப்ப, வினையெச்சம். இது அவாய் நிலையாய் வருவிக்கப்பட்ட 'ஒருவன்' என்பதைத் தோன்ற எழுவாயாகக் கொண்டது.

'ஆற்றின்' என்பதில் 'ஆற்று' பகுதி, 'இன்' காரணப் பொருள் குறித்த வினை எச்ச விகுதி. இவ் எச்சம் முடிபு வாக்கியப் பெயர்ப் பயனிலையுடன் முடிந்தது.

'இல்வாழ்க்கை' என்பதன் பின் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. இவ் வேற்றுமைப் பொருள் 'ஆற்றின்' என்ற வினை எச்சம் தழுவி அதன் செயப்படுபொருள் ஆயிற்று. 'இல் வாழ்க்கை' என்பது 'இல்லில் நடத்தப்படும் வாழ்க்கை' என ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆகும். வாழ்க்கை தொழிற் பெயர். வாழ், பகுதி. கை, அப் பெயர் விகுதி.

'அறத்தாற்றின்' என்பதில் 'இன்' மூன்றும் வேற்றுமை உருபு. 'அறத்தாற்றின்படி' என்பது பொருள். 'அறத்தாறு' என் பதன் ஈற்றில் நெடுங்தொடர்க் குற்றியலுகரம் கெட, உருபின் முன் நின்ற றகரம் இரட்டித்தது. இவ் வேற்றுமைப் பொருள் பின் வந்த 'ஆற்றின்' என்ற வினை எச்சத்தின் வினைப் பகுதி தழுவி அதனுடன் தொகைப்பட்டது.

'அறத்தாறு' என்பது 'அறத்துக்குரிய ஆறு' அல்லது 'அறத் தின் ஆறு' என நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்த தொகை அல்லது ஆறும் வேற்றுமைத் தொகை ஆகும். இடையே அத்துச் சாரியை வந்து, பகுதி யீற்று மகரமும் சாரியை முதல் ஈற்று உயிர்களும் கெட்டன.

(அவன்) புறத்தாற்றின் போஒய்ப் பெறுவது என்பது அதன் ஈற்றுப் பகுதியான பெறுவது என்பதை ஒப்பப் பெயர்ச்சொல். இது முடிபு வாக்கிய எழுவாயாய், எவன் என்னும் பெயர்ப் பயனிலை தழுவிற்று.

'பெறுவது' என்பது 'பெறு' என்ற வினைப் பகுதியடியான ஒன்றன்பால் வினையாலணையும் பெயர். 'து' அப்பால் விகுதி. அதன் முன் அகரம் சாரியை. வகரம் காலப் பொது இடைநிலை. இது 'ஒருவன்' என வருவிக்கப்பட்ட அவாய் நிலை சுட்டி 'அவன்' என்று வருவிக்கப்பட்ட அவாய் நிலையை எழுவாயாகக் கொண்டு நின்றது.

'போழய்' என்பது 'போய்' என்பதன் உயிரளபெடைத் திரிபு. அளபெடை மூலம் 'போய்' என்னும் 'நாள்' வாய்பாட்டு ஓரசைச் சீர், 'தேமா வாய்பாட்டு ஈரசைச் சீராகியதனால், இது செய்யுளிசை அளபெடை. இது 'போ' என்றும் வினைப் பகுதி யடியான வினையெச்சமாய், 'பெறுவது' என்ற வினையாலணையும் பெயரின் வினைப் பகுதி தழுவித் தொகைப்பட்டது.

'புறத்தாற்றின்' என்பதில் 'இன்' ஏழாம் வேற்றுமை உருபு. 'புறத்தாறு' என்பதில் குற்றியலுகரம் கெட, றகரம் இரட்டித்தது. இவ் வேற்றுமைப் பொருள் 'போய்', 'பெறுவது' என்ற வினைகளின் பகுதி தழுவித் தொகைப்பட்டது. 'புறத்தாறு' என்பதில் அத்துச் சாரியை இடை வந்து, முன் வரு பெயருள் மகர ஈறும் சாரியை முதல் ஈற்று உயிர்களும் கெட்டன. 'புறத்துக்குரிய ஆறு' என இது நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

இத் தொகையின் முன் அவாய் நிலையாய் வருவிக்கப்பட்ட 'அவன்' சார்பு வாக்கியத் தொடக்கத்தில் வருவிக்கப்பட்ட 'ஒருவனையே சுட்டி நின்றது. இது 'போய்', 'பெறுவது' என்ற வினைகளின் பகுதிகளைப் பயனிலையாகக் கொண்டு முடிந்து தொகைப் பட்டது.

எவன் என்பது 'எது' என்ற பொருளில் இன்று நாம் வழங்கும் 'என்ன' என்ற வினாப் பெயரின் தொல் பழந் தமிழ் வடிவம். இவ் வினாப்பெயர் இங்கே முடிபு வாக்கியத்தின் பெயர்ப் பயனிலையாய் நின்றது.

வி - ரை : அறவாழ்வில் கடவுளின் மையப் பண்புருவான இல்வாழ்வான் ஏழ்ப்பால் வாழ்வுகளுக்கும் உரியவனாயினும், இக் குறட்பாவும் முந்திய இரு குறட்பாக்களும் (44—46) அவனது அறவாழ்வுத் தொடர்பையே சிறப்பிக்கின்றன. அவ்வழி இக் குறட்பா இல்வாழ்க்கை அறம் சிறந்த அறம் மட்டுமன்று, சிறந்த ஆதாயம் தருவதுமாகும் என்று விதந்தோதுகின்றது.

அறவாழ்வு சிறப்பிக்கும் அதிகாரப் பகுதியாக இக்குறட் பாவுடன் முடியும் மூன்று குறக்பாக்களும் (44—46) சிங்க நோக்காக நின்று முந்திய இன வாழ்வுக் கூறுடனும் பின் வரும் பொருள் வாழ்வுக்கூறுடனும் தொடர்புபட்டு நிற்பது முன் குறட்பா விளக்க வுரைகளில் குறிப்பிடப்பட்டது. அவ் வழி இக்குறட்பா இல்லற வாழ்வுக் கூற்றினைப் பின்வரும் பொருள் வாழ்வுக் கூற்றுடன் இசைவுபடுத்துவதாகும்.

அறத்தாற்றின் என்பது அறத்தின் நெறிமுறையின்படி என்று பொருள்படுவதாகும். இங்கே ஆற்றின் என்பது ஆறு என்ற பெயர்ச் சொல்லின் மூன்றும் வேற்றுமை ஆகும்: ஆறு என்பது நெறி முறை.

இங்கே அறம் என்பது இல்வாழ்வானின் இல்வாழ்க்கைக் குரிய அறம், மேற்குறட்பா கூறியபடி அது அன்பும் அறமும் உடையது, அதாவது குடும்பத்தில் அன்பு செறிந்து; சமு தாயத்தில் நேர்மையளாவி அறமாகப் பரவுவது ஆகும். அதன்படி நடத்தலாவது குடும்பத்தில் அன்பு குன்றுமலும், சமுதாயத்தில் அன்பும் நேர்மையும் குன்றுமலும் நடப்பது ஆகும்.

இல்வாழ்க்கை ஆற்றின் என்பது சமுதாய உறுப்பான குடும்ப வாழ்க்கையை ஒருவன் நடத்திச் செல்வானுல் என்று பொருள்படும். 'ஆற்றின்' இங்கே ஆற்று என்ற பகு தியையுடைய காரணப் பொருள் வினைஎச்சம். ஆற்றுதல் என்பதன் வினைமுதல் குறட்பா முதலில் வருவிக்கப்பட்ட 'ஒருவ'னே.

ஆற்று என்ற சொல் செய்தல், நடத்திச் செல்லல் என்ற பொருளுடையது. இது 'ஆறு' என்பதனுடன் தொடர் புடையது. ஆறு என்பதன் பொருள் நெறி, வழி, முறை. ஆகவே, ஆற்று என்பது வழிப்படு, வழிப்படுத்திச் செய் என் னும் பொருள்கள் பெற்றது.

புறத்தாற்றின் என்பது அறத்துக்கு மாறுன பிற வழி களிலே என்று பொருள்படுவது. இங்கு 'ஆற்றின்' என்பதன்

இலக்கணமும் பொருளும் மேலே 'அறத்தாற்றின்' என்பதிலுள்ள ஆற்றின் என்பதனுடன் எல்லா வகையிலும் பொருந்துவது காணலாம். தொகைநிலையிலும் அறம் என்பது அத்துச் சாரியை பெறுவதனை ஒத்தே, புறம் என்பதும் அத்துச் சாரியை பெற்றது. புறத்தாறு என்பது இங்ஙனம் அறத்தாறு என்பதற்கு நேர் எதிரிணையாக அமைந்து, அறத்துக்கு மாறான பிறவழியில் என்ற பொருள் தந்தது.

அறத்துக்கு எதிர்மாறாகப் புறம் என்ற சொல்வழக்கு இன்றளவும் தமிழகக் குடும்ப மரபு வழக்காக இயல்கின்றது. முரட்டுத்தனமாக ஏறுக்குமாறாகப் பேசுபவனைப் பெண்டிர் இன்றும் 'அறம் புறமாகப் பேசுகின்றான்' என்றே கூறுகிறார்கள்.

அறத்துக்கு மாறான வழியில் செல்வது அடிப்படை மனித இயல்பு அன்று, இதனை உளநூலார் அறிவர். முதலில் ஆதாயமோ, இன்பமோ, பிற தற்காலிக நலனோ நாடிப் புகுந்தபின், தெரிந்தும் தெரியாமலுமே மக்கள் மேன்மேலும் அவ்வழிக்குள் சிக்கி வருகிறார்கள். திருவள்ளுவருடைய பல குறட்பாக்கள் அவர் ஓர் உள நூலார் என்பதையும், உள நூற் பண்புகளை அவர் அறிந்திருந்தார் என்பதையும் காட்டுகின்றன. இக்குறட்பா அவற்றுள் ஒன்று. ஆகவே தான் அவர், 'ஆதாயத்துக்காகவா பழி வழியில் சாய வேண்டும்! இல்வாழ்வும் அறமும் சேர்ந்துவிட்டால், அதைவிட வேறு ஆதாயம் இருக்க முடியாதே' என்ற கருத்தை இக்குறட்பாவினுள் அமைத்தார். அதனையும், அவர் உள நூலார் ஆதலால், கேட்பவர் மனம் கனியும்படி இரண்டு படிகளாக்கிக் கூறுகிறார். 'பழி வழியில் போனால் கிடைக்குமென்று நினைக்கிறாயே ஆதாயம்! அது கிடைக்குமோ, கிடையாதோ! ஆனால் நீ நினைக்கும் அந்த ஆதாயத்தை இன்னும் எவ்வளவோ மிகுதியாகப் பெற இல்வாழ்விலே வழி இருக்கிறதே! அதிலும் அறவழியில் நடந்தால் மிகுதியினும் மிகுதியாகக் கிடைக்குமே!' என்பது இக்குறட்பாவில் திருவள்ளுவர் வாதம் ஆகும்.

அறத்தாற்றின், புறத்தாற்றின் என்ற எதிரிணைவழக்கின் பொருள் வளம் இது. ஆனால், குறட்பாவின் பிந்திய சொற்கள் இப்பொருளை இன்னும் செழுமைப்படுத்துகின்றன.

போஒய்ப் பெறுவது எவன் என்பது 'பழிவழி சென்று பெருமுயற்சி செய்தாலும் அந்த அறவழி இல்வாழ்க்கைக்கு ஈடாகப் பெறத் தக்கதாக என்னதான் இருக்க முடியும்?' என்பதாகும்.

இங்கே போஒய் என்பதிலுள்ள உயிரளபெடை இலக்கணக் குறிப்புரையில் கூறியபடி செய்யுளிசை யளபெடையாகவே வரினும், குறட்பாவின் கருத்துக்குத் தனி வளம் தரும் முறையிலேயே அமைந்திருக்கிறது. ஏனெனில், போஒய் என்ற அளபெடை, 'சென்று சென்று வீண் பெருமுயற்சிகளெல்லாம் செய்து' என்ற பொருளைத் தருகிறது. பழி வழி முதலில் மேலீடாக ஆதாயம் தருவதாகக் கவர்ச்சி காட்டினும், அது போலியாகும். எளிதாக ஒவ்வொரு படியிலும் தோற்றிய முயற்சி நீண்டுகொண்டே செல்லும். வருவதாகத் தோன்றிய ஆதாயம் வரவில்லை என்பது தெளிவாகுமுன், முயற்சி பெருகி அவற்றால் வரும் ஆதாயத்தினிடமாக இழப்பே விலக்க முடியாத அளவில் வந்து பெருகத் தொடங்கிவிடும்.

போஒய் என்பதன் பொருள் வளம் இது.

பெறுவது என்பது இந்த அளபெடைக் குறிப்பாலேயே பெறமுடியாதது என்றும், பெறுவதாக முதலில் எண்ணியது கூட, அறவழி இல்வாழ்வில் கட்டாயம் கிடைப்பதற்கு ஈடாகாது என்றும் பொருள்படுவதாகும். அதற்கீடாகப் பெறத் தக்கதாக என்ற பொருளை இது தருகிறது.

எவன் என்பது சொல்லளவில் எது என்றே பொருள்படினும் இவ் வாத முறையில் என்னவாகத்தான் இருக்க முடியும்' என்ற பொருள் பயந்து விடுகிறது.

சிறப்புரை: தீய வழிகள் கவர்ச்சிகரமானவை. அவை மிக எளிதாக, பெருத்த ஆதாயம் தருவது போல்

ஆசை காட்டும். ஆனால் அவை அனைத்தும் போலி. ஆதாயம் வராது. இழப்பே வரும். நேர் மாறாக, இவ் வாழ்க்கை உண்மையாகவே ஆதாயம் தரும். அதை அற வழியில் நடத்தினால் பழி வழியினால் வருவதாகக் கருதப் பட்ட ஆதாயத்தைவிட எவ்வளவோ மேம்பட்ட ஆதாயமும் கிடைக்கும்.

பொருள்வளம் : *(1)* 'ஆற்றின்' என்ற சொல் இக் குறட்பாவில் மூன்று தடவைகள் வழங்கப்படுகின்றது. இது அணி அழகு மட்டுமன்று, பொருள் வளமும் உடையது என்பது இலக்கணக் குறிப்புரையில் சுட்டப் பட்டுள்ளது.

அறத்தாற்றின், புறத்தாற்றின் என்ற இரண் டிடங்களில் ஆற்றின் என்ற சொல் பெயர்ச் சொல். இடையே வரும் ஆற்றின் என்ற சொல் வினைச்சொல். முன் கூறப்பட்ட இரண்டிலும் ஆறு என்ற பெயர்ச் சொல்லும், இடைவரும் ஆற்றின் என்பதில் ஆற்று என்ற வினைச் சொல்லும் வந்தன. ஆறு, ஆற்று என் பதன் தொடர்பு விளக்கவுரையிலேயே சுட்டப்பட் டுள்ளது. ஆற்று என்பது ஆறு வழி ஒழுகு அல்லது ஒழுகுவி என்ற பொருளுடையது. அறத்தாறு ஒன்றே ஆற்றத் தக்க ஆறு, புறத்தாறு அன்று என்பதை இது சுட்டிற்று. புறத்தாற்றில் போவதைப் பெறுவதெவன் என்று எதிர்மறைக் குறிப்பான வினாவாகக் கூறப்பட்ட தனால், அறத்தாற்றின் ஆற்றின் பெறுவது உண்டு என்றும், அதற்கீடாக விரும்பிய எதுவும் புறத்தாற்றில் கிடையாமல் விரும்பாத அளவிலே தீமை விளையும் என்றும் இம் மூவடுக்கே குறித்துக் காட்டுகிறது.

(2) அறத்தாற்றின் என்பதற்கு எதிரிணையாக வும் எதுகையாகவும் புறத்தாற்றின் என்பது அமைந்

துள்ளது. எதிரிணையாதலாலேயே அது அறத்துக்கு மாறுனது என்பது குறிக்கப்படத் தக்கது. அறத்துக்கு மாறனது பழி. ஆனுல் இங்கே பழி என்று முன் குறட்பாவில் கூறியதுபோல் கூருமல், புறத்தாறு என்று சுட்டியதனுலேயும்; அதன் பின்னர் போஒய் என்பதனை அளபெடுத்துக் கூறியதனுலேயும், அது இனவாழ்வுக்குப் புறமானது, புறம் போக்கி, பேரிழப்பும் உண்டுபண்ணத் தக்கது ஆகும் என்ற தொனிப் பொருள் தரப்பட்டது.

(3) இக் குறட்பாவின் முதலடி முழுவதும் வெண்பாவுக்குரிய செப்பலோசை விழுமியதாக அமைய, திருவள்ளுவர் வழக்கத்துக்கு மாருக, இரண்டாமடி பெரிதும் குறுகிய, மாச்சீர் மட்டும் பெற்று ஆசிரியப் பாவின் ஓசைபட நின்றது. இரண்டாமடியின் முதற் சீரிலேயே போஒய் என்ற அளபெடை ஓர் இசை முறிவை உண்டு பண்ணுகிறது. புறத்தாற்றின் என்றவுடனே திருவள்ளுவர் ஓசை மூலமே அதன் இழிதகவும், கேடும், இழப்பும் காட்டி ஏளன நகை நகைப்பது போன்ற தொனியை இது தருகிறது.

தனிக் குறிப்புக்கள்: (1) இக் குறட்பாவின் 'புறத்தாற்றின்' என்பதற்கு இம்மணி விளக்கவுரையை ஒத்து 'பாவத்தின் வழியிலே' என்று உரை கூறியவர் பரிதியார் ஆவர்.

அதற்குப் புறமாகிய நிலை என்று சொற் பொருள் கூறி 'இல்லை விட்டு வனத்துக்குச் செல்லும் நிலை' என்று விளக்கினர், பரிமேலழகர். 'அந்நிலையில் இது பயனுடைத்து என்பார், போஒய்ப் பெறுவது எவன் என்றார்' என்பது அவர் கருத்துரை. 'அறத்தாறு என்பது பழியஞ்சிப் பகுத்துண்டலும், அன்புடைமையுமென மேற் சொல்லிய ஆறு' என அறத்தாற்றுக்கும் அவர் விளக்கம் தந்தார்.

'புறநெறியாகிய தவத்தில்' என இதை ஒப்பவே மணக்குடவரும் உரைத்தார். அத்துடன், 'மேல், சீலனைக் கொடுக்க வேண்டும் என்றார்: அவ்வாறு செய்யின் தவப் பயனும் இதுதானே தரும் என்றார்' என விளக்க வுரையில் பரிமேலழகரைப் போலவே இவரும் முன் குறட்பாக்களின் தொடர்பு கூறினார்.

இவ்விருவரையும் பின்பற்றியே புலவர் ந. சி. கந்தையா அவர்கள் 'புறத்தாற்றின்' என்பதனைத் 'தவ வழிகளில் அல்லது துறவு வழிகளில்' எனக்கொண்டார்.

பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் புறத்தாறு என்பதைத் துறவறம் என்று இக்குறட்பாவில் கொண்டது பொருத்தமாகத் தோற்றவில்லை. ஏனெனில் திருவள்ளுவர் இக்கருத்தை இதே அதிகாரத்தின் எட்டாவது குறட்பாவில் (48) கூறியுள்ளார்.

பேராசிரியர் இலக்குவனார், கவிஞர் இராமலிங்கனார், ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் வி. ஆர். ஆர். தீட்சிதர், ஐ.டி. தங்கசாமி ஆகியோர் வேறு நெறியில் என்றே பொருள் கூறி. துறவற நெறியில் என விளக்கம் கூறினர். பேராசிரியர் மு. வரதராசனார், புலவர் குழந்தை, ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஆர். ட்ரூ, இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் பேராசிரியர் டாக்டர் சங்கரராஜு நாயுடு ஆகியோர் வாளா 'வேறு வழியில்' என்று கூறிவிடுத்தனர்.

(2) மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் வெண்ணிகுளம் நாராயணக் குறுப்பு, 'வேறு ஆசிரமங்களில்' என்றே (துறவறம் என்றே) கொண்டார். தமிழ்க் குறட்பாவைக் கிட்டத்தட்ட மலையாளக் குறட்பாபோலவே மொழிபெயர்த்துள்ள இவ்வாசிரியரின் கவிதை நயத்துக்கு இக்குறட்பா மொழி பெயர்ப்பு ஒரு சான்று ஆகும். மறு தமிழ்ப் பெயர்ப்புடன் தமிழ் எழுத்திலேயே அவர் மலையாளக் கவிதையையும் கீழே காணலாம்.

'அறமே வழியாகக் கொண்ட வழிப்போக்கன் இல்வாழ்வானுக்கு வேறு என்ன வேண்டப்படும்'.

மற்ற ஆசிரமங்களிலிருந்து !

"தர்மைக பாந்தன் க்ருஹஸ்தந்து காம்யம் எந்து
அந்யாச் ரமங்களில் நிந்நும்"

47. பொருள் முயற்சியாளரிடையே தலைசிறந்த பொருள் முயற்சியாளன் இல்வாழ்வானே !

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.**

பொ-ரை : *முயற்சிகளின் அடிப்படைப் பண்பாகவே குடும்ப வாழ்க்கையைச் சரிவர நடத்தி வாழ்பவன் என்று கூறப்படத் தக்க தகுதியுடையவன், பொருள் முயற்சியில் ஈடுபடுபவர் எல்லாருக்கிடையிலும் தலைமையான முயற்சியுடையவன் ஆவான்.*

க - ரை : *பொருள் முயற்சிகளுக் கெல்லாம் அடிப்படையாக விளங்கும் தாய் முயற்சி இல்வாழ்வு. அதனைச் சரிவர நடத்துபவன் எம் முயற்சியில் ஈடுபட்டாலும், அந்த எல்லா முயற்சியாளர்களிடையிலும் அவனே தலை சிறந்தவனாய், அவர்களை ஊக்குவிப்பவன் ஆவான்.*

இலக். கு : இக் குறட்பாவின் வாசகம் ஒன்றே. இதன் சொற்கள் இரண்டு.

அவை யாவன :

1. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் (இது எழுவாய்).
2. முயல்வாருள் எல்லாம் தலை (இது பெயர்ப் பயனிலை).

இக் குறட்பாவில் முதலடியில் இரண்டாவது மூன்றாவது சீர்களும், இரண்டாமடியில் முதற் சீரும் மூவசை (காய்)ச் சீர்கள். முதலடி முதற் சீர் கருவிளச் சீராயினும் அவ்வோசை யுடையதே. இதனால் பாவின் ஓசை முழுவதும் எக்திசைப்பாய், விழுமிய ஓசை தருகிறது.

இல்வாழ்க்கை வாழ்பவன், தலை ஆகிய சீர்களே இக் குறட்பாவில் முதலசை எடுத்திசைப்பாகக் கொண்டன. இயல்பினான், என்பான், என்பவற்றின் இறுதி அசை எடுத்திசைத்து ஏற்றிசைப்பாகவும், முயல்வாருள் என்பது நடு அசை எடுத்திசைத்து ஏற்ற இறக்க (அலை) இசைப்பாகவும் அமைந்தன.

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் என்பது பெயர்த்தொகைநிலையாய் எழுவாய் ஆயிற்று. என்பான் என்ற சொல் எனப்படுபவன், எனப்படும் தகுதியுடையவன் என்று செயப்படு பொருளில் வந்த வினையாலணையும் பெயர். 'என்' பகுதி. இது அறிமுக வினை. 'ஆன்' ஆண்பால் விகுதி. பகரம் எதிர்கால இடைநிலை; இங்கே காலப் பொதுவாய் வந்தது.

இல்வாழ்க்கை வாழ்பவன் என்பது இரண்டாம வேற்றுமைத் தொகை. இதில் 'வாழ்பவன்' என்பது 'வாழ்' என்ற பகுதியடியான வினையாலணையும் பெயராதலால், தொகையும் பெயரே. இத் தொகையும் 'என்பான்' என்னும் பெயரும் ஒரு பொருள் சுட்டிய இரு பெயரொட்டுப் பெயர் ஆகும். 'வாழ்பவன்' என்பதிலும் 'அன்' விகுதி. 'அ' சாரியை. இடையே வகரம் உடம்படு மெய். பகரம் காலப் பொது இடைநிலை 'வாழ்க்கை' என்பதில் 'வாழ்' பகுதி. 'ஐ' தொழிற் பெயர் விகுதி. இல்வாழ்க்கை: இல்லில் இருந்து வாழப்படும் வாழ்க்கை என ஏழாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகை.

'இயல்பினான்' என்பது மூன்றாம் வேற்றுமைப் பெயர். 'ஆன்' அவ் வேற்றுமை உடனிகழ்ச்சிப் பொருள் உருபு. 'இன்' சாரியை. சாரியை முன் பெயர்க் குற்றியலுகரம் கெட்டது. இவ் வேற்றுமைப்

பொருள் 'வாழ்பவன்' என்ற வினையாலணையும் பெயர்ப் பகுதி தழுவித் தொகைப்பட்டது.

முயல்வாருள் எல்லாம் தலை என்பது குறட்பாவின் பெயர்ப் பயனிலை. 'தலை' என்ற பெயர் இங்கே 'தலைமையானவன்' அல்லது 'தலை போன்ற நிலை உடைய சிறப்புடையவன்' என்ற பொருள் குறித்து நின்றது. இது உவம ஆகுபெயர் வழக்கு.

'முயல்வாருள்' என்பதில் 'உள்' என்பது ஏழாம் வேற்றுமை உருபு. 'எல்லாம்' என்னும் பன்மைப் பெயர் இங்கே முற்றும்மைப் பொருள் குறித்த இடைச் சொல்லாய் நின்றது. இவ் வேற்றுமைப் பொருளும் இடைச் சொல்லும் 'தலை' என்ற பெயர்ப் பயனிலையின் பயனிலை தழுவின. 'முயல்வார்' என்பது வினையாலணையும் பெயர். 'ஆர்' பலர்பால் விகுதி. வகரம் காலப் பொது இடைநிலை. 'முயல்' பகுதி.

வி - ரை : அறவாழ்வில் கடவுளின் மையப் பண்புருவான இல்வாழ்வான் முப்பால் வாழ்வுகளுக்கும் உரியவனாயினும், இக்குறட்பாவும் அடுத்துவரும் இரு குறட்பாக்களும் (47—49) அவனது பொருள் வாழ்வுத் தொடர்பைச் சிறப்பிப்பன ஆகும். அவ்வழி இக்குறட்பா பொருள் வாழ்வு முயற்சிகளை எல்லாம் ஊக்கும் தாய் முயற்சியும் தலை முயற்சியும் இல்லறமே என விதந்துரைக்கின்றது.

இதற்கு முந்திய குறட்பா (46) அதிகாரத்தின் அறவாழ்வுக் கூறேயானாலும், இக் குறட்பாவையும் அதிகாரத்தின் பொருள் வாழ்வுக் கூற்றினையும் நோக்கி அது அறவாழ்வின் பொருள் தொடர்பே சுட்டியுள்ளது என்பது முன்பே குறிக்கப்பட்டுள்ளது.

இயல்பினான் என்பது 'முயற்சிகளின் அடிப்படைப் பண்பாகவே' என்று பொருள்படுவது ஆகும்.

இயல்பு என்பது பண்பு போன்ற ஆக்கத்திறமோ, தன்மை போன்ற தனித்திறமோ குறித்த சொல் அன்று. அது தாய்த் திறம், சூழலுக்கியைய அமைந்து சூழலை இயை

வித்து ஆக்கும் திறன் ஆகும். இயங்கு திறன், இயக்கு திறன் என அதைக் கூறலாம்.

இல்வாழ்க்கை என்பது இயற்கை சார்ந்த இயல்பன்று, ஆக்கப் பண்பே. ஆயினும் அது இயற்கையோ டொட்டி வளர்ந்த பண்பு ஆதலால், அது மற்ற ஆக்கப் பண்புகளை யெல்லாம் இயக்கி ஊக்கி வளர்க்கும் இயல்பு, அதாவது, தாய்த்திறம் ஆகிவிடுகிறது.

கல் உலகத் தோற்றத்தில் மூலமானது. அது இயல்பு. கல் பொடிந்தும் சிதைந்தும் ஆவது மண். அது ஆக்கத்திறம், பண்பு. ஆனல், செடிகளின் வளர்ச்சிகளுக்கெல்லாம் மூல காரணமான தாய்த்திறம் அல்லது இயல்பாய் அம்மண்ணும்; பிற உயிர்களுக்கெல்லாம் மூலகாரணமான தாய்த்திறம் அல்லது இயல்பாய் அச்செடி வளர்ச்சியும் அமைகின்றன. இல்வாழ்க்கை இதுபோலவே மனித இன நாகரிகத்தின் ஆக்க முயற்சிகளில் முதல் முயற்சியாய், மற்ற எல்லா முயற்சிகளுக்கும் மூலகாரணமான தாய்த்திறம் அல்லது இயல்பு ஆக அமைகிறது என்பது இக்குறட்பாவில் திருவள்ளுவர் பெருமான் குறித்த கருத்து ஆகும்.

இயல்பினுன் என்பது 'இல்வாழ்க்கையின் இந்தத் தாய்த் திறத்தினைப் பண்பாகக் கொண்டு அப்பண்புடனே' என்று பொருள்பட்டு, உடனிகழ்ச்சிப் பொருள் கொண்டு மூன்றும் வேற்றுமை ஆயிற்று.

இயல்பு, இயற்கை, இயலுதல், இயற்றுதல் ஆகியவை இயல் என்ற வேர்ச் சொல்லிருந்து பிறந்தவை. 'பு' விகுதி இங்கே பண்பு குறித்தது. இயல்பு என்பது இவ்வாறாக இயலாக அமைந்த பண்பு என்பதே யாகும். 'நீடித்த வழக்கம் ஒரு துணையியல்பாகிவிடும்'[1] என்ற ஆங்கிலப் பழமொழி இத் தத்துவத்தையே பொதுமக்கள் மொழியில் குறிப்பதாகும்.

'இயல்பு' என்ற இத்தமிழ் வள்ளுவத் தத்துவத்தையே புத்தர் பிரான் காலமுதல் சமஸ்கிருத மொழி தர்மம் என்ற

1. Habit is second nature

சொல்லின் பொருட் பண்பாக வளர்த்துக்கொண்டுள்ளது காணலாம். புத்தர் பிரான் காலத்திலும் அதற்கு முன் உபநிடத காலங்களிலும் திருக்குறள் ஒரு மறை ஞானமாக (உட நிடதங்களின் ரஹஸ்ய வாதம்) இந்தியா வெங்கும் அவ்வெல்லை கடந்தும் வழங்கி யிருக்க வேண்டும் என்னலாம்.

இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் என்பது 'குடும்ப வாழ்க்கையாகிய இல்லறத்தைச் சரிவர நடத்தி வாழ்பவன் என்று கூறப்படும் தகுதியுடையவன்' என்று பொருள்படும்.

இங்கே வாழ்பவன், என்பான் என்ற சொற்கள் சொற் பொருள் வகையில் மிகை என்று காணலாம். இல்வாழ்வான் என்றாலே சொற்பொருள் நிகைவுற்றுவிடும். ஆனால், வாழ்பவன் என்பது 'தான் வாழ்ந்து பிறர் வாழும்படி முன் மாதிரியாயமைந்து அவர்களை இயக்குபவன்' என்ற குறிப்புப் பொருள் வளம் தருவதாகும். என்பான் என்பது அதற்குரிய தகுதிகள் நிறைவுறப் பெற்றவன் என்ற தொனிப் பொருள் சுட்டும். வாழ்தல் என்பதே கூடி வாழ்தல், அன்பு அலை பரப்பல், வளர்தல், வளர்த்தல், வளர்வித்து வளர்தல், சாவா வாழ்வு நோக்கிய சாவாத் தலைமுறைகளை ஆக்கிப் பண்புருவில் சாவாது நிற்றல், எல்லையின்றிக் கால இட எல்லை யளாவி வளர்ந்துகொண்டே இருத்தல் என்ற பொருள்களையுடையது. வாழ்க்கை வாழ்பவன் என 'வாழ்' என்ற பகுதி இரட்டித்தது இதை நினைவூட்டுதற்காகவே யாகும்.

என்பான் என்பது முன்மாதிரித் தன்மை[1] காட்டும் சொல் ஆகும், வெறும் அறிமுகச் சொல் அன்று.

முயல்வாருள் எல்லாம் என்பது 'பொருள் முயற்சியில் ஈடுபடுபவர்கள் எல்லாருக்கிடையிலும்' என்று பொருள் படுவது.

முயல் என்பது முயற்சி என்ற சொல்லின் பகுதி. அதுவே ஒரு சிறு விலங்கின் பெயராகவும் தமிழில் இயல்கின்றது. வேட்டையில் முயல் பிடித்தல் சிறுமை எல்லையாகவும், போரில் யானை எதிர்த்தல் பெருமையின் எல்லையாகவும்

1. Exemplary model, paragon

திருவள்ளுவர் காலத்திலும் அதற்கு முன்னும் கருதப்பட்டிருத்தல் வேண்டும். முயங்குதல் சிற்றின்ப மயக்கச் செயலான கூடியிருத்தலைச் சுட்டுவதும் காணலாம். திருவள்ளுவர் முயல்வார் என்ற சொல்லைச் சிறு முயற்சிகள் செய்பவர்கள் என்ற தொனிப்படும்படிதான் இங்கே வழங்கியுள்ளார் என்று தோற்றுகிறது. முயற்சிகள் எல்லாம் கைக்குழந்தைகள் போல் சிறியன, இல்வாழ்வு தாய்த்திறமாதலின் அவற்றைப் பேணி வளர்க்கும் பெருந்திறமுடையது என்பதை இச் சொல்லில் அவர் சுட்டினராதல் சாலும்.

முயல்வாருள் என்றதனால், இல்வாழ்வு ஒரு முயற்சியன்று, இல்வாழ்வானும் பிற முயற்சியில் ஈடுபடுபவனே என்ற பொருள் குறித்தது. முயல்வாருள் எல்லாம் என்றதனால் பலவகை முயற்சியாளர்கள் சுட்டப்பட்டனர். உழவர், வணிகர், தச்சர், கொல்லர், குயவர், சேணியர், கன்னர், தட்டார், பொறியர், எழுத்தர், ஆசிரியர், கலைஞர் என முயற்சியாளர்கள் பலவகையினர். அரசியல் அலுவலர்களும் இதில் உட்படுவர். இவர்கள் எல்லாரும் இன்றும் பெரும்பாலும் இல்வாழ்வாரே என்பது குறிக்கத்தக்கது. ஏனெனில் இல்வாழ்வே முயற்சிகளின் தாய்மை சான்ற இயல்பு என்பது இங்கே மறக்கப்படத் தகாத செய்தி ஆகும். 'இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்' என்பதன் முழுப் பண்பையும் இது காட்டுகிறது. கிட்டத்தட்ட எல்லா முயற்சியாளரும் இல்வாழ்வாரேயானாலும், 'இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பானே' 'அவருள் தலை' ஆவான்.

இல்வாழ்க்கை, முயற்சியில் சிறப்பளிக்கும். தகுதி சான்ற இல்வாழ்க்கை இல்வாழ்வாரிடையே சிறப்பளித்து முயற்சியில் மிகுசிறப்புத் தரும். இயல்பினான் வாழும் இல்வாழ்கை இல்வாழ்வாரை எல்லாம் இயக்கி அவனுக்குத் தலைமையையே அளிக்கும்.

நாடாளும் மன்னனும், துறவிகளும், அருளாளரும், அந்தணரும் எல்லாரும் வள்ளுவத் தமிழ்க் கோட்பாட்டின்படி இல்வாழ்வாரே, இல்வாழ்வாரில் சிறப்பு எய்தியவரே என்பது இங்கே கருதத் தக்கது. அவர்கள் சிறப்புக்கள் இல்-

வாழ்வுச் சிறப்புக்களே. அது மட்டுமன்று, பொதுவறமாகிய இல்வாழ்வு வாழ்பவனே இச்சிறப்பற வாணர்களுக்கும் ஆதாரம் ஆவான் என்பதும், 'இயல்பினுன்' என்பதால் குறிக்கப்பட்டது.

முயற்சி என்பது சிறு செயலானாலும், சிறப்பு மிக்க செயலேயாகும். ஏனெனில், அது இனத்தின் வாழ்வில் புதுச் செயல் குறித்ததாகும். முயற்சி என்பதற்குச் சரியான சமஸ்கிருதச் சொல்லின் வரலாறு இதைக் காட்டும். அச் சொல் (உத்யோகம்) தனி மனிதன் முயற்சியை மட்டுமன்றி, அரசியல் அலுவலையும் இன்று குறிக்க வழங்குகிறது. ஆட்சியாளர் முயற்சி என்ற முறையில் அது மக்கள் செயலை ஊக்கிப் புதுமை ஆக்கும் முயற்சி குறிக்கிறது.

தலை என்பது 'தலைமை வாய்ந்த சிறப்புடையவன் ஆவான்' என்று பொருள்படும்.

தலை தாய்மையை மட்டுமன்றி அறிவுத் தலைமையையும் குறித்த சொல் ஆகும். ஐந்தறிவு (புலன்)களில் முதலறிவு (ஊறுணர்வு-மெய்) ஒன்றே உடல் முழுதும் பரவியுள்ளது. மற்ற நான்கு அறிவும், ஐந்தறிவுக்கும் மேற்பட்ட ஆறும் அறிவும் தலையையே இருப்பிடமாகக் கொண்டது.

இல்வாழ்வான் முயற்சி, முயற்சிகளில் சிறந்தது மட்டுமன்று, பிறர் முயற்சிகளை இயக்கும் தாய் முயற்சி மட்டுமன்று. எல்லார் முயற்சிகளின் வளங்களையும் தூண்டும் அறிவுத் தாய்மை உடையது என்பதைத் 'தலை' என்ற சொல் விளக்குகிறது.

சிறப்புரை: சால்புடைய இல்வாழ்க்கை முயற்சிகளிடையே சிறந்த முயற்சி மட்டுமென்று. செடி வளர்ச்சிகளையெல்லாம் தாங்கி நின்று ஊக்கும் தாய் நிலம் போன்ற தாய்ப் பண்பு அது. அத்துடன் உயிர்களுக்கு உணவாகவும், உணவின் பக்குவத் துணையாகவும் உண்ணும் துணையாகவும் விளங்கும் நீர் போல, அது முயற்சிகளிடையே தலைப் பண்பாய், உயிர்ப் பண்பாய் விளங்குவதாகும்.

பொருள்வளம்: (1) ஓசையமைதியிலும், முகரத் துடன் மென்மை இடைமைகள் கலந்த யாழிசை யமைதியிலும் இக் குறட்பா அதிகார முதற் குறட்பா வுடன் போட்டியிடத் தக்கதாகும். இசைக் கருவிகளுக் கெல்லாம் தாய்க் கருவியாகவும் உயிர்க் கருவியாகவும் இயங்கும் யாழ் போல, இல்வாழ்வு முயற்சிகளுக் கெல்லாம் தாய் முயற்சியாகவும் ஊக்கு முயற்சியாக வும் பொங்குவளம் தரும் முயற்சியாகவும் அமைவ தாகும் என்ற குறட்பாக் கருத்தினை இவ்விசை நயம் சுட்டிக் காட்டுகின்றது.

(2) இல்வாழ்க்கை, வாழ்பவன் என்ற இரு சீர் களின் முதலசை அழுத்தம் முயற்சியாளர்களிடையே இல்வாழ்க்கை வாழ்பவன் தலைமைத் தகுதியையும்; இயல்பினான், என்பான் என்ற சீர்களின் ஏற்றிசைப்பு அத் தலைமைக்குக் காரணமான அவனது இயல்பு, தகுதி ஆகியவற்றையும்; முயல்வாருள் என்பதன் ஏற்ற இறக்க அலை இசைப்பு முயற்சியாளர் முயற்சி களை யெல்லாம் அலைபாய் வியக்கங்களால் இயக்கும் இல்வாழ்வானின் பண்பையும் சுட்டிக்காட்டுகின்றன.

(3) 'இயல்பினான்', 'என்பான்' ஆகிய இரண் டும் ஏற்றிசைப்பாகவும், 'முயல்வாருள்' என்பது அலையிசைப்பாகவும், 'தலை' எடுத்திசைப்பாகவும் வந் தன. அதே சமயம் இயல்பினான் என்பதும், முயல்வா ருள் என்பதும் எதுகைத் தொடர்பும் எதிரிணைத் தொடர்பும் உடையன. இதனால் இயல்பும் தகுதியும் வளர வளர (ஏற்றிசைப்பின் பொருள் வளம் இது), முயற்சிகள் ஊக்கப்பட்டு அலைபாய் வியக்கம் ஆகி (அலையியக்கத்தின் பொருள் வளம் இது), அவை ஒரு

தலையாக இல்வாழ்வுத் தகுதி சான்ற தலைவனுக்குத் தலைமை உயிருக்க நிலையையும், முயற்சி யியக்க அலைகளின் கூட்டலை முகடாகிய பொங்கலை வளத்தையும் தருகின்றன என்ற செய்திகள் குறிக்கப்படுகின்றன.

(4) இல்வாழ்வான் முயல்வாருள் தலை என்றதனால், சமுதாய முயற்சிகளுக்கும் இன முயற்சிகளுக்கும் அவன் தலை ஆவான் என்று சுட்டப்பட்டது. இதனால் சமுதாய ஒருமைப்பாடும், இன ஒருமைப்பாடும் விளக்கப்பட்டன. கடவுள் பேரளவில் சமுதாயத்தையும் இனத்தையும் (கடலைச் செங்கதிரோனும் வெண்கதிரோனும் ஈர்ப்பது போல) தன்பால் ஈர்த்து வருவதை ஒப்ப, கடவுட் பண்புக் கூறினனான இல்வாழ்வானும் தன்னை நோக்கிய அத்தகைய சிறிய ஒருமைப்பாட் டலைகளை ஊக்கிக் கடவுட் பண்பாற்றுகிறான் என்பது குறிப்பு.

(5) பொருள் வாழ்வுக் கூறே சுட்டிய அதிகாரப் பகுதியின் முதற் குறட்பாதான் இது. ஆனால் அதிகார இறுதிக் குறட்பா முப்பால் முழுமையும் அதன் அகமுமாகிய வீட்டுப்பால் சுட்டியதாதல் நோக்கி, இக் குறட்பாவும் வருகுறட்பாக்களும் அவ் வீட்டுப்பாலே நோக்கிச் சாய்வுற்று ஏறுதல் காணலாம்.

தனிக் குறிப்புக்கள்: (1) இயல்பினான் என்பதற்குப் பரிமேலழகர், '(இல்வாழ்க்கைக்கண் நின்று) அதற்குரிய இயல்போடும் கூடி' என்றும்; பேராசிரியல் மு. வரதராசனார், 'அறத்தின் இயல்போடு' என்றும் பொருள் கூறினர். புலவர் ந. சி. கந்தையா, பேராசிரியர் இலக்குவனார் ஆகியோர் '(இல்லறவழி நின்று) அதற்குரிய நல்ல முறையில் அல்லது இயல்போடு' என்றும்; மணக்குடவர், 'நெறியினானே' என்றும்; பரிதியார் 'முறையாய்' என்றும்; கவிஞர் இராம

லிங்கனார் 'முறை தவறாத இயல்போடு' என்றும் கூறினர். ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி, இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் பேராசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடு ஆகியோரும் இவ்வாறே உரைத்தனர். புலவர் குழந்தையும், ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஆர். ட்ரூ வும் 'நல்ல முறையில்'[1] என்று உரைதந்தனர்.

இக்குறட்பாவுக்குக் காலிங்கர் உரை புதுமை வாய்ந்தது. அவர் அதிகாரக் குறட்பா வரிசையில் இக்குறட்பாவை இரண்டாவதாகக் கொண்டவர். ஆகவே, இயல்பினான் என் பதற்கு அவர் அதிகார முதற் குறட்பாவின் 'இயல்புடைய மூவ'ரைச் சுட்டி, 'முதற் சொன்ன மூவர்க்கும் நற்சார்பு இவன்தானே ஆதலான், இச் சொன்ன மரபினாலே' என்று உரை செய்துள்ளார்.

(2) 'முயல்வாருள் எல்லாம் தலை' என்பதற்குப் பரிமே லழகர், 'புலன்களைவிட முயல்வார் எல்லாருள்ளும் மிக்கவன்' என்று பொழிப்புத் தந்தார். அத்துடன், 'முற்றத் துறந் தவர் விட்டமையின் முயல்வார் என்றது மூன்றாம் நிலையில் நின்றாரை (இங்கே பரிமேலழகர் ஆசிரமங்கள் நான்கில் மூன்றாவதான வானபிரத்த நிலையைக் குறிக்கிறார்). அந்நிலை தான் பலவகைப் படுதலின் (விரதம், பிராணாயாமம், அட யோகம், ஆசனம் முதலியவற்றை இங்கே பரிமேலழகர் குறிக்கிறார்) எல்லாருள்ளும் எனவும், முயலாது வைத்துப் பயன் எய்துதலின் தலை எனவும் கூறினார்' என்று அவர் விளக்கவுரையும் விரித்துள்ளார்.

சொல் மாறினும் கிட்டத்தட்ட இதே கருத்தையே ஆங்கில மொழிபெயர்ப்பாளர் ஐ. டி. தங்கசாமி, மலையாள மொழிபெயர்ப்பாளர் வெண்ணிகுளம், இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராஜு ஆகியோர் கொண் டுள்ளனர். பரிதியாரும் 'அறிய முயல்வார்' என்று பொரு ளுரைத்தாலும் 'சரீரத்தை ஒறுத்துத் தவம் செய்வார்' என்றே விளக்கினார். பேராசிரியர் இலக்குவனார் 'பற்றை

1, Well

விட முயல்கின்றவர்' என்றும்; புலவர் ந. சி. கந்தையா பிள்ளை, 'மறுமை இன்ப நாடி முயற்சி செய்கின்றவர்கள்' என்றும் கூறினர்.

முனைவர் பேராசிரியர் மு. வரதராசனார் அவர்கள், 'வாழ முயல்கின்ற பல திறத்தாரினும் மேம்பட்டவன் ஆவான்' என்றும்; கவிஞர் இராமலிங்கனார், 'நல் வாழ்வு பெற முயற்சி செய்கிறவர்கள் எல்லாரினும் சிறந்தவன்' என்றும்; புலவர் குழந்தை, 'முயற்சி செய்கிறவர் யாவரினும் மேம் பட்டவன்' என்றும் கூறினர். ஆனால் கவிஞர் இராமலிங்கனார் விளக்க வுரையில் 'காயகற்ப முதலியன செய்பவர்' என்று சொல்வதன் மூலம் பரிமேலழகர் கருத்தையே பின்பற்றினார் என்று தோற்றுகிறது. புலவர் குழந்தை 'முயறல், மேன் மேலும் பொருளீட்டி வாழ்தல்' என்று விளக்கவுரை கூறிய தன் மூலம் மணக்குடவர் உரையையே நினைவூட்டுகிறார். ஏனெனில் அவர் விளக்கவுரை இதுவே.

இம் மணிவிளக்க வுரை 'பொருள் முயற்சியில் ஈடுபடுப வர்கள்' என்று கூறிச் சொல்லளவில் மணக்குடவரையும் புலவர் குழந்தையையும் ஒத்தாலும், பண்பில் வேறுபடு கின்றது. வள்ளுவப் பண்பின்படி பொருள் முயற்சி என்பது பொருளியல் சமுதாய வாழ்வே. பணம் ஈட்டுவது மட்டு மன்றி, அறிவு பெறுதலும் சமுதாயத் தொண்டும் கலை வாழ்வும் பொருளே யாகும். இவை எல்லாவற்றிலும் இல் வாழ்வரன், அவ்வத் துறையில் இருந்தபடியே, எல்லாத் துறைகளையும் இயக்குகிறான் என்பது இம் மணிவிளக்க வுரைப் பொருள்கோள் ஆகும்.

நம் கால இலக்கியம், கலை, பத்திரிகை, திரைப்படம் முதலிய எல்லாத் துறைகளும் காதல் காமச் சுவைகளையே தம் செல்வாக்குப் பெருக்கத்துக்குப் பயன்படுத்துகின்றன. கீழ்த்தரமான பயன் நோக்கியும், தன்னல நாடியும் செய்யப் பட்டாலும், இவைகூட இக் குறட்பாவின் வள்ளுவக் கருத் துக்கு ஊற்றம் தருவதே யாகும். தவறாகப் பயன்படுத் தினும், தவறான தன்னலப் பயன் விளைவிக்கும் இக் காதற் பண்பு, காதலருமையும் தெய்விகச் சிறப்பும் அறிந்து பயன்

படுத்தப்படின், எல்லையில்லாப் பொங்குமாவளப் பயன் விளை விக்கும் திறமுடையது என்பதில் ஐயமில்லை.

48. தவத்தினும் சிறந்த தவ வலிமையுடையது, இல்வாழ்வு.

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

பொ - ரை : *மற்றவர்களை யெல்லாம் அற வழியில் முறைப்பட ஒழுகச் செய்து, தானும் அறவழியிலிருந்து வழுவாத இல்வாழ்வானின் குடும்ப வாழ்க்கை நெறி யானது, தவம் செய்பவரது தவ வலிமையினும் மிகுந்த தவ வலிமை யுடையதாகும்.*

க-ரை : *தான் அற முறையில் வழுவாமல், பிறரையும் அற வழியில் இயக்கும் இல்வாழ்வா னின் இல்வாழ்க்கை துறவோரின் தவத்தினும் வலிமை நலம் வாய்ந்தது. ஏனெனில் தான் துன்பமேற்றுப் பிறர் துன்ப மகற்றும் தொண்டே தவம். இதில் பிறர் நலம் பெறுவர், ஆனால் ஆன்ம வலிமை பெறுபவர் துறவோரே. இல்வாழ்வானோ பிறரை அறத்தில் இயக்குவதால், அவனும் ஆன்ம வலிமை பெறுகிறான். மற்றையோரும் ஆன்ம வலிமை பெறுகின்றனர்.*

இலக். கு : இக் குறட்பாவின் வாசகம் ஒன்று. இதன் சொற் கள் இரண்டு.

அவையாவன :

1. ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை (இது எழுவாய்).

2. நோற்பாரின் நோன்மை உடைத்து (இது பயனிலை).

இக் குறட்பாவில் 'நோற்பாரின்' என்ற சீரில் மூன்றசையுமே எடுப்பிசைப்பாய், முதலும் இறுதியும் மிகுதி எடுப்பிசைப்பானதனால் ஈரலை இடைப் பள்ளம் போன்ற குழி வோசை அதாவது எற்ற இறக்க எற்ற இசைப்பு வழங்கியுள்ளது. ஆற்றின், அறனிழுக்கா ஆகிய இரு சீர்களிலும் இறுதி அசைகள் எடுத்திசைத்தன.

ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை என்பது பெயர்ச் சொல். எழுவாய். வாழ்க்கை என்பது 'கை' விகுதி பெற்ற தொழிற் பெயர். வாழ், பகுதி. இல்வாழ்க்கை என்பது இல்லிலிருந்து நடத்தப்படும் வாழ்க்கை என ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

'இழுக்கா' என்பது 'இழுக்காத' என்பதன் திரிபு. இதில் 'இழுக்கு' என்பது வினைப் பகுதி. 'அ' பெயரெச்ச விகுதி. தகரம் எழுத்துப் பேறு. 'ஆ' எதிர்மறை இடைநிலை. இழுக்காத என்பதின் இறுதி உயிர்மெய் கெட்டு இவ் வினை வரு பெயர் தழுவி எதிர்மறை வினைத் தொகை ஆயிற்று. இப் பெயரெச்சம் இல்வாழ்வான் செயலையே குறித்தாலும் இல்வாழ்க்கை மேல் வைத்து 'இழுக்கா இல்வாழ்வான் இல்வாழ்க்கை' என்ற பொருளில் கூறப் பட்டது.

'அறன் இழுக்கா' என்பது 'அறனினின்று இழுக்காத' எனப் பொருள்படும் ஐந்தாம் வேற்றுமைத் தொகை.

'ஒழுக்கி' என்பது 'ஒழுக்கு' என்ற பிற வினைப் பகுதியின் வினை எச்சம். இ, அவ் வெச்ச விகுதி. இது 'இழுக்கா' என்பது தழுவி; அதுபோலவே இல்வாழ்வான் செயலாய் இல்வாழ்க்கை மேல் வைத்துக் கூறப்பட்டது.

'ஆற்றின்' என்பது 'ஆறு' என்ற பெயர்ச் சொல்லின் எழாம் வேற்றுமை. 'ஆற்று' இதன் வேற்றுமை வடிவம். 'இன்' அவ் வேற்றுமைஉருபு. இவ் வேற்றுமைப் பொருள் ஒழுக்கி என்ற வினை தழுவிற்று.

நோற்பாரின் நோன்மை உடைத்து என்பது வினைப் பயனிலை. இதில் 'உடைத்து' என்பது 'உடைமை' என்னும் பண்படியான குறிப்பு வினைமுற்று, 'து' ஒன்றன்பால் விகுதி. இது இல்வாழ்க்கை என முடியும் தொகையை எழுவாயாகக் கொண்டது.

'நோன்மை உடைத்து' என்பது 'நோன்மையை உடைத்து' என்ற பொருளில் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

'நோற்பாரின்' என்பதில் 'இன்' ஐந்தாம் வேற்றுமை உறழ்வுப் பொருள் உருபு. நோற்பாரைவிட என்பது பொருள். நோற்பார் என்பது வினையாலணையும் பெயர். 'ஆர்' பலர்பால் விகுதி. பகரம் காலப் பொது இடைநிலை. பகுதி நோன் அல்லது நோல் என்பது. பின்னது இக்காலத் திரிபு வழக்கு.

மேலே 'இழுக்கா' என்பது இல்வாழ்வானைத் தழுவி இல் வாழ்க்கை மேல் வைத்துக் கூறப்பட்டது போல, இங்கே நோற்பாரின் என்பது நோன்மையின் மேல் வைக்கப்பட்டு நோற்பாரது நோன்மையைவிட நோன்மை உடையது என்னும் பொருளில் வந்தது.

வி - ரை : அற வாழ்வில் கடவுளின் மையப் பண்புரு வான இல்வாழ்வான் முப்பால் வாழ்வுகளுக்கும் உரியவ னுயினும், இக் குறட்பாவும் இதற்கு முன்னைய குறட்பாவும் அடுத்த குறட்பாவுமாக மூன்றும் (47-49) அவனது பொருள் வாழ்வுத் தொடர்பைச் சிறப்பிப்பன ஆகும். அவ்வழி இக் குறட்பா சமுதாய இன முழுதும் நலமே பரப்பும் தவத் திறத்தைவிட, சமுதாய இன முழுதும் நலமும் நல ஆக்க வலிமையும் பரப்பும் இல்வாழ்வுத் திறமே உயர்வுடையது என்பதை வலியுறுத்துகின்றது.

அற வாழ்வுப் பகுதியின் இறுதிக் குறட்பா பொருள் வாழ்வுப் பகுதி நோக்கிச் சாய்வுற்றது போல, அதிகாரத்தின் பொருள் வாழ்வுக்குரிய பகுதியின் இரண்டாலதாகிய இக் குறட்பாவும் மூன்றாவதாகிய அடுத்த குறட்பாவும் அதிகா ரத்தின் முப்பால் முழுமை வாழ்வுக் கூறுன இறுதிக் குறட்பா நோக்கிச் சாய்வது காணலாம்.

இக் குறட்பா இல்லறத்தின் ஆற்றலுடன் தவத்தின் ஆற்றலை ஒப்பீடு செய்வது இதனாலேயே யாகும்.

ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை என்பது 'மற்றவர்களை யெல்லாம் அற வழியில் முறைப்பட ஒழுகும்படி செய்து, தானும் அற வழியிலிருந்து வழுவாத இல்வாழ்வானின் இல்வாழ்க்கை நெறி' என்று பொருள்படும்.

இங்கே ஆற்றின் என்பதன் முன் அறன் சேர்த்து அறத்தின் ஆற்றின் என்றும்; அதுபோலவே அறன் என்பதன் பின் ஆற்றின் என்பது சேர்த்து அதையும் அறத்தின் ஆற்றின் என்றும் கொள்ளும்படி தொகையின் இரு பகுதிகளும் பாதி பாதியாகக் குறிக்கப்பட்ட சொற்செட்டு வளம் காண்க. அறத்தாற்றின் ஆற்றி, அறத்தாற்றின் இழுக்கா என்ற புணர்ப்பு இதனால் பெறப்பட்டது.

ஒழுக்குதல், இழுக்குதல் ஆகிய சொற்கள் வாழ்க்கை, வழுத்து, வழுக்கு என்ற சொற்களுடன் தொடர்புடையவை என்பதும், அவை முறையே இடையறா இனத் தொடர்ச்சி, நாகரிக வளர்ச்சித் தொடர்ச்சியையும், அவற்றின் இடையறவையும் குறிப்பவை என்பதும் முன் குறட்பா வுரைகளில் சுட்டப்பட்டன.

இலக்கண முறையில் ஒழுக்கி என்பது வினையெச்சமாய் இழுக்கா என்பதனுடன் முடிந்து, இழுக்கா என்பது பெயர் எச்சமாய் இல்வாழ்க்கை என்பது தழுவினாலும், பொருள் வகையில் இரண்டும் ஒழுக்கிய இல்வாழ்க்கை, இழுக்கா இல் வாழ்க்கை என இல்வாழ்க்கை என்ற பெயர் தழுவிய பெயர் எச்சங்களே யாகும். தவிர இரண்டின் வினையையும் நேரே இல்வாழ்க்கையை வினை முதலாகக் கொள்ளாமல், ஒழுக்கிய இல்வாழ்வானின் இல்வாழ்க்கை என்றும், இழுக்கா இல் வாழ்வானின் இல்வாழ்க்கை என்றும் இல்வாழ்வான் மேல் வைத்தே கூறப்பட்டதனை இலக்கணக் குறிப்புரை சுட்டிக் காட்டியுள்ளது.

ஆற்றின் ஒழுக்கி என்பது இல்வாழ்வானின் இயக்கு திறம் குறித்தது. இது அவன் பிறரை அறவாழ்வில் ஒழுகும்

படி செய்யும் சமுதாய ஆட்சித் திறம் ஆகும். அறன் இழுக்கா என்பதோ அவனது இயங்கு திறமே, அற வாழ்வில் வழுவாது ஒழுகும் திறமே கூறிற்று. ஆயினும் இயல்பாக இயங்கு திறம் முன்னும், இயக்கு திறம் பின்னும் கூற வேண்டிய முறைமை பற்றி இங்கே கூறப்பட்டதனுல், பின் வந்த இயங்கு திறமும் இயக்கு திறப் பகுதியாகவே—இயக்குதற்குரிய முன் மாதிரி இயங்கு திறனுகவே கொள்ளவேண்டும்.

இல்வாழ்வானின் இயங்கு திறம் அவனது பொதுவறத்துக்கு அதாவது இல்லறத்துக்கு உரியது. அவனது இயக்கு திறமோ அவனது சிறப்பறத்துக்கு அதாவது துறவறத்துக்கு உரியது. இவ் வதிகாரம் அறத்துப்பாலுக்குரிய பொதுப் பாயிர முதலதிகாரமாதலால், இது இரு அறங்களுக்கும் அதாவது பொதுவறம், சிறப்பறம் இரண்டுக்கும் உரியதாகும். அம்முறையில் இவ் வதிகாரக் குறட்பாக்கள் படிப் படியாக இயங்கு திறத்திலிருந்து இயக்கு திறம் நோக்கி முன்னேறுவதையும்; இக் குறட்பாவில் தெளிவாக, வெளிப் படையாக, இயக்கு திறம் சுட்டப்பட்டதையும் காணலாம்.

இல்வாழ்வானின் இயக்கு திறம் துறவறத்துக்குரியதாயினும், அது துறவறத்தின் தொடக்க நிலேயே யாகும். குறட்பாப் பிற்பகுதிகளும் நோன்பும் தவமும் படிப்படியான துறவறத்தின் முதிர்ச்சித் தளங்கள் ஆகும் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. அத்துடன் இக் குறட்பாவில் இல்வாழ்வின் முதிர்ச்சியான சிறப்பறத்துக்கும், துறவறத்தின் முதிர்ச்சி நோக்கிய நோன்புக்கும் ஓர் அழகிய ஒப்பீடும் காட்டப்படுகிறது. மேலீடாகப் பார்த்தால் இதில் முரண்பாடு இருப்பதாகத் தோற்றக்கூடும். ஆனுல் துறவறம் இல்லறத்தின் முதிர்ச்சி மட்டுமன்று, அது திசை மாறியது என்பது இங்கே கருத்தில் கொள்ளத் தக்கது. இல்லறம் தனி உயிரிடமிருந்து இன நோக்கி அன்பலே பரப்புவது. துறவறம் இனத்திலிருந்து தனி உயிர் நோக்கி அருளலே பரப்புவது. இதனுலேயே இல்லறத்தின் நிறைவாகிய துறவறம், நேரடியான துறவறத் தொடக்கத்தின் வேருனது போலத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கை என்பது குடும்பத்தை மையமாகக் கொண்டு சமுதாயச் சூழலில் அன்பலை பரப்பும் அற வாழ்க்கை யாகும். இல்வாழ்வான் என்ற சொல் வழங்காமல் 'இல்வாழ்க்கை' இங்கே வழங்கப்பட்டதன் காரணம் இதுவே.

நோற்பாரின் நோன்மை உடைத்து என்பது 'தவம் செய்வாரது தவ வலிமையினும் மிகுந்த தவ வலிமை உடையதாகும்' என்று பொருள்படும்.

நோற்பாரின் நோன்மை ஆகிய சொற்கள் இங்கே இந்த மணிவிளக்க வுரையிலே தவம் செய்வார், தவ வலிமை என்று சொற் பெயர்த்துக் கூறப்பட்டாலும், உண்மையில் நோன்பு என்பது தவத்தின் தொடக்கம், தவத்தின் பயிற்சியே யாகும். நோன்பு என்பதற்கு இணையான சமஸ்கிருதச் சொல் (விரதம்) பரிமேலழகராலும் இவ்வாறே பயன்படுத்தப்பட்டு. அவரால் துறவறவியலின் தொடக்கப் பகுதிக்குரிய இயற் பெயராகவும் வழங்கப்பட்டிருத்தல் காணலாம். தவம் கடந்த படியே துறவு என்பதை அவ் வியல்களில் திருவள்ளு வரின் அதிகாரப் பெயரமைதி காட்டும். பரிமேலழகர் பிரிவீட்டுப்படி, தவம் என்ற அதிகாரம் விரதவியலின் மூன்றும் அதிகாரமாகவும், துறவு அவ் வியல் கடந்த ஞான வியலின் இரண்டாம் அதிகாரமாகவும் அமைந்துள்ளன. நோன்பும் தவமும் துறவு நோக்கிய படிகளே என்பதை இது நமக்கு விளக்கவல்லது.

இல்வாழ்க்கையில் தான் அற வழி நடப்பதனுடன் நில்லாமல், பிறருக்கு மூன் மாதிரியாக இருந்து அந்த அறத்தில் சிறிதும் வழுவாது நடந்து, சூழலில் உள்ளவர்களையும் அவ்வாறு அறத்தில் இயங்கும்படி செய்பவன் பொதுவறத்திலிருந்து சிறப்பற நோக்கி முன்னேறுபவன் மட்டுமல்லன்: இயக்கும் ஆற்றலில் நோன்பு தவம் ஆகிய படிகளூடாகத் துறவறமாகிய சிறப்பறத்துக்கு உயர்வுற்றுச் செல்பவனைவிட இயக்கும் ஆற்றலில் மிகுந்தவன் ஆவான் என்பது இக் குறட்பாவின் கருத்து ஆகும்,

நோற்பாரின் நோன்மை உடைத்து என்பது குறிக்கும் சொற்பொருள் கருத்து இதுவே.

துறவறம் இல்லறத்தின் முதிர்ச்சியே யாஞலும் அதுபடி முதிர்ச்சி மட்டுமன்று, தள முதிர்ச்சி என்பதை இது காட்டு கிறது.

தவம் என்பது பிறர் இன்பநாடித் தன் இன்பம் துறத்தல், பிறர் துன்ப நீக்கம் நாடித் தான் துன்பமேற்றல் என்பதே. இயேசு பெருமான், காந்தியடிகள், புத்தர்பிரான், இடபதேவர் ஆகியோர் மேற்கொண்ட நெறியே இது. இது இல்லறத்தாரின் பொதுவற நிலையினும் எவ்வளவோ உயர்ந்தது என்பதை எவரும் ஒப்புவர். ஆனல் இத்தகைய உயர் நெறியைவிடச் சிறப்பற நோக்கிய இல்லறத்தான் நெறி எவ்வாறு உயர்ந்தது?

வள்ளுவர் கருத்தை அறிய இங்கே தற்கால உவமை ஒன்றை நோக்க வேண்டும்.

முதனிலைப் பொறியர் படிக்கு ஓர் ஆளை அமர்வு செய்யும் போது, ஆட்சியாளர் இரண்டு முறைகளைக் கையாள்வது உண்டு. ஒன்று உயர் படிக் கல்வித் தகுதி உடைய ஓர் இளைஞனை நேராக அமர்த்திவிடுவது, மற்றது தாழ்படிக் கல்வித் தகுதியை இளமையில் பெற்று அனுபவ முதிர்வுற்றவரை அமர்வு செய்வது. முன்னதில் அறிவுச் சிறப்பு இருந்தாலும், பின்னதிலே அனுபவச் சிறப்பு மிகுதி என்பது ஒருதலை.

சிறப்பறத்தை நேரடியாகக் கொண்ட துறவி இனப் பற்றடிப்படையில் சமுதாயப் பற்றும், சமுதாயப் பற்றடிப் படையிலேயே தனி மனிதப் பற்றும் உடையவன். அவன் அருள் அன்பினும் உயர்ந்த தெய்விகப் பண்பே. ஆயினும் தனி மனிதனிடமிருந்து தொடங்கி, படிப்படியாக விரிவுற்று, வளர்ந்து சென்று அதே படியை அடைந்த இல்லறத்தானின் அன்புப் பாசக் கனிவு அந்த அருளினும் அனுபவ ஆற்றல் மிக்கத யாகும் என்று காணலாம்.

இது மட்டுமன்று.

பிறருக்காகத் துன்பமேற்றுப் பிறர்க்கு நலம் செய்பவன் உலக நலன் வளர்க்கலாம். ஆனல் நலன் வளர்க்கும் வலிமை

அவனிடமே வளர்கிறது. பிறரை இயக்கி இல்லறத்தில் வாழ்பவன், பிறருக்கு நலம் செய்வதுடன் நிற்கவில்லை. நலத்தை உலகெலாம் பரப்புவதுடன், நலஞ் செய்யும் ஆற்றலையும் அவன் எங்கும் பரப்புகிறான்.

பல மாணவர்களைத் திறம்பட்ட மாணவர்களாக்கும் ஆசிரியரைவிட, சில மாணவர்களையே திறம்பட்ட ஆசிரியராக்கிவிடும் ஆசிரியரின் கல்விப் பணி வளமிக்கதாதல்போல, அறச்செயல் பரப்புபவன் ஆற்றலைவிட அறத்தையே பரப்புபவன் ஆற்றல் பெரிதாதல் வெளிப்படை.

சமயத் துறையில் கருவிலே திருவுடைய ஞானசம்பந்தரின் மகன்மை நெறிப் பத்தி தரத்தில் உயர்ந்ததாயினும், கனிந்துருகிச் செவ்வி பெறும் அப்பரின் தொண்டு நெறிப் பத்திமையும், நைந்து நைந்துருகிச் செம்பாகமுறும் மாணிக்க வாசகர் திருவடி நெறிப் பத்திமையும் பிறரை இயக்கும் தன்மையில் சிறந்தவை யாகும். ஆழ்வார்களுள் நம்மாழ்வாரின் தெய்விக அறிவு நெறிக்கும் பெரியாழ்வாரின் பாச நெறிக்கும் இடையேயும் இதே வேறுபாடு காணலாம்.

நோற்பாரின் நோன்மையைவிட நோன்மையுடையது என்று கூறாமல். நோன்மையை நோற்பார்மேல் ஏற்றிச் சொன்னதனால், இல்வாழ்வானின் இயக்கும் திறத்தின் வலிமைதான் பெரிது, அவன் படியும் தளமும் பெரிதன்று என்பது குறிக்கப்பட்டது.

திசை மாறிய துறவறமே அகப்பால் சார்ந்தது. இல்லறத்தானின் இயக்கும் திறம் சமுதாயத்தைத்தான் இயக்கும், துறவறத்தானின் இயக்கும் திறமோ இனம் இயக்குவதாகும்.

இக் குறட்பா சமுதாய வாழ்வுக்கூறு சார்ந்ததாகலின், இங்கே சமுதாய ஆற்றலே குறிக்கப்பட்டு, தவத்தினும் இல்லறத்தின் இயக்காட்சியாண்மைத் திறம் உயர்த்திக் கூறப்பட்டது.

சிறப்புரை: இல்லறம் இன்பத்தில் பிறந்து அன்பலை பரப்புவது. தன்னலத்தில் ஊன்றிப் பொதுநலம்

நோக்குவது. துறவறமோ இன்பத்தை நோக்கி அருளலை பரப்புவது. அது பொதுநலத்தில் ஊன்றித் தனி நலம் காண்பது. மூன்னது பெரும்பான்மையோர்க் குரியது மட்டுமென்று. இன்பத்தில் ஊன்றிய காரணத்தாலும் தன்னலத்தில் ஊன்றிய காரணத்தாலும் சமுதாய வாழ்வில் பின்னதனினும் இயக்கும் ஆற்றல் வாய்ந்தது ஆகும்.

பொருள்வளம் : *(1)* இலக்கண வழுவமைதி அல்லது இலக்கண முரண்பாட்டு மூலமே கூறுதனவற்றை யெல்லாம் குறிப்பில் தெரிவிக்கும் தொனி வளத்தை இக் குறட்பாவில் மிகுதியாகக் காண்கிறோம். இவற்றுள் இரண்டு வழுவமைதி வழக்குகள் விளக்கவுரையிலேயே சுட்டப்பட்டன. இழுக்கா இல்வாழ்க்கை என இல்வாழ்வானின் இழுக்குதல் இல்வாழ்க்கை மீதேற்றிக் கூறப்பட்டதும், நோற்பாரின் நோன்மை என நோன்மை நோற்பார் மீதேற்றிக் கூறப்பட்டதுமே அவ் வழக்குகள். இவற்றுள்ளும் பின்னதன் வளம் மட்டுமே விளக்கவுரையில் ஆய்ந்து கூறப்பட்டது. இல்வாழ்வானின் இயக்கு திறத்தின் வலிமைதான் துறவியின் தவத்தின் வலிமையினும் பெரிது, அவன் படியும் தளமும் பெரிதன்று என்பதும்; வலிமையிலும் சமுதாய ஆற்றலிலேயே இல்லறத்தான் உயர்வுடையான், இன ஆற்றலிலன்று என்பதும் அங்கே இரண்டாவது வழுவமைதிக்குக் கூறப்பட்ட விளக்கம் ஆகும்.

அறன் இழுக்கா இல்வாழ்வானின் இல்வாழ்க்கை என இல்வாழ்வான் இழுக்காப் பண்பு இல்வாழ்க்கைமீது ஏற்றிச்சொல்லப்பட்டதன் நோக்கமும் இதுவே. வலிமை மிகுதி இங்கே இல்வாழ்க்கைக்கே யன்றி இல்வாழ்வானுக்கன்று. துறவியின்

தவம் பிறர்க்கு நலனும், தவம் செய்வோனுக்கே வலிமை அதாவது இனப் பயனும் தரும். இல்வாழ்வானின் இயக்கற ஆற்றலோ இரு சாரார்க்கும் நலமும், இரு சாரார்க்கும் வலிமையும் பகிர்ந்தளித்துச் சமுதாயத்தில் பரப்புகிறது. இரு சார்பிலுமே அது சமுதாய வலிமையாக ஒரு தலைமுறை யளவில் நிற்குமே யன்றி, சமுதாய எல்லை கடந்து அதாவது தலைமுறை கடந்து பரவ மாட்டாது. இரண்டாவது வழுவமைதியின் வளம் இதுவே.

(2) 'இராமன் இராவணனை வென்றான்' என்று பெருமையாகக் கூறும் வாசகத்தில் வென்ற இராமனே சிறப்பிக்கப்பட்டாலும் தொனிப் பெருமை இராவணன் மீதே அமையும். அதுபோல, இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து என்பதில் நோன்மை மிக்கது இல்வாழ்க்கை யாயினும், தொனிப் பொருளில் சிறப்புடையவர் நோற்பாரே யாவர். நோற்பாரின் என்பது மூவசையாய், நேரசை நெடில்களாய் எடுத்திசைத்ததனால் இது இன்னும் வலியுறுத்தப்படுகிறது. அத்துடன் ஆற்றின் ஒழுக்குதல், அறன் இழுக்காமை ஆகிய பண்படைச் சிறப்புடைய இல்வாழ்க்கையே நோன்மையுடையது என்று கூறப்படுவதனாலும் நோற்பார்க்கே சிறப்பு எய்திற்று.

இல்வாழ்க்கை என்ற ஒன்றன்பாற் பண்புடன் நோன்மை என்ற அதே வகை ஒன்றன்பால் பண்பு ஒப்பிடப்படாமல், உயர்திணையாகிய நோற்பாரே ஒப்பிடப்பட்டதனால், சமுதாயத்தில் மட்டுமே இங்கே கூறப்பட்ட இல்வாழ்க்கைச் சிறப்புப் பொருந்தும் என்பது பெறப்பட்டது.

நோற்பாரின் என்பதன் குழிவோசை நோற்பாரின் பொது உயர்வையும், இயக்கும் ஆற்றலில் சமுதாயத்தில் மட்டுமே அவர்கள் குறைபடுவதையும் காட்டிற்று.

(3) குறட்பாவின் மிக நீண்ட சீர் அறனிழுக்கா (கருவிளங்காய்) என்பது. ஆற்றின் ஒழுக்குதலினும் அறனிழுக்காமையே செயற்கரும் செயலாகும் என்பதை இது நினைவூட்டுகிறது. அதற்கு அடுத்த நீண்ட சீர் நோற்பாரின் என்பதே. அறனிழுக்காத் திறமே நோற்பாரின் நோன்மைக்கு மேற்பட்ட நோன்மையின் தன்மையுடையது என்பதையும், பிறரை ஆற்றின் ஒழுக்குவதற்குக் காரணமாயுள்ள திறன் இதுவே என்பதையும் இது குறிப்புப் பொருள் வளமாகக் கொண்டது ஆகும்.

(4) இக் குறட்பா இல்லறமும் துறவறமும் சீர்தூக்கி முன்னதன் தனிச் சிறப்பு வலியுறுத்துவதை எவரும் எளிது காண்பர். அடுத்த குறட்பா மீண்டும் இவற்றை ஒப்பிட்டு இரு அறங்களும் ஒன்றே, ஒரு நிலையே என்பதை வலியுறுத்திச் சிறப்பறத்தின் தனிச் சிறப்பான திசை வேறுபாட்டையும் எடுத்துக் காட்டுவது காணலாம்.

இரு குறட்பாக்களும் அதிகாரத்தில் முப்பாற்கூறு எனும் மேடையேறும் இரு படிகளாய் அமைந்துள்ளதும் கூர்ந்து காணத் தக்கதாகும்.

தனிக் குறிப்புக்கள்: (1) ஆற்றின் ஒழுக்கி என்பதற்கு இம்மணி விளக்க வுரையைப் போலவே 'பிறரையும் நன்னெறியிலேயே ஒழுகப் பண்ணி' என்று உரை கூறியவர்கள் மணக்குடவர், பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார்,

புலவர் குழந்தை ஆகியோர். ஆயினும் மணக்குடவர் இப் புத்துரைகளுக்குச் சொல்லால் வழி காட்டினும், கருத்தில் தடுமாற்றமுடையவரே என்பதனை, 'ஒழுகப்பண்ணலாவது அவர்க்கு வேண்டுவன அமைத்தல்' என்ற அவர் விளக்கவுரை காட்டுகிறது. இவ்விளக்கம் கூறுத புத்துரைகளே மேம்பட்டன என்பது தெளிவு.

பரிமேலழகரும் அவரைப் பின்பற்றிப் புலவர் ந. சி. கந்தையாவும் 'தவம் செய்வாரைத் தத்தம் நெறியின் கண் ஒழுகப் பண்ணி' என்று உரை செய்துள்ளனர். இங்கும் உரையின் சொல்லழகை விளக்கவுரை குறைத்துவிடுகிறது என்னலாம். ஏனெனில் 'பசி முதலிய இடையூறு நீக்கலின்' என்பது அவரது விளக்கம் ஆகும். பேராசிரியர் இலக்குவனர் உரை இதனின் மிகுதி வேறுபட்டதன்று, ஆனல் அது பகுத்தறிவு நோக்கி முன்னேறியுள்ளது, 'இல் வாழ்வில் செல்லாத பிறரையும் அறநெறியில் ஒழுகச் செய்து' என்பது அவர் உரை.

கவிஞர் இராமலிங்கனர் 'ஆற்றொழுக்குப்போல் முறை தவருமல் நடத்தி' என்ற புதுப்பொருள் கூறினர். 'கடமையின் வரிசைக் கிரமம் தவருமல் நடத்தி' என்ற அவர் விளக்கம் இன்னும் புதுமைச் சுவை உடையது. அறன் இழுக்கா என்பதற்கும் அவர் 'தர்மம் கெடாமல்' என்று பொருள் உரைத்துள்ளார்.

பரிதியார் உரை இங்கே பொருள் விளக்கமற்றது. 'அறத்தின் மேலாகிய இல்லறத்தின் மேல் நின்று தருமத்தைக் கைவிடாதவர்க்கு' என்பது முதல் குறட்பாப் பகுதிக்கு அவர் பொழிப்பு ஆகும்.

(2) 'நோற்பாரின் நோன்மை உடைத்து' என்பதற்குப் பரிமேலழகர், 'அத்தவம் செய்வார் நிலையினும் பொறை உடைத்து' என்று பொழிப்பு வழங்கி, 'நோற்பார் நிலைக்கு அவர் தம்மையுற்ற நோயல்லது பிறரது நோயும் பொறுத்தல் இன்மையின், நோற்பாரின் நோன்மையுடைத்து என்ருர்' என்று விளக்கம் தந்தார். இவ்விளக்கம் அழகியதேயாயினும் திருவள்ளுவர் நோன்பு தவ இலக்கணங்களுக்கு

மாறானது. ஏனெனில், வள்ளுவத் தவம் பிறர் துன்பம் தவிர்க்கத் தான் துன்பம் ஏற்றலேயகும் (216).

ஆங்கில மொழிப் பெயர்ப்பாளர் ஆர். ட்ரூவின் பொருளும் இதுவே.

'வலியுடையது' என்று மணக்குடவரும்; 'வல்லமையுடைய வாழ்க்கை' எனப் பேராசிரியர் முனைவர் மு. வரதராசனாரும் பொருள் கொண்டனர். கவிஞர் இராமலிங்கனார், 'வலியுடையது' என்றே கூறி, விளக்கவுரையில் 'தவம் முதலிய மற்ற முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் மேற்கொள்ள வேண்டிய சகிப்புத்தன்மையைக் காட்டிலும் அதிகச்சகிப்புத் தன்மை உள்ளது' என விரிவுரை தந்துள்ளார். மலையாள மொழிப் பெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் அவர்களின் விளக்கமும் இதுவே.

புலவர் ந. சி. கந்தையாவும், இந்தி மொழிப் பெயர்ப்பாசிரியர் முனைவர் பேராசிரியர் சங்கரராஜு நாயுடு அவர்களும் பெருமை உடையது (மஹான் ஹோதா ஹை) என்றே கொண்டனர்.

'பிரமசாரி, வானப்பிரத்தன், சன்னியாசி இம் மூவரும் நிகரல்லர்' என ஆசிரம அடிப்படையில் உரை வகுத்தார் பரிதியார். ஆசிரமங்களில் ஒன்றினைக் கொண்டு கருத்துச் சீர்திருத்தம் செய்தவர் போலப் பேராசிரியர் இலக்குவனார். 'பற்றினை விடத் தவஞ்செய் வார்களை விடத் தவச் சிறப்புடையது' என்றார்.

49. இல்வாழ்க்கையே அறத்தின் முழு உருவம் : பிறரைக் குறை கூறாத இல்வாழ்க்கை அதன் சிறப்புருவம்.

> **அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை : அஃதும்**
> **பிறன் பழிப்பது இல்ஆயின் நன்று.**

பொ-ரை : *அறம் என்று விரிவாகக் கூறப்படுவன எல்லாமே இல்வாழ்க்கையில் அடங்கியதாகும் : அந்த*

இல்வாழ்க்கையும் மற்றவரது குறை காணும் இயல்பு இல்லாததாய் விட்டால் மிகவும் சிறப்புடைய அறம் ஆகும்.

க-ரை : இல்வாழ்க்கைக்குப் புறம்பாக அறம் என்ற ஒன்று கிடையாது. ஆயினும் எல்லார் குற்றத்தையும் தம் குற்றமாகக் கொண்டு சமுதாய, இன வாழ்வுகளை யெல்லாம் தன் வாழ்வாகக் கொண்டவனது அறம் சால்பு மிக்க சிறப்பறம் ஆகும்.

இலக். கு : இக் குறட்பாவின் வாசகங்கள் இரண்டு. இதன் சொற்கள் நான்கு.

அவையாவன :

(அ) 1. அறன் எனப்பட்டதே (இது முதல் வாசக எழுவாய்).

2. இல்வாழ்க்கை (இது முதல் வாசகப் பெயர்ப் பயனிலை).

(ஆ) 1. அஃதும் (இது இரண்டாம் வாசக எழுவாய்).

2. பிறன் பழிப்பது இல்ஆயின் நன்று (இது இரண்டாம் வாசகப் பயனிலை).

இக் குறட்பாவில் பட்டதே, இல் வாழ்க்கை ஆகிய இரு சீர்களே எடுத்திசைக்கின்றன. வல்லெழுத்துக்கள்கூடப் பா முழுவதும் மெல்லோசைப்படும்படி குறட்பாவின் சம நிரப்பான படுத்தலோசை அமைந்துள்ளது காணலாம். விள முன் நேரும், காய் முன் நேருமன்றி மா முன் நிரையாகிய தளை வராமை இக் குறட்பாவின் வெண்டளைச் சந்தத்துக்கு ஒரு தனித் தன்மை கொடுக்கிறது.

அறன் எனப் பட்டதே என்பது முதல் வாசக எழுவாய்ப் பெயர். இதில் ஏகாரம் தேற்ற ஏகாரம். இங்கே பட்டது முழுவதுமே என முற்றுப் பொருள் குறித்தது. எனப்பட்டது என்பது என்

என்ற அறிமுக வினைப்பகுதி யடியான செயப்படு வினை ஒன்றன்பால் வினையாலணையும் பெயர். 'படு' செயப்படு பொருண்மை' குறித்த துணை வினைப் பகுதி. 'என' என்னும் வினை எச்சத்துடன் துணை வினையின் இறந்த கால வினையாலணையும் பெயராகிய பட்டது இணைந்து ஒரு சொல்லாய் நின்றது. 'அறன்' என்பதும் 'எனப் பட்டது' என்பதும் ஒரு பொருள் குறித்த இரு பெயராய்த் தொகைப் பட்டது.

இல்வாழ்க்கை என்பது மேற்சொன்ன தொகையை எழுவா யாகக் கொண்ட முதல் வாசகப் பெயர்ப் பயனிலை. இல்லத்தில் வாழப் படும் வாழ்க்கை என இது ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. வாழ்க்கை என்பது 'கை' விகுதி பெற்ற தொழிற் பெயர்.

அஃதூஉம் என்பது இரண்டாம் வாசக எழுவாய். உம்மை சிறப்பில் வந்தது. அஃது என்பது அது எனும் சுட்டுப் பெயர் 'உம்' என்ற உயிர் முதல் வருமொழி முன் அடைந்த திரிபு. இச் சுட்டுப் பெயர் இல்வாழ்க்கை என்ற முன் வாசகப் பெயரைச் சுட்டிற்று.

பிறன் பழிப்பது இல் ஆயின் நன்று என்பது இதன் இறுதிச்சொல்லான நன்று என்பதை ஒப்ப வினைச்சொல்லாய். இரண்டாம் வாசகத்தில் அஃதும் என்ற எழுவாய்க்குரிய பயனிலையாய் நின்றது.

நன்று என்பது நன்மை என்னும் பண்படியான ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. 'று' ஒன்றன்பால் விகுதி. 'து' என்ற விகுதி 'று' ஆகப் புணர்ப்பில் திரிந்தது என்றலும் பொருந்தும்.

ஆயின் என்பது காரணம் சுட்டிய வினை எச்சம். இன் அவ் வெச்ச விகுதி. 'ஆ' பகுதி. இப்பகுதி துணை வினையாய், இல் என்ற குறிப்பு வினை முற்றுடனிணைந்து இணை வினைப் பகுதி யாயிற்று. இல் விகுதியற்ற வினைமுற்று. பழிப்பது என்பது 'பழி' என்னும் வினைப் பகுதியடியான ஒன்றன்பால் வினைமுற்றுருவான தொழிற் பெயர். இது 'இல்' என்ற வினைமுற்றின் எழுவாயாய் அவ்வினையுடன் தொகைப்பட்டது. பிறன் பழிப்பது என்பது

பிறனைப் பழிப்பது என இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆகும். பிறன் பழிப்பது என்பது ஒரு தொகை மட்டுமன்று, ஒரு சொல் என்னலாம். அவ்வுருவில் இரண்டாம் வேற்றுமைத் தொகையாக அது இன்றும் தமிழகத்தில் வழங்கும் பேச்சுவழக்கு மரபு ஆகும்.

வி - ரை : அறவாழ்வில் கடவுளின் மையப்பண்புருவான இல்வாழ்வான் முப்பால் வாழ்வுகளுக்கும் உரியவனாயினும், இக்குறட்பாவும் இதற்கு முந்திய இரண்டு குறட்பாக்களும் (47—49) அவனது பொருள் வாழ்வுத் தொடர்பைச் சிறப்பிப்பனவாகும். அவ்வழி இக்குறட்பா இல்லறமே அறம், இன முழுதளாவிய அன்புடையதாகல் அதுவே சிறப்பறமாகும் என்று விதந்தோதுகின்றது.

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்பதன் பொருள், 'அறம் என்று விரிவாகக் கூறப்படுவன எல்லாமே இல்வாழ்க்கையில் அடங்கியதாகும்' என்பதாகும்.

அறன் எனப் பட்டதே என்பதில் தேற்ற ஏகாரம் இங்கே எல்லாமே என்ற முழுமைப் பொருள் உணர்த்துவதாகும் என்பது இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டது. அத்துடன் அறன் எனப்பட்டதே என்பதில் எனப்பட்டது என்ற அறிமுகச் சொல் இல்லாமலே அத்தொகை அறம் என்ற பொருளைத் தந்துவிடுமாதலால், எனப்பட்டது என்ற மிகையே விரிவாகக் கூறப்படுவன என்ற பொருளைச் சுட்டிற்று, அற முழுமையும், அறத்தின் வகைகளாகக் கூறப்படும் பொதுவறமாகிய இல்லறம், சிறப்பறமாகிய துறவறம் ஆகிய இரண்டும் சேர்ந்த அறத்தின் மொத்தத் தொகுதியே என்ற பொருள் இதனால் பெறப்படுகிறது.

இல் வாழ்க்கை என்பது இல்லத்தில் இருந்துகொண்டு சமுதாயத்தில் வாழும் வாழ்வு என்ற பொருளைத் தருவது. இங்கே அது அறமாகக் கூறப்பட்டதனால், அது குடும்பத்தில் அன்பு ததும்பிச் சமுதாயத்தில் நேர்மை கலந்த அன்பலையாக, அதாவது அற அலையாகப் பரவும் பண்பு என்ற பொருள் தந்தது. இங்கே இல்வாழ்க்கை அறம் என்பது

பொதுவறம், சிறப்பறம் ஆகிய இரண்டும் சேர்ந்த முழுமையையும், சிறப்பறத்தின் அடிப்படையாகிய பொதுவறத்தையும் ஒருங்கே சுட்டி நின்றது. குறட்பாவின் பிற்பகுதி சிறப்பறத்தையே தனிப்பட விரித்துரைப்பது காணலாம்.

அஃதும் என்பது அந்த அறம் அல்லது அந்த இல் வாழ்க்கையாகிய அறம் என்று பொருள்படும். இங்கேயும் மேற்கூறப்பட்ட முழுமை யறமும், அடிப்படை அறமும் ஒருங்கே பொருந்துதல் காணலாம்.

பிறன் பழிப்பது இல்ஆயின் என்பது மற்றவர்களைக் குறை கூறும் பண்பு இல்லாதிருக்குமானால் என்று பொருள்படும்.

பிறன் என்பது சமுதாயத்தில் உடன் வாழ்பவரைச் சுட்டிற்று.

பழிப்பது என்பது இங்கே குறை காண்பதைக் குறிக்கும்.

சமுதாயத்தில் எந்தச் செயலும் ஒரு தனி மனிதன் செயலன்று. சமுதாயமும் இனமும் கூடிய செயலேயாகும். செயலின் வெற்றி தோல்விகளில், நலந்தீங்குகளில், இன்ப துன்பங்களில், செய்பவனுக்கு எப்படி பங்கு உண்டோ, அது போலவே அவன் சமுதாயத்துக்கும் இனத்துக்கும் பங்கு உண்டு. அறச் செயல், பழிச் செயல் ஆகிய இரண்டும் இனச் செயல்களாதலால், இவற்றின் வகையில் இது இன்னும் பன்மடங்கு மெய்ம்மையாகும். இந்த உண்மையை அறிந்த அறவோன் தான் அறவினையைத் தன்னால் இயன்ற முழு அளவும், உறுமிகுதியான அளவும் செய்வதுடனும் பிறரையும் அவ்வாறு செய்யும்படி தூண்டுவதனுடனும் அமைகின்றான். திருத்தும் முயற்சியில் இத்தகைய தூண்டுதல் வேறு எதுவும் பயன் தராது என்று தெரிந்து, பிறர் தவற்றையும் தன் தவருகவே கொண்டு தன் முயற்சி ஒன்ருலேயே திருத்தப் பாடுபடுகிருன்.

இத்தகு நிலையே துறவு நிலை. இல் வாழ்வான் இதைச் செய்தால், அவனும் துறவோனுக்கு ஒப்பானவனாய் விடுகிருன் (துறவு நிலையடைந்த இல் வாழ்வானுக்கும் துறவோனுக்கும் உள்ள ஒரே வேறுபாடு திசை வேறுபாடே

என்பது இவ்வுரையில் பலவிடங்களிலும் விளக்கப்பட்டுள்ளது).

பழிப்பது இல் ஆயின் என்பது இல்லற, துறவற வேறுபாட்டுப் பண்பு சுட்டிக்காட்டுவதாகும். ஏனெனில், தன் கடமையை ஆற்றிவிட்டுப் பிறர் கடமையை எதிர்நோக்குபவன் இல்லறத்தான். பிறர் கடமையை எதிர்பாராது தன் கடமை ஆற்றுவதுடன், பிறர் தவற்றையும் தானே தனதாக ஏற்று அதன் விளைவையும் தானே மேற்கொள்ள விழைபவன்தான் துறவோன்.

பகவத்கீதை கூறும் பலன் எதிர்பாராக் கடமை இதுவே.

இயேசு பெருமான் வாழ்வில் சிலுவை குறிக்கும் பண்பும் இதுவே.

நன்று என்பது 'அறன் எனப்பட்டதே' என்பதற்கு மேற்சென்று, அந்தப் பொதுநிலை அறம் அல்லது முழுமை அறத்தினும் மேம்பட்டது, சிறப்பறமாகிய துறவறத்துக்கு ஒப்பானது என்று பொருள் படுவது ஆகும்.

> சிறப்புரை: இல்லறத்தினும் சிறந்தது இல்லறமே, வேறு எதுவும் அன்று. தன்னுரிமையும் தன்னலமும் பேணிக் கொண்டே உலக உரிமைக்காகவும் உலக நலனுக்காகவும் பாடுபடுவது, தனக்கும் பிறர்க்குமாக வாழ்வதே இல்லறம். உலக உரிமை, உலக நலம் ஒன்றேகுறிக் கொண்டு, தனக்கென வாழாப் பிறர்க்குரிமை யாண்மையே அவ்வில்லறத்தினும் சிறந்த இல்லறமாகிய சிறப்பறம் அல்லது துறவறம்.

பொருள்வளம்: (1) அடிப்படை அறமாகிய இல்லறத்தின் தனிச் சிறப்பைக் கூறிற்று முந்திய குறட்பா. அச் சிறப்பைக் குறைக்காமலே, அதனினும் சிறப்புடையது சிறப்பறம் எனக் கூறுவது இக் குறட்பா. அவற்றிடையே யுள்ள சிறு மயிரிழை வேறுபாட்டை

யும்—திசை வேறுபாட்டையும்—குறிப்பது இது. இங்ஙனம் உச்ச உயர்தரப் பொதுவறத்தைத் துறவு நிலையுடன் போட்டியிட வல்ல உடனொப்பான அறமாக இல்லறம் என ஒரு புறமும், சிறப்பறத்தை அதனினும் சிறப்புமிக்க அறமாகத் துறவறம் என மற்றொரு புறமும் சரிசம நிலையுடன் கூறும் இக் குறட்பா, அதற்கேற்ற முறையில் மா முன் நிரை வராத தளைச் சிறப்புடனும், வல்லோசைகளும் மென்மைப் படுத்தப்பட்ட ஓசைச் சிறப்புடனும் அமைந்துள்ள பொருத்தம் பொருளுடன் சந்தமும் இசைவித்து வாசித்தே காணத் தக்கது ஆகும்.

(2) முன் குறட்பாவின் பொருள்வளப் பகுதியில் சுட்டியபடி, முன் குறட்பாவும் இக் குறட்பாவும் பொதுவறம் சிறப்பறம் இரண்டினையும் ஒப்பிட்டு இரண்டின் தனித் தனிச் சிறப்புக்கள் கூறி இரண்டையும் சமநிலைப் படுத்திக் காட்டுவதுடன், அதிகாரத்தின் முப்பால் வாழ்வுக் கூறு சிறப்பிக்கும் அடுத்த குறட்பாவாகிய மேடைக்கு இட்டுச் செல்லும் இரு படிகளாக அமைந்துள்ளன என்பது கூர்ந்து காணத் தக்க செய்தி ஆகும்.

(3) இக் குறட்பாவில் பட்டதே, இல்வாழ்க்கை ஆகிய இரண்டு சீர்களே எடுத்திசைப்பன. இல்வாழ்க்கை இங்கே எடுத்திசைப்பதும், அது இல்லறம் எனப்படாமல் இல்வாழ்க்கை என்றே கூறப்படுவதும், துறவறமாகிய சிறப்பறம் எவ்வகைப் பெயராலும் சுட்டப்படாமல் வாளா 'நன்று' என்றே குறிக்கப் படுவதும் இரண்டு அறங்களும் இல்வாழ்க்கை என்ற ஒரே தளத்தின் மீது அமைந்த அறமே என்பது சுட்டுகின்றன.

பட்டதே என்பது ஒரு சீராயினும் ஒரு சொல் லன்று, சொல்லின் சிறப்புறுப்புக்கூட அன்று. எனப் பட்டதே என்ற அறிமுக வினையிலும் அது வாளா செயப்படு வினை குறிக்கும் துணை வினையே. இங்ஙனம் அறிமுக வினையின் துணையுறுப்பு எடுத்திசைப்பதன் மூலம், 'பட்டதே' என்பது பட்டப் பகல், பட்டாங்க மாக என்ற சொற்களின் பகுதியான 'படு' என்பதன் தொனியை நினைவூட்டி, இல்வாழ்க்கை முழு அறமும் அடிப்படை அறமும் மட்டுமன்று, அதுவே மிகப் பெரும்பாலாருக்குரிய அறம் என்று குறித்துக் காட்டு கிறது.

(4) அறத்துப்பாலின் பாயிர முதல் அதிகாரமான இவ் வதிகாரத்தில் பிறன் பழிப்பது இவ்வளவு முனைப் பாகச் சுட்டப்படுவானேன், அதற்கும் துறவறத்துக் கும் என்ன தொடர்பு என்று பலர் எண்ணுதல் இயல்பு. உரையாசிரியர்கள் இதன் பொருளைப் பிறனைப் பழிப்பது என்று கொள்ளாமல், பிறன் ஒரு வன் இல்வாழ்வானைப் பழிப்பதற்குரிய நிலை என்று கொண்டதற்குக் காரணம் இத்தகைய இயல்பான எண்ணமே யாகும்.

இல்லறத்தான் சமுதாயத்தின் ஓர் உறுப்பு. துற வறத்தான் இனத்தின் ஓர் உறுப்பு. சமுதாயத்தில் உயர்வு தாழ்வு, நன்மை தீமை, நேர்மை நேர்மை கேடு, இனியன இன்னாதன என்பவற்றுக்கு வேறு பாடும் மதிப்பும் உண்டு. உண்டாக இருத்தல் இன்றி யமையாதது. இந்த வேறுபாடு தீர்ந்த அன்றே இல்லறம் துறவறப் பண்பு பெற்று உண்மைத் துறவற மாய் விடுகிறது.

உபநிடத புராணக் கதைகள் பல தற்பற்றற்ற, தான் பிறர், தனது பிறரது என்ற வேறுபாட்டுணர்வு அற்ற தன்மையே துறவறம் என்பதை மெய்ப்பிக்கின்றன. உலகில் தொழில் செய்து கொண்டே உயர் துறவிகளாக வாழ்ந்து, துறவிகளும் வெள்குறும் உயர் அறிவுப் பண்பும் ஆற்றலும் உடைய இல்லறத்தார் பலர், சனகர் முதலிய உபநிடத கால அரசர், நாட்டு ஆட்சியுடன் உயர் துறவுணர்வும் இணைவாகக் கொண்டிருந்தனர்.

புறப் பொருள் துறப்பைவிட, புறப் பொருள் கவர்ச்சியிடையே அகத் துறவுப் பண்பு கொண்டவனுயிருத்தலே உண்மைத் துறவுக்குரிய சான்றுத் தேர்வு என்பதை ஞான வாசிட்டத்தின் சுகர் கதை காட்டுகிறது. சுகரைச் சோதிக்கும்படி சனகன் அவரை ஏழு நாள் எல்லா இன்பமும் அளித்து அரச போகத்தில் மிதக்க விடுகிறன். ஏழு நாள் உணவு முதலியன அளிப்பதுகூட மறந்தவன் போலிருந்து விடுகிறன்.

சுகரின் நடுநிலைமையை ஞான வாசிட்ட ஆசிரியர்,

'குற்றமும் குணமும் நாடான், குளிர்நிறை மதியம் ஒத்தான்'

என்று வருணிக்கிறார்.

திருவள்ளுவர் 'பிறன் பழிப்பதில் ஆயின்' என்று இங்கே துறவறம் கூறும் பகுதியில் குறிப்பிட்டது, இவ் வேதாந்த நூல் சுட்டிக் காட்டிய 'குற்றமும் குணமும் நாடாப் பண்பே' யாகும்.

பகவத் கீதை சிறப்பிக்கும் 'சமாதி' நிலையும் இதுவே.

திருவள்ளுவர் கூறும் துறவறப் பண்பு குற்றமும் குணமும் நாடாப் பண்போ, 'சமாதி' நிலையோ மட்டு மன்று. அது இனக் குறிக்கோளுடைய பண்பு. இனம் ஒன்றாகக் கருதுவதனாலேயே, அவன் குற்றம் குணம் நாடாது இன நலம் பெருக்குவது ஒன்றிலேயே கண் ணும் கருத்துமாய் இருக்கிறான்.

(5) இக் குறட்பா இரு அறங்களும் ஒன்றே என்பதை நாட்டி, ஒன்றன் சிறப்பே மற்றது என்றும், திசை வேறுபாடே அச் சிறப்புக்குக் காரணம் என்றும் கூறுகிறது. முன் குறட்பாவும் இரு அறங்களையும் ஒப்பிட்டுக் கூறிற்று. இரண்டின் ஒப்பீடும் இவ்வாறு சரிசமநிலைபடக் கூறப்பட்டு, அறத்தின் முப்பாற் கூறு களும் கூறும் அடுத்த குறட்பாவுக்கு வாயிலானது காணலாம்.

தனிக்குறிப்புக்கள்: (1) 'அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை' என்பதற்குப் பரிமேலழகர், 'இருவகை அறத் தினும் நூல்களால் அறம் என்று சிறப்பித்துச் சொல்லப் பட்டது இல் வாழ்க்கையே' என்றார். புலவர் ந. சி. கந்தையா வின் உரையும் இதுவே.

மற்றையோர் பொருளும் அவ்வளவு மாறுபட்டதன்று. 'அறன் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல் வாழ்க் கையே' என்ற மணக்குடவர் உரையே கிட்டத்தட்ட அவர் கள் அனைவர்க்கும் பொருந்துவது என்னலாம். பேராசிரியர் இலக்குவனார், 'அறநெறிக்குரியது என்று சொல்லப்படுவது' என்று சொல் மாற்றம் செய்துள்ளார்.

(2) அஃதும் என்பதனைப் பரிமேலழகரும் பேராசிரியர் இலக்குவனாரும். 'ஏனைத் துறவறமோ எனின் அதுவும்' என்று கொண்டனர். இவர்கள் முதலடியில் எனப்பட்டதே என்பதில் வரும் ஏகாரத்தை இல்வாழ்க்கை என்ற சொல்லின் இறுதிக்கு மாற்றி அதனைப் பிரிநிலை ஏகாரம் என்றும் கொண்டனர்.

இதனால் 'அறம் எனப்படுவது இல் வாழ்க்கைதான், மற்றத் துறவற மன்று' என்ற பொருளை அம் முதலடிக்குள் கருத்தாகக் கண்டனர். இதன் பயனாகவே பரிமேலழகர், 'ஏகாரம் பிரி நிலைக் கண் வந்தது. இதனால் பிரிக்கப்பட்டது துறவறமாக லின், அஃது என்னும் சுட்டுப் பெயர் அதன் மேல் நின்றது' என்றார். இது மிகவும் வருந்தியழைக்கப்பட்ட பொருள் என்பது மேலீடாகப் பார்த்தாலே விளங்கும்.

பேராசிரியர் முனைவர் இலக்குவனார் அவர்கள் பரிமேலழகர் உரை ஏற்று 'ஏனைய துறவற நெறியும்' என்று பொழிப்புக் கூறியுள்ளார். மற்ற உரையாசிரியர்கள் யாவருமே 'அஃதும்' என்பது இல்வாழ்க்கையைக் குறித்ததாகவே கொண்டுள்ளனர். புலவர் ந. சி. கந்தையா, 'அச் சிறந்த இல் வாழ்க்கையும்' என்றே பொருள் கூறினார்.

(3) பிறன் பழிப்பதில் ஆயின் நன்று என்பதற்குப் பரிமேலழகர், 'பிறரால் பழிக்கப்படுவது இல்லையாயின் நல்லது' என்றே பொழிப்புக் கூறினார். ஆனால், அவர் 'அஃதும்' என்பதற்குக் கொண்ட பொருள் மூலம் இது இல்லறத்தைக் குறிக்காமல், துறவறத்தையே குறிப்பதாய் விடுகிறது. அத்துடன், 'பிறன் பழிப்பது என்பது கூடா ஒழுக்கத்தை: துறவறம் மனத்தையும் பொறிகளையும் ஒறுத்து அடக்கவல்ல அருமை உடைத்தாய வழியே, அவற்றை ஒறுக்க வேண்டாது ஐம்புல இன்பங்கள் ஆரத் துய்க்கும் எண்மையுடைய (எளிமை வாய்த்த) இல் வாழ்க்கையோடு அறம் என ஒருங்கு எண்ணப்படுவது' என்று அவர் விளக்கவுரை கூறினார்.

திருவள்ளுவர் இல்லறத்தையும் துறவறத்தையும் ஒப்பிட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒரோவொரு வகையில் மேம்பாடே அளித்து, இரண்டுக்கும் சரிசம உயர்வே வழங்கியுள்ளார் என்பதை, வள்ளுவத் துறவற இலக்கணம் காணுமல், இக்குறட்பாவுக்கு திரித்துப் பொருள் கூறிய நிலையில் கூட, பரிமேலழகர் முன் குறட்பாவிலும், இக்குறட்பாவிலும் தம் நுண்மாண் நுழைபுலத்தால் கண்டுணர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பரிமேலழகர் உரையை அப்படியே ஏற்று, புலவர் ந. சி. கந்தையா, 'பிறன் பழிப்பது' என்பதற்குப் 'பழிக்கப்படத் தக்க தீமைகள்' என்று விளக்கவுரை தந்தார். ஆனால். பேராசிரியர் இலக்குவனுரையும், பரிமேலழகரையும் தவிர மற்ற எல்லாரும் குறட்பாவின் இப் பிற்பகுதி இல்லறத் தானைக் குறித்ததாகவே கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.

மணக்குடவர் உரையும் விளக்கவுரையும் இங்கு தனிப் படச் சுட்டிக் கூறத்தக்கவை. 'நன்றுவது, பிறனொருவனால் பழிக்கப்படுவது ஒன்றை உடைத்தல்லவாயின்' என்பது அவர் உரை. 'பழிக்கப்படுவது என்றது இழிகுலத்தாளாகிய மனையாளை. இனி வாழ்க்கைத் துணை நலம் கூறுகின்றுராத லின் இது கூறப்பட்டது' என்பது அவர் விளக்கவுரை.

இடைக்காலப் பிற்போக்குக் கருத்துக்கள் பரிமேலழ கரை மட்டும்தான் தாக்கியுள்ளது என்று கூற முடியாது என்பதை இவ்விளக்கவுரை காட்டும்.

புத்துரையாசிரியருள் கவிஞர் இராமலிங்கனர் புதுமைச் சுவைபட உரை செய்துள்ளார். 'மற்றவனுகிய துறவறத் தானைப் பழிக்காமல் இருப்பது நல்லது' என்பதே அது.

(4) 'தருமம் என்பது இல்லறம்: அது லோகம் பழியா மல் நீதியிலே நடத்துமாகில் நன்று' என்பது பரிதியாரின் மொத்தக் குறட்பாக் கருத்துரை.

'மனிதப் பிறவிக்கு, தர்மம் என்று சொல்லத் தகுந்ததே இல்லற தர்மந்தான். இருந்தாலும் துறவறம் என்பதும் உண்மை. அதையும் அவமதித்துவிடக்கூடாது' எனக் கவிஞர் இராமலிங்கனரின் விளக்கவுரை, அவர் பொழிப்புரையைக் காட்டிலும் அவர் உள்ளக் கிடக்கையை நன்கு விளக்குகிறது.

இல்லறம், துறவறம் இரண்டையும் திருவள்ளுவர் மேம் படுத்திக் கூறும் கூற்றுக்களை முரணின்றி ஒருங்கிணைக்க முடி யாமல் உரையாசிரியர் அனைவரும் மனமுடைவதை இங்கே காணலாம். இம்மணி விளக்கவுரை தரும் வள்ளுவத் திறவு

கோல் அவர்கள் இக்கட்டுகளை யெல்லாம் அகற்றவல்லது என்பதும் காணலாம்.

50. அறவழி வாழ்பவன் முப்பால் முதல்வனுன கடவுளின் கூறுக, அதாவது தெய்வமாகக் கருதப்படத்தக்கவன்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

பொ—ரை: *நிலைபேறுடைய உலகத்திலே வாழ வேண்டிய முறைப்படி அறநெறி வழுவாமல் வாழ்பவன் புகழாகிய வானில் இடம் பெற்றுள்ள தெய்வப் பண்பாளர் குழுவினுள் உலக மக்களால் வைத்துப் பூசிக்கப்படுவான்.*

க-ரை: *மாண்ட புகழ் வீரர் மாள்வின் பின் தெய்வமாகப் பூசிக்கப்படும் பேறுடையவர் ஆவர். ஏனெனில் அவர்கள் வாழ்வுக் குறிக்கோள் இனக் குறிக்கோளாகிய கடவுளுடன் ஒன்றுபட்டு விடுகிறது. அறநெறி வழாது வாழ்பவன் வாழும் காலத்திலேயே அத் தெய்வங்களுள் ஒருவனுகப் போற்றிப் பாராட்டப் படுவான். ஏனெனில் அவன் வாழ்வே அக் குறிக்கோள் வழி மக்களைச் செலுத்துகிறது. அவன் தான் நல்வாழ்வு வாழ்வதுடன், பிறரையும் நல்வாழ்வு வாழும்படி இயக்குகிருன்.*

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்று. இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன.

1. *வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் (இது எழுவாய்).*

2. வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் (இது பயனிலை).

இக் குறட்பாவின் மெல்லிசை நயமும், முதலடி முழுவதும் பெரும்பான்மையும் காய்ச் சீராய் முற்று மோனையாய் அமைந்த இனிமையும், இரண்டாம் அடி இம் மென்னயம் சற்றே குறைந்து, மோனையின்றி வந்த நிலையும் கவனத்திற்குரியன.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் என்பது எழுவாய்ப் பெயர், வைக்கப்படும் என முடியும் வினையைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

வாழ்பவன் என்பது வாழ் என்ற வினைப் பகுதி யடியான வினையாலணையும் பெயா. அன் பொதுப்பால் சுட்டிய ஆண்பால் விகுதி. 'அ' சாரியை. பகரம் காலப் பொதுமை சுட்டிய எதிர்கால இடைநிலை.

வாழ்வாங்கு என்பதில் ஆங்கு என்பது ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள் உருபு. வாழ்வு தொழிற் பெயர், வு அப் பெயர் விகுதி. வாழ் என்பதே பகுதி. இவ் வேற்றுமைப் பொருள் வாழ்பவன் என்ற வினையாலணையும் பெயரின் வினைப் பகுதி தழுவித் தொகைப் பட்டது.

வையத்துள் என்பது ஏழாம் வேற்றுமைப் பெயர். உள் அவ் வேற்றுமை உருபு. வையம் என்ற பெயர் அத்துச் சாரியை பெற்று, பெயரீறும் சாரியை முதலீறும் கெட்டன. இவ்வேற்றுமைப் பொருள் வாழ்வாங்கு என்ற பெயரின் வினைப்பகுதி தழுவித் தொகைப்பட்டது.

வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பது வினைமுற்றாய் வாழ்பவன் என முடியும் தொகைப் பெயரை எழுவாயாகக் கொண்டு முடிந்தது.

வைக்கப்படும் என்பது செயப்பாட்டு வினைமுற்று. 'உம்' திணை பாற் பொது எதிர்கால விகுதி. இது இங்கே காலப் பொதுவில் வந்தது இவ் விகுதி இடைநிலை ஏற்பதில்லை. வைக்கப்படு என்ற செயப்பாட்டு வினைப் பகுதியில் வைக்க என்ற வினை எச்சத்துடன்

படு என்ற துணை வினைப் பகுதி இணைந்து தொழைப் பகுதி ஆயிற்று' வைக்க என்பதில் வை, பகுதி. அ. வினை எச்ச விகுதி. ககர எழுத்துப் பேறு இரட்டித்தது.

உறையும் என்பதில் உம் பெயரெச்ச விகுதி. இவ் விகுதி இடைநிலை ஏற்பதில்லை. உறை பகுதி. யகரம். உடம்படு மெய். வான் உறையும் என்பது ஏழாம் வேற்றுமைத் தொகை. வானில் உறையும் என்பது பொருள்.

வி - ரை : அற வாழ்வில் கடவுளின் மையப்பண்புருவான இல் வாழ்வான் முப்பால் வாழ்வுகளுக்கும் உரியவன் என்பதைத் தனித் தனி முப்பால்களின் தொடர்புகள் மூலம் அதிகாரத்தின் முன் குறட்பாக்களில் காட்டிய திருவள்ளுவர், அதிகாரத்தின் இந்த இறுதிக் குறட்பாவில் அதன் முப்பால் முழுமைத் தொடர்பையும், முப்பால் முழுமை அகப்பாலாகிய விட்டுப்பால் தொடர்பையும் விதந்தோதுகிறார்.

வையத்துள் என்பது 'நிலைபேறுடைய உலகத்திலே' என்று பொருள்படுவதாகும்.

வையம் என்ற சொல் வை, வைப்பு, வைகுதல் என்ற சொற்களுடன் தொடர்புடையதாய், என்றும் நிலைபேறுடைய இன வாழ்வு வளத்துக்குரிய பரப்பு என்று பொருள் படுவதாகும் (குறட்பா 22, 24 விளக்கவுரைப் பகுதிகள் காண்க).

வையம் என்ற சொல் இங்கே உலகம் என்பதனிடமாகப் பயன்படுத்தப்பட்டதற்குரிய காரணம் வாழ்வுக்கும் அச் சொல்லுக்கும் இடையேயுள்ள பொருள் தொடர்பே யாகும். வையம் நிலைபேறுடையது மட்டுமன்று — அது வைப்பு அதாவது செல்வம்; விளைபுலம். வாழ்வாங்கு வாழ்பவன் அச்செல்வத்துக்குரிய வைப்பீடு[1], அவ்விளை புலத்துக்குரிய வித்து (24). வாழ்வு அச்செல்வம் ஈட்டுதற்குரிய தொழில், அவ்வித்து விளைவிப்பதற்குரிய விளைபுலம். அவற்றுக்குரிய வைப்பிடமே வையம்.

---

1. Working Capital

வையத்துள் என்பதில் **உள்** என்பதன் சிறப்புப் பொருள் பொருள் வளப் பகுதியில் கூறப்பட விருக்கிறது.

வாழ்வாங்கு வாழ்பவன் என்பது 'வாழ வேண்டிய முறைப் படி அறநெறி வழுவாமல் வாழ்கிறவன்' என்ற பொருளை யுடையது.

'வாழ்' என்ற பகுதியின் பொருளிலேயே 'குடும்ப சமுதாய இன உறுப்பினராக, பிற உறுப்பினருடன் கூடி, எல்லையற்ற வள நோக்கி, இடையறா வளர்ச்சியுடன், தானும் வளம் பெற்றுப் பிறரையும் வளம்பெற ஊக்குதல்' என்ற கருத்து அடங்கியுள்ளது. 'வாழ்வாங்கு' எனக் கூறப்பட்ட வாழ்வின் இலக்கணம் இதுவே. அறம் இனவாழ்க்கை வளத் திட்டமாதலால், அற முறையும் இதுவே.

வாழ்வாங்கு வாழ்பவன் வாழ்க்கை இலக்கணப்படி வாழ் வதால், அவன் வாழ்க்கையின் இலக்கியம் ஆகிறான். அவன் அறநெறி வழாமல் வாழ்ந்து அறவாணனாய், அறவுருவினன் ஆகிறான்.

வான் என்பது இங்கே புகழாகிய வானில் என்று பொருள்படும்.

வான் என்ற சொல் தமிழில் விண்ணிடத்தையும்; விண் ணிடத்தில் கட்புலனாகும் நீலவிதானத்தையும், அதனையொட்டித் தவழும் முகிலையும், அது தரும் மழையையும் குறிக்கும் வள்ளுவ மரபிலும் தமிழ் மரபிலும் அது எப்போதும் கொடைப் பண்பையும், வண்மையையும் குறித்துக் காட்டும். இதனாலேயே இது புகழையும் சுட்டுவதாகிறது. இப்பொரு ளும் உச்சி, பெருமை என்ற பொருளும் விரவித் தமிழ்க் கவிஞர் வான் புகழ், வான் பொருள், வான் கை என உரிச் சொல்லாக வழங்கியுள்ளனர்,

வான் தமிழில் வருங்காலத்தையும் குறிக்கும். வானுலக மும் வானவரும் உம்மை, உம்பர் என வழங்கப்பட்டு, வருங் காலம், மேலுலகம், மேலே, மேலுலகத்தவர் என்ற பொருள் கள் தருவதையும்: மேல் என்பதும் இனிமேல், மேலால் என்று வழங்குவதையும் காணலாம்.

தமிழில் இவ்வெல்லாப் பொருளும் தொடர்புடையன வாதலால், 'வான்' என்பது வருங்கால உச்சக் குறிக்கோள் நிலையான புகழ் என்ற பொருள் தருவதாகும்.

உறையும் என்பது இடம்பெற்றுள்ள என்று பொருள் படும்.

உறைதல் என்ற சொல்லின் ஒரு பொருள் தங்குதல், தங்கி வாழ்தல் என்பதாம். வானுலகத்தைத் தமிழர் வீடு என்பதுபோல, வீட்டை உறையுள் என்றனர் என்பது இங்கே கூறிக்கொள்ளத் தக்கது. தமிழரின் 'வான்' இடைக்காலத் தவர் கொண்ட 'சென்று மீளும்' சொர்க்கம் அன்று, சென்று தங்கிவிடும் இடம் என்பதும் இங்கே காணத்தக்கது. 'உறை தல்' என்ற சொல்லுக்குக் கெட்டிப்படுதல், விலக முடியாத படி பதிதல் என்ற பொருளும், உறைத்தல் என்ற சொல் உட்சென்று சுருக்கென்றல், காரமாதல் என்ற பொருளும் உடையதாதல் காணலாம்.

புராணங்கள் கூறும் தேவர் முன்னைய நல்வினை அல்லது தவத்தால் மேலுலகில் சில காலம் வாழ்ந்து பின்னும் மனித உலகுக்கு மீள்பவர்களே. ஆனல், தமிழ் மரபில் தெய்வங் கள் 'வான் உறையும் தெய்வங்கள்', புகழ் வானில் சென்று அங்கேயே நிலைத்துத் தங்கிவிடுபவர்கள் ஆவர். அவர்கள் என்றென்றும் தெய்வமாக வான்புகழில் வாழ்வர். உலக மக்கள் என்றென்றும் அவர்களை வழிபட்டு அவர்களை வணங் கிக்கொண்டே இருப்பர். வழிபட்டவர் அவர்கள் நிலை அடைவர், ஆனல் வழிவந்தவர் அவர்களை வழிபட்டுக் கொண்டே யிருப்பர்.

தெய்வத்துள் என்பது தெய்வப் பண்பாளர் குழுவினுள் என்ற பொருளுடையது. தெய்வங்கள் என்பவர்கள் தனி வாழ்வு நீத்து இனப் புகழாகிய வானில் நிலையான வாழ்வு பெற்றவர்கள். மாண்டவர்களை இன்றும் தமிழர் சமுதாய வழக்கில் நாம் 'புகழ் எய்தியவர்கள்' என்றே கூறுகிறோம். 'மாண்ட' என்ற தமிழ்ச் சொல்லின் வேர்ச் சொற்பொருளும் மேலே 'வான்' என்பதற்குக் கூறப்பட்ட வள்ளுவப் பொருள் களும் ஒத்திசைவது காணலாம்.

தெய்வத்தையே தேவர் என்றும், உம்பர் என்றும், வானவர் என்றும் புத்தேளிர் என்றும் கூறுகிறோம். தெய்வம், தேவர் ஆகிய இரு சொற்களும் ஒளி என்ற பொருளுடைய தீ, அல்லது தே என்ற சொல்லுடனும், இனிமை என்ற பொருளுடையதே, தீம், தித்திப்பு ஆகிய சொற்களுடனும் தொடர்புடையன, 'இன்னொளி' என்னும் பொருடையன. உம்மை மேல் உலகும், வருங்காலமும் குறிப்பதாதலால், உம்பர் என்பது மேலவர், வருங்கால நிறை உலகுக்குரியவர் என்ற பொருள் உடையது. வானவர் என்பதும் அதே பொருளுடன், புகழ் வான் எய்தியவர் என்னும் பொருளும் கொண்டது. புத்தேளிர் என்பது இனத்தில் புத்தெழிலர் அதாவது புத்தெழில் ஆக்குபவர் ஆகும். இச் சொல்லில் ளகரம், ழகர லகர இணைப்பின் சிதைவால் வந்ததேயாகும்.

தெய்வத்துள் என்பதில் 'உள்' என்பதன் குறிப்பு வளம் பொருள்வளப் பகுதியில் கூறப்படுகிறது.

வைக்கப்படும் என்பதில் வைத்தல் தெய்வத்துடன் தெய்வமாக அவர்களுள் ஒருவராகக் கணிக்கப்பட்டு மதித்துப் போற்றப்படுவர் என்பதாம்.

வைப்பு, வையம், வைகுதல் என்ற சொற்களின் தொனிப் பொருள் இங்கும் சுட்டப்பட்டது. மாண்ட வாழ்வினராகிய தெய்வங்கள் இனத்தின் நிலையான உடைமையாக, கடவுட் பண்புக் கூறாக மதித்துப் பேணி வளர்க்கப் படுதல் போல, அவர்கள் வாழும்போதே, அவர்கள் வாழ்வுப் பண்புகள் தெய்வப் பண்புகளாக, வாழும் தெய்வப் பண்புகளாகப் பாராட்டி வளர்க்கப்படுவர் என்பது குறிப்பு,

சிறப்புரை: மாண்புகழ்த் தெய்வங்கள் வாழ்ந்த தெய்வங்கள், நிலையான வளர்ச்சியடிப்படையான தெய்வப் பண்புகள். ஆனால் வாழ்வாங்கு இல்வாழ்வானோ, வாழும் தெய்வம், வாழ்ந்து கொண்டே, வளர்ந்து கொண்டே வாழ்வை ஊக்கி வரும் நிலை வளர்ச்சியுடைய தெய்வப் பண்பு ஆகிறான். அவன் கடவுட் பண்புக் கூறாக வன்று, கடவுட் பண்பு விதையாகவே அமைகிறான்.

பொருள்வளம்: (1) இக் குறட்பாவின் மெல்லிசை நயமும், முதலடி மூழுவதும் கிட்டத்தட்டக் காய்ச் சீராய் முற்று மோனையாய் அமைந்த அழகினிமையும் பிறவும் இலக்கணக் குறிப்புரையில் சுட்டப்பட்டன. இவை இல்வாழ்வானின் முப்பால் வாழ்வும், முப்பால் முழுப்பால் வாழ்வும், முப்பால் அகப்பால் வாழ்வும் இயக்குவித்து, இவ் வீட்டுடன் அவ் வீடும் பயக்கும் அறச் சால்பின் அழகினிமையை ஓசைப்படம் பிடித்துக் காட்டுவன ஆகும்.

தவிர, குறட்பாவின் யாழிசை அதிர்வு நயம் இரண்டாம் அடியில் சற்றே அடங்கியும், உவம உறழ்வுப் பண்பாகிய 'வானுறையும் தெய்வம்' சுட்டப்படும் முதற் சீர் கடந்து யாழிசையும் ஓசையகலமும் சட்டெனக் குறைந்து வைக்கப் படும் என்ற இரு சீர்களும் திடுமெனக் குறுகி முடிவுற்றும் வந்தது, நிலைப் புகழினையே யுடைய வாழ்ந்த தெய்வங்கள், கண் காணாத் தெய்வங்களைவிட, வாழ்வாங்கு வாழ்பவனாகிய இல்வாழ்வான் அழகினிமையும் உயிர் வளமும் மிக்க நிலை வளர்ச்சியுடைய உயிர்த் தெய்வ மென்ற முறையில் உயர் சிறப்புக் குரியவன் என்ற கருத்து வளம் தந்தன.

(2) சமஸ்கிருத சூத்திரங்களில் காணப்படும் திட்ப நுட்பச் செறிவை நாம் தமிழ்ச் சூத்திரங்களிலும் திருக்குறளிலும் ஒருங்கே காண்கிறோம். இந்நிலையில் அழகுக்காகக்கூடக் கூறியது கூறல் மரபினை நாம் பொதுவாகத் திருவள்ளுவரிடம் காண முடியாது. 'இல்வாழ்க்கை வாழ்பவன்' என்ற தொடர் வகையில் முன்பே (47) குறிக்கப்பட்டது போல, இங்கும்

'வாழ்வாங்கு வாழ்பவன்' என்பதில் வாழ் என்னும் வினைப் பகுதி இரட்டாமலே அக் கருத்தினை நன்கு வாழ்பவன், முறை தவறாது வாழ்பவன், முன் மாதிரி யாக வாழ்பவன் என்று கூற முடியும். எனவே இரட் டுற மொழிதல் இங்கே வாழ் என்ற சொல்லின் முத் திறப் பொருள் முழுதும் உட்படுத்தும் தொனிப் பொருள் வளம் உடையதாகும். தனி வாழ்வன்றிக் கூடி வாழும் வாழ்வு வாழ்பவன் என்பதும்; உயிர் எண்ணிக்கையும் இட எல்லையும் கடந்து சமுதாய முழுதும் வாழ வாழ்பவன் என்பதும்; கால எல்லை பண்பெல்லை கடந்து இனம், பேரினம் முழுதும் கடந்த வாழ்வு வாழ்பவன் என்பதும் இம் முத்திறப் பொருள் கள் ஆகும். இது முப்பாலும் கடந்த நாற்பாற் பொருள் என்பது காணலாம்.

(3) 'வையத்துள்' என்பது பொருள் முறையில் 'வான் உறையும்' என்பதனுடனும், எதுகை முறை யில் 'தெய்வத்துள்' என்பதனுடனும் எதிரிணையாக வழங்கப்பட்டுள்ளது.

வையம் இன வாழ்வின் நிலைக்களமாக மட்டு மன்று, இன வளத்தின் எல்லையற்ற சேமகலமும் ஆகும் என்பது மேலே சொற்பொருள் குறிப்பு வள மாக விளக்கவுரையில் காட்டப்பட்டுள்ளது. தெய்வம் இந்தச் சேமகலத்துக்கு உதவிய பண்புக்கூறு, ஆயி னும் வாழ்ந்த பண்புக்கூறு. அது நிலையான, உயிர் வளர்ச்சியற்ற கூறே. 'தெய்வம்' என்ற அஃறிணைச் சொல் இதனைக் காட்டுகிறது. வையம் என்பதும் அஃறிணையாதல் காணலாம். இரண்டு சொற்களிலும் 'உள்' என்ற உருபு சேர்க்கப்பட்டது இதனைச் சுட்டிக் காட்டுவதற்காகவே யாகும்.

வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துள் வைக்கப் பட்டாலும், அவன் தெய்வத்தினும் மேம்பட்ட பண்பு கள் உடையவன் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது. அவன் வாழ்பவன், உயிர்ப் பண்புடையவன், உயிர் வளர்ச்சிப் பண்புடையவன். அவன் இறந்த கால வளம் மட்டுமன்று, நிகழ்கால வளம், வருங்கால வள நோக்கிய வளர்ச்சி வளம், உயிர் வளம் ஆவான். தெய்வம் வையத்தின் இறந்த கால வளம்; அதனை நிகழ்கால வளமாக்கி, எதிர்கால வளம் நோக்கி இயக்குபவன் அவன். அத் தெய்வத்தின் வளத்தைச் சமுதாய இனங்களில் கொண்டு பரப்பி வளர்க்கும் ஆட்பெயர்ப் பொறுப்பும் அவனதே யாகும்.

இரண்டாவதாகத் தெய்வம் சமுதாய வாழ்வி லிருந்து தொலைப்பட்ட பண்பு. அது கடவுளின் அருவப் பண்பு போன்றது. 'வான்' என்ற சொல் இத் தொலைவைச் சுட்டிக் காட்டுகிறது. வையம் என்ற சொல்லும், வையத்துள் என்பதிலும் தெய்வத் துள் என்பதிலும் 'உள்' என்ற உருபும் இல்வாழ் வான சமுதாய அணிமை நிலையினையும், இன அணிமை நிலையினையும் குறித்துக் காட்டுவன ஆகும். வாழ்பவரிடையே வாழ்பவனாக நின்று அவன் வளம் ஊக்குகிறான். இனி வாழ இருக்கும் மரபையும் அவன் தன் குடும்ப வாழ்வு மூலம் தூண்டி இயக்கி, தோன் றாத் தெய்வங்களின் பேராளான ஒரு தோன்றுந் தெய்வமாக விளங்குகிறான்.

வையம், தெய்வம், உள், வான், உறையும் என்ற சொற்களில் ஒவ்வொன்றும் இல்வாழ்வானின் மீமனித அதாவது மனிதருக்கு மேம்பட்ட தொண்டை

யும், மீத் தெய்வ, அதாவது தெய்வத்துக்கு மேம்பட்ட தொண்டையும் அங்குலம் அங்குலமாக வலியுறுத்திக் காட்டுவன ஆகும்.

(4) தெய்வத்துள் வைக்கப்படும் என்ற இறுதி அடி அடுத்த அதிகாரத்துக்கு அழகருமை யுடைய தொரு புகுமுகம் செய்கிறது என்னலாம். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் சமுதாயத்துக்கு ஒரு தெய்வம் மட்டுமல்லன்; குடும்பத்துக்கும், குடும்ப வழி இன வாழ்வுக்கும் உரிய ஒரு தெய்வத்துக்கே—கற்புடை அணங்கனுட்கே—அவன் தெய்வமா யமைப வன் என்பதை இச் செயப்படு பொருள் வினை வழக்காறு காட்டும்.

கற்புடை யணங்கு 'தெய்வம் தொழா அள்', ஏனெனில் அவளே தெய்வம்—அவளுக்குத் தெய்வமாய் விளங்குபவன் இல்வாழ்வானே!

'இக் குறட்பாவில் 'வானுறையும் தெய்வம்' என்ற அடைமொழி வழங்கப்பட்டதுகூடப் பின் அதிகாரத்தில் வரும் நிலனுறையும் தெய்வத்தைச் சுட்டிக் காட்டவே போலும்!

தனிக் குறிப்புக்கள்: (1) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் என்பதற்குப் பரிமேலழகர் 'இல்லறத்தோடு கூடிவாழுப் இயல்பினுல் வையத்தின்கண் வாழ்பவன்' என்றார். பிற உரையாசிரியர் கருத்தும் இதுவே. ஆனல், வையம்—வான் எதிரிணையைப் பரிமேழலகரே சுட்டியுள்ளார். வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பதற்கு அவர், 'வையத் தானே எனினும் வானின்கண் உறையும் தேவருள் ஒருவனக வைத்து நன்கு மதிக்கப்படும்' என்றார்,

குறட்பாவின் பிற்பகுதிக்கு மணக்குடவர், 'உலகத்திலே தேவருள் ஒருவனக மதிக்கப்படுவான்' என்று பொழிப்புரை

தந்து, 'இவன் எல்லாராலும் மதிக்கப்படுவன்' என்று விளக்க வுரை கூறினர். 'தேவர்க்கு நிகராவான்' என்று கூறினர், பரிதியார்.

(2) இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாகக் கொண்டுள்ளவன் கடவுளுக்கு ஒப்பாவான் என்பது பேராசிரியர் இலக்குவனரின் கருத்துரை.

'வான் உறையும் தெய்வத்தை நாடித்தானே துறவிகள் தவம் செய்கிருர்கள்; அந்தப் பலனை வையத்து வாழ்வதே தரும்' என்றும்; 'இல்லறத்தைச் சரியாக நடத்துகிறவன் கர்மயோகம் செய்கிறவன். அவன் விடுபெற முடியும்' என்றும் கவிஞர் இராமலிங்கனர் கருத்துரை கூறியுள்ளார்.

இக்குறட்பாவுக்கு மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் தரும் குறட்பா ஒப்பான மலையாளப் பாடல் வருமாறு:

> உன்னத கார்ஹஸ்த்ய தர்மம் புலர்த்துவோன்
> மன்னிதில் வாழ்கிலும் தேவன்.

இங்கே மன்னிதில் என்பது மண் இதில், இந்த உலகில் என்ற கருத்துடையது.

அதிகாரம் 6 வாழ்க்கைத் துணைநலம்

அறத்துப்பாலில் பாயிரப் பகுதியாகக் கருதப்படத்தக்க அப்பாலின் முதல் நான்கு அதிகாரங்களிலே வாழ்க்கைத் துணைநலம் என்ற இவ்விரண்டாம் அதிகாரம் அறத்துப் பாலின் வான் சிறப்பதிகாரமாய் அமைவதாகும். இல்வாழ் வான் அறவாழ்வை இயக்கும் மையக் கடவுட் பண்பாக இயங்குவதுபோல, அத்த மையப் பண்பு தழுவி நின்று அறந் தழைப்பிக்கும் மழை முகிற் பண்பாக இல்வாழ்க்கைத் துணைவி சிறப்பிக்கப்படுகிறாள்.

காதற் கடலில் குதித்தெழுந்து, இன்ப நீர் முகந்து கருக் கொண்டு, அன்பாகிய சூல் மதிர்ந்து, வாழ்வில் அறமாகிய மழை பெய்விக்கும் கற்புத் தெய்வமாக வாழ்க்கைத்துணைவி விளங்குகிறாள் (55).

இன்பத்துப் பாலில் மையக் கடவுட் பண்பாக அமை பவள் காதல் தலைவி. அறத்துப்பாலில் அவள் குடும்பத் தலை வியாகி அறவாழ்வை இயக்கும் இல்வாழ்வானையே இயக்கு விக்கும் அறத் தலைவியாகிறாள். 'வாழ்வாங்கு வாழ்பவ'னை இல்வாழ்வானைத் திருவள்ளுவர் முந்திய அதிகாரத்தின் இறுதிக் குறட்பாவிலே சமுதாயத் தெய்வமாகச் சுட்டிக் காட்டினார். அவ்வாறு சமுதாயத் தெய்வமாக விளங்க இருக்கும் 'வாழ்வாங்கு வாழும்' இல்வாழ்வானை அத் தெய் வப் பதவிக்குத் தேர்ந்தெடுப்பவள் குடும்பத் தலைவியே. தேர்ந்தெடுத்து அவனைத் தெய்வம் ஆக்குபவளும் அவளே (59). தெய்வமாக அவனை வணங்குவதன் மூலமே அவள் அவனுக்குத் தெய்விக ஆற்றலளிக்கும் நிறை பண்புத்தெய்வ மாக அறத்துப்பால் மேடையை அணி செய்கிறாள்.

பெண்மையும் அறமும்

கடவுளின் அருட்பண்பை அவரது அருட் சத்தியாகச் சமயங்கள் வருணிக்கின்றன. கடவுளுருவான ஆதிபகவனின் அருளுருவத்தைத் திருவள்ளுவர் ஏட்டுப் பாயிரத்தில் வான் மழையாக உருவகித்துக் காட்டினர். அறத்துப்பாலின் பாயிர அதிகாரங்களிலும் இதையே பின்பற்றி, கடவுளின் பேராளாக, மையக் கடவுட் பண்பாக இல்வாழ்வானைக் குறிப்பிட்ட திருவள்ளுவர், அந்த இல்வாழ்வானின் அருட் சத்தியாகவே குடும்பத்தின் வான் மழைப் பண்பினளான வாழ்க்கைத் துணைவியை வருணிக்கிறார். கடவுளின் அருவ ஆற்றலுக்கு அருளுருவம் தந்து செயற்படுத்தும் அருட்சத்தி போல, கதிரவனின் வெப்பாற்றலைத் தட்பவள ஆற்றலாக்கி வளமூட்டும் வான் முகிற் பண்புபோல, குடும்பத் தலைவி கணவனின் அற ஆற்றலுக்கு அன்புருவம் தந்து அதைப் பாசமாகிய அன்பறமாக்குகிறாள்.

கீழையுலகச் சமயங்களெல்லாம், சிறப்பாக இந்திய மாநிலத்தில் தோன்றிய சமயங்களெல்லாம் வீரம், செல்வம், புகழ், கல்வி, கலை ஆகிய பண்பு வளங்களைப் பெண் தெய்வங்களாகவே உருவகம் செய்து காண்கின்றன. மேலையுலகில் கூட, பண்டைய கிரேக்கரும், உரோமரும் ஊழாற்றல் [1] கலைகள் [2] ஆகியவற்றைப் பெண் தெய்வங்களாகவே குறிப்பிட்டுள்ளனர். உலகின் இடைக்கால நாகரிகப் பண்பு தாண்டி, பெண்மை வகையில் அந்நாகரிகங்கள் கொண்டிருந்த பிற்போக்குக் கருத்துக்களாகிய சூழிருட் படலங்களை ஊடுருவி, வள்ளுவப் பண்பு சமயங்கள் மூலமாக நமக்கு ஒளிவிசியுள்ளதையே இச்செய்திகள் காட்டுகின்றன. ஏனெனில், பெண்மைக்கு வீரமில்லை, கல்வியுரிமை கிடையாது, பெயர் மரபுரிமையோ, சொத்துரிமையோ, சமய உரிமையோ கூடக் கிடையாது என்றே கிட்டத்தட்ட இடைக்காலச் சமுதாய முழுதும் கருதியிருந்தும், இவ்வீரத் தெய்வங்களும் (கொற்றவை, வீர இலக்குமி) செல்வத் தெய்வங்களும் (இலக்குமி, தன

1. The three women of destiny 2. The seven muses

இலக்குமி), கலைத் தெய்வங்களும் (இந்தியாவின் கலைமகள், கிரேக்கரின் கலை நங்கையர்) முழுவதும் பெண் தெய்வங்களாகவே அச்சமுதாயங்களால் வணங்கப்பட்டு வந்துள்ளனர்.

மக்கள் வாழ்வும் வளமும், தானமும், தவமும், சிறப்பும் பூசனையும் ஆகிய எந்த அறமுமே—மழை இல்லாவிட்டால் இல்லை என்று வான் சிறப்பு அதிகாரத்தில் திருவள்ளுவர் விளக்கியுள்ளார். அதுபோலவே, அறவாழ்வில் மழைப் பண்பாகிய கற்புடை மனைவி இல்லாவிட்டால், அறமும், அறத்துக்குத் துணை செய்யும் பண்புகளாகிய கலையும் கல்வியும், பொருளும் புகழும், வீரமும் சால்பும் தழைத்தல் இயலாது (52) என்பது வள்ளுவ முடிபு ஆகும். கலைமகள், திருமகள், மலைமகள் ஆகியோர் கலை, செல்வம், வீரம் ஆகிய பண்புகளுக்குரிய தெய்வங்களாக அமைந்துள்ள பழஞ் சமய மரபுகளை விளக்கிக் காட்டும் வள்ளுவ மரபொளிக் கூறு இதுவே !

மலைமகளும் திருமகளும் சிறப்பாகத் தமிழ்ச் சைவ, வைணவ மரபுகளில் அறம் வளர்த்தாள் (தர்மசம்வர்த்தினி) என்று சிறப்பிக்கப்படுவதும் இங்கே கருதி நோக்கத்தக்க செய்தி ஆகும். உலகமெங்குமே, தொல் பழங்கால எகிப்திய சுமேரிய நாகரிகங்களில்கூட, தாய் வளத் தெய்வங்கள்[1] பெண் தெய்வங்களாகவே அமைந்துள்ளனர்.

திருவள்ளுவர் முகிலையும் பெண்மையையும் உழவையும் ஒப்பிட்டுத் தொடர்புபடுத்திக் கூறும் செய்தி மேலே பொது வறவியல் முன்னுரையிலும்; கருமை, கரு, கருப்பை, கருப்பம், கற்பு ஆகிய சொற்கள் மூலம் தமிழ் மொழி அதே படிப்பினைகளைத் தருகிறது என்ற செய்தி மேலே இரண்டாம் அதிகார முன்னுரையிலும் விளக்கப்பட்டுள்ளன.

உயிர் மலர்ச்சியிலும் மனித இன வளர்ச்சியிலும் காதல், குடும்பப் பண்பு, தமிழ்க் குடும்பப் பண்பு, வள்ளுவக் குடும்பப் பண்பு ஆகியவை கொண்டுள்ள பெரும் பங்கை உயிர்

1. Fertility deities

நூலின்[1] ஆதாரங்களுடன் மேலே ஐந்தாம் அதிகார முன்னுரையிலேயே காட்டியுள்ளோம். அவை உண்மையில் காதல் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் நின்று கற்புடைத் தெய்மாகிய வாழ்க்கைத் துணைவி அல்லது பெண்மை ஆற்றும் பண்புவளங்களே யாகும். வள்ளுவக் கோட்பாட்டின் படி அறத்துக்கும் பெண்மைக்கும் உரிய தொடர்பினை இவ்வாறுமுற்காலச் சமயங்கள் மட்டுமன்றி, இக்கால இயல் நூல் அறிவாராய்ச்சிகளும் தெள்ளத்தெளியக் காட்டுவன ஆகும்.

ஆணும் பெண்ணும்

குடும்பம் சமுதாயத்தின் ஓர் உறுப்பு. ஆனால், அதுவே சமுதாயத்தின் இன உறுப்பு, வளரும் உயிர் உறுப்பு. சமுதாயமாகிய உடலில் அது இன உயிராக இயல்கின்றது. அம்முறையில் அது சமுதாயத்தை இனத்தின் இறந்த கால வாழ்வுடன் ஒரு திசையிலும், அதன் வருங்கால வாழ்வுடன் மறு திசையிலும் இணைக்கிறது. நாம் சமுதாயம் என்றும் நிகழ்காலம் என்றும் கூறுவது இனத்தின் இப்பழமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்ட சிற்றிடை வெளியையேயாகும். இனவாழ்வில் குடும்பம் இவ்வாறு ஒரு நிகழ்காலச் சமுதாயத் தொடர்பும், ஓர் இறந்தகால இனத் தொடர்பும், ஒரு வருங்கால இனத் தொடர்புமாக மூன்று தொடர்புகள் கொண்டுள்ளது. முதல் தொடர்பாகிய நிகழ்காலச் சமுதாயத் தொடர்பு இல்வாழ்வானாகிய ஆடவனுக்குரியதாகவும்; இறந்தகால வருங்கால இனத் தொடர்புகளாகிய அடுத்த இரண்டு தொடர்புகளும் வாழ்க்கைத் துணைக் குரியதாகவும் அமைகின்றன.

சமுதாயத்தில் ஆடவர் பெண்டிர்க்குரிய இவ்வேறுபாடு உலகளாவிய ஒன்று. மனித இனம் கடந்து உயர்தர உயிரினங்கள் சிலவற்றிலேகூட இதனைக் காணலாம். ஆனால், உயிரியல், மனித இன இயல்[2] சார்ந்த இந்தத் தத்துவங்களைத் தெளிவாகக்கண்டு கூறும் உலக அறிஞர் திருவள்ளுவர்

1. Biology 2. Anthropology

ஒருவரேயாவர். குடும்பத்தினுள்ளிருந்து குடும்ப ஆட்சி நடத்தி, இனத்தின் இரு தொடர்புகளையும் கணவன் மூலமாகச் சமுதாயத்துக்குத் தேடித் தருபவள் வாழ்க்கைத் துணைவியே. எவ்வளவு ஆண்—பெண் சமத்துவம் பேசும் நாடுகளில்கூட, பெண்டிர்க்குக் குடும்பத்தினுள் ஆடவரினும் மிகுதிப் பங்கும், சமுதாயத்தில் ஆடவருக்குப் பெண்டிரினும் மிகுதிப் பங்கும் நீங்க முடியா வகையில் இயல்பாய் அமைந்திருப்பது இதனாலேயேயாகும். திருவள்ளுவரின் அறம் இயற்கையடிப்படையான இவ்வேறுபாடறிந்து, அதன் மீது கட்டமைக்கப்பட்டதொரு நாகரிக வளர்ச்சித் திட்டம் ஆகும்.

இனத்திலோ, சமுதாயத்திலோ தனி உயிர் ஓர் உறுப்பன்று என்பது மேலே பல முன்னுரைகளிலும் கூறப்பட்டுள்ளது. இருபாலாரையும் பெற்றெடுப்பதும் வளர்ப்பதும் பெண்பாலே என்பதும்; ஆண் இதில் உடன் துணையாயிருப்பதன்றி வேறு தனிக் கடமையோ, உரிமையோ அற்றவன் என்பதும் இதனை வலியுறுத்திக் காட்டும் செய்தி ஆகும். ஆனால், இத்தத்துவத்தின் மரபியல் முக்கியத்துவத்தை [1] இந்நாளில் இயல் நூல் கூடக்கவனிப்பதில்லை, இனத்தின் பண்புகள் தொடர்வது பெண் வழியாகவன்றி ஆண் வழியாகவன்று. 'தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை' என்ற பழமொழி இதனைக் குறித்துக் காட்டுகிறது. பிள்ளை பெண்ணாயிருந்தாலும், ஆணாயிருந்தாலும், அதன் இனப் பண்பின் அடிப்படை தாயே, தந்தையல்லன். ஆணினப் பண்பும், பெண்ணினப் பண்பும் ஒரே தாய் இனவழியாகவே தலைமுறைக்குத் தலைமுறை தாவித் தொடர்கின்றன. ஆனால் அதே சமயம் ஆணுக்கு இதில் ஒரு பங்கு இல்லாமலில்லை. ஆணே இனமரபைச் சமுதாய மரபுடன் தொடர்பு படுத்துகிறான். தலைமுறை கடந்து தலைமுறை பெறும் தொடர்ச்சி பெண்ணினம் சார்ந்ததானால், அவை இரண்டுக்கும் இடைப்பட்ட வளர்ச்சிப் பண்பு முற்றிலும் ஆடவனதாகவே அமைகிறது.

---

1. Significance in the science of heredity

இனத்தின் தொடர்ச்சி பெண்மை, இனத்தின் வளர்ச்சி ஆண்மை.

இனத்தின் மூலமுதல் பேணுபவள் பெண். அதனை ஆதாயம், வட்டி மூலம் இனத்தின் ஒவ்வொரு தலைமுறையிலும் மேம்படுத்திச் செல்பவன் ஆண்.

பெண்ணின் அருமை, அவளே சமுதாயத்தின் இனமுதல் மரபுச் செல்வத்துக்குரிய முதலாளி என்பதே. ஆணின் அருமை, அவனே அந்த இன முதலுக்குரிய வட்டி ஈட்டி, மரபுச் செல்வத்தின் மீது ஆதாயம் தேடி, அந்த முதலை அல்லது செல்வத்தை வளர்ப்பவன் என்பதே.

வள்ளுவப் பண்பிலும் தொல்பழங்காலச் சமயப் பண்புகளிலும் வீரமும், கல்வியும், கலையும், புகழும் பெண்மைக்குரியதாகக் கூறப்படினும், இயற்கைச் சமுதாயத்தில் நாம் பெண்ணிடம் இந்த மேம்பாட்டைத் தெளிவாகக் காண்பதில்லை. பெண்ணியல் மெல்லியலாகவும், பெண்ணின் இனிமையே மடனாகவும் கருதப்படும் நிலை எல்லா நாடுகளிலும்—மனித இனம் கடந்து உயர்தர உயிரினங்களில்கூட இருந்துவருகின்றது. பெண்மைக்குரிய கலையில், பெண் மருத்துவத்தில் கூட, உலகெங்கும் ஆடவரே மிகுதி. இதற்குரிய காரணம் மேற்காட்டிய ஆண் பெண்களின் சமுதாய இனக்கடமை வேறுபாடே யாகும். காதல் பருவ வயதிலும், பெண்ணினும் ஆண் மூத்தவனாயிருந்து தீரவேண்டியதற்கும், பெண்ணின் பருவ வரையறைபோல் ஆணுக்குத் திட்டமான இயற்கை வரையறை இல்லாததற்கும் உரிய விளக்கம் இத் தத்துவமே யாகும்.

திருவள்ளுவரும், திரு. வி. கல்யாணசுந்தரனாரும், கவிஞர் பாரதிதாசனும்

திருவள்ளுவர் திருக்குறளில் கண்ட இத்தத்துவத்தை முதன் முதல் கண்டு கூறியவர்—முதல் தமிழர் மட்டுமல்லர், திருவள்ளுவருக்கடுத்த உலகின் முதல் மனிதர்—திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களே. குடும்பத்தில் பெண்ணாட்சி

சிறப்பதனாலேயே, சமுதாயத்தில் ஆண் மதிப்புப்பெறுகிறான் (59) என்று கூறும் குறட்பாவைச் சுட்டிக்காட்டி, அவர் பெண் குடும்ப அரசி என்றும்; ஆண் சமுதாயத்தில் குடும்ப ஆட்சியின் வெளிநாட்டமைச்சன் போன்றவன் என்றும்; அரசனாட்சியால் நாடு சிறந்தாலன்றி, வெளிநாட்டு அமைச்சனுக்கு உலகின் பிற நாடுகளில் மதிப்பு இருக்க முடியாதது போல, வீட்டிலும் பெண் ஆட்சி சிறந்தாலன்றி, ஆணுக்குச் சமுதாயத்தில் மதிப்பு இருக்க முடியாதென்றும் இம்மணி விளக்கவுரை ஆசிரியருக்கு விளக்கிக் கூறியவர் அறிஞர் திரு. வி. கலியாணசுந்தரனாரே யாவர்.

பெண்ணே வளமான முழு மனித இனம்; ஆண் வற்றிக் குறைபட்ட அரை குறை மனித இனம் என்று கவிஞர் பாரதிதாசன் கூறுவதுண்டு. பெண்ணைக் கவிஞர்கள் பொதுவாகக் கனி என்றும் மலர் என்றும் பாடுவார்: ஆணை எவரும், பெண் பெண் கவிஞர்கூட அவ்வாறு பாட முனைவதில்லை என்று காணலாம். இறைச்சிக்காக ஆடு, மாடுகளை வெட்டுபவர் ஆணினத்தையே வெட்டுவர், பெண்ணினத்தை வெட்ட விரும்பமாட்டார் என்பதையும்: உயிர்களைப்போல ஆண் பெண் வேறுபாடுடையய பனை போன்ற மரங்களில், பெண் பனை முதலியவற்றையே எவரும் விரும்பிப் பேணி வளர்ப்பார்கள். ஆண் பனை சுடுகாட்டில் வளர்வதன்றி எங்கும் பேணி வளர்க்கப்படுவதில்லை என்பதைம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எடுத்துக்காட்டுவதுண்டு.

ஆண் பெண்ணின் வேறுபாட்டியல்புகளைக் கண்டவர்கள் கூட, பெண்ணின் தனிப் பெருமையையோ, ஆணின் தனிச் சிறப்பையோ கண்டனர் என்று கூற முடியாது. இரண்டையும் முழு அளவில் கண்டவர் திருவள்ளுவரே—அதனை அவர் மரபில் வந்த சங்ககாலத் தமிழரும், தொலை மேலையுலகச் செர்மானிய இனத்தவருமே அரைகுறையாகவேனும் பேணி வந்துள்ளனர் என்னலாம். இது இன்பத்துப்பாலிலும் பிற இடங்களிலும் இவ்வுரையில் விளக்கப்படும். ஆணைத் தெய்வமாக்கி, அவனைத் தெய்வமாகத் தொழுபவன் பெண்ணாகிய தெய்வம் என்றும்; அப்பெண் தெய்வத்தால்கூட வணங்கப்

படும் பெருந்தகுதி உடையவனே, தெய்வம் வணங்கும் தெய்வமே ஆண் என்றும் (55) இவ்வதிகாரத்தில் திருவள்ளுவர் இந்த இன்பப்பால் தத்துவத்தையே மணிச் சுருக்கமாகக் கூறியுள்ளனர் என்னலாம்.

பெண்ணுக்குத் திருவள்ளுவர் வழங்கும் பெருமையும் உரிமையும் பொறுப்பும் சென்ற நாலாயிர ஆண்டுகளுக்குட் பட உலகம் காணாத ஒன்று—சங்ககாலத் தமிழகமோ தொல்காப்பியமோ கூடக் கனவு காணாத ஒன்று என்னலாம். ஆனால், அதே சமயம் இப்பெண்ணுயர்வு ஆணின் சிறப்பைக் குறைப்பதன்று; நேர்மாறாக மிகுதிப்படுத்துவதே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வுண்மையை இவ்வதிகாரக் குறட்பாவின் உரைகளால் காணலாம்.

திருவள்ளுவர் இவ்வதிகாரத்தில் (54) பயன்படுத்தும் கற்பு என்ற சொல்லின் சொற்பொருள் இலக்கணங்கள் பொது முன்னுரையில் விளக்கப்பட்டுள்ளன. இதே அதிகாரத்தில் (55) வழங்கும் தெய்வம் என்ற சொல்லின் பொருளும் அங்கேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

வள்ளுவக் காதலும் பக்தியும்

தமிழர் பண்பாட்டிலும் திருவள்ளுவர் பண்பாட்டிலும் காதலுக்கும் பக்திக்கும் உள்ள தொடர்பு இவ்வதிகாரத்தில் மறவாமல் கருத்தில் கொள்ளத்தக்கதாகும். கடவுளுக்கும் பக்தனுக்கும் உள்ள தொடர்பு, தலைவிக்கும் தலைவனுக்கும் உள்ள தொடர்பே என்பதும்; அத்தொடர்பில் கடவுளைத் தலைவனாகக் கொள்ளும் மரபே உலகமெங்கும் இன்று பெரு வழக்கானாலும், திருவள்ளுவர் காலம் வரை பெரு வழக்கான மரபு கடவுளைத் தலைவியாகக் கொள்ளும் மரபே என்பதும் இவ்வதிகாரத்தால் விளக்கம் பெறும் கருத்துக்கள் ஆகும் (55, 56). இவ்விளக்கம் அதிகாரக் குறட்பாக்களுக்கே உரிய தாயினும், அதன் கருக்கூறு இங்கே சுட்டத் தக்கது. கடவுள் பேரொளி உரு. பெண் பேரழகுரு. கடவுள் என்றும் ஒரு

நிலைப்பட்டவர். பெண் என்றும் கற்பு நிலையில் உறுதியாயிருப்பவள். கடவுள் அன்புரு, எப்போதும் உயிர்களிடம் கருணையுடன் இருப்பவர். பெண் காதலுக்காகவே வாழ்பவள். அவள் வாழ்வும் காதலும் ஒன்று, ஆண் காதல்போல அது வாழ்வில் ஒருகூறு அன்று, வாழ்வில் ஒரு செய்தி அன்று. கடவுள் தற்சார்புடையவர், தன்னையும் பேணி உயிர்களையும் பேணுபவர், பெண் தன்னையும் பேணிக் கணவனையும் பிறரையும் பேணுபவள் (56). கடவுள் பத்தனின் உள்ளத்தில் இருப்பார், பத்தனைவிட மாட்டார், பத்தனோ கடவுளை மறந்தும் இருப்பான், கடவுளின் மெய்யுரு அறியாது பிறிதுருவும் பல்லுருவும் பரந்து பரவுவான்—இறுதியில் கடவுள் மயமாகவும் ஆய்விடுவான். இதுபோலவே பெண் ஆணின் உள்ளத்தில் இருப்பாள், ஆணைய் விடமாட்டாள்: ஆண் பெண்ணை மறந்தும் இறப்பான், கற்பு நெறிக்குரிய மெய்க் காதலின் தன்மை உணராது பிற காதலிலும் மயங்குவான்—தன்னிலை யிழந்து பெண் வயமாகி மயங்குவதும், பெண்ணே தானாகி இயங்கும் இயல்பும் அவனுக்கு உண்டு. இது திருவள்ளுவராலும் தமிழராலும் இடைக்காலத்தாலும் கூடப் பேதைமை எனக் கருதப்பட்ட நிலையேயாகும்.

பெண்ணின் குடும்ப ஆட்சியில் (அகஆட்சியில் அல்லது இன ஆட்சியில்) ஆண் நேரடியாகத் தலையிடுவதில்லை. அது போல ஆணின் சமுதாய ஆட்சியில் (புற ஆட்சியில்) பெண் நேரடியாகத் தலையிடுவதில்லை. ஆனால், இருவருமே இரு திசையிலும் ஒருவர் மூலமாக ஒருவர் பங்குகொள்வர். இரு கண் ஒரு பொருளே நோக்குவதுபோல, பண்டைத் தமிழர் அரசியல் மொழியுரிமையிலும் வழிபாட்டிலும் குடும்பத் தலைவராகிய தலைவன் தலைவியர் இருமை ஒருவராக ஒன்றுபட நின்றே செயலாற்றுவர். பெண்ணுரிமைப் பாதுகாப்பில் வேறு எச்சமயத்துக்கும் ஒருபடி முற்பட்டே நின்றுள்ள இசுலாமிய சமயத்தின் வழி பாட்டில் பெண்கள் நேரடியாகக் கலந்துகொள்ளாதது பெண்ணுரிமையற்ற தன்மையாலன்று, இது வள்ளுவப் பண்பு மரபின் ஆற்றலாலேயே என்னல்தகும். மனித இனநாகரிகத்தில் இடைத்தளர்வு ஏற்பட்ட அணிமை இடைக்காலங்களில் இவ்வள்ளுவப் பண்பின் உட்கிடை மறக்

கப்பட்டு, இத்தகு செய்திகள் பெண்ணுரிமைக் கேடாகக் கருதப்பட்டு வந்துள்ளன.

வள்ளுவ அறக்கோட்பாட்டில் ஒருவரூடொருவராகவன்றி நேரடியாகவே ஆணும் பெண்ணும் சரி சமமாக ஒருங்கு நின்று ஆற்றும் பண்பு ஒன்று உண்டு—அதுவே விருந்தோம்பல். மனித இனத்தில் நாகரிகத்தின் புறவளர்ச்சி தாண்டி அக வளர்ச்சியாக, நாகரிகமற்றவர் அல்லது நாகரிகம் குன்றியவர் என்றும் கருதப்படும் இனங்களிலும், நம் நகரப்போலி நாகரிகம் பரவாத நாட்டுப் புறங்களிலும் இப்பண்பு கேடுறாது பொலிவுறுதல் காணலாம். வள்ளுவப் பண்பின்படி இது குடும்பத்தின் எல்லேக்குள் நிகழும் அறமாயினும், சமுதாய எல்லே கடந்து இன எல்லேயளாவ நடைபெறும் அறப் பண்பு ஆகும். இருபாலாரும் இதில் சரிசம நேரடிப் பங்கு கொள்வதன் காரணம் இதுவேயாகும். ஆனால், இங்கும் உரிமையும் பொறுப்பும் ஆடவனது ஆகவும், பண்பும் வளமும் பெண்ணினது ஆகவுமே அமைவதாகும் என்பது கருதி நோக்கத்தக்கது.

உரையாசிரியர் கருத்து

பரிமேலகர் இவ்வதிகார முன்னுரை விளக்கமாக, வாழ்க்கைத் துணைநல மென்பது 'இல்வாழ்க்கைச்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதிகார முறையும் இதனானே விளங்கும்' என்று கூறினர், 'வாழ்க்கைத் துணைநலமாவது வாழ்க்கைச்குத் துணையாகிய மனையாளது பெண்மை இலக்கணம் கூறுதல்' என்பது மணக்குடவர் விளக்கம். அத்துடன் அவர் முன் அதிகாரத்தின் இறுதிக் குறட்பாவாகக் கொண்ட ஒன்பதாவது குறட்பாவில் (49) 'பழிப்பது' என்பதை விளக்குகையில், 'பழிக்கப்படுவது என்றது இழிகுலத்தாளாகிய மனையாளே. இனி வாழ்க்கைத் துணைநலம் கூறுகின்றாராதலின் இது கூறப்பட்டது' என இவ்வதிகாரத்துக்குத் தம் உரையில் வாயிலும் பிறப்பிக்கிறார். இது போலி வாயில் என்று கூறத் தேவையில்லே. பரிமேலழகர் வரிசை முறையில் அமைந்த இறுதிக் குறட்பாவே (50) மிகச் சிறந்த வாயி

லாய் அமைவது மேலே அக்குறட்பா வுரையில் கூறப் பட்டுள்ளது.

'வாழ்க்கைத் துணைநலமாவது இல்லறம் நடத்தும் போது பதிவிரதை வேணுமென்னும் முறையாகவே உணர்த் துதல்' என்பது பரிதியாரின் முன்னுரை.

'வாழ்க்கைத் துணைநலம்—ஒருவனது வாழ்க்கைத் துணை யாயுள்ள மனைவியின் நற்குணங்கள்' என்பது புலவர் ந. சி. கந்தையாவின் அதிகார முகப்புரை.

'இல் வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியது சிறப்பு' என்பது பேராசிரியர் முனைவர் இலக்குவனாரின் அதிகார உரைத் தலைப்பு.

'இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத மற்றொரு பங்காளி யான மனைவிக்கு இருக்க வேண்டிய நற்குணங்கள்' என்று கவிஞர் இராமலிங்கனாரும், 'வாழ்க்கைத் துணை—மனைவி; நலம்—தன்மை; மனைவியின் தன்மை கூறுதல்' எனப் புலவர் குழந்தையும் அதிகாரத் தலைப்பு விளக்கினர்.

அதிகாரப் பெயர்

வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரப் பெயரில் வாழ்க்கை என்பது வாழ் என்னும் வினைப் பகுதியடியாகக் 'கை' என்னும் விகுதி பெற்ற தொழிற்பெயர். வாழ்க்கைத் துணை என்பது வாழ்க்கைக்கு உரிய துணை என நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாய், அத்துணை தரும் பெண் என்ற முறையில் மனைவியைச் சுட்டிய அன்மொழித் தொகை ஆயிற்று.

இல்லாள், மனை (மனைவி), மனையாள், துணை, வாழ்க் கைத்துணை என்ற சொற்களன்றி, மனைத் தலைவியைக் குறிக் கத் திருக்குறளில் மனைவி, பெண்டாட்டி ஆகிய சொற்கள் வழங்கப் பெறவில்லை. மனைத் தலைவியைக் குறிக்கத் திருவள் ளுவர் வழங்கும் வாழ்க்கைத்துணை என்ற சொல்லின் சீரிய உயர் மதிப்புப் பண்பு கடைச் சங்க காலமோ, இடைக்

காலமோ, உரையாசிரியர் ஊழியோ. நம் ஊழியோகூட அறியாத ஒன்று என்னலாம். மேலை மொழிகளில்கூட மகிழ்ச்சி நேர நாநயத்திறமான வழக்கிலன்றி[1] நேரடி மொழிவழக்கில் இவ்விழுமிய சொல்லோ, கருத்தோ வழங்கப் பெறுவதில்லை. இதனை இகழ்ச்சி நேர வழக்குகள்[2] காட்டு கின்றன.

திருவள்ளுவர் தனிப் பண்பை மட்டுமன்றி, அவர் காலத் தொலைவையும் இது சுட்டிக் காட்டுவதாகும். உபநிடதங் களில் காணப்படும், உபநிடதங்கட்கு முற்பட்ட தொல் பழங் காலத்தில்தான் இந்திய மாநிலத்தில் பெண்பாலர்க்கு இத் தகைய உயரிய நிலையும் மதிப்பும் இருந்ததாக அறிகிறோம். உபநிடத மொழியில் ஆசிரியரின் மனைவியையும் பெண்பால் ஆசிரியரையும் வேறு வேறாகக் குறிக்க இரு சொற்கள் (ஆசார்யா, ஆசார்யா நீ) இருந்தனவாக அறிகிறோம். உபநிடதப் பேராசான்களிடையே பிற ஆடவரும் முதன் மதிப்புத் தந்து போற்றிய கார்க்கி, பார்க்கவீ போன்ற பெண் அறிஞர்கள் வளம்பெற வாழ்ந்ததாகவும் அறி கிறோம்.

திருவள்ளுவர் காலமுதல், சங்ககாலம், உபநிடத காலம் வரை இந்தியாவில் நிலவியிருந்த அறிவார்ந்த பண்பாட்டு ஊழிகீழ்திசை உலகமோ, மேல்திசை உலகமோ வேறு எம்மா நிலத்திலும் எக்காலத்திலும் காணாத ஒன்று ஆகும். அக்கால இந்திய நாகரிகத்துக்குக் கிரேக்க நாகரிகம் பலவகையில் ஒப்புடையதாயினும், அக்காலப் பெண்பாலர் மதிப்பு வகை யில் அதற்கு அத்தகு சிறப்பு கிடையாது என்றே கூறவேண் டும். தொல்பழங்கால இந்தியாவுக்கு இவ்வகையில் ஓரளவு அணிமையுடைய நாகரிகம் எகிப்திய, ரோம, கிரேக்க நாகரிகங்களே என்னல் வேண்டும்.

வழ்க்கைத் துணைநலம் என்பது வாழ்க்கைத் துணையின் நலம் அதாவது மனைவியின் நலம் எனப் பொருள்பட்டு,

---

1. Partner in life, better half 2. Weaker half, the fickle half

ஆறும் வேற்றுமைத் தொகை என்றோ, வாழ்க்கைத்துணை விக்குரிய நலம் எனப் பொருள்பட்டு நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்றோ கூறத்தக்க தாகும், எதுவாயினும் அந்நலத்தைக் கூறும் அதிகாரமென இம் முழுத்தொகை அதிகாரத்துக்கு ஆகுபெயராய் வழங்கிற்று.

நலம் என்பது இங்கே மிகுசிறப்பு, மாட்சி என்னும் பொருளை உடையதாகும்.

வாழ்த்து, சிறப்பு, பெருமை, வலியுறுத்தல் என்ற பாயிர வாழ்த்து அதிகாரப் பெயர்களில் வரும் சொற்களையும், பின் வரும் அதிகாரத்தின் பேறு என்பதையும் போல, இவ்வதிகாரப் பெயரிலும்' நலம்' என்ற சொல் வாழ்த்தியல் பொருளும் பண்பும் உடையதே யாகும். பாயிர வாழ்த்தியல் அதிகாரங்களில் தொல்காப்பிய மரபு, சமய மரபு ஆகியவற்றின் வாழ்த்தியற் பண்புபற்றிக் கூறியன யாவும் இங்கும் கொள்ளத்தக்கன ஆகும்.

அதிகார வகுப்புமுறை

அறவாழ்வில் மையக்கடவுட் பண்பான இல்வாழ்வானின் அருளுருவும் அருட்சத்தியும் அறவாழ்வின் மழை முகிற் பண்புமான வாழ்க்கைத் துணைவியின் நலம் முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், இவ்வதிகாரத்தின் முதல் மூன்று குறட்பாக்களும் (51—53) அதன் பொருள் வாழ்வுச் சிறப்பினையும்; அடுத்த மூன்று குறட்பாக்களும் (54—56) அதன் இனவாழ்வுச் சிறப்பினையும்; அவற்றின் பின் வரும் மூன்று குறட்பாக்களும் (57—59) அதன் அறவாழ்வுச் சிறப்பினையும்; கடைசிக் குறட்பா (60) அதன் முப்பால் வாழ்வு, அகப்பால் வாழ்வுச் சிறப்புக்களையும் விதந்தோதுவன ஆகும்.

அதிகார இறுதிக் குறட்பா அடுத்த அதிகாரத்துக்கு வாயிலாய் 'மக்கட்பேறு' குறிக்கிறது.

51. வாழ்க்கையில் வளந்தருபவள் வாழ்க்கைத் துணைவியே!

**மனைத்தக்க மாண்பு உடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

பொ-ரை: குடும்ப ஆட்சியின் தகுதிக்குரிய சிறப்புக்கள் எல்லாம் மரபு வழியே கைவரப் பெற்றவளாகி, தன்னை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்ட கணவனின் வாழ்க்கை வளத்தைப் பெருக்குவதற்குரிய பண்புத் திற மேம்பாடுகளை யெல்லாம் பெற்றவளே நல்ல வாழ்க்கைத் துணைவி ஆவாள்.

க-ரை: குடும்பத்தின் செயலாட்சி ஒழுகு முறைக்கும், கணவன் வாழ்வின் ஆக்க வளத்துக்கும் மனைவியின் தகுதி திறமை பண்புகளே காரணம் ஆகும்.

குடும்ப ஆட்சிக்குரிய தகுதி பெண்ணுக்கு இன மரபால் வருவது. அதில் அவள் சிறப்பு பெண்மை மரபு அதாவது காதலி மரபால் விளைவது. ஆனால் ஆக்க வளத் தகுதி கற்பு மரபுக்குரிய தனி ஆற்றல் ஆகும்.

இலக்-கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்றே. இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன:

1. மனைத்தக்க மாண்பு உடையள் ஆகித் தற்கொண்டான் வளத்தக்காள் (இது எழுவாய்).
2. வாழ்க்கைத் துணை (இது பெயர்ப் பயனிலை).

இக் குறட்பாவில் கொண்டான், வாழ்க்கை ஆகிய இரண்டு சீர்களும் 'தேமா'ச் சீர்களாகவும், 'துணை' ஒன்றே 'மலர்'ச் சீராகவும் வந்தது. மற்றவை யெல்லாம் காய்ச் சீராகிக் குறட்பாவுக்கு வெண் பாவுக்குரிய விழுமிய ஏந்திசைச் செப்பலோசை தந்தது. அத்துடன் காய்ச் சீர்களில் குறட்பாவின் மூன்றும் சீரும் ஐந்தாம் சீரும் முதல் இறுதி அசைகள் எடுத்திசைத்து அலை இடைப் பள்ள ஓசையுடையன வாய், மீந்தன எல்லாம் முதலசை எடுத்திசைத்தன. மாச் சீரிலும் 'கொண்டான்' இறுதியசை எடுத்திசைத்து ஏற்றிசைப்பாகவும், 'வாழ்க்கை' முதலசை எடுத்திசைத்தும், 'துணை' நலிந்திசைத்தும் வந்துள்ளமை காணலாம்.

மனைத்தக்க மாண்பு உடையள் ஆகித் தற்கொண் டான் வளத்தக்காள் என்பது தொகை நிலைப் பெயர்ச் சொல்லாய், வாழ்க்கைத் துணை என்ற பெயர்ப் பயனிலை கொண்டு முடிவுற்றது.

வளத்தக்காள் என்பது வளத் தகுதி என்ற தொகையடியாகப் பிறந்த பெண்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். 'ஆள்' அப் பெண்பால் விகுதி. பகுதியின் 'தி' ஈறு கெட்டு, முன் வலி இரட்டி, உகரம் உயிர் முன் கெட்டது.

வளத் தகுதி என்பது வளத்துக்குரிய தகுதி என நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆகும். இத் தொகையில் வளம் என்பதன் ஈற்று மகரம் கெட்டு, உயிரின் பின் தகரம் இரட்டிற்று.

தற்கொண்டான் வளத் தகுதி என்பது தற்கொண்டானுடைய வளத் தகுதி எனப் பொருள்படும் ஆறும் வேற்றுமைத் தொகை. ஆனால் இவ் வேற்றுமைப் பொருள் வளத் தொகுதி என்பதைத் தொகையாகத் தழுவாமல், வளம் என்பதையும் தக்காள் என்ற வினை மையையும் ஒருங்கே தழுவியதால், பொருளில் தற்கொண்டானுக்குரிய வளத்தைப் பெருக்கும் தகுதியுடையவள் என்ற குறிப்புத் தந்து. உருபும் பயனும் உடன்தொக்க தொகையாயிற்று என்னலாம்.

தற்கொண்டான் என்பது தன்னைக் கொண்டான் என்று பொருள்படும் இரண்டாம் வேற்றுமைத் தொகை. கொண்டான்

என்பது கொள் என்னும் வினைப் பகுதி யடியான இறந்த கால ஆண் பால் வினையாலணையும் பெயர். இதில் தகரம் இடை நிலையாகி டகர மாயிற்று என்றோ, டகரம் இடைநிலை என்றோ கூறலாம். இவ்விடை நிலை இறந்த காலம் குறித்தது. தகரம் அல்லது டகரத்தின் முன் ளகரம் இப் பகுதியில் ணகர மாயிற்று. தன் என்பது தான் என்பதன் வேற்றுமைத் திரிபு. தான் இங்கே வளத்தக்காள் என்று முடியும் தொகையாகிய எழுவாய்ப் பொருளை சுட்டிற்று. குறட்பா வாசகத்தில் பயனிலையாகிய வாழ்க்கைத் துணைப் பொருளும் இவ் எழுவாய்ப் பொருளோ டொத்தியல்வதே யாகும்.

ஆகி என்பது ஆ அல்லது ஆகு என்ற வினைப் பகுதி யடியான வினை எச்சம். 'கு' எழுத்துப் பேறுடனே ஆ என்பது ஆகு என்று யிற்று என்பது தமிழ் இலக்கண நூல் மரபு. குற்றுகர ஈறுடைய பகுதிகள் பெறும் வினை எச்ச விகுதி 'இ' இதில் இணைந்தது. இவ் விகுதி இடைநிலை ஏற்பதில்லை. எழுத்துப் பேற்றின் இறுதி உகரம் கெட்டது. இவ்வினை யெச்சப் பொருள் வளத்தக்காள் என்ற குறிப்பு வினையாலணையின் பெயரின் குறிப்பு வினைப் பொருள் கொண்டு முடிந்து தொகைப்பட்டது.

ஆகி என்ற இவ் வினை எச்சத்தின் வினை முதல் அல்லது எழுவாயாகத் 'தான்' என்பது வருவிக்கப்பட வேண்டும் இது மனைத் தக்க மாண்புடையள் ஆகிய வாழ்க்கைத் துணையை யொட்டிய பொதுப் பெயர் ஆகும்.

வினை எச்சம் குறிப்பு வினையுடன் முடிவதும், தொகைப் படுவதும் திருக்குறளில் மட்டுமே காணப்படும் தொல் பழங்காலத் தமிழ் மரபு ஆகும். தொல்காப்பிய காலத்திலிருந்தே தமிழின் இம் மரபு வழக்கிறந்து வந்துவிட்டது என்னலாம்.

மாண்பு உடையள் என்ற தொகைநிலை எழுவாய்ப் பெயர்ச்சொல் ஆகி, ஆகி என்ற வினையெச்சம் தழுவி, வினையெச்சமாய் இயன் றுள்ளது. மாண்பு உடையள் என்பது மாண்பினை உடையள் என இரண்டாம் வேற்றுமைத் தொகை. இதில் உடையள் என்பது உடைமை என்ற பண்புப் பெயரடியான பெண்பால் குறிப்பு வினையா

லணையும் பெயர். இதில் அள் பெண்பால் விகுதி. பண்பின் 'மை' ஈறு கெட, யகர உடம்படு மெய் தோன்றிற்று. மாண்பு என்பது மாட்சி என்பதுபோலவே ஈறு வேறு பெற்ற பண்புப் பெயர்.

மனைத்தக்க என்ற தொகை பெயரெச்சமாய் மாண்பு உடையள் என்ற தொகையில் மாண்பு என்னும் பெயர் தழுவித தொகைப்பட்டது. இப்பெயரெச்சம் மனைத் தகுதி என்ற தொகையடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம் ஆகும். இதில் இறுதி அகரம் பெயரெச்ச விகுதி. பகுதியின் இறுதியான 'தி' என்பது கெட, இடை வன்மை இரட்டித்து. ஈற்று உகரமும் உயிர் முன் கெட்டது. இணைப் பகுதியாய் வந்த மனைத் தகுதி என்பது மனைக்குரிய தகுதி அல்லது மனை ஆட்சிக்குரிய தகுதி எனப் பொருள்படும் நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும்.

மனைத்தக்க, வளத்தக்காள் என்பன போன்ற தொகைகள் தமிழில் படிப்படியாக வழக்காற்றில் உயிர் மரபிழந்து வந்துள்ள தொல் பழங் காலத் தொகை மரபுகள் ஆகும். ஆயினும் தொலை மேலை மொழிகளில் கூட இத்தகைய வள்ளுவத் தொகை நிழல்கள் (ஆங்கிலம்: கடல்—தக்க ஸீ ஓர்த்தி [1], மனைத்தக்க ஹவுஸ் ஓர்த்தி [2]) வழங்குவது காணலாம்.

வாழ்க்கைத் துணை என்பது இக் குறட்பாவில் பெயர்ப் பயனிலை யாய். வளத்தக்காள் என முடியும் தொகை நிலையை எழுவாயாகக் கொண்டது. அதிகாரத் தலைப்பிலேயே இடம்பெற்ற இத் தொகையின் இலக்கணம் அதிகார முன்னுரையில் கூறப்பட்டதே. வாழ்க்கைக் குரிய துணை என்ற முறையில் அது உருபும் பயனும் உடன்தொக்க தொகையாய்; வாழ்க்கைக்குரிய துணை போன்றவள் என்ற உவமப் பொருள் குறித்த அன்மொழித் தொகையாய், அத்தகையவள் அவள் எனப் பெயர்ப் பயனிலை ஆயிற்று.

வி - ரை : அற வாழ்வில் மையப் பண்புருவான இல் வாழ்வானின் அருளுருவும் அருட் சத்தியும், அற வாழ்வின் மழைமுகிற்பண்பு வளமுமான வாழ்க்கைத் துணைவியின் நலம்

---

1. Sea-worthy 2. House-worthy

முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், இவ் வதிகாரத்தில் இக் குறட்பாவும் அடுத்த இரண்டு குறட்பாக் களும் (51-53) அதன் பொருள் வாழ்வுச் சிறப்பினை விதந் தோதுகின்றன. அவ் வழி இக் குறட்பா வாழ்க்கைத் துணைவி யின் மேல்வரி இலக்கணமாக அவளுக்குக் குடும்ப ஆட்சித் தகுதி, கணவன் வாழ்க்கை வளப் பெருக்கத் திறம் ஆகிய பண்புகளை வகுத்துரைத்து வலியுறுத்துகிறது.

மனைத்தக்க என்பது குடும்ப ஆட்சியின் தகுதிக்குரிய என்று பொருள்படுவதாகும்.

பின்வரும் தக்க, மாண்பு என்ற சொற்குறிப்புக்களால் மனை என்பது இங்கே மனையாட்சி சுட்டி நின்றது. மனைத் தகுதி என்பது இதனால் மனையாட்சிக்குரிய தகுதி ஆகும்.

மனை, இல்லம், அகம், வீடு என்பவை தமிழில் ஒரு பொருட் சொற்கள். இவற்றுள் வீடு குடும்ப வாழ்வுக்குரிய இடத்தை மட்டுமன்றி, துறவோர் வாழ்வின் குறிக்கோளான பேரின்பத்தையும் குறிக்கிறது. இதைப் போலவே அகம் என்ற சொல்லும் குடும்ப வாழ்வுக்குரிய இடமாகிய வீட்டை யும், உள், உள்ளிடம், உள்ளம், அகவாழ்வாகில் காதல் வாழ்வு, ஆன்மிக வாழ்வு ஆகிய பண்புகளையும் சுட்டுவ தாகும். இப் பொருள்களும், பொருள்கள் சுட்டிய பண்பு களும் யாவும் படிப்படியாகப் பேரின்பம் நோக்கி விரிவுறு பவை என்பது காணலாம்.

பேச்சுத் தமிழ் பற்றியவரை அகம் என்ற சொல் தமிழ கப் பிராமணர்களால் மட்டுமே வழங்கப்பெறுகிறது. இதற் குச் சரியாக மலையாள நாட்டுப் பிராமணர் வழங்கும் சொல் மடம் என்பதாகும். அகம் என்ற சொல்லின் பொருளும் கருத்தும் இவ்வாறு தமிழகம் கடந்தும் குடும்ப வீடு, பேரின்ப வீடு ஆகியவற்றுக்குப் பொதுமை வகிப்பது காண்கிறோம்.

இல்லம் என்ற சொல்லே மலையாளத்திலும் தெலுங் கிலும் வீடு என்ற பொருள் குறித்த பெரு வழக்குச் சொல் ஆகும். அதுபோலவே மனை என்ற அப் பொருள் குறித்த சொல்லே கன்னடத்தில் பெரு வழக்குச் சொல்லாய் அமைந்

துள்ளது. வீடு, அகம் என்ற சொற்களில் வளர்ந்துள்ள இன மளாவிய பொதுமை இவற்றையும் தாக்காமலில்லை. மலையாள மொழியில் இல்லம் கூட்டுக் குடும்பத்தின் (தரவாட்டின்) இடத்தையும், கூட்டுக் குடும்பத்தையும் சுட்டுகின்றது. மனை இன்றைய தமிழ் வழக்கிலேயே குடும்ப வீட்டுக்குரிய நிலப் பகுதியையும், அதன் ஓர் அளவெல்லையையும்[1] குறிக்கின்றது. இவ்வாறு இரு மொழிகளிலும் அது இரு வேறு வகையில் பேரின்ப நோக்கி விரிவுற்றுச் செல்வது காண்கிறோம். குடும்பத்தின் விரிவாகிய சமுதாய நோக்கி மலையாளச் சொல்லும், குடும்பம் வழி வழி வாழும் இன வீடு குறித்து, இன நோக்கித் தமிழ் வழக்காறும் இச் சொற்களை இயக்கிச் செல்கின்றன.

திருவள்ளுவர் குடும்ப வீடு குறிக்க மனை என்ற சொல்லையே பெரு வழக்காகக் கையாளுகிறார். மனைவியைக் குறித்த சொல்லாகவும் அதைப் பெரிதும் பயன்படுத்துகிறார். மனை என்ற சொல் மேற்குறித்த எல்லாப் பொருள்களையும் ஒருங்கு சுட்டுவதனாலேயே திருவள்ளுவர் இதனைப் பெரும்பான்மை வழக்காகக் கொண்டுள்ளார் என்னலாம்.

மனை என்ற சொல் மன் (நிலைபெறுதல்; மனிதன்; உடன் வாழ்கிற மக்களுக்குரிய); மன்றல் (நறுமணம்; திருமணம்); மனைவி, மனையாள், மனையாட்டி ஆகிய சொற்களுடன் தொடர்புடையது. 'மனிதன் தன் வாழ்க்கை வளத்துக்குரிய மனைவியுடனாகக் குடும்பத்திலிருந்து கொண்டு இன்ப வாழ்வு வாழ்ந்து, நிலைபேறுடனே சமுதாய வளமும் இன வளமும் பொங்கிப் பொதுளும் எல்லையிலா நீடின்ப நோக்கி வளர்தற்குரிய வாழ்விடம்' என்ற பொருளை 'மனை' என்ற சொல் தன்னகம் கொண்டதாதல் காணலாம்.

நிலைபேறான எல்லையற்ற குடும்ப சமுதாய இன வளத்துக்குரிய திட்டமே அறம். ஆகவே 'மனைத்தக்க' என்பது 'வீட்டின் நிலை பேறுடைய வள நோக்கிய (பொதுவறம் அல்லது இல்லறம், சிறப்பறம் அல்லது துறவறம் ஆகிய

1. One ground or six cents

இரண்டையும் உட்கொண்ட) அறமுறைச் செயலாட்சிக்குரிய தகுதி வாய்ந்த' என்னும் பொருளினை உடையதாகும்.

தக்க என்பது தகுதி வாய்ந்த என்ற கருத்துச் சிறப்பது. இங்கே தகுதி என்பது அன்பு, அன்பின் படர்வான பாசம், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, சமுதாய அறிவு, குறிப் புணர்தல், பிறர்க்குதவும் மனப்பான்மை, பிறர்க்குதவும் செயற் பண்பு, தன்னல மறந்த தொண்டு மனப்பான்மை, கால இடச் சூழலுக்கேற்றபடி நடக்கும் திறமை, தடைகளைத் தாங்கி முயற்சியில் தளராப் பொறுமை, வெற்றி கிட்டும் வரை விடாது உழைக்கும் விடா முயற்சி; முன்னறிந்து செய லாற்றும் திறம், திட்டமிட்டுப் படிப்படியாகச் செயலாற்றும் பண்பு ஆகியவற்றை உட்கொண்ட முழுமைத் தொகுதிப் பண்பு ஆகும்.

இப் பண்புகள் யாவும் களவியற் காலமாகிய கன்னிமைப் பருவத்திலேயே பெண்ணுக்கு இயல்பாய் அமைய வேண்டும் பண்புகள் ஆகும். இவை மரபு வழி வரும் பண்புகள், குடும் பத்தில் பிறந்து வழி வழியாகக் குருதி மூலமாகவே பெரும் பாலும் வந்தமையும் குடும்பப் பண்புகள் ஆகும். 'தக்க' என்ற சொல்லால் இவை 'தகுதி' எனக் குறிக்கப்பட்டதன் காரணம் இதுவே.

தகுதி என்பது தன்மை போன்றது, ஆனால் அது முற்றி லும் இயல்பான தன்மையுமன்று, முற்றிலும் பயின்று மேற் கொள்ளப்படும் பண்பும் அன்று. அது இன முயற்சியால் மரபு வழி வந்தமைந்த பண்பு; முன்னோரது பல தலைமுறை இடைவிடா முயற்சி விளைவாக மரபு வழி பயின்று வந்த தன்மை ஆகும். அது பண்பின் முதிர் பயனாக வரும் துணைமைத் தன்மை [1], அதுவே குடிமை ஆகும்.

பின்வரும் மாண்பு என்ற சொல்லுடன் தகுதி (தக்க) என்ற இச் சொல் ஒப்பிட்டு நிறுத்துக் காணத்தக்க சொல் ஆகும்.

---

1. Habit as second nature

மாண்பு உடையள் என்பது தனிச் சிறப்பு மேம்பாடு உடையவள் என்று பொருள்படுவதாகும்.

மாண்பு இங்கே தகுதிக்கு மேம்பட்ட சிறப்புக் குணங்கள். இதுவும் மரபு வழி வருவதானாலும், அது தாய் மரபு வழியாகவும், காதல் என்னும் பருவ உணர்வு வழியாகவும் தோன்றுவதாகும். தகுதியைக் களவியல் மரபு என்று கூறினால், இதனைக் கற்பு மரபு என்று கூறலாம். ஏனெனில் குடி மரபுக்குரிய பண்புகளுடன் காதல் உணர்வும் கலந்து பெண்டிரிடம் கற்பியலாகப் புத்துருப் பெறத் தோன்றுவதாகும். தகுதியில் இனமரபினையும் பெண்ணின மரபினையும் நாம் முனைப்பாகக் காண்கிறோமென்றால், இந்த மாண்பில் நாம் தமிழ்ப் பெண்ணின மரபை முனைப்பாகக் காண்கிறோம் என்று கூறலாம்.

இருபாலாரிடையேயும் நாம் பண்பு என்று கூறும் திறமே பெண்டிரின் தகுதியுடன் ஒப்பான திறம் ஆகும். அதுபோல இரு பாலாரிடமும் பொதுவாக நாம் சால்பு அல்லது சான்றாண்மை என்று கூறும் திறமே பெண்டிரின் மாண்புடன் ஒப்புடைய திறம் ஆகும். இது கணவன் நலமே தன் நலமாகக் கொள்ளுதல், கணவன் விருப்பமே தன் விருப்பமாகக் கொள்ளுதல், கணவன் தவறுகளைத் தன் தவறாகக் கொண்டு பொறுப்பேற்றுப் பொதிந்து திருத்தும் கடமை ஏற்றல், கணவன் மதிப்பையும் குடி மதிப்பையும் காக்கும் முழுப் பொறுப்பேற்றல், உலகமே தடுமாறினும் தான் தடுமாறாமல் நின்று, உலகை நிலைநிறுத்தும் கற்பெனும் திண்மை உறுதியுடையளாயிருத்தல், உயிர் நீப்பினும் புகழ் நெறி வழாது நிற்றல் ஆகிய திறங்களின் தொகுதி ஆகும்.

இக் கற்பு நெறியாகிய மாண்பும் மரபு வழியாக வருவதாயினும், தனி முறையில் பெண்ணின் காதலாற்றல் வழி பிறந்து வளர்க்கப் பெறுவதாதலாலேயே மாண்பு உடையள் என்று இக் குறட்பாவில் உடைமைப் பொருள்படக் கூறப்பட்டது. குடும்பத்தின் பொது மரபுடைமையை உயர்த்தும் பெண்ணின் தனி உடைமை—பெண்ணின் பொதுநிலைப்

பண்பு கடந்த கண்ணகி பேரன்ற கற்புத் தெய்வங்களின் தெய்வச் சிறப்புடைமை இது என்பது இவ் வுடைமைச் சொல்லால் வலியுறுத்தப்பட்டது.

மனையாட்சி பெண்டிர்க்கு மரபுவழி வரும் இயற்கைப் பண்பு என்பது தோன்ற, 'இயற்கைப் 'பொருளை இற்றெனக் கிளத்தல்' என்ற தொல்காப்பியக் கருத்துப்படி அது 'மனைத்தக்க' என்றும், கற்பு மாண்பு என்னும உடைபோலச் சமுதாய மரபுப் பயிற்சியால் வருவது என்பது தோன்ற 'மாண்பு உடையள்' என்றும் இங்கே கூறப்பட்ட அருநயம் கூர்ந்து கண்டு வியக்கத்தக்கதாகும்.

பெண்களின் நாற்குணங்களாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று கூறப்படும் திறங்களுக்குள்ளே முதல் மூன்றும் பெண்ணின மரபுவழி வரும் தகுதியாகும். பயிர்ப்பே இன மரபுப் பயிற்சியின் விளைவாக வரும் பயிர்ப் பண்பு ஆகும். பயிர்ப்பு என்ற சொல் பயிர், பயில், பயிற்சி ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும். கற்பு என்பது தமிழர் இனவாழ்வின் ஆயிரங் காலத்துப் பயிர் ஆகும், அதன் மரபுவழி இனத்தில் வளரும் பண்பே பயிர்ப்பு.

ஆகி என்பது ஆக அமையப்பெற்று என்ற பொருளுடையது ஆகும். மனைத்தக்க மாண்புடையள் ஆதல் மட்டுமன்றி வளத்தக்காளும் ஆகியவளாயிருப்பவள் என்ற பொருளை இவ்வினை எச்சம் தருகிறது. இவ்வொரு சொல்லே இரு சார்பாக இப்பண்புகளை வகைப்படுத்திப், பிரித்துக் காட்டி பின் அவற்றை தொகைப்படுத்தி இணைத்துக் கூட்டும் அழகு நயம் போற்றத்தக்கதாகும்.

தற்கொண்டான் என்பது இங்கே கணவனைக் குறித்த சொல். தன்னை மனைவியாக ஏற்றுக்கொண்டவன் என்பது இதன சொற்பொருள். கொள்ளுதல் அல்லது ஏற்றுக் கொள்ளுதல் என்ற குறிப்பினாலேயே, கொடுத்தல் என்ற முன்னீட்டுச் செயல் குறிக்கப்பட்டது. ஏனெனில் ஒருவர் கொடுத்தால்தான் இன்னொருவர் பெறமுடியும். இங்கே கொடுப்பவள் பெண். அவள் கொடுப்பதும் தன்னையே

என்பது கவனிக்கத்தக்கது. எனவே தற்கொண்டாள் என்பதன் முழு விரிவுப் பொருள் 'பெண் தன்னையே கொடுக்க, அவளை ஏற்று மனைவியாகக் கொண்டவன்' என்பதாகும்.

பொருள் விரிவு இத்துடன் அமையவில்லை. தன்னையே கொடுத்தலினும் உயரிய கொடுத்தல் தொழில் பிறிதில்லை. இத்தகைய செயல் ஆய்ந்து செய்யப்பட்ட முடிவைக் குறித்துக் காட்டுவதாகும். வேண்டா வெறுப்புடைய ஒருவனிடம் எவரும் எதையும் இவ்வாறு கொடுப்பதில்லை, கொடுத்தாலும் வாங்குபவன் விருப்புடன் கொள்வதில்லை. எனவே, கொண்டானாகிய கணவன் கொள்ளு முன்னும், மனைவி கொடுக்கு முன்னும், கொள்ள விரும்பியவன் நாடிச் சென்று தன் விருப்ப மிகுதி கூறி வேண்டிக்கொண்ட செயலும் இங்கே சுட்டப்படுகிறது.

தற்கொண்டான் என்பது இவ்வாறாக, 'காதலராக வந்து தன்னை நாடியவரிடையே தான் விரும்பித் தன்னையே ஒப்படைக்க, அதை ஆர்வத்துடன் ஏற்றமைந்து ஏற்றுக் கொண்ட கணவன்' என்ற பொருள் தந்துள்ளது.

தமிழர் காதல் என்பது சரிசமக் காதல், இருதிசைக் காதல், செயல் எதிர் செயலாக (எண்ணற்ற எதிரெதிர் நிழல் உருக்கள் காட்டும் இரண்டு எதிரெதிரான நிலைக் கண்ணுடிகள் போல) இரு திசையும் மாறிமாறிச் செயலாற்றி எல்லையற்ற இடையறு வளர்ச்சியுடைய காதல். அது இம் மூன்றேயன்றி நான்காவது ஒரு பண்பினையும் உடையதாகும். இத்தொகைநிலை சுட்டிக் காட்டுவது இந்நான்காம் பண்பேயாகும். அதன்படி காதலில் முதல் நாட்டமும்[1] பலபடி நாட்டமும்[2] ஆடவனது; முடிபுறுதி[3] பெண்டிரது: தொடர்வுறுதியாகிய கடமைப் பொறுப்பு[4] ஆடவனுடையது; தொடர்புப் பொங்கல் வளம்[5] பெண்டிருடையது. நான்காம் பண்பின் இந்நாற் கூறுகளினுள் முதலிரண்டும் பொது

1. Initiative 1. Multiplicity of approach 3. Final sanction 4. Responsibilety of continual maintenance 5, Respcnsibility for dynamic and infinite advance of prosperity

முன்னுரையில் விளக்கப்பட்டுள்ளன. பின்னிரண்டும் சங்க இலக்கியத்தில் கூட மிக அருகலாகவே காணப்படும் வள்ளுவச் சிறப்புக் கருத்துப் பண்புகள் ஆகும்.

நான்காம் பண்பின் நான்கு கூறுகளில் நான்காம் கூறே பின்வரும் வளத்தக்காள் என்ற தொகையால் குறிக்கப் படுவது ஆகும்.

வளத்தக்காள் என்பது வளத்தைப் பெருக்குவதற்கு வேண்டிய தகுதியுடையவள் என்று பொருள்படும்.

மனைத்தக்க மாண்பு என்ற தொகையிலே மனை ஆட்சித் தகுதி என்ற கருத்தும் இன மரபு வளம் கெடாமல் காக்கும் திறம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டு விட்டதனால், இங்கே வளம் என்ற சொல்லே ஒருதலையாக வளர்ச்சியும் வளப்பெருக்கமும் எல்லையற்ற இலக்கு நோக்கிய இடைவிடா வளப்பெருக்கமும் சுட்டி விடுகிறது. மேலே குறிக்கப் பட்ட தொடர்புப் பொங்கல் வளம் இதுவே.

வளம் இங்கே மனை வளமாகக் குறிக்கப் படாமல், தற் கொண்டான் வளமாகவே குறிக்கப்படுவது கூர்ந்து கவனிக்கத் தக்கது. மனையின் இன மரபு வளத்தைப் பேணு வதே மனைவியின் தகுதி, மனை ஆட்சியும் அதுவே. அவள் காதலின் மாண்பு அவ்வின மரபு வளத்தைக் கணவனுக்கும் சமுதாயத்துக்கும் இனத்துக்கும் பரப்ப வழி செய்வதாகும். ஆனால் இங்கே தற்கொண்டான் வளம் என்று கூறப்படுவது இவை கடந்தது, இவற்றுக்கும் மேம்பட்டது. ஏனெனில் தற்கொண்டான் வளம் என்பது இன மரபு வளமாகிய முதலீட்டைப் பெருக்கும் முறையில் சமுதாய உறுப்பினனான 'தற்கொண்டான்' அதாவது கணவன் தன் சமுதாய முயற்சி யால் ஈட்டிச் சேர்க்கும் இன ஆதாயப் பங்கு[1] ஆகும். பெண்ணுக்கு இல்லாத ஆடவனின் சிறப்புக் கடமையும் சிறப்புப் பண்பும் இது. கணவன் முயற்சியால் ஏற்படும் இந்த ஆதாயப் பங்கு, அவன் காலச் சமுதாய முயற்சியின் ஒரு பங்காதலால், சமுதாய முயற்சி முழுவதும் அதனை உருவாக்கு

1. Profit earned or dividend

வதில் ஈடுபடுகிறது. மனைவியின் 'வளத்தகுதி' கணவனுக்குரிய இச் சமுதாய வளத்தையே தன் கற்பின் ஆற்றலால் பெருக்கி, அதனை வருங்கால இனத்துக்கு அளித்துச் செல்லும் நிலை முகிற் பண்பு[1] ஆகும்.

இன வளத்தின் ஒரு சிறு கூறுகவே சமுதாய வளமாகிய ஆதாயமும், அதன் ஒரு சிறு கூறுகவே ஆடவன் முயற்சி வளமும் இருத்தல் கூடும். இனவளம் நூறுயிரம் என்று வைத்துக் கொண்டால், சமுதாய வளம் அதில் ஆயிரத்தில் ஒன்ருக, அதாவது நூறு ஆகவும், ஆடவன் முயற்சி வளம் அதிலும் நூற்றில் ஒன்ருக, ஒன்று என்ற அளவாகவுமே இருக்க முடியும். கற்புடை மனைவி இச்சிறு பகுதியைத் தன் இனவள, காதல் வள, கற்பு வள ஆற்றலால், ஒன்றிரட்டியாக, பன் மடங்காக, பத்து நூறுயிரமாகப் பெருக்கும் ஆற்றலுடையவளாயிருத்தல் வேண்டும் என்று திருவள்ளுவர் இங்கே குறிப்பிடுகிருர்.

இது முடியுமா என்று இக்காலத்தில் நாம் நினைக்கலாம். ஆனல் இது குறிக்கோள் இலக்கு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கண்ணகி ஆற்றலையும் நாம் நம் மனக் கண் முன் கொண்டு வந்து பார்க்க வேண்டும்.

குடும்பச் செட்டு, பயனுடைச் செலவு, வருவாய் பெருக்கும் செலவு, மீப்புச் சேமிப்பு ஆகிய குடும்ப ஆட்சி வளப் பண்புகள்; கணவன் முயற்சியினைத்தன் இன்னுரை, இன்னயப் பண்பு, குறிப்பு மொழி, குறிப் புணர்ந்து ஊக்குதல் ஆகிய பண்புகளாலும், தன் காதலாற்றலாலும் பெருக்கும் திறங்கள்; தன் முக மலர்ச்சியாலும், அக மகிழ்வாலும் கணவனையும் கணவன் மூலமாகச் சமுதாயத்தையும், குழந்தைகளையும் குழந்தைகள் மூலமாக இனத்தையும் வளப்படுத்தும் ஆற்றல்கள்; தன் அறிவாலும், அன்பாலும், பண்பாலும் குழந்தைகளை வளர்த்துப் பேணிப் பயிற்றுவித்து வருங்கால சமுதாய இன மேம்பாடு ஆக்குதல்; கணவனுக்கும் குழந்தைகளுக்கும் உறவினர்க்கும் பிறர்க்கும் உயர்வுள்ளல் மனப்

1. Permanent attribute of fertility

பான்மை ஊக்குதல் ஆகியவற்றை நாம் 'தற்கொண்டான் வளம்' என்பதில் அடங்கிய கற்பு வளத்தின் மாதிரிகளாகக் காட்டலாம்.

இப்பண்புகள் கனவுத் திறங்களல்ல, வாழ்வில் காணப் படும் திறங்களேயாகும். இவற்றைப் பெருக்கும் பண்பு வள்ளுவ அறத்திலே மிகுதி, திட்டமிடப்பட்ட மிகுதி என்பது மட்டுமே இங்கே குறிப்பிடத் தக்கது ஆகும்.

வாழ்க்கைத் துணை என்பது வாழ்ச்கைத் துணை ஆவாள் என்று பொருள் படுவதாகும்,

வாழ்க்கைத் துணை என்பது மனைவி குறித்த வள்ளுவச் சொல், வள்ளுவருக்கேயுரிய சொல். தொல்காப்பிய காலத் திலும் சங்க காலத்திலும் கூட இவ்வழகிய தொகை நிலையைத் தமிழர் கை நெகிழ விட்டனர் என்பது திருவள்ளுவர் காலத்துக்கும் பண்புயர்வுக்கும் ஒரு சான்று ஆகும்.

திருக்குறளுக்கு வெளியே தமிழிலோ, உலகின் வேறு எம்மொழியிலோ, நாட்டிலோ, நாகரிகத்திலோ, காலத் திலோ, இவ்வளவு உயரிய பண்புடைய ஒரு சொல் மனைவி யைக் குறிக்க வழங்கியதில்லை என்று துணிந்து கூறலாம். பண்பார்ந்த பாலர்[1] என்ற பண்புரையும், செம்பாதி[2] வாழ்க்கை உடன் பங்காளி[3] ஆசிய தற்கால மேலையுலகச் சொற்களுங்கூட இவ்வள்ளுவ வழக்குக்கு ஈடாகமாட்டா. ஏனெனில் இவை உபசார வழக்கன்றி, கூறும் சமுதாய மக்களின் உள்ளார்ந்த கருத்துக் குறிப்புக்கள் அல்ல. அத்துடன் திருவள்ளுவர் வாழ்க்கைத் துணைவி என்னாது வாழ்க்கைத் துணை என்று குறித்தது குறிப்பிடத் தக்க தாகும். மனைவி வாழ்க்கைத் துணைவியானால், கணவன் வாழ்க் கைத் துணைவனாகக்கூடும். இது இருவரிடையே சரிசமத்துவம் சுட்டி உடன் பங்காளித்தனமே குறிக்கிறது. ஆனால் வாழ்க் கைத் துணை என்ற பெயர் வாழ்க்கை கணவனுக்கு, அதற்குத் துணை மனைவி என்ற அரிய உண்மையை நமக்குத் தெரிவிக்

1. The finer sex 2. The better half 3. Partner in life

கிறது. திருவள்ளுவர் கருத்தும் இதுவே என்பதைத் 'தற் கொண்டான் வளத்தக்காள்' என்ற தொகை காட்டும்.

பெண்ணுக்கு வாழ்க்கை என்பது கணவன்தான், அவனன்றித் தனக்கு வேறு வாழ்க்கை இருப்பதாக அவள் உணர்வதில்லை. 'தற்கொண்டான் வளத்தக்காள்' என்பது இதுவே காட்டுகிறது. ஆயினும் கணவன் வாழ்வு சமுதாய வாழ்வு மட்டுமேதான் (உலகியல் வாழ்வு, இவ்வுலக வாழ்வு என்று சமய ஏடுகள் கூறுவது இதனையே). அவள் வாழ்வே இன வாழ்வு, அவள் வாழ்வன்றி அவனுக்கு வேறு இன வாழ்வு கிடையாது. பெண்டிரின் இன வாழ்வாகிய இக்கொடி வளர்ச்சியில், ஆடவன் அக்கொடி படர்வதற்குதவும் ஒரு கொழுகொம்பு, அவள் வாழ்க்கைச் சக்கரம் சுழல்வதற்குரிய ஒரு மைய அச்சாக[1] மட்டுமே அமைகிறான். கணவன் தமிழில் கொழுநன் (பெண் கொடி படரும் கொழுகொம்பு) என்றே குறிக்கப்படுதல் காண்க.

மனித இனம் என்பது பெண் இனமே—ஆடவன் அதன் ஒரு சமுதாயக் கருவி மட்டுமே, ஏனெனில் பெண்ணே இன உறுப்பினள். இந்த வள்ளுவக் கருத்து இங்கே தொக்கு நிற்பது காணலாம்.

தற்கால உயிர் நூல் ஆய்வு இக்கருத்துக்கு வலிமை தருகிறது. ஆணின்றி இனப்பெருக்கம் ஏற்படுவது உயர் விலங்குகளிலே அரிதாக உண்டு—கீழினங்களிலே அத்தகைய இனங்கள் பல. பால் வேறுபாடற்ற இனமும், பால் வேறுபாடு இருந்தும் பாலிணைவற்ற பிறப்பும் உண்டு. இன உயிர் என்பது உண்மையில் பெண் உயிரே—இனப் பெருக்கத்தை ஊக்கும் கருவியாகவே, பொலிவிடையாகவே இன வளர்ச்சியின் ஒரு படியில் ஆண்பால் தோன்றியுள்ளது என்பதை உயிர் நூல் காட்டுகிறது.

கணவனது சமுதாய வாழ்வின் தோன்றாத் துணையான வாழ்க்கைப் பின்னணித் தெய்வம் மனைவியே என்பது வள்ளுவக் கோட்பாடு ஆகும்.

---

1. Staff of support, Axis of rotating pivot

முழு நிறைவுடைய பால் பெண்பாலே—இனப் பெருக்கத் தூண்டு கருவியாகப் பிற்படப் படைக்கப்பட்ட தனித்திற [1] அரை குறை உயிரே ஆண் என்னலாம்.

மனைவி வாழ்க்கைத் துணைவி எனப்படாமல், வாழ்க்கைத் துணை என்று கூறப்பட்டது இதனாலேயே. அவள் வாழ்க்கை முழுவதுமே அவன் வாழ்க்கைதான்—அதில் அவள் ஆதாரம், அவன் ஒரு கருவி; அவள் முதலீட்டு வளம், அவன் வட்டி வளம்; அவள் செல்வத்தின் முதலாளி, அவன் கணக்கப் பிள்ளை; அவள் இனத்தின் உயிர், அவன் அதன் உடல்.

ஒரு நாகரிகத்தின் மேம்பாடு பெண்டிர்க்கு அது தரும் உயர்வைப் பொறுத்தது என்று கூறுவதுண்டு. இது மனமாரக் கூறப்படும் உண்மையானால், உலக நாகரிகத்தில் பழந்தமிழர் நாகரிகமே ஓர் இமய மலையாகவும்; அதில் திருவள்ளுவர் திருக்குறளே ஓர் எவரெஸ்டு கொடுமுடியாகவும் அமைகின்றன என்னலாம். வாழ்க்கைத் துணை என்ற வள்ளுவ வழக்கு இதனை மெய்ப்பித்துக் காட்டுவதாகும்.

சிறப்புரை: வாழ்க்கைத் துணைவிக்குரிய உச்ச உயர் பண்பிலக்கான முன் மாதிரி இலக்கணம் முக்கூறுகளாகக் காணத் தக்கது ஆகும். அவையே அவளது குடி இன மரபுத் தகுதி, பெண்மை மரபு மாண்பு, கற்பு மரபின் தனிப் பெருமை ஆகியவை. முன் இரண்டும் குடும்ப ஆட்சிக்கும் இன ஆட்சிக்கும் உரிய தகுதிகள் ஆகும். மூன்றாவது பண்பே கணவனையும் சமுதாயத்தையும் ஆண்டு இனம் வளர்க்கும் அவளது கற்புத் திறமாகிய மழை முகிற் பண்பு ஆகும்.

பொருள்வளம்: *(1)* இக் குறட்பா அதிகாரத்தின் முதற் குறட்பாவாக மட்டுமன்றி அதிகாரத்தின் மையக் குறட்பாவாகவும் அமைந்துள்ளது. ஏனெனில்

---

1. Specialised

அதிகாரத்தின் சமுதாய வாழ்வுப் பகுதி சார்ந்த இம் முதற் குறட்பாவின் விரிவாக அப் பகுதியின் அடுத்த இரண்டு குறட்பாக்களும் (52, 53) அமைந்துள்ளன. இன வாழ்வுப் பகுதியான நடு மூன்று குறட்பாக்களி லும் இதுபோல முதல் இரண்டும் (54, 55) இக் குறட் பாவின் கருத்தே வலியுறுத்தின. அதன் இறுதிக் குறட்பா (50) வகையிலோ இக் குறட்பாவீன் 'தற் கொண்டான் வளத்தக்காள்' ஒரு வாயிலாகவே அமைந்துள்ளது. பின் வரும் குறட்பாக்களும் தொகுத்துச் சேர்த்துக் கூறிய இம் மந்திரக் குறட் பாவுக்குரிய தந்திர விளக்கங்கள் போலவே அமைந் துள்ளன.

இவ்வுண்மைகளை ஆங்காங்கே அவ்வக் குறட்பா வுரைகளில் காணலாம்.

(2) இக் குறட்பாவில் தற்கொண்டான் என்ற தொகையில் 'தன்' என்ற முற்கூறு மூன்றும் சீரின் இறுதியாய் எடுத்திசைத்தும், 'கொண்டான்' என்ற பிற்கூறு மட்டும் தனித்து நின்று முதல் அசை படுத் திசைத்து இரண்டாம் அசை எடுத்திசைத்து ஏற் றிசைப்பாகவும் வந்தன. கொண்டவன் என்று சிறப் பித்துக் கூறப்படுபவன் கணவனானாலும், பிளவுற்ற தொகை நிலைபோல அவளின்றி அவன் வளம் சிறக் காது (52) என்பதும்; சமுதாயத்தில் தனித்தியங்கும் போது கூட, அவள் உயர்வே அவன் உயர்வு (59) என்பதும் (ஏற்றிசைப்புக் காண்க); கொண்டான் என அவன் சமுதாயத்தில் கூறப்பட்டாலும் மெய் யான இன வாழ்வில் அக் கொண்டானைக் கொண் டாள் அவளே என்பதும் (தன் என்பதன் எடுத்

திசைப்புக் காண்க); குடும்பத்தின் அகவாழ்வில் அவளை அரசோச்ச விட்டுச் சமுதாயத்தில் அவன் அவளது பேராளாக நின்றே ஏற்றம் பெறுவான் என்பதும் (தன் எடுத்திசைத்துத் தனி நிற்க, கொண் டான் மாச்சீராய் ஏற்றிசைப்பதால் காண்க) இவற் றால் பெறப்படும் குறிப்புப் பொருள் வளங்கள் ஆகும்.

'ஆகித்தன்' என்ற மூன்றும் சீர் அலையிடைப் பள்ளமாய், இடையே வல்லோசை பெற்று முரிந் திசைப்பதனால், காய்ச் சீர்களாய் ஏந்திசைச் செப்ப லோசையுடன் வந்த முதலிரு சீர்களின் பொருளும் பிறந்த குடும்ப மரபு (இன மரபு) க்கும், பெண்மை மரபுக்கும் அதாவது காதலாகிய பருவ மரபுக்கும் உரிய சிறப்புக்கள் என்பதும்; ஆனால் இவை 'அங்கே' பெற்ற பண்புகளானாலும், 'அங்கே' பயன் விளைவி யாமல், கொண்டானுக்காகவே வாழும் பெண்ணின் கற்பால் கொண்டான் வளத்தினூடாகவே இன வள மாகின்றன என்பதும்; முன் மரபின் தகுதி பின் மரபின் வளமாயினும், இறுதியில் அது இரு சார்புக் குமே இன வளம் பெருக்குவது (அலையிடைப் பள்ள ஓசை காண்க) என்பதும் பெறப்படுகின்றன.

'ஆகித் தன்' என்பதில் வினையெச்ச முடிவாய்க் கிட்டத்தட்ட இடைச் சொல் மாத்திரமாய் இயலும் 'ஆகி' என்பதன் மீது முதலசை எடுத்திசைத்ததனால், மனைவி குடும்ப எல்லையினுள், அதுவும் வாழ் குடும்ப மாகிய வேட்டகத்தினுள் கணவனுக்கு மட்டுமே பெண்மைப் பண்பு மிக்குடையவள், உலகுக்கு அவள் ஆண்மையே குடும்பக் கோட்டையாக நிலவுவது என் பதும்; கணவன் மூலமாகப் பொதுவாகவும், நேரடி

யாகத் தனி முறையிலும் (கண்ணகி கற்புக்காண்க) அது செயலாற்றும் என்பதும் பெறப்பட்டன.

வளத்தக்காள் என்பதன் முதல் இறுதி அசைகளே எடுத்திசைத்து, அச் சீர் அலையிடைப் பள்ள ஓசையுடையதா யுள்ளது. இதனால் அவள் கணவன் வளமே தன் வளமாகக் கொண்டு, தன் வளம் வளர்த்தே அவன் வளம் பெருக்குகிறாள் என்பது குறிக்கப்பட்டது.

தனிக் குறிப்புக்கள்: (1) வாழ்க்கைத்துணை என்பதற்கு அதிகாரத் தலைப்பில் மனைவி என்றே எல்லா உரையாசிரியரும் பொருள் கூறி அதனை ஒரே தொகைச் சொல்லாகவே தான் கொண்டுள்ளனர். ஆயினும் எக்காரணம் கொண்டோ அவர்கள் அதனை வாழ்க்கைத் துணை ஆவாள் என்று கூறி, மனைவிக்குரிய வள்ளுவச் சொல்லை வழங்காது விலகிச்செல்ல முனைந்துள்ளனர். பழைய உரையாசிரியரின் இலக்கணப் போக்கு விடாது தொகைச் சொல் பொருளும் படும்படி கவிஞர் இராமலிங்கனார் இல்வாழ்க்கைக்குத் தக்கத் துணை யாவாள் என்று பொருள் உரைத்தார்.

துணை என்பதற்கு இவர் விளக்கவுரையில் 'இது உபகாரி என்னும் பொதுப்பொருள் உடையதன்று, ஒரே மாதிரியான இரண்டில் ஒன்று, சரியான ஜோடி என்றே பொருள்படுவது' எனக் கூறிச் சென்றார்.

வாழ்க்கைத் துணை என்பதனை இம் மணிவிளக்க வுரையைப்போலவே ஒருதொகைப்படுத்தி மனைவி என்று பொருள் கொண்டனர், புத்துரையாசிரியராகிய பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார், முனைவர் இலக்குவனார், புலவர் குழந்தை ஆகியோர் என்பது குறிப்பிடத்தக்கது.

(2) புலவர் ந. சி. கந்தையா அவர்கள் எப்படியோ வளத்தக்காள் வாழ்க்கை என்பதனை ஆறும் வேற்றுமைத் தொகையாக்கி, 'வாழ்க்கை' அல்லது அதனுடன் முடியும்

தொகையையே எழுவாயாகவும், துணை என்பதனைப் பெயர்ப் பயனிலையாகவும் கொண்டார். இவ்வாறு கொள்ளின் அவர் பதிப்பிற் கண்டதுபோல வாழ்க்கைத்துணை என இடையே வலி மிகுதற்கில்லை. வாழ்க்கை துணை என இயல்பாகவே புணர்ப்பு அமைதல் வேண்டும். அப்படி மாற்றிக்கொண்டாலும் இதில் எத்தகு பொருட் சிறப்பும் தோன்றவில்லை.

(3) மனைத்தக்க மாண்பு உடையளாகி என்பதற்குப் பரிமேலழகர் 'மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடையவளாய்' என்று பொழிப்புரை கூறினர். விளக்கவுரையாக, 'நற்குணங்களாவன: துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார் மாட்டருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன: வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டில் தொழில் வன்மையும், ஒப்பரவு செய்தலும் முதலாயின' என்றார். பிற உரையாசிரியர்களின் பொருள் இதனில் வேறன்று. ஆனால், மணக்குடவர் ஒருவர் மட்டும் 'தான் பிறந்த குடிக்குத் தக்க ஒழுக்கத்தையுடையவளாய்' என்றார். இதன் சொற்பொருள் இம் மணி விளக்கவுரை நோக்கியது.

(4) தற்கொண்டான் வளத்தக்காள் என்பதற்குப் பரிமேலழகர், 'தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கை உடையவள்' என்றார். 'வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது, முதலையறிந்து அதற்கியைய அழித்தல்' என்பது அவர் விளக்கவுரை. எல்லா உரையாசிரியர் பொருளும் இது தழுவியதே.

(5) 'மனைத்தக்க மாண்புடையள்' என்பதற்கும் 'தற் கொண்டான் வளத்தக்காள்' என்பதற்கும் பரிமேலழகர் கொண்ட பொருள் சொற்பொருள்கோள் அளவில் இம் மணி விளக்க வுரையிலிருந்து வேறுபடுவதாயினும், பொருண்மையில் முழுதும் மாறுபடுவதன்று, ஏனெனில் இம் மணி விளக்கவுரைப் பொருளில் அப்பொருள் அடங்குவதேயாகும். தவிர, பரிமேலழகர் நற்குணம், நற்செய்கை என்று பிரித்தாராயினும் செய்கையே இரண்டினடியிலும் குறித்தார்.

மணி விளக்கவுரை கூறும் பண்புகளின் செயல்வடிவுகளாகவே அவை இயல்வன.

53. வாழ்க்கையின் இன்றியமையா உயிர்வளக்கூறு வாழ்க்கைத்துணைவியின் குடும்பவள ஆட்சித்திறம்.

மனைமாட்சி இல்லாள்கண் இல்ஆயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்.

பொ - ரை : *குடும்ப ஆட்சியின் தகுதிக்குரிய திறமைகளும் சிறப்புக்களும் குடும்பத் தலைவியாகிய வாழ்க்கைத் துணைவியிடம் அமையவில்லை யானால், குடும்பத் தலைவனான இல்வாழ்வானின் சமுதாய வாழ்க்கையில் வேறு எத்தகைய சிறப்புக்களும் வளங்களும் அமைந்திருந்தாலும், அந்தச் சமுதாய வாழ்க்கை எத்தகைய பயன்வளமும் அற்றதாகிவிடும்.*

கு-ரை : *இல்வாழ்வானின் சமுதாய வாழ்க்கைக்குரிய சிறப்புக்களும் வளங்களும் முழுவதுமே வாழ்க்கைத்துணைவியின் குடும்ப ஆட்சித் தகுதி திறமைச் சிறப்புக்களின் விளைவே யாகும்.*

இலக். கு : *இக் குறட்பாவில் சார்பு வாசகங்கள் இரண்டு உட்பட இணைவாசகம் ஒன்றே. அவாய் நிலையான சொல் ஒன்று உட்பட இதன் சொற்கள் ஏழு ஆகும்.*

அவையாவன :

(அ) *முதற் சார்பு வாக்கியம் : காரணப் பொருள் வாக்கியம் :*

1. *மனைமாட்சி (இது முதற் சார்பு வாக்கிய எழுவாய்).*
2. *இல்லாள்கண்.*
3. *இல் ஆயின் (இது முதற் சார்பு வாக்கியப் பயனிலை).*

(ஆ) இரண்டாவது சார்பு வாக்கியம்: காரணப் பொருள் மறுப்பு வாக்கியம் :

1. வாழக்கை (இது இரண்டாம் சார்பு வாக்கிய எழுவாய்).

2. வினைமாட்சித்து ஆயினும் (இது இரண்டாம் சார்பு வாக்கியப் பயனிலை).

(இ) முடிபு வாக்கியம் :

1. [அவ் வாழ்க்கை] (இது முடிபு வாக்கிய எழுவாய்).

2. இல் (இது முடிபு வாக்கியப் பயனிலை).

இக் குறட்பாவில் வாழ்க்கை, ஆயினும் ஆகிய இரு சீர்களும் தேமா, கூவிளம் ஆகிய வாய்பாடுகளுக்குரிய ஈரசைச் சீர்கள். 'இல்' ஓரசைச் சீர், ஒரு குறிலாய் வந்த 'நாள்' வாய்பாட்டு நேரசைச் சீர். மீந்த சீர்கள் யாவுமே காய்ச் சீராய் அழகிய எந்திசைச் செப்பலோசை யாய், முதலடி முதலிரு சீர்களிலும் முதலிரண்டசைகளுமே நிமிர்ந் திசைத்து வந்தது காணலாம். இல்லாயின்; வினைமாட்சித்து ஆயினும் என்பவற்றில் மட்டும் முதலசை எடுத்தும் இரண்டாம் அசை படுத்தும் முறிவுற்றும் நின்றன.

மனைமாட்சி என்பது சொல்லளவில் மனையின் மாட்சி என ஆறும் வேற்றுமைத் தொகைபோலத் தோற்றினும், மனையில் அல்லது மனையாட்சியில் வாழ்க்கைத் துணைவியால் காட்டப்படும் மாட்சி என்ற பொருள் சுட்டி இது ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாய் நின்றது. மாட்சி என்பது 'சி' எனும் ஈறு பெற்ற பண்புப் பெயர். இது எழுவாயாய், இல் ஆயின் என்னும் வினை தழுவிற்று.

இல்லாள்கண் என்பது இல்லாளிடத்திவ் எனப் பொருள்படும் ஏழாம் வேற்றுமைப் பெயர். இவ் வேற்றுமைப் பொருள் இல் ஆயின் என்னும் வினை கொண்டு முடிந்தது. கண் இங்கே ஏழாம் வேற்றுமை உருபு. இல்லாள் என்பது 'இல்' என்னும் பெயர்ப் பகுதியுடன் 'ஆள்' எனும் பெண்பால் விகுதி யிணைந்த குறிப்பு வினையாலணையும் பெயர். இல்லத்துக்கு உரியவள் என்பது இதன் பொருள்.

இல் ஆயின் என்பதில் இல் என்பது இன்மையடியான குறிப்பு வினைமுற்று, இது விகுதி பெறு வினைமுற்று. ஆ என்னும் துணை வினைப் பகுதி சேர்ந்து இது இணைப் பகுதியாகி, காரணப் பொருள் வினை எச்ச விகுதியான இன் சேர்ந்து வினை எச்சமாயிற்று. இடையே 'கு' எழுத்துப் பேறு தோன்றிக் கெட்டு, அதனிடமாக யகர உடம்படு மெய் தோன்றிற்று. இக் காரணப் பொருள் வினை எச்சம் முதற் சார்பு வாசகத்தின் பயனிலையாய், எசசமென்ற முறையில் முடிவு வாக்கியப் பயனிலையான 'இல்' என்பதனுடன் சென்று முடிந்தது.

வாழ்க்கை என்பது தொழிற் பெயர். வாழ், பகுதி. கை, விகுதி. விகுதியின் ககரம் இரட்டிற்று. இது இரண்டாம் சார்பு வாக்கிய எழுவாயாய் அதன் பயனிலை கொண்டு, முடிவு வாக்கியத்தின் தோன்றா எழுவாய்க்குரிய சுட்டு முதலாகவும் நின்றது.

எனைமாட்சித்து ஆயினும் என்ற தொகை அதன் இறுதி வினை ஒப்பக் காரணப் பொருள் மறுப்பு வினை எச்சம். ஆயினும் என்பதில் உம் எதிர்மறை சுட்டிற்று. இன் காரணப் பொருள் வினை எச்ச விகுதி, 'ஆ' வினைப் பகுதி. இதன் எழுத்துப் பேறு தோன்றிக் கெட்டு அதனிடமாக யகர உடம்படு மெய் வந்தது.

எனை மாட்சித்து என்ற தொகை எனை மாட்சி என்னும் தொகை நிலைப் பெயரடியான ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. 'து' அம் முற்று விகுதி. இதன் தகரம் இரட்டித்தது. 'எனைமாட்சி'யை உடையது என்பது பொருள். எனைமாட்சி என்பதில் மாட்சி என்பது பண்புப் பெயர். எனை என்பது எனைய என்ற பெயரெச்சத்தின் அகரம் கெட்ட தொகை வடிவம். எனைய என்பது 'எ' என்னும் சுட்டடியாக வந்த குறிப்புப் பெயரெச்சம்.

இல் என்பது 'இன்மை' என்னும் பண்படியான குறிப்பு வினைமுற்று. இது விகுதி பெறாத வினைமுற்று.

வி - ரை: அற வாழ்வில் மையப் பண்புருவான இல் வாழ்வானின் அருளுருவும் அருட் சத்தியும், அற வாழ்வின்

மழை முகிற் பண்புமான வாழ்க்கைத் துணைவியின் நலம் முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், இவ் வதிகாரத்தில் இக் குறட்பா உட்பட முதல் மூன்று குறட்பாக் களும் (51-53) அதன் பொருள் வாழ்வுச் சிறப்பினை விதந் தோதுகின்றன. அவ்வழி இக் குறட்பா வாழ்க்கைத் துணைவி யின் குடும்ப ஆட்சித் தகுதியே வளங்களுக் கெல்லாம் அடிப் படையான வளம், உண்மையான வளம் என்பதையும்; அவ் வளம் இல்லாமல் வேறு எவ் வளங்கள் அமைந்தாலும் அவை வளங்களாக மாட்டா என்பதையும் வலியுறுத்துகின்றது.

மனைமாட்சி என்பது குடும்ப ஆட்சியின் தகுதிக்குரிய திறமைகள், சிறப்புக்கள் ஆகியவற்றைக் குறிக்கும்.

மனைமாட்சி என்பதும் சென்ற குறட்பாவின் மனைத்தக்க மாண்பு என்பதும் கிட்டத்தட்ட ஒரே பண்பு ஆகும். ஆனால் முன் குறட்பாவில் மனைத்தக்க என்பதில் 'தக்க' என்ற சொல்லின் குறிப்பினாலேயே மனை ஆட்சிக்குத் தக்க என்ற பொருள் பெறப்பட்டது. இங்கே மாண்பு என்னாமல் மாட்சி என்றதனாலேயே ஆட்சி என்பது குறித்துக் காட்டப்பட்டது.

மாண்பு என்பது மாணிய பண்பு. மாட்சி என்பது மாணிய ஆட்சி. ஆட்சி இங்கே ஆட்சித் திறம். மாணிய அதாவது மாண்புடைய என்பது தகுதியும் சிறப்பும் உடைய என்பதாம்.

மனை என்பதையே மனையாட்சி என முன் குறட்பாவில் கொண்டதுபோல் கொண்டு, மனையாட்சியின் மாட்சி எனி னும் ஒக்கும்.

இல்லாள்கண் என்பது வாழ்க்கைத் துணைவியினிடத்தில் என்று பொருள்படும் ஏழாம் வேற்றுமை உருபு, இங்கே உடைமைப் பொருள் சுட்டிற்று. இல்லாளின் பண்புகளினிட மாக, பண்புகளிடையே என்பது குறிப்பு.

மனையாட்சிப் பண்புக்கும் சிறப்புக்கும் உரியவள் வாழ்க் கைத் துணைவியேயன்றி வேறு யாருமல்லர்—இல்வாழ்வான் அல்லன் என்பது இங்கே சுட்டப்பட்டது. 'இல்லாள்' வாழ்க்கைத் துணைவியின் பெயராக வழங்கப்படுவதன் குறிப்

பும் இதுவே. ஏனெனில் பொதுவாக இல்லாள் என்பது இல் லத்துக்கு உடையவள், இல்லத்தின் ஆட்சிக்குரியவள் என்ற பொருள் உடையது.

'ஆள்' என்ற பெண்பால் விகுதியே தமிழில் ஆட்சிப் பொறுப்புக் குறிப்பதாகும் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. உண்மையில் ஆண்மை என்பதன் வேர்ச் சொல் இதுவே. ஆளுதல் என்னும் வினைச் சொல்லும் காண்க. சமுதாயத்தின் ஆட்சியாளன் என்ற பொருளிலேயே ஆண் ஆளன் அல்லது ஆண் என்று கூறப்படுகிறான். ஆளன் என்ற இச்சொல்லே அவன் நேரில் ஆள்பவனல்லன், நேரில் ஆள்பவளாகிய ஆள் அல்லது பெண்ணின் பேராள் ஆவான் என்று காட்டிவிடுகிறது.

ஆள் என்ற பகுதியிலிருந்து தமிழில் ஆண், ஆடூஉ, ஆட வன் என்ற பெயர்கள் தோன்றி அவன் சமுதாய ஆட்சியைக் குறிக்கின்றன. ஆனால் இதே 'ஆள்' என்பதன் அடிப்படை யில் தோன்றி 'ஆடவ' என்ற சொல் தெலுங்கில் பெண் ணையே சுட்டி அவள் குடும்ப ஆட்சி குறிக்கின்றது காணலாம்.

இல் ஆயின் என்பதன் பொருள் இல்லையானால் என்பதாம். இன்றேல் என்றோ, இன்றி என்றோ இது ஒரு சொல்லாகவே வந்திருக்கக்கூடும். அவ்வாறின்றி இல் ஆயின் என்று கூறப் பட்டதனால், வேறு எவரிடம் மனைமாட்சி இருந்தாலும் பய னில்லை, இல்லாளிடமே வேறு எத்தகைய மாட்சி இருந்தா லும் பயனில்லை என்ற குறிப்புப் பொருள் வளங்கள் சுட்டப் பட்டன.

வாழ்க்கை என்று இக் குறட்பாவில் வாளா குறிக்கப் பட்டது சமுதாய வாழ்க்கை சுட்டிய குறிப்பே யாகும். இது இல்வாழ்வானின் சமுதாய வாழக்கை. குடும்ப ஆட்சியில் புகழ் நாட்டும் மனைவியை அடையப் பெறாதவர்கள் சமுதா யத்தில் புகழ்பெற நடமாட முடியாது என்று திருவள்ளுவர் பின்வரும் (59) குறட்பாவில் கூறுவது காணலாம்.

எனைமாட்சித்து ஆயினும் இல் என்பது வேறு எத்தகைய சிறப்புக்களும் வளங்களும் உடையதாயினும், எத்தகைய வளமும் சிறப்பும் இல்லாததே யாகும் என்பதாம்.

எனைமாட்சித்து ஆயினும் என்பது எத்தகைய மாட்சிகளோடு பொருந்தியதாயினும் என்பதாம்.

இல் என்பது அம்மாட்சிகள் இல்லையாகப் பெற்றது ஆகும் என்று பொருள்படும். நிறைய இருந்தாலும் சற்றும் இல்லாதது போன்றதே யாகும் என்பது கருத்து.

சமுதாய வாழ்க்கையில் வேறு மாட்சி என்பது இல் வாழ்வானுக்குரிய செல்வமோ, மதிப்போ, ஆட்சியோ, பதவிகளோ, திறமைகளோ, வீரமோ, புகழோ, கலையோ, புலமையோ ஆகிய இவை போன்ற ஆடவர் சிறப்புப் பண்புகள் சுட்டிற்று.

இல்லக் கிழத்தி திறமையோ பண்போ தகுதியோ குன்றியவளாயினும், அல்லது இல்லக் கிழவன் அத்தகைய மனைவி இல்லாதவனாயினும், அத்தகைய மனைவி எய்தப் பெறாதவனாயினும் இல்வாழ்வானின் வாழ்க்கை வளமற்ற பாலைவனமாய் அமையும் என்க.

> **சிறப்புரை:** குடும்பத் தலைவியின் ஆட்சி குடும்ப வாழ்வில் வளம் பெருக்குவது மட்டுமன்று. அதுவே கணவன் மூலம் சமுதாய வாழ்வில் பொலிவூட்டி அதன் மீது வள அலைகள் பரப்புவதாகும்.

பொருள்வளம்: (1) இக்குறட்பாவில் முதல் இரு சீர்களிலும் முதல் இரண்டு அசைகளுமே எடுத்து வந்ததனால் ஏற்படும் நிறை ஓசை 'இல்லாள்கண் மனை மாட்சி'யின் விழுமிய வளப்பண்பை நம் செவிப் புலத்தின் முன் ஓசையுருவாகக் காட்டிவிடுகின்றது. இல்லாயின் என்ற எதிர்மறையிலும், எனைமாட்சித்து என்ற எதிர்மறைச் சுட்டிலும் ஏற்பட்ட ஓசை முறிவும், அவற்றையடுத்துக் குறுக்கமடைந்த 'வாழ்க்கை', 'ஆயினும்' என்ற தேமா, கூவிளச் சீர்களும், இறுதியில் எதிர்மறையை அழுத்தி வலியுறுத்திய தனிக்குறில்

ஓரசைச் சீரும், இல்லாள் ஆட்சி வளம் இல்லாமை யின் வற்றல் தன்மையை நன்கு ஓசைப் படம் பிடித் துக் காட்டுவது காணலாம்.

சிறப்பாக, வழக்கமாக ஈரசையும் படுத்திசைக்கும் இனிய ஓசையுடைய வாழ்க்கை என்ற சொல் இக் குறட்பாவில் முதலசை எடுத்திசைத்து மற்ற அசை குறுகியதனால், தன் வற்றலோசையாலேயே வற்றற் பாலைவனம் என்ற கருத்துப் படம் தருதல் காணலாம்.

திருவள்ளுவர் சொல்லும் பொருளும் போற்றிய பிற்கால நீதி நூலாரும் 'இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை' எனக் கூறியுள்ளனர்.

(2) மனைமாட்சி என்பதனுடன் எனைமாட்சித்து என்பது எதுகையாகவும் எதிரிணையாகவும் வந்தது. மனைமாட்சி முதலீரசை எடுத்து நிறை ஓசையுடைய தாகவும், எனைமாட்சித்து என்பது முதலசை எடுத்து இரண்டாம் அசை படுத்தும் முறிவுற்றும் வந்ததால், மனைமாட்சியின் உயர் நிறைவும், ஏனை மாட்சிகளின் வறட் குறைவும் தொனித்தன. அத்துடன் பின்னதன் எதிர்மறைச் சுட்டு முன்னதன் ஆக்கவளப் பண்பு வலியுறுத்திற்று. மனை என்ற சொல் மன்னுதல் குறிப் பதும், எனை என்பது ஏனை என்பது சுட்டுவதும் இங்கே குறித்துக் காணத்தக்க செய்திகள் ஆகும்.

(3) 'இல்லாயின் இல்' எனக் குறட்பாவில் இரண்டு எதிர்மறைகள் காரிய காரணமாக அடுக்கிய தனால், உண்டாயின் உண்டு என்பதும், உண்டாயின் மட்டுமே உண்டு என்பதும்; அது போலவே வேறு எது உண்டாயினும் இல்லை என்பதும் மட்டுமன்றி,

வேறுஎது இல்லையாயினும் உண்டு என்பதும் தெரிவிக்கப்பட்டன.

(4) இல் எனத் தனிக் குறிலாக முடியும் சீர், லகரத்தில் முடிவதனால், இங்கு குறட்பாவின் வெண்பா ஓசை பாடும் சமயம் மிகுவது காணலாம். எல்லா மெலிகளும் இடைகளும் உயிர்களும் இறுதிக்கண் எல்லையற்று இசையில் நீளத்தக்க பண்புடையன வாயினும், லகரம் இவ்வகையில் இனிமையுடன் அதிர்வும் மிக்கு மெய் போலவும் உயிர் போலவும் இயலும் தன்மை யுடையதாகும். எடுத்திசைக்கும் இகரக் குறிலின் பின் இந்த அதிர்வு எடுத்திசைத்து எல்லையற்று அதிர்விசைப்புறுதல் காணலாம்.

எதிர் மறையான 'இல்' என்பதன் எல்லையற்ற கூர் அதிர்விசைப்பு, உடன்பாட்டில் 'மனை' வளத்தின் 'மன்னிய' எல்லையற்ற இன்னதிர்வு வளம் குறித்துக் காட்டுவதாகும்.

தனிக் குறிப்புக்கள்: (1) இக் குறட்பாவில் வாழ்க்கை என்பதற்குப் பரிமேலழகர் 'அவ்வில் வாழ்க்கை' என்று பொருள் கூறினார். பேராசிரியர் முனைவர் வரதராசனும் கவிஞர் இராமலிங்கனும் 'ஒருவனுடைய வாழ்வு' என்றனர்.

(2) இல் என்பதற்கு இல்லை, இருந்தும் பயனில்லை என்றே எல்லா உரையாசிரியரும் கூறியுள்ளனர். 'இல்லை என்றார், பயன்படாமையின்' என்று பரிமேலழகர் விளக்கம் கூறினார்.

(3) மனைமாட்சி என்பதற்கு மனையறத்துக்குத் தக்க நற்குண நற்செய்கைகள் என்று உரைத்தனர் பரிமேலழகர். குடிக்குத் தக்க ஒழுக்கம் என்றனர் மணக்குடவர்.

(4) எனைமாட்சித்தாயினும் என்பதற்குப் பரிமேலழகர் 'செல்வந்தான் எத்தனை மாட்சிமை யுடைத்தாயினும்'

என்றார். 'எத்தனை நன்மைகளை யுடையதாயினும்' என்று மணக்குடவரும். 'வேறு எவ்வளவு சிறப்புடையதானாலும்' என்று பேராசிரியர் முனைவர் மு. வரதராசனாரும் கூறினர். கவிஞர் இராமலிங்கனார் 'வேறு பெருமைகள்' என்று கூறி. விளக்கவுரையில் 'செல்வம், செல்வாக்கு, கல்வி, கலைத்திறம்' ஆகியவற்றை அப் பெருமைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகக் குறித்தார்.

53. வாழ்க்கைத்துணைவி வேறு செல்வமில்லாமல் தானே செல்வமாவாள் :
பிற செல்வங்களை ஆக்கி, அவற்றின் வளங்களைப் பெருக்குபவளும் அவளே!

[2]இல்லதுஎன், [1]இல்லவள் மாண்புஆனாள் ?[4] உள்ளதுஎன்
[3]இல்லவள் மாணாக் கடை ?

பொ-ரை: [1](ஒருவனுக்கு) வாழ்க்கைத் துணைவியின் குடும்ப ஆட்சித் தகுதி வந்தமையுமே யானால், [2](அவனுக்கு) இல்லாத பொருள் என்று எதுதான் இருக்க முடியும்? (அவன் எல்லா வளங்களுமே உடையவன் ஆவான்) [3](நேர் மாறாக, ஒருவனுக்கு) வாழ்க்கைத் துணைவி அவ்வாறு சிறப்புடையவளாக அமையாவிட்டால், [4](அவனுக்கு) உடையதாக இருக்கத் தக்கது என்று எதுதான் இருக்க முடியும்? (ஒன்றும் இருக்க முடியாது. அவன் எது இருந்தாலும் இல்லாதவனே யாவான்).

க-ரை: சிறந்த மனைவியை உடையவன் எல்லாம் உடையவன்: அப் பெரும் பேறு பெறாதவன் ஒன்றுமே பெறாதவன் ஆவான்.

[நல்வாழ்க்கைத் துணைவி மழையின் நன்னீர் போன்றவள். நன்னீரே உணவாவதுபோல், அவள் தானே செல்வமாவாள். நன்னீர் உணவாக்குவது போல் அவளே செல்வம் ஆக்குவாள். நன்னீர் உணவுடன் துணை உணவாவது போல, அவள் பிற செல்வங்களுக்கு வளந்தரும் செல்வ வளம் ஆவாள். நீர் இல்லாவிடில் உணவு எதுவுமே இல்லாததுபோல, நல்வாழ்க்கைத் துணைவி யில்லாவிட்டால், செல்வமோ வாழ்க்கையோ எதுவும் இருக்க மாட்டாது].

இலக். கு: இக் குறட்பாவின் இணை வாசகங்கள் இரண்டு. ஒவ்வொன்றிலும் காரணச் சார்பு வாசகம் ஒன்று உள்ளடங்கியுள்ளது. அவாய் நிலையான சொற்கள் உள்ளடங்கலாக இதன் சொற்கள் பன்னிரண்டு.

1. முதல் இணை வாசகம்.

[அ] முதல் இணை வாசகச சார்பு வாக்கியம்: காரண வாக்கியம்:

1. [ஒருவனுக்கு].
2. இல்லவள் மாண்பு (இது முதல் இணைவாசகச் சார்பு வாக்கிய எழுவாய்).
3. ஆனால் (இது முதல் வாசகச் சார்பு வாக்கியப் பயனிலை).

[ஆ] முதல் இணை வாசக முடிபு வாக்கியம்.

1. [அவனுக்கு].
2. இல்லது (இது முதல் இணை வாசக முடிபு வாக்கிய எழுவாய்).
3. என் (இது முதல் இணை வசசக முடிபு வாக்கிய வினைப் பயனிலை).

2. இரண்டாம் இணை வாசகம்.

[அ] இரண்டாம் இணை வாசகச் சார்பு வாக்கியம்: காரண வாக்கியம்:

1. [ஒருவனுக்கு].
2. இல்லவள் (இது இரண்டாம் இணை வாசகச் சார்பு வாக்கிய எழுவாய்).
3. மாணுக்கடை (இது இரண்டாம் வாசகச் சார்பு வாக்கியப் பயனிலை).

[ஆ] இரண்டாம் இணை வாசக முடிவு வாக்கியம்.

1. [அவனுக்கு].
2. உள்ளது (இரண்டாம் இணை வாசக முடிபு வாக்கிய எழுவாய்).
3. என் (இரண்டாம் இணை வாசக முடிபு வாக்கிய வினைப் பயனிலை).

இரண்டு சார்பு வாக்கியங்களிலும் இரண்டு முடிபு வாக்கியங்களிலும் தொடக்கத்தில் வரும் 'ஒருவனுக்கு', 'அவனுக்கு' என்ற அவாய்நிலைச் சொற்கள் இல்வாழ்வானையே குறித்தவை. இவை நான்காம் வேற்றுமையாய் அவ்வவ் வாக்கியப் பயனிலைகளைச் சென்று தழுவின.

இல்லவள் மாண்பு என்ற தொகை, பெயர்ச் சொல்லாய், 'ஆனல்' என்ற எச்ச வினையைப் பயனிலையாகக் கொண்டது. இதில் மாண்பு என்பது பண்புப் பெயர். இல்லவளின் மாண்பு என்ற பொருளில் இத் தொகை ஆறும் வேற்றுமைத் தொகை. இல்லவள் என்பது 'இல்' என்ற பெயரடியாக இல்லத்துக்கு உரியவள் என்று பொருள்படும் பெண்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். இது வாழ்க்கைத் துணைவியைச் சுட்டுகிறது. 'அள்' பெண்பால் விகுதி. அ, சாரியை. இடையே வகரம் உடம்படு மெய். பகுதி லகரம் தனிக் குறிலின் பின்னும் உயிரின் முன்னும் இரட்டித்தது.

குறட்பாவின் பின்வரும் 'மாணு' என்ற குறிப்பு வினை எச்சம் நோக்க, அதற்கு எதிரிடையாக மாண்பு என்பதும் மாணுதல் என்ற

பொருளில் குறிப்பு வினையடியான தொழிற் பெயராய் வந்ததோ என்று கருத இடமுண்டு. இத்தகைய இலக்கண வழக்கு தமிழ் இலக்கிய காலம் அறியாததாயினும், திருவள்ளுவர் காலத்தில் இருந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

மாண்பு இவ்வாறு தொழிற் பெயராயின், இல்லவள் மாண்பு என்ற தொகையில் இல்லவள் முதல் வேற்றுமையாய், மாண்பு என்ற தொழிற் பெயரின் வினைப் பகுதியைப் பயனிலையாகக் கொண்டு முடிந்து தொகைப்பட்டது என்னல் வேண்டும்.

இரு வழியிலும் பின்வரும் 'ஆனால்' என்பது இல்லவள் என்பதன் பயனிலையாகாது, மாண்பு என்பதன் பயனிலையாகவே அமைகின்றது என்பது இங்கே குறிப்பிடத்தக்க செய்தி ஆகும்.

ஆனால் என்பது காரணம் சுட்டிய வினையெச்சம், முதல் இணை வாசகச் சார்பு வாக்கியத்தில் இல்லவள் மாண்பு என்பதன் பயனிலையாக வந்தது. இதில் ஆல் காரணப் பொருள் சுட்டிய வினை எச்ச விகுதி. இன் இறந்தகால இடைநிலை. கு எழுத்துப் பேறு. எழுத்துப் பேற்றின் உகரம் உயிர் முன் கெட்டு. ஆகினால் என்ற வடிவமே எழுத்துப் பேற்றுக் ககரமும் இடைநிலை இகரமும் கெட ஆனால் ஆக மருவிற்று.

ஆதல் என்பது அமைதல் என்னும் பொருளுடையது.

இவ்வினையெச்சம் முடிபு வாக்கிய வினாப் பயனிலையான 'என்' என்பது தழுவி முடிவுற்றது.

இல்லது என்பது இன்மை என்னும் எதிர்மறைப் பண்புச் சொல்லடியான ஒன்றன்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். இது இல்லாதது, இல்லாத பொருள் என்னும் பொருளுடையது.

இவ் வினையாலணையும் பெயர் 'என்' என்ற வினாப் பெயரைப் பயனிலையாகக் கொண்டது.

என் என்பது என்ன என்னும் பொருளுடைய வினாப் பெயர். இது முதல் இணை வாசக முடிபு வாக்கிய எழுவாயான இல்லது என்பதன் பயனிலையாக வந்தது. இச் சொல் 'எவன்' என்ற பழந்தமிழ்ச் சொல்லின் மரூஉ என்பர் இலக்கண நூலார்.

இல்லவள் என மீட்டும் வரும் பெயர் முதலில் வந்த இல்லவள் என்பது போலவே இல் என்னும் பெயரடியான பெண்பாற் குறிப்பு வினையாலணையும் பெயராய், வாழ்க்கைத் துணைவியைச் சுட்டிற்று. ஆனால் இங்கே இல்லவள் எழுவாய் வேற்றுமைப் பெயராய், 'மாணக் கடை' என்ற இரண்டாம் இணைவாசகச் சார்பு வாக்கியப் பயனிலைக் குரிய எழுவாயாக நின்றது.

மாணுக்கடை என்பது மாண்புடையவளாக அமையாவிட்டால் என்று பொருள்படும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்ச மாகும். இது காரணம் சுட்டி மறுத்தது. மாண்பு என்ற பண்படியாய் வந்த இது, பண்பின் 'பு' ஈறு கெட்டு, 'ஆ' கார எதிர்மறை இடைநிலை பெற்று, ஏழாம் வேற்றுமை உருபாக வரும் 'கடை' என்பதனையே காரணஞ் சுட்டிய எதிர்மறை விகுதியாகக் கொண்டது.

பண்புப் பெயர்கள் குறிப்பு வினைகளாகும் போது எதிர்மறை வடிவங்களோ, தொழிற்பெயர் வடிவங்களோ என்பது தமிழில் பொதுவாகத் தோற்றுவதில்லை. பண்புப் பெயரடியான குறிப்பு வினையெச்சங்கள் கூடத் தமிழில் இன்று மிக அருகலாகவே வழங்குகின்றன. ஆயினும் திருவள்ளுவர் காலத்திலும் அதற்கு முன்பும் இவை மிகுதியாக வழங்கி யிருக்கலாமோ என்று கருத இடமுண்டு. ஏனெனில் இங்கே 'மாணு' என்ற எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சப் பகுதியும், 'மாணுக்கடை' என்ற எதிர்மறைக் குறிப்பு வினையெச்சமும் வழங்குவதுடன், இதன் எதிரிடையான உடன்பாட்டு வினைபோல 'மாண்பு' முன்பு வழங்கப்பட்டுள்ளது. இதிலும் 'பு' தொழிற்பெயர் விகுதியாய், மாண்பு தொழிற்பெயராகவே இருக்கலாமோ என்ற ஐயப்பாடு மேலே குறிக்கப்பட்டுள்ளது.

மாணுக்கடை என்ற இவ்வினையெச்சம் இரண்டாம் வாசக முடிபு வாக்கிய வினைப் பயனிலையாகிய 'என்' என்பது தழுவி முடிகின்றது.

உள்ளது என்பது உண்மை எனும் பண்படியான ஒன்றன்பால் விகுதி. 'அ' சாரியை. பண்புப் பெயர் ஈறு கெட்டு, முன்னின்ற

ணகர மெய் ளகரமாகத் திரிந்து உயிர் முன் தனிக் குறிற்கீழ் இரட்டித்தது.

இவ் வினையாலணையும் பெயர் இரண்டாம் வாசக முடிபு வாக்கிய எழுவாயாய், என் எனும் வினுப் பயனிலை கொண்டது.

என் என்பது முன்னைய 'என்' என்பது போலவே வினுப் பெயர்ப் பயனிலை. சொல்லிலக்கணம் ஆண்டுக் காண்க. 'உள்ளது' என்ற இரண்டாம் வாசக முடிபு வாக்கிய எழுவாய் கொண்டு இது வினுப் பயனிலையாய் நின்றது.

'என்' என வந்த இரு வினுப் பெயர்ப் பயனிலைகளும் எதிர் மறைப் பொருள் கொண்டு, 'இல்லது என்?' அதாவது இல்லது எதுவுமில்லை, எல்லா வளமும் உண்டு என்ற பொருளிலும்; 'உள்ளது என்?' அதாவது உள்ளது எதுவுமில்லை, வளம் ஒன்றும் கிடையாது, வளங்கள் எவையிருந்தாலும் அவை இல்லாதவை போலவே பயன் அற்றவையாய் இயல்வன என்ற பொருளிலும் வந்தன.

இரு வகை எதிர்மறையும் சேர்ந்து 'தானே எல்லாம்' என்ற பொருள் தந்தன.

வி - ரை : அறவாழ்வில் மையப் பண்புருவான இல்வாழ்வானின் அருளுருவும், அருட் சத்தியும், அறவாழ்வின் மழை முகிற் பண்புமான வாழ்க்கைத் துணைவியின் நலம் முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், இவ் வதிகாரத்தில் இக் குறட்பாவுடன் முடிவுறும் முதல் மூன்று குறட்பாக்களும் (51-53) அதன் பொருள் வாழ்வுச் சிறப்பினையே எடுத்துரைக்கின்றன. அவ் வழி இக் குறட்பா வாழ்க்கைத் துணைவியின் மழை நீர்ப் பண்பு (12) வலியுறுத்தி, நீர் தானே உணவாகவும், உணவை ஆக்குவதாகவும், உணவு சமைப்பதாகவும் அமைவது போல, வாழ்க்கைத் துணைவி வேறு வளமில்லாமல் தானே வளமாகவும், வளம் ஆக்குபவளாகவும், வளம் பெருக்குபவளாகவும் அமையும் பொங்குமா வள அருமைப்பாட்டினை விதந்தோதுகின்றது.

இல்லவள் மாண்பு ஆனால் என்பது இல்வாழ்வானைச் சுட்டி அவனுக்கு இல்லவள் மாண்பு ஆனால் என்பது குறிக்கிறது. இதன் பொருள், 'இல்வாழ்வான் ஒருவனுக்குத் தக்க வாழ்க்கைத் துணைவியின் குடும்ப ஆட்சித் தகுதி வந்து பொருந்தியமையுமானால்' என்பதாகும்.

இல்லவள் என்பது வீட்டுக்குரியவள் அதாவது குடும்பத் தலைவி என்று பொருள்படும் சொல் ஆகும்.

குடும்பத் தலைவி என்று மனைவியையும், குடும்பத் தலைவன் என்று கணவனையும் சுட்டுவது பொது வழக்கானாலும், உண்மையில் குடும்பத்தின் ஆட்சிக்குரிய தலைவி மனைவி மட்டுமே யாவள். இதனை வாழ்க்கைத் துணைவி, இல்லாள், மனைவி என்ற தமிழ்ச் சொற்கள் காட்டும். ஏனெனில் வாழ்க்கைத் துணைவன், இல்லான், மனைவன் என்ற ஆண்பால் மரபு வழக்குகள் இல்லை. திருவள்ளுவர் இத் தமிழ் மரபுப் பண்பை அறிந்தே முதல் மூன்று குறட்பாக்களையும் வகுத்துள்ளார் என்பது கண்டின்புறத் தக்கதாகும். எவ்வாறெனில், முதற் குறட்பாவில் வளத்துக்குரிய ஆட்சித் திறம் மனைவியினதே என்பதை 'மனைத்தக்க மாண்புடையாள்', 'வளத்தக்காள்' என்ற தொகைகளால் சுட்டி, அடுத்த குறட்பாவில் அத்தகைய மனையாட்சித் திறம் படைத்தவளே குடும்பத் தலைவி என்பதனை 'மனைமாட்சி', 'இல்லாள், என்ற சொற்களின் மூலம் தெரிவித்து, இக் குறட்பாவில் 'இல்லவள்' இல்லத்துக்குரிய ஆட்சியாள் என்பது சுட்டியுள்ளார். இல்லாள் என்பது குடும்பத் தலைவி என்ற பொதுப் பொருளையும், இல்லவள் குடும்ப ஆட்சிக்குரிய தலைவி என்ற சிறப்புப் பொருளையும் தொனியாகக் கொண்டுள்ளன,

இல்லாள் என்பது அரசன் மனைவியாகிய அரசியையும். இல்லவள் என்பது தன்னுரிமையிலேயே ஆளும் அரசியையும்[1] குறித்துக் காட்டும் வள்ளுவ வழக்குக்கள் என்னலாம்.

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று சங்ககாலக் கவிஞர்கள் பாடினர். அதுபோலவே திருவள்ளுவரும்

1. Queen Regnant or Qneen with crown in her own right

'இல்லவள் உயிர்த்தே இரு நில மாவளம்' என்று இக் குறட்பாவின் மூலம் வலியுறுத்தி இவ்வதிகாரத்தின் பொருள் வாழ்வுப் பகுதியை முடிக்கிறார் என்னலாம்.

இல்லவள் மாண்பு என்பதன் பொருள் இல்லவளினது மாண்பு அதாவது குடும்பத் தலைவியாகிய வாழ்க்கைத் துணைவியின் குடும்ப ஆட்சிக்குரிய தகுதியும் சிறப்பும் திறங்களும் அடங்கிய மேம்பாடு என்பதாகும்.

இலக்கணக் குறிப்புரையில் சுட்டியபடி, மாண்பு என்பதனைத் தொழிற் பெயராகவும், இல்லவள் என்பதனை அதன் வினைப் பகுதி தழுவிய எழுவாய்ப் பெயராகவும் கொண்டால், இல்லவள் மாண்பு என்பதன் பொருள், 'குடும்பத் தலைவியாகிய வாழ்க்கைத் துணைவியானவள் குடும்ப ஆட்சிக்குரிய மேம்பாடு உடையவளாயிருப்பது' என்பதா யமையும்.

இதுவே சிறப்புப் பொருள், வள்ளுவப் பொருள் என்னலாம்.

ஆனல் என்பது 'அமையுமானல்', 'வந்து பொருந்துமானல்' என்னும் பொருளுடையதாகும்.

ஆதல் இங்கே அமைதல் என்னும் பொருளுடையது, ஆயிருத்தல் என்னும் பொதுப் பொருளில் வழங்கப்பட்டதன்று. இவ் வினைச் சொல்லின் பொருளை அழிவின் எதிர்சொல்லான ஆக்கம் (மேம்பாடு, அழகு, செல்வ மேம்பாடு) என்பதில் காணலாம், இது ஆகும் (பொருந்தும்), இது ஆகாது (பொருந்தாது) என்ற வழக்கிலும், 'ஆவாரை ஆரே அழிப்பர்' என்னும் நீதி நூல் வெண்பா அடியிலும் நாம் இவ் ஆக்கப் பொருளைக் காண்கிறேம்.

இல்லது என் என்பதனல் அவனுக்கு அதாவது 'மேற் குறிப்பிட்ட இல்வாழ்வானுக்கு, அதாவது மேற் குறிப்பிட்டபடி இல்லவள் மாண்பு அமையப்பெற்ற இல்வாழ்வானுக்கு இல்லாத பொருள் எது' என்ற கருத்துக் குறிக்கப்பட்டது. இது எதிர்மறைப் பொருளுடைய வினு ஆதலால், எல்லாம் உண்டு, எல்லா வளங்களும் உண்டு என்ற பொருள் தொனித்

தது. அத்துடன் 'இல்லவள் மாண்பு அமையுமானல் இல்லது என்' என்றதனல், வேறு எவ்வளமும் இல்லையானல்கூட, அவன் எல்லா வளமும் உடையவனுவான் என்பதும்; வாழ்க்கைத் துணைநலம் ஒன்றே வாழ்வின் எல்லா வளங்களும் ஆகும், எல்லா வளங்களையும் ஆக்கும், எல்லா வளங்களையும் வளர்க்கும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டன.

இல்லவள் மாணுக்கடை என்பது 'இல்வாழ்வான் ஒருவனுக்குக் குடும்பத் தலைவியாய் இருக்க வேண்டிய வாழ்க்கைத் துணைவி குடும்ப ஆட்சிக்குரிய தகுதி திறமை சிறப்புக்களாகிய மாண்புகளுடையவளாக அமையாத விடத்தில், என்று பொருள்படும்.

இல்லவள் என்பதற்கு முதல் வரும் இல்லவள் என்பதற்குரிய பொருளே அமையும். ஆனல் மேல் வந்த தொகையில் இல்லவள் என்பது மாண்பு என்ற பண்புடன் ஆறும் வேற்றுமைத் தொகையாகவோ எழுவாய் நிலைத் தொகையாகவோ கொள்ள இடமாயிருக்க, இங்கே அது மாணுச்கடை என்பதனைத் தழுவி எழுவாய் நிலைத் தொகையாகவே அமைந்தது காணலாம். முன் தொகையும் எழுவாய் நிலைத் தொகையே ஆகலாம் என்பதனை இது வலியுறுத்துகிறது.

உள்ளது என் என்பதனல் 'அவனுக்கு அதாவது மேற்குறிப்பிட்ட இல்வாழ்வானுக்கு, அதாவது மேற்குறிப்பிட்டபடி குடும்பத் தலைவியாய் இருக்க வேண்டிய வாழ்க்கைத் துணைவி குடும்ப ஆட்சிக்குரிய தகுதி, திறமை சிறப்புக்களாகிய மாண்புகளை உடையவளாக அமையப் பெருத இல்வாழ்வானுக்கு உள்ள பொருள் என்பது, உள்ளது ஆக அமையக் கூடிய, உள்ளது என்று கூறத்தக்க பொருள் எது என்பது குறிக்கப்பட்டது. இது எதிர்மறைப் பொருளுடைய விஞவாதலால், உள்ளது ஒன்றுமில்லை என்ற பொருள் தொனித்தது. அத்துடன் 'இல்லவள் மாணுவிட்டால் உள்ளது என்' என்றதனல், வேறு எல்லா வளங்களுமே உடையவனுனல் கூட, ஒரு வளமும் இல்லாதவனே யாவான்'; அவ் வளங்கள் எவையுமே அக் குடும்பத் தலைவியின் மாண்பு இல்லாமல் பயன்பட மாட்டா என்ற பொருள்வளம் ஏற்படுகின்றது.

சிறப்புரை: சமுதாய வாழ்வில் இல்வாழ்வானுக் குரியனவாகக் கூறப்படும் எல்லாவகைப்பட்ட வளங்களும் உண்மையில் வாழ்க்கைத் துணைவியின் தகுதியாலாகும் வளங்களே. வளமாகத் தோற்றும் ஏனைப் பண்புகள் யாவும் வளங்களே யல்ல, வறள் பண்புகளாகிய போலிப் பண்புகளே யாகும். நீரில்லா வளங்கள்போல் அவை நீறிப்போன வளத் தோற்றங்களே யாகும்.

பொருள்வளம்: (1) இக் குறட்பாவில் மாணுக் கடை என்பதில் 'கடை' உண்மையில் எதிர்மறை இடைநிலையுடன் வினையெச்ச விகுதியாகவே வந்தா லும், இல்லவள் மாணு நிலை கடைப்பட்ட நிலை என்ற தொனிப்பொருள் தருவது காணலாம். இது கடைச் சீராய், ஓரசைத் தனிச் சீராய் வந்ததனால், இக் கடை நிலை நன்கு வலியுறுத்தப் பட்டுள்ளது காண்க.

(2) இக் குறட்பாவில் வெண்பாவுக்குரியதும் வெண்பாவுக்குச் சிறப்புத் தருவதுமான காய்ச் சீராக வருவது மாண்பானல் என்ற ஒன்றே. இல்லவள் மாண்பின் தனிச் சிறப்பையும், பிற வளமில்லாமலே அது நிறை வளமாம் தனிமையையும் இது சுட்டிக் காட்டுகிறது.

(3) மாண்பானல் என்ற சீரும், மாணு என்ற சீரும் கடை என்ற சீரும் நீங்கலாக மற்ற எல்லாச் சீர்களும் கூவிளச் சீர்கள், இவை கிட்டத்தட்ட வற்றிய காய்ச் சீர்கள் (நடுவெழுத்து நீண்டால் இவை காய்ச் சீராதல் காண்க). இல்லவள் மாண்பு என்ற ஒரு கூறு இல்லாவிட்டால், எல்லாச் சோலை வளங் களும் பாலை வறட்சிகளாம் என்பதை இது குறித்து உணர்த்துகிறது.

(4) மாணுக்கடை என்பதில் மாணு என்ற இரு நெடில் தேமாச் சீரில், இரு நெடிலும் படுத்திசைத்ததனுல் வந்த ஏளனத் தொனியும் வாதத்திற நயமும் வாசித்தே காணத் தக்கன. மாண்பில்லா இல்லாள் இருந்தும் இராதவளே யாவாள் என்ற தொனிப் பொருளும் இதில் தொக்கு நின்றது.

தனிக் குறிப்புக்கள்: இம் மணிவிளக்க வுரை நீங்கலான எல்லா உரைகளுமே இல்லவள் மாண்பானுல் என்ற தொடரில் இல்லவள் என்பதை எழுவாயாகவும், மாண்பு ஆனுல் என்பதைப் பயனிலையாகவும் கொண்டன. ஆயினும், 'ஆனுல்' என்பதை ஆக்கப் பொருளிலும், மாண்பு என்பதைப் பண்புப் பெயராகவும் கொண்டால், இலக்கண வழுவாம் என்பதைப் பரிமேலழகர் உணர்ந்து இலக்கண விளக்கமும் தந்துள்ளார்,

'ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற்செய்கைகள் ஆயினக்கால்' என்பதே பரிமேலழகர் பொழிப்புரை. மேலீடாகப் பார்த்தால் இவ்வுரைத் தமிழிலேயே இலக்கண வழு இருப்பதாகத் தோற்றும். ஆயின் அவர் இலக்கண விளக்கம் கூற விரைந்து, 'மாண்பு' எனக் குணத்தின் பெயர் குணிமேல் நின்றது' என்று விரித்துள்ளார். இதன் பொருள். 'மாண்பு ஆனுல்' என்பது 'மாண்பு உடையவள் ஆனுல்' என்று கொள்ளத்தக்கது ஆம்,

திருவள்ளுவர் காலத்திலோ, சங்க இலக்கியத்திலோ, அணிமைக்கால இலக்கியத்தில்கூட இவ் வழக்கு மரபைக் காண முடியாது. சிறப்பாக ஆதல் என்ற வினையுடன் இதனை இக்காலப் பத்திரிகைத் தமிழிலும், பிரிட்டிஷ் ஆட்சிக் கால மொழிபெயர்பபுகளிலுமே காண முடியும். அவள் அழகானவள், இது அழகானது என்ற வழக்குகளைத் தமிழ்க் கவிதை இலக்கியத்தில் இன்றுகூட மிகுதி காண்பதற்கில்லை.

'ஆனுல்' என்ற இந்த வழக்கைச் சுட்டிக்காட்டியும், இது போன்ற பிற சில சொற்களையும் வழக்குகளையும் காட்டியுமே

முனைவர் இராவ்பகதூர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் திரு வள்ளுவர் கடைச் சங்க காலத்துக்குப் பிற்பட்டவர் என வாதிப்பர். ஆனால் அவர் வாதங்களை ஏற்பதானல், கம்பர், வில்லிபுத்தூரார், அதிவீரராம பாண்டியன ஆகியோர் காலங்களுக்குக்குக்கூடத் திருவள்ளுவர் பெருமான் பிற்பட்டு, பாரதி. பாரதிதாசன் காலத்தவராக, அதுவும் தமிழ்க் கவிதை மரபுப் பயிற்சி யில்லாதவராக இருந்திருக்க வேண்டும். இதனை எவரும் ஒவ்வார் என்பது தெளிவு.

உலகில் பொதுவாக, தமிழகத்தில் சிறப்பாக, மொழி நூல் இன்னும் கல்லாச் சிறு மதலைப் பருவத்திலேயே இருக் கிறது. அதில் விளையாடுவோர் தங்கள் விளையாட்டை அம் மதலைக் கலையின் எல்லைக்குள்ளேயே வைத்துக் கொள்வது நல்லது. கால வரையறை தெரிந்தவிடத்தில் அதனடிப்படை யாக உண்மை ஆராய்வதற்குரியதே அப் பிள்ளைக் கலை. அதைத் தலைமாற்றி வைத்து, அதனடிப்படையில் கால வரையறை தேடுவது குதிரைக்கு முன்னே வண்டி பூட்டுவது போன்றும், பேரன் அறிவிலிருந்து பாட்டன் அறிவு வந்த தென்று கூறுவது போன்றும் உள்ள பேதைமைச் செயல் ஆகும்.

தமிழ் இலக்கிய ஆராய்ச்சித் துறையில் இத்தகு நிலைகள் இன்னும பெரு நடப்பாகவே உள்ளன.

54. மனித இன வாழ்வின் பெருமை கற்புடைப் பெண்மையே.

[2]பெண்ணின் பெருந்தக்க யாஉள,[1] கற்பு என்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

பொ - ரை : பெண்ணிடம் பெண்மையின் உயிர்ப் பண்பான கற்பு என்னும் அக உறுதிப் பண்பு மரபு வழியாக வந்தமைந்து விட்டால், பெண்ணைவிடப் பெருந் தகுதியுடையனவாய் இன வளங்களாகக்

கருதப்படத்தக்க பண்புகள் வேறு எவைதாம் இருக்கக்கூடும்? (இனவளப் பண்புகளில் தலைசிறந்த முதன்மையுடையது பெண்ணின் கற்பே).

க-ரை: பெண்மையின் பீடு பெரிது: கற்புடைப் பெண்மையின் பீடு சொல்லும் தரத்ததன்று. (இயற்கை யெல்லையில் மழை எத்தகைய உயிர் வளமோ, அதே வகையில் இன எல்லையில் தலைசிறந்த உயிர் வளம் பெண்மை. கற்புடைப் பெண்மையின் பெருமை இதனினும் சாலப் பெரிது).

இலக். கு: சார்பு வாக்கியம் ஒன்று உட்பட, இக் குறட்பாவின் இணை வாசகம் ஒன்றே. அவாய்நிலைச் சொல் ஒன்று உட்பட இதன் சொற்கள் நான்கு.

அவையாவன:

[அ] சார்பு வாக்கியம்: காரண நிலை வாக்கியம்.

1. (பெண்) (இது சார்பு வாக்கிய எழுவாய்).
2. கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் (இது சார்பு வாக்கியப் பயனிலை).

[ஆ] முடிபு வாக்கியம்:

1. பெண்ணின் பெருந்தக்க (இது முடிபு வாக்கிய எழுவாய்).
2. யா உள (இது முடிபு வாக்கியப் பயனிலை).

முதற் சார்பு வாக்கியத்தில் 'பெறின்' என முடியும் பயனிலைக்குரிய எழுவாயாய் 'பெண்' என்ற சொல் அவாய்நிலையாய் நின்றது. இதுவும் பின் வரும் பெண்ணின் என்பதும் எந்தக் குறிப்பிட்ட பெண்ணையும் சுட்டாது பெண்மை இனம் சுட்டி நின்றன. அத்துடன் முடிபு வாக்கியத்தில் வெளிப்படையாக வந்த 'பெண்' என்ற

சொல் முன்பாகவும் அவாய்நிலையாகக் கொள்ள வேண்டிய 'பெண்' பின்னாகவும் வந்து, இவ் அவாய்நிலையே குறட்பாவின் பொருள்வளம் பெருக்க உதவிற்று. இதன் முழு விளக்கம் பொருள்வளப் பகுதியில் காண்க.

கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் என்பது அதன் ஈற்றுச் சொல்லொப்பக் காரணநிலைச் சுட்டிய வினை எச்சம். இது அவாய்நிலையாகப் பெண்மை இனஞ் சுட்டிய பெண் என்ற சொல்லின் பயனிலையாய், வினை எச்சம் என்ற முறையில் முடிபு வாக்கியப் பயனிலையாகிய யாவுள என்ற வினைமுற்றுடன் முடிவுற்றது.

பெறின் என்பதில் பெறு பகுதி. இன் காரண நிலை சுட்டிய வினை எச்ச விகுதி. பெறு இங்கே பிறிது வினை ஏற்கும் குறிப்புடைய துணை வினையாய், உண்டாகல் என்பதைப் பெண் என்ற எழுவாயுடன் இணைத்தது. உண்டாகப் பெறு இவ்வாறு ஒரே இணைப் பகுதியாயிற்று.

உண்டு என்பது உண்மை என்னும் பண்படியான திணை பால் பொதுச் சுட்டான ஒருமைக் குறிப்பு வினைமுற்று. இதன் விகுதி 'டு' என்றோ 'டு'வ்வாகத் திரிந்த 'து' என்றோ கூறலாம். இது ஒன்றன் பால் விகுதியாயினும் மரபு அமைதியாகத் திணை பால் பொது ஒருமை சுட்டிற்று. 'ஆ' அல்லது 'ஆகு' என்ற பகுதியுடன் இது சேர்ந்து இணைப் பகுதியாய், அப் பகுதியடியான நிகழ்கால வினையெச்ச வடிவமான உண்டாக என்பதனுடன் துணை வினையான 'பெறு' சேர்ந்து 'உண்டாகப்பெறு' என்ற முக்கூட்டிணை பகுதி ஆயிற்று.

திண்மை என்பது பண்புப் பெயர். இது எழுவாயாய் உண்டாகப் பெறின் என்ற தொகையில் உண்டாகு என்ற பகுதியை வினையாகக் கொண்டு தொகைப்பட்டது. கற்பு என்னும் திண்மை என்பது ஒரு பொருள் சுட்டிய இரு பெயர்த் தொகை. என்னும் என்பது கற்பு, திண்மை ஆகிய இரண்டு சொற்களையும் இணைக்கும் இடைச் சொல். இது என் என்ற அறிமுக வினைப் பகுதியின் உம் ஈறு பெற்ற பெய

ரெச்சமாய் அறிமுக இடைச் சொல்லாயிற்று. 'உம்' விகுதி இடை நிலை பெறுவதில்லை.

பெண்ணின் பெருந்தக்க என்பது பலவின்பாற் பெயர்ச் சொல்லாய், யாஉள என்ற **வினைமுற்றைப்** பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

பெருந்தக்க என்பது பெருந்தகுதி என்னும் பண்புத் தொகை யடியான பலவின் பால் குறிப்பு வினையாலணையும் பெயர், பெருந் தகுதியை உடையவை என்பது பொருள். இது பெருந்தக்கன என் பதன் அன் சாரியை அற்ற வடிவம். அ, பலவின்பால் விகுதி. பகுதி யின் ஈற்றினுள்ள தி கெட்டு, இடை வலி இரட்டி, விகுதி முன் உகரம் கெட்டது.

பெருந் தகுதி என்பது பெருமை என்ற பண்புப் பெயருடன் இணைந்த பண்புத் தொகை.

பெண்ணின் என்பதில் இன் ஐந்தாம் வேற்றுமை உறழ்வுப் பொருள் உருபு. பெண்ணைவிட என்பது பொருள். இவ் வேற்றுமைப் பொருள் பெருந்தக்க என்பதன் வினைப் பொருள் கொண்டு முடிந்து தொகையாயிற்று.

யா உள என்பது அதன் ஈற்றுச் சொல்லொப்ப, பலவின்பால் வினைமுற்று. இது பெருந்தக்க என முடியும் தொகையை எழுவா யாகக் கொண்டு முடிந்தது. இதில் உள என்பதில் உண்மை பகுதி. அகரம் பலவின் பால் விகுதி. மை ஈறு கெட்டு, இடை மெய்யான ணகரம் ளகரமாயிற்று.

யா என்பது பலவின் பால் வினாப் பெயர், எழுவாயாகவே வந்து 'உள' என்னும் பயனிலையுடன் ஒன்றுபட்டு நின்று தொகைப் பட்டது.

இக் குறட்பாவில் முடிபு வாக்கியம் முன்னாகவும் சார்பு வாக்கியம் பின்னாகவும் அமைந்ததனால் ஏற்படும் பொருள்வளம் விளக்கவுரையில் சுட்டப்பட்டு, பொருள்வளப் பகுதியில் முழுதும் விரித்துரைக்கப்படு கின்றது.

வி - ரை : அறவாழ்வின் மையப் பண்புருவாள இல்வாழ்வானின் அருளுருவும் அருட் சத்தியும், அற வாழ்வின் மழைமுகிற் பண்புமான வாழ்க்கைத் துணைவியின் நலம் முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், இவ்வதிகாரத்தில் இக் குறட்பாவும் அடுத்து வரும் இரு குறட்பாக்களும் (54—56) வாழ்க்கைத் துணைவியின் இன வாழ்வு நலம் சிறப்பிப்பவை ஆகும். அவ்வழி இக் குறட்பா வாழ்க்கைத் துணைவியின் இனவழிப் பொது நிலைப் பெண்மைப் பெருமையையும் இன வளம் வளர்க்கும் அவளது சிறப்பு நிலை ஆட்சித் திறனையும் விதந்தோதுகின்றது.

இக்குறட்பா கற்புக்கு இலக்கணமும் சொல் விளக்கமும் கூறி, வள்ளுவச் சொல்லுக்கு வள்ளுவரே வள்ளுவ விளக்கம் தரும் அருஞ் சிறப்பு வாய்ந்த ஒரு சில குறட்பாக்களில் ஒன்று ஆகியுள்ளது.

கற்புப் பற்றி இக்குறட்பா தரும் வள்ளுவச் சொல் விளக்கம் குறித்தும், அவ்விளக்கத்துக்கு விளக்கம் தரும் பிற குறட்பாக்கள் (666, 988) குறித்தும், கற்புப் பற்றிய வள்ளுவக் கோட்பாடு குறித்தும் மேலே பொது முன்னுரையிலேயே விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இக் குறட்பாவின் வாசக வரிசை அமைதியும் அவாய் நிலையும் சுட்டும் தனிப் பொருட் சிறப்பு வளங்கள் பொருள் வளப் பகுதியில் விரிக்கப்படுகின்றன.

கற்பு என்னும் திண்மை என்பது 'களவியலில் ஊன்றிக்கற்பியலில் தன் முடிவே முடிவாகப் பற்றி நிற்கும் பெண்ணின் தனிப் பேருரிமை ஒழுக்கப் பண்பு ஆகும்.

கற்பு என்ற சொல் கல் எனும் பகுதியுடையது. கல் உறுதி குறித்தது. கலை, கல்வி, கல்லூரி, கல்வியூரி முதலிய சொற்களும் இதே பகுதியிலிருந்து தோன்றியவையே. கற்பு என்னும் சொல்லில் இவற்றின் திறங்களும் இடம் பெறுகின்றது. அது பெண்மைக்குரிய இயல்பிலும் சிறப்பிலும் ஊன்றி நிற்கும் பெண்ணின் உறுதியையும், அவ்வுறுதியில் கட்டுண்டு நிற்கும் சமுதாயக் கட்டுப்பாட்டையும், அதனைக்

கடைப் பிடித்து ஒழுகும் இன ஒழுக்கத்தையும் சுட்டும். இங்கே பெண்மைக்குரிய இயல்பு என்பது களவியல். அதில் பெண் தான் நாடாமல் தன்னை நாடிவந்து தன் பாங்கியர் சூழல், கால இடச் சூழல், நாணம் ஆகிய வேலிகள் தாண்டி உளம்புகுந்த ஒருவனைப் பற்றுவதையே அவள் இயல்பாகவும், பற்றி நிற்பதையே சிறப்பாகவும் கொள்கிருள். சமுதாயத் துடன் போட்டியிட்டு அவள் தன் உரிமையை நிறுத்துகிருன். சமுதாயம் அதைக் கடமையாக ஏற்கிறது. அதன் பின் அதுவே இன ஒழுக்கமாக இனத்தில் நீடிக்கிறது.

கற்பு என்னும் திண்மை என்பது இத்தனை பொருள்களை யும் தமிழ் உள்ளங்களில் ஊன்றுவிக்கிறது.

திண்மை என்பது எதனுலும் ஊடுருவப் பெருமல், எதனையும் ஊடுருவி நிற்கும் ஆற்றல், எதனையும் ஊடுருவிச் செல்லும் ஆற்றல் ஆகும். களவியல் என்ற இனத்தின் பழமை மரபு நிலத்தில் ஊன்றி நின்று இன இயல்பின் உறுதி பெற்ற காதல் கற்பாகிச் சமுதாய வாழ்வு ஊடுருவி நின்று, சமுதாயத்துக்கு அதற்கு அடிபணியும் கட்டுப்பாடு கற்பித்து, இனத்தின் வருவள மரபு ஆகிய வானை ஊடுருவி வளர்ந்து, கற்பொழுக்கமாகிய தெய்வ உருவில் இனம் வணங்கு வித்து இன வளம் கற்பித்து வளரும் கற்பக மரமாக விளங்கு கிறது. இவ்வளம் கற்பக மரமாக விளங்கும் கற்பின் தன் மையே திண்மை.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்' (666)

என்ற குறட்பா 'திண்மை' என்ற இச்சொல்லுக்கு மேலும் விளக்கம் தருகிறது. இது திண்ணியரைப் பொதுவாகக் குறிக்கும் குறட்பாவே யாயினும், இக்குறட்பாவின் திண் மைக்குச் சிறப்புப் பொருத்தம் உடையதேயாம். ஏனெனில், திண்ணியர் என்பவர் உளத்திட்பமும், சொல் திட்பமும், செயல் திட்பமும் உடையவர். கற்புடை நங்கையோ, இன மரபுத் திட்ப வழி நின்றே இம் மூவகைத் திட்பமும் உடைய வள் ஆவாள். இனத்தின் மரபு வழி நிற்பவரே திண்ணியர்.

அல்வினத்தின் மூலம் கற்பாதலால், அவர் கற்பு வழி நிற்கும் இரு பாலாரையுமே உளப்படுத்தியவராவர்.

உண்டாகப் பெறின் என்பது 'மரபு வழியாக வந்து அமைந்து விட்டால்' என்று பொருள்படும்.

களவியலும் காதலும் பெண்மை மரபில்வரும் இயல்புப் பண்புகள். கற்பியலும் கற்பும் இன மரபில் வரும் சிறப்புப் பண்புகள். முன்னது மனித இன முழுவதிலும் ஓரளவு பரந்துள்ள பண்பு என்பதும், பின்னது தமிழினம், ஆங்கிலேயரை உட்படுத்திய செர்மானிய இனம் ஆகிய சில இனங்களில் மட்டுமே முனைப்பாக வளர்ந்துள்ள பண்பு என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது ஆகும்.

கற்பெனும் திண்மையுடையதாயின் என்னுமல் உண்டாகப் பெறின் என்று குறிப்பிட்டதன் பொருள், இவ்வியல்பு நிலமும் அதில் ஊன்றி வளரும் சிறப்பு வளமும் இரண்டும் உயிரின, மனித இன, மீ—மனித இன மரபுகளின் வழியாக நீடித்த இனமரபுப் பயிற்சியால் வரும் பண்புகள் என்பதுவே யாகும்.

உண்டாகப் பெறின் என்ற தொகை நிலையான வினை எச்சத்தில், உண்டாதல் என்ற வினைப் பகுதிக்கு வினை முதல் கற்பு என்னும் திண்மை என்பதும், பெறுதல் என்ற வினைப் பகுதிக்கு வினை முதல் அவாய் நிலையாக வந்த பெண் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் கற்பென்னும் திண்மை சிறப்பின மரபு. பெறுபவள் பெண், அவள் கற்பெனும் பெண்மையைச் சிறப்பின மரபாகப் பெறு முன்பே பெண்மை அதாவது களவியல் மரபைப் பொது இன மரபாக, பெண்மை மரபாக ஏற்கெனவே பெற்றவள் ஆவள்.

இங்ஙனம் அவாய் நிலையாகக்கொள்ளப்பட்டபெண் என்ற சொல்லும், குறட்பாவிலேயே முடிபு வாக்கியத்தின் முதற் சொல்லான 'பெண்ணின்' என்பதிலுள்ள பெண் என்ற சொல்லும் வேறுபடுத்தப்படல் குறிக்கொள்ளத் தக்கதாகும். அவாய் நிலையாகக் கொண்ட பெண்ணே கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறுகிறாள். அவள் பொது இன மர

பாகிய பெண்மை மரபில் வந்த பெண் மட்டுமன்று, அம் மரபில் வந்து சிறப்பு இனமாகிய கற்பு மரபிலும் பயின்று வந்த பெண் ஆவாள்.

இங்ஙனம் இக்குறட்பாவில் முடிபு வாக்கியம் பொதுப் பொருண்மையே கூறி, சார்பு வாக்கியம் அது கடந்து சிறப்புப் பொருள் இணைத்து மேம்பட்டு நிற்றல் காணலாம். இதன் முழு விளக்கம் பொருள் வளப் பகுதியில் தரப்படுகிறது.

பெண்ணின் என்பது பெண்ணைவிட, பெண்ணினத்தை விட என்ற பொருளுடையதாகும்.

சார்பு வாக்கியம் கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறும் பெண்ணைச் சிறப்பாகக் குறிப்பிட்டதனால், இங்கே பெண் என்ற சொல் பண்புகளில் ஒரு பண்பாக, அஃறிணை ஒன்றன் பாவில் வைத்தே கூறப்பட்டுள்ளது. பெண் இங்கே பெண்மை அல்லது பெண்ணினம் குறிப்பது என்பதை இது வும் காட்டும்.

பெருந்தக்க என்பது பெருந் தகுதியுடையவை என்ற பொருள் தந்தது. இது இன வளங்களாகக் கருதப்படும் பண்புகளைச் சுட்டிற்று.

யாஉள என்பது 'வேறு எவைதாம் இருக்கமுடியும்' என்று பொருள்படும். இது வினு வடிவாய், எதிர்மறை சுட்டி நின்றது. எனவே இதன் குறிப்பு, வேறு எவையும் இருக்க முடியாது என்பதாகும்.

'பெருந்தக்க', 'யாஉள' என்பவை சுட்டும் இன வளப் பண்புகள் பன்மையில் ஒரே தொகைபோல நின்று பெண் என்ற ஒருமைப் பண்புடன் ஒப்பிடப்பட்டதனால், பெண் ணின் பிறபண்புகளாகிய அவை எவையும் பெருந்தக்க அல்ல என்ற முடிவு ஏற்பட்டது. இது இன வளப்பண்பு களிடையே பெண்மையின் விஞ்சிய தனிப்பெருந் தகுதியைப் பொது நிலையிலும், கற்புடைப் பெண்மையின் விஞ்சிய தனிப் பெருந் தகுதியைச் சிறப்பு நிலையிலும் வலியுறுத்திக் கூறியுள்ளதென்று காணலாம்.

சிறப்புரை: இனவாழ்வின் விளைவான வளமே பெண்மை. அது இனவளப் பண்புகளிலெல்லாம் தலை சிறந்தது. ஆனால் அவ்வின வாழ்வின் நலம் நிலைநிறுத்தும் திண்மையும் அதன் வளம் பெருக்கும் உயிராற்றலும் உடைய பண்பு கற்பு. அது இன வாழ்வின் வருங்கால வளத்துக்குரிய உயிர்விதைப் பண்பு ஆகும்.

பொருள்வளம்: *(1)* இக் குறட்பாவின் வாசக வரிசை யமைதியும் அவாய் நிலைச் சொல்லும் தனிச் சிறப்புக்குரிய பொருள்வளம் குறிப்பவை என்பது இலக்கணக் குறிப்புரையிலும் விளக்கவுரை முகப்பிலும் விளக்கவுரையிலும் சுட்டப்பட்டது.

பொதுவாகச் செய்யுளில் செய்யுளின் சந்தம், எதுகை மோனை முதலிய கட்டுப்பாடுகள் காரணமாகவே சொல் வரிசை மாற்றம் ஏற்படுவதாகும். ஆனால் இயல்பாகவே கவிதை யுள்ளம் படைத்த பெருங் கவிஞர்கள் வகையில் இந்நிலை ஏற்படுவது அரிது. அவர்கள் வரிசை முறை மாற்றத்துக்குப் பெரும்பாலும் பேச்சு மொழிக்கு மிகுதி உரியதல்லாத கவிதை உணர்ச்சியே காரணம் என்னலாம். திருவள்ளுவர் வகையில்கூட நாம் பொதுவாக இத்தகைய வரிசை முறை மாற்றையே எதிர்பார்க்கிறோம். ஆனால் அழகுறுப்புக்களைக்கூடப் பொருள் வளக் கூறுகளாக்கும் மா பெருங் கவிஞர் திருவள்ளுவர். இக் குறட்பாவில் நாம் திருவள்ளுவரின் இப் பண்பை முனைப்பாகக் காண்கிறோம்.

பொழிப்புரையிலும் இலக்கணக் குறிப்புரையிலும் விளக்கவுரையிலும் இவ்வுரையில் யாம் மேற்கொண்டுள்ள குறட்பா வாசக உரை வரிசை முறை இப்

பொருள் வளத்தை அரைகுறையாகவே சுட்டுவது ஆகும். அவ்வரிசை முறை வருமாறு :

'(பெண்) கற்பு என்னும் திண்மை உண்டாகப்பெறின்,
பெண்ணின் பெருந்தக்க யாஉள'

இவ் வரிசை முறையிலேயே அவாய் நிலையாக வருவிக்கப்பட்ட 'பெண்', குறட்பாவில் வெளிப்படையாகவே வழங்கிய 'பெண்ணின்' என்ற சொல்லுக்கு முன் வந்து பொருள் வேறுபாடு சுட்டிவிடுவது காணலாம். சார்பு வாக்கியத்தில் வரும் அவாய் நிலைச் சொல்லான பெண் சிறப்புப் பொருளிலும், முடிபு வாக்கியத்தில் வரும் பெண் பொதுப் பொருளிலும் வந்துள்ளன என்பது வெளிப்படை. இந்நிலையில் குறட்பா ஒரு சார்பு வாசகம் உட்கொண்ட ஒரே இணை வாசகம் போல அமைந்தாலும், உண்மையில் இரண்டு முழு வாசகங்கள் அடங்கியதாகும். ஒரு வாசகம் முடிபு வாக்கியம் கூறும் பொது வுண்மை யடங்கியது. இரண்டாம் வாசகம் சார்பு வாக்கியம் கூறும் சிறப்பு உண்மை அடங்கியது. சிறப்பு உண்மை பொது உண்மையையும் அடக்கியதாதலால், அதில் சார்பு வாக்கியம் மட்டுமன்றி முடிபு வாக்கியமும் இடம்பெறும். ஆனால் பொது உண்மை சிறப்பு உண்மையடங்கியதன்று ஆதலால், அது முடிபு வாக்கியத்தை மட்டுமே கொண்டதாகும்.

முடிபு வாக்கியம் இவ்வாறு பொது உண்மை கூறும் முறையில் ஒரு தனி வாசகமாகும்.

சார்பு வாக்கியம் சிறப்பு உண்மை கூறும் முறையில், சார்பு வாக்கியத்துடன் முடிபு வாக்கியத்தையும்

அவாய் நிலையாகக் கொண்டு ஓர் இணை வாசகமாகக் கொள்ளல் தகும்.

குறட்பாவின் முழுப் பொருள் வளம் காட்டும் பொருள்வள மரபுக்குரிய உரை வரிசை கீழ்வருமாறு ஆகும்.

(1) முதலாவது வாசகம்: தனி வாசகம் ஒன்று: 'பெண்ணின் பெருந்தக்க யாவுள ?'

(2) இரண்டாவது வாசகம்: இணை வாசகம் ஒன்று: (பெண்) கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின், (அப்)பெண்ணின் பெருந்தக்க யாஉள?

குறட்பாவுக்குப் பொழிப்புரைப் பகுதி தரும் பொழிப்புரையும் இப் பொருள்வளம் முழுதும் விளக்கும் வகையில் கீழ்வருமாறு எழுதப்படல் வேண்டும்.

பெண்ணைவிடப் பெருந் தகுதி யுடையனவாய், இன வளங்களாகக் கருதப்படும் பண்புகளில் வேறு எவை தாம் இருக்கக் கூடும்? (இனவளப் பண்புகளில் தலைசிறந்த இனவளப் பண்பு பெண்மையே). அப் பெண்ணிடம் (அத்தகைய பெண்மையை உடைய பெண்ணிடம்) பெண்மையின் உயிர் மரபுப் பண்பான கற்பு என்னும் அக உறுதிப் பண்பு மரபு வழியாக வந்தமைந்து விட்டால், அது அப் பெண்மையையும் தாண்டி இன்னும் ஆற்றல் வாய்ந்த இனவளப் பண்பு ஆகும்.

(2) திருக்குறள் வேதம், அதன் குறட்பாக்கள் மந்திரங்கள் என்பதை இக்காலத்தில் நம்மில் பலர் மறந்து விடுகிறோம், இக் குறட்பா இவ் வகையில் ஒரு

நினைவூட்டு ஆகும். ஏனெனில் 'பெண்ணின் பெருந்தக்க யாஉள' என்ற முதலடியை இரண்டாம் அடியின் பின்னும் சேர்த்துப் பார்த்தால்தான் இம் மந்திரத்தின் மாயம் விளங்கும். 'பெண்ணின் பெருந்தக்க யாஉள? கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின், பெண்ணின் பெருந்தக்க யாவுள ?' என்பதே குறட்பாவின் கருத்து நிறை உருவம். பெண்ணே பீடுடைய பிறப்பு. கற்புடையளான பின், அவள் இன்னும் எவ்வளவோ பீடு சான்ற பிறப்பு என்பதே இக் குறட்பாவின் கருத்து ஆகும்.

மனித இலக்கியம், மனித இலக்கியத்துக்குரிய மனித இலக்கணம் ஆகியவற்றின் எல்லை தாண்டி அகப் பொருளாகிய மறை புதைபொருள், ஞானத் தொனிப் பொருள், உட்பொருள் உடையனவே வேதம், மந்திரம் என்பது நினைவுகூரத் தக்கது.

(3) இவ் வதிகாரத்தின் முதற் குறட்பா (51) விளக்கவுரையில் பெண்களின் நாற்குணங்கள் என்று கூறப்படும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கில், முதல் மூன்று பெண்ணின மரபு வழி வரும் தகுதி. பயிர்ப்பு இனப் பயிற்சி மரபில் வரும் பயிர்ப் பண்பு அல்லது கற்பு என்பது கூறப்பட்டது. சமுதாய வாழ்வுப் பகுதியின் முதற் குறட்பாவான அதில் கூறப் பட்ட அதே பாகுபாடுதான், இன வாழ்வுப் பகுதியின் இம் முதற் குறட்பாவிலும் இன்னொரு வகையில் வலியுறுத்தப் பட்டுள்ளது காணலாம். ஏனெனில் முதல் மூன்று குணங்களாகிய தகுதி, பெண்ணுக்கு இன மரபுவழிப் பெண்மைப் பண்பாக வந்து சமுதாய வாழ்வை இயக்குகின்றது. ஆனால் கற்பு இன மரபில்

வந்த பெண்மையாக மட்டுமன்றி, இன முழுமையின் மரபு வளமாய் நின்று, வருங்கால இன முழுவதையும் வளம் பெறுவிக்கும் இன வள மூல விதைப் பண்பாக இயல்கின்றது. பயிர்ப்பின் முழு நிறைவாகிய கற்பின் தனி முக்கியத்துவம் இதுவே.

(4) பெண்மை இன மரபு பேணுவது. பெண்மை என்ற சொல்லின் பொருள் இதுவே. கற்பு இன மரபு வளர்ப்பது, வருங்கால இனம் பேணும் ஆற்றல் வாய்ந்த வீறுமிக்க பண்பு. கற்பு என்பதனுடன் தொடர்புடைய கற்பனை என்ற சொல் இதனைக் காட்டுகிறது. கருது, கற்பி[1] கருத்து கற்பனை[2] ஆகியவற்றுக்குரிய மேலை மொழிகள் தமிழைப்போல கருக்கோள், கருப்பம் என்ற பொருள்களுடனும் தொடர்பு கொண்டு, இவ் வள்ளுவக் கருத்தின் உலகளாவிய தூவானப் பரப்பைக் காட்டுதல் நோக்கத் தக்கது ஆகும்.

(5) பெண்ணுடன் இக்குறட்பாவில் அஃறிணைப் பண்புகளே ஒப்பிட்டுக் காட்டப்பட்டன. பெண் என்பவள் இன வளங்களின் தொகுதி என்பதை இது சுட்டிக் காட்டிற்று. அத்துடன் பெண் வளம் தரும் நிலம் போன்றவள், இன வளம் தரும் இன நலம் போன்றவள் என்ற கருத்தும் இவ் வழக்கில் தொக்கு நின்றது. அவள் பெண்மை நிலமாக, அவள் 'கற்பு எனும் திண்மை' திண்ணிய கலப்பையின் கொழுவாக நின்று, அதற்கு வளமூட்டுகிறது.

---

1. Coneeive, கருது, கற்பி; கருக்கொள்.
2. Concept, கருத்துரு; Conception கருக்கோள்.

'உண்டாகல்' என்பது தென் பாண்டி (குமரி மாவட்ட) வழக்கில் பெண் கருக் கொள்ளுதலைக் குறிக்கும். திருவள்ளுவர் இவ் வழக்கை அறிந்திருக்க லாம் என்று எண்ண இடமுண்டு. பெண்ணின் பெண்மையே அவள் பெண்பாற் கூருக, அவள் கற்பு எனும் திண்மையே அவள் ஆண்பாற் கூருக, அவள் இனவளமாகிய விதையைக் கருக்கொண்டு உயிர்க் கிருள் என்ற கருத்தும் இக் குறட்பாவில் தொனிக் கிறது.

(6) பெண்களை மெல்லியலார் என்பர் கவிஞர். திருவள்ளுவரோ கற்பெனும் திண்மையே அவள் சிறந்த பண்பு என்ருர். இவை ஒன்றுக்கொன்று மாறு பட்ட கருத்துக்களல்ல. பெண் கணவனுக்கு மெல் லியளாள், அவன் அருளுரு. சமுதாயத்துக்கு அவள் வல்லியலாள். ஏனெனில் வீட்டரசியாகிய அவள் வீட்டில் அவனைத் தெய்வமாகக் கொண்டு அவனுக்கு அடங்கி நடப்பதெல்லாம், அவன் மூலமாகச் சமுதா யத்தை ஆட்சி செய்வதற்காகவே யாகும். கற்பு அல் லது திண்மை ஆண்மைப் பண்பாயமைவதன் விளக் கம் இதுவே—கற்புடைய பெண்ணே இங்ஙனம் கணவனைக் கருவியாக இயக்கி, அவனையே செங்கோ லாகக் கொண்டு, சமுதாயத்தை இயக்க முடியும். இதே பெண் இனத்துக்குத் தாய் ஆவாள். ஏனெனில் அவள் கற்பு இனத்துக்கு மழை வளமாக, தெய்வ மாக அமைகிறது. இதன் விரி விளக்கம் அடுத்த (55) குறட்பாவுரையில் காண்க.

(7) 'கற்பு' என்பதன் முனைப்பான பொருள் திண்மை என்பது தொல்காப்பியர் காலத்துக் குள்ளா

கவே தமிழரால் மறக்கப்பட்டு விட்டது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் தொல்காப்பியத்தில் இச் சொற் பொருளின் தடத்தை யன்றி நேர் பொருளை நாம் காண முடியாது. கடைச் சங்க காலத்திலோ, 'கற்பு' அடுத்த குறட்பாவின் புறப் பொருள்—போலிப் பொருள்—மட்டும் காட்டும் தன்மையடைந்து 'மழை வருவிக்கும் ஒரு செப்படி வித்தைக் கருத்தாக', தெய்விக அருஞ் செயல் நம்பிக்கையாக இழிவுற்று விட்டது.

தனிக் குறிப்புக்கள்: (1) கற்பு என்ற சொல்லுக்குத் திருவள்ளுவரே தாமே திண்மை என விளக்கம் தந்து விட்டார். தமிழில் உரை செய்தவர்கள் யாவரும் இதனால் 'கற்பு' என்பதை ஒரு பிற மொழிச் சொல்போல அப்படியே நிறுத்தி, திண்மை என்ற வள்ளுவ உரைக்கே உரை செய்தனர். அம்முறையில் பரிமேலழகர், புலவர் ந. சி. கந்தையா, பேராசிரியர் முனைவர் இலக்குவனார் ஆகியோர் 'கலங்கா நிலைமை' என்றும்; பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார் உறுதி நிலை என்றும் உரை செய்தனர். புலவர் குழந்தை மன உறுதி என்றே பொழிப்புரைத்து, கற்பு மனவுறுதி யாவது எவ்வாறு என்பதையும் விளக்கியுள்ளார். இது தனிப்படக் குறிப்பிடத் தக்கதாகும்.

கற்பு என்பது 'புதிய கூட்டுறவான கணவனே இனி உயிர்த் துணைவன் எனவும், கணவனோடு கூடி வாழும் இல் வாழ்க்கையே சிறந்ததெனவும் கொள்ளும் மன உறுதி. இதனையே கற்பு என்னும் திண்மை என்றார். இம் மனவுறுதி ஆண் பெண் இருவர்க்கும் உண்டானால்தான் அவர்கள் என்றும் இணைபிரியாமல் இன்ப வாழ்வு வாழ்வார்கள்... இத் திண்மை ஆணுக்குண்டாயின். ஆணைவிடச் சிறந்த பொருள் பெண்ணுக்கில்லை என்பதும் கொள்க' என்பது புலவர் குழந்தையின் பகுத்தறிவார்ந்த விளக்கம்.

கற்பு ஒழுக்கம் பெண்ணுக்கும் ஆணுக்கும் உரியது என்று தன் மதம் நிறுவி வலியுறுத்தும் புலவர் குழந்தையின்

கோட்பாடு திருவள்ளுவருக்கோ தமிழுக்கோ மாறுபட்டதன்று, உடன் பாடானதே. ஆயினும் கற்பு என்பதற்குத் திருவள்ளுவர் கொடுத்த விளக்கமும் தமிழ் வழக்கும் நோக்கினால், தமிழ்ச் சொற் பொருளின்படி களவியல் கற்பியலூடாக, பெண்ணின் முடிபுரிமையே கற்பாகுமாதலால், அது பெண்ணுக்கு மட்டுமே, கற்பு மரபில் வந்த முற்காலத் தமிழ்ச் சமுதாயப் பெண்ணுக்கு மட்டுமே உரிய ஒழுக்கம் ஆகும். ஆணுக்குரிய உறுதி நிறை என்றும் சான்றாண்மை என்றும் இரு தளங்களாகக் கூறப்படும். நிறை ஒருபெண்ணின் கற்பிற்குத் தக நிற்கும் தகுதி. கற்புடைப் பெண் அவனைத் தெய்வமாகக் கொள்வதனால், அவன் அவளது தெய்வமாய் (55) என்றும் அவள் காதலைப் புதிது புதிது தூண்டுறதற்குரிய பேராண்மை உடையவனாய் இயங்குதல் வேண்டும். இரண்டாவதாக அவன் சமுதாயக் கடமையை அக்கற்புடைப் பெண் இயக்க நின்று இயக்கிமுடித்து, இனம் இயக்கும் சான்றோன் ஆகவேண்டும்.

கணவனையும் பிள்ளையையும் சான்றோனாக்குவதே (69) பெண்ணின் கத்புக்குரிய வரை இலக்கு ஆகும்.

தமிழ் உரையாசிர்யர்களைவிடப் பிற மொழிகளின் மொழி பெயர்ப்பாளர்களுக்கே இக்குறட்பா ஒரு தலைவலியாய் அமைந்துள்ளது. கற்பு என்ற சொல்லை அவர்கள் மொழி பெயர்க்காமல் அப்படியே வைத்துக்கொண்டு, திண்மையை மொழி பெயர்த்திருக்கலாம். ஆனால், வள்ளுவச் சொல்லின் பொருள் விளக்கம் காணாத நிலையில், அவர்கள் தமிழுரையாசியரைப் பின்பற்றி அவ்வாறு செய்யத் துணியவில்லை. ஆயினும் ஒவ்வொரு மொழி பெயர்ப்பாளரும் தம் தம்மால் இயன்ற அளவு தம் சூழல், தம் மொழிச் சூழல்களிலிருந்து வள்ளுவம் நோக்கிச் செல்ல முனைந்துள்ள முயற்சிகள் குறிப்பிடத் தக்கவையே யாகும்.

தூய திரு 'ட்ரூ' தம் ஆங்கில மொழி பெயர்ப்பில் கற்பு என்பதை 'உடலுளத் தூய்மை [1] என மொழி பெயர்த்த

1. Chastity

துட்ன், 'கற்பெனும் திண்மை' என்பதனைக் கற்பின் திண்மையாக்கி உடல் உளத் தூய்மையின் நிலவர உறுதி[1] என மொழி பெயர்த்தனர். ஐ. டி. தங்கசாமி என்ற ஆங்கில மொழி பெயர்ப்பாளர் 'அசைக்க முடியாத உடலுளத் தூய்மை'[2] என்றார்.

மலையாள மொழி பெயர்ப்பாளர் வெண்ணிக்குளம் கோபாலக் குறுப்பு அவர்கள் தம் உரைநடை விளக்கத்தில் கற்பைப் பதிவிரதைத் தன்மை (பாதிவ் ரத்யம்) என்றே கூறினாலும், தம் குறட்பாவியல் மொழி பெயர்ப்பில் ஒழுக்கம் என்றே குறித்து, கற்பெனும் திண்மையைத் திண்ணிய கற்பு அதாவது மாற்றேறிய ஒழுக்கம் (மாற்றேறும் சாரித்திரம்) என்றே மொழி பெயர்த்துள்ளார்.

இந்தி மொழி பெயர்ப்பாளர் கற்பு என்பதற்குப் புராண கால சமஸ்கிருதச் சொல்லான பாதி விரத்யம் என்பதைப் பயன்படுத்தாமல், சிலப்பதிகார கால முதல் வட இந்தியாவில் பொதுமக்களிடையே கற்புத் தெய்வத்துக்கு வழங்கும் பத்தினி, சதி என்ற சொற்களில் பிந்தியதைப்பயன படுத்தியுள்ளார். உறுதியான நன் மனைப் பண்பு (த்ருட சதீத்வம்) என்பது அவர் மொழி பெயர்ப்பு. இது புராண காலச் சொல்லைவிடத் தமிழ் மரபுப் பண்பு வாய்ந்த நற் சொல் ஆகும்.

(2) இக்குறட்பாவில் திருவள்ளுவர் பெண்மைக்கே சிறப்புக் கொடுத்து, கற்புடைப் பெண்மைக்குச் சிறப் புக்கு மேற்பட்ட சிறப்பு மேம்பாடு கொடுத்துள்ளார் என் பதே இம் மணி விளக்கவுரையின் கருத்து ஆகும். இது திருவள்ளுவர் முப்பால் ஏடுமுழுவதும் பார்ப்பவர்க்குத் தெள் ளிதில் காணபப்டும் கருந்தேயானாலும், இக் குறட்பாவில் தொனிப்பொருளாக மட்டுமேதெளிவாக காணப்படுவதனுல் இப்பொருளை இம்மணி விளக்கவுரை முற்றிலும் பொழிப் புரையிலோ, விளக்கவுரையிலோ காட்டாமல், அவற்றின் குறிப்பாகச் சுட்டிப் பொருள்வளத்திலேயே விளக்கப்பட்டது.

---

1. Stability of chastity 2. Unshakeable chastity

ஆனால்பரிமேழகரும் கிட்டத்தட்ட எல்லாப் பழய,புதிய உரை யாசிரியர்களும் அதைக் கற்பின் சிறப்பாக மட்டுமே கொண்டனர், பெண்மையின் சிறப்பு ஆகும் என்பதைப் பெரும் பாலும் கூறி மேவிச் செல்லவோ, கூறாமல் விடவோ, கூறிப் பழிப்பு வற்புறுத்தவோ செய்துள்ளனர்.

கூறி மேவிச் செல்பவர் பரிமேலழகரே. 'கற்புடையாள் போல அற முதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிற இன்மையின், யாவுள என்றார்' என்பதே அவர் விளக்கம். இங்கும் சிறப்பு தற்சிறப்பன்று, கணவனுக்குரிய கருவிச்சிறப்பாகவே கூறப்பட்டது காணலாம்.

கூறாது விட்டவர் பிறர்.

கூறிப் பெண் பழிக்கத் துணிபவர் பரிதியார். 'ஸ்திரீ சாதி என்றும் பெரும்பாவக் கன்னியராயினும், பெண் பிறப்பு தெய்வப் பிறப்பு. அது ஏது எனில், பெண்ணிடத்தில் பதிவிரதா பாவகம் உண்டாகில்' என்பர் அவர்.

இங்கே 'பெண் பிறப்பு தெய்வப் பிறப்பு' என்ற தமிழ்க் கருத்தைப் பின் மூச்சிலும், அது பாவப் பிறப்பு என்ற இடைக் காலப் போலிக் கருத்தை முன் மூச்சிலும் ஒரே வாக்கியத்தில் கூறும் பரிதியார் இருவேறுபட்ட நாகரிக அலைகளின் இடைப்பட்ட சுழியிலே உருண்டு புரண்டு நெளிவது காணலாம்.

(3) 'உண்டாகப் பெறின்' என்பதில் 'உண்டாதல்' என்றவினையின் வினைமுதல் 'கற்பென்னும்திண்மை' என்றும்; 'பெறுதல்' என்ற வினையின் வினைமுதல் 'பெண்' என்றும் கொண்டு, முதலடியில் (முடிபு வாக்கியத்தில்) கூறப்பட்ட பெண்ணே இரண்டாம் பகுதியில் (சார்பு வாக்கியத்தில்) கூறப்பட்டாலும், இங்கே அவ்விரண்டாம் பகுதியில் மேம்படு சிறப்புக்குரியவளாகிறாள் என்றும் இக்குறட்பாவின் மணி விளக்கவுரை பொதுவாகவும், பொருள் வளப்பகுதி சிறப்பாகவும் கூறியுள்ளன, இதன் மூலம் பெண்ணின் பெருமையும் சிறப்பும் ஆணோடு ஒப்பவைத்து இனத்துக்குரியதாகக் கூறப் பட்டன. ஆணோடு இங்கே பெண் உரிமையில் ஒப்பும், வளத்

தில் மேம்பாடும் உடையவளாகக் காட்டப்படுகிறாள். ஆனால் உரையாசிரியர்கள் பொதுவாகவும், பரிமேலழகர், காலிங்கர் சிறப்பாகவும், பெண்ணின் பெருமையையும் சிறப்பையும் தற்சார்புடையனவாகக் கொள்ளாமல், ஆணின் சார்பான கருவித் திறங்களாகவே காட்டினர்.

கற்பு என்பதை இதே உரையாசிரியர்கள் ஆணுக்கு அடிமைப்படல் என்று கொண்டதனால், பெண்ணின் மதிப்பு இன்னும் குறைகிறது என்று காணலாம். கற்பு ஆணுக்கு அடிமைப்பட்ட பண்பு அன்று, ஆணையும் அவன் குடி மரபை யும், அவன் இனத்தையும் ஆட்டிப்படைத்து ஆளும் பண்பு ஆகும்.

பெண்ணின் பெருந்தக்க யாவுள என்பதற்கு அவர்கள் தரும் உரை இதனைக் காட்டும்.

'ஒருவன் எய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவையுள' என்று பரிமேலழகரும்; ' இல்வாழ் வானுக்குத் தன் மனையாளிற் பெருந்தன்மையுடைய யாவை' என்று காலிங்கரும் உரைத்துள்ளனர்.

கணவனுக்குரிய வீடு, நிலம், மாடு இருக்கை போன்ற பொருள்களுள் ஒரு பொருளாக, ஆனால் மதிப்பில் மாட்டினும் சற்று மேம்பட்ட பொருளாக அவர்கள் மனைவியை, தங்கள் தாயையும் தங்கை, தமக்கையரையும் உள்ளிட்ட பெண்டி ரைக் கருதினர் என்பது வெளிப்படை.

'பெருந்தக்க', 'யாஉள' என்ற பன்மைகளை அவர்களும் 'மேம்பட்ட பொருள்கள்', 'யாவை உள' என்றும். 'பெருந் தன்மையுடையன மற்ற யாவை' என்றும், பன்மையிலேயே உரைத்தனராயினும், ஏன் ஒருமை வழங்கவில்லை, பன்மை வழங்கினர் என்பது பற்றிக்கூடச் சிந்திக்கத் தவறியுள்ளனர் என்பது காணலாம்.

பெண் இன வளமாதலால், ஆண் பாலாரும் பெண் பாலாரும் ஆகிய இரு பாலாரும் அடங்கிய இனவளம் என் பது குறிக்கவே 'பெண்மை வளம்', 'பெண்ணின் வளம்' என் பது தோன்ற அஃறிணையையும், அவள் மற்ற வளங்களைவிட

மேம்பட்டவளம் மட்டுமல்லன், எல்லா வளங்களின் தொகுதியிலும் மேம்பட்ட வளம் ஆவள் என்பது தோன்றப் பன்மையையும் அவர் வழங்கினர் என்ற முழு விளக்கம் இம் மணிவிளக்கவுரையில் படிப்படியாக இத் தனிக் குறிப்பு வரை சுட்டி விளக்கப்பட்டுள்ளது காணலாம்.

55. கணவனைத் தெய்வம் ஆக்குவது பெண்ணின் கற்பு: கற்புடைய பெண் மழையினும் சாலச் சிறந்த இனவளம் ஆவாள்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை.

பொ—ரை: *சமுதாயத் தெய்வங்களை அவ்வழியில் தான் வணங்காதவளாகி, தன் கணவனையே அத் தெய்வங்களின் திரண்ட ஒருமை வடிவாக மனத்துள் உருவகித்து வணங்கி அவனை அத்தகைய தெய்வமாக்கும் முயற்சியில் முனைபவளாகிய கற்புடைய வாழ்க்கைத் துணைவியானவள், பெய்தால் நல்லது என்று மக்கள் விரும்பும் குறிப்புணர்ந்து காலமும் இடமும் அளவும் அறிந்து பெய்யும் மழை என்று கூறத்தக்கவள் ஆவாள்.*

கு-ரை: *பெண் இனம் தெய்வ இனம். கற்புடைய பெண் இனத் தெய்வம். ஆனல் அறவாழ்வில், அவளது சமுதாயத் தெய்வமாக விளங்குபவன் அவளால் தெய்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவளது கணவன். அவளுக்கு அவளது வருங்கால இன வாழ்வின் ஆட்பெயர், கடவுளின் ஆட்பெயராகிய மையத் தெய்வப் பண்பு அவனே. அவனைக் குடும்பத் தெய்வமாக*

வணங்கி, சமுதாயத் தெய்வாக வழிபட்டு, அவ் வழிபாட்டின் மூலமாகவே அவனை இனத் தெய்வ மாக்குவது அவள் கற்பின் பொறுப்பு, அதன் பெருமையும் அதுவே.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்று. இதன் சொற் கள் இரண்டே.

அவை யாவன:

1. தெய்வம் தொழா அள் கொழுநன் தொழு து எழுவாள் (இது எழுவாய்).
2. பெய் எனப் பெய்யும் மழை (இது பெயர்ப் பயனிலை).

இக் குறட்பாவில் தொழுது எழுவாள் என்பது ஒன்றே காய்ச் சீர், அதுவும் கருவிளங்காய் ஆகிய உறு நெடுஞ் சீர். கடைச சீராகிய மழை ஓரசைச் சீர், மலர் வாய்பாட்டு நிரையசைச் சீர். 'பெய் என' என்னும் இரண்டாம் அடி முதற் சீர் கூவிளம். மற்றவை யாவுமே தேமா புளிமாச் சீர்கள். அத்துடன் எல்லாச் சீர்களுமே இறுதி அசை இறுதி எழுத்து வரை எற்றிசைப்பாய் அமைந்து இக் குறட்பாவுக்கு வெண்பாவுக்கு எளிதில் அமையாத ஓர் இசைப் பண்பு தந்துள்ளது என்பதை வாசித்தே காண்டல் வேண்டும்.

இக் குறட்பாவின் இசையில் பல தமிழர், தமிழ்க் கவிஞர்கள் வழி வழி மரபாக மயங்கி இருக்க வேண்டும். முத்தொள்ளாயிரத்திலும் நள வெண்பாவிலும் இக் குறட்பாவின் எதிரிசைகளை நாம் பல பாடல் களில் காணலாம்.

தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுது எழுவாள் என்ற தொகைநிலை பெயர்ச் சொல். இது எழுவாய், பெய்யெனப் பெய்யும் மழை என்ற தொகை நிலையைப் பெயர்ப் பயனிலையாகக் கொண்டது.

இதில் 'தெய்வம் தொழா அள்' என்பதும், 'கொழுநன் தொழுது எழுவாள்' என்பதும் தனித் தனித் தொகை நிலைகளாய், ஒரு பொருள்

சுட்டிய இரு பெயர்த் தொகையாய் நின்றது. தெய்வம் தொழாஅளும் கொழுநன் தொழுது எழுவாளுமான கற்புடை வாழ்க்கைத் துணைவி என்பது பொருள் ஆகும்.

தெய்வம் தொழாஅள் என்பது தெய்வத்தைத் தொழாஅள் எனப் பொருள்படும் இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆகும். தொழாஅள் என்பது தொழாள் என்பதன் உயிரளபெடுத்த வடிவம். இவ் வளபெடை மூலம் தொழாள் என்ற நிரையசை தொழா அள் என நிரை நேர் அல்லது புளிமாச் சீர் ஆகியதனால், இது செய்யுளிசை அளபெடை ஆகும். தொழாள் என்பது பெண்பால் எதிர்மறை வினையாலணையும் பெயர். தொழு, பகுதி. ஆ, எதிர்மறை இடைநிலை. அள் பெண்பால் விகுதி. விகுதியின் அகரம் எதிர்மறை ஆகாரத்தின் பின் கெட்டது. பகுதி உகரம் எதிர்மறை ஆகாரத்தின் முன் கெட்டது.

கொழுநன் தொழுது எழுவாள் என்பதில் எழுவாள் என்பது பெண்பால் வினையாலணையும் பெயர். எழு, பகுதி. வகரம், காலப் பொதுமை சுட்டிய எதிர்கால இடைநிலை. ஆள் பெண்பால் விகுதி. தொழுது வினையெச்சமாய் எழுவாள் என்பதன் வினைப் பகுதி தழுவித் தொடைப்பட்டது. இதில் தொழு, பகுதி. தகரம் இறந்த கால இடைநிலை. உ, வினையெச்ச விகுதி. கொழுநன் தொழுது எழுவாள் என்பது கொழுநனைத் தொழுது எழுவாள் எனப் பொருள்படும் இரண்டாம் வேற்றுமைத் தொகை. கொழுநன் பெயர்ச்சொல், இது கொழு என்ற பகுதியின் ஆண்பால் விகுதி அன் சேர்ந்து உருவானது. இடையே நகரம் பெயர் இடைநிலை. கொழுநன் என்பதன் ஈற்று னகரமும் வேற்றுமைத் தொகையில் தொழுது என்பதன் முதல் தகரமும் இரண்டும் செய்யுளில் றகரமாயின.

பெய்யெனப் பெய்யும் மழை என்பது அத்தகைய மழை என்று கூறப்படத் தக்கவள் அல்லது அத்தகைய மழையைப் போல்பவள் என்ற பொருளில் பெய்யெனப் பெய்யும் மழை என்ற தொகைப் புறத்தப் பிறந்த அன்மொழித் தொகை. இது குறட்பாவில் பெயர்ப் பயனிலையாய் முதல் பெருந்தொகையை எழுவாயாகக் கொண்டது.

பெய்யெனப் பெய்யும் மழை என்ற தொகை மூலத் தொகை, அதன் இறுதிச் சொல்லே ஒப்பப் பெயர்ச் சொல். பெய்யும் என்பது பெய் என்ற வினைப் பகுதியடியான பெயரெச்சம். உம் இடைநிலை பெறாத எதிர்காலப் பெயரெச்ச விகுதி. இது தொகைப் பகுதியான மழை தழுவித் தொகைப்பட்டது. என என்ற வினையெச்சம் பெய்யும் என்ற பெயரெச்சத்தின் பகுதி தழுவிற்று. இதில் என், பகுதி. அ என்பது இடைநிலை பெறா நிகழ்கால வினையெச்ச விகுதி. இது 'என்று கூற' அல்லது 'என்று விருப்பம் கொள்ள' என்ற பொருளுடையது. பெய், வினைப் பகுதி, இங்கே ஏவல் ஒருமையாய், மக்கள் மழையை நோக்கிப் பெய்வாயாக என்ற விருப்பம் குறிப்பதைத் தெரிவிக்கிறது. ஏவலாகிய பெய் இங்கே அக் கூற்றுக் குறித்துப் பெயர் போல நின்று என் என்பதன் செயப்படு பொருளாய் நின்றது.

வி - ரை: அறவாழ்வின் மையப் பண்புருவான இல் வாழ்வானின் அருளுருவும் அருட் சத்தியும். அறவாழ்வின் மழை முகிற் பண்புமான வாழ்க்கைத் துணைவியின் நலம் முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், இவ் வதிகாரத்தில் இக்குறட்பாவை மையமாகக் கொண்ட மூன்று குறட்பாக்களும் (54—56) வாழ்க்கைத் துணைவியின் இன வாழ்வு நலம் சிறப்பிப்பவை ஆகும். அவ்வழி இக்குறட்பா கற்புடையாளின் இலக்கணம் கூறி, இயற்கையின் வான் வளத்தினும் அவள் இன வான் வளம் சிறந்ததென ஒப்பிட்டுக் காட்டிப் பாராட்டுகின்றது.

தமிழின் தேசியக் காப்பியமாகவும் முத்தமிழ்க் காப்பிய மாகவும், இயல், இசை, கூத்து, நாடகமாகவும் திகழும் சிலப்பதிகாரத்துக்கும் கண்ணகி கற்புக்கும் அதன் மூலமாகக் கீழ்திசையில் ஆசியாவெங்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பரந்து படர்ந்துள்ள பத்தினி வணக்க மரபுக்கும், சமஸ்கிருத புராண இதிகாச இலக்கியங்கட்கும் மூலமுதல் தூண்டுதலாக விளங்குவது இக்குறட்பாவே யாகும். கலித்தொகை முதலிய சங்க இலக்கியப் பாடல்களிலே இக்குறட்பாவின் ஊன்றிய சுவட்டு முத்திரைகளைப் பரக்கக் காணலாம். இக்குறட்பா

வகையில் சங்க காலத்தார் என்ன கருத்துக்கொண்டிருந் தார்கள் என்பதை அக்காலத்து ஏடுகள் தெரிவிக்கின்றன.

இவற்றின் விரி விளக்கம் பொருள் வளப் பகுதியில் கூறப் படுகிறது.

தெய்வம் என்பது ஊழின் பெயர்களுள் ஒன்று, அது ஊழின் அருவக்கூறுகிய கடவுட்கூறு என்பதும், ஊழின் பகுதி யாகிய இயற்கையாற்றலைக் குறிக்கும் என்பதும் பொது முன்னுரையில் விளக்கப்பட்டது.

மனித இன வரலாற்றில் மனிதன் இயற்கையாற்றல்க ளிடையே அழிவாற்றல்களைக் கண்டு அஞ்சி வணங்கி, வணக்க வழிபாட்டால் அவ்வாற்றல்களினிடமிருந்து பாது காப்புப் பெற முயன்ருன் என்பது காண்கிரேம். நாளடை வில் ஆக்க ஆற்றல்களையே கண்டு போற்றி வணங்கி, அவற் றின் ஆதரவால் வளம் பெருக்க முற்பட்டான். இந்த ஆக்க ஆற்றல்களுள் ஒன்ருகிய மழையைத் தமிழர் வான் என்ற தெய்வமாகவும், இந்திரனுகவும் திருவள்ளுவருக்கு முற்பட்டும் பிற்பட்டும் வணங்கி வழிபட்டு வந்தனர். மற்றத் தெய்வங் களின் தலைவனுக இந்திரனும்; எல்லாத் தெய்வங்களும் வானில் தங்கும் வானவர்களாகவும் கருதப்படுவது இதனுலேயே.

இயற்கை ஆற்றலோடு ஒப்ப இயற்கையின் ஆக்க ஆற்ற லாகப் பயன்படுவது ஆகூழ் அல்லது இன நலப் பண்பு: இன நலத்துக்கு உழைத்து மாண்ட பெரியார்கள் இதனு லேயே இயற்கையாற்றல்களாகிய தெய்வங்களோடு ஒத்த தெய்வங்களாக வணங்கப்பட்டனர் (50). இவர்களே சமு தாயத் தெய்வங்கள். சமுதாயத்தில் மக்களால் வணங்கப் படும் இத்தகு தெய்வங்களைக் கற்புடைய பெண்கள் வணங் குவதில்லை. ஏனெனில் அவர்கள் தாங்களே இனத் தெய்வங் கள், சமுதாயத் தெய்வங்களை ஆக்கும் தெய்வங்கள். தவிர, தம் தெய்வமாக அவர்கள் தேர்ந்தெடுக்கும் கணவனே அவர் களுக்கு அவ்வெல்லாச் சமுதாயத் தெய்வங்களின் ஒரே தொகுதி உருவமாக விளங்குகிருன். மூன்ருவதாக, அவர்கள் தெய்வமாக வணங்கும் கணவனே அவர்கள் கற்பாற்றலின்

விளைவாகச் சமுதாயத் தெய்வங்களில் ஒருதெய்வமாக ஆகத் தக்கவன்.

தெய்வம் தொழாஅள் என்று கற்புடைய வாழ்க்கைத் துணைவி சிறப்பிக்கப்படுவது இதனாலேயே யாகும்.

தொழாஅள் அல்லது தொழாள் என்பது சமுதாயத் துடன் கூடி நின்று வணங்கி வழிபட மாட்டாள் என்பதாம்.

'தொழாஅள்' என்பதிலுள்ள உயிரளபெடை மேலே இலக்கணக் குறிப்புரையில் சுட்டியபடி செய்யுளிசை அள பெடையே யாயினும் இங்கே தொழாயலே தொழுதவர் பெறாத ஆற்றலை—தொழுபவர் தொழுகைக்குரிய தெய்வ ஆற்றலை உடையவள் கற்புடைய மனைவி என்ற தொனிப் பொருளை அளபெடைக் குறிப்புப் பொருளாகக் காட்டுகிறது.

இவ்வகையில் அளபெடை குறிக்காமலே பரிதியார் உரை யும் பரிமேழகர் முடிபுரையும் இக்கருத்து வலியுறுத்துவதை இம்மணி விளக்கவுரைத் தனிக் குறிப்புக்கள் (2, 4 பகுதிகள்) எடுத்துக்காட்டுகின்றன.

தொழுதல் என்பது சமுதாயக்கூட்டு வழிபாடு குறிக்கும். பெண்கள் கன்னிமைக் காலத்தில் தம் குடும்பத்துடனும், கற்பியல் காலத்தில் கணவனுடனும் பிள்ளைகளுடனும் சேர்ந் தன்றி வழிபாடு ஆற்றுதலில்லை. அவ்வாறு கலந்துகொள்ளும் போதும் குடும்பத்துடன் கலந்து அதன் மூலமாகவன்றி நேரடியாகச் சமுதாயத்துடன் கலந்து வழிபடுவதில்லை. எப்போதுமே கணவன் மூலமாகவன்றி வழிபடுவதில்லை.

சிறு தெய்வங்களைப் பற்றிய மட்டில், கற்புடை மகளிர் அவைகளை என்றுமே வழிபட மாட்டார்கள்.

சிலப்பதிகாரத்தில் இத்தகைய வழிபாடு கற்புடைப் பெண்டிர்க்குரியதன்று எனக் கண்ணகி மறுத்தல் காணலாம்.

இங்கே கடவுள் வழிபாடு குறிக்கப்பட வில்லையாயினும், அதற்கும் இதே பண்பு பொருந்தும். கணவனுடன் இயைந்து கணவனுருவாகவே கடவுளை வணங்குதலும், கணவனையன்றி

எதுவும் விரும்பாமையும் கற்புடைமையின் இயல்புகள் ஆகும்.

இன்றும் இசுலாமியரிடையேயும் சமணரிடையேயும் பெண்டிர் நேரடியாகத் தொழுகையிடமாகிய பள்ளி செல்லாமை; கிறித்தவர், புத்தர், சைவர், வைணர் போன்றூர் பெண் ஆண் இணைந்தன்றிச் செல்லாமை ஆகியவை இவ் ஒரே வள்ளுவப் பண்பின் இரு வேறுபட்ட மரபுகளே யாகும் என்பது காணலாம். மிகப் பழங்காலத் தெய்வ வழிபாட்டு வழக்கமே இவ்வாறு கடவுள் வழிபாட்டிலும் நீடித்து வந்துள்ளது என்னலாம். (கடவுள் வழிபாடு என்பது திருவள்ளுவர் காலமுதலே, திருவள்ளுவர் கோட்பாட்டின் பயனாகவே, உலகில் முதன் முதலில் தோன்றி, பல கண்டங்களிலும் தேசியங்களிலும் பரவியிருக்க வேண்டும் என்பதே இம் மணி விளக்கவுரை கொண்டுள்ள கருத்து ஆகும்).

கொழுநன் என்ற தமிழ்ச் சொல் கணவனைச் சுட்டும் சொல் ஆகும். தென்பாண்டி வட்டத் திசை வழக்கில் இது கணவனின் தம்பியருடனுள்ள முறை குறிக்கும் உறவுச் சொல்லாக, கொழுந்தன் என மருவி வழங்குகிறது. பெண் தமிழகத்திலும் இந்தியாவிலும் மட்டுமன்றித் தொலை மேலையுலக முட்பட மனித இனமெங்குமே, தமிழ்ப் பக்தர்கள் பாடியபடி, தம் நாமம் விட்டு, தம் குடும்பம் விட்டு (மேலை உலகில் பெண்டிர் தம் குடிப் பெயர் துறந்து தம் பெயரும் கணவன் குடிப் பெயரும் சேர்த்தே தம் பெயராகவழங்குவர்; கன்னிப் பெயரைக் கணவனும் குடும்ப உறுப்பினருமன்றிப் பிறர் வழங்கார்) கணவன் நலமே தம் நலமாக வாழ்தல் கண்கூடு. இவ்வுறவைக் கொழுநன் என்ற தமிழ்ச்சொல் அழகுபடக் குறிக்கிறது.

கொழு என்பது இங்கே கொழுகொம்பு, கொடி படர்வதற்குரிய பற்றுக்கோடான மரம் அல்லது கம்பு. பெண் படர் கொடியாகவும், கணவன் படர்தலுக்குரிய கொம்பாகவும் வருணிக்கப்பட்டு, அதனடிப்படையிலேயே தமிழ்ப் பெண்டிர் வாழ்வு முழுவதும் குறிக்கப்படும் தமிழ் மொழியின் அருமைப்பாடு எண்ணி எண்ணிக் கண்டு மகிழத்தக்கது.

கொடியாகிய பெண் பருவமுற்ற பின்பே படரத் தொடங்குகிறாள். படர்ந்தபின் கொடி கொழு கொம்பைப் பின்னிக் கொண்டிருப்பதால், எது கொடி எது கொழு கொம்பு என்று காண்டல் இயலாது.

பெண் தமிழ்க் கவிஞரால் கொடி, பூங்கொடி என்று வருணிக்கப்படுவது வெறும் கவிஞர் கவிதையன்று, அது தமிழ் மரபின் கவிதையாகும். ஏனெனில் பெண் பருவம் அடைதல் கொடி வாழ்வுக்கியையப் பூப்பு, மலர்ச்சி எனப் படுகிறது. கணவன் கொழுநன், கொண்கன் எனப்படுகிறான். முதிராக் கரு வீழ்ந்தால் காய் வீழ்ந்தது எனப்படுகிறது. பிள்ளை கனி என, கவிதை மொழியில், பிள்ளைக்கனியமுது என வருணிக்கப்படுகிறது. வாழையடி வாழையாக வரும் குடும்ப மரபும் மரபுக் கொடி எனப்படுகிறது.

தொழுது என்பது சமுதாயத் தெய்வமாகக் கொண்டு என்று பொருள்படும்.

கணவனையன்றிச் சமுதாயத் தெய்வம் எதனையும் நேரடியாகத் தொழாதவள் ஆதலால், அச்சமுதாய உருவமாக, சமுதாயத் தெய்வமாக அக்கணவனை எண்ணி வழிபடும் கற்புடை மனைவியின் செயல் இங்கே தொழுது எனக் கூறப் பட்டது.

எழுவாள் என்பது தெய்வமாக்கும் முயற்சியில் முனைந்து முயல்பவள் என்று பொருள்படுவதாகும்.

காந்தியடிகளின் மெய்த் தேர்வு (சத்திய சோதனை) என்ற அவரது வாழ்க்கை வரலாற்றில், தம் இள மனைவியாக வந்த அன்னை கஸ்தூரிபாய், தம்மைத் தெய்வமாக (பதி தேவர்) வணங்கவில்லை என்று சிறுமியாகிய அவரைக் கடிந்து கொண்டபோது, சிறுமியாகிய அவர் தமக்குக் கற்பித்த முதல் குடும்பப் பாடத்தை அழகுபடக் குறித்துள்ளார். 'நான் உங்களைப் பதிதேவராக வழிபட வேண்டுமானால், நீங்களும் பதிதேவராக நடந்துகொள்ள வேண்டாமா?' என்றாராம் அவர்.

எழுதல் என்பது உயர்தல். இது கீழே விழுந்து வணங்கிப் பின் எழுந்திருக்கும் செயல் மட்டுமன்று. கணவனை வணங்கும் செயலிலேயே கற்புடைய பெண் தன் பண்பில் உயர்கிறள். கணவன் அதுவரை வெறுங் கல்லாயிருந்த ஆடவனானாலும், கல் தச்சனால் தெய்வச் சிலையாக்கப்பட்டும் கல்போல, அவனும் படிப்படியாகத் தெய்வப் பண்பு ஏறி வளரப் பெற்றவனாகிவிடுகிறன். கணவனின் இப்பண்பு வளர்ச்சியை மனைவியின் செயலாக்கி இக்குறட்பா 'எழுவாள்' என்று குறிக்கிறது.

மேலே கூறிய காந்தியடிகள் வாழ்க்கை இவ்வுண்மையை நன்கு விளக்குதல் காண்க.

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்' என்ற முதல் அடியின் நான்கு சீர்களுக்குள், முத்தமிழ்ச் சிலப்பின் மூன்று காண்டங்களையும்விடச் சீரிதாகத் திருவள்ளுவர் கண்ணகிப் பெயர் பெருத ஒரு கண்ணகியின் பண்போவியத்தையும், அன்னை கஸ்தூரிபாயின் பெயர் குறியாத ஒரு இள அன்னையின் பண்புச் சித்திரத்தையும் வரைந்து காட்டியுள்ள திறம் காணலாம்.

பெய்யெனப் பெய்யும் மழை என்பது பெய்ய வேண்டும் என்று மக்கள் விரும்புமிடத்திலும், விரும்பும் சமயத்திலும், விரும்பும் சூழலிலும் பெய்யத்தக்க மழை என்று கூறத்தக்கவள் அல்லது அத்தகைய மழை போன்றவள் அல்லது அத்தகைய மழைப் பண்பு என்று பொருள்படுவதாகும்.

பெய் என என்பது இங்கே பெய்ய வேண்டும் எனக் கூறுதல், என விரும்புதல், என விரும்பி எண்ணுதல் ஆகியவற்றைக் குறிக்கும். ஆகவே, குறிப்பு அறிந்து செய்யும் பண்பு பெறப்பட்டது. பெய்ய வேண்டும் என விரும்பும் அளபும் இது குறித்தத.

மழை கடவுட் பண்பேயானாலும் அறிவற்ற இயற்கைப் பண்பு. கற்புடை மனைவியோ, இயற்கைப் பண்புடன் அறிவுப் பண்பும் அன்புப் பண்பும் நிரம்பியவள். மழைகாலமன்றியும் இடமன்றியும் விருப்பு வெறுப்புப் பாராமல்

பெய்யும். கற்புடை மனைவியோ குறிப்பறிந்து நடப்பலள். மழை அன்றன்று பெய்து வளம் சுரக்கும். கற்புடை மனைவியோ திட்டமிட்டு நிலையான இனவளம் இயக்குவாள்.

இத்தகைய மழை-கற்பரசி ஒப்பீடும், மழையினும் சிறந்த மழைப் பண்பு கற்பரசி என்ற கருத்தும் பெய்யெனப் பெய்யும் மழை என்ற உருவக மூலம் இக்குறட்பாவில் குறிப்பிடப்பட்டது.

சிறப்புரை: கற்புடைய பெண் மழையினும் சாலச் சிறந்த ஆக்க வளம் ஆவாள்.

இனத்துக்கு வளம் அளிக்கும் தெய்வம் அவளது. அவளுக்குத் தெய்வமாய் விளங்குவதன் மூலம் அவள் கணவனின் சமுதாய வளமும் ஆற்றலும் பெருக்கமுறுகின்றன.

இயற் பரப்பில் மழை இயற்கை வளம் பெருக்குவடன் நில்லாது, உயிர் வளமும் பெருக்குகிறது. அது போல, கற்புடை மனைவி குடும்பத்தில் வாழ்ந்து குடும்ப வளமே பெருக்கினாலும், அவள் கற்பின் ஆற்றல் குடும்பம் கடந்து சமுதாயம், சமுதாயம் கடந்து இனம் அளாவி வளம் பெருக்குகிறது. அதுமட்டுமன்று. மழை கடவுட் பண்பின் சின்னம் மட்டுமே. கடவுளின் அறிவுப் பண்பும் திட்டமிடும் பண்பும் அதற்கு இல்லை. ஆனால் கற்புடைய மனைவியோ, கடவுட் பண்பின் ஒரு சிறு பதிப்பு. அவள் அறிவுடைய, திட்டமிடும் தன்மையுடைய, குறிப்பறிந்து செயலாற்றக்கூடிய மழைப் பண்பு.

பொருள்வளம்: *(1)* இக் குறட்பாவில் தொழுது எழுவாள் என்ற சீர் ஓரே காய்ச் சீராகவும், காய்ச் சீரிலும் நீளமிக்க கருவிளங்காய்ச் சீராகவும், ஏற்றிசைப்பாகவும் அமைந்துள்ளது. கற்பரசியின் ஆட்சி வளம் குடும்ப எல்லை, சமுதாய எல்லை கடந்து, இன

எல்லையளாவி தலைமுறை கடந்து தலைமுறையாக வளம் ஊக்கி வளம் பெருக்கும் ஆற்றல் இந்நிறை தொடர் ஏற்றிசைப்புக் காய்ச் சீரால் குறிக்கப்பட்டது.

தமிழ்ப் பாக்களில் ஓசைச் சிறப்புமிக்கன ஆசிரியமும் வெண்பாவும். இசைச் சிறப்பு மிக்கன வஞ்சியும் கலியும். பிந்தியது இசைச் சிறப்புடன் சந்தச் சிறப்பும் நாடகச் சிறப்பும் உடையது. இக் குறட்பா வெண்பா வகை சேர்ந்ததே யானாலும், ஏற்றிசைப்பினால் வஞ்சி இசைப் பண்பும், மாச்சீர் மிகுதியாலும் நேர் நிரை விரவுதலாலும் கலிப்பாலின் சந்தமும் இயைய வந்தது. இவ்விசை நயம் கற்புடை மனைவி இன்ப உருவினளாய் நின்றே இன வளமும் பெருக்குபவள் என்பதையும், உடலின்ப மூலமே பேரின்ப நிலைக்கு உலகை உயர்த்தும் பண்பு ஊக்குபவள் என்பதையும் குறித்தன.

(2) தமிழகத் தேசீயக் காப்பியங்களான சிலம்பு மேகலைகளிலும், தமிழிலக்கிய முழுவதிலும் சொல் வடிவிலும் கருத்து வகையிலும் மேற்கோள் வகையிலும் மிகவும் எடுத்தாளப்பட்ட குறட்பாக்களில் இக் குறட்பா ஒன்று.

இந்தியா கடந்து உலகளாவி முற்காலத்தில் படர்ந்து பரவிய பத்தினி வழிபாட்டு மரபுக்குரிய கரு மூலமாக விளங்கும் மந்திரக் குறட்பா இது. இக் குறட்பாவின் இரண்டாம் அடிக்கு வள்ளுவப் பண்பில் நின்று முதல் முதல் இம் மணிவிளக்கவுரை காணும் உரைப் பண்பு கண்டவர் புரட்சிக் கவிஞர் பாரதி தாசனே யாவர். கற்பரசி மழை போன்றவள் என்ற பொருளில் பெய்யெனப் பெய்யும் மழையின் உருவாக அவளைத் திருவள்ளுவர் சிறப்பிக்கிறார் என்று அவர்

புத்துரை வகுத்தார். அவர் கூறிய பின் அதுவே திருவள்ளுவர் குறித்த கருத்தாய் இருந்திருக்க வேண்டும் என்று இன்று காண்பது எளிது. ஆயினும் திருவள்ளுவரின் மந்திரச் சொல் பிறிதொரு பொருள் சுட்டி இரண்டாயிர மூவாயிர ஆண்டுகளாகத் தமிழக முழுவதையும், கீழ்திசையுலக முழுவதையும் மயங்க வைத்துள்ளது என்பதில் ஐயமில்லை.

கலித்தொகையில் பல பாடல்கள் கற்புடைய பெண் 'பெய்' என்று ஆணையிட்டால் மழை பெய்தே விடும் என்ற அருஞ் செயல், தெய்விக நம்பிக்கை அடிப்படையாக எழுந்துள்ளது. 'நீ விரும்பியவனையே உனக்கு மணஞ் செய்து தர உன் பெற்ரோர் இணங்கி விட்டனர். இனி உன் கற்பு வாழும். எம் நாட்டில் இனி மழை பெய்யா நிலை ஏற்படாது என்று யாம் மகிழ்கின்ரோம்' என்று கலித்தொகைத் தோழி தலைவியிடம் கூறும் பாடல்கள் பல.

சங்க இலக்கிய முழுவதும், கம்பர் கவிதை, நீதி வெண்பாக் கவிதை ஈருகத் தமிழிலக்கியம் முழுவதும் நாம் இக் கருத்தைக் காண்கிரோம்.

பத்தினிக் கருத்து இலங்கையிலும், மலையாளத்திலும், அண்டை மராட்டிய நாடுகளிலும், வங்கத்திலும், சீன நாட்டிலும் பண்டிருந்தே பரவியுள்ளது. எங்கும் கற்பரசி பெய் என்ருல் மழை பெய்யும் என்ற கருத்தே பரவியுள்ளது.

இக் கருத்து உலகில் இந்த ஒரு குறட்பாவின் சொற்களின் போக்கினுல் எழுந்த ஓர் இனிய மயக்கமே என்று கருத இடமுண்டு. கீழ்திசையில் மட்டுமே இக் கருத்தும் பத்தினி வழிபாட்டு மரபும் ஒருங்கே

பரவியுள்ளமை இதனைக் காட்டும். உலகில் புத்த சமயத்தைப் பரப்பிய அசோகனைப் போலவும், சமண சமயம் பரப்பிய காரவேலனைப் போலவும், பத்தினிக் கடவுள் வணக்கத்தைப் பரப்பிய பேரரசன் சிலப்பதிகாரச் செங்குட்டுவனே யாவன். சங்க காலத்திலும் சிலப்பதிகாரத்திலும் இக் குறட்பா எழுப்பிய கருத்தே, பத்தினி வழிபாட்டுடன் இக் குறட்பாவின் சங்ககால உரைக் கருத்தாக உலகில் பரவியதாதல் வேண்டும்.

பாரதிதாசனும் இம் மணிவிளக்க வுரையும் காணும் குறட்பாவுரை கடைச் சங்க காலத்துக்கும் சிலம்பு மேகலை காலத்துக்கும் முன்பே தமிழரால் மறக்கப்பட்டுவிட்ட ஒரு கருத்தாகவே இருத்தல்கூடும் என்னலாம். திருவள்ளுவர் காலப் பகுத்தறிவுச் சமயம், படிப்படியாகப் பகுத்தறிவு நீங்கிய சமயமாக ஆன நிலையை நாம் கடைச் சங்க காலத்திலிருந்தே காணத் தொடங்குகிறோம். ஒருவேளை இந்நிலை தொல்காப்பிய காலத்திலேயே தொடங்கி யிருக்கலாம்.

(3) அவ்வக்கால மூட நம்பிக்கைகளுக்கும் ஆர்வக் கருத்துக்களுக்கும் இயைய நெகிழ்ந்து பொருள் கொள்ள இடம் கொடுத்துள்ள குறட்பாக்கள் திருக்குறளில் உண்டு. ஆனால் உலகில் புது மூட நம்பிக்கைகளையே உருவாக்க இடம் தந்துள்ள குறட்பா ஒன்று உண்டானால், அது இக் குறட்பாவே என்னலாம்.

இது திருவள்ளுவர் குறை அன்று, திருக்குறளின் குறையுமன்று—காலத்தின் கோளாற்றினால் தமிழ் மரபிலும், சொற் பொருள் பண்பு மரபுகளிலும் ஏற்பட்டுள்ள பண்பிறக்கமே யாகும் என்னலாம்.

இக் குறட்பாவில் 'தெய்வம்' என்ற சொல்லைப் பல உரையாசிரியர்கள் தெய்வம் என்றே உரை செய்தமைந்துள்ளனர். ஆனுல் இவ்வுரையை வாசிக்கும் இக்காலத் தமிழர் தெய்வம் கடவுளைச் சுட்டுவதாகவே எண்ணிவிடுகின்றனர். விளக்கவுரையில் சுட்டியுள்ள படி, தெய்வம் இங்கே கடவுளைக் குறிக்கவில்லை. அது குறிப்பது கடவுளின் ஆற்றற்கூறுகளான இயற்கையாற்றல்களையும், அவற்றுடன் ஒப்பாகச் சமுதாய மக்களால் வணங்கப்படும் வாழ்வாங்கு வாழ்ந்து மாண்ட வீரரையுமே யாகும். சில உரையாசிரியர் வாசிப்பவர் மயக்கத்தைத் தாமே கொண்டு, தெய்வம் என்பதற்குக் கடவுள் என்றே உரை செய்துள்ளனர்.

இக் குறட்பாவுக்குச் சீரிய உரை கண்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்கூட, இரண்டாம் அடிக்கே புத்துரை கண்டனர். 'தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுதெழுவாள்' என்பதற்குரிய பழங் கருத்தை விளக்காது அப்படியே விட்டுவிட்டனர். இங்கே பெண் கடவுளைத் தொழ மாட்டாள் என்ற கருத்து, அவள் கணவனைக் கடவுளாக வணங்கும் அடிமைக் கடப்பாடு உடையவள் என்ற கருத்து ஆகிய இவை இரண்டும் இரண்டாம் அடியின் மயக்கக் கருத்தினை விடக் கேடானவை. ஏனெனில் கற்பரசி ஆணையிட மழை பெய்யும் என்பது பகுத்தறிவுக்குத்தான் மாருனது, பண்புக்கு மாருனதன்று. முதலடி உரை மயக்கத்தில் கண்ட பெண்ணடிமைக் கருத்து பகுத்தறிவுக்கும், தமிழ்ப் பண்புக்கும் தற்கால நாகரிக உலகக் கருத்துக்கும் ஒருங்கே மாருனது. ஆயினும் இவ்விடைக்காலக் கருத்துக்குக்கூடத் திருவள்ளுவக் கோட்பாடும் சொற்பண்பும் மறக்கப்பட்ட காலத்துக்குரிய அவர் குறட்பா

உரைகளில் காணப்பட்ட பண்பு மாருட்டமே காரணம் என்னலாம்.

கற்புடை மனைவி கடவுளைத் தொழாதவள் என்று கொள்வது வள்ளுவப் பண்புக்கும் தமிழ்ப் பண்புக்கும் உலக நாகரிகப் பண்புக்கும் மாருனது ஆகும். உடநிடத காலங்களில் சனகர் சனத் குமாரருடன் ஒப்பான ஞான முனிவர்கள் பெண்களாயிருந்துள்ளனர். திலகவதியார், புனிதவதியார், சூடிக்கொடுத்த நாச்சியார் ஆகியோர் வரலாறுகள், பெண்டிர் தம்பியையும் கணவனையும் தந்தையையும் தடுத்தாட் கொண்டு இறையடி சார்ந்த வரலாறு காட்டுகிறது. திருக்குறள் முதலடி முதற் பாதிக்குக் கொள்ளப்படும் பொருள் இத்தமிழக, இந்தியப் பண்பு மரபுக்கே மாறுபட்டதாகும்.

இஸ்லாமிய, சமண வழக்கங்களும், கிறித்தவ உலகில் காணப்படும் சில மரபுகளும் காட்டி மேற்கண்ட மயக்கவுரைக்கு ஆதரவு தேடுபவர் இருக்கக் கூடும். ஆனால் அவற்றின் உள்ளார்ந்த மெய்யான வள்ளுவ மரபு மேலே விளக்க வுரையில் தெளிவிக்கப் பட்டுள்ளது. குறட்பா மயக்கம் போலவே, அச் சமய வழக்கங்களும் பிற்காலத்தில் மயக்கங்களுக்கு இடம் தந்துள்ளன என்பது தெளிவு.

பெண் கணவனைத் தொழ வேண்டும் என்பதனுல் அவள் அடிமையாகவே இருக்க வேண்டும் என்ற கருத்து இடைக்கால மனித நாகரிக முழுவதையும் கெடுத்து, இந்தியாவில் வைதிகர் என்று தவருகத் தம்மைக் குறித்துக் கொள்ளும் பலரது சமயக் கருத்தையும், மேலையுலகில் பல இன்பவேடரின் தன்னலத்

தருக்குக் கருத்தையும் ஆட்டி வருகிறது. இந்திய மக்களின் கண்கண்ட ஒரு வள்ளுவ ஒளியாக வாழ்ந்த காந்தியடிகளையே இளமையில் இப் பெண்ணடிமைக் கருத்து பிடித்தாட்டியுள்ளது என்பது கண்டால், இக் குறட்பா முதலடியின் பிற்பாதி தந்துள்ள உரை மயக்கம் உலகெங்கும் மூவாயிர நாலாயிர ஆண்டுகளாக எத்தகைய அறியாமை யலைகள் பரப்பியுள்ளது என்பது தெரிய வரும்.

இவ்வுரை மயக்கங்கள் திருவள்ளுவர் குறையோ, திருக்குறளின் குறையோ அல்ல. ஆயினும் மயக்கத்துக்கு இடந் தந்த அளவில் இக் குறட்பாக்களை நாம் திருவள்ளுவர் திருக்குறளாகிய செங்கதிரவனிடத்து அமைந்த ஒளிக்கறைகள் என்றே மனித இன நாகரிக வரலாற்றில் குறித்தல் தகும்.

(4) மனைவி கணவனை வணங்க வேண்டும் என்பது பெண்ணடிமைத் தனம் அன்றோ என்று கருதும் இக்காலப் பகுத்தறிவாளர் உண்டு. ஆனால் தமிழ்க் காதல் பண்பின் இயல்பும், வள்ளுவக் காதல் பண்பின் சால்பும் காண்போர் இரு பால் ஒப்புமை மட்டுமன்று, பெண்பாற் சிறப்பே அவற்றில் இடம் பெறுகிறது என்பதைக் காண்பர்.

ஒரு நாடாளும் அமைச்சர் அந்நாட்டின் நீதிபதியையும் ஆள்பவரே யாவர். அம்முறையில் நீதிபதி அவருக்கு வணக்கம் தெரிவிப்பது கடமை. ஆனால் அதே அமைச்சர் நீதி மன்றத்துக்கு வந்தால், அமைச்சரும் நீதிபதிக்கு வணக்கம் கூறவேண்டியராவர்.

மனைவி கணவனுக்கு வணக்கம் தெரிவிப்பது அமைச்சர் வழக்கு மன்றத்தில் நீதிபதிக்கு வணக்கம்

தெரிவிப்பது போன்றதே யாகும். ஏனெனில் சமுதாயம் என்ற வழக்கு மன்றத்தில் கணவனே நீதிபதிப் பொறுப்பு வகிப்பவன். அதே சமயம் வழக்கு மன்றத்துக்கு வெளியே நீதிபதிதான் அமைச்சருக்கு வணங்க வேணடும். குடும்ப வாழ்வின் எல்லைக்குள் மனைவியே இவ் வமைச்சின் நிலை உடையவள். ஆயினும் அவள் ஆட்சி இன ஆட்சி யாதலால், கணவனை அவள் வெளிப்படையாக ஆளாமல், உள்ளூர நின்று இயக்குகிறாள்.

நீதி நூல்கள் மனைவி கடமை கூறுகின்றன. கணவன் கடமை கூறுவதில்லை. இதனையும் பலர் பிறழ உணர்ந்து விடுவதுணடு.

தாயைப் போற்று என்று பிள்ளைக்கு நீதிநூல் கடமை கூறும். பிள்ளையைப் பேணு என்று நீதிநூல் தாய்க்குக் கூறுவதில்லை. தாய்க்குப் பிள்ளையைப் பேணுதல் இயல்பு, நீதி நூல் கூறத் தேவையற்ற பண்பு அது என்பதே இதன் காரணம். அரசனுக்கு அடங்கி நட என்று நீதி நூல் குடிகளுக்குப் போதிக்கும். குடிகளைப் பேணு என்று அரசனுக்குப் போதிக்க மாட்டா. குடி பேணுதல் அரசன் இயல்பு என்பதே இதற்குக் காரணம். கடவுளிடம் பற்றுக்கொள் என்று நீதி நூல் மனிதருக்குக் கூறும். மனிதரைக் காப்பாற்றுக என்று அது கடவுளுக்கு உரைக்காது.

கணவனைப் பேணு என்று நீதி நூல் மனைவிக்கு மட்டும் கூறி, மனைவியைப் பேணு என்று கணவனுக்குக் கூறாதது இதுபோன்றதே யாகும்.

தனிக் குறிப்புக்கள் : (1) 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது' என்பதற்குப் பரிமேலழகர், 'பிற தெய்வம்

தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழா நின்று' என்றும்; மணக்குடவர், 'தெய்வத்தைச் தெய்வமென்று தொழாராய், எல்லாத் தெய்வமும் தன் கணவன் என்றே கருதி' என்றும்; 'பரிதியார், குலதேவதையைக் கும்பிடாள், பத்தாவைத் தெய்வமென்று தொழுது' என்றும்; காலிங்கர். 'வேறொரு கடவுளையும் வணங்காளாய், தன் கணவனையே நாடோறும் வணங்கி' என்றும் உரை செய்தனர்.

புலவர் ந. சி. கந்தையா பிள்ளை 'தெய்வத்தைத் தொழா தவளாயினும் கணவனைத் தெய்வமாக நினைத்து' என்று கூறி முற்பகுதிக்குச் சிறிது பொருள் வேறுபாடு வருவித்துள்ளார். 'கற்புடைய மனைவி தெய்வத்தைத் தொழ மாட்டாள் அதுவே சிறப்பு' என்ற பொதுக் கருத்து மாற்றப்பட்டு, 'தொழாமை'யின் கேட்டைக் கணவனைத் தொழுதல் விலக்கி மேம்பட்ட நலம் தரும்' என்ற உலகப் பொதுக் கருத்துத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது காணலாம்,

மேலே எடுத்துக் காட்டிய பழைய உரையாசிரியருள் பரிதியார் 'தொழுது' என்று உரை செய்து எழுவாள் என்பதனுடன் முடிக்காமல். தொழுதபடியால் என்று கூறி, பின் வரும் பெய்யெனப் பெய்யும் மழை என்பதற்குக் 'கடவுளைத் தொழாமலே கணவனைத் தொழுதல் காரண மாம்' என்பதை வலியுறுத்தினார்.

(2) பெய் எனப் பெய்யும் மழை என்பதற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் விளக்கமும் இம் மணிவிளக்க வுரையு மன்றி மற்றெல்லாப் பழைய புதிய உரைகளும் கற்புடை மனைவி மழையைப் பார்த்து 'நீ பெய்வாயாக என்று கூறினால், மழை கட்டாயம் பெய்யும்' என்றே பொருள் கூறினர். இதுவே கீழ்திசை எங்கும் பத்தினி வழிபாடு பரவிய இடங்களிலெல்லாம் மக்கள் 'கவிதையழ கார்ந்த நம்பிக்கை எனபதில் ஐயமில்லை. சங்க காலக் கவிஞரும் பிற்காலத் தமிழ்க் கவிஞரும் இக் கவிதை நம்பிக்கையையே இக் குறட்பாவின் பொருளாகக் கொண்டனர் என்பதும் மேலே பொருள் வளத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

(3) தொழுது எழுவாள் என்பதில் எழுவாள் என்பதற்கு எல்லா உரையாசிரியர்களும் காலையில் உறக்கத்திலிருந்து எழுவாள் என்றே கூறினர். பரிமேலழகர் தொழுது எழுவாள் என்பது எழுந்து தொழுவாள் என்று இருக்க வேண்டுமென்று கருதித் 'தொழா நின்று என்பது தொழுது என த் திரிந்து நின்றது' என்பர். மேலும் 'தெய்வம் தொழுதற்கு மனந் தெளிவது துயிலெழுங் காலத்தாகலின் தொழுது எழுவாள்' என்ற'தாக விளக்கம் கூறுவர்.

இப் பொருள் அழகிதே. திருவள்ளுவர் இதனையே புறப் பொருளாகக் கொண்டு பாவியற்றினார் என்பதிலும் ஐய மில்லை. ஆயினும் அவர் உள்ளக் கிடக்கை இப் புறப் பொருள் கடந்து இம் மணிவிளக்க வுரைப் பொருளையே முனைப்பாகக் கருதிற்று என்னல் வேண்டும்.

(4) இக் குறட்பாவுக்குப் பரிமேலழகர் முடிவுரை வாச கங்கள் குறளுரை போல் சுருக்கமும் அழகும் உடையன. 'தெய்வந்தான் ஏவல் செய்யும் என்பதாம்.' 'இதனாற் கற்பு உடையவளது ஆற்றல் கூறப்பட்டது.' கற்புடைய பெண் ணின் ஆற்றல் பெரிது என்பதும், பிறர் வணங்குவதனால் மகிழ்ந்து வந்து அவர்கட்கு உதவும் தெய்வங்கள், அவள் வணங்காமலே அவளை வணங்கி வந்து ஏவல் செய்யும் என் பதும் இச் சிறு வாசகங்களால் குறிக்கப்பட்டன.

56. குடியையும் குடிப் புகழையும், இனத்தையும் இனப் புகழையும் காப்பவள் பெண்ணே!

> தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொல் காத்துச் சோர்வு இலாள் பெண்.

பொ - ரை: அறவழியி லிருந்து வழுவாமல் தன் னைத்தானே காத்துக்கொண்டு, தன்னை மனைவியாகக் கொள்ளும் பேறு பெற்ற கணவனை அறவழியிலிருந்து வழுவாமலும், பொருள் வழியில் சோர்வுறாமலும்

இன்ப வழியில் திசை தடுமாருமலும் காத்து ஊக்குவித்து, தன்னையும் தன் கணவனையும் உட்கொண்ட குடும்பம், சமுதாயம், இனம் ஆகியவற்றின் புகழ்ப் பெயருக்கு இடையூறு வராமல் தடுத்தாண்டு, இம் மூவகையிலும் தன் இடைவிடா முயற்சியில் சிறிதும் தளர்வுருத இயல்புடையவளே பெண் என்று சிறப்புப் படக் குறிப்பிடத்தக்கவள் ஆவாள்.

க-ரை: பெண்ணைப் பேணத் தக்கவர் வேறு எவரும் கிடையாது. அவள் தானே தன்னையும் பேணி, மற்ற எல்லாரையும் பேணும் பொறுப்பு உடையவள் ஆவாள். கற்பின் திறத்தால் அவள் இத்தனையும் செய்து, உலகை அற வழி நிறுத்தி, பொருள் வழி நடத்தி, இன்ப வழி ஊக்கும் திறம் உடையவள் ஆவாள்.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்று. இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன:

1. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற் காத்துச் சோர்விலாள் (இது எழுவாய்).
2. பெண் (இது பெயர்ப் பயனிலை).

இக் குறட்பாவில் பெண் ஓரசைச் சீர்; நேரசையாய், குறுகிய ஒரெழுத்துடையது. பேணி, சோர்விலாள் ஆகிய இரண்டுமே தேமா, கூவிளம் ஆகிய ஈரசைச் சீர்கள். மற்றவை எல்லாம் காய்ச்சீர்கள். காய்ச் சீர்களான தற்காத்து, தற்கொண்டான், தகைசான்ற, சொற் காத்து ஆகிய நான்கு சீர்களும் முதலசை எடுத்திசைத்தன. சோர் விலாள் முதலசையும் இரண்டாம் அசையின் இரண்டாம் எழுத்தும் படுத்திசைத்து அலைமுகட்டு ஓசை கொண்டது. பேணி, பெண் ஆகிய இரண்டுமே நலிந்திசைத்து அந் நலிவிசையிடையேகூட இரு திறப்

பட்டு முன்னது எற்றிசைப்பாகவும் பின்னறு இறங்கிசைப்பாகவும் வந்தன.

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் என்பது ஒரே நெடுந்தொகை நிலையான பெயர்ச்சொல். இது குறட்பா வாசகத்தின் எழுவாயாய், பெண் என்ற பெயர்ப் பயனிலை கொண்டு முடிந்தது.

சோர்விலாள் என்ற இறுதித் தொகை உண்மையில் சோர்விலாள் ஆகியவள் அல்லது சோர்விலாள் ஆகிய வாழ்க்கைத் துணைவி என்ற பொருளுடையதாய், சோர்விலாள் என்ற தொகையடியான தொகையாகும். சோர்விலாள் என்ற மூலத் தொகையிலும் இலாள் என்பது இன்மை என்ற பண்படியான பெண்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். ஆள். பெண்பால் விகுதி. இன்மை என்பதன் ஈறு கெட்டு, முன் மெய்யான னகரம் லகரமாகத் திரிந்தது. இல்லாள் என்பதே வழக்கமான வடிவம். இதில் புணர்ச்சியில் மிகுந்த லகரம் இங்கே மீண்டும் செய்யுளில் கெட்டது.

சோர்வு இலாள் என்பது சோர்வை இல்லையாகப் பெற்றவள் என்ற வேற்றுமைத் தொகை. அல்லது சோர்வு என்ற எழுவாய் இலாள் என்பதன் பகுதியுடன் முடிந்த தொகை ஆகும். சோர்வு என்பது சோர்தல் என்ற பொருளுடைய 'வு' ஈற்றுத் தொழிற் பெயர், இங்கே அப் பண்புக்கு ஆகுபெயராயிற்று.

காத்து, பேணி, காத்து என்ற மூன்று வினை எச்சங்களும் சோர்விலாள் என்ற தொகை ஈற்றுக் குறிப்பு வினையாலணையும் பெயரின் வினைப் பொருள் கொண்டு முடிந்து தொகை ஆயின. கா, பேணு அல்லது பேண் என்பன இவற்றின் பகுதிகள். உ, இ என்பன வினையெச்ச விகுதிகள். இகர விகுதி இடைநிலை எற்பதில்லை. 'உ' விகுதி தகரத்தை இறந்த கால இடைநிலையாகப் பெற்றது. இது சந்தியில் இரட்டித்தது.

சொற்காத்து என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை, சொல்லை என்பது காத்து என்ற வினையெச்சப் பகுதியின் செயப்படு பொருள். தகைசான்ற என்பது தகைசால்பு என்ற இணைப் பண்புப்

பகுதியடியாக வந்து, லகரம் ணகரமாகவும் தகரம் நகரமாகவும் திரியப் பெற்றது என்னலாம். பண்பு ஈறு கெட்டது. தகை சால்பு என்பது தகையான சால்பு என இரு பெயரொட்டு. சால் என்பதை வினைப் பகுதியாகக் கொண்டு தகை அப் பகுதியின் எழுவாயாகித் தொகைப் பட்ட தென்றும் கூறுதல் ஆகும்.

தற்கொண்டான் என்பது தன்னைக் கொண்டான் என்ற பொரு ளுடைய இரண்டாம் வேற்றுமைத் தொகை. தன் என்பது பொதுப் பெயரான தான் என்பதன் வேற்றுமைத் திரிபுரு. கொண்டான் என்பது கொள் என்னும் வினைப்பகுதி யடியான இறந்த கால ஆண் பால் வினையாலணையும் பெயர். ஆன், ஆண்பால் விகுதி. இடைநிலை டகரம் என்றோ. டகரமாகத் திரிந்த தகரம் என்றோ கூறலாம். இடை நிலை முன் பகுதியின் ளகரம் ணகரமாகத் திரிந்தது.

தற்கொண்டான் பேணி என்பதும் இரண்டாம் வேற்றுமைத் தொகை. இங்கும் செய்யுள் முறையில் னகரம் சந்தியில் றகரமாதலே முறை (தற்கொண்டாற் பேணி என்பதே பழைய இலக்கண மரபு).

தற்காத்து என்பதும் தன்னைக் காத்து என்ற பொருளுடைய இரண்டாம் வேற்றுமைத் தொகையே யாகும்.

பெண் என்பது பெண் என்று கூறத்தக்கவள் என்று பொருள் படும் அன்மொழித் தொகையாய், பெண் என்று கூறத்தக்கவள் ஆவள் என்ற பொருளுடன் பெயர்ப் பயனிலை ஆயிற்று.

வி-ரை: அற வாழ்வின் மையப் பண்புருவான இல் வாழ்வானின் அருளுருவும் அருட் சக்தியும், அற வாழ்வின் மழை முகிற் பண்புமான வாழ்க்கைத் துணைவியின் நலம் முப்பால் வாழ்வுடனும் தொடர்புடையதாயினும், இவ் வதிகாரத்தில் இக் குறட்பாவுடன் முடியும் மூன்று குறட்பாக் களும் (54-56) வாழ்க்கைத் துணைவியின் இன வாழ்வு நலம் சிறப்பிப்பவை ஆகும். அவ் வழி இக் குறட்பா அவளது இன ஆட்சித் தனிப் பொறுப்பு வலியுறுத்துகின்றது.

தற்காத்து என்பது அறவழியிலிருந்து வழுவாமல் தன்னைத் தானே காத்துக் கொண்டு என்று பொருள்படும்.

தன்னைத் தானே காத்துப் பெண்ணையும் காத்துக் கொள்பவன் தானே என்று ஆண் உலகம் பெருமை பேசிக் கொள்வதுண்டு. ஆணுலகின் இந்த அறியாமை அகற்றுவதுபோல இக் குறட்பாவின் இம் முதற் சொல் அமைந்துள்ளது. ஆண் தன்னைக் காத்துக் கொள்வதாகவும் பெண்ணைக் காப்பதாகவும் கருதுவது உடல் வலிமையின் காரணமாகவே. இப் பெருமையை அவனைவிட விலங்குகள் மிகுதி கொண்டாடலாம். உடல் வலிமையில் விலங்குகளை விஞ்சி மனிதன் அறிவாலே மேம்படுவதுபோல, உடல் வலிமையுடைய அவனை விஞ்சிப் பெண் அறிவாலே மேம்படுபவள் ஆவாள். உண்மையில் உடல் வலிமையில்கூடப் பெண் குன்றியவள் அல்லள். ஒத்த வயது என்பதில் இரு பாலாரிடையே உள்ள வேறுபாடு இதைக் காட்டுகிறது. அறிவிலோ, பன்னிரண்டு வயதுடைய பெண்ணுக்கு இருபத்து நான்கு வயதுடைய ஆடவன்கூட ஒப்பானவன ஆகான். பெண்டிர் வலிமையும் அறிவும் பிள்ளைகளைப் பெறுவதிலும் வளர்ப்பதிலும் பயிற்றுவிப்பதிலும் பயன் பட்டு இனவளமாகிறது, ஆண் வலிமையும், அறிவும் உடல் உழைப்பாளியின் உழைப்புப்போல, சமுதாய நீடிப்பு ஒன்றிலேயே பெரிதும் கழிகின்றன.

உடல் வலிமையை நம்பிய ஆண் தன்னலம், தன்முனைப்பிலேயே வளர்வது இயல்பு. உடல் மென்மையுடைய பெண்ணே அறிவிலும், அன்பிலும் தானும் பயின்று அவனையும் பயிற்றுவிக்கிறாள். மனித இன நாகரிகத் தொடக்கத்தில் பெண் ஆட்சி செய்யாமல் ஆணே ஆட்சி செய்திருந்தால், மனிதன் இன்னும் விலங்கு நிலையில்தான் இருந்திருப்பான். பெண்ணாட்சிக் காலம்[1] மனித விலங்கை மனிதனாக்கிற்று, ஆணாட்சிக் காலம் என்று கூறப்படும் நம் ஊழியில்கூட. உடலாடசியைத்தான் மனிதன் செய்கிறான்—சமுதாய ஆட்சி மட்டுமே அவன் கையில் இருக்கிறது. குடும்ப ஆட்சியும் இன ஆட்சியும் அறிவாட்சி அன்பாட்சிகளாக, இயலாட்சி கலையாட்சிகளாக நடைபெறுவது பெண்ணாலேயே.

---

1. Matriarchal period

அறிஞர் வகுப்பும் கலைஞர் வகுப்பும் ஆணுடலில் வளரும் பெண் வகுப்பே என்று திரு. வி. கலியாணசுந்தரனார் கருதியுள்ளார். மலைமகளும் திருமகளும் கலைமகளும் பெண்ணாயிருக்க, வீரரும். கவிஞரும். அறிஞரும் பெரிதும் ஆணாயிருப்பதற்கு அவர் கூறிய விளக்கம் இதுவே ஆகும். உணர்ச்சி மிக்கவரும், கவிஞரும், சிந்தனையில் மிக்க அறிஞரும் உடல்வலியில் குன்றி மெல்லியலாராய் விளங்குவதை நாம் இன்றும் காணலாம்.

வீரம், கலை, கவிதை, அறிவு ஆகியவற்றினும் உயர்ந்த பண்பு அறம். அப் பண்புடையார் வலிமையற்றவரன்று. ஆனால் ஆன்மிக வலிமையாகிய பெண்மையுடையவரே யாவர். பெண்ணில் அன்பு, இரக்கம் ஆகிய பண்புகளே அறம் வளர்ப்பன. இந்திய சமயங்களில் பெண்ணாகிய சக்தித் தெய்வமே அறம் வளர்த்த தெய்வங்களாகப் போற்றப்படுவது காணலாம்.

தற்கொண்டான் என்ற சொல் அதிகார முதற் குறட்பாவிலும் (51) இக் குறட்பாவிலும் இடம் பெறுவதாகும். ஆனால் இரண்டு சொற்களும் இரு குறட்பாக்களிலும் இரு திறப்பட்ட பொருள்களிலே வழங்கப்பட்டுள்ளன. ஆணை நாடிப் பெண் கொண்டபின் அவளை ஏற்றுக்கொண்ட கணவன் என்பது அதிகார முதற் குறட்பாவில் கண்ட பொருள் ஆகும். இங்கோ, தன்னை மனைவியாகக் கொள்ளும் அரும்பேறு கண்டவன் என்ற பொருளை உடையதாகும், இப் பொருள் வேறுபாட்டின் காரணங்களும், பொருள் வேறுபாட்டின் தனிச் சிறப்புக்களும் கீழே பொருள்வளப் பகுதியில் கூறப்படுகின்றன.

பேணி என்பது அறவழியிலிருந்து வழுவாமலும் பொருள் வழியில் சோர்வுறாமலும், இன்ப வழியில் திசை தடுமாறாமலும் காத்து ஊக்குவது என்று பொருள்படும்.

பேணுதல் என்ற சொல் இன்றும் வழுவாது காத்தல், சோர்வுறாமல் தடுத்தல், தடுமாறாமல் நிறுத்தல் ஆகிய முப்பொருளையும் தரும் சொல் ஆகும். பெண் என்ற சொல்லுடன் இது தொடர்புடையதாதலும் காணலாம. இவற்றின்

தொடர்பறிந்தே திருவள்ளுவர் இவ்வொரே குறட்பாவில் இரு சொற்களையும் எழுவாய் பயனிலைகளில் எதிரெதிராக நிற்கும்படி கையாண்டுள்ளார் என்னலாம்.

தற்கொண்டானைப் பேணுபவள் பெண் என்ற திருவள்ளுவர் கருத்து, இடைக்காலங்களில் எழுந்த மனுவின் பெயரால் நம்மிடம் வந்து எட்டியுள்ள நீதி நூலில் கண்டுள்ள பெண் பற்றிய கருத்துக்கு நேர் மாறானதாய் அமைந்திருப்பது காணலாம். பெண் மணமாகுமுன் தந்தைக்கு அடங்கி அவரைச் சார்ந்தும், மணமான பின் கணவனைச் சார்ந்தும், இவ்விரு சார்பும் அற்ற காலத்தில் அண்ணன் தம்பிமார்களைச் சார்ந்தும், கணவன் குடும்பத்தின் ஆடவர்க்கோ, தன் ஆண் மக்களுக்கோ, பேரப் பிள்ளைகளுக்கோ அடங்கி அவர்களைச் சார்ந்துமே வாழ வேண்டும் என்று மனு முதலிய சுமிருதி ஏடுகள் கூறுகின்றன. இந்தக் கோட்பாட்டடிப்படையாகவே நம் தமிழில் கூடச் 'சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை'. 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன்' என்பன போன்ற பழமொழிகள் எழுந்துள்ளன. ஆனால் இதற்கு நேர்மாறாகப் பெண் தந்தையாலோ, தமையன்மாராலோ, கணவனாலோ பிற எந்த ஆடவராலோ காக்கப்படத்தக்கவள் அல்லள், அவர்களைச் சார்ந்து வாழவேண்டியவளும் அல்லள்; ஏனெனில் அவர்கள் எல்லாரையும் பேணிக் காப்பவள் அவளே என்று திருவள்ளுவர் வலியுறுத்திக் கூறி விடுகிறார்.

தற்கொண்டான் பேணி என்று மட்டுமே இங்கே கூறினாலும், தற்கொண்டான் என்பது ஆடவர் வகுப்பு முழுவதுமே குறிப்பதாகும். ஏனெனில் அவளுக்குத் தெய்வமான கணவனே அவளால் பேணப்பட வேண்டியவனானபோது, மற்றவர் நிலையைப்பற்றிக் கேட்க வேண்டியதில்லை என்னலாம்.

பெண் பிறப்பிலேயே அடிமை என்று இடைக்கால சமஸ்கிருத, தமிழ் ஏடுகளும் இடைக்கால மேலையுலக ஏடுகளும் கருதினாலும், பண்டைக்கால அறிவும் இக்கால அறிவும் தாண்டிய முக்கால அறிவராகிய திருவள்ளுவர் பெண் பிறப்

பிலேயே ஆளப் பிறந்தவள் என்று கருதுவதை இங்கே காண லாம்.

தகைசான்ற சொல் காத்து என்பது குடும்பம், சமுதாயம், இனம் ஆகிய மூன்றன் புகழுக்கும் ஊறு வராமல் பாது காத்து என்று பொருள்படுவதாகும்.

தகை என்பது தகுதி. சான்ற என்பது நிறைந்த அல்லது மேம்பாடுடைய என்பதாம். தகுதி என்பது இனம் முன்பே அடைந்த புகழையும், சால்பு என்பது அதன் தளரா வளர்ச்சியையும் சுட்டும். தகை சான்ற சொல் என்பது இதனால் புகழ் வளமும் வளர்ச்சியும் ஆயிற்று. தகைசான்ற சொல் காப்பது என்பது குடும்ப சமுதாய இனங்களின் பழம் புகழுக்குக் கேடு வராமலும், புதுப் புகழ் வளத்துக்கும் வளர்ச்சிக்கும் தடங்கல் ஏற்படாமலும் பேணுவது ஆகும்.

சோர்வு இலாள் என்பது இம் முயற்சிகளில் இடைவிடாது தளராது முயன்று கொண்டே இருப்பவள் என்று பொருள் படும். மேற்கூறிய மூன்று முயற்சிகளுமே கற்புடை மனைவி யின் வாழ்வு, அவள் வாழ்வின் குறிக்கோள் பண்புகள் என்பது கருத்து.

பெண் என்பது இங்கே தனிச் சொல்லாய் ஒரு நெடுந் தொகையை எழுவாயாகக் கொண்டு அதன் பெயர்ப் பயனிலையாய் வந்ததனால், 'பெண் என்று கூறத்தக்கவள் ஆவாள்' அல்லது 'பெண் என்னும் பெரும் பெயருக்குரிய பீடும் தகுதியும் உடையவள் ஆவாள்' என்ற பொருள் தந்தது.

இக் குறட்பா பெண்ணின் மேல்வரிக் குறிக்கோளான இலக்கணம் கூற வந்ததனால், பண்புகள் எழுவாயில் இடம் பெற்று, பண்பியாகிய பெண் பயனிலையாய் வந்தது.

இவ்வதிகாரத்தில் இன வாழ்வுத் தொடர்பு சிறப்பிக்கும் அதிகாரப் பகுதியாகிய மூன்று குறட்பாக்களில் (54 - 56) முதற் குறட்பா (54) பெண்ணின் பெண்மைச் சிறப்பும் கற்புச் சிறப்பும் ஒருங்கே தொகுத்துரைத்தது. அடுத்த

குறட்பா (55) கற்புச் சிறப்பே விரித்துரைத்தது. இக் குறட்பா பெண்மை எனும் தவிசமர்ந்து, கற்பெனும் செங் கோலோச்சும் கற்பரசியின் ஆட்சிச் சிறப்பும் பொறுப்பின் பீடும் ஒருங்கே விதந்துரைத்தது.

சிறப்புரை: மழை நீர் உணவுப் பொருள் விளை வித்து, உணவினை ஆக்கிச் சமைத்து, அவ்வுணவுடன் தானே உணவுமாகி, உண்ட கையும் வாயும் உண்கலமும் கழுவு நீராகவும் உதவுவதுபோல், பெண் தன் செயலில் தான் முனைந்து, தன் பொறுப்பைத் தான் ஏற்று, கணவன் செயலில் அவனை ஊக்கி, அவன் பொறுப்பையும் தான் ஏற்று; கணவன் மூலமாகச் சமுதாய வளங்களை ஊக்கிச் செயலாற்றுவித்து, அவற்றின் முழுப் பொறுப்பையும் கைக்கொண்டு; தன் வளமும் கணவன் வளமும் சமுதாய இன வளங்களும் தானே பெருக்கி; தானும் அறநெறியில் நின்று, கணவனையும் அறநெறியில் நிறுத்தி; கணவன் மூலமாகச் சமுதாயத்தையும் இனத்தையும் அறநெறியில் நிறுத்துபவள் ஆகிறாள்.

பொருள்வளம்: *(1)* கணவன் என்ற பொருளில் தற்கொண்டான் என்ற தொகைநிலைச் சொல் இவ் வதிகார முதற் குறட்பாவில் (51) ஒரு தடவையும் இக் குறட்பாவில் ஒரு தடவையும் இடம் பெற்றுள்ளது. ஆனால் அங்கே இரு சீர்களிடையே அத் தொகைநிலை பிளவுற்று, கொண்டான் தனித்து நின்று ஏற்றிசைப் பாய் வந்ததனால் அவள் வளமன்றி அவனுக்கு வள மின்மையும், அவள் வளத்தாலேயே அவன் வளமும் பெருமையும் உறுதலும் குறித்துக் காட்டப்பட்டன. இக் குறட்பாவிலோ, தற்கொண்டான் என்ற தொகை நிலைச் சொல் முழுதும் ஒரே காய்ச் சீராய், முதலசை மட்டுமன்றி மூவசையும் ஒருதளப்பட ஒருங்கே எடுத்

திசைத்து, விழுமிய ஏந்திசைச் செப்பலோசையுடன் வந்தது. இதனால் முன் குறட்பாவில் பெருமைப் படுத்தப்பட்ட பெண்ணின் பெருமையே இங்கே கணவன் பெருமையாகச் சுட்டப்பட்டது. ஏனெனில் அவன் அவளது தெய்வம் ஆவான். தன்னை மனைவி யாகக் கொள்ளும் அரும்பேறு பெற்ற அக் கணவனை அப் பெருமையில் வைத்துப் பேணும் பொறுப்பும் பெண்ணினதே யாகும் என்று இக் குறட்பா பெண் ணாட்சியின் பெரும் பொறுப்பு விதந்தோது கின்றது.

'தற்கொண்டான்' இதற்கேற்ப இக் குறட்பா வில் 'தன்னைக் கொள்ளும் அரும்பேறு பெற்றவன்' என்ற பொருள் பெறுவது காண்கிறோம்.

(2) இக் குறட்பா பொதுவாகவும், வாழ்க்கைத் துணைவியின் பொறுப்பினை வலியுறுத்தும் சொற்கள் அமைந்த 'தற்காத்து', 'தற்கொண்டாற் பேணி', 'சொற்காத்து' ஆகிய சீர்கள் சிறப்பாகவும் வல் லோசையுடையன. இது பெண்ணின் பாரப் பெரும் பொறுப்பைத் தொனி மூலமே சுட்டிக் காட்டுகிறது. அதனை வகிக்கும் பெண்ணின் மென்மையை அவளைச் சுட்டும் 'பெண்' என்ற சீரும், அவள் தொழில் சுட்டும் 'பேணி' என்று சீரும், தம் மென்மையோசை யாலும் நலிவிசைப்பாலும் குறித்துக் காட்டுகின்றன. அவள் இயல்பு சுட்டும் தகைசான்ற, சோர்விலாள் என்ற சீர்கள் தம் மென்மை இடைமை ஓசைகளாலும், நீண்ட படுத்தல் இசைப்பாலும் அவள் வாழ்வு முழு தளாவிய சந்தடியற்ற அரும் பணியின் விழுமிய வீறுடைமை குறிக்கின்றன.

பேணி, பெண் என்ற சொற்களின் தொடர்பு பேணுபவள் பெண் என்ற சொல்லாராய்ச்சியை நினைவூட்டி, பேணு, பெண் என்ற வினைச் சொல், பெயர்ச் சொற்களின் பண்பொருமையையும் நினைவூட்டுவதாயுள்ளது.

(3) தற்காத்து என்ற தொகைநிலைச் சொல்லுடன் சொற்காத்து என்ற தொகைநிலைச் சொல் எதிரிணையாகவும் எதுகை இணையாகவும் வந்தன. சொல் என்பது இங்கே குடும்ப சமுதாய இனப் புகழ்ச் சொல் ஆகும். மூன்று பெரும் பரப்புக்களிலும் ஒரு சிற்றுறுப்பேயான பெண் தன்னைக் காப்பதின் மூலமே, அப் பெரும் பரப்பின் புகழ் காக்கப்படுகிறது என்ற கருத்தும்; அவற்றின் புகழ் அவளே என்ற முடிபும்; சொல் தகைசான்ற சொல் ஆதலால் அதனைக் காக்கும் அவளும் தகைசான்றவளாகவே அமைய வேண்டியவள் என்ற குறிப்பும் இவ் வெதிரிணையால் பெறப்படும் பொருள்வளங்கள் ஆகும்.

(4) விளக்கவுரை முடிவில் கூறியபடி, இனவாழ்வுத் தொடர்பு குறித்த மூன்று குறட்பாக்களிலும் (54-56) இது இறுதிக் குறட்பாவாய், முதற் குறட்பா பெண்மையும் கற்பும் சிறப்பிக்க, இரண்டாவது கற்பு மட்டுமே சிறப்பிக்க, இக் குறட்பா பெண்மையே சிறப்பிப்பதாக அமைந்துள்ளது. பெண்மையின் உச்ச உயர் மலர்ச்சியே கற்பு என்பதனை இவ்வாறு திருவள்ளுவர் குறித்துக் காட்டியுள்ளார். ஏனெனில் கற்பின் உச்ச உயர் வரம்பும் பெண்மையின் உச்ச உயர் வரம்பும் ஒன்றே. இரண்டினையும் தொகுத்துச் சிறப்பித்த வள்ளுவர் கருத்துக் கற்பை வளமாகவும்

பெண்ணை ஆட்சியாகவும் பிரித்துச் சொன்னதன் உட்கோள் இதுவே யாகும்.

(5) திருவள்ளுவரை ஒப்ப, பெண்மையை நன்குணர்ந்த, பெண்ணினத்தின் தனிப் பெருமையினை நன்குணர்ந்த இன்னோரறிவரை உலக இலக்கியப் பரப்பு முழுவதும் தேடினாலும் காண முடியாது. உண்மையில் பெண்ணை அவரைப்போல் அறிந்த பெண்கூட—பெண் அறிஞர்கூட—எவரும் எந்நாட்டிலும் எம் மொழியிலும் எவ்வினத்திலும் கிடையாது என்று உறுதியாகக் கூறலாம். இதுபோலவே பெண்ணுக்குப் பெருமை கொடுக்கும் இக் குறட்பா ஒத்த பெண் பேரிலக்கியத்தையும் உலகில் வேறு எங்கும் காண இயலாது. பெண்ணுலகே தனக்கென ஒரு வேதம் வகுத்துக்கொள்ளக் கூடுமானால், அவ் வேதத்தின் முதல் பக்க முதல் மந்திரமாக அமையத்தக்கது இக் குறட்பா. இதற்கு முந்திய குறட்பாவும் இதற்கு இவ்வகையில் இணையே யானாலும், காலத்தின் திருவிளையாடல்கள் இக் குறட்பாவினும் மிகுதியாக அதனைப் பகுத்தறிவுக் கெதிராகத் திரித்துவிட்டிருப்பது காணலாம்.

(6) பெண் பிறப்பிலேயே அடிமையாகப் பிறந்தவள், முக்காலத்தும் அடிமை என்றும்; மணமாகு முன் தந்தை, அண்ணன் தம்பியர், மணமான பின் கணவன், கைம்பெண்ணான போதுகூட மாமன் கணவனின் அண்ணன் தம்பியர், மகன், பேரன், இவர்கள் யாரும் இல்லாவிட்டால்கூட ஆணாகப் பிறக்கும் பேறு பெற்ற ஒரு வேலைக்காரன் ஆகியோரைச் சார்ந்து அவர்கட்கு அடங்கியே நடக்க வேண்டுமென்றும்;

எலி, மனிதராகப் பிறந்தாலும் பிறக்கலாம், மனிதன் எலியாகப் பிறந்தாலும் பிறக்கலாம், பெண் செத்துப் பிறந்தாலும் பெண்ணாக, பெண் எலியாகப் பிறக்க லாமே தவிர ஆண் எலியாகக்கூடப் பிறக்க முடியாது என்றும் பெண்ணைப் பழித்துக் கூறும் இடைக்கால நாகரிகங்களின் கருத்துக்கும் வள்ளுவக் கருத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு குருடன் காணும் இருளுக் கும் கண் ஆற்றல் படைத்தவன் காணும் கதிரவன் ஒளிக்கும் இடையெ உள்ள வேறுபாட்டையே ஒப்ப தாகும் என்பதை இக் குறட்பாவால் காணலாம்.

தனிக் குறிப்புக்கள்: (1) 'தற்காத்து' என்பதற்கு மணக் குடவர் 'தன்னைக் காத்து' என்றே பொழிப்புரைத்தார். ஆனால் பரிமேலழகரும், அவரைப் பின்பற்றி மற்ற உரையா சிரியர்களும் 'கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்து' என்றனர். கவிஞர் இராமலிங்கனார் 'தன்னுடைய பெண்மை யைத் தானே காத்துக் கொண்டு' என்றும், புலவர் குழந்தை 'மனவுறுதியால் தன்னைக் காத்து' என்றும் உரை தந்துள் ளனர்.

(2) தற்கொண்டாற் பேணி என்பதற்குக் கணவனைப் பேணி, காப்பாற்றி, போற்றி, விரும்பிக் காத்து என மணக் குடவரும் பிறரும் சொற்பொருளே கூறினர். புலவர் குழந்தை 'கணவனைப் போற்றி' என்றே பொழிப்புரைத்த பின், 'போற்றல் எனபது காலத்துக்கேற்ற உணவூட்டியும் அன்பூட்டியும் இன்பூட்டியும் பேணல்' என்று விளக்கவுரை தந்தார். இவ் விளக்கவுரையில் பரிமேலழகரின் தடம் சிறிது காண்கிறோம். 'தன்னை மணந்துகொண்ட கணவனுடைய நன்மைகளைப் பாதுகாத்து' என்பது கவிஞர் இராமலிங்கனார் உரை.

பேணுதல் என்பது தெய்வமாகத் தொழுதல் என்று காலிங்கர் கருதினராதல் வேண்டும். ஏனெனில் அவர் 'மற் றுத் தன் கணவனையும் விரும்பி வழிபட்டு' என்று உரை செய்

தார். பரிதியார் 'தன் பத்தாவின் குணத்தையும் பேணி' என்றார்.

(3) 'தகைசான்ற சொற்காத்து' என்பதற்கு மணக்குடவர், 'நன்மையமைந்த புகழ்களையும் படைத்து' என்றார். பரிமேலழகர் 'இருவர் மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமல் காத்து' என்று பொழிப்புரைத்தார். இங்கே அவர் இருவர் என்றது மனைவியையும், அவள் கணவனையும் ஆகும். 'தன் மாட்டுப் புகழாவது வாழும் ஊர் கற்பால் தன்னைப் புகழ்வது' என்று அவர் மனைவி புகழ் என்பதற்கு விளக்கம் தந்தார். பரிதியார் இக்கடைசிக் கருத்து மட்டுமே கொண்டு, 'இன்னார் பதிவிரதை என்னும் சொல்லையும் காத்து' என்றார். (பதிவிரதை, கற்பரசி ஆகியவை இங்கே ஒரு பொருளன வாகக் கொள்ளப்பட்டன).

காலிங்கர் சொல் என்பதை வாய்ச் சொல் என்றே கொண்டார். 'தன் குலத் தகுதியோடு அமைந்த அடக்கச் சொல்லினையும் நாவிற் பேணி' என்பது அவர் உரை.

கவிஞர் இராமலிங்கனார் சொல் என்பதை மண உறுதி மொழி எனக் கொண்டார். 'மிக உயர்ந்த சொல்லாகிய கல்யாண வாக்குறுதியைக் காத்து' என்பது அவர் பொருள் கோள்.

புலவர் குழந்தை, 'தகுதி மிக்க புகழைக் காத்து' என்றே பொழிப்புரைத்தார். புகழ் என்பதனை அவர் 'நல்ல குடும்பம் என்னும் புகழ்' எனக் கொண்டார்.

(4) சோர்வு இலாள் என்பதற்குப் பரிமேலழகர் 'மேற் சொல்லிய நற்குண நற்செய்கைகளினும் கடைப்பிடியுடைய வளே' என்று பொருள் கூறுகிறார். இங்கே மேற்சொல்லிய நற்குண நற்செய்கை என்று அவர் குறிப்பிடுவது அதிகார முதற் குறட்பாவில் (51) அவர் உரையில் குறிப்பிட்டு விளக்கியதே யாகும். (51 குறட்பாவின் இம் மணிவிளக்கவுரைத் தனிக் குறிப்புப் பகுதி 3 காண்க). அதன்படி 'நற்குணங்களாவன: துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார் மாட்டருளுடைமையும் முதலாயின' என்றும் 'நற்செய்கைக

ளாவன, 'வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப் பிடித்தலும், அட்டில் தொழில் வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலாயின' என்றும் விளக்கினர்.

சோர்வு என்பதற்கு அவர் மறவி என்றும் விளக்க வுரைப் பொருள் தந்துள்ளார்.

பரிதியார் இதற்கு 'அசைவிலாத கற்பினள்' என்று பொருள் கண்டார். காலிங்கர் 'மற்று இம் மூன்றின் கண்ணும் ஒரு ஞான்றும் ஒரு சோர்வு பாடு இல்லாதாளே' என்றார். தன்னைக் கற்பினல் பாதுகாத்தல், தன் கணவனை விரும்பி வழிபடல், தன் குலத் தகுதியோடமைந்த அடக்கச் சொல்லினையும் நாவிற் பேணல் எனக் குறட்பா முன்னைச் சொற்களுக்கு அவர் உரையாகத் தந்த மூன்றையுமே அவர் 'இம் மூன்றின் கண்ணும்' என்றார்.

'உறுதி தளராமல் வாழ்கிறவள்' என்று பேராசிரியர் முனைவர் மு. வரதராசனரும்; 'தம் கடமைகளில் தவறுமல் இருப்பவள்' என்று பேராசிரியர் முனைவர் இலக்குவனரும்; 'இல்லறத்தில் சோர்ந்து போகாமல் இருப்பவள்' என்று கவிஞர் இராமலிங்கனரும் உரை வகுத்தனர்.

'மனச் சோர்வு இல்லாதவள்' என்று பொழிப்புரைத்து, மனச் சோர்வு இல்லாமை என்பது 'வறுமை கண்டு மனந் தளராமை' என்று விளக்கினர் புலவர் குழந்தை.

(5) பெண் என்பதற்கு எல்லா உரையாசிரியருமே வாளா பெண் ஆவாள் என்று உரைத்தனர். புலவர் ந. சி. கந்தையா 'சிறந்த பெண்' என்றும், புலவர் குழந்தை 'நல்ல மனைவி' என்றும் அடைச் சிறப்புத் தந்தனர்.

(6) 'இதனல் தற்புகழ்தற் சிறப்புக் கூறப்பட்டது', எனப் பரிமேலழகர் உரைப் பதிப்புக்கள் அவர் முடிவுரை காட்டுகின்றன. இது தற்புகழ், தற்சிறப்பு என்று இரு கருத்துத் தொகுதியாக இருக்கலாமோ என்று சுருத இடம் உண்டு. இப்போதிருக்கும் பதிப்புருவில் அது பொருள் அற்ற தாக உள்ளது. தற்புகழ்தலின் சிறப்பு என்று பொருள் கொள்ளும்படி பதிப்புகள் அமைந்துள்ளன.

'மன உறுதி உடையவளும், கணவனையும் புகழையும் காப்பவளும், மனச் சோர்விலாதவளுமே நல்ல மனைவி யாவாள்' என்பது புலவர் குழந்தையின் நல்ல முடிவுரை ஆகும்.

(7) நவமணிக் குப்பையைக் கிளறி, அதில் இக்குறட்பா போன்ற முத்தும் பவழமும் காலால் ஒதுக்கித் தள்ளிவிட்டு, தம் இடைக்கால இருள் நாகரிகத்துக் கேற்ற கருங் கண்ணாடித் துண்டுகள் அகப்படுமா என்று தேடித் திண்டாடும் கோழிக் கலைஞராகவே திருக்குறள் உரையாசிரியர்கள் விளங்குகின்றனர். இதைப் பார்க்க,

வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்கு உணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி!

என்று சுமிருதிகளைக் கண்டு மனம் புழுங்கிக் கூறிய மனோன்மணீய ஆசிரியராகிய கவிஞர் சுந்தரனாரின் நைவுரை, சுமிருதிகளுக்கு மட்டுமன்றித் திருக்குறள் உரைகளுக்கும் பொருந்துமோ என்று கூறத் தோன்றுகிறது!

57. அரசியலாரின் சிறைக் கோட்டங்கள் எதற்கு? பெண்டிர் நிறைக் கோட்டமே உலகை அறக்கோட்டம் ஆக்கிவிடுமே!

சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை!

பொ - ரை: அரசியலாரின் கற்கோட்டைகள் போன்ற சிறைக் கோட்டங்கள் பழி செய்யக்கூடிய மக்களை அடைத்து வைத்துக்கொண்டு அப் பழிப் பண்பு வளராமல் தடுத்துக் காக்கும் வகையிலுள்ள பாதுகாப்பு முறை என்ன பயனை விளைவித்துவிட முடியும்? (ஒன்றையும் விளைவித்துவிட முடியாது). இவ்வகையில் கற்புடைய பெண்கள் தம் திண்ணிய

பேராண்மைப் பண்பு மூலம் அத்தகைய மக்களைப் பேராண்மையில் நிறுத்தி நல்வழியில் செலுத்தி நற்பண்பு பேணும் பாதுகாப்பு முறையே தலைசிறந்தது ஆகும்.

க-ரை : சிறைக் கோட்டங்களை அறக்கோட்டங்களாக்கிவிடும் 'மணிமேகலைப் பண்பு' கற்புடைய பெண்மைக்கு உண்டு.

இலக். ரு : இக் குறட்பாவின் வாசகங்கள் இரண்டு. இதன் சொற்கள் நான்கு.

அவையாவன :

[அ] முதல் வாசகம் : வினை வாசகம் :

1. சிறை காக்கும் காப்பு (இது முதல் வாசக எழுவாய்).

2. எவன் செய்யும் (இது முதல் வாசகப் பயனிலை).

[ஆ] இரண்டாவது வாசகம் : முடிபு வாசகம் :

1. மகளிர் நிறை காக்கும் காப்பே (இது இரண்டாம் வாசக எழுவாய்).

2. தலை (இது இரண்டாம் வாசகப் பெயர்ப் பயனிலை).

இக் குறட்பாவில் சிறை காக்கும், நிறை காக்கும் என்ற இரண்டு அடி முதற் சீர்களும் மட்டுமே காய்ச் சீராய், நிறைந்த செப்பலோசையுடையனவாய் வந்தன. இரண்டு அடிகளிலும் பின் சீர்கள் படிப்படியாகக் குறுகி வருவது காண்கிறோம். ஆனால் முதலடியில் இரண்டாம் சீர் 'காப்பு எவன்' கூவிளமாய் முறிந்திசைத்தும், அடுத்த இரு சீர்களும் குறுகிய தேமா, புளிமாச் சீர்களாய் நலிந்திசைத்தும் வந்தன. இரண்டாம் அடியிலோ இரண்டாம் சீர் நெடுந்தேமாவாகவும், மூன்றாம் சீர் நிரையசையாகவும் வந்ததுடன், எல்லா எழுத்துக்களும் எடுத்திசைத்து நிமிர் நிறை ஓசையுடையனவாய் அமைந்துள்ளன.

சிறை காக்கும் காப்பு என்ற தொகை பெயர்ச் சொல்லாய், முதல் விஞ வாசக எழுவாயாய், எவன் செய்யும் என்ற பயனிலையுடன் முடிந்தது.

காப்பு என்பது 'கா' என்ற வினைப் பகுதியடியான தொழிற் பெயர். 'பு' அப் பெயர் விகுதி. அத்துடன் காக்கும் காப்பு என்ற குறிப்பால், காப்பு இங்கே காப்பு முறை, காப்பு வகை என்ற பொருளும் தந்தது. தொழிற் பெயர் இங்கே காவற் பண்பு அல்லது காவல் முறை என்ற பொருளில் பண்புக்கு ஆகுபெயராயிற்று. காக்கும் என்பது அதே 'கா' என்ற வினைப் பகுதியின் காலப் பொது வினை எச்சம். இவ் வெச்ச விகுதியான 'உம்' இடைநிலை ஏற்காதது. பகுதியின் பின் ககரம் எழுத்துப் பேறாய் வந்து இரட்டித்தது.

சிறை என்பது பெயர்ச் சொல். இங்கே இது எழுவாயாய், காக்கும் என்ற பெயரெச்சத்தின் வினைப் பகுதி தழுவித் தொகைப் பட்டது. காத்தல் வினையின் வினை முதல் சிறையன்று, சிறைப்படுத் தும் அரசியலாரே யாவர். அரசியலார் இங்கே சிறைமீது வைத்துக் கூறப்பட்டனர். ஆகவே இங்கே 'சிறை காக்கும்' என்பது சிறையி லிட்டு அரசியலார் காக்கும் என்ற பொருள் தந்தது.

எவன் செய்யும் என்ற வினை இங்கே முதல் வாசக விஞப் பயனிலையாய்ச் சிறை காக்கும் காப்பு என்பதை எழுவாயாகக் கொண் டது.

எவன் என்பது யாது, என்ன என்று பொருள்படும் பழந்தமிழ் விஞப் பெயர். இதன் இறுதியில் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. எவன் அல்லது என்ன என்பது இங்கே என்ன பயனை என்னும் பொருளில் வந்தது. செய்யும என்பது 'அஃறிணை ஒன்றன்பால் வினைமுற்று. உம் காலப் பொது விகுதி, இது இடை நிலை ஏற்பதில்லை. செய், வினைப் பகுதி.

மகளிர் நிறை காக்கும் காப்பே என்பது பெயர்ச்சொல்லாய், இரண்டாம் வாசக எழுவாயாகி, 'தலை' என்ற பெயர்ப் பயனிலை கொண்டது. இதில் இறுதி ஏகாரம் தேற்ற ஏகாரம், சிறப்புப் பொரு

ளில் வந்தது. காப்பு முதலடியில் வரும் காப்புப் போன்ற தொழிற் பெயர், அப் பண்புக்கு ஆகுபெயராய் காப்பு முறை, காப்பு வகை என்ற பொருளில் வந்தது. காக்கும் என்பதும் முதலடியில் வரும் காக்கும் என்பது போன்றே பெயரெச்சம். அதே இலக்கணமுடையது. நிறை காக்கும் என்பது நிறை மூலம் காக்கும் என்ற பொருளுடைய மூன்றாம் வேற்றுமைத் தொகை. நிறை என்பது ஐ விகுதி பெற்ற தொழிற் பெயர். இதன் பகுதியடியான நிறு என்பது நிறுத்து என்ற பொருளுடையது. இது 'நில்' என்ற பகுதியின் பிற வினை வடிவம் ஆகும்.

மகளிர் என்பது 'மகள்' என்பதன் பன்மை, 'இர்' பன்மை விகுதி. மகள் இங்கே பொதுப் பொருளில் பெண்ணைக் குறித்த சொல் ஆகும். இதன் பின் ஆறாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. இவ் வேற்றுமைப் பொருள் 'நிறை காக்கும் காப்பு' என்ற தொகையில் காப்பு என்பது தழுவித் தொகைப்பட்டது.

தலை என்பது குறட்பாவின் இரண்டாம் வாசகப் பயனிலை. இது உடம்பின் சிறந்த பேருறுப்புச் குறித்து, அது போன்ற தலைமைச் சிறப்புச் சுட்டிற்று. அத்துடன் பெயர்ப் பயனிலை என்ற முறையில் தலையானது, தலைமையானது என்ற பொருள் கொண்டதாயிற்று. தலைமைச் சிறப்பு வாய்ந்த காப்பு முறை என்பது இதன் விரிபொருள்.

வி - ரை: அற வாழ்வின் மையப் பண்புருவான இல் வாழ்வானின் அருளுருவும் அருட் சத்தியும், அற வாழ்வின் மழை முகிற் பண்புமான வாழ்க்கைத் துணைவியின் நலம் முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், இக் குறட்பாவும் அடுத்து வரும் இரு குறட்பாக்களும் (57-59) வாழ்க்கைத் துணைவியின் அற வாழ்வு வளம் சிறப்பிப்பன ஆகும். அவ் வழி இக் குறட்பா பழிகளைத் திருத்தி அறவாழ்வு நிறுவும் பெண்ணின் ஆற்றல் விதந்தோதுகின்றது.

சிறை காக்கும் காப்பு என்பது 'அரசியலாரின் கற்கோட்டைகள் போன்ற சிறைக் கோட்டங்கள் பழி செய்யக்கூடிய மக்களை அடைத்து வைத்துக் கொண்டு அப் பழிப் பண்பு

வளராமல் தடுத்துக் காக்கும் வகையிலுள்ள பாதுகாப்பு முறை' என்று பொருள்படும்.

சிறை என்பது சிறைக்கூடம் அல்லது சிறைக்கோட்டம்.

சிறை என்ற தமிழ்ச் சொல் சிறைக்கூடத்தை மட்டு மன்றி, பக்கம் என்ற பொருளையும், பறவைகளுக்கு இரு புறமும் கைகள் போல இயங்கும் சிறகு அல்லது இறகுத் தொகுதியையும் (இறக்கை, இறகுக்கை) குறிக்கும். இதன் சொற்பொருள் செறுத்து வைப்பது, தடுத்து வைப்பது (செறு: வயல், நீரைச் செறித்து வைக்கும் பரப்பு) என்பதே. பரந்து வழியாமல் நீரைச் செறித்து வைக்கும் வயல் (செறு), பக்கவாட்டில் உள்ள காற்றைச் செறிவித்து அழுத்தி அதன் மூலம் மேலும் முன்னும் செல்ல உதவும் சிறகு, அச் சிறகு போன்ற பக்க இடம் (வலது சிறை, இடது சிறை) என்பவற் றில் நல்ல பொருளில் வழங்கும் இதே பகுதி சிறைக்கூடம் என்ற பொருளினூடாகவும் மிளிர்வதே யாகும். செய் பழி, செய்யாது விடுவதனால் ஏற்படும் பழி ஆகிய இரு பக்கத் தீமையையும் அடக்கி நலம் நோக்கி மக்களை உய்ப்பதே சிறைக்கூடம் என்ற பொருளை இத் தமிழ்ச் சொல் சுட்டிக் காட்டும்.

சிறை என்பதற்கு இக் குறட்பாவில் பின்னால் நிறை என்பது எதிரிணையாகத் தரப்பட்டது. ஆனால் நிறை என்பது மகளிர் நிறை என்ற சொல் அடுத்துக் கூறப்பட்டு, மகளிரின் மெல்லியல்புடன் தொடர்புடைய பண்பாகக் கூறப்பட்டது. இதற்கேற்பவே, சிறை வல்லியல்புடையது, கற்கோட்டை போன்றது என்ற கருத்துத் தொனிப் பொருளாகத் தோற்று விக்கப்பட்டது,

சிறை என்ற சொல் இலக்கண முறைப்படி இங்கே பின் வரும் காக்கும் என்ற வினையின் எழுவாயாயிற்று. ஆயினும் காப்பது, காத்தல் தொழிலின் வினை முதல் சிறை அன்று; அரசியலாரே. சிறை அக் காத்தல் தொழிலின் கருவி மட்டுமே யாகும். இதனால் சிறை இங்கே அரசியலாரின் சிறைக் கோட்டம் என்ற பொருள் தந்து சிறை மூலம் அரசியலார் காக்கின்ற என்ற பொருள் குறித்தது.

காக்கும் என்பதில் காத்தல் தடுத்துக் காத்தல். காத்தலுக்குரிய செயப்படுபொருள் பழி. இது பண்பு ஆதலால், காத்தலுக்குரிய பண்பிகளாகப் பழி செய்யக்கூடிய மக்கள் உய்த்தறிவிக்கப்படுகின்றனர். பழிகள் தடுக்கப்படுதல் மூலம் காக்கப்படுபவர்கள் அவர்களே. ஆகவே காக்கும் என்ற சொல்லின் விரிபொருள் இங்கே, பழி செய்யக்கூடய மக்களை அடைத்து வைத்துக்கொண்டு, அப் பழிப் பண்பு வளராமல் தடுத்துக் காக்கும் வகையிலுள்ள' என்ற பொருளுக்குரியதாயிற்று. சிறைகள் மூலம் காப்பது அல்லது காக்க எண்ணுவது அடைத்து வைப்பதனாலேயே என்பது தெளிவு.

காக்கும் காப்பு எனக் 'கா' என்ற ஒரே வினை பெயரெச்சமாக அடைமொழியாகி, தொழிற் பெயராக அடைச் சிறப்புக் குரிய பொருளும் ஆகி நின்ற தன்மையால், காப்பு என்பது வறிதே காத்தல் என்ற பொருள் தராமல், காக்கும் முறை, பாதுகாப்பு முறை என்ற பொருள் தந்தது.

எவன் செய்யும் என்பது என்ன பயனை விளைவித்துவிட முடியும், ஒரு பயனும் விளைவிக்க முடியாது என்று பொருள் படுவதாகும்.

எவன் என்ற சொல்லின் பொருள் என்ன, யாது என்பதே, யாதுதான், என்னதான் என்பது இங்கே தொனிப் பொருள். காக்கும் காப்பு என்று எழுவாய் செயல் குறித்ததனால், இங்கேயே பயனிலையில் விளைவு குறித்துக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே எவன் என்பது என்ன விளைவைத்தான், என்ன பயனைத்தான் என்ற விரிபொருள் தருவதாகும்.

செய்தல் என்பது இங்கே பயன் குறித்ததால், செய்யும் என்ற சொல் இங்கே பயன் விளைவிக்கும் என்றும்: காலப் பொது வினையாதலால், என்ன பயன் விளைவித்துவிடக்கூடும், என்ன பயன் உண்டுபண்ணிவிட முடியும் என்றும் பொருள் தந்தன.

மகளிர் நிறை காக்கும் காப்பே என்பது 'இவ்வகையில் கற்புடைய பெண்களின் பாதுகாப்பு முறையே, மக்களைப் பேராண்மையில் நிறுத்தி நல் வழியில் செலுத்திவிடத்தக்க

பெண்களின் பேராண்மைப் பண்புதான்' என்று பொருள் படும்.

இங்கே மகளிர் என்ற சொல் பெண்களுடைய எனப் பொருள்படுகிறது. ஆனால் அது நிறை என்பது தழுவிப் பெண்களின் நிறை என்று பொருள் கொள்ளவில்லை. காப்பு என்பது தழுவி பெண்களின் பாதுகாப்பு முறை அல்லது பெண்கள் கையாளும் பாதுகாப்பு முறை என்ற பொருளே தந்தது. மகளிர் இவ்வாறு காப்பு என்பது தழுவியது போலவே, நிறை காக்கும் என்பதும் காப்பு என்பதே தழு விற்று. இது இலக்கணக் குறிப்புரையிலேயே கூறப்பட்டா லும், குறட்பாவின் பொருள் வகையில் இதன் தனி முக்கியத் துவம் கருதியே இது இங்கே மீட்டும் கூறப்படுகிறது. ஏனெனில் இங்கே நிறை என்ற சொல் மகளிரின் நிறையாகக் கூறப்படாமல் ஆடவர் நிறைப் பண்பையே குறித்தது. அதனை ஊக்குவித்துச் செயலாற்றவிக்கும் திறமுடைய பெண்டிரின் நிறையே இங்கே 'நிறை காக்கும் காப்பு' என மகளிர் மேல் வைத்துக் கூறப்பட்டது,

நிறை என்ற தமிழ்ச் சொல் நிறுத்தல், எடை என்ற பொருள்களையும் நிறுவுதல், நிறுத்தல் என்ற பொருளையும் நிறைவு என்ற பொருளையும் உடையதாகும். நிறை என்ற பண்பாகக் குறிக்கும்போது, இப் பொருள்கள் யாவுமே அதில் இடம் பெறுகின்றன. நிறை உடையவர் பண்பால் எடையுடையவர், பிறர் பண்பினை மதித்துணர்பவர், பிறரை அப் பண்பில் நிறுத்துபவர், இவ் வெல்லாத் திறங்களும் சேர்ந்து அவர்கள் சமுதாய உறுப்பினர் என்ற முறையில் நிறைவு உடையவர் ஆவர்.

நிறை என்ற சொல் இவ்வாறு பேராண்மை, சால்பு ஆகிய பொருள்களை உடையதாகும்.

நிறை ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் உரிய பொதுப் பண்பேயாகும். ஆடவரும் பெண்டிரும் தத்தம் தகுதிகளில் நிறைவுடையவராய், எதிர்தரப்பினரைத் தம் வழி நிறுத்தி அத்தகுதியை நிலைநாட்டிப் போராடும் போராட்டமே நிறை ஆகும். ஆனால் மற்றத் தன்னழிவுப் போராட்டங்

களுக்கும் இந்த அன்புப் போராட்டத்துக்கும் இடையே முக்கியமான சில வேறுபாடுகள் உண்டு. முதலாவதாக மற்றப் போராட்டங்களில் போரிடுபவர் ஒவ்வொருவரும் தத்தம் வெற்றியை இலக்காகக் கொண்டே போராடுவர். ஆனால் நிறைவகையில் இலக்கு முழுவதும் போராட்டத்திலேயேயுள்ளது—எதிர் தரப்பாரின் தகுதியை உயர்த்தி, தானும் தகுதியில் உயர்வதேயாகும். இரண்டாவதாக இப் போராட்டத்தில் இந்த வெற்றி, சிறப்பாகப் பெண்டிரின் இறுதி வெற்றி அவர்கள் தோல்வியிலேயே அடங்கியுள்ளது. இதனை இன்றும் தமிழர் திருமணச் சடங்குகளில் ஒன்றில் அறிவும் பண்பும் மிக்க பெண்களின் செயல் மரபிலேயே அறியலாம்.

மணமகனும் மணமகளும் ஒரே கலத்தின் நீரிலிட்ட கணையாழியை நீரினுள் கையிட்டுத் துழாவி யெடுத்தல், பல்லங்குழி யாடுதல் முதலிய போட்டியாட்டங்களில் பயில்பவர். இவற்றில் மணமகள் திறமையற்றவளா யிருந்தால், மணம்கனுக்குச் சடங்கில் விறுவிறுப்பும சுவையும் ஏற்பட முடியாது. அதே சமயம் மணமகள் திறமை மிக்கவளாயிருந்து வெற்றி வாய்ப்பைத் தானே பெற்றுவிட்டால், கணவனின் தன்மதிப்பும் தன்னம்பிக்கையும் ஊறுபட்டுப் பெண்ணின் வாழ்க்கை நலமே குன்றிவிட இடமேற்பட்டுவிடும். இவ் விருமை நிலையும் அறிந்த அறிவும் பண்பும் மிக்க பெண்டிர், வெற்றி நோக்கிப் போராடி, அதைக் கணவன் வெற்றியாக்கிக் கண்டு மகிழ்வர். போராட்ட மகிழ்வுடன், கணவன் வெற்றி மகிழ்வும் சேர்ந்து அவர்கள் அறிவுடைத் தோல்வியை நிறை வெற்றி, நிறை மகிழ்வாக்கிவிடுகிறது.

இத்தகைய இனிய நிறைப் போராட்டமாகிய ஆண் பெண்களின் பேராண்மைப் போராட்டத்தைக் குறுந்தொகைப் பாடல் ஒன்று அழகுபட வருணிக்கிறது.

'செல்வார் அல்லர் என்று யான் இகழ்ந்தனனே;
ஒல்வாள் அல்லள் என்று அவர் இகழ்ந்தனரே;
ஆயிடை,

இரு பேராண்மை செய்த பூசல்
நல் அராக் கதுவியாங்கு என்
அல்லல் நெஞ்சம் அல மலக்குறுமே! (குறுந்தொகை 43)

ஆடவன் பெண்ணின் காதற் கோட்டையில் பொதுவே அமைந்து நின்றாலும், ஆடவர்க்குரிய சமுதாயக் கடமையாகிய வினை வருங்காலத்தில், அக் கோட்டையின் கட்டு மீறி எழும் ஆற்றலுடைமையே அவனுக்கு நிறை ஆகும். பெண்ணுக்குக் கற்பு எவ்வளவு சிறந்ததோ, அவ்வளவு ஆணுக்கு இந் நிறை சிறப்புடையதாகும். பெண்ணுக்கு நிறை என்பதெல்லாம், ஆணை இக் காதற் கோட்டையில் தகாத வழி செல்லாமல் தடுப்பதும், தகுவழியில் அவன் மீறிக் கடக்கும் போது, தன் நிறை அல்லது பேராண்மைப் போராட்டத்தால் அவன் நிறை ஆற்றல் பெருக்குவதுமேயாகும்.

இக் குறட்பாவில் 'நிறை' என்ற சொல் ஆணுக்குரிய பேராண்மையாகவே கூறப்பட்டு, அதனைக் காக்கும் காப்பு என்று பெண்ணின் நிறை அல்லது பேராண்மைப் பண்பு குறிக்கப்பட்டது இதனாலேயேயாகும்.

ஆணின் நிறை வெள்ளத் தேக்கத்துக்குரிய தடுக்க முடியா ஆற்றல் போன்றது. பெண்ணின் நிறை இதைத் தகா வழி பரந்து செல்லாமல், கரை போலும் அணை போலும் தடுத்து நின்று, தகுவழி தானே உடைத்துக் கொள்ளும்படி விடும் இயந்திர மதகுப் பொறி போன்ற பண்பமைவு ஆகும்.

தலை என்பது தலைசிறந்த பாதுக்காப்பு முறை ஆகும் என்று பொருள்பட்டது.

சிறை காக்கும் காப்பு பயனற்றது என்று கூறியபின்; நிறை காக்கும் காப்பு பயனுடையது என்பது தானே அமையும். ஆனால் அதுவே தலை என்று கூறியதனால், அக் காப்பு சிறைமூலம் காப்பு விரும்புபவர் விரும்பும் காப்பினைத் தன் விளைவாகத் தருவதுடன், அது தராத நிலையான பயனையும், அது கருதாத ஆக்க வளம் பொங்குமாவளங்களையும் தரும் என்று கூறியதாயிற்று. ஏனெனில், சிறை பழிச் செயல்

தடுக்க எண்ணியதில்லை. எண்ணிய பழிச்செயல் தடுப்பிலும் அது வெற்றி பெறுவதில்லை. நிறை காப்போ பழிச்செயலை நிலையாகத் தடுத்து, பழியெண்ணமும் அறவே நீக்கிவிடும். இத்துடன் அமையாமல், அது அறச் செயலையும் அற முறை நல்லெண்ணங்களையும் புதிது புதிது தூண்டி, பழிக்குரிய ஆற்றலையே அறத்துக்குரிய ஆற்றலாக்கி, அவ் அறப் பண்பும், அறச் செயலும், அற ஆற்றலும் பெருக்கி வளம் பொதுளுவிக்கும்.

சிறப்புரை: தீய திறங்களான பழிப் பண்புகளுக்கு நிலையான வலிமை கிடையா. ஆயினும் அவை தடுக்க முடியாத புயலாற்றல்களாகச் செயல்படுவன; தடுக்காது விட்டால் ஒன்று பத்தாகப் பெருகும் இயல்பும், தடுக்க முயன்றால், தடையினாலேயே பேராற்றலாகிப் பெருக்க முற்று வளரும் குணமும் உடையன. இதனால் சிறையும் தண்டனையும் இவற்றை அழிக்கவோ, கணிக்கவோ பயன் பட மாட்டா. பெருக்கவே பயன்பட முடியும். பெண்டிர் தம் நிறை மூலம் தூண்டும் நிறைப் பண்பு ஒன்றே அத் தீமையின் புயலாற்றலைத் தென்றலாற்றலாக மாற்றிப் பொன்மாற்றுச் சித்து நிகழ்த்திவிடும் தன்மை உடையது ஆகும்.

பொருள்வளம்: (1) மேலீடாகப் பார்ப்பவர் களுக்கு இக் குறட்பா சிறை காப்பினைப் பயனற்ற தென்று கூறி அரசழிவு (அராசக)க் கோட்பாடு பரப்பு வது போலத் தோற்றும். ஆனால் உண்மை இதுவன்று. ஏனெனில் இக் குறட்பா இராம இராவண வாத நெறி முறை சென்று, சிறையினும் நிறை மேம்பாடு கூற எழுந்ததே யாகும். சிறை காக்கும், நிறை காக்கும் என்ற இரு முதற் சீர்களுமே காய்ச் சீர்களாய், நிறைந்த செப்பலோசையுடன் இயல்வதும்; சீர்கள் அவற்றின் பின் ஓசைக் குறுகிச் செல்வதும் இதனைக்

காட்டும். சிறை காப்பின் பயன் யாது எனக் கூறிய பின், நிறை காப்புத் தலை என்றதனாலும்; முன்னதனை நோக்கப் பின்னது தலை என்ற பொருளும், பின்னதனை நோக்க முன்னது பயனற்றது என்று கூறத்தக்கது என்ற பொருளும் தொனித்தன.

இரண்டாவதாக, நீரை அணை தடுத்து நிறுத்துவது, மடை அதனைத் திறந்துவிட்டுப் பயன்படுத்துவதை எதிர் நோக்கியே யன்றி வேறன்று. மடை திறப்பு இன்றேல், அணை தடுப்புப் பயனற்றது, வெற்றழிவாய்விடும். அரசன் சிறைத் தண்டனை பழி தடுப்பதும் இவ்வாறே பெண்டிர் நிறை காப்பாகிய மடை மூலம் அத் தடையாற்றல் பயன்படுவதற்காகவே யாகும் என்பது இக் குறட்பா சுட்டிய பொருள் ஆகும்.

மூன்றாவதாக, மடையின் ஆக்க ஆற்றலுக்கு வேலி செய்வது அணை. அதுபோல மாதர் காப்பாற்றலுக்கு வேலியாவது அரசன் ஆணை, சிறை காப்பு முறை, தண்டனை முறை ஆகியவை. மாதர் கற்பாற்றல் தீமையாற்றலின் புயற் பண்பு வளர்ச்சியால் அவ் வேலி கெடாமல் காப்பதாகும்.

அரசர் காப்பாற்றலைக் காப்பு வள ஆற்றலாக்குபவள் பெண்.

(2) ஆட்சியாற்றலில் தலை சிறந்த பகுதி சிறை காப்பே. பெண்டிராற்றலில் தலை சிறந்த ஆற்றற் கூறு நிறை காப்பே. 'சிறை காக்கும்', 'நிறை காக்கும்' என்ற எதிரிணை வழக்கும், செப்பலோசை நிமிர்வும் இது சுட்டுகின்றன. ஆனால் 'காப்பு எவன்' என்ற சீரின் முரிவிசைப்பும், அதற்கெதிரான 'காப்பே' என்பதன் நிமிர்விசைப்பும், தலை என்பதன நிமிர்

விசைப்பும் சிறை காப்பாகிய அரசனாற்றலுக்கு ஆற்ற லாய், அதன் உயிராய்ச் சிறப்பது நிறை காப்பு ஆற்றலே என்றும்; நிறை காப்பு ஆற்றல் இல்லாத விடத்து அரசனின் சிறை காப்பு ஆற்றல் பயனற்றது ஆகும் என்றும் குறித்துக் காட்டின.

(3) சிறை காப்புக்கு எதிரிணை நிறை காப்பு. சிறை காப்பு அரசனுக்குரியது. ஆனால் இதன் எதிரிணையான நிறை காப்பில் நிறை பெண்களுக்குரிய தாக இக் குறட்பாவில் கூறப்படவில்லை. ஆடவர்க் குரியதாகவே கூறப்பட்டுள்ளது. இதனால் அரசனுக் கும் சிறை ஆற்றல் சிறப்புரிமையுடையதன்று என்பது இக் குறட்பாவில் குறிக்கப்பட்டது. தன் நிறை மூலமே ஆடவர் நிறை இயக்கிப் பெண் அற ஆட்சி நிறுவுவது போல, அரசனும் தன் செங்கோல் மூலமே அறத்தை இயக்கி, சிறை ஆட்சியையும் அற ஆட்சியாக மாற்ற வேண்டுமென்றும்; பெண்ணின் 'நிறை காப்பு'க்கு அரசன் செங்கோல் நிகர் என்றும், ஆடவர் நிறைக்குச் சிறை காப்பு நிகர் என்றும் இக் குறட்பா சுட்டிக் காட்டு கிறது.

(4) தண்டனையின் நோக்கம் செய்த தீமைக்கு எதிர் செயலன்று, தீமை வளராமல் தடுப்பதே என்ப தும்; அறிவார்ந்த தண்டனை இன்னும் ஒரு படி மேற் சென்று தீமையை நன்மையாக மாற்றித் திருத்த முடி யும் என்பதும் இக்கால உயர் அரசியல்வாதிகளின் கருத்து ஆகும். இக் குறட்பாவில் திருவள்ளுவர் சுட்டும் பண்பு நோக்கியே நம் நாகரிக உலகமும், நம் அறிஞர் கனவுகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று காணலாம்.

(5) விளக்கவுரையில் பேராண்மைப் பூசல் விரித்துரைக்கும் குறுந்தொகையின் அழகுப் பாடலும்; கருத்துரையில் மணிமேகலையில் வரும் சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதைக் குறிப்பும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இவ் விரண்டும் திருவள்ளுவரின் இக் குறட்பாவுக்கு எழுந்த விளக்கவுரைக் கோயில்களே என்னலாம்.

தற்காலச் சிறைச் சீர்திருத்தக் கருத்துக்கள் இக் குறட்பாவிலிருந்தே ஒளிபெறுகின்றன என்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது.

(6) இக் குறட்பாவில் பெண்டிர் 'மகளிர்' எனப் படுகின்றனர். இச் சொல் பொதுவாகப் பெண்களைக் குறிப்பதாயினும், சிறப்பாகக் கன்னியரைக் குறிப்பது என்பது கூருமலே விளங்கும். ஏனெனில் பெற்றோர்க் குரிய அவர்கள் தொடர்பையே மகள் சுட்டுகிறது. அத்துடன் பெண்டிரின் கற்புப் பண்போ, நிறைப் பண்போ சுட்டப்படவில்லை.

பெண்டிர்க்குக் கற்பின் ஆற்றல் கனி ஆற்றல். நிறை ஆற்றலோ அவர்களுக்குத் தளிராற்றல் போன்றது. கற்பு கணவன் வழி நின்று உலகை இயக்க உதவும். நிறையோ மரபு வழி நின்று கணவன் நிறையை இயக்க உதவும். இவ்வாறு ஆடவரை இயக்கிய பின்னரே, அவர்கள் கற்பாட்சி சிறப்பதாகும் என்பது இதனுல் குறிக்கப்பட்டது.

இவ் வதிகாரத்தில் பெண்டிர் கற்பாற்றல் நேரிடையாக நான்காம் குறட்பாவிலும் (54), விரிவுரையாக அடுத்த இரு குறட்பாக்களிலும் (55, 56) கூறப்பட்டு, அதன் பின் வரும் குறட்பாக்களில், கற்பெனும்

பயிர் வளர்வதற்குரிய நாற்றங்காலாகிய பெண்மை யின் சிறப்பே முற்றிலும் கூறப்படுவது காணலாம். 'கற்பு' ஒரு முற்ற முடிந்த பண்பன்று, வளரும் பண்பு; ஒரு குறிக்கோள் நோக்கிச் செயலாற்றும் இயக்கப் பண்பு, உயிர்ப் பண்பு என்பதை இவ்வதிகாரக் குறட் பாக்களின் பொருளமைவு காட்டுகிறது.

இதனாலேயே பெண்டிரின் உச்சக் கடவுட் பண் பாகிய கற்பு அதிகார நடுவில் சிறப்பிக்கப்பட்டு, அதன் வளர்ச்சியால் ஏற்படும் வளமே அதிகாரப் பிற்பகுதி யில் விளங்க வுரைக்கப்படுவது காண்கிறோம்.

(7) 'தலையாடாமல் வாலாடாது' என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. இக் குறட்பா 'தலை' என்று முடி கிறது. 'செய்யும்' என்று குறட்பா முதல் வாசகம் முடிகிறது. பெண்டிரின் காப்பு இன்றேல், அரசின் காப்பு பயன்படாது என்பதை இதுவே தொனிப் பொருளாகத் தரல் காணலாம்.

தனிக் குறிப்புக்கள்: (1) இக் குறட்பாவில் பரிமேலழகர் மகளிர் என்பதனை அரிமா நோக்காகக் கொண்டு முன்னும் பின்னும் பொருள் கொள்ளும்படி சேர்த்துள்ளார். அச் சொல்லைச் சிறைகாக்கும் என்பதனுடன் சேர்க்கும்போது, அதனை இரண்டாம் வேற்றுமைத் தொகையாக்கி, காக்கும் என்பதற்கு எழுவாயாகத் தலைவர் (கணவர்) என்பதனை வருவித்து, 'மகளிரைத் தலைவர் சிறையால் காக்கும் காவல்' எனப் பொருள் கூறினர். சிறை காக்கும் என்பதனையும் அவர் மூன்றாம் வேற்றுமையாகக் கொண்டார் என்பது இதனால் தெரிகிறது. அதே சமயம் அவர் மகளிர் என்ற இதே சொல்லை நிறை காக்கும் காப்பே என்பதுடன் சேர்க் கும்போது, மகளிர் என்பதனைக் காக்கும் என்பதன் வினை முதலாகவும், நிறை என்பதனுடன் 'தமது' என்ற சொல் பெய்து அதை அம்மகளிரின் நிறையேயாகவும் கொண்டு,

'அவர் (அம்மகளிர்) தமது (அம்மகளிர் தமக்குரிய) நிறை யாற் காக்கும் காவலே' என்று பொருள் உரைத்தார்.

சிறை என்பதற்கு 'மதிலும் வாயில் காவலும் முதலாயின' என்றும்; 'நிறை' என்பதற்கு 'நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல்' என்றும் அவர் விளக்கவுரை தந்துள்ளார்.

'காவலிரண்டிலும் நிறைக்காவல் இல்வழி ஏனைச் சிறைக் காவலால் பயனில்லை என்பார், நிறை காக்கும் காப்பே தலை என்றார்' என்றும் 'இதனால் தற்காத்தற் சிறப்புக் கூறப்பட்டது' என்றும் பரிமேலழகர் விளக்கி முடிக்கிறார்.

மற்ற உரையாசிரியர்களின் பொருள் பரிமேலழகர் உரைப் பொருளினின்று அடிப்படை மாறுதல் எதுவும் அற்றதே. மணக்குடவர் நிறை என்பதற்கும் கற்பு என்றே பொருள் உரைத்தார். புலவர் குழந்தை அதனை மன ஓரிமைப்பாடு என்று விளக்கினார். கவிஞர் இராமலிங்கனார் 'நிறை என்பது பெண்களுக்கு அவர்களுடைய உடலின் கூச்சத்தோடு சேர்ந்த தற்காப்பு உணர்ச்சி' என்றார்.

(2) 'பெண்டிரைக் கணவன்மாரோ மற்றைய உறவினரோ சிறை செய்து காத்தல் வேண்டா; அவர்கள் தம்மைத் தாமே காத்துக் கொள்வதுதான் சிறந்தது'— எல்லா உரையாசிரியர் கருத்துப்படியும் இக் குறட்பாவின் பொருள் இதுவேயாகும். இக் கருத்துத் தவறன்று, நல்ல பகுத்தறிவார்ந்த கருத்தேயாகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இதுவே குறட்பா இயற்றிய திருவள்ளுவர் பெருமானின் கருத்து என்று கூறலாகுமா என்பது ஆராய்ந்து காணத்தக்க செய்தி ஆகும்.

இதுவே திருவள்ளுவர் கருத்து என்று கூறுவது கீழ்க் கண்ட முரண்பாடுகளுக்கு இடம்தரும்.

முதலாவது திருவள்ளுவர் காலத்தில் கணவன்மாரோ, பெற்றோரோ, பிற உறவினரோ பெண்களின் ஒழுக்கம் கருதி

அவர்களை அடைத்து வைக்கும் வழக்கம் இருந்தது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்ளாவிட்டால், உரையாசிரிமர் கருத்துப் பொருத்தமற்றதாய் விடும். ஆனால் நாம் அறிந்தவரை ஐரோப்பாவில் கி. பி. 5-ம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த கிரேக்க ரோமரிடையிலோ, அவர்களிலும் பழமை வாய்ந்த கிரேட்டர், சுமேரியரிடையிலோ இவ் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. கி. பி. 12-ம் நூற்றாண்டுக்கு முன் இந்தியாவுக்கு வெளியே ஆசியா, ஆப்பிரிக்கா எங்குமே இப் பழக்கம் இருந்ததாகக் கூற முடியாது. இந்தியாவிலும் வேத உபநிடதங்களில் இப்பெண் சிறையீட்டு வழக்கம் ஒரு சிறு குறிப்பாகக்கூடக் காணப்படவில்லை. தமிழகத்திலோ, தேவார திருவாசக காலங்கள் சங்க இலக்கிய, தொல்காப்பிய காலங்கள் ஆகிய எவற்றிலும் இவ் வழக்கம் இருந்ததாகக் குறிப்பிடப்படவில்லை,

களவியல் பருவத்தில்கூட அலர்தூற்றல் ஏற்பட்டால் அன்றிக் கன்னியச் காவலில் வைக்கப்படவில்லை. அப்போது கூடக் கண்காவலும், தனியே செல்லாக் காவலும் குறிப்பிடப்படுகிறதே யொழிய, பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் குறிப்பிட்டபடி மதிலும் வாயிலும் ஆட்காவலும் கொண்ட அரசியல் சிறைக் கூடமோ, அதை ஒத்த அமைப்புக் காவலோ சுட்டப்படவில்லை.

விக்கிரமாதித்தன் கதைகள் இடைக்காலத்தன. அவை கூடக் கன்னிமாடம் குறித்தனவேயன்றி உரையாசிரியர்கள் கூறும் கற்பு மாடங்கள் குறிக்சவில்லை.

உலகில் செயற்கைத் துறவிகள் சமய ஆட்சி செய்த மேலையுலகில் இடைக் காலத்திலும் (கி. பி, 12-16-ம் நூற்றாண்டு) கிட்டத்தட்ட அதே காலத்தில் கிழக்கிலும், நாகரிக உலகினைச் சூறையாடி அரசியல் அமைதி அழித்த மங்கோலியர் ஆட்சிக் காலத்திலும் (கி. பி. 12-16-ம் நூற்றாண்டுகளிலும்) தான் பெண் சிறையீட்டுப் பண்பு உலகில் நிலவியிருந்ததாக அறிகிறோம்.

நம் திருக்குறள் உரையாசிரியர் காலம் இக்காலத்தது என்பது இங்கே கவனிக்க வேண்டிய செய்தி ஆகும்.

இந்தியாவிலும் உலகிலும் இன்றும் பெண் சிறை நாகரிகம் மிக உச்ச உயர் வகுப்பிலும் கிடையாது. தொழிலாளர்களிடையிலும், கல்லா மக்களிடமும் கிடையாது. செல்வத்திலும் செல்வாக்கிலும் சிறப்பிலும் இயல்பான உயர்வற்றவராய், அதனை உடையாரை அடுத்துத் தாம் உயர்வு பெற விரும்பும் நடுத்தர வகுப்பாரிடை மட்டுமே இப்பண்பு உலகில் நடமாடுகிறது.

வருணாசிரம தர்மம் தோன்றி வளர்ந்து வருவதும்' வகுப்பு வேறுபாடும் பிறப்பு வேறுபாடும் உலகெங்கும் நிலவி வருவதும் இந்த நடுத்தர வகுப்பில் மட்டுமே என்பதையும்: முற்கால ஆட்சியில் உயர்ந்தோர் செலுத்திய ஆதிக்கத்தை—வருங்கால உலகில் ஏழைத் தொழிலாளிகள் உட்பட எல்லாரும் கைக்கொள்ள வேண்டிய ஆட்சி உரிமையை—அணிமைக்கால, தற்கால உலகில் நடுத்தர வகுப்பினரே வகித்து வருகின்றனர் என்பதும் குறித்து நோக்கத்தக்க செய்தி ஆகும்.

திருவள்ளுவர் காலங்கடந்த வேத முதல்வர் மட்டுமல்லர், வருங்காலங்களுக்குரிய வேத முதல்வர் என்பதும் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டிய செய்தி ஆகும்.

இரண்டாவதாக இக்குறட்பாவுக்கு உரையாசிரியர்கள் கொண்ட பொருள் இவ்வதிகாரத்தில் பெண்மையின் சிறப்புப்பற்றித் திருவள்ளுவர் கூறும் பிற குறட்பாக்களின் போக்குக்கு மாறானது ஆகும். தவிர, கற்பு என்பது திண்மை என்று விளக்கிய வள்ளுவர், பெண்டிர் சிறைபற்றிக் கருதவோ, அதை அவர்கள் காக்க வேண்டும் என்று கூறவோ இடமே ஏற்பட முடியாது. கற்பைப்பற்றி அதிகார நடுக் குறட்பாக்களில் குறிப்பிட்ட திருவள்ளுவர், அது கடவுள் பெயர் போல, மலிவாக எடுத்தாளத் தகாத புனிதத் தன்மையுடையது என்று கருதி, அதை நேரடியாகக் கூறாமலே செல்வதும் இங்கே கருதத்தக்க செய்தி ஆகும்.

மூன்றாவதாக, சிறைகாப்பு என்ற கருத்தே கடமைத் திருமண நாகரிகத்துக்கும்; பெண்ணும் ஓர் உடமைப்பொருள்

என்று கருதும் முதலாளித்துவ நாகரிகத்துக்கும் உரியகருத்து ஆகும். உயர் நாகரிகத்திலும், இழி நாகரிகத்திலும்; உயர் வகுப்பிலும் இழி வகுப்பிலும் சிறை காப்புக் காணப்படாமல் நடுத்தர நாகரிகம், நடுத்தர வகுப்பிலேயே அது காணப் படுவதன் காரணம் இதுவே. காதலடிப்படையாக, பெண் ணின் காதலுரிமை யடிப்படையாக எழுந்த தமிழ்க் கற்பு நாகரிகத்தின் திசையில் சிறை காப்புக் கருத்தே கேலிக்குரிய நினைப்பாய் அமைவதாகும்.

நான்காவதாக, 'மகளிர்' என்ற சொல்லை வலிந்து குறட்பாவின் முதலடியில் கொண்டாலன்றி 'பெண் சிறை காப்பு' என்ற கருத்து ஏற்படுவதற்கே இடமில்லை. தவிர, 'சிறை என்பதற்கு மதிலும் காவலும் முதலியன' என்ற பரிமேலழகர் விளக்கம் இம் மணி விளக்கவுரை கொண்ட அரசியற் சிறைக்குப் பொருத்தமாவதே யன்றி, பெண் சிறைக் கருத்துக்குப் பொருந்தாதது ஆகும். மகளிர் என் பதை ப்பரிமேலழகர் இரண்டு அடிகளிலும் சேர்த்தும்; முதலடியில் இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும் இரண்டாம் அடியில் எழுவாயாகவும் கொண்டுள்ளதும் அவர் உரையின் செயற்கைத் தன்மையைக் காட்டும்.

இம் மணி விளக்கவுரை கொண்ட பொருள் இக் குறட் பாவை வாசிக்கும்போது இயல்பாக எழும் பொருளே என்பது காணலாம்.

58. தம்மை அழகுத் தெய்வமாக உளங்கொளப் பூசிப்ப வரே தம் உளங்கொளப் பூசிக்கும் வீரத் தெய்வமாக வந்து வாய்க்கப்பெற்ற பெண்களின் மன்னுலக வாழ்வு பொன்னுலக வாழ்வாக மிளிரும்!

[2]பெற்றாற் பெறின் [4]பெறுவர் [1]பெண்டிர் [3]பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

பொ - ரை: [1]பெண்பாலார் [2]தம்மை உளங்கொள அழகுத் தெய்வமாகப் பூசிக்கும் பண்பு பெற்ற காதல

ரையே தாம் தம் உளங்கொளப் பூசிக்கும் விரத் தெய்வமாகக் கொள்ளும் அரும்பேறு வாய்க்கப் பெற்ற வர்களாகக் கூடுமானல், [3]அத்தகைய பெண்கள் மெய்ஞ்ஞானிகளும் அறவோர்களும் கலைஞர்களும் ஒருங்கே உச்ச உயர் மதிப்புடையதாகப் பாராட்டும் பெரு மதிப்பினையுடைய புகழ் வானவர் வாழும் உலகின் பேரின்பத்தினை [4]இம் மன்னுலக வாழ்வி லேயே பெற்றவர் ஆய்விடுவர்.

க - ரை: அறிஞருலகும் கலைஞருலகும் அற வோருலகும் மனித இனக் குறிக்கோளாக ஒரு முகமாகப் போற்றும் அரும் பெருஞ் சிறப்புடை யது பேரின்பம். இரு பால் இரு திசை இணை வுடைய காதல் வாழ்வு வாய்க்கப்பெற்ற பெண் ணினத்துக்கு, அவர்களது சிற்றெல்லையுட்பட்ட சிற்றின்ப வாழ்வே அப் பேரின்பம் கிட்டச் செய் வதாகும்.

இலக். கு: ஒரு சார்பு வாக்கியம் உட்பட இக் குறட்பாவின் இணை வாசகம் ஒன்றே. இதன் சொற்கள் அவாய்நிலைச் சொல் ஒன்ற உட்பட நான்கு ஆகும்.

அவை யாவன:

[அ] சார்பு வாக்கியம்.

1. பெண்டிர் (இது சார்பு வாக்கிய எழுவாய்).
2. பெற்ருற் பெறின் (இது சார்பு வாக்கியப் பயனிலை).

[ஆ] முடிபு வாக்கியம்.

1. (அவர்கள்) [இது முடிபு வாக்கிய எழுவாய்].
2. பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு பெறுவர் (இது முடிபு வாக்கியப் பயனிலை).

இக் குறட்பாவில் பெறின் பெறுவர், பெருஞ் சிறப்பு ஆகிய இரண்டும் நெடு சீர் சீர்கள், முதலசை எடுத்திசைப்பன. புத்தேளிர் என்பது நெடுஞ்சீர், இரண்டாம் அசை எடுத்திசைத்தது. பிற சீர்கள் எல்லாம் நேமாச் சீர்கள். நெடுசீர் சீர்களில் 'பெறின் பெறுவர்' இரு சொற்செறிவுற்று இரட்டித்து மடக்குற்று, நேமாச் சீர்களில் 'பெண்டிர்' ஈரசையும் எடுத்திசைக்க, 'வாழும்' என்பது முற்றிலும் கவித்திசைத்தது.

பெண்டிர் என்பது பலர்பால் பெயர்ச் சொல், 'இர்' பலர்பால் விகுதி. பெண் என்னும் பெயர்ச் சொல் 'து' எனும் ஒன்றன்பால் விகுதியையே ஒருமை விகுதியாகப் பெற்றுப், 'பெண்டு' ஆயிற்று. விகுதியின் தகரம் ணகரத்தின் பின் டகரமாயிற்று. இப் பெயர்ச்சொல் சார்பு வாக்கிய எழுவாயாய், 'பெற்றார்ப் பெறின்' என்பதைப் பயனிலையாகக் கொண்டதுடன், அவர்கள் என்ற அவாய் நிலைக்குச் சுட்டு முதலாகவும் நின்று, முடிபு வாக்கியப் பயனிலைக்கும் மூல எழுவாய் ஆயிற்று.

பெற்றார்ப் பெறின் என்பது பெற்றாரைப் பெறின் என இரண்டாம் வேற்றுமைத் தொகை. பெறின் என்ற ஈற்றுச் சொல்லும் தொகைநிலையும் வினை யெச்சமாய்ச் சார்பு வாக்கியப் பறனிலையாய், பெண்டிர் எனும் எழுவாய் கொண்டது. பெறின் என்பதில் 'பெறு' வினைப் பகுதி. இது காரணப் பொருள் வினையெச்ச விகுதி. பகுதி உகரம் விகுதி உயிர் முன் கெட்டது. இவ் வினையெச்சம் பெறுவர் என்று முடியும் முடிபு வாக்கியப் பயனிலை வினைகொண்டு முடிந்தது.

பெற்றார் என்பது இறந்தகால வினையாலணையும் பெயர். 'பெறு' பகுதி. ஆர் பலர்பால் விகுதி. இக்கணம் சார்ந்த பகுதிகள் இடை வல்லெழுத்து மிகுவதையே இறந்தகால இடைநிலையாகக் கொள்வன. அதன்படி பெறு என்பது பெற்று என்றாகி, ஈற்று உகரம் ஆர் என்ற விகுதியின் உயிர் முன் கெட்டது.

அவர்கள் என்ற அவாய்நிலைப் பெயர் பெண்டிர் என்பதனைச் சுட்டி முடிபு வாக்கிய எழுவாயாய் நின்றது.

பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு பெறுவர் என்பது தொகைநிலை வினையாய், 'பெண்டிர்' என்பது சுட்டிய 'அவர்கள்' என்னும் அவாய்நிலைப் பெயரை எழுவாயாகக் கொண்டு முடிந்தது. பெறுவர் என்னும் வினைமுற்றில் 'பெறு' வினைப் பகுதி. 'அர்' பலர் பால் விகுதி. வகரம் காலப் பொதுமை சுட்டிய எதிர்கால இடைநிலை.

உலகு பெறுவர் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. உலகினைப் பெறுவர் என்பது குறிப்பு. வாழும் என்பது 'வாழ்' என்னும் பகுதியடியான பெயரெச்சம். உம் காலப்பொதுமை சுட்டிய எதிர்கால வினையெச்ச விகுதி. இது இடைநிலை ஏற்பதில்லை. இது உலகு என்னும் தொகைப் பகுதி தழுவித் தொகைப்பட்டது. புத்தேளிர் என்பது பண்மைப் பெயர்ச சொல். 'இர்' பலர்பால் விகுதி. இப் பெயர் 'வாழும்' என்ற வினையெச்சப் பகுதியைப் பயனிலையாகக் கொண்டு எழுவாயாய்த் தொகைப்பட்டது.

புத்தேள், புத்தேளிர் என்பவை புத்தெழிலர் என்பதன் மரூஉ.

பெருஞ் சிறப்புப் புத்தேளிர் என்பது பெருஞ் சிறப்பினை உடைய புத்தேளிர் என்று பொருள்படும் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும். பெருஞ் சிறப்பு என்பது பெருமையையுடைய சிறப்பு என்ற பொருளில் வரும் பண்புத் தொகை. சிறப்பு என்பது பண்புப் பெயர். சிறத்தல் என்னும் பொருளுடைய தொழிற் பெயராய்ப் பண்புக்கு ஆயிற்று.

வி-ரை : அறவாழ்வின் மையப் பண்புருவான இல்வாழ்வானின் அருளுருவும் அருட்சத்தியும் அறவாழ்வின் மழை முகிற் பண்புமான வாழ்க்கைத் துணைவியின் நலம் முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடைய தாயினும், இதற்கு முந்திய குறட்பாவும் இக் குறட்பாவும் அடுத்து வரும் குறட்பாவுமாகிய இவ்வதிகாரத்தின் மூன்று குறட்பாக்களும் (57-59) வாழ்க்கைத் துணைவியின் அறவாழ்வு வளம் சிறப்பிப்பன ஆகும். அவ் வழி இக் குறட்பா இருதிசைக் காதலின் மூலம் பெண்டிர் பெறும் பேரின்ப வளமும், அதனால் ஏற்படும் அறவாழ்வுப் பொங்கு மாவளமும் சிறப்பிக்கின்றது.

பெண்டிர் என்பது பெண்டு என்பதன் பலர்பால் என்பதும், அது பெண் என்பதனுடன் பொதுப்பால் ஒருமை குறித்த ஒன்றன்பால் விகுதியான 'து' சேர்ந்த வடிவம் என்பதும் இலக்கண குறிப்புரையில் கூறப்பட்டன். பெண்டாட்டி என்ற சொல்லின் முதற்பகுதி இதுவே: பெண்டு என்பது பெண்மைச் செல்வம் குறிப்பதையும்; அச் செல்வம ஆளும் கணவனே பெண்டாளன் ஆகி, அதனை ஆளும் மனைவியே பெண்டாட்டி ஆகிறாள் எள்பதையும் இச் சொல்லே சுட்டும்.

பெண்டு, பெண்டிர் என்ற சொற்கள் குடும்ப வாழ்வில் ஒருபாதியான வாழ்க்கைத் துணைவியை இங்கே குறிக்காமல், இரு பாற்கும் பொதுவான குடும்பத் தலைமையைக் குறிக்கிறது. குடும்பத் தலைவி அதாவது அகத்தலைவி பெண்ணே, சமுதாய உறுப்பினன் என்ற முறையிலேயே; ஆண் குடும்பத் தலைவன் ஆவான் என்பது இங்கே ஓர்ந்து காணத்தக்கது. தவிர ஆண்மரபு, பெண் மரபு ஆகிய இரு மரபுகளுக்கும் உரிய கால்வழி உரிமையும், இரு மரபுகளையும் தோற்றுவிக்கும் மரபு முதலுரிமையும் பெண்ணுக்குத்தான் உண்டு என்பதும் கவனிக்கத்தக்கது, இனத்தின் சேயுரிமை, தாயுரிமை ஆகிய இந்த இரண்டு வளங்களையும் பெண் இனப் பெருவளமாக, பேரின்ப வளமாக ஆக்க வேண்டுமானால், அவள் இருதிசைக் காதலாகிய அரும்பேறு எய்தியவளாக வேண்டும்.

கடலும் கதிரவ னொளியும் இணைந்தே முகிற்பண்பு வளம் பேறுவதுபோல, ஆண் பெண் இரு திசைக் காதலின் இணைவாலேயே பெண்மையின் முகிற் பண்பு வளம் பெறுகிறது.

பெண்டு என்று பெண் இங்கே கூறப்பட்டதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதிகார நடுக் குறட்பாவில் கற்புடைப் பெண்ணைச் சிறப்பித்த திருவள்ளுவர், கற்பின் தனித்திறம் விளக்கப் பின்வரும் குறட்பாக்களிலெல்லாம் பெண்ணையே குறிப்பிட்டு; கற்பென்னும் திறத்தை அவ்வாற்றலின் வளர்ச்சிப் பண்பாகவே வருணிக்கிறார். அவ்வழி

பெண்டிரின் இருதிசைக் காதற்பேறே கற்பு என இக் குறட்பா காட்டுகிறது.

தவிர, களவியலில் ஆடவன் நோக்கு முதலில் பொது நோக்காக நின்று, பெண்ணை அழகுருவாகவே காண்கின்றது. பல பெண்களில் ஒருத்தியாய், அழகு ஒன்றால் மட்டுமே சிறப்பு மிக்கவளாய் அவள் அவனைக் கவர்கிறாள். அவனது சிறப்பு நோக்குப் பெற்றுக் கற்பியலின் நிலையிலேயே அவள் அழகுரு பண்புருவாய், அவள் களவியல் கனவுகளில் வேர் பரவவிட்டு வளரும் தனிச் சிறப்புருவாய் அவள் திகழத் தொடங்குகிறாள்.

பெண்டிர் என்ற பன்மை தொடக்கப் பொது நோக்குச் சுட்டியதாகும். சிறப்பு நோக்காலேயே அது பெருஞ் சிறப்புப் பெறுகிறது.

பெண்டிர் என்ற சொல் இங்கே பன்மையாக வழங்கப் பட்டாலும் பெண்ணினம் குறித்த பொதுப் பன்மையே யாகும் என்னலாம்.

பெற்றார் என்பது இக் குறட்பாவில் காதலனைக் குறித்த சொல் ஆகும். பெண்ணையே தன் உளங்கொண்ட காதலி யாக, காதல் தெய்வமாகப் பெற்றவன், அழகுத் தெய்வமாக அவளைப் பூசிப்பவன் என்பது இதன் குறிப்பு. மேலே அதிகார நான்காம், ஐந்தாம் (54—55) குறட்பாக்களில் கணவனை மனைவியின் தெய்வமாகக் குறிப்பிட்ட நிலை அவளது கற்பியய் நிலை ஆகும், ஆனால் கற்பியல் நிலையும் கற்பும் கற்பியலில் ஊன்றி வளரும் பண்புகளேயாகும். பெற்றார் என்ற இச் சொல் கற்பியலுக்கு முற்பட்ட அந்தச் களவியல் நிலையையே குறித்தது ஆகும். கணவனாகும் உரிமை பெறுமுன் காதலனாக வந்துதான் அவள் தெய்வ மாகுமுன் அவளைத் தன் தெய்வமாகப் பூசித்தவன் என்பது இங்கே இச் சொல்லால் குறிக்கப்பட்டது.

பெண் ஆணுள்ளத்தில் புகுவதே களவியலில் நடை பெறும் முதல் செயல், இது நிகழ்ந்த பின்னன்றிப் பெண் உள்ளத்தில் ஆண் புகுதல் இல்லை. பெண் இவ்வாறு உளம்

புகுங் காலத்து, அழகுருவாகவே முதலில் புகுகிருள். அழகு ஈட்டி முனையாக, அதன் பின்னரே அது குறித்துக் காட்டும் பண்புரு அவனைக் கரைத்துத் தன் வசமாக்குகிறது.

மேலே பெண்டிர் என்று பன்மையில் பெண் கூறப் பட்டதற்கேற்ப, இங்கும் ஆடவன் பெற்ருர் என்று பன்மை யில் குறிக்கப் படுகிருன். ஆயினும் இங்கே பன்மைச் சொல் மதிப்பொருன்மயாக, இனங்குறித்த உரிமையாகவே வழங்கப் பட்டது என்னலாம். இம் முறையில் மேலே இனஞ்சுட்டிய பன்மையாக வந்த பெண்டிர் என்பதனுடன் இது இலக்கண வகையிலும், பொருள் வகையிலும் ஒருங்கே பொருந்துவ தாகும்.

பெண்டிர் என்ற பன்மை களவியலில் பொதுமை சுட்டு கிறது. அதுபோலவே பெற்ருர் என்ற பன்மையும் தொடக்கப் பொதுமை சுட்டிய சொல் ஆகும். ஆயினும் முந்திய சொல்லைப்போலன்றி அது பொதுமையாகவே நிற்காமல், மதிப்பொருமையாகும் தன்மையுடையது என்ற அருமை நயம் இங்கே குறிக்கத்தக்கதாகும். ஆடவன் நோக்கில் பொதுமை நீடிப்பதுபோல, பெண்மை நோக்கில் பொதுமை நீடிப்பதில்லை. அவள் கற்பின் திறம் அவளுக்கு ஒருமை நோக்களிப்பதுடன், அவனுக்கும் ஒருமை நோக் களிக்கும் அருமை நோக்காக அமைகிறது. பெற்ருர் என்ற மதிப் பொருமைத் தன்மை வாய்க்த பன்மை இப்பொருள் சுட்டுதல் காணலாம்.

பெறின் என்பது பெண்டிர் அப் பெற்ருரையே தாம் தம் உளங்கொளப் பூசிக்கும் வீரத் தெய்வமாகக் கொள்ளும் அரும் பேறு பெற்ருல் என்று பொருள்படும்.

காதல் இருதிசை வாய்ந்ததாயினும், அவ் இருதிசைப் பண்பே கற்பின் விளை நிலமாயினும், அது எப்போதும் இருதிசை ஒப்புடையதா யிருப்பதில்லை. ஏனெனில் ஆணின் காதல் எப்போதும் புறக்கவர்ச்சியுள் நிற்பது, அகத்தே ஆளப்படுவது. பெண்ணின் காதலோ தொடக்கத்தி லிருந்தே புறக்கவர்ச்சி கடந்து அகக்கவர்ச்சி உடையது. அது புறத்தே ஆளப்படுவது, அகத்தே ஆள்வது, ஆகவே

கற்பியல் காதலில் ஆணின் காதல் சிறிது, தன்னலச் சார்பானது, காதல் கட்டு மீறியே அவ் ஆண் காதல் சிறப்பது.—காதலின் கட்டு மீறும் பண்பு அவனிட மிருந்தாலன்றி, அவன் ஒரு கற்புடைய பெண்ணின் சீரிய காதலைப் பெற முடியாது. இந் நிலையில் கற்பு என்பது ஆள முடியாத ஒன்றை ஆள ஓயாது முயன்று, அத் தோல்வியிலேயே, எல்லையற்ற ஓயாப் போராட்டத்திலேயே, இன்பம் காணும் பெண்மையின் இயல்பு ஆகும்,

பெண்மை உயர் பொருளானாலும் அரும் பொருளன்று, காதலும் அப்படியே. கற்புக்குரிய தகுதிகூடப் பெண்ணிடம் பொதுவான பண்பு என்றே கூறத்தக்கதாகும். ஆனால் கற்பின் முழு நிலை, இருதிசைப்பட்ட காதல் மட்டுமன்றி, இருதிசை ஒத்த காதலேயாகும். இது அரிதினும் அரிய பொருள், கடவுட் பண்புடைய பொருள் ஆகும். கற்புடைய பெண் என்றால் கற்பு என்னும் பண்பினைப் பெற்ற பெண் என்று இன்று நாம் கருதுகிறோம். வள்ளுவ மொழியில் சரிவரக் கூறுவதானால், கற்புடைய பெண் என்பவள் கற்பை நோக்கிச் சென்று, அவ்வரும் பெரும் கடவுட் பண்பு பெற ஓயாது போராடுபவள், கிட்டாத அக் கடவுள் தன்மை வாய்ந்த இலக்கு நோக்கி முன்னேறுபவள் என்றே பொருள் படுவதாகும்.

தன்னைத் தெய்வமாகக் கொண்டவனையே தெய்வமாகக் கொள்ளப்பெறின் என்பதில் 'பெறின்' என்ற சொல் இவ் வருமைப் பாட்டினைச் சுட்டிக் காட்டுவதாகும்.

கற்பு ஒரு நிலைப் பண்பன்று; இயங்கு பண்பு, வளரும் பண்பு, இருதிசை முழு ஒப்புமை எய்திவிட்டால் இந்த வளரும் பண்பு வளர்ச்சியற்றுப் போய்விடும். ஒப்புமை எய்தாவிட்டால், கற்பு வளர்ச்சியடைய வழி இராது. ஆகவே ஆளும் பெண்ணின் பேராண்மை ஆற்றல் முழுமை நோககி வளர வளர, ஆண் அந்த ஆற்றலின் வளர்ச்சி கடந்து வளர்ந்துகொண்டே போனால்தான், பெண்ணின் கற்பு எப்போதும் உயிர்ப் பண்புடைய, வளர்கிற, தெய்விகக் கற்பாக இயங்கும்.

'பெறின்' என்ற வினையெச்சம் சுட்டும் முழு அருமைப் பாடு இதுவே.

பெருஞ்சிறப்பு புத்தேளிர் வாழும் உலகு பெறுவர் என்பது மெய்ஞ் ஞானிகளும், அறவோர்களும், கலைஞர்களும் ஒருங்கே உச்ச உயர் பண்பாகப் பாராட்டிப் போற்றும் பெருந் தகுதியுடைய புகழ்வானவர் வாழும் உலகின் பேரின்பத்தினைப் பெறுவர், அதாவது இம் மன்னுலகிலேயே பொன்னுலக வாழ்வு பெறுவர் என்று பொருள்படும்.

புத்தேளிர் என்பது வானவரைக் குறித்த சொல். இலக்கணக் குறிப்புரையில் சுட்டியபடி புத்தேள் என்பதும் புத்தேளிர் என்பதும் புத்தெழிலர் என்ற தொகையின் மரூஉவேயாகும். உலகில் பொதுவாகக் காணப்படும் புதுமை மிக எளிதாகப் பழமைப்பட்டுப் புதுமை இழந்து போகக் கூடியதாகவே இருக்கிறது. உலகில் காணப்படும் அழகும் இதுபோலவே நீடித்து அழகாயிருப்பதில்லை—அழகு நீடித்தாலும் காண்பவர் உள்ளம் கண்ட அழகில் மிக எளிதாகப் புதுமையிழந்து உவர்ப்புற்று விடுகிறது. இவ்வாறின்றி என்றும் மாறாப் புதுமை, பழகப் பழக மேன் மேலும் வளரும் புதுமை—என்றும் மாறா அழகு, பழகப் பழக ஒன்று பத்து நூறாகப் பெருகும் சந்த அழகு—இந்தப் பொங்காரழகுப் புதுமைப் பண்புடையவர்களே புத்தேளிர் அல்லது வானவர்.

குடும்ப வாழ்வு கடந்து, சமுதாய வாழ்வு கடந்து, இனவானில் என்றும் மிதந்து திரியும் புகழாளரே இவ் வானவர்.

அவர்கள் மாறாது வளரும் புத்தெழிலின், மாறா வளர்ச்சிப் புதுமைப் பண்பின், தன்மையில் ஓர் இரகசியம் உண்டு.

அதனைக் கண்டவர் திருவள்ளுவர், அதனைப் பேண முயன்ற இனம் தமிழினம்.

புராணங்கள் கூறும் அமுதம் .அல்லது அமிழ்தம் இம் மாறாவளர்ச்சிப் புதுமைப் பண்பே ஆகும்.

கலைஞர் காணும் அழகு, அறிஞர் காணும் அறிவு மெய்ம்மை, அறவோர் காணும் அறநலம் ஆகிய மூன்றும் அமைந்த பண்பே இவ்அழியா வளர் இன்பத்தின் அருந்திறம் ஆகும். பாயிர முன்னுரையில் கூறப்பட்ட முப்பாற் குழம்பும், முக்கூட்டமிழ்தமும் இதுவே. இதனையே திருவள்ளுவர் கடவுளின் பண்புருவாகக் கொள்வர்—இதனையே சிறப்பு, செம்பொருள் என்று பலவாறு விதந்துரைப்பர். இங்கே 'பெருஞ்சிறப்பு' என்ற இவ் வடை மொழி ஆர்வ மீதூர இப்பொருளை உள்ளடக்கிப் புத்தேளிர் வாழும் உலகுக்கு அடைமொழியாகக் கூறப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

மெய்ஞ்ஞானிகளும், அறவோர்களும், கலைஞர்களும் ஒருங்கே உச்ச உயர் பண்பாட்டுக் குறிக்கோளாகக் கொள்ளுகிற சிறப்பு என்பதே பெருஞ் சிறப்பு என்ற அடை மொழியின் சிறப்புப் பொருள் ஆகும்.

புத்தேளிர் என்பவர்கள் கலைஞர், அறிஞர், அறவோர் ஆகியோரின் கற்பனைக்குரிய இலக்கானவர்—அந்த இலக்கு வழி வாழ்ந்து தெய்வமானவர்களும் அவர்களே. அவர்கள் வாழும் உலகு வானுலகம், புகழ் என்னும் வானத்து நிலவும் கனவுலகம் அல்லது வருங்கால உலகம் ஆகும்.

வாழும் என்பது முக்காலமும் குறிக்கும் பெயரெச்சம். அது கனவுலகும் எதிர்கால உலகுமாகக் குறிக்கப்படுத லாலேயே உம்மை என்றும் வான் என்றும் கூறப்பட்டு வருகின்றது. உம்மை அதாவது வருங்கால உலகின் கனவு காண்பவரே உம்பர், வானவர்,

காணு உலகாகிய அந்த வானத்துப் பேரின்பத்தை என்றும் வளரும் உயிர்க் கற்பு நெறிகண்ட பெண்டிர் தம் கண்கண்ட வாழ்விலேயே காண்பர், காட்டுவர், எய்துவர், எய்துவிப்பர் என்பது இக் குறட்பாவின கருத்து ஆகும்.

சிறப்புரை: ஆண் அவா என்னும் நிலத்தில் பெண் அவா முடிவு என்னும் வித்தூன்றி; எதிரெதிர் நின்று

நிழலிட்டு எல்லையிலாப் பல்லுருப் பெருக்கம் காணும் இரு திசை நிலைக் கண்ணாடிகள் போல, இரு பால் உள்ளங்கள் எதிரெதிராக ஓயாது காதல் செயலாற்றிப் பெருக்கமுற்று இடையறாது வளரும் இரு திசைக் காதல் நீர் பாய்ச்சி; ஆண் நிறை காதலில் அமைந்து கிடந்து விடாமல் அக் காதலை ஓயாது தூண்டி எழுப்பிப் பெண் நிறையும், அப் பெண் நிறை கடந்து ஓயாது ஆண் நிறையும் வளம்பெற வளர்தலால் ஏற்படும் காதற் போராட்டப் பண்பாகிய உரமிட்டு; சிற்றின்பச் சிறு கழனியையே பேரின்பப் பெருங் கழனியாக வளர்ப்பதுதான் உயிர்நிலைக் கற்பு. அந்த எல்லையில்லா வளர்ச்சிப் பண்பாகிய உயிர்க் கற்பின் சிற்பியே பெண். அவள் வளர்க்கும் காதல் அறம் இது.

பொருள்வளம்: *(1)* இலக்கணக் குறிப்புப் பகுதியில் கூறப்பட்ட இக் குறட்பாவின் சீர் நலம், சீரிணைவு நலம், ஓசை நலம், இசைப்பு நலம் ஆகிய ஒவ்வொன்றும் நான்முகப் பெருமானாகக் கருதப்படும் திருவள்ளுவரின் (அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான் முகங்களின் வாயிலான) நால் வகைப்பட்ட வாய்மொழி அமுதங்களாக விளங்குவன என்னலாகும். அவை இப் பொருள்வளப் பகுதியில் அடங்கக் கூற முடியாதன என்னல் தகும்.

முதலாவதாக, 'பெறின் பெறுவர்' என்பது ஒரே சீருக்குள் செறிவுற்ற ஒரு முழு முப்பால் ஏடுதானே என்னும் அளவில் அமைந்துள்ளது. பெறின் என்ற அரைச் சீர் பெறுதற்கரிய கற்புப் பண்பு பெற்ற பெண்டிர்க்கும் அருமை வாய்ப்பான இரு திசைக் காதலின் பலருமைப்பாடும் சீர் வளமும் சுட்டுகிறது. அதனை அடுத்தூர்ந்து வரும் பெறுவர் என்ற சொல் அவ் வருமைப்பாடு ஒரு சிறிது அமைந்தாலும் சிற்றின்பம்

வளர்ந்து பேரின்பமாகிவிடும் என்ற தொனிப்பொருள் தந்துவிடுகிறது.

இரண்டாவதாக, பெற்றூர்ப் பெறின் பெறுவர் என்ற இரு சீர்களுக்குள் பெறு என்ற வினைப்பகுதி மூன்று தடவை வந்துவிடுகிறது. இருதிசைக்காதலும் அதன் நிறைவான கற்பும், கற்பு வளமும் முப்பால் வளம் நிரப்பி, நாற்பாலாகப் பொங்கிப் பொதுளும் என்பதை இது சுட்டிற்று.

பெற்ருர் என்பதற்கு எதிரிணையாகவும் எதுகை யாகவும் (வல்லெதுகையாக) அமைவது புத்தேளிர் என்பது. இரண்டும் ஒரு நிலைப்பட ஏற்றிசைப்பாகவும் வந்தன. இவற்ருல் கணவனுக வந்தடைந்தவர் ஆராக் காதல் பூசனை மட்டுமன்றி, ஆராத பேரா நிறையும் புத்தேள் இன்பத்துக்குக் காரணங்கள் ஆவன என் பது குறிக்கப்பட்டது.

பெருஞ் சிறப்பு என்பது அடைமொழியே யாயினும், பெறின் பெறுவர் என்பதை ஒப்ப நெடுநீள் சீராகவும், ஆனல் அதனைப்போல முரிவின்றியும் வந்த தனுல், 'பெறும்' அருமைப்பாடு 'பெற்று' விட்டால், அதற்கு மேற்பட்ட சிறப்பு இல்லை, உச்ச உயர் அளவு சிறப்பு உண்டு என்பதும்; அது இன்பம், பேரின்பத் தோடு கூடிய சிறப்பு என்பதும்; மனைவி காணும் இப் பேரின்பச் சிறப்புக் கணவனுக்கும் உரியது, அவர்கள் மரபுக்கும் இனத்துக்கும் உரியது, பெண்ணின் பிறந் தகத்துக்கும் வாழ்வகத்துக்கும் ஒருங்கே உரியது என்பதுமாகிய கருத்துக்கள் குறிக்கப்பட்டன.

பெண்டிர் என்பது தேமாச்சீரேயாயினும் வழக்க மீறி ஈரசையும் ஒத்து எடுத்திசைத்து, பேரின்ப வாழ்

வுக்கு வழி வகுக்கும் பெண்மை உயர்வையும், அதன் மூலம் அவர்கள் இன முதல்வரோடு (சான்றோரோடு) ஒத்த இன முதல்வராகவும், இன முதல்வரைப் பெற்றெடுக்கும் இனமுன் ஆகவும், இனத் தெய்வமாகவும் விளங்கும் சிறப்பையும் எடுத்துக் கூறிற்று.

வாழும் என்பதன் படுத்தல் நலிதல் இசைப்புக் கலந்த இறங்கிசைப்பும், உலகு என்பதன் நலிவிசைப்பும், அது நிரை நேர் அசையாக (தொல்காப்பிய மரபில் நிரைபு அசையாக) வந்ததும், அருமைப்பாடு உடைய கற்பில் முதிர்ந்த பெண்டிர் இன்பமும், அவர்கள் வாழ்வுக்குரிய இனமும் உலகமுமே மெய்யான பொன்னுலகம் என்பதையும்; மற்றைய பொன்னுலகம் கனவுலகக் கற்பனையே என்பதையும் தொனிப் பொருள்களாகக் காட்டின.

(2) இக் குறட்பாவில் 'பெற்றார்' என்ற சீர் பரிமேலழகர் உரையிலும் பிற உரைகளிலும் பெற்றான் என ஒருமையிலேயே கணவனைக் குறிப்பதாகத் தரப்பட்டுள்ளது. இம் மணிவிளக்கவுரை பின்பற்றியுள்ள பெற்றார் என்ற பாடம் மணக்குடவர் மேற்கொண்ட பாடமே. கணவனை ஒருமையில் கூறுவதே இங்கே திருவள்ளுவர் குறிப்பாக இருத்தல் வேண்டும் என்று மற்ற உரையாசிரியர்கள் கருதிய கருத்துத் தவறான தன்றெனினும், 'பெண்டிர்' பன்மையாய் இனப் பொதுமை சுட்டியது நோக்க, 'பெற்றார்' இலக்கண மரபில் பன்மையாய், பொருண்மையில் மதிப்பொருமையாய் அமைதலே பொருந்துவதாகும். இப் பொருத்தம் மூலம் திருவள்ளுவர் குறித்துக் காட்டும் தொனிப் பொருள்வளம் மேலே விளக்கவுரையிலேயே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

(3) புத்தேளிர் உலகு என்ஞது புத்தேளிர் வாழும் உலகு என்றதனுலும், 'பெண்டிர் பெறுவர்' என்றதனுலும், முக்காலத்துக்கும் உரிய புத்தேளிர் உலகு மக்கள் வாழ்விலிருந்து தொலைவா யிருப்பதை யும், பெண்டிர் அதனை அணிமையிலே, நிகழ்காலத்தி லேயே பெறுவதையும், பெண்டிர் அப் புத்தேள் உலக மரபின் மூதாதையராக அமைவதையும் கவிஞர் சுட்டிக் காட்டியுள்ளார். பெண்டிர் பாற்பொதுப் பெண்மைச் சொல்லாதலால், இத்தகைய பெண்ணின் பெருமை யில் அவளுக்குக் கணவனுகி அவள் தெய்வமான ஆடவன் பெருமையும் இணைந்ததே யாயிற்று. வாழும் என்ற சொல் வழக்கு இங்கே புத்தேளிர் உலகு கனவியல் குறிக்கோளே யாஞலும், அதனை நன வுலகப் பண்பாக்கும் திறம் பெண்மையின் கற்பு நெறிக்கே உரியது என்பதை வலியுறுத்திற்று.

(3) இக் குறட்பாவில் முதலடி முழுவதும் எல் லாச் சீர்களும் முதலசை எடுத்திசைத்து, இரண்டாம் அடியில் முதல் சீர் இரண்டாம் அசை எடுத்திசைத் தது. ஆனல் 'பெருஞ் சிறப்புப் புத்தேளிர்' என்பது வரை—அதாவது கற்புடைப் பெண்டிரின் இரு திசைக் காதல் அருமையின் சிறப்பும் புத்தேளிர் சிறப்பும் கூறும் வரை—சீர்கள் எடுப்பிசைப்பாக அமைந்த இக் குறட் பாவில், அப் புத்தேளிர் வாழும் உலகு என்ற இரு சீர்களும் படுத்திசைத்தும் நலிந்திசைத்தும் இறங்கி யிசைத்தும் வந்தன. கற்புடைப் பெண்டிர் காணும் இன்ப வளத்துக்குப் புத்தேளிர் வாழ்வதாகக் கருதப் படும் இலக்கியல் உலகு ஈடன்று என்ற கருத்தையும்; கற்பின் இரு திசை இன்ப அருமைப்பாடு நோக்க,

அந்தப் பேரின்பம் அவ்வளவு அருமைப்பாடு உடைய தன்று என்ற கருத்தையும் இது வழங்குகிறது.

தனிக் குறிப்புக்கள் : (1) இக் குறட்பாவின் முதற்சீரை இம் மணி விளக்கவுரை 'பெற்றார்' எனப் பன்மைச் சொல்லாக, ஆனால் இரண்டாம் வேற்றுமை தொக்கு நின்ற சொல்லாகக் கொண்டது. பழைய உரையாசிரியருள் மணக்குடவர் கொண்ட பாடம் இது. மற்ற எல்லா உரையாசிரியர்களும் 'பெற்றாற் பெறின்' அதாவது 'பெற்றான் பெறின்' என்பதையே பாடமாகக் கொண்டு பெற்றான் என்பதையே முதற் சீருக்குரிய சொல்லாகவும், ஒருமையின் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நின்ற சொல்லாகவும் கொண்டனர்.

பன்மையாகக் கொள்வதன் சிறப்பு மேலே விளக்கவுரையில் விரித்துரைக்கப்பட்டது.

இவ் எல்லா உரையாசிரியர்களுமே பெண்டிர் என்பதனையே சார்பு வாக்கியம், முடிபு வாக்கியம், இரண்டிற்கும் எழுவாயாகக் கொண்டு, பெண்டிர் பெற்றால், பெண்டிர் பெறுவர் என்று முடித்தனர்.

கவிஞர் இராமலிங்கனார் ஒருவர் மட்டும் பெற்றான் பெறின் என்பதில் 'பெற்றான்' என்பதை முதல் வேற்றுமையாகக் கொண்டு, 'பெறின்' என்ற சார்பு வாக்கிய வினைக்கு மட்டுமன்றி. பெறுவர் என்ற முடிபு வாக்கிய வினைக்கும் அதனை எழுவாக்கியுள்ளார். இங்கே ஒருமை எழுவாய் எப்படி பன்மைப் பயனிலை கொள்ளும் என்பதை அவர் விளக்கவில்லை. அத்துடன் பெற்றான் பெறின் என்பது எழுவாய்த் தொடரானால், னகரம் றகரம் ஆகாது. அவர் குறட்பா மூலத்தில் பெற்றான் பெறின் எனவே மூல பாடம் தந்துள்ளார்.

கவிஞர் பெற்றான் என்பதை எழுவாயாக்கியதனுடன் அமையாமல், பெண்டிர் பெருஞ் சிறப்புப் பெறின் என்பதை ஒரே தொகையாகக் கொண்டு, 'பெண்களுக்குப் பெருஞ்

சிறப்புத் தருவதான கற்புடைய பெண்ணை மனைவியாக அடைந்தால்' என்று பொருளுரைத்தார்.

இங்கே சிறப்பு என்பதனைக் கவிஞர் சிறப்புடைய கற்பு என்று பொருள் கொண்டு, அக் கற்புடைய பெண் என அதை மீண்டும் ஆகுபெயராக்கினர் என்று தோற்றுகிறது.

புத்தேளிர் வாழும் உலகைப் பெறுபவர் கணவன் அதாவது கற்புடைய பெண்ணை அடைந்த கணவன் என்ற கவிஞரின் கருத்து முடிபு ஏற்கத் தக்கதாயினும், அதற்கான இலக்கணத் தொடர்பு முறை சரியாக விளங்கவில்லை. குறட் பாவைப் பற்றிய மட்டில் திருவள்ளுவர் கருத்து இது என்று கொள்ளுவதற்குமில்லை. ஏனெனில் அதிகார ஐந்தாம் குறட் பாவிற்குக் கவிஞர் பாரதிதாசன் கொண்ட பொருளிலும், இம் மணி விளக்கவுரை கொண்ட பொருளிலும் இக் கருத்து இன்னும் சிறப்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கருத லாம். தவிர, இன்பத்துப் பாலில் இதே கருத்தைப் புணர்ச்சி மகிழ்தல் அதிகாரக் குறட்பா (1103) தருகிறது.

(2) 'பெற்றார் பெறின்' என்றே பாடங் கொண்ட புலவர் குழந்தை, பெண்கள் 'தம் கணவரை மனவுறுதி யுடையவராகப் பெற்றால்' என்று பொருள் கூறியுள்ளார். மனவுறுதியுடையவராக என்ற பகுதி எவ்வாறு வருவிக்கப் படத்தக்கது என்பதை அவர் சுட்டறிவில்லை.

(3) 'பெண்டிர் பெற்றான் பெறின்' என்ற சார்பு வாக்கியத்துக்கு மணக்குடவர், பெண்டிரானவர் தம்மை மனைவியராகப் பெற்றவரையே தமக்குத் தலைவராகப் பெறின்' என்றும்; காலிங்கர், 'தம்மை மண மகளிராகப் பெற்ற கணவரையே தாமும் கணவராகப் பெறுவாராயின்' என்றும் உரைத்தனர்.

பரிதியார் பதப்பிரிப்பு விளங்கவில்லை. ஆனால் சார்பு வாக்கியத்துக்கு அவர் பொருள் 'தன் பத்தாவும் பூலோக மும் இவள் பதிவிரதை என்னும் மனமகிழ்ந்த கற்பினள்" என்பதாகும்.

'பெண்டிர் தம்மை எய்திய கணவனை வழிபடுதல் பெறுவாராயின்' என்பது பரிமேலழகரின் சார்பு வாக்கியப் பொழிப்புரை ஆகும்.

இப் பகுதிக்குப் பரிமேலழகர் உரையிலேயே சிறப்பு மிகுதி. ஆனால் காலிங்கர் உரையே கற்புக் காதலின் இரு திசைப் பண்பு சுட்டித் திருவள்ளுவர் உள்ளக் கருத்துக்கும் இம் மணி விளக்கவுரைக் கருத்துக்கும் வழி செய்துள்ளது காணலாம். மணக்குடவர் உரைகளும் கிட்டத்தட்ட இதே பொருள் சுட்டுவதேயாகும்.

(4) 'பெறுவர்' என்ற முடிபு வாசகப் பயனிலைக்கு இம் மணி விளக்கவுரையும் கவிஞர் இராமலிங்கனுக் நீங்கலான எல்லா உரையாசிரியரும் 'பெண்டிர்' என்பதனையே எழுவாயாகக் கொண்டுள்ளதையும்; கவிஞர் ஒருவரே பெறுபவர் கணவர் என்று உரைத்துள்ளதையும் மேலே குறிப்பிட்டுள்ளோம்.

பெறுவர் என்பதற்கு இம் மணி விளக்கவுரையைப் போலவே 'புத்தேளிர் வாழும் உலகு' என்பதனைச் செயப்படு பொருளாகவும்; 'பெருஞ் சிறப்பு' என்பதை அவ் 'உலகு'க்கு அடை மொழியாகவும் கொண்டனர், மணக்குடவர், காலிங்கர் முதலியவர்கள். ஆனால் காலிங்கர் எப்படியோ 'இம்மையாக்கமும்' என்பதை வருவித்து, 'இம்மையாக்கமும் மிகவும் சிறப்புடையதாகிய தேவர் வாழும் உலகினையும் பெறுவர்' என்று முடித்தார். மாறாக, பரிமேலழகரும் பரிதியாரும், 'உலகு' என்பதன் பின் ஏழாம் வேற்றுமை உருபு தொக்கு நிற்பதாகக் கொண்டு,'பெருஞ்சிறப்பு' என்பதனையே செயப்படு பொருளாக்கினர். பரிமேலழகர் இங்கே 'தேவரால் சிறப்பிக்கப் படுபவர்' என்றார். பரிதியாரோ 'தேவர்கள் செய்யும் சிறப்பைப் பெறுவர்' என்றார்.

தேவர்கள் செய்யும் சிறப்புப் பெறுவர் என்ற கருத்துக்கு விளக்கமாகப் பரிதியார் 'இதற்கு ஒப்பனைகள் கண்ணகியாரைக் கண்டுகொள்க' என்று வள்ளுவக் கற்பிலக்கணத்

துக்கு ஏற்ற இலக்கியமாகச் சிலப்பதிகாரக் கண்ணகியைச் சுட்டிக் காட்டினர்.

(5) 'தற்கொண்டாற் பேணிய மகளிர் புத்தேளிரால் பேணப்படுவர்' என்பது இக் குறட்பாவுக்கான பரிமேலழகர் கருத்துரை.

இதே கருத்தை மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிகுளம் கோபால குறுப்பு அவர்கள் மலையாள மொழியிலேயே அழகுக் குறளடிப் பாட்டாகத் தந்துள்ளது காணலாம்.

> *நாதனேக் கூப்புந்நு நாரி மார் எங்கிலோ*
> *நாகமும் கூப்பும் அவரே!*

(இம் மலையாளக் கவிதையில் நாதனே. அவரே ஆகிய இரண்டு சொற்களிலும் 'ஏ' இரண்டாம் வேற்றுமை உருபு. நாதன், கணவன்; கூப்புதல் இரண்டிடத்திலும் வணங்குதல்; கூப்புந்து நிகழ்கால வினைமுற்று. நாரிமார், பெண்கள். எங்கிலோ என்பது என்றலோ என்னும் குறிப்புடையது. நாகமும் என்பதில் உம் அசை. நாகம் என்பது வானகம்.)

59. குடும்ப எல்லையில் துணைவியின் மனையற மாண்பே சமுதாய எல்லையில் கணவனின் மதிப்பு ஆகும்.

> [2]புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை. [1]இகழ்வார்முன்
> ஏறுபோல் பீடு நடை.

பொ-ரை: [1]தம்மை மதியாதவர் கண் முன்பாக விடை எருதுபோல அவர் நாணும்படி பெருமிதத்துடன் நிமிர்ந்து நடக்கும் பண்பு என்பது [2]மனையறத்தின் மூலம் புகழை விரும்பிச் செய்து கற்புடை மனைவியுடன் நடத்தப்படும் இல் வாழ்வு வாய்க்கப் பெறாதவர்க்கு இருக்க முடியாது.

கு-ரை: அகத்தே மனையாட்சிச் சிறப்புக்குப் புறத்தே கணவன் சிறப்புச் சான்று.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்று. இதன் சொற்கள் இரண்டு.

அவை யாவன:

1. இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை (இது எழுவாய்).
2. புகழ் புரிந்த இல் இலோர்க்கு இல்லை (இது பயனிலை).

இக் குறட்பாவில் முதலடியில் இல்லை என்ற மூன்றும் சீரும் இரண்டாம் அடியின் மூன்று சீர்களும் எடுத்திசைப்புடன் நிமிர்ந்திசைப்பன. மற்றவை நீண்ட சீர்கள், படுத்திசைப்பன. தவிர, புகழ் புரிந்த என்ற முதலடி முதற் சீரும், பீடு, நடை என்ற இரண்டாம் அடியின் கடைசி இரு சீர்களும் மோனை இணையாதும், மீதி அனைத்தும் ஒரே மோனையாக இணைந்தும் வந்தது காணலாம்.

இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை என்ற நீண்ட தொகை நிலை அதன் ஈற்றுச் சொல்லான நடை என்பதனை ஒத்துப் பெயர்ச் சொல்லாய், இல்லை என முடியும் வினை முற்றினைப் பயனிலையாகக் கொண்ட எழுவாய் ஆயிற்று.

நடை என்பது தொழிற் பெயர். ஐ அப் பெயர் விகுதி. நட பகுதி. விகுதியின் உயிர் முன் பகுதி யீற்று அகரம் கெட்டது. பீடு நடை என்பது பீடுடன் நடக்கும் நடை என்று பொருள்படும் மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. ஏறு போல் என்பதில் போல் என்ற இடைச் சொல், ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள் சொல்லுருபாய் வந்தது. இவ் வேற்றுமைப் பொருள் பீடு நடை என்பதன் உருபிடையிட்ட பயன் வினையாகிய நடக்கும் என்பதன் வினைப் பகுதி கொண்டு முடிந்து தொகையாயிற்று. இகழ்வார் முன் என்ற வேற்றுமைப் பொருளும் அது கொண்டே முடிந்தது. இதில் 'முன்' ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. இகழ்வார் வினையாலணையும் பெயர்; இகழ், பகுதி; ஆர், பலர்பால் விகுதி. வகரம் காலப் பொதுப் பொருளில் வந்த எதிர்கால இடைநிலை.

புகழ் புரிந்து இல் இலோர்க்கு இல்லை என்பது மேல்வந்த தொகைநிலைப் பெயரை எழுவாயாகக் கொண்ட பயனிலை வினை முற்று: இல்லை என்பது 'இன்மை' என்பதனைப் பண்படியாகக் கொண்ட திணைபால், இட, காலப் பொது எதிர்மறை வினைமுற்று.

இலோர்க்கு என்பது 'இல்லோர்க்கு' என்பதன் இடை லகரம் கெட்ட விகாரத் திரிபு. 'கு' நான்காம் வேற்றுமை உருபு. உருபின் ககரம் இரட்டித்தது. இலோர் என்பது எதிர்மறை பலர்பால் வினையாலணையும் பெயர். பலர்பால் விகுதியான 'ஆர்' இங்கே 'ஓர்' எனத் திரிந்தது. இது இன்மை எனும் பண்படியாகப் பிறந்தது. எதிர்மறை இடைநிலை 'ஆ' புணர்ந்து கெட்டது. பகுதி னகரம் லகரமாகத் திரிந்தது.

இவ் வேற்றுமைப் பொருள் 'இல்லை' என்ற குறிப்பு வினை முற்றின் வினைப் பகுதியுடன் முடிந்து தொகைப்பட்டது.

இல் இலோர்க்கு என்பது இல்வினை இல்லாதவர்க்கு என்று பொருள்படும் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

புகழ் புரிந்து என்பதும் புகழைப் புரிந்து என இரண்டாம் வேற்றுமைத் தொகை. புரிந்து என்பது புரி என்ற வினையடியான இறந்த கால வினையெச்சம். 'உ' அவ் வெச்ச விகுதி. 'த்' இறந்தகால இடைநிலை. இடைநிலை முன் தகரம் சந்தியாய் வந்து நகரமாகத் திரிந்து விகாரமுற்றது. இவ் வினையெச்சம் இல் இலோர்க்கு என்பதில் வரும் வினைப் பொருள் தழுவித் தொகைப்பட்டது.

புகழ் என்ற வினைப் பகுதியே அழுத்த மாற்றத்தால் முதனிலைத் தொழிற் பெயராயிற்று. வினை வடிவில் இரண்டாம் எழுத்தின் மீது வரும் அழுத்தம், பெயர் வடிவில் முதல் எழுத்தின் மீது வந்து அமைகிறது.

வி-ரை: அற வாழ்வின் மையப் பண்புருவான இல் வாழ்வானின் அருளுருவும் அருட்சத்தியும், அற வாழ்வின் மழைமுகிற் பண்புமான வாழ்க்கைத் துணைவியின் நலம் முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், இக்

குறட்பா உட்பட இதனுடன் முடிவுறும் இவ் அதிகாரத்தின் மூன்று குறட்பாக்களும் (57—59) வாழ்க்கைத் துணைவியின் அற வாழ்வு வளம் சிறப்பிப்பன ஆகும். அவ்வழி இக் குறட்பா கணவனின் சமுதாய மதிப்பு நிறுவும் பெண்டிரின் அற ஆட்சிச் சிறப்பு விதந்தோதுகின்றது.

பெண்டிர் குடும்பத்தில் முழு நிறை உரிமை பெற்ற முடியரசியராயினும், இன முழுதும் அவர்கள்செங்-கோல் செலுத்துபவராயினும் சமுதாயத்தில் கணவரைப் பேராளராகக் கொண்டே அவர்கள் அற ஆட்சி செலுத்து பவராவர் என்பதையும்; இதனால் ஆடவரின் சமுதாய படியும் பெண்டிர் குடும்ப ஆட்சி, இன ஆட்சி ஆகியவற்றோ டிணைந்த அற ஆட்சியின் மாண்பையே பொறுத்ததாகும் என் பதையும் இக் குறட்பா காட்டுகிறது.

இகழ்வார்முன் என்பது தம்மை மதியாதவர் கண்முன்பாக என்னும் பொருளை உடையது.

இகழ்தல் இங்கே புகழாமை, மதியாமை மேல் நின்றது. சமுதாயத்தில் போட்டி பொருமைகளை உடைய தொலைத் தொடர்பாளரை இச் சொல் குறிக்கிறது. இவர்கள் புறத்தே குறை கூறும் கயவரல்லராயினும், பிறரிடம் குறை கூறுவதும், நேரில் புகழ்ந்து பாராட்டாமையும் பண்பாக உடையவர்கள். அவர்கள் சற்று மறைவில் குறை கூறுவது அறிந்தும் பொருட்படுத்தாமல், முன்னிலையிலேயே குறையற்றமைதெரிந்த இறுமாந்த நடை இங்கே குறிக்கப்பட்டது. முன்னே என்பதன் குறிப்பு இதுவே.

ஏறுபோல் என்பது விடை எருதுபோல என்பதாம். ஏறு பண்பு குறைபடாக் காளை குறித்தது. உழவிலோ வண்டியிலோ பூட்டப்படாமல் தன்னியலாகச் செல்லும் மழ விளங் காளையின் தோற்றம் இங்கே குறித்துக் காட்டப்பட்டது. நினைத்தது முடிக்கும் ஆற்றல் தோன்ற அச்சமோ கூச்சமோ இல்லாத நடைக்கு ஏறு இங்கே எடுத்துக்காட்டாயிற்று.

ஏறு பல விலங்குகளில் ஆணைக் குறிப்பதாயினும் விடை எருதையும் அரிமாவையுமே சிறப்பாக குறிக்கும் சொல்

ஆகும். இங்கே பொது ஒப்புமைப் பண்பு நடையாதலின், விடை எருதுக் குறிப்பே பொருந்தும். அரிமா தோற்றமே சான்றது. :அத்துடன் அது தனி நடை அல்லது தன் இனம் மதிக்க நடக்கும் நடை குறிப்பதன்று.

பீடு நடை என்பது பீடு உடைய நடை, இங்கே இது பீடு தோன்ற நடக்கும் நடை குறிக்கும்.

பீடு ஒப்பாரிடையே தோன்றும் மிகுதி. முன்னணியில் முதன்மை என்னும் பொருளுடையது. ஈடு, நீடு, வீடு என்ற சொற்களுடன் இது தொடர்புடையது. ஆன் மாவின் பீடு அழிக்கும் மும்மலங்கள் பீடைகள், பீழைகள் என்று வழங்கலும், பாம்பை அடக்கும் வல்லவன் பிடாரன் என்றும், முப்பீடைகளை அடக்கும் இறைமையின் வல் லாண்மைத் திறம் கொண்ட அன்னை முப்பிடாரி என்றும் பயிலல் காண்டல் தகும்.

நடை என்பது தொழிற் பெயர், நடத்தல் என்னும் பொருள் உடையது. இங்கே சமுதாயத்தில் ஊடாடுதல் குறித்தது. பலர் முன்னிலையிலும் தயங்காது செயல் புரிதலை யும் நடமாடுதலையும் இது உள்ளடங்கச் சுட்டிற்று.

நடை, நடம், நட்டம், (நடனம்), நடிப்பு, நாட்டியம், நாடகம், நடிகர் ஆகிய சொற்கள் தொடர்புடையவை. நடை, உடல் இடம் பெயர்தலையும் (நடத்தல்), பண் பியக்கத்தையும் (நடத்தை) குறிக்கும். நடம், நட்டம் நிலை பெயர்தல். நிலைபெயர்வியக்கம் ஆகியன குறிக்கும். நாட் டியமும் இதுவே. நாடகமும் நடிப்பும் செயல் நிலைகளின் ஆட் பெயர்வியக்கம் குறிக்கும்.

நடை இங்கே காலால் நடத்தலையும், அதன் தோற்றத் தையும், அது குறிக்கும் நிமிர்ந்த நடுநிலை ஒழுக்கத்தையும், இவற்றால் ஏற்படும் சமுதாய மதிப்பையும் ஒருங்கே சுட்டி நின்றது.

புகழ் புரிந்து என்பது மனையறத்தின் மூலம் புகழை விரும்பிச் செய்து என்று பொருள்படும்.

தனி உயிருக்கும், தனி மனிதருக்கும் குடும்ப மரபு, இன மரபு ஆகியவை மூலம் கிட்டும் பண்பாட்டுச் செல்வத்துக்கு மேற்பட, அத் தனி உயிர் அல்லது தனி மனிதர் தம் குடும்ப சமுதாய. இனச் சேவை மூலம் குடும்பத்துக்கும், இனத்துக்கும் வழங்கும் பண்பாடே புகழ் ஆகும். சமுதாயத்தில் பிறர் பங்கையும் விட இது மேம்பட அமைவதே சமுதாயப் புகழ் ஆகும்.

புரிதல் என்பது விரும்புதல், செய்தல் ஆகிய இரு பொருள்களும் உடையது. இங்கே விரும்பிச் செய்தல் என்பதே முழுமைப் பொருள்.

இல் இலோர்க்கு இல்லை என்பது கற்புடை மனைவியுடன் நடத்தப்படும இல் வாழ்வு வாய்க்கப் பெறுதவர்க்கு இருக்க முடியாது என்று பொருள் படுவதாகும்.

இல் என்பது வீடு. இங்கே இது வீட்டில் நடைபெறும் இல்வாழ்வுக்கு ஆகுபெயராயிற்று. புகழ் புரிந்து என்ற முன் தொடரின் குறிப்பால் இது கற்புடை மனைவியுடன் நடத்தப்படும் இல்வாழ்வு என்ற பொருள் தந்தது. 'இலோர்க்கு இல்லை' என்ற இரட்டை எதிர் மறையால், வாய்ப்பு இல்லாதவர்க்கு இருக்க முடியாது என்ற காரண எதிர்மறை முடிவும்; அதுபோலவே உள்ளோர்க்கு உண்டு" என வாய்ப்பு உடையவர்க்குத்தான் உண்டு என்ற காரண உடன்பாட்டு வலியுறுத்தும் பெறப்பட்டன.

சிறப்புரை : குடும்பமாகிய சிறிய நாட்டின் ஆட்சிப் பொறுப்புடைய மனையரசி, மனைவி. சமுதாயமாகிய பெரிய நாட்டில் அவள் பேராளாக, அந் நாட்டின் வெளி நாட்டு அமைச்சனாக இயங்குபவனே கணவன். வெளி நாட்டில் வெளிநாட்டமைச்சனின் மதிப்பு அவன் நாட்டாட்சியின் மதிப்பும், நாட்டாட்சித் தலைவரின் திறமையுமே யாதல் தெளிவு. அதுபோலவே, சமுதாயத்தில் ஆடவன் மதிப்பு அவன் மனைவியின் கற்பாட்சியையே பொறுத்தது ஆகும்.

பொருள்வளம்: (1) இக் குறட்பாவில் ஏறுபோற் பீடு நடை என்ற இரண்டாம் அடி பொருளுக்கேற்ற நிமிர்ந்த ஏறு போன்ற பீடு நடை உடையதாய் அமைந்திருப்பது காணலாம். கற்புடை மனையாட்சி வாய்க்கப் பெற்ற கணவனின் சமுதாய வாழ்வை இது நம் கண் முன் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. அதே சமயம் இதனுடன் இணைவாக முதலடியில் நிமிர்ந்திசைக்கும் சொல் 'இல்லை' என்ற எதிர்மறை முடிபுச் சொல்லே. இதனால் கணவனின் இம் மதிப்புக் கணவனின் முயற்சி சார்ந்ததன்று, அவனுக்கு வாய்த்த மனைவியின் செயலே என்பது தொனிக்கப்பட்டது. அத்துடன் இரட்டை எதிர்மறை உடன்பாட்டை வலியுறுத்துவதனால், கற்புடை மனைவி வாய்க்கப் பெற்ற கணவனுக்குத் தனி முயற்சி இல்லாமலே அம் மனைவியின் மாண்பாலேயே சமுதாய மதிப்புத் தானாகக் கிடைத்து விடுகிறது என்ற கருத்தும் தொனிக்கப்பட்டது.

(2) முதலடியில் 'புகழ் புரிந்து இல் இலோர்க்கு' என்பதும் 'இகழ்வார் முன்' என்பதும் ஒரே நிரலான படுத்தலோசையாய் இயல்வதனாலும், இடையோசை மிகுந்த யாழின் இசை நலம் உடையனவாய் அமைவதனாலும் கற்புடை மனைவியின் ஒப்புரவாட்சிக்குரிய இன்னயம் ஒலிப்படப் பதிவு செய்து காட்டப்பட்டுள்ளது. கணவனுக்கு எளிதாகக் கிட்டும் இம் மதிப்பு, கற்புடை மனைவியின் அரு வாய்ப்பு, அரு முயற்சிகள் ஆகியவற்றின் பயன் என்பதும் இதனால் குறித்துக் காட்டப்பட்டது.

(3) வாழ்வுப் போதில் பணிவும் தாழ்வுப் போதில் நிமிர்வும் வேண்டும் (963) என்பர் திரு

வள்ளுவர். பணிதல் எவர்க்கும் சிறப்பாயினும் செல்வர்க்கே பெரும் சிறப்பு (125) என்றும் அவர் கூறுவர். இக் குறட்பாவில் இகழ்வார் முன் ஏறுபோற் பீடுநடை என்பது மேற்குறிப்பிட்ட குறட்பாக்களை நினைவூட்டுகிறது. அத்துடன் புகழ்வார் முன் குழைந்த பணிவு நடையும் இதனுடன் இயையவே தொனிக்கப்பட்டது.

ஏறு அதாவது விடை எருது என்ற உவமம் இங்கே பொருத்தமும் பொருள் வளமும் உடையது. ஏனெனில் எதிரி முன் பெருமிதமும், பழகியவர் முன் குழைவும் விடை எருதின் குணங்கள் ஆகும். ஏறு போல் என்ற உவமத்தின் பின் பீடு உவமப் பொதுப் பொருள் ஆயினும், உவமத்தின் பின் அது மிகையே யாகும். ஆனல் மேலே குறித்தபடி அது இகழ்வார் முன் பீடும், புகழ்வார் முன் குழைவும் குறித்தலே சிறப்புப் பொருள் வளமாகச் சுட்டி வந்தது.

(4) புகழ் புரிந்து இல் இலோர்க்கு இல்லை என்பதில் புகழ் புரிந்து என்றதனல் 'இல்' கற்புடை மனைவியுடன் நடத்தப்படும் இல் வாழ்வு எனும் பொருள் தந்ததனை மேலே விளக்கவுரை சுட்டிக் காட்டிற்று. அத்துடன் புகழ் புரிந்து இல் உளோர்க்கு உண்டு என்னும் உடன்பாட்டு வற்புறுத்தும் முன்பே குறிக்கப்பட்டுள்ளது. இவை யன்றி, புகழ் புரியாது இல் உளோர்க்கும், அதாவது கற்புடை மனைவியின் ஆட்சி வாய்ப்புப் பெருதவர்க்கும், இல்லை என்ருயிற்று.

தனிக்குறிப்புக்கள் : (1) 'புகழ்புரிந்து இல் இலோர்க்கு' என்பதனைக் கிட்டத்தட்ட எல்லா உரையாசிரியர்களுமே 'புகழ் புரிந்த இல் இலோர்க்கு' எனக் கொண்டனர். 'புரிந்த என்னும் பெயரெச்சத்து அகரம் விகாரத்தால்

தொக்கது' என்று இதற்குப் பரிமேலழகர் இலக்கணக் குறிப்புக் கூறியுள்ளார். இதனால் இம் மணி விளக்கவுரை கூறியதுபோலப் 'புகழ் புரிந்து' என்ற தொகை 'இல் இலோர்க்கு' என்பதிம் உள்ள 'இலோர்க்கு' என்பதன் உடன்பாட்டுப் பகுதியாகிய 'உளோர்க்கு' என்பதைத் தழுவிய வினையடையாகக் கொள்ளாமல், எல்லா உரை யாசிரியரும் அதனைப் 'புகழ் புரிந்த' என்றாக்கி 'இல்' (வீடு) என்பதனைத் தழுவும் பெயரடையாகக் கொண்டனர்.

அதனுடன் இல் என்பதனை இவ்வுரை கொண்டது போல இல்லில் நடத்தப்படும் இல்வாழ்வுக்கு ஆகு பெயராகக் கொள்ளாமல், இல்லலிருந்து இல்வாழ்வு நடத்தும் இல்லாளுக்கு ஆகு பெயராகக் கொண்டனர்.

இங்ஙனம் கொண்டதால் உரையாசிரியர்கள் புகழ் புரிதலை அதாவது புகழ் விரும்புதலை மனைவிக்காக்கி புகழைக் கற்புடன் ஒன்றுபடுத்தியது காணலாம். இவ்வுரை கருதியது போல, புகழ் புரிதலைக் கணவனுக்காக்கி, புகழைக் கற்புடை மனைவியினால் அவன் பெறும் புகழாக்கவில்லை என்பது தெளிவு.

'புகழை விரும்பிய இல்லாளை இல்லாதார்க்கு' என்று பரி மேலழகரும், புலவர் குழந்தையும், இலக்குவனாரும்; புகழைக் காக்க விரும்பும் மனைவி இல்லாதவருக்கு என முனைவர் மு. வரதராசனாரும்; புகழ் பொருந்தின மனையாளை இல்லா தார்க்கு என மணக்குடவரும்; கற்பினால் உண்டாகும் புகழை விரும்பிய மனையாளை அடையாதவருக்கு எனப் புலவர் த. சி. கந்தையாவும்; கற்பினால் பெரிதும் புகழ் தங்கப்பட்ட இல்லாளை இல்லாதவர்க்கு எனக் காலிங்கரும்; புகழ்தரக் கூடிய கற்புள்ள மனைவி இல்லாதவர்களுக்கு என கவிஞர் இராமலிங்கனாரும் உரை செய்தனர். பரிதியார் எதிர் மறையாக 'இன்னாள் பதிவிரதை எனவும் சொல் பெறாத மடவாரை மனைவியாளாகவும் உடையார்' என்று தொடங்கி பயனிலையையும் இதற்கேற்ப எதிர்மறையாக்கினார்.

எதிர்மறை வழக்காற்றை வற்புறுத்திய ஒன்றின் மூலமே பரிதியார் மற்ற உரையாசிரியர்களிலும் மிகுதியாகப் பெண்

பழி சூழ்ந்துள்ளார் என்பது காணலாம். ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் வி. ஆர். ஆர். தீட்சிதரும் மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் வெண்ணிகுளமும் இக் கருத்தினைத் தம் உரைகோளில் இடம்பெறுவித்துள்ளனர்.

(2) இகழ்வார் என்பதற்குப் பரிமேலழகர் 'தம்மை இகழ்ந்துரைக்கும் பகைவர் முன் என்றும்; பரிதியார் 'தன்னை வேண்டாதார்' என்றும்; கவிஞர் இராமலிங்கனார் 'அதற்காக (கற்புடை மனைவி அல்லாமைக்காக)த் தம்மை ஏளனம் செய்கிறவர்கள் முன்னால்' என்றும் கூறினர். இறுதியான கவிஞர் உரையின் உடன்பாட்டு எதிர்மறைக் குழப்பம் உரையாசிரியர் பலர் கொண்ட பெண் பழிப் பொருளின் பொருத்தக்கேட்டை முனைப்பாகக் காட்டுகிறது. கற்பிலா மனைக்காக இகழ்பவர் முன்பாகக் கற்புடை மனை பெற்றவன் செல்வது பொருத்தமற்றது என்பது காண்க.

(3) 'ஏறுபோல் பீடுநடை இல்லை' என்பதற்கு பரிமேலழகர் 'சிங்க ஏறுபோல நடக்கும் பெருமித நடை இல்லை' என்றார். பேராசிரியர் மு. வரதராசனார், புலவர் ந. சி. கந்தையா, புலவர் குழந்தை ஆகியோர் கொண்ட பொருளும் இதுவே. மணக்குடவரும் காலிங்கரும் பிறரும் ஏறு என்பதை விடை எருது என்றே கொண்டதாகத் தெரிகிறது. மணக்குடவர் விளக்கவுரையில் பீடுநடை என்பதற்கு அசைவும் தலையெடுப்பும் பொருந்திய நடை என்று கூறுவது இப் பொருளை வலியுறுத்துகிறது. கவிஞர் இராமலிங்கனார் ஏறு என்பதற்குப் பொதுவாக ஆண் பிள்ளை என்ற பொருள் கொண்டார். பரிதியார் ஏறு என்பதை விடை எருது என்றாலும் அதை மாடுபோலத் திரிதல் என்ற இழிவழக்காகக் கொண்டு, எப்படியோ பொருள் இணைக்கிறார்.

'இன்னாள் பதிவிரதை என்று சொல்லும் சொல் பெறாத மடவாரை மனையாளாகவும் உடையான், தன்னை வேண்டாதார் முன்னே 'இன்னார் ரிஷபம் போலே திரிகின்றான். என்று ஏசுதற்கு இடமாவான்' என்பது குறட்பாவுக்குரிய அவரது பொழிப்புரை ஆகும்.

பெண்பழி யார்வம் உரையாசிரியர்களை எங்கெங்கோ இட்டுச் செல்வது காண்கிறோம்.

60. மனித இனத்தின் இனவளச் செல்வம் பெண்: அப் பெண் தரும் சமுதாயச் செல்வம் நன்மக்கள்.

[1]மங்கலம் [3]என்ப [2]மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

பொ-ரை: [1](மேலோராகிய அந்தணர்) மனித இன முழுமைக்கும் பொங்குமாவளம் குறிக்கும் நல் வளச் சின்னமாவது [2]கற்புடைய பெண்ணின் இல்லற மாண்பே என்றும், [3]அத்துடன் அக் கற்புடைய பெண்ணின் இல்லறு மாண்பின் நிறை வளமான செல்வம் நல்ல குழந்தைகளைப் பெற்றெடுத்தலே என்றும் வகுத்துரைக்கின்றார்கள்.

க - ரை: எல்லாச் செல்வங்களிலும் பெருஞ் செல்வம் பெண். அச் செல்வம் தரும் செல்வம் புதல்வர் புதல்வியர்களே.

இலக். கு: இக் குறட்பா இரு வாசகக் கருத்துக்களை ஒரு தொகையுட் படுத்திக் கூறிய ஒரே வாசகம். இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன:

1. (மேலோராகிய அந்தணர்) [இது தோன்றா எழுவாய்]

2. மங்கலம் மனைமாட்சி, மற்று அதன் நன்கலம் நன் மக்கட் பேறு என்ப (இது பயனிலை; இதன் உள்ளடக்கமாக 'மங்கலம் மனை மாட்சி', 'மற்று அதன் நன்கலம் நன் மக்கட் பேறு' என்ற செயப்படு பொருள்களும் தொகையுள் தொகைப்பட்டு வந்தன அதனுள் 'மங்கலம்,

மனைமாட்சி' என்ற வாசகமும், 'மற்று அதன் நன்கலம் நன் மக்கட் பேறு' என்ற வாசகமும் கூற்று வாசக உறுப்புக்களாய் வந்தன.

இக் குறட்பாவில் மனைமாட்சி என்ற சீரின் இரண்டாவது (நேர்) அசையும் பேறு என்ற சீரும் மட்டுமே எடுத்திசைத்தன. முற்கூறப்பட்ட சீரின் மீந்த அசைகளும், 'மங்கலம்', 'நன்கலம்' 'நன் மக்கள்' ஆகிய சீர்களும் உயராது தாழாது சமநிலையில் படுத்திசைத்தன. மீதிச் சீர்கள் நலிவிசைப்பாக அமைந்துள்ளன.

இக் குறட்பா முழுவதும் ஒரே தொகைநிலை வினையாதலின் அதற்கிசைவான தோன்றா எழுவாயாக மேலோராகிய அந்தணர் என்பது வருவிக்கப்பட்டது. இது பலர்பால் பெயர்.

மங்கலம் மனைமாட்சி மற்று, அதன் நன்கலம் நன் மக்கட் பேறு என்ப என்பது ஒரே தொகைநிலை வினை. இதில் 'மங்கலம் மனைமாட்சி' என்பதும் 'மற்று அதன் நன்கலம் நன்மக்கட் பேறு' என்பதும் தனித்தனி வாசகப் பொருளுடையவையாயினும் கூற்று வாசகங்களாய் என்ப என்ற வினைமுற்றின் செயப்படுபொருள் களாய் தம்மிடை உம்மை தொக்கு நின்று, உம்மைத் தொகைகளாய் இயன்றன. முதற்கூற்று வாசகத்தில் மங்கலம் எழுவாய், மனைமாட்சி பெயர்ப் பயனிலை. இரண்டாவது கூற்று வாசகத்தில் 'மற்று அதன் நன்கலம்' எழுவாய், நன்மக்கட் பேறு பெயர்ப் பயனிலை.

இவ்வாறு முழுத்தொகை நிலையும் உம்மைத் தொகையாக இணைக்கப்பட்ட தொகைப்புறத்து வந்த இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆகும்.

என்ப என்பதில் 'ப' என்ற ஈறு பலர்பால் விகுதி. 'என்' என்ற வினைப்பகுதி 'என்று கூறு' என்ற பொருளுடைய கூற்று வினைப் பகுதியாகும்.

மங்கலம் என்பது எழுவாய் வேற்றுமையாய் மங்கலமாவது என்ற பொருளுடன் மனைமாட்சி என்ற தொகைப் பகுதியினைப் பயனிலை யாகக் கொண்டு தொகைப்பட்டது. மனைமாட்சி என்பது மனையின் மாட்சி என்ற பொருள் கொண்ட ஆறும் வேற்றுமைத் தொகை.

மனை இங்கே மனையறத்துக்கு ஆகின்றது. மாட்சி என்பது 'சி' விகுதிபெற்ற பண்புப் பெயர்.

மற்று அதன் நன்கலம் என்பது எழுவாய்ப் பெயராய், 'நன் மக்கட் பேறு' என்ற தொகைப் பகுதியைப் பயனிலையாகக் கொண்டு தொகைப்பட்டது. மற்று என்ற இடைச்சொல் ஆனால், மேலும், அத்துடன், அதற்கு மேலாக என்ற பொருள்களைக் கொண்டு, அதன் என்பது தழுவி, நன்கலம் ஆவது என்ற எழுவாய்ப் பெயரிலடங்கிய வினைமையுடன் முடிந்து தொகைப்பட்டது. அதன் என்பது 'அது' என்பதன் ஆறும் வேற்றுமை வடிவம். இதில் 'அன்' சாரியை. 'இன்' உருபு புணர்ந்து கெட்டது என்றோ தொகையாயிற்று என்றோ கூறலாம். சாரியை முன் பகுதியீற்று உகரம் கெட்டது. 'அது' இங்கே முன் கூறப்பட்ட மனைமாட்சியைப் பெயர்ச் சுட்டு முதலாகக் கொண்டது. இவ் வேற்றுமைப் பொருள் நன்கலம் என்ற பெயர் தழுவிற்று.

நன்கலம் என்பது நன்மை சான்ற கலம் எனப் பண்புத் தொகை. இது எழுவாய். நன்மக்கட் பேறு என்பதனுடன் முடிந்து தொகைப்பட்டதென்பது மேலே கூறப்பட்டது. இச்சொல் நற் கலம் என்று தொகைப்படுதல் கூடுமாயினும், தனிப் பொருள் சுட்டிய வடிவு மரபாகப் பயில்வதாகும்.

நன்மக்கட் பேறு என்பதில் நன்மக்கள் பேறு என்பது நல முடைய மக்கள் எனப் பண்புத் தொகை. மக்கள் என்பது 'மக' என்னும் பெயரின் பன்மை வடிவம். பன்மை விகுதியான 'கள்' என்பதன் முன் பகுதியின் அகரம் கெட்டது. மக்கட்பேறு என்பது மக்களைப் பெறும் பேறு என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகவோ, மக்களாகிய பேறு என இரு பெய ரொட்டுத் தொகையாகவோ கொள்ளத்தக்கது. பேறு என்பது பெறு என்ற வினைப்பகுதியின் முதனிலை நீண்ட தொழிற்பெயர். இது பெறுதல் என்ற பொருளுடன் தொழிற்பெயராகவோ, பெறுதலுக் குரிய செல்வம் அல்லது செல்வ வாய்ப்பு என ஆகுபெயராகவோ கொள்ளத்தக்கது ஆகும்.

வி-ரை: அற வாழ்வின் மையப் பண்புருவான இல் வாழ்வானின் அருளுருவும் அருட்சத்தியும், அறவாழ்வின் மழைமுகிற் பண்புமான வாழ்க்கைத் துணைவியின் நலம் முப் பால் வாழ்வுகளுடனும் தனித்தனி தொடர்புடையது என்பதை முன் குறட்பாக்களில் விளக்கிய திருவள்ளுவர், இக் குறட்பாவின் மூலம் அது முப்பால் வாழ்வுகளுக்கும், அம் முப் பால் வாழ்வுகளின் அகப்பால் வாழ்வான வீட்டுப்பால் வாழ் வுக்கும் வளந்தருவது என்பதனை வலியுறுத்துகிறார். அவ்வழி, தம் கற்புடை வாழ்வுக்குரிய அறத்தின் பயனாகவும், காதல் அதாவது இனவாழ்வுக்குரிய இன்பத்தின் விளைவாகவும், குடும்ப சமுதாய இன வாழ்வுகளின் மூல முதலாகவும் விளங்கும் புதல்வர் புதல்வியரினைப் பயப்பதன் மூலமும்; அவ் வழி இனவாழ்வினை இறவா வாழ்வாக, இறவா இன்ப வாழ் வாக இடையறாது தொடர்ச்சியாக்குவதன் மூலமும் பெண் கள் முப்பால், அகப்பால் தொடர்புக்குரியவர் என்பதனை இக் குறட்பா விதந்தோதுகின்றது.

மேலோராகிய அந்தணர் என்பது இக் குறட்பாவில் 'என்ப' என்ற வினைமுற்றுக்குரிய தோன்றா எழுவாயாக வருவிக்கப்பட்டது. பலர்பாலாகிய இவ் வினைமுற்றுக்கு அவர்கள் என்றோ, மேலோர் என்றோ, நூலோர் என்றோ ஏதேனும் ஒரு பலர்பால் பொதுப் பெயர் இலக்கண முறையால் போதியதாகும். ஆனால் திருவள்ளுவர் கூறும் அறத்துக்குரிய மேலோரும் நூலோரும் அந்தணரேயாவர் (30, 543, 21). இது பின்னே தனிக் குறிப்பில் வகுத் துரைக்கப்படுகிறது.

மங்கலம் என்பது 'மனித இன முழுமைக்கும் பொங்கு மாவளம் குறிக்கும் நல்வளச் சின்னமாவது என்ற பொருள் தருவது ஆகும்.

மங்கலம் என்ற சொல் தமிழ் வழக்கிலும் சமஸ்கிருத வழக்கிலும் நன்மையான காரியங்களை முன்னறிவித்துக் காட்டும் குறிகளை அல்லது பொருள்களை அல்லது நன்மைக்கு வழிவகுக்கத்தக்க பண்புடையன என்று கருதப்படும் சொற் களை அல்லது பண்புகளைச் சுட்டுகிறது. அதே சமயம்

இச் சொல்லின் மற்றொரு வடிவான மங்களம் என்பது இது போலவே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழி வழக்கிலும் நிறை நலம் பொங்கு மாவளம் குறிக்க வழங்குகிறது. தவிர, சமஸ்கிருத இலக்கண மரபுப்படி லகரத்துக்கு ளகரம் போலி என்பதனை நோக்க, மங்கலம், மங்களம் ஆகிய இரு சொற்களும் கிட்டத்தட்ட ஒரு சொல் எனும்படி நெருங்கிய தொடர்புடையவை என்பது போதரும். ஏனெனில் முதலது மனித இனத்தின் வருவளம் முன் குறித்துக் காட்டி அது தூண்டும் பண்பாகவும், பின்னது அதே மனித இனத்தின் பரந்து நிறைந்து வழியும் வளமாகவும் அமைகின்றன.

இரு சொற்களிலும் முதற் பகுதி மன் பொதுமை, நிலைத்த வாய்மை, மனித இனமளாவிய முழுமை ஆகிய வற்றைக் குறிக்கும். கலம், களம் இரண்டும் பொருள். ஒளி, பயன்படும் பொருள், வண்டி, பூண், செல்வம் என்னும் பொருள்களை உடையன.

மங்கலம் பண்புச் சொல்லாயினும் பயனிலையாய் வராமல் எழுவாயாய் வந்ததனால் மங்கலமாவது அதாவது மனித இனத்துக்கு இனவளம் தூண்டும் செல்வமாவது என்னும் பொருள் தந்தது.

மனைமாட்சி என்பது கற்புடைய பெண்ணின் இல்லற மாண்பே என்று பொருள்தரும்.

மனை என்பது வீடு அல்லது வீட்டு நிலம். இங்கே இது அதில் நடைபெறும் மனையறத்துக்கு ஆகு பெயராயிற்று. மாட்சி என்பது மாண்பின் ஆட்சி அல்லது ஆட்சியின் மாண்பு. மனைமாட்சி என்பது இங்கே பண்பேயாயினும் எழுவாயாய் வராமல் பயனிலையாய் வந்ததனால், ஏகாரப் பொருள் தொனித்து நின்றது.

மற்று என்ற இடைச் சொல் 'இது மட்டுமன்று, இன்னும் மேலாக' என்ற பொருள் தந்தது.

அதன் என்பது மேற்குறிப்பிட்ட மனைமாட்சி தழுவி அம் மனைமாட்சியின் என்று பொருள்பட்டது.

மற்று அதன் என்ற இரு சொற்களும் சேர்ந்து, மனை மாட்சியே இனச் செல்வம், அவ் இனச் செல்வத்தின் செல்வமான என்னும் குறிப்புத் தந்தது.

நன்கலம் என்பது நலம் தரும் நிறை செல்வம் என்று பொருள் படுகிறது. நற்கலம் என்று வராது மென் புணர்ப்பாய் நன்கலம் என்று வந்ததனால் அது நலந்தரும் நலம், நிறை செல்வம் ஆயிற்று.

நன் மக்கள் பேறு என்பதில் நன்மை என்ற அடையை மக்களுக்குரியதாகக் கொண்டு, நல்ல புதல்வர் புதல்வியரைப் பெற்றெடுத்தல் என்றும் கூறலாம். பேறு என்பது தழுவு வதாகக் கொண்டு மக்கட் பேறாகிய நற் செல்வம் என்றும் கூறலாம்.

நன்கலம் நன்மக்கள் என நன்மை இரட்டித்து அடுக்கிய தனால் மக்கட் பேறே நல்ல செல்வம், நன்மக்கட் பேறே சிறப்புற்ற நற்செல்வம் என்ற பொருள்வளம் ஏற்பட்டது.

என்ப என்பதன் பொருள் என்பார்கள் என்பதே. இது மேலோராகிய அந்தணரை எழுவாயாகச் சுட்டிற்று என்பது மேலே குறிக்கப்பட்டது.

> **சிறப்புரை:** இனம் தந்த செல்வம், இன வளம் குறித்த செல்வச் சின்னம் கற்புடைய பெண். இனத்துக்கு அச் செல்வம் தரும் செல்வ வளம், புதல்வர் புதல்வியர். அவர்கள் முப்பால் வாழ்விலும் பொங்கு வளம் பரப்புபவர் ஆவர்.

பொருள்வளம்: *(1)* இக் குறட்பாவில் மனைமாட்சி என்ற சீரின் இரண்டாவது (நேர்) அசையும், 'பேறு' என்ற இறுதி அசைச் சீரும் (காசு வாய்ப்பாட்டு சீரும்) நிமிர்ந்திசைத்து, குறட்பாவின் மையச் சிறப்புக்களுக் குரிய கற்புடையாள் மனையாட்சி, மக்கட் பேறு ஆகிய இரு செல்வங்களின் ஒப்புயர்வற்ற வீறமைதி சுட்டின.

இது குறட்பாவின் பொருள் தொடர்பு வலியுறுத்திற்று.

மங்கலம், நன்கலம், நன்மக்கள் ஆகியவை படுத்திசைத்தும், சமநிலையில் இசைத்தும், மெல்லிசை மிக்கும், 'நன்மை' இரட்டி வந்தும் இவ்விரு செல்வங்களின் இன்ப நலம் குறித்தன. இது குறட்பாவின் இன்ப வாழ்வு வலியுறுத்திற்று.

என்ப என்ற குறிப்பு இப்பொருளை அறநூலாராகிய அந்தணரைச் சார்த்திக் கூறியதனால், இக்குறட்பா அற வாழ்வும் வலியுறுத்திய தாயிற்று.

'மனைமாட்சி மங்கலம்' அதாவது இனவளம் குறிப்பது என்று கூறி, இங்கே திருவள்ளுவர் கற்பரசியின் மழை முகிற் பண்பு சுட்டியுள்ளார். மற்று அதன் நன்கலம் என்றதனாலும், நன்மை இரட்டித்ததனாலும், கற்புச் செல்வத்தின் செல்வமாக, அதனினும் மிக்க பொங்குமா வளமுடைய செல்வமாக மக்கட்பேற்றினை அறிமுகப்படுத்தியதன் மூலம், இக் குறட்பா முப்பால் அகப்பால் அல்லது பேரின்ப வளமும் சுட்டியதாயிற்று.

(2) மக்கட்பேறு பற்றிக் குறிப்பிட்ட இக்குறட்பா அடுத்த அதிகாரத்துக்கு வாயில் செய்துள்ள அழகு கண்டின்புறத் தக்கது. அது மட்டுமன்று. அறத்துப் பாலில் வாழ்க்கைத் துணைநலமாகிய இவ் வதிகாரம் வான் சிறப்புப் பண்புடையதானல், மக்கட் பேறு என்ற அடுத்த அதிகாரம் இதன் ஒழுக்கத்து நீத்தார் பெருமை அதாவது பொருட்பால் குறித்த பாயிர உட்கூறு ஆகும். இக் குறட்பா கற்புடைய மனைவியின் இல்லறத்தை வான் சிறப்புப் பண்பாகக் கூறி இவ் வதிகாரத்தின் வான் சிறப்புப் பண்பு, இன்பப்பாற்

பண்பு ஆகியவற்றின் முடிவுரையாகவும், அடுத்த அதிகாரத்தின் ஒழுக்கத்து நீத்தார் ஆகிய அறவோர் பண்பு, பொருட்பாற் பண்பு ஆகியவற்றுக்குப் புகுமுக மாகவும் ஒருங்கே அமைந்து விட்டது காணலாம்.

(3) மங்கலம், நன்கலம் ஆகிய இரண்டும் எதிரிணைகள் போல வரினும், கலம் என்ற பகுதி மேன்மேல் அடுத்தேறிப் பொருள் பெருக்கி வந்தது காணலாம். கற்புச் செல்வம் மிகப் பெரும் செல்வ மாயினும் பேரருமை யுடையதாயினும், மக்கட்பேருகிய செல்வம் அதனினும் மிக்க செல்வமும், அதனினும் பேரருமையும் உடையது ஆகும் என்பது இதனல் குறிக்கப்பட்டது. அத்துடன் மக்கள் என்பதில் ஆணும் பெண்ணும் அடங்குவதனல், மக்களின் அருமைப்பாட்டினுள்ளும் கற்பு மரபின் அருமைப்பாடு உள்ளடங்கி யுள்ளது என்னல் தகும்.

தவிர, மங்கலம் என்பதின் முதற் கூருகிய ‘மன்’ பொதுமையையும், நன்கலம் என்பதின் முற்கூருன ‘நன்’ சிறப்பையும் குறிக்கும் அடைகள் ஆகும். இவ் வழி மங்கலம் இனப் பண்பின் தொடர்ச்சியும், நன் கலம் சமுதாய வளம் ஆகிய இனப் பண்பின் வளர்ச்சி யும் குறித்தன.

தனிக் குறிப்புக்கள்: (1) இக் குறட்பாவில் வரும் ‘என்ப’ என்ற வினைமுற்றினைப் பொருள் சிறப்பற்ற ஓர் அசைச் சொல்லாகப் பெரும்பாலான உரையாசியர்களும் மொழி பெயர்ப்பாசிரியர்களும் விட்டுச் சென்றுள்ளனர். கவிஞர் இராமலிங்கனர் ‘என்ப’ என்பதனை ‘மங்கலம்’ என்பத னுடன் இணைத்து, ‘மங்கலம் எனப்படுவது’ என்று கூறி யமைத்தார். மணக்குடவர், ஆங்கில மொழி பெயர்ப் பாசிரியர் எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை ஆகியோர்

இதனைப் பொதுமைக் கூற்றாக்கி, 'என்று கூறுவார்கள்' என்றே உரைத்தனர்.

பரிமேலழகரும், புலவர் ந. சி. கந்தையாவும், புலவர் குழந்தையும் பிறரும் 'என்பர் அறிந்தோர்,' 'அறிஞர் கூறுவர்,' 'என்பர் அறிவுடையோர்' என்று உரை வகுத்துள்ளனர்.

'என்ப' என்பதன் தோன்றா எழுவாயை மக்கள் என்று பொதுப்படையாகக் கொள்ளதினும் அறிஞர், மேலோர் என்று கொள்வது சிறப்புடையதேயாகும். அறவோர், அறங் கூறுவோர் என்று கொள்வது அதிகார, பால் வகைகளில் இன்னும் பொருத்தமானதாகும். ஏனெனில் வள்ளுவ அறத்தின் உயிர் அடிப்படை குடும்பமே. திருவள்ளுவர் அறவோர், அறம் கூறுவோர் அந்தணர் என்றே (30) குறித்துள்ளார். அந்தணர் ஆக்கிய அல்லது இயற்றிய அறநூலில் கூறப்படும் அறத்துக்குப் பாதுகாப்பாளர் அரசர் (543) என்றும், அப் பாதுகாப்புக்கு உரந்தருவோர் அரசியலை உள் நின்று இயக்குவோராக அவ் வறநூலிலேயே சிறப்பிக்கப்படும் ஒழுக்கத்து நீத்தார் (21) என்றும் திருவள்ளுவர் விளக்கியுள்ளார்.

என்ப என்ற வினைமுற்றுக்குரிய தோன்றா எழுவாய் மேலோராகிய அறவோர் அல்லது அந்தணர் என்ற இம் மணிவிளக்கவுரைப் பொருள்கோள் இதனால் பெறப்படுவது ஆகும்.

(2) மங்கலம் மனைமாட்சி என்பதில் மங்கலம் என்பதையே எழுவாயாகவும், அதுபோல நன்கலம் நன்மக்கட் பேறு என்பதிலும் நன்கலம் என்பதையே எழுவாயாகவும் இம் மணிவிளக்கவுரையைப் போலவே கொண்டுள்ளனர் உரையாசிரியர்கள். இவ்வாறு கொள்ளுதல் சிறப்புடையது. ஏனெனில் மிகப்பல இடங்களிலும் திருவள்ளுவர் கவிதை வரிசை கவிதை வரிசையாக மட்டுமன்றி தனிப்பண்பு சுட்டும் வரிசையாகவும் அமைந்துள்ளது.

மனைமாட்சி என்பதனை மனையாளது நற்குண நற்செய்கைகள், மனைவியின் நற்பண்பு, மனைவியின் நல்லொழுக்கம்; மனைவியின் பெருமை; இல்லறம் நடத்தல்; இல்லறத்தின் பெருமை என்றும்; மங்கலம் என்பதனை நன்மை, அழகு; மேன்மை, நல்வாழ்வு, பொலிவு என்றும்; ஒருவற்கு நன்மை அல்லது அழகு, வாழ்க்கைத் துணைக்கு அல்லது பதிவிரதைக்கு அழகு அல்லது நன்மை; குடும்பத்துக்கு நல்லது, மனையறத்துக்குப் பொலிவு என்றும் பல்வேறு உரையாசிரியர்களும் பல்வேறுபட உரைகூறிப் பொருத்தி வேறு வேறு பொருள் வருவித்துள்ளனர்.

இங்கே ஒருவற்கு என்பது ஆடவனுக்கு அல்லது கணவனுக்கு என்ற குறிப்புடையதாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வழி, 'ஒருவற்கு நன்மை......மனையாளது நற்குண நற்செய்கைகள் என்று பரிமேலழகரும்; 'மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம்' என்று பேராசிரியர் முனைவர் மு. வரதராசனரும்; 'மனைவியின் ஒழுக்கமுடைமையானது ஒருவற்கு அழகு' என்று மணக்குடவரும்; 'கற்பினால் மாட்சிமை பெறுதல் வாழ்க்கைத் துணைக்கு நன்மையானது' எனக் காலிங்கரும்; 'மனைவியின் நல்லொழுக்கமே மனையறத்துக்குப் பொலிவு' என்று புலவர் குழந்தையும்; 'இல்லறம் நடத்துதல் பதிவிரதைக்கு அழகு' என்று பரிதியாரும்; 'இல்லறத்தின் பெருமை ஒருவருக்கு நன்மை' என்று பேராசிரியர் இலக்குவனாரும்; 'மனைவியின் பெருமையே குடும்பத்துக்கு நல்வாழ்வு' என்று கவிஞர் இராமலிங்கனாரும் உரை கண்டுள்ளனர்,

கணவனுக்கு மனைவியோ கற்போ; மனைவிக்குக் கற்போ, ஒழுக்கமோ, இல்லறமோ மங்கலம்; இல்லறத்துக்கு மனைவியோ கற்போ மங்கலம் எனக் கூறிய இவ்வெல்லா உரைகளையும் விட, கற்புடைய மனைவியின் இல்லற மாண்பே மனித இன முழுமைக்கும் பொங்கு மாவளம் குறிக்கும் சின்னம் என்று கூறும் இம் மணிவிளக்க வுரைப்பொருள் கோள் வள்ளுவ உள்ளக்கிடையாதல் வெளிப்படை.

வள்ளுவ நீதிகள் யாவுமே முழு முதல் நீதிகள் என்பது குறிப்பிடத் தக்கது ஆகும்.

(4) மற்று என்பதனைப் பரிமேலழகர் உட்படப் பெரும்பாலான உரையாசிரியர்கள் அசை நிலை அதாவது பொருளற்ற இடைச் சொல் என்றே கூறிச் சென்றனர். 'வினைமாற்றின்கண் வந்தது' என்று பிற குறட்பாக்கள் சில வற்றில் பரிமேலழகர் கூறியதுபோல, இங்கே அவர் 'வினைப் பயன் மேம்பாடு குறித்து வந்தது' என்று கூறியிருக்கலாம. ஆனால் அவ்வாறு கூறவில்லை. மணக்குடவர் ஒருவர் மட்டும், 'மனையாள் ஒழுக்கமுடையளாதல் ஒருவனுக்கு அழகு' என்று முன் வாசகவுரை முடித்து 'அவ் வழகின் மேலே' என்று பொருள் தொடங்கினார். பரிமேலழகரும் இதுபோலவே 'அதுவன்றியே' என்றனர்.

'மற்று அதன்' என்பதில் 'அதன்' என்பதனைப் பரிமேலழகர் மனைமாட்சி குறிப்பதாகக் கொண்டார். மனைமாட்சிக்கு அவர் 'மனையாளது நற்குண நற்செய்கைகளை' என்று உரை செய்ததற்கேற்ப, இங்கும் 'அதன்' என்பதனை 'அவை தமக்கு' எனக் குறித்தார். இதனால் அதன நன்கலம் என்பதனை அவர் அம் மனைமாட்சியின் நன்கலம் என்றே கருதியது தோன்றும். இது 'அச் செல்வத்தின் செல்வம்' என்ற இம் மணிவிளக்கவுரையையே நினைவூட்டுதல் காண்க.

கவிஞர் இராமலிங்கனார் 'மற்று அதன்' என்பதனை, 'அதன் பின்' என உரைத்துள்ளார்.

(4) நன்மக்கட் பேறு என்பதனை நல்ல புதல்வரைப் பெறுதல் என்றே எல்லா உரையாசிரியரும் பொருள் கூறியுள்ளனர். 'சான்றோரால் மதிக்கப்பட்ட அறிவினையுடைய புதல்வர்' என்று காலிங்கர் உரை செய்தார். நன்கலம் என்பதற்கும் இதுபோலக் கிட்டத்தட்ட அனைவருமே நல்ல அணிகலம் அல்லது ஆபரணம் என்று மட்டுமே கொண்டுள்ளனர். ஆனால் அணிகலம் யாருக்கு என்பதில் உரையாசிரியர்களிடையே வேறுபாடுகள் உண்டு. பரிமேலழகர் 'அவை தமக்கு' அதாவது 'மனையாளது நற்குண நற்செய்கைகள்' என்று அவரால் பொருள் கொள்ளப்பட்ட

'மனைமாட்சி'க்கு அணிகலம் என்றார். இதனை யொத்தே 'அதற்கு' (இல்வாழ்வுக்கு) என்று பேராசிரியர் மு. வரத ராசனாரும், 'அவ் வில்லறத்தின்' எனப் பேராசிரியர் இலக்குவனாரும், 'மனையறத்தின்' எனப் புலவர் குழந்தையும் பொருள் இணைத்தனர், 'ஒருவருக்கு' என்று ந. சி. கந்தையா வும்; 'அவளுக்கு' 'அவர்க்கு' என மனைவியையே சுட்டிப் பரிதியாரும், காலிங்கரும்; முன்வந்த 'மங்கலம்' என்பதனைக் குறித்து, 'அந்த நல்வாழ்வுக்கு' எனக் கவிஞர் இராம லிங்கனாரும், பெண்ணையே சுட்டி 'அவ் வழகின் மேலே' என்று மணக்குடவரும் பொருள் இணைத்தனர்.

'மங்கலம்' என்பது அழகு என்றும், 'நன்கலம்' என்பது 'அணிகலன்' என்றும் பொருள் கண்டவர்கள் சொல் வழக்குப் பொருளே கொண்டாலும்; சொல் மூலப் பொருள் கண்டு முன்னதன் பொதுமை, பின்னதன் சிறப்பு மேற் கொண்ட இம் மணிவிளக்கவுரைப் பொருள்களை நோக்கிச் சென்றுள்ளனர் என்பது கூர்ந்து காணத்தக்கது. ஏனெனில் பெண்ணுக்கு இயற்கையழகு உடலழகு. செயற்கை அழகு அணிகலன்: பின்னது அழகுக்கு அழகும் ஆகும்,

★

அதிகாரம் 7 மக்கட் பேறு

அறத்துப் பாலின் பாயிரப் பகுதியாகக் கருதப்படத் தக்க அப் பாலின் முதல் நான்கு அதிகாரங்களிலே, மக்கட் பேறு என்ற இம் மூன்றும் அதிகாரம் அறத்துப் பாலின் ஒழுக்கத்து நீத்தார் பெருமை அதிகாரமாய் அமைந்த தாகும். இல்வாழ்வான் அறவாழ்வை இயக்கும் மையக் கடவுட் பண்பாகவும், வாழ்க்கைத் துணைவி அந்த மையப் பண்பு தழுவி நின்று அறந் தழைப்பிக்கும் மழைமுகிற் பண்பாகவும் அமைதல்போல, அவ்விரு பாற் கடவுட் பண்புக் கூறுகளின் புத்திளந் தளிர்களாக அமையும் ஆண் பெண் மக்கட் செல்வங்களும் குடும்ப அறப் பண்பைச் சமுதாயத்திலும் இனத்திலும் பரப்ப உதவும் இன்றி யமையாக் கருவிகள் என்ற முறையில், அவ் அறவாழ்வின் பொருள்வளக் கூறுகளாயமையும் கடவுட் பண்புக் கூறு களாக இவ் வதிகாரத்தில் சிறப்பிக்கப்படுகின்றன.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை அதிகாரத்தில் திருவள்ளு வர் அரசியற் சமுதாய வாழ்வின் பொருளுக்கெல்லாம் மூலமான பொருளாக, பொருள் வாழ்வை இயக்கும் பொருளாக ஒழுக்கத்து நீத்தாரைச் சிறப்பித்தார். அது போல அவர் இவ்வதிகாரத்தில் இன்பத்தில் பிறந்த அற வாழ்வின் பயனும், குடும்ப வாழ்வின் பொருளுக்கெல்லாம் மூலமான பொருளாக, பொருள் வாழ்வையும் அறவாழ்வை யும் இயக்கும் பொருளறப் பண்பாக மக்களை விதந்தோது கின்றார். அவர்களே செல்வத்திலெல்லாம் அரும்பெறற் செல்வம் என்பது தோன்றவே பேறு என்ற சொல்லை உட்

கொண்ட மக்கட் பேறு என்ற தொகையை இங்கே திரு வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.

இனச் சமுதாயத்தின் பொருளைப் பொருளாக்கும் ஒழுக்கத்து நீத்தார் போல, குடும்பச் சூழலிலிருந்து அச் சமுதாயச் சூழலில் பொருளைப் பொருளாச்கும் பொரு ளலைகளை இயக்குபவர் புதல்வர் புதல்வியராகிய மக்கள்; சமுதாயத்துக்குக் குடும்பம் அளிக்கும் செல்வங்களிலெல்லாம் சிறந்த செல்வமாக அமைபவர்கள் அவர்களே.

மனித இனவாழ்வில் சமுதாயத்தில் நின்று குடும்பம் இயக்குபவன் இல்வாழ்வான். குடும்பத்தில் நின்று இனம் இயக்குபவள் வாழ்க்கைத் துணைவி. இனத்தில் நின்று சமுதாயத்தை இயக்குபவர் புதல்வர் புதல்வியரே. இனத்தை இயக்கிய குடும்ப சமுதாயங்களின் வளர்ச்சிக்கு அவர்கள் கருமூலச் சின்னமாய் அமைகிறார்கள்.

உலகின் தலைசிறந்த குழந்தை இலக்கியம்!

மக்கட் பேறு அதிகாரத்துக்கு வாயில் செய்த முன் அதிகாரக் கடைகிக் குறட்பா அம் மக்கட் பேற்றின் சிறப்பை யும் அருமைப் பாட்டையும் திறம்பட எடுத்துரைத்துள்ளது. 'பெண்மையின் பீடருமையுள்ளும் பேரருமை யுடையது கற்பு; அக் கற்பு வாய்ந்த மனைமாட்சி ஒரு மங்கலக் குறியாக, அதனால் குறிக்கப்பட்ட நன்கலமாக நன்மக்கட் பேறு அமைவது' என அவர் அங்கே எடுத்துரைத்தார். அங்கே 'பேறு' என்ற சொல் வழங்கப்பட்டதனாலும், 'நன்மை' என்ற கருத்துடைய சொல் அடை மொழியாக அடுக்கப் பட்டதனாலும ஏற்படும் பொருள்வளம் ஏற்கெனவே முன் னதிகார இறுதிக் குறட்பாவுரையில் சுட்டப்பட்டுள்ளது. பெண் பீடு பாடுவதில் சென்ற அதிகாரத்திலே கவிதை யிடையே அறிவைக் கொட்டிய திருவள்ளுவர், அப் பீடு குறித்த நன்கலமாகிய மகப்பேற்றை வருணிக்கும் இவ் வதிகாரத்திலே அறிவிடையே அழகுக் கவிதையினைக் கொட்டுகிறார்.

உலகின் தலைசிறந்த குழந்தை இலக்கியங்களில்—குழந்தைபற்றிய இலக்கியங்களில்—இவ் வதிகாரம் முன்னணி முதல் இடம் பெறத்தக்கதாகும். தமிழில் குழந்தைகளைப் பற்றிப் பாடினோர் யாவரும், சங்ககாலம்தொட்டுத் திருவள்ளுவரின் சொல்லும் கருத்தும் பின்பற்றியே பாடியுள்ளனர்—ஆயினும் குழந்தையின் இயலழகு வருணனையில், குழந்தையின்பம் தீட்டிக் காட்டும் முறையில், இவ் வதிகாரத்துடன் ஒப்புடைய கவிதைச் செல்வத்தைத் தமிழிலக்கியத்தில் மட்டுமன்றி, உலகின் எம்மொழி இலக்கியத்திலும் காணமுடியாது.

பெண்ணழகில் மயங்கிய கவிஞர் பலர்—கட்டிளமையில் சித்தம் கரைய விட்டவர் பலர். ஆனால் பெண்ணின் பீடும் அறிவுருவும் தீட்டிக் காட்டுவதிலோ, அப் பெண்ணின்பக் கனியான மக்கள் இன்பம் உருப்படுத்திக் காட்டுவதிலோ, மக்கள் பீடு ஆய்ந்துணர்ந்து தீட்டுவதிலோ, திருவள்ளுவருக்கு ஈடு திருவள்ளுவர் ஒருவரே என்று திண்ணமாகக் கூறலாம்.

உரையாசிரியர் கருத்துக்கள்!

அதிகாரப் பொருள் விளக்கமும் முறைமையும் கூறுமிடத்தில் உரையாசிரியர் பரிமேலழகர் தமிழ்க் கருத்துக்களுடன் ஒட்டாத சுமிருதி ஒழுக்கத்தைத் திருவள்ளுவர் ஒழுக்கத்துடனேயே ஒட்டவைக்க அரும்பாடு படுகிறார்; 'இரு பிறப்பாளர் மூவராலும் (அதாவது நால் வருணத்தினரில் முதன் மூன்று வருணத்தவரான பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகியவர்களால்) இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள் (அதாவது முனிவர் கடன், தேவர் கடன், பிதுரர் கடன் ஆகியவற்றுள்) முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானு மல்லது இறுக்கப்படாமையின், அக் கடனிறுத்தற்பொருட்டு நன்மக்களைப் பெறுதல்' என்பது அவர் அதிகாரப் பொருள் விளக்கம். தவிர, 'அதிகார

முறைமை மேலே பெறப்பட்டது' என அவர் முன் அதிகாரக் கடைசிக் குறட்பாவையே சுட்டிக் காட்டுகிருர்.

'புதல்வரைப் பெறுதலாவது புதல்வரைப் பெற்றதனு லாய பயன் கூறுதல்' என்பது மணக்குடவர் அதிகார விளக்கம்.

'இல்வாழ்க்கைக்குப் புதல்வர் வேண்டுதலால் அவர் குணத்தை யுரைத்தது' என்பது பரிதியார் அதிகாரப் பெயர் விளக்கம்.

'மக்கட் பேறு—பிள்ளைகளைப் பெறுதல்' என்று புலவர் ந. சி. கந்தையாவும்; 'நன்மக்களைப் பெறுதல்' என்று பேரா சிரியர் இலக்குவனரும் கூறியமைந்தனர். 'மக்கட் பேறு, மக்களாகிய செல்வம், புத்திரபபாக்கியம்' எனத் தனிப் பொருள் கண்டார் கவிஞர் இராமலிங்கனர். பேறு என்பது செல்வம் என்று கருதிய கவிஞர் உரை இவ்விடத்தில் இம் மணிவிளக்கவுரை நோக்குதல் காணலாம்.

ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்க சாமியும் மக்கட் பேறு என்பதை மக்களைப் பெறுதல் என்று கொள்ளாமல், 'மக்களாகிய நற்பேறு[1] என்றே கொண் டுள்ளார்.

பொதுவாகப் பழைய மொழி பெயர்ப்பாசிரியர்க ளிடையே இவ் வதிகாரப் பெயர் விளக்கத்தில் நாம் இடை நிலைக்காலப் பிற்போக்குக் கருத்துக்களின் அடர்த்தி மிக்க செறிவையே காண்கிறோம். ஏனெனில் பரிமேலழகர் மக்கள் என்ற சொல்லைத் தமிழ் மொழி இயல்புக்கேற்ப இருபால் குறித்த சொல்லாகவே கொண்டாலும், முதல் குறட்பாவில் வரும் 'அறிவறிந்த மக்கட் பேறு' என்ற தொகையில் 'அறி வறிந்த' என்ற அடையின் குறிப்பாக, இவ்வதிகாரம் ஆண் மக்களை மட்டும் சுட்டுவதாகக் கொண்டார். மேலே காட்டிய அவர் முடிவுரையில் இவர் மக்களைப் பெறுதல் பிதிரர் கடன் தீர்க்கும் செய்தி என்று கூறுவது இதனுடன் ஒத்து நோக்கத்

---

1. Blessings of children

தக்கது ஆகும். ஏனெனில் மனு சுமிருதி முதலிய சுமிருதிகளின்படி, பிதிரர்க்குக் கடன் இறுக்கும் தகுதியுடையவர்கள் ஆண் மக்களே, பெண் மக்களல்லர் என்பது கருதத்தக்கது.

தாம் கொண்ட உரைக் கருத்துக்கேற்ப, அதிகாரப் பெயரையும் பரிமேலழகர் மக்கட் பேறு என்ற வள்ளுவ வாயுரையாகக் கொள்ளாமல், புதல்வரைப் பெறுதல் என்று திருத்த முனைந்துள்ளாரோ என்று கருதலாம். ஆனால் மணக்குடவர் முதலிய மற்றப் பழைய உரையாசிரியரும் அப்பெயரே கொண்டனர். பெயர் திருத்தப்பட்டிருப்பின், அது பரிமேலழகருக்கு முற்பட்டதாதல் வேண்டும் என்னலாம்.

வாழ்க்கைத் துணைநல அதிகாரத்தில் திருவள்ளுவர் தாயைச் சிறப்பித்ததை உரையாசிரியர்கள் கண்ணாரக் கண்டும் அடுத்த இவ்வதிகாரத்திலேயே தாயினப் பழிப்பில் கூசாது இறங்குவதை நோக்க வியப்புறுமலிருக்க முடியவில்லை. தவிர, அறத்துக்கும் பொருளுக்கும் இன்பத்துக்கும் உரிய முப்பால் பொருளாக, தம் கவிதையார்வ முழுதும் கொட்டித் திருவள்ளுவர் வருணிக்கப் புகும் குழந்தைச் செல்வத்தை இவ்வுரையாசிரியர்கள், இறப்பின் பின் 'புத்' என்னும் நரகிலிருந்து காக்க உதவும் ஆண் மக்கள் எனக் குறுக்கி, மக்கட் பேற்றின்ப மறுத்தும், அப் பேற்றினை ஒரு தன்னலப் பேருகக் கொணடு இழிவுறுத்தியும் உள்ளனர் என்பது காணலாம். மக்களில் ஆண் மகவுகள் மட்டும் இன்பம், பெண் மகவுகள் இன்பமாகா என்று யாரும் கூற மாட்டார்கள்.

அதிகாரப் பெயர்

மக்கட் பேறு என்ற அதிகாரப் பெயர் மக்களைப் பெறுவதான பேறு அல்லது செல்வம் என்று பொருள்படுவதாகும். அச் செல்வம்பற்றிச் சிந்திக்கும் அதிகாரம் என்ற முறையிலே அது அதிகாரத்துக்கு ஆகுபெயராயிற்று. இதில் மக்கள் என்ற பெயர் 'மக' என்ற ஆண் பெண் பொதுப்பாற் பெயர்ச் சொல்லின் பன்மை வடிவம் ஆகும். மக என்பது

னுடன் கள் என்ற பன்மை விகுதி சேர்ந்து, பெயரின் அகரம் கெட்டு, இரு ககரங்களும் இணைந்தன. 'கள்' விகுதி அஃறிணைக் கன்றி உயர்திணைக்குப் பழந்தமிழில் வழங்கியதில்லை என்று மொழிநூலார் கூறி அதற்குத் தொல்காப்பிய, சங்க இலக்கியச் சான்று காட்டுவர். இது சரியன்று என்பதைத் தொல்காப்பியரும் சங்க இலக்கியமும் மட்டுமன்றித் திருவள்ளுவரும் வழங்கும் இச் சொல் காட்டுகிறது.

உண்மை யாதெனில், 'கள்' விகுதி தமிழில் உயர் திணைக்கும் இன்றியமையாததன்று, அஃறிணைக்கும் இன்றியமையாததன்று. செந்தமிழ் நாட்டு வழக்கே பெரிதும் பின்பற்றிய தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் அதனை வழங்காதது அச் செந்தமிழ் நாட்டு வழக்குச் சார்ந்ததே, தமிழுலக முழுவதும் சார்ந்ததன்று. திருக்குறளில் ஆங்காங்காகவும், பிற்கால இலக்கியங்களில் படிப்படியாக மிக்கும் கள் விகுதி பெருக்கமுற்று வந்துள்ளமை கொடுந் தமிழக வழக்கு விரவுவதாலேயே என்னல் தகும். திருக்குறள் தேசிய இலக்கியமாகப் புகழ் வளர்த்த ஏடாதலால், திருக் குறளின் செல்வாக்காலேயே 'கள்' விகுதி இலக்கியத் தமிழிலும் படிப்படியாகப் பரவிற்று என்னலாம்.

பேறு என்பது பெறு என்னும் வினைப்பகுதியடியான முதனிலை நீண்ட தொழிற் பெயர். பெறுதல் என்னும் பொருளுடைய இத் தொழிற் பெயர் பெறுதற்குரியது, செல்வம் என ஆகு பெயராய் இங்கே வழங்கிற்று, அரும் பெறற் பேறு, பெரும்பேறு என்ற தொகைகளில் இப் பொருள் பயிலுதல் காணலாம்,

உரையாசிரியர் பலரும் பேறு என்பதைப் பெறுதல் என்ற பொருளில் தொழிற் பெயராக மட்டுமே கொண்டனர். அத்துடன் மக்கட் பேறு என்பதனையும் மக்களைப் பெறுதல் என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவே கொண்டனர். இது தவறு என்பதைப் 'பெறுமவற்றுள் பேறு' என்ற திருவள்ளுவரின் (64) வழக்கே சுட்டிக்காட்டும்; ஏனெனில் பெறுமவற்றுள் என்பது வினையாலணையும் பெயராதலால், அதனோடு ஒப்புடையதாகக் கூறப்பட்ட பேறும்

பெறுவது, பெறப்படுவது என்ற பொருள் கொள்ளுமே யன்றிப் பெறுதல் என்னும் பொருள் கொள்ளுதல் ஆகாது.

இவ் வதிகாரப் பெயரின் இறுதியில் வரும் பேறு என்ற சொல், அறத்துப் பாலின் பிற பாயிரவியல் அதிகாரங் களிலும், ஏட்டின் பாயிர அதிகாரங்களிலும் வரும் வாழ்த்து. சிறப்பு, பெருமை, வலியுறுத்தல், நலம், மாட்சி, சால்பு, மாண்பு முதலிய சொற்களைப் போலவே வாழ்த்தியல் குறித்த சொல் ஆகும்.

அதிகார வகுப்பு முறை

அறத்துப் பாலில் கடவுளின் உருவப்பண்பாக, கடவு ளுருவினரான ஆதிபகவனின் அருவப் பண்பாக, இயக்கும் கடவுட் பண்புத் திறமாக இல்வாழ்வானும், கடவுளுருவான ஆதிபகவனின் அருளுருவப் பண்பாக, இல்வாழ்வானின் மழைமுகிற் பண்பாக வாழ்க்கைத் துணையும் அமைவது போல, கடவுளின் அருள் வளமாகிய ஒழுக்கத்து நீத்தார் பண்பாகவும், ஆதிபகவனின் அருள்வளப் பண்பாகவும், இல் வாழ்வானின் இனப்பயிர் வளர்ச்சிப் பண்பாகவும விளங்கு வது மக்கட் பேறேயாகும்.

மழை வளம் தரும் பயிர்ப்பண்பு போன்ற மக்கட் பேறு முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும் இவ் வதிகாரத்தில் அதன் பொருள் வாழ்வுத் தொடர்பினைச் சிறப்பாக 61—63 குறட்பாக்களும்; அதன் இல்வாழ்வுத் தொடர்பினை 64--66 குறட்பாக்களும்; அதன் அறவாழ்வுத் தொடர்பினை 67--69 குறட்பாக்களும்; அதன் முப்பால் வாழ்வுத் தொடர்பினையும் முப்பால் வாழ்வுத் தொகுதியின் உள்ளீடான அகப்பாலாகிய வீட்டுப்பால் வாழ்வுத் தொடர் பினையும் 70-வது குறட்பாவும் விதந்தோதியுள்ளன.

61. செல்வங்களில் சிறந்த இனச் செல்வம்
இன அறிவார்ந்த மக்கட் செல்வமேயாகும்

[1]பெறுமவற்றுள் [3]யாம் அறிவது இல்லை [2]அறிவு அறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

பொ - ரை: [1]மனித இனத்தவர் சமுதாய வாழ்வில் பெறத்தக்க பெருஞ் செல்வப் பேறுகளினுள்ளே [2]இனவாழ்வு வளத்துக்குரிய அறிவு முழுவதும் கைவரப் பெற்ற நன்மக்களாகிய அருஞ்செல்வ மல்லாத வேறு எவற்றையும் [3]அச் செல்வத்துக்கு ஒப்பானதாக நாம் இதுவரை அறிந்தது கிடையாது.

கு - ரை: இல்லறத்தார் பெறும் செல்வங்களில் நல்ல புதல்வர் புதல்வியர்களை ஒத்த செல்வம் வேறு இல்லை.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்று: இதன் சொற்கள் இரண்டு.

அவை யாவன:

1. பெறுமவற்றுள் அறிவு அறிந்த மக்கட் பேறு அல்லது பிற யாம் அறிவது (இது எழுவாய்).
2. இல்லை (இது பயனிலை).

இக் குறட்பாவில் பெறுமவற்றுள் (கருவிளங்காய்), அறிவறிந்த (கருவிளங்காய்), யாம் அறிவது (கூவிளங்காய்), மக்கட் பேறு (தேமாங்காய்) ஆகிய சீர்கள் நீள் சீர்கள். இவற்றுள் முதல் இரண்டிலும் மூவசைகளும் சரிசம எடுப்பிசைப்பாகவும்; மூன்றாவது சீர் முதலசை படுத்திசைப்பு ஆகவும், ஏனை இரண்டும் நலிந்திசைப்பு ஆகவும் வந்தன. மக்கட் பேறு என்ற சீர் ஒன்று மட்டுமே இறுதி அசை எடுத்திசைத்து ஏற்றிசைப்பாய் அமைந்தது. தவிர, இல்லை, அல்ல, பிற என்ற மூன்றும் குறுகிய சீர்கள். 'இல்லை' முதலசை எடுத்திசைத்துக் குறட்பாவின் உயிர்நிலையாய் அமைந்துள்ளது. அல்ல என்பதில் பின்னசையும், பிற என்பதில் பின் எழுத்தும் எடுத்திசைத்து ஏற்றிசைப்பாயின.

பெறுமவற்றுள் அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற யாம் அறிவது என்பது பெயர்ச் சொல்லாக வந்த நெடுந் தொகை. இது இல்லை என்னும் பயனிலை கொண்டு முடிந்தது.

அறிவது என்பது அறி என்னும் வினைப் பகுதியடியான ஒன்றன்பால் வினையாலணையும் பெயர். இதில் ' து ' அப்பால் விகுதி. வகரம் காலப் பொதுமை குறித்த எதிர்கால இடைநிலை. இவற்றிடையே வரும் அகரம் சாரியை. பகுதியாகிய ' அறி ' யாம் என்பதன் பயனிலையாய்: எம்மால் அறியப்படுவது என்னும் பொருள்பட வந்தது. யாம் முன்னிலை உளப்படுத்தாத தன்மைப் பன்மைப் பெயர்; இது எழுவாயாய்; அறிவது என்பதன் வினைப் பகுதியுடன் முடிந்து தொகைப்பட்டது.

அல்ல, பிற ஆகிய இரண்டும் குறிப்புப் பெயரெச்சங்கள். இரண்டும் ' அறிவது ' என்ற பெயரினைச் சென்று தழுவின. இவற்றுள் அல்ல என்பது அன்மை என்ற பண்புப் பெயரடியாகவும், பிற என்பது பிற என்ற உரிச் சொல்லடியாகவும் தோன்றியவை ஆகும்.

அல்ல, பிற ஆகிய இரண்டையும் பலவின்பாற் குறிப்பு வினை முற்றுக்களாக்கி, இரண்டாம் வேற்றுமை உருபு தொக்க நிலையில் ' அறி 'வது என்ற பெயரின் வினைப் பகுதியான ' அறி ' என்பதன் செயப்படுபொருள்களாக்குதலும் பொருந்தும். அவ்வழி அல்ல, பிற இரண்டும் சேர்ந்து ஒரு பொருள் சுட்டிய இரு பெயர்த் தொகை ஆகும்.

மக்கட் பேறல்ல என்பது மக்கட் பேற்றை அல்லாதன ஆகிய எனப் பொருள்படும் இரண்டாம் வேற்றுமைத் தொகை. மக்கட் பேறு என்பது மக்களைப் பெறும் பேறு என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. (இத் தொகையின் முழு இலக்கணம் அதிகார முன்னுரையில் காண்க).

அறிவறிந்த என்ற தொகை பெயரெச்சமாய் மக்கட் பேறு என்ற தொகையின் பகுதியான மக்கள் என்ற பெயருடன் முடிந்து தொகைப் பட்டது. அறிவறிந்த என்பது அறிவை அறிந்த என இரண்டாம் வேற்றுமைத் தொகை. அறிந்த என்ற பெயரெச்சத்தில் ' அ ' பெயரெச்ச விகுதி; ' த் ' இறந்தகால இடைநிலை. இடைநிலை முன் ' த் ' சந்தியாய் வந்து, அச் சந்தி நகரமாய்த் திரிந்ததென்பர், இலக்கண நூலார். அறிந்த, அறிவு இரண்டிலும் ' அறி ' வினைப் பகுதி. அறிவு

என்பதில் வு, தொழிற் பெயர் விகுதி. அறிதல் என்ற பொருளுடைய அறிவு என்ற தொழிற் பெயர் அறிதலின் பயனுன அறிவுக்கும், அறிவுக்குக் காரணமான அறிவாற்றல் திறத்துக்கும் ஆகு பெயராயிற்று.

பெறுமவற்றுள் என்பதில் 'உள்', ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. இவ்வேற்றுமைப் பொருள் அறிவது என்பதன் வினைப் பகுதியுடன் முடிந்து தொகைப்பட்டது. பெறுமவை என்ற பலவின் பால் வினையாலணையும் பெயர், உருபின் முன் அற்றுச்சாரியை பெற்று ஈற்று ஐகாரம் கெட்டது. பெறுமவை என்பது பெறுபவை என்பதன் திரிபு. வை பலவின் பால் விகுதி. காலப் பொதுமையுடைய எதிர்கால இடைநிலையான பகரம் இங்கே மகரமாயிற்று. விகுதிமுன் அகரம் சாரியை ஆக வந்தது. பெறுமவை என்பதைப் பெறும் என்ற பெயரெச்சத்துடன் இணைந்த அவை என்ற சுட்டுப் பெயராகக் கொள்வதும் பொருந்தும்.

இல்லை என்பது திணைபால் இடப்பொதுவான குறிப்பு வினைமுற்று. இது 'இன்மை' என்ற எதிர்மறைப் பொருளுடைய பண்புப் பெயரடியானது. இது பெறுவது என முடியும் நெடுந் தொகையை எழுவாயாகக் கொண்டு பயனிலையாயிற்று.

வி - ரை : அறவாழ்வின் மழைவளப் பயிர்ப் பண்பான மக்கட் பேறு முப்பால் வாழ்வுடனும் தொடர்புடையதாயினும், அறத்துப் பாலின் பொருள் வாழ்வுப் பாயிரம் போன்ற இவ்வதிகாரத்தில் இக்குறட்பா உட்பட 61—63 குறட்பாக்கள் அதன் பொருள் வாழ்வுத் தொடர்பை விதந்தோதுகின்றன. அவ்வழி, இக்குறட்பா முந்திய அதிகார இறுதிக் குறட்பாவினைத் தொடர்ந்து மக்கட்பேறு செல்வத்துட் சிறந்த செல்வமாகும் என்ற அருமைப் பாட்டினை விளக்குகிறது.

பெறுமவற்றுள் என்பது மனித இனத்தவர் சமுதாய வாழ்வில் பெறத்தக்க பெருஞ் செல்வப் பேறுகளுள்ளே என்ற பொருள் தருகிறது.

இவ்வதிகாரத்துக்கே வாயில் செய்த முன் அதிகாரக் கடைசிக் குறட்பாவில் வரும் மங்கலம், நன் என்ற சொற்

களின் குறிப்புப் பொருள்கள் இங்கே கருதிப் பார்க்கத் தக்கன. ஏனெனில் நன்கலமாகிய மக்கட் பேறே அங்கே பேறு எனச் சிறப்பிக்கப்பட்டது. கற்புடைய பெண்ணின் மனையாட்சி இன வழிச் செல்வமாகத் தானுக வந்தெய்துவ தாதலால் அது மங்கலம் என்றும்; அதன் வழி மனையாட்சி யின் மாட்சியால் முயன்று பெறப்படும் செல்வங்களுள் ஒன்று என்ற முறையிலேயே மக்கட்பேறு நன்கலம் என்றும் பேறு என்றும் சிறப்பிக்கப்பட்டன. இனவழி வரவுச் செல் வமான கற்புடை மனையாட்சியாகிய மங்கலத்தின் பயனாக ஈட்டப்படும் சமுதாயச் செல்வங்களுள் முதன்மை வாய்ந்தது மக்கட்பேறு என்றும்; இன வழி வரவுச் செல்வத்தையே வளர்த்து, அதற்கு வளமும் வளர்ச்சிப் பண்பும் ஊட்டும் புதுப் பொங்கல்வளச் செல்வம் அது என்றும் இக்குறட்பா குறித்தது.

பேறு என்றும் நன்கலம் என்றும் முன் அதிகாரத்திலும்' பேறு என்றே அதிகாரப் பெயரிலும் குறித்தது போதாமல், இங்கும் பெறுமவற்றுள் என்று தொடங்கியதனுல், மங்கலப் பண்பு கடந்த மக்கட் பேற்றின் இந்த நன்கலப் பொங்கற் புதுச் சமுதாயச் செல்வப் பண்பு வலியுறுத்தப்பட்டுள்ளது காணலாம்.

அறிவு அறிந்த என்பது இனவாழ்வு வளத்துக்குரிய அறிவு முழுவதும் கைவரப் பெற்ற என்ற பொருளுடையது ஆகும்.

அறிவு என்ற தொழிற் பெயர் அறிதலின் பயனுன அறி வுக்கும், அறிவுக்குக் காரணமான அறிவாற்றல் திறத்துக்கும் ஒருங்கே ஆகு பெயராகுமென்பது மேலே இலக்கணக் குறிப் புரையில் கூறப்பட்டது. மர இனத்தின் வாழ்வில் கனி போன்றதே உயிரின, மனித இன வாழ்வில் அறிவு என்பதை இது காட்டுகிறது. ஏனெனில் கனி ஒரு தலைமுறையின் பயன் விளைவு வளமாகி, அடுத்த தலை முறையின் வாழ்வுக்கே விதை வளமாவது போல, அறிவும் முன்னைய அறிவு முயற்சியின் பயனுகி, அடுத்து வரும் அறிவு முயற்சிகளுக்குக் கருவிதை மூலமாகிவிடுகிறது.

அறிவு அறிதல் என்பது இனமரபில் வழி வழியாகக் கனி-விதை-மரம், விதை - மரம் - கனி என வளர்ந்துவரும் இயல்பான இன அறிவு மரபின் அறிவுச் செல்வம் முழுவதும் குறை பெருமல் பெறுதல் என்பதாம். கனியானது இன மரபில் குறைவுற்ருல் அதைச் சொத்தை என்கிறேம், ஏனெனில் அது அடுத்த தலைமுறை வளர்ச்சிக்குப் பயன் படாது. தலைமுறை தோறும் கனிப்பண்பு வளர்ச்சி பெருமல் போய்விட்டாலும், அது 'சாதி'க்கனி, இனக்கனி ஆகாது. இழி தரத்தது ஆகிவிடும். உடலும் இதுபோல, இன மரபில் குறைவுற்ருல் அதை நாம் ஊனம் என கிறேம். இனமரபில் வளர்ச்சிக்கூறு பெருவிட்டால்கூட நோஞ்சல், நலிவு என்கிறேம். இனமரபில் தொடர்ச்சியும், தொடர்ச்சியில் படிப்படியான வளர்ச்சி வளமும் பெற்ருல்தான், உடலின் நிலையை உடல் நலம் என்போம். அழகு என்போம். சாதிக்கனியும் வளமான, அழகுடலும் போலவே, இனமரபின் வளர்ச்சிக்குரிய தொடர்ச்சியில் குறைபடாமல் அதன் படிப்படியான வளர்ச்சி மரபுக்குரிய வளமேம்பாடும் வருவளப் பொலிவு மேம்பாடும் கொண்ட அறிவு பெறுதலே அறிவு அறிதல் ஆகும்.

அறிவு அறிந்த என்பதில் இவ்வாறு அறிந்த என்பதன் இறந்த காலம் முன்னை இன அறிவு வளர்ச்சியில் தடைப் படாது குறைபடாத நிலையையும்; அறிந்த என்பதிலேயே உள்ள அறிதல் என்ற வினை, மேலும் அறிவூக்கி வளர்க்கத் தக்க நிலையில் தொடர்ச்சியில் நலிவுருது படிப்படியாக மேம்பட்டே வந்துள்ள அதன் உயிர் வளத்தையும் சுட்டுவன ஆகும்.

மக்கட் பேறு என்பது நல்ல புதல்வர் புதல்வியராகிய அரும் பெறற் செல்வம் என்றும் பொருள் தருவது ஆகும்.

இக்குறட்பாவிலும், அதிகாரத் தலைப்பிலும், அதிகார முழுவதிலும் மக்கட்பேறு என்பதன் பொருள் மக்களைப் பெறுதல் என்பது அன்று, மக்களாகிய அரும்பெறற் செல்வம் என்பதேயாகும். இதனை, இக்குறட்பாவில் வரும் 'பெறுமவற்றுள்' என்ற சொல்லே ஐயத்துக்கிடமற விளக்கி

விட்டது. இது மேலே அதிகார முன்னுரையில் சுட்டப்பட்டுள்ளது.

மக்கள் என்ற சொல் இன்று காறும் மனிதர், உலகின் மனிதர், உலகின் மனித இனம் என்ற பொதுப் பொருளையும், பிள்ளைகள் என்ற பொருளையும் உடையதாக இரு பொருட் சொல்லாகவே வழங்குவது காண்கிறோம். இரு வழக்கிலுமே அது பன்மைச் சொல், ஆண் பெண் என்ற பால் பகுபடாத பொதுப்பாற் சொல்லேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் என்பதன் ஒருமையும் இருபொருள் உடையதே. ஆனால் இருபொருள் உடைய வடிவில் ஒருமையில் அது ஆண்பாலில் வேறு வடிவும் பெண்பாலில் வேறு வடிவும் பெறுகிறது. மகன் என்ற ஆண்பால் ஒருமை வடிவு இவ்வாறு மனித ஆடவன் என்ற பொதுப் பொருளும், புதல்வன் என்ற சிறப்புப் பொருளும் உடையது. மகள் என்ற பெண்பால் ஒருமை வடிவு இது போலவே மனிதப் பெண்டு என்னும் பொதுப் பொருளும், புதல்வி என்ற சிறப்புப் பொருளும் உடையதாகும்.

பால் பகுப்பு உடைய இந்த ஒருமைகளே யன்றி' பாற் பகவு அற்ற ஒருமை வடிவுகளும் மக்கள் என்ற இச்சொல்லுக்கு உண்டு. ஆனால் இவ்வடிவுகளில் பொதுப் பொருள் கிடையாது, சிறப்புப் பொருள் மட்டுமே உண்டு. மக்கள் என்பதன் ஒருமை வடிவங்களான மக, மகவு ஆகிய இரண்டும் இவ்லாறு மக்கள் என்று பன்மைச் சொல்போலவே ஆண் பெண் ஆகிய இருபால்களுக்கும் உரிய சொல்லாய், மனிதர் என்ற பொதுப்பொருள் கொள்ளாமல், பிள்ளை என்ற சிறப்புப் பொருள் மட்டுமே உடைய சொற்கள் ஆகும்.

மக்கட்பேறு என்ற தொகையில் மக்கள் என்ற பன்மைச் சொல் பாற்பொதுமை காரணமாக மட்டுமே வழங்கப் பட்டது என்று கூறுவதற்கில்லை. ஏனென்றால் ஒருமையிலேயே பாற் பொதுமைப்பட நாம் 'மகப்பேறு' என்று இன்றுகூடத் தாராளமாக வழங்கலாம், வழங்குகிறோம். திருவள்ளுவர் மகன், மகள் என்ற பால் வேறு பாடு குறிக்கா

மலே தொகை வழங்க எண்ணியிருப்பது இயல்பாயினும், அதற்குப் பன்மை வழக்கு இன்றியமையாததன்று. மகப் பேறு என்று வழங்கியே பொதுமை தெரிவித்திருக்கக்கூடும். ஆனால் இவ்வொருமை வழக்கு, பாற்பொதுமை சுட்டினாலும் சிறப்புப் பொருளன்றிப் பொதுப்பொருள் சுட்டியிருக்க முடியாது. அவர் மகப்பேறு என்று வழங்காமல் மக்கட்பேறு என்று வழங்கியதனால், அவர் பாற் பொதுமையை மட்டு மன்றி, பொதுப் பொருள் சிறப்புப் பொருள் ஆகிய இரண் டன் பொருட் பொதுமையையுமே உளப்படுத்த விரும்பியவ ராயிருந்திருக்க வேண்டும் என்னலாம்.

இக்குறட்பாவிலும் அதிகார முழுவதும் திருவள்ளுவர் பயன்படுத்தும் மக்கட்பேறு என்ற தொகை இவ்வாறு மிக விரிந்த பொருள் வளமுடையது என்பது காணலாம். அது ஆண் பெண் பாலராகிய புதல்வியரைப் பெறும் பேறு ஆகிய செல்வமட்டுமன்று, அப்புதல்வர் புதல்வியர் மூலமே மக்களை அதாவது மனித இனத்தைப் பெற்று வளர்த்துவிடும் இன வளமாகிய செல்வமும் ஆகும்.

ஒவ்வொரு தலைமுறையிலும் தாய்தந்தையரினும் புதல்வர் புதல்வியர் மிகுதியாகப் பெறும் வளமே தொடர்ந்து இனம் பெறும் வளர்ச்சிவளமாதலால், மக்கட் பேறு புதல்வர் புதல்வியராகிய சமுதாயச் செல்வமட்டு மன்று, மனித இனமாகிய இனத்தின் செல்வமும் ஆகும்.

மக்கட்பேறு இனச் செல்வம் வளர்க்கும் சமுதாயச் செல்வம்.

அல்ல பிற என்பது நன் மக்களாகிய அவ்வருஞ் செல்வ மல்லாது வேறானவை என்று பொருள்படும். அல்லாத பிற என்பது இங்கே அதையன்றி அதனின் மிக்கதும் ஒப்பதும் ஆனபிற என்ற பொருள் சுட்டும்.

எல்லாச் செல்வங்களும் செல்வப் பண்புகளும் நன் மக்கள் மூலம் பெறப்படுபவையே யாதலால், நன் மக்க ளல்லாத பிற செல்வம் இல்லை என்பது வெளிப்படை.

யாம் என்பது நாம் என்பதைப் போலவே தன்மைப் பன்மையாயினும், பொருள் தொனியில் நாம் என்பதி

லிருந்து வேறு படுவது ஆகும், ஏனெனில் நாம் என்பது முன்னிலையை உளப்படுத்திய தன்மைப் பன்மை. அது பேசுவோரையும் அவர் கருத்திலுள்ள பிறரையும் அவர் பேசக் கேட்போரையும் (தன்மை, படர்க்கை, முன்னிலை ஆகிய மூன்று இடங்களையும்) அகம் கொண்ட மிக விரிவான சொல் ஆகும். ஆனால் யாம், யாங்கள், நாங்கள் ஆகியவை 'நாம்' என்பது போன்ற முன்னிலை உளப்பாட்டுப் பன்மையல்ல, முன்னிலை விலக்குப் பன்மை. ஆகவே அது பேசுவோரையும் அவர் கருத்தில் உள்ளவர்களையும் (தன்மை, படர்க்கை இடங்களை) மட்டுமே அகப்படுத்திக் கூறுவதாகும். கேட்போரை (இக்குறட்பாவில் வாசகரை) உளப்படுத்தாது.

'யாம்' என்பதன் மூலம் திருவள்ளுவர் தம்மையும் தம்மையொத்த அறிஞரையும் இங்கே குறிக்கிறார் என்னலாம். 'யாமும் எம்மையொத்த அறிஞரும் அறிவதில்லை — நீங்கள் அறிவீர்களோ என்னவோ, அறிந்தால் சொல்லுங்கள்' என்று திருவள்ளுவர் 'யாம்' என்ற இவ்வழக்கினால் குறிப்பிடுகிறார்.

அறிவது இல்லை என்பது 'இதுவரை அறிந்தது கிடையாது' என்னும் குறிப்பும் 'நன் மக்களுக்கு ஒப்பான அருஞ்செல்வம் எவரும் கண்டுணர்ந்தது கிடையாது' என்னும் பொருளும் உடையது ஆகும்.

சிறப்புரை: குடும்பத்தைச் சமுதாயத்துடனும், சமுதாயத்தை இனத்துடனும், மீண்டும் இனத்தைக் குடும்பத்துடனும் இணைத்து முப்பால் வாழ்வுச் சகடத்தின் அச்சாணியாய் இயங்குபவர் புதல்வர் புதல்வியராகிய மக்களே. அவர்கள் குடும்பத்தின் பயனாய், சமுதாயத்தின் செல்வமாய், இனச் செல்வம் வளர்க்கும் செல்வ மூலமுதலாய் இயங்குபவர் ஆவர். அவர்கள் சென்ற கால இனவளத்தின் இன்கனி; வருங்கால இன வளர்ச்சியின் உயிர் விதை ஆவர்.

இவ்வாறு மக்கள் வாழ்வே இன வாழ்வின் அரும்பெறற் செல்வம் ஆகிறது.

பொருள்வளம் : (1) இக்குறட்பாவின் நீள் நெடுஞ் சீர்கள் நான்கில் பெறுமவற்றுள் என்பதன் நெடுமை முயன்று பெறும் செல்வங்களின் அருமை பெருமை யையும்; அறிவறிந்த என்பதன் நெடுமை இனவாழ் வின் பயனும், இன வாழ்வு வளர்ச்சியின் கருமூலமு மான இன அறிவு அறிதலின் அருமை பெருமையை யும் தம் சரிசம எடுப்பான செப்பலோசையால் விளக் கின. யாம் அறிவது என்பதில் யாம் என்பதன் படுப் பிசைப்பும் பிற அசைகளின் நலிவிசைப்பும் சேர்ந்து ஆர்ந்தமைந்த அறிவுடையோர் பார்வையில் மக்கட் பேற்றுக்கு ஒப்பான அல்லது அதற்கு அணுக்கமாய் உள்ள செல்வம் கூடக் கிடையாது என்ற தொனிப் பொருள் தந்தன. மக்கட் பேறு என்பதன் இறுதி அசையின் எடுத்திசைப்பும் ஏற்றிசைப்பும் மக்கட் பேற்றின் தனிப் பெரும் பெருமைச் சிறப்புச் சுட்டின.

அல்ல என்ற சீரின் பின்னசையும் பிற என்ற அசைச்சீரின் பின் எழுத்தும் முனைப்பாகும்படி அவை ஏற்றிசைப்பா யமைவதனுல், மக்கட்பேறு அல்லாத எத்தனையோ பேறுகள் உளவாயினும் அவை அத னோடு ஒரு சிறிதும் ஒப்பான சிறப்புடையவையல்ல என்பது குறிக்கப்பட்டது.

இல்லை என்பதில் முதலசை எடுத்திசைத்து அச் சொல் குறட்பாவின் உயிர்நிலைச் சொல்லாய் நின்றது. இவ்வோசையும் அல்ல, பிற என்ற அடுக்குமிகையும் மற்றச் செல்வங்களின் ஒவ்வா அவல நிலையுடன் மக்கட் பேற்றின் தனிப் பெருஞ் சிறப்பினை வலி யுறுத்தின.

இல்லை, அல்ல, பிற ஆகிய மூன்று சீர்களும் குறுஞ்சீர்களாதலால், பெருமுயற்சியினுல் வரும் பிற செல்வங்களினும் சிறு முயற்சியினுல் வரும் மக்கட் பேருகிய இச்செல்வம் மிகு சிறப்புடையது என்பது தொனித்தது.

(2) அறிவு உடைய என்னுது அறிவு அறிந்த என்று வழங்கியதனுல் ஏற்படும் பொருள்வளக் கூறுகளில் ஓரிரு பகுதிகள் மேலே இலக்கணக் குறிப்புரையிலும் விளக்கவுரையிலும் தெளிவுபடுத்தப் பட்டன. அறி என்ற பகுதி மீட்டும் வந்ததனுல், அறிவு என்ற தொழிற் பெயர் அறிதலுக்குக் கருமூல மான அறிவாற்றல் திறத்துக்கும், அறிந்த அறிவுக்கும் ஒருங்கே ஆகுபெயராயிற்று. அத்துடன் அதுவே அறி வின் இனத் தலைமுறை கடந்த தொடர்ச்சியையும், ஒவ்வொரு தலைமுறையிலும் படியிலும் வாழ்வின் காரணமாகவும் காரியமாகவும் சங்கிலி போல் தொடரும் கனி - விதைப் பண்பையும் சுட்டிற்று. அறிந்த என இறந்த காலத்தில் வழங்கப்பட்டதனுல், முன்னை அறிவின் மரபுத் தொடர்ச்சியும், மரபுருத் தொடர்ச்சியின் மறை உயிர்ப்பண்பான வளர்ச்சிக் கூறும் சுட்டப்பட்டன. இவ்வாறு அறிவின் தொடர்ச்சி அலையலையாக விரிந்து செல்லும் புதுப்புது மலர்ச்சியும் வளர்ச்சியுமே உயிர் மலர்ச்சியாகவும் இன மலர்ச்சி வளர்ச்சியாகவும் இயல்கின்றனவாதலால், ஒவ் வொரு தொடர்ச்சியலையும் ஒரு குடும்பவாழ், வலையாக ஒவ்வொரு மலர்ச்சியலையும் ஒரு கற்புடை மனை மாட்சி யாக, ஒவ்வொரு தலைமுறை மக்கட் பேறும் ஒவ்வொரு வளர்ச்சிப்படியாக அமைகின்றது. அறிவறிந்த என்ற

சீர் இந்த அலைபாய்வுணர்வை ஓசையாலும் சந்தத்தாலுமே படம் பிடித்துக் காட்டுவது காணலாம்.

(3) இக்காலச் செல்வநூலார் புறப் பொருள்களையும் அவற்றின் பண்டமாற்று மதிப்புச் சின்னமாக விளங்கும் பணத்தையுமே செல்வமாகக் கொண்டுள்ளனர். ஆனால் புறப்பொருள்களிலும் வாழ்க்கைக்குப் பயனுடையவை மட்டுமே செல்வமாகும் என்பதையும்; வாழ்க்கைக்குப் பயன்படும் சமயம் புறப்பொருளே யன்றி, கல்வியறிவு முதலிய அகப் பண்புகளும் பண்டமாற்றில் வழங்கத் தகும் என்பதையும் அவர்களே ஒப்புக்கொள்வர். தமிழரும் திருவள்ளுவரும் கொண்ட செல்வக் கோட்பாட்டுக்கு இச்செய்திகள் நமக்குப் படிகள் ஆகின்றன. ஏனெனில் தமிழருக்கும் திருவள்ளுவருக்கும் செல்வம் என்பது வாழ்க்கை வளத்துக்கு, இனவளர்ச்சிக்கு உதவும் பண்புகளே யாகும். புறப் பொருள்கள் இவ்வகையில் தற்காலப் பண்புகளாகவும், அகப்பண்புகளே நிலைப் பண்புகளாகவும் அமைவன என்று காணலாம்.

திருவள்ளுவரின் செல்வ இயலில்[1] உழவு பெறும் தனியிடம் பற்றியும்; இதனால் திருவள்ளுவரின் செல்வ இயல் தனித்தன்மை பெற்று அடிப்படைச் செல்வ இயல்[2] எனக் கூறப்படத்தக்கது என்பது பற்றியும் குறட்பா 14 - உரையிலேயே குறிப்பிட்டுள்ளோம். உழவுக்கு இங்ஙனம் திருவள்ளுவரும் தமிழரும் தரும் தனியிடத்துக்குக் காரணம், அது ஒன்றே 'செல்வம் ஆக்கும்' பண்பு என்பதும், அது புறப்பண்பாக மட்டுமன்றி, அகப்பண்புகள் அளாவிய பண்பாகவும் இயல்

1. Economics 2. Radical Economics

கிறது என்பதுமே. உணவு தரும் உழவே உழவனுக்கு உணவைச் செரிமானமாக்கும் உழைப்பும், உழைப் பிடை ஓய்வும், ஓய்வினால் வாழ்வில் சுவையும் ஈடு பாடும் சிந்தனையும் தருகிறது. மற்றெந்த உழைப்பை யும் விட உழவு மனிதனுக்குப் பிற உயிர்களின் வாழ்வுகளுடனும், பிற மனிதரின் வாழ்வுகளுடனும் தொடர்பும் ஈடுபாடும் அக்கரையும் உண்டுபண்ணு கின்றது. மூன்றாவதாக உழவு வழி ஈட்டப்படும் செல்வம் ஒன்றே உண்மைச் செல்வம் — இனவரு வாய் — ஏனைய செல்வங்களில், புறச் செல்வங்களில் பெரும்பாலானவை அழிவுச் செல்வங்களாகவோ, போலிச் செல்வங்களாகவோ — இன ஆக்க ஆதாய மில்லாமலே வெறும் ஆள் மாற்று, இடமாற்று, கால மாற்றுச் செல்வங்களாகவோ மட்டும் அமைவன ஆகும்.

கல்வியும் கேள்வியும் பிற பண்புகளும் பணச் செல்வம் போலவே செல்வங்கள் — அவை அகச் செல்வங்கள் ஆகும். புறச் செல்வங்களில் மற்ற எல்லாச் செல்வமும் தரும் உழவு போல, அகச் செல் வங்களில் மற்ற எல்லாச் செல்வமும் தரும் அகச் செல்வம் மக்கட்பேறு ஆகும். மனையாட்சி என்னும் மழை முகிற் பண்படுத்துப் பயிர்ப் பண்பாக அது சிறப்பிக்கப்பட்டதன் காரணம் இதுவே.

செல்வங்களுள் அதாவது பொருள்களுள் இனத் தொடர்ச்சிக்கு உதவாப் பொருள்கள் உண்டானால், அவை புறப்புறப் பொருள்கள், செல்வங்களல்லாத பொருள்கள் மட்டுமே. தொடர்ச்சிக்கு உதவுவன புறச் செல்வங்கள்; வளர்ச்சிக்கு உதவுபவையே அகச் செல்வங்கள். தொடர்ச்சியிலும் இடையறவு ஏற்

படாது உயிர் காப்பவை உணவுப் பொருள் போன்றவை. போர்க்கருவிகளும் உயிரிழப்புத் தடுத்து உயிர் காப்பதால் (குறட்பா 76 - காண்க) இந்நிலை உடையவையே. உடையும் உறையுளும் தொடர்ச்சி காப்பவை ஆகும். தொடர்ச்சி இருந்தாலன்றி வளர்ச்சிக்கு இடமில்லையாதலால், தொடர்புக்கு உதவும் இப்புறப் பண்புகளே அடிப்படைச் செல்வங்கள் ஆகும். தற்கால மேலையுலகச் செல்வ இயல் இவற்றுக்கே சிறப்பிடம் தருவது இதனால் பொருத்தமுடையதேயாகும் என்னலாம். ஆனால் தனி மனித எல்லையும் தலைமுறை எல்லையும் கடந்த தொடர்ச்சிக்கு உதவுபவையும், தனி மனிதத் தலைமுறை வளர்ச்சிக்கு உதவுபவையும் கல்வி, கலை, இலக்கியம் முதலிய அகப்பண்புகளே. இவற்றையும் செல்வமாகக் கொண்ட தமிழரின், திருவள்ளுவரின் செல்வ இயல் இவ்வகையில் உண்மைச் செல்வ இயலே ஆகும் — அடிப்படைச் செல்வ இயல்[1] என்று நாம் இதனைக் கூறுவது இதனாலேயே. தவிர, தற்காலச் செல்வ இயல் தொடர்ச்சியில் கருத்து மிகுதி செலுத்தாது காப்பிலும், காப்பில் மிகுதி கருத்துச் செலுத்தாது அக்காப்புப் பிறழ்ந்த அழிவுப் போட்டி மதிப்பிலும் கவனம் செலுத்துகிறது என்பது வெளிப்படை. இதனாலேயே அது உண்மைச் செல்வ இயல் ஆகாமல் போலிச் செல்வ இயல்[2] ஆகிறது. அதையே செல்வமாகக் கொள்வதால், அது மெய்ந்நிலைச் செய்வ இயல்[3] ஆகாமல் பொய்ந்நிலை அல்லது வெற்றுக் கருத்தியல் நிலைச் செல்வ இயல்[4] ஆகிவிடுகிறது.

---

1. Radical Economics 2. Bogus Economics 3. Realistic Economy 4. Unrealistic, False or Formal Economy

திருவள்ளுவர் செல்வ இயல் ஒரு முழுத் தனி இயலன்று, அவர் வாழ்வியலின்[1] ஒருகூறு என்பதும்; அவர் வாழ்வியலும் அவர் இனவியலின்[2] ஒருகூறு என்பதும்; இவை யாவுமே அவர் முழு வாழ்க்கைக் கோட்பாடு[3], அவர் சமயம், அவர் கடவுட் கோட்பாடு ஆகியவற்றின் பகுதிகளே என்பதும் இங்கே குறிப் பிடத்தக்கன.

செல்வங்கள் யாவும் இடைத்தொடர்புடையன, யாவற்றுக்கும் அடிப்படையாவது தனி மனித வாழ் வும் குடும்ப சமுதாய வாழ்வுகளும் கடந்த இன வாழ்வின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமே ஆகும். வள்ளுவச் செல்வ இயல் இத்தொடர்புகள் காட்டும் தொடர்பியல் செல்வ இயல்[4] ஆகும்.

இம்முறையிலேயே திருவள்ளுவருக்கு மக்கட் பேறு அறவாழ்வின் பொருட் கூருகமட்டுமின்றி, கடவுள் உருவான ஆதிபகவனின் அறிவுருவின் வளர்ச்சி வளக் கூருகவும் இயல்கின்றது என்பது காண்டல் தகும்.

தனிக்குறிப்புகள்: (1) 'பெறுமவற்றுள்' என்பதற்குப் பரி மேலழகர் 'ஒருவன் பெறும் பேறுகளுள்' என்றும்; மணக் குடவர் 'ஒருவன் பெறும் பொருள்களுள்' என்றும்; காலிங்கர் 'பெறும் பேறு' என்றும் உரைத்தனர். '(ஒருவன்) அடை யும் ஊதியங்களுள்' என்று புலவர் ந. சி. கந்தையாவும்; 'பெறத் தகுந்த பேறுகளில்' என்று பேராசிரியர் முனைவர் மு. வரதராசனும்; 'அடையக் கூடிய செல்வங்களுள்' என்று முனைவர் பேராசிரியர் இலக்குவனும்; 'பெறவேண்டும் பொருள்களுக்குள்' எனக் கவிஞர் இராமலிங்கனும்

1. Sociology 2. Philosophy of life 3. Philosophy of Life and Nature 4. Relativist Economy

பொருள் கூறினர். புலவர் குழந்தை 'நாம் பெறும் பொருள் களுக்குள்' எனப் பொழிப்புரையில் கூறி, விளக்கவுரைப் பகுதியில் 'பேறு—அடையும் பயன்' என்றும் குறித்தனர்.

ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஆர், ட்ரூ அவர்கள் 'நலங்கள்'[1] என்று இதனைக் கொண்டார்.

மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் எப்படியோ 'பெறுமவற்றுள்' என்பதனை 'உளவாகும் புத்ரரில்' எனச்செய்யுட் பகுதியிலும், 'பிறக்கிற (பிறக்குந்ந) புத்ரன்மாரில்' என உரைநடைப் பகுதியிலும் கொண்டார். 'பெறுமவற்றுள்' என்பது பொதுவாகப் பிள்ளைகளை அல்லது பிள்ளைப்பேறுகளைக் குறித்தது' என்றும்; அறிவறிந்த மக்கட் பேறு அப்பிள்ளைகளுள் அல்லது பிள்ளைப் பேறுகளுள் சிறந் தது என்றும் இவர் கொண்டனர் ஆகலாம்.

மலையாள மொழிபெயர்ப்பாசிரியரின் இவ் உரைக் கருத்து மற்ற எல்லா உரையாசிரியர்களிடமிருந்தும், மொழி பெயர்ப்பாசிரியர்களுடமிருந்தும் வேறுபடுகிறது. 'பிறக்கிற பிள்ளைகளில் அறிய வேண்டியது அறிகிறவர் தவிர மற்ற எவரையும் ஆரும் மதிக்க மாட்டார்கள்' என்று பொழிப் புரையிலும்; 'தகாத பிள்ளைகள் பிள்ளைகளல்லர் என்பது சாரம்' என்று கருத்துரையிலும் அவர் கூறியுள்ளார்.

(2) 'அறிவறிந்த' என்பதற்குப் பரிமேலழகர் 'அறிய வேண்டுவன அறிவதற்குரிய' என்று பொழிப்புரைத்தார். அத்துடன் அவர் விளக்கவுரையில் 'அறிவதெனபது அறி தலைச் செய்வது என அத்தொழில் மேல் நின்றது. காரண மாகிய உரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தே விடுமாத லால், அத்துணிவு பற்றி அறிந்த, என இறந்த காலத்தால் கூறினர்' என்று சொல் விளக்கம் தந்தார். இங்கே இவ் வுரையாசிரியர் 'அறிவு' என்பதை அறிவாற்றல் திறம்[2] என்றும், 'அறிவறிந்த' என்பதனுல் அத்திறம் கொண்டு அறிய வேண்டுவனவற்றைக் கட்டாயமாக அறியக்கூடிய'

---

1. Benefits 2. Intellect or the Faculty of Understanding.

என்றும் பொருள் கொண்டார் என்பது தெளிவு. இவ் விளக்கம் இம்மணி விளக்கவுரை நோக்குதல் காணலம்.

அறிவறிந்த என்ற அடைமொழியால் பாற்பொதுவான 'மக்கள்' என்ற சொல் ஆண்பாலாகிவிட்டது என்பது பரிமேலழகர் குறிக்கோள். 'அறிவறிந்த' என்றதனால், மக்கள் என்னும் பெயர் பெண்ணொழிந்து நின்றது' என்பது அவர் விளக்கவுரைக் கூற்று.

கவிஞர் இராமலிங்கனாரும் 'அறிவறிந்த' என்பதற்கு 'அறிய வேண்டியவற்றை அறியக்கூடிய' என்றே பொழிப்புரைக்கிறார். ஆனால் பரிமேலழகர் விளக்க வுரையில் புகுத்திய ஆண்பாற் குளறுபடியை அவர் வன்மையாகக் கண்டிக்கிறார். 'அறிவறிந்த மக்கள் என்பது பெண் மக்களை நீக்கி ஆண் மக்களை மட்டும் தான் குறித்தது என்பது சரியல்ல. ஆண் மக்கள் தாம் அறிவறிந்த மக்கள் என்று வள்ளுவர் எண்ணியிருக்கவே முடியாது' என்பது அவர் கண்டிப்புரை.

'அறிவறிந்த' என்பதற்குப் 'பொன்னுமாய் மணமுமானாற்போல அறிவறிந்த கல்விச் செல்வமான' என்று பரிதியாரும்; 'அறிவினை முழுதும் அறிந்து நெறிக்குரியராகிய' என்று காலிங்கரும்; 'அறியவேண்டியவற்றை அறியவல்ல' என்று புலவர் ந. சி. கந்தையாவும்; 'அறிய வேண்டியவைகளை அறியும் (தன்மையுடைய)' என்று முனைவர் மு. வரதராசனும்; 'அறிய வேண்டியவற்றை அறிந்த' என்று பேராசிரியர் இலக்குவனாரும் பொழிப்புரைத்தனர்.

'அறிவுடைய' என்றே பொருள் கண்டனர், மணக்குடவரும் புலவர் குழந்தையும்! இதில் வள்ளுவப் பொருள் காணும் முயற்சியும் இல்லை, அப்பொருட் சிறப்பும் இல்லை.

(3) மக்கட்பேறு என்பதற்குப் பெரும்பாலான உரையாசிரியரும் மொழி பெயர்ப்பாசிரியர்களும் மக்களைப் பெறுவது என்றே உரைத்தமைந்தனர். பேராசிரியர் இலக்குவனார் ஒருவரே இம்மணி விளக்கவுரையின் திசை நோக்கி 'மக்கட் செல்வம்' என்று பொருளுரைத்துள்ளார்.

62. நல்ல புதல்வர் புதல்வியர்கள் சமுதாய முழுவதும் தீமை அகற்றிப் பண்புநல அலைகளைப் பரப்புவார்கள்

[1]எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்கா :
[1]பண்புடை மக்கட் பெறின்.

பொ - ரை : [1](ஒருவர்) இனவழிச் சிறப்புப் பண்புடைய புதல்வர் புதல்வியர் தமக்கு வந்து வாய்க்கப் பெறுவாராளுல், அவரது சமுதாயத்தில் அவரைச் சூழ்ந்த ஏழுகுடி வட்டாரங்களிலும் [2]தீய பண்புகள் அருகே தலைகாட்டமாட்டா: (அத்துடன்) வழி வழி வந்த இனத் தீமைகளும் உருப்பெற்று வளரமாட்டா (படிப்படியாகத் தேயத் தொடங்கிவிடும்).

க - ரை : நல்ல புதல்வர் புதல்வியர்கள் ஒரு குடும்பத்தில் பிறந்தாலே போதும்; சமுதாயத்தில் தீமைகள் அணுகாமல் காத்து, நலங்கள் பண்பலைகளாகச் சமுதாயம் எங்கும் பரவும்படி அவர்கள் செய்துவிடுவார்கள்.

இலக். கு: ஒரு சார்பு வாக்கியமும் இரண்டு முடிபு வாக்கியங்களும் உள்ளடங்கலாக, இக்குறட்பாவின் இணைவாசகம் ஒன்று. அவாய் நிலைச் சொல் ஒன்று உட்பட, இதன் சொற்கள் ஆறு ஆகும்.

அவையாவன :

(அ) சார்பு வாக்கியம் (இது இரு முடிபு வாக்கியங்களையும் தழுவி வந்தது) :

1. (ஒருவர்) (இது சார்பு வாக்கிய எழுவாய்)
2. பண்புடை மக்கட் பெறின் (இது சார்பு வாக்கியப் பயனிலை)

(ஆ) முதல் முடிபு வாக்கியம்:

1. தீயவை (இது முதல் முடிபு வாக்கிய எழுவாய்)
2. எழு பிறப்பும் தீண்டா (இது முதல் முடிபு வாக்கியப் பயனிலை)

(இ) இரண்டாவது முடிபு வாக்கியம்:

1. பழி (இது இரண்டாவது முடிபு வாக்கிய எழுவாய்)
2. (எழு பிறப்பும்) பிறங்கா [இது இரண்டாவது முடிபு வாக்கியப் பயனிலை].

இக்குறட்பாவில் முதலடியின் நான்கு சீர்களுமே எடுத்திசைப் பாகவும், இரண்டாம் அடியின் மூன்று சீர்களுமே படுத்திசைப் பாகவும் வந்தன. தவிர முதலடி முதல் கடைச்சீர்கள் மூவசை ஒத்திசைத்து எடுத்தும், மற்ற இரண்டும் முதலசை எடுத்தும் வந்தன. இரண்டாம் அடியிலும் இது போலவே, எல்லா அசைகளும் படுப்போசையில் ஒத்திசைந்தன என்பது காணலாம்.

ஒருவர் என்பது அவாய்நிலையாகக் கொள்ளப்பட்டு, 'பெறின்' என்று முடியும் தொகைநிலை வினை எச்சத்தைப் பயனிலையாகக் கொண்டு நின்றது.

பண்புடை மக்கட் பெறின் என்பது தொகைநிலை வினை எச்சமாய், 'ஒருவர்' என்ற தோன்றா எழுவாயின் பயனிலையாய் நின்று, வினை எச்சம் என்ற முறையில் 'தீண்டா', 'பிறங்கா' என முடியும் இரு முடிவு வாசகங்களின் வினைமுற்றுக்களும் கொண்டு முடிந்தது.

பெறின் என்ற காரணப் பொருள் வினையெச்சத்தில் பெறு பகுதி, இன் அவ்வினை எச்ச விகுதி. இவ்விகுதி இடைநிலை பெறுவதில்லை. விகுதி உயிர் முன் பகுதியீற்று உகரம் கெட்டது.

மக்கட் பெறின் என்பதில் மக்கள் என்பதன் பின் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து நின்றது. பெயரீற்று ளகரம் வேற்றுமைப் புணர்ச்சியில் வலிமுன் டகரமாயிற்று. மக்கள் பன்மைப் பெயர், மக அல்லது மகவு அதன் ஒருமை. (இதன் இலக்கணத்தை இவ்வதிகார முன்னுரையில் காண்க).

பண்புடை மக்கள் என்பதில் பண்புடை என்பது பண்பினை உடைய எனப் பொருள்படும் இரண்டாம் வேற்றுமைத் தொகை. உடை மக்கள் என்பது உடைமை என்ற பண்புடன் இணைந்த பண்புத் தொகை. உடைய என்ற பொருள் படுதலினால், பண்படியான குறிப்பு வினைத்தொகை என்றே இதனைக் கூறலாம்.

தீயவை என்பது தீமை என்ற பண்புப் பெயரடியான பலவின் பால் வினையாலணையும் பெயர். வை பலவின்பால் விகுதி. அதன்முன் வரும் அகரம் சாரியை. பண்பின் இறுதி 'மை' கெட உடம்படுமெய்யாய் யகரம் தோன்றிற்று. இது தீண்டா என முடியும் வினையைப் பயனிலையாகக் கொண்ட எழுவாய்ப் பெயர் ஆகும்.

எழு பிறப்பும் தீண்டா என்பது எழு பிறப்பினும் தீண்டமாட்டா என்ற பொருள்படும் ஏழாம் வேற்றுமைத் தொகை. எழு பிறப்பும் என்பதிலுள்ள உம்மை முற்றும்மை. எழு பிறப்பு என்பது எழு பிறப்பு என எண்ணுத் தொகை.

தீண்டா என்பது பலவின் பால் எதிர் மறை வினை முற்று. இதில் தீண்டுவினைப்பகுதி. ஆ எதிர்மறை இடை நிலை. 'அ' பலவின்பால் விகுதி. இடைநிலையின் பின் வரும் அகரமும், அதன் முன் வரும் பகுதி யிறுதியான உகரமும் கெட்டன.

பழி என்பது பெயர்ச்சொல். பின்வரும் 'பிறங்கா' என்ற பன்மை வினையுடன் முடிவதால், இது பன்மைப் பொருளுடையது ஆகும்.

பிறங்கா என்பது பலவின் பால் எதிர்மறை வினைமுற்று. இதில் பிறங்கு வினைப்பகுதி. ஆ எதிர்மறை இடைநிலை. அகரம் பலவின்பால் விகுதியாய் வந்து இடைநிலையின் பின் கெட்டது. பகுதியிறுதியான உகரமும் இடைநிலை முன் கெட்டது.

வி - ரை : அறவாழ்வின் மழைவளப் பயிர்ப்பண்பான மக்கட்பேறு முப்பால் வாழ்வுடனும் தொடர்புடையதாயினும், அறத்துப்பாலின் பொருள் வாழ்வுப் பாயிரம்

போன்ற இவ்வதிகாரத்தில் இக்குறட்பா உட்பட 61 - 63 குறட்பாக்கள் அதன் பொருள் வாழ்வுத் தொடர்பை விதந்தோதுகின்றன. அவ்வழி இக்குறட்பா சமுதாயத்தில் தீமை அணுகாமல் தடுத்து நலங்களின் பண்புகள் அலைபாய விடும் மக்கட் பேற்றின் சிறப்பை எடுத்துரைக்கின்றது.

பண்புடை மக்கள் பெறின் என்பது ஒருவர் இனவழிச் சிறப்புப் பண்புடைய புதல்வர் புதல்வியர் தமக்கு வந்து வாய்க்கப் பெறுவாரானால் என்று பொருள்படும்.

ஒருவர் என்ற தோன்றா எழுவாயும் மக்கள் என்பதும் இரண்டுமே இருபாற் பொதுப் பெயர்கள் ஆகும். ஏனெனில் பிள்ளைகளில் ஆணும் பெண்ணும் கலந்தே சமுதாயமாகவும் வாழ முடியும், இனம் வளர்க்கவும் முடியும். அது போலவே பெற்றோரின் இருபாலாரும் சேர்ந்தே குடும்பம் நடத்திப் பிள்ளைகள் வளர்க்க முடியும்.

மக்கள் பெறின் என்பதற்கு இலக்கணக் குறிப்புரையில் மக்களைப் பெறுவாரானால் என்று விரித்தே தொகை இலக்கணம் கூறப் பெற்றாலும், பெறுதல் இங்கே பிள்ளையைப் பெறுதல் மட்டும் குறித்த சொல்லன்று. ஏனெனில் பிள்ளையைப் பெறுதல் உண்மையில் தாய் தந்தையாகிய இருவரால் தனித்தனியாகவோ, கூட்டாகவோ கூட, ஆகும் செயலன்று. அது இருவழிப் பெற்றோர்களின் முன்னோர்களாகிய சமுதாய இனவழிகள் முழுமையும் ஈடுபட்ட இனச்செயலாகும். தவிர, பிள்ளைப் பெறுதல் என்பது பிள்ளை உடலைப் பெறுதல் மட்டுமே குறிக்கும். தாய் தந்தையரின் இருதிசை இனவழிக் கூட்டு வாழ்வின் பயனாகவே பிள்ளையின் உடலும் உளமும் பண்புகளும் தோன்ற முடியும். பிள்ளையின் வாழ்வு இவற்றின் வளம் — இவ்வளம் தாய் தந்தையர்கள் ஈன்று வளர்த்துப் பெறுவதை மட்டும் பொறுத்ததன்று. அது அவர்கள் வளர்ப்பையும், அவ்வளர்ப்புக்குரிய நிலைக்களமான குடும்பச்சூழல், சுற்றம், சமுதாயம், சமுதாய வாழ்வு ஆகியவற்றையும், இவற்றை ஊக்கும் இனவாழ்வு வளம், சமுதாய வாழ்வு வளம் ஆகியவற்றையும் பொறுத்ததாகும்.

மக்கட் பெறின் என்பது மக்களை, மக்களாக, அதாவது புதல்வர் புதல்வியர்கள் வருங்கால இனம் வளர்க்கத் தக்க முழு மனிதர்களாக வந்து வாய்க்கப் பெற்றால் என்று பொருள்படுவது இதனாலேயே யாகும்.

மக்கட் பெறின் என்று வாளா கூறாமல், பண்புடை மக்கட் பெறின் என்று இங்கே சிறப்பிக்கப்பட்டதன் தனிப் பொருளும், 'பெறின்' என்ற சொல்லின் தனிப் பொருளாலேயே பெறத்தக்கது ஆகும். இங்கே இலக்கண மரபில் உடைமைக்கு உரிய எழுவாய்ப் பொருள் மக்கள் என்பதும், உடைமைக்குரிய செயப்படு பொருண்மை பண்பு என்பதும் கருதத் தக்கன ஆகும்.

'பெறுதல்' என்ற சொல்லின் 'வாய்க்கப் பெறுதல்' என்ற அரும்பொருளை 'உடைமை'க்குரிய மேற்கண்ட செய்தி வற்புறுத்திக் காட்டுவதாகும். ஏனெனில் 'பெறுவது' 'மக்களை' அன்று, 'பண்புடை மக்களை'. மக்களையே தாய் தந்தையர் பெயரளவில் தான் பெற முடியும். அவர்கள் பண்புகளைக் கட்டாயமாகப் பெற முடியாது. அதை உடையவர்களாக மக்களை அவர்கள் பெறுவது இனவழிவரும் ஓர் அருவாய்ப்பாகவேயன்றி வேறு எவ்வழியிலும் கூடாததாகும்,

'பண்பு' என்ற தமிழ்ச்சொல் உலகின் வேறு எம் மொழியிலும் இல்லாத ஓர் அருந் தமிழ் இன உயிர்ச் சொல் ஆகும். இதன் முழுப் பொருளை நமக்குச் சுட்டிக் காட்டுபவையாகவே 'பெறுதல்' 'உடைமை' என்ற பிற சொற்கூறுகள் அமைந்துள்ளன. ஏனெனில் பண்பு என்ற தமிழ் - வள்ளுவச் சொல், உரையாசிரியர்களும் இடைக் கால இக்காலத்தவரும் கருதுவது போல, குணம், இயல்பு என்ற பொருள்களை உடையது அன்று (குறட்பா 45 உரை காண்க). குணம் இயற்கையில் ஒரு பொருளுக்கு உள்ள தனித்திறம். இயல்பு இயற்கையின் இயற்சூழலில் அத் தனித் திறத்துக்குரிய செயற்பாடு. ஆனால் பண்பு என்பதோ, தனித் திறத்தின் சூழமைவுச் செயற்பாடு மட்டுமன்று, அச்சூழமைவு, கால இடச் செயற்பாடுகள், கால இடச் சூழமைவுகள் ஆகியவை திட்டமிட்டுச் செயற்படுவ

திஞல் ஏற்படும் இயக்குதிறன் — சூழலை மாற்றியமைக்கும் திறன் — உயிர்த்திறன் ஆகும். இது ஒருவருக்கு, ஒரு குடும்பத்துக்கு, சமுதாயத்துக்கு அவ்வொருவராலோ, சமுதாயத்தாலோ தம் முயற்சியால் ஈட்டிப் பெறப்படுவதன்று — காலமாகிய நீள் மரபின் வளர்ச்சி வளமாக, தலை முறை கடந்த தலைமுறையாக இன முயற்சியால் வந்தெய்துவது ஆகும்.

பண்பு என்பது தனி உயிரின் தனிக்குணமோ தனியியல்போ அன்று. தனி உயிர் சமுதாயத்திலும், சமுதாயம் இனத்திலும், இனம் இயற்கையிலும் திட்டமிட்ட ஒரு குறிக்கோள் வழி நீடித்தியங்கும் இயக்க விளைவாக ஏற்படும் செயற்பாட்டு இயக்கு திறம் ஆகும். குணம் பொருளளவில் நிற்கும். இயல்பு சூழல் அளவில் நிற்கும். இரண்டும் காலம் இடம் நோக்கி மாறுபடாத திறங்கள் ஆகும். ஆஞல் பண்பு பொருளளவில் அல்லது தனி உயிரளவில் நில்லாது; சூழல் அளவிலும் நில்லாது; சூழலை இயக்கி, அது கால இடப்பரப் பெங்கும் இயக்கு திற அலைகளை எல்லையில்லாது அனுப்பிக் கொண்டே இருக்கும் திறம் ஆகும்.

பண்பு என்பது இனவழித்திறம், இனவழியாக உலகெங்கும் இயற்கையின் இடப்பரப்புக் கடந்து, காலப்பரப்புக் கடந்து எல்லையற்று வளர்ந்துகொண்டே, விரிந்துகொண்டே செல்லும் கடவுள் தன்மையுடைய இனத்திறம் ஆகும்.

மக்களை, பண்புடைய மக்களை, இவ்வாறு சமுதாய இனங்களுக்கு வழங்கும் நிலையிலுள்ளவர் இருவராகிய ஒருவர், அதாவது ஆண் பெண் பாலாராகிய பெற்ருேர். ஆயினும் அவர்கள் அப்புதல்வர் புதல்வியர்களைத் தம் உடலினின்று மட்டும் பெறுபவர் அல்லர், இனமும் முன்னைய சமுதாயங்களும் தம் முழுவாழ்வின் அலைவிளைவுகளாக அவர்களைப் பெற்றெடுத்துக் கொடுக்க, அதைத் தமக்கு வந்து வாய்க்கப் பெறும் தகுதி உடையவராக வாழ்ந்து, வளர்த்துப் பேணும் தகுதியுடையவராக வாழ்வு வளம் பெற்று, அதனைச் சமுதாய இனங்களுக்கு எல்லையற்ற பண்புகளாக, பண்பலைகளாக, கொடுப்பவர்களேயாவர்.

'உடைமை' மக்கள் மேல் ஏற்றப்பட்டு, 'பெறுதல்' வாய்க்கப்பெறுதல் என்ற பொருளில் ஒருவர் அதாவது இருவராகிய பெற்றோருக்கு ஏற்றப்பட்டுள்ளதன் வள்ளுவ வாய்மொழி வளம் இது.

குறட்பாவின் சார்பு வாக்கியமாகவும் காரண வாக்கிய மாகவும் அமைந்த இப்பகுதிக்கு எழுவாய் 'ஒருவர்'. ஆனால் முடிவு வாக்கியங்களின் எழுவாய் 'ஒருவர்' அன்று — 'தீயவை' 'பழி' என்பவையே எழுவாய்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும். 'ஒருவர்' வழங்குபவர். குடும்பத்துக்குரிய தலைவர், ஆனால் 'உண்மையில்' பெறு பவர் குடும்பத் தலைவரல்லர், குடும்பம் அன்று — சமுதாய இனங்கள். இவை வரும் முடிவு வாக்கிய விளக்கவுரையில் முழுதும் விரிக்கப்படும்.

தீயவை எழுபிறப்பும் தீண்டா, பழிபிறங்கா என்பது 'தீய பண்புகள் ஒருவர் சமுதாயத்தில் ஒருவரைச் சூழ்ந்த ஏழு குடி வட்டாரங்களிலும் அருகே தலைகாட்டமாட்டா; அத்துடன் வழி வழி வந்த இனத் தீமைகளும் உருப்பெற்று வளரமாட்டா' என்று பொருள்படும்.

தீயவை என்பது தீய பண்புகள், இனத்துக்குத் தீமை உண்டு பண்ணத்தக்க பண்புகள். இவை இனத்துக்குப் புறம் பாக இயற்கைச் சூழலில் உள்ள ஆற்றல்கள் காரணமான புறத்தீமைகள் என்றும்; இனத்தின் வளர்ச்சியிலேயே வளர்ச் சியோடு உடனுகை ஏற்படும் தளர்ச்சிகள், வளர்ச்சிக் கேடுகள் ஆகிய அகத் தீமைகள் என்றும் இருவகைப்படும். இயற்கை ஆற்றல்கள் சிறு பொழுது பெரும் பொழுது ஆகிய பருவ மாறுதல்கள், பெரும் பெரும் பொழுது ஆகிய ஊழி மாறு தல்கள், உயிரினத்தின் பருவ மாறுதல்கள், தன்மை மாறுதல் கள், இட மாறுதல்கள் ஆகியவற்றால் ஏற்படுபவை. இவை ஊழிவயப்பட்டவையாதலால், தாமாக மாறுவதல்லாது மாற்றியமைக்கப்பெறமாட்டா. அவற்றுக்கு இசைய இனம் மாறி அமைதலாலேயே அத்தீமைகள் அகலும் அல்லது தணியும். நன்மக்கள் இனத்தை இயற்கையோடொட்டிய ஆக்கவள வழியில் செலுத்துவதனால், இவை அணுகமாட்டா

தவை ஆகும். இது போலவே அகத்தீமைகளும் நன் மக்களால் புறச் சூழலுக் கியைய மாற்றப்படுபவையாதலால், அவையும் தீண்டா என்று கூறப்பட்டன.

தீண்டா என்பது தொடமாட்டா, அணுகமாட்டா என்று பொருள்படும். வன்பாலையில் விழும் நீர்த்துளிகள் விழு முன்பே வளி வெப்பத்தால் ஆவியாகி விழாது மறைவதுபோல, தீய பண்புகள் தீய பண்புகளாக அணுகும் போதே அவை நன் மக்களின் திட்டமிட்ட அறவாழ்வால் நற்பண்புகளாக மாறுபட்டு விடுவதனுல், தீயவை தீண்டா அல்லது தீயவையாக அணுகமாட்டா என்பது பொருந்துவதாயிற்று.

எழு பிறப்பும் என்பது பிறப்புக் காரணமாக மக்கள் வாழ்வைச் சூழச் சமுதாயத்தில் உண்டாகும் ஏழுபடிகளான உறவு முறை வகுப்புக்களைக் குறிக்கும். இவையே எழுகுடி வட்டாரங்கள் ஆகும். அவை தன்னையும் தன் மனைவி மக்களையும்; தன் தாய் தந்தையரையும் தன் மனைவியின் தாய் தந்தையரையும்; தன் உடன் பிறந்தாரையும், தன் மனைவியின் உடன் பிறந்தாரையும்; தன் உடன் பிறந்தார் மக்களையும்; தன் தாயின் உடன் பிறந்தாரையும், தாய் உடன் பிறந்தாரின் மக்களையும்; பிற உறவினரையும் படிப் படியான உறவு அலைகளாகக் குறித்துச் சமுதாய முழுவதையுமே உளப்படுத்துவன ஆகும்.

ஒரு குடும்பத் தலைவருக்கு நன் மக்கள் வந்து வாய்த்தாலே அக்குடும்பத்தைச் சூழ ஏழு அலைகளாகச் சமுதாய முழுதும் தீமை அணுகா நிலை ஏற்பட்டுவிடும் என்ற வள்ளுவர் கருத்தை இங்கே காணலாம். நன் மக்கள் பிறக்கும் குடும்பச் சூழலே சூழ் குடும்பங்களிலும் நன் மக்கள் வாய்ப்பைப் பெருக்குமாதலால், இந் நன்மக்களால் ஏற்படும் தீமைத் தடுப்பு அலைகள் ஒவ்வொரு குடும்பத்தினையும் மையமாகக் கொண்டு சமுதாய முழுவதும் வலைகளின் இழைகள் போல உள்ளும் புறமுமாக எதிர் எதிர் சென்று பரவிப் படர்கின்றன. ஒரு குடும்பத்தின் நல்வாழ்வுப் பேறுகிய நன் மக்கட் பேறே இவ்வாறு சமுதாய முழுவதும் பொங்கல்

காப்பு வளம் பரப்புகிறது என்ற கருத்தை இக்குறட்பாவில் முதல் காரண வாசகம் குறிப்புப் பொருளாகச் சுட்டிக் காட்டிவிடுகிறது. ஏனெனில் இவ்வாசகம் குடும்பத் தலைவனை எழுவாயாகக் கொண்டு, பின் வரும் முடிவு வாசகங்கள் குடும்பத்தலைவனை எழுவாயாகக் கொள்ளாமல், 'தீயவை' 'பழி' ஆகியவற்றை எழுவாயாகக் கொண்டு அமைந்துள் ளன. குடும்பத்தின் செயலாலே, குடும்பம் காரணமாக, காரிய விளைவு சமுதாய முழுதும் பரவுகிறது என்ற கருத்து இவ்வாறு சொல்லாலும் குறிப்பாலும் விளங்க வைக்கப் பட்டுள்ளது.

'எழு பிறப்பும்' என்ற தொகைக்கூறு, 'தீயவை தீண்டா' என்ற முதல் முடிவு வாசகத்துடன் மட்டுமன்றி, 'பழி பிறங்கா' என்ற இரண்டாவது முடிவு வாசகத்துடனும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியது ஆகும்.

பழி என்பது இன விளைவுடைய தீமை.

முன் தீயவை எனப்பட்டது முன்னை இன வாழ்வுக் காரணமாகச் சமுதாயத்துக்குக் காரியமாக வந்து விளையும் தீமை. நன் மக்கட் பேற்றின் அருமைப்பாட்டால் இவை தீண்டா எனப்பட்டது. ஆனால் சமுதாயத்தில் இப்படி தீமைகளின் எச்சத்தாலோ, அல்லது புதுத் தீமைப் பயிர் தோன்றியோ, இனத்தில் வளரக்கூடும். பழி என்பது இவ் வாறு சமுதாய நிலத்திலிருந்து இனவாழ்வு நோக்கிப் படரத் தகும் தீமையே ஆகும்.

பிறங்கா என்பது உருப்பெற்று வளரமாட்டா என்பதாம்.

உருப்பெற்று வளரமாட்டா எனவே, படிப்படியாகத் தேய்ந்து மறைதலுறும் என்னும் பொருள் சுட்டப்பட்டது.

பழி பிறங்கா எனவே, பண்பு பிறங்கும் என்பது பெறப்பட்டது. பிறங்குதல் உருப்பெற்று வளர்தல், ஒளியலை வீசுதல் ஆகும்.

எனவே நன்மக்கட் பேறே சமுதாயத்தில் நற்புண்புகளை இன நோக்கி அலைபாயவிடும் என்பது சுட்டப்பட்டது.

முன்னைய இனவாழ்வின் பயனாகச் சமுதாய நிலத்தில் வந்தமைந்தோ, அல்லது சமுதாய வாழ்வில் புதியதாக எழுந்தோ அமைந்த தீமை விதைகள் கூடச் சமுதாயத்தில் ஊன்றி வருங்கால இனவாழ்வில் வளர்ந்து விடாமல், ஒரு குடும்பத்தின் நன் மக்கட்பேறே தவிர்த்துவிடும் என்பது இத் தொடரின் கருத்து.

முதல் முடிவு வாசகத்தில் கூறப்பட்ட எழுவாய் மாறுதலின் பொருள் வளம் இங்கும் பொருந்தும்.

எழு பிறப்பும் என்ற தொகையை இவ்விரண்டாம் முடிவு வாசகத்துக்கும் ஒட்டுக.

இவ்வாறு காரண வாக்கியத்தால் குடும்ப வாழ்வில் மக்கட் பேற்றின் அருமைப்பாடும் அதன் விளைவின் பெருமையும் விளக்கப்பட்டு, அடுத்த இரண்டு முடிவு வாக்கியங்களால், அச்சிற்றெல்லையின் அருவாய்ப்புப் பேறு காரணமாக, சமுதாய எல்லையிலும் இன எல்லையிலும் ஏற்படும் பெரு நலன் சிறப்பிக்கப்படுகிறது.

முதல் முடிவு வாக்கியத்தில், முந்திய இன வாழ்விலிருந்து சமுதாய வாழ்வுக்குப் பழந் தீமைகள் அணுகாமல் மக்கட்பேறு நலம் தடுத்து, தீமை துடைத்து, நலம் பரப்பி விடும் என்பது கூறப்பட்டது.

இரண்டாம் முடிவு வாக்கியத்தில் அம் மக்கட் பேறே சமுதாய வாழ்வில் புதுத் தீமைகள் தோன்றிப் பின்வரும் இன வாழ்வில் பெருக்கமடையாமல் தீமை வளர்ச்சி தவிர்த்து நன்மை வளர்ச்சி ஊக்கி விடும் என்பது குறிக்கப்பட்டது.

குடும்ப சமுதாய இனங்களின் தொடர்புகளையும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்காலத் தொடர்புகளையும் ஒருங்கு சுட்டிய இக்குறட்பாவின் பொருள் வளமும் அழகும் கூர்ந்தினிது நோக்கி இன்புறத்தக்கவையாகும்.

சிறப்புரை: இன நலனைக் குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும், குடும்ப நலனைச் சமுதாயத்துக்கும் இனத்

துக்கும் கொண்டு சென்று, இம் மூன்றன் முக்காலத் தீமைகளையும் தடுத்தாள வல்ல ஆற்றல் வாய்ந்த செல்வம் மக்கட் பேறு.

இன நலத்தின் பெருமையனைத்தையும் பெண்மை கற்புப் பண்பின் வடிவாக இனத்துக்கும் சமுதாயத்துக்கும் தருகிறதென்றால், குடும்ப சமுதாயங்களின் பெருமை யனைத்தையும் மக்கட்பேறே புது வளமாக இனத்துக்கு அளிக்கிறது என்னல் தகும்.

இவ்வாறாக, இனச் செல்வம் கற்பு; குடும்ப சமுதாயச் செல்வம் நன் மக்கட்பேறு என்பது இக்குறட்பாவால் வலியுறுத்தப்பட்டது.

பொருள்வளம்: (1) இக்குறட்பா எல்லா உரைப் பதிப்புக்களிலும் கீழ் வருமாறுதான் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

> எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழி பிறங்காப்
> பண்புடை மக்கட் பெறின்

முதலடி இறுதியில் இடப்பட்டுள்ள பகர ஒற்று ஒன்றுமட்டுமே இங்கே மணிவிளக்கவுரை மேற்கொண்ட பதிப்பு முறையிலிருந்து மாறுபட்டுக்காண்கிறது. பொருள் இயைபு ஒன்று நோக்கியே இம்மணி விளக்கவுரையில் இந்த ஒற்று நீக்கிய வடிவில் குறட்பா மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பழமை உரைப்பதிப்பின்படி, குறட்பாவில் 'பழி பிறங்காப் பண்புடை மக்கட் பெறின்' என்பது சார்பு வாக்கியமாகவும், 'எழு பிறப்பும் தீயவை தீண்டா' என்ற ஒன்றே முடிவு வாக்கியமாகவும் அமைகிறது. 'பழி பிறங்கா' என்பது இம்மணி விளக்கவுரையில் இரண்டாவது முடிவு வாக்கியமாய்

அமைந்தபடி அமையாமல், சார்பு வாக்கியத்துடன் சேர்ந்து அதில் வரும் பண்புடை மக்கள் என்ற பெயர்த் தொகைநிலைக்கு அடைமொழியாய் அமைகின்றது.

உரையாசிரியர்கள் தம் பதிப்பின்படி கொண்ட பொருள்கள் கீழே தனிக் குறிப்புப் பகுதியில் தரப்படுகின்றன. ஆனால் இப்பதிப்பு ஒன்றே இன்று நமக்கு கிட்டிய பாடமாதலால், இம்மணி விளக்கவுரையில் இப்பாடத்துக் குரிய பொருளும் தனியாகத் தரப்படுகிறது.

உரைப்பாடத்தின்படி, 'பழிபிறங்காப் பண்புடை கட்பெறின்' என்பது 'ஒருவர் புறத்தே நின்று தீய ஆற்றல்கள் வந்தாலும், அவை பற்றுமலும் வளராமலும் தேய வைக்கும் தன்மை வாய்ந்த இனவழிப் பண்புடைய நல்ல புதல்வர் புதல்வியர்கள் தமக்கு வந்து வாய்க்கப் பெற்றால்' என்ற பொருளுடையதாகும்.

இங்கே 'பண்புடை மக்கள்' என்றவிடத்தில் வரும் பண்பு இனவழியாகப் புதல்வர் புதல்வியர்க்கு வந்தடையும் நற்பண்புகளைக் குறிக்கும். 'பழி பிறங்கா' என்பதில் வரும் 'பழி' இந்த இனவழிக்குப் புறம்பாக, சமுதாயத்திலிருந்து பழக்கக் கோளாற்றால் பிள்ளைகளுக்கு வரக் கூடும் தீய பண்பு என்று பொருள்படும். 'பிறங்கா' என்பதில் பிறங்குதல் புறநின்று வந்து ஒட்டி விளக்க முறுதல் ஆகும். எனவே 'பிறங்கா' தீமை புறநின்று வந்து ஒட்டி வளராத அதாவது புறநின்று வந்தாலும் ஒட்டாத, ஒட்டினும் வளராது தேய்வுறுகிற என்ற பொருள் தருகிறது.

உரைப் பதிப்பை ஒத்துக்கொண்டு இம்மணி விளக்க உரை தரும் இரண்டாந் தரப்பொருள் வளமே இது. விளக்கவுரையில் கண்ட இம்மணி விளக்க வுரைப் பதிப்பும் அதன் உரைப்பொருளுமே சிறந்தன என்பதை இவற்றின் ஒப்பீட்டால் காணலாம்.

இம்மணி விளக்க உரையில் இவ்வாறு தனிப் பாடம் கொண்டு ஒரு பொருளும், உரைப்பாடத்திற்கு ஒரு பொருளுமாக இரண்டு உரை வகுப்புக்கள் தரப் பட்ட போதிலும், இரண்டுமே பிற உரையாசிரியர் களின் பொருளிலும் மேம்படுவதனைக் காணலாம். ஏனெனில் தீயவை, பழி ஆகிய இரண்டன் பொருளும் இவ்வுரையிலேயே வேறு படுத்திக் காட்டப்பட்டுள் ளன. இரண்டும் ஒரே பொருளானால் 'தீயவை இல்லா மக்கட் பெற்றால், தீயவை தீண்டா' என்று கூறுவதில் பொருட் சிறப்பு இல்லை என்பது காண லாம். பழி என்பதைத் தீமை என்று கூறாமல் சற்று வேறுபடுத்திக் குற்றம், குறை என்பது போன்ற பொருள் கூறினும் வாசகப் பொருளின் சிறப்பின் மையில் மாற்றம் பெரிது காணப்படமாட்டாது.

(2) திருவள்ளுவர் எழுபிறப்பை வேறாகவும் எழு மையை வேறாகவும் ஒரே குறட்பாவில் (107) கூறுவது காணலாம். எனவே இவை இரண்டும் ஒன்றல்ல என்பது தெளிவு. எழுமை இனம் சார்ந்தது, இன வாழ்வின் கால நீட்சிக்குரியது. ஏனெனில் அது ஏழு தலைமுறைகளைக் குறிப்பது. ஒவ்வொரு தலைமுறை யும் சிற்றலையாக, அலையின் அலைவாக, ஏழு தலை முறைகள் ஒரு பேரலையாக, முழு அலையாக இங்கே கருதப்பட்டுள்ளது என்னலாம். எழு பிறப்பு என் பதும் அலையே, ஆனால் எழுமை போல இனம் சார்ந்த

தன்று, கால நீட்சிக்குரியதன்று. அது சமுதாயப் பரப்புச் சார்ந்தது. மேலே விளக்க உரையில் குறிப் பிட்டபடி அது சமுதாயத்தில் தனி மனிதர் அல்லது குடும்ப உறுப்பினரை மையமாகக் கொண்டு, 'குடும்பம்', 'பெருங் குடும்பம்', பெரும் பெருங் குடும்ப மான சமுதாயம் என, குடும்பத்திலிருந்து உள்வட்டம், புறவட்டம், புறப்புறவட்டமாக ஏழு சுற்றுப் பரப் பலைகளை, சமுதாய எல்லையளாவப் பரந்து பரவிச் செல்லும் ஏழு வட்டாகாரமான அலைகளான எழுகுடி வட்டாரங்களைக் குறிப்பது ஆகும்.

எழுமை, எழு பிறப்பு ஆகிய இரண்டிலுமே எழு என்ற சொல் ஏழு என்ற எண்ணுப் பெயரை மட்டு மன்றி, எழுதல், எழுச்சி என்ற வினைப் பொருளையும் தமிழில் சுட்டுவது காணலாம். இரண்டுமே அலை எழுச்சியை முதலில் குறித்து, அடுக்கடுக்காக ஒன்றை ஒன்று தழுவிச்செல்லும் சிற்றலைக் கூறுகள் ஏழு அடங்கிய முழு அலையைச் சுட்டுபவை ஆகும். எழுமை இவ்வகையில் எல்லையற்ற இனவாழ்வின் காலப் பிரிவான அல்லது எல்லையற்ற சமுதாய வாழ்வின் பரப்பில் ஒரு கூறான முழு அலைவீச்சைக் குறிக்கின்றது.

எழு பிறப்பு என்பதும் எழுமை என்பதும் திரு வள்ளுவர் காலத்திலிருந்து இன்று வரை தமிழர் வாழ் வில் பயின்று வரும் சொற்களாகும். உலகளாவ மக் கள் வழக்கில் பரவி இது எல்லா நாடுகளிலும் சட்டத் துறை வழக்காகவும் இயல்கின்றது. ஆனால் இது முற்றிலும் அழகு வழக்கு மட்டுமன்று. உயிர்நூல், உடல்நூல் மெய்ம்மைகளுடன் இது நெருங்கிய தொடர்புடையது: அத்தொடர்புகள் சுட்டவே,

இச்சொல் திருவள்ளுவரால் எடுத்தாளப்பட்டுள்ளது என்னலாம். எழுமை, எழுபிறப்பு ஆகியவை பற்றிய உயிர்நூல், உடல்நூல் மெய்ம்மைகள் பின்வரும் (107-ம்) குறட்பா உரையில் கூறப்பட இருக்கின்றன. அவற்றை ஆண்டுக் கண்டுகொள்க.

இக்குறட்பா அதிகாரத்தின் பொருள் வாழ்வு அல்லது சமுதாய வாழ்வுத் தொடர்பு குறித்த பகுதி சார்ந்ததாதலாலேயே, இங்கே இன அலையான எழுமை சுட்டப்படாமல், சமுதாய அலையான எழு பிறப்பு மட்டுமே சுட்டப்படுகிறது என்பது குறிப் பிடத்தக்கது ஆகும்.

(3) இக்குறட்பாவில் 'பண்புடை மக்கட் பெறின்' என்ற இரண்டாம் அடியின் சீர்கள் அனைத் தும் படுத்திசைத்தும் ஒத்திசைத்தும் வந்தன. பண் புடைய மக்கட் பேறு என்பது சிறிய எல்லையாகிய குடும்பத்துக்குக் கிடைத்த பேறுயினும் அது அரும் பேறு, குடும்ப வாழ்வுக்கு நிறைவு வழங்கும் பேறு என்பதை இவ்வடங்கிய படுத்திசைப்பும் சரிநிறை, வாகிய ஒத்திசைப்புமே சுட்டிக் காட்டின. இது போலவே முதலடியில் எழு பிறப்பும் என்ற முதற் சீர் எடுத்திசைத்தும் அசை ஒத்திசைத்தும்; தீயவை, தீண்டா என்ற இரு சீர்களும் முதலசை எடுத்திசைத் தும் வந்தன. சிற்றெல்லையான குடும்பத்தின் பேறு பேரெல்லையாகிய சமுதாயத்தின் ஏழு வட்டார அலை களிலும் தீயவை அணுக முடியாதவாறு தடுக்கும் பெரு விளைவை உடையது என்பதை இது ஓசையா லேயே வலியுறுத்திக் காட்டுகிறது. பழி பிறங்கா என் பதும் நெடுநீள் சீராய் எடுத்திசைத்தும் ஒத்திசைத்

தும் வந்தது. இது சிறு குடும்ப எல்லையில் சிறு கால எல்லையாகிய ஒரு தலைமுறையின் அரும்பேருன மக்கட் பேறு தீயவை பழியாக என்றென்றும் வளரமுடியாமல் தடுத்து நிறுத்தும் நிலையான காலப் பேரெல்லை யாற்றல் உடையது என்பது சுட்டிற்று.

தீயவை தீண்டா, பழிபிறங்கா என்றமையால், நல்லவை எளிதில் வந்தடையும், நற்பண்புகள் பிறங்கும் என்பது குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டது. பிறங்குதல் உருவாகி விளக்கமுற வளர்தலாதலால், நற்பண்புகள் உருவாகிப் பரவி விளக்குமுறுவது குறிக் கப்பட்டது.

தனிக்குறிப்புகள்: (1) எழு பிறப்பும் என்பதற்குப் பரி மேலழகர் 'வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பு ஏழின் கண்ணும்' என்று பொழிப்புரை தந்தார். 'பிறப்பு' ஏழாவன :

> '' ஊர்வ பதினென்றும்; ஒன்பது மானுடம்;
> நீர் பறவை நாற்காலோர் பப்பத்து — சீரிய
> பந்தமாம் தேவர் பதினுலு; அயன் படைத்த
> அந்தமில் சீர்த் தாவரம் நாலைந்து ''

என்ற விளக்க உரையும் மேற்கோளும் தந்தனர். இதன்படி எழுபிறப்பு என்பது தேவர், மனிதர், நாற்காலுயிர், நீர் வாழ்வன, பறவைகள், ஊர்வன, தாவரம் என்ற எழுவகைப் பிறப்பு வேறுபாடுகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவையும் முறையே 14, 9, 10, 10, 10, 14, 20 என்ற நூருயிர எண் ணளவுடைய எண்பத்து நான்கு நூருயிரம் யோனி பேதங் களென முன்னூல்களில் வகுத்துரைக்கப்பட்டுள்ளன.

பரிதியாரும் இதே ஏழுவகை யோனி பேதமே பொரு ளாகக் கூறினுலும், 'எழுபிறப்பிற் சென்ருலும்; ஏழு நரகத்தில் சென்ருலும்' என்று பொருளை விரித்துக் கூறினர்.

மணக்குடவர் உயிரின் மறு பிறப்புக் கோட்பாட்டை உட்கொண்டு, 'எழு பிறப்பிலும்' என்றார். 'ஒரு பிறப்பில் நற்புதல்வரைப் பெறுவராயினும் எழு பிறப்பிலும் துன்பங்கள் வாரா' என்ற அவரது பொருள் தொகுப்பில் இம்மணி விளக்க உரை கண்ட குறட்பாவின் பொருண்மை இடம் பெறுவிட்டாலும், அதன் அழகு நயம் இடம் பெற்றுள்ளது காணலாம்.

பேராசிரியர் மு. வரதராசனாரும் 'ஏழு பிறவியிலும்' என்ற தம் உரையில் இதுவே கருதியுள்ளார். பேராசிரியர் இலக்குவனார் 'பிறப்பின் ஏழு பருவங்களிலும்' என்றார். குழந்தைமை, சிறுபோது, இளமை, கட்டிளமை, பேரிளமை, பெரும் பேரிளமை, முதுமை என்ற வயதுப் பருவங்களையே அவர் எண்ணினாராதல் கூடும்! ஆனால் இப்பொருளின் பொருத்தம் விளங்கவில்லை.

கவிஞர் இராமலிங்கனார் மறு பிறப்பே குறித்து 'ஏழு பிறவிகள்வரையிலும்' என்று பொருளுரைத்தார். அத்துடன் அவர், 'பண்புடைய மக்களைப் பெற்றால் இனிமேல் வரக் கூடிய ஏழு பிறவிகளிலும் நமக்குத் துன்பம் வராது என்பது மெய்யானாலும், அப்படிப்பட்ட நன் மக்களை இந்தப் பிறவியில் அடைவதற்கும் நாம் முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயன் இருக்க வேண்டும்... ஆதலால் நம்முடைய தர்ம ஒழுக்கங்களைத்தான் நாம் கவனிக்க வேண்டும்' என்று கூறி வட்டாகார வேதாந்தச் சிந்தனையில் இறங்கியுள்ளார்.

கவிஞர் இங்ஙனம் ஒருபுறம் வேதாந்தத்தில் தாராளமாக இறங்கினாலும், மறுபுறம் பகுத்தறிவிலும் ஒரு கண்ணோட்டம் செய்ய விரும்பியுள்ளார். 'ஏழு பிறப்பு என்பதற்கு ஏழு தலைமுறை என்று மட்டும் கொள்வது எழு வகைப் பிறவிகள் என்பதைக் காட்டிலும் நல்லது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

'ஏழு தலைமுறையிலும்' என்றே பகுத்தறிவுரை தந்தார். புலவர் குழந்தை.

ஏழு தலைமுறை கூட இனச் சார்பானதால் இக்குறட் பாவுக்குப் பொருந்தாது என்பதும், சமுதாயத்தின் ஏழு உறவுப்படி வட்டார அலைகளே இங்கு குறிக்கப்பட்டன என்பதும் இம் மணி விளக்கவுரையில் விரிக்கப்பட்டுள்ளது காணலாம்.

(2) இம்மணிவிளக்கவுரை பழி பிறங்கா என்பதை வினைமுற்றுத் தொடராகக் கொண்டு தீயவை தீண்டா என் பதனுடன் ஒப்பக் குறட்பாவின் முடிபு வாக்கியமாக்கிப் பொருள் கூறியுள்ளதைக் காணலாம். ஆயினும் உரையாசிரியர் கொண்ட பாடப்படி அதைப் பண்புடை மக்கள் என் பதற்கு அடையாகக் கொண்ட போதும், அதன் பொருள் 'புறத்தே நின்று தீய ஆற்றல்கள் வந்தாலும் அவை பற்றாமலும் வளராமலும் தடுத்துத் தேயவைக்கும் தன்மை வாய்ந்த இனவழிப் பண்புடைய புதல்வர் புதல்வியரை ஒருவர் தமக்கு வந்து வாய்க்கப்பெற்றால்' என்றே இம்மணி விளக்கவுரையில் கொள்ளப்படத்தகும்—இவ்வுரைக் கருத்து விரிவை பொருள் வளப்பகுதி 1-ல் காணலாம்.

'பழிபிறங்காப் பண்புடை மக்கட்பெறின்' என்பதற்குப் பரிமேலழகர், 'பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களை யுடைய புதல்வரைப் பெறுவானாயின்' என்று பொழிப் புரைத்தார். அத்துடன் 'அவன் தீவினை வளராது தேய் தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவானாயின் என்றவாறாயிற்று' என விளக்க வுரையும் வகுத்தார். 'பழி பாவத்துக்கு அசையாத குண முடைய புதல்வர்களை' என்று கவிஞர் இராமலிங்கனாரும், 'குற்றமற்ற நன்மக்களை' என்று புலவர் குழந்தையும் உரை வகுத்துள்ளனர்.

(3) 'தீயவை தீண்டா' என்பதற்குப் பரிமேலழகர் 'துன்பங்கள் சென்றடையா' என்று உரை செய்தார். 'தீ வினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேரா' என விரித்தனர், பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார். 'தீமைகள் சேரா' என்றார் புலவர் குழந்தை.

'ஏழு பிறப்புக்களாகத் தீவினைகள் அவனைப் பாதிக்க மாட்டா' (ஸாத் ஜன்மோந் தக் குகர்ம உஸே பாதித் ந கரேங்கே) என்று இந்தி மொழிப் பெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கர ராஜு நாயுடுவும்; 'இந்த ஜென்மத்தில் மட்டு மன்று, ஏழு ஜன்மங்களிலும் துக்கத்துக்கு ஏதுவில்லை' (ஈ ஜன்மத்திலெந் நல்ல, ஏழு ஜன்மத்தேக்கும் துஃக்கத்தினு ஸங்கதியில்ல) என்று மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளமும் பொருள் கண்டுள்ளனர்.

63. ஒருவர் முயன்று ஈட்டிச் சமுதாயத்துக்கு வழங்கத்தக்க
சிறந்த செல்வம் புதல்வர் புதல்வியர்களே :
அப் புதல்வர் புதல்வியர்கள் முயன்று ஈட்டி
இனத்துக்கு வழங்கத்தக்க சிறந்த செல்வம்,
அப்புதல்வர் புதல்வியர்களின் இன வளம் பெருக்கும்
இன முயற்சியே யாகும்.

[1]தம் பொருள் [3]என்ப [2]தம் மக்கள்: அவர் பொருள்
தந்தம் வினையான் வரும்.

பொ - ரை: [இன மேலோர் ஆவோர்], [ஒருவருக்குத்] தம் இனவாழ்வின் பயனாகவும், குடும்ப வாழ்வின் நிறைவாகவும் வந்து கிட்டிய மெய்யான செல்வமாவது அவர்தம் புதல்வர் புதல்வியர்களே என்றும்; (அதே சமயம்) புதல்வர் புதல்வியர்களாகிய அவர்களின் சமுதாய வாழ்வின் பயனை வருங்கால இனச் செல்வம், அப் புதல்வர் புதல்வியர் ஒவ்வொருவருக்குமுரிய இனச் செயல்களின் பயன் வளமாக வந்தமைவதேயாகும் என்றும் ஆய்ந்துணர்ந்து கூறுகின்றனர்.

க - ரை : குடும்பம், சமுதாயம் ஆகியவற்றின் உண்மையான செல்வமாவது, இனப்பண்பு வாய்ந்த புதல்வர் புதல்வியர்களே. குடும்ப சமுதாயச் செல்வங்களாகிய அப்புதல்வர் புதல்வியர்கள் ஈட்டும் உண்மைச் செல்வமாவது, சமுதாய வாழ்வில் அவர்கள் இன முயற்சியால் விளையும் சமுதாயப் புதுச் செல்வமாகிய இன வளமேயாகும்.

இலக். கு : இக்குறட்பாவின் வாசகம் ஒன்றே ஆனால் அது இரண்டு கூற்று வாக்கியங்களை உட்கிடை உள்ளுறுப்பாகக் கொண்ட ஒரு முழு வாசகம் ஆகும். அவாய் நிலையான சொல் ஒன்று உட்பட, இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன :

முழுவாசகம் : 1. [இனமேலோர்] [இது தோன்றா எழுவாய்].

2. "தம் பொருள் தம் மக்கள், அவர் பொருள் தந்தம் வினையான் வரும்" என்ப [இது பயனிலை].

உட்கிடை உள்ளுறுப்புக்களாவன [இவை பயனிலையாய் வரும் நீள் தொகை நிலையின் கூறுகளான தொகைகள்]:

(அ) தம் பொருள் தம் மக்கள்.

(ஆ) அவர் பொருள் தந்தம் வினையான் வரும்.

இக் குறட்பாவில் 'தம் பொருள்' 'மக்கள்' 'அவர் பொருள்' என்ற மூன்று சீர்களே முதலசை எடுத்திசைத்தன. இறுதி இரண்டு சீர்கள் நலிந்தும் மீந்த எல்லாம் படுத்தும் வந்தன. இச்சம இசைப்பு நிலை இக் குறட்பாவுக்கு மோனை எதுகையில்லாமலே அழகிய சந்தமும் பொருளியையும் தந்தது. 'என்ப தம்' என்பது ஒரு சீராய், கூவிளம் போல நின்றாலும், பகரத்தின் பின் முறிவுற்று, என்பர்தம் என்பது போலத் தேமாங்காய்ச் சுவைபட நின்றதும் காணலாம்.

இவற்றின் பொருள் சைய நூலுக்கங்கள் பொருள் வளப் பகுதியில் விரிக்கப்பட்டுள்ளன.

இனி மேலோர் என்பது பின்னால் வரும் என்ப என்ற வினை முடிவுக் கேற்பத் தோன்றா எழுவாயாக மேற் கொள்ளப்பட்டது. இனத்தின் மேலோர் என ஆறும் வேற்றுமைத் தொகையாகவோ, இனத்துக்குரிய மேலோர் என நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவோ இது கொள்ளத்தக்கது. மேலோர் என்பது மேன்மை என்ற பண் படியான குறிப்பு வினையாலணையும் பெயர். இத் தொகைநிலை பின்னால் 'என்ப' என முடியும நெடுநீள் வினைத் தொகைநிலையைப் பயனிலையாகக் கொண்ட எழுவாயாய் நின்றது.

'[ஒருவருக்குத்] தம் பொருள் தம் மக்கள், அவர் பொருள் தந்தம் வினையான வரும் என்ப' என்பது நெடுநீள் வினைமுற்றுத் தொகை நிலை, என்ப என்ற வினை முற்றுப் பலர் பால். 'ப' என்பது பலர்பால் காலப் பொது வினைமுற்று விகுதி என்பர் இலக்கண நூலார் — இவ்விகுதி இடைநிலை பெறுதலில்லை. 'அ' பலர் பால் விகுதி, 'ப்' இடைநிலை என்பாரும் உளராகலாம்.

'தம் பொருள் தம் மக்கள்' என்பதும் 'அவர் பொருள் தத்தம் வினையான் வரும்' என்பதும் தனித்தனி முழு வாசகங்களாலும், கூற்று வாக்கியங்களாய் என்ப என்ற வினைமுற்றின் செயப்படு பொருள்களாய் வந்து தொகை நிலைப் பெயர்கள் ஆயின.

தம் பொருள் தம் மக்கள் என்ற வாசக உருவான தொகை நிலைப் பெயரில், தம் பொருள் என்பது எழுவாய், தம் மக்கள் என்பது பயனிலை. தம் மக்கள் பன்மையாயினும் ஒரு தொகுதியாக ஒருமைப் பொருள் சுட்டித் தம் பொருள் என்ற எழுவாயுடன் இசைந்தது.

தம் பொருள், தம் மக்கள் ஆகிய இரு தொகைகளும் ஆறும் வேற்றுமைத் தொகைகள். 'தம்' இரண்டிடத்திலும் தாம் என்ற பன்மை சுட்டிய திணைபால் பொதுப் பெயரின் வேற்றுமை வடிவம். இரண்டிடத்திலும் ஆறும் வேற்றுமை உருபு 'அது' அல்லது 'உடைய' என்பது தொக்கு நின்றது. மக்கள்

என்பது மக அல்லது மகவு என்றதன் பன்மை [அதிகார முன்னுரை காண்க].

தம் என்பது இரண்டிடத்திலும் தம் பொருள் என்பதன் முன் கொள்ளப்பட்ட அவாய் நிலையான ஒருவர்க்கு என்பதில் ஒருவரைச் சுட்டிற்று.

அவர் பொருள் தந்தம் வினையான் வரும் என்ற வாசக உருவான தொகை நிலைப் பெயரில் அவர் பொருள் என்பது எழுவாய், தந்தம் வினையான் வரும் என்பது வினைப் பயனிலை. அவர் பொருள் என்பது அவருடைய பொருள் எனப் பொருள் படும் ஆறும் வேற்றுமைத் தொகை. இங்கே 'அவர்' என்பது படர்க்கைப் பன்மைச் சுட்டுப் பெயர். இது முன் சென்ற 'தம் மக்கள்' என்பது சுட்டிற்று.

வரும் என்பது வா என்ற வினைப்பகுதியடியான காலப்பொதுமை சுட்டிய எதிர்கால வினைமுற்று. 'உம்' அவ்வினைமுற்று விகுதி. இது இடைநிலை பெறுவதில்லை. பகுதி 'ஆ' காரம் நிகழ்கால எதிர்காலங்களில் குறில் 'ரு' கர எழுத்துப் பேறு பெறுதல் வா, தா, அலமா முதலிய ஒரு சில வினைகளே அடங்கிய இவ்வினைக் கணத்தின் இயல்பு ஆகும். எழுத்துப் பேற்றின் உகரம் விகுதி உயிர்முன் கெட்டது.

தந்தம் வினையான் என்பதில் ஆன் மூன்றும் வேற்றுமைக் காரணப் பொருள் உருபு. தந்தம் என்பது தம் தம் என்ற இரட்டடுக்கின் திரிபு. தத்தம் என்றும் இது வருதல் உண்டு. தம் தம் என அடுக்கிய இரு சொற்களும் தாம் தாம் என்பதன் வேற்றுமைத் திரிபாய் வந்தன. இத்தொகை இறுதியில் ஆறும் வேற்றுமை உருபு தொக்கு வந்தது. தாம் தாம் என்ற இப் பொதுப் பெயர் 'தம் மக்கள்' என்பதனையே சுட்டி வந்தது. தாம் இங்கே தாம் தாம் என இரட்டி அடுக்கியது, சுட்டு முதலாகிய மக்களைத் தனித் தனியாகவும் தொகுதியாகவும் குறித்தற்கேயாகும்.

வி - ரை : அறவாழ்வின் மழை வளப் பயிர்ப் பண்பான மக்கட் பேறு முப்பால் வாழ்வுடனும் தொடர்புடைய

தாயினும் அறத்துப் பாலின் பொருட்பாற் பாயிரம் போன்ற இவ்வதிகாரத்தில் இக்குறட்பாவுடன் முடியும் மூன்று குறட்பாக்களும் [61-63] அதன் பொருள் வாழ்வுத் தொடர்பை விதந்தோதுகின்றன. அவ்வழி இக்குறட்பா மக்கட் பேறே குடும்பச் செல்வம்; அதுவே சமுதாயச் செல்வம் வளர்க்கும் இனச் செல்வமாக விளங்குகிறது என்பதை வலியுறுத்திக் காட்டுகிறது.

இக்குறட்பா இவ் அதிகாரத்தின் எட்டாம் குறட்பாவுடனும் [68] வான் சிறப்பு அதிகாரத்தின் எட்டாம் குறட்பாவுடனும் [18] தொடர்புடையது. மக்கள் தந்தையறிவு தாண்டி மிக்க அறிவுடையராதல் மூலம் ஏற்படும் தலைமுறை வளர்ச்சியே இன முற்போக்கு, இன முன்னேற்றம் ஆகியவற்றின் உயிர்ப் பண்பு என்பது இவ்வதிகார எட்டாம் குறட்பாவில் [68] வலியுறுத்தப்படுகிறது. அத்தகைய முன்னேற்றத்தை ஆக்கியவர் தெய்வங்கள், அதை ஊக்குபவர் வானோர்; அத் தெய்வங்களின் பூசனையும் வானோர்களுக்குரிய சிறப்பும் குறித்ததுடன், அவற்றை மழைப் பண்புகளுடன், மழைப் பண்பின் மூன்று தளங்களுடன் இணைத்தது வான் சிறப்பு அதிகாரக் குறட்பா [18]. இக்குறட்பா இரு அதிகாரங்களின் குறட்பாக்களையும் இணைத்து, மழைப் பண்பின் சின்னமான இனமேலோர் வழி நின்று அவ்வின வளர்ச்சிக்கு வழி வகுப்பவர்கள் புதல்வர் புதல்வியர் ஆகிய மக்களே என்று விளக்கிற்று.

இனமேலோர் என்ற அவாய் நிலைச் சொல் இக்குறட்பாவில் என்ப என்று முடியும் வினை முற்றின் எழுவாயாக வருவிக்கப்பட்டதென்பது மேலே இலக்கணக் குறிப்புரையில் சுட்டப்பட்டது. இவர்களே இன முழுத் தலைவர்களாகிய அந்தணர்கள் — சமுதாயத் தலைவர்களாகிய ஒழுக்கத்து நீத்தார் இவ்வந்தணர் குழுவின் ஒரு கூறாய், அவர் வழி நிற்பவரே என்பதும்; அறத்துப் பாலின் பொருட்பாற் பாயிரமாகிய இவ் அதிகாரத்தின் பொருள் வாழ்வுப் பகுதியின் இறுதிக் கூறான இக்குறட்பா அவ்வினத் தலைவர், சமுதாயத் தலைவர் கூற்றாக, முடிவாக, சமுதாய இன வாழ்வுகளின் அடிப்படை

யான ஒரு பெருந் தத்துவத்தைக் கூறி, மேல் வரும் அதி காரத்தின் இன வாழ்வு குறித்த பகுதிக்கு வாயில் செய்து வைப்பது என்பதும் குறித்துக் காட்டத்தக்க செய்திகள் ஆகும்.

அந்தணர்கள் வேதம் உணர்ந்தவர்கள், வேதவழி நடந்து வேத உருவாக உலகுக்குத் தோற்றமளிப்பவர்கள். அத் துடன் அவர்கள் வேதம் பயிலும் நாவினர், தம் நடை ஒழுகலாறுகளையே உலகுக்கு வேத வடிவாகிய அறமாகக் காட்டி, அடிப்படை அறமாகிய இன அறத்தை வேதத்தின் வாய்மொழி அறமாக்கித் தந்தவர்கள். அவர்கள் வழி நின் றவர்களே ஒழுக்கத்து நீத்தார். இன அறவழி நின்ற அவர் களது நடையும் ஒழுகலாறுமே சமுதாய அறம் ஆகும். இவர்கள் வழி நிற்கும் சான்றோர், சமுதாய அறமே தம் வடிவாக நின்று, அரசியல் அறமாகிய சட்டத்தை ஆக்கி இயக்கி, அரசியற் சமுதாய சமய வாழ்வுகளை நடத்து கின்றனர்.

இனமேலோர் ஆகிய அந்தணர்கள் கண்டுணர்ந்து கூறும் அறத்தின் ஓர் அடிப்படைத் தத்துவமே இக்குறட்பா வில் கூறப்படுகிறது. மேலோர் என்ப என்ற முறையில் அம் மேலோர் மீது வைத்து அவர்கள் கண்டு காட்டிய தத்துவ மாகத் திருவள்ளுவரின் இவ்வடிப்படைத் தத்துவம் இங்கே விளக்கப்படுகிறது.

பொருள் வாழ்வின் மூலதனம் அல்லது முதற்பொருள் மக்கட் பேறே: அதன் ஈட்டு பொருள் ஆகிய ஆதாயம் அம் மக்களின் இனமுயற்சியாகிய வினையே: அவ்வினையே இன வளம் அதாவது சமுதாயத்தின் வளர் பொருட்கூறு' — இதுவே இனமேலோர் கண்டுணர்ந்து கூறும் இக்குறட்பா வின் கருத்தாகிய தத்துவம்.

என்ப என்பது இனமேலோரைத் தோன்றா எழுவாயாகக் கொண்டு, அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்; இவ்வாறு கண்டுணர்ந்து எடுத்துக் காட்டுகின்றனர் என்ற பொருள் சுட்டுகிறது.

ஒருவருக்கு என்ற அவாய் நிலைச் சொல், தம் பொருள், தம் மக்கள் என்ற இரண்டிடத்திலும் வரும் 'தம்' இரண்டின் சுட்டு முதலாய், குடும்ப உறுப்பினரைக் குறித்து நின்றது. இது இரு பால் உறுப்பினரையும் அதாவது இல் வாழ்வான், வாழ்க்கைத் துணைவி ஆகிய இருபாலாராகிய தலைவர், தலைவியர்களையும் சுட்டிய பாற்பொதுச் சொல் ஆகும்.

குடும்பம் இனத்துடனும் சமுதாயத்துடனும் தொடர்பு கொள்ளுதல் குடும்ப உறுப்பினரான தலைவர் தலைவியர் மூலமேயானாலும், இது குடும்ப சமுதாயங்களின் வரு தொடர்பு மட்டுமே. குடும்பம் மீண்டும் சமுதாயத் துடனும் இனத்துடனும் கொள்ளும் செல் தொடர்பு மக்கள் மூலமேயாதலால், மக்கட் பேறு குடும்பத்தின் பொரு ளாகவும், மக்கள் குடும்பத் தலைவரின் பொருளாகவும் தந் துரைக்கப்பட்டது.

தம் பொருள் தம் மக்கள் என்பது தம் பொருளாவது தம் மக்களேயாகும், அதாவது குடும்பத் தலைவருக்குத் தம் இன வாழ்வின் பயனாகவும் குடும்ப வாழ்வின் நிறைவாகவும் வள மாகவும் வந்து கிட்டுகிற செல்வமாவது தம் புதல்வர் புதல்வியர்களே என்று பொருள் படுவதாகும்.

ஒருவர் ஈட்டும் பொருள்கள் பல உளவாயினும், அவை எவையும் மக்களைப் போல நிலையான இனப் பொருள்கள் ஆகா. மக்கட் செல்வம் ஒன்றே நிலையான சமுதாய இனச் செல்வம் ஆகும். அத்துடன் எல்லாச் செல்வங்களுமே குடும்ப வாழ்வுக்குரிய கருவிகளும், சமுதாய வாழ்வுக்குரிய கருவிகளும் மட்டுமேயாகும். குடும்பம் கடந்து சமுதாயத் துக்கும், சமுதாயங் கடந்து இனத்துக்கும் நிலையான பயன் தரும் செல்வம் மக்கட் செல்வமேயாகும்.

தம் மக்கள் தம் பொருள் என்னாது, தம் பொருள் தம் மக்கள் என்றதனால், மக்களே சிறந்த செல்வம், மக்கட் செல்வ மன்றிப் பிற செல்வங்கள் சிறந்த செல்வங்களாகா என்றும் பொருள் கொள்ளப்பட்டது.

பொருள் என்ற சொல் ஈட்டு பொருளாகிய வெறும் செல்வம் அன்று, அது பொன், பொலிவு என்ற சொற்களுடன் தொடர்புடையது என்பது முன் குறட்பாவுரையில் [5] கூறப்பட்டது. வாழும் குடும்பத் தலைவனுக்கும் வாழ் குடிமக்களுக்கும் வாழ்வில் பொலிவூட்டும் முதற் பொருள் மக்கட்பேறே என்பது இதனால் தெரிவிக்கப்பட்டது.

அவர் பொருள் என்று பின் வரும் பொருளுக்கும் இது பொருந்தும்.

அவர் பொருள் தந்தம் வினையான் வரும் என்பது, புதல்வர் புதல்வியர்களாகிய அவர்களின் சமுதாய வாழ்வின் பயனை வருங்கால இனச் செல்வம், அப் புதல்வர் புதல்வியர் ஒவ்வொருக்குமுரிய இனச் செயல்களின் பயன் வளமாக வந்தமைவதாகும் என்று பொருள்படும்.

அவர் பொருள் என்பதில் அவர் என்பது முன் குறிக்கப்பட்ட மக்கள் அதாவது புதல்வர் புதல்வியரைச் சுட்டி நின்றது. இங்கே 'பொருள்' என்பது முன் தம் பொருள் என்ற தொகையில் வந்த 'பொருள்' போன்றதே. மக்களே பொருள்தான், பெற்றோர் ஈட்டிய பொருள்: அம்மக்கள் ஈட்டும் பொருள் அவர் வினை என்று கூறப்பட்டதனால், வினை அல்லது முயற்சியே பொருளின் பொருள் என்ற சொல் இங்கே இவ்வாறு இரட்டிக்கப்பட்ட அழகு அருமைப்பாடுடையதால் காணலாம்.

தந்தம் அல்லது தம் தம் என்பது தாம் தாம் என்ற இரட்டுப் பெயரின் வேற்றுமை வடிவம். இது பன்மையில் தனித் தனி ஒருமை நிறைவு சுட்டிற்று. புதல்வர் புதல்வியர் ஒரு குடும்பத்தின் பொதுப் பொருளானாலும், அவர் ஒவ்வொருவருக்கும் தனித் தனியான பொருள்வள விளைவு உண்டு என இச்சொல் வினை வளப் பெருக்க வாய்ப்புச் சுட்டிற்று.

திருவள்ளுவர் வாழ்க்கைக் கோட்பாட்டில் தனி மனிதர், தனி உயிருக்குத் தனி முழு மதிப்புக் கிடையாதாயினும்

கடமை, பயன் ஆகிய இரண்டிலும் தனித் தனியாகப் பிறந்து முதிர்ந்த வளம் பின் கூட்டாகச் செயலாற்றுவதனுலேயே, வாழ்க்கை 'வாழ்வு' அதாவது 'கூடி இயங்குதல்' என்னும் பெயர் பெற்றுப் பொங்கு மாவளமாகிறது.

வினை என்பது இனப்பயனுடைய இனச் செயல். வினை செய்பவர் ஒருவரேயாயினும் பயன் பரப்பு நோக்கி அது இனச் செயலாகிறது. வினை என்பதன் இப்பொருள் விளக்க விரிவினை முன் குறட்பா [5] உரையில் காண்க.

வினை என்பது இனச் செயலேயாதலால், அதன் பயனே மக்கட் பொருளாகுமென்பது நோக்கி, 'அவர் பொருள் வினையான் வரும்' எனப்பட்டது. வினை செய்பவர், கடமை யாக அவ்வினையே செய்வார், அப்பொருள் கருதார். ஆனல் கருதினும் கருதாவிடினும் அப்பொருளாகிய பயன்தானே வந்து அவரை எய்தும் என்பதனை 'வினையான் வரும்' என்ற சொற்போக்குக் குறிக்கிறது. ஏனெனில் கருதிச் செய்வது சமுதாயச் செயல், கருதாமல் செய்வது இனச் செயல். இனப் பயன் இரண்டிலும் உண்டு. இக்கருத்தைத் திருவள் ளுவரே இன்னெரு வடிவில் (619) கூறுவ்தும்; பயன் கரு தாச் செயலே தெய்வச் செயல், அதாவது இனச்செயல்; அது சமுதாயப்பயன் தராவிடினும் தெய்வம் அல்லது கடவுள் இனவழி நின்று இனப்பயன் அளிக்கும் செயலாகி விடுகிறது என்று இக்கருத்தையே இன்னெரு வடிவில் பகவத கீதை கூறுவதும் காணலாம்.

சிறப்புரை: குடும்ப சமுதாயங்கட்கு இனம் தரும் செல்வம் கற்பு. ஆனல் குடும்ப சமுதாயங்கள் இனத்திற்கு அளிக்கும் செல்வம் மக்கட் பேறே. முன்னது முன் னிணைப்புத் தொடர்ச்சி பேறுகிறது. பின்னதோ, குடும்ப சமுதாயத் தலைமுறைதோறும் தலைமுறை அலை கடந்து பின்னிணைப்பு வளர்ச்சி பேறுகிறது. குடும்பத்தைப் பிற குடும்பங்களுடனும், சமுதாயத்தை இனத் தலைமுறைக ளுடனும் பிணைத்து மேன்மேல் வளர்ச்சிபெறத் தூண்டுதல்

அளிக்கிறது. ஆகையால் கற்பு தொடர்ச்சியளிக்கிறதாயி னும், மக்கட்பேறே இனச் செல்வம் வளர்க்கிறது.

மக்களாகிய இளைஞர் இளநங்கையர்களின் சமுதாய இனச், செயல்களே இன வளம், இனச் செல்வம் ஆகும்.

பொருள்வம் : (1) அறத்துப்பாலின் பொருட் பாற்பாயிரப் பண்பு வாய்ந்த இவ்வதிகாரத்தில் பொருள் வாழ்வுப் பகுதி சார்ந்த முதல் மூன்று குறட் பாக்களில் இக்குறட்பா இறுதியாக அமைந்துள்ளது. அத்துடன் இதே மூன்று குறட்பாக்களும் முந்திய அதி காரத்தின் இறுதிக் குறட்பாவில் குறிக்கப்பட்ட கருத் தின் சிந்தனை விளைவாகவும் அமைந்ததனால், அதன் மீது ஓர் ஒளிவிளக்கமாகவும் இயல்கின்றது. கற்புடை மனைவி குடும்பத்துக்கு இனம் தந்த மங்கலம் அதா வது செல்வ அறிகுறியானால், அதன் நிறைவாகக் குடும்ப சமுதாயத்திற்கு அச்செல்வம் அளிக்கும் செல் வம் மக்கட்பேறு என்று முன்னதிகார இறுதிக் குறட்பா குறித்தது. அச்செல்வத்தின் பீடும் சிறப்பும் இவ்வதி கார முதற் குறட்பாவிலும்; அதனால் சமுதாயத்தில் தீங்கு அணுகாமலும் வளராமலும் நலங்கள் வளர்க்கப் படும் பண்பு அடுத்த குறட்பாவிலும்; குடும்ப சமுதா யச் செல்வங்களாகக் குறிக்கப்பட்ட மக்கட்பேறு புதிய இனச் செல்வம் அல்லது இன வளம் பெருக்க உதவு வதனால், அது செல்வம் தரும் செல்வம் என்பது இக் குறட்பாவிலும் கூறப்பட்டது.

செல்வம் வாழ்வின் மூலதனம். வாழ்வுக்குரிய திட்டமே, வளர்ச்சித் திட்டமே அறம். இவ்வதிகாரத் தில் அறவாழ்வு விரிக்கும் பகுதியான பின்வரும் 7, 8, 9 குறட்பாக்களில் (67–68) அந்த அறவாழ்வின்

வளர்ச்சித் திட்டத்திற்குரிய மூலதனம் செல்வமே, மூலதனச் செல்வம் மக்களே என்று சுட்டி இக்குறட்பா பொருள் வாழ்வுப் பகுதியின் முகடாய் நின்றே, அற வாழ்வுப் பகுதிக்கும் வாயிலாய் அமைந்த அழகு நயம் வியத்தற்குரியதாகும்.

செல்வத்தின் பயன் இன்பம். செல்வ வளர்ச்சி யின் பயனும் அதுவன்றி வேறன்று. ஆனால் இதுநீடின் பம், அழியா இன்பம். மக்கட் செல்வம் செல்வமாகவும் செல்வ வளர்ச்சிக்குரிய செல்வமாகவும், நீடின்ப காரணமாகவும் அமைவதுடனன்றி, அந்நீடின்பத்தின் முன் சுவையாகப் பெற்றோருக்கு உடனடி இன்பமும் விளைவிப்பது என்ற கருத்தே வருகுறட்பாக்கள் மூன் றிலும் அதிகாரத்தின் இன வாழ்வு குறித்த பகுதியா கக் கூறப்படுதலால், இக்குறட்பா அப்பகுதிக்கும் வாயிலாக ஒருங்கே அமைந்துள்ளது. இவ்வமைப்பின் அருமைப்பாடு பாராட்டுதற்குரியதாதல் காணலாம்.

(2) இக்குறட்பாவில் தம் பொருள், மக்கள், அவர் பொருள் ஆகிய மூன்று சீர்களுமே முதலசை எடுத்திசைப்பன என்பது முன்னரே இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டது. ஆனால் இங்கிலேயே தம்பொருள், அவர் பொருள் ஆகிய இரண்டு சீர்களி லும் எடுத்திசைப்பு பொருள் மீது வராமல், தம், அவர் என்ற சுட்டு அடைகள் மீதே வந்தன. ஆனால் பொருள் என்ற சொல்லுடன் ஒத்த சொல்லாக 'மக்கள்' வந் தாலும், அதுவும் தம் மக்கள் என்றே பாவில் வழங் கினாலும், எடுத்திசைப்பு இங்கே 'தம்' என்பதன் மீது வராமல், 'மக்கள்' என்பதன் மீதே வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மற்ற பொருள்களெல்

லாம் பொருளல்ல, பொருளை பொருளாக்கும் பொருளான பொருள் மக்களே என்ற குறட்பாக் கருத்தை இது ஓசைகுறிப்பு மூலமே சுட்டிக்காட்டிற்று.

இது மட்டுமன்று. 'தம்பொருள்', 'அவர் பொருள்' என்ற இருசீர்களும் கூவிளம், கருவிளம் என்ற வாய்பாடு சேர்ந்த நீண்ட சீர்கள். ஆனால் மக்கள் என்பதோ குறுகிய தேமா வாய்பாட்டுச் சீர். மக்கள் என்பதன் மீதுள்ள எடுத்திசைப்பை இது முனைப்பாக வலியுறவு செய்து காட்டுகிறது.

தம்பொருள், அவர் பொருள் ஆகிய இரு சீர்களிலும் தம், அவர் ஆகியவை முனைப்பாக எடுத்திசைக்க, தம் மக்கள் என்ற விடத்துத் 'தம்' எடுத்திசைக்காததுடன், 'மக்கள்' என்ற சீரினின்றே பிரிந்து 'என்ப' என்பதனுடன் இணைந்து 'என்ப தம்' என ஒரு சீராய் இயங்கிற்று. 'என்ப தம்' என்ற சீர் இக்கால யாப்பிலக்கணப்படி கூவிளம் ஆகும். ஆனால் தொல்காப்பியரின் பழைய யாப்பிலக்கணப்படி, சொற்கள் சீரில் பிரிந்திசைத்து அலகு பெறமாட்டா. ஆகவே திருவள்ளுவர், தொல்காப்பியர் ஆகியோர் கால இலக்கணப்படி இது 'என்பர்தம்' என்பது போலத் தேமாங்காய் வாய்பாடு போலவே — அதுவும் இரண்டாவதசை முறிவுற்று நீண்டு 'என்பர்தம்' என்பது போலவே ஒலிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இன்றும் குறட்பா வாசிப்பவர்கள் தம்மையறியாமல் இங்ஙனமே ஒலிப்பதைத் தாமே உய்த்துக் காணலாம்.

'தம்' என்பது இங்கே பெற்றோரைச் சுட்டு முதலாகக் கொண்ட சொல். அது பிரிந்து முனைப்பின்றி நலிந்திசைத்து வந்ததனால், மக்களைப் பொருளாகப்பெற்ற

பெற்ரோர், பின்னர் தம் வாழ்வு மக்கள் வாழ்வே யாக, தம்பொருள் மக்கள் பொருளேயாக, மக்கள் வாழ்வில் ஒடுங்கி இனவாழ்வில் ஒன்றுபட்டு மகிழ்வர் என்ற செய்தி குறிக்கப்பட்டது. இவ்வதிகார எட்டாம் குறட்பாவில் (68) குறித்தபடி, அவர் பொருளை உட் கொண்டு மக்கள் அவர்களைக் கடந்த பண்பும் பொரு ளும் அறிவும் உடையராய் வாழ்தலாலே, இயந்திரம் கண்ட உழைப்பாளி இயந்திரத்தை உழைக்கவிட்டு அதை இயக்கிப் பேணி அமைவதுபோல, பெற்ரோர் தம் மக்களின் பொருள் வாழ்வை இயக்கிப் பேணி அவர் பின் தங்கி நின்று மகிழ்வர். பெற்ரோரின் இந்த நிலையையே 'என்ப - தம்' என்ற முறிவுற்ற சீர் நமக் குப் படம்பிடித்துக் காட்டுகிறது.

தம்பொருள், மக்கள், அவர் பொருள் ஆகிய மூன்று சீர்கள் தவிர ஏனைய பெரும்பான்மைச்சீர்கள்படுத்தும், இறுதி இரு சீர்கள் நலிந்தும் வந்ததனுல், மக்கட்பேறு மூலம் பொருள் வாழ்வு முகடு கண்டவரின் வாழ்வு இறக்கத்தில் முயற்சியின்றிச் செல்லும் சகடம் போல இன்ப வாழ்வில் முந்துறும் என்பது குறித்துக் காட் டப்பட்டது. 'வினையான் வரும்' என்ற இறுதிச் சீரின் நலிவும் இதையே வலியுறுத்திற்று. அத்துடன் நன்மக்களைப் பெற்று விட்டால், அம்மக்கள் வினை தானுகவே நல்ல வினையாக வளர்தல் இயல்பு என்ற கருத்தும் இந்நலிவிசைப்பால் தொனித்தது காண லாம்.

(3) இக்குறட்பாவில் மோனையே இல்லை. எது கைக் கூடக் கிட்டத்தட்ட இல்லையென்றே கூறத்தக்க நிலையில், தம் பொருள், தந்தம் ஆகிய அடி முதற்

சீர்கள் முதல் எழுத்தொன்றி மோனை போல நின்று, இரண்டாம் எழுத்து இன எதுகையளவாய், இரண்டெழுத்தும் மெல்லினம் என்ற மட்டாய் நின்றன. இவ்வாறு மோனை எதுகை குன்றிவிட்டனவானாலும், அவை நிரம்பிய குறட்பாக்களைவிட எவ்வகையிலும் குறையாத சந்த இசை இக்குறட்பாவில் உண்டு என்பதை வாசித்தே காணலாம். பண்டைத் தமிழர் இத்தகைய மோனை எதுகையில்லாச் சந்த இசை நிலைக்குச் செந்தொடை என்ற அழகிய பெயர் தந்திருக்கின்றனர் — இக்குறட்பா அச்செந்தொடையை நினைப்பூட்டுகிறது. தலைசிறந்த கவிஞரின் படைப்பாக விளங்கும் சங்கப் பாடல்களில் கூட, உச்ச உயர் படைப்பிலன்றி நாம் இச்செந்தொடையைக் காண்டல் அரிது. ஆனால் இக்குறட்பாவில் திருவள்ளுவர் கையாண்டுள்ள செந்தொடை வெறும் செந்தொடை மட்டுமன்று — அது தனிப் பொருள் வளமும் உடையது. நன்மக்களைப் பெற்ற பெற்றோர் வாழ்வில் வேறு சிறப்போ, அணியோ, சந்தமோ எதுவும் இல்லாமலே, இம் மக்கட் சந்தம் ஒன்றாலேயே, சந்த நிறைவும் இனிமையும் இன்பமும் பொங்கிப் பொதுளும் என்ற மெய்ம்மையை இச் செந்தொடைப் பண்பு குறித்துக் காட்டி, அதிகாரத்தின் வரு குறட்பாக்கள் விரித்துரைக்கும் இன்ப வாழ்வுப் பகுதிக்கும் இக்குறட்பாவை ஒரு சிறந்த வாயிலாக்கியுள்ளது.

அதிகாரத்தின் மீந்த குறட்பாக்களிலும் — இன்ப வாழ்வுப் பகுதி, அற வாழ்வுப் பகுதி, முப்பால் அகப்பாலாகிய வீட்டு வாழ்வுப் பகுதி ஆகிய அனைத்திலும்— இச் செந்தொடைப் பண்பின் ஒளி படர்ந்து பரவியுள்ளது காணலாம்.

(4) அதிகார முழுவதிலும் அதிகாரத் தலைப்பிலும், முன் அதிகார இறுதிக் குறட்பாவிலும் மக்கள் என்ற பன்மைச் சொல் இருபால்களையும் உளப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட சொல் மட்டு மன்று — மனிதர் என்ற பொதுப் பொருளைச் சுட்டுவதற்காகவும் வழங்கப்பட்ட சொல் ஆகும் என்பது முன்னரே சுட்டப்பட்டுள்ளது. மக்கள் என்ற சொல் அடைமொழியாகிய சுட்டுச் சொல்லான தம் என்பதிலிருந்து தனியாக ஒதுக்கப்பட்டு, சீரில் தனித்து நின்று, எடுத்திசைப்பாகவும் குறுஞ்சீராகவும் செறிவுற்று நிற்பதனால், மனிதர் என்ற இத்தொனிப் பொருள் வலியுறவு பெறுகிறது. புதல்வர் புதல்வியர் அல்லது குழந்தைகளான மக்கள் தான் வருங்கால மக்கள் அல்லது மனிதர்[1] என்பதையும்; தந்தை தாயரினும் அவர் பண்பு மிக்கவராய் வளர்தலே அவர்கள் வாழ்வின் செல்வமும், குடும்ப சமுதாய இனங்களின் வளர்ச்சிக்குதவும் செல்வமும் ஆகும் என்பதையும் இச் சொல் வழக்காறு குறிப்பு வளமாகக் கொண்டுள்ளது.

(5) இக் குறட்பாவில் பொருள் என்னும் சொல் இரு தடவை வழங்குகிறது. புதல்வர் புதல்வியர் பொருளின் பொருள் என்ற கருத்தை இது தொனிப் பொருளாகத் தெரிவிக்கிறது. இல் வாழ்வானுக்கு மனைமாட்சியமைந்த கற்புடை மனைவி ஒரு பொருள். அதுபோலவே வாழ்க்கைத் துணைவிக்கு அவள் கற்பு வழிபாட்டுக்குத் தக்க நிறையுடைய இல் வாழ்வான் பொருள் ஆவன். ஆனால் இருவர் பொரு

1. The child is father of the man

ளின் நல் விளைவான பொருள் புதல்வர் புதல்வியர் களே. அம்மக்களே பெற்றோர் இருவர்க்கும் அவர் கள் குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் பொருளாய், இனவளமாகிய இனச் செல்வமும் ஈட்டுபவர் ஆவர்.

பொருள் என்ற சொல் இரட்டித்து வந்ததனால் இன்னொரு கருத்தும் குறிப்பு வளமாகப் பெறப்படு கிறது. சமுதாயத்தின் வளர்ச்சிக்குரிய பொருள், சமுதாயம் இனவாழ்வுக்கு வழங்கும் பொருள் இன வளம் தரும் இனச்செயலாகிய வினையின் பயனே. தம் வினையாகிய இனச் செயலால் வந்த இந்த இன வளம் தரும் பொருள், செல்வத்தின் செல்வம், புதல் வர் புதல்வியரேயாவர். பொருள் தரும் வினை அவர் பொருளாதலின் பொருளின் பொருள் ஆகின்றனர்.

தவிர, பொருள் என்ற சொல் வழங்கப்படும் இரண்டிடங்களிலும், தொகைக் கூறான வாசகங் களில் அது எழுவாயாகவே அமைந்துள்ளது.

பொருள் பொதுவாக முயன்று ஈட்டிப்பெறுவது, ஆயினும் பொருளாகிய மக்கள் ஈட்டிப் பெறுவதாகத் தோற்றாமல், தாமாகவே வந்தமைபவர் போல் தோன்றுகின்றனர். உண்மையில் இல்வாழ்வான், வாழ்க்கைத் துணைவி ஆகியோரின் இனவாழ்வு அல் லது தூய காதல் வாழ்வின் விளைவாக, நாடிப்பெறாத செல்வமாக வந்தமைவதே அது. பகவத்கீதை கூறும் பயன் நோக்கா வினைப்பயனே இக்காதல் வாழ்வு. அரிது வந்தமைந்த இச்செல்வ அருமைப்பாட்டையே குறட்பாவின் முதல் வாசகப் பகுதியில் ‘பொருள்’ என்பதன் எழுவாய்ப் பண்பு சுட்டிக் காட்டிற்று. மக்கள் தம் வினையால் ஈட்டும் இன வளத்தின் செய்தி

யும் இது போன்றதே. அதுவும் பயன் நோக்கா வினைப் பயனேயாகும். இவ்வொருமைப் பாட்டையே குறட்பாவின் இரண்டாம் விளக்கத்தின் 'பொருள்' எழுவாய்ப் பண்பு சுட்டிக் காட்டுகிறது.

'சிறு முயலுக்கு வைத்த கண்ணியில் சிங்கம் வந்து சிக்கிற்று' என்றும், 'தேடாது வந்த திரு' என்றும் 'தேடப்போன தெய்வம் குறுக்கே வந்து விழுந்தது' என்றும் உலகோர் கூறும் எதிர்பாராச் செல்வ அருமைப் பாட்டு நயத்தை இக்குறட்பாவில் காண்கிறோம்.

(6) 'பொருள்' என்ற சொல்லின் முதலாவது முன்னடையாகத் 'தம்' என்பது வந்தது. இது இரு பாற் பெற்றோரைச் சுட்டிற்று. இரண்டாவது பொருளின் அடையாக அம்மக்களையே சுட்டிய 'தம்' என்பது வந்தது. ஆனால் அதனையே சுட்டு முதலாகக் கொண்ட மூன்றாவது 'தம் தம் வினை' என்பதன் அடை உருவில் அது இரட்டித்துத் 'தம் தம்' என வந்தது. பெற்றோர் இன வினையின் விளைவே மக்கள். எனினும் பெற்றோர் இருவராயமைந்த ஒருவர் மட்டுமே. இதற்கு மாறாக, மக்கள் வினையும் வினையின் பயனும் ஒவ்வொரு மகவுக்கும் தனித்தனியாக, ஒவ்வொரு மகவின் ஒவ்வொரு வினைக்கும் தனித் தனியாக அமைந்து, அப்பெற்றோர் வினைக்கீடாக நின்று, அனைத்தும் சேர்ந்து தொகுதியான திரட்டு வினைப்பயன் வளம் அளிக்கின்றதென்பதை இவ்வழக்காறு தொனிப்படுத்திக் காட்டுகிறது.

இது மட்டுமன்று. பெற்றோருக்கு மக்கள் செல்வம், ஒவ்வொரு மகவுக்கும் அதுபோல தம்மக்கள் செல்வம். அவ் ஒவ்வொரு மகவுக்கும் அது போல, தம்தம்

மக்கள் செல்வம். இவ்வாறு, ஒரு மரத்தின் பல கனி களில் ஒரு விதையே, பல கனிகள் ஈனும் பல மரங் களை ஈன்று மரவளம் பல்குவித்தல் போல, மக்கள் மூலமாகப் பெற்ருேர் ஈட்டும் செல்வம் ஒன்று பத்து நூறு ஆயிரம் நூருயிரமாய், ஒரு புறம் மக்கட் செல்வக் கடலாகவும், மற்ருெருபுறம் அக்கடலின் ஒவ்வொரு துளியும் வளர்க்கும் மக்கள் வினைச் செல்வக் கடல் களாகவும் எல்லையிலாப் பொங்குமாவளம் பரப்பு கின்றது. இதையே 'தம் தம்' என்ற சொல்லடுக்குக் குறித்துக் காட்டுகிறது.

இது மட்டுமன்று.

இத்தனை கடல் வளங்களும் பெற்ருேர் குறிக் கொண்ட நேரடி வளங்கள் அல்ல. நிலக்கரியே நாடிச் சுரங்கத் தொழில் நடத்துபவர் அந்நிலக்கரியே யன்றிக் கிளைவரவுச் செல்வங்களாக[1] எரி பொருள் கள், வளி, நெய் வண்ணங்கள், மணப் பொருள்கள் முதலிய மிகைவளங்கள் பெறுதல் போல, நேரடியாக இன்பத்தைக் குறிக்கொண்ட காதலர் அக்காதலினை மட்டுமன்றி மிகையாக அதற்கு மேற்படக் கிளை வளங் களாக மக்களையும் பெறுவர். இது மட்டுமன்றி, இன் பம் குறிக்கொண்டே மக்களை வளர்க்கும் பெற்ருேர், அதன் மிகையான கிளை வளங்களாக இத்தனை இன வளங்களும் தாமாக வந்தெய்தப் பெறுகின்றனர் என்பதையும் இரட்டித்த வழக்கான 'தம் தம்' என் பது சுட்டிற்று.

அதிகாரத்தின் பொருட்பாற் பகுதி இக்கிளை வளமே விரித்ததாகலின், இது கிளை வளம் என்று

1. Byproduots

[பொருள் என்பதன் எழுவாய்ப் பண்பு, 'வினையான் வரும்' என்ற வழக்கு ஆகியவற்றின் பொருள்வள வடிவில்] குறித்த இக்குறட்பா, குறிக் கொண்ட நேரடி இன்பமே விரிக்கும் அதிகாரத்தின் இன்பப் பாற்பகுதிக்கு ஒரு வாயிலாய் அமைந்தது என்னலாம்.

(7) வன்மை, மென்மை, இடைமை ஒலிகள் இக்குறட்பாவில் விரவிவரினும், வல்லோசை குன்றி முழுதுறழ்வாக அழுத்தமிக்க மெல்லிசைப்புக்களே பயில்வது காணலாம். குழந்தை இன்பக் காப்பியம் போல இயலும் அடுத்த மூன்று குறட்பாக்களின் எழிலுக்கு இக்குறட்பா இவ்வாறு வாயிலாக அமைந்துள்ளது.

(8) 'என்ப' என்பது போன்ற மேற்கோள் வழக்குகளைத் தொல்காப்பியர் போல, திருவள்ளுவர் அடிக்கடி வழங்குவதில்லை. இதற்குக் காரணம் காண்டல் எளிது. தொல்காப்பியர் எடுத்துக்கொண்ட நூற்பொருள் அவருக்கு முன்பே மிகவும் அடிபட்ட பொருள் ஆகும். பிறர் பெருக்கமாகக் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்துச் சுட்டிக் காட்டி, அவர் தம் கருத்துக்களை மட்டுமே அம்மேற்கோள் குறிப்புக்கள் இல்லாமல் கூறினர். என்ப என்ற சொல்லைத் திருவள்ளுவர் அருகலாகவே வழங்குகிறார். அங்ஙனம் வழங்குமிடத்திலும் பொதுவாக இச் செய்தி பொருந்துவது ஆகும். ஆனல் திருவள்ளுவர் கூறும் நூற்பொருளும், நூற் பொருள் வகுப்பு முறையும் பெரிதும் அவருக்கே உரியன ஆகும். ஆகவே மேற்கோள் வழக்கம் அவருக்கு மிகுதி தேவைப் படவேயில்லை. எனினும் அவருக்கு முன்பே தமிழ

கத்தில் வளர்ச்சியுற்றிருந்த மருத்துவம், யோகம் முதலிய தனித்துறைகளையும்; அவர் மரபுக்கே மூலமான தனி முன்மரபுகளையும் சுட்டுமிடங்களில் அவர் 'என்ப' போன்ற எடுத்துரைப்பு வழக்கம் மேற்கொண்டுள்ளார். சிற்சில சமயம் பொது முறையாகப் பொது மக்கள் கருத்தும், மேலோர் கருத்தும் சுட்டி 'என்ப' என அவர் கூறியதும் உண்டு. இவை பொது மெய்ம்மைகள் சுட்டியவை.

இக் குறட்பாவில் 'என்ப' என்று வழங்கிய வழக்கு, பெரிதும் அவர் மரபுக்கே மூலமான தனிமுன் மரபு குறித்ததாகும். ஏனெனில் இவ் வதிகாரத்தின் இக் குறட்பாவிலும், வரும் அதிகாரத்தின் மூன்று [73], ஐந்து [75], ஆறு [76] குறட்பாக்களிலும் என்ப என்பதன் தோன்ரு எழுவாய் பொருள் வாழ்வு, அற வாழ்வு ஆகிய இரண்டினுக்கும் தலைவர்களாகிய ஒழுக்கத்து நீத்தார், அந்தணர் ஆகிய இன மேலோரையே மேற்கோளாகச் சுட்டியதாகும்.

வேதத்தின் கூருகிய அறம் வகுத்துணர்த்துபவர் அந்தணர். அவ்வறத்தின் பொருள் வாழ்வுக் கூருகிய சமுதாய வாழ்வுத் திட்டம் [பண்பு ஒழுக்கம்], அரசியல் வாழ்வுத் திட்டம் [சட்டம்] ஆகியவற்றை வகுத்துரைப்பவர் ஒழுக்கத்து நீத்தார். இக் குறட்பாவின் கருத்தைத் திருவள்ளுவர் தம் கருத்தாக நேரடியாகக் கூருமல், இன்னுரின் முடிவாக அவர் மேற்கோள் சுட்டி, அடிவரையிட்டுக் காட்டியுள்ளார்.

மக்கள் அதாவது புதல்வர் புதல்வியரே குடும்ப சமுதாயங்களின் அடிப்படைச் செல்வம் என்பதனையும்; அவர்களே செல்வங்கள் எல்லாவற்றினும்

சிறந்த செல்வம், செல்வங்கள் எல்லாவற்றையும் கிளை வரவுப் பயன்களாகத் தரும் உண்மையான மூலச் செல்வம் என்பதனையும்; அச் செல்வமே பொருள் வாழ்வும் இன வாழ்வும் பேணிக் காத்து வளர்ப்பது என்பதனையும் திருவள்ளுவர் இவ் வதிகாரத்தின் இக் குறட்பாவுடன் முடியும் மூன்று குறட்பாக்களிலும் விளக்கி, மூன்று குறட்பாவின் முடிவாகிய இக்குறட் பாவில் அதனைத் தத்துவமாகத் தொகுத்துரைத்து, அதனையே பொருள் வாழ்வு முடிவாகவும், இன்ப வாழ்வாகவும், அறவாழ்வின் தொடக்கமாகவும் அதிகார மையக் கருத்தாக வலியுறுத்தினர்.

'என்ப' என்ற மேற்கோள் சிறப்பு முறையில் இக் குறட்பாத் தத்துவத்துக்கு உரிய மேற்கோளாயினும், இனப் பொதுமைச் சுட்டாகப் பொது முறையில் அதிகாரத்தின் முதல் மூன்று குறட்பாக்களுக்குமே உரியதொன்று ஆகும்.

தனிக் குறிப்புக்கள்: (1) 'என்ப' என்பதன் எழுவாயாகப் பரிமேலழகர் 'அறிந்தோர்' என்ற சொல்லை வருவித்து, 'என்று சொல்லுவர் அறிந்தோர்' என்று உரை வகுத்தார். பேராசிரியர் மு. வரதராசனர், பேராசிரியர் இலக்குவனர், புலவர் குழந்தை, ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி ஆகியோர் ஏறத்தாழ இப்பொருளையே கொண்டனர். மணக்குடவர் 'உலகத்தார்' என்றும்; புலவர் ந.சி. கந்தையா, ஆங்கில மொழி பெயர்ப்யாசிரியர் ட்ரூ ஆகியோர் 'மனிதர்' என்றும்; இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் பேராசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடு அவர்கள் வாளா 'அவர்கள் கூறுவர்' என்றும், பிறர் இன்னும் பொது முறையாகவும் எழுவாய் வருவித்தனர், மற்றப் பழைய, புதிய உரையாசிரியர்களோ, எதுவும் வருவிக்கவே முயலாமல், 'என்ப' என்ற வினையையே வெற்றசை நிலையாக்கி விடுத்தனர்.

(2) 'தம் பொருள் தம் மக்கள்' என்பதில் இம்மணி விளக்கவுரையைப் போல, 'தம் பொருள்' என்ற தொகையையே எழுவாயாகவும், 'தம் மக்கள்' என்ற தொகையையே பயனிலையாகவும் கொண்டவர்கள் பரிதியார், காலிங்கர், கவிஞர் இராமலிங்கனார் ஆகியோர். பரிமேலழகரும், பேராசிரியர் மு. வரதராசனாரும், புலவர் குழந்தையும் மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக் குளமும், இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர். சங்கரராஜு நாயுடுவும் 'தம் மக்கள்' என்பதனையே எழுவாயாகவும், 'தம் பொருள்' என்பதையே பயனிலையாகவும் கொண்டனர்.

மணக்குடவர், புலவர் ந. சி. கந்தையா, பேராசிரியர் இலக்குவனார், ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஆர். ட்ரூ ஆகியோர். 'என்ப' என்பதற்குத் தோன்றா எழுவாயாக வருவிக்கப்பட்ட 'மனிதர்' என்ற பெயரையே 'தம்' என வரும் முதல் இரு சொற்களுக்கும் சுட்டு முதலாகக் கொண்டு அம் மனிதர்களே 'தம் மக்களைத் தம் பொருள்' என்று கூறுவதாகக் கொண்டனர். ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியோ, 'அவர்கள் தங்கள் குழந்தைகளிலே தம் செல்வமனைத்தையும் உடையவராவர்'[1] என்றனர்.

(3) புலவர் குழந்தையின் பொருள் கொண்டு கூட்டு முறை தனித் தன்மை வாய்ந்தது. 'அவர் பொருள் தம் தம் வினையான் வரும் ஆதலால், தம் பொருள் தம் மக்கள் என்ப' என்பதே அவர் கொண்ட வாக்கிய அமைதி முறைமை.

(4) 'தம் பொருள் என்பதிலும், 'தம் மக்கள்' என்பதிலும் வரும் 'தம்' என்ற இரு சொற்களையும் இம்மணி விளக்கவுரை அவாய் நிலைச் சொல்லாய் அவற்றுக்கென வருவிக்கப்பட்ட 'ஒருவருக்கு' என்ற பொதுப் பெயரைச் சுட்டியதாகக் கொண்டுள்ளது என்பதனை மேற்போந்த உரைப்பகுதிகளால் காணலாம். இதற்கு ஏறக்குறைய அணித்தாகவே பரிதியார், 'தமக்கு அழியாத உடைமை யாவர் புதல்வர்' என்றும்; காலிங்கர், 'மனிதருக்கு அறி

1. In their children they posaess all their wealth

வுடைய மக்களைப் பெறுதல் அனைத்திலும் அரிய செல்வம்' என்றும்; புலவர் ந. சி. கந்தையா, 'மனிதர் தமது பிள்ளைகளைத் தமது செல்வம் என்று கூறுவார்கள்' என்றும்; கவிஞர் இராமலிங்கனாரும் எல்லா மொழி பெயர்ப்பாசிரியர்களும் மனிதராகிய நமக்குத் 'தம்முடைய செல்வம் என்பது தம்முடைய மக்களே' என்றும் பொருள் கூறினர்.

மணக் குடவர்தாம் அவாய் நிலையாகக் கொண்ட 'உலகத் துவ'ரையே 'தம்' இரண்டற்குமுரிய சுட்டு முதலாகக் கொண்டனர். ஆனால் பரிமேலழகரும் அவரைப் பின்பற்றிப் பேராசிரியர்கள் மு. வரதராசனார், சி. இலக்குவனார் ஆகியோரும் 'அறிந்தோர்' அல்லது 'அறிஞர்' என்பதையே அவாய் நிலையாகக் கொண்டு, 'தம்' இரண்டிற்கும் அதனையே சுட்டு முதலாகக் குறித்தனர்.

(5) 'தம் பொருள்' என்பதில் 'பொருள்' என்ற சொல்லுக்குப் பரிமேலழகர், 'பொருள் செய்த மக்களைப் பொருள் என உபசரித்தார்' என்று விளக்கம் கூறியுள்ளார். பொருள் என்ற சொல்லை இங்கே அவர் இவ்வாறு வலிந்து பொருள் தருவிக்க முனைகின்றார் என்பது தெளிவு. 'மக்கள்' என்ற சொல்லை அவர் ஆண்மக்களுக்கே வரையறுத்துவிடத் துடித்த துடிப்பையே இது காட்டுகிறது. ஏனெனில் பொருள் செய்யும் பொருளாகிய மக்கள் என்பதன் மூலம் பொருள் ஈட்டும் ஆண் மக்களைச் சுட்டி, பொருள் ஈட்டாதவராக, அல்லது அவ்வாறு ஈட்டாதவரென்று கொள்ளப்படுபவராக, பெண் மக்களை விலக்க அவர் எண்ணினார் ஆதல் வேண்டும்.

(6) 'அவர் பொருள் தத்தம் வினையான் வரும்' என்ற வாசகத்திற்கு 'அப்புதல்வர் செய்த பொருள் தம்மை [அதாவது பெற்றோரை] நோக்கி அவர் செய்யும் நல்வினையாலே தம்பால் [அதாவது பெற்றோர் பால்] வரும்' என்று பரிமேலழகரும்; அம்மக்களின் புகழ் [அவர் பொருள்] தம்மை [அதாவது பெற்றோரை] நோக்கி அவர் [அப்புதல்வர்] செய்யும் நற்கடமையால் [வினையால்] தம்பால்

[பெற்ஞேர் பால்] வந்து சேரும்' என்று பேராசிரியர் முனைவர் இலக்குவஞரும்: 'மக்களாகிய செல்வம் அம்மக்கள் பெற்ஞேரின் பெயருக்குச் செய்யும் நற்செயல்கள் [திதி அல்லது ஆண்டு நினைவு நாள் முதலிய வினை முறைகள் போன்றவை] மூலம் அப்பெற்ஞேரிடம் வந்தடைகிறது"[1] என்று ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஆர். ட்ருவும்; 'அம் மக்களுடைய பொருள் [அவர் பொருள்] தத்தமுடைய [பெற்ஞேருடைய] வினையோடே கூட வருதலான்' என்று மணக்குடவரும்! 'மக்கள் தேடும் பொருள் அவரவர்' [அதாவது அப் புதல்வர்களுடைய] தொழிலுடனே பெற்ஞேர் பால் சேரும் என்று புலவர் குழந்தையும்; 'நற்குணத்தால் புதல்வர் பெற்ஞேரை நன்குமதித்து ஈட்டும் பொருள் யாவும் அப் பெற்ஞேரையே வந்து சார்ந்து விடும்'[2] என்று ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும்; 'அந்தப் புதல்வரெனும் பேறு [? அவர் பொருள்] தாம் தாம் [அதாவது பெற்ஞேர்] செய்த விதி வசத்தால் [வினையான்] வருவது' என்று கர்லிங்கரும்; அவரவர் செல்வம் [அவர் பொருள்] அவரவர் செய்யும் நல்வினை தீவினைகளால் வரும்' என்று புலவர் ந. சி. கந்தையாவும்; 'புதல்வரின் பொருள் அவரவருடைய [அதாவது புதல்வருடைய] வினையின் பயனுய் வந்து சேரும்' என்று பேராசிரியர் மு. வரதராசனும்; 'மக்களாகிய அச் செல்வம் [அவர் பொருள்] அவரது [அப்பெற்ஞேரது] வினைக்குத் தக்கபடியாக அமையும்' [வ்ஹ ஸம்பத்தி உஸ்கே கர்மானுஸார் ஹோகீ] என்று இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடுவும்; 'அப்புதல்வர் ஈட்டும் செல்வம் [அவர் பொருள்] வினைப் பயனுல் தந்தைக்கே அனுபவிக்க வாய்ப்புக் கிட்டுமே'

---

1. Men will call their sons their wealth, because it flows to them through the deeds which they perform on their behalf.

2. The learned declare that in their children they (the parents) possess all their wealth, since all the wealth their children earn by indulging in virtuous deeds out of regard for them, will be ultimately theirs.

[அவர் சம்பாதிக்குந்த தனவும் கர்ம வசாத் பிதாவினு அனு பவிக்கான் சங்கதியாகுமல்லோ?] என்று மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளமும்; 'அந்த மக்கள் பொரு ளாக உதவும் தன்மை [அவர் பொருள்] தங்கள் தங்களுடைய [அதாவது பெற்றோருடைய] வினைக்குத் தக்க மாதிரி அமை யும்' என்று கவிஞர் இராமலிங்கனாரும் உரை கண்டுள் ளார்கள்.

இங்கே 'அவர் பொருள் தத்தம் வினையான் வரும்' என்பதில் கிட்டத்தட்ட ஒவ்வொரு தனிச் சொல்லுக்குமே உரையாசிரியர்கள் ஒவ்வொரு வகையாகப் பொருள் கொண் டுள்ளதனைக் காணலாம்.

அவர் பொருள் என்பதில் அவர் என்பது அப்புதல்வர் களைக் குறிப்பதாகச் சிலரும், பெற்றோரைக் குறிப்பதாகச் சிலரும் கொண்டனர். இதுபோலப் 'பொருள்' என்பதைப் புதல்வர் ஈட்டும் பொருள் என்றும், பெற்றோர் ஈட்டும் பொருளாகிய புதல்வர் என்றும், அந்தப் பொருள் என்றும் புகழ் என்றும் பலவாறாகப் பொருள் செய்துள்ளனர். தந்தம்" என்பது பெற்றோரைச் சுட்டுவதாகக் கொண்டவரும், புதல் வரைச் சுட்டுவதாகக் கொண்டவரும் உண்டு. வினை என் பதை முயற்சி என்றவரும், நடை என்றவரும், பெற்றோரை நோக்கிப் புதல்வர் செய்யும் கடமை என்றவரும், பெற்றோர் நலன் நோக்கிய ஆட்டைத் திதி போன்ற) வினைக் கடன்கள் என்றவரும், நற்புதல்வர்கள் பிறப்பதற்குரிய பெற்றோரின் தவம், விதிவசம் என்றவரும் பலர்.

தந்தம் என்பதைப் பெற்றோர் என்றவிடத்துக் குறட் பாவின் இரண்டடிகளும் கிட்டத்தட்ட ஒரு பொருளே குறித் துக் கூறியது கூறலாகின்றது. வினை என்பது திதிக்கடன் அல்லது விதிவசம் என்று கொண்டவிடத்து, குறட்பாவுரை பிற்போக்ககன கருத்துமட்டு மன்று; திருவள்ளுவர் கருதாக் கருத்து மட்டுமன்று; அது திருவள்ளுவர் கருத்துக்கு மாறான சப்பை உரையுமாகும் என்று காணலாம்.

64. இனத்தின் அவா ஆர்வச் சின்னம் குழந்தை :
அதன் பயிலாக் கரங்கள் அளைந்தகூழ் அமிழ்தத்தினும்
இன்பம் தூண்டுவது !

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

பொ-ரை : (ஒருவருக்குத்) தாம் பெற்ற குழந்தைகள் தம் பயிலாத அழுக்கடைந்த தளிர் போன்ற சிறுகைகளை யிட்டு அளைந்த எளிமையான கூழ்கூட, அமிழ்தத்தையும்விட மிகமிக இன்பமூட்டும் தன்மை உடையது ஆகும்.

க-ரை : குழந்தை வாழ்வில் ஈடுபட்ட ஒருவர் தம்மை இழந்துவிடுகிறார், தம் சமுதாய வாழ்வை மறந்து விடுகிறார். ஏனெனில் எல்லையற்ற இனவாழ்வு வளத்தின் ஆர்வச் சின்னமாகக் குழந்தை விளங்குகிறது. இதனால் அவர் உண்பது கூழானாலும், குழந்தை அதனை அளைந்த பின் அது அவருக்கு அமிழ்தத்தைவிட எவ்வளவோ இன்பந் தூண்டுவதாய் அமைந்துவிடுகிறது. சமுதாயத்தில் பிறர் கண்ணுக்குக் குழந்தை அளைவதனால் கூழ் அழுக்குப்பட்டுச் சுவை கெட்டுவிடும் என்று தோன்றும். ஆனால் பெற்றோருக்கு அது அவ்வாறு தோன்றாது. உண்ணத் தெரியாது அளையும் கையின் இளந்தளிர் போன்ற அழகில்தான் அவர்கள் தம்மை மறந்து உள்ளம் பறிகொடுத்து இன்பமுடன் செம்மாந்து மகிழ்ந்து பார்த்திருப்பவர் ஆகிறார்கள். உண்மையில் குடும்ப சமுதாய வாழ்வில் இருந்து

கொண்டே அப் பெற்றோர் இனவாழ்வின் எல்லையிலாப் பேரின்ப வளத்துக்குரிய ஒரு முன் சுவையையே நுகர்ந்து மகிழ்கிறார்கள்.

இலக். ந : இக்குறட்பாவின் வாசகம் ஒன்றே. அவாய் நிலைச் சொல் ஒன்று உட்பட இதன் சொற்கள் மூன்று.

அவையாவன :

1. (ஒருவருக்கு) [இது அவாய் நிலை].
2. தம் மக்கள் சிறு கை அளாவிய கூழ் (இது எழுவாய்).
3. அமிழ்தினும் ஆற்ற இனிதே (இது பயனிலை).

இக்குறட்பாவில் எதுகை இல்லை, மோனையும் இல்லை. சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீனம் முதலிய தமிழொத்த பிறபண்டை இலக்கிய மொழிகளில் பெரும்பாலான கவிதைகளும், ஆங்கில முதலிய தற்கால மொழிகளிலும் செந்தொடைப் பாவகை[1] புற அணிகள் இல்லாமலே உச்ச அளவு இனிமையளிக்கின்றன என்பதை அம்மொழிவாணர் அறிவர். பண்டைத் தமிழிலக்கியத்திலும் இத்தகைய சுவை மிகுந்திருக்க வேண்டும் — அவை மிகுதி நமக்கு வந்தெட்டவில்லை, ஆயினும் முன் குறட்பாவில் குறிப்பிட்டது போல, இவ்வதிகாரம் அத்தகைய செம்மொழி இனிமையிற் சிறந்தது ஆகும்.

இக்குறட்பாவில் இரண்டாமடி முழுவதும் சமநிலைப்பட்ட படுத்தலிசைப்பு ஆக இயல்கின்றது; மக்கள் என்ற சீரில் முதலசையும்; ' அமிழ்தினும் ' ' ஆற்ற ' என்ற இரு சீர்களிலும் முதல் கடைசி ஆகிய இரண்டு அசைகளும்; ' இனிதே தம் ' என்ற சீரின் நடு அசையும் மட்டும் எடுத்திசைததன. நலிவிசைப்பு இல்லாமலே பெரும்பான்மை அசைகளும் படுப்பிசைப்பாய் அமைந்து, இது அமர்ந்த நடையுடைய பாவாய் இயன்றுள்ளது.

ஒருவர்க்கு என்ற அவாய்நிலை பெற்றோரைக் குறித்து, ' தம் ' என்ற சொல்லடையின் சுட்டு முதலாக வருவிக்கப்பட்டது.

---

1. Blank verse

தம் மக்கள் சிறு கை அளாவிய கூழ் என்னும் நெடுந் தொகை நிலையும் அதன் இறுதிச் சொல்லாகிய கூழ் என்பதும் பெயர்ச் சொல்லாய், இனிதே என முடியும் தொகையைப் பயனிலை யாகக் கொண்டது.

அளாவிய என்பது அளாவு என்ற வினைப்பகுதி யடியான இறந்த காலப் பெயரெச்சம். இக் கணதது வினைப்பகுதிகள் இறந்த காலத்தில் இன் இடைநிலைப் பெற்று, அவ்விடைநிலையில் முழுப் பகுதியும் நின்றோ; உயிர் அல்லது மெய்கெட்டோ; மெய் கெட்டு, 'இ' கரம் யகரமாகத் திரிபுற்றோ நால்வகையான வடிவம் கொள்ளும் பான்மை உடையன. இங்கே 'இ' இடைநிலைக் கூறாய், 'அ' பெயரெச்ச விகுதியாய், இடையே யகர உடம்படு மெய் தோன்றி 'அளாவிய' என ஆகியுள்ளது. அளாவும் செயலுக்குச் செயப்படு பொருளான 'கூழ்' என்பதனையே தழுவி, அதன் செய் முதலின் கருவியுறுப்பான 'கை'யே எழுவாயாகக் கொண்டு இப் பெயரெச்சம் நின்று, இரண்டையும் தன்னுடன் தொகைப் படுத்திற்று.

சிறுகை என்பது சிறுமை உடைய கையெனப் பண்புத் தொகை.

மக்கள் என்பதன் பின்னும் தம் என்பதன் பின்னும் ஆறும் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. எனவே தம் மக்கள் என்பதும் மக்கள் சிறுகை என்பதும் ஆறும் வேற்றுமைத் தொகைகளாகும்.

'கை' என்பதனை எழுவாயாக்காது, மக்கள் என்பதனை எழு வாயாக்கி, கை அளாவிய என்பதனைக் கைகளால் அளாவிய எனக் கொண்டு, மக்கள் அளாவிய என்பதனை எழுவாய்த் தொகையாகக் கொள்ளுதலும் பொருந்தும். இவ்விடத்தில் அளாவிய என்பது அளாவப்பட்ட என செயப்படு பொருண்மையில் வந்ததாகக் கருதப்பட வேண்டும்.

'தம்' என்பது 'தாம்' என்ற பன்மை சார்ந்த திணை பால் பொதுப் பெயரின் வேற்றுமை வடிவம். 'தாம்' என்பது இங்கே எழுவாய் நிலையாக வருவிக்கப்பட்ட 'ஒருவ'ரை அதாவது இரு பால் பெற்றோரையும் பொதுவில் சுட்டிற்று.

அமிழ்தினும் ஆற்ற இனிதே என்பது அதன் இறுதிச் சொல்லான இனிதே என்பதனை ஒப்ப வினைச் சொல். 'கூழ்' என முடியும் நெடுந் தொகைக்கு இது பயனிலையாக நின்றது. இனிதே என்பதில் ஏகாரம் தேற்ற ஏகாரம். இனிது என்பது ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. இனிமை இதன் பண்படி. பண்பிறுதி கெட்டு, இது 'து' எனும் ஒன்றன் பால் விகுதி பெற்றது.

ஆற்ற என்பது உறு, தவ, நனி, என்பவை போன்ற உரிச் சொல். இது இங்கே இனிது என்ற வினை தழுவி அதனுடன் உரித் தொகையாயிற்று.

அமிழ்தினும் என்பதில் 'இன்' ஐந்தாம் வேற்றுமை உறழ்ச்சிப் பொருள் விகுதி. அமிழ்தைவிட என்று இது பொருள் தந்தது. 'உம்' சிறப்பும்மை. அமிழ்தம் இனிமையின் உச்ச உயர்வு சுட்டுவது, அதனை விட என்றதனால், அமிழ்தத்தையும் இனிமையுடைய மற்ற எல்லாவற்றையும் விட என்ற பொருள் பெறப்பட்டது.

அமிழ்தினும் என்பதிலுள்ள சிறப்பும்மைக்கு ஏற்ப, கூழ் என்ப தன் பின் இழிவு சிறப்பும்மை தொக்கு நின்றதாகவும் கொள்ளத் தக்கதாகும்.

கூழ் என்பதன்பின் இழிவு சிறப்பும்மை வருவிக்காமல் மேலே இனிது என்பதன்பின் சேர்த்துக்கொண்ட, தேற்ற ஏகாரத்தை இழிவுச் சிறப்புப் பொருள் வாய்ந்த தேற்ற ஏகாரமாக்கினும் அமையும்.

வி-ரை: அறவாழ்வின் மழை வளப் பயிர் பண்பான மக்கட்பேறு முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடைய தாயினும், அறத்துப்பாலின் பொருட்பாற்பாயிரம் போன்ற இவ் அதிகாரத்தின் இக்குறட்பாவுடன் தொடங்கும் மூன்று குறட்பாக்களும் (64-66) அதன் இன வாழ்வுத் தொடர்பை அதாவது இன்ப வாழ்வுக் கூற்றினை விதந்தோதுகின்றன. அவ்வழி இக்குறட்பா குழந்தைகளை இன வாழ்வின் இன்ப ஆர்வ அவாவின் சின்னம் என்று காட்டி, அவர்களே வாழ்வின் உவர்ப்பை எல்லாம் உவப்பாக்கி, உவப்பையும் எல்லையற்ற

இன்பமாக்கி அமிழ்தத்திலும் சிறந்த இன்பம் தரும் செல்வங்கள் ஆவர் என்பதனை வலியுறுத்துகின்றது,

இவ்வதிகாரம் பொதுவாகவும், இது முதல் மூன்று குறட்பாக்கள் அடங்கிய இன்ப வாழ்வுப்பகுதி சிறப்பாகவும் திருவள்ளுவரின் குழந்தை இன்பக் காப்பியமாய் இலங்கு கின்றது. உலக முழுமையிலும், உலகமொழிகள் எல்லா வற்றிலுமே உள்ள குழந்தைப் பாசம் பற்றிய இலக்கிய முழு மையிலும் இவ்வதிகாரம் ஓர் இமயமலையாக, இம்மூன்று குறட்பாக்கள் அதன் உச்ச முக்குவடுகளாக இயல்கின்றன என்னலாம். இம்மூன்றனுள்ளும் கூட, வரு குறட்பா சொல் அழகிலும், இறுதிக் குறட்பா பொருள் விரிவிலும் விஞ்சி நிற்பது போல, இது அவற்றின் அடிப்படையாகப் பொருள் ஆழத்தில் விஞ்சி நிற்கிறது. இப்பொருள் ஆழத்தை இக்குறட்பா உரையின் பொருள் வளப்பகுதி விளங்கக் காட்டும்.

ஒருவருக்கு என்ற இக்குறட்பாவின் அவாய்நிலைச் சொல் பின் தம் மக்கள் என்பதில் வரும் "தம்" என்பதனைச் சுட்டு வதனால், குழந்தைகளைப் பெறும் பேறு பெற்ற இருபாற் பெற்றோரையும் குறிப்பது ஆகும். ஏனெனில் தம் என்ற பன்மை இந்த இருபால் இருமை எதிர் நோக்கியதாகும். அடுத்த குறட்பாவிலும், தம் மக்கள் என்றே வருதல் காண லாம். ஆயினும் அடுத்ததின் அடுத்த (66-வது) குறட் பாவில் பெற்றோர் என்று கருத்தின்றி இனமுழுதும் சுட்டு முறையில் வாளா உடற்கு என்றும், அடுத்த (65-வது) குறட்பாவில் அவாய்நிலை தேவைப்படாத நிலையிலேயே, பொதுவாக மக்களே தம் மக்கள் என்றும் கூறப்பட்டது போல் அன்றி, இக்குறட்பாவில் "ஒருவருக்கு" என்று அவாய் நிலை சுட்டப்பட்டதனால், இச்சொல் அதிகார முதல் குறட் பாவில் (61) குறிப்பிட்டபடி பெறுமவற்றுள் அரும் பெரும் பேறான அறிவறிந்த மக்கட் பேற்றை, முந்திய அதிகார இறுதிக் குறட்பாவில் (60) குறிக்கப்பட்ட மனைமாட்சியான மங்கலத்தின் நன்கலமாகிய பேற்றை அடையும் வாய்ப்புப் பெற்ற பெற்றோராகிய ஒப்பற்ற 'ஒருவரை'யே சுட்டி

விதந்துரைத்தது என்னலாம், அவ்வகையில் 'ஒருவர்' இங்கே இருமை ஒருவர்க் குறித்ததாகுல்.

தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ் என்பது தாம் பெற்ற குழந்தைகளின் பயிலா அழுக்கடைந்த தளிர்போன்ற சிறு கைகள் அளைந்த எளிமையான கூழ் கூட என்ற பொருள் தருவதாகும். இலக்கணக் குறிப்புரையில் சுட்டியபடி, இதனைத் "தாம் பெற்ற குழந்தைகள் தம் பயிலா அழுக்கடைந்த தளிர் போன்ற சிறு கைகள் கொண்டு அளைந்த எளிமையான கூழ் கூட" என்று கூறலும் ஆம்.

தம் என்பது தம்முடைய என்னும் சொற்பொருளே உடையதாயினும், "இனிதே தம்" என்ற சீரில் எடுத்திசைப் பான 'தே' என்பதை அடுத்துத் திடுமெனப்படுத்திசைத்து, ஓசையடங்கி வந்ததனுல் தாம் பெற்ற என்ற அருமைப் பாட்டுப் பொருள் தந்தது. தம் இவ்வாறு முன் சீரில் ஒட்டி, நலிந்திசைத்து, மக்கள் என்ற சீர் எடுத்திசைத்தனுல், பெற்ருேர் பிள்ளை வாழ்வில் தம் வாழ்வை ஈடுபடுத்தித் தம்மை மறந்து நிற்றல் சுட்டப்பட்டது.

மக்கள் என்பது புதல்வர் — புதல்வியர் ஆகிய இருபால் மகவும் குறித்த பொதுச் சொல். இச்சொற்பொருள் விளக்கத்தை அதிகார முன்னுரையிலும், பிற குறட்பா உரைகளிலும் காண்க.

சிறுகை என்பது கருத்தற்று இயங்கும் தளிர் போன்ற மென்மை வாய்ந்த, பயின்று முதிராத இளங்கை என்று பொருள்படும். இது நாடகச் சுவை அமைந்த தொகை. பெற்ருேர் கண் கொண்டு, அன்பும் கரிசனையும் கவலையும் ஒருங்கே கொண்ட உணர்ச்சியருமை வாய்ந்த உளங் கொண்டு நோக்கும்போது, குழந்தை கைகளின் சிறுமை, அதன் பயிலா இளமை கண்டு, பயிற்சியால் அமைய இருக்கும் அதன் வருவளம் எண்ணிய மகிழ்ச்சி; அதன் மென்மை கண்டு அதன் வருங்கால வன்மை அவாவும் ஆர்வ விருப்பம்; அதன் சிறுமை கண்டு தம் முதுமை மறந்து அதில் ஈடுபடல் ஆகியவற்றை நினைவுபடுத்துகிறது.

அழகுப் பொருள்களைவிட, பெண்ணழகும்; பெண்ணழகைவிடக் குழந்தை அழகும், அதனை நினைவூட்டும் சிறு விலங்குக் கன்றுகள் அழகும், குழந்தை அழகுடனொத்த சிறு பறவை அழகும், துன்ப நினைவு, தன்னல நினைவு இரண்டு மற்ற படிப்படியான உயிர்க் கவர்ச்சியுடையனவதால் இங்கே நினைவு கொள்ளத் தக்கதாகும். ஆனால் படிப்படியாக உயர்ந்து செல்லும் இக்கவர்ச்சிகளில் நடுவணதாகிய குழந்தைக் கவர்ச்சி தனி இடம் கொள்வதாகும். ஏனெனில் பெற்றோர் கண்ணில் இது தன்னல எல்லையில் இருந்து தோன்றி இன எல்லை நோக்கிய அவாவை, தன்னை மறந்த இன அவா ஆர்வத்தைக் குறிப்பதாகும்.

சிறுகை என்பதிலுள்ள சிறு என்ற சொற்கூறு இத்தனையையும் மனம் கொளத் தூண்டுவதாகும்.

அளாவிய என்ற சொல்லில் அளாவு என்ற பகுதி இன்று அளைதல் என்ற பொருளில் வழங்குவதில்லை. அளாவுதல் என்ற சொல் இன்று ஒரு பொருள் மற்றொரு பொருளுடன், ஒருவர் இன்னொருவருடன், அல்லது ஒரு பண்பு இன்னொரு பண்புடன் சென்று தழுவுதல், முற்றிலும் பொருந்தி விரவுதல் என்ற பொருளே தருகிறது. இது இச்சொல்லின் ஒரு திசைத் தன்மையை நள்கு விளக்குகிறது. நீர் வளாவுதல் என்பது வெந்நீருடன் தண்ணீரைக் கலத்தல் குறிக்கும். வெந்நீரின் மிகு வெம்மை தண்ணீரின் மிகு தண்மையுடன் கலந்து, வெம்மை வெந்நீரிலிருந்து தண்ணீருக்குச் செல்கிறது. தண்ணீரின் தண்மையும் வெந்நீரின் வெம்மையும் இரண்டும் இதனால் மட்டுப்பட்டு, மட்டு வெம்மை அல்லது மட்டுத் தண்மை அதாவது இளவெது வெதுப்பு அல்லது கதகதப்புத்தன்மை அடைகின்றன. வளாவுதல் இவ்வாறு ஒரு திசைச் செயலானாலும் அது உண்மையில் இரு திசைப் பண்பாய்விடுகிறது. அளாவுதல் என்பதன் மற்றொரு வடிவம், அதன் இரட்டுறு தொகையான அளவளாவுதல் ஆகும். இது இறுதிப் பண்பே, இருதிசைப் பண்பே காட்டுகிறது, ஏனெனில் அளவளாவுதல் என்பது ஒருவருடன் ஒருவர் உரையாடுதல், அன்பு உணர்ச்சி பரிமாறி

நட்பாடல், பண்பில் கலந்து ஒருவயப்படுதல் என்பதே ஆகும்.

அளேதல் என்ற சொல் அளாவுதல் என்பதனுடன் தொடர்புடைய சொல்லே ஆகும். மிகத் தொல் பழந் தமிழில், இரண்டும ஒரே மூலச் சொல்லின் இரு வடிவங் களாக மலர்ந்த சொற்களே என்னலாம். ஆயினும் அளேதல் பொருள்கள் விரவும்படி கருத்தற்ற குழந்தைச் செயலேயும், அளாவுதல், வளாவுதல், அளவளாவுதல் என்பன படிப்படி யாகப் பொருள் விரவுதலிலிருந்து பண்பு விரவுதல், உயிர் களும் மனிதர்களும் உடல் உளம் விரவக் கலந்து பண்பிற் கலத்தல் ஆகியவை குறித்தல் காணலாம்.

திருவள்ளுவர் அளேதல் என்ற பொருளில் 'அளாவு'தல் என்ற சொல்லே பயன்படுத்தியதன் காரணம் அளேதல் — அளாவுதல் — வளாவுதல் — அளவளாவுதல் ஆகிய பண்பின் இன ஏற்றப்படிகளேச் சுட்டுவதற்காகவே என்னலாம்.

குழந்தையின் கருத்தற்ற செயல்கள் பல. கொடுத்தது கடிப்பதும், கைகால் ஆட்டுவதும், அழுவதும், சிரிப்பதும், காலின் கட்டை விரல் சூப்புவதும் இவற்றுள் சில. இவை குழந்தைக்குக் கருத்தற்ற செயல்களானலும், குழந்தையின் இனத்துக்குக் கருத்துடைய செயல்களேயாகும். ஏனெனில் இவை அதன் இன வாழ்வு வளர்ச்சிக்கோ, தேவைகளுக்கோ உதவுவனவே. இச்செயல்களேயே உளநூலார் தன்னுணர் விலா முன் இன உணர்வுச் செயல்கள்[1] என்பர். ஆனல் கருத்தற்ற குழந்தையின் இத்தகு செயல்கள், இனம் குழந்தையை நோக்கிய செயல்கள், அதாவது குழந்தையி னிடம் காணப்படும் இனத்தின் முன் அனுபவங்களே நோக் கிய செயல்கள். குழந்தையின் வருங்கால வாழ்வும் இனத் தின் வருங்கால வாழ்வும் நோக்கிய செயல்களும் உண்டு. ஆண் குழந்தைகள் வாளும், போர்வீரர் வடிவப் பொம்மை களும் விரும்புதல், பெண் குழந்தைகள் மணமகன் மணமகள் ஆகிய பொம்மைகள், தாய் குழந்தை விளேயாட்டு, சிறு வீடு

1. Retrospective instincts

ஆகியவற்றை விரும்புதல், இருபாற் குழந்தைகளும் சண்டையிடல், கொண்டி அல்லது பலகையில் தட்டித் தாளமிடல், கிறுக்குதல், கூத்தாடல்; தவளைப் பாய்ச்சல், ஒளித்து விளையாடல், கண்பொத்தி விளையாடல் முதலிய கேளிக்கைகளை விரும்புதல் ஆகியவை இத்தகையன. இவற்றை நாம் பின் இன உணர்வுச் செயல்கள்[1] என்னலாம். இவை அதன் வருங்கால வளர்ச்சிக்கு உதவுவன மட்டுமல்ல, அவை நோக்கி உயர்வன.

அளைதல் முன் இன உணர்வுச் செயலாகத் தொடங்கி அளாவுதல், வளாவுதல் அளவளாவுதல் என்ற பின் இன உணர்வுச் செயல்களுக்கு வழி வகுத்துக் காட்டுவது ஆகும். அளைதல் என்ற பொருளில் அளாவுதல் இக்குறட்பாவில் பயன்படுத்தப்பட்டதன் நுட்பம் இதுவே. உணவு உண்ணுவதற்குரியது என்பதை அறியாமலே அளையும் குழந்தை, அது உண்ணுதற்குரியது என்ற உணர்வு வந்தவுடன், அளைதல் படிப்படியாகக் குறைந்து, அது உண்ணத்தொடங்கிவிடும். மண்ணை அளைந்த கை கொண்டே உணவை அளைந்து அதே கை கொண்டே தாய் தந்தையுடன் அளவளாவ முனையும் குழந்தை, மண் அளைந்த கையைக் கழுவிய பின்னரே அல்லது அளைவதை நிறுத்திய பின்னரே உண்ணவும் தாய் தந்தையருடன் அளவளாவவும் கற்றுக்கொள்ளும். தன் உடலுடன் தாய் தந்தை உடல் கலக்கும் அவாவில் தாய் தந்தையரை அளாவும் குழந்தை தானே தாய் அல்லது தந்தை ஆகப் போகும் பருவம் அணுகுந் தோறும், தாய் தந்தையை உள்ளத்தால் அளாவி, தன் வயதினமே (சமவயதுத் தோழமையையே) உடலால் அளாவ முற்படும். காதலர் காதலியர்களே தம் காதலர் காதலியர்களை உளத்தால் அளாவி, தம் குழந்தைகளை உடலாலும் உள்ளத்தாலும் அளாவத் தொடங்கிவிடுவர்.

அளைதல்—அளாவுதல்— அளவளாவுதல் என்பது காதல்—அன்பு—அருள் போன்ற முப்பால் மலர்ச்சிப் பண்புணர்வு ஆகும். காதல்—அன்பு—அருள் ஆகிய மலர்ச்சியில் அன்பு

---

1. Prospective instincts

நடுப்பண்பாய்ச் சிறத்தல் போல, அளைதல்—அளாவுதல்—அளவளாவுதல் என்ற மலர்ச்சிப் பண்பிலும் அளாவுதல் நடுக்கூறாய் அமைகிறது.

காதல்—அன்பு—அருள் என்ற அருள் நோக்கிய மலர்ச்சி போன்றதே அறிவு—பண்பு—அருள் என்பது. குழந்தைகளைப் பெற்ற பெற்றோரது பருவம், காதல் அன்பாக, அறிவு பண்பாக மலரும் பருவம் ஆகும். அப் பண்பில் நின்ற பெற்றோர் நோக்கில் குழந்தையின் சிறு கை தம் இனத்தின் வருங்கால வளம் நினைவூட்டி இன்புறுத்தல் போலவே, அதன் அளைதலும் வருங்கால இன வளத்தில் அதன் அளாவுதல், அளவளாவுதல் பண்பெலாம் கண்டு, தம் வாழ்வு மறந்து அதன் வாழ்வுக் கனவால் கழிமகிழ் வெய்துவிக்கின்றது.

அளைந்த என்ற பொருளில் வரும் அளாவிய என்ற இக் குறட்பாச் சொல் தரும் பொருள் நய விளக்கம் இதுவே.

கூழ் என்பது பொதுவில் உணவுப் பொருளும் உணவும் குறிக்கும் தமிழ்ச் சொல். 'பைங்கூழ்' திருக்குறளிலும் பழந் தமிழிலக்கியத்திலும் பசும் பயிரையே குறிப்பது காண்கிறோம். ஆயினும் பழந் தமிழிலும் இதற்கு ஒரு சிறப்பு வழக்கு உண்டு—அது தமிழகப் பெரும்பான்மை மக்களால் அன்றும் இன்றும் உள்ள ஏழை மக்களின் உணவு குறித்தது. அது கேழ்வரகு முதலிய புன்செய்க் கூலங்களின் நீராளமான மாக்குழம்பை இன்றளவும் குறிக்கிறது. நன்செய்க் கூலமான நெல்லரிசி இக் கூழ் வடிவில்கூடக் கூழ் என்று குறிக்கப்படாமல், இன்றும் கஞ்சி என்றே குறிக்கப்படுகின்றது. கஞ்சியும் ஏழை உணவானாலும், கூழ் இன்னும் எளிய ஏழை உணவு ஆகும்.

இக் குறட்பாவில் கூழ் என்ற சொல் சிறப்பு வழக்கான மிக எளிய உணவு என்ற பொருளை யுடையது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இது உணவில் மிக உயர் உணவு என்ற பொருள் தரும் அமிழ்து என்பதன் எதிரிணையாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இலக்கணக் குறிப்புரையில் சுட்டியுள்ளபடி, அமிழ்தினும் என்பதில் வரும் உயர்வு சிறப் பும்மைக் குறிப்பாலேயே, கூழ் என்பதின் பின் இழிவு சிறப்

பும்மை தொக்கு நிற்பதாகக் கொள்ளத் தகும். ஆகவேதான் 'கூழ்' என்பது இங்கே 'கூழ்கூட', மிக எளிய உணவுகூட என்ற பொருளை தந்து நிற்கின்றது.

அமிழ்தினும் ஆற்ற இனிதே என்பது அமிழ்தத்தையும்விட மிக மிக இன்பமூட்டும் தன்மையுடையது ஆகும் என்ற பொருள் தருகிறது.

அமிழ்து என்பது அமிழ்தம். இரண்டு சொற்களும் உண்மையில் ஒரே சொல்லின் இரு வடிவங்களே. ஏனெனில் அஃறிணை ஒன்றன்பால் விகுதியான 'அம்' சேர்ந்தே அமிழ்து அமிழ்தமாகவும், அமிழ்தம் அவ் விகுதி நீங்கியே அமிழ்து ஆகவும் மாற்றம் உறுகின்றன.

தமிழில் அமிழ்து, அமிழ்தம் ஆகிய வடிவங்களன்றி, அமுது, அமுதம் ஆகிய வடிவங்களும் இச் சொல்லுக்கு உண்டு. அவை திருக்குறளில் இடம்பெற வில்லை.

அமிழ்து அல்லது அமிழ்தம் என்ற சொல்லின் முழு விளக்கம் மேலே இரண்டாமதிகார முதற் குறட்பாவின் (11) விளக்கவுரையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அச் சொல்லின் முத்திற, முக்கூட்டுப் பண்பு இங்கே கருதத் தக்கது ஆகும். அமிழ்து பசி தீர்க்கும் உணவு, உணவிற் சிறநத உணவு; அதுவே தின்பண்டங்களில் இனிப்பு மிகுந்த தின்பண்டம்; அதுவே மருந்துகளில் ஒப்புயர்வற்ற சாவா வாழ்வளிக்கும் நன் மருந்து.

அமிழ்து இங்கே கூழ் என்பதன் எதிரிணையாகக் கூறப் பட்டுள்ளது. ஆகவே அது உணவு, எளிய உணவுக்கு எதிரான உச்ச உயர் வகை உணவு குறித்து, திருவள்ளுவரின் அமிழ்தக் கருத்தாகிய முத்திற முக்கூட்டுப் பண்பின் முதல் திறமாகிய உணவுத் திறம் சுட்டுவதாகிறது. அமிழ்தினும் இனிது என்று கூறப்படுவதால், அமிழ்தம் இனிய பொருள், உண்மையில் இனிமையின் உச்சநிலை இனிமையுடைய ஒன்று எனப் பெறப் படுகிறது. இது திருவள்ளுவரின் அமிழ்தக் கருத்தாகிய முத்திற முக்கூட்டுப் பண்பின் மற்றொரு திறமாகிய இனிய தின்பண்டத் திறம் சுட்டுகிறது. இரண்டாம் அதிகார முதற்

குறட்பாவால் (11) அமிழ்தம் உலகம் வழங்கி வருவதற்குரிய ஒன்று என்பது ஏற்படுகிறது. இது திருவள்ளுவ அமிழ்தக் கருத்தின் முத்திற முக்கூட்டுப் பண்பின் மூன்றும் திறமாகிய நன் மருந்து (சஞ்சீவி)த் திறம் அல்லது அழியாத, நிலை பெற்ற தன்மை சுட்டுவதாகும்.

அமிழ்தினும் என்பதிலுள்ள சிறப்பும்மையும் அமிழ்து உணவுகளில் உச்சநிலை உணவு என்பதை வலியுறுத்தி. அது இனிமை அல்லது இன்பப்பண்பும், மருந்து அல்லது அழிவின்மைப் பண்பும் உடையது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

அமிழ்துக்குரிய முத் திறப்பண்புகளில் கூழுடன் அமிழ்து தெளிவாக ஒப்பிடப்படுவது உணவு என்ற பண் பிலேதான். ஏனெனில் கூழ் உணவு மட்டுமே யாகும். ஆயினும் கூழ் உணவு மட்டுமேயாகும். ஆயினும் கூழ் இங்கே வெறுங் கூழ் அன்று, சிறுகை அளாவிய கூழ். இது அமிழ் தத்துடன் ஒப்பிடப்படுவதால், இதில் அழியா நிலைபேற்றுப் பண்பும் வற்புறுத்தப்பட்டுவிடுகிறது. அமிழ்தினும் சிறுகை அளாவிய கூழ் இனிது என இனிமைப் பண்பே ஒப்பிடப் படுவதனுல், அமிழ்தத்தின் இனிமை அல்லது தின்பண்டப் பண்பும் இங்கே ஒப்பீட்டுக்கு உரியதாகிறது.

ஒப்பீடு இங்கே இரு தனிப் பொருள்களிடையே ஒப்பீடு அன்று. ஏனெனில் தனிப் பொருள்களான கூழ், அமிழ்து ஆகியவற்றிடையே உள்ள தொடர்பு கழிமிகை எதிர்வே ஆகும். கூழ் அமிழ்தத்துக்கு நேர் எதிர்வு, மலை முகடான நேர் எதிர்வு. ஆனல் கிறு கை அளாவிய கூழ் என்ற சிறப் படை அடுத்தபோது அக்கூழ் அமிழ்தத்துடன் ஒப்பு மட்டு மன்றி, உறழ்வும் பெறுகிறது. கூழ் அமிழ்தத்துக்கு ஒரு சிறிதும் ஒப்பாக மாட்டாதது. ஆயினும் சிறுகை அளாவிய போது அமிழ்தத்துக்கு ஒப்பாக மட்டுமன்றி மிக்கதாகவும் அமைகிறது என்பதும், இவ்வாறு மிக்கதாதல் பெற்ருேருக்கு என்பதும் இங்கே குறிக்கப்பட்டது.

அமிழ்தின் முத்திறப் பண்புகளாகிய உணவு, தின்பண் டம், நன்மருந்து ஆகியவற்றில் கூழ் முதலதற்கு மட்டுமே

யுரியது. ஆனால் சிறுகை அளாவியபோது, அக்கூழ் உணவுத் திறத்தில் மட்டுமன்றி, தின்பண்டம், நன்மருந்து ஆகிய திறங்களிலும் அமிழ்தத்துடன் ஒப்பாக, அதனின் மிக்கதாக ஆய் விடுகிறது.

சிறுகை அளாவுதல் ஆற்றிவிடும் மாய இரசவாதம் இது.

ஆற்ற என்பது உரிச்சொல்; எவ்வளவோ மிகுதியாக, உச்ச அளவில் மிகுதியாக என்று பொருள் படுவது. தமிழில் 'தவ' என்பது போலவும், தமிழ், தெலுங்கு ஆகிய மொழி களில் 'சால' என்பது போலவும், மலையாள மொழியில் 'ஏற்றவும்' என்பது போலவும் இது 'உறுமிகை' அல்லது 'இனமுதனிலை மிகை' குறித்த சொல்லாகும்[1]. ஆற்று (செய்), ஆறு (ஆற்றுவமை) ஆகியவற்றுடன் தொடர்புடைய இச் சொல் மூலம் இனிது என்ற முடிவு 'செயலுலகிலேயே', 'இவ்வாழ்விலேயே' — அதாவது தொலை இன வாழ்வில் மட்டுமன்று, உடனடியாகச் சமுதாய, குடும்ப வாழ்வுத் தளத்திலேயே — இனிது என்ற கருத்தைத் தொனிப்பாகச் சுட்டிற்று.

'வரவிருக்கும் நெய்யை விட, கையிலிருக்கும் வெண் ணெய் மேலானது' என்பது பழமொழி. ஆனால் இங்கே குழந்தை நலம் வரவிருக்கும் நெய் போன்ற இனநலம் தருவதுடன், அதனிடையே கையிலிருக்கும் வெண்ணெய் போன்ற உடனடி இன்பமும் தருவது ஆகும். அதுமட்டு மன்று. இரண்டையும் அமிழ்தத்துக்கு ஒப்பாக அன்று, அதனினும் கழிமிகையாகத் தருவது என்பது இங்கே வலி யுறுத்தப் பெறுகிறது.

ஆற்ற இனிது என்பதே உறுமிகை குறிப்பது, அமிழ் தினும் ஆற்ற இனிது என்று உறழ்ச்சிப் பொருள் ஐந்தாம் வேற்றுமை உருபுடனும் சிறப்பும்மையுடனும் வந்தனால், அது இங்கே உறுமிகையினும் மேன்மிகை சுட்டிற்று என்னலாம். எவ்வாறெனில், அமிழ்தே இனத்தின் உறு மிகையாகக்

---

1. Superlative degree of excellence

கருதப்படுவது. ஆனால் அதன் முத்திறங்களில் ஒரு திறத்தில், இனிமைத் திறத்தில், சிறுகை அளாவிய கூழ் அதனிலும் எவ்வளவோ மேம்பட்டது என்பதை 'ஆற்ற' என்ற சொல் குறிப்பிடுகிறது.

இவ்வே என்பதில் ஏகாரம் தேற்ற ஏகாரம் என்பது இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டது. இந்த ஏகாரக் குறிப்பைச் சொற்களால் விளக்குவதானால், 'இனிதாகும்; இது தெளிவான உண்மை என்பதை நீங்களே காணலாம்' என்று கூற வேண்டும்.

தமிழில் இனிமை, இன்பம் ஆகிய சொற்களும், இன்னல் (இடர்), இன்னாமை (தீங்கு) ஆகிய சொற்களும் இனம் என்ற சொல்லுடன் தொடர்புடையவை. கடைசி இரண்டு சொற்களும் 'அல்', 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலைகளை உடையவையாய், இனத்துக்கு நலமல்லாதவை என்ற பொருளும், முதல் இரண்டும் தற்காலிக நல உணர்ச்சி, நிலையான நீடு நலம் என்னும் பொருள்களும் தருபவை.

குழந்தை நலம் இனத்துக்கு நீடு நலம் உண்டு பண்ணுவது. இவ்வகையில் அது அமிழ்தம் போன்றது. அது இனிமை, உணவு, நன் மருந்து ஆகிய அமிழ்தத்தின் மூவகை நலங்களையும் உட்கொண்டது. ஆனால் பெற்றோருக்கு அது அந்த நீடு நலத்தை மட்டுமன்றி, உடனடியாக அந்நீடு நிலத்தின் முன் சுவையாக, இனிமை நலமும் உண்டு பண்ணுவதாகும். அமிழ்த நலத்தின் முன் சுவையாய், அந்த அமிழ்த நலமாக மலர்ச்சியுறும் இவ்வினிமை அமிழ்தத்தில் இல்லாதது. குழந்தை நலத்துக்கே உரிய மிகை நலம் என்பது இங்கே குறிக்கப்பட்டது.

குழந்தை நல இன்பத்துக்கு அமிழ்தத்தினும் மேம்பட்ட தனி இனிமை இவ்வாறு சுட்டப்பட்டது. அது அமிழ்தத்தை, இனநலத்தை மலர்ச்சியாக உடையது. அத்துடன் அமிழ்தத்தின் முன் சுவையாகிய மிகை நலத்தை உடையது. இன்பத்தை விட இன்ப அவா இனிதாதலால், இந்த அவா நலன் அமிழ்தினும் இனிது எனப்பட்டது. அத்துடன் பெற்

ேறாருக்குக் குழந்தை நலம் இன நல ஆர்வம் மட்டுமன்று. அது அவரது தனி மனித உணர்ச்சியுடன், தனிக் குடும்ப உணர்ச்சியுடன், தன்னலத்துடன் கலந்து தொடர்பு கொண்டதாகும்.

அமிழ்தப் பண்புக்கும் குழந்தை நலப் பண்புக்கும் இக் குறட்பாவில் திருவள்ளுவர் காட்டும் ஒப்புறழ்வு நயம், சமயத்துறை அறிஞர் ஞானத்துக்கும் பத்திக்கும் இடையே காட்டும் ஒப்புறழ்வு நயத்துடன் ஒத்திசைவு உடையதாகும் என்னலாம். கடவுள் ஞானம் இறுதி நிலையாகக் கடவுட் பதமே தருவதாயினும், பத்தி நெறி அதே கடவுட் பதம் தருவதுடன், உடனடி இன்ப நலமும் தருவது என்று பத்தி நெறி அறிஞர் கூறுவர். இதனையே உளத்துட் கொண்டு தமிழ்ப் பத்திக் கவிஞர் ' இகபரசுகம் இரண்டும் தா ' என்று கடவுளை வேண்டியுள்ளனர்.

சிறப்புரை: இன்பங்களெலாம் கண்டு இன்பத்தின் முதிர்ச்சி பெற்றவர்கள் பெற்றோர். ஆனால் அவ்வின்ப முதிர்ச்சியின் விளைவான குழந்தை இன்பம் அவர்கள் வாழ்வில் புத்தின்பம் ஆகிறது. அவர்கள் மீண்டும் குழந்தையாகி, இனக்குழந்தையாகி, இன இன்ப அவாவில் திளைக்கின்றனர். மண் கட்டியைப் பொன் கட்டியாக்கும் சிந்தாமணி போல, இக்குழந்தை இன்பம் அவர்கள் வாழ்வின் சுவையற்ற பகுதியையும் சுவையுடையதாக்கி விடுகிறது. அவர்கள் தம் தனி இன்பமும் மறந்து, குழந்தை இன்ப மூலம் இன வாழ்வின் இன்ப அவாவில் புது வாழ்வு நுகர்கின்றனர். அவர்கள் இன வாழ்வின் கனவார்வங்களுக்குரிய சின்னமாக அக்குழந்தை வாழ்வு அமைகிறது.

பொருள்வளம்: (1) குழந்தை இன்பக் காப்பியமாக விளங்கும் இவ்வதிகாரத்தில் அத்தகைய இன்பக் காப்பிய முகடாக விளங்கும் மூன்று குறட்பாக்களிலும்

முதலாவதான இக் குறட்பாவே அம் மூன்றனுள்ளும் கூட பொருளாழத்தில் விஞ்சியது என்பது விளக்க வுரை முகப்பில் குறிப்பிடப்பட்டது. அப் பொருளாழக் கூறுகளைக் கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

(2) இக் குறட்பாவில் உருப்படியான எதுகை மோனை இல்லாமலே பா செந்தொடை இன்பம் அளிப்பதாயிருப்பதை இலக்கணக் குறிப்புரைப் பகுதி சுட்டிக் காட்டியுள்ளது. குழந்தை இன்பம் சரிவரக் கைவரப் பெற்றவர் வேறு செல்வம், இன்பம் பெருத நிலையில்கூட, எல்லா வகை இன்ப நிறைவும் உடைய வராவர் என்ற கருத்தை இது சொல்லாமல் சொல்லு கிறது.

குறட்பாவின் பொது இசைப்பு அமர்ந்த படுத்த லோசை. அத்துடன் 'சிறுகையளாவிய கூழ்' என்பது குறித்த இரண்டாமடி முழுவதுமே படுத்தலிசைப்பாக அமைந்துள்ளது. குழந்தை இன்பம் வாழ்வின் துயரப் பள்ளங்களை இல்லாதன ஆக்கி, இன்ப துன்ப ஏற்றத் தாழ்வுகளைக்கூடத் தன்வயப்படுத்தி ஒரே இன்ப அமைதி ஆக்கி விடுவதனை இந்த அமர்ந்த ஓசை சுட்டிக் காட்டுகிறது.

அமிழ்தினும் என்ற முதற் சீரிலும், ஆற்ற என்ற இரண்டாம் சீரிலும் முறையே முதல் அசையும், இரண் டாம் அசையும் எடுத்திசைப்பதனுல்,அமிழ்தின் இன்ப ஏற்றமும் அதனை விஞ்சிய குழந்தை இன்ப ஏற்றமும் குறிப்புப் பொருளாகத் தொனிக்கின்றன. அத்துடன் முதலடி முழுவதும் உள்ள ஏற்ற இறக்க அலைபாய் வமைதி குழந்தை நலத்தால் ஏற்படும் பெற்ருேரின் இன்பம் அலை பாயும் உளநிலையைக் குறிக்கிறது. இந்த

இன்பத்துக்குக் காரணமான குழந்தை, இன வாழ்வின் சின்னமாக இவ் வின்பம் பயப்பதன்றி, தன்னளவில் அவ்வின்ப காரணமோ, இன்பமோ அறியாததாகும். இரண்டாம் அடியின் அலைபாய்விலா அமைதி இவ்வுண்மையைத் தொனிப்படம் பிடித்துக் காட்டுகிறது.

தம் மக்கள் என்ற தொகை இரு சீர்களிடையே 'இனிதே தம்' என்றும், 'மக்கள்' என்றும் பிரிந்து இயன்றதாலும், 'தம்' என்பது எடுத்திசைக்காமல், 'மக்கள்' என்பதே எடுத்திசைப்பதாலும், பெற்றோர் தம்மையும் தம் வாழ்வவயும் மறந்து நின்று, மக்கள் வாழ்விலே தம் வாழ்வு நினைவை இழந்தவராய், அக் குழந்தை இன்பத்தில் தம் உணர்வை இழைவித்து இன்பமுறுவது சுட்டப்படுகிறது. 'இனிதே' என்பதில் இனிது என்பதன்மீது எடுத்திசைப்பு நிகழாமல், தேற்ற ஏகாரத்தின் மீதே நிகழ்வதால், இவ் இனிமை மற்ற இனிமைகள் போல மாய்வதன்று, நிலையான இனநல நீடின்பமாக மலர்வது என்ற தொனி ஏற்படுகின்றது.

(3) இக்குறட்பாவில் பயனிலைத்தொகை முதலடி முதன் மூன்று சீராகப் பா முகப்பிலும், எழுவாய்த் தொகை முதலடி இறுதியில் தொடங்கினும் 'தம் மக்கள்' என்பது மட்டும் முதலடியில் முனைப்பாக நிற்க, 'சிறுகை யளாவிய கூழ்' என்ற உயிர்நிலைப் பகுதி இரண்டாம் அடியாய் முனைப்பின்றி நடக்கின்றது. இது பயனிலையின் தேற்ற ஏகாரப் பொருளை வலியுறுத்துகிறது. 'சிறுகை அளாவிய கூழ்' போன்ற குழந்தை நலக் காட்சிகள் நிகழ்காலத்திற்குரிய தனித்

தனிக் கண நிகழ்ச்சிகள்; ஆனால் பயனிலைத் தொகை குறித்த அக்காட்சிகளின் பயனான இன்பம் கண இன்பமாக தொடங்கினும் கணக்கிலா இன ஊழி இன்பமாகத் தொடர்வது, குடும்ப சமுதாய வாழ்வு முழுவதும் அலை பாய்வது. அத்துடன் அவை நிலையான நீடின்பமாக மலர்ந்து வருங்கால முழுதும் எல்லையில் கால இன இன்பமாயமைவதும் ஆகும். தவிர, ஒவ் வொரு கணம் தோறும் துய்க்கப்படும் இனிமை எல் லையில் கால இன நலமாகிய பயிரின் விதை இன்பம் ஆகும். களம்பல, விதைபல—பயிருக்குரிய எல்லையில் காலமோ பல அல்ல, ஒரே முழுப்பெருந் தொடர்பு[1]. இதனால் இனிமை பலவற்றின் பயன்கள் ஒரே எல்லை யில்கால இன்பமாக வளர்ந்து செறிவுற்று இன்ப வளச்செறிவு தருதல் குறிக்கப்பட்டது.

சிறு கையளாவிய கூழ் என்ற மூன்று சீரிலும் அடங்கியுள்ள நான்கு சொற்களில் ஒவ்வொன்றும் ஓசை அடங்கி ஒலித்தாலும் ஒவ்வொன்றும் பொருள் ஆழம் உடையது ஆகும். இப்பொருள்களுள் சில விளக்கவுரையிலயே சுட்டப்பட்டுள்ளன. 'சிறு' என்பது குழந்தையின் இளமை, பயிலாநிலை, கருத்தற்ற நிலை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி, அசசிறுமையின் வருங் கால இனமலர்ச்சி வளத்தில் பெற்றோர் கனவுகாணும் இன அவா ஆர்வ இன்பம் சுட்டிற்று. பெற்றோர் கை பயனுடைய செயலில் ஈடுபட்டு உழைக்கும் கை — ஆனால் அச்செயல் தரும் பயன் உடனடி செயல் விளைவு மட்டுமே. சிறு குழந்தையின் சிறு கை பயனோ, விளைவோ கருதாத, கிட்டத்தட்ட கருத்துடைய செயல்

---

1. Infinite continuum

எதுவும் அற்ற கை என்னலாம். ஆனால் உணர்வு நிலையில் கருத்தற்ற[1] செயலுடைய கையே இனவாழ் வாழ்வில் நிலையான பயன் வளத்தின் கருவிதையான செயல்திறம் பயிலும்கை என்பதைச் சிறு என்ற சொல் விளக்குகின்றது.

கை என்பது செயலின் சின்னமான உடலுறுப்பு. மூலதிராவிட மொழியில் கை, செய் ஆகிய இரு சொற்களும் ஒன்றே என்பதை அவற்றுக்குரிய கன்னட தெலுங்கு வடிவங்கள் சுட்டிக்காட்டுவன. ஏனெனில் கை, செய் ஆகிய இரண்டுக்கும் உரிய கன்னட வடிவம் கை என்பதும், அவை இரண்டுக்கும் உரிய தெலுங்கு வடிவம் செய் (சே) என்பதும் ஆகும். இதனால் கை என்ற சொல்லின் வினைவடிவமே செய் என்றும், செய் என்பதன் பெயர் வடிமே கை என்றும் உணருகிறோம்.

குழந்தைகளின் எந்த உறுப்பும் சிறு உறுப்புத் தான் — அழகுநயம் அல்லது சிங்கார நயம் வாய்ந்தது தான்.எல்லாஉறுப்புமே பயிலா இன உறுப்புக்கள் தாம். ஆனால் செயலுறுப்பாகிய கை செயல்பயிலாக் கைமட்டு மன்று — அது குறும்பின் சின்னமாக வளரத்தக்கது. குறும்பு பயிலும் வயது வருமுன்பு இயல்பாகக் கூழை யளைந்து கெடுத்தல், பெற்றோர் உடலளாவி உடை கெடுத்தல் முதலிய செயல்கள் செய்யும் இயல் புடையது. கருத்தற்ற இச்செயல்தரும் தீமைகளைக் கூடப் பெற்றோர் இனிமையாகக் கருதுகின்றனர் — குழந்தை அழுக்கிலும் பொருளற்ற தன்மையிலும் தீங்கிலும் வருங்கால நல அவா ஆர்வமே காணும்

1. The unconscious or the prospectively conscious

பெற்றோர் மனப்பான்மையை, நீடின்பத்தில் ஆழ்ந்து அதன் சின்னமாக அவர்கள் பெறும் தற்கால முன் சுவை இன்பமாகிய இனிமையை, 'கை' என்ற வழக்கு எடுத்துக்காட்டுகிறது.

அளாவிய என்ற சொல் அளைந்த என்ற பொருளுடையசொல்லாய்வழங்கப்பட்டதனுல்ஏற்பட்டகுறிப்பு வளம் விளக்கவுரையிலேயே விரித்துரைக்கப்பட்டது. ஆனுல் அளாவிய என்பதற்கு மக்களையும் எழுவாயாகக் கொள்ளலாம், கை என்பதையும் எழுவாயாகக் கொள்ளலாம் என்று இலக்கணக் குறிப்புரை கூறினுலும், திருவள்ளுவர் கையையே எழுவாயாகக் கொண்டுரைத்தார் என்பது தெளிவு. ஏனெனில், மக்கள் செயல் கருத்தற்ற செயலாதலால் 'கை' செய் முதல் ஆதலே தமிழ் மரபுக்கும் ஒத்ததாகும். அளாவிய என்ற சொல் அளைந்த, கருத்தற்றளைந்த என்ற பொருளைத் தருவதும் இதனுலேயாகும். தவிர, கையளாவிற்று, கூழ் இனிது என்று கூறி குறட்பா அளாவிய கை கூழுக்கு இனிமையூட்டுவது சுட்டிற்று. கூழ் இயல்பாக இனிது அன்று, அளாவிய கையின் இனிமையிலேயே அது இனிதாயிற்று என்பது இதனுல் பெறப்பட்டது.

கூழ் ஓரசைச் சீராய் முடிவுற்று இனிமை நயம்பட நீண்டது. 'கூழ்' என்பது 'ஊழ்' என்ற சொல்லும் பொருளும் குறித்துக் காட்டுவதுமாகும். நீடின்ப நோக்கிய இனிமை ஆனுல் அமிழ்தமவாவிய இன்பமாதலின் அமிழ்தம் போல் எல்லையற்ற, அமிழ்தத்திலும் சிறந்த, அமிழ்தத்தினும் இயக்க வளமுடைய[1]

1. Dynamic

இன்பம் என்பது இதனுல் சுட்டப்பட்டது. இன்பம வாவும் இன்பம் இன்பத்தினும் சீரியது[1] என்ற ஆங்கிலப் பழமொழியின் கருத்தும் இங்கே சிந்திக்கத் தக்கது ஆகும்.

தனிக்குறிப்புக்கள்: *(1)* சிறுகை என்பதற்குப் பெரும் பாலான உரையாசிரியர்களும் சிறிய கை, சிறிய கைகள் என்றே உரை கூறிப் போந்தனர். கவிஞர் இராமலிங்கனுரும் ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும் 'இளங்கை'[2] என்றும்; மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் 'பொன்னிளங்கை' என்றும் உரை செய்தனர். ஆனுல் காலிங்கர் ஒருவர் மட்டுமே அதன் உணர்ச்சி நயக் குறிப்புகளில் ஈடுபட்டு, 'விரகறியாப் பருவத்து அச்சிறு கைகளால்' என்று விரித்து விளக்கினுர்.

பரிமேலழகர் 'சிறுகையால் அளாவல்' என்ற அழகிய தொடரின் இன்னயத்தில் ஈடுபட்டு தம்மைப் போலவே அதில் நயப் பூன்றிச் சொல்லும் கருத்தும் எடுத்தாண்ட சங்கச் செய்யுளாகப் புறநானூற்றின் (புறம் — 188) பாடல் வரிகளை மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார். 'இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்' என்ற அப்புறப்பாட்டின் அடிகள் இக்குறட் பாச்சுவை நலம் விரிப்பவையேயாயினும், கூழை 'நெய்யுடை அடிசில் ஆக்கி'த் திருவள்ளுவர் பொருட்சுவை இழந்து சொற்சுவையே பெருக்கியுள்ளன என்பது காணலாம்.

அளாவிய என்பதற்குப் பெரும்பாலான உரையாசிரியர்கள் அளாவப்பட்ட, அளாவியணைந்த என்றே பொருள் தந்தனர். காலிங்கர் 'அங்கோடு இங்கோடு அளாவிய' என விரித்தார். மணக்குடவர், புலவர் ந. சி. கந்தையா ஆகியோர் 'அளையப்பட்ட' என்றும்; பேராசிரியர் இலக்குவனுர் 'துழாவப்பட்ட' என்றும்; புலவர் குழந்தை

1, Hope of joy is more of joy than joy enjoy 2. Tender hands

'கலக்கிய' என்றும்; கவிஞர் இராமலிங்கனார் 'குழப்பப் பட்ட' என்றும்; ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ட்ரூ 'அளைந்து விளையாடிய'[1] என்றும்; ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி 'அழுக்காக்கிய'[2] என்றும் விளக்கினர்.

'கூழ்' என்பதற்குப் பெரும்பாலோர் கூழ் என்றே உரைத்துச் சென்றனர். சோறு, உணவு என்றவரும் உண்டு. இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் பேராசிரியர் முனைவர். எஸ். ஆர். நாயுடு, 'எளிய உணவு' [சாதாரண் சத்தூ] என்று கொண்டார்.

கூழ் எல்பதன்பின் இழிவு சிறப்பும்மையை அவாய் நிலையாகக் கொண்டு 'கூழும்' என்று கவிஞர் இராமலிங்கனார் ஒருவரே உரைத்தார்.

'சிறுகையளாவிய கூழ்' என்பதன் பின் 'தூய்மை இழந்த போதிலும்' என வருவித்துள்ளார் பேராசிரியர் இலக்குவனார்.

2, 'அமிழ்தம்' என்பதற்கு அமிர்தம் எனக் கூறிச் சென்றவரே பெரும்பாலான உரையாசிரியர், மொழி பெயர்ப்பாசிரியர் ஆகியோர். 'சுவையான அமிழ்தத்தினும்' என்று பரிமேலழகரும்; 'சுவைமிக்க அமிழ்தத்தினும்' என்று பேராசிரியர் இலக்குவனாரும்; 'இனிமையுடைத்தாகிய அமிழ்தினும்' என்று மணக்குடவரும் விரித்தமைந்தனர். 'அமரர் கடைந்தெடுத்த அமிழ்தத்தினும்' என்று கூறித் தெளிவாகப் புராண மரபே விளக்கியவர் காலிங்கர். பகுத்தறிவுப் புலவர் குழந்தை அதைப் 'பாற்சோறு' ஆக்கியுள்ளார்.

இம்மணி விளக்கவுரை 'அமிழ்தம்' என்பதற்குப் புராணக் கருத்துக்கே மூலமாக வள்ளுவ முப்பால் குழம்புக் கருத்தைப் பொருளாகக் கொண்டுள்ளது காணலாம்.

---

1. Dabbled 2. Soiled

65. பெற்ருேர்க்குத் தம்மீது தம் குழந்தை உடல்பட்டால் இன்பம், தம் செவியில் அதன் மழலைச்சொல் கேட்டால் இன்பம்.

[1]மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்; மற்றுஅவர்
சொல் கேட்டல் [3]இன்பம் [2]செவிக்கு.

பொ - ரை : [1][பெற்ருேருக்குத்] தம் குழந்தைகளின் மெல்லுடல் தம் உடல்மீது வந்து தீண்டப் பெறுதலாகிய பேறே அவர்தம் உடம்பிற்குரிய அரும் பெறற் பேறுகளிடையே மிகப் பெரிதான அரும் பெறல் இன்பப் பேறு ஆகும்: இது மட்டுமோ? அக் குழந்தைகளின் அறியா மழலைச் சொற்களைக் கேட்கும் பேறே [2]அவர்தம் செவிகளுக்குரிய [3]அரும்பெறல் இன்பப் பேறுகளிடையே மிகச் சீரிய அரும்பெறல் இன்பப் பேருகும்.

க - ரை : ஐம்புலன்களில் அடிப்படையான முதற் புலன் உற்றறிவதாகிய உடற்புலனே யாகும். அவற்றிடையே நுண்ணுணர்வின் மிக்க உச்ச உயர் புலன் கேள்விப் புலனுகிய செவிப் புலனே. இவ்விரண்டுக்கும் உச்ச உயர் இன்பம் அளிக்கும் பேறு இன்பத்துள் இன்பமாகிய மக்கட் பேறே யாகும்.

கற்புடை மகளிர் மழைமுகிற் பண்பு. அவர் தரும் இன்பமே ஐம்புல நிறை இன்பம், சமுதாய இன்பம். அம் மழைமுகிற் பண்பு தந்த மழை வளமாக, பயிர் வளமாக மக்கள் இன்பம் அமைகிறது. அது ஐம்புலன் கடந்த ஆரும் புல இன்பம்,

குடும்ப சமுதாய இன்பம் கடந்த இன இன்பம் ஆகும்.

இலக். கு: இக்குறட்பாவின் வாசகங்கள் இரண்டு. அவாய் நிலைச் சொல் ஒன்று உட்பட, இதன் சொற்கள் ஆறு. அவையாவன.

(அ) முதல் வாசகம்:

1. (பெற்றோருக்கு) [இது அவாய் நிலைச்சொல்]
2. மக்கள் மெய்தீண்டல் (இது முதல் வாசக எழுவாய்).
3. உடற்கு இன்பம் (இது முதல் வாசகப் பயனிலை).

(ஆ) இரண்டாம் வாசகம்:

1. மற்று (இது இருவாசக இணைப்பான இடைச்சொல்).
2. அவர் சொற் கேட்டல் (இது இரண்டாம் வாசக எழுவாய்)
3: செவிக்கு இன்பம் (இது இரண்டாம் வாசகப் பயனிலை)

இக்குறட்பாவில் மோனை எதுகைகள் மிக மிகக் குறைவே. முதலடி முதற்சீர், கடைச்சீர் (மக்கள் — மற்று அவர்) ஆகியவை மோனையாகவும்; ஈரடி முதற்சீர்கள் (மக்கள் — சொற் கேட்டல்) ஆகியவை இன எதுகையாகவும் வந்தாலும், மற்றச் சீர்கள் முற்றிலும் செந் தொடையாய் நின்றே முனைப்பாகத் தோன்றாத, அடங்கிய நுண்சந்த இன்பம் தந்தன. இதன் பொருள் நயம் பொருள் வளப் பகுதியில் காண்க.

இக் குறட்பாவில் இறுதிச் சீர் 'பிறப்பு' வாய்பாடு ஆகவும் இரண்டடிகளிலும் இரண்டாய் சீர்கள் மாச்சீர்களாகவும், அவற்றை அடுத்த தளை மா முன் நிரையாகவும்; முதலடி நான்காம் சீர் விளமாக வும், அதனை அடுத்த தளை விள முன் நேராகவும்; பிறவெல்லாம் காய்ச் சீர்களாகவும்; தளைகள் காய்முன் நேராகவும் வந்தன.

காய்ச் சீர்கள் மட்டுமே எடுத்திசைக்கின்றன. அவற்றுள்ளும் மக்கள் மெய், உடற்கின்பம் ஆகிய சீர்களில் முதலசையும், சொற்

கேட்டல் என்ற சீரில் முதல் இரண்டு அசைகளும் எடுத்திசைப்புப் பெற்றன.

இரண்டாம் அடியில் 'இன்பம்' என்ற சீர் படுத்தும், 'செவிக்கு' என்ற இறுதிச் சீர் நலிந்தும், இரண்டாம் அடி முழுதும் படிப்படியாகச் சாய்வுற்றும் இறங்கிசைப்பாயிற்று.

பெறுவோருக்கு என அவாய் நிலையாக வருவிக்கப்பட்டுள்ள சொல் முதல் வாசகத்தில் எழுவாய் பயனிலைச் சொற்களுடன் இயைந்து தொகைப் பட்டும், இரண்டாம் வாசகத்தில் பயனிலையுடன் தொகைப் பட்டும் நடுநிலையாக வந்தது. அத்துடன் அதுவே மக்கள், உடற்கு, செவிக்கு என்ற தொகைக் கூறுகளுக்குரிய இன உறவுச் சுட்டுப் பெயராக நின்று, தம் மக்கள், தம் உடற்கு, தம் செவிக்கு என வருவிக்கப்படவேண்டிய 'தம்' என்பதன் சுட்டு முதலாகவும் அமைந்தது. முன் குறட்பாவிலும் (63) பின் குறட்பாவிலும் (65) 'தம்' என்பதும் அவாய்நிலையாய், இன உறவுச் சுட்டுப் பெயரும் அவாய்நிலையாய் அமைந்தது காணலாம்.

இதன் பொருள்நயக் குறிப்பு வளத்தைப் பொருள்வளப் பகுதியில் காண்க.

மக்கள் மெய் தீண்டல் என்னும் தொகை அதன் இறுதிச் சொல்லான தீண்டல் என்பதனை ஒப்பப் பெயர்ச் சொல்லாய், உடற்கு இன்பம் என்னும் தொகையைப் பெயர்ப் பயனிலையாகக் கொண்டது.

தீண்டல் என்பது தீண்டு என்ற வினைப் பகுதியுடன் 'அல்' விகுதி சேர்ந்த தொழிற் பெயர். தீண்டு என்ற பகுதியின் இறுதி உகரம் விகுதி உயிரின் முன் கெட்டது. தீண்டல் இங்கே தீண்டப் பெறுதல் என்னும் பொருளில் வந்தது. மெய் தீண்டல் என்பது மெய்யுடன் தீண்டப் பெறுதல் என்னும் பொருளில் மூன்றும் வேற்றுமைத் தொகையாகும். மெய்யைத் தீண்டல் அல்லது தீண்டப் பெறுதல் என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளுதலும் இலக்கண முறையில் பொருந்துமாயினும், வள்ளுவப் பொருட் சிறப்புடைய தன்று.

மக்கள் மெய் என்பது மக்களது மெய்யென ஆறும் வேற்றுமைத் தொகை. மக்கள் என்பது பன்மைப் பெயர். மக அல்லது மகவு இதன் நேர் ஒருமை. இரண்டு ஒருமைப் பெயர்களிலும் விகுதி முன், முறையே இறுதி உயிர் முதல் சொல் வகையிலும்; இறுதி 'வு' கரத்துடன் ஈற்றயல் உயிர் இரண்டாம் சொல் வகையிலும் கெட்டன. இதே பன்மையின் ஆண்பால், பெண்பால் ஒருமைகளே மகன், மகள் என்பவை. இவற்றின் பொருள் வள விரிவை அதிகார முன்னுரையிலும், இவ் வதிகார முதற் குறட்பா உரையிலும் காண்க.

'மக்கள்' என்பதன் முன் இன உறவுச் சொல்லாக 'தம்' என்ற சொல்லும், அதன் சுட்டு முதலாக பெற்றோருக்கு என்ற சொல்லும் குறட்பாத் தொடக்கத்திலேயே அவாய்நிலையாகக் கொள்ளத் தக்கன.

உடற்கு இன்பம் என்பது அதன் இறுதிச் சொல் ஒப்ப, பெயர்ச் சொல். இத் தொகை நீண்டலென முடியும் தொகைக்குரிய பெயர்ப் பயனிலையாயிற்று. இது உடலுக்குப் பெறப்படும் இன்பம் அல்லது உடலுக்கு உரிய இன்பம் என்ற பொருளில் நான்காம் வேற்றுமை உருபொடு தொடர்ந்த பயன் தொக்க தொகையாகும். உடற்கு என்பதில் 'கு' நான்காம் வேற்றுமை உருபு. உருபின் வல்லொலிக்கு முன் பெயரீற்று லகரம் றகரமாயிற்று. உடலுக்கு என்ற இதன் பெரு வழக்கான வடிவத்திலுள்ள உகரச் சாரியை 'உடற்கு' என்பதில் இடம் பெறவில்லை—அது வந்து கெட்டது என்றும் கூறலாம்.

'உடற்கு' என்பதன் முன் 'தம்' என்ற இன உறவுச் சொல் அவாய்நிலையாகக் கொள்ளத்தக்கது. இது குறட்பா முதற்கண் தருவிக்கப்பட்ட 'பெற்றோருக்கு' என்பதில் 'பெற்றோர்' என்பதையே சுட்டு முதலாகக் கொண்டது.

மற்று என்பது இடைச் சொல். இது வினைமாற்று, பொருள் மாற்று ஆகிய குறிப்புப் பொருள்கள் உடையது. இங்கே இது, 'இது மட்டுமோ, இன்னும் மிகையாக' என்ற மிகைக் கூற்றுப் பொருள் கொண்டது.

அவர் சொற் கேட்டல் என்ற தொகை அதன் ஈற்றுச் சொல்லான 'கேட்டல்' என்பதனை ஒப்ப, பெயர்ச் சொல்லாகும். இது குறட்பாவின் இரண்டாம் வாசகத்தில் 'செவிக்கு இன்பம்' என்னும் பெயர்ப் பயனிலைக்குரிய எழுவாயாகும்.

'கேட்டல்' என்பது 'கேள்' என்னும் வினைப் பகுதியடியாக 'தல்' என்னும் விகுதி பெற்ற தொழிற் பெயர். பகுதி ஈற்று ளகரமும் விகுதி முதல் தகரமும் இரண்டும் டகரமாயின.

சொல் கேட்டல் என்பது சொல்லைக் கேட்டல் என இரண்டாம் வேற்றுமைத் தொகை. இலக்கண விதிப்படி அமைந்த இலக்கிய வடிவம் சொற் கேட்டல் என்பதே. இதில் 'சொல்' என்பதன் ஈற்று லகரம் வல்லொலி முன் வேற்றுமைப் புணர்ச்சியில் றகர மாயிற்று.

'அவர் சொல்' என்பது 'அவருடைய சொல்' என ஆறும் வேற்றுமைத் தொகை. அவர் என்பது இங்கே குறட்பாவில் முன்னர்க் குறிக்கப்பட்ட மக்கள் என்பதைச் சுட்டு முதலாகக் கொண்ட சுட்டடிப் பெயராகும்.

செவிக்கு இன்பம் என்பது செவிக்குப் பெறப்படும் இன்பம் அல்லது செவிக்குரிய இன்பம் என்ற பொருளில் உருபொடு தொடர்ந்த பயன்தொக்க தொகை. இது இறுதிச் சொல்லான இன்பம் என்பதை ஒப்ப, பெயர்ச் சொல்லாகும். இத் தொகை கேட்டல் என முடியும் தொகையை எழுவாயாகக் கொண்ட பெயர்ப் பயனிலை.

செவிக்கு என்பதில் 'கு' என்பது நான்காம் வேற்றுமை உருபு. உருபின் முன் ககர மெய் இரட்டிற்று.

'செவி' என்பதன் முன் 'தம்' என்ற இன உறவுச் சுட்டு அவாய்நிலையாய் வருவிக்கத் தக்கது. இது குறட்பா முதலில் தருவிக்கப்பட்ட பெற்றோருக்கு என்ற அவாய்நிலையில் பெற்றோர் என்பதையே சுட்டு முதலாகக் கொண்டது.

வி - ரை : அறவாழ்வின் மழை வளப் பயிர்ப்பண்பான மக்கட்பேறு முப்பால் வாழ்வுகளுடன் தொடர்புடையதாய்

னும், அறத்துப்பாலின் பொருட்பாற்பாயிரம் போன்ற இவ்வதிகாரத்தில் இக்குறட்பாவும் இதன் முன்பின் குறட்பாக்களும் (64—66) அதன் இனவாழ்வு அதாவது இன்ப வாழ்வுத் தொடர்பினைச் சிறப்பிக்கின்றன. அவ்வழி இக் குறட்பா குழந்தைப் பேற்றின் ஐம்புல இன்பம் அதாவது குடும்ப சமுதாய வாழ்வின்பம் அல்லது இவ்வுலக இன்ப நிறைவு சுட்டி, ஐம்புல இன்பம் கடந்த ஆறும்புல இன்பம் அதாவது குடும்ப சமுதாய வாழ்வு கடந்த இன இன்பம் அல்லது அவ்வுலக இன்பமும் விதந்தோதுகின்றது.

குழந்தைகள் தொட்ட மாத்திரத்தில் பெற்றோருக்கு நுகரத்தகாதன, நுகர்வரியன நுகர்வாகிப் பேரின்ப நல்கு மென முந்திய குறட்பாவில் கூறிய திருவள்ளுவர், இக்குறட் பாவில் குழந்தைகள் உடல்பட்ட மாத்திரத்தில் உடலின்ப மும், அவர்கள் சொல்கேட்ட மாத்திரத்தில் பேரின்பமும் உண்டாகுமெனக் கூறுகின்றார். குழந்தை தொட்ட நுகர் பொருள் பேரின்பம் தரும் என்ற கருத்திலிருந்து அக்குழந் தையே ஐம்புல நுகர் பொருள் எனக்கூறி இக்குறட்பா அப் பொருள்விரித்துள்ளது. இது போலவே இக்குறட்பாவின் பிற் பகுதியே வருகுறட்பாவில் விரிக்கப்படுகிறது. இவ்வகை யாக இனவாழ்வுத் தொடர்பு கூறிய மூன்று குறட்பாக்களி லும் இம் மைய குறட்பா, இரு குறட்பாக்களின் பொருட்கூறு களும் தடவிச்சென்று, இடைவாயில் அல்லது பாலமாய் அமைவது காணலாம். அதே சமயம் இது கூறியது கூறலா காமல் அலை அலையாக விரிந்து செல்லும் அழகு நயம் தோய்ந்து மகிழ்ந்து இன்புறுதற்குரியதாகும்.

முன் குறட்பாவின் விளக்கவுரை முகப்பில் குறித்தபடி, அதிகாரத்தின் இன்ப வாழ்வுத் தொடர்பு குறித்த மூன்று குறட்பாக்களும் குழந்தை இன்பக் காப்பியமாகவும், அவற் றில் முதல் கடை குறட்பாக்கள் பொருளாழம் பொருள், ஆகியவற்றில் விஞ்சியதாக அமைந்தது போல, இக்குறட்பா சொல்லழகில் விஞ்சியதாக அமைந்துள்ளது. இவ்வகையில் இக்குறட்பாவே குழந்தை இன்பக் காப்பியமாகிய இவ்வதி

காரத்தின் இன்ப முகடுகள் மூன்றில் உச்ச முகடு என்னல் தகும்.

மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் என்பதன் பொருள் 'பெற்றோருக்குத் தம் குழந்தைகளின் மெல்லுடன் தம்முடலின் மீது வந்து தீண்டப் பெறுதலாகிய பேறே அவர் தம் உடம்பிற்குரிய அரும்பெறற் பேறுகளிடையே மிகப் பெரிதான அரும்பெறல் இன்பப் பேறு ஆகும்' என்பதாம்.

இத்தொடரில் மக்கள் என்பதன் முன் தம் எனச் சேர்த்துத் தம் மக்கள் எனவும், உடற்கு என்பதன் முன் தம் சேர்த்துத் தம்முடற்கு எனவும் ஈரிடங்களில் தம் அவாய் நிலையாகக் கொள்ளத் தக்கது ஆகும். அத்துடன் இவ்விரு சுட்டுப் பெயர்களின் சுட்டு முதலாக, தொடரின் முன் பெற்றோருக்கு என்பது அவாய் நிலையாய் அமைகிறது. இவ்வவாய் நிலையே தனிக் குறிப்பு வளமுடையது. இதனைப் பொருள் வளப்பகுதியில் காண்க.

மக்கள் என்ற சொல் இருபாற் பன்மைச் சொல் மட்டுமன்று, மனித இனமும் சுட்டிய சொல். இதன் பொருள் அதிகார முன்னுரையிலும் முன் குறட்பாக்களிலும் விரிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் தரும் இன்பம் பெற்றோர்க்கு மனித இனம் முழுதும் அளாவிய, முழு உலகளாவிய பேரின்பம் என்பதனை இச்சொல் இக்குறட்பாவில் தந்தது.

இத்தொகையில் மெய், உடல் ஆகிய இரண்டு சொற்களும் உடம்பு என்பதைக் குறித்த ஒரு பொருட்சொற்களாகத் தோன்றுகின்றன — ஆனால் அவற்றின் பண்புப் பொருள் வேறு வேறு என்பதைக் காண்டல் எளிது. ஏனெனில் உடல் இங்கே பெற்றோர் உடம்பைக் குறித்தது, அத்துடன் அச்சொல் இங்கே ஐம்பொறிகளில் ஒன்றாகிய ஊறு உணர்வுகுரிய பொறியே சுட்டிற்று என்பது வெளிப்படை. உடற்பொறிக்குரிய உணர்வு விளைவு ஊறு உணர்வே, இன்பமன்று. ஆனால் மக்கள் மெய்தீண்டல் பெற்றோர் உடலுக்கு வெறும் ஊறுணர்வாக அமையவில்லை, அது இன்பத்தையே விளைவாகக் கொண்டது என்பதை மெய் என்ற சொல் நமக்கு நினைவூட்டுகிறது.

பெற்றோரின் உடலாகிய முதற் பொறியின் உணர்வே, மக்கள் வகையில் உடற் பொறியும் ஐம்பொறிகளும் கடந்த உயரின்பம் தருவதாகும் என்பது இங்கே உடல் மெய், வழக்கு வேறுபாடு தரும் குறிப்புவள மாகும்.

உடல் என்ற சொல் உடை, உடைமை என்ற சொற்களுடன் தொடர்புடையது. உண்மையில் இவைகளனைத்தும் 'உடு' என்ற ஒரே வினைப்பகுதியடியான தொழிற் பெயர்களே — இப்பகுதி 'அல்' விகுதி பெற்று உடலாகவும் ஐ விகுதி பெற்று உடையாகவும், ஐ, மை ஆகிய இரு விகுதிகளும் பெற்று உடைமையாகவும் வேறு வேறு வடிவம் பெற்றுள்ளது காணலாம். உடையும் உடைமையும் எப்படி ஒருவரின் புறப்பொருள்களோ, அது போலவே உடலும் மனிதர்க்குரிய ஒரு புறப் பொருளேயாகும். புறப்பொருளாகிய உடலின் மூலம் பெறும் இன்பங்கள், சிற்றின்பங்கள் அதாவது கீழ்த்தரத் தற்காலிக இன்பங்களே. ஆனால் மக்கள் மெய்தீண்டல் இத்தகைய புறப்பொருள் இன்பமான புற இன்பமன்று, அக இன்பம்; உயரிய, நிலையான இன இன்பமாகும். உடல் மூலம் பெறும் பிறபுற இன்பங்கள் போன்றதன்று, மக்கள் மெய்திண்டல் இன்பம் என்று குறிப்பாகச் சுட்டும் முறையிலேயே திருவள்ளுவர் பெற்றோர் உடம்பை உடலெனவும் மற்றோர் உடலை மெய்யெனவும் வேறு வேறு சொற்களால் குறித்தார். உடற்கின்பம் என்ற தொகை இதனால், உடலால் பெறத்தகும் புற இன்பங்களில் எல்லாம் தலை சிறந்த இன்பம், அக நோக்கிய இன்பம், இன இன்பம் என்று பொருள்பட்டது.

மெய் என்ற சொல்லும் உடல் என்ற பொருளில் வழங்கப் படுவதுண்டு — மெய்வாய் கண் மூக்கு செவி என்ற தொகையில் பொறியின் பெயராகக் கூட வழங்கப் பெறுகிறது. ஆயினும் இச்சொல்லின் தமிழ்ப் பொருள், வள்ளுவப் பொருள் இதுவன்று. ஏனெனில் இது மெய்மை, மெய்ப்பித்தல், மெய்யன் (கடவுள்), மையம், மை (முகில், கருமை, எழுதுவதற்குரிய வண்ணக் குழம்பு, கண்ணுக்குத் தீட்டும் களிம்பு) முதலியவற்றுடன் தொடர்புடையது.

அகம், புறம் என்ற சொற்கள் தனி நேர் பொருள் சுட்டியசொற்கள்[1] அல்ல, திசையும் உறவும் சுட்டிய சொற்களே. ஏனெனில் உயிரை நோக்க உடல் புறம்: உடலை நோக்க உடைபுறம்; உடையை நோக்க உடைமை புறம் ஆகும். அதே சமயம் உடைமையை நோக்க உடை அகம்; உடையை நோக்க உடல் அகம்; உடலை நோக்க உயிர் அகம் ஆகும், உடல் என்ற ஒரு பொருளே இவ்வாறு உயிரும் உணர்வும் போன்ற அகப்பண்புகள் நோக்கப் புறமாகவும், உடை உடைமை முதலிய புறப் பொருள்கள் நோக்க அகமாகவும் அமைதல் காணலாம்.

உடல் - உயிர்த்தொடர்பு இவ்வாறு இருவேறுபட்ட இரு பொருள தொடர்பு அன்று. இருதிசைப்பட்ட இரு பண்புகளுடைய ஒரே பொருளின் பல்படி அலைத் தொடர் பேயாகும். உடல் உயிர் இனப்பண்புகள் இவ்வாறு வெங் காயத் தாள்கள் போல, படிப்படியாகப் புறநின்று அகம், அகநின்று புறம் செல்லும் ஒரே அகத் தொடர்பேயாகும்.

உடலுக்கு உயிர் எப்படி அகமோ, அப்படியே உயிருக் குக் கடவுள் அகம் என்பதும் இங்கே கருதி நோக்கத்தக்கது ஆகும்.

உடம்பின் புறப்பண்பை வலியுறுத்தும் சொல் உடலா னல், அதன் அகப்பண்பை வலியுறுத்தும் சொல் மெய் ஆகும். உடல் உடம்பின் புற நோக்கிய பொறியின் பண்பு குறித்தது. மெய் அதே உடம்பின் அக நோக்கிய பண்பை, புலனுணர்வும் அது கடந்த அறிவும் மெய்யுணர்வும் பண் பும் அருளும் நோக்கிய பண்பை உணர்த்திற்று.

மக்கள் இன்பம் பெற்ரேரின் புற உடல் நுகரும் புறப் பொருள் இன்பமன்று, புற இன்பங்களில் ஒன்றன்று. மக்கள் மெய்யும், மக்கள் மெய்தீண்டலும் அப்புற உடலை அக நோக்கச் செய்து அக இன்பம் அளிப்பது. அது புறப் பொருள் நோக்கும் புறப் பொறியை, அகப்பொருள் நோக் கும் அகப் பொறியாக்கி, அக உணர்வு இன்பம் கொளுத்து

1. Absolute values

வதாய் அமைகிறது என்ற கருத்தையே மெய் என்ற சொல் குறிப்பாகச் சுட்டி நின்றது.

உடல் ஐம்பொறிகளில் ஒரு பொறி. மெய்யோ, ஐம் பொறிகளும், அவற்றுக்குரிய ஐம்புலன்களும், அவை கடந்த ஆறும்புலனும், இவை கடந்த தத்துவங்களும இடமாகக் கொண்டு, பேரின்ப வாழ்வு அல்லது இனத்தின் நீடின்ப வாழ்வு நோக்கிய முழு உடம்பைக் குறித்தது. உடம்பின் கடவுள் நோக்கிய முழு உயிர்ப் பண்பே ' மெய் 'ப் பண்பு.

இன்பம் மூவகைப்பட்டது. முதலாவது வகை நிகழ்கால நோக்கிய இன்பம். இதுகண இன்பம், கரும்பின் நுனி கடித் தால்போன்று நுகர் பொழுதுக்கு மட்டுமேயுரிய இன்பம். இது மின்னல்போல் தோன்றி உடன் கெடுவதாகும். இரண்டாவது வகை இன்பம் இறந்த கால நோக்கிய இன்பம். இது புறப் பொருள் இன்பம், முன் துய்த்ததன் பயனான இன்பம். துய்ப்பு முடிந்துவிட்டதாதலால் இது படிப்படியாகத் தேய்ந்து கரையும் தன்மையுடைய, எல்லையுட்பட்ட, வரம்புடைய இன்பம் ஆகும். கரும்பின் அடிக்கணுவினின்று நுனி நோக்கி நுகர்பவன் சுவை உணர்வு போன்றது இது. மூன்றாவது வகையே எதிரது நோக்கிய அக இன்பம். கரும்பை நுனியிலிருந்து அடிக்கணு நோக்கி உண்பவன் சுவையுணர்வு போல இது வளர்ந்து கொண்டே செல்லும் இன்பம், நுகர்வு கடந்த இன்பமாகாமல், நுகர்வு நோக்கிய இன்பமாதலால், இது வரம்பிலா இன்பம், மாளா இன்பம் ஆகும்.

' மக்கள் மெய்தீண்டல் ' மூலம் பெறும் இன்பம் இத்தகு மாளா இன்பம், வரம்பில் இன்பம், என்றும் வளரும் இன்பம் ஆகும்.

'தீண்டல்' என்ற சொல் வழக்கு ஒரு புறமும்; 'உடற்கின் பம்' என்று தொடங்கிய குறட்பா 'செவிக்கு இன்பம்' என விரிவதும் 'மக்களின் மெய்' என்று தொடங்கிய குறட்பா, அவர்களின் சொல் நோக்கி விரிவதும் ஆகிய பண்புகள் மற்றொரு புறமும் வரம்பில் இன்பநோக்கி வளரும் இவ்வின்ப வளர்ச்சிக் குறிப்புத் தந்தன,

தீண்டல் என்ற சொல்லின் பொருள் தொடுதல் அன்று, தற்செயலாக வந்து உடம்பில் படப் பெறுதல் என்பதே யாகும்.

பொதுவாகத் தீண்டல் என்ற சொல்லை நல்ல பொருளில் அருகலாகவும் தீய பொருள்களிலேயே பேரளவாகவும் நாம் வழங்குவதனுல், அதன் முதற் பொருட் பண்பை நாம் மறந்து விடுகிறேம். பாம்பு தீண்டுதல் மிக எளிதில், மிக விரைவில் மாள்வுக்குக் காரணமாகிவிடுகிறது. ஏனெனில் அதன் கொடு நஞ்சு ஒரு சிறிதே பட்டாலும், ஒரு கணமே பட்டாலும், நிலையான அழிவு தரும் ஆற்றல் உடையது. தீட்டுக்குரிய பொருள்களும் இவ்வாறே அழிவாற்றல் மிக்கவையாகக் கருதப்படுகின்றன. ஆகவே தெரிந்து தெரியாமல் நாம் தொட்டு விட்டாலும், அல்லது கவனமின்மையால் அவை தொடும்படி நேர்ந்து விட்டாலும், நிலையான துப்புரவுக் கேடு ஏற்படும் என்று நாம் கருதுகிறேம்.

தீண்டு என்ற சொல் தொடுதல் என்ற சொல்லின் நுட்ப நுணுக்கப் பண்பு குறித்த சொல் என்பதை இவ்வழக்குக் காட்டுகிறது. பட்டும் படாத நிலையில் ஒரு சிறிதே படுதல், கணநேரம் படுதல், நாமே தொடாமல் அதுவாக வந்து தொடப் பெறுதல், மிக விரைவாகக் கணநேரத்தில் வந்து படுதல், படத் தொடங்கிப் படுமுன்னேயே நீங்கி விடுதல், படுதல் கணநேரமானுலும் விளைவு நீடித்து நிலைத்த ஒன்ருகிவிடுதல் — இத்தனை கருத்துக்களையும் தீண்டு என்ற தமிழ்ச் சொல் உட்கொண்டதாகும்.

கத்தி தீட்டுதல் என்பது கத்தி பொருளில் பட்டவுடன் வெட்டும்படி கூராக்கப் பெறுதலேயாகும். தீட்டிய அறிவு எளிதில் பற்றி நிலையாக உணர்ந்து கொள்ளும் ஆற்றலுடைய அறிவு ஆகும். தீட்டிய அரிசி உடனடியாக நல்லுணவாகி நீடித்த சுவையும் ஊட்டமும் தரும் உணவு ஆகும்.

தீண்டல் என்ற குறட்பாவின் சொல் இவ்வாறு பெற்றேர் தம் "குழந்தை உடலைத் தாம் நினைத்தணைக்காமல் எதிர்பாராது தற்செயலாக வந்து தீண்டப் பெற்றுலே, தீண்டுமுன, மேலே படுமுன்னரே, அது இன்பம் தருவது

ஆகும் என்ற கருத்தையும்; அவ்வகையில் நினையாச் சிறு கணச் செயலே நினைவாய் அளக்கப்பட முடியாத நிலையான பொங்குமாவளப் பேரின்பம் தருவது ஆகும் என்ற கருத்தை யும் தூண்டுவது ஆகும்.

இம்முதல் வாசகம் பற்றிய பிற குறிப்பு வளங்களைப் பொருள் வளப் பகுதியில் காண்க.

மற்று என்ற இடைச்சொல் இலக்கணக் குறிப்புரையில் தெரிவிக்கப்பட்டபடி 'இது மட்டுமோ, இன்னும் மிகையாக' என்னும் பொருள்படுவது. இச் சிறு சொல் குறட்பாவின் அச்சாணியாய், இதன் பொருள் வளத்துக்கு உயிர் நிலையாய மைந்தது. ஏனெனில் இச் சொல்லுக்கு முன் கூறப்பட்டது, ஐம்பொறி இன்பங்களுள் முதற்பொறி இன்பம். இதன்பின் கூறப்படுவது, ஐம்பொறி இன்பங்களில் கடைசி உச்சநிலைப் பொறியான செவிப்பொறி இன்பம். எனவே 'இது மட்டுமோ, இன்னும் மிகையாக' என்ற இடைச்சொல்லே முதற்பொறி இன்ப முதல் இறுதிப்பொறி இன்பம் வரை ஐம்பொறி இன்பங்களையும், அதற்கு அப்பாற்பட்ட ஆறும் பொறி இன்பத்தையும்; குடும்ப சமுதாய இன்பம் போலவே இன இன்பத்தையும் குறித்துக் காட்டிற்று.

அவர் சொற் கேட்டல் செவிக்கு இன்பம் என்பது அக்குழந்தை களின் அறியா மழலைச் சொற்களைக் கேட்கும் பேறே அப்பெற்றோர்கள் தம் செவிகளுக்குரிய அரும்பெறல் இன்பப் பேறுகளிடையே மிகப் பெரிய அரும்பெறல் இன்பப் பேறு ஆகும்' என்ற பொருள் தருவது ஆகும்.

அவர் என்பது இங்கே முன்னர்க் குறிப்பிடப்பட்ட மக்கள் என்ற பொருள் சுட்டிற்று.

சொல் இங்கே குழந்தைகளின் குதலை மழலைச் சொற்கள். அடுத்த குறட்பாவில் இதுவே மழலைச் சொல் என விரித்துக் கூறப்பட்டது. இக்குறட்பாவில் வாளா சொல் எனக்கூறி, அடுத்த குறட்பாவில் மழலைச் சொல் என விரிக்கப்பட்டதற் குக் குறிப்பு வளப் பொருள் உண்டு. குதலை பொருளற்ற உருவமிலாக் குழந்தை ஒலி குறிக்கும். உருவமுடைய, ஆனல்

திருந்தாத குறிப்பார்வ இனிமை கொண்ட குழந்தைப் பேச்சு மழலை எனப்படும். திருந்திய பேச்சே சொல் ஆகும். மூன்றும் படிப்படியாக இனிமை முதிர்வில் தொடங்கிப் பயன் முதிர்வு நோக்கிய மலர்ச்சி ஆகும். சொல் என்பது இக்குறட்பாவில் பயன் முதிர்வு நோக்கிய இன்ப முதிர்வு அதாவது இன ஆர்வ இன்ப முதிர்வு சுட்டிற்று.

சொல் என்ற பருக்கருத்தைக் குறிக்கத் தமிழ் மொழியில் நூற்றுக் கணக்கான ஒரு பொருட் பல சொற்கள் உண்டு. அவை கூறுதல், சொல்லுதல், செப்புதல். இயம்பல், பகர்தல், புகலுதல், நவிலுதல், நுவலுதல், கிளத்தல் பேசுதல், உரைத்தல், என்றல், சாற்றல், விளம்பல், பறைதல், மொழிதல், நிகழ்த்துதல், விளக்குதல், கழறுதல், முழங்குதல் என வினையிலும்: சொல், கிளவி, பதம், உரை, பேச்சு, மொழி எனப் பெயரிலும் விரிவன. இவை ஒரு பொருட்பல சொற்கள் போல வழங்கினாலும், உண்மையில் ஒரு பொருளின் பல குறிப்புப் பண்புகள் சுட்டுவனவே. ஆனால் இவற்றில் அடிப்படைப் பொதுச் சொல், சொல் என்பதே. இதன் அடிப்படைப் பொதுக் கருத்து, பொருள் குறித்து உரைப்பது என்பதே.

இயற்கையின் வெற்றொலிகளில் வெற்றொலியாகத் தொடங்கிய ஓசை, உயிர்களிடையே இன ஒலியாகி, குழந்தைகளிடையே உணர்ச்சி மட்டும் காட்டும் குதலை, உணர்ச்சியுடன் பொருள் கலந்து காட்டும் மழலை, பொருளே குறித்த சொல் என மலர்ச்சியுறுகிறது. இக்குறட்பாவில் 'சொல்' என்ற வழக்கு இம்மலர்ச்சியைக் குறிக்கொண்டது ஆகும். குழந்தை சொற் கேட்டலில் பெற்றோர் பெறும் இன்பம் வெறுந் தற்காலிக இன்பம் மட்டுமன்று; இயற்கையில் வேர் விட்டு, உணர்ச்சியில் ஊன்றிப் பொருளாக வளர்ந்து இன வாழ்வு நோக்கிய இன்பம் ஆகும் என்பதை இவ்வழக்குக் குறித்துக் காட்டுகிறது.

கேட்டல் என்ற தமிழ்ச்சொல் காதால் கேட்டல், ஆணைப்படி நடத்தல் (செற்கேட்பவன், அதாவது கேட்டு நடப்பவன்

என்ற வழக்குக் காண்க) வினவுதல் (அதாவது கேள்வி கேட்டல்), ஒரு பொருளை வேண்டுமென்று இரந்து கேட்டல், பலர் கூறக் கேட்டுத் தெளிந்து கல்வியறிவு பெறல் (கேள்வி என்ற 42-ம் அதிகாரப் பெயர் காண்க) ஆகிய பலபடிப் பொருள்களையுடையது. இக்குறட்பாவில் கேட்டல் முதற் பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால் முன்னரே நீத்தார் பெருமை ஏழாம் குறட்பாவுரையில் குறிப்பிட்டபடி (27), புலன்களிடையே அறிவுக்குரிய புலன்கள் கண்ணும் செவியுமேயாகும் — காட்சி, கேள்வி ஆகிய சொற்களே அறிவுப் பொருள் தருவன. இவ்விரண்டிலும் காட்சியினும் கேள்வி சிறப்புடையது என்று திருவள்ளுவர் (411) கருதினர். ஆகவே இக்குறட்பாவில் கேட்டல் என்ற சொல், குழந்தை சொல் கேட்டலால் ஏற்படும் இனிமை இன்பமட்டிலுமன்றி, குழந்தை பின்னாளில் அடையும் கேட்டலின் மலர்ச்சியாகிய கேள்வியையும் இங்கே குறிப்பு வளமாகக் கொண்டுள்ளது என்னலாம்.

தமிழில் சொல் என்பது புகழையும் குறிக்கும். குழந்தையின் குரலினிமை கேட்கும் பெற்றோர் அக்குழந்தையின் புகழ் அவாவிலும் மகிழ்வர் என்பதும் இங்கே தொனிப்பொருளாக இயன்றது என்னலாம்.

கேட்டல் புலன்களில் உச்ச உயர்புலன். புலன்களுடன் தொடர்புடையதாகப் பண்டையோர் கருதிய ஐம்பூதங்களிலும் இப்புலன் உச்ச உயர் பூதமாகிய வான் குறித்தது. வான் புறப்பண்பாக மழையையும், அகப்பண்பாகச் சித்து அல்லது சிற்றுயிர்ப் பண்பையும் சுட்டிற்று (குறட்பா 13, 16 உரை காண்க). இதனால் கேள்வி இங்கே குழந்தையின் அழியா இன வாழ்வு வளமும் குறித்ததாதல் வேண்டும்.

செவிக்கு இன்பம் என்ற முடிவு உடற்கு இன்பம் எனத் தொடங்கிச் செவிக்கு இன்பம் எனத் தொகுத்து இன்ப மலர்ச்சி காட்டிற்று.

சிறப்புரை: குழந்தை தொட்டதெல்லாம் இன்பம், இது புறவாழ்வு இன்பம் (முன் குறட்பா). ஆனால் தாய்

தந்தையருக்குக் குழந்தையின் மெல்லுடல் இன வாழ்வு நினைவூட்டுவதாகும். ஆகவே அது பெற்றோர் தம் உடலில் வந்து படப்பெற்றால் இன்னும் பேரின்பமாகும். ஏனெனில் இது அக இன்பம். இதுபோலவே குழந்தை மூச்சு மணம், முத்தச் சுவை. குழந்தை கைகால் ஆட்டுவது காணும் காட்சி. குழந்தை முகபாவம், புரியாக் கீச்சுக் குரலின் பொருளிலாப் பொருட்சுவை உணர்வு ஆகியவை குழந்தை மூலம் பெற்றோர் உளத்தில் இனத்தின் வருங்கால வளம் பற்றிய கருத்துத் தூண்டும் இன்பமாகும். ஆனால் குழந்தை குரலே தந்தையை ஐம்புல உச்சிக்குக் கொண்டு சென்று ஆறும் புல இன்பத்தில் தவழ விடும் தன்மை வாய்ந்தது ஆகும். அது அக இன்பத்திலும் அக இன்பமாகும்.

இனத்தின் இனந்தருவளம், இனத்தின் பழம் பண்பு வளம் கற்பு. இனத்தின் வருவளம், இனத்தின் புதுவளம், இன்பத்தின் எதிர்காலப் பண்பு வளத்தை முன்னிழலிட்டுக் காட்டும் இன்ப விதை வளம், குழந்தை இன்பம்.

பொருள்வளம்: *(1)* திருவள்ளுவரின் கவிதையாற்றலும் சொல்லழகும் உச்சநிலை அடைந்துள்ள குறட்பாக்களில் இக்குறட்பா குறிப்பிடத்தக்க ஒன்று. கவிதையழகிற் சிறந்த இவ் வதிகாரம் குழந்தை இலக்கியக் காப்பியமாகிய ஓர் இமயமலையாகவும், அதில் இன்ப வாழ்வு குறித்த மூன்று குறட்பாக்களும் அவ்விமய மலையின் இன்ப முகடுகளாகவும், இக் குறட்பா அவற்றுள் உச்ச உயர் இன்ப முகடாகவும் விளங்குகிறது என்பது மேலே குறிக்கப்பட்டுள்ளது.

இவ் உச்ச உயிர் இனிமைக்குப் பல நுண்ணய நுட்பக் கூறுகள் உதவுகின்றன என்னலாம்.

முதலாவதாக, இக் குறட்பாவில் வல்லோசை மெல்லோசை இடையோசைகளும், அங்காப்பு, அரை

அங்காப்பு, இடுக்கம், குவிவு ஆகிய எல்லா வகை முயற்சிகளையுமுடைய உயிரொலிக் குறில்களும் நெடில் களும் சரிசமமாய் வந்துள்ளன—அத்துடன் மென்மை விஞ்சியும், வல்லிசைகள் இரட்டித்து வந்ததால் அமர்த்த ஓசையுடையனவாகியும் அமைகின்றன. குறட்பாவின் வண்ண இனிமைக்கு இவை உதவின.

இரண்டாவதாக, இக் குறட்பாவில் காய்ச் சீரும் மாச்சீரும் விளச் சீரும் அவற்றின் வகைகளும், காய் முன் நேராகிய வெண்சீர் வெண்டளையும், மா முன் நிரை அல்லது விள முன் நேர் ஆகிய இயற் சீர் வெண்டளையும் அவற்றின் பேதங்களும் விரவி வந்ததுடன், முந்தியவையே விஞ்சிக் குறட்பாவுக்கு இனிமை கலந்த செப்பலோசை அளித்துள்ளன. இவை ஒன்றன்பின் மற்றொன்றாய் மாறி மாறி அடுக்கி நடமிட்டு வரும் அழகு நயம் வாசித்தே உணரத் தக்கது.

முதலடியின் நடுப்பகுதி ஆகிய இரண்டு சீர்களும், [இரண்டாவது மூன்ருவது சீர்கள்] முரண் மோனையாகவும், முதல் இறுதிச் சீர்கள் மோனையாவும் வந்த நயம், இசைப் பாட்டில் தனிச் சீர் தரும் நயம் போன்றதாகும். இரண்டாம் அடியில் இலக்கணப்படி மோனையே இல்லை, முற்றும் முரண் மோனையே என்று கூறத் தோற்றும். ஆனல் தமிழிலக்கணம் முற்றும் வெளிப்படக் காணாத ஓர் ஓசை இன்பம் இதில் உண்டு. முதற் சீரின் சொற் கேட்டல், இறுதிச் சீரின் செவிக்கு ஆகிய இரண்டிலும் சகரமே முதல் ஒலி. அதனுடன் இசைந்து வந்த உயிரொலிகள் ஒ, எ என்பன. ஒலியியல் முறைப்படி இரண்டும் நடுநிலை

அங்காப்பு உயிர்கள், குறில்கள். அவற்றிடையே உள்ள வேற்றுமை ஆவதெல்லாம் முன்னது முதல் நா ஒலி, பின்னது நுனி நா ஒலி; முன்னது குவிவு ஒலி, பின்னது குவி விலா ஒலி என்பவையே. இத்தகைய முரண் ஒலி இணைவு இனிதாதல் செவி உணர்வால் காணலாம்.

முதலடி முதற் சீர் 'மக்கள் மெய்', இரண்டாமடி முதற் சீர் 'சொற் கேட்டல்' ஆகிய இவை தமிழ் இலக்கணப்படி இன எதுகை. ஆனால் திருவள்ளுவரின் கவிதை மாயம் இவ் இன எதுகையையே ஓசை வேற்றுமை மூலம் முற்றெதுகையினும் நயமிக்க தாக்கியுள்ளது. ஏனெனில் மக்கள் மெய் என்ற சீரில் முதலசையும், சொற்கேட்டல் என்ற சீரில் இரண்டாம் அசையும் எடுத்திசைக்கின்றன. இதுவே இவ் எதுகை நய மாயத்தின் மறை திறவு என்று கூறலாம்.

(2) உடம்பு என்ற பொருள் கொண்ட 'மெய்', 'உடல்' என்ற இரு சொற்கள் குறட்பாவில் வருதல் பற்றிய பொருள் வளம் முன்னரே விளக்கவுரையில் விரித்துரைக்கப்பட்டது. அத்துடன் குறட்பா வாசிப்பவர்க்கு இவ் விரட்டுற மொழிதல் தோன்றாமல் 'மெய்' என்பது 'மக்கள் மெய்' என ஒரு சீரினுள் அடங்கி, மக்கள் என்ற முதலசையின் எடுத்திசைப்பின் பின்னால் ஒடுங்கியும்; 'உடற்கின்பம்' என்பதில் உடல் என்பது முனைப்பாய் எடுத்திசைத்தும் வந்தன. இந்நிலை குறட்பாவின் சொற்பொருள் ஓசை இனிமைக்கு மிகவும் உகந்ததாய் அமைந்துள்ளது.

மெய், உடல் என்ற சொல் வேறுபாடுகளின் பொருள்வளம் விளக்கவுரையிலும்; மெய் என்பது

எடுப்பிசை யின்றி மக்கள் என்ற சொல்லுடன் ஒதுங்கியும், உடல் என்பது எடுப்பிசைப்பாகவும் வந்ததால் ஏற்படும் இனிமை நயம் மேலே இப் பகுதியிலும் விரிக்கப்பட்டன. பிந்திய செய்திக்கு வேறும் தனிப் பொருள் வளம் உண்டு.

குடும்பத் தளத்தில், சமுதாய வாழ்வுத் தொடர்பு தொடங்கும் நிலையுடைய காதற் பருவம் நீங்கலாக, எங்கும் உடல் உயிர் அல்லது உடல் உள வேறுபாடு பற்றி எவரும் கருதுவதே யில்லை. சமுதாயத் தளத்திலோ, குடும்பத் தளத் தொடர்புடைய உச்ச உயர் திறப் பண்பாகிய நட்பு நீங்கலாக, இவ் வேறுபாடு கருதப்படுதல் ஒருதலை—உடல் வேறு, உயிர் உளங்கள் வேருக இங்கே நிலவுகின்றன. குடும்பத்தில் கொட்டப்படும் உணர்ச்சிகள் சமுதாயத்தில் குறிப்பாக அன்றி வெளிப்படக் காட்டப்படாமல் அடக்கப்படுதல் இதனாலே யாகும். உடையும் ஒப்பனையும் குடும்பத்தில் முனைப்பாகாமல், சமுதாயத்திலேயே முனைப்பாதலும் கண்கூடு. ஆனால் இனத் தளத்தில் உடல் தாண்டி உயிர் உளங்களே கருதப்படுகின்றன — உயிர் உளங்களின் ஒரு பீடமாகவன்றி உடல் தனித்துக் கருதப்படுவதே யில்லை. உருக்கடந்த உயிரைப் போலவே, உருக் கடந்த ஒரு கடவுட் பண்பையும் சமுதாயத் தளத்திலுள்ள சமயம் உளங்கொள உணர முடியாததன் காரணம் இதுவே.

பெற்றோர் குடும்பநிலை கடந்து சமுதாயநிலை அடைந்தோர். அவர்கட்குப் பொதுவாக உடலுயிர், உடல் உள வேறுபாடு உண்டு. அவர்கள் உடலின்ப நிலை கடந்தவராயினும், உடல் இன்பம் விட்டவரல்லர்.

உடற்கின்பம் என்ற சீரில் உடல் என்பதன் மீதுள்ள எடுத்திசைப்பு இதனைக் குறித்துக் காட்டுகிறது. ஆனால் மக்களைக் கண்ட மாத்திரத்தில் பெற்றோர் தம்மையும் மறந்து விடுகின்றனர்—தம் உடலையும் மறந்து உயிரின்பம், இன இன்பத்தில் ஈடுபடுகின்றனர். மக்கள் மெய் என்பதில் மக்கள் என்ற சீர்ப் பகுதியே எடுத்திசைத்து, மெய் என்ற பகுதி கிட்டத் தட்ட நலிவிசைப்புற்று, மக்கள் என்ற ஓசையினுள்ளேயே ஒதுங்கி ஒடுங்கி நிற்பதனால், பெற்றோர் தாம் வேறு, மக்கள் வேறு என்ற உணர்வையும், மக்கள் உடல் வேறு உயிருளம் வேறு என்ற உணர்வையும் இழந்து, தம் உடல் மூலமாக மக்கள் உள உயிர் ஆகியவற்றின் வருங்கால வாழ்வு வள ஆர்வத்திலேயே இழைந்து மகிழ்கின்றனர் என்பது குறித்துணர்த்தப் பட்டது.

உடற்கு என்ற சீர் போல, செவிக்கு என்ற சீர் குறட்பாவில் முனைப்பாய் இல்லை. சொற் கேட்டல் என்பதன் எடுத்திசைத்த இரண்டாம் அசைக்குப்பின் இன்பம் என்ற இரண்டாம் சீர் அதனினும் ஓசை குறைந்து படுத்திசைத்தும், செவிக்கு என்ற இறுதிச் சீர் மேலும் ஓசை குறைந்து நலிந்திசைத்தும் வந்தன.

தம் மக்கள் இன்பத்தை ஐம்பொறி வழியாகவும் பெறும் பெற்றோர், தம் முதல் பொறியாகிய மெய் அல்லது உடல் வகையிலேயே தம் மக்களின் உடல் உயிர் உள வேறுபாடு மறந்துவிடுகின்றனர்—தம் மக்கள் இன வாழ்வு ஆகிய இன உயிர்ப் பாச இன்பத்தையே தம் உடலின்பமாக, உடலூடு பெறும் இன இன்பமாக நுகர்கின்றனர். ஆனால் இதிலும் இன்ப

வாயிலான உடலுணர்வு அவர்களுக்கு உண்டு. உடற்கு என்பதன் எடுத்திசைப்பு, இதனைத் தொனிப் படுத்திக் காட்டுகிறது. ஆனால் தம் மக்கள் மூலம் பெற்றோர் பெறும் இன்பம் மற்றப் புலன்கள் வகையில் படிப்படியாக உயர் படி இன்பத் தளமாக, தம் பொறி புலனும், உடல் உள உயிரும் படிப்படியாக மறந்த இன்பத் தளமாக உயர்வுற்று மலர்ச்சியடைகிறது. அவர்கள் படிப்படியாகத் தம் பொறி மறந்து புலன் இன்பத்திலும், புலன் மறந்து ஆரும் புலனாகிய உள உயிர் இன்பங்களிலும், உள உயிர் மறந்து, தம் தனி உயிர்ப் பண்பே மறந்து இன இன்பத்திலும் இழை கின்றனர். சொற் கேட்டல் என்பதன் எடுத்திசைப்பும், இன்பம் என்பதன் படுத்திசைப்பும், செவிக்கு என்ப தன் நலிவிசைப்பும் படிப்படியாக இறங்கி இசைக்கும் குறிப்பே பெற்றோரின் இத் தன்னை மறந்த, தம் தலை முறை, தம் சமுதாயப் படி மறந்த இன இன்ப இழை வினைச் சந்த உருப்படுத்திக் காட்டுகிறது.

(3) இக் குறட்பா மோனை எதுகை மிகுதி இல்லாமலே, இருக்கும் மோனையும் எதுகையும் அரை குறையாக நின்றே, செந்தொடைச் சந்த இன்பம் தந்தது. மக்கள் இன்பம் நுகர்பவர் வாழ்வில் பிற வகையில் துன்பமே மிகுந்திருந்தாலும், அரைகுறை இன்பமே இருந்தாலும், மக்கள் இன்பம் ஒன்றே எல்லா நிலைகளையும் நிறை இன்ப நிலை ஆக்கிவிடும் என்ற சந்தக் குறிப்பு வளத்தை இது தந்துவிடுகிறது. தவிர, குறட்பாவில் காய்ச் சீரும் மாச்சீரும் விளச் சீரும் வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளைகளும் விரவி வந்ததோடு, காய்ச் சீர்களே எடுத்திசைத்தும் வந்துள்ளன. இன்ப துன்ப மாறுபாடற்றுப் பல்சுவை

இன்பங்களே நிரம்பிய 'மக்கள் இன்ப' வாழ்வை இது குறித்துக் காட்டுகிறது. மக்கள் மெய் உடற் கின்பம் என்ற இரண்டு காய்ச் சீர்களிலும் முதலசை எடுத்திசைத்தும், சொற்கேட்டல் என்ற காய்ச் சீரில் மட்டும் இரண்டாம் அசையாகிய கேட்டல் என்பதன் முதற் பகுதி எடுத்திசைத்தும் வந்தன. உடல் முதலிய தொடக்கப் பொறி இன்பங்களினும் செவி வழி கேட் டல் குறிக்கும் ஐந்தாம் ஆரும் புல இன்பங்களின் அகநிலே இன்ப உயர்வை இது குறித்தது.

கேட்டல் என்பதன் எடுத்திசைப்பு மூலம் செவி வழி இன்பமே, நரம்புகளுடன் தொடர்புடையதாத லால், உடலே யாழாக, உடல் நரம்புகளே யாழ் நரம்புகளாகக் கொண்டு அதிர்வுற்று, ஆகமெலாம் ஊடுருவி அகமெலாம் பரவுகிறது என்பது பெறப்படு கின்றது.

(4) இக் குறட்பாவில் அதிகாரத்தின் முன் குறட் பாக்களேப் போலவே பெற்ருேருக்கு என்ற சொல் அவாய் நிலேயாய் வருகிறது. ஆனுல் 'பெற்ருேருக்கு' என்ற அந்த அவாய் நிலேயைச் சுட்டு முதலாகக் கொண்ட இன உறவுச் சுட்டாகிய 'தாம்' அல்லது 'தம்' என்பது அதிகார மூன்ரும், நான்காம் குறட்பாக் களில் [63, 64] முறையே இரு தடவைகளும் ஒரு தடவையும் வந்திருக்க, இங்கே அந்த அவாய்நிலே சுட் டிய சுட்டாகிய 'தாம்' என்பதும் முற்றும் அவாய்நிலே யாகவேவந்துள்ளது காணலாம். இக்குறட்பாவையும் முன் குறட்பாவையும்போல இனவாழ்வுத் தொடர்பே கொண்ட—வரு குறட்பாவில் [66] கூட, 'தம்' ஒரு தடவை வெளிப்படையாக வந்துள்ளது நோக்க, இக்

குறட்பாவில் அதன் முற்றவாய்நிலைத் தன்மை தனிப் படக் குறிப்பிடத் தக்க முக்கியத்துவமும் தனிக்குறிப்பு வளமும் உடையது என்று காணலாம். அத்துடன் 'தம்' என்ற இவ்வவாய்நிலைச் சொல் 'மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்' என்ற குறட்பா முதல் வாசகத்தில் 'தம் மக்கள்' எனவும், 'தம் உடற்கு' எனவும், 'தாம் தீண்டல்', 'தமக்கு இன்பம்' என வும்; இதுபோலவே 'மற்று அவர் சொற் கேட்டல் செவிக்கு இன்பம்' என்ற இரண்டாம் வாசகத்தில் 'தம் செவிக்கு' எனவும், 'தாம் கேட்டல்', 'தமக்கு இன்பம்' எனவும், கிட்டத்தட்ட எல்லாச் சொற்க ளுடனும் சொல்தோறும் இன உறவுடையதாய் அமை கிறது. தான் என்ற உணர்வுடன் பிறந்து வளர்ந்த இரு பாற் பெற்றோரும் காதல் வாழ்வில் மறு பாலா ருடன் தம்மை ஒன்ற வைத்துத் தாம் என்ற உணர் வுடையவராகியும், மக்கள் இன்ப வாழ்வு காரணமாக இன்னும் ஒரு படி மேற்சென்று 'தம்' என்ற உணர் வும், அவ்வுணர்வும் கடந்த நிலையும் தம் வாழ்வின் ஒவ்வொரு கூறிலும் அணு அணுவாகச் சென்று இழையப் பெறுகின்றனர் என்ற மெய்ம்மை இதனுல் பெறப்படுகிறது.

குறட்பாவின் முதல் சொல்லாகிய மக்கள் வெறும் பன்மைச் சொல்லாக மட்டும் பயன்படுத்தப்பட வில்லை. இருபாற் பொதுச் சொலலாகவும் பயன்பட்டு, அத்துடன் வருங்கால இன உறுப்பினராகிய மக்கள் அல்லது மனிதர் என்று பொருளும் பயப்பது என்பது அதிகார முன்னுரையிலும் முன் குறட்பாக்களிலும் சுட்டப்பட்டது. இதன் பொருள்வளம் காண்டல் அரிதன்று. மக்கள் இன வாழ்வே, பெற்ருேர் இன

வாழ்வின் தொடர்ச்சி. பெற்ேறார் தம் சென்ற கால இன வாழ்வை மறந்து, அதன் தலைமுறையாகிய தற்கால சமுதாயமும் மறந்து, மக்கள் மூலமாக வருங் கால மக்கள் சமுதாயங்களின் அதாவது தலைமுறை களின் வாழ்வில், வருங்கால இன வாழ்வில் இழைந்து சொக்கி ஈறிலா இன்பத்தில் ஒன்றுபட்டு வரும் நிலையை இது குறிக்கிறது.

'சொற் கேட்டல்' என்பதில் சொல் என்பதன் குறிப்பு வளம் மேலே விளக்கவுரையில் சுட்டப் பட்டது. அது குழந்தையின் உருவும் பொருளும் இலாக் குதலைக் குரல், உருவும் பொருளும் குறைபட்ட மழலைச் சொல், பொருளுடைய வருங்காலப் பேச்சுச் சொல், இவற்றின் பயனாகிய இனப் புகழ் [சொல்-புகழ்] ஆகிய குதலை-மழலை-சொல்-புகழ் மலர்ச்சிகளை எடுத்துக் காட்டிற்று.

(5) உடம்பு என்ற ஒரே பொருளையுடைய 'மெய்', 'உடல்' என்ற இரு சொற்கள் ஒரே குறட்பாவில் முறையே மக்கள் உடம்பையும் பெற்றோர் உடம்பை யும் குறிக்க வழங்கப் பெற்றதன் குறிப்பு வளம் ஏற் கெனவே விளக்கவுரையிலும், பொருள்வளப் பகுதி யில் முன்னரும் தெரிவிக்கப்பட்டன. ஆனால் இவற் றின் குறிப்புக்கள் இன்னும் பல உண்டு. இரு சொற் களும் உடம்பு என்பதை மக்கள் வகையில் உடல் என்றும், பெற்றோர் வகையில் உடற்பொறி என்றும் வேறுபடக் குறித்தன. அத்துடன், பெற்றோர் வகை யில் அது உடல் வேறு உயிர் உளம் வேறு என்று அவர்கள் இதுவரைக் கொண்டு வந்துள்ள உணர்வு நிலையையும்; மக்கள் வகையில் அவர்கள் மூலம்

பெற்றோர் அவ்வுணர்வு இழந்த நிலையையும்; மக்களை அப் பெருமூேர் உடல் வேறு உயிர் உளம் வாழ்வு வேருகக் கொள்ளாது முழு இன உடலுயிர்ப் பிழம் பாக உணரும் நிலையையும் குறித்தது. [தமிழில் உயிர் மெய் என்பது ஓர் இணை ஒலி எழுத்து வகை மட்டு மல்ல, உடம்போடு இணைந்த உயிரும் குறித்தது காண்க].

தவிர, உடல் ஒரு பொறி. அதன் மூலம் உணரத் தகும் பொருட்கள் பெரிதும் உயிரிலாப் பொருள் களே—உயிர்ப் பொருள்களிலும் அது உடலாகிய அம் முதற் பொறியை மட்டுமே உணரவல்லது. இங்ஙனம் உடற்பொறி இன்னோர் உடற்பொறியை யன்றிப் பிற பொறி உணர்வுத் தொடர்பற்றதாகும். மற்றப் பொறி கள் தம் பொறித் தொடர்பும் பிற பொறித் தொடர்பும் கொண்டுள்ளன என்பதை நுனித்தாராய்வோர் காணலாம். எடுத்துக்காட்டாக நாக்கு மெய் வாய் இரு சுவையும் பொருளின் பண்புச் சுவையும் உணர் வது. தவிர செவியுணர்வுக்குரிய சொல் அதன் செயலே. மூக்கு பொருள் கடந்த மனமாகிய பண்புச் சுவை உடையது—மெய் வாய் நாக்குச் சுவை உடை யது. கண் எல்லாப் பொருள் உடற்பொறியும் ஒலி, இருள், அசைவு, தொலைவு, சேய்மை முதலிய பல பண்புகளையும் அறிவது. செவியோசை பொருளின் இயக்கப் பண்பே, இயக்கமாகிய அதிர்வின் பண் பாகிய ஒலியே உணரவல்லது. ஓசையின்மை யுணர் வும் ஒலியின் இனிமை கடுமை உணர்வும் அதற்கு உண்டு. அது கேட்கும் ஒலிகளிடையே பல பொருள் ஒலிகள் மட்டுமன்றி, நாவின் மொழி ஓசையும் இடம் பெறும்.

தன்னினமாகிய ஒரு பொறியே காண்பதாயினும் உடற்பொறி பிற பொறிகளின் மலர்ச்சிக்கு இடமாக வும், அப் பொறிகளையும் தன்னகத் தடக்கியதாகவும் அமைகிறது.

உடல், மெய் என்ற சொற்கள் இம் மலர்ச்சியைக் குறித்துக் காட்டுவன ஆகும். ஏனெனில் உடல் ஒரு பொறி. மெய், எல்லாப் பொறிகளையும் உள்ளடக்கிய முழு உடம்பு. அது மட்டுமன்று. உடல் உடம்பின் உயிரிலா நிலைக்குரியது. மெய் அதன் உயிர்நிலைக் குரியது. உடம்பில் உயிர் நீங்கின், உடல் உடலாகக் கூட, ஒரு பொறியாகக்கூட இயங்காது. ஆனால் மெய் உயிரோடு இணைந்த உடலாதலால், உடலழிந்த பின் னும் அடுத்த தலைமுறைப் பிள்ளை, பிள்ளையின் பிள்ளை உடலாய் நீடிப்பது ஆகும். மெய் ஒருவர் உடலின் உயிர்நிலைப் பகுதி, அவர் உடலழியினும் அழியாது, புதல்வர் புதல்வியர் உடல் வழி நின்று நீடிக்கும் இன உடலாகும் என்ற தமிழர் தத்துவத்தை 'மெய்' என்ற சொல் தாங்கி நிற்பதனாலேயே அதற்கு 'உடம்பு' என்ற பொருளே யன்றி, நிலையான மெய்ம்மை என்ற பொருளும் இன்றளவும் வழங்குதல் காண்கிறோம்.

மெய், உடல் என்ற இரு சொல் வழக்குக்கு இன்னும் ஒரு காரணம் உண்டு. உடற் பொறிவழி பெற்றோர் பெறும் மக்களின்பம், மக்களின் அதே பொறியாகிய உடல் வழி பெறும் இன்பமே. ஆனால் மற்றப் பொறிகளினூடாக அவர்கள் பெறும் மக்கள் இன்பம் வகையில் அதே பொறி ஊடாகவும் ஆவ தில்லை. உச்ச உயிர்நிலைப் பொறி வகையில், செவி வகையில், இதனைக் காணலாம். ஏனெனில் ஐந்தாம்

பொறியாகிய செவி வழி உணரப்படும் ஓசையின்பம், நா வழி வரும் இன்பம் — அதுமட்டுமன்று — அது நாவின் புலனுணர்வால் வருவதன்று—ஓசையும் சொல்லும் நாவின் புலன் வழிச் செயல்களன்று, அதன் கருமேந்திரியச் செயல் ஆகும். அத்துடன் ஓசை, சொல், பொருள், புகழ் என்ற மலர்ச்சி நாவிற் பிறந்து செவியில் படர்ந்து அகத்தே மலரும் மொழி என்ற இந்தப் பொறி புலன் கடந்த அக மெய்ம்மைக்கே உண்டு.

உடல், மெய் என்ற சொல் வழக்கு இவ்வாறு உயிரில் பொருளாய்த் தொடங்கி, உயிர்ப் பொருளான உடம்பாகி, உயிரேயான அக மெய்ம்மை நோக்கிய மலர்ச்சியையும் மனித இன வளர்ச்சியையும், அதில் மக்கள் இன்பம் பெறும் மைய இடத்தையும் சுட்டிக் காட்டுவது ஆகும்.

(6) இக் குறட்பாவில் 'இன்பம்' இரு தடவை வருகிறது. இரண்டும் படுத்தலோசை யாயினும், பின்னது முன்னதிலும் நலிந்திசைத்து, இன்பம் தன்னை மறந்த இன்பமாக, அக இன்பமாக மலர்வது சுட்டிக் காட்டிற்று.

தனிக் குறிப்புக்கள்: (1) இக் குறட்பாவுக்குக் காலிங்கர் தரும் பொழிப்புரை மிகு விளக்கமும் தனிக் குறிப்பும் உடையது.

' இனிய புதல்வர் வளர்ந்தும் தளர்நடையிட்டும் வந்து ஏறி. மற்று அவர் மெய்யினைத் தீண்ட, அதுவே இல் வாழ்வோர்க்கு உடற்கு இன்பமாவது: பின்பு அறிவுடையராயின விடத்து எழுத்தொடு புணர்ந்த சொல் பிறந்ததாயின், மற்று அவர் எழுத்தொடு புணர்ந்த சொல் கேட்டல் முன்

பினும் தமது செவிக்கு இனிய இன்பமாம்' என்பது அவர் பொழிப்புரை.

'இனிய புதல்வர்......இனிய இன்பம்' ஆகிய சொற்கள் இக் குறட்பாவில் காலிங்கர் கொண்ட தனி ஈடுபாடு காட்டுகின்றன என்னலாம். அத்துடன் முன் குறட்பாவில் பரிமேலழகர் தம் விளக்கவுரையில் எடுத்துக் காட்டிய அழகிய சங்கச் செய்யுளை [புறம் - 12[illegible]] இங்கே காலிங்கர் உளத்துட் கொண்டு உரை எழுதுகிருரென்று தோற்றுகிறது.

காலிங்கர் உரையின் பண்புகள் கீழே வரும் தனிக் குறிப்புப் பகுதிகளில் ஆங்காங்கே சுட்டப்படும்.

[2] இக் குறட்பாவுக்கு வி. ஆர். ஆர். இராமச்சந்திர தீட்சிதரின் ஆங்கில மொழிபெயர்ப்பு அழகும் செறிவும் உடையது. 'உடலின்பம் மக்களைத் தொடுவது; செவியின்பம் அவர்கள் மழலை' என்பது அவர் பொருள்கோள்.[1]

[3] கிட்டத்தட்ட எல்லாப் பழைய, புதிய உரையாசிரியர்களும், மொழிபெயர்ப்பாசிரியர்களும் இம் மணிவிளக்கவுரையைப் போலவே குறட்பாவின் முதல் வாசகத்தில் 'மக்கள் மெய் தீண்டல்' என்பதையே எழுவாயாகவும், 'உடற்கு இன்பம்' என்பதையே பயனிலையாகவும்; அது போலவே இரண்டாம் வாசகத்தில் 'அவர் சொற் கேட்டல்' என்பதையே எழுவாயாகவும், 'செவிக் கின்பம்' என்பதையே பயனிலையாகவும் கொண்டுள்ளனர். பரிமேலழகர் ஒருவர் மட்டுமே 'உடற்கு இன்பமாவது மக்கள் மெய் தீண்டல்' என்றும், 'செவிக்கு இன்பமாவது அவர் சொற் கேட்டல்' என்றும் இரு வாசகங்களிலும் எழுவாய் பயனிலைகளை நேர் மாருகக் கொண்டார். ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் வி. ஆர். ஆர். இராமச்சந்திர தீட்சிதரும் இம் மரபே பின் பற்றியுள்ளார் என்பதை மேலே காணலாம்.

இலக்கண முறைப்படி ஏனையோர் உரையே இம் மணி விளக்கவுரையை ஒத்திருப்பினும், பரிமேலழகர் உரையே

---

1. The delight of the body is the touch of one's children, The delight of the ear is their lisp.

வள்ளுவப் பொருள் நோக்கிய சிறப்புடையது என்னலாம். பொருண்மையில் அது மணிவிளக்கவுரையை நோக்கி இருப்பது நுனித்துக் காணத் தக்கதாகும். ஏனெனில் 'உடற்கு இன்பமாவது' என்ற தொடர், உடலுக்குச் சிறந்த இன்பமாவது' என்றும்; 'செவிக்கு இன்பமாவது' என்பதும் இது போலவே 'செவிக்குச் சிறந்த இன்பமாவது' என்றும் தொனிப் பொருள் தருவது காணலாம்.

[4] மற்று என்ற இடைச் சொல்லின் செறிவான பொருள்வளம் விளக்கவுரையிலும் பொருள்வளப் பகுதிகளிலும் இம் மணி விளக்கவுரையில் விரிவுற விளக்கப்பட்டது. ஆனல் பரிமேலழகர், காலிங்கர் ஆகிய இருவர் தவிர, மற்றெல்லாப் பழைய, புதிய உரையாசிரியர்களும், மொழிபெயர்ப்பாசிரியர்களும் அதை வறிதே அசை என உரை செய்யாது விட்டுச் சென்றுள்ளனர். பரிமேலழகர் யாதும் உரை கூருமலே விளக்கவுரையில் அதனை 'வினைமாற்று' என்று குறித்துச் சென்றுள்ளார்.

காலிங்கர் இவ் விடைச் சொல்லைப் 'பின்பு' எனப் பொழித்துரைத்தார் என்று தோற்றுகிறது.

[5] 'மக்கள் மெய் தீண்டல்' என்பதில் 'தீண்டு' என்ற வினைப் பகுதிக்குப் பெற்ருேரையே தோன்ரு எழுவாயாகக் கொண்டு, 'மக்கள் மெய்' என்பதனை மக்களின் மெய்யினை எனச் செயப்படு பொருளாக அமைத்துப் பொருள் கூறினர் பரிமேலழகர், பரிதியார், முனைவர் பேராசிரியர் மு. வரதராசனர், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி, மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் கோபாலக்குறுப்பு ஆகியோர்.

மக்களை எழுவாயாக்கி, மெய் என்பதைப் பெற்ருேருடைய உடம்பு எனக்கொண்டு அதனையே செயப்படுபொருளாகக் கொண்டவர்கள் மணக்குடவர், காலிங்கர், பேராசிரியர் இலக்குவனர், புலவர் ந. சி, கந்தையா, கவிஞர் இராமலிங்கனர், புலவர் குழந்தை, ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூ ஆகியோர்.

ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் வி. ஆர். ஆர். தீட்சிதர், இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராஜ் நாயுடு ஆகியோர், 'மக்களின் உடல் தீண்டுகை' [சந்தான் காதன் ஸ்பர்ச] என்றும், 'குழந்கைளின் தீண்டுகை [1]' என்றுமே குறித்துள்ளதனல், அவர்கள் கருத்தில் யார் யாரைத் தீண்டினர் என்னும் இலக்கணக் குறிப்பினை நாம் விளக்கமாக உணர இயலவில்லை.

[6] 'மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்' என்பதற்கு 'நம் குழந்தைகள் நம்மைத் தீண்டினல் (தழுவும் போது) நம் உடலுக்கு இன்பம் தரும்' என்று பொருள் கூறினர், பேராசிரியர் முனைவர் இலக்குவனர். கவிஞர் இராமலிங்கனர், 'நாம் பெற்ற குழந்தைகளின் உடல் நம் மேல் படுவது நம்முடைய உடலுக்கு இன்பம்' என்று உரை தந்துள்ளார்.

'தீண்டல்' என்பதற்குக் கவிஞர் உரை இம் மணிவிளக்கவுரை நோக்கியுள்ளது காணலாம்.

பேராசிரியர் இலக்குவனரைப் போலவே, 'தீண்டல்' என்பதற்குப் பரிமேலழகர், பரிதியார், புலவர் குழந்தை ஆகியோர் 'தீண்டுதல்' என்றே உரைத்தமைந்தனர். மணக்குடவர், 'சார்தல்' என்றும்; பேராசிரியர் முனைவர் மு. வரதராசனர், புலவர் ந. சி. கந்தையா பிள்ளை ஆகியோரும் ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூவும் 'தொடுதல்' என்றும் பொருள் கூறினர்.

[7] பரிமேலழகர் தம் விளக்கவுரையில் இலக்கணக் குறிப்பு விளக்கமாக, 'தீண்டல். கேட்டல் என்னும் காரணப் பெயர்கள் ஈண்டுக் காரியங்கள் மேல் நின்றன' என்று கூறியுள்ளார். தீண்டல், கேட்டல் ஆகிய தொழிற் பெயர்கள் அத் தொழில்களின் விளைவாகிய தீண்டல் இன்பம், கேட்டல் இன்பம் ஆகியவை குறித்தன என்பது அவர் கருத்து.

இக் கருத்து மூலம் பரிமேலழகர் இம் மணிவிளக்கவுரை நோக்கியுள்ளது காணலாம். [பொழிப்புரை, விளக்கவுரை

1. The touch of one's children.

காண்க]. 'தீண்டல்' என்பது 'தீண்டப் பெறுதலாகிய பேறு' என்றும்; 'கேட்டல்' என்பது 'கேட்கும் பேறு' என்றும் இம் மணிவிளக்கவுரையில் அச் சொற்கள் தொழிற்பெயரின் விளைவு [காரியம்] ஆகவே கொள்ளப்பட்டுள்ளன.

[8] 'பெற்றோர்க்கு' என்ற அவாய்நிலையும், அதன் இனச் சுட்டு உறவு இடைச் சொல்லாக வந்த 'தம்' என்ற சொல்லும் இம் மணிவிளக்கவுரையில் தந்துரைக்கப்பட்ட படி உரையாசிரியர் பலரால் தந்துரைக்கப்படவில்லை. ஆயினும் புலவர் ந. சி. கந்தையா 'பெற்றோர்' என்றும்; காலிங்கர் 'இல்வாழ்வோர்க்கு' என்றும்; மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் கோபால குறுப்பு 'எல்லார்க்கும்' என்றும் அவாய்நிலை வருவித்துள்ளனர். தவிர, 'தம்', 'நம்' 'நாம் பெற்ற' முதலிய இனச் சுட்டு உறவு இடைச் சொற்களை 'மக்கள்', 'மெய்', 'உடற்கு' என்பவற்றுடன் ஆங்காங்கே மணக்குடவர், பரிதியார், கவிஞர் இராமலிங்கனார், புலவர் குழந்தை, பேராசிரியர் இலக்குவனார் ஆகியோர் வருவித்துள்ளனர் என்பது காணலாம்.

[9] 'சொற்கேட்டல்' என்பதில் 'சொல்' என்பதற்கு மணக்குடவர் 'சொற்களை' என்றும்; பரிதியார் 'வார்த்தை' என்றும்; காலிங்கர் 'பின்பு அறிவுடையவராயினவிடத்து எழுத்தொடு பிறந்த சொல்' என்றும்; பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார், புலவர் ந. சி. கந்தையா. புலவர் குழந்தை, பேராசிரியர் முனைவர் சி. இலக்குவனார் ஆகியோர் 'மழலைச் சொற்களை' அல்லது 'மழலைச் சொல்லை' என்றும்; கவிஞர் இராமலிங்கனார் 'அக் குழந்தைகளின் பேச்சை' என்றும்; இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடு 'மழலைப் பேச்சை' [தோத்லே போல்] என்றும்; ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி, 'கற்றறிந்த சொற்களுடன் கலந்த குதலைச் சொற்களை'[1] என்றும்; ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் வி. ஆர். ஆர். தீட்சிதர் அவர்கள் 'மழலையை'[2] என்றும்; ஆங்கில மொழிபெயர்ப்

1. Prattle mingled with the words that they have learnt.
2 Their lisp.

பாசிரியர் ட்ரூ 'அவர்களுடைய குரலோசையை'[1] என்றும் உரை தந்துள்ளனர். பரிமேலழகர் இதனைச் 'சொல்லை' என்றே உரை செய்தாலும், விளக்கவுரையில், 'மக்களது மழலைச் சொல்லே யன்றி அவர் கற்றறிவுடையராய்ச் சொல்லும் சொல்லும் இன்பமாகலின், பொதுப்படச் சொல் என்றார்' என விளக்கவுரை வழங்கியுள்ளார்.

இவ்வுரைகள் படிப்படியாக இம் மணிவிளக்கவுரை நோக்கி வந்து, காலிங்கர், பரிமேலழகர் உரைகள் கிட்டத் தட்ட இவ்வுரையின் குதலை—மழலை—சொல்—புகழ் மலர்ச் சிப் போக்கை நோக்கி அணுகியுள்ளன என்பதைக் காண லாம்.

[10] மெய், உடல் ஆகிய இரு சொற்களும் ஒருநிலைப் பட மெய் அல்லது உடல் அல்லது உடம்பு என்றே எல்லா உரையாசிரியர்களும் பொருள் கண்டுள்ளனர். புலவர் குழந்தை இரு சொற்களும் பெற்றோர் உடலையே குறிப்பதாக வும் கூறுகின்றார். ஏனெனில் மக்கள் பெற்றோர் உடலில் தீண்டுவதால் பெற்றோர் உடல் இன்பம் பெறுகிறது என்றே அவர் உரை செய்துள்ளார். இம் மணிவிளக்கவுரை கண்ட வேறுபாடும், குறிப்புப் பொருள் வளமும் உரையாசிரியர் எவரும் காணாதது என்பது குறிப்பிடத்தக்கது.

[11] 'உடற்கு' என்றவிடத்து 'உடல்' ஐம்பொறிகளில் ஒன்று என்பதனை உரையாசிரியர் எவரும் கண்டிலர். எனி னும், 'செவிககு' என்பதன் உரையில் மட்டும் ஐம்புலத்துள் ஒன்றான செவிக்கு எனப் பரிதியார் குறித்துள்ளார். ஆனால் முதற் புலனும் ஐந்தாம் புலனும் கூறப்பட்டதனால் ஏற்படும் முழுமை, முழுமை கடந்த மலர்ச்சிப் பொருள்வளம் உரை யாசிரியர் காணாதது என்பது தெளிவு.

[12] 'இன்பம்' என்பதை இரண்டிடத்திலும் எல்லா உரையாசிரியர்களும், 'இன்பமாவது', 'இன்பம் தரும்' என்றே பொருள் கொண்டுள்ளனர். சிலர் 'இன்பம்' இரண் டையும் எழுவாயாகவும் கொண்டுள்ளனர். அவற்றின் ஓசை

1. The sound of their voices.

இசைப்பு மூலம் ஏற்படும் தன்னை மறந்த இன்ப மலர்ச்சியை எவரும் கருதி நோக்கவில்லை.

66. செவிக்கினியன, குழலும் யாழும்: மனக்கினியன
மக்களின் மழலை!

[2]குழல் இனிது யாழ்இனிது என்ப. [1]தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

பொ-ரை: [1]*தம்முடைய புதல்வர் புதல்வியர் களின் அரைகுறைப் பொருள் முகிழ்க்கும் இனிய முதிரா இளஞ் சொற்களின் இன்னோசையைக் கேட்டு மகிழும் வாய்ப்பும் தகுதியும் பெருதவர்களாகிய பெற்ரோர்கள் தாம்,* [2]*வெறும் புல்லாங்குழலின் இசை இனிமையானது என்ரே, வெறும் யாழின் எழி லார்ந்த பண்ணிசை அதனினும் இனிமையானது என்ரே கருதி அமைவார்கள். குழந்தையின் மழலை யின்பம் இவ் விரண்டிலும் பார்க்க எவ்வளவோ இனிமையானது என்பதை அவ் வாய்ப்பும் தகுதியும் பெற்ற பெற்ரோர் அறிவர். (ஏனெனில் குழந்தையின் மழலைச் சொல் இன்பம் இவ்வினிமைகள் கடந்த பேரின்பம் ஆகும்).*

க-ரை: *புலன்கள் ஐந்திலும் சிறந்த, உயரிய அகநோக்கிய புலன் செவிப் புலனே. அது நுகரும் ஒலி-ஓசைகளில் சிறந்த, உயரிய அகநோக்கிய இன்னொலி இசையே. அவ் விசைக்குரிய கருவி களில் அகநோக்கிய இசை நுகர்வு தரும் சிறந்த, உயரிய கருவிகள் தொளைக் கருவி அதாவது உயிர்ப்புக் கருவிகளில் சிறந்த இயற்கைக் கருவி*

யான குழலும், நரம்புக் கருவி அதாவது அதிர்வுக் கருவிகளில் சிறந்த இயற்கைக் கருவியான யாழுமே யாகும். ஆயினும் இந்த உச்ச உயர் சிறப்பு வாய்ந்த இசைக் கருவிகளின் இன்பங்களும் கூட, அக நோக்கிய புற இன்பங்களே, புலன் சார்ந்த இன்பங்களே யாகும். அவை இன்ப மலர்ச்சிகளும் ஆகமாட்டா. ஆனால் பெற்றோர் நல்வாழ்வின் விளைவான மதலையரின்—புதல்வர் புதல்வியரின் குதலை—மழலை—சொல் மலர்ச்சி தரும் இன்பம் அகநோக்கிய இன்பம் மட்டுமன்று, அக நோக்கிய அக இன்பம்; மலர்ச்சி தரும் இன்பம், இன்ப மலர்ச்சி இன்பம் ஆகும். கருவிகளினும் கருவிகளின் விளைவாகிய இசை உயரியதாதல் போல, புற இசை இன்பத்தினும் உயரிய அக இசை இன்பமாக இக் குழந்தை இன்பம் பேரின்ப நோக்குகின்றது.

இலக். கு: தொகையுட்பட்ட வாக்கியங்கள் இரண்டு உள்ளடங்கலாக. இக் குறட்பாவில் இணைவாசகம் ஒன்றே. இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன:

1. தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் (இது எழுவாய்).

2. 'குழல் இனிது, யாழ் இனிது' என்ப (இது பயனிலை).

பயனிலையாக வரும் தொகையுள், பயனிலை வினையான என்ப என்பதன் செயப்படுபொருளாய் வரும் தொகையே 'குழல் இனிது, யாழ் இனிது' என்பது. இத் தொகைக் கூற்றில் அடங்கிய கூறுகளாக, 'குழல் இனிது' என்பதும், 'யாழ் இனிது' என்பதும் தொகையுட்பட்ட இரு வாக்கியங்களாய் அமைகின்றன.

இக் குறட்பாவில் மலர்வாய்ப் பாட்டு நிரையசைச் சீரான கடைச் சீரும்; முதலடி இறுதிச் சீரான 'மக்கள்', இரண்டாமடியின் கடை

யயல் சீரான 'கேளா' ஆகிய இரு தேமாச் சீர்களும்; இரண்டாமடி முதற் சீரான 'மழலைச் சொல்' என்ற காய்ச் சீரும் (புளிமாங்காய் சீர்) நீங்கலான மற்ற முதலடி முதல் மூன்று சீர்களும் விளச் சீர்களே. குழல் இனிது (முதற் சீர்) கருவிளமாகவும், யாழ் இனிது (இரண்டாம் சீர்) என்ப-தம் (மூன்றும் சீர்) ஆகிய மூன்றும் கூவிளமாகவும் இயல்கின்றன.

முதலடி இரண்டாம் சீரும் கடைச் சீரும், இரண்டாம் அடி முதற் சீருமே எடுத்திசைத்தன. மீந்த எல்லாச் சீர்களும் சற்றேறக் குறையப் படுப்பிசைப்புக்களே. ஆயினும் படுப்பிசைப்பாகிய 'குழல் இனிது' என்பதில் இரண்டாம் அசையாகிய 'இனிது' என்பதன் எழுத்துக்கள் இறங்கிசைப்பாயின. எடுப்பிசைப்பாகிய 'யாழ் இனிது' என்பதில் முதலசை எடுத்திசைத்ததுடனன்றி இரண்டாம் அசையின் எழுத்துக்களும் எற்றிசைப்பாக இயன்றன. 'என்ப-தம்', என்ற மூன்றும் சீர் 'என்' என்றும் 'பதம்' என்றும் அலகீட்டு முறையில் பிரிவுறாமல், அதிகாரத்தின் மூன்றும் குறட்பாவில் (63) முதலடி இரண்டாம் சீரான 'என்ப-தம்' என்பது போலவே, 'என்பர் தம்' என்ற ஓசைப்படத் தேமாங்காய் போன்ற தன்மையதாகி, அக் குறட்பாச் சீரிலுள்ள 'தம்' என்பது போலவே இங்கும் 'தம்' முன்னெழுத்துக்களுள் அடங்கி ஒடுங்கி ஒலித்தது. இக்காரணத்தால் இச் சீர் முரிவுற்றிசைத்தலும் காணலாம்.

'கேளாதவர்' என்ற ஒரு சொல் கடைசி இரண்டு சீர்களாகக் 'கேளா' என்றும் 'தவர்' என்றும் பிரிந்திசைத்து முரிவிசைப் பாயிற்று.

இச் செய்திகள் குறட்பாவின் இசையினிமைக்கு உதவின, பொருள்வளத்துக்கும் உதவின என்பதைப் பின்வரும் உரைப் பகுதி களால் காணலாம்.

'தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்' என்ற தொகை குறட்பாவின் எழுவாய். கேளாதவர் என்ற இறுதிச் சொல்லொப்ப, இது பெயர்ச் சொல் ஆகும். இத் தொகை 'என்ப' என முடியும் தொகையைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

'கேளாதவர்' என்பது எதிர்மறைப் பலர்பால் வினையாலணையும் பெயர். 'அர்' அப்பால் விகுதி. இதன் முன் 'அ' சாரியையாய் வந்து, உயிர்களிடையே வகரம் உடம்படு மெய்யாயிற்று. 'கேள்' என்பது வினைப் பகுதி. 'ஆ' எதிர்மறை இடைநிலை. இடைநிலைக்கும் சாரியைக்கும் இடையே தகரம் எழுத்துப் பேறாயிற்று.

மழலைச் சொல் என்பது மழலையாகிய சொல் என இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. இது அடையடுத்த ஆகுபெயராய் மழலைச் சொல்லின் இனிமை சுட்டிற்று. இதன் இறுதியில் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கது.

மக்கள் மழலைச் சொல் என்பது மக்களது மழலைச் சொல் என ஆறும் வேற்றுமைத தொகை. தம் மக்கள் என்பதும் தம்முடைய மக்கள் என ஆறும் வேற்றுமைத் தொகையே. 'தம்' என்பது 'தாம்' என்ற பலர்பால் பொதுப் பெயரின் வேற்றுமை வடிவம். இது பெற்றோர் எனும் சொல்லைக் குறிப்பால் காட்டிய 'கேளாதவர்' என்ற பெயரைக் குறித்த இன உறவுச் சுட்டாய் வந்தது.

'குழல் இனிது, யாழ் இனிது' என்ப என்ற தொகை என்ப என்ற ஈற்றுச் சொல்லை ஒப்ப வினைமுற்று. இத்தொகை கேளாதவர் என முடியும் தொகையை எழுவாயாகக் கொண்ட பயனிலை ஆகும்.

என்ப என்பதில் என் வினைப் பகுதி. 'ப' என்பது பலர்பால் விகுதி. இவ்விகுதி இடைநிலை ஏற்பதில்லை. காலப் பொதுவாகவும் வழங்குவது இதன் இயல்பு. என் என்ற பகுதி கூற்றிணைப்பு வினை ஆகும்.

'குழல் இனிது, யாழ் இனிது' என்பது இரு கூற்று வாக்கியங்களை உள்ளடக்கிய முழுக் கூற்று வாக்கியமாய், என்ப என்ற வினைமுற்றின் செயப்படுபொருளாக நின்று, ஒரே தொகையாக, வினைமுற்றுடன் சென்று தொகைப்பட்டது. 'குழல் இனிது', 'யாழ் இனிது' ஆகிய இரண்டு கூற்று வாக்கியங்களும் முறையாகக் குழல், யாழ் என்ற பெயர்ச் சொற்கள் எழுவாயாகவும், 'இனிது' இரண்டும் முறையே பயனிலைகளாகவும் பெற்று இயன்றன.

இனிது என்பது 'இனிமை' என்ற பண்படியான ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. 'து' அப்பால் விகுதி. 'மை' ஈறு கெட்டது.

குழல், யாழ் ஆகிய இரண்டு சொற்களும் குழலிசைக்கும் யாழ் இசைக்கும் ஆகுபெயர்களாய் வந்தன.

வி - ரை: அறவாழ்வின் மழைவளப் பயிர்ப் பண்பான மக்கட்பேறு முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடைய தாயினும், அறத்துப்பாலின் பொருட்பாற் பாயிரம் போன்ற இவ் வதிகாரத்தில் இக் குறட்பாவுடன் முடியும் மூன்று குறட்பாக்களும் (64-66) அதன் இன வாழ்வு அதாவது இன்ப வாழ்வுத் தொடர்பினைச் சிறப்பிப்பன ஆகும். அவ்வழி இக் குறட்பா மூலம் குழந்தைப் பேற்றின் இன்பம் ஐம்புலங் கடந்த ஆரும் புல இன்பமாகிய அக இன்பம், பேரின்ப நோக்கிய மனித இன வாழ்வின் இசை இன்பம் என்பது வலியுறுத்தப் பெறுகின்றது.

இக் குறட்பாவில் குழல், யாழ், மழலை ஆகிய மூன்று சொற்கள் உயிர்ச் சொற்களாய், அம் மூன்றிலுமே தமிழின் சிறப்பு எழுத்து ஆகவும், இன்ப எழுத்து ஆகவும் கருதப்படும் 'ழ'கர ஒலி இடம்பெறுவது காண்கிறோம். சந்தத்தால் உச்ச அழகு நயமுடைய முந்திய குறட்பாவுடன் போட்டியிடவல்ல ஓசையினிமையை இவ்வொலியும், இலக்கணக் குறிப்புரையிற் சுட்டிய ஓசையும் இக் குறட்பாவுக்கு அளிக்கின்றன.

முன் இரு குறட்பாக்களின் விளக்கவுரை முகப்பில் குறித்தபடி, குழந்தை இன்பக் காப்பியமாக இயலும் இவ் வதிகாரமாகிய இமயமலையில், இன்ப வாழ்வு சிறப்பித்த மூன்று குறட்பாக்களும் (64-66) அவ் விமயமலையின் மூன்று இன்பக் குவடுகளாகவும்; அம் மூன்றனுள்ளும் முதற் குறட்பா (64) பொருளாழத்திலும், இரண்டாம் குறட்பா (65) சொல்லழகிலும் விஞ்சி நிற்பது போல, குவடுகளில் இறுதிக் குவடாகிய இக் குறட்பாவே பொருள் விரிவிலும் ஓசையினிமையிலும் விஞ்சி நிற்கிறது என்னல் தகும்.

தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் என்பது 'தம்முடைய புதல்வர் புதல்வியர்களின் அரைகுறைப் பொருள் குறிக்கும் இனிய முதிரா இளஞ் சொற்களின் இன்னோசையைக் கேட்டு மகிழும் வாய்ப்பும் தகுதியும் பெறுதவர்களாகிய பெற்றோர் கள் தாம்' என்ற பொருளைத் தந்தது.

'**தம்**' என்பது இத் தொகையிறுதியில் வரும் கேளாதவர் என்ற பெற்றோரையே சுட்டிற்று. ஆயினும் குறட்பாவில் பயனிலை வாசகமே முதலில் வந்து, அதன் ஈற்றில் '**தம்**' என்ற இச் சிறு சொல் அடங்கி ஒடுங்கி வந்தது காண்கிறோம். இதன் குறிப்பு வளம் இக் குறட்பாவில் எல்லையற்று அலை பாய்வதாகும். மக்கள் மழலைச் சொல்லைக் கேட்கும் பெற் றோர் தம்மையும் தம் குடும்ப சமுதாய வாழ்வுகளையும் சமுதாயத்தையுமே மறந்து, குழந்தை மழலையில் ஈடுபட் டிழைந்து இன அவாவாகிய இன்ப வானில் மிதந்து தவழத் தொடங்குகின்றனர் என்பதை இது தெரிவிக்கிறது.

மக்கள் என்ற பன்மைச் சொல்லின் தனிப் பொருத்த வளங்கள் அதிகார முன்னுரை, முதற் குறட்பாவுரை ஆகிய வற்றில் விரித்துரைக்கப்பட்டன. நுகரும் பெற்றோர் இரு பாலராதல்போல, மக்களும் இருபாலர் ஆவர். தவிர, மக்கள் என்ற சொல் இரு பால் புதல்வர் புதல்வியர்களை மட்டுமன்றி மனிதரையும் குறிக்கும். இதன் பொருள்வளமும் இக் குறட் பாவில் மிகுதி. காதலர் காதலுக்குக்கூட இல்லாது, பெற் றோர்-பிள்ளைகளுக்கிடையே உள்ள காதலில் மட்டும் காணப் படும் தனித் தன்மைகளை இது எடுத்துக் காட்டுகிறது. காதலர் காதல் இரு திசை உணர்ச்சி, அத்துடன் நிகழ் காலமே நோக்கிய உணர்ச்சி. இதனால் அது சமுதாய வாழ் வுக்கு மட்டுமே பெரிதும் உரியதாகிறது. குடும்ப வாழ்வை அது சமுதாய வாழ்வுடன் மட்டுமே பிணைக்கிறது. இன வாழ்வின் இறந்தகால எதிர்காலங்களுடன் அதற்குள்ள தொடர்பும் வரவு செலவுத் தொடர்பன்றி வேறன்று. ஆனால் பெற்றோர்-பிள்ளை காதல் ஆற்றொழுக்கான காதல். சமுதாய வாழ்வில் அதனை இரு திசைக் காதல் என்றோ, சரிசமமான காதல் என்றோ கூற முடியாது. ஆயினும் இனத்தில் அது

இரு திசைக் காதலே, சரிசமக் காதலே யாகும். ஏனெனில் இன்றைய பெற்றோர் நேற்றைய குழந்தையே: இன்றைய குழந்தை நாளைய பெற்றோரே. குழந்தையாய் இருந்தபோது தாம் தம் பெற்றோரிடம் பெற்ற காதலையே இப்போது பெற்றோராய் அவர் பிள்ளையிடம் காட்டுகிறார். பிள்ளை இது போல இப்போது பெறும் காதலையே நாளைத் தன் பிள்ளையிடம் காட்ட இருக்கிறது. இவ்வாறு காதலர் காதலில் சமுதாயத்தில் பக்கவாட்டாக நிகழ்காலத்திலேயே அலைபாயும் உணர்வு, பெற்றோர்-பிள்ளை காதலில் இனவாழ்விலே முன்னும் பின்னும்—இறந்த காலத்திலும் எதிர்காலத்திலும் அலைபாயும் காதலாகி விடுகிறது. இதனாலேயே காதலர் காதலில் ஏற்படும் ஊடல்கூட, இப் பெற்றோர் மக்கள் காதலில் இல்லாதாகிறது, அல்லது பண்பில் இன்னும் உயருகிறது என்னலாம். ஏனெனில் காதலர் காதலில் ஊடல் சமுதாயத்தின் இரு உறுப்பினர்களிடையே, இரு தனி மனிதரிடையே உள்ள ஊடல். பெற்றோர்-பிள்ளை ஊடல், காலங் கடந்த, தனி மனிதத் தன்மையே கடந்த இன ஊடல், தலைமுறைகளின் ஊடல் ஆகும். காதலர் காதல் ஊடலில் ஒரு காதலன், ஒரு காதலி உணர்வுகளே எதிரெதிர் அலைபாய்கின்றன. காதலன் காதலனாகவே இருக்கிறான், காதலி காதலியாகவே இருக்கிறாள். காதலன் காதலியாகவோ, காதலி காதலனாகவோ மாறிவிடுவதில்லை. ஆனால் பெற்றோர்-பிள்ளை காதலில் பிள்ளையின் ஊடலுருவில் பெற்றோர் தம் முற்காலப் பிள்ளைமை ஊடலைத்தான் காண முடியும். இதுபோலவே, பெற்றோர் ஊட முடியுமானால், ஊடின், அதன் எதிரொலியை, ஊடல் எதிர் விளைவான கூடலை அப் பிள்ளை அடுத்தத் தலைமுறைக்கே தானும் கொண்டு செல்லும். இவ்வாறு பெற்றோர்-பிள்ளை காதல் ஒன்றிலேயே, பெற்றோர் பிள்ளையாகவும், பிள்ளை பெற்றோராகவும் மாற முடியும். இக்காதல் ஒன்றே காலத்தின் காதல், காலத்தின் எல்லையற்ற திருவிளையாடலின் ஓர் அலை ஆகும்.

மக்கள் என்ற சொல் இக் குறட்பாவில் இப் பெரு வேதாந்தக் கருத்துக்களைப் பாயவிடுவதாகும்.

மழலை என்பது இருத்தல் தவழ்தல் நிலை கடந்த பிள்ளையின் குழந்தைப் பேச்சு. பெற்றோர்க்கும் குழந்தையருமை அறிந்தவர்க்கும் அல்லாது பிறருக்கு இப் பேச்சுத் தொடக்கத்தில் குதலைப் பேச்சின் தொடர்ச்சியாகப் பொருளற்றதாகவோ, அல்லது அரைகுறைப் பொருள் முகிழ்க்கும் பிதற்றற் பேச்சாகவோ மட்டுமே புலப்படும். ஆனால் பெற்றோருக்கும், குழந்தை அருமை தெரிந்த பெற்றோர் அதாவது உண்மைப் பெற்றோருக்கும் மழலைப் பேச்சுப் பொருளற்ற, அல்லது அரைகுறைப் பொருள் முகிழ்த்த பேச்சன்று—பொருள் பொதிந்த, முழுநிறை பொருள் கனிந்த பேச்சாகவே அது மிளிர்கின்றது. ஏனெனில் உயிரின, மனித இனப் பண்பின் மலர்ச்சியான மொழியின் முழு மொத்த மலர்ச்சிநிறைவை எவரும் மழலை மொழியில் மட்டுமே காண முடியும். இதைக் காணும் ஆற்றலையே நாம் பண்பு என்கிறோம். இதைக் காண்பதுடன் இம் மொழியை அரைகுறையாகவேனும் கையாளும் பண்புடையவரையே நாம் கவிஞர் என்கிறோம். பிள்ளை மழலை கேட்டு இன்புறும் பெற்றோர் நிலையிலிருந்து வேறுபட்டதன்று, கவிஞன் குரல் கேட்டு மகிழும் சுவைஞர் நிலை. அதுபோலவே கவிஞன் குரல்கேட்டு மகிழும் சுவைஞர் நிலையிலிருந்து வேறுபட்டதன்று, பிள்ளை மழலை கேட்டு மகிழும் பெற்றோர் நிலை!

மனித இன மொழி இன்று பெரிதும் செவிக்கும் மனத்துக்கும் புலனுக்கும் பண்பாய் இலங்குகிறது. மனப்புலனிலும் பெரிதும் அறிவுப் புலனே முனைப்பா யிருக்கின்றது. ஆனால் இதில் உணர்ச்சிப் புலனும் இடம் பெறுவதைக் கவிஞர் கையாளும் மொழியும் மொழிநடையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. குழந்தை மழலைப் பேச்சில் நாம் இம் முப் புலனையும்—செவிப் புலன், அறிவுப் புலன், உணர்ச்சிப்புலன் ஆகிய மூன்றையும் காணலாம். அத்துடன் இனிமையில், அதுவும் எதிர்கால இன அவாக் கருக் கொண்டுள்ள பெற்றோர் உள்ளம் காணும் இனிமையில், அது கவிதையினும் பார்க்கச் சிறந்தது. இதுமட்டுமன்று. மனித இன, உயிரின மூல மொழியில், உயிரினப் பண்பில் செவிப்புலம் மட்டுமன்றிக் காட்சிப் புலனும், மற்றப் புலன்களும் மிகுதி பங்கு

கொண்டிருந்து வந்துள்ளன. மழலை மொழியில் நாம் இந்த முழு நிறை ஐம்புலப் பண்பையும், ஆறும் புலத்தின் அறிவு, உணர்ச்சி, எதிர்கால நோக்கிய உணர்ச்சியாகிய கற்பனை, இனவள நோக்கிய அறிவுணர்ச்சிக் கோவையாகிய உணர்வு ஆகிய எல்லாக் கூறுகளும் அடங்கிய முழு நிறை பண்பையும் காணலாம்.

சொல் என்பது மழலையின் பின் விளைவான மலர்ச்சி. மழலை என்பதனுடன் அதன் மலர்ச்சி விளைவாகிய சொல் என்பதும் சேர்ந்து இக் குறட்பாவில் வழங்கப்பட்டதனாலும்; மழலை என்பது குதலையை உள்ளடக்கி, அதன் மலர்ச்சியாக இயல்வதனாலும்; மழலைச் சொல் என்ற தொகை இங்கே மொழியின் முழு அறிவு, அழகு, இன்ப வடிவத்தை நம் மனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறது.

கேளாதவர் என்பது 'இன்னோசையைக் கேட்டு மகிழும் தகுதியும் வாய்ப்பும் பெறாதவர்களாகிய பெற்றோர்கள் தாம்' என்னும் பொருள் சுட்டி வந்தது.

கேளாதவர்......என்ப என்று இக் குறட்பா எதிர்மறை யாக இயல்கின்றது. ஆனால் எதிர்மறையாகவே 'கேட்பவர்... என்னார், என்று கூற மாட்டார்' என்றுகூடக் கவிஞர் கூறி யிருக்கலாம். அவ்வாறே உரையாசிரியர் பொருள் கூறியும் உள்ளனர். கவிஞர் இவ்வாறு எதிர்மறையைப் பயனிலை வினைக்கு ஏற்றாமல், எழுவாயாகிய கேளாதவரின் மீது ஏற்றியதற்குக் காரணம் உண்டு. கேளாதவர் மக்களைப் பெறாதவராக, மக்களைப் பெறாத இல்வாழ்வாராக, வாழ்க் கைத் துணையாக இருக்கலாம். அவர் பெற்றோராகாத வரைக்கும் உண்மைப் பெற்றோர், அதாவது பண்புடைய இல்வாழ்வான், பண்புடைய வாழ்க்கைத் துணை ஆகார். அத்துடன் பெறப்பட்டார் எல்லாம் பிள்ளைகள் அல்லர், பெற்றார் எல்லாம் பெற்றோரும் அல்லர். பண்புடைய பிள்ளை களைப் பெறாதவர் பண்புடைப் பெற்றோருமாகார். அதுமட்டு மன்று. நல்ல பண்புடைப் பிள்ளைகளைப் பெற்ற பண்புடைப் பெற்றோரே—மக்கள் இன்பத்தை முழுதுற நுகரும் தகுதியும் உடையோராவர்.

கேளாதவர் என்பது இங்ஙனமாகப் பண்புடைப் புதல்வர் புதல்வியர்களைப் பெறும் வாய்ப்பும், வாய்ப்பு மட்டுமன்றித் தகுதியும், இது காரணமாக நுகரும் திறனும் இல்லாதவர் என்ற பொருளைப் பொதிந்து காட்டுகிறது. பண்புடைய குழந்தைகளைப் பெறுவதற்கும் பெற்றோருக்கு வாய்ப்பும் தகுதியும் வேண்டும்; பண்புடைய குழந்தைகளின் இன்பம் நுகர்தற்கும் அவர்களுக்கு வாய்ப்பும் தகுதியும் வேண்டும் என்பது இதனால் சுட்டப்படுகிறது.

கேட்டல் காதால் கேட்டல் மட்டுமன்று, இனச் செவியால், உள்ளத்தின் முழு அறிவுணர்வால் கேட்டல் என்பதும், கேட்டல் மட்டுமன்று, நுகர்தல், இன்பம் காண்டல், ஐம்புல, ஆறும் புல நிறை பேரின்பம் காண்டல் என்பதும் இவ்வெதிர் மறைக் குறிப்பாலேயே பெறத்தக்கது. ஏனெனில் கேளாதவர் இங்கே செவிடரைக் குறிக்க முடியாது. செவிகள் இருந்தும் கேளாதவரையே குறிக்க முடியும்.

கேளாதவர் என்பதன் பிற குறிப்புப் பொருள் வளங்களை இவ்விளக்கவுரையில் என்ப என்பதன் கீழும் பொருள்வளப் பகுதியிலும் காண்க.

குழல் இனிது யாழ் இனிது என்ப என்ற தொகை, 'வெறும் புல்லாங்குழலின் இசை இனிமையானது என்றோ, வெறும் யாழின் எழிலார்ந்த பண்ணிசை இனிமையானது என்றோ கருதி அமைவார்கள்' என்ற சொற்பொருளையும்; குழந்தையின் மழலைச் சொல் இன்பம் இவ்வினிமைகள் கடந்த பேரின்பமாகும்' என்ற கருத்துப் பொருளையும் தருவதாகும்.

குழல், யாழ் என்பவை இரண்டுமே தமிழரின் மிகப் பழமையான, மனித இனத்தின் மிகப் பழமையான இசைக் கருவிகளாகும். மனிதன் முதல் முதல் இயற்கையில் கண்ட மூங்கில் இசைப்பு, வில்நாண் இசைப்பு ஆகியவற்றிலிருந்தே இவை தோற்றியிருக்க வேண்டும். தமிழிலக்கிய முழுவதிலும் இந்தக் குழல், யாழ் மரபுகள் பேணப்பட்டே வந்துள்ளன— பல மாறுதல்களுக்கிடையிலும் இன்றளவும் அவையே அடிப்படை இசைப் பண்புத் தளங்களாகவும் இயன்றுள்ளன.

ஆயினும் பண்டைத் தமிழிசையுடன் இவற்றுக்குரிய தொடர்பு தனித் தன்மை வாய்ந்தது ஆகும். ஏனெனில் தமிழர் ஐந்திணை நாகரிக மரபில், குழல் முல்லைத் திணையில் தோன்றிப் பின் மற்றத் திணைகளுக்கும் பரவியதாகும். கற்புக்குரிய திணை முல்லைத் திணை என்பது இங்கே கருதத் தக்கது. யாழ் இதுபோல பாலைத் திணையில் தோன்றியதாக லாம். ஏனெனில் ஏழ் சுரத் தொகுதிக்குரிய தமிழ்ப் பெயர் ஏழ் நரம்பு, ஏழ் பாலையே யாகும். அத்துடன் பண்களும் தமிழில் பாலை என்றும் பாலை யாழ் என்றும் நெடுங்காலம் வழங்கின. முல்லைத் திணையில் தோன்றிய குழல் ஐந்திணைக்கும் பரவியது போலவே, பாலைத் திணையில் தோன்றிய யாழும் எல்லாத் திணைகட்கும் பரவின. ஆனால் குழல் திணைதோறும் உரு மாறாமல் ஒரு குழலாகவே இயங்கிற்று—மூங்கிலால் செய்ப்பப்பட்டதற்குப் பகரமாக, செம்பு வெண்கலம், வெள்ளி ஆகியவற்றால் செய்யப்படுவதொன்றே அதன் பண்பு மாறுதலாக விளங்கி வந்துள்ளது. ஆனால் யாழோ பண்டைத் தமிழகத்தில் திணைதோறும் வேறு வேறு வகையாக மாறிற்று— பண்தோறும் தனித் தனி வடிவம் பெற்றது. இதனாலேயே பாலை யாழ், குறிஞ்சி யாழ் எனத் திணை தோறும் யாழ் மாறியதன்றி, அந்த யாழ்களில் தலைமை பெற்ற பாலை யாழே சுரங்களையும் பண்களையும் குறிக்கும் தமிழ்ப் பெயர்களாகவும் இயன்றன,

உருமாறுக் குழல் கற்பின் உறுதிக்குச் சின்னமாவது போல, திணைதோறும் மாறிப் புதுப் புதுப் பண் வகுக்கும் யாழ் பெண்மையின் என்று மாறுப் புதுமைக்குச் சின்ன மாகும்: உருமாறுக் குழல் இனத்தின் மாறு அடிப்படைப் பண்புக்கும், உரு மாறியும் பண்பு மாறு யாழ் அதன் அலை யலையாகத் தோன்றும் ஒவ்வொரு தலைமுறைச் சமுதாயப் புது வளத்துக்கும் மாதிரிச் சின்னங்கள் ஆகும். குழலிசையும் யாழிசையும் இங்ஙனம் பெற்றோருக்குக் குழந்தையின்பத்தில் காணப்படும் அடிப்படை இன இனிமைச் சுவைக்கும், வளர்ச்சியால் மாறி மாறிப் புதுப் புது வண்ணங்கள் தோன்றும் புதுமைச் சுவைக்கும் உயரிய ஏகதேச உருவகச் சின்னங்கள் ஆயின.

இனிது என்ற சொல் இக் குறட்பாவில் இருமுறை அடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இது இரட்டுற மொழிதலன்று. ஏனெனில் இந்த இரட்டிப்பு தனித்தனி கூற்றாகவும், கவிதை இனிமைக்குதவும் கூறாகவும் அமைந்துள்ளது. அத்துடன் இதற்கு வேறு தொனிப் பொருள் அமைதியும் உண்டு.

இக் குறட்பாவில் 'குழல்' படுத்திசைப்பாகவும், 'யாழ்' எடுப்பிசைப்பாகவும் வந்தன. அத்துடன் குழலினிது என்பதில் 'இனிது' படுப்பிசைப்பிலே இறங்கிசைப்பாகவும், 'யாழினிது' என்பதில் 'இனிது' எடுப்பிசைப்பிலே ஏற்றிசைப்பாகவும் இயங்கின. இதனால் குழலிசை இனிது, யாழிசை அதனினும் இனிது என்ற கருத்துக் குறிக்கப்பட்டுள்ளது. மழலைச் சொல் இவற்றிலும் பார்க்க எவ்வளவோ மடங்கு இனிது என்ற தொனிப் பொருளும் இதனால் குறிக்கப்பட்டது.

என்ப என்பது 'என்று கருதி அமைவார்கள்' என்னும் பொருள் தந்தது. கேளாதவர் என்ப என்றதனால், கேட்பவர்கள் இவ்வாறு கருதியமைய மாட்டார்கள்; குழந்தையின் இன்பமே இன்பம், மெய்யின்பம், அவ்வினிமைகளின் எல்லை கடந்த பேரின்பம் என்றே கருதுவார்கள் என்ற பொருள் பெறப்பட்டது.

என்ப என்பதனிடமாக என்பர் என்பதே வழங்கப்பட்டிருப்பினும் இலக்கணமும் பொருளும் சந்தமும் ஒரு சிறிதும் கெடாது. உண்மையில் முன்னர் அதிகார மூன்றாம் குறட்பாவில் [63] வந்த 'என்ப தம்' என்பதைப் போலவே இங்கும் இச் சீர் கூவிளமாக வரினும், 'என்பர் தம்' என்பதுபோல முரிவுற்று, தேமாங்காய் இசைப்பே தருகின்றது. இந்த வலிந்த வழக்கின் ஒரு குறிப்புத் 'தம்' என்பதன் கீழ்த்தரப்பட்டது. அதுவன்றி இங்கும் இவ் வழக்கே 'என்று கருதி அமைவர்' என்ற தொனிப் பொருளைத் தந்தது.

தமிழ் மரபில் 'ப' என்ற விகுதி உயர்திணைக்கும், 'வ' என்ற விகுதி அஃறிணைக்கும் வழங்கப்படுவது ஆகும். வருப, வருவ; இயங்குப, இயங்குவ ஆகிய சொற்களில் இவ் வேறுபாடுகளை இலக்கிய வழக்கில் காணலாம். ஆனால் அழி, படி

என்ற வினைகளில் இவ்வேறுபாட்டு நயத்துக்கு வழியில்லாமல் 'ப' விகுதி பிறவினைக்கும், 'வ' விகுதி தன்வினைக்கும் உரியன ஆகின்றன. இதுபோலவே நட, மற போன்ற பகுதிகளிலும், என் போன்ற பகுதிகளிலும் 'ப' விகுதியன்றி 'வ' விகுதி வழங்காததனால், இவ்வேறுபாட்டு நயத்திற்கு இடமில்லாததுபோல் தோன்றுகிறது. ஆயினும் ஓசையுணர்வும் இசைப்புணர்வும் கெடாத தொல்பழங்காலங்களில், இந்தப் 'ப' விகுதி 'வ' விகுதி வேறுபாடு ஒரு விகுதியிலேயே எடுப்பிசைப்பு, படுப்பிசைப்பு அல்லது நலிவிசைப்புக்களால் தெரிவிக்கப் பட்டன என்று கருத இடமுண்டு. ஏனெனில் விகுதியில் பகர வகர வேறுபாட்டுக்கே இந்த ஓசை வேறுபாடுதான் காரணம் என்பதை மொழி நூலார் உணர்வர்.

'என்ப' என்ற இக்குறட்பாவின் சொல் எழுத்து வடிவில் 'ப' விகுதியாய் அமைந்து, எழுவாய் பலர்பாலாதலால், பலர்பால் எனவே இலக்கணக் குறிப்புரையிலும், மேலே பொழிப்புரையிலும் உரைக்கப்பட்டது. ஆயினும் இங்கே இசைப்புப் படுப்பிசைப்பு என்பதையும், முரிவிசைப்பின் முன் அது கிட்டத்தட்ட நலிவிசைப்பாகவே தாழ்கிறது என்பதையும் காணலாம். இக் காலத்தில் இந்தப் படுப்பிசைப்பையே தமிழகத்தின் சில பகுதிகளில் மக்கள் பேச்சு மொழியில் 'என்னுவ'. 'தின்னுவ' என்று ஒலிப்பதுண்டு. இவ் விசைப்பில் இது அஃறிணைப் பன்மை வழக்கு ஆகும்— உயர்திணையை ஏளனமாகக் குறிப்பிடும்போதும் இது திறம்படப் பேச்சுக்குப் பயன்படும் வசை வழக்கு ஆக இயல்வது காணலாம்.

குழல் இனிது, யாழ் இனிது என்பவர்கள் மக்கள் மழலை இன்பம் கேளாதவர்கள், கேட்கும் தகுதி யில்லாதவர்கள் என்ற அவல வசைச் சுவை தோன்றவே திருவள்ளுவர் இக் குறட்பாவில் என்பர் என்று வழங்காமல் என்ப என்று வழங்கி, அதையும் படுப்பிசைப்பில் முரிவிசைப்பாகப் பயன் படுத்தி யுள்ளார் என்னலாம்.

மக்கள் மழலை இன்பம் உணரும் தகுதியில்லாதவர்கள் உருவில் மக்களான மாக்களே என்பது இங்கே திருவள்ளுவ

ளின் குறிப்பு ஆகும். நகைச்சுவை யற்றவன், தாய்ப்பற்று அற்றவன், தாய் நாட்டுப் பற்று அற்றவன் மனிதனல்லன். கயவன், கொலைஞன் என்று ஆங்கில மாகவிஞர் சேக்சுப்பியர் கூறியுள்ளது இங்கே கருதத் தக்கது ஆகும்.

சிறப்புரை: இசை உணர்வு ஓர் அரும் பேறு. அப் பேறுடையார்க்குக் குழலிசை இனிது. யாழிசை அதனி னும் இனிது. அதுபோல, மக்கட் பேறு அரும் பேறு, மக்கள் மழலை இன்பப் பேறு அதனினும் அரும் பேறு. ஆனால் இரண்டும் பெற்ற பெற்றோருக்கு, குழலிசை யினும் யாழிசையினும் அரிய பேரின்பப் பேறாக மக்கள் மழலை இன்பப் பேறு அமைவதாகும். ஏனெனில் குழலும் யாழும் உயரிசைகளாயினும் புற இசை, வளரா இசை: மக்கள் மழலை இன்பம் அக இசை, உயிரிசை; அக இன்பம், பேரின்ப நோக்கி வளரும் இன்பம் ஆகும்.

பொருள்வளம்: *(1)* வாழ்க்கைத் துணைநலம் என்ற முந்திய அதிகாரத்தில் திருவள்ளுவர் பெண்மை யின் கற்பைப் 'பெய் எனப் பெய்யும் மழை' என்று குறிப்பிட்டார். பெண்மை ஒரு மழைப் பண்பாயினும், பெண்மைக்கும் மழைப் பண்புக்கும் இல்லாத ஓர் அருமைப்பாட்டை அவர் பெண்மையின் கற்பின் மேல் வைத்துக் காட்டினார். பெண்மையும் மழையும் ஆக்க ஆற்றல்களே, ஆனால் அவை அழிவுகளையும் செய்யும். அதுமட்டு மன்று. ஆக்கமெல்லாம் நல்லாக்கமாகாது. அழிவு எல்லாம் நல்லழிவும் ஆகாது. அதனால் அவை ஆக்கத்தாலேயே ஆக்கமும் அழிவும்; அழிவாலேயே ஆக்கமும் அழிவும் பயக்கத் தக்கன. இயற்கையில் ஆக்க ஆற்றல் அழிவாற்றல் என்ற இவ் இரண்டும் அறிவாற்றல்கள், இன ஆற்றல்கள் அல்லாமையினால் விளையும் இயற்கை யாற்றல் நிலையே இது. ஆனால்

பெண் இன ஆற்றல்; கற்பு இன ஆற்றல் மட்டுமன்று, அறிவாற்றல், திண்ணிய அறிவாற்றல், இன ஆற்றல் ஆகும். அது ஆக்க ஆற்றலும் அழிவாற்றலும் உடையது. ஆனால் ஆக்க ஆற்றலும் ஆக்கமே பயக்கும், அழிவாற்றல் பயக்காது. அழிவாற்றலும் அழிவாற்றல் பயவாது, ஆக்க ஆற்றலே பயக்கும். கற்புக் கடவுளாகிய கண்ணகியின் அழிவாற்றல் உண்மையில் 'குணமென்னும் குன்றேறி நின்றார்' வெகுளி ஆற்றல் போன்ற அழிவாக்க ஆற்றலே யாகும்.

மக்கட் பேறு அதிகாரம் காட்டும் மக்கள் இன்பம், மக்கள் மழலை இன்பம் பெண்மையின் கற்புக்குரிய 'பெய் எனப் பெய்யும் மழை'ப் பண்பைவிட எத்தனையோ மடங்கு உயர்வானது. இவ் வதிகாரம் பொதுவாகவும், அதிகாரத்தில் இன்ப வாழ்வு வலியுறுத்தும் பகுதியான மூன்று குறட்பாக்களும் [64-66] சிறப்பாகவும், அவற்றின் இறுதியான இக் குறட்பா சிறப்பினும் சிறப்பாகவும் காட்டும் தத்துவம் இதுவே. இவ் வகையில் இக் குறட்பா வாழ்க்கைத் துணைநல அதிகாரத்தின் ஐந்தாம் குறட்பாவுக்கு [55] இணையானது, அதனுடன் தொடர்புடையது ஆகும்.

பெய் எனப் பெய்யும் மழை என்பது பெய் என்று வேண்டினால், வேண்டுவோர் வேண்டியபடி, வேண்டிய அளவில் பெய்யத் தக்க ஆக்க நல மழைப் பண்பு என்று பொருள். ஆனால் பெய் என வேண்டுவோர், எப்போது பெய்ய வேண்டும், எவ்வளவு பெய்ய வேண்டும், எப்போது, எவ்வளவு, எவ்வாறு பெய்தால் நலம் என்பதை அறிந்திருந்தாலன்றி வேண்ட முடியாது. இவை தெரிந்த கணவன், இவை தெரிந்த

கணவன் சூழலான சமுதாயம், இனம் ஆகியவற்றில் தான் பெய்யெனப் பெய்யும் மழை பயன்படும். இந்த அடிப்படையையே வேண்டும்போது மாற்றியமைத்து, இந்த அறிவிலேயே முன் தலைமுறை கடந்து அடுத்த மேற்படி முன்னேற வேண்டும் பொறுப்புடையவர்களே புதல்வர் புதல்வியர்கள். கற்பு இனம் பேணி வளர்ப்பதானால், புதல்வர் புதல்வியர் இனத்தை மேலும் ஒரு படி தம் நாளில் வளர்க்கக் கடமைப்பட்டவர்; இனத்தின் பழைய அறிவுக்கு, பழைய பண்புக்கு, பழைய இன்ப வாய்ப்பு வளத்துக்குப் புது ஆக்கம் தேடுபவர். இம் முறையிலேயே அவர்கள் தரும் இன்பம் அவர்களின் 'பெய்நல மறிந்து பெய்யும் மழைப் பண்பைச் சுட்டிக் காட்டுகிறது.' இதையே நாம் மேலே அதிகார முன்னுரையிலும் குறட்பா உரைதோறும் மழைவளப் பயிர்ப் பண்பு என்று கூறியுள்ளோம்.

மழை யில்லாத காலத்துக்கு மழை வளம் தேக்கி வைத்துக் கொள்ளும் பயிர்ப் பண்பும் [கள்ளி, கற்றாழை] அத்தகைய உயிர்ப் பண்பும் [ஒட்டகை;] மிகு மழை, மிகு வெள்ளத்துக் கேற்ப வாழும் [நீரளவே யாகும் தாமரை, அதே பண்புடைய தாய்லந்து நாட்டு நெற் பயிர் வகை], மாஞ் செடி கொடி பயிர் வகைகளுக்கு உண்டு என்பதைச் செடி நூல், விலங்கு நூல் கூறும்.

கூதிர்காலத்துக்கு அருமையாக வேண்டப்படும் வெப்பமும், வேனிற் காலத்துக்கு அருமையாக வேண்டப்படும் தட்பமும் தம்மிடமே கொண்ட தோழமையுடைய இயற்கைப் பொருள், உயிர்ப்

பொருள், மனித இனப் பொருளாக மூன்றை விவேக சிந்தாமணி ஆசிரியர் எடுத்துரைப்பது இங்கே கருதத் தக்கது ஆகும்.

'வாவியுறை நீரும், வட நிழலும்...ஆவியனையார் தடமுலையும்' இத்தகைய முழுமைப் பண்புகளாக அப்பாடல் குறித்துள்ளது.

பயன் நோக்கமில்லாத கடவுளருட் சின்னமான மழை பயிருக்குப் பயனளித்தல் போல; பயன் நோக்காது இன்பமே நோக்கிய காதல், இன்பமே யன்றி இன முழுதும் நிறை பயன் உடைய வாழ்வு வளம் வழங்கல் போல; பெற்றோர்க்குத் தாங்கள் அளிக்கும் இன்பத்தை அறியாத குழந்தைகள், பெற்றோர்க்குத் தாமும் அறியாத, பலவகையில் அப் பெற்றோர்கூட அறிய முடியாத, பேரருமைப்பாடுடைய இனச் செல்வம் ஆவர். கொடுப்பவர் அறியாத, பெறுபவர்கூட முற்றிலும் அறியாத இந்த மதிப்பருமையே குழந்தை இன்பத்தை வரையில் இன்பமாக, பேரின்ப நோக்கி வளர்ந்து கொண்டே செல்லும் இன்பமாக, அழ கினிமைப் பண்புடைய இன்பமாக ஆக்குகிறது.

ஒருவர் வளர்த்த கிளிப்பிள்ளை ஒரு நெற்கதிரைக் கொய்துகொண்டு வந்து வளர்த்தவரிடம் கொடுத்தால், அது கொடுப்பவர் அறிந்த, பெறுபவர் அறிந்த இரு பால் வரைவுடைய இன்பத்துக்குச் சின்னமாகும். கிளிப் பிள்ளை ஒரு தங்கக் காசை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தால், அது கொடுப்பவர் அறியாத, ஆனால் பெறுபவர் அறிந்த மதிப்புடைய, ஒரு திசை வரைவுடைய வரைவில் இன்பத்துக்குரிய சின்னமாகும். அக் கிளிப் பிள்ளை தொட்டதெல்லாம்

பொன்னாகும் பொன்னுருவான ஒரு சிந்தாமணியை எடுத்து வந்து வளர்த்தவரிடம் கொடுத்தால், அது கொடுப்பவரும் அறியாத, பெறுபவரும் முற்றிலும் அறியாத அல்லது ஒரு சிறிதே அறியக்கூடிய அரு மதிப்புடைய வரையிலா இன்பத்துக்குரிய சின்னமாகும்.

மக்கட்பேறு மக்கள் அறியாத, பெற்ருேரும் அறிய முடியாத அரும்பெறல் இனச் செல்வம். ஆனல் அது பெற்ருேர் அளந்தறியா விட்டாலும், இயல்புணர்வில்[1] நுனித்துணரும் ஓர் இன்பம் தருகிறது. இதுவே மக்கள் மழலை இன்பம். தாளில் எழுதப்படும் காசு முறியைப்[2] பொன் தாளிலேயே எழுதி, அதில் தொகையும் வரைவிலாப் பொன்னிதியாகக் குறிக்கப்பட்ட ஒரு தங்கக் காசு முறியாக அது விளங்குகிறது.

குழல் இனிது என்பதனைப் படுத்திறக்கிய ஓசையிலும், யாழ் இனிது என்பதை எடுத்தேற்றிய ஓசையிலும் கூறி எதிர்மறை எழுவாய்க்கு உரிமையாக்கி, 'என்பதம்' என்று முரிவிசைப்புக் காட்டித் திருவள்ளுவர் யாத்தமைத்த இக் குறட்பாவின் எல்லையிலாக் குறிப்புவளம் இதுவே—இசைக்கு இசை தரும் குழலிசையே எவ்வளவோ இனிது, யாழிசை அதனினும் எவ்வளவோ இனிது—ஆனல் இவற்றை அணு ஆக்கி அண்டமென விரி பயனுடைய, எதிர்பார்த்ததனினும் பல்லாயிரம் மடங்கான, எதிர்பாராத, அளந்தறியப்பட மாட்டாத, என்றும் வளரும் பேரின்பத்தின் முன் சுவையாக விளங்குவது மக்கள் மழலை யின்பம்!

---

1. Instinct 2. Cheque

மழை தரும் பயனினும், காதல் தரும் இன்பத்தினும் மிக்கதாக, இரண்டையும்விட எல்லையிலாப் பெரும் பயனும் எல்லையிலாப் பேரின்பமும், எல்லையிலா நீடின்பமும் தருவது மக்களின்பம், அதன் உடனிலே இன்பம் மக்கள் மழலை இன்பம் என்பதனை இக் குறட்பா ஓர் இன்ப வேதாந்த முகடாகத் தீட்டிக் காட்டுகிறது.

அறத்துப்பாலினுட்பட்ட ஒரு பொருட்பாப் பாயிரமாக விளங்கும் இவ் வதிகாரத்தில் இன்பக் காப்பிய முகடுகளாக, உலக இன்ப காப்பிய முகடுகளேயாக விளங்கும் மூன்று குறட்பாக்களிலும் [64-66] முதற் குறட்பாவின் [64] பொருளாழத்துடனும், இரண்டாம் குறட்பாவின் [65] அழகினிமை உயர்வுடனும் போட்டியிட்டு, ஆழமும் உயர்வும் தோற்றுத பொருள் விரிவுடைய இன்பக் காப்பியத்தின் உள்ளுறை மணிக் காப்பியமாக இக் குறட்பா விளங்குகிறது என்னலாம்.

(2) இக்குறட்பா விளச் சீர் மயமானது என்னல் தகும். ஏனெனில் இறுதிச் சீர் குறட்பா இயல்புப் படியே நிரையசையாகிய மலர் வாய்பாட்டு அசைச் சீராய் இயல்கிறது. அதற்கு முந்திய சீரும் 'மக்கள்' என்பதும் மாச்சீர்களானலும், அக்கடையயல் சீர் கேளாதவர் என்ற சொல்லில் துண்டுபட்ட கேளா என்பதே யாகும். ஆகவே முழுச் சொற் சீரான தேமாச் சீர் 'மக்கள்' ஒன்றே. ஆனல் இத்தனைக் கிடையிலும் வெண்பாவுக்குச் சிறப்புத் தரும் வெண் சீர் அல்லது காய்ச் சீராக இக் குறட்பாவில் வருவது புளிமாங்காய் சீரான 'மழலைச் சொல்' என்பதே யாம்.

இக் குறட்பாவின் 'உயிர்ச் சொல்' இச் சீர்தான் என்பதை இது காட்டுகிறது. மழலைச் சொல் என்பதில் சொல் என்ற கூறு குதலை—மழலை—சொல் என்ற மலர்ச்சியைச் சுட்டுகிறது. ஆனால் முன் குறட்பாவில் [65] சொல் என்பது தனி நின்றே இம் மலர்ச்சியைக் காட்ட, இக் குறட்பாவில் அது மழலையுடன் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. தவிர, மழலைச் சொல் என்பது மழலையாகிய சொல் என்ற இரு பெயரொட்டுப் பண்புத் தொகையே யாதலால், இதன் உயிர்க் கூறு மழலை என்பதே. இதன் தொடக்க நிலையே குதலை, அதனையும் இது உட்படுத்துவதே யாகும். அத்துடன் குறட்பா முதலடியில் குழல் இனிது, யாழினிது என்ற இரண்டு இனிமைகளுக்குச் சரியிணையாக இங்கே மழலை ஒன்றே கூறப்படுவதும், குதலை - மழலை ஆகிய இரண்டையும் காட்டும். குழலினிது, அதனினும் குதலை இனிது; யாழ் அதனினும் இனிது, மழலை அதனினும் இனிது; இவற்றினும் பார்க்க இன்னினிது குழந்தை இன்பம்; குதலை மழலையினும் பார்க்க இன்னினிது சொல் என இச் சரியிணை வழக்கு குறித்துக் காட்டிற்று.

முன் குறட்பாவைப் போலவே 'சொல்' என்பது பொருளுடைய பேச்சு, வாழ்வில் வரும் புகழ் என்ற இரு பொருள்களும் தொனிப்படுத்திக் காட்டிற்று.

(3) குறட்பாவில் குழலும் யாழும் மழலைக் கெதிரிணையாகக் கூறப்பட்டன. இவை உவமையாக வும் அதே சமயம் ஒப்புவமையாகவும் கூறப்பட்ட நயமும்; ஒப்பு இனிமை என்ற பொதுப் பண்படிப் படையானது என்று சுட்டப்பட்ட நயமும்; மூன்று

சொற்களிலுமே இனிமை யொலியாக வந்த ழகரம் இதனை வற்புறுத்தி நின்ற திறமும் நுனித்துக் காணத் தக்கன. இனிது படிப்படியாக உயர்வு சுட்டி, குழல், யாழ், மக்கள் மழலை ஆகிய மூன்றுமே எடுத்திசைப் பாக வந்ததனுல் உவமேயமாகிய மழலையும் உவமை யுடன் உவமையாகி அடுக்குறழ்வுப் பொருள் வலி யுறுத்தி, மழலைக் கடந்த சொல், அதாவது பேச்சு, புகழ் ஆகியவற்றின் இணையின்பத்தை எல்லையற்ற உறழ்வுடையதாக்கிக் காட்டி நிற்பது காணலாம்.

ஆறும், ஏரியும், கடலும் போல, கடலும் வானும் அண்டவெளியும் விளங்கின என்று உவமை கூறினுல், இறுதி உவமையாகிய கடல் முதல் உவமேயமும் ஆகி நின்று, எல்லையற்ற உறழ்வுத் தன்மை சுட்டுதல் காண்கிருேம். இக் குறட்பாவிலும் திருவள்ளுவர் ஓசை மூலம் இவ் வெல்லையற்ற உறழ்வுவமையே கையாண்டார் என்று காணலாம். ஏனெனில் குழல், யாழ், மழலைச் சொல் என்ற இனிமை ஏற்ற மலர்ச்சி போல்வதே மழலைச் சொல்லின் குதலை, மழலை, சொல் மலர்ச்சி என்ற குறிப்பு குறட்பாவில் பெறப்பட்டது.

(4) என்பதம் என்பதிலுள்ள முரிவு, கேளா தவர் என்ற இணை சீரிலுள்ள முரிவு ஆகியவை முறையே மக்களின்பத்தால் பெற்ருேர் அடையும் தன்னை மறந்த இழைவின்பமும், கேளாத நிலையுற்ற வர் மீது ஏளனப் புன்முறுவல் நகையும் நுனித் துணர்த்தின.

(5) மக்கள் என்பதன் எடுத்திசைப்பு, மக்க ளாகிய குழந்தைகளே மக்களாகிய வருங்காலப் பெற் ருேர்களாகி, இல்வாழ்வான் - கற்புடைத் துணைவி-

புதல்வர் புதல்வியர் என்ற மலர்ச்சிச் சக்கரத்தை இடையறாது எல்லையின்றி உருட்டுபவர் ஆவர் என்பதனை எடுத்துக் காட்டிற்று.

(6) பயனில்லை முதலிலும் எழுவாய் பின்னுமாகக் குறட்பா தெரிவிக்கப்பட்டதன் மூலம் எதிர்மறையால் பெறப்படும் வரம்பில் இனிமையடுக்கு வலியுறுத்தப் பட்டது.

தனிக் குறிப்புக்கள்: (1) 'குழல், யாழ் என்பன ஆகு பெயர்' என்று பரிமேலழகர் விளக்கவுரையில் இலக்கணம் கூறி, அதற்கு ஏற்பவே, இம் மணிவிளக்கவுரையை ஒப்ப, குழல், யாழ் என்பவற்றிற்குக் 'குழலிசை', 'யாழிசை' என உரை செய்தார். இங்ஙனமே பேராசிரியர் மு. வரதராசனார், பேராசிரியர் இலக்குவனார், புலவர் குழந்தை, ஆங்கிலமொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி ஆகியோர் பொருள் கூறினர். மணக்குடவர், பரிதியார், புலவர் ந. சி. கந்தையா, காலிங்கர், கவிஞர் இராமலிங்கனார், மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் ஆகியோரும், இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடுவும் குழலோசை அல்லது குழலின் ஓசை; யாழ் ஓசை அல்லது யாழின் ஓசை என்று பொருள் கொண்டனர். ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஆர். ட்ரூ வாளா குழல், யாழ்[1] என்றார்.

[2] குழல், யாழ் என்பவற்றைப் பெரும்பாலான உரையாசிரியர்கள் இம் மணிவிளக்கவுரை போலவே வாளா குழல், யாழ் என்று குறிப்பிட்டமைந்துள்ளனர். ஆனால் கவிஞர் இராமலிங்கனார் குழலைத் தற்கால மொழிப்படுத்திப் புல்லாங் குழல் என்றும், யாழை அதுபோலவே வீணை என்றும் குறித்துள்ளார். தமிழ் மரபில் குழல் என்பது தற்காலப் புல்லாங் குழலே என்பதில் கருத்து வேற்றுமை கிடையாது. அதன் படியே பிற மொழி பெயர்ப்பாளர்கள் மொழிபெயர்ப்பிலும்

1. Pipe, lute

[ஆங்கிலம்: பைப்[1]; இந்தி: பாம்ஸுரீ] என்று மொழிபெயர்த் தது இயல்பாகவே அமைகிறது. ஆனல் யாழ் என்பது தமிழ் மரபுக்குரிய ஒரு தனி இசைக் கருவியா, அல்லது தற்கால வீணேயேதான என்பது பற்றித் தமிழாராய்ச்சி யறிஞ ரிடையே கருத்து வேறுபாடு உண்டு. பல பழந் தமிழ் ஏடு களில் யாழும் வீணேயும் ஒருங்கே தனித் தனி குறிக்கப்படு கின்றன. இரண்டும் நரம்புக் கருவியே யானலும் அவற் றிடையே வேறுபாடு உண்டு.

யாழ் என்பது வீணே யன்று, மேலே நாட்டில் பண்டிருந்து பாணரிடையே வழங்கி வரும் நரம்புக் கருவி வகையே[2] என்று பேரறிஞர் விபுலானந்த அடிகள் ஆய்ந்து தம் 'யாழ் நூலில்' துணிந்துரைத்துள்ளார். பேரிசை யறிஞர் தஞ்சை ஆபிர காம் பண்டிதரின் புதல்வர், யாழ் வீணேயே என்று ஆய்ந்து தம் ஆய்வேட்டில் துணிந்துரைத்துள்ளார். ஆயினும் அறிஞர்களின் ஆய்வுப் போக்கால், முந்திய முடிவே நிலேத்த முடிவு என்று கருத இடமுண்டு. ஏனெனில் யாழ் தமிழ கத்தில் வழக்கிறந்து வந்த காலத்தில் தோன்றிய அதன் ஒரு திரிபே வீணே. வீணேயின் பெருவழக்காலேயே யாழ் வழக் கிழந்தது. இரண்டும் வழங்கிய இடைக்காலத்தவர் இரண் டும் வேறு வேருகவே குறித்துள்ளனர். தவிர, இந்தியாவின் மிகப் பழமை வாய்ந்த அமராவதி ஓவியங்களில் வீணே காணப்படவில்லே, மேலேயுலகக் கருவி போன்ற யாழே காணப்படுகிறது.

யாழ் உலகெங்கும் பரவி முற்காலத்தில் வழங்கிற்று. வீணே அந்த அளவுக்கு இன்னும் இந்தியா கடந்து பரவ வில்லே.

தமிழர் யாழில் பல வகை உண்டு. வில் யாழ், சகோட யாழ், பெருங்கோட்டி யாழ், ஆதியாழ் என்பன அவை. இவை ஏழு முதல் ஆயிரம் வரை நரம்புகளே உடையன. ஒவ்வொரு நரம்பும் தொடக்கத்தில் ஒரு சுரத்தில் வழங் கிற்று என்றும் அறிகிருேம். தவிர சங்க காலத்தில் திணே

1- Pipe 2. Harp

தோறும் தனித் தனி யாழ் வகைகள் இருந்தன, பண் தோறும் யாழ் வகைகள் வேறுபட்டன. தற்கால வீணைக்குச் சுரங்கள் தனி நரம்புகளாய் அமையவில்லை. எல்லாப் பண்ணுக்கும் ஒரே வீணை போதும். யாழ் வேறு மரபு, வீணை வேறு மரபு—யாழ் பழமை மரபு, வீணை புது மரபு என்பதை இது காட்டும்.

ஆங்கில மொழி பெயர்ப்பாளர்கள் 'யாழ்' என்பதை எளிதாகப் பழைய நரம்பிசைக் கருவியின் பேரால்[1] குறித்திருக்கக் கூடும் என்பதை இது காட்டுகிறது.

[3] தமிழகத்தின், உலகத்தின் மிகப் பழமையான இசைக் கருவிகள் குழலும் யாழுமே என்று கருத இடமுண்டு. கிரேக்கர் பான் என்ற தம் தெய்வம் நாணலிலிருந்து குழலை முதல் முதல் இசைக் கருவியாகச் செய்தாரென்று கூறி வந்தனர். அதை முல்லை நிலத்துக்கே உரிய[2] கருவி என்றும் அவர்களே வற்புறுத்தி வந்துள்ளார். அதே சமயம் மிகப் பழமை வாய்ந்த கிரேக்க கவிஞன ஹோமரின் காலத்திலேயே [கி. மு. 1000] யாழ் பாணரின் தனி இசைக் கருவியாக வழங்கி வந்தது.

குழல் தனி மனிதன் தனிமையிலேயே பாடி இன்புறத் தக்கபடி இசைக்க வல்ல கருவி. தனி மெய்ப்பாடுகளை உருப்படுத்திக் காட்டும் நாடக இசைக் கருவி என்று அதைக் கூறலாம். கேட்டவர்க்கு அது மெய் மறந்த கவர்ச்சியூட்டும், இயக்காது. முல்லையுடனும் கற்புடனும் இதனைப் பழந்தமிழர் தொடர்புபடுத்தியது இதனாலேயே ஆகும். ஆனால் யாழ் சமுதாய இசைக் கருவி. அது கேட்பவரை உருக்குவதுடன் நில்லாது, இயக்க வல்லது. மனிதக் குரல் போல இசைப்பதன்றி, மனிதக் குரல் கடந்து இசை நுணுக்கங்கள் எழுப்பி உணர்ச்சி நுணுக்க அலைகளைப் பாயவிட வல்லது. இசை நயங்களுக்கே யுரிய தலைசிறந்த இசைக் கருவி என்று அதைக் கூறலாம்.

---

1. Harp 2. Pastoral

யாழின் இப் பண்பு தற்கால வீணைக்கும் இருப்பதனாலேயே, யாழ் மரபு எளிதில் நலிந்து வீணை மரபுடன் ஒன்றுபட்டு விட்டது.

குழலைத் தனித்து நின்று இனமியக்கும் கற்புக்கும், யாழைச் சமுதாயம் இயக்கும் பெண்மைத் திறத்துக்கும் இம் மணிவுளக்கவுரை சின்னமாக்கி யுள்ளது என்பதை மேலே விளக்க உரையில் காணலாம்.

இத்தகு கருத்து முற்காலத்திலும் இருந்திருக்க வேண்டும் என்பதனைக் 'குழல், யாழ்' என்பதற்குக் காலிங்கர் தரும் உரை சான்று ஆகலாம்.

குழல், யாழ் என்பதற்குக் காலிங்கர் 'பரதம் பற்றிய குழலின் ஓசையும், பண்ணினைப் பற்றிய யாழின் ஓசையும்' என்று பொருள் செய்துள்ளார்.

[4] திருவள்ளுவர் முந்திய குறட்பாவில் 'சொல்' என்றும் இக் குறட்பாவில் 'மழலைச் சொல்' என்றும் வழங்கி யுள்ளார். சொல் இன்பந் தருவது என்று கூறிய பின், மழலைச் சொல் இன்னும் இனியது என்று சுட்டுவதே அவர் குறிப்பு என்று பரிமேலழகர் எண்ணுகிறார். ஏனெனில், 'இனிமை மிகுதி பற்றி மழலைச் சொல்லைச் சிறப்பு வகையாலும் கூறியவாறு' என்று அவர் விளக்கவுரை கூறுகிறது.

'மக்கள் மழலைச் சொல்' என்பதற்கு 'மக்களது மழலைச் சொல்லை' என்று பரிமேலழகர், மணக்குடவர், பேராசிரியர் மு. வரதராசனார், சி. இலக்குவனார், புலவர் குழந்தை, இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடு ஆகியோர் உரை செய்துள்ளனர். 'குதலைப் பேச்சை' என்று கவிஞர் இராமலிங்கனாரும், 'நிரம்பாத சொற்களை' என்று புலவர் ந. சி. கந்தையா பிள்ளையும்; 'குளிர் கொஞ்சல் மொழிகளை' என்று மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளமும் பொருள் கண்டனர்.

பரிதியார், 'மக்களிடம் மழலைச் சொல்லை' என்றார், காலிங்கர், 'குழந்தைப் பருவத்து இயல்பான மழலைச் சொல்லை' என்றார்.

[5] 'கேளாதவர்' என்பதற்குப் பரிமேலழகர், மணக்குடவர், புலவர் ந. சி. கந்தையா, கவிஞர் இராமலிங்கனார், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூ ஆகியோர் வாளா 'கேளாதவர்' என்றே உரைத்தனர். பரிதியார் 'கேளாத பேர்' என்றார். பேராசிரியர் இலக்குவனார், 'கேளாதவர்களே' என்று உரை வகுத்தார். ஆனால், 'கேட்டு அதன் இனிமையை நுகராதவரே' என்று பேராசிரியர் மு. வரதராசனாரும்; 'கேட்டு இன்புற மனங் கொள்ளாதவர்'[1] என்று ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும் உரை புதுக்கியுள்ளனர். காலிங்கரும் இங்ஙனமே, 'பெரிதும் செவிக்குச் சுவையாகக் கேட்டறியாத புல்லறிவாளர்கள்' என்று விரித்துரைத்துள்ளார்.

பரிமேலழகர் பொழிப்புரையில் மேலே குறிப்பிட்டவாறு வாளா 'கேளாதவர்' என்று கூறினாலும், விளக்கவுரைப் பகுதியில், 'கேட்டவர் அவற்றினும் (அதாவது குழல், யாழ் ஆகியவற்றின் இசைகளினும்) மழலைச் சொல் இனிது என்பர் என்பது குறிப்பெச்சம்' என்று விரித்துரைத்தார். மணக்குடவரும் இதே குறிப்பெச்சம் வருவித்து, 'கேட்பவர் சொல்லார்' என்று விளக்கம் தந்துள்ளார்.

[6] இவ்வதிகாரத்தில் இன வாழ்வு அல்லது இன்ப வாழ்வு குறித்த இக் குறட்பாவை உள்ளிட்ட மூன்று குறட்பாக்களையும் (64-66) சுட்டிப் பரிமேலழகர், 'இவை மூன்று பாட்டாலும் இம்மைப் பயன் கூறப்பட்டது' என்று கருத்துரைத்தார்.

---

1. Those who have not cared to hear......with pleasure

67. பெற்றோர் தனிப்பெருங் கடமையாவது, தம் மக்கள் சமுதாயத்திலும்; சமுதாய, அரசியல் ஆட்சி மன்றங் களிலும்; கலைஞர், அறிஞர், அறவோர் அவைகளிலும் தம்மிலும் மேம்பட்ட பங்குகொள்ளச் செய்தல் ஆகும்.

தந்தை மகற்காற்றும் நன்றி. அவையத்து
முந்தி இருப்பச் செயல்

பொ - ரை : பெற்றோர் தம் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய இனக் கடமையாவது: கற்றறிந்த மேலோர் உறுப்பினராய் அமர்ந்திருக்கும் அவைக் களங்களிலே (அப் புதல்வர் புதல்வியர்கள்) தம்மினும் மேம்பட்ட முன்னிடம் பெறும் தகுதியுடையவரா யிருக்கும்படி செய்வதே யாகும்.

க - ரை : மக்கட் பேறு என்ற செல்வம் ஒரு வருக்கு இன மரபு வழியாக வந்து வாய்க்கப் பெறும் பேறு மட்டுமே யாகும். ஆயினும் தாய் தந்தையர்கள் அதனைத் தமக்கேயுரிய பேறு ஆக்கிக் கொள்வதற்கு அவர்கள் முனைந்து தாமே ஆற்ற வேண்டிய இன முயற்சிக் கடன் ஒன்று உண்டு. குடும்பத்தின் சார்பில் சமுதாயத்திலும், சமுதாய அவைகளிலும், சமயப் பேரவைகளி லும், ஆட்சி மன்றங்களிலும்; அதுபோலவே குடும்ப சமுதாயங்களின் சார்பில் இனத்திலும், இனப் பெரியோர்களாகிய அறிஞர், கலைஞர், அறவோர், அருளாளர் ஆகியோரின் அவைக் களங்களிலும் பெற்றோராகிய தாம் வகித்து வந்த இடத்திலும் மேம்பட்ட இடத்தை அப் புதல்வர்

புதல்வியர்கள் வகிப்பதற்குரிய தகுதி பெறும்படி செய்வதே அவ் இனக் கடன் ஆகும். இதற்குரிய கல்வியறிவு, கலைப் பண்பு, நடைச் சால்பு, வீறிய அருள் நோக்கிய பண்புணர்வுத் தொகுதிகள் முதலியவற்றைப் பெறும்படி அப் புதல்வர் புதல்வியர் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்றே. இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன:

1. தந்தை மகற்கு ஆற்றும் நன்றி [இது எழுவாய்].

2. அவையத்து முந்தி இருப்பச் செயல் [இது பயனிலை].

இக் குறட்பாவில் 'மகற்காற்றும்', 'அவையத்து' ஆகிய இரண்டு சீர்கள் மட்டுமே காய்ச் சீர்கள் [நேரசையில் முடியும் மூவசைச் சீர்கள்]. இவற்றையும் இறுதி ஓரசைச் சீரான 'செயல்' என்ற மலர்ச் சீரையும் தவிர, ஏனைய சீர்கள் யாவும் மாச் சீர்களே யாகும்.

இக் குறட்பா மாச்சீர் மயமானது என்னலாம்.

காய்ச் சீர்கள் இரண்டிலுமே முதலசைகள் எடுத்திசைத்தன. ஆயினும் முதலசைகள் நிரையசைகளாய், அவற்றில் இரண்டாம் எழுத்தே எடுத்திசைத்தன. இதனால் முதலசைகள் எடுத்திசைப்பில் ஏற்றிசைப்பாயின. ஏற்றிசைப்பின் பின், அதனை அடுத்துத் திடுமென நலிவிசைப்புத் தொடர்ந்ததனால், இரு சீர்களும் இடை முறிவுற்றன. இடை முறிவின் முன்னும் பின்னும் எழுச்சி தளர்ச்சிகள் ஏற்பட்டு, இரு சீர்களும் இலக்கணத்தால் காய்ச் சீர்களாயினும், ஓசையில் கனிச் சீர்களோ, நாலசைச் சீர்களோ என்று கூறும்படி, எழுச்சிகள் தளர்ச்சிகளுடன் அலைபாய் வியக்கமாக நடைபெற்றுள்ளன.

குறுகிய மாச்சீர்களாகிய 'தந்தை', 'நன்றி', 'முந்தி', 'இருப்ப' ஆகியவைகள்கூட விளங்காய்ச் சீர்களோ, கனிச் சீர்களோ என்று

கருதுமளவுக்கு அலேபாய்ந்தே செல்லுகின்றன. ஏனெனில் இவற்றிலும் முதலசைகளே எடுத்திசைத்தன. அத்துடன் 'இருப்ப' என்பதன் முதலசையாகிய நிரையசை இரண்டாம் எழுத்து எடுத்திசைத்து ஏற்றிசைப்பாக வந்தது. மற்ற மாச் சீர்களின் முதலசை நேரசையே யாலுைம். அவையும் இரண்டெழுத் தசைபோல முரிவுற்று ஏற்றிசைப்பாயின.

தவிர, இவ் வெல்லா மாச்சீர்களிலுமே சீர்களுக்குப் பின்னர் இசைப்பில் ஒரு தெளிவான ஓய்விடையீடு[1] அமைந்துள்ளதை வாசிப்பவர் கவனியாதிருக்க முடியாது. இசைப்பில் ஓய்விடையீடுகளைப் பலவாறாக வேறுபட அமைத்து அவற்றைத் தளைகளுடன் தளைகளாக விரவி இசை மாயம் செய்வதில் தமிழ்க் கவிஞன் கம்பன், சமஸ்கிருதக் கவிஞன் காளிதாசன், ஆங்கிலக் கவிஞன் சேக்சுப்பியர் ஆகியோரை ஒத்த இசை மாயாவியாகத் திருவள்ளுவர் விளங்குகிறார் என்பதை இக் குறட்பாவும் இதுபோன்ற திருககுறட் பகுதிகளும் தெளிவுபடக் காட்டுகின்றன.

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி என்ற தொகை அதன் இறுதிச் சொல்லான நன்றி என்பதனை ஒப்புப் பெயர்ச்சொல் ஆகும். இது எழுவாயாய், குறட்பாவில் பின்னே வரும் 'செயல்' என முடியும் தொகையைப் பெயர்ப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

நன்றி என்பது நன்மை என்பது போன்ற பண்புப் பெயர். இரண்டும் முறையே 'தி', 'மை' என்ற ஈறுகளைக் கொண்ட ஒரே வேர்ச் சொல்லின் திரிபுகள் ஆகும். இவ் ஈறுகள் தொழிற் பெயர் விகுதிகளோடொத்தவை. விகுதி, பகுதி, விடுதி, வெற்றி, வென்றி ஆகிய சொற்களில் 'தி' தொழிற் பெயர் விகுதிகளாய் வருவது காணலாம். 'தி' என்பதை விகுதியாகக் கொள்ளாமல், தகர எழுத்துப் பேறு சேர்ந்த 'இ' விகுதி என்பதும் உண்டு. நன்றி என்பதில் வேர்ச்சொல் நன் அல்லது நல். முன்னை வடிவுடன் இணையும்போது, னகரத்தின் பின் தகரம் றகரம் ஆயிற்று. பின்னை விடிவுடன் இணைந்தநாகக்

1. Pause

கொண்டால் தகரம் நகரமாக, முன்னின்ற லகரம் ணகரம் ஆயிற்று என்னலாகும்:

லகர னகரங்கள் நகரத்தின் இயற்புணர்ப்பு, மென்புணர்ப்பு வடிவங்கள் ஆகும்.

'தி' விகுதி போலத் தமிழில் 'இ' விகுதியும் உண்டு. (வெகுளி என்பது காண்க). அதுபோலவே 'மை' விகுதியோடு ஐ விகுதியும் உண்டு (வெள்ளை பச்சை என்ற பண்புப் பெயர்கள், கொலை, கலை, நிலை, விலை ஆகிய தொழிற் பெயர்கள் காண்க).

ஆற்றும் என்பது ஆற்று என்ற வினைப் பகுதியடியாக, காலப் பொதுமை சுட்டிய எதிர்கால விகுதியான 'உம்' சேர்ந்த பெயரெச்ச வடிவம் ஆகும். இவ் விகுதி இடைநிலை பெறுதல் இல்லை. இப் பெய ரெச்சம் தொகைக் கூறான 'நன்றி' என்ற பெயர் தழுவித் தொகைப் பட்டது.

ஆற்று என்னும் வினைப் பகுதி அறம், அறு, ஆறு, ஆற்றல் என்ற சொற்களுடன் தொடர்புடையது. வரையறுத்து, திட்டமிட்டு, நல்வழியில் நின்று உறுதிபடச் செய் என்ற அதன் பொருள் இதனால் விளக்கமுறுதல் காணலாம்.

'ஆற்றும்' என்ற வினை இங்கே பெயரெச்சமாக வந்து, ஆற்றப் படும் நன்றியாகிய செயப்படு பொருளையே பெயராகத் தழுவினும், நன்றியை ஆற்றுபவராகிய தந்தையையே எழுவாயாக, அதாவது செயல் முதல்வராகக் கொண்டுள்ளது காணலாம். நன்றியே செய் பொருள் அதாவது செயப்படு பொருள் ஆகும். தந்தை ஆற்றும் நன்றி என்பது இதனால் 'தந்தையால் ஆற்றப்படும் நன்றி' என்று பொருள் படுகின்றது.

'மகற்கு' என்பது நான்காம் வேற்றுமைப் பெயர். 'கு' என்பது நான்காம் வேற்றுமை உருபு. 'மகன்' என்பதே பெயர்ச்சொல். இதன் பொது முறைப் பேச்சு வழக்கு வடிவம் 'மகனுக்கு' என்பது. இதில் உகரம் சாரியை. சாரியையின் பின் வன்புணர்ப்பால் உருபின் ககரம் இரட்டிற்று. 'மகற்கு' என்ற வடிவத்தில் இச் சொல் 'உ'ச் சாரியை

பெருமலே, உருபின் முன் வன்புணர்ப்பால் பகுதி ஈற்று னகரம் றகரமாகப் பெற்றது.

செய்தலின் பயனை மகனுக்குக் கொடுத்தல் என்ற கொடைப் பொருளிலோ, மகனுக்காகச் செய்தல் என்ற செயல் நோக்க அக்கரைப் பொருளிலோ இந் நான்காம் வேற்றுமை 'ஆற்றும் நன்றி' என்ற தொகைப் பகுதி தழுவித் தொகையாயிற்று.

தந்தை என்பது பெயர்ச் சொல். இது தொகைக் கூறாக வந்த 'ஆற்றும்' என்ற பெயரெச்ச வினையின் எழுவாயாக நின்று தொகைப் பட்டது.

அவையத்து முந்தி இருப்பச் செயல் என்ற தொகை அதன் ஈற்றுச் சொல்லான செயல் என்பதனை ஒப்பப் பெயர்ச்சொல். இது இங்கே பெயர்ப் பயனிலையாய், 'நன்றி' என்று முடியும் முந்திய தொகையை எழுவாயாகக் கொண்டது.

செயல் என்பது 'அல்' விகுதி பெற்ற தொழிற்பெயர். செய் என்பதே வினைப் பகுதி. இலக்கண நூலார் விதிப்படி தனிக் குறிலில் வரும் யகரம் இங்கே இரட்டிச் 'செய்யல்' என்று வருவதே முறை யாகக்கூடும். ஆனால் இலக்கிய வழக்கிலும் சரி. பேச்சு வழக்கிலும் சரி நெடுநீள் மரபாகச் 'செயல்' என்ற வடிவமே திருவள்ளுவர் கால முதல் இன்றுவரை பயின்று வருகிறது.

இருப்ப என்பது இருக்க என்பதன் திரிபான 'செய' எனும் வினையெச்சம். இருக்கும்படி என்பதே பொருள். இரு வடிவங் களிலும் 'அ' வினையெச்ச விகுதி. 'இரு' என்பது வினைப் பகுதி. இவ் விகுதி இடைநிலை ஏற்பதில்லை. ஆனால் பகுதி விகுதிகளுக் கிடையில் ககரமோ, பகரமோ எழுத்துப் பேறாய் வந்து இரட்டின.

இருப்ப என்னும் இவ் வினையெச்சம் செயல் என்ற தொழிற் பெயரின் வினைப் பகுதி தழுவித் தொகைப்பட்டது.

முந்தி என்பது வினையெச்சம். இது இருப்ப என்ற வினை யெச்சப் பகுதி தழுவித் தொகைப்பட்டது. இதில் முந்து பகுதி, 'இ' வினையெச்ச விகுதி. இவ் விகுதி இடைநிலை ஏற்பதில்லை.

'முந்து' என்பது 'முன்' என்பதனுடன் தொடர்புடைய வினை. அது கால முற்பாட்டையும் இட முற்பாட்டையும் குறிக்க வல்லது. இங்கே அது இட முற்பாடே குறித்தது.

அவையத்து என்பதன்பின் ஏழாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. இவ்வேற்றுமைப் பொருள் 'இருப்ப', 'முந்தி' என்ற வினையெச்சங்கள் இரண்டின் வினைப் பகுதிகள் தழுவித் தொகைப்பட்டது.

அவையத்து என்பது அவையம் என்ற பெயரின் வேற்றுமை வடிவம். இதில் 'அத்து' என்பது சாரியை. அச் சாரியை முன் பெயரின் 'அம்' ஈறு கெட்டது. 'அவையம்' என்பது 'அம்' என்ற விகுதி பெற்ற 'அவை' என்ற பெயரின் விரிவே யாகும். இதனால் 'அவையத்து' என்பது 'அவை' என்ற பெயருடன் அத்துச் சாரியை பெற்ற வடிவம் என்று கூறினும் இலக்கண முறையில் அமையும்.

குறட்பாவின் பொருள்வள நோக்கி அவையத்து என்பதில் பெயர் வடிவம் அவையம் என்று கொள்வதே சிறப்புடையது. இதன் பொருள்வளம் பின்னர் விளக்கவுரையில் விரிக்கப்பட விருக்கிறது.

வி - ரை : அறவாழ்வின் மழைவளப் பயிர்ப் பண்பான மக்கட் பேறு முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடைய தாயினும் அறத்துப்பாலின் பொருட்பாற் பாயிரம் போன்ற இவ் வதிகாரத்தில் இக் குறட்பாவுடன் தொடங்கும் மூன்று குறட்பாக்களும் (67-69) அதன் அறவாழ்வுத் தொடர்பே சிறப்பிக்கின்றன. அவ் வழி இக் குறட்பா முழு முப்பாலின் இன வாழ்வுத் திட்டமாகிய அறத்தின் வகையில் மக்கட் பேற்றால் நிறைவு பெறவேண்டிய சமுதாயக் கூறு இது எனச் சுட்டுகிறது. அத்துடன் அச் சமுதாய வாழ்வில் புதல்வர் புதல்வியரின் பங்கும் படியும், அதற்கு வேண்டிய அவர்களது தகுதியும் வளர்த்துருவாக்கும் கடமை இரு பெற்றோருக்கும் பொதுவாகவும் குடும்பத்தின் சமுதாய வாழ்வுப் பொறுப்பு உடையவரான தந்தைக்குச் சிறப்பாகவும் உரியதென இக் குறட்பா விதந்தோதுகின்றது,

இவ் வதிகாரத்தில் மக்கட்பேற்றின் அறவாழ்வுத் தொடர்பு கூறும் மூன்று குறட்பாக்களும் (67-69) முறையே

அறத்துக்கு நிலைக்களமான சமுதாயம், குடும்பத் தலைமுறை மரபு, இனம் ஆகிய முத்தளங்களுக்குமுரிய கடமை, உரிமை, பொறுப்புக்களை வலியுறுத்துகின்றன. அம் முறையிலேயே, வரு குறட்பாக்களில் குடும்பத் தலைமுறை மரபுக்கூறு மக்கள் மேல் வைத்தும், இனக்கூறு தாயின் மேல் வைத்தும் சிறப்பிக்கப் படுவதுபோல, இக் குறட்பாவில் சமுதாயக் கூறு தந்தை மேல் வைத்துச் சிறப்பிக்கப் பட்டுள்ளது காண்கிறோம்.

மூன்று குறட்பாக்களிலுமே தந்தை முனைப்பாகக் கூறப் பட்ட விடத்துத் தாயும், தாய் முனைப்பாகக் கூறப்பட்ட விடத்துத் தந்தையும், புதல்வன் முனைப்பாகக் கூறப்பட்ட விடத்துப் புதல்வியும் பின்னணி பண்புகளாகச் சுட்டப்பட்ட தாகக் கொள்ளல் தகும். இவற்றின் விரிவு இக்குறட்பா விலும் அவ்வக் குறட்பாக்களிலும் விளக்கப்பட இருக்கிறது.

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி என்பது 'தாய் தந்தைய ராகிய பெற்றோர் பொதுவாக, தந்தை சிறப்பாக; தம் புதல்வர் புதல்வியருக்குப் பொதுவாக, தம் புதல்வருக்குச் சிறப்பாகச் செய்து தரவேண்டிய இனக்கடமையாவது' என்று பொருள்படும்.

தந்தை மகன் ஆகிய இரண்டு சொற்களுமே இலக்கண முறையில் ஆண்பாற் பெற்றோரையும் ஆண்பால் மகவையும் குறிக்கும் சொற்களாயினும், இக் குறட்பாவில் அவை இரு பாற்கும் பொது உரிமைச் சுட்டாகவும், அதே சமயம் ஆண் பாற்கு மட்டுமே யுரிய சிறப்புரிமை முனைப்புச் சுட்டாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

தந்தை என்ற சொல் பெற்றோரிடையே ஆண்பாலாரை மட்டும் குறிக்கவும், தாய் என்ற சொல் பெற்றோரிடையே பெண்பாலாரை மட்டும் குறிக்கவுமே நெடுங்காலமாகத் தமிழில் வழங்கப் பட்டுள்ளன. எனினும் இரண்டு சொற் களுமே தொடக்கத்தில் பால்வேறுபாடற்ற சொற்களாகவே எழுந்தன ஆகும், இவற்றின் மூல வடிவுகள் ஒரே வேர்ச் சொல்லின் இரண்டு படிவங்கள் என்று கருத இடமுண்டு.

எந்தை (என் தந்தை, எம் தந்தை); உந்தை (உன் தந்தை) நுந்தை (நின் தந்தை, நும் தந்தை); ஆந்தை (ஆதன் தந்தை) என்ற இலக்கிய நீள் மரபு வழக்காறுகளை நோக்க, தந்தை என்ற சொல்லும் தம் தந்தை என்ற பொருளில் மருவி வந்த சொல்லே என்று கொள்ள இடமுண்டு. சொல்லின மூல வடிவம் 'தை' என்பதே என்றும்; 'தம்' என்பது முன்னிணையாகச் சேர்ந்தே அது தந்தை என்ற வடிவாயமைந்தது என்றும்; மூல இணைப்பும் பொருளும் மறக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் கருதலாகும். எண்ணெய் (எள் நெய்), வெண்ணெய் (வெள் நெய்) என்ற சொற்கள் இவ்வாறே மூலச் சொற்கள் மறக்கப்பட்டு, தேங்காய் எண்ணெய், கடுகெண்ணெய் என வழங்குவது காணலாம். வெண்ணெய் (வெண்மையான நெய்) என்பதும் இவ்வாறே மூலப் பொருள் மறக்கப்பட்டு ஒரு தனிச் சொல்லாக வழங்குகிறது. நெய் என்ற மூலச்சொல் வெண்ணெயையும் நெய்யையும் ஒருங்கே குறித்து, உருக்கப்படாத நெய் வெண்ணெயென வழங்கியிருக்க வேண்டும். உருக்குநெய் என்ற வழக்கு மரபு இன்றும் பேச்சு வழக்கில் உள்ளது.

மூல முடிவான இந்தத் 'தை' என்பதன் நீள் வடிவே தாய்.

இதுமட்டுமன்று,

தை, தாய் என்ற இந்த இரு வடிவங்களுமே 'தம்' என்ற முதற் பொருளுடைய தகர முதலெழுத்துடன் தொடங்கிய சொற்கள் ஆதல் கூடாததன்று. ஏனெனில் தாய், தந்தை, தலைவன், அரசன் ஆகிய இத்தனை பொருள்களையும் உள்ளடக்கிய 'ஐ', 'ஆய்' என்ற சொற்களை நாம் சங்க கால முதல் இலக்கிய வழக்கில் காண்கிறோம். ஐ, ஆய் என்ற இரு சொற்களுமே பால் வேறுபாடு இல்லாமல், இருபாற் பெற்றோரையும் பிற பெரியோரையும் குறித்தல் கூர்ந்து காணத்தக்கது. 'ஆய்' சங்ககாலச் சிற்றரசருள் முதல்வரான ஒரு குடியினரின் குடிப் பெயரையும், 'ஐ', 'ஆய்' ஆகிய இரு சொற்களுமே இன்றளவும் ஐயா, (பெரியார், தாய் வழிப் பாட்டன்) ஐயை, ஆயா (பாட்டன்; தாய்வழிப் பாட்டி,

செவிலித் தாய்) ஆய்ச்சி அல்லது ஆச்சி (தமக்கை, தாய்வழிப் பாட்டி, முல்லை நில நங்கை) என்ற பொருள்களில் இரு பால் விரவும் முறையிலேயே வழங்குவது ஒப்பிட்டுக் காணத்தக்கது ஆகும்.

தந்தை என்ற சொல் தொடக்கத்தில் பால் குறித்த சுட்டாக எழவில்லை என்பதும்; குடும்பத்தின் தொடக்கக்கால ஆட்சி முதல்வன் என்ற முறையிலேயே அது ஆண்பாற் சுட்டாக வழங்கிற்று என்பதும்; வள்ளுவர் வழக்கிலும், தமிழ் வழக்கிலும் குடும்பத்தின் சமுதாய ஆட்சிப் பொறுப்புடையவன் என்ற முறையிலேயே இக் குறட்பாவில் தந்தை என்ற இச் சொல் வழங்கப்பட்டுள்ளது என்பது காணலாம்.

மேலீடாகத் தந்தை என்ற சொல்லைப் பலர் நேரடியாக ஆண்பால் சொல் என்று கொள்ளலாம் — அவ்வாறு கொண்டே உரையாசிரியர்கள் அனைவரும் பொருள் கூறியும் உள்ளனர். ஆனால் அங்ஙனம் பொருள் கொள்ளுதல் தமிழர் கோட்பாட்டுக்கும், நம் நாகரிக உலகின் பகுத்தறிவுப் பண்பாட்டுக்கும் ஒத்ததன்று என்பது ஒருதலை.

தந்தை என்ற சொல்லின் பாற்பொதுமைச் சுட்டினை இன்னொரு வகையாலும் காட்டலாம்.

கண் இரண்டாயினும் காட்சி ஒன்றே. அதே சமயம் இரண்டு கண்களும் காணும் கோணங்களும் திறங்களும் ஒன்றல்ல, வேறு வேறு என்பதை ஒளி நூலார் தேர்ந்து காட்டுவர். இடது கண் வடிவம் காணும், வலது கண் உருவம் காணும். இடது கண் அணிமை நோக்குடையது, பொது நோக்குடையது; வலது கண் சேய்மை நோக்கும், சிறப்பு நோக்கும் உடையது. ஆனால் இரு கண்களும் சேர்ந்த நோக்கு இரு திறங்களையும் ஒருமைப்படுத்தி, இரு கோணங்களையும் ஒருமுகப்படுத்திக் காட்சியை ஒன்றாக்கிவிடுகிறது. உறுப்பு வேறுபாடு, நிற வேறுபாடு உடைய இரு வேறு வடிவொத்த படங்களை தனித் தனி இரு கண்களுடனும் இணைத்துப் பார்ப்பவர் இவ்வுண்மை காணலாம்—இரண்டு நிறமும் உறுப்பு

நிலையும் இணைந்து ஒன்றுபட்டு, இரண்டும் ஒரே படமாகவே தோற்றும்.

இரு கை வேறுபாடு, இரு கால் வேறுபாடுகளில் இவ் வேறுபாட்டொருமையை இன்னும் தெளிவாகக் காணலாம். இடது கால், இடது கை ஊன்றும்; வலது கால், வலது கை செயலில் முனையும். நிலை வலிமை முன்னவற்றிற்கும், இயக்க வலிமை அதாவது இயங்கு வலிமை பின்னவற்றிற்கும் இருப்பது வெள்ளிடை மலை.

இவ் வேறுபாடுகள் மனித இனத்துக்கு மட்டுமன்றி, விலங்கினத்துக்கும் பொருந்துவன என்பது குறிப்பிடத் தக்கது.

இயற்கையில் ஊன்றி நோக்கி வாழ்க்கை உண்மைகளைக் கண்ட முதல் இனம் தமிழினம். இம் மெய்ம்மைகள் கண்டு, காதலிருவர் வாழ்வின் இருமை ஒருமைக்கு இக் கண்ணுக்கு இருமை ஒருமையையே ஒப்புவமையாக வள்ளுவ மரபில் வந்த பிற்கால நீதி ஏடுகளும் காட்டியுள்ளது காண்கிறோம்,

> காதல் மனையாளும் காதலனும் மாறுஇன்றித்
> தீதில் ஒரு கருமம் செய்பவே!—ஓதுகலை
> எண்ணிரண்டும் ஒன்றும் மதி என்முகத்தாய்! நோக்குமால்,
> கண்ணிரண்டும் ஒன்றையே காண்!

திருவள்ளுவர் குறிப்பாகச் சுட்டிக்கூறிய மெய்ம்மைகளில் பல அவருக்குப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்தவராலும் சிறப்பிக்கப்பட்டுள்ளது காண்கிறோம்.

தமிழ் வள்ளுவக் குடும்பத்தில், அதாவது காதற் கற்புக் குடும்பத்தில் தாய் பின்னணியிலிருந்து இயக்கிய செயலன்றித் தந்தை செயலென்று ஒன்றோ; தந்தை பின்னணியிலிருந்து இயக்கிய செயலன்றித் தாய் செயலென்று ஒன்றோ இருக்க முடியாது. ஆயினும் குடும்ப வாழ்வில் செய்பவள் தாய், செய்விப்பவன், இயக்குபவனாகவே தந்தையும்; சமுதாய வாழ்வில் செய்பவன் தந்தை, செய்விப்பவள், இயக்குவிப்பவளாகவே தாயும் இயல்கின்றனர்.

இக் குறட்பா அற வாழ்வின் சமுதாயக் கூறு சிறப்பிப்ப தனாலேயே பெற்றோர் பொறுப்பு இங்கே தனிப் பொறுப்பாக விதந்துரைக்கப்படுகிறது. அத்துடன் சமுதாய வாழ்வுக்கூறு சிறப்பிப்பதனாலேயே அது பெற்றோரின் இக் கூட்டுப் பொறுப்பை முனைப்பாகத் தந்தை பொறுப்பாக்கிக் காட்டு கிறது. ஏனெனில் சமுதாய உறுப்பினராக இயங்குபவன், சமுதாயத் துறையில் செயற்பொறுப்புடையவன் தந்தையே. இக் குறட்பாவில் தாய் பின்னணியாக்கப்பட்டு, தந்தை மட்டுமே முனைப்பாகக் கூறப்படுவது இதனாலேயே ஆகும்.

மகற்கு என்பது இங்கே மகனுக்கு என்பதன் மறு வடி வமே என்பது மேலே இலக்கணக் குறிப்புரையில் கூறப் பட்டது.

மகன் என்ற சொல் தந்தை என்ற சொல்லைப் போலவே இலக்கண முறையில் ஆண்பால் மகவை மட்டுமே குறிப்ப தாயினும், இக் குறட்பாவில் புதல்வன், புதல்வி என்ற இரு பால் மகவுகளுக்கும் பொதுமைச் சுட்டாகவும்; அதேசமயம் முனைப்பாகப் புதல்வன் என ஆண்பால் மகவுக்கே சிறப்புச் சுட்டாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது மேலே விளக்க வுரையிலேயே குறித்துக் காட்டப்பட்டது.

'மகன்' என்ற சொல் தொல்காப்பியர் கால முதல் இன்றுவரை 'பெண்மகன்' ('பொம்மன்', 'பொம்மனுட்டி') எனப் பெண்பாலரைக் குறிக்கவும் வழங்கி வருகிறது. ஆண் பால் ஈருக இன்று கருதப்படும் னகரம் 'அம்மன்' எனக் கோயிலில் அன்னைத் தெய்வம் குறிக்கவும் வழங்குகிறது.

புதல்வன், புதல்வி என்ற இரு பால் மக்களும் பெண் பாலாகிய தாய் வயிற்றி லன்றித் தந்தை வயிற்றில் பிறப்ப வர் ஆகார். ஆண் பெண் இருவர் உடற் கூறுகளும் வளர்ச்சி யால் வேறுபடுவதன்றி அமைப்பால் வேறுபடுவன அல்ல. கருவில் பிண்டம் சில மாதங்கள் கழித்தே ஆண் பெண் என்ற பால் அறுதியீடு பெறுகிறது. பிறந்த பின்னும் இரு பாற் சிறுவரும் தம் பால் வேறுபாடு அறியாதவராகி, பால் வேறு பாட்டு உறுப்புக்கள் முனைப்பில்லாமலேதான் வளர்கின்

றனர். விலங்குலகில் வாத்தும், அன்னமும்; குயிலும் காகமும் ஒரு பருவம் வரை வேறுபாடின்றி இயங்கி, அப்பருவத்திலேயே வாத்தாக, அன்னமாக; குயிலாக, காகமாக மாறுபடுவதுபோல, ஆண் பெண்கள் ஒரு குறிப்பிட்ட பருவத்திலேயே, முழுமைப்பால் வேறுபாட்டுப் பண்புற்று, தாமும் பால் வேறுபாடறிந்து, பிறரும் அறியும்படி வளர்கின்றனர். பால் வேட்கை வேறுபாடு முனைப்பாவதும் இதன் பின்னரே யாகும்.

ஆண் பெண்பால் வேறுபாடு ஏற்பட்ட பின்னரும் கூட, ஆடவருள் பெண்மையும், பெண்டிரில் ஆண்மையும் பண்பாகப் பெற்று ஆண்மையில் பல படி ஆண்மைகளும், பெண்மையில் பலபடி பெண்மைகளும் காணப்படுவது கூர்ந்து நோக்கத் தக்க திறங்களே யாகும், பிறப்புக் கூறுகள் காரணமாகவும், நோய்க் கூறுகள் காரணமாகவும், அருகலாக ஆண் பெண்ணுதலும், பெண் ஆணுதலும் நாம் காணுத செய்திகள் அல்ல. ஆண்மையும் பெண்மையும் சரிசமப் பண்புகளாகும் போது அலிகள் என மக்களை நாம் பாற்பொதுமைப்படவே அழைக்க வேண்டியவர்களாகிறோம்.

மனித இனத்திலும் உயர் உயிரினங்களிலும் நாம் ஆண் பெண் பால் சார்ந்த உயிரிகளை ஏறத்தாழச் சரிசம விழுக்காட்டில் காண்கிறோம், ஆனால் ஆண் சிலவாகவும், பெண் பலவாகவும்; பெண் சிலவாகவும் ஆண் பலவாகவும் உள்ள பல இனங்களைக் கீழ்ப்படி உயிரினங்களிலே காணலாம். இரு பால்களன்றி, ஆண் பெண் அலி என்ற முப்பால் வேறுபாடுகளையுடைய தேனீ போன்ற உயிரினங்களையும் பார்க்கிறோம். கீழ்ப் படி உயிரினங்களிலும் ஓரறிவு (தாவர) உயிரிகளிலும் பால்கள் ஒரே உயிரில் மாறுபடுவதனையும், இரு பால் உறுப்பும் உடையனவற்றையும்; பாலிணைவால் பிறப்பவற்றையும், பால் பாலிணைப்பின்றியே பிறப்பனவற்றையும்; பால் வேறுபாடே இல்லாதனவற்றையும் காண்கிறோம்.

தமிழ்ச் சொல்லில் 'மகன்' பொதுமை சுட்டுவது போலவே, உயிரியல்பிலும் பால் வேறுபாடு அடிப்படை

வேறுபாடாய் அமையாமல், வளர்ச்சி வேறுபாடு, தொழில் பண்பு வேறுபாடாகவே அமைவது தெளிவு.

'மகற்கு' அல்லது 'மகன்' என்ற சொல்லின் பாற் பொதுமைச் சுட்டிற்கு இவை விளக்கம் ஆகும்.

மகன் என்ற கருத்துக்குத் தமிழில் மகன், புதல்வன், சேய், தோன்றல், மைந்தன் முதலிய பல சொற்கள் உண்டு. ஆனால் கடைசிச் சொல்லுக்கு ஆண்பால் வடிவம் மட்டுமே உண்டு. அதற்கு முன் கூறப்பட்ட இரு சொற்களும் பொதுமை மட்டுமே சுட்டுவன, அல்லது ஆண்பால் முனைப்பு மட்டுமே சுட்டுவன, பொதுமையும் சிறப்பும் ஒருங்கே சுட்டும் இரு வடிவுடையன அல்ல. மகன், புதல்வன் ஆகிய இரு சொற்களே இருபால் வேறுபாடுடைய வடிவுடன் ஆண் பால் முனைப்பும் சுட்டுவன ஆகும். ஆயின் இவற்றுள்ளும் புதல்வன் என்ற சொல் வழங்கப் படாமல், மகன் என்ற சொல்லே வழங்கப்பட்டதற்குக் காரணம் உண்டு. அவ் வழக்கின் விளைவான தனிக் குறிப்பு வளங்களும் உண்டு.

மகன் என்ற தமிழ்ச் சொல்லுக்குப் புதல்வன் என்ற பொருளேயன்றி, இன்பம் வழங்குபவன் (மகிழ்வு); உரியவன் (மகன்மை அதாவது உரிமை உடையவன்); பெருமை உடையவன் (தமிழ்: மிகுதி; சமஸ்கிருதம்: மஹத், மஹான்; கிரேக்கம்: 'மெகா' [1]; ஆங்கிலம்: மச், மிக்கிள் [2]); தலைமை உடையவன் (தமிழ்: மகுடம்; சமஸ்கிருதம்: முகுடம்); புது வளமும் வளர்ச்சியும் தருபவன் (தமிழ்: முகிழ்; சமஸ்கிருதம்: முகுளம்) ஆகிய பொருள்களும் உண்டு என்பதை அதன் வேர்ச் சொற் பொருள்கள் காட்டுகின்றன. அதன் பன்மை வடிவோடியைந்த பொருள் மனிதன் என்பது.

பெற்றோர் இன்ப வாழ்வின் பயனாய்ப் பிறந்ததன்றி, அவர்கள் இன்பத்தை நாடோறும் புதுக்கி உயர்வுறுத்தி எல்லையற்றதாகப் பெருக்கி, பெற்றோர் வாழ்வின் உரிமை நிலை நிறுத்தி, இனப் பெருமையின் மரபில் வந்ததன்றி, அம் மரபு வளம் பெருக்கிப் பெருமையை அதன் உச்ச நிலைத்

1. Mega 2. Much, Mickle

தலைமை நோக்கிக் கொண்டுசென்று, மனித இனத் தலைமைப் பண்பாகிய இன முதல்வர் அல்லது கடவுட் பண்பு நோக்கி வளம் புதுக்கி, வருங்கால மனித இன வளர்ச்சியில் பெற்றோர்க்குப் புகழ்த் தலைமை தருபவரே மக்கள்—அதன் ஒருமைச் சொல்லே மகன்.

பெண்ணின் பெருமை இன மரபு பேணுவது, அதன் வளம் பெருக்கி வளர்ச்சி ஊக்குவது—ஆனால் இன மரபின் புது வளம் ஆக்குபவன் ஆணே, மகனே!

புதல்வி குடும்பத்தின் தலைமுறை மரபில், பிறந்த குடும்பப் புகழ் பேணி, புகுந்த குடும்பப் புகழ் வளர்ச்சியையே ஊக்குகிறாள். புதல்வனே தற்கால மனித சமுதாயத்தில் (திருவள்ளுவர் காலத்திலேயே நடைமுறைக்கு வந்துவிட்ட ஆண் வழி மரபு முறைச் சமுதாயத்தில்) பிறந்த குடும்ப மரபு தொடர்ந்து ஊக்குகிறான். தந்தைவழி நின்று, தமக்கை தங்கையர் குடி மரபுப் புகழ் பேணும் பொறுப்புடையவனும் மகனே. மகன் ஆண்பால் முனைப்புச் சுட்டாக வழங்கப்பட்டதற்கு இதுவும் காரணமாகும்.

ஆற்றும் என்பது 'ஆற்ற வேண்டிய, செய்து தரவேண்டிய, தந்தையால் ஆற்றப்பட வேண்டிய, செய்தளிக்கப்பட வேண்டிய' என்று பொருள்படும்.

ஆற்று என்ற சொல் அறம், அறு, ஆறு, ஆற்றல், ஆற்ற. அறைபோக என்ற சொற்கள், சொற்றொடர்களின் வேர்ச் சொல் தொடர்புகள் மூலம் 'வரையறுத்து, திட்டமிட்டு, நல் வழியில் நின்று, உறுதிப்படச் செய்தல்' 'இன ஆக்கம் பெருக்கல்', 'இன ஆக்கம் பெருக்கும் வகையில் உச்ச அளவுப் பண்பு ஊக்கல்' என்னும் பொருள்களை உடையது என்பதும் இலக்கணக் குறிப்புரையில் ஓரளவு சுட்டப்பட்டது.

தவிர, இது ஆற்றுவமையைச் சுட்டிக் காட்டி, தந்தை மகனுக்கும், அவன் தன் மகனுக்கும் என மரபு வழி ஆற்றொழுக்காகச் சங்கிலித் தொடர்போல நீடித்து இடையறாது எல்லையற்றுச் செல்லும் கடமை ஒழுங்கையும்; இன வாழ்வாகிய இந்த ஆற்றொழுக்கில் தலைமுறைதோறும் புதுப்

புதுச் சமுதாயப் பண்பு மேல் மிகையாக வந்து கலந்து ஆற்றொழுக்கின் ஆற்றல் பெருக்குவதனையும்; ஆற்றின் இரு கரை போல, அறத்தால் வரையறுக்கப்பட்ட திட்ட வழி ஒழுகுவதனையும்; ஆறு கடல் நோக்கிச் சென்று கடல் வளம் பெருக்குவதன்றி, முகிலாகி மலை மீது மழை பொழிந்து அவ்வாற்று வளமும் ஆக்கி, அவ்வாற்றொழுக்குச் சென்றெட்டாத மேட்டிடங்களுக்கும் தொலைவிடங்களுக்கும் வளங்கொழிப்பது போல, நேர் குடி மரபுத் தலைமுறைக்கேயன்றி, பிற குடி மரபுத் தலைமுறைக்கும், இனத் தலைமுறைக்கும், சமுதாயத் தலைமுறைக்கும், இன மரபு தாண்டிப் பிற இன மரபு, பேரின மரபுகளுக்கும் நன்மகப்பேறு தரும் வளங்கள் சுட்டிக் காட்டிற்றாதல் காணலாம்.

நன்றி என்பது இனக் கடமை ஆகும்.

நன்றி என்ற சொல் இலக்கண முறையிலும் பொருள் தொடர்பு வகையிலும் நன்மை, நலம், நன்னர், நன்கனம் முதலிய சொற்களுடன் உறவுடையது என்பதும்; நல் அல்லது நன் என்ற வேர்ச் சொல்லுடன் மை, அம் ஆகிய பண்புப் பெயர் விகுதிகள் சேர்ந்து அது நன்மை, நலம் ஆவதுபோல, தி அல்லது இ என்ற பண்புப் பெயர் விகுதி சேர்ந்தே அது நன்றி ஆகியுள்ளது என்பதும் இலக்கணக் குறிப்புரையில் சுட்டப்பட்டுள்ள செய்திகளே. திருக்குறளிலேயே அது நலம், இன நலம், இன நலச் செயல், இன நல உணர்வு, இனநல உணர்வலைகள், இனநலக் கடமை ஆகிய எல்லாப் பொருள்களிலும் வழங்கப் பெற்றுள்ளது. ஆயினும் தனி மனிதரைக் குறிக்கும்போது, திருக்குறளிலும் அது தனி மனிதன் தனி மனிதனுக்கு ஆற்றும் இனநலச் செயலையும், தனி மனிதன் தனி மனிதனிடம் கொள்ளும் இன நல உணர்வையும் குறித்து, செய்ந்நன்றி, செய்ந் நன்றி யறிதல் என்ற பொருள் தந்து பொருட் குறுக்கமும் இழிபும் பெறுவதுண்டு. இன்று இக் கடைசி இரு பொருள்களே அதற்கு நிலையாக வழங்குகின்றன.

உரையாசிரியர்கள் '**செய்ந்நன்றி யறிதல்**' என்று மகுடமிட்டுக் காட்டும் நன்றி நலம் என்ற (11-ம்) அதிகார முன்

னுரையில் இச் சொல் முழு அளவில் விளக்கப்பட இருக்கிறது. அவ் வதிகாரத்திற்கு இக் குறட்பாவின் இச் சொல் வாயில் செய்தது என்னல் தகும். இன வாழ்வின் இன நலன் தந்தையுடன் தொடங்குகிறது, இனக் கடமைகளுள் முதல் இனக் கடமை தந்தையினதே என்பதையும் இது நினைவூட்டுகிறது.

நன்றி என்பது இனக் கடமை, இனநலப் பொறுப்பு. இதுவே இச் சொல்லுக்குச் சரியான பொருள் என்பதை இக் குறட்பாவின் போக்காலும் அதிகாரத்தின் போக்காலும் காணலாம். ஏனெனில் தந்தைக்கும் மகனுக்கும் உள்ள தொடர்பு தனி மனிதருக்கும தனி மனிதருக்கும் இடையேயுள்ள தனி மனிதத் தொடர்போ, சமுதாயத் தொடர்போ கூட அன்று—இனத் தொடர்பே. ஒவ்வொரு தந்தையும், ஒவ்வொரு மகனுக்கும், ஒரே தந்தை தன் எல்லா மக்களுக்கும் செய்யும் கடமையாதலால், அது சமுதாய முழுமையின் தலைமுறை கடந்த செயலாகிறது. அத்துடன் தந்தை மகனுக்குச் செய்வது, அவர் தந்தை அவருக்குச் செய்ததே — அவர் மகனும் அடுத்த தலைமுறையில் அவன் மகனுக்குச் செய்ய இருப்பதே. எனவே இச் செயல் தனி மனிதர் சமுதாய வாழ்வில் நிகழ்கால எல்லையில் செய்யும் தற்காலிகச் செயல் மட்டுமன்று; அதனுல் வரும் உணர்வும் தற்காலிக உணர்வு மட்டுமன்று—செயலும் உணர்வும் தொடர் செயல், தொடர் உணர்வு, எதிரெதிர் தொடர் செயல், எதிரெதிர் தொடர் உணர்வு—உலகளாவிய இடப் பரப்பும் முக்காலப் பரப்புமுடைய எல்லையற்ற இனவாழ்வளாவிய எதிரெதிர் தொடர் செயல், எதிரெதிர் தொடர் உணர்வு ஆகும்.

அவையத்து முந்தியிருப்பச் செயல் என்பது 'கற்றறிந்த மேலோர் உறுப்பினராயமர்ந்திருக்கும் பல்வகைச் சமுதாய, அரசியல், சமய, இன அவைக் களங்களிலே தந்தை தம் வாழ்வில் பெற்றிருந்த இடத்தைப் பார்க்கினும் மேம்பட்ட முதன்மை வாய்ந்த இடத்தில் அமரப் பெறும் தகுதியைத் தம் மக்கள் உடையவரா யிருக்கும்படி செய்து அமைத்தலேயாம்' என்று பொருள் தருவதாகும்.

அவையத்து என்ற சொல்லின் பெயர்ப்படிவத்தை அவை எனக் கொள்வதைவிட அவையம் எனறு கொள்வதே வள்ளுவப் பொருட் சிறப்புடையதாகும் என்பதுமேலே இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டது. ஏனெனில் அவையம் என்பது அவை என்பதுடன் அம் ஈறு சேர்ந்த வடிவமாகும். இந்த அம் ஈறு தனிப் பொருளற்ற அஃறிணை ஒருமை ஈறு என்று நாளடைவில் கொள்ளப்பட்டு விட்டாலும், தொடக்கத்தில் அஃறிணைப் பன்மை ஈருகவும், பன்மைத் தொகுதி, இனத் தொகுதி, பண்பு ஆகியவை சுட்டும் ஈருகவும் விளங்கி யிருந்தது என்று கருத இடமுண்டு. முரசு, முரசம்; உள், உள்ளம்; நெஞ்சு, நெஞ்சம்; குஞ்சி (மயிர்), குஞ்சம் (மயிர்க்கற்றை) ஆகிய வழக்குகளில் அம் ஈற்றின் இப் பொருள் நுட்ப வேறுபாடுகள் காணலாம். சிறப்பாக, உள், நெஞ்சு இடப் பொருளும் உறுப்புப் பொருளும் தர, உள்ளமும், நெஞ்சமும் செயற் பண்பு அல்லது அக உறுப்புக் குறிக்கின்றன என்பது காணலாம்.

அவையம் என்பது இனத் தொகுதிப் பெயர், பலவகை அவைக் களங்களின் தொகுதி குறித்தது.

அவ் என்பது தமிழில் பன்மையையும் ('அவற்றை' என்பதன் பெயர் வடிவான அவை) மூப்பையும் (அவ்வை, ஔவை) குறிக்கும். அவை முதலில் இல்லத்தில் தலைவரைச் சூழ அமைந்த குடும்பக் குழுவின் கூட்டமைவையும்; பின் சமுதாய வாழ்வில் ஊர், தொழில் அமைப்பு, நாடு முதலியவற்றின் ஆட்சி அவைகளையும், அறிஞர், கலைஞர் அவைக் களங்களையும்; இனவாழ்வின் தலைவர்களின் கூட்டமைப்பான இன அவைகளையும் குறிக்கும் சொல் ஆகும். அவையம் இவ் வெல்லா வகைக் குடும்ப, சமுதாய, அரசியல், சமய, இன அவைகளின் தொகுதி சுட்டுவதாகும்.

அவையடக்கம் (கலைஞர், அறிஞர் கூட்டமைப்பான கற்றறிந்தோர் அவையில் அவர்கட்கு மதிப்பளித்து அடக்க ஒடுக்கம் காட்டும் பண்பு). அவையல் கிளவி (பெரியோர் முன் சொல்லத்தக்க உயர் பண்புத் தகுதியற்ற சிறுமைச் சொல்) என்றவிடத்து 'அவை' என்பது கற்றறிந்தோர்

குழாம், கற்றறிந்தோர் சமுதாயம், கற்றறிந்த உலகம் என்ற பொருள்களையும்: திருக்குறளிலே அவையறிதல் (72) அவையஞ்சாமை (73) ஆகிய அதிகாரப் பெயர்களில் ஆட்சிப் பேரவையையும் இச் சொல் குறித்தல் காண்கிறோம். அத்துடன் பெரியாரைத் துணைக்கோடல் (45), பெரியாரைப் பிழையாமை (40) ஆகிய அதிகாரப் பெயர்களில் அவை என்றி சொல்லினிடமாகப் பெரியார் வழங்கி, பெரியார் அவை உச்ச உயர்தர அரசியல் ஆணை மன்றங்களைக் குறிப்பதையும் ஓர்ந்து காணல் வேண்டும்.

அவை என்ற சொல்லைப் போலவே 'மன்று', 'மன்றம்' என்ற சொற்களையும் ஊரவை அல்லது அம்பலம் என்ற பொருளில் திருவள்ளுவர் பல குறட்பாக்களில் (820, 1138, 1254) வழங்கியுள்ளார். மணவிழாக்களில் கூடும் உறவினர் உற்றூர் குழந்தைகளையும் ஊரவரையும் நாலடியார் மன்றம் என்று வழங்கியுள்ளது 'மன்றம் கறங்க மணப்பறை ஆயின' என்ற பாடல் காண்க. மன்ற நடுவில் நடைபெறுவதாலேயே திருமணத்திற்கு மன்றல் என்ற பெயரும், மணம் என்ற பொருளும் ஏற்பட்டுள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது. வழக்கு ஆய்விடங்களும் இறைவன் ஆடும் அரங்கும் மன்றம் என்று வழங்கியுள்ளன. இறைவனும் வழக்கறிஞனும் இதனால் ஒருங்கே 'மன்றாடி' என வழங்கப்பெறுகின்றனர்.

மன்று, மன்றம் என்ற சொல்லின் பொருள்களையும் அவை, அவையம் என்ற சொற்கள் உளப்படுத்துவனவே யாகும்.

முந்தி என்பது இங்கே மேம்பட்ட இடத்தில், தகுதிச் சின்னமான நடு உயர் இருக்கையில் என்று பொருள்படும்.

முந்துதல் 'முன்' என்பதனுடன் தொடர்புடையதாய், காலத்தால் முந்துதலையும், இடத்தால் மேம்படுதலையும் குறிக்கும். சமுதாய இன அவைகளில் இட மேம்பாடு தகுதியடிப்படையானதால், முந்துதல் இங்கே தகுதியில் மேம்படுதல், உயர்வு எய்துதல் சுட்டிற்று.

முந்துதல் முன்னிடம், முதலிடம் பெறுதலுக்கு ஒரு படி. ஏனெனில் அது முதலிடம் நோக்கிச் செல்லுதலே யாகும். மக்கள் யாவரும் முந்துவராதலால், முந்துதல் முதலிடம் நோக்கிய போட்டியையும், அப் போட்டியால் சமுதாயம் முன்னேறுவதையும், சமுதாய முதலிடம் அதாவது இனக் குறிக்கோள் நோக்கி மேம்படுவதனையும் காட்டும். இன முதலாகிய இனக் குறிக்கோளே கடவுள்—அடிவானை நோக்கி முன்னேறுபவன் அடிவானை நோக்கி முன்னேறுந்தோறும் அடிவானும் முன்னேறிச் செல்லுதல்போல, தனி மனிதன் சமுதாயக் குறிக்கோளை நோக்கி முன்னேறுந்தோறும், சமுதாயக் குறிக்கோள் இனக்குறிக்கோளை நோக்கி முன்னேறும். சமுதாயக் குறிக்கோள் இனக் குறிக்கோளை நோக்கி முன்னேறுந்தோறும், இனமும் இனக்குறிக்கோளும் எல்லையில்லா வளர்ச்சியில் முன்னேறிக் கொண்டே, உயர்ந்துகொண்டே செல்லும்.

முந்தி என்ற சொல் இவ்வாறு திருவள்ளுவரின் முப்பால் வாழ்க்கையின் மூவா முற்போக்குக் கோட்பாட்டைக் குறித்துக் காட்டுகிறது.

இனத்தில் பிந்துருது முன் பெற்ற மேம்பாடு தளராது பேணல் பெண் மகள், பெண்பாலர் கடமை. முந்துவதை ஊக்குவது அவர்கள் பெருமை, ஆனல் முந்துதல் ஆண்மகன், ஆண்பாலர் கடன். தான் முந்துவதுடன் முந்துபவரை ஊக்குவதும் ஆண்பாலர் கடமை.

பெண்மை பேணுவது, ஆண்மை ஆளுவது என்ற தமிழ்ச் சொல்லமைதி காட்டும் தத்துவம் இதுவே.

இருப்ப என்பது இருக்க என்பதன் மறு வடிவம் மட்டுமன்று. இருப்புக் கொள்ள என்ற தொனிப் பொருள் தந்து, அது முந்திச் சென்று இருப்பதுடன் நில்லாது, நிலையாக இருக்க, கொண்ட மேம்பாட்டைச் சமுதாய முழுவதும், இன முழுவதும் பரப்பி நிலையான தலைமை கொள்ள என்ற கருத்துச் சுட்டிற்று.

மற்றும் இருக்க என்னாது இருப்ப என்றதனால் வாளா இருந்துவிடாமல், தகுதி பயன்படுத்தி மேலும் முன்னேறிச் செல்லுவதற்குரிய ஒரு முதல் நிலையாகவே இருப்பினைப் பயன் படுத்துவது என்பது குறிக்கப்பட்டது.

முந்திச் செயல், முந்திச் செல்லச் செயல் என்னாமல், முந்தி யிருப்பச் செயல் என்றதனால் இங்கே தந்தை கடன் தகுதி உண்டுபண்ணுவதுடன் நின்று விடுகிறது—தகுதியில் பிற்படாமல் காப்பதே அத் தனிக் கடன் என்பதும்; முந்தி மேம்பட்டு முன்னேறுதல் புதல்வரின் முயற்சியே என்பதும் தொனிப் பொருளாகப் பெறப்பட்டன.

செயல் என்பது செய்தமைத்தல், செய்து தரல், திட்ட மிட்டுப் பேணி யமைத்து உதவுதல் என்று பொருள்படுவ தாகும்.

குறட்பாவில் நன்றி என முடியும் நீள் தொகை எழுவா யாகவும், செயல் என முடியும் நீள் தொகை பயனிலையாகவும் அமைந்ததனால் 'நன்றியாவது செயலே யாகும்' என்ற சொல் விரிவை அவாய்நிலையாகக் கொண்டு இயன்றது. இது 'நன்றி செயலே, செயலன்றி நன்றி பிறிதின்று' என்னும் முற்றுப் பொருள் சுட்டிற்று.

நன்றி எழுவாயாகவும், செயல் பயனிலையாகவும் அமைந் ததன் அருமைப்பாட்டு நலம் இங்கே நோக்கத் தக்கது. ஏனெனில் நன்றி எழுவாயானாலும் செய்பவர் தந்தையே. அதுமட்டு மன்று, முந்தியிருப்பச் செய்பவர் தந்தையானா லும், முந்தியிருப்பவர் மக்களே.

செய்பவர் தந்தை, செய்யப் பெறுபவர் புதல்வர். இதில் தந்தை செய்யினும் விளைவு மகனுக்கே: விளைவான தகுதி மகனுக்கானாலும் அத்தகுதியின் விளைவு இனத்துக்கே என் பது காணலாம்.

சிறப்புரை: இருபாலாராகிய புதல்வர் புதல்வியரின் வாழ்வுக் கடமை அல்லது இனக் கடமை அவர்கள் முயற்சி யாலேயே நிறைவு பெறுவது ஆகும். ஆனால் அதற்குரிய

தகுதியை அவர்களுக்கு அளிக்க வேண்டியவர்கள் பெற்றோரே யாவர். பெற்றோருள்ளும் எல்லையில் கால மரபுடைய இனத்தின் மரபுப் பண்பைத் தாயே பண்பாகக் கொண்டு, தந்தை மூலம் சமுதாயத்துக்கும், மக்கள் மூலம் இனத்துக்கும் அதைக் கொண்டு செலுத்துபவள் ஆவள். ஆனால் இனத்தின் முந்திய தலைமுறைகளுக்குரிய சமுதாய வளர்ச்சியை, அதாவது கல்வியை, சமுதாயத்தின் அடுத்த தலைமுறையில் புதல்வருக்கு அளிக்கும் கடமை தந்தையின் சிறப்புக்கூறு ஆகும்.

இரு பாற் பெற்றோர்களின் கடமைக் கூறுகளையும் சமுதாய வாழ்வில் கொண்டுய்ப்பவர் தந்தையே யாதலாலும்; இரு பால் மக்களின் முயற்சிகளையும் வருந் தலைமுறைச் சமுதாயத்துக்குக் கொண்டு செல்பவர் ஆண்பால் மகவாகிய மகனே யாதலாலும், இக் குறட்பாவில் பெற்றோர் கடமை அல்லது தகுதியாக்கம் தந்தை பேராலும்; மக்கள் முயற்சி மேம்பாடு மகன் பேராலும் கூறப்பட்டன. ஏனெனில் தந்தை முன் தலைமுறைச் சமுதாயப் பேராள்; மகன் வரு தலைமுறைச் சமுதாயப் பேராள்.

பொருள்வளம்: (1) மாச்சீர் மயமான இக் குறட்பாவில் முதலடியில் இரண்டாவது நான்காவது சீர்களாக வரும் 'மகற்காற்றும்', 'அவையத்து' ஆகிய இரண்டும் மட்டுமே காய்ச் சீர்கள். தந்தையின் இனக் கடமைக்குரிய நிலைக்களனை மகன் பெருமையையும், மகன் பெருமைக்குரிய நிலைக்களனை அவையத்தின் பெருமையையும் இது ஒளிமுகப்படுத்திக் காட்டுகிறது. இரண்டு சீர்களுமே முதலசை எடுத்திசைத்தும், முதலசையிலும் இரண்டாம் எழுத்து எடுத்திசைத்தும் பின்னசைகள் நீண்டும் வந்தன. மகனை உயர்த்தத் தந்தை ஆற்றும் கடமைக்கு நெடுநீள் முயற்சி தேவை

என்ற கருத்தும்; அதுபோலவே மகன் தகுதிபெற்ற பின்னும் அதன் விளைவான மேம்பாட்டை அவையத்தில் பெறுவதும் நெடுநீள் முயற்சியினாலே ஏற்படத் தக்கது என்ற கருத்தும் தொனித்தன.

இன வாழ்வு ஓர் எல்லையற்ற கடல். சமுதாய வாழ்வு அதன் ஒரு கூறான அலை. குடும்ப வாழ்வு அவ் வலையின் ஒரு சிறு கூறான நீர்த்துளி. தனி மனிதன் முயற்சியோ அத் துளியில் ஒரு நுண் திவலை. ஆயினும் அண்டமாகிய இன வாழ்வின் நுண் கூறாகிய தனி மனிதன் முயற்சிகூட, அண்டத்தை உள்ளடக்கிய ஓர் அணுப் போன்றதாகும். தந்தை கடமை, மகன் தகுதி ஆகிய இரண்டும் இன வாழ்வாகிய அண்டத்தின் ஓர் அணுக் கூறானாலும், அவை அண்டத்தை உள்ளடக்கிய அணுப் போல, இன வாழ்வாகிய அண்டத்துக்கு உறுதி தருவன ஆகும்.

தந்தை கடன், மகன் தகுதி ஆகிய இரண்டிற்கும் விடா முயற்சி, கடு முயற்சி தேவை என்ற தொனிக் கருத்தால் இன வாழ்வில் தந்தை கடன், மகன் தகுதி, இவற்றுக்குக் கட்டளைக் கல்லான அவையம் ஆகிய இவற்றின் முக்கியத்துவத்தை மேற் குறிப்பிட்ட இரு காய்ச் சீர்களின் ஓசைப் படிவம் காட்டிற்று.

(2) இக் குறட்பாவின் மாச்சீர்கள் இடைமுரிவுற்றுக் காய்ச்சீர்கள் போலவும், காய்ச்சீர்கள் இடைமுரிவுற்றுக் கனிச் சீர்கள் போலவும் நடந்து இரு சீர்களின் இறுதியிலும் இடை ஓய்வு[1] ஏற்பட்டு, மொத்தத்தில் யாவும் சேர்ந்து மலையருவியின் அலைத் துள்ளல், அலையிடைப் பள்ளம் ஆகிய ஓசைப்

1. Pause or caesura

படத்தை நம் முன் தோற்றுவிக்கின்றன. குறுகிய சீர்களால் அமையும் இக் கலி ஓசைச் சீர் நடை இன வாழ்வில் தந்தை மகன், மகன் தந்தை எனக் கடமையும் தகுதியும் மாறிமாறி வருவதால் ஏற்படும் விரைந்த முன்னேற்றப் போக்கைச செவிப்படச் சந்தப்படுத்திக் காட்டுகின்றது.

(3) இக் குறட்பாவில் 'தந்தை மகற்காற்றும் நன்றி' என்றும் 'அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்றும் இரு தொகைகள் பெயர்ச் சொல் தொகைகளாகவே வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் இம் மணிவிளக்கவுரை கொண்டதுபோல், முன்வரு தொகையே எழுவாயாகக் கொள்ளப்பட்டால், 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி ஆவதெல்லாம் அவையத்து முந்தியிருப்பச் செயல் ஒன்றேயாகும் (அதாவது முந்தியிருப்பச் செயல் என்றதனுள் அடங்கிவிடும்), என்ற பொருள் விளக்கமுறுகிறது. ஆனால் பிந்திய தொகையும் எளிதாக எழுவாயாகக் கொள்ளத்தக்க முறையிலேயே குறட்பா அமைந்திருக்கிறது என்னலாம். அம் முறையிலேயே உரையாசிரியர்கள் பலரும் கொண்டுள்ளனர். அவ்வாறு கொண்டு பின் வரு தொகையையே எழுவாயாக்கினல், 'அவையத்து முந்தியிருப்பச் செயல் ஒன்றே தந்தை மகற்காற்றும் நன்றியாகும் (பிறிதன்று)' என்ற பொருள் துலக்கமுறுகிறது.

இவ் விரண்டனுள் சிறந்தது முதலது என்று கொண்டே இம் மணிவிளக்கவுரை அதனைத் தேர்ந்தெடுத்துள்ளது. தந்தை கடமையே குறட்பா நுதல் பொருளாதலால், இப் பொருள்கோள் அதனை இயல்பாக வலியுறுத்தும் பொருள்கோள் ஆகிறது. ஆயினும்

இலக்கண முறையில் மட்டுமின்றிப் பொருள் முறையிலும் இரண்டு பொருள்களிடையிலும் கருத்து வேறுபாடு மிகவும் குறைவு என்பதை இரு பொருள்களையும் வாசித்தே காணலாம். இவ்வாறு வாசகத்தின் இரு பகுதிகளில் எதனை எழுவாயாக்கினாலும் பொருள் ஒப்பா யமையும்படி குறட்பா அமைந்திருப்பதன் பொருட் சிறப்புத் திறம் கூர்ந்து கண்டின்புறத் தகுந்தது ஆகும்.

இக் குறட்பா வாசகத்தில் அமைந்துள்ள இப் பொருள் சிட்ப நயம் ஏரணர் அல்லது வாய்வியலார்[1] மட்டுமே கூர்ந்துணர்ந்து காணத் தகும் ஒரு சிறப்புக் கூறு ஆகும். 'குதிரை அழகிது' என்பது போன்ற பொதுமுறைக் கருத்து வாசகங்களில், எழுவாய்ப் பகுதியோ பயனிலைப் பகுதியோ கருத்து முழுமைச் சுட்டாக[2] அமைய வேண்டும் என்பதில்லை. குதிரைகள் சில அழகியதாக இல்லாமலும் இருக்கலாம். அழகியன எல்லாமே குதிரைகளல்ல, பிறவும் உள. ஆனால் 'குதிரை' 'கொம்பிலா விலங்கு' என்பது போன்ற இன வாசகத்தில் எழுவாய்ப் பகுதியான 'குதிரை' முழு மெய்ம்மைச் சுட்டு. ஆனால் இங்கும் 'கொம்பிலா விலங்கு' முழுமைச் சுட்டன்று. ஏனெனில் குதிரை யன்றிக் கொம்பிலா விலங்கு பிறவும் உண்டு. இவ்விரண்டுக்கும் வேறான சரி முழு வாசகங்களும் உண்டு. 'இரண்டும் இரண்டும் சேர்ந்து நான்கு' என்பது இதற்குக் காட்டு. இதில் எழுவாய்ப் பகுதியும் பயனிலைப் பகுதியும் முழுமைச் சுட்டுக்கள். எனவே எதை எழுவாயாகக் கொண்டாலும், எதைப்

1. Rhetoricians or logicians 2. Universal term

பயனில்லையாகக் கொண்டாலும் பொருள் கெடாது, மாருது. இத்தகைய சரி முழுமை வாசகங்களை நிறை திட்ப வாசகங்கள் என்னலாம்.[1]

இக் குறட்பா வாசகம் வாய்வியலாரின் இம் மூன்ருவது வகை நிறை திட்ப வாசகம் ஆகும் என்பது காணலாம்.

தமிழர் மந்திர வாசகங்களாகக் கொண்ட மணி யுரைகள் அல்லது வேத உரைகள் இம் முழு நிறைத் திட்ப இலக்கணங்களை உடையன என்பதும்; இத் தகைய மணியுரைகளே மிகுதியாக உடைய திருக் குறள் ஆதி மந்திர நூலாகவும், ஆதி வேதமாகவும் சங்க கால, தொல்காப்பிய காலத்துக்கு முன்னிருந்தே கருதப்பட்டு வந்தது இயல்பே என்பதும் ஈண்டுக் கருதி நோக்கத் தக்கன.

திருக்குறளுக்கு வழங்கி வந்த சிறப்புப் பண்புப் பெயர்களே அம் மரபில் வந்த வேத இயல்புடைய ஏடுகளுக் கெல்லாம் அவ்வவ் ஏடுகளின் தனிப் பண் புக் கூறுகளுக் கேற்பப் பிற்காலத்தில் வழங்கப்பட் டன. சைவர்களால் வேதாகமம் என்று கொள்ளப் படும் திருமூலர் ஏடு அவ்வழி 'திருமந்திரம்' என்ற பெயர் கொண்டே இயல்வது காணலாம்.

[4] 'ஆற்றுதல்' என்ற சொல்லின் பொருளும்' சொற்ருெடர்புக் குறிப்பு வளமும், ஆற்றுவமையால் வரும் வள்ளுவ வளமும் விளக்கவுரையிலேயே விரித் துரைக்கப்பட்டன. ஆனல் வள்ளுவ மரபு வளத்தின்

---

1. Absolute propositions i. e. propositions in which both the subject and the prediea̧te terms are fully inter-changeable universals.

ஆழத்தைத் தமிழ் மரபு வளத்தின் வழி நின்றே முழுதும் காண முடியும்.

தாய், தந்தை, குரு, அரசன், தெய்வம் என வகுக்கப்பட்ட ஐங்குரவருள்ளே, முதலும் ஈறுமாய் அமைந்த தாயும் தெய்வமும் இனப் பண்பை முறையே முன்னின்று வழங்குபவர்களும் மேனின்று ஊக்குபவர்களும் ஆவர். குரவருள் நடுவணராகிய குருவே தாய் வழி வந்த இனப் பண்பைச் சமுதாயத்துக்கு அளித்து, சமுதாயத்தின் பண்பைத் தெய்வமாகிய இன வள நோக்கிக் கொண்டு செலுத்தும் பொறுப்புடைய உயிர்க் குரவர் ஆவர். குருவின் இந்த இருமைப் பொறுப்பில் இனப் பண்பைச் சமுதாயப் பண்பாக்கும் முற்பகுதியைத் தந்தையும், சமுதாயப் பண்பை இன வளமாக்கும் பிற்பகுதியை அரசனும் ஏற்றுக்கொள்கின்றனர்.

தந்தையின் 'ஆற்றுதல்' இவ்வாறு தாயின் வழி நின்று புதல்வர் புதல்வியரின் இனப் பண்புத் தகுதியை ஆக்குதல் என்று பொதுவாகச் சுட்டுவதுடன், அவர்கள் சமுதாயத் தகுதியைத் தன் சார்பில் நின்றே ஆக்கி வழங்குதல் என்று சிறப்பாக வற்புறுத்துவதும் ஆகும். முந்திய தகுதியை ஆற்றும் கடப்பாடு இருபாற் பெற்றோருக்கும் ஒருங்கே உரியது. அதனைப் பெறுவதற்கும் இரு பால் மக்களும் ஒருங்கே உரியவர் ஆவர். ஆனல் பிந்திய தகுதியை ஆற்றும் பொறுப்பு ஆண்பாற் பெற்றோராகிய தந்தைக்கே சிறப்பாக உரியது. அதனைப் பெறுவதிலும் சிறப்புரிமை பெறுபவர் ஆண்பால் மகவாகிய புதல்வனே யாவன்.

குரு, குரவர் ஆகிய சொற்கள் தொடர்புடையவை. உண்மையில் சமஸ்கிருதத்தில் குரு என்ற ஒருமைச் சொல்லின் பன்மையாகவே குரவர் வழங்குகிறது. ஆயினும் அவை ஆரியச் சொற்களல்ல, திராவிடச் சொற்களே. குரு (இள விதை, தளிர்), குரிசில் (இளைஞன், உயர்ந்தோர்), குரிசில் (மகன்; தெலுங்கு: கொடுகு), குருளை (சிங்கக் குட்டி) ஆகிய தமிழ், தெலுங்குச் சொற்களுடன் இது தொடர்புடையது.

குரவருள் ஒருவராகிய குருவே நடுவணர், உயிர்க் குரவர் என்ற முறையிலேயே, குரவர் (குருவின் நிலையினர்) என்ற சொல் அமைந்திருக்கிறது. ஐங்குரவர் கடமைகளையும் நடு நின்று ஆற்றுபவர், இன முதல்வராகிய தாய், தெய்வம் ஆகியவரோடொத்தவர் என்ற முறையிலேயே குரு அவ்வாறு அழைக்கப் பெறுகிறார். இந்த இரு திசை இன உயிர்ப் பண்பு புதல்வர்க்கும் உண்டு. குரு, குரிசில், குருளை ஆகிய தமிழ்ச் சொல் தொடர்புகள் காட்டும் பொருள் இதுவே.

குரவருடனும் குருவுடனும் மகனுக்கு (குரிசிலுக்கு) உள்ள பண்புத் தொடர்பு வள்ளுவ முப்பால் மரபில் உயிர் முக்கியத்துவம் உடையதாகும். ஏனெனில் மகனே (மகன்-பெரியவன்; மக்கள்-மனித இனம்) இனப் பெருமைக் குரியவன்; குரிசில், இனக் குரு; இன விதை.

குரு அறிவுத் தந்தையாகவும், சீடன் அறிவு மகனாகவும் கொள்ளப்படுதல் தமிழ் மரபு. இனப் பண்பளிப்பவள் தாய், சமுதாயப் பண்பளிப்பவன் தந்தை, இரண்டிலும் குற்றங் குறை தீர்ப்பவனே (ஆசிரியன், ஆசு இரியச் செய்பவனே) குரு.

தவிர, ஒரு தலைமுறையில் புதல்வர் புதல்விய ராகிய மக்களே அடுத்தத் தலைமுறையின் மாந்தர் அல்லது மக்களாய், இருபாற் பெற்றோர்களையும் உளப்படுத்துகின்றனர். எனவே, கணவன் மனைவி (இருபாற் பெற்றோர்கள்) ஆகிய இருவருமே சமுதாய உறுப்பான குடும்பமானால், கணவன், மனைவி, மக்களே இன வாழ்வின் உறுப்பான முழுக் குடும்பம் ஆவர். பிள்ளையில்லாக் குடும்பம் குடும்ப மன்று என்று கருதப்படுவது இதனாலேயே ஆகும். இனக் குடும்பம், தாய் தந்தை மகவு என்று முக்கவராகச் சுழலும் ஒரு முக்கோண அச்சாகி, அதில் தாயின் சார்பாகச் சமுதாய உறுப்பினராகத் தந்தையும்; தந்தையின் சார் பாக இன உறுபபினராகத் தாயும் விளங்குகிறார்கள் என்றால், இருவர் சார்பாகவும் நின்று குடும்பம், சமுதாயம், இனம் ஆகிய மூன்றையும் இயக்கும் முக் கோண அச்சின் சுழல் மையமாக விளங்குபவர்கள் (புதல்வர்களாகிய) மக்களே (மாந்தரே) யாவர். இனக் குருவாக (தளிராக) வாழ்வு தொடங்கி, இனக் குரிசிலாக (மகவாக) வளர்ந்து, இனக் குரவராக (குரு வாக) இன மலர்ச்சி பெறுபவர்கள் அவர்களே.

குரு, குரிசில், குரவர் என்ற தமிழ்ச் சொற் குடும் பம் காட்டும் மலர்ச்சி இது.

தந்தை சார்பில் தாய் இரு குறட்பாக்களிலும், (69, 70) தாய் சார்பில் தந்தை இக் குறட்பாவிலும் மட்டுமே கூறப்படினும், மகனும் மக்களும் எல்லாக் குறட்பாக்களிலும் கூறப்படுவதன் காரணம் இதுவே. இது அதிகார முறைமையால் மட்டுமல்ல, குடும்ப முக்கோண அச்சே குறிப்பிடும் மூன்று குறட்பாக்களும்

தந்தையைக் கூறினும், தாயைக் கூறினும் விடாது மக்களைப் பெயரிட்டு மீண்டும் மீண்டும் சுட்டுவது காணலாம். அதிகார முறையில் கூறுதே விடினும் அமைவதே என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது ஆகும்.

(5) இந்திய சமய சித்தாந்த வேதாந்தங்களில் நாம் 'இரண்டற்ற ஒருமை நிலை' (அத்வைதம்) பற்றி மிகுதியாகக் கேள்விப்படுகிறோம். இப் பண்பைச் சரிவர வரையறுத்து உணர்வதில் தென்னகத்தின் அறிஞரேறுகளான சிகண்டர், சங்கரர், இராமானுசர், மாத்துவர் ஆகியோரிடையே ஏற்பட்டுள்ள வாத எதிர் வாத வேறுபாடுகளை உணராதார் இரார். தமிழ்ப் பக்தி ஞான மரபுகளி லிருந்தே தோன்றி வளர்ந்த இவ் வறிவுலக மன்னர்கள் இக் கருத்தைத் தமிழ் மொழியுடனும் தமிழ் மரபுப் பண்புடனும் ஒட்டியிசைத்துக் காணுமையே அவர்கள் அறிவுக் குழப்பங்களுக்கு அடிகோலியா யமைந்தது என்னலாம். ஏனெனில் தமிழ் மரபில் இந்த 'இரண்டற்ற ஒருமைப் பண்பு' சமய தத்துவ வாழ்வுக்கு மட்டும் உரியதன்று, தமிழ் மொழி, தமிழ்ப் பண்பு, தமிழ் நாகரிகம், தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், தமிழ்ச் சமயம் ஆகிய எல்லாவற்றிலும் ஊடுருவி இரண்டறக் கலந்து நிற்கும் பண்பு ஆகும்.

ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டுக்கும் பொதுவாக ஒரு பலர்பால், அதன் ஒருமை வழக்கான நன்மதிப்புப் பன்மை ஆகியவை தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு. இதனடிப்படையில் ஒருவன், ஒருத்தி ஆகிய இரண்டுக்கும் பொதுவான பாற்

பொது ஒருமையாக ஒருவர் என்ற சொல் தமிழின் அருந் தனிச் சிறப்பு ஆகும். அம்மையப்பன் வடிவான தமிழ்க் கடவுளான சிவபெருமானை ஒருவன் என்றும் குறிக்காமல், ஒருத்தி என்றும் குறிக்காமல் ஒருவர் என்று பாற் பொதுவாக எண் பிறழாமல் தமிழில் மட்டுமே குறிக்க முடியும் என்பதைத் தமிழ்ப் பக்திக் கவிஞர் சுட்டிக் காட்டி, அத்தகைய திறமுடைய தெய்வ மொழி தமிழே, பிறிது மொழியன்று என்றும் பெருமைப்பட்டுள்ளனர்.

இரண்டறக் கலந்த இரண்டற்ற ஒருமை நிலையை இவ்வாறு தமிழ் மொழியும் தமிழ் இலக்கிய இலக்கண வழக்கும் தமிழ்ச் சமயமும் வள்ளுவர் வழி நின்று பொன்னே போல் போற்றியுள்ளன. தமிழர் இதே பண்பினை இயற்கையிலும் உயிர் மலர்ச்சியிலும் துருவி நோக்கிக் கண்டுள்ளனர். உயிர் உறுப்புக்களாகிய கண்ணும் செவியும், வினைமை யுறுப்புக்களாகிய கைகளும் கால்களும் பொறியுறுப்பால் இரண்டாய், புலனுணர்வால் அல்லது வினைமையால் ஒன்றாய் இயங்குவதை விளக்கவுரையில் எடுத்துக்காட்டிய நீதி நூற்பாடல் மேற்கோள் தெளிவுபடுத்தும்.

திருவள்ளுவரின் இரு பால் ஒரு பான்மை இங்ஙனம் தமிழரிடையே மொழி, இயற்கை, இலக்கிய இலக்கணம், சமயம், சித்தாந்த வேதாந்தம் ஆகிய எல்லாத் துறைகளையும், ஆண் பெண் இரு பால் ஒரு பான்மையையும் ஒருங்கே ஊடுருவி அளாவி நிற்கும் தமிழ்த் தேசியப் பண்பு ஆகும். பிற்காலச் சித்தாந்த வேதாந்தப் பேரறிஞரும் அவர் பெரு மரபுகளும் இத் தமிழ்த் தேசியப் பண்பு கண்டு விளக்கம் நாடியிருப்

பின், வேறுபட்டும் முரண்பட்டும் அலமரலுற்றிருக்க மாட்டார்கள் என்பது உறுதி.

ஏனெனில் ஆண் பெண ஒருமைப்பாடே உயிர் பேருயிர் ஒருமைபபாட்டுக்கு வழி காட்டும் தமிழ்த் திறவு ஆகும்.

தனிக்குறிப்புகள்: (1) இக் குறட்பாவில் தந்தை என்பதற்குத் தந்தை அல்லது தகப்பன் என்றும்; மகற்கு என்பதற்கு மகனுக்கு அல்லது புதல்வனுக்கு அல்லது தன் மகனுக்கு அல்லது தன் குழந்தைக்கு என்றுமே கிட்டத்தட்ட எல்லா உரையாசிரியர்களும் மொழி பெயர்ப்பாசிரியர்களும் பொருள் கூறினர். இவற்றுள் 'தன் குழந்தைக்கு' என்று உரை செய்த பேராசிரியர் இலக்குவனர் ஒருவர் மட்டுமே மகற்கு என்பதை முற்றிலும் ஆண்பாலாகக் கொள்ளத் தயக்கம் காட்டியுள்ளார்.

தந்தை என்பதை ஆண்பாற் சுட்டாக வலியுறுத்திப் பரிமேலழகர் 'இதனல் தந்தை கடன் கூறப்பட்டது' என்று கருத்துரை தந்தார்.

பகுத்தறிவுப் புலவர் குழந்தை இம் மணிவிளக்கவுரை போலவே பெண் பாலும் பின்னணியில் குறிக்கப்பட்டதாகக் கொண்டார். 'ஒருமை பற்றி ஆண்பாலாகக் கூறினர், பெண் பாற்கும் கொள்க' என்பது அவரது மணிச் சுருக்கமான, ஆனல் அழகிய கருத்துரை,

இடைக்காலப் பழமை பாசமும் விடாமல் பகுத்தறிவுப் புதுமையுடனும் ஊடாடும் கவிஞர் இராமலிங்கனர் இக் குறட்பா வுரையில் இம் மணிவிளக்கவுரைப் போக்கை இன்னும் அணுகியுள்ளார். அவர் நீண்ட விளக்கவுரையின் பகுதிகள் வருமாறு:

'தந்தை மகனுக்கு ஆற்றும் நன்றி என்பதனல் ஆண் மக்களுக்குத் தகப்பன் செய்யும் நல்ல காரியம் என்பது வெளிப்படை. அப்படியானல் பெண் மக்களுக்கு அப்படி

ஒன்றும் தகப்பன் செய்ய வேண்டாமா என்ற கேள்வி பிறக்கின்றது. அதை நினைத்துப் பெண் மக்களைக் குறைவாகக் கருதப்பட்டிருக்கிறதாக எண்ணிவிடக் கூடாது. இங்கே ஒரு சபையில் மகன் முன் வரிசையில் இருக்கும்படி செய்ய வேண்டும் என்பதுதான் முக்கியம். கல்வி கேள்வி யெல்லாம் அந்த முக்கிய காரியத்துக்கு வேண்டிய உபகரணங்கள்தான். ஆணைப் போலப் பெண்ணும் சபையில் முன் வரிசையில் இருக்க வேண்டும் என்பது தமிழ் மரபல்ல?!'

கவிஞர் விளக்கம் மேலும் தொடர்கிறது. இது திருக்குறள் பற்றியும் சிறப்பாக இவ் வதிகாரம் பற்றியும் இம் மணிவிளக்கவுரை ஆசிரியரைப் போலவே அவரும் கொண்டுள்ள பொதுக் கருத்துரை ஆகும். 'திருக்குறளில் பெண்களுக்கு மட்டும் என்று சொல்லப்பட்டிருக்கிற பகுதியைத் தவிர, மற்ற இடங்களில் சொல்லுவதெல்லாம் இரு பாலாருக்கும் சேர்ந்ததுதான். இதே குறளில் தந்தை மகற்காற்றும் நன்றி என்பதிலேயே தாயும் சேர்ந்ததுதான். இந்த நன்றி தந்தை மட்டும் செய்கிற நன்றியல்ல.'

புலவர் குழந்தையின் பகுத்தறிவு ஒரு படியும், கவிஞர் இராமலிங்கனாரின் பகுத்தறிவு கலந்த தமிழ் மரபு மற்றொரு படியும் இம் மணிவிளக்கவுரை மேற்கொண்ட திருவள்ளுவரின் தமிழ்ப் பகுத்தறிவு மரபுக்குப் படிப்படியாக நம்மை இட்டுக் கொண்டு வருகின்றன என்று காணலாம். ஆனால் பகுத்தறிவுக்கும் தமிழ் மரபுக்கும் உரிய அடிப்படை வள்ளுவ விளக்கமாக இம் மணிவிளக்கவுரை விளங்குவது குறிப்பிடத் தக்கது.

'கற்றோர் நிறைந்த சபையில் மகன் முதன்மை பெற்றிருப்பார் வரிசையில் இருப்பதை அப் பெற்றோர்கள் கண்ட போது, அந்த மகனைப் பெற்றதில் இன்புறுவார்கள்' என்று விளக்கி முடித்து, இவ் வழகிய விளக்கத்தையே அடுத்த இரு குறட்பாக்களுக்கு வாயிலுரையாக்குகிறார் கவிஞர். 'தந்தை' இங்கே இரு பாற் பெற்றோராக விளக்கப்பட்டு விட்டதும் காண்க.

[2] 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி' என்ற தொகையில் தந்தை என்பதற்குக் காலிங்கர் 'மற்று ஆங்ஙனம் இன்மை நுகர்ந்து இன்புறூஉம் தந்தையானவன்' என்று தொடங்கி உரை செய்கிறார். தந்தையின் குடும்ப வாழ்வு வெறும் இன்ப வாழ்வன்று, அதில் கடமை உண்டு என்று அவர் நினைவூட்ட விரும்புகிறார் என்று தோற்றுகிறது.

திருவள்ளுவருக்கு அறிவுடைய இன்பமே, கடமை; கடமையோடு கூடிய இன்பமே உண்மை இன்பம் என்பதைக் காலிங்கரோ, பிற உரையாசிரியர்களோ கருதியிருக்க முடியாது என்பது ஒருதலை.

[3] 'ஆற்றும்' என்பதற்கு 'செய்யும்' என்றே பெரும்பாலான உரையாசிரியர்களும், 'செய்யத்தக்க' என்று முனைவர் மு. வரதராசனாரும்; 'செய்ய வேண்டிய' என்று கவிஞர் இராமலிங்கனாரும் உரை செய்தனர்.

'நன்றி' என்பதற்கு 'நன்மை' என ந. சி. கந்தையாவும், ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஆர். ட்ரூவும்; உதவி எனப் பரிதியாரும்; 'நல்லுதவி' என முனைவர் மு. வரதராசனாரும்; 'உபகாரம்' என மணக்குடவரும், இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடுவும்; 'நேட்டம்' அல்லது 'சம்பாத்தியம்' என மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் கோபாலக்குறுப்பும்; 'நன்மை யாவது' எனப் பரிமேலழகரும், பேராசிரியர் முனைவர் இலக்குவனாரும்; 'நன்மை யாதோ எனின்' எனக் காலிங்கரும்; 'நன்மை எதுவென்றால்' என்று கவிஞர் இராமலிங்கனாரும்; 'உதவியாவது' எனப் புலவர் குழந்தையும் உரை கண்டுள்ளனர்.

[4] 'அவையத்து' என்பதற்கு மணக்குடவர் வாளா 'அவையத்தின் கண்ணே' என்றும்; புலவர் ந. சி. கந்தையாவும் இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர் எஸ். ஆர். நாயுடுவும் அதுபோலவே வாளா 'சபையிடத்து' என்றும்; பரிமேலழகர், பேராசிரியர் இலக்குவனார், பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார், கவிஞர் இராமலிங்கனார், ஆங்கில

மொழி பெயர்ப்பாசிரியர் ஆர். ட்ரூ, ஐ. டி. தங்கசாமி, மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் ஆகியோர் 'கற்றோர் அவையின் கண்' அல்லது 'அறிவுள்ளோர் கூட்டத்தில்' என்றும்; புலவர் குழந்தை 'பெரியோர் அவையின் கண்' என்றும்; காலிங்கர் 'சான்றோர் அவையின் கண்' என்றும்; பரிதியார் 'ஆஸ்தானத்தில்' என்றும் பொருள் கண்டனர்.

'முந்தியிருப்ப' என்பதற்குப் புலவர் ந. சி. கந்தையா, ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஆர். ட்ரூ, இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர். எஸ். ஆர். நாயுடு ஆகியோர் 'முன்னிடத்தில்' என்றும்; கவிஞர் இராமலிங்கனார் 'சிறப்புடையவனாக விளங்கும்படி' என்றும்; பேராசிரியர் இலக்குவனார் 'எல்லார்க்கும் முற்பட்ட நிலையில்' என்றும்; ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி 'கற்றோரிடையே, முதன்மையாகக் கற்றோனாக ஒளிரும்படி'[1] என்றும்; மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் 'முதல்வனாக' [ஒந்நாமனாக்கி] என்றும்; புலவர் குழந்தை 'யாவர்க்கும் முன்பு தலைவனாக வீற்றிருக்கும்படி' என்றும்; பரிமேலழகர் 'அவரினும் [அதாவது தந்தையினும்] மிக்கு இருக்குமாறு' என்றும் விளக்கினர்.

'செயல்' என்பதற்குக் கல்வியுடையவனாக்குதல்', 'அறிவில் மேம்படச் செய்தல்' என்றே எல்லா உரையாசிரியரும் கொண்டனர். 'ஐந்து வயதில் வாசிப்பித்துச் சமர்த்தனாக்குதலை'ப் பரிதியாரும், 'பெரிய நன் ஞானக் கேள்வியுண்டாக்குதலை'க் காலிங்கரும் வலியுறுத்துகின்றனர்.

இப்பொருள் கோள்கள் படிப்படியாக இம்மணிவிளக்கவுரைக்கு அணுக்கமாகி வருவது காணலாம்.

'பொருளுடையன் ஆக்குதல் முதலாயின துன்பம் பயத்தலின் நன்மையாகா என்பது கருத்து' எனப் பரிமேலழகரும்; 'மக்களைக் கல்வியில் சிறந்தவராக்குவதே பெற்றோர் மக்களுக்குச் செய்யும் உதவியாகும்; ஏனை இடம், பொருள்

1. So as to shine as the most learned of all

ஏவல் முதலியன மட்டும் அல்ல' எனப் புலவர் குழந்தையும் கருத்துரை தந்துள்ளனர். பொருளைவிடக் கல்வி சிறந்தது என்ற இருவர் கருத்தும் வரவேற்கத் தக்கதே. ஆனல் 'பொருள் துன்பம் தரும்' என்ற பரிமேலழகர் கருத்தும், 'இடம் பொருள் ஏவல் சிறப்பன்று' என்ற புலவர் குழந்தை கருத்தும் முற்றிலும் வள்ளுவர் கருத்து என்று கூற இயலாது. அறத்தோடும் அன்பாடும் இணையாத பொருளையும், அறத்தோடும் அன்போடும் பண்போடும் இயையாத மறத்தையும் (அதிகாரத்தையும்) திருவள்ளுவர் பொருளாகவோ, மறமாகவோ கொண்டதில்லை. இரண்டும் பழிப்பின்பாற் படுவனவே யாகும்.

68. பெற்ருேரினும் பிள்ளை சிறக்காவிட்டால்,
பெற்ருேர்க்குப் பெற்றபயன் இல்லை, பிள்ளைக்குச்
சிறப்பில்லை; இனவாழ்வும் சிறக்காது.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கெல்லாம் இனிது.

பொ - ரை: *(பெற்ருேருக்குத்) தம்மைவிடத் தம் பிள்ளைகள் மேம்பட்ட அறிவுடையவராயிருப்பதே பெரிய நிலவுலகத்திலுள்ள நிலைபேறுடைய உயிரினப் பரப்பு முழுவதற்கும் எல்லா வகையிலும் (இடையரு முன்னேற்றமாகிய) இன்ப வளமும் வளர்ச்சியும் தருவதாகும்.*

க - ரை: *தலைமுறை கடந்து தலைமுறை வளராவிட்டால், இன முன்னேற்றமில்லை, இன வளர்ச்சியில்லை. தளர்ச்சி தானே தொடங்கி விடும். இனவளமாகிய இன்பமும் சமுதாயத்தில் இடம் பெருது. இந்த நிலையில் பிள்ளை வாழ்வு பயனற்றது. பெற்ருேர் வாழ்வு சிறப்பற்றது ஆகி*

விடும். எனவேதான், பெற்றோரைவிடப் பிள்ளை கள் மேம்பட்டவராயிருக்க வேண்டும் என்பது இன்றியமையா இனக் கடன், இன உரிமை ஆகும்.

இலக். கு: இக்குறட்பாவின் வாசகம் ஒன்று: இதன் சொற் கள் இரண்டு.

அவையாவன :

1. (பெற்றோர்க்குத்) தம்மின் தம் மக்கள் அறிவுடைமை (இது எழுவாய்)

2. மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது (இது பயனிலை)

இக்குறட்பாவில் எதுகையோ, மோனையோ இல்லாமலே குறட்பா சந்த இனிமை கெடாமல் அமைந்திருப்பது வியந்து பாராட்டற்குரியது. ஆயினும் முதலடியில் இரண்டாம் சீரும் நான் காம் சீரும் ஒரு புறம்; இரண்டாமடியின் இரண்டாம் சீரும் கடைச்சீரும் மற்றொருபுறம் மோனையாக வந்தும்; முதலடி கடைச் சீருடன் இரண்டாமடி முதற்சீர் மோனை போல அடுத்தும்; அடிகளின் முதற் சீர்கள் மெல்லின எதுகையாக வந்தும் சந்த இனிமைக்கும் பொரு ளினிமைக்கும் ஒருங்கே உதவின என்னல் வேண்டும்.

முதலடியின் முதலாவது மூன்றாவது நான்காவது சீர்கள் காய்ச் சீர்கள். இரண்டாமடியில் முதற்சீர் கூவிளம், இறுதிச் சீர் பிறப்பு வாய்பாட்டு அசைச்சீர். மற்றவை தேமாச்சீர்கள்.

முதலடியின் முதற்சீரும் இறுதிச் சீருமே ஏந்திசைச் செப்பலோ சையில் முதலசை எடுத்திசைத்தும் ; 'மக்கள், மன்னுயிர்' ஆகிய இரு சீர்களும் படுத்தலோசையில் முதலசை எடுத்திசைத்தும் வந்தன. எல்லாம் என்பதில் இரண்டாம் அசை எடுத்திசைத்து ஏற்றிசைப்பா யிற்று. 'தம்மின்', 'தம் மாநிலத்து' இரண்டிலும் இடைமுரிவும், எங்கும் பொதுவாகச் சமநிலைத் தூங்கலிசைப்பும் ஏற்பட்டுள்ளது காணலாம்.

(பெற்றோர்க்குத்) தம்மின் தம்மக்கள் அறிவுடைமை என்பது அதன் ஈற்றுச் சொல்லாகிய அறிவுடைமை என்பதனை ஒப்புத் தொகை நிலைப் பெயர். இது 'மன்னுயிர்க்கெல்லாம் இனிது' என்ற தொகையைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

உடைமை என்பது இங்கே உடைமை என்ற பண்புப் பெயரன்று. அது அப்பண்புப் பெயரடியாகப் பிறந்த குறிப்பு வினையின் தொழிற் பெயர் வடிவம் ஆகும். உடையதன்மை, உடையராயிருக்கும் தன்மை, உடையராயிருத்தல் என்பதே பொருள். இங்கே பண்புப் பெயரான உடைமையில் மை ஈறு கெட்டு, 'உடை' என்ற குறிப்பு வினையடியுடன் தொழிற் பெயர்ப்பொருளுடைய 'மை' ஈறு மீட்டும் இணைந்தது.

தொழிற் பெயர் 'மை' ஈற்றினை வந்தமை, சென்றமை என்ற வடிவங்களிலும், குறிப்பு வினையடியினை உடையன், உடையர் எல்லவற்றிலும் காணலாம். அணிமை இடைக்கால இக்கால இலக்கிய வழக்குகளில் ஆறும் வேற்றுமைச் சொல்லுருபாக வழங்கும் 'உடைய' என்பது உண்மையில் இக்குறிப்பு வினையடியாக எழுந்த குறிப்பு வினைப் பெயரெச்சமே என்பதும் இங்கே குறித்து நோக்கத்தக்கது.

அறிவுடைமை என்பது அறிவினை உடையராயிருக்கும் தன்மை என்ற பொருளில் இரண்டாம் வேற்றுமைத் தொகை. இங்கே இவ்விரண்டாம் வேற்றுமைப் பொருள் உடைமை என்பதன் குறிப்பு வினை தழுவித் தொகைப்பட்டது.

மக்கள் என்பது மக அல்லது மகவு (ஆண்பால், மகன்; பெண்பால், மகள்) என்ற சொல் வடிவங்களின் பன்மை. இப்பெயர் அறிவுடைமை என்ற குறிப்பு வினையின் வினைப்பகுதிக்குரிய எழுவாயாக நின்று அது தழுவித் தொகைப்பட்டது. மக்களின் அறிவுடைமை என்று இதனை ஆறும் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளுதல் இங்கே சிறப்புடையதன்று, வழுவேயாகும். எனெனில் மேலே சுட்டியபடி உடைமை இங்கே குறிப்பு வினை, அறிவு அதன் செயப்படு பொருள், மக்களே அதன் செய் முதலாகிய எழுவாய் என்பது காணலாம்.

தம் மக்கள் என்பது ஆறும் வேற்றுமைத் தொகை; தம்முடைய மக்கள் எனத் 'தம்' என்பதன் பின் ஆறும் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. இங்கே 'தம்' என்பதும், 'தம்மின்' என்பதிலுள்ள 'தம்' என்பதும் 'தாம்' என்ற படர்க்கைத் திணை பால் பொதுப் பெயரின் வேற்றுமை வடிவங்கள் ஆகும். இரண்டும் அவாய் நிலையாய் முதலிலேயே வருவிக்கப்பட்ட 'பெற்றோர்க்கு' என்பதில் 'பெற்றோர்' என்ற பெயரையே சுட்டு முதலாகக் கொண்டன.

தம்மின் என்பதில் இன் என்பது உறழ்வுப் பொருள் ஐந்தாம் வேற்றுமை உருபு. உருபின் உயிர்முன், 'தம்' என்பதன் தனிக் குறிற் கீழ் மகரம் இரட்டித்தது.

இவ்வேற்றுமைப் பொருள் அறிவுடைமை என்பதிலுள்ள உடைமை என்னும் குறிப்பு வினைப்பொருள் தழுவிற்று. உறழ்வின் மிகை மக்கள்பால் சென்றது.

மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது என்பது குறட்பாவின் பயனிலை. இது (பெற்றோர்க்குத்) 'தம்மின் தம் மக்கள் அறிவுடைமை' என்ற தொகையை எழுவாயாகக் கொண்டது.

இனிது என்பது இனிமை என்ற பண்படியான ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. பண்புப் பெயர் ஈறுகெட்டு, 'து' அப் பால் விகுதியாய் இணைந்தது. மன்னுயிர்க்கெல்லாம் என்பதில் 'எல்லாம்' இன முழுமை சுட்டிய இடைச் சொல். மன்னுயிர்க்கு எல்லாம் என்பதற்கு எல்லா மன்னுயிர்க்கும் என்பதே பொருள் ஆகும். மன்னுயிர்க்கு என்பதில் 'கு' நான்காம் வேற்றுமை உருபு; எல்லாம் என்பதன் முதலுயிர் முன் உருபின் உகரம் கெட்டது. பெயரின் பின் உருபின் ககரம் இரட்டித்தது. மன்னுயிர் என்பதில் மன் அல்லது மன்னு என்பதனை நிலைபேறு என்ற பொருளில் உரிச்சொல்லாகவோ, வினைப் பகுதியாகவோ கொள்ளலாம். உரித்தொகை என்பதே மரபு. எல்லாம் என்ற இடைச்சொல் நான்காம் வேற்றுமை உருபு தழுவி, நான்காம் வேற்றுமைப் பொருளும் இடைச் சொற்பொருளும் ஒருங்கே 'இனிது' என்ற குறிப்புவினை தழுவின.

மாநிலத்து மன்னுயிர்க்கு என்பது மாநிலத்தில் வாழ்கிற மன்னுயிர்க்கு எனப் பொருள்படும் ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆகும். மாநிலம் என்பதனுடன் அத்துச் சாரியை புணர்ந்து மாநிலத்து என வேற்றுமை வடிவம் ஏற்றது. பெயரின் அம் ஈறு அத்துச் சாரியையின் உயிர்முன் கெட்டது.

மாநிலம் என்பது மா என்ற உரிச்சொல்லுடன் நிலம் இணைந்த உரிச்சொல் தொகை. மா என்பது இங்கே பெரிய என்னும் பொருள் உடையது. அழகிய என்ற அதன் பொருளின் நடமும் இங்கே கொள்ளத் தக்கது.

வி · ரை : அறவாழ்வின் மழைவளப் பயிர்ப் பண்பான மக்கட் பேறு முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், அறத்துப்பாலின் பொருட்பாற்பாயிரம் போன்ற இவ்வதிகாரத்தில் இக்குறட்பாவும் இதற்கு முன்பின் குறட்பாக்களும் (67-69) அதன் அறவாழ்வுத் தொடர்பே சிறப்பிக்கின்றன. அவ்வழி இக்குறட்பா இனவாழ்வுத் திட்டமாகிய அறவாழ்வில் பெற்றோர் - பிள்ளை தொடர்பு வழி ஏற்படும் தலைமுறை முன்னேற்றம் எவ்வளவு உயிர் நிலையானது என்பதை நம் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிய வைக்கிறது. மக்கட் பேற்றால் நிறைவு பெற வேண்டிய சமுதாயக்கூறு இது என முன் குறட்பாவில் சுட்டிய முப்பால் முதல்வர், மக்கட் பெற்றால் இன வாழ்வில் நிறைவு பெறவேண்டிய கூறு இது என இக்குறட்பாவில் விளக்குகிறார்.

பெற்றோரால் பிள்ளைக்கு ஏற்படுத்தித் தரப்படும் தகுதி உண்மைத் தகுதிதானா என்பதை அறுதியிட்டுக் காணும் உரைகல் ஒன்று உண்டு. அதன்படி, முன் குறட்பாவில் கூறப்பட்டதுபோல, பிள்ளை அவையத்து முந்தி இருந்தால் மட்டும் போதாது. பிள்ளை பெற்றோர் வகித்த இடத்துக்கு பிந்தாமல் இருந்தால், அவருடன் ஒத்த இடத்தில் இருந்தால், அத்தகுதியைத் தானும் பெற்றே ஒத்த இடத்தில் இருந்தால் மட்டும் போதாது. ஏனெனில் தாய் தந்தையின் தகுதி, தாய் தந்தையின் உயிர்ப்பண்பே, மகன் வளர்ச்சியில்

தான் காணத்தக்கது. மகன் தந்தையைவிடத் தகுதியாலும் இடத்தாலும் மேம்பட்டிருக்கவேண்டும். தந்தை தகுதிக்கு, இனத் தகுதிக்கு (இது தாயை உட்படுத்துதல் காண்க) இதுவே உரைகல் ஆகும்.

மகன் பெற்ரோரினும் மேம்பட்ட அறிவுத் தகுதியுடையவன் என்று அவையத்தார் கருதி, மகனுக்கு மேம்பட்ட இடம் தருவதன் மூலம் பெற்ருேரை மேலும் பாராட்ட வேண்டும் (குறட்பா 70). இச்செயலே சமுதாயம் உயிருடைய சமுதாயம் என்பதற்கான உயிர்ச் சின்னம், இதுவே இனம் உயிருடைய இனம் என்பதற்கு அத்தாட்சியான இன வளர்ச்சியின் உயிர்ச்சின்னம். இனமுற்போக்கின் அடிக்கல் இதுவே என்று திருவள்ளுவர் கருதுகிருர்.

மக்கட்பேற்றின் அறவாழ்வுத் தொடர்பு கூறும் இவ்வதிகாரத்தின் மூன்று குறட்பாக்களும் (67—69) முறையே அறத்துக்கு நிலைக்களமான சமுதாயம், குடும்பத் தலைமுறை மரபு, இனம் ஆகிய முத்தளங்களுக்குமுரிய கடமை உரிமை பொறுப்புக்களை வலியுறுத்துகின்றன. அம்முறையிலே, முன் குறட்பாவிலே சமுதாயக் கூறு தந்தை மேல் வைத்தும், வருகுறட்பாவில் இனக் கூறு தாயின் மேல் வைத்தும் சிறப்பிக்கப்பட்டதுபோல, இக்குறட்பாவில் குடும்பத் தலைமுறைக் கூறு மக்கள்மேல் வைத்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்குடும்பத் தலைமுறையின் முற்போக்குப் பண்பே சமுதாய முற்போக்குப் பண்புக்கும், இன முற்போக்குப் பண்புக்கும் மட்டுமின்றி பேரின முற்போக்குப் பண்புக்கும், அடிப்படைத் திறமாகும் என்பதனை இக்குறட்பா வலியுறுத்துகிறது. இவ்வலியுறுத்தல் மூலமே இக்குறட்பா அறவாழ்வு பற்றிய அடுத்த குறட்பாவுக்கும் (69), முப்பால் முழுவாழ்வு பற்றிய அதிகார இறுதிக் குறட்பாவுக்கும் (70) வாயிலாய் அமைந்துள்ளது.

(பெற்ருேருக்குத்) தம் மின் தம் மக்கள் அறிவுடைமை என்பது பெற்ருேருக்குத் தம்மை விடத் தம் பிள்ளைகள் மேம்பட்ட அறிவுத் தகுதி பெற்றவராயிருப்பதே' என்ற பொருள் தருவதாகும்.

பெற்ருேர்க்கு என்பது அவாய் நிலையாயினும், தம்மின், தம்மக்கள் என்பவற்ருல் திட்டவட்டமாகச் சுட்டப்படும் இன்றியமையாத சொல் ஆகும். அத்துடன் முந்திய குறட் பாவில் 'தந்தை'யே நேரிடையாகச் சுட்டப்பட்டதனுல், இங்கே பெற்ருேர் பொதுவாக இருபாற்பெற்ருேரை மட்டு மன்றி, முனைப்பாகத் தந்தையையே சுட்டுவதாகும். அதே சமயம் வரு குறட்பாவில் தாயே சுட்டப்படுவதனுல், இங்கே பெற்ருேர் இருபாற் பெற்ருேரைப் பொதுவாகவும், தந் தையை முனைப்பாகவும் சுட்டுவது போலத் தாயையும் முனைப்பாகவே சுட்டுவதாகக் கொள்ளலாம். இங்ஙனம் இச் சொல் இருபாற் பொதுமையுடன், இருபாலில் ஒவ்வொரு பாலின் முனைப்பும் ஒருங்கே சுட்டும் மந்திர அவாய் நிலைச் சொல் ஆக அமைந்துள்ளது.

அவாய் நிலையாக நின்றே சொற்கள் பொருளும் பொருள் வளமும் குறிப்பு வளமும் தருவது வள்ளுவ மந்திரங் களுக்கேயுரிய மாய ஆற்றல் ஆகும்.

தம்மின் தம் மக்கள் என்றே தொகைக் கூற்றில் தம் இரட்டித்து வந்துள்ளது. தம்மின் மக்கள் என்ருலும் வாசகம் பொருள் தருவதேயாதலால், இது மிகை ஆகும். ஆனுல் இம்மிகை, பெற்ருேரை விடப் புதல்வர் புதல்வியர் அறிவும் புகழும் மேம்படப் பெற்ருலும், அது பெற்ருேர் பெருமைக்குரியதே என்பதைச் சுட்டிற்று. 'பெற்ருேரின் மக்கள்' என்னுமல் பெற்ருேருக்கு' என்பதை அவாய் நிலை யாக்கி, அவரைச் சுட்டி, 'தம்மின்' என்றும் 'தம் மக்கள்' என்றும் கூறியதனுல், மக்கள் புகழே பெற்ருேர் புகழாகி, பெற்ருேர் புகழ் மக்கள் புகழில் இலைமறை காய் போல, இனமறை பண்பாய் இயலும் என்பது குறித்தது.

மக்கள் என்றமையால் புதல்வர் புதல்வியரை மட்டு மன்றி மனித இனமும் குறிக்கப்பட்டது. இதன் பொருள் வளம் அதிகார முன்னுரையிலும் முன் குறட்பாவுரைகளிலும் விளக்கப்பட்டுள்ளது. ஆனுல் அதிகாரத்தின் உயிர்க்குறட்பா என்று கூறத்தகும் இக்குறட்பாலில் இதன் பொருள் வளம் உயிர்வளம் ஆகும். ஏனெனில் புதல்வர் புதல்வியராகிய

மக்கள் வளர்ச்சியே மனித இனத்தவராகிய மக்கள் இன வளர்ச்சியாகும் என்று காட்டி, மன்னுயிர்க்கு என்று பின்னால் வெளிப்படக் கூறப்படும் பேரின வளத்துக்கு இச் சொல் வழக்கு ஒரு வாயிற்படியாய் அமைந்தது.

அறிவுடைமை என்ற சொல் இங்கே அறிவுடையரா யிருத்தல் என்னும் பொருளுடையது என்பது இலக்கணக் குறிப்புரையில் சுட்டப்பட்டது. இருத்தல் என்ற இவ் வினைக்கு வினைமுதல் மக்களே.

அறிவு இங்கே அறிவாற்றலும், சிந்தித்து முடிவு செய்யும் திறனும் குறிக்கிறது. அத்துடன் அறிவு, வள்ளுவக் கோட்பாட்டில் குடும்ப அறிவு, சமுதாய அறிவு, இன அறிவு ஆகிய மூவகையையும் உட்படுத்தும். குடும்ப அறிவு அன்பை அடிப்படையாகக் கொண்டது. அது குடும்பம், சமுதாயம், இனம் ஆகிய மூன்றையும் வளர்ப்பது. சமுதாய அறிவு சமுதாயத்தில் குடும்பத்தின் இடம் மேம் படுத்துவது, இதன் மூலம் சமுதாய வளர்ச்சி, இன வளர்ச்சி ஊக்குவது. இன அறிவே கலை இயல்கள், ஆட்சி முறை, சமய உணர்வு ஆகியவைகளை ஊக்கி வளம் பெருக்குவதாகும்.

அறிவு உடையராயிருத்தல் என்பது அறிவுடன் செய லாற்றும் திறம், சூழலுக்குத் தகுந்தபடி செயலும் பண்பும் ஆக்குந் திறமை குறிக்கிறது. இதன் மூலமே குடும்ப சமு தாய இன இன்னல்கள் தடுக்கப்பட்டு, அம் முத்துறை நலங்களும் பெருக்கப்படும்.

மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது என்பது 'பெரிய அழகிய நிலவுலகத்திலுள்ள நிலைபேறுடைய உயிரினப் பரப்பு முழுவதற்கும் எல்லா வகையிலும் இடையறு முன் னேற்றமாகிய இன்ப வளமும் வளர்ச்சியும் தருவதாகும்' என்னும் பொருளுடையது.

மன்னுயிர் என்பது இக்குறட்பாவில் மனித சமுதாய முழுவதையும் உள்ளடக்கியதுடன், மற்ற உயிரினச் சமு தாய முழுவதையும் சுட்டிற்று. எல்லாம் என்ற இன முழுமை குறித்த இடைச்சொல் இல்லாமலே இக்குறட்பா

வில் உயிர்க்கு என்பதே இப்பொருள் தரவல்லது. ஆனால் 'எல்லாம்' என்பது 'எவ்வுயிரும் நீக்கமற' என்ற வலி யுறுத்து வழங்கிற்று. அத்துடன் அதுவே 'எல்லா வகை யிலும் இடையறா நிலையில்' என்ற திறமும் காட்டிற்று.

மன்னுதல் முழுமையையும் (மன்பதை, மன்றம்) நிலை பேற்றையும் குறித்த சொல் ஆகும். இங்கே மன்னுயிர் என்பது மனித சமுதாயம், உயிரினச் சமுதாயம் ஆகியவற் றின் முக்காலத் தொடர்ச்சி குறித்தது. சமுதாயத்தின் முக் காலத் தொடர்பே இனம். மனித சமுதாயமும் உயிரினச் சமுதாயமும் காலமென்னும் நீள் தொடர்பில் தலைமுறை பின் தலைமுறையாக, அலையலையாக, ஆற்றொழுக்காக, வாழ்ந்து வளர்வது ஆகும்.

மாநிலம் என்பது மனித வாழ்வுக்கும் உயிர் வாழ்வுக்கும் நிலைக்களமாகிய நிலவுலகம் ஆகும். இவை மனித இனத் துக்கும் உயிரினங்கட்கும் வாழ்க்கை ஆதாரமாகி, அவ்வாழ் வில் உடல் மாறிமாறி வரினும் தான் நிலைபெற்று நின்று, அவ்வளர்ச்சியில் தானும் பங்குபெற்றும், தளர்ச்சியில் பங்கு கொள்ளாமல் நிற்பது. சமுதாயத்தின் தலைமுறை கடந்த முழு இனவாழ்வுக்கு அது சின்னம் ஆகும்.

மாநிலத்து என்று கூறாமலே, மன்னுயிர்கெல்லாம் என்பது உயிர்ப் பேரினத்தையும் அதன் சமுதாயப் பரப்பு, தலைமுறைத் தொடர்ச்சி ஆகியவற்றையும் குறிக்கப் போதியது. ஆயினும் அத்தொடர்ச்சிகளுக் கெல்லாம் ஒருமையும் உருவும் கொடுப்பது நிலவுலகே. ஓர் உயிரினமே முற்றிலும் மரபற்றுப் போவதுண்டு என்பதை மண்ணூலார்[1] நமக்குக் கூறுகின்றனர். இதனால் தொடர்ச்சி அற்றுப் போவதாக மேலீடாகப் பார்ப்பவர்க்குத் தோற்றும். ஆனால் உண்மையில் எல்லா உயிரினங்களும் ஒரே பேரினத்தின் கிளை, துணைக் கிளைகளே யாதலால், எந்த இனமும் தோற்றம், பண்பு, போக்கு மாறுவதன்றி, முற்றிலும் அழிவதில்லை. அவ்வாறு இயற்கையின் வளர்ச்சியில் எதுவும் அழியாமல்

1. Geologists

காப்பது ஐம்பூதங்கட்கும் அடிப்படையாய் அமையும் நிலம் அல்லது நிலவுலகேயாகும்.

மா நிலம் என்பதில் மா இந்தப் பேருண்மை குறித்தே பெருமையும் அழகும் உடைய நிலவுலகம் என்னும் பொருள் தந்து நின்றது.

'இனிது' என்பது 'இன்ப வளமும் வளர்ச்சியும் தருவதாகும்' என்னும் பொருளுடையது.

இனிமை என்பது இன்பம், இனம் ஆகியவற்றுடன் தொடர்புடைய சொல். ஆனல் பொதுவாக இனிமை இனிப்புச் சுவையையும், இன்பம் வாழ்க்கை இனிமையையும் வாழ்க்கை வளத்தையும் குறிக்கும். இங்கே இன்பம் தருகிறது என்ற பொருளில் இன்பத்தின் வினைவடிவாகவே 'இனிது' வழங்கியுள்ளது என்பது தெளிவு. ஆயினும் 'இன்பம்' என்ற பகுதி வழங்காமல் இனிமை வழங்கியதனல், தனி மனிதன் உடனடி இன்ப நோக்கம், சமுதாய நலம், நிலையான இனவளம் ஆகிய முத்திற வளர்ச்சிகளும் ஒரே மலர்ச்சியாகக் குறிக்கப்பட்டது.

இனிமை, சிறு திற இன்பம், பேரின்பம் ஆகியவை பாயிரத்தில் விரித்துரைத்த வள்ளுவ முக்கூட்டுக் குழம்பின் முத்திறப் பண்புகளுடன் ஒத்தல் காணலாம். இனிது இன முன்னேற்றத்தால் உடனடியாகவும் நிலையாகவும், ஏற்படும் இந்த இன்ப மலர்ச்சி குறித்தது.

சிறப்புரை: வாழ்வு என்பது வளர்ச்சி; எல்லையிலா, இடையரு வளர்ச்சி. அது இட எல்லை கடந்து உயிர்ப் பரப்பெங்கும், உலகெங்கும், இயற்கையெங்கும் பரவிக் கொண்டே இருப்பது. கால எல்லை கடந்து என்றென்றும் இடையறாது கிளர்ந்தெழுந்து வளர்ந்து கொண்டே இருப்பது. கால இட எல்லை கடந்த வாழ்க்கைக் குறிக்கோளாகிய கடவுளின் செயலுருவான இந்த இன வாழ்வின் ஓர் அலை மையமே குடும்பம். அதன் ஒரு தலைமுறை வளர்ச்சியே அந்த இன வளர்ச்சியின் அடிப்படை விதை

வளம் மனித இன, உயிரின மலர்ச்சியின் சிறிய உயிர்ப் படி இதுவே. இதில் வளர்ச்சி யின்றேல் முற்போக்கு இல்லை, உயிர் மலர்ச்சி, நாகரிகம் இல்லை. தலைமுறை வளர்ச்சி, தந்தை கடந்த மகன் மேம்பாடு, இந்த உயிர்ப் படியின் வளர்ச்சி இயக்குகிறது.

பொருள்வளம்: *(1)* 'பெற்றோர்க்கு' என்ற பொருளை அவாய்நிலையாகச் சுட்டும் தம்மின், தம் என்ற சொற்களுடன் குறட்பா தொடங்குகிறது. ஆனால் குறட்பா 'பெற்றோர்க்கு அறிவுடைமை' என்று எழுவாய்த் தொகையில் தொடங்கி, அதன் பயன் கூறும் பயனிலைத் தொகையில் 'பெற்றோர்க்கு இனிது' என்றோ, 'மனித சமுதாயத்துக்கு இனிது' என்றோ முடியாமல், 'மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது' என்று முடிகிறது.

தந்தை தன் மகனைத் தன்னைவிடத் தகுதியில் உயர்வுபடுத்தும் சிறு செயல், மனித சமுதாய, மனித இன வாழ்வு முழுவதும், அது கடந்து உயிரினப் பரப்பு, உயிரின வாழ்வு முழுதும் எல்லையற்ற வளர்ச்சி யாகிய மாபெரும் செயலாக, இட எல்லையில் எங்கும், கால எல்லையில் எப்போதும் வளர்ந்து கொண்டு செல்லும் எல்லையற்ற செயலாக விரிவுறுகிறது என் பதை இவ் எழுவாய் பயனிலை மாறுபட்ட தொடர்பே பொருள்வளமாகக் குறித்துக் காட்டுகிறது.

மாநிலத்து, எல்லாம் என்ற சொற்கள் இதே செய்தியை வலியுறுத்தி, சிறு செயல் தருவது எல்லை யற்ற மாபெரும் வளம் மட்டுமன்று, செறிவுமிக்க, எல்லையற்று விரிந்து கொண்டே செல்லத்தக்க உயிர் விதை வளம் என்பதைக் குறித்துக் காட்டின.

பெற்ருேர் ஆக்கும் மக்கள் தகுதி ஒரு சிறிய ஆல விதை ; அதுவே பெரிய ஆல மரமாக, வழி வழி ஆல மர இனத்தின் விழுதளாவிப் பரந்த எல்லையில் பெரு வளமாக வளரும் திறம் உடையது ஆகும்.

(2) அறிவுடைமை என்பதில் உடைமை என்பது உடையரா யிருத்தல் என்னும் விரி பொருளின் சுருக்க வடிவமே யாளுலும், உடைமை அதாவது செல்வம் என்ற மேலீடான பொருளையும் தொனிப் பொருளாகத் தருவதே யாகும்.

உடைமைகளி லெல்லாம் சிறந்த உடைமை, உடமைகளுக் கெல்லாம் அடிப்படை உடைமை அறி வுடைமையே என்பதும் ; மக்களின் அறிவுடைமையே தந்தையின் உடைமை என்பதும் ; அது தந்தையின் தனியுடைமையாக மட்டுமன்றி, மனித இன, உயிரினப் பொதுவுடைமையாக அமையு மென்பதும் ; அழியத் தக்க தற்காலிக உடைமையோ, அழியா நிலை உடை மையோகூட மட்டுமன்று, அழியாது எல்லையின்றி வளரத்தக்க நிலையான பொதுவுடைமை யாகுமென் பதும் இதனுல் குறிக்கப்பட்டன.

ஒரு பொருளை அல்லது கருவியை உடையவனு யிருப்பதே உடைமை என்று மேலீடாகக் கருதுவோர் உளர். இது உண்மையன்று. புறக் கருவியாகிய பொருளை உடையவனு யிருக்கக்கூடப் புற உடைமை மட்டும் போதாது. அகப்புற உடைமை, அக உடைமை —அதாவது பயிற்சியுடைமை, அறிவுடைமை ஆகியவை இன்றியமையாதவை. உழவனிடம் கழனி யும், உமணரிடம் அளமும் இருந்தால்தான் உடைமை யாகப் பயன்படும். உமணரிடம் கழனியும், உழவரிடம்

அளமும் இருந்து பயனில்லை. அத்துடன் அகக் கருவி யின்றிப் புறக் கருவி இருந்தாலும் அது உடைமையாய் விடாது. கையற்றவனிடம் கோடரியும், கண்ணற்றவ னிடம் கண்ணுடியும், காதற்றவனிடம் தொலை பேசி யும் பயன்பட மாட்டா. அகவுடைமை இன்றேல் இந்த அகக் கருவியும் புறக் கருவியும் இருந்தும் உடைமை யாகா. இதுமட்டு மன்று. வீணையுடையவனுக்குக் கையிருந்தாலும் அவன் வீணைக் கலைஞன் ஆக மாட் டான். வீணைப் பயிற்சியும் வீணை நுகர்வறிவும் நுகர் விக்கும் அறிவும் உடையவனே வீணைக் கலைஞன், உண்மையான 'வீணை உடையவன்' ஆவான். தட் டெழுத்தும் தட்டுவதற்குரிய அமைப்பு வாய்ந்த நல்ல விரலும் உடையவன் கூடத் தட்டெழுத்தாளன் ஆகான், தட்டெழுத்தறிவும் பயிற்சியும் தேர்ச்சியு முடையவனே அத் துறைக் கலைஞன் ஆவான்.

அறிவுடைமை என்ற பொதுச் சொல் உடைமை களுக் கெல்லாம் உள்ளுடைமை, அக உடைமை ஆகிய இன வாழ்வு வளம் பற்றிய அறிவு, இன வாழ்வு வள ஆர்வம், இன வாழ்வு வளம் பெருக்கும் வகைதுறை உணர்வு, அதனைப் பெருக்கும் ஆர்வ முயற்சி ஆகியவற்றின் தொகுதியான இன அறிவு உடையவனு யிருத்தல் என்னும் பொருளையே குறிப்ப தாகும்.

(3) எதுகையும் மோனையும் கிட்டத்தட்ட இல்லா மலே இக் குறட்பா சந்த இனிமையுடையதாயிருத்தலை யும்; அச் சந்தத்துள் சந்தமாக அடி முதற் சீர்க ளிடையே இன எதுகை, முதலடியின் இரண்டாவது நான்காவது சீர்களில் மோனை; இரண்டாமடி இறுதி

இரு சீர் மோனை ; முதலடி இறுதிச் சீர், இரண்டாமடி முதற் சீர் ஆகியவற்றிடையே மோனை ஆகியவை அமைந்துள்ள அருமையையும் மேலே இலக்கணக் குறிப்புரை சுட்டியுள்ளது. ஆனால் இந்த எதுகையோ மோனையோ இழுமெனும் ஓசை மட்டும் பயக்க வந்தவைகளல்ல; செந்தொடை இனிமையிடையே முரண் சுவை மூலம் இனிமை பெருக்கிக் காட்டவும்; எதிரிணை நயம் மூலம் பொருள்வளக் குறிப்புக் காட்டவும் வந்தவைகளே யாகும்.

மக்கள், மாநிலத்து என்ற மோனை எதிரிணை நயம்பட வந்த மோனை. ஏனெனில் முன்னது தேமா வாய்பாட்டுக் குறுஞ் சீர், பின்னது கூவிளங்காய் வாய் பாட்டுப் பெருஞ்சீர் (தொல்காப்பியரின் நேர்—நிரைபு ஆகிய உரிச் சீர்) ஆகும். அத்துடன் 'மக்கள்' படுத் திசைத்து 'மாநிலத்து' எடுத்திசைக்கிறது. மக்கள் முன்னேற்றம் தனி மனிதர் முன்னேற்ற மன்று, அதுவே மாநில மெல்லாம் பரவும் முன்னேற்ற அலை களின் தொடக்கம் என்பதனையும்; மக்களிடம் சிறிதளவாகத் தொடங்கிய முன்னேற்றம், நிகழ்காலச் செயலின் ஒரு படியாகத் தொடங்கிய முன்னேற்றம், மாநில மெங்கும் முன்னேற்றமும், மீண்டும் மீண்டும் தொடர்ந்து எல்லையிலாது பெருகிச் செல்லும் நிலை யான முன்னேற்ற வளர்ச்சி வளமும் ஆகும் என்ப தனையும் இது குறித்துக் காட்டுகிறது.

மாநிலத்து, மன்னுயிர்க்கு என்ற அடி கடந்த தொடர் மோனை மாநிலத்தில் மனித இன முன்னேற் றம் மனித இனத்துக்கே யன்றி, உயிரின மெங்கும் பரவுவது, மன்னும் அதாவது நிலைபேறுடைய முன்

னேற்ற மாகும் என்பதை விளக்கிற்று. தமிழர் நாகரிகம், அதன் விரிவான இந்திய, ஆசிய நாகரிகத்தின் நாகரிகக் கோட்பாட்டின் ஒரு தனிச் சிறப்பை இது எடுத்துக் காட்டுகிறது. இன்றைய மேலையுலக நாகரிகம் மனித நாகரிக வளர்ச்சி கடந்த உயிரின வளர்ச்சியில் அக்கறை காட்டாத ஒன்று என்று கூறத் தேவையில்லை. ஆனால் மனித இனம் எவ்வளவு மேம்பட்டாலும் ஓரறிவு-உயிர் (சைவ) உணவு, இரண்டு முதல் ஐந்து வரை அறிவுடைய உயிர் (புலால்) உணவு இன்றி வாழ மாட்டாதது என்பதை மேலையுலகும் அறியும். உயிர் வளர்க்காது உயிரழித் துண்ணும் மனித நாகரிகம் நீடு நிலவா தென்பதையும் மேலையுலகம் கண்டு வருகிறது. ஆயினும் மேலையுலகின் அறிவு அதன் அற வாழ்வுடன் தொடர்பற்றதாதலால், கீழ் திசைபோல, உயிர்ப்பாசக் கோட்பாடு வளர்க்கவில்லை. தமிழர் கொல்லாமையும் புலால் மறுத்தலும் தற்கால உலகில் வெறும் பழமை வழக்காகவன்றி, அறிவாகவோ, அறமாகவோ, சமயமாகவோ இந்தியாவில்கூட வளராததன் காரணம் இதுவே.

தம்மின், மன்னுயிர் என்பவை எதிரிணை எதுகையாக வந்தன. ஏனெனில் முதலது எடுத்தும், பின்னது படுத்தும் வந்தன. இதனால் தம்மின் மக்கள் அறிவுடைமையாகிய தலைமுறை வளர்ச்சி மனித இனத்தில் ஏற்படும் அளவில் உயிரினத்தில் ஏற்படாவிடினும், உயிரின முழுதும் பரவி மனித இன வாழ்வில் பண்பெதிரலையாய் மீண்டு வந்து ஊக்கும் என்பதும்; உயிரும் மக்களும் வாழ்வில் மன்னுதல், நிலைபெறுதல் உறுவதனை உள் நின்று இயக்கும் என்பதும் தெரிவிக்கப்பட்டன.

எல்லாம், இனிது என்பவை இரண்டும் படுத்திசைத்ததனுல் இழுமெனும் ஓசையே பிறந்தது. இது முற்றிலும் இறங்கிசைப்பாதலின் இனிமையின் நுண்ணறிவுப் பரப்புக் குறித்தது. மக்களிடையே, சிறப்பாக உயர் பண்புடைய மக்களிடையே இனிமை அறிவுடைய இன்பம் அதாவது பேரின்ப நோக்கியும்; மற்ற மக்களிடையே, உயர் உயிரினங்களிடையே அது அறிவுடைய இனிமை அதாவது இன்ப நோக்கியும்; பிற உயிரினங்களிடையே அது இனிமை நோக்கியும் வளர்வதாகும் என்பது இதனுல் பெறப்பட்டது.

இனிமை—இன்பம்—பேரின்பம் என்பது உயிரின, மக்களின வாழ்வின் மலர்ச்சிப் போக்கு. ஆனல் ‘தந்தையினும் மக்கள் அறிவுடைமை’ மூலம் ஏற்படும் மனித இன நாகரிக மலர்ச்சி உயிரினங்களில் இதற்கு எதிரான ஒரு மலர்ச்சி தூண்டுகிறது. அதுவே பேரின்பம்—இன்பம் — இனிமை என்ற மலர்ச்சியாகும். ஏனெனில் பேரின்பம் என்பது எல்லேயற்ற இன்ப அலே பரப்பும் பண்பே யாகும். இயற்கை எல்லேயில் ஒளியலே பரப்பும் பேரொளிக் கோளமாகிய கதிரவன் போல, உயிரின வாழ் வெல்லேயில் இன்ப அலே பரப்பும் இன்பக் கோளமே பேரின்பம் ஆகும்.

இன்பமுடையது என்ற பொருளில் ‘இனிது’ என்ற சொல் வழங்கப்பட்டதன் குறிப்பு வளம் இதுவே.

இவ் வள்ளுவப் பொருள்வளம் தமிழ் மொழியிலேயே உள்ளடங்கி நிற்கும் பண்பு என்னலாம். ஏனெனில் இனிமை என்பதனடியாக ‘இனிது’ என்ற குறிப்பு வினே வடிவம் அமைந்தது போல, இன்பம்

என்பதனடியாகத் தமிழில் குறிப்பு வினை அமைய வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

(4) மக்கட் பேற்றின் அறவாழ்வுத் தொடர்பு பற்றிய அதிகாரப் பகுதியான மூன்று குறட்பாக்களில், இக் குறட்பாவே மைய இடம் வகிப்பது ஆகும். அதற் கேற்ப அறத்தின் சமுதாயக் கூறு, குடும்பத் தலைமுறை மரபு, இனக் கூறு ஆகியவைகூறும் அம் மூன்றில், குடும்பத் தலைமுறை கூறும் இக் குறட்பா, குடும்பத் தலைமுறைக் கூற்றினை மக்கள் மேல் வைத்துக் கூறிற்று.

இவை முன் குறட்பாவிலும் இக் குறட்பாவிலும் விளக்கவுரையில் சுட்டப்பட்ட செய்திகளே.

மூன்று குறட்பாக்களிலுமே தந்தை குறிக்கப்படு மிடத்துத் தாயும், தாய் குறிக்கப்படுமிடத்துத் தந்தை யும் பின்னணிப் பண்புகளாகக் குறிக்கப்பட்டனர். இதுபோலவே முன் குறட்பாவிலும் வரு குறட்பா விலும் அதிகார இறுதிக் குறட்பாவிலும் மகன் குறிக் கப்படும் இடங்களில் மகளும் பின்னணிக் குறிப் பாகவே காட்டப்பட்டனர். ஆயினும் இப் பின்னணிப் பண்பு சுட்டிக் காட்டும் முறையில் ஒரு குறட்பாவின் பின்னணியாகிய தாய், மற்றொரு குறட்பாவில் முனைப் பாகத் தந்தையாகவும்; இதுபோல ஒரு குறட்பாவில் பின்னணியாகிய தந்தை, இன்னொரு குறட்பாவில் முனைப்பாகத் தாயாகவும் சுட்டப்பட்டுள்ளனர். மகன் வகையில் இவ்வாறு பின்னணியாக மகள் எக் குறட்பாவிலும் சுட்டப்படவில்லை.

இக் குறட்பாவில் மக்கள் என்ற சொல் வழங்கப் பட்டதன் முழுப் பொருள்வளம் இதனால் விளக்கமுறு கிறது. அது உண்மையில் மகன், மகள், மனித இனம்

என்ற முப் பொருளும் குறிக்கும் முறையிலேயே பயன் படுத்தப்பட்டுள்ளது. இது மட்டுமன்று. மகன் என் பதன் பின்னணியான மகளை மட்டுமன்றி, மக்கள் என்பதன் பின்னணியான மாக்களை அதாவது மன் னுயிரையும் அது குறிக்கிறது.

குறட்பா பெற்றோருக்கு என்று தொடங்கி மன் னுயிர்க்கு என்று செல்வதால், தந்தை, மக்கள் ஆகிய சொற்கள் உயர்திணைக்கே சிறப்புடைய வழக்காறு ஆம், மக்களின் வளர்ச்சிக்கு மலர்ச்சி மூலமான உயிர் களையும் அச் சொற்கள் பொதுவாகச் சுட்டும் தன்மை யுடையனவாகவே கொள்ளத்தகும்.

(5) மக்கட் பேறு என்ற தலைப்புடைய இவ் வதிகாரத்தில் மக்கள் என்ற சொல் கிட்டத்தட்ட எல்லாக் குறட்பாக்களிலும் இடம்பெறல் இயல்பே. ஆயினும் இக் குறட்பாவில் அச் சொல் வழக்காறு இப் பொது முக்கியத்துவம் மட்டும் குறிப்பதன்று. ஏனெனில் முன் குறட்பா வுரையிலும் இக் குறட்பா வுரையிலும் கூறியுள்ளபடி, அற வாழ்வின் மூன்று கூறுகளில் சமுதாய வாழ்வு தந்தை மேல் வைத்தும், இன வாழ்வு தாய் மேல் வைத்தும் கூறப்பட்டது போல, குடும்பத் தலைமுறை வாழ்வு மக்கள் மேல் வைத்தே இக் குறட்பாவில் வழங்கப்பட்டுள்ளது.

இதுமட்டு மன்று.

குடும்பத்திலே அற வாழ்வின் சமுதாய, இன, தலைமுறைக் கூறு குறிக்கும் தந்தை, தாய், மகன் என்ற மூவுறுப்பினர்களிடையே மகன்தான் உயிர்நிலை யான உறுப்பு. மூன்று குறட்பாக்களின் மையமான இக் குறட்பாவிலும், முழுப்பால், முப்பால் உணர்வு

குறித்த இறுதிக் குறட்பாவிலும் மகன் சிறப்பிடம் பெறுவது இதனாலேயே யாகும். இவற்றுள்ளும் இக் குறட்பாவில் மக்கள் என அது இரு பாற் பொதுமை யும், இறுதிக் குறட்பாவில் அது மகன் என ஆண் பால் மிகு முனைப்பும் பட வழங்கியதும் இதனாலேயே என்ன லாம். ஏனெனில் தலைமுறை வளர்ச்சியில், அதாவது சமுதாய வாழ்விலும் இனத்தின் எதிர்காலவாழ்விலும் பங்கு கொள்பவன் மகன் மட்டுமே. தந்தை முனைப்புச் சமுதாய நிகழ்கால வாழ்வுடனும், தாய் முனைப்பு இனத்தின் இறந்த கால வாழ்வுடனும் நின்று விடு கிறது.

தந்தையும் தாயும் சேர்ந்தாலே 'குடும்பம்' என்ற நிலை ஏற்பட்டுவிடும். ஆனால் மகவு தோன்றியபின் அது நிறை குடும்பம் ஆகும். மகவு பெண்ணானால்கூட, அது சமுதாயத் தலைமுறை வளர்க்கும்; இனத்தின் நேர் தலைமுறையாகிய குடும்பத் தலைமுறை வளர்க் காது. மக்கள் பொது முனைப்பும் மகன் மிகு முனைப்பும் இரு குறட்பாக்களிலும் (இக் குறட்பாவிலும் அதிகார இறுதிக் குறட்பாவிலும்) முறையே சுட்டப்பட்டதன் காரண விளக்கம் இதுவே.

ஒரு தலைமுறையின் புதல்வர் புதல்வியராகிய மக்களே அடுத்த தலைமுறையின் மாந்தர் அல்லது மக்களாய், அவ் அடுத்த தலைமுறையின் இருபாற் பெற்றோரையும் உளப்படுத்துகின்றனர். இதனால் கணவன் மனைவி ஆகிய இரண்டு உறுப்பினரையே கொண்ட குடும்பம் சமுதாயக் குடும்பமானால், கண வன் மனைவி மக்கள் என்ற மூவுறுப்பினரைக்கொண்ட குடும்பமே இனக் குடும்பம் ஆகும் என்பது தெளிவு.

எனவே இனக் குடும்பமாகிய இந்நிறை குடும்பத்தை நாம் இன வாழ்வில் சுழலும் ஒரு முக்கோண அச்சாகவே கருதலாம். அதில் சமுதாய உறுப்பு என்ற முறையில் தந்தையும், இன உறுப்பு என்ற முறையில் தாயும் அம் முக்கோண அச்சின் இரு திசைச் சுழற்சி மையமானால், அவ்விருவரின் இணைவான இன மையமாக விளங்குபவன் மகனே யாவன்.

குடும்ப வாழ்வு சுட்டிய மூன்று குறட்பாவில் 'மக்கள்' மையக் குறட்பாவிலும், அதுவே 'மகன்' என மூன்றின் மொத்தமான இறுதிக் குறட்பாவிலும் மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டதன் பொருள் வளம் இதுவே.

தனிக் குறிப்புக்கள்: (1) இக்குறட்பாவில் உரையாசிரியர்களிடையே மிகப் பெரிய, மிகமிக முக்கியமபன வேறுபாடு, அவர்கள் 'தம்மின்' என்ற சொல்லின் வகையில் கொண்ட இலக்கண முடிபையும்; 'இனிது' 'மன்னுயிர்க்கு' என்ற சொற்களுக்கு அவர்கள் கொண்ட பொருளையும்; 'தம்மக்கள் அறிவுடைமை' என்ற தொகைக்கு அவர்கள் கொண்ட இணைப்பு வகையையும் பொறுத்ததாகும். இந்நான்கு கூறுகளிலும் பல புத்துரையாசிரியர்கள் இம்மணி விளக்கவுரை நோக்கி முன்னேறி வந்துள்ளனர் என்பதைக் காணலாம்.

தம்மின் என்ற சொல்லின் ஐந்தாம் வேற்றுமை உறழ்வுப் பொருள் 'தம்மக்கள் அறிவுடைமை' என்பதிலடங்கிய குறிப்பு வினைப்பொருளையே தழுவியதாக இம்மணிவிளக்கவுரை கொண்டுள்ளது என்பதை இலக்கணக் குறிப்புரையும் விளக்கவுரையும் தெளிவுபடுத்தியுள்ளன. ஆனால் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் ஆகிய எல்லாப் பழய உரையாசிரியர்களும்; அவர்களையே பின்பற்றிப் புலவர் ந. சி. கந்தையா, பேராசிரியர் முனைவர் மு. வரதராசன், சி. இலக்குவனர் ஆகியோரும்; ஆங்கில மொழி பெயர்ப்

பாசிரியர் ஐ. டி. தங்கசாமி, மலையாள மொழி பெயர்ப் பாசிரியர் வெண்ணிக்குளம் ஆகியோரும் அது இனிது என்ற குறிப்பு வினை தழுவுவதாகக் கொண்டுள்ளனர். இவ்வாறு கொண்டதன் மூலம், 'புதல்வர் புதல்வியர் அறிவுடையவராயிருப்பதனைக் கண்டு அவர்களது தாய் தந்தையர் மகிழ்ச்சிசடைவதை விட, உலகத்து உயிர்களெல்லாம் அல்லது உலக மக்களெல்லாம், அல்லது அறிவுடையோர்கள் எல்லாம் மிகவும் அதிகமாக மகிழ்ச்சியுடையவர்கள் ஆவார்கள் என்று அவர்கள் இக்குறட்பாவுக்கு உரை செய்து விட்டனர்.

இப்பொருளுக்கேற்பவே, இவ்வுரையாசிரியர்கள் இனிது என்பதற்கும், மன்னுயிர்க்கெல்லாம் என்பதற்கும், தம்மக்கள் அறிவுடைமை என்பதற்கும் பொருளும் இலக்கணமும் கொண்டனர். இது கீழே அவ்வச் சொற்களின் கீழ் விரிக்கப்பட இருக்கிறது.

ஆனால் தம்மின் என்பதன் ஐந்தாம் வேற்றுமைப் பொருள் தம்மக்கள் அறிவுடைமை என்பதையே தழுவியதாகக் கொண்ட உரையாசிரியர்களும் உண்டு. கவிஞர் இராமலிங்கனார், புலவர் குழந்தை, ஆங்கில மொழிபெயர்ப் பாசிரியர் ட்ரூ, இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் பேராசிரியர் முனைவர் சங்கர ராஜு நாயுடு ஆகியோரே இவ்வாறு இம் மணி விளக்கவுரை நோக்கி வந்துள்ளவர்கள். பலதுறை, பலதிறப்பட்ட இத்தனை புத்துரையாசிரியர்கள் எளிதாகக் கண்ட இப்பொருளைப் பழம் பேராசிரியர் காணத் தவறினர் என்று கூறுதற்கில்லை—இடைக்காலம் எழுப்பிய பிற்போக்குக் கோட்டைக்கு மதிப்பளிப்பதற்காகவே அவர்கள் தம் நேர் காட்சிக்குத் திரையிட்டுச் சுற்றி வளைத்துப் பொருள் தேடினர் என்று கொள்ளல் வேண்டும்.

தந்தை தாயரைவிடப் பிள்ளைகள் அறிவுடையவராயிருப்பதே நாகரிக முற்போக்கு அடிப்படை என்ற தத்துவம் இக்குறட்பாவுக்கு மட்டுமன்று, இவ்வதிகாரத்துக்கு மட்டுமன்று, திருக்குறளேட்டுக்கே அடிப்படையான ஒரு மூல தத்துவம், ஒரு மகாவாக்கிய மந்திரம் ஆகும். இதை

நோக்கி முப்பால் முதல்வர் முன் குறட்பாக்களில் அணைகட்டி, வருகுறட்பாக்களில் இதனை உட்கொண்டு மடை திறப்பதை யும் வாசகர் கவனிக்கலாம்.

பகுத்தறிவுச் செம்மல் புலவர் குழந்தையும்; சமயவேலி யுள் நின்று பகுத்தறிவு நோக்கித் துடிக்கும் பண்பார்ந்த கவிஞர் இராமலிங்கனாரும் இக்குறட்பாவின் வள்ளுவத் தத்துவமான மணிவிளக்கப் பொருள் நோக்கி அனுபவ மார்ந்த உரைகளை விதிர் விதிர்ப்புடன் கொட்டியுள்ளனர். 'படியாதவரும் தம்மக்களைப் படிப்பித்தல் காண்க' என்று நம்காலச் சமுதாய அனுபவம் காட்டியுள்ளார், புலவர் குழந்தை. பழய உரைகளில் தலைசிறந்த உரையான பரி மேலழகர் உரைக் கருத்தையே சுட்டி (இதனைக் கீழே காண லாம்) கவிஞர் இராமலிங்கனார் அதைக் கண்டிக்கத் துணி கிறார். 'மக்கள் அறிவுடையவர்களாய் இருப்பதைக் கண்டு பெற்றோர்களைக் காட்டினும் சபையிலுள்ளவர்கள் அதிகமாக இன்புறுவார்கள் (இது பரிமேலழகர் உரைப் பொருள்) என்று பொருள் செய்வது சரியல்ல' என்று அவர் மறுப்புக் குரல் எழுப்பியுள்ளார்.

(2) 'இனிது' என்பதற்கு மேற்குறிப்பிட்ட பழமைச் சார்பு உரையாசிரியரேயன்றி, புதுமைச் சார்பு உரையாசி ரியர்களும் கூடப் பெரும்பாலும் 'இனிதாம்', 'மகிழ்ச்சி யைக் கொடுக்கும்' என்றே உரை செய்துள்ளனர். புலவர் குழந்தை, கவிஞர் இராமலிங்கனார், முனைவர் மு. வரதராச னார் ஆகியோர் 'இனபம் தரும்', 'இன்பம் தரக்கூடியது', 'மிகுந்த இன்பம் பயப்பதாகும்' என்றும்; காலிங்கர் இரு சார்புமிணைத்து 'இன்புறத் தக்க இனிமையைக் கொடுக்கும்' என்றும் பொருள் கூறினர். இனிமை, இன்பம் ஆகியவை பாயிர முன்னுரையில் முப்பால் முக்கூட்டமிழ்த உவமை மூலம் சுட்டிக் காட்டிய இனிமை - இன்பம் - பேரின்ப மலர்ச்சியை மனங்கொள எண்ணுமலே நம்கால உரையாசி ரியர் பலர் தம்மையுமறியாது 'இனிது' என்பதை 'இன்பம் தரும்' எனச் சொற்பெயர்ப்புச் செய்த அருமைப்பாட்டை மணிவிளக்கவுரை வாசகர் கூர்ந்து காணக்கடவர்.

சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் இனிமை - இன்பம் - பேரின்பம் என்ற கருத்துக்களுக்கேற்ற சொற்கள் (மாதுர்யம், சுகம், ஆனந்தம்)[1] உண்டானாலும் வள்ளுவத் தத்துவம் உலகில் பரவா நிலையில் மொழி பெயர்ப் பாசிரியர் கருத்தை அவர்கள் சொல் வழக்குகள் இங்கே தெளிவுபடக் காட்ட முடியவில்லை. ஏனெனில் இடைக்கால அரையிருள் நாகரிகப் பண்பு கீழ்திசையிலும் மேல்திசை யிலும் கிட்டத்தட்ட எல்லா மொழிகளிலுமே படர்ந் துள்ளன.

(3) 'தம்மக்கள் அறிவுடைமை' என்ற தொகையை இலக்கண நோக்குடன் பார்த்த உரையாசிரியர்கள் பெரும் பாலும் பழந்தமிழிலேயே மரபு மறக்கப்பட்டு வந்துள்ள குறிப்பு வினைப்பண்பை உய்த்துணராமல், 'மக்கள்', அறி வுடைமை ஆகிய இரண்டு சொற்களையுமே பெயர்ச் சொற் களாகக் கொண்டு, தொகையையும் 'தம் மக்களது அறி வுடைமை' என ஆறும் வேற்றுமைத் தொகையாகவே கொண்டனர். இவ்வாறு கொண்டவர்கள் பரிமேலழகர், காலிங்கர், முனைவர் மு. வரதராசனார், முனைவர் சி. இலக்கு வனார், ஆங்கில மொழிப் பெயர்ப்பாசிரியர் ஜி. டி. தங்கசாமி, மலையாள மொழிப்பெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் ஆகி யவர் ஆவர். மணக்குடவர், பரிதியார் ஆகியோர் 'தம் மக்கள் அறிவுடையவரானால், அது' என்றும், 'புதல்வர் அறிவினரால்' என்றும் இலக்கணத் தொடர்பு விளக்காமல் சென்றாலும், அவர்களது பொருண்மை 'தம்மக்களது அறி வுடைமை' என்பதன்றி வேறன்று. ஆனால் இலக்கண மரபில் கருத்துச் செலுத்தாமலே, தமிழ் பேசுபவர் என்ற நிலையில் புத்துரையாசிரியர் சிலர் தம் குருதி மரபுணர்ச்சி மூலமே இயல்பாக இம்மணி விளக்க உரையில் காணும் குறிப்பு வினைமை கண்டு தம் பொருளில் பதிவு செய்துள்ள னர். இந்நிலையில் இத்தொகையின் பொருளாகப் புலவர் ந. சி. கந்தையா 'தம்மக்கள் அறிவுடையராயிருக்கும் தன்மை' என்றும்; புலவர் குழந்தை 'தம்மக்கள் அறிவுடை

1. Sweetness, joy, pleasure, happiness

யராயிருத்தல்' என்றும்; கவிஞர் இராமலிங்கனார் 'தம்முடைய மக்கள் அறிவுடையவர்களாக இருப்பதை' என்றும் உரைத்துள்ளனர். பிற மொழியில் பெயர்த்துரை செய்த ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ட்ரூ, இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடு ஆகியவர்கள் தம்மியல்பாகவே இவ்வினைமைப் பொருள்பட எழுதியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது (சந்தான்கா அதிக் புத்திமான் ஹோநா)[1].

(4) 'மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம்' என்பதற்குக் காலிங்கர் அதுவே பொருள் கூறினர். 'உலகத்து உயிர்களுக்கெல்லாம்', 'பெரிய உலகத்து நிலைபெற்ற உயிர்களுக்கெல்லாம்' என்றே பெரும்பாலான உரையாசிரியர்கள் சொற்பொருள் கூறினர். கவிஞர் இராமலிங்கனார், புலவர் குழந்தை, மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக் குளம், இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கர ராஜு நாயுடு ஆகியோர் 'மன்னுயிர்' என்றதனை உயர் திணையாகிய மக்கள் ஆக்கினர். அதனுடன் புலவர் குழந்தை 'மன்னுயிர் என்றது பெற்றோரை' என்றும், கவிஞர் இராம லிங்கனார் விளக்கவுரையில் 'மக்களைப் பெற்ற எல்லா மனிதர் களுக்கும்' என்றும் உரைத்தனர்.

ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி 'இப்பெரிய உலகத்தில் கல்வி கற்றவர்கள்'[2] என்றார். இப் பொருள் உண்மையில் அவர் பரிமேலழகரிடமிருந்து பெற்ற தேயாகும். பரிமேலழகர் உரை இங்கே கருத்துடன் கவனிக்கத் தக்கதாகும்.

'தம்மக்கள் அறிவுடைமை' என்பதன் உரைக்கு விளக்கவுரையாகப் பரிமேலழகர், 'ஈண்டு அறிவு என்றது, இயல்பாகிய அறிவோடு கூடிய கல்வியினை' என்ற அறி வார்ந்த விளக்கம் கண்டார். அத்துடன் 'மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம்' என்பதற்கு அவர் 'பெரிய நிலத்து

1. That their children should possess more knowledge
2. The learned in the vast world

மன்னு நின்ற உயிர்கட் கெல்லாம்' என்றே சொற்பொருள் கூறினும், தொடர்ந்து விளக்கவுரையில் 'மன்னுயிர் என்றது ஈண்டு அறிவுடையார் மேல் நின்றது. அறிவுடைமை கண்டு இன்புறுதற்குரியார் அவராதலின்' என்று விரித்தார். படிப்படியான இப்பொருளுயர்ச்சியை அவர் இன்னும் ஒரு படி மேற்கொண்டு சென்று, முடிவான கருத்துரையில் 'இதனால் தந்தையினும் அவையத்தார் உவப்பர் என்பது கூறப்பட்டது' என்றார்.

இத்தொகையின் உரையில் பரிமேலழகர் தம் அறிவுத் திறமும் அறிவுயர்வும் முற்றிலும் காட்டுகிறார் என்பது மறுக்க முடியாத உண்மையே. ஆனால் அவர் அறிவு இங்கே வங்கத்தை உருக்கித் தங்கமாக்கவில்லை, தங்கத்தையே உருக்கி வங்கமாக்கிவிடுகிறது. அறிவைத் தாய் இனத்துக்குக் கொடுக்கப் பொறாத இடைக்கால நாகரிகப் பண்பின் பக்தரான இவர், இங்கே அதனைத் தந்தைக்குக் கூடக் கொடுக்க விரும்பவில்லை: 'அறிவுடை அவையோர்' தனியுரிமை உடைமையாகத் தேக்கிக் காண விழைகிறார் என்பதைக் காணலாம்.

பரிமேலழகரின் இந்த அறிவுத் திறமார்ந்த பிற்போக்குரை கண்டு உள்ளங்கொதித்து உரை வெம்பியே கவிஞர் இராமலிங்கனார் நாம் மேலே சுட்டியபடி இம்முடிபை மெல்லக் கண்டித்துச் செல்கிறார்.

(5) பரிமேலழகர் உரை பழஞ்சார்புரைகளில் அறிவுச் சிறப்புடையதாயினும் பிற்போக்குரைகளின் முகடேயாகும். அது பின் பற்றிய ('தம்மின்' என்பதன்) இலக்கண மரபு தவிர்த்துப் பிறிது இலக்கண மரபு கண்ட புதுச்சார்புரைகளின் முகட்டில் நின்று இம்மணி விளக்கவுரை, அவற்றுடன் பரிமேலழகர் அறிவுப் பண்பும் இணைப்பது காணலாம். ஏனெனில் இங்கே மன்னுயிர் அறிவார்ந்த மக்களை உள்ளடக்கிய உயிர்ப் பேரினத்தின் மொத்தப் பண்பாட்டு நாகரிக மலர்ச்சியாலே பேரின முற்போக்கு, நாகரிக முற்போக்குத் தத்துவம் சுட்டியுள்ளது.

69. தாய்க்குப் பிள்ளைப் பேற்றின் துன்பமெல்லாம் பிள்ளை முகம் காணின் இன்பமாம்; பிள்ளை சான்றோன் என்று உலகம் போற்றுவது உணரின் அப்பிள்ளையின்ப மெல்லாம் பேரின்பமாகப் பொதுளும்

[2]ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் [1]தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்

பொ - ரை: [1]*(சான்றோர் வாழ்வின் நிலைக்களமான உலகமெல்லம்) தன்னுடைய மகனைச் சான்றோன் என்று குறிப்பிட்டுப் பாராட்டிப் போற்றுவதைக் காதாரக் கேட்ட தாயின் உள்ளம்,* [2]*(அவள் அப்பிள்ளையை) அருமையாகப் பெற்றெடுத்தபோது எய்திய இன்பத்தைப் பார்க்கினும் பேரளவான எல்லையற்ற பேரின்பம் அடையும்.*

க - ரை: *பெற்ற இன்பம் தாய் அறிவாள். அது அவள் பேறுகாலத் துன்பத்தையெல்லாம் இன்பமாக்கிவிட்ட நிகழ்ச்சி. பிள்ளை இன்பமும் அவளதே. ஏனெனில் அது அவள் ஆவல் எல்லாம் வடித்தெடுத்த கனவார்வத்தின் சின்னமாகவே, அவள் அவாவின் உருவமாகவே வளர்கிறது. பிள்ளையை உலகமே வெறுக்க நேர்ந்த காலத்தில் கூட வெறுக்க மறுக்கும் உள்ளம், அவள் தாய் உள்ளம். அத்தகைய தாய் உள்ளம், அப்பிள்ளை அவள் அச்சங்கள் போக்கி, அவாக்கள் நிறைவேற்றி, பண்பில் சிறந்து, சால்பில் நிறைந்து, சான்றோராலும் சான்றோர் வாழும் உலகத்தாலுமே சான்றோன் என்று புகழ்ந்து பாராட்டிப் போற்றப்படுகிறன் என்று*

கேள்விப்பட்டபோது, துன்பங்கள் யாவும் மறந்து, இன்பங்கள் யாவுமே நிறைந்த பேரின்ப நிலையின் எல்லையை அடைந்துவிடும்.

இலக். கு: இக்குறட்பாவின் வாசகம் ஒன்றே. அவரய் நிலைக் கூறுகள் உட்பட இதன் சொற்கள் இரண்டே. அவையாவன:

1. (சான்றோர் வாழ்வின் நிலைக்களமான உலகமெல்லாம்) தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் (இது எழுவாய்)

2 (தான் அப்பிள்ளையை) ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் (இது பயனிலை).

இக்குறட்பாவில் 'பெரிதுவக்கும்', 'தன் மகனை' என்ற முதலடியின் பின்னிரு சீர்களும், 'எனக் கேட்ட' என்ற இரண்டாம் அடியின் இரண்டாம் சீரும் மட்டுமே காய்ச்சீர்கள். முதலிரண்டும் முற்றிலும் படுத்திசைத்தன. படுப்பிசைப்பின் சமனிசைப்பும் நிரையசை மிகுதிப்பாடும் இச்சீர்களுக்கு இன்னோசை பெருக்கின. 'எனக்கேட்ட' என்பதும் படுப்பிசைப்பே—ஆனால் முதலசையின்பின் இனியமுரிவும், இரண்டாம் அசையில் எற்றிசைப்பும் சேர்ந்து இப் படுப்பிசைப்புக்கு இன்னோசையுடன் பொருள் வள இனிமையும் ஒருங்கே வழங்கின.

'சான்றோன்' என்ற இரண்டாம் அடி முதற்சீர் தேமாவே யாயினும் இரண்டுநேரசையும் நீண்டு எடுத்திசைத்து வீறுபட அமைந்தன. 'தாய்' என்ற இறுதிச்சீர் ஓரசைச் சீராயினும் ஈரசைச் சீர் போல எற்றிசைப்பாகி, முதலுயிரும் பின் மெய்யும் இரண்டும் அளபெடுத்தாற் போல [' தாஅய்ய்' என] ஒலித்தல் காணலாம். இதன் பொருள் வளம் எல்லையற்றது.

'ஈன்ற', 'பொழுதின்' என்ற முதலடி முதலிருசீர்களும் ஒருங்கே ஒரு சீர்தாமோ என்று கூறும்படி அவ்வளவு குறுகிப்படுத்திசைப்பினும், முதற்சீர் முதல் நேரசை மட்டும் ஈரசையோ எனுமளவு நீண்டிசைத்து, அடுத்த அசை மிகக் குறுகி முரிவுற்று நின்றது.

இவற்றின் பொருள் வளங்களெல்லாம் பின்னர் விளக்கவுரையிலும், பொருள் வளப்பகுதியிலும் விரித்துரைக்கப்பட இருக்கின்றன.

சான்றோர் வாழ்வின் நிலைகளமான உலகெல்லாம் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் என்பது அதன் ஈற்றுச் சொல்லான தாய் என்பதனை ஒப்பப் பெயர்ச் சொல்லாய், பின் வரும் 'பெரிதுவக்கும்' என முடியும் தொகையைப் பயனிலையாகக் கொண்டு அதன் எழுவாய் ஆயிற்று.

இத்தொகையில் வரும் 'என' என்ற வினையின் வினைமுதல் அல்லது எழுவாயாக 'உலகெலாம்' என்பதும்; 'சான்றோன்' என்ற சொல்லின் குறிப்பால் 'சான்றோர் வாழ்வின் நிலைக்களமான' என்பதும் அவாய் நிலைகளாக வருவிக்கப்பட்டன.

தாய் இங்கே பெயர்ச்சொல், தாய் உள்ளம் அதாவது தாயின் உள்ளம், தாய்மை உடைய உள்ளம் என்ற கருத்துச் சுட்டி வந்தது.

கேட்ட என்பது இறந்த காலப் பெயரெச்சம். கேள், பகுதி. 'அ', பெயரெச்ச விகுதி. இறந்த கால இடை நிலையாய் வந்த தகரமும், அதன் முன்னின்ற பகுதி ளகரமும் புணர்ச்சியில் இரண்டும் டகரம் ஆயின. இப்பெயரெச்சம் தாய் என்னும் தொகைக் கூறு தழுவித் தொகைப்பட்டது.

என என்பது செயவெனெச்சம். இது 'கேட்ட' என்னும் பெயரெச்ச வினை தழுவிற்று. தழுவு வினையின் வினை முதலை அதாவது தாயை இது எழுவாயாகக் கொள்ளாமல், அவாய் நிலையாக வருவிக்கப்பட்ட 'உலகெலாம்' என்ற பெயரை வினை முதல் எழுவாயாகக் கொண்டது. செயவெனெச்சத்தின் பண்புகளில் இது ஒன்றேயாகும். அது தன் முதல் வினைகொண்டும் முடியலாம், பிறிது முதல் வினைகொண்டும் முடியலாம். இதில் 'என்' வினைப்பகுதி. 'அ' என்பது வினை எச்ச விகுதி. மகனை என்பது இவ்வினையின் செயப்படுபொருள் ஆகும். சான்றோன் என்ற பெயர் எழுவாயாகவே 'என்' என்னும் வினைப்பகுதியுடனிணைந்து இணை வினையாம் இயன்றது. சான்றோன் என்பது சால்பு என்ற பண்படியான

குறிப்பு வினையாலணையும் பெயர்'. ஆண்பால் விகுதி 'ஆன்' இங்கே பெயர் வடிவில் 'ஒன்' எனத்திரிந்தது. இடைநிலை தகரமும், ஈறு நீங்கிய பண்புப் பெயர் வடிவின் ஈற்று லகரமும் முறையே றகரமாகவும் னகரமாகவும் திரிந்தன.

தன் மகனை என்பது தன்னுடைய மகனை என்ற பொருளில் ஆறும் வேற்றுமைத் தொகை. மகனைஎன்பது 'சான்றோன் என' என்ற தொகை வினையின் செயப்படுபொருள் என்பது மேலே கூறப்பட்டது. இதில் 'ஐ' இரண்டாம் வேற்றுமை உருபு. மகன் ஆண்பாற் பெயர். தன் என்பது திணைபால் பொதுமை ஒருமைப் பெயரான தான் என்பதன் வேற்றுமை வடிவம். இப்பொதுப் பெயர் தொகையினுள் 'தாய்' என்ற பெயரையே சுட்டுமுதலாகக் கொண்டது

(தான் அம்மகனை) ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் என்பது அதன் ஈற்றுக் சொல்லான உவக்கும் என்பதனை ஒப்ப, வினைச் சொல்லாய் 'தாய்' என முடியும் தொகையை எழுவாயாகக் கொண்டது.

உவக்கும் என்பது காலப் பொதுமை சுட்டிய எதிர்கால வினை முற்று. 'உவ' வினைப்பகுதி. 'உம்' என்பது காலப்பொதுமை, திணைபாற் பொதுமை சுட்டிய விகுதி. இவ்விகுதி இடைநிலை ஏற் பதில்லை. விகுதியின் முன் ககரம் எழுத்துப் பேறாய் வந்து இரட் டித்தது. இவ்வினை முற்றுத் திணைபாற் பொதுமையாயினும், அஃறிணைச் சுட்டே பொதுமை வழக்காதலால், அக்குறிப்பாலேயே மேலே 'தாய்' என்பது 'தாய் உள்ளம்' சுட்டுவதாகக் கொள்ளப் பட்டது.

பெரிது உவக்கும் என்பதில் பெரிது என்பது குறிப்பு வினை எச்சமாய் உவக்கும் என்ற வினை தழுவிற்று. பெரிது என்பது பெருமை என்ற பண்படியாகப் பிறந்த ஒன்றன்பால் குறிப்பு வினை முற்று அல்லது வினையாலணையும் பெயராய், வினை எச்சமாக வழங்கிற்று. பண்புப் பெயர் ஈறுகெட்டு, ஈற்றயல் உகரம் இகரமாகத் திரிந்து, 'து' என்னும் ஒன்றல்பால் விகுதி பெற்று வந்தது.

பொழுதின் என்பதில் 'இன்' ஐந்தாம் வேற்றுமை உறழ்வுப் பொருள் உருபு. பொழுது பெயர்ச்சொல் வடிவம். இவ்வேற்றுமைப் பொருள் உவக்கும் என்ற வினைமுற்றுத் தழுவிற்று, ஈன்ற என்பது ஈன் என்ற வினைப் பகுதியடியாய் வந்த இறந்த காலப் பெயரெச்சம். அகரம் அவ்வெச்ச விகுதி. இடைநிலையான தகரம் னகரத்தின் பின் றகரமாகத் திரிந்தது.

ஈன்ற என்ற வினையின் வினைமுதல் 'தாய்' என்பது சுட்டிய தான் என்பதே. இதன் செயப்படுபொருளும் தன் மகனை அல்லது அம்மகனை என்பதே. குறட்பா இரண்டாம் வாசகத்தில் இவ்விரண்டும் வருவிக்கப்படத்தக்கன.

வி - ரை: அறவாழ்வின் மழைவளப் பயிர்ப் பண்பான மக்கட்பேறு முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடைய தாயினும், அறத்துப்பாலின் பொருட்பாற்பாயிரம் போன்ற இவ்வதிகாரத்தில் இக்குறட்பாவுடன் முடிவுறும் மூன்று குறட்பாக்களும் (67—69) அதன் அற வாழ்வுத் தொடர்பே சிறப்பிக்கின்றன. அவ்வழி இக்குறட்பா முழுமுப்பாலின் இனவாழ்வுத் திட்டமாகிய அறத்தின் வகையில் மக்கட் பேற்றால் நிறைவு பெற வேண்டிய இனக்கூறு இது என விளக்குகிறது. அத்துடன் இவ்வகையில் இன வாழ்வில் புதல்வர் புதல்வியரின் பங்கும் படியும், அதற்கு வேண்டிய அவர்களது பெருந் தகுதியும் வளர்த்து உருவாக்கும் கடமை இருபாற் பெற்றோர்க்கும் பொதுவாகவும், இன வாழ்வின் முழுபொறுப்பும் உடையவளான தாய்க்கே சிறப்பாகவும் உரியதெனஇக்குறட்பா விதந்தோதுகின்றது.

இவ்வதிகாரத்தில் மக்கட் பேற்றின் அறவாழ்வுத் தொடர்பு கூறும் மூன்று குறட்பாக்களும் (67—69) முறையே அறத்துக்கு நிலைக்களமான சமுதாயம், குடும்பத் தலைமுறை மரபு, இனமரபு ஆகிய முத்தளங்களுக்கும் உரிய கடமை, உரிமை, பொறுப்புக்களை வலியுறுத்துகின்றன. அம்முறை யிலே முதற் குறட்பாவில் சமுதாயக் கூறு தந்தை மேல் வைத்தும், இரண்டாம் குறட்பாவில் குடும்பத் தலைமுறை

மரபுக்கூறு மக்கள் மேல வைத்தும் கூறப்பட்டது போல, இக்குறட்பாலில் இனமரபுக் கூறு தாய்மேல் வைத்துக் கூறப் பட்டுள்ளது.

மகன் பெற்ரோரினும் அறிவுத் தகுதியில் மேம்பட்டவனு யிருக்க வேண்டும், அதுவே இன முற்போக்கான சமுதாயக் கடன் என்பது முன் இரு குறட்பாக்களிலும் இருதிசைக் கூறுகளாக, முதற் குறட்பாவில் (67) தந்தை கடமையாக, அடுத்த குறட்பாவில் (68) மகன் உரிமையாக வலியுறுத்தப் பட்டது. ஆனுல் மகன் பெற்ரோரினும் பண்புத் தகுதியில் மேம்பட்டவனுக, சமுதாயத்திலும் இனத்திலும் நிலேயான பண்புத் தகுதி ஊக்கும் சால்பு உடையவனுக இருத்தல் நலம், அதுவே இன முற்போக்கான இனக்கடன் என்பது இவ்வொரு குறட்பாவால் ஒரு திசைப் பண்பாக, தாயின் பெரும் பேருரிமையாக விளக்கப்படுகிறது.

(சான்ருேர் வாழ்வின் நிலேக்களமான உலகெலாம்) தன் மகனேச் சான்ருேன் எனக் கேட்ட தாய் என்பது '(சான்ருேர்களே உள்ளிட்ட உலக மக்கள் எல்லாருமே) தான் பெற்ற பிள்ளேயைச் சான் ருேன் என்று பாராட்டிப் போற்றுகிருர்கள் என்பதைக் கேட்டுணர்ந்த தாய்மை நலஞ்சாற்ற தாய் உள்ளமானது' என்று பொருள்படும்.

தாய் என்ற சொல் இங்கே பின் வரும் அஃறிணைச் சார் பான 'பெரிதுவக்கும்' என்ற திணைபால் எண் பொது வினே முற்றுக் குறிப்பால், 'தாய் உள்ளம், தாய்மை, தாய்மை உள்ளம், தாய்மை நலமிக்க தாய்மை உள்ளம், தாய்மை சான்ற தாயின் உள்ளமானது' என்னும் பொருள்கள் விரிப்ப தாகும்.

அறவாழ்வுத் தொடர்பு குறிக்கும் இவ்வதிகாரத்தின் மூன்று குறட்பாக்களிலும் (67—69) பெற்ருேர் பிள்ளேத் தொடர்பில் பெற்ருேர் சார்பு முதற் குறட்பாவில் (67) ஆண்முனேப்பாகத் தந்தை என்று தொடங்கி, இரண்டா வது குறட்பாவில் (68) தம் என்ற பள்மைப் பொதுமைச் சொல்லால் பெற்ருேர் எனப்பாற் பொதுமை சுட்டி, இக்

குறட்பாவில் 'தாய்' எனப் பெண் பால் முனைப்புச் சுட்டாக மலர்ச்சியுறுதல் காணலாம்.

சமுதாயத்தில் குடும்பப் பொறுப்புத் தந்தைக்கு; குடும்பத்தினுள்ளே அப்பொறுப்புத் தந்தையுடன் கூடிய தாய்க்கு; ஆனால் இனத்தில் முழுப் பொறுப்பும் கடவுட் பண்புக் கூறுகிய தாய்க்கே என்பதை இம் மலர்ச்சி வரிசைமுறை குறித்துக் காட்டுகிறது.

பெண்ணுக்கு ஒரு பொதுமைப் பண்பு உண்டு, அதுவே பெண்மை. மகண்மை என்றும் அதைக் கூறலாம். பெண்டிர், மகளிர் என்ற இரு சொற்களும் பெண்மை என்ற சொல்லும் பெண்ணினத்தைக் குறிப்பது இதனாலேயே. உயர் உயரினங்களுக்கும் மனித இனத்துக்கும் பொதுவாகிய இப் பெண்மைப்பண்பின் கூறுகளே அச்சம், மடம், நாணம் ஆகியவை. ஆனால் பெண்மையின் நிறைவாக, உயர் மனித இனம் அல்லது தமிழ் இனத்துக்கு மட்டுமே உரிய பண்பு ஒன்று உண்டு — அதுவே பயிர்ப்பின் நிறைவாகிய கற்பு. நிறை, பேராண்மை, சால்பு ஆகிய பெருந்தகைப் பண்புகள் இக் கற்பில் விதைப் பண்புகளாக உள்ளடங்கிய கூறுகளே.

பெண் தன் களவியற் பருவத்தில் காதலனிடம் நிறை என்ற பண்பை ஊக்கி இயக்குகிறாள். இலக்கணப் புலவோர் இச்செயலையே பெண்ணின் நிறையழிவு எனக் கூறுகின்றனர் — பெண் தன் நிறை அதாவது அச்சம், மடம், நாணம் ஆகிய மூன்றையும் காதலன் முன் மட்டுமே, அதுவும் தற்காலிகமாகவே அழியப் பெற்று, அவனிடம் அவற்றின் ஆண்மைக் கூறுகிய நிறையை வளர்க்கிறாள். இதே பெண் கற்பியல் பருவத்தில் கணவனிடம் பேராண்மைப் பண்பை ஊக்கி இயக்குகிறாள். ஆனால் பெண்ணின் முழு நிறை பருவம் கற்பியல் கடந்த தாய்மையே — இப்பருவத்தில் அவள் தன் மகனிடம் பெண்மையும் கற்பும் ஊக்குகிறாள். தன் மகனிடமே சால்பும் சான்றாண்மையும் ஊக்கி இயக்குகிறாள்.

பெண்மை, கற்பு தாய்மை — பெண்மையின் பண்பு மலர்ச்சிப் போக்கு இது. பெண்மையின் மலர்ச்சி கற்பு, முழுமலர்ச்சி தாய்மை. ஆண்மை, பேராண்மை, சால்பு அல்லது சான்ருன்மை — ஆண்மயைின் பண்பு மலர்ச்சிப் போக்கு இது. ஆண்மையின் மலர்ச்சி பேராண்மை, முழு மலர்ச்சி சான்ருண்மை.

பெண்ணுக்கும் சரி, ஆணுக்கும் சரி — முழுமலர்ச்சி ஊக்குபவள் தாய்தான் — தந்தையல்லன். தாய் மூலமாக வன்றித் தந்தை குடும்பத்திலோ, இனத்திலோ பண்பியக்கு வதில்லை. இக்குறட்பாவில் பெற்ருேர் சார்பின் முழுமலர்ச் சியாகத் தாயே முனைப்பாகச் சுட்டப்பட்டதன் காரணம் இதுவே.

தன் என்ற சொல் இங்கே தாயைச் சுட்டிய 'தான்' என்ற திணைபால் பொதுவான ஒருமைப் பெயரின் வேற் றுமை வடிவமாக, தன்னுடைய என ஆறும் வேற்றுமைப் பொருளில் வந்தது. தன் என்ற இந்த அடைமொழி இல்லாமலே, 'மகனை' என்ற பின்வரு சொல் மட்டுமே நின்று உரிய பொருள் தந்துவிடப் போதியதாகும். 'தன் மகனை' என்ற சீரின் இடமாகக் 'கான்முளை'யை என்று இட்டு இசை கூட நிரப்ப முடியாததன்று. ஆகவே தன் என் பது இங்கே தாய்மையின் பாச உரிமை சுட்டும் குறிப்புச் சொல்லாக வந்தது. அத்துடன் 'தன்' என்ற சொல் மகனை உடைமைப் பொருளில் சார, அதன் வேற்றுமை முதலாக, தோன்ரு அவாய் நிலையாகவே 'தான்', எனற சொல் அமைந்து கேட்ட என்பதன் எழுவாயாக நின்று, தன், தான், இரண்டும் 'தாய்' என்ற பின் வரும் சொல்லைச் சுட்டு முத லாகக் கொண்டு நின்றன என்பது உணரலாம்.

இம் முக்கூட்டுப் பண்பினல் வரும் கவிதை இன்பம் வாசித்தே உணரத்தக்கது — ஆயினும் அக்கவிதையின்பம் இதன் உள்ளார்ந்த குறிப்புப் பொருள் வளமே யாகும். சுட்டுமுதல் (தாய்) பின்னகவும், சுட்டு (தன், தான்) முன்ன கவும்; சுட்டுமுதல் வெளிப்படையாகவும், சுட்டுக்கள் குறிப் பாகவும் வெளிப்படையாகவும் (தான் அவாய்நிலை, தன்

வெளிப்படை) வந்ததனால், (தன் என) ஏதுப் பொருளையும் (அன்புப்பாச உரிமையுடையவாராயினும் தான் என்) ஏதிலன் போலமறை நிலை மொழியாகப் பிறர் கூறக் கேட்ட என்ற பொருளையும் இவை தந்து விடுதல் காண்க.

'தன் மகன், தான் ஒருத்திக்கே உரிய மகன், தான் ஒருத்தியே பெற்று வளர்த்து, தன் ஒருத்தியின் பாசப் பாராட்டுக்கே உரிய மகின், உலகம் 'தனது எனப் போற்றிப் பாராட்டும் பண்பாளனாய் விளங்குவது கேட்ட தாய்' என்ற பொருளும் 'தன்' என்ற இச்சிறுசொல் தருதல் காணலாம்.

'புலி போல வீர விளையாட்டில் எங்கெங்கோ சென்று புகழ் வேட்டையாடுவான் மகன், அவனைப் பெற்ற வயிறு தான் இதோ என்னிடம் உளது' என்று அயலாரிடம் கூறும் புற நானூற்றுத் தாயின் உள்ளத்தைத் 'தன்' என்ற இச்சிறு சொல் உணர்ச்சிப் படம் பிடித்துக் காட்டுகிறது.

மகனை என்ற சொல் இரண்டாம் வேற்றுமைச் சொல் என்றும், அது 'என' என்ற வினையின் செயப்படு பொருளாக வந்தது என்றும் இவக்கணக் குறிப்புரையில் மேலே குறிக்கப் பட்டது. இங்கே 'ஐ' என்ற இரண்டாம் வேற்றுமை இல் லாமலே மகன் என்பது எழுவாயாய், சான்றோன் என்பதைப் பயனிலையாக கொண்டு குறட்பாப் பொருளை மிக எளிதாகத் தெரிவித்துவிட முடியும். குறட்பா இசைகூட, தன் மகனை என்பதனிடமாகத் 'தன் புதல்வன்' என்று மாற்றிச் சரி செய்துவிடலாம். ஆகவே இங்கே 'ஐ' என்ற இரண்டாம் வெற்றுமை உருபு வழக்குத் திருவள்ளுவர் பெருமானால் பெருங் குறிப்பு வளம் தருவிக்கும் முறையிலேயே பயன்படுத் தப்பட்டுள்ளது என்று காணலாம்.

மகனை என்பதில் உள்ள 'ஐ' உருபின் குறிப்பினாலேயே பின் வரும் 'என' என்ற சொல் 'என்று கூற' என்ற பொதுப் பொருள் கொள்ளாமல், மகனைப் பெயர் குறிப்பிட்டுப் பேசாமல் 'சான்றோன்' என்று போற்றிப் பாராட்டிப் பேசுவதை' என்ற சிறப்புப் பொருள் கொண்டது. 'தன்' என்ற சொல்லின் கீழே மேலே குறிப்பிட்டபடி, சான்றோன்

என்று கூறுபவர் உலக மக்கள், ஏதிலாது கூறும் மக்கள், சான்றோர் உள்ளிட்ட உலக மக்கள் — கேட்பதோ, ஏது டைய தான் என்ற நாடகப் பண்புணர்ச்சியை இந்த 'ஐ' காரம் வலியுறுத்திக் காட்டுகிறது.

மகன் என்ற சொல் இருபால் மகவுகளைப் பொதுவாக வும், ஆண்பால் மகவை முனைப்பாகவும் குறிக்கும் சொல். ஆனால் இக்குறட்பாவில் அது இவ்விரு குறிப்புக்களையும் பின் னணியாக்கி ஆண்பால் மகவையே உறுமுனைப்பாகச் சுட் டிற்று.

அறவாழ்வுத் தொடர்பு குறிக்கும் இவ்வதிகாரக் குறட்பா மும்மையில் (67—69) பெற்றோர் சார்பு தந்தை-பெற்றோர் — தாய் என மலர்ச்சியுற்றெழுவது மேலே தாய் என்ற சொல்லின் கீழே சுட்டப்பட்டது. அதற்கு நேர் எதிரிணை யாகப் பிள்ளை சார்பு மகன்—மக்கள்—மகள் என்றே மலர்ச்சி யுறுவதாகக் காட்ட வேண்டுவது இயல்பு. ஆனால் குறட்பா மும்மை அவ்வாறு காட்டவில்லை மகன் — மக்கள் — மகன் என மகன் முனைப்பையே உறுமுனைப்பாகத் தீட்டியுள்ளது.

பெண்ணின் முழு மலர்ச்சி தாய்மை, ஆனால் ஆணின் முழு மலர்ச்சி தந்தைமையன்று, மகன்மை என்பதை இது வற்புறுத்திக் காட்டுகிறது.

தமிழ் மொழியில் பெண், ஆண் என்ற பெயர்களின் பண்புப் பெயர் வடிவங்களே பெண்மை, ஆண்மை என்பன. ஆனால் ஆணின் நிறைமலர்ச்சி தந்தைமையன்று, ஆண்மையே ஆகவே தாய்மைக்கு எதிரான ஆண்பாற் சொல் தந்தை மையே யானாலும், தாய்மைக்கு எதிரிணையான ஆண்பாற் பண்பு மகன்மையே—ஆண்மை, பேராண்மை, சால்பு அல்லது சான்றான்மையின் மும்மபைு மலர்ச்சிகளையும் குறிக்கும் ஆண் பாற் சொல் அதுவே.

பெண் முதிர் பருவத்திலேயே சிறப்படைகிறாள்—தந்தை அதற்கு ஒரு துணைக் கருவி யன்றி வேறல்லள். ஆனால் ஆண் இளமையிலேயே இயல்பாகச் சிறப்படைகிறான்—பெண்ணை நாடி அவளைத் தாயாக உயர்த்தும் ஆணின் கருவிப் பருவம்

அது. ஆனல் அவனும் முதிர் வயதில் சிறப்படையக்கூடும், எனினும் இது பெண் தாய் வடிவில் அவனிடம் ஊக்கி வளர்க்கும் சான்றாண்மை மலர்ச்சியுற்றால்தான்.

தாய்மைக்கும் மகன்மைக்கும், தாய்மைக்கும் சான்றாண்மைக்கும் இடையேயுள்ள தொடர்பு இது.

தாய் கணவனிடம் நிறையையும் பேராண்மையையும் தான் ஊக்குகிருள்—மகளிடம் கற்பைத்தான் ஊக்குகிருள்—மகனிடம் மட்டுமே முழு ஆண்மை மலர்ச்சியாகிய சான்றாண்மையை ஊக்கிகு இயக்கிருள்.

பெற்ருேர் பிள்ளை உறவைத் தந்தை மகன் உறவு, தந்தை மகள் உறவு, தாய் மகள் உறவு, தாய் மகன் உறவு என்று நான்காகப் பகுத்துக் கண்டால், நடு இரண்டிலும் சிறப்புக் குறைவு; முதல் கடை இரண்டிலுமே சிறப்பு மிகுதி. நடுவண் இரண்டிலும்கூட முன்னதிலும் பின்னது சிறப்பு. முதல் கடை இரண்டிலும் இதுபோலக் கடையே பெருஞ் சிறப்புக்குரியது.

உலகின் மிகப் பழைய கடவுண் மும்மையில் தாய் தந்தை மகன் அன்றி, தாய் தந்தை மகள் கிடையாது என்பது காணலாம்.

தமிழில் தந்தைமையைவிடத் தாய்மை உயர் பொருள் சுட்டுவது போல, மகண்மையைவிட மகன்மை உயர்பொருள் சுட்டுவது கவனிக்கத் தக்கது. தந்தைமை குடும்ப உறவையும், மகனுடைமையையும் ஆதரவுப்பான்மையையும் மட்டுமே காட்டும். தாய்மை கடவுட் பண்பையே காட்டிவிடும். அது போல, மகண்மை பெண்ணின் பண்பு சுட்டலாம், மகள் உறவு சுட்டலாம், வேறு எதுவும் சுட்டாது. மகன்மையே உரிமை, பெருமை, புகழ் மரபு, அன்புரிமை, மரபுரிமை, மனிதப் பண்பு என்ற பொருள்களை உடையது.

மொழிகளில் தமிழ் மொழி காட்டும் இச் சிறப்புப் பண்புகளெல்லாம் திருவள்ளுவரிடம் அருஞ் சிறப்புறுவதை இக் குறட்பாவும், இதனை உள்ளிட்ட குறட்பா மும்மையும் காட்டும்.

பெண்ணின் பெருமையெல்லாம் இனத்தைப் போற்றுவது, ஊக்குவது, ஆக்குவது மட்டுமே. அதனை வளர்ப்பவன் ஆண், தற்கால உலகில் அறிஞர் பெர்னர்டுஷா சுட்டிக் காட்டியுள்ள இந்த உண்மை தமிழ் மொழியைச் செந்தமிழ் மொழியாக்கிய தமிழ் முன்னோர்கள் கண்டு மொழியில் பதித்துள்ள பண்பே — திருவள்ளுவர் கண்டு விளக்கிய பண்பேயாகும். இக்குறட்பாவில் 'மகள்' வழங்காமல் 'மகன்' வழங்கியுள்ளமை காட்டும் குறிப்பு வளம் இது.

சான்றோன் என்பது சால்புடையவன் என்ற பொருளுடையது. சால்பு என்பது பண்பின் நிறை பொங்கல் மலர்ச்சி, பண்பிற் சிறந்து, இயல்பாகவே பண்புருவினனாகி, பிற பண்பாளர்களுக்குச் சான்றாக, பின்பற்றும் முன்மாதிரியாக, இலக்கண மேல்வரிச் சட்டமாக நின்று, பண்பாளர்களிடமெல்லாம் சால்பலைகளையும், மற்ற எல்லாரிடமும் பண்பலைகளையும் பரப்பும் பண்புடையவனே — சால்புடையவனே சான்றோன்; அவன் பண்பே சான்றாண்மை.

இச்சொல்லுடன் தொடர்புடையதாகத் திருவள்ளுவர் சாலும், சால்பு, சான்ற, சான்றாண்மை ஆகிய சொற்களைப் பலபடப் பயன்படுத்தி இச் சொல்லுக்குப் போதிய விளக்கம் தந்துள்ளார். இன்றும் தமிழில் சான்று (முன்மாதிரி, வழக்கு மன்றத்தில் மெய்ப்பிற்குரிய உறுதுணை அல்லது சாட்சியம், மேற்கோள், எடுத்துக்காட்டு) சான்றாளர் (சான்று கூறுபவர், சாட்சி), சான்றாயம் (தீர்ப்புக்கு முற்பட்ட ஆய்வுறுதிக்குழு[1]), சால (மிகுதியாக, நிரம்ப) சால் (மிடா) என்ற சொற்களும்; தெலுங்கில் சாலும் (போதும், பொருந்துவதாகும், அமையும்) சாலா (பொருந்தாது, தகாது) ஆன்றோர், ஆன்ற, ஆல் (படர்ந்த ஆலமரம்) ஆர்ந்த, ஆரியர் என்ற சொற்களும் வழங்குகின்றன.

சான்றோன் என்ற சொல்லைத் திருவள்ளுவர் இக் குறட்பாவிலேயே வழங்குகிறார்.

சான்றாண்மை எனத் திருவள்ளுவர் பொருட்பாலில் ஓர் (99-ம்) அதிகாரமே வகுத்துள்ளார்.

சான்றோன் என்ற சொல்லின் முழுப் பொருள் இச் சொற்றொடர்புகளும் திருவள்ளுவர் வழக்கும் முழுதும் விளக்கிக் காட்டும். நிறைவு, முன்மாதிரி, இலக்கணமேல் வரிச் சட்டம், மெய்ம்மைக்குரிய உறுதி, பண்புறுதி (986), மேதகைமை (987), உலகின் பண்பியக்க ஆட்சி (990) ஆகிய பொருட்கூறுகளின் தொகுதியே சான்றாண்மை. அதனை உடையவனே சான்றோன்.

இச்சொல்லுடன் தொடர்புடையன என்று மேலே குறிக்கப்பட்டவற்றுள்ளே கூட, 'சாலும்' என்பது நீத்தார் பெருமை அதிகாரத்தில் 'ஐந்தவித்தான் ஆற்றல்' சுட்டும் (25-ம்) குறட்பாவிலும்; 'சான்ற' என்ற சொல் வாழ்க் கைத் துணை நல அதிகாரத்தில் கற்புடை மனைவியின் பண் பியல்புக்கு இலக்கணம் வகுக்கும் (56-ம்) குறட்பாவிலும் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன என்பது இங்கே குறிக்கத் தக்கது ஆகும். இக்குறட்பாவிற்குத் தொலைவாயில் களாகவே, அந்த இரு குறட்பாக்களையும் திருவள்ளுவர் அமைந்துள்ளாரோ என்று கருத இடமுண்டு. ஏனெனில் ஐந்தவித்தான் ஆற்றல்தான் சான்றாண்மை, அதனை ஆக்கிப் படைப்பதுதான் கற்பின் நிறை மலர்ச்சியாகிய தாய்மை என்ற திருவள்ளுவர் கருத்தை இது சுட்டிக் காட்டுகிறது. அத்துடன். 'ஐந்தவித்தான் ஆற்ற'லோடு ஒத்த கடவுட் பண்பே கற்பு; அதன் மலர்ச்சியாகிய தாய்மை ஆக்கும் பண்பே, சான்றாண்மையின் மலர்ச்சி நிறைவே 'ஐந்தவித்தான் ஆற்றல்' — இந்த அற ஆழி (தர்ம சக்கர)ப் பண்பும் இவ்விரு வாயிற் குறட்பாக்களுடன் கூடிய இக் குறட்பாவால் இயக்கி வட்டணித்துக் காட்டப்படுகிறது.

என என்ற சொல் மகனை என்பதிலுள்ள உருபின் குறிப் பால் 'என்று பெயர் குறிப்பிட்டுப் பேசாமல் சான்றோன் என்று போற்றிப் பாராட்டிப் பேசுவதை' என்னும் பொருள் பெறப்படுவது மேலே அச்சொல்லின் கீழ் விளக்கப்பட்டது.

என என்பதன் எழுவாயாக 'உலகெலாம்' என்பதும், 'சான்றோன்' என்பதற்குக் குறிப்பு வளமாக அதனடை மொழி யாகச் 'சான்றோர் வாழ்வின் நிலைக்களமான' என்பதும்

அவாய் நிலைகளாக வருவிக்கப்பட்டன என்பது இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டது.

கேட்ட என்ற சொல் இக்குறட்பாவிலேயே உயிர் நிலைச் சொல் ஆகும். இதன் எழுவாய் பின்வரும் தாய் என்பதைச் சுட்டு முதலாகக் கொண்ட முன் வரும் அவாய்நிலைச் சொல் ஆன 'தான்' என்பதாகும். வழக்கத்திற்கு மாறாகச் சுட்டு முதல் பின்னும், சுட்டு முன்னும் ஆகவும்; சுட்டு முதலும் சுட்டின் வேற்றுமைத் திரிபும் (தன்) வெளிப்படத் தோன்றி, சுட்டு மட்டும் தோன்றா அவாய் நிலையாகியும் வந்ததனால், இங்கே 'கேட்ட' என்ற சொல், 'நேரே தன்னை நோக்கி, தன்னிடம் கூறாமல், பலர் பலதிசைகளிலும் பலரிடம் பேசிக்கொள்வதைத் தொலைக்கேள்வியாகக் கேட்ட' என்ற பொருளும்; பின்வரும் 'உவக்கும்' என்ற குறிப்பால், 'காதாரக் கேட்ட' என்ற பொருளும், 'பல தடவை பலவிடத்துப் பல, குரலில் கேட்டலால் காதாரக் கேள்விப்பட்ட' என்ற பொருளும் கொண்டது.

கேட்ட என்பது பெயரெச்சம். பெயரெச்சமாய் அது தாய் என்ற பெயர் தழுவிற்று. 'கேட்டுத்தாய் உவக்கும்' என்னாமல் 'கேட்ட தாய் உவக்கும்' என்று கூறியதனால், பல தடவை காதாரக் கேட்டுக் கேட்டு, கேட்டதை நினைத்து நினைத்து, தாய் பூரிப்புபுறுவதை இச்சொல் தொனிப்படுத்திக் காட்டுகிறது.

கேள் என்ற தமிழ் வினைச் சொல் காதால் கேட்டலையும் கேள்வி கேட்பதையும் (வினவுவதையும்); ஒரு பொருள் வேண்டுமென்று கேட்பதையும் (கோருவதையும்); கேள்விப் படுதலையும் அதனால் அறிதலையும் (பாடம் கேட்டல், கல்வி கேள்வி); வழக்கு மன்றத்தில் உசாவுதலையும் (கேள்வி முறை); உறவினரிடையே நலம் உசாவுதலையும் (நான் கேட்டதாக அவனிடம் சொல்லு) குறிக்கும். பெயர்ச்சொல் வடிவில் கேள், கேளிர், கேண்மை ஆகியவை உறவினர், நண்பர், நட்பு ஆகியவற்றைச் சுட்டும். இச்சொற்கள் யாவும் கிளை (மரக் கொப்பு, கவர்) என்ற சொல்லுடன் சொல்லும் பொருளும் தொடர்புடையன.

பலர் பலவிடத்துப் பல காலங்களில் சொல்லும் செய்திகள் வேறுபடுவது இயல்பு. அங்ஙனம் வேறுபடாமல் ஒத்தமைந்தால், அதனைவிட வழக்கு மன்றத்தில் மெய்மைக்கு வேறு சான்றில்லை. கேட்டல் பலதிசைப் பலதரப்புக்களிலிருந்து கேட்டல் என்பதை இதுவே குறித்தது. பலதிசையிலிருந்து வந்து ஒத்தாலும் அது மெய்ம்மையாக மட்டுமே அமையும். இனமெய்மையாகாது. கேள்வி நட்புப் பகை பாராமல் வந்ததனுல், நட்புப் பகை கடந்த அடிப்படை இனப்பாசத்தில் வந்தது என்பதைரிம்; கேட்ட தாய் இனப்பாசம் தூண்டும் தாய்மைப் பாசத்துடன் கேட்டாள் என்பதையும் கேட்டல் என்ற சொல் தொனியாகக் குறிக்கும். 'பல்வகையினர் ஒரே இனப்பாசத்துடன் ஒத்துரைத்த (சான்ரேன் என்ற) சொற் கூறி இனப்பாசம் சுட்டிப் பேச, அதைப் பாசப் பூரிப்புடன் காதாரக் கேட்ட தாய்' என்பது இச்சொல்லின் திரண்ட குறிப்பு வளப்பொருள் ஆகும்.

ஈன்ற பொழுதின் என்பது 'பேறுகாலத் துன்பபெல்லாம் மறக்கும்படி கருவுயிர்த்துப் பெற்ற மகவின் முகம் கண்டு மகிழ்ந்த காலையின் மகிழ்ச்சியைவிட' என்ற பொருள் தருவதாகும்.

ஈன்ற என்பது இங்கே ஈன்றெடுத்த என்ற பொருள் குறித்தது. இக்காலத்தில் கூட ஈனுதல் என்பது விலங்குகளின் கருவுயிர்த்தலுக்கும், பெறுதல் என்பதை மனிதர் கருவுயிர்த்தலுக்கும் வழங்குகிறது. மனித இனச் சார்பில் ஈனுதல் வழங்கும்போது, அது உடலைப் பெற்றெடுத்தல் என்ற தனித் தொனிப்புடன் கூறப்படுவதாகும். பிறப்பைக் கருவேற்ற அன்றே பிறந்ததாகவும் கணிக்கலாம். உயர் உயிரினங்கள் வகையில் புறத்தே ஈன்ற அன்ரூே, கீழ் உயிரினங்களில் முட்டையிட்ட அன்ரூே, முட்டை குஞ்சு பொரித்த அன்ரூே பிறந்ததாகக் கொள்ளலாம். கட்டிளமை பெற்றுச் சமுதாய வாழ்வில் புகுந்த அன்ருகவோ, சமுதாய வாழ்வின் தகுதியாகிய பயிற்சி அல்லது கல்வித் தொடக்கத்தின் போதோ அறிவுப் பிறப்புற்றதாகவும் கருதலாம்.

சமுதாய வாழ்வு கடந்து இனவாழ்வாகிய ஆன்மிக வாழ்வுப் பேறு பெற்ற அன்றாகவும் பிறப்பைக் கருதலாம்.

தமிழர் பிறப்புக்களில் மாவும் மாக்களும் ஒரு பிறப் புடையன, மக்கள் இருபிறப்புடையவர் என்று கொண்ட னர் (410, 393). இக்கருத்தைத் திரித்துப் போலிக் கருத் தாக்கி வலியுறுத்தி, தமிழரல்லாதார் பண்பாகக் கருதும் தமிழரும் உண்டு. ஆனால் அது தமிழர் உயர்பண்புக் கருத்தே என்பதை வள்ளுவ வழக்காறும், தமிழ்ச் சொற் களும் காட்டும்.

ஈன்ற என்ற சொல் ஈனோர் (இவ்வுலகத்தோர், உடல் வாழ்வு மட்டுமேயுடைய கீழுலக மக்கள்) என்ற சொல்லுடன் தொடர்புடையது. ஈன்ற எனபதன் எதிர் சொல்லே ஆன்ற, சான்ற என்பன. இவை ஆன்மிகப் பிறப்புற்ற ஆன் றோர், சான்றோர் என்பதைக் குறிக்கும்.

'ஈன்றாள் பசி காண்பானாயினும்' என்று தொடங்கும் (656) குறட்பாவில் கூட, 'ஈன்றாள்' என்ற சொல் 'உடலைப் பெற்றவள்' என்ற பொருள் தொனிக்கும்படி வழங்கப்பட் டுள்ளமை காணலாம்.

ஈன்ற பொழுதின் என்பதில் 'பொழுது' என்ற சொல் தாயின் பிள்ளைப் பேற்றின் முதற் பிறப்புச் சுட்டி, அதன்பின் பிள்ளை சான்றோன் எனக் கேட்ட 'பொழுது' ஆகிய இரண் டாம் பிறப்பைக் குறித்துக் காட்டுகிறது. முன்னது சிறு பிறப்புக்குரிய சிறுபொழுது, பின்னது பெரும் பிறப்புக் குரிய பெரும்பொழுது; முன்னது துன்ப மறக்க வைக்கும் ஆற்றலுள்ள இன்பமாயினும் சிறுதிற இன்பம். பின்னதோ இன்பத்தையே பேரின்பமாக்கி. துன்பத்தைக் கூடப் பெரும் பேரின்பமாக்கும் ஆற்றலுடைய இன்பத்துள் இன்பம், தாய் இன்பம், கடவுட் பேரின்பம் ஆகும்.

பொழுதின் என்பதில் 'இன்' என்பது 'விட, காட்டிலும்' என்ற பொருளுடைய ஐந்தாம் வேற்றுமை உறழ்வுப் பொருள் உருபு. ஆனால் 'பொழுது' என்ற சொல்லடுத்து

வந்ததால் இது இங்கே அப் 'பொழுதில் தாய் பெற்ற இன்பத்தை விட' என்ற பொருள் தந்தது.

பெரிது உவக்கும் என்பது 'எல்லையிலாது என்றும் வளரும் பேரின்ப நிலையை அடைந்து மகிழ்வாள்' என்று பொருள்படும்.

பொழுதின் என்பதிலுள்ள உறழ்ச்சி உருபே மிகுதி காட்ட, அதன் பின்னும் 'பெரிது' வந்ததனுல், 'பெரிது' என்ற சொல் 'எல்லையிலாது என்றும் வளரும் பேரின்ப நிலையை அடைந்து' என்ற தொனிப் பொருள் தந்தது.

உவத்தல் உள்ளூர நினைந்து நினைந்து மகிழ்தல். 'உவப்பத் தலைக் கூடி' என்று தொடங்கும் (394) குறட்பா காண்க. தமிழில் மகிழ்தல் பொங்குதலையும் விரிதலையும் (சோறு மகிழ்ந்தது என்ற பேச்சு வழக்குக் காண்க), உவத்தல் பொங்கிப் பொங்கித் தன்னிறைவு குன்றாத நிலையையும் குறிக்கும். இது புறம் பொங்காது அகத்தே பொங்கல் அலைபாய்வுற்றுச் சுண்டிச் செறிவுறும் இன்பம் குறிக்கும்.

சிறப்புரை: சமுதாய வாழ்வில் பெண் நன் மனிதப் பிறவி. குடும்ப வாழ்வில் அவள் கணவனைத் தெய்வமாக்க முயலும் குடும்ப அரசி, வாழ்வரசி. ஆனுல் இன வாழ்வில் அவள் தெய்வம், தன் மகனைச் சான்றோனுக்கி உலகு அவனைச் சான்றோன் என்று போற்றுவதறிந்த போது, ஒரு தெய்வத்தை ஆக்கிவிட்ட தெய்வமாக, உடற் பேருகிய முதற்பேறு கடந்த ஆன்மிகப் பேருகிய மறுபேறு பெற்ற கடவுட் பண்புக்கூருக அவள் பேரின்பம் எய்துகிருள்.

தன் தாய் தன்னைப் பெற்ற போது பெண்ணுகி, கணவன் தன்னைப் பெற்றபோது கற்பரசியாகி, பிள்ளைப் பெற்றபோது தாயாகி, பிள்ளை சான்றோனுனபோது அவள் பேரின்ப உருவான கடவுட் கூறு அல்லது தெய்வம் ஆகிவிடுகிருள்.

கதிரொளியாகிய பெண் கற்பால் மழை முகிற்பண் பாகி, தாய்மையில் பயிர்வளமாகி, சான்றாண்மை ஈன்ற தாய்மையால் உயிர் வளம் ஆகிறாள்.

பொருள்வளம்: *(1)* இக்குறட்பாவின் ஓசை இனிமையுடன் ஓசைக்குறிப்பு வளம் போட்டியிடுகின்றது.

நிரையசை மிகுதிப்பாடும், படுப்பிசைக்குப் பின் சமனிசைப்பும், மென்மை இடைமைப் பெருக்கமும் இதன் ஓசை இனிமைக்கு வகை செய்துள்ளன.

தன் மகனை, பெரிதுவக்கும் என்ற இரண்டு சீர்களும் காய்ச்சீர்களாகவும் படுப்பிசைப்பின் சமனிசைப்புடனும், தூங்கலிசைப்புப் போன்று நீண்டும் வந்ததனால், மகனைப் பெற்றெடுத்து வளர்க்கத் தாய்ப் பாசம் மேற்கொண்ட இடைவிடாக் கவலை சான்ற முயற்சி ஒருபுறமும், அதன் முழு வெற்றி கண்டபின் நினைந்து நினைந்து மகிழும் முடிவிலாப் பேரின்ப உவகை மற்றொரு புறமும் குறித்துக் காட்டப்பட்டன.

எனக் கேட்ட என்ற சீரும் படுத்திசைக்கும் காய்ச்சீரே. என என்பதன் பின் இனிய ஓர் இடை முறிவும், அடுத்த அசையில் ஒரு நீள் எடுத்திசைப்பும், இறுதியில் ஒரு வெட்டியலான விட்டிசைப்பும் வந்தன. அன்புள்ள இடம் அச்சமும், பாசமுள்ள இடம் தன்னை நம்பாத அவநம்பிக்கையும் எவர்க்கும் இயல்பு— தாயுள்ளம் அவாவுக்கும் அச்சத்துக்கும் இடையில், நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையில் ஊசலாடும் ஊசல் நிலையை முதலசையின் இறுதியில் உள்ள இசை முறிவு காட்டிற்று. கலிங்கத்துப் பரணியில் ‘வருவார் கணவர் எனத் திறந்தும், வாரார் கணவர் என அடைத்தும்’ கதவின் குடுமி ஓயாது திருகுவதாகக்

கவிஞர் குறிப்பிடும் அழகிய ஊசலாட்ட நயத்தை இந்த இடை முரிவு ஒரு மந்திர இசைப்பாகக் காட்டி விடுகிறது. இத்தகைய மன ஊசலாட்டம் தீர, ஏதிலா அயலார், பல இடத்திலிருந்து பல தரப்பினர் பல காலம் கூறும் 'சான்றோன்' என்ற உரை கேட்ட போதுள்ள தெளிவை, கேட்ட என்ற சொல்லின் முதல் நேரசையின் எடுப்பு எடுத்துக் காட்டுகிறது. அதனிறுதியில் வரும் வெட்டியலான விட்டிசைப்பு அவள் இடை இடையே பெற்றகவலைகள், அச்சங்கள் எல்லாம் அதனால் நீங்குவதை ஓசைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

சான்றோன் என்பதன் ஈரசைகளும் நெடில்களாக எடுத்திசைத்தது சான்றோர் உட்பட உலகமெலாம் புகழும் புகழ்ச்சியின் உயர்வையும்; சான்றோன் என்ற சொல் உலக வாழ்வையே தம் வாழ்வாகக் கொண்டவர் என்னும் பொருள் சுட்டும் என்ற வீறமைதியையும்; அச் சொல் கேட்ட மாத்திரத்தில் தாயுள்ளம் பெறும் நிமிர்வையும் ஓசை மூலமே எடுத்துக் காட்டுகிறது.

தாய் என்பது மெய்யும் உயிரும் அளபெடுத்தாற் போன்று எடுத்தும் நீண்டும் ஒலிப்பது. தாய் அப்போது பெறும் பெருமிதத்தையும் பன்மடி இன்பப் பெருக்கத்தையும் பேரின்பத்தையும் இது சுட்டுகிறது.

[2] 'ஈன்ற', 'பொழுதின்' என்பது முதலடி முதலிரு சீர்கள். இரண்டும் மாச்சீர்கள் (தேமா, புளிமாச் சீர்கள்). ஆனால் இரு சீர்களும் ஒரு சீர் தாமோ என்ற அளவில் படுப்பிசைப்பாகவும், ஓசை யெழாத சமனிசைப்பாகவும் வந்தன. அதே சமயம் முதற்சீரின்

முதல் நேரசை ஈரசையோ எனும்படி நீண்டிசைத்து, அந் நீட்சி தோற்ற வண்ணம் அடுத்த அசையும் சீரும் விரை ஒலிக் குறுகலாகி வந்தன. இவை இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டுள்ளன.

ஈன்ற பொழுதில் தாய் பிள்ளை முகம் கண்டதனுல் அடைந்த இன்பம் பெரிதே என்பதையும், அது பேறு காலத் துன்ப மெல்லாம் போக்கிய இன்பம் என்பதையும் ஈன்ற என்பதன் முதலசை நீட்சி சுட்டிற்று. ஆனுல் இவ் விரு சீர்களின் மீது குறுக்கமும், தொடர்ந்த இரு சீர்களின் (பெரிதுவக்கும், தன் மகனை என்பவற்றின்) படுத்திசைப்பு நீட்சியும், அந்த ஈன்ற பொழுதைய இன்பம் பெரிதே யாயினும், பின் (சான்றேன் எனக் கேட்ட காலை) வரும் இன்பத்தை நோக்க அது மிகச் சிறியதாய்விடத் தக்கது என்பதைத் தொனிப்படுத்திக் காட்டுகின்றன. அடுத்த அடியில் ‘ சான்றேன் ’ என்ற சீரின் இரட்டை நிமிர்விசைப்பும், இறுதிச் சீரின் (தாய் என்பதன்) நீள் நிமிர்விசைப்பும் இடை வரு சீரின் (எனக் கேட்ட என்பதன்) அலைமுகட்டிசைப்பும் சேர்ந்து, சான்றேன் எனக் கேட்ட காலை இன்பம் முன் இன்பத்தைப் பேரின்ப நிலைக்கு உயர்த்தி, தாய் மைக்கு வீறுடன் மகிழ்வு அதாவது இறும்பூது அளிப்பது, அலையலையாக, தளம் தளமாக அவள் இறும்பூது உயர்த்தி அவளைப் பேரின்பத்தில் மிதக்க வைப்பது என்பதனை ஓசை மூலம் படம் பிடித்துக் காட்டின.

[3] அறவாழ்வு கூறும் இவ் வதிகாரக் குறட்பா மும்மையில் தந்தை கூறப்படும் இடத்தில் தாயும், மகன் கூறப்படும் இடத்தில் மகளும், தாய் கூறப்படும் இடத்தில் தந்தையும் பின்னணிப் பொதுப் பண்புக

ளாகக் கருதப்பட வேண்டும் என்றும்; அதே சமயம் அவ்வச் சொல் கூறப்படு மிடங்களில் அவ்வப் பால் களின் முனைப்புப் பண்பும் உள்ளோடி நிற்கின்றன என்றும் இக் குறட்பா விளக்கவுரை காட்டிற்று. அதன் படி குறட்பா மும்மையின் பெற்றோர்-பிள்ளை தொடர் பில், பெற்றோர் சார்பு தந்தை—பெற்றோர்—தாய் எனப் படிப்படியாக ஆண்பால்—பொதுப்பால்—பெண் பால் எனப் பெண்பால் நோக்கியே மலர்ச்சி பெறு வதையும்; பிள்ளை சார்பு இதனின் வேறுபட மகன்-மக்கள்-மகன் எனப் படிப்படியாக ஆண்பால்-பொதுப் பால்—மீட்டும் ஆண்பால் என்று ஆண்மையிலிருந்து பேராண்மை நோக்கியே மலர்ச்சி பெறுவதையும் விளக்கவுரையே எடுத்துச் சுட்டிக் காட்டிற்று.

பெற்றோரில் சிறப்புத் தாய்க்கு, மக்களில் சிறப்பு மகனுக்கு என்ற அரிய வள்ளுவ மெய்ம்மை இதில் அடங்கியுள்ளது. ஆண் பெண்ணாகிய இரு பாலா ரிடையே பெண்ணடிமை மேற்கொண்ட நாகரிகங் களும் உலகில் உண்டு, இரு பால் ஒப்புமை குறிக் கொண்டும் அதனைக் காண மாட்டாமல் அவதியுறும் நாகரிகங்களும் இருந்து வருகின்றன. இதன் காரணம் நாகரிக உலகில் இரு பால் உறவுகளைத் தமிழர்களைப் போல் ஆய்வாராய்வு செய்த நாகரிக இனமோ; தமிழ ரிடையே அதனை வள்ளுவர் பெருமானைப்போல் நுண் ஆய்வாராய்வு செய்த தமிழரோ கிடையாது என்பது தான்.

ஆண் பெண் இரு பால்களின் வேறுபாடு அற்ற நிலைதான் உயர்நிலை என்றால், நாம் உயிர் மலர்ச்சித் தொடக்கத்திலுள்ள கீழ் இன உயிர்களுக்கே சென்று

விடலாம். மனித இன நாகரிகத்தின் போக்குக்கு இது நேர் மாறானது ஆகும். அதே சமயம் மனித இன நாகரிக வளர்ச்சியில் பெண் அடிமைப் பண்பு இடம் பெற்றுள்ளதானாலும், இன்றுகூட உலகில் பல படியில் அதில் நம்பிக்கையுடையவர் உண்டானாலும், அதுவே மனித இனநாகரிகப் போக்கு என்று கூற முடியாது— மனித இன நாகரிக முற்போக்கு என்று கூறக் கட்டாயம் ஒரு சிறிதும் இடம் கிடையாது. ஏனெனில் பெண்களின் உயர்வே ஒரு நாகரிகத்தின் உயர்வுக்குச் சின்னம் என்பதை எல்லா முற்போக்காளர்களும் ஒப்புக் கொள்வர். அது மட்டுமன்றி, மனித மொழியிலும் சமய வழக்கிலும் தாய், உடன் பிறப்பு நங்கை, புதல்வி, பெண் தெய்வங்கள் ஆகியோர் தனிச் சிறப்புக்குரிய பண்புகளாகவே வளர்ந்துள்ளனர்.

இரு பால்களில் ஒரு பால் உயர்வுடையது என்று ஒத்துக் கொள்ள வேண்டுமென்றால், கவிஞரும் கலைஞரும் பெண்பால் உயர்வே ஒப்புவர் என்பதில் ஐயமில்லை.

மனித இன நாகரிகத்தின் உயிரடிப்படையை நாம் திருவள்ளுவரின் இருபாற் கோட்பாட்டிலேயே காண முடியும். ஏனெனில் நாகரிக மக்கள் கருத்துக்களுக்கெல்லாம் மூலமாக நின்று, அது அவற்றை ஒரு முகப்படுத்தி உயிர்க்கோட்பாடாக்க உதவுகிறது.

திருவள்ளுவர் கோட்பாட்டின்படி, மனித இன வாழ்வில் ஆண்பெண் சரிசமநிலையும் உண்டு, வேறுபாடும் உண்டு. ஏனெனில் அது வேறுபாட்டிடையே காணப்படும் சரிசமநிலை ஆகும். அதில் பெண்களுக்கு உயர்வு உண்டு, ஆனால் ஆணுக்கும் உயர்வு உண்டு.

இத்தனித்தனி உயர்வுகள் முரண்பட்ட உயர்வுகள் அல்ல, வேறுபாட்டடிப்படை மூலம் அவை ஒன்றை ஒன்று நிறைவுபடுத்துகிற[1], ஒன்றுடன் ஒன்று ஒத்திசைந்து இரண்டற்ற ஒருமை நிலை தருகிற[2] உயர்வுகள் ஆகும். நிறைவுயர்வு ஒருவர் குறையை மற்றவர் நிறைவு நிரப்புவது; ஒத்திசைவு நிறைவோ, ஒருவர் நிறைவை மற்றவர் நிறைவு பெருக்குவதாக அமைவது.

பெண் உயர்வு தாய்மையில் உச்சவளம் காண்கிறது. இனத்தின் வளத்தையெல்லாம் தனி உயிரிடம் கொண்டுவந்து சேர்த்து, இனவளத்தின் சேமகலமாய், இனத்தின் நிலையான உயிர்ப்பண்பாய், உயிர்த் துடிப்பாய், உயிரூக்கமாய் இயங்கும் சக்தியே பெண்ணின் முழுநிறை விளக்கான தாய்மை. அது இன முதல்; இனத்தொடர்ச்சியின் நிலப்பண்பும் விதைப் பண்பும் சேர்ந்த நிலவிதைப் பண்பு (நிலப் பண்பு பெண்ணின் பெண்மை, விதைப்பண்பு பெண்ணின் கற்பு, இரண்டும் சேர்ந்த நில விதைப் பண்பே) தாய்மை.

ஆண் உயர்வு மகன்மையில் உச்சவளம் காண்கிறது. குடும்பத்தின் ஒவ்வொரு தலைமுறை வளர்ச்சியும், சமுதாயத்தின் ஒவ்வொரு தலைமுறை ஏற்றமும், இனத்தின் முன்னேற்றமும் உயர்வும் புகழும் ஆணினையே சார்ந்தது. குடும்பத்தலைமுறை வளர்ச்சியையும் சமுதாயத் தலைமுறை வளர்ச்சியையும் ஆற்றும் தகுதியை அவனுக்கு அளிப்பவர் தந்தை. களவியல் பருவக் காதலி உருவிலே பெண் இதில் அவனை

1. Complomeutary 2. Supplementary

ஊக்குகிருள். கற்பியல் பருவ மனைவியுருவிலே அதே பெண் தந்தையுடனிணைந்து இதில் அவனைச் செய லாற்றுவிக்கிருள். ஆனால் தாய்மைப் பருவத்தில் தாய் உருவில் பெண்ணே — ஆனால் காதலியோ, மனைவியோ அல்லள், தாயே அவனுக்கு இனமுன் னேற்றத்தகுதியளித்து இன முன்னேற்றத்தில் அவனை ஊக்குகிருள்.

திருவள்ளுவரின் இவ்விருபால் சிறப்பு வேறுபாட் டுப் பொதுச் சமநிலை ஒருமைப்பாட்டை உணராதவர், தொல் காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற்றில் காணப்படும் அகப்புறப் பண்புகளைச் சரிவர உணர முடியாது. தமிழர் அகப்புறப் பண்புகளையும், திருவள் ளுவரின் இவ்விருபால் சிறப் பொருமைப் பாட்டுக் கோட்பாட்டையும் அறியாமல், மனித இன நாகரிகத் தின் உள்ளார்ந்த பண்பு மலர்ச்சிப் போக்கை எந் நாட்டவரும், மொழியினரும் உணர்தல் சாலாது.

பெண், முதல்; ஆண் வட்டி. பெண் விதை நில மும் விதையும்; ஆண் உரம். பெண் உடலும் உயிரும்; ஆண் அவ்வுயிரின் உயிர்வளம்.

குறட்பா மும்மையின் தாய்மை மகன்மை மலர்ச் சிகள் தரும் படிப்பினை இதுவே.

திருவள்ளுவரின் இத்தத்துவத்தின் செறிநிழலைச் சாங்கிய நெறியில் காணலாம். ஆனால் அதன் விரி நிழலை எல்லாச் சமயங்களிலும், மனித நாகரிகப் போக் கிலும், உயிர் மலர்ச்சிப் போக்கிலும் கூடக் காணலாம். ஏனெனில் இதை உயிர் மலர்ச்சியில் கண்டே, நம் மனித இனத்திற்கு வள்ளுவர் பெருமான் தம் ஆதி

வேதமாகிய திருக்குறளில் வகுத்துச் சென்றனராதல் வேண்டும்.

இந்திய சமய அறிவுத் துறைக் கோட்பாடுகள் பல, அவற்றை ஆறு என வகுத்துரைத்தல் மரபு. அவை சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வ (பழைய) மீமாம்சை, உத்தர (புதிய) மீமாம்சை என்பவையே. இவற்றுள் சாங்கியமே மிகப் பழமையானது என்று கூறுவர். இந்தச் சாங்கிய நெறியிலும் பழைய சாங்கிய நெறி, இடைக்காலச் சாங்கிய நெறி, இறுதி நிலைச் சாங்கிய நெறி என மூன்று படிகள் காண்கிறோம்.

சாங்கிய நெறியில் உலகின் அடிப்படைத் தத்துவம் மூலப் பிரகிருதி (இயற்கையின் மூல ஆற்றல்). அதன் பலபடி மலர்ச்சிகளாக அவர்கள் உலக வாழ்வை விளக்குவர் — இது மிக முற்பட்ட முதற் படிச் சாங்கியம்.

செயலற்ற மூலப் பிரகிருதி செயற்பட உள்நின்று உதவும் ஒருசக்தியை — தனக்கெனச் செயலின்றி, மூலப் பிரகிதியின் செயலே செயலாகக் கொண்ட ஒரு சக்தியை — இடைகாலச் சாங்கியர் வகுத்துக் கொண்டனர். அதையே அவர்கள் புருடன் என்றனர்.

சாங்கியம் இறுதி நிலைப்படியில் செயலற்று எல்லாம் காண்பவன் மட்டிலுமாய் (சாட்சி மாத்திரமாய்) நிற்கும் இந்தப் புருடனையே கடவுள் என்று கூறியமைந்தது. இப் புருடனைக் கடவுளின் அருவ வடிவம் என்றும், மூலப்பிர கிருதியைக் கடவுளின் உருவாருவ வடிவ மென்றும், உலக வாழ்வியக்கத்தைக்

கடவுளின் உருவ வடிவம் என்றும் நாம் இக்கருத்தை இக்கால மொழியில் குறிக்கலாம்.

சாங்கியத்தின் மூலப் பிரதிருதியே திருவள்ளுவரின் பெண்மை நிறைவாகிய தாய்மை, இனத்தின் மூலத்தாய்மை — இனப் பழமை. சாங்கியத்தின் புருடனே திருவள்ளுவரின் ஆண்மை நிறைவான மகன்மை — இனத்தின் மூல மகன்மை.

இரண்டும்—தாய்மையும் மகன்மையும்—கூடிய வாழ்க்கைப் பண்பே தந்தைமை. மகன்மையின் ஆண்மையுடன் கூடிய தாய்மை வடிவு — அல்லது தாய்மையின் பழமையுடன் கூடிய மகன்மையின் வடிவே அது.

சிதம்பரம் என்று கூறப்படும் தில்லையில் இறைவனுடுவதாக இன்று காணப்படும் காட்சி, தொல் பழங்காலங்களில் இறைவியின் ஆட்டமாகவே (கவிஞர் பாரதிதாசனின் "உலகத்தாய்"ப் பாடல் இம் மரபில் வந்தது) அமைந்திருந்தது என்பதை அப்பதியின் தல புராணமே காட்டுகிறது.

தாய்க் கடவுளை (அன்னையை) வணங்கிய முற்காலத் தமிழர், பின் மகனுக வணங்கி இறுதியிலேயே இரண்டையும் ஒன்றுபடுத்தித் தந்தையாக (சிவபிரான் அல்லது திருமாலாக) வணங்கலாயினர்.

புராணங்களில் அப்பனுக்கு முன் பிறந்தவன் என்று பிள்ளையாரும்; அப்பன்சாமி, சிவகுரு என்று முருகனும்; பார்வதியின் ஆணுரு என்று திருமாலும் கூறப்படும் முரண்பாடுகளையும்; "இருளில் ஒளி" "ஆதிக்கு முன்னம் ஆனுதி" என்று சித்தர்களும் பத்தர்களும் பாடும் பாடல்களையும் விளக்க வல்லது

திருவள்ளுவர் இருபாற்கோட்பாடு. அதனை இக் குறட்பா மும்மையிலும், சிறப்பாக இக்குறட்பாவிலும் காணலாம்.

(4) "கேட்ட" என்ற சொல்லுக்கு விளக்கம் கூறுகையில் பரிமேலழகர் "பெண் இயல்பால் தானாக அறியாமையின், கேட்ட தாய் எனவும் கூறினார்" என்று வலிந்து, தமக்கே உரிய இடைக்காலப் பெண் ணடிமை வாதம் புகுத்த இங்கே ஆர்வத்துடன் இடம் பிடிக்க விரைந்துள்ளார்.

தம்மை ஈன்றெடுத்த தாய், தம்முடன் பிறந்த தங்கை தமக்கையர்கள், தம் வாழ்வினை வாழ்வாக்கிய மனைவியர், தம் ஆண் மகவினும் தமக்குப் பன்மடங் காக மகவின்பம் அளித்த பெண் மக்கள், தம் ஆண் மகவின் வாழ்வைத் தம் அகவாழ்வாகக் கொண்டு தமக்குப் பேரப் பிள்ளைகள் தந்து மகிழ்வித்த மரு மக்கள் ஆகிய இத்தனை பேரும் கல்வியில்லாமலே இருத்தல் வேண்டுமென்று அறிவார்த்த பரிமேலழ கரும், இடைக்கால இருட் கோட்பாட்டாளரும் எப் படித்தான் கருத முடிந்ததோ, இது ஓர் உலகச் சமுதாய நோய் ஆகும். இது மனித சமுதாய மருத்துவரே இனி ஆராய்ந்து காண வேண்டிய செய்தி ஆகும். உபநிடத காலப் பெண் முனிவர் களையும், தாம் வழிபடு சமய மரபையும் (கலைமகள், மலைமகள், திருமகள்) இவர்கள் எப்படி அருகணைத் துக் கொண்டே அவற்றின் பழமூல மரபை மறந்தனர் என்பது இன்னும் வியப்புக்குரிய செய்தி ஆகும்.

பல செய்திகளில் இடைக்கால இருட் கருத்துக் களுக்குத் தம்மையறியாமலே வழி வகுத்து விட்ட

உலகப் பேரறிவொளியான புத்தர் பெருமான் இவ் விருட் குழியில் சறுக்கவில்லை என்பதும், அவர் காலத் திலேயே சமண சமயம் ஓரளவு இதில் விழத் தொடங்கிவிட்டது என்பதும் காணத்தக்கது.

பெண்ணுக்கு மட்டுமன்று, ஆணுக்குக் கூடப் பாசம் குறுக்கிட்ட இடத்தில் அறிவு செயலாற்றி அறி வார்ந்த முடிவு காண்பது அரிது. முடிவு காணும் இடத்திலும் அறிவுடையோர் தம் முடிவில் தாம் நம் பிக்கை உறுதி கொள்ள முடியாது. பெண் அறிவில் எப்போதும் ஆணுக்கு மிச்சமாயிருப்பதே இயல்பு— பெண்ணுக்குக் கல்வி கூடாது என்று தத்துவமாக இடையிருட் காலக்திலும், கல்வி வேண்டாம் என்று தற்காலத்திலும் கூட ஆண்மக்கள் கருதுவது இதனு லேயே யாகும். ஆனல் பெண்டிர் அறிவில் எவ்வளவு மேம்பட்டவரோ, அதனைப் பார்க்கிலும் உணர்ச்சி யிலும் பாசத்திலும் மேம்பட்டவர்கள். தாயோ பாசத் தில் எல்லாம் இழக்கவிட்டு மிதப்பவள். இதனுலேயே அவள் தன் மகன் சால்பு பற்றிய தன் ஆர்வக் கனவு நிறைவேற்ற வகையில் தன்னை நம்புவதில்லை—தன் காதுகளைக் கூட எளிதில் நம்ப முடியாது. ‘எனக் கேட்ட’ என்ற குறட்பாவுரையில் ‘கேட்ட’ என்பதன் அலை முகட்டிசைப்பும், ‘சான்றேன்’ என்பதன் நிமிர் வெடுப்பும் திரும்பத் திரும்பப் பல் திசையிலிருந்தும் பலராலும் பலதரப்பினராலும் கூறப்பட்டது கேட்டு அவள் நம்பிக்கை உறுதி உணர்வு பெறுவதையும்; தாய் என்பதன் நீள் அளபெடுப்பு, அந்த அரும் பெறல் உணர்வினல் அவள் உள்ளமும் பண்பும் கவலையாகிய ‘குன்றுகூன்’ நிமிர நிமிர் நிலைபெறு வதையும் உணர்த்துகின்றன.

'தன் மகனை' என்பதில் 'தன்' என்பதனால் பாசக் குறிப்பும்; உலகெலாம் என்பதே 'என' (என்று குறிப் பிட்டுப் பாராட்ட) என்பதன் எழுவாயானதால். பிறர் கூற்றும்; தான் தோன்றா எழுவாயாக நின்று 'கேட்ட' என்பதன் எழுவாயானதால், பிறர் பிறரிடம் கூறுவதையே தாய் கேட்டாள் என்ற குறிப்பும்; கேட் டுத் தாய் மகிழும் என்னாது கேட்ட தாய் மகிழும் என்றதனால், தன்னைக்குறியாது, பிறர் பிறரிடம் கூறி யதை, பிறர் குறியாது தான் கேட்டு உள்ளூரமகிழ் வாள் என்ற குறிப்பும் இக்குறட்பாவால் பதிவு செய்து காட்டப்பட்டுள்ளன.

தனிக்குறிப்புக்கள்: (1) 'சான்றோன்' என்பதற்குப் பரி மேலழகர், புலவர் ந. சி. கந்தையா ஆகியோர் 'கல்வி கேள்வி களில் நிறைந்தவர்' என்றும்; ஆங்கில மொழி பெயர்ப்பாசி ரியர் ஐ. டி. தங்கசாமி 'படித்தவர்'[1] என்றும் உரை செய் தனர். 'அறிவினால் பெரியர்' என்று பரிதியாரும்; 'அறி வால் நிறைந்தவர்' எள்று புலவர் குழந்தையும்; 'அறிவார்ந் தவர்'[2] என்று ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ட்ரூவும்; 'புத்திமான்' என்று இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனை வர் சங்கர ராஜு நாயுடு அவர்களும் பொருள் கண்டனர். பேராசிரியர் இலக்குவனார் 'பெரியோர்' என்றும், காலிங்கனார் 'இவன் பெரிதும் சால்புடையவன்' என்றும்; பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார் 'நற்பண்பு நிறைந்தவன்' என் றும்; கவிஞர் இராமலிங்கனார் 'மிக உயர்ந்த குணங்களுள்ள நல்லவன்' என்றும் விளக்கியுள்ளனர்.

இவ்வுரைகள் படிப்படியாக இம்மணி விளக்க உரை நோக்கி வருவது காணலாம். சிறப்பாகக் கீழே காட்டியுள்ள படி புலவர் குழந்தை உரையும், கவிஞர் இராமலிங்கனாருரை யும் இவ்வுரைக்கு மிக அணித்தானவை ஆகும்.

---

1. The learned 2 A wise man

'சான்றோர் எனக் கேட்ட' என்பதை 'புகழ்வது கேட்ட' என்றனர் ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் எஸ். எம். மைக்கேல், மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் வெண்ணிக் குளம் ஆகியோர்.

(2) என என்பதற்கு ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ட்ரூ, இந்திமொழி பெயர்ப்பாசிரியர் சங்கர ராஜு நாயுடு ஆகியோர் 'வாளா என்று அழைக்கப்படுவது' என்றும்: ஆங்கிலமொழி பெயர்ப்பாசிரியர் மைக்கேல், மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் ஆகியோர் 'என்று புகழப்படுவது' என்றும் உரைத்தனர். 'எனப் பிறர் சொல்ல' என்று பேராசிரியர் மு. வரதராசனுர், பேராசிரியர் இலக்குவனுர் ஆகியோரும்; 'என்று அறிவுடையோர் சொல்ல' என்று பரிமேலழகர், புலவர் ந. சி. கந்தையா, புலவர் குழந்தை ஆகியோரும்; 'என்று உலகத்தில் சிறந்தவர் பலரும் கூற' என்று காலிங்கரும் உரை கூறினர்.

இவற்றுள் பிந்திய வகை உரைகள் படிப்படியாக இம் யணி விளக்கவுரையை நோக்குவதும்; முந்திய, பிந்திய இரு வகையும் இணைத்துப் பார்த்தால், இம்மணி விளக்கவுரைக்கு இன்னும் அணுகி வருவதும் கவனித்தற்குரியன.

அறிவுடையார் என்பதை இங்கே அவாய் நிலையாகக் கொண்டது பற்றிப் பரிமேலழகர் தரும் விளக்கவுரை அழகிது. 'அறிவுடையார் என்பது வருவிக்கப்பட்டது, சான்றோன் என்றற்குரியார் அவராகலின்' என்பதே அவ்விளக்கம்.

சான்றோரை உள்ளிட்ட உலகெலாம் என்ற கருத்துடன் 'சான்றோரின் நிலைக்களமான உலகெலாம்' என்றே அவாய் நிலை வருவித்த இம்மணி விள்க்கவுரைக்கு இது ஒரு தூண்டு விளக்காய் அமைகிறது. ஏனெனில், உலகம் வாழ வாழ்பவர் சான்றோர். 'இதோ, எம் வழியில் நின்று, எம்மையும் கடந்து ஒரு புத்துலகச் சிற்பியான சான்றோன்' என்று புதிய சான்றோனை அறிந்துணர்ந்து உலகுக்கு அறிமுகப்படுத்த வேண்டியவர் அவரேயாவார். அத்துடன், உலகுக்கும் இதில்

ஒரு தனியிடம் உண்டு. முதலாவது, சான்றோர் வாழ்வுக்கு ஆதாரம் உலக மக்களே, அவர்களும் சமுதாயத்தில் பிறந்து வாழ்ந்து, சமுதாயத்தாலே வளர்க்கப்படுபவர்கள் ஆவர். இரண்டாவது, சான்றோர் தோன்றுவதற்கும் வாழ்ந்து வளர்வதற்கும் உரிய தக்க சூழ்நிலையாய் அமைந்து, அச்சூழ் நிலையை வளர்ப்பவர்களும், அச்சான்றோர்களே. உணர்ந்து மதித்துப் போற்றுபவர்களும் அவர்களே. மூன்றாவதாக விளக்கவுரையில் குறித்ததுபோல, உலகம் பலவகை; பல விடத்தும் பலகாலத்தும் பல்வேறான நோக்குடையது. அவ்வுலகத்து மக்கள் சான்றோன் என ஒருவனை மதிப்பது இதனால் தனி அருமையுடையது. ஏனெனில் அது பல்திசைச் சான்று முடிவு ஆகிறது.

சான்றோர் உள்ளிட்ட உலகெலாம் என்று கொள்ளாமல் சான்றோர் வாழ்வின் நிலைக்களமான உலகெலாம் என்பதையே இம்மணி விளக்கவிளக்கவுரை அவாய் நிலையாகக் கொண்டதன் உறு பொருத்தம் இதுவே.

(3) 'ஈன்ற' என்பதைப் 'பெற்ற' என்றே கொள்வர், பரிமேலழகரும் பிறரும். தான் என்ற அவாய் நிலை பெய்து 'தான் பெற்ற' என்று உரை செய்வர் மணக்குடவரும் பிறரும். 'மற்றிவனைத் தான் ஈன்றெடுத்த அப்பொழுதினும்' என்று விரிப்பர் காலிங்கர்.

'பொழுதின்' என்பதற்குக் 'காலத்தினும்' என்றே மணக்குடவரும் பிறரும் கூறினர். "பொழுதை மகிழ்ச்சியினும்' என அவாய் நிலை நிரப்பிக் கூறுவர் பரிமேலழகரும் பிறரும்.

இடையிருட் காலக் கோட்பாட்டைப் புகுத்த இங்கே விரைபவர் பரிமேலழகரல்லர், பரிதியார்! 'ஈன்ற காலத்தில் ஆண்பிள்ளை என்று சொல்லக் கேட்ட மகிழ்ச்சியினும்' என்றனர் அவர்.

(4) 'தாய் பெரிதுவக்கும்' என்பதற்குப் பேராசிரியர் இலக்குவனார் 'மிகுதியால் மகிழ்வாள்' என்றார்.

'கேட்ட தாய்' என்பதற்குப் பரிமேலகர் பிற்போக்குரை கண்டாராயினும், 'பெரிதுவக்கும்' என்பதற்கு அழகு விளக்கம் கூறுகிறார்:' கவானின் கண் (மடியில்; கவான் என்பது துடை) கண்ட பொது உவகையினும், சால்புடையவன் எனக் கேட்ட சிறப்பு உவகை பெரிதாகலின்' என்பதே அவ்விளக்கம்.

இக்காலப் பகுத்தறிவுப் புலவர்களாகிய புலவர் குழந்தையும் கவிஞர் இராமலிங்கனும் தரும் விளக்கங்கள் அழகியன, காலச்சுவை படுவன.

'தந்தையைவிடத் தாயே மக்கள் பெருமை கண்டு மிகவும் மகிழ்வாளாதலால், தாய் என்றார், தந்தை மகிழ்தலும் கொள்க' என்றும்; 'ஒருமை பற்றி மகன் என்றார், மகளும் கொள்க' என்றும் புலவர் குழந்தை இருபால் ஒப்பு நிலையுடன் உரை கூறுகின்றார்.

கவிஞர் உரை இன்னும் சீரியது.

இந்த இன்பம் 'தாய்க்கு மட்டும் தானா, தந்தைக்கு இல்லையா, தந்தையைச் சொன்னாலே தாயையும் சேருமே, ஏன் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது?' என்ற வினாக்களை எழுப்பி, அவர் அவற்றின் விடையுருவில் அழகு விளக்கம் அளிக்கிறார்.

'ஆண்மையின் உணர்ச்சிக்கும் பெண்மையின் உணர்ச்சிக்கும் வேற்றுமை உண்டு.'

'அன்பு, ஆதரவு, ஈரம், இரக்கம், உபகாரம் என்று சொல்லப்படுகிற குணங்கள் பெண்மைக்கே அதிகம் ...'

'தந்தை தன்னுடைய மகன் கல்வியறிவு, கலைத்திறம் சமார்த்தியம், சம்பாதனை, ஆண்மை ஆற்றல் முதலியவற்றில் சிறப்புடையவனாக இருப்பதைக் கண்டு மகிழ்வதைப் போல், வெறும் நல்லவன் என்பதற்காக மட்டும் அவ்வளவு மகிழ்ச்சியடைந்துவிடமாட்டான்!'

'ஆற்றல் வேறு. அறிவு வேறு; கலைவேறு; அன்பு வேறு' என்பதைக் கவனித்து உரையெழுதும் உரையாசிரியர் கவி

ஞர் இராமலிங்கனுர் ஒருவரே என்னலாம். இவை ஒன்றை விட ஒன்று மேலானது என்பதை உணர்ந்து கூறுபவரும் அவர் ஒருவரே என்று கூறல் மிகையாகாது. திருவள்ளுவர் உள்ளத்தை ஆங்காங்கே வேறு எந்த உரையாசிரியரினும் அவர் அணுக முடிவதன் காரணம் இதுவே.

திருவள்ளுவர் உள்ளக் கருத்துக்களே இவை. ஆனால் திருவள்ளுவர் இப்பண்புகளை வேறு வேறாகக் கொள்வதுடனோ, ஒன்றைவிட ஒன்று மேலானது என்று காட்டுவதுடனோ அமையவில்லை. அவை ஒரே இன மலர்ச்சியின் நான்கு தளங்கள்; தனி மனிதப்படி ஆற்றல்; குடும்பப்படி, அறிவு; சமுதாயப் படி, கலை; இனப்படி, அன்பு என்பதை மனித இனப் பொது மாமறையாகிய முப்பால் ஏடு ஒன்றே மனித இனத்துக்கு எடுத்துக்காட்டியுள்ளது.

தாய்மையும் சான்றாண்மையுமே — கட்டற்ற அன்பு அதாவது அருளே— மனித இன நாகரிகத்தின் கடைசிப்படி, கடைசித்தளமாகிய இனத்தளம்.

இனத்தளம் கூறும் இக்குறட்பா அறவாழ்வு கூறும் அதிகாரப் பகுதியின் இனவாழ்க்கை கூறு கூறி, முப்பால் வாழ்வும் வலியுறுத்தி, அடுத்த அதிகார இறுதிக் குறட்பாவுக்கு வாயில் செய்வது காணலாம்.

70. மரத்தின் பெருமை பழம் : பெற்றோரின் பெருமை பிள்ளை

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி 'இவன் தந்தை
என் நோற்றான் கொல்?' என்னும் சொல்'

பொ - ரை : *பிள்ளை தன் பெற்றோருக்குச் செய்யும் பெருமை யாவதெல்லாம், '(இத்தகைய சான்றாண்மையுடைய பிள்ளையைப் பெற, இவன் பெற்றோர் என்னென்ன தன்மறுப்புச் செயல்களில் பழகிப் பயின்றோர்களோ?' என்று (மற்றப் பெற்றோர்களும்*

பிள்ளைகளும் உலக மக்களும்) பேசிக் கொள்ளும் பொதுப் புகழ்ப் பேச்சு நிலையை உண்டு பண்ணுவது தான்!

க - ரை: இனப் பெருமையிலும் பெற்றோர் பெருமையிலும் பிள்ளை குளிர் காய்ந்தால் போதாது: தன் சான்றாண்மையால் பிள்ளை இனத்துக்குப் பெருமையும், பெற்றோர்க்குப் புதுப்புகழும் தரவேண்டும். இதுவே அவன் தன் பெற்றோரைப் பெற்றோராக்குவதற்குரிய பெருமை (இதைச் செய்யாவிடில், பெற்றோர் பெற்றோராகார், மலடரேயாவர்)

இலக். கு: இக்குறட்பா, கூற்றுவாசகம் ஒன்றை உறுப்பாகக் கொண்ட ஒரே வாசகம் ஆகும்: இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன:

1. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி (இது எழுவாய்)
2. 'இவன் தந்தை என் னோற்றான் கொல்?' என்னும் சொல் (இது பெயர்ப் பயனிலை; இதன் உள்ளுறுப்பாக 'இவன் தந்தை என்னோற்றான் கொல்?' என்ற வினாவாசகம் கூற்று வாக்கியமாக இடம் பெற்றது)

இக்குறட்பாவில் 'மகன் தந்தைக்கு', 'இவன் தந்தை', 'என் னோற்றான்' 'கொல் என்னும்' என்பவை நான்கும் காய்ச்சீர்கள். முதலிரண்டும் படுத்திசைத்து: முன்னசை நிரையாக நீண்டு, பின்னசைகள் குறுகி விரைந்து செல்கின்றன. என்னோற்றான் என்பதோ மூன்று நேரசைகளாய்: மூன்றும் படுப்பிசைப்பிலே நின்று நிமிர்ந்து மூவலைகள் போல இசைப்பன ஆகும். 'கொல் என்னும்' என்பதும் மூன்று நேரசையே. ஆனால் கொல் என்னும் முதலசை நிமிர்ந்து முரிந்து, நிமிர் அலைகளாகவே மேற் செல்கின்றன.

நேரசைச் சீரான கடைச்சீர் நீங்கலாக மற்ற சீர்களெல்லாம் மாச்சீர்கள். ஆனால் முதற்சீர் முதலாகச் சீர்கள் படிப்படியாக எற்றிசைப்பாகி, 'உதவி' என்ற சீர் நிமிர்ந்து எடுத்திசைத்தது. இது போலவே 'இவன் தந்தை' என்ற சீர் முதலாகச் சீர்கள படிப்படியாக ஏற்றிசைத்துச சென்று, 'சொல்' என்ற இறுதிச் சீசில் நிமிர்ந்து எடுத்திசைத்தது.

'கொல் என்னும் சொல்' என்ற கடைசி இரண்டு சீர்களிலும் வரும் சிரெதுகை திருக்குறளில் வழக்கமாக வாராத ஒன்று.

இவற்றின் குறிப்புப் பொருள் வளங்கள், தொனிவளங்கள் பொருள் வளப் பகுதிக்குரியன.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி என்பது இறுதிச் சொல் ஒப்ப, பெயர்ச்சொல். பின்வரும் நீள் தொகையை இது பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

உதவி என்ற பெயர், உதவு என்ற வினைப்பகுதியுடன் இகர விகுதி இணைந்த தொழிற் பெயரேயாகும். பகுதியீற்றுகரம் உயிர் முன் கெட்டது. உதவும் செயல் என்பதே பொருள். ஆற்றும் என்பது ஆற்று என்ற வினைப்பகுதியடியான வினை எச்சம். உம் இடைநிலை பெறாத எதிர்கால வினை எச்ச விகுதி. இது இங்கே காலப் பொதுமை குறித்து வந்தது. இப்பெயரெச்சம், அதன் வினைமையின் செயப்படு பொருளாகிய உதவி என்னும் பெயர் தழுவித் தொகைப்பட்டது.

தந்தைக்கு என்பதில் 'கு' நான்காம் வேற்றுமை உருபு. உருபின் ககரம் இரட்டிற்று. இவ்வேற்றுமைப் பொருள் ஆற்றும் என்பதன் வினைப்பகுதி தழுவித் தொகைப்பட்டது.

மகன் பெயர்ச் சொல், இது ஆற்றும் என்ற வினையெச்சத்தின் பகுதிக்கு எழுவாயாய் நின்று அதைத் தழுவித் தொகைப்பட்டது.

இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல் என்பது அதன் ஈற்றுச் சொல் ஒப்பப் பெயர்ச் சொல். இது முன் தொகையின் பெயர்ப் பயனிலையாயிற்று.

என்னும் சொல் என்பதில் சொல் என்பது முதனிலைத் தொழிற்பெயராய், சொல்லப்படும் சொல்லுக்கு ஆகுபெயராயிற்று. இதுவே குறட்பாவில் சொற்களாலான பேச்சு, பேச்சுருவான புகழுரை, அப்புகழுரையைத் தூண்டும் காரணமாகிய மகனின் வாழ்க்கைப் பண்பு ஆகியவற்றுக்கு ஆகிப் பன்மடி ஆகு பெயராயிற்று.

என்னும் என்பது 'உம்' ஈற்றுக் காலப் பொதுப் பெயரெச்சம். 'என்' என்பதே வினைப்பகுதி. இப்பெயரெச்சம் 'சொல்' என்ற பெயர் தழுவிற்று. 'என்' என்ற பகுதி கூற்றிணைப்பு வினையாதலால் 'இவன் தந்தை என் நோற்றான்' என்ற கூற்று வாசகத்தைச் சொல் என்ற பெயருடன் இணைத்தது.

'இவன் தந்தை என் நோற்றான்' என்பதும் 'சொல்' என்பதும் 'என்னும்' என்ற இணைப்பிசைச் சொல்லால் இணைக்கப்பட்ட ஒரு பொருள் குறித்த இருபெயரொட்டுகள்.

இவன் தந்தை என் நோற்றான் கொல் என்ற வினாக் கூற்று வாசகத்தில் கொல் வினா இடைச் சொல். 'நோற்றான்' என்பது வினைமுற்று. 'நோன்பு' என்ற பண்படியாக வந்த குறிப்பு வினை முற்றாகவோ, நோல் அல்லது நோன் என்ற வினைப்பகுதியடியான இறந்தகால வினைமுற்றாகவோ இதனைக் கொள்ளலாம். முன்னதாயின், 'பு' ஈறுகெட்டு, பண்படி நோன் அல்லது நோல் ஆக நின்றது என்று கொள்ளவேண்டும். 'ஆன்' ஆண்பால் விகுதி. இடைத் தகரம் குறிப்பு வினையாயின் பெயரிடை நிலை, தெரிநிலை வினையாயின் இறந்த கால இடைநிலை, லகரம் அல்லது னகரத்தின் பின் தகரம் வர, லகர தகரங்கள் அல்லது னகர தகரங்கள் இரண்டும் றகரங்கள் ஆகி இரட்டின.

என் என்பது வினாப்பெயர், இது நோற்றான் என்பதன் செயப்படு பொருளாய் வந்தது. எதை நோற்றான் என்ற பொருளில் 'என் நோற்றான்' என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

தந்தை என்பது கூற்று வாசகத்தின் எழுவாயாய், நோற்றான் கொல் என்ற வினா வினைமுற்றினைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

இவன் தந்தை என்பது இவனுடைய தந்தை என்று பொருள் படும் ஆறும் வேற்றுமைத்தொகை. இவன் என்பது இகரச் சுட்டடி யான ஆண்பாற் பெயர். அன் ஆண்பால் விகுதி. மற்றச் சுட்டுக்கள், எகரவினு ஆகியவற்றினடியாகப் பிறக்கும் பெயர்களோடொப்ப, இதுவும் வகர உடம்படுமெய் பெற்றது.

வி - ரை : அறவாழ்வின் மழைவளப் பயிர்ப்பண்பான மக்கட்பேறு முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையது என்பதைத் தனித்தனி முப்பால்களின் தொடர்புகளின் மூலம் இவ்வதிகாரத்தின் மூன் குறட்பாக்களில் விரித் துரைத்த திருவள்ளுவர் பெருமான், அதிகாரத்தின் இந்த இறுதிக் குறட்பாவில் அதன் முப்பால் முழுமைத் தொடர் பையும், முப்பால் முழுமை அகப்பாலாகிய வீட்டுப்பால் தொடர்பையும் விதந்தோதுகின்றார்.

மக்கட்பேறே இனப் பொருள்களின் அடிப்படை உயிர் மையமான மிகச் சிறந்த இனப் பொருள் என்பதை அதி காரத்தின் முதல் மூன்று குறட்பாக்களிலும்; அதுவே இன இன்பங்களில் அடிப்படை உயிர்மையமான இன இன்பம் என்பதனை அடுத்த மூன்று குறட்பாக்களிலும்; அதுவே முப் பால் வாழ்வுத் திட்டமாகிய அறத்தின் சிறந்த ஆக்க விதைப் பண்பு என்பதை அதிகாரத்தின் கடை மும்மைக் குறட்பாக் களிலும் விளக்கிய பின் ஆசிரியர் இக்குறட்பாவில் இம்மூன் றும் சேர்ந்த முழுவாழ்க்கை கடந்த பயன், முழு வாழ்க்கை யின் தவத்தின் உறுபயன், முப்பாற்பயன் கடந்த அப்பாற் பயனுகிய வீட்டுப்பாற்பயன் மக்கட்பேறே என்பதை வற் புறுத்தியுள்ளார்.

இக்குறட்பா அறவாழ்வுத் தொடர்பின் முப்பால் முத் தளப்பண்பு கூறும் குறட்பா மும்மையின் பின்வந்து, அவை சுட்டும் மலர்ச்சியின் எதிர் மலர்ச்சியும் மீ மலர்ச்சியும் குறிப் பதாகும். அம்மும்மையில் 'தந்தை மகனுக்கு ஆற்றும் நன்றி' என்ற முதற் குறட்பாச் செய்தியினை 'மகன் தந் தைக்கு ஆற்றும் உதவி' என்று திசைமாற்றியும்; இரண் டாவது குறட்பாவின் பொதுப்பாற் சுட்டாக்கிய 'மக்கள்'

என்பதனை ஆண்பால் உறு முனைப்பாக 'மகன்' என்று மாற்றியும்; மூன்றாவது குறட்பாவில் 'தாய்க்கு இன்பம்' என்பதனைத் 'தந்தைக்கு உதவி' என்று மாற்றியமைத்தும் இக்குறட்பா முப்பாலும் அகப்படுத்தி முழுப் பாலாகிய வீட்டுப்பால் சுட்டியது காணலாம்.

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி' என்பது 'பிள்ளை தன் பெற்றோருக்குச் செய்யும் பெருமை ஆவதெல்லாம்' என்னும் பொருள் உடையது ஆகும்.

மகன் என்ற தமிழ்ச் சொல் ஆண்பால் ஒருமையை மட்டும் குறிக்கும் சொல் அன்று. அதுவே பெருமையும் உரிமையும் சுட்டுவது. உலக ஆரிய மொழிகள் அனைத்திலும் பெருமை என்ற பொருளில் பரவிய இச்சொல் [சமஸ்கிருதம்: மஹத், மஹான்; கிரேக்கம்: மெகா; ஆங்கிலம்; மச், மிக்கிள்[1]; பாரசீகம்; மஜ்த்], வழங்கியுள்ளது. தமிழில் அதற்கு மனித இனம் என்ற பொருளும் இருப்பதைக் காண, இச்சொல்லின் வள்ளுவப் பொருளடிப்படையான முழு மலர்ச்சி தெள்ளத் தெளியப் புலனாவதாகும். மனிதன் இன உரிமையால் பெருமையுற்று பெருமையிற் பெருமைப் பண்பான கடவுளை (பாரசிகமொழி: அஹுரமஜ்த) நோக்கி மலர்ச்சியுறுவதை இத் தமிழ்ச்சொல் குறித்துக் காட்டுகிறது.

முந்திய குறட்பா முழுமையுடன் இக் குறட்பாவும் சேர்த்தே 'மகன்' என்ற இச் சொல்லின் முழுப் பொருளையும் முழு மலர்ச்சிப் பொருளையும் காண்டல் வேண்டும். நான்கு குறட்பாக்களிலும் மூன்று குறட்பாக்களில் வரும் மகன் என்பதன் பின்னணியாகப் பெண்பால் மகவும் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, நான்கில் இரண்டாவது குறட்பா மக்கள் என்ற பொதுப்பாற் சொல்லை வழங்கியுள்ளது. ஆனால் நான்கில் மூன்று மகன் என்றே கூறுவதனாலும், மகன் என்று தொடங்கி மகன் என்று மூன்றும் குறட்பா முடிந்து, மீண்டும் மகன் என்றே தொகுத்துச் சுட்டப்படுவதாலும். ஆண்பால் முனைப்பு உறு முனைப்புத் தாண்டி உறு பெரு

---

1. Much, Mickle

முனைப்புப்படக் கொள்ளப்பட வேண்டுமென்பது குறிக்கப் பட்டது.

பெண்ணே இனமென்ற மலையின் பெரும் பகுதியும்,அடிப் பகுதியும், மிகப் பரந்த பகுதியுமான அடி மலையாகுலும், ஆணே அதன் முகடு போன்றவன்.

குறட்பா மும்மையின் மலர்ச்சி முகடாகிய மகன் என்பது கொண்டே இக் குறட்பா தொடங்கி வீட்டுப்பால் சுட்டு கின்றது. இன வாழ்வில் பெண்; கற்புடைப் பெண், தாயே வில்லின் வளைகோடு போன்றவள்; தந்தை வளை கோட்டிற்கு வளைவிசை கொடுக்கும் நாண் போன்றவன். இரு பால் மக்களே அந்த விசையை இனத்தின் எதிர்காலமாகிய வானில் இலக்கு நோக்கிக் கொண்டு செல்லும் அம்பு போன்ற வர்கள். அவ்வம்பிலும் பெண் மகள் அம்பின் காம்பு போன் றவள், ஆண் மகனே அம்பு முனை போன்றவன்.

இக் கருத்தே பிற்காலத்தில்—வள்ளுவப் பண்பு உலகில் இடை ஒய்வுத் துயில் கொண்ட இடையிருட் காலத்தில்—பிள்ளைப் பேற்றிலும் ஆண் மகப்பேறே வீடு தருவது என் னும் இடையிருட்காலச் சுமிருதி புராணக் கருத்துக்குக் கருமூல விதையாய் உதவிற்று என்னலாம்.

மந்திரம் பேராற்றலுடையது — தவருக ஒலித்துவிட் டால் அதன் கேடும் பேராற்றலுடையது என்பர். திருக்குற ளின் குறட்பா மந்திரங்கள் ஐந்து கண்டங்களிலும் ஐந்து மாகடல்களிலும் மூவாயிர நாலாயிரம் ஆண்டுகட்கு மேலாகப் பரவி மனித இன நாகரிகத்தையே வளர்த் துள்ளன — ஆனல் இவ்வதிகாரத்தின் இக்குறட்பாவும், முந்திய அதிகாரத்தின் ஐந்தாம் குறட்பாவும் போன்ற மந்திரங்கள் தவருக உணரப்பட்டபோதும், இடையிருட் காலத்தின் நிழற்பண்புகளை உலகெங்கும் வளர்த்துள்ளது காணலாம்.

தந்தைக்கு என்ற சொல் இங்கே தந்தையை முனைப் பாகவும், தாயைப் பின்னணியாகவும் குறிப்பது ஆகும். பெற்ருேர் சார்பு முந்திய குறட்பாவில் தாய் முனைப்பாக

36

வந்ததே இதைத் தொனிப்படுத்திக் காட்டும். ஆயினும் பெற்ருேர் சார்பின் மலர்ச்சி முகடாக்த் தாய் முன் குறட் பாவிற் கூறப்பட்டபின், இங்கே தந்தை மீண்டும் குறிக்கப் பட்டதற்கு காரணம் உண்டு.

ஒரு தலை முறையின் தந்தை முந்திய தலைமுறையின் மகனேயாவன். அதுபோல, ஒரு தலைமுறை மகன் அடுத்த தலைமுறையின் தந்தையே. இன வளர்ச்சியை ஆக்குபவன் மகன், அதை ஊக்குபவள் தாய்: ஆனால் அதற்குப் பொறுப்பு வகிப்பவன் முந்திய தலைமுறையின் மகனுகிய தந்தையே.

கற்புடை மனைவியாகிய தாய் வணங்கும் தெய்வம் தந்தை என்பதும் இங்கே கருத்தில் கொள்ளத்தக்கது. வணக்கத்தால் ஊக்கப்பட்ட தந்தை வாழ்வாங்கு வாழ்ந்து 'வானுறையும்' தெய்வம் ஆகிருன். தாயால் ஊக்கப்பட்ட மகன் அத்தந்தை வழி நின்ற சான்ருேன் அல்லது 'நிலனுறையும்' தெய்வம் ஆகிருன். இம்மலர்ச்சியைச் சுட்டவே இக்குறட்பாவில் பெற்ருேர் சார்பு மீண்டும் தந்தையாகக் குறிக்கப்பட்டது.

ஆற்றும் உதவி என்பது 'செய்யும் பெருமையாவதெல்லாம்' என்பதாகும்.

ஆற்றுதல் செய்தல். ஆறு, அறு, அறம் ஆகிய சொற்களின் தொடர்பால் இச்சொல் வரையறுத்து ஒழுங்குபடுத்தித் திட்டமிட்டுச் செய்தல், இனக் குறிக்கோளின்படி ஆற்றுப்படுத்திச் செய்தல் என்ற பொருளுடையது என்பது முந்திய முன்னுரைகளிலும் உரைகளிலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் முந்திய குறட்பாவில் தந்தை மகனுக்கு ஆற்றுதலும், இக்குறட்பாவால் மகன் தந்தைக்கு ஆற்றுதலும் குறிக்கப் பட்டு, ஆற்றுதல் தொழிலின் செயல் திசை மாற்றம் பெற்றுள்ளது.

காரணம், காரியம் ஆகிய இரண்டும் ஆற்ஞெழுங்குத் தொடர்புடையது. ஆனல் இந்த இரண்டில் காரணம் முந்தியது, காரியம் பிந்தியது என்று மேலீடாகப் பலரும் எண்ணுவர். மலர்ச்சியின் காலக் கணிப்பு முறையில் இது

சரியே — ஆயினும் மெய்ம்மையில் இது அரைகுறை உண்மை ஆகும். ஏனெனில் தத்துவ முறையில் காரணம் ஆகிய விதையிலேயே காரியம் ஆகிய மரத்தின் ஆக்க முழுவதும் கரு நிலையில் அடங்கியுள்ளது. தவிர அவ்விதை மற்றொரு மரத்தின் விளைவேயாகும். காண காரியங்கள் இவ்வாறு ஒன்றையொன்று தொடரும் இருதிசை மலர்ச்சிகளே.

மனித இனமொழியில் இதே மெய்ம்மையினை நாம் இன்னொரு வகையாகக் காணலாம்.

காரணம், காரியம் என்ற சொற்கள் கண்கூடாகக் காணப்படும் புறநிலை நிகழ்ச்சிகளைக் குறித்து வழங்கப் படுவன ஆகும். இவற்றையே அகநிலைப் பண்புகளாகக் கொள்ளும்போது காரியம் முந்திவிடுகிறது, காரணம் பிந்தி விடுகிறது. ஏனெனில் காரியத்தை நாம் அச்சமயம் நோக்கு, குறியிலக்கு என்றும்; காரணத்தை அதன் செயல் நிறை வேற்றம் என்றும் கூறுகிறோம்.

முந்திய குறட்பாவில் 'ஆற்றும் நன்றி' என்ற சொல் காரணத்திலிருந்து காரியத்துக்குச் செல்லும் போக்கையும், இக்குறட்பாவில் ஆற்றும் உதவி என்பது காரியத்திலிருந்து காரணத்துக்குச் செல்லும் போக்கையும் குறித்தது காணலாம். நன்றி, உதவி என்ற பின்வரு சொல் வேறுபாடுகள் இத்தகைய மாறுபாட்டின் விளைவையும் தன்மையையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

உதவி என்பது துணையான செயல் என்ற பொருளையே பொது வழக்கில் குறிப்பிடுகிறது. இது போலவே நன்றி என்ற சொல்லும் இன்றைய பொது வழக்கில் செய்த நன்மைச் செயலுக்கு எதிராகக் காட்டப்படும் நல்லுணர்வு என்ற பொருளிலேயே வழங்குகிறது. இந்த இரு பொருள்களும் திருவள்ளுவர் அறியாதவையல்ல, அவரே இப்பொருள்களில் இரண்டையும் வழங்கியுள்ளார். ஆயினும் இச்சொற்களின் முற்பட்ட தமிழ்ப் பொருள்கள், வள்ளுவப் பொருள்கள், திருவள்ளுவர் அடிக்கடி வழங்கும் தத்துவப் பொருள்கள் இவையல்ல. நன்றி என்பதை அவர் நல்ல செயல், இன நலமான செயல் என்றே தொல் மூலப் பொருள்

களிலே பயன்படுத்துகிறார். அச்செயலுக்குரிய உணர்வே போல, அச் செயலுக்கு எதிர்வான செயலுணர்வும் உணர்வுச் செயலும் அதே சொல்லில் தொனிக்கின்றன. ஆனால் உதவி முன் செய்த நன்றிக்கு எதிராகச் செய்யப்படாத, பயன் நோக்காத, பிறர் செய்வதினும் மிக்கதாக செய்யப் பட்ட மேம்பட்ட செயலுக்கே திருவள்ளுவரால் சிறப்புப்பட வழங்கப்படுகிறது (101, 103, 105).

உதவி என்ற சொல் உகரச்சுட்டுடன் தொடர்புடைய சொல் ஆகும். அகர இகரங்கள் தொலைவு அணிமைகளை உணர்த்தும். உகரம் தொலைவு அணிமை வேறுபாடற்ற எல்லா நிலைகளையும் — மேலே, பின்னால், உள்ளே, எங்கும், புறநிலை கடந்த அகநிலை ஆகிய சுட்டுத் தொனிகளை உடையது.

இக்குறட்பாவில் உதவி என்ற சொல் முன் குறட்பாவில் வந்த நன்றி என்பதனின்றும் வேறுபடுத்தப்பட்ட பொருளைச் சுட்டுவது. அது தந்தை ஆற்றிய நன்றி, அதாவது முந்தி யிருப்பச் செயல், முந்தியிருப்பதற்குரிய தகுதி அளிப்புக்கு மேம்பட, தந்தைக்கு மகன் வட்டி முதல்களுக்கு மேற்பட, பெருக்கமாக அளிக்கும் புதுப்புகழ் ஆகும். பெருமை என்று இம்மணி விளக்கவுரையில் இது பொருள் கூறப் பட்டது இதனாலேயே.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இக்குறட்பா வாசகம் கூற வந்த பண்பு. பின் வரும் சொல் என முடியும் தொகையே அப்பண்பு. ஆனால் இயல்புபடப் பண்பு எழுவாயாகக் கூறப்படாமல், பண்பே எழுவாயாக்கப்பட்ட தனால், மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி என்பது, மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியாவதெல்லாம் என்ற பொருள் தந்தது.

இவன் தந்தை என்நோற்றான் கொல் என்னும் சொல் என்பது (இத்தகைய பிள்ளையைப் பெற்றெடுக்க) இவன் பெற்றோர் என்னென்ன தன் மறுப்புச் செயல்களில் பழகிப் பயின் றார்களோ? என்று (மற்றப் பெற்றோர்களும்), பிள்ளைகளும்

உலக மக்களும்) பேசிக் கொள்ளும் பொதுப் புகழ்ப் பேச்சு நிலையை உண்டு பண்ணுவது தான்' என்று பொருள் படுவது ஆகும்.

இவன் தந்தை என்பது இவனுடைய தந்தை என்று பொருள்படும். இவன் என்பது மகனையே சுட்டு முதலாகக் கொண்டது. இவன் என்பதில் 'இகரம்' அணிமைச் சுட்டு. மகளின் சால்பும் மேம்பாடும் கண்டு வியந்த அயலவர்கள் கூற்றாக இவ்வாசகம் வருவதால், மகன் இங்கே அணிமைச் சுட்டாக 'இவன்' என்று அழைக்கப்படுகிறான், இச் சுட்டே இத்தகையவன், இவ்வளவு தகுதியுடையவன் என்ற ஆர்வப் புகழ் மதிப்பையும் தொனிப்படுத்திக் காட்டுதல் காணலாம்.

முன்பு ஏதோ ஒரு மகன், ஏதோ ஒரு தந்தை போல, ஏதிலாராக மகன் தந்தைக்கு என்று கூறப்பட்டது. அதே தந்தை இங்கே இவனுடைய தந்தை எனப் பெருமைப்படக் கூறப்பட்டது. முன்பு வாளா மகன் என்று பொதுச் சுட்டாகத் தொடங்கியது இங்கே இவன் எனத் தனி அணிமைச் சுட்டாயிற்று. மகன் நல்வாழ்வால் அவன் சமுதாயத்திலும் இனத்திலும் வேரூன்றிக் குறிப்பிடத் தக்கவனாய் விட்ட நிலையையும், இதனால் தந்தையும் இவனுரிமையால் தனிச் சுட்டுப் பெற்ற நிலையையும் இவன் தந்தை என்ற சொல் படம் பிடித்துக் காட்டுகிறது.

இவன் என்ற குறிப்பால் இங்கே அயலவர்களிடையே மற்றப்பிள்ளைகளும், தந்தை என்ற குறிப்பால் பிற பெற்றோர்களும், இவன் தந்தை என்ற குறிப்பால் பிற உலக மக்களும் கொள்ளத் தக்கவர்கள் ஆகின்றனர்.

நோற்றல் தவத்துக்கான பயிற்சி. தவம் என்பது தியாகம். இதனால் என் நோற்றான் கொல் என்பது 'என்னென்ன தன் மறுப்புச் செயல்களில் பழகிப் பயின்றானோ என்னும் பொருள் தந்தது.

என் என்பது எடுப்பிசைப்பாலேயே என்னென்ன என்னும் குறிப்பையும், கொல் என்ற வினாவிடைச் சொல்லால்

பாராட்டும் வியப்பும் கொண்டு கேட்பர் என்னும் குறிப்பையும் பெற்ருேம்.

என்னல் என்பதை இலக்கணக் குறிப்புரையில் கொண்டதுபோல் இடைச் சொல்லாகவும் கொள்ளலாம், அயலவர்களும், மற்றப் பிள்ளைகளும் பெற்ருேர்களும் உலக மக்களும் என்பதையே தோன்ரு எழுவாயாகக் கொண்டு அவர்கள் கூறும் என்றும் பொருள் கூறலாம். பின்னதே சிறப்பு.

சொல் இங்கே புகழ், புகழ் உண்டு பண்ணுவதற்குக் காரணமான வாழ்க்கைப் பண்பு குறித்தது.

சொல் என்ற எடுப்பிசைப்பாலும், கொல் என்றும் சொல் என்ற எதுகை நயத்தாலும், சொல் சமுதாயப் புகழ் மட்டுமேயன்றி, இனத்தில் நிலையான புகழும் சுட்டிற்று.

'உதவியாவதெல்லாம் சொல்' என்று முடிந்ததனுல் தந்தை வாழ்வின் தவ முழுவதும் இம்மகன் புகழ் ஆதற்குரிய உழைப்பு என்றும், இது உதவியாதலின் அவ்வுழைப்பிற்கு மிகையான ஊதியமாயிற்று என்றும், தொனிகள் தோற்றுவிக்கப்பட்டன.

சிறப்புரை: ஒருவன் சான்ருேன் ஆகி, தன் சால்பு மூலம் தானே இன வாழ்வில் வளம் பெருக்கினுல், அவன் இனப்புகழ் அடைவான். ஆனுல் இது இனப் பெருமை ஆகாது. இனப்பெருமை மகப்பேற்ருல் மட்டுமே வரக்கூடியது ஆகும். அவன் தன் மகனைத் தாய்வழி நின்று ஊக்கி இயக்கி, அவனைச் சான்ருேன் ஆக்கி, அச்சால்பு மூலம் அம்மகன் இனவாழ்வில் வளம் பெருக்கும் வாய்ப்பினைப் பெற்ருல், அப்போதுதான் அவன் உண்மையான மகப் பேற்றுவளம் பெற்றவனுவன், உண்மையான இனப்பெருமை பெற்றவன் ஆவான். மகப் பேற்றின் மூலம் அவன் பெறும் இந்த இனப் பெருமை அவன் முழுவாழ்க்கைப்பயன் என்று மட்டும் கூறுவதற்கில்லை. ஏனெனில் இது அவன் நேரடிப் பெருமை கடந்து மகனுல் வருவது. இது முழுவாழ்க்கைப் பயனுக்கு மேன்

மிசையாகக் கிட்டும் புதுப் புகழ் ஆகும். தந்தைக்கு இப் பெருமை அளிக்கும் மகனே மகனுவான், மகன் என்ற சொல்லின் (பெரியோன் என்ற பொருளுக்கு உரியவர்) ஆவான்.

பிள்ளையின் இனச்சால்பு வளம் தாய்க்குப் பேரின்பம் அளிப்பது மட்டுமன்று, தந்தைக்குப் புதுப்புகழ்ப் பெருமை அளிப்பதும் ஆகும்.

பொருள்வளம்: (1) ஆற்றும் என்ற சொல் ஆற்றுவமையை நினைவூட்டுவது என்பதை இம்மணி விளக்கவுரை பலகால் எடுத்துக் கூறியுள்ளது.

காவிரி போன்ற ஆறுகள் ஆடுதாண்டும் ஓடையாக மலைப்பகுதியில் தொடங்கி, நாவாய்த் துறைகளையுடையதாய்க் கடலுடன் பொருதும் கடலாக விரிவுறுவன.

மகன் தந்தைக் காற்றும் உதவியாகிய பெருமை மூலம் இனம் இத்தகைய காவிரியாறு போல், மாக்கள் பண்பினின்று மக்கட் பண்பாய், கடவுட் பண்பாய், கடவுட் பண்பு நோக்கி விரிவுற்றுக் கடவுட் பண்பில் கலக்கின்றது என்ற கருத்தை ஆற்றும் என்ற இச் சொல் இக்குறட்பாவிலும் முந்திய (67) குறட்பாவிலும் சுட்டுகின்றது.

இக்குறட்பாவின் ஓசையும் இதே கருத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஏனெனில் மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி என்ற முதல் மூன்று சீர்களும், அது போலவே ‘இவன் தந்தை என் நோற்றான் கொல் என்னும் சொல்’ என்ற அடுத்த நான்கு சீர்களும் படிப்படியாக ஏற்றிசைப்பாகி, முறையே இன

வளர்ச்சியையும், குடிக்கால் வழியின் புகழ் வளர்ச்சி யையும் தொனிப்படமாகக் காட்டின.

(2) காய்ச்சீர்களாக வரும் நான்கில், மகன் தந்தைக்கு, இவன் தந்தை என்ற முதல் இரண்டும் நிரையசைவுடன் தொடங்கி நீண்டுபடுத்திசைத்து, தந்தை புகழ் கடந்து மகன் மேன்மிகைப் பெருமை தருதலின் கடுமுயற்சி, அருமைப்பாடு ஆகியவற்றையும்; இம்மேன்மிகை சிறிதளவானால் கூட, தந்தை 'இவன் தந்தை' எனப் பெறும் பெருமை பேரளவாகும் என்பதனையும் சுட்டின. 'என் நோற்றான்' 'கொல் என்னும்' ஆகிய காய்ச்சீர்களில் மூன்று நேரசைகள் நிமிர்ந்து வந்தனால், அவை இப்புகழ்ப் பாராட்டு உலகில் அலையலையாய்ப்பரவி அப்பண்பு வளர்த்தல் குறித்தன. இவற்றுள் முந்திய சீர் முற்றும் நிமிர்ந்து நின்றிசைத்ததும்; 'கொல்' நிமிர்ந்து நின்று முரிந்து நிமிர் அலைகளாகப் பரவியதும்; அது தன் தாய் முதற்சொல்லினின்று பிரிந்திசைத்ததும்; 'சொல் தனி நின்று நிமிர்ந்திசைத்ததும், பாராட்டுவோர் வியப்பு மலைப்புக்களைத் தொனிப்படமாகக் காட்டின.

சொல் நிமிர்ந்திசைத்தனாலும், பண்படியாகுபெயராய் வந்தனாலும், இப்புகழ் இனத்தில் ஒன்று பத்து நூறாக வளரும் பொங்குமாவளம் உடையது என்பது பெறப்பட்டது.

கொல் என்னும் சொல் என்ற இறுதி இரு சீர்களின் எதுகை திருக்குறளில் மிகுதி வழங்காத ஒன்று.

வியப்பொடு கலந்த ஆர்வப் பாராட்டு வழிபாட்டின் தன்மையுடையது, கடவுட் பண்பலை பரப்புவது

என்பதை நினைவூட்ட இச்சிறப்பு வழக்குப் பயன் பட்டது.

(3) மகன் தந்தைக்கு என்ற சீருக்கு இவன் தந்தை என்பது எதிரிணையானது. இரண்டிலும் மகனும் தந்தையும் ஒரு சீருக்குள் அடைத்து நெருக்கிக் கூறப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மகன் மலர்ச்சி கடந்து மீட்டும் மகனும் தாய் மலர்ச்சி கடந்து தந்தையும் கூறப்பட்டதன் காரணம், மகன் மலர்ச்சியே தந்தை மலர்ச்சி என்பது குறிக்கவே யாகும். ஒருதலை முறைத் தந்தை முன் தலைமுறை மகனேயாவன். ஒரு தலைமுறை மகன் பின் தலை முறைத் தந்தையே யாவன். இதனால் மகன் மலர்ச்சி என்பது இனமரபில் மகன் - தந்தை - மகன் எனச் செல்லும் ஒரு தொடர் சங்கிலி மலர்ச்சியே யாகும்.

மகனும் தந்தையும் இரு சீர்களிலும் ஒரு சீருக்குள் அடைத்து நெருக்கப்பட்டுள்ளமை சுட்டும் பொருள் வளம் இதுவே.

ஆனால் மகன் தந்தைக்கு என்ற சீரில் மகன், தந்தை ஆகிய இரு சொற்களும் பின்வரும் ஆற்றும் என்ற வினையுடன் முடியும் தொடர்பன்றி, தமக்குள் தொடர்பற்ற ஏதிலாச் சொற்கள் ஆகும். இவன் தந்தை என்பதோ இவனுடைய தந்தை என்று பொருள்பட்டு நேரடியான தொடர்புடையது. பெற்றதனால் மட்டும் மகனும் தந்தையும் மகன்மை தந்தைமை உறவுடையவராகார்; பெற்றவருக்குப் பெருமை அளிக்கும் மகனே மகன் — அத்தகைய மகனைப் பெற்றவனே பெற்றவன், மற்றவர் பெற்றவர் ஆகார் என்பது இதனால் சுட்டப்பட்டது.

அத்துடன் மகன் தந்தை என்ற சொற்கள் பொதுச் சொற்கள். இவன் தந்தை என்பதில் இரண்டும் சிறப்புச் சொற்கள். பெருமை ஆற்றும் மகனே மகன்மை உடையவன், அதாவது பெருமை உடையவன் — அத்தகைய மகனைப் பெறும் பெற்றோரே பெற்றோர் ஆவர் என்பதை இதுவும் வலியுறுத்துகிறது.

மகன் தந்தை என்பதில் தந்தை என்ற சொல்லை விட, இவன் தந்தை என்றவிடத்துத் தந்தை என்ற சொல் உயர்ந்திசைத்து, சிறப்பு மேலும் வற்புறுத்தப் படுகிறது.

(4) மகன் என்ற சொல் புதல்வன், உரிமை, பெருமை, மனித இனம் ஆகிய பொருள்களுடையது என்பது இம்மணி விளக்கவுரையில் முன்பே கூறப் பட்டுள்ளது. இன வாழ்வு வளர்ச்சியில் மகனே ஈட்டி முனை, தலைமுறை தோறும் இன அலைமுகடு அவனே என்பதை இக்குறட்பா அச்சொல்லுடன் தொடங்கியுள்ளமை குறித்துக் காட்டுகிறது. மகன் தந்தையின் இனவாழ்வால் மட்டும் இனம் பெருக்குபவன் அல்லன். தந்தையின் இனத்துக்கு முப்பால் முழுப்பால் கடந்த அப்பாலைப்பாலாகிய அகப்பால் அல்லது வீட்டுப்பால் அளிப்பவன் அவனே. இத்திருவள்ளுவக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே. இடையிருட் காலச் சுமிருதபுராண மரபுகள் தந்தைக்கு ஆண் மகவு பிறந்தால் தான் தந்தை 'புத்' என்னும் நரகம் நீங்கி வீடுபேறு அடைவான் என்னும் கருத்தைத் தோற்றுவித்துள்ளன என்பது மேலே விளக்கவுரையில் கூறப்பட்டது.

தனிக் குறிப்புக்கள் : (1) '**ஆற்றும் உதவி**' என்பதற்குப் பரிமேலழகர் 'செய்யப்படும் கைம்மாறு' என்று உரை செய்தார். 'உதவி', 'கைம்மாறு', 'உபகாரம்' என்றனர் பிறரும். இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடு 'தர்மம்' என்றும்; ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும், எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையும் எதிரீடு[1] என்றும், ட்ரூ 'நலம்'[2] என்றும் பொருள் கொண்டனர். இதற்கேற்பத் 'தந்தைக்கு' என்பதனைக் 'கல்வியறிவுடைவனாக்கிய தந்தைக்கு' என்று பரிமேலழகரும்; 'மற்று இங்ஙனம் தன்னைக் கல்வியாலும் மற்ற அறிவுடைமையாலும் உணர்வுடையவனாகச் செய்த தந்தைக்கு' என்று காலிங்கரும் வருவித்துக் கொண்டனர்.

இக் குறட்பாவின் 'உதவி' என்பதற்கும் முந்திய (67) குறட்பாவின் 'நன்றி' என்பதற்கும் இடையே உரையாசிரியர்கள் எத்தகைய வேறுபாடும் காணவில்லை என்பது தெளிவு.

(2) 'என்னும் சொல்' என்றவிடத்தில் என்னும் என்ற வினைக்குத் தோன்றா வினைமுதல் எழுவாயாகப் பரிமேலழகர் 'தன் அறிவும் ஒழுக்கமும் கண்டவர்' என்றும்; காலிங்கர், மன்க்குடவர் 'உலகத்தார்' என்றும்; பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார் 'பிறர்' என்றும்; கவிஞர் இராமலிங்கனார் 'ஊரார்' எனறும்; புலவர் குழந்தை 'அறிவுடையோர்' என்றும் வருவித்துள்ளனர். 'என்னும் சொல்' என்பதற்குப் பரிமேலழகர் 'என்று சோல்லும் சொல்லை நிகழ்த்துதல்' எனறே உரை தந்து. 'சொல் நிகழ்த்துதலாகிய தன காரணம் தோன்ற நின்றது' என்று இலக்கண விளக்கமும் அளித்தார். 'நிகழ்த்துதல், அங்ஙனம் சொல்ல ஒழுகல்' என்றும் அவர் விரிததார். 'என்று சொல்லும் சொல்லைப் படைத்தல்' என்று மணக்குடவரும்; 'என்று சொல்லும் படியாக அறிவுடையனாதல்' என்று பரிதியாரும்; 'என்று ஏத்தியெடுத்து உரைக்கும் சொல்' என்று காலிங்கரும்; 'என்கின்ற சொல்லை உண்டாக்குதல்' என்று புலவர் ந. சி.

---

1. Recompense 2. Benefit

கந்தையாவும்; 'என்று புகழ்ந்து சொல்லும் சொல்' என்று பேராசிரியர் மு. வரதராசனாரும் இது போன்றே பிறரும் உரை செய்துள்ளனர்.

(3) 'இதனாற்புதல்வர் கடன் கூறப்பட்டது' என்று பரிமேலழகரும்; 'இது, நெறியின் ஒழுகுவாரை உலகத்தார் பகழ்வார் ஆதலான், மகனும் ஒழுக்கமுடையவனாக வேண்டும் என்றது' என்று மணக்குடவரும் கருத்துரை வழங்கினர்.

'இந்தப் புகழ் தந்தைக்கு மட்டுமல்ல, தாய்க்கும் சேரும்' என்று கவிஞர் இராமலிங்கனாரும்; 'முன் தாய் பெரிதுவக்கும் என்றார், இதில் தந்தை என் நோற்றான் கொல் என்றார். அவையத்து முந்தியிருப்பச் செய்தமைக்குச் செய்த உதவி (எதிர் உதவி) இது' என்று புலவர் குழந்தையும் விளக்கம் தந்தனர்.

(4) 'நோற்றல்' என்பதற்கு 'தவம் செய்தல்' என்றே எல்லா உரையாசிரியரும் பிறரும் கூறினர். 'தவம் வானுலக இன்பம் தரும்' என்ற வேதக் கருத்தையும்; 'மறுபிறப்பில் செல்வம் தரும்' எனற புராணக் கருத்தையும்; 'வீடுதரும்' என்ற உபநிடத வேதாந்தக் கருத்தையும் இடையிருட் காலத்தார் யாவரும் பலவேறு படிகளில் ஒன்றாகக் குழப்பி மயக்க மடைந்துள்ளனர் என்பது காணலாம்.

புலவர் குழந்தை 'நோற்றல்' என்பதற்குச் செய்தல் என்று கூறியமைந்தனர்.

நோற்றல் என்பது பிள்ளையைப் பெறுவதற்காக முன்னே செய்திருக்க வேண்டும் தவம் எனறே உரையாசிரியர்கள் கருதினர். ஆனால் இம்மணி விளக்கவுரை நோற்றல் என்பது தன் மறுப்புடன் கூடிய கடுமுயற்சி என்றும்; அது செய்வது பிள்ளையைப் பெறுவதில் அன்று, பெற்று வளர்ப்பதில் தொடர்ந்து செய்யப்படுவது என்றும் கூறியுள்ளது காணலாம்.

★

அதிகாரம் 8 அன்புடைமையின் சால்பு

அறத்துப்பாலின் முதல் நான்கு அதிகாரங்களும் அதன் பாயிரப் பகுதிகள் என்ற முறையில், முதல் அதிகாரமான இல்வாழ்க்கைச் சிறப்பு அதன் கடவுள் வாழ்த்து அதிகாரமாகவும்; இரண்டாவது அதிகாரமான வாழ்க்கைத் துணை நலம் அதன் வான் சிறப்பு அதிகாரமாகவும்; மூன்றும் அதிகாரமான மக்கட் பேறு அதன் ஒழுக்கத்து நீத்தார் பெருமை அதிகாரமாகவும் விளங்குவதுபோல, அன்புடைமையின் சால்பு என்ற இந்நான்காம் அதிகாரம் அதன் அறன் வலியுறுத்தல் அதிகாரமாக இயங்குகின்றது.

அறத்துப்பாலின் அறப்பாற் பகுதிக்குரிய பாயிரமென்ற முறையில், இது அறத்துக்கு அறமாகிய அன்புடைமையை விதந்தோதுகின்றது.

திருவள்ளுவரின் அறத்துக்கும் அன்புடைமைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு அறத்துப்பால் முன்னுரையிலேயே விளக்கப்பட்டுள்ளது. அதன்படி, அறம் உடலானால், அதை உள்நின்று இயக்கி வளர்த்து மலர்ச்சியடையச் செய்யும் உயிர்ப் பண்பு — நிலைப்பண்பான அதனை இயக்கப் பண்பாக்கும் உயிர்த்துடிப்புப் பண்பு — அன்புடைமையே யாகும். அவ் அன்புடைமை இன்ப வாழ்வாகிய நிலத்தில் காதல் என்னும் வேரோடவிட்டு, பாசப் பயிராக வானோங்கி வளர்ந்து, பண்புக்கிளை பரப்பி, சால்புத் தளிர் விட்டு, அருள் மலர்பூத்து, எல்லையற்ற பேரின்பமாகிய காழில் கனிதரும் கற்பக தருவாக இயல்வது என்னலாம்.

தொல் பழங்கால மனித இனம், திருவள்ளுவர் காலத்துக்கு முன்னிருந்தே, அறத்தை ஊழின் இயற்கை ஆற்ற

னாக, மீறுபவரை அழித்துவிடும் தெய்வ ஆற்றலாகக் கருதி வந்துள்ளது. மனித நாகரிகம் வளர வளர, இந்த ஆற்றல் குருட்டு ஆற்றலாகக் கருதப்படாமல், மாறு மெய்ம்மை அடிப்படையான நீதி நேர்மையாக[1] உயர்வுற்றது. ஆனால் இந்த இரண்டாம் படியிலும் அது நிலையாற்றலே, இயக்க ஆற்றல் அல்லது வளரும் ஆற்றலன்று. இந்த இருதளக் கருத்துக்களின் தடங்களை நாம் உலகின் தொல்பழங்காலச் சமயங்களிலும், தமிழ் மொழியின் வழக்காற்று மரபிலும் காணலாம். திருவள்ளுவர் கூட இப்பழம் பொருளில் இச்சொல்லைப் பல குறட்பாக்களில் (77, 204, 366) வழங்கியுள்ளார். ஏனெனில் திருவள்ளுவர் அறக்கோட்பாட்டில் இக்கருத்து ஒரு கூறாக, அடிப்படைக் கூறாக இயங்குகிறது. அதே சமயம் திருவள்ளுவரின் அறம். இந்த இரண்டு நாகரிகத் தளங்களையும் தாண்டி, ஒரு மூன்றாவது தளத்திற்கு மனித இனத்தைக் கொண்டு சென்றுள்ளது — மனித இன நாகரிகத்தை அத்தளத்திலேயே மேன்மேலும் கொண்டு சென்று மலர்ச்சிப் பண்பூட்டி வருகிறது.

திருவள்ளுவரின் அறம் சிறப்பாக இம்மூன்றாவது தளத்துக்குரிய அறம்; அதனை நாம் அறத்தின் அன்புடைமைத் தளம் என்னலாம். இத்தளத்தில் அறம் ஒரு நிலைப்பண்பன்று; ஓர் இயக்கப் பண்பு, வளரும் மலர்ச்சிப் பண்பு. அது இயற்கை ஆற்றல்களோடொத்த ஓர் இயற்கை ஆற்றல் மட்டுமன்று; அது இயற்கை ஆற்றலைச் சட்டமாகக் கொண்டு, அதனடிப்படையில் எழுப்பி உருவாக்கப்பட்டு மலர்ச்சியடையும், மலர்ச்சியடைந்து வரும், இடையறா இயக்கவளமுடைய ஓர் இன வாழ்வுப் பண்பு ஆகும். இயற்கை ஆற்றல்களுக்கு அழிவும் உண்டு, ஆக்கமும் உண்டு. அவை மாறிமாறி வரும் ஒரே மாறாப் பண்பின் இருதிசைகள். உலகின் தொல்பழமை அறம் இவ்வகைப்பட்டதோர் நிலைப்பண்பே யாகும். ஆனால் திருவள்ளுவரின் மூன்றாம் தளத்துக்குரிய அன்புடைமை அறம் மாறாப் பண்பன்று, இடையறா இயக்கப் பண்பு — அது ஆக்கப் பண்பு, அழிவையும் ஆக்கமாக மாற்

1. Justice

றிக் கொண்டே சென்று, அழிவாற்றல்களையே ஆக்க ஆற்றலாகச் செய்துவிடும் தன்மை வாய்ந்த பொன்மாற்றுச் சித்தாற்றல், ஆக்க மலர்ச்சியாற்றல் ஆகும். இடம் பெயரா இருகரைகளினூடாக, படுகை ஊடறுத்துக் கரைத்துக் கொண்டு, வரவர விரிவுற்றுப் பெரிதாகி வளம் பல பெருக்கிக் கொண்டு மா கடலை நோக்கி ஓடும் ஆறுபோல, அன்புடைமை அறமும் இயற்கையாற்றல், மாறா நீதி நேர்மை ஆகிய இரு கரைகளினூடாக, இன வாழ்வு என்னும் படுகை ஊடறுத்து வாழ்வின் பொங்கல் நிறைவளம் நோக்கி ஓடிக்கொண்டே இருக்கிறது.

திருவள்ளுவரின் அன்பறக்கோட்டை கொத்தளங்கள்

உலகின் அறநூல்களுள்ளே திருவள்ளுவர் திருக்குறளில் கண்ட அறத்துக்கு ஒரு தனி இடமும் தனிப்பண்பும் உண்டானால், அது அவர் அறத்தோடு அன்புடைமைக்கு ஏற்படுத்தியுள்ள இந்த இரண்டற்ற, இணைபிரிக்க முடியாத பிணைப்புப் பண்பேயாகும். மனித இன நாகரிகம் பல அறவோர்களையும் பல அறநூல்களையும் கண்டுள்ளதானாலும், திருவள்ளுவர் அறக்கோட்பாட்டையே நாகரிக உலகும் பின்பற்றி வருவதையும், அறவோர் கருத்துக்கள் கூட அறவோர் பெரிதும் அறியாமலே அதனை அடி ஒற்றியே நடைபோட்டு வளர்ந்து வருவதையும் காணலாம்.

திருவள்ளுவர் தம் அறக்கோட்பாட்டின் விளக்கத்துக்கு அறன் வலியுறுத்தல் அதிகாரத்திலேயே வகை செய்து கால்கோள் நடத்தி அதன் பின்வரும் அதிகாரங்களிலெல்லாம் இவ்வதிகாரம் வரை அவ்வாயில் வளர்த்து, மங்கலக் காப்பிட்டு; இவ்வதிகாரத்திலே அதற்கு விழாக்கொடி எடுத்து; பின்வரும் பல அதிகாரங்களிலும் அதற்கு விழாவணிகள் சமைத்துள்ளார் என்னலாம். எடுத்துக்காட்டாக, அறம் ஆக்கப்பண்பு என்பதை அறன் வலியுறுத்தல் அதிகாரத்தின் பல குறட்பாக்ளில் (31, 32, 33; 36, 38, 39, 40) நிலைநாட்டி; அன்புக்குமாறான பண்புகளை நீக்குவதே அவ்வாக்கம் வளர்க்கும் வழி என்பதை அதே அதிகாரத்தின் சில குறட்பாக்களில் (34, 35) சுட்டி, அன்பறமாகிய இல்வாழ்க்

கையே அறத்தின் அடிப்படை என்பதை அடுத்த இல்வாழ்க்கை அதிகாரத்தின் பல குறட்பாக்களில் (45, 46, 48, 49) மீண்டும் மீண்டும் கூறி; மனித இன நாகரிகம் இது வரை மலர்ச்சியடைந்து வந்திருப்பதும், இனியும் மலர்ச்சியடைய இருப்பதும் அன்புடைமை அறத்தினலேயே (77, 78, 80; 73, 75) என்பதையும், அதுவே இல்லறம், துறவறம் ஆகிய இருவகை அறங்களுக்கு மட்டுமன்றி, அழிவாற்றல் தடுக்கும் எதிர்மறை அறமாகிய மறத்துக்கும் அடிப்படை (76) என்பதையும் இவ்வதிகாரத்தில் முழக்கி; அன்புடைமை வளர்க்கும் வகைகள் இவையென விருந்தோம்பல், இனியவை கூறல் முதலாகப் பலப்பல அதிகாரங்களிலும் விழா வணிகளாக அடுக்கி; அறத்துப்பாலேயன்றிப் பிறபால்களின் அதிகாரங்களிலும் குறட்பாக்களிலும் இம் மலர்ச்சிக் கருத்துக்கு வகை வகையான அரண் அமைப்புக்கள் செய்து முப்பால் முதல்வராகிய திருவள்ளுவர் பெருமான் அன்பறக்கோட்டை கொத்தளங்களே வகுத்துள்ளார் என்று கூறல் தகும்.

திருக்குறளேட்டின் முப்பாற் பகுதி முப்பால்களை அறம் பொருள், இன்பம் என்றே வரிசைப்படுத்தினலும், ஏட்டின் பாயிர அதிகாரங்களில் இவ்வரிசை இன்பம், பொருள் அறம் என மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்பது முன்பே பாயிர முன்னுரையில் கூறப்பட்டுள்ளது. அறத்துப்பாலின் பாயிர அதிகாரங்களுக்கும் இதுவே பொருந்தும் என்பதும் அறத்துப்பால் பாயிர முன்னுரை, அறத்துப்பால் பாயிர அதிகார முன்னுரைகள் ஆகியவற்றில் விளக்கப்பட்டவையே. இம் முறையில், அறத்தின் அன்புடைமை மலர்ச்சியையும் நாம் ஏட்டின் இன்பத்துப்பாலிலேயே தொடங்க வேண்டும். ஏனெனில் அன்புடைமை காதல் வாழ்வின் களவியலிலும் கற்பியலிலும் படிப்படியாக வளரும் வளர்ச்சியைத் திருவள்ளுவர் அப்பாலிலேயே உளநூலார் போல உருவாக்கிக் காட்டி அதனையே ஏட்டுப்பாயிர, அறத்துப்பால் பாயிர அதிகாரங்களிலும் அறத்துப்பால் அதிகாரங்களிலும் கற்பியல் நெறியாகிய இல்லறவியலிலும் தொடர்ந்து பொற்பூங்கொடியாகப் படரவிட்டுக்காட்டுகிருர்.

இந்த அதிகாரம் அன்பு மலர்ச்சி வரலாற்றில் மைய இடமாக, அன்புடைமையின் நாற்றங்கால் பண்ணையாக, இன்பத்துப்பாலிலும் பாயிர அதிகாரங்களிலும் காணப்படும் மழை வளப்பகுதிக்கும், பின் வரும் பயிர்வளப் பகுதிக்கும் இடைப்பட்ட புது மலர்ச்சி வாயிலதிகாரமாக அமைவது ஆகும். இதுவே திருவள்ளுவர் பெருமானின் அன்பறக் கோட்டையில் புற அரண்கள் கடந்து அகநகர் புகுவதற் குரிய அகஅரணின் புகுமுக வாயில் என்று கூறுவது அமை வுடையது ஆகும்.

முப்பால் இன்ப ஆழியின் மைய அச்சு அன்புடைமையே

திருவள்ளுவரின் அறப்பண்பு நேர்மை, நடுவு நிலை யமைதி, மெய்மை, நன்மை, அன்பு, அருள், இன்பம் என்ற ஏழுபடி வளர்ச்சிகளையுடைய மலர்ச்சி ஆகும். இதில் நடு வணதாகிய நன்மை மனிதப் பண்புகளாகிய முதல் மூன்றை யும், தெய்வப் பண்புகளாகிய இறுதி மூன்றையும் இணைக் கும் இடைநிலைப் பண்பாக அமைவது காணலாம். இதுவே, இந்த நன்மையே உலகப் பொது நிலை அறத்தின் படி; இதுவே திருவள்ளுவர் தம் காலத்தில் கண்ட மனித இனச் சமுதாய மாகிய இனவாழ்வு நிலம். இதை வருங்கால மனித இனத் தின் இனவாழ்வு நோக்கிச் செலுத்தத் திருவள்ளுமர் வகுத் துக் கண்ட தெய்வப் பண்பு மலர்ச்சிகளே எழுநிலப் பண்பு களின் உயர் தளமாகிய இறுதி மீநிலப் பண்புகளாகும். அன் புடைமை இந்தத் தெய்வத்தள மீநிலப் பண்பு மலர்ச்சியின் மலர்ச்சி விதையாதலினாலேயே இது தெய்வப் புலவர் வகுத்த தெய்வ அறத்தின் உள்ளுயிர் இயக்கப் பண்பாக அமைகிறது.

நிலங்கண்டன்றி, அதாவது பயிர் வளத்துக்குரிய நிலப் பண்பும் சூழற் பண்பும் உடைய நன்னிலம் கண்டன்றி, பயிர்த் தொழிலாளன் பயிர் செய்ய முடியாது. மனித இனத்தின் இனப்பயிர்த் தொழிலாளரான திருவள்ளுவர் அத் தகைய நிலத்தை, நன்னிலத்தை இயற்கையிலும், இயற்கை யில் இயற்கையாக வளர்ந்த தம் கால மனித சமுதாயத்

திலும், மனித சமுதாயத்தில் மனித இனப்பண்பு வளர்த்துப் பேணிய தம் காலத் தமிழின மனித சமுதாயத்திலும் கண்டார். தம் நுண்மாண் நுழைபுலத்தின் கண்ணே அறிவார்ந்த, கலையார்ந்த, தெய்வக் கனவுகளாகிய வானுலகில் தாம் பயிற்றுவித்து வளர்த்த, வருங்கால மனித இனவளர்ச்சிக்குரிய பண்புப் பயிர் விதையை அத்தமிழர் சமுதாயமாகிய நன்னிலத்திலிட்டு, திருக்குறளாகிய முப்பால் பொருநையாற்று நீர்பாய்ச்சி அதனை வளர்க்க திட்டமிட்டுச் சென்றார். அது பொருநையாறுதலின், காவிரிப் பண்புடன் பாலாற்றுப் பண்பும் வையையாற்றுப் பண்பும் ஒருங்கே பொருந்திய தெய்வப் பொருநை ஆறுதலின், உலக நாகரிகத்துக்குக் காவிரி போலத் தன் வளப் பெருக்கூட்டுவதுடன் நில்லாது, பாலாறு போலத் தன் புறவளம் சுருங்கினும் உள்வளம் சுரந்தும், வையையாறு போலத் தன் வளமும் உள்வளமும் சுருங்கினும் தன் தாய் இன வளமாகிய உலக நாகரிக வளம் வாங்கித் தன் வளமும், அவ்வுலக நாகரிக வளமும் ஒருங்கூட்டி வளர்த்து வருகின்றது.

ஆற்றலில் தொடங்கிய நேர்மை மலர்ச்சியாகவே மிகப் பழங்கால இனங்கள் அறத்தைக் குறிக்கண்டன. அடுத்த நாகரிகப் படியில் மனித இனம் நேர்மையையும், நேர்மையில் தொடங்கிய நன்மை மலர்ச்சியையும் அறமாகக் கருதிற்று. உலக முழுவதும் இவற்றிலும் மேம்பட்ட வள்ளுவ அறத்தைப் பின்பற்றியே வரினும், அறம் என்ற கருத்தும், மற்றும் உலக அறநூலாரின் அறக்கோட்பாடும் இன்னும் இம் முதலிருபடிகளைத் தாண்டிவிடவில்லை. ஆனால், திருவள்ளுவர் நேர்மையிலிருந்து நன்மை நோக்கி மலர்ச்சியுற்ற பழைய உலக அறக் கோட்பாட்டையே தம் புதிய அறக்கோட்பாட்டுக்குரிய பீடமாக்கி, அதன்மீது அன்பின் பல்படி மலர்ச்சிகளையே அறத்தின் உயிர்ப் பண்புருவாகச் சமைத்து, ஒரு புதிய அறச்சிலை வடித்து எழுப்பியுள்ளார். இதன்படி காதலின்பம் - அன்பு - பாசம் - பண்பு - சால்பு - அருள் - பேரின்பம் என அறத்தின் புது மலர்ச்சிப் படிகள் அமைகின்றன.

திருவள்ளுவரின் முப்பால்களும் உண்மையில் இன்பத்தில் தொடங்கி இன்பத்தின் பல அடுக்கலைகளாகப் பொங்கும் இந்த அறமலர்ச்சியின் கூறுகளாகவே அமைந்துள்ள அழகு கண்டின்புறத் தக்கதாகும். திருவள்ளுவரின் அறத்தை இவ் வாருக நாம் ஓர் இன்ப ஆழி, முப்பால் இன்ப ஆழி என்று குறிக்கலாம். அன்புடைமை இம்முப்பால் இன்ப ஆழியின் மைய அச்சாக அமைகின்றது.

இவ்வாருக, ஏட்டுப் பாயிரத்தின் இறுதி அதிகாரமான அறன் வலியுறுத்தல் தொடர்ந்துவரும் அறத்துப் பாலுக்குப் புகமுகமானதுபோல, அறத்துப்பாற் பாயிரத்தின் இறுதி அதிகாரமான அன்புடைமையும் பின்வரும் பொதுவறவிய லதிகாரங்களுக்குப் புகுமுகமாயிற்று. இது மட்டுமன்று. இதுவே, பொது வறவியல் கடந்த சிறப்பறவியலின் முதலதி காரமான அருளுடைமை மாண்புக்கும் வாயில்செய்துள்ளது. ஏனெனில் அருளுடைமை என்பது அன்புடைமையின் மற்ருெரு மலர்ச்சிப்படியே யாகும்.

உரையாசிரியர்களின் கருத்து

காதல் அன்பு அருள் ஆகியவை படிப்படியான மலர்ச்சிப் பண்புகள் என்பதும்; அவை மனைவி பிள்ளைகளாகிய குடும்பம், சுற்றம், சமுதாயம், இனம் எனப் படிதோறும் விரிந்து செல்பவை என்பதும், இம்மணி விளக்கவுரையில் திருவள்ளுவரின் கோட்பாடாக விளக்கப்பட்டுள்ளது காண லாம். உரையாசிரியர்கள் இதைக் கோட்பாடாக விளக்க வில்லையாயினும், இக் கருத்து அவர்கட்கும் உடன்பாடே என்பதை அவர்கள் சொற்போக்குகளால் உணரலாம்.

'அன்புடைமை, அஃதாவது அவ் வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார் கண் காதலுடைய ஞதல்... இல்லறம் இனிது நடத்தலும் புற உயிர்கள் மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயஞகலின், இது வேண்டப் பட்டது' என்று பரிமேழகர் அதிகாரத் தலைப்புக்கு விளக்கம் தருகிருர். அத்துடன் 'அதிகார முறைமையும் இதஞலே விளங்கும்' என்றும் கூறியுள்ளார்.

'இல்வாழ்க்கை முதல் மக்கட் பேறுவரை குடும்பப் பண்பு வகுத்தபின் திருவள்ளுவர் அக் குடும்பத்திலிருந்து பரந்து விரியும் அன்புடைமை அதிகாரம் வைத்தார்' என்று பரிமேலழகர் இங்கே வைப்பு முறை விளக்கம் தந்தார். ஆயினும் 'காதல்' என்ற சொல்லே இங்கே 'அன்பு' என்ற பொருளில் வழங்கியும், 'அருள் அன்பின் பயனாதலின்' என்றவிடத்து இரண்டுக்கும் ஒரே நிலை எல்லை விரிவு குறித்து (அன்பு ஏதுடையார் மாட்டும் அருள் ஏதிலா உயிர்மாட்டும் செல்வது என்ற வேறுபாடு மட்டும் உளங்கொண்டு) கூறியும், அவர் இம் மணி விளக்கவுரையின் காதல்—அன்பு—அருள் மலர்ச்சியைக் குறிப்பாகத் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைத் துணைமேல் அன்பு இல்வழி இல்லறம் இனிது நடவாமைக்கு அவர்,

'அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை
(சிலப்பதிகாரம்: காதை 16: 71—73)

என்ற சிலப்பதிகார அடிகளின் மேற்கோள் காட்டினார். அன்பு—அருள் மலர்ச்சிக்கு

'அருளென்னும் அன்பின் குழவி'

(குறள்பா 757) என்ற திருக்குறளடியையே அவர் மேற்கோள் காட்டினார்.

'அன்புடைமையாவது தன்னைச் சார்ந்தார் மாட்டுக் காதலுடையவனாதல்' என்று மணக்குடவரும்; 'அன்புடைமையாவது புதல்வரிடத்திலே அன்புடைமை, ஆத்மாக்களிடந்தோறும் உண்டாக வேணும்-ஆதலால் அன்புடைமை ஆயிற்று' என்று பரிதியாரும் அதிகார முன்னுரை வகுத்துள்ளனர்.

'நமக்குத் தொடர்புடையாரிடத்துக் கொள்ளும் பற்று அல்லது காதல் அன்பு எனப்படும். இவ்வன்பே ஒருவரோடு ஒருவர் தொடர்பறாமல் பிணித்து வைத்திருக்கும்' என்ற

முன்னுரையுடன், 'பிணிப்பு என்பது கட்டு' என்ற பொருளுரையும் தந்துள்ளார், புலவர் ந. சி. கந்தையா. இவர் விளக்கத்தால், இவர் காதலும் அன்பும் ஒன்று எனக் கருதுகிறார் கிறார் என்று தோற்றுகிறது.

காதலின் குடும்பம் கடந்த விரிவே அன்பு என்று உணர்கிறார், கவிஞர் இராமலிங்கனார்.

'வாழ்க்கைத் துணைவியான மனைவியுடன் குழந்தைகளைப் பெற்றுக் குடும்பம் நடத்துகிறவர்கள் தம்முடன் பழக நேருகின்ற எல்லாரிடத்திலும் அன்பாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவது இந்த அன்புடைமை அதிகாரம். இல்லறத்திற்கு இன்றியமையாதது அன்புடைமை. அந்த அன்பு மனைவி மக்களிடம் காட்டும் அன்பல்ல. மனைவி மக்கள் அல்லாத மற்றவரிடம் காட்டும் அன்பே அன்புடைமை ஆகும்' என்பது கவிஞர் முன்னுரை விளக்கம்.

அன்புடைமை என்பதற்குப் 'பிற உயிர்களிடம் அன்புடையரா யிருத்தல்' என்று பேராசிரியர் முனைவர் இலக்குவனார் பொருள் கூறியுள்ளார்.

ஆங்கில முதலிய மேலை மொழிகளில் உடல் வேட்கை தெரிவிக்கும் காமத்துக்குத்தான் தனிச் சொல் உண்டே தவிர, காதலுக்கென்று ஒரு தனிச் சொல் கிடையாது. இது மட்டுமன்று, காதல், அன்பு ஆகியவற்றுக்குரிய சொல்லும் [1] ஒன்றே. சில நூற்றாண்டுகட்கு முன், அதே சொல் நட்புக் குறிக்கவும் பயன்பட்டு வந்தது என்று முற்கால மேலை இலக்கிய வழக்குகள் காட்டுகின்றன. குடும்ப பாசத்துக்கு மட்டுமே அவற்றில் தனிச் சொல்[2] உண்டு. சமஸ்கிருதத்தின் நிலையும் இதுவே. அம்மொழியிலும் உடற்காமத்துக்குக் காமம் என்ற சொல்லும், காதலுக்கும் அன்புக்கும் பொதுவான ஒரு சொல்லும் (ப்ரேமம்); காதலுக்கும் நட்புக்கும் பொதுவான ஒரு சொல்லும் (ஸ்நேஹம்) மட்டுமே உண்டு.

---

1. Love 2. Affection

இம் மணிவிளக்கவுரை கொண்ட மலர்ச்சிப் பண்பினை உலகின் பொதுவான இம் மொழி நிலைகளும் காட்டும்.

ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர்கள் அன்புடைமையை அன்பு—காதல் பொதுச் சொல்லாலும்[1] இந்தி மலையாள மொழிபெயர்ப்பாசிரியர்கள் அதை அன்பு—நட்புச் பொதுச் சொல்லாலும் (ஸ்நேஹம்) குறித்துள்ளனர்.

திருவள்ளுவர் கருத்தை உணர்ந்து வருங்காலத்தில் மொழிபெயர்ப்பவர்கள் அன்பைச் சமுதாயப் பாசம் (சாமுதாயிக ப்ரேம்) அல்லது அன்புடைமை (ப்ரேமார்த்ரதா) என்றும்; அருளை இனப்பாசம், ஆன்மிகப்பாசம் (சர்வாத்ம—ப்ரேம்) என்றும் மொழிபெயர்ப்பது ஓரளவு பொருத்தமாயிருக்கும்.

எல்லா உரையாசிரியர்களும் அதிகாரத் தலைப்பை அன்புடைமை என்றே கொண்டுள்ளனர். இருபத்தைந்தாம் அதிகாரமும் இதுபோல அவர்களால் அருளுடைமை என்றே கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், பாயிர அதிகாரப்களின் தலைப்புக்களெல்லாம் வாழ்த்து, சிறப்பு, பேறு, பெருமை என முடிவதனைப் பின்பற்றி, அறத்துப்பாலின் அறப்பாயிர அதிகாரமாகக் கொள்ளத்தகும் இவ்வதிகாரங் பெயரையும் அன்புடைமையின் சால்பு என்றே இம் மணிவிளக்கவுரை கொண்டுள்ளது. பேறு, சிறப்பு ஆகியவை போலவே சால்பு இங்கே அதிகாரத்தின் வாழ்த்தியற் பண்பு குறிப்பதாகும். அன்புடைமை, அருளுடைமை ஆகிய தலைப்புக்களிலேயே 'உடைமை' என்ற சொல்லை வாழ்த்தியற் பண்புடைய சொல்லாகக் கொள்ளுதலும் கூடும் என்னலாம்.

அதிகாரப் பெயர்

அன்புடைமையின் சால்பு என்ற அதிகாரப் பெயரில் அன்புடைமையின் சால்பு என்ற தொகை இறுதிச் சொல்

1. Love

லான சால்பு என்ற சொல்லைப்போலவே பண்புப் பெயர்; அது இப் பண்புகூறும் அதிகாரத்துக்கு ஆகுபெயராயிற்று.

சால்பு என்ற பண்புப் பெயர் சான்றோர், சான்றாண்மை சான்று, சால என்பவற்லுடன் தொடர்புடைய சொல். சால் என்பது நிறைவு, பெருமை, மிகுதி குறித்த பகுதி. இவற்றையுடையது, பண்பின் நிறைவும் பெருமையும் மிகுதியும் குறிப்பது அது. அன்புடைமையின் சால்பு என்பதில் இன் ஆறும் வேற்றுமை உருபு அல்லது வேற்றுமை உருபு தொக்க வேற்றுமை வடிவின் சாரியை. அன்புடைமை என்பது அன்பினை உடையவராயிருக்குந் தன்மை என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை,

அதிகார அமைப்பு :

அறன் வலியுறுத்தல் அதிகாரத்துக்கும் வான் சிறப்பு அதிகாரத்துக்கும் திருக்குறளேட்டின் பாயிரத்திலுள்ள அதே தொடர்பு, இவ்வதிகாரத்துக்கும் வாழ்க்கைத் துணைநல அதிகாரத்துக்கும் அறத்துப்பாலில் உண்டு. வாழ்க்கைத்துணை நலம் அறத்துப்பாலின் வான் சிறப்பு அதாவது மழை முகிற் பண்பு. ஆனல், வான் சிறப்பாகிய அதே மழை முகிற் பன்பின் உருவாருவப் பண்பே அறமாதல் போல, மழைமுகிற் பண்பான அதே வாழ்க்கைத்துணை நலத்தின் உருவாருவப் பண்பாகவே, செயல் வடிவத் திறமாகவே அன்புடைமை இயல்கின்றது. மழை முகிற் புண்பு இறைவனின் அருட்சத்தியாவதுபோல, வாழ்க்கைத் துணைநலம் இல்வாழ்வானின் அருட்சத்தியாகவும்; ஒழுக்கத்து நீத்தார் பெருமை வான் சிறப்பு அல்லது அறன் வலியுறுத்தலின் உருவப் பண்பாக அமைதல் போல, மக்கட் பேறு வாழ்க்கைத்துணை நலமாகிய அம் மழை முகிற் பண்பின் உருவப் பண்பேயாதல் தெளிவு. இங்ஙனமாக, அறன் வலிபுலுத்தல் அதிகாரத்தைப்போலவே அன்புடைமையின் சால்பும் முப்பாற் பாயிரங்களும் அளாவியதாக அமைந்துள்ளது என்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது.

அன்புடைமையின் சால்பு என்ற இவ்வதிகாரம் முப்பால் வாழ்வுகளுடனும் தொர்புடையதாயினும், அதன் இன வாழ்வுத் தொடர்பினை அதிகாரத்தின் முதல் மூன்று குறட் பாக்களும் (71—73); அதன் பொருள் வாழ்வு அதாவது சமுதாய வாழ்வுத் தொடர்பினை அடுத்த மூன்று குறட்பாக் களும் (74—76); அதன் அறவாழ்வுத் தொடர்பினை மேலே மூன்று குறட்பாக்களும் (77—79); அதன் முப்பால் முழு வாழ்வுத் தொடர்பினையும், முழுப்பால் அகப்பாலான வீட்டுப்பால் தொடர்பினையும் இறுதிக் குறட்பாவும் (80) விதந்தோதுசின்றன.

71. அன்பு இயல்பானது, தடையற்றது;
வரையறை இல்லாமல் இனவாழ்வெங்கும்
இன அலைகளைப் பரப்புவது ஆகும்.

[2]அன்பிற்கும் உண்டோ [1] அடைக்கும் தாழ்? [3]ஆர்வலர்
புன்கண் நீர் பூசல்தரும்

பொ - ரை : [1]செல்லும் வாயில் வழியை அடைத்துத் தடை செய்யும் தாழிட்ட கதவு [2]அன்பு என்னும் தென்றல் அலைக்குக் கூட உண்டாதல் கூடுமா? (கூடாது) [3](ஏனென்றால் மன்பதையின் துன்பங் காண்பதனால்) இனப்பாசம் கொண்டவர் தம்உள்ளத்தில் கொள்ளும் துன்பத்தால் கண்கலக்க மெய்த, அதனால் வெளிப்படும் கண்ணீர்த்துளி அலைகள் (அந்த அன்பலைகளை) இனமெங்கும் கொண்டு பரப்பி விடும் இயல்புடையன ஆகும்.

கு - ரை : அன்பு இரக்க வடிவில் உள்ளத்திலிருந்து உள்ளத்துக்குத் தாவி, உள்ளத்துடன் உள்ளத்தை இணைத்து, இனத்தையும் இன வாழ்வையும் ஒன்றுபடுத்தும் இயல்புடையது

ஆகும். அது தென்றல் அலைபோல, மனித இனப் பாச முடையவர்களையே இனப் புழைவாய்க ளாகக் கொண்டு, குடும்ப சமுதாய எல்லைகள் கடந்து, இனவாழ்வெங்கும் அலை எதிர் அலை யாகப் பரவுவது ஆகும்.

இலக். கு: இக்குறட்பாவின் வாசகங்கள் இரண்டு. இதன் சொற்கள் நான்கு.

அவையாவன.

(1) முதல் வாசகம் (வினைவாசகம்):

1. அடைக்கும் தாழ் (இது முதல் வாசக எழுவாய்).
2. அன்பிற்கும் உண்டோ? (இது முதல் வாசக வினைப் பயனிலை).

(2) இரண்டாம் வாசகம்:

1. ஆர்வலர் புன்கணீர் (இது இரண்டாம் வாசக எழுவாய்).
2. பூசல் தரும் (இது இரண்டாம் வாசகப் பயனிலை).

இக் குறட்பாவில் மென்மையும் இடைமையும் உயிருமே பெரிதும் பயில்கின்றன. 'அன்பிற்கும்', 'அடைக்கும் தாழ்' ஆகிய இருசீர்களில் மட்டுமே இடையே இரட்டி ஒலிக்கும் கடுவல்லோசை வந்துள்ளது. பின்னதில் ஓசை முரிவும் ஏற்பட்டது. இந்த இரண்டுமே குறட்பாவின் காய்ச்சீர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கடைச்சீர் தவிர, மற்ற யாவும் மாச்சீர், விளச்சீர்களே; கடைச்சீரும் மலர் வாய்பாட்டு நிரையசையே.

இக்குறட்பா படுத்திசைப்பில் தொடங்கி, முதலிரு சீர்கள் எற்றிசைப்பாகி, அதன்பின் மூன்றாம் சீரிலிருந்து படிப்படியாகப் படுத்தும் நலிந்தும் இறங்கிசைப்பாகிச் செல்கிறது.

தவிர, அன்பிற்கும் என்ற சீர் அலை முரட்டிசைப்பாக நடுவசை எற்றிசைப்பாகியும்; 'உண்டோ'; 'அடைக்கும் தாழ்', 'புன்கணீர்' என்ற

சீர்கள் ஏற்றிசைப்பாயினும் இறங்கிசைப்பாயினும் படிப்படியாக அழுத்த நிலையில் உயர்வுற்றே செல்கின்றன.

இவற்றின் ஓசைக் குறிப்பு வளங்கள் பின்வரும் பொருள் வளப்பகுதியில் விரிக்கப்பட இருக்கின்றன.

'அடைக்கும் தாழ்' என்பது தொகையின் இறுதிச் சொல்லை ஒப்ப, பெயர்ச்சொல். இது முதல் வினவாகக எழுவாயாய், 'அன்பின்கும் உண்டோ' என்ற தொகையைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

தாழ் என்ற பெயர்ச்சொல் இங்கே முன் வரும் அடைக்கும் என்ற குறிப்பால், தாழிட்ட கதவுக்கு ஆகு பெயராயிற்று.

அடைக்கும் என்பது வாயிலை அல்லது வழியை அடைக்கும் என்னும் குறிப்புடையது. இது அடை என்ற வினைப்பகுதியடியான பெயரெச்சம். 'உம்' அவ்வெச்ச விகுதி. இது இடைநிலை பெறுவதில்லை. எதிர்கால எச்சமாயினும் இது காலப் பொதுவாய் வழங்குவதாகும், விகுதிக்கு முன் பகுதியுடன் ககர எழுத்துப் பேறு சேர்ந்து அது இரட்டித்தது.

அடைக்கும் என்ற பெயரெச்சம் தாழ் என்ற பெயர் தழுவித் தொகைப்பட்டது.

'அன்பிற்கும் உண்டோ?' என்பது அதன் இறுதிச் சொல்லை ஒப்ப வினாக்குறித்த வினைமுற்று. இத்தொகை நிலை முதல் வினவாசகத்தின் வினைப்பயனிலையாய், அடைக்கும் தாழ் என்பதை எழுவாயாகக் கொண்டு வந்தது.

உண்டோ என்பதில் இறுதி ஒகாரம் வினவிடைச்சொல். இங்கே இது எதிர்மறைப் பொருளில் இல்லை என்ற பொருளில் வந்தது. இது மட்டுமன்று. எதிர் மறைப் பொருளில் ஆகாரம் வரும்போது வெறும் மறுப்பு ஆகிய எதிர் மறையாகவும், அது ஓகாரமாக வரும்போது அது மறுப்பு வலியுறுத்து, உடன்பாட்டு மறுப்பு ஆகிய எதிர் மறையாகவும் அமையும் இயல்புடையது. அம்முறையில்

'உண்டோ?' என்பது, 'இருக்க முடியாது', 'உளதாதல் கூடாத ஒன்றேயாகும்' என்ற பொருள்களைச் சுட்டுகின்றது.

உண்டு என்பது உண்மை என்ற பண்படியான குறிப்பு வினை முற்று. 'டு' அல்லது 'டு' ஆக ணகரத்தின் பின் திரிபுற்ற 'து' ஒன்றன்பால் வினைமுற்று விகுதியாக வந்தது. இவ்விகுதி 'உண்டு' என்ற வினைமுற்று வடிவத்தில் திணைபால் எண் இடப்பொது வினை முற்று விகுதியாகியமைந்துள்ளது. இல்லை, வேறு என்பவற்றுடன் இதை அவ்வகைப் பொது வினைமுற்றாகக் கொள்ளுதல் தமிழ் இலக்கண மரபு.

உண்டு என்ற குறிப்பு வினை முற்றையே குறிப்பு வினையா லணையும் பெயராக்கிப் பேச்சுத் தமிழ் மொழியும் மலையாள மொழியும் உண்டாகு, உண்டாயிரு ஆகிய தொகைநிலை வினைப்பகுதிகளையும்; உண்டு என்பதையே புது வினைப்பகுதியாக்கி (உண்டுன்னாரு, உன் னுரு எனத்) தெலுங்கு மொழியும் வழங்குகின்றன.

உளதாயிரு, ஆயிரு, இரு ஆகிய மூன்நிலைகளையும் பொதுவே குறிக்கும் ஓர் இன்றியமையா வினை தமிழிலும் திராவிட மொழி களிலும் கிடையாது. சமஸ்கிருதத்திலும் அது தேவைப் படுவதில்லை. ஆனால் வட இந்தியத் தாய் மொழிகளிலும் ஆரிய இந்து ஐரோப்பிய மொழிகள் அனைத்திலும் இத்தகைய வினை உண்டு, இன்றி யமையா நிலையில் உண்டு. மூலத் தமிழிலிருந்து மூல ஆரியம் பிரிந்து செல்லாத ஒருகாலத்தில், அத் தொன்மூலத் தமிழிலும் இத்தகைய ஒரு வினை இருந்திருத்தல் கூடும் எனலாம்.

அன்பிற்கும் என்பதில் உம்மை எச்சப் பொருளும் தேற்றப் பொருளும் கலந்த உயர்வு சிறப்பும்மை ஆகும், 'மற்றவற்றுக்கெல்லாம் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம்; அன்பின் செய்தி தனிப் பட்டது; அதற்கு ஒருபோதும் இருக்க முடியவே முடியாது' என்ற பேருண்மை இதனால் பெறப்பட்டது. அன்பிற்கு என்பதில் 'கு' நான்காம் வேற்றுமை உருபு. இவ்வுருபின் முன் இன் சாரியை வந்து, சாரியை ஈற்று னகரம் வல்லெழுத்தின் முன் றகரமாகத் திரிந்தது.

அன்பு என்ற பெயர்ச் சொல்லின் உகர வீறு சாரியையின் உயிர்முன் கெட்டது.

அன்பிற்கும் என்பதில் உள்ள நான்காம் வேற்றுமைப் பொருளும் உம்மையும் ஒருங்கே உண்டோ என்ற வினாப் பொருள் வினைமுற்றுடன் சென்று முடிந்து தொகைப்பட்டன.

அர்வலர் புன் கண் நீர் என்பது அதன் ஈற்றுச் சொல்லை ஒப்பப் பெயர்ச்சொல். இத்தொகை இரண்டாம் வாசக எழுவாயாய் பூசல் தரும் என்ற தொகையைப் பயனிலையாகக் கொண்டது.

நீர் என்னும் பெயர்ச்சொல் முன் வந்த 'கண்' என்ற குறிப்பால் கண்ணீருக்கும்; 'புன்கண்' என்ற குறிப்பால் கண்ணீர்த் துளிக்கும்; 'ஆர்வலர்' என்ற குறிப்பால் கலங்கிய கண்ணீர்த்துளிகளின் அலைகளுக்கும் ஆகுபெயராயிற்று. இது மும்மடி ஆகுபெயர்.

'புன்கண்' என்பது இரு சொற் கூறுகளாலான தொகையாயினும் நீண் மரபாக ஒரு தனிச் சொல் போலப் பயின்று வருகிறது. இதற்குக் காரணம் அது உறகண், உளைகண், தறுகண், இடுக்கண் என்ற சொற்களைப்போல் ஓர் அன்மொழித் தொகை என்பதாகும். புன்மை வாய்ந்த கண் என்ற பொருளில் இது பண்புத் தொகையாகி அப் பண்புத் தொகை அடியாகப் புன்மையுற்ற கண்ணின் நிலைமைக்குக் காரணமான துயரம் என்ற பொருளில் காரணம் குறித்த அன்மொழித் தொகையாக நீண் மரபு வழி வழங்கியுள்ளது.

புன்கண் நீர் என்ற தொகை புன்கணினால் வெளிவரும் நீர் என்ற பொருளுடைய மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆகும்.

ஆர்வலர் என்பது ஆர்வம்; ஆர்வலித்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆர்வன்மை என்ற பண்படியாகப் பிறந்த பலர்பால் குறிப்பு வினையாலணையும் பெயர் அல்லது குறிப்புப் பெயர். பண் பீறு கெட்டு, முன்னின்ற னகரம் லகரமாகத் திரிந்து பலர்பால் குறித்த அர் விகுதியணைந்து இது ஆர்வலர் ஆயிற்று.

ஆர்வலர் புன்கண் நீர் என்பது ஆர்வலரது புன்கண் நீர் என ஆறும் வேற்றுமைத் தொகை.

பூசல் தரும் என்பது வினைமுற்றாக வரும் தொகைநிலை, இது ஆர்வலர் புன்கண் நீர் என்ற தொகையை எழுவாயாகக் கொண்டு வந்த இரண்டாம் வாசகப் பயனிலை.

தரும் என்ற வினைமுற்றில் 'உம்' காலப் பொதுமை சுட்டிய, இடைநிலை பெறா எதிர்கால வினைமுற்று விகுதி. வினைப் பகுதி 'தா' என்பது. இது வா, அலமா, தெருமா, உலமா முதலிய ஒருசில வினைப்பகுதிகளுடன் ஒரு தனி வினைக் கணமாய் இயங்குவது ஆகும். இவ் வினைக்கணத்தில் ஏவல், சில எதிர்மறைகள், சில உடன்பாடுகள் நீங்கலாகப் பெரும்பாலான வினைகளில் பகுதி யீற்றுயிர் குறுகும். அத்துடன் நிகழ்கால எதிர்காலங்களில் குறுகிய பகுதியின் பின் ருகர எழுத்துப் பேறு வரும். இங்கே அவ்வாறு பகுதி உயிர் குறுகி, ருகர எழுத்துப்பேறு வந்தது. 'உம்' என்ற காலப் பொது வினை முற்று விகுதியின் உயிர்முன் ருகரத்தின் உயிர் கெட்டது.

'தா' என்ற வினைப் பகுதி இங்கே பூசல் என்னும் பெயரைச் செயப்படுபொருளாகக் கொண்டு வேற்றுமைத் தொகை வடிவான இணை விகுதியாயிற்று. அம்முறையில் 'தா' என்பது இங்கே பூசல் என்பதன் பொருளே விரிக்கும் துணை வினைப் பகுதியாயிற்று.

பூசல் என்பது அவ் விகுதிபெற்ற தொழிற்பெயர். பூசு இதன் பகுதி. எங்கும் பரவுதல் என்பது இதன் பொருள்.

வி - ரை : அற வாழ்வின் மழை வளத்துக்குக்குரிய பயிர் வளப் பண்பான அன்புடைமையின் சால்பு முப்பால் வாழ்வு களுடனும் தொடர்புடையதாயினும், இக்குறட்பா உட்பட இவ்வதிகாரத்தின் முதல் மூன்று குறட்பாக்களும் (71—73) அதன் இன வாழ்வுத் தொடர்பே வலிவுறுத்துவன ஆகும். அவ்வழி இக் குறட்பா அன்புடைமையின் இயலாற்றல் வற்புறுத்தி, அது தென்றல் அலையென இன அலையாக மன் பதையின் இன்பதுன்ப உணர்வுகளை யெல்லாம் ஆர்வலர் உள்ளத்திலிருந்து ஆர்வலர் உள்ளத்துக்கு அலை பாய்வித்து,

உயிருடன் உயிரையும், உயிருடன் இன வாழ்வையும், இன வாழ்வுடன் உயிரையும் இணைத்து, ஒன்றுபடுத்திப் பேணும் திறமுடையது என்பதனை விளக்குகிறது.

அடைக்கும் தாழ் என்பது 'செல்லும் வாயில் வழியை அடைத்துத் தடை செய்யும் தாழிட்ட கதவு' என்று பொருள்படும்.

அடைத்தல் என்பது 'போக வழிவிடாமல் செறுத்து நிறுத்துதல்' ஆகும். இதனாலேயே 'செல்லும் வாயில் வழியை அடைத்துத் தடை செய்தல்' என்ற பொருள் பெறப் பட்டது. தாழ் வாயிலையோ, வழியையோ தானாக நின்று அடைப்பதன்று. அது வாயிலடைக்கும் கதவையே அடைத்துச் செறிவிப்பது அல்லது பூட்டுவது ஆகும். இதனாலேயே 'அடைக்கும் தாழ்' என்பது 'செல்லும் வாயில் வழியை அடைத்துத் தடை செய்யும் தாழிட்ட கதவு ஆயிற்று.

தாழ் என்பது பூட்டு. அது பூட்டின் மாட்டு வில்லையும், கதவின் மாட்டு கொளுவியையும் குறிக்கும். மாட்டுகொளுவி இன்றளவும் தாழ்ப்பாள் எனப்படுகிறது. திறவுகோல் தாழ்க்கோல் என்றே வழங்குகிறது. தாழ் என்பதே பூட்டின் மிகப்பழமையான பெயர் என்பதை இது காட்டுகிறது. தாழிடுதல் என்பது இன்று கொளுவி மாட்டிக் கதவைச் செறிவித்தலைக் குறிக்கிறது; இதுவே பூட்டுவதையும் உட் படுத்திக் குறிப்பதாகும். தாழிடாக் கதவு என்பது இதனால் திறந்த கதவைக் குறிக்கும் சொல் ஆகும்.

அன்பிற்கும் உண்டோ? என்பது 'அன்பு என்னும் தென் றல் அலைக்குக்கூட உண்டாதல் கூடுமா, கூடாது' என்ற பொருள் தருவதாகும்.

அன்பிற்கும் என்ற சொல் முன்வந்த அடைக்கும் என் பதன் குறிப்பால், 'அன்பு தென்றல் அலை போன்ற பண்பாக வருவதற்கும் வெளிச் செல்வதற்கும், தங்கு தடையின்றி உலவி எங்கும் பரவுவதற்கும்' என்ற பொருள் தந்தது.

தாழ் உண்டோ என்றதனால், பூட்டப்படத்தக்க, அடைக் கிற கதவு இல்லை. எப்போதும் வழி திறந்தே இருக்கும் என்

பது பெறப்பட்டது. ஓகாரம் வினு எதிர்மறையையும் எதிர்மறை வலியுறுத்தையும் தேற்றப் பொருளையும் கொண்டு, 'இருக்கவே முடியாது' என்ற பொருள் தருவதனை இலக்கணக் குறிப்புரையிலேயே எடுத்துக் காட்டியுள்ளோம்.

அன்பிற்கும் என்ற உயர்வு சிறப்பும்மையால். 'வேறு எப்பண்புக்கும் இருக்கலாம், இல்லாமற் போகலாம், அன்பிற்கு ஒருபோதும் கிடையாது' என்ற எச்சப் பொருளும் குறிக்கப்பட்டது என்பது இலக்கண குறிப்புரையில் சுட்டப் பட்டது.

அன்பு என்ற தமிழ்ச் சொல் காதல்—அருள், பற்று—நேசம் என்ற நாற்றிசைப் பண்புகளில் நடுநிலையுடைய பண்பு ஆகும். அது காதலிலிருந்தே பிறப்பது. அருளாக மலர்வது. பற்று, நேசம் ஆகிய பண்புகளாக விரிவது, ஆனல், அது அருளுக்கே மிகவும் அணிமையுடையது, அதற்குக் கிட்டத்தட்ட ஒப்புடையது. ஏனெனில் காதலும், பற்றும், பாசமும், நேசமும் ஏதேனும் ஒரு ஏதுவைப் பற்றுக் கோடாகக் கொண்டே நிகழ்பவை—அன்போ, அருள்போல ஏதுவும் பற்றுக்கோடும் இன்றி யாவர் மாட்டும் செல்வது. அருளுக்கும் இதற்கும் உள்ள ஒரே வேற்றுமை — அருள் இனத்தினின்று சமுதாயம், சமுதாயத்திலிருந்து குடும்பம் என அகம் நோக்கிய பண்பு. ஆனல், அன்பு குடும்பத்திலிருந்து சமுதாயம், சமுதாயத்திலிருந்து இனம் எனப் புறம் நோக்கிய பண்பு. அருள் இனவாழ்வில் செயலாற்றும், அன்பு சமுதாய வாழ்வில் செயலாற்றும்.

ஆர்வலர் புன்கண்நீர் என்பது 'மன்பதையின் துன்பங் கண்டு இனப்பாசம் கொண்டவர், தம் உள்ளத்தில் அடைந்த துன்பத்தால் கண் கலக்கமெய்தி, அதனுல் வெளிப்படும் கலங்கிய கண்ணீர்த்துளி அலைகள்' என்ற பொருள் தருகின்றது.

மன்பதையின் துன்பங்கண்டு என்பது இங்கே ஆர்வலர் புன்கண் என்ற குறிப்பால் அவாய் நிலையாக வருவிக்கப் பட்டது.

ஆர்வலர் என்பதன் பொருள் இனப்பாசம் கொண்டவர் என்பதாம்.

ஆர்வலர் என்ற சொல் ஆர்வன்மை என்ற பண்படியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர் என்பதும்; அது ஆர்வலித்தல், ஆர்வம் என்ற சொற்களுடன் தொடர்புடையது என்பதும் இலக்கணக் குறிப்புரை குறித்த செய்திகளேயாகும்.

ஆர்வம் என்பது மனித இனப்பாசம்[1]: ஆர்வலர் மனித இனப்பாசம் உடையவர்[2] ஆவர்.

அன்பின் விரிபெருக்கமும், அன்பின் செறிவும், தொண்டுச் செயல் முனைப்பும் ஒருங்கேகொண்ட உணர்ச்சியாற்றலே ஆர்வம். பொதுவாகத் தன்னல முனைப்பில் உயிர்கள் காட்டும் அதே விறுவிறுப்பான அக்கரை உணர்வையும் துடிப்பையும் ஆர்வலர் பொதுநலச் செய்திகளிலும் காட்டுகின்றனர்.

அன்பின் மலர்ச்சியான அருளுக்குக்கூட, ஆர்வத்தின் ஆற்றல் கிடையாது. ஏனெனில் அருள் தொலை ஆற்றல் உடையதாயினும், அது அன்புக்கு எதிர்திசைப் பண்பு. தன்னலத் திசையிலிருந்து புறப்படும் அன்புக்கு உள்ள உடனடி ஆற்றல் அதற்குக் கிடையாது. ஆனால், ஆர்வமோ அன்பின் பெருக்கு, அன்பின் செறிவேயாதலால், அது அன்பின் அலையாற்றலும், அருளின் நிலையாற்றலும், தன்னல முனைப்பின் செயலாற்றலும் ஒருங்கே கொண்டதாகும்.

அன்பு அறத்தை இயக்குவது. அருள் அன்பை இயக்கி அதன் மூலம் அற அலைபரப்புவது. இரண்டுக்கும் இடைப்பட்ட ஆர்வம் அருள்வழி நின்று, அன்பு விரைந்து செயல்படவைப்பது ஆகும்.

மன்பதைத் துயரம் மற்ற உயிர்களில் எப்போதும் அன்பலை பரப்புவதில்லை. பரப்பினும் தன்னல மையத்திலிருந்து நெடுந்தொலை செல்வதில்லை. அருளோ, எல்லையற்ற அன்பலை பரப்பி அன்பை இயக்கும். ஆனால், அது அன்பைச்

1. Philanthropy 2. Philanthropist

செயலில் ஊக்க முடியாது. ஆர்வலர் ஆர்வம் மன்பதைத் துயரத்தை அருளாளர் போலவே உணர்ந்து, உடனடியாகச் செயலுணர்ச்சியாக்கி விடும்; தானும் செயலில் முனைந்து சூழலில் அன்புடையோரையும் செயல் உணர்ச்சியலைகள் மூலம் செயலுக்குத் தூண்டும். ஏனெனில் ஆர்வமென்பது செயலாற்றல் மிக்க உணர்ச்சி ஆகும்.

தன்னல முனைப்பில் காட்டப்படும் விறுவிறுப்பான அக்கரை யுணர்ச்சியைப் பொதுநலச் செய்திகளிலும் காட்டுவதன் மூலம், ஆர்வம் சமுதாயச் செல்வப் பண்புகள் அனைத்திலும் மதிப்பேறிய அரும்பண்பு ஆகிறது. மனித இனத்தில் அறிவும் உணர்ச்சியும் மதிப்பேறிய செல்வப் பண்புகள். ஆனால், ஆர்வம் இல்லாத இடத்தில் அவற்றின் ஆற்றல் குறைவு; இருக்கும் ஆற்றலும் அடிக்கடி தன்னல வழி நின்று அழிவாற்றல்களாகவே இயலும். ஆர்வம் அவற்றின் ஆற்றல் பெருக்குவது, ஆக்க ஆற்றலிலேயே செலுத்துவது. இதனாலேயே அறிவுடன் கூடிய ஆர்வத்தையும், உணர்ச்சியுடன் கூடிய ஆர்வத்தையும் நாம் உலகில் அருள் திறங்கள், வரம் பெற்ற திறங்கள்[1] என்று கூறுகிறோம். பொதுவாக இந்த ஆர்வம் மிகச் சிறந்த மனிதர்களிடையிலே கூட (முற்பிறப்பு நம்பிக்கையுடையவர் பார்வையில் ஒரு முற்பிறவியின் தொடர்ச்சி என்று தோற்றுமளவில்) இயல்பாக ஒவ்வொரு தனித்திறங்களில் மட்டுமே பொலிவுறுவதாகும். ஒரு குறிப்பிட்டஆர்வமுடையவர் பிறவற்றில் ஆர்வம் கொள்வதில்லை— ஆர்வமுள்ள துறையிலன்றி அவர் எளிதில் வெற்றி நோக்கி விரையவும் முடியாது. ஆர்வம் முன்னை இனப்பண்பின் பயனாகக் குருதி வழிவந்து, இனத்தின் வருவளப் பண்பு நோக்கி விரைவதே இதற்குக் காரணம் ஆகும்.

ஆர்வங்கள் பல—அறிவார்வம், இன்ப ஆர்வம், கலை ஆர்வம் முதலியன. ஆனால், இக் குறட்பாவில் கூறிய ஆர்வலர், அன்பார்வலர், மனித இனப்பாசம், உயிரினப்பாசம் கொண்ட ஆர்வலர்—அவர்கள் பிறர் துன்பங்கண்டுருகி, தம்

1. Genius, Inspiration, Special endowment by God

துன்பம் நீக்க நாடுவதுபோல், அவர் துன்பம் நீக்க நாடு பவர்கள் ஆவர்.

புன்கண் என்பது துன்பம். புன்மையுற்ற கண்களின் நிலைமைக்குக் காரணமான துன்பம் என்ற பொருளில் இது மரபு வழிவந்து, பண்புத் தொகைப் புறத்து வந்த, காரணப் பொருள் குறித்த அன்மொழித் தொகை ஆகும், என்பது இலக்கணக் குறிப்புரையில் விளக்கப்பட்டுள்ளது.

ஆர்வலர் அருளாளரையும் அந்தணரையும் ஒருபுடை ஒத்து, தம் தீங்குகள் வகையில் துயருருதவர். ஆகவேதான் இங்கே புன்கண் என்ற சொல் மன்பதைத் துயரம் கண்ட அவர்கள் துயரம் குறிக்கிறது.

புன்மை என்பது புல்லினது தன்மை, புல் சிறுமை யையும் குறிக்கும் (புல்லறிவாளர் என்ற வழக்குக் காண்க); நுணுக்கத்தையும் (குசாக்ரபுத்தி, அதாவது புல்நுனி அறிவு என்ற சமஸ்கிருதத் தொகைநிலை வழக்குக் காண்க) குறிக்கும் ஆர்வலர் பிறர் சிறு நுண் துயரத்தையும் கண்டு தாம் பெருந்துயரம் கொள்வதனுல், இக் குறட்பாவில் அவர் துயர் புன்கண் எனப்பட்டது, புல் நுனி மிகச் சிறிய தாயினும் கண்ணில் உறுத்தின் பெருந்துயரம் அளித்தல் போல, உலகில் மன்பதையின் துயர் மிகச் சிறிதாயிருக்கு மிடத்திலும் அதைக் காணும் ஆர்வலர் துயரம் பெரிதாம் என்பது கருத்து.

நீர் என்பது இங்கே துயரங்கண்டு துயர்ப்பட்டுக் கலங்கும் ஆர்வலர் கண்களின் கலங்கிய கண்ணீர்த்துளி அலைகளைக் குறித்தது.

நீர் என்ற சொல் முன்வரும் கண் என்ற குறிப்பால் கண்ணீருக்கும், புன்கண் என்ற குறிப்பால் கண்ணீர்த்துளிக் கும்; ஆர்வலர் என்ற குறிப்பால் கண்ணீர்த்துளி அலை களுக்கும் ஆகுபெயராயமைந்தது என்பது இலக்கணக் குறிப் புரையில் கூறப்பட்டது.

ஆர்வலர் புன்கண்நீர் பிறர் துயர்கண்டு கலங்கிய கண்ணீராதலால் அது விரைந்து பாய்ந்து துளித்தும், துளி

தோறும் காணும் பிறர் கண்களும் உளமும் கலங்க வைத்தும் இயக்கும் அலைகளாகின்றன என்பது இவ்வாறு சுட்டப் பட்டது.

பூசல் தரும் என்பது 'அந்த அன்பலைகளை இனமெங்கும் கொண்டு பரப்பிவிடும் இயல்புடையன' என்று பொருள் படுவது ஆகும்.

முதல் வினை வாசகத்தின் அன்பு தென்றல் அலைகளைக் குறிப்பிட்டதனால், இங்கே அந்த அன்பலைகளை என்பது பூசல் தரும் என்பதன் செயப்படுபொருளாக வருவிக்கப்பட்டது. கண்ணீர்த்துளிகள் இங்கே எழுவாயாதலால் பூசல் தரும் என்பதற்கு இவ் அவாய் நிலை தேவைப்பட்டது.

பூசல் என்பதும் பூசை என்பதும் பூசு என்ற ஒரே வினையடியான தொழிற் பெயர்கள். முன்னதில் 'அல்' போல, பின்னதில் 'ஐ' தொழிற் பெயர் விகுதியாயிற்று. பூசுதல் அதாவது மேற்பூச்சிடுதல், தீட்டுதல், மெழுகுதல் என்ற சொல்லும் இவற்றுடன் தொடர்புடையதேயாகும். பூசை என்பது பூவிட்டு இறைவனை வணங்குதலை மட்டுமன்றி, 'பூ'ப் போன்ற நல்லிறைச் சிந்தனைகளை அவ்விறை நோக்கி அலை யலையாகப் பரவ விடுதலையும் குறிக்கும். ஏனெனில் பூ, பூசு, பூசை ஆகியவை தொடர்புடைய சொற்களேயாகும். சாயம் பூசுதலில் சாயம் பூப்போன்ற மென்படலமாகப் பரப்பப் படுதலே பூசுதலாயிற்று என்னல் காண்க.

பூசல் ஆரவாரத்தையும், சிறு சண்டை சச்சரவுகளையும் குறிப்பதுண்டு. இங்கும் இச் சொற்கள் சிறுசிறு அலைகளாகவே பரவுவதையும், சிறுசிறு வாதமாகச் சச்சரவு பலரிடைப் பரவுவதையும் குறித்தல் காணலாம்,

பூசல்தரும் என்பது இவ்வாறாக, ஆர்வலர் பிறர் துன்பம் கண்டு தாம் பெற்ற துயரத்தைத் தம்மிடமிருந்து 'பூ செய்' (பூசைப்) பண்பாக்கி, எங்கும் 'பூசுதல்' பண்பலைகளாகக் கொண்டு பரப்புவர் என்னும் பொருள் விரித்தது. ஆர்வலர் உணர்ச்சி செயலுணர்ச்சியாதலின், அது வெறும் உணர்வலை யாக மட்டுமே பரவாது, செயலார்வ அலையாகவும் பரவி,

இனத்துயர் துடைக்க விரைந்து முனையும் என்பது குறிப்பிடப்பட்டது.

தரும் என்ற வினை துணைவினையேயாயினும், இங்கே செயலார்வமும் செயல் முனைப்பும் சுட்டிற்று.

சிறப்புரை: வீடுகளுக்கு வாயில்களும் பலகணிகளும் தாழுடன் கதவிட்டு மூடப் படுவதுண்டானாலும், தென்றல்வரும் வேளை அவை திறந்தே விடப்பட்டிருக்கும். தவிர, வீட்டுக்கு வீடு, தாழும் கதவுமில்லாத புழைவாய் உண்டு. மாளிகைகளில் இப்புழைவாய் சிறப்புப் பண்பு ஆகும். தென்றல் வெளியிடங்களிலிருந்து வீடுவீடாகப் புழைவாய்கள், திறந்த கதவு பலகணிகள் வழி புகுந்து அலை பாய்ந்து புழுக்கம் போக்கி விடுவதாகும். அன்பு இத்தென்றல் போன்றது. குடும்பம், சமுதாயம் ஆகியவற்றின் எல்லைச் சுவர்கள் அதன் இயல்பான போக்கை தடைசெய்ய மாட்டா. ஏனெனில் தென்றலை முன்பு வாயில் பலகணிகளின் கதவு தாழிடப்படாது திறந்து வைக்கப்படுதல் போல, மக்கள் உள்ளங்கள் அன்பின் அலைகளுக்குத் திறந்துவிடப் பட்டே யிருக்கும். தவிர, தாழும் கதவுமில்லாப் புழைவாய்கள் வீடுகளுக்கு, மாளிகைகளுக்கு இருப்பதுபோல, குடும்ப சமுதாய எல்லைகளிலே நிலவும் ஆர்வலர் அல்லது மனித இனப் பாசவாணர் உள்ளங்கள் அன்பலைகளை எளிதில் வாங்கி மீட்டும் அலையலையாகப் பாயவிடும் தன்மையுடையனவாகவே அமைபவை ஆகும். அவர்கள் இயக்கி அலை பாயவிடும் இன உணர்வலைகள் இன முழுவதையும் உணர்விலும் செயலார்வத்திலும் ஒன்றாக்கிவிடும்.

பொருள்வளம்: (1) மனித வாழ்க்கையின் பண்புகளில் உச்ச உயர்நிலைப் பண்பு அன்புடைமை. அதன் உச்ச உயர்நிலைத்திறம் இரக்கமேயாகும். துன்ப அலைகளெல்லாம் அன்பலைகளுடன் கலந்து இரக்க

அலைகளாகி, துன்பத்தை இன்ப நோக்கி, இயக்கி, துன்ப நீக்கமென்னும் முதல்படியில் கொண்டு செல்வதன் மூலம் இயற்கையின் அழிவாற்றலை ஆக்க ஆற்றலாக்க முனைகின்றனர்.

இந்த இனிய இரசவாதம் விரித்துரைக்கும் இக்குறட்பா மென்மையும் இடைமையும் உயிருமே பெரிதும் மயங்கி, இனிய யாழோசையாய், துன்ப மறக்க வைக்கும் மெல்லிசையாய் அமைந்தது பொருத்தமேயாகும்.

ஆயினும் இனிமையில் தெவிட்டியவன், இடையே காரம் அல்லது கார்ப்பு உண்டு நாக்குத் திட்டியே இனிமை மதிப்பு முழுதுணர்வான்.

'அன்பிற்கும்', 'அடைக்கும் தாழ்' ஆகிய இருசொற்களிலும் வரும் இரட்டுறு கடுவல்லோசை இத்தகைய காரங்கள் ஆகும்.

அன்பு இயல்பானது, ஆனால் இனவழிவரும் அந்நீனை இன அறிஞரான ஆர்வலரே முழுதுணர்வர். பிறருக்குத் தன்னலமே இயல்பாகிவிடுகிறது என்ற காரமான உண்மையை நினைவூட்டி எச்சரிக்கிறது, 'அன்பிற்கு' என்பதன் றகரம் கலந்த கடுவல்லோசை. ஆர்வலர்க்கு அந்த இயல்பான தன்னல உருவிலேயே பொதுநலப் பாசம் ஆர்வமாய் அமைந்துவிடுவதை அடைக்கும் தாழ் என்ற மெல்லோசை குறித்துக் காட்டுகிறது.

தன்னலம் கடந்து அன்பு செயலாற்றும் இடங்களிலும், இரக்கம் தன்முனைப்போடு கலந்த இரக்கமானல், செயலார்வம் கொள்ளாது. சில சமயம்

ஏனமாகவும் கேடுற்று நிற்கும். இன ஆர்வலர் இயக்கினாலன்றி, இரக்கம் அன்பிரக்கமாகி, சமநிலைத் தோழமை உணர்ச்சி கொள்ளாது. இந்தக் கசப்பான உண்மையை 'அடைக்கும் தாழ்' என்பதன் முரி வோடியைந்த வல்லோசையும், 'அடை'த்தல் என்ற வினைக் குறிப்பும் தெரிவிக்கின்றன.

இந்த இரண்டு பண்புகளும், தன்னலமும் தன் முனைப்பும், கனிவின்மைப் பண்புடையன என்பதற் குப் போலும், திருவள்ளுவர் இவ்விரண்டையும் 'காய்'ச் சீர்களாக அமைத்தார்!

(2) குறட்பாவின் முதல் மூன்று சீர்களும் ஏற்றிசைப்பானதனால், அன்புடைமைப் பண்பின் தனித் திறச் சால்பு வலியுறுத்தப்பட்டது. அடுத்த நான்கு சீர் களும் படுத்து நலிந்து இறங்கியிசைத்ததனால், அந்தச் சால்புடைமை தன்னல, தன் முனைப்புகளால் தடைப் பட்டுச் சிறிது நின்றாலும், ஆர்வலர் செயலால் அத் தடை தாண்டி மெல்ல மெல்ல இனமளாவப் பரவிச் சென்று, இனிமை பரப்பும் என்பது தெரிவித்தது.

அன்பிற்கும் என்பதன் அலைமுகட்டோசை, தன்னலத்தை அன்பு மேற்சென்று தாண்டிச் செல் லும் என்பதையும், அடைக்கும் தாழ் என்பதன் முரி வுற்ற நீள் அழுத்த எடுப்போசை, தன்முனைப்பை அது ஆர்வலர் செயலால் கீழறுத்து மெல்லக் கசிந் தோடி அலைபாயும் என்பதையும் தெரிவித்தன.

(3) இக் குறட்பாவில் குடும்ப சமுதாய எல்லை கள் வீடு முதலிய கட்டடங்களின் தடைச் சுவர்களுக் கும்; தன்னலமும் தன்முனைப்பும், தாழும் கதவும் உடைய வாயில் பலகணிகளுக்கும்; அன்பலை

தென்றல் அலைகளுக்கும்; ஆர்வலர் உள்ளம் தாழ் கதவற்ற புழைவாய்களுக்கும்; துன்பம் கண்டு கசியும் ஆர்வலரின் துயரலை கலந்த அன்பலை அதாவது இரக்க அலை அவர் கலங்கிய கண்ணீர்த்துளி அலை களுக்கும் தொடர் உவமைக் கூறுகளாகக் குறிக்கப்பட் டன. ஆயினும் இத் தொடர் உவமைக் கூறுகளில் 'தாழ்' 'பூசல் தரும்' என்ற சில குறிப்புக்கள் தவிர மற்றவை வெளிப்படக் கூறப்படவில்லை.

அன்பின் செயல் உலகை உள்ளூர நின்றியக்குவ தென்பதை இந்தக் குறிப்புத் தொடர் உவமப் பண்பும் சுட்டிக் காட்டிற்று.

(4) 'உண்டோ' என்பதனால் வரும் வினா எதிர் மறையின் எதிர்மறை வலியுறுத்தும், தேற்றப் பொரு ளும்; அன்பிற்கும் என்பதில் வரும் உம்மையின் தேற்றப் பொருள் கலந்த உயர்வு சிறப்புப் பொருளும் விளக்க வுரையிலேயே சுட்டப்பட்டன. இவற்றால், 'அன்பு தவிர்த்த ஏனைய பண்புகளுக்குத் தடை இருக்கலாம், இல்லாதும் போகலாம். அன்புக்கு ஒருபோதும் தடை இருக்கவே முடியாது' என்ற பொருள் விளைந்தது என்பதும் அங்கேயே விளக்கப்பட்டது.

ஆனால் தன்னலமும் தன்முனைப்பும் அப்பிறபண்பு களில் முக்கியமானவை—கட்டாயம் தடுக்கும் பண்பு கள்—அன்பின் தங்குதடையற்ற வளத்தையே அவை தடுத்து நிறுத்த முனைவன என்ற கருத்துக்களும் இவற்றினூடாகத் தொனிக்கின்றன மேலே (பொருள் வளம் 2 காண்க). ஓசை மூலம் இவை சற்று முனைப் பாகச் சுட்டப்பட்டுள்ளதும் விதந்தோதப்பட் டுள்ளது.

(5) 'மன்பதை துன்பங் கண்டு' என்பது அவாய்நிலையாய் வந்தமை இக் குறட்பாவின் தனி யழகு, தனிப் பொருள்வளக் கூறு ஆகும். உலகின் துயரமும் தீங்குகளும் எல்லாம் ஆர்வலர் மரபு வாழ்வ தனலேயே மறைந்துவிடும் என்பதையும்; 'உலகம் உயர்ந்தோர் மேற்று', 'உண்டாலம்ம உலகம்... பிறர்க்கென வாழுநர் உண்மையானே' என்ற உண் மைகளையும் அவ் அவாய்நிலைப் பண்பு குறித்துக் காட்டிற்று.

(6) புன்கண்நீர் என்பது யாப்பில் புன்கணீர் என்ருகிவிடுவதால், இச் சீர் கூவிளம் ஆகும். ஆனல், இரண்டாம் அசை நீள் நிரையாய், மிக நீண்டு ஒலிக் கிறது. உலகின் சிறு துன்பமும் ஆர்வலர் உளத்தில் பெருந்துன்பமாகி, ஆர்வலர் உள்ளதின் இரக்க அலை களால், துன்ப விடுதலையும் நீடின்பமும் உலகுக்குக் கிட்டுவது உறுதி என்பதை இது தொனிப்பிற் குறித்தது.

பரப்பும் என முடியும் குறட்பா, துன்ப நீக்கத் தான் வரும் எல்லையற்ற நீடின்ப வளம் உருவகித்துக் காட்டிற்று.

தனிக் குறிப்புக்கள்: (1) உரையாசிரியர்கள் பழக்கத் துக்கு ஓரளவு மாருக இம் மணி விளக்கவுரை இலக்கணக் குறிப்புரைக்குத் தனி முக்கியத்துவம் அளித்து அதனை விரித் துரைத்துச் செல்கிறது. இக் குறட்பா போன்ற இடங்களில் இதன் தனித் தேவையை உணரலாம், ஏனெனில் பரிமே லழகர் இலக்கணக் குறிப்புரை விரித்து எழுதியிருந்தால், இக் குறட்பாவுச்கு அவர் கொண்ட பொருள் இம் மணி விளக்க வுரை நோக்கிப் பல கூறுகளில் மிக நெருங்கி வந்திருப்பது

புலனாகக் கூடும். இப்போது அதை நுணுகி உய்த்தறிவ தன்றி வேறு வழியில்லை.

இந் நிலையிலும் இம் மணிவிளக்கவுரை 'ஆர்வலர் புன் கண் நீர்' என்பதற்குச் செய்துள்ள விளக்கம் தனித் தன்மை வாய்ந்ததே யாகும். ஏனெனில் இவ்வுரை இத் தொகையில் ஆர்வலரை ஒரு சொல்லாகவும், புன் கண் என்பதை ஒரு சொல்லாகவும், நீர் என்பதை ஒரு சொல்லாகவும் கருதி, மூன்று சொற்களாலான தொகையாகக் கொண்டுள்ளது. கண் என்பது இதனால் புன் கண் என்ற சொல்லின் பகுதி ஆய்விடுகிறது. இத்தொகையை உரையாசிரியர்கள் எவ்வாறு கொண்டனர் என்பது அவர்கள் உரைகளால் முழுதும் தெளிவு பெற்றுவிட முடியாவிட்டாலும், பொது வாக அவர்கள் 'புன்கணீர்' என்ற மூலத்தை புன்மை வாய்ந்த கண்ணீர் என ஒரே தொகைச் சொல்லாகக் கொண் டனர் — கண்நீர் அவர்கள் வழக்கில் இங்கே இரண்டு சொல் லன்று, ஒரு சொல் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டா வதாக இவ்வுரை இத்தொகைப் பொருளில் ஆர்வலர் என் பதை இன்ப்பாசம் அல்லது மனித இனப்பாசம் கொண்ட வர் என்றும், நீர் எனபதற்குக் கண்ணீர்த் துளியலைகள் என்றும் பொருள் கொண்டது. அத்துடன் ஆர்வலர் என்ப தற்கு முன்பாக, 'மன்பதையின் துன்பங் கண்டு' என்பதை வருவித்தும்; 'புன்கண்' என்பதற்கும் 'நீர்' என்பதற்கும் இடையே '(தம் உளத்தில் கொண்ட அத் துன்பத்தால்) கண் கலக்க மெய்தி அதனால் வெளிப்படும்' என்ற சொற்களைத் தருவித்தும்; ஆர்வலர் வேறு, துன்புறுபவர் வேறு என்பதை யும்; ஆர்வலர் துன்பமும் கண்ணீரும் தமக்காக அல்ல, பிறருக்காக என்பதையும் தெளிவு படுத்தியுள்ளது. பரிமே லழகர் ஓரளவு இது கண்டிருப்பதாகத் தோற்றினும், இது தெளிவாகத் தெரியவில்லை — அவரைப் பின்பற்றிய உரை யாசிரியர்களும் இதனைத் தெளிவாகக் கண்டுகொள்ளவில்லை என்றே தோற்றுகிறது.

குறட்பாவின் முதல் வாசகத்திலும் இது போல, உண்டோ என்பதற்கு இவ்வுரையாசிரியர் கொண்டபடி

'இருக்கவே முடியாது' என்று கொள்ளலாமல், எல்லா வுரையாசிரியர்களும் மொழிபெயர்ப்பாசிரியர்களும் வாளா 'உண்டோ', 'உண்டா', 'உளதோ', 'இல்லை' என்றே கூறினர். இதுபோலவே தாழ் என்பதற்குத் தாழிட்ட கதவு என்று கொள்ளாது, தாழ் என்றே கொண்டனர். 'அடைக்கும் தாழ்' என்பதற்கோ, பெரும்பாலார் வாளா 'அடைக்கும்' என்றும்; பரிமேலழகரும், புலவர் ந. சி. கந்தையாவும், பேராசிரியர் இலக்குவனாரும் '''பிறர் அறியாமல்'' அடைக்கும்' என்றும் உரைத்தனர்.

'அன்பிற்கும்' என்றவிடத்து அன்பாகிய தென்றல் அலை என்றும்; 'பூசல் தரும்' என்றவிடத்து, 'அந்த அன்பலைகளை' என்பதை வருவித்து 'இனவாழ்வெங்கும் பரப்பிவிடும் இயல்புடையன' என்றும் இம் மணி விளக்கவுரை விளக்கம் தந்து அன்புத் தென்றல், ஆர்வலராகிய புழைவாய், தன்னலம் தன்முனைப்பாகிய வாயில் பலகணிகள் என்ற தொடர் உருவகச் செய்திகளை எடுத்துக் காட்டியுள்ளது.

இவை ஒவ்வொன்றும் உரையாசிரியர் எவரும் காணாதது ஆகும்.

(2) 'ஆர்வலர் புன்கண்நீர் பூசல் தரும்' என்பதற்குப் பரிமேலழகர் '(தம்மால் அன்பு செய்யப்பட்டாரது துன்பங் கண்டு) அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உள்நின்ற அன்பினை எல்லாரும் அறியத் தூற்றும் ஆதலான்' என்று உரை செய்து, இப்பகுதியைக் காரண வாக்கியமாக்கி, 'அடைக்கும் தாழ் அன்பிற்கும் உண்டோ' என்ற வாக்கியத்துடன் முடியும்படி செய்துள்ளார்.

புன்கண்நீர் என்பதில் புன்மை என்பதனைப் பரிமேலழகர் பொழிப்புரையில் கண்ணீரைத் தழுவும் பண்பாகக் கொண்டார். ஆனால், விளக்கவுரையில் 'ஆர்வலரது புன்மை கண்ணீர் மேல் ஏற்றப்பட்டது என்று கூறுகிறார். இக் குறிப்பினால், அவர் 'ஆர்வலர்' வேறு, 'அன்பு செய்யப்பட்டார்' வேறு என்று இம்மணிவிளக்கவுரையைப்போலவேகொண்டாலும், அன்பு செய்யப்பட்டவரும் சிற்றறிவினர், ஆர்வலரும்

சிற்றறிவினர் என்று ஒப்பாகக் கொண்டதாகத் தெரிகிறது. வருந்திப் பரிமேலழகர் மேற்கொண்ட வேறுபாடு இதனால் இம்மணி விளக்கவுரை தரும் வள்ளுவக் கருத்தினை முற்றிலும் காணாமல் போய்விடுகின்றது.

புல்லிய கண்ணீர் என்பதனைக் கண்ணீர்த்துளி என்றுகூட உரையாசிரியர்கள் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கர ராஜு நாயுடு ஒருவரே கண்ணீர்த்துளி (அச்ருபிந்து) என்று பொருள் கூறியுள்ளார்.

பூசல் தரும் என்பதற்குப் பலரறியத் தூற்றும், வெளிப் படுத்திவிடும் என்றே எல்லாரும் கூறினர். 'தானே ஆர வாரத்தைத் தரும்' என்றார் மணக்குடவர்.

(3) 'ஆர்வலர், அன்பர்; பூசல், பலரறிதல்' என்ற பதவுரை தந்து, 'அன்பைப் பிறரறியாமல் அடைத்து வைக்க முடியாது' என்று கருத்துரையும் தருகிறார் புலவர் குழந்தை. உரையாசிரியர் பொதுவாகக் கொண்ட பொருளை இது தெளிவாக எடுத்துரைக்கிறது.

(4) 'அன்பு என்பது இயல்பாக மனிதருக்குள் இருக்கும் பச்சாத்தாப உணர்ச்சி. அது பிறர் துன்பப்படுவதை அறிந்த வுடனேயே அடக்கி வைக்க முடியாதபடி துடித்தோடி வந்து துன்பப்படுகின்றவர்கள் துயரத்தில் பங்குகொள்ளும். அப் போது தானாகவே கண்கலங்கும். அந்தக் கண் கலக்கத்தில் வெளிப்படுகின்ற சிறுதுளி(க்) கண்ணீரே அன்புடைமை யைக் காட்டிவிடும்' என்பது கவிஞர் இராமலிங்கனாரின் விளக்கவுரை.

'சிறு துளிக் கண்ணீர், 'பங்குகொள்ளும்' என்ற பகுதி கள் மூலம் இவ்வுரை இம் மணிவிளக்கவுரைக் கருத்துக்களைச் சுட்டுவது காணலாம். பொழிப்புரையில் கவிஞர் கண்ணீர் என்று மட்டுமே கூறியுள்ளார்.

(5) இக் குறட்பாவுக்கு உரையும் மொழிபெயர்ப்புமான மூவர் வாசகங்கள் சொல்லழகு நோக்கி ஈண்டு எடுத்துக் காட்டத்தக்கன.

'நெஞ்சினுல் ஒருவர் மாட்டு ஒருவர் அன்புடையராயின், மற்றதற்கு முண்டோ பயன்படாமல் அடைப்பதோர் கருவி? அதனுல் ஒருவர் மாட்டு உள்ளத்து விருப்பமுடையவரது மென்கண்மைதானே பலரறியும் பூசலைத் தரும்' என்பது காலிங்கர் பொழிப்புரை.

'பூசல் என்பது விசேடம். புன்கண் என்பது கிருபை. கண்ணீர் என்பது பெருமை' என்ற சிறப்பு விளக்கவுரையையும் இவர் தந்துள்ளார். இம் மணிச் செறிவான வாசகங்களில் அவர் கொண்ட பொருள் தெளிவாக விளங்கவில்லை. கண்ணீரானது, அதற்குரியவர் மென் கண்மை காட்டுவதால் அவரது பெருமை அதாவது நிலையான பண்புடைமை குறிப்பதும்; 'புன்கண்'ணுனது பிறர் துயர்கண்டு அவர் அடையும் துன்பமாதலால், அது அவர் கிருபை அல்லது அன்புடைமையாகிய உளச் சிறப்புக் காட்டுவது என்பதும்; 'பூச'லானது அவ்வன்பலை பரப்பிவிடுவதாதலால், விசேடம் அதாவது அதன் தனிச் சிறப்பான பலன் குறிப்பது என்பதும் அவர் உளங்கொண்ட கருத்துக்கள் ஆகலாம்.

மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் திருக்குறள் முழுவதையும் குறட்பா மாதிரியான மலையாள யாப்பு வடிவிலேயே அமைத்துள்ளார். இக் குறட்பாவுக்கு அவர் யாப்பு வருமாறு :

' ஸ்நிக்த ஜனங்ஙள்தன் கண்ணுநீர், ஸ்நேஹார்த்ர
முத்ர—அன்பிந்நு தாழ் உண்டோ ?

இங்கே ஸ்நிக்த ஜனங்ஙள்தன் என்பது அன்பால் பிணிக்கப்பட்டவர்களுடைய என்றும், ஸ்நேஹார்த்ர முத்ர என்பது அன்பிற்குரிய சின்னம் என்றும் பொருள்படுவன. அன்பிந்நு என்பது அன்பிற்கு என்பதாம்.

இவ்வுரைப் பகுதி எழுதும் சமயம் புதிதாகக் கண்ட திரு. மு. சோ. வேங்கடகிருட்டிணன் அவர்களின் இந்தி மொழி பெயர்ப்பு, அம் மொழியில் இலக்கிய மரபிலும் மக்கள் மரபிலும் ஒருங்கே வழங்கும் தோஹா என்ற ஈரடிச்

சந்தப்பாக்களாலானது. இக் குறட்பாவுக்குரிய அவர் தோஹா வருமாறு :

'அர்கல ஹை ஜோ ரகே—ப்ரேமீ உரமேங் ப்யார
கோஷண கரதீ ஸாஂவ ஹீ—துச்ச நயன-ஜல-தார'.

காதலரைக் குறிக்கும் ப்ரேமீ என்ற சொல் இங்கே ஆர்வலரையும், காதலைக் குறிக்கும் ப்யார் என்ற சொல் அன்பையும், உர் என்பது நெஞ்சத்தையும்; துச்ச என்பது புன்மை வாய்ந்த (சிறு நிலையான) என்ற பொருளையும் குறிக்கின்றது. 'ஆர்வலர் உள்ளத்தில் தாழ் (அர்கல) இட்டு வைக்கும் அன்பினை, சிறு நிலைப்பட்ட கண்ணீர் ஒழுக்கே (துச்ச நயன ஜலதார) தெள்ளத் தெளியப் பறைசாற்றி விடும் (ஸாஂவ ஹீ கோஷண கரதீ ஹை)' எனபது இதன் கருத்து ஆகும்.

(6) அன்பிற்கும் என்பதில் 'உம்மை சிறப்பின் கண் வந்தது' என்பது பரிமேலழகரின் குறிப்புரை.

(7) 'அன்பு உள்ளத்தில் மறைவாய்இருப்பது, ஆயினும் அதன் உண்மை கண்ணீரால் அறியத் தக்கது' என்ற ஒரு பெரிய தத்துவத்தைப் புதிதாகக் கண்டுபிடித்துக் கூறுபவர் போல (அத்தத்துவத்தை இக் குறட்பாவில் திருவள்ளுவர் கருத்தாக்கி) முடிவுரை அமைத்துள்ளார், பரிமேலழகர்.

அவர் முடிவுரை வருமாறு :

'காட்சியளவைக்கு எய்தாதாயினும், அனுமான அளவையான் வெளிப்படும்' என்பதாம்.

'இதனால் அன்பினது உண்மை கூறப்பட்டது'.

கடவுள் ஒருவர் உண்டு எனபதை அரிது முயன்று வாத எதிர்வாதம் காட்டி நிறுவ முனையும் வேதாந்த சித்தாந்திகளின் பாணியில் பரிமேலழகர் இங்கே 'அன்பு என்ற ஒரு பண்பு உலகத்தில் உண்டு' என்று நிலைநாட்ட அரும்பாடு பட்டுள்ளார் என்பது காணலாம்,

72. தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவரே
அன்புடைமையின் சால்பு நிரம்பிய மேலோர் !

[1]அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர்; அன்புடையார்
என்பும் [3]உரியர் [2]பிறர்க்கு.

பொ - ரை : [1]அன்பு சிறிதும் அற்றவர்கள் (அதாவது கீழ் மக்கள்) என்று கூறத்தக்கவர்கள், உலகின் எல்லா நலங்களையும் (தம் உழைப்பால் வந்தன, பிறர் உழைப்பால் வந்தன ஆகிய எல்லாவற்றையும் ஒரு சிறிதுகூடப் பிறருக்கு விடாமல்) முற்றிலும் தமக்கே உரியனவாக ஆக்கிக்கொள்ள முனைபவர்களே யாவர். (நேர்மாருக) அன்புடைமையின் சால்பை முழுவதும் தமக்கேயுரிய பண்பாகக் கொண்டவர்கள் (அதாவது சான்ருேர் அல்லது அந்தணர்) என்று கூறத்தக்கவர்கள், (தம் உழைப்பின் மூலக் கருவியும் தம் வாழ்வின் மூல முதலுமான உடம்பின் கடைசிக்கூருன) எலும்புக் கூடுகூட [2]மன்பதை உயிரிகளுக்கே [3]உரியதாகப் பெற்றவர்களே யாவர்.

கு - ரை : மனித இன நாகரிகத்தின் அச்சாணி அன்பு (குறட்பா 75); குடும்ப, சமுதாய, இனவளர்ச்சிக்குரியஅடிப்படைப்பண்பு இதுவே. எனவே இவ் அன்புடைமையின் உச்ச உயர்நிலைச் சால்பு கண்டவர் என்று கூறத்தக்கவர், இனத்தையும் இன நாகரிகத்தையும் இயக்கியாளும் சான்ருேர், பெரியார், துறவோர், அந்தணர் ஆகிய மேலோர். அவ்வன்புடைமையின் தடமே இல்லாதவர் உண்டாளுல், அவர்கள் குடும்ப, சமுதாய வாழ்வுகளுக்குத் தகுதியற்ற, அவற்றுக்

குப் புறம்பான கீழ்மக்கள் அல்லது கயவர்(108—வது கயமை அதிகாரம்) ஆவர். இவ்விரு நாகரிகக் கோடிகளுக்கும் இடைப்பட்டவர்களே பண்புடையார், நன்மக்கள் ஆகிய உலகின் பெரும்பான்மை மக்கள். அவர்கள் தன்னலமும் தன்முனைப்பும் உடையவர்களே: ஆயினும் பலபடிகளில் அன்புடையாரின் பாசத்துட்பட்டு அவர்கள் அத் தன்னலமும் தன்முனைப்பும் படிப்படியாகக் கரையப் பெறுபவர்கள் ஆவர்.

பெருமை சிறுமைகளை அளவிடும் கட்டளை அன்புடைமையே யாகும்.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகங்கள் இரண்டு. இதன் சொற்கள் நான்கு, அவையாவன :

(1) முதல்வாசகம் :

1. அன்பு இலார் (இது முதல் வாசக எழுவாய்).
2. எல்லாம் தமக்கு உரியர் (இது முதல் வாசகப் பெயர்ப் பயனிலை).

(2) இரண்டாம் வாசகம்:

1. அன்புடையார் (இது இரண்டாம் வாசக எழுவாய்).
2. என்பும் பிறர்க்கு உரியர் (இது இரண்டாம் வாசகப் பெயர்ப் பயனிலை).

இக் குறட்பாவில் அன்பு இலார் என்பது செய்யுளில் அன்பிலார் என்று இணைந்து முதற் சீராகவும்; எல்லாம் இரண்டாம் சீராகவும்; தமக்கு உரியர் என்பது செய்யுளில் இணைந்து தமக்குரியர் என்று மூன்றாம் சீராகவும் நின்றன. முதலிரண்டும் முறையே விளச்சீர், மாச்சீர்; மூன்றாவது மட்டுமே காய்ச்சீராக, ஆனால் மிகக் குறுகிய கருவிளங் காய்ச்சீர் ஆயிற்று. இம் மூன்று சீர்களில் முதலது நலிவிசைப்பாகவும் இறங்கிசைப்பாகவும்; இரண்டாவது படுப்பிசைப்

பாகவும் இறுதி நீண்ட அழுத்திசைப்பாகவும்; மூன்றாவது முதலசை எடுத்திசைத்தும் பிற்பகுதி குறுகி விரைந்தும் நலிந்தும் இறங்கிசைப்பாகவும் வந்தன. நான்காம் சீரும் காய்ச்சீரே (கூவிளங்காய்). ஆனால், இது திடுமெனப் படுப்பிசைப்பாகவும் நீள் சீராகவும், இறுதி நீண்டு எடுத்திசைத்து ஏற்றிசைப்பாகவும் அமைந்த ஓசையுடையதாயிற்று.

இரண்டாம் அடியில் எல்லாச் சீர்களுமே மாச்சீர்கள் என்னலாம். முதலிரு சீர்களும் முறையே தேமா, கூவிளம்; மூன்றாவதான கடைச்சீர் புளிமா போலவரினும் உண்மையில் 'பிறப்பு' வாய்பாட்டுச் சீரே (தொல்காப்பிய மரபில் நிரைபு அசைச்சீர்). இவற்றுள் முதற் சீரில் முதலசை குறட்பாவின் உச்ச எடுப்பிசைப்பாகத் தொடங்கி ஏற்றிசைப்பாக அழுத்தம் பெற்றது. அடுத்த இரு சீர்களும் திடுமெனப் படிப்படியாக இறங்கிசைப்பாக, இரண்டும் நலிவிசைப்பும் ஆயின. அத்துடன் இவற்றின் இரண்டாம் சீர்கள் குறிலாயினும் நலிவிசைப்பாயினும் நீண்டே இசைப்பன ஆகும்.

இவற்றின் குறிப்பு வளங்கள் விளக்கவுரையிலும் பொருள் வளப் பகுதியிலும் விளக்கப்படுகின்றன.

அன்பு இலார் என்பது இறுதிச் சொல் ஒப்பப் பெயர்ச்சொல் இது முதல்வாசகத்தின் எழுவாயாய், எல்லாம் தமக்குரியர் என்ற தொகையைப் பெயர்ப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

அன்பு இலார் என்பது அன்பை இல்லையாகப் பெற்றவர் என்ற பொருளில் இரண்டாம் வேற்றுமை உருபும் தொடர்வினைப் பொருளும் தொக்க தொகை. அன்பு இல்லையாகப் பெற்றவர் என முதல் வேற்றுமை சார்ந்த தொடர் வினைப் பொருள் தொக்க தொகையாகவும் கொள்ளலாம். திருநாளைப் போவார் (நாளைப் போவேன் என்று சொன்னவர்) என்ற நந்தனார் பெயரும் இதுபோன்றதொரு தொகையேயாகும்.

எல்லாம் தமக்கு உரியர் என்பது ஈற்றுச் சொல்லை ஒப்பு, பெயர்ச் சொல். முதல் வாசகத்தில் இது அன்பு இலார் என்ற எழுவாய்க்குரிய பெயர்ப் பயனிலையாய் நின்றது.

உரியர் என்பது பலர்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். அர் அப் பெயர் விகுதி. இது உரிமை என்னும் பண்படியாக வந்தது. இதன் மை ஈறு கெட்டு, உயிருக்கும் இகரத்துக்கும் இடையே யகரம் உடம்படு மெய்யாக வந்தது. உரியர் ஆவர் என இது பெயர்ப்பயனிலை யாயிற்று.

தமக்கு என்பது தாம் என்ற பெயரின் நான்காம் வேற்றுமை. 'கு' அவ் வேற்றுமை உருபு. 'தாம்' திணைபால் பன்மைப் பொதுப் பெயர். இது வேற்றுமையில் தம் எனக்குறுகி, அகரச் சாரியை பெற்றது. உருபின் ககரம் இருட்டித்தது. இது உரியர் என்ற வினையாலணையும் பெயரின் வினைப் பொருள் தழுவித் தொகைப் பட்டது.

தமக்கு என்பதில் தாம் என்ற பெயர் அன்பிலார் என்ற எழுவாய்ச் சொல்லையே தன் சுட்டு முதலாகக்கொண்டது.

எல்லாம் என்பது பன்மை பெயர்ச் சொல். இதன் பின் முற்றும்மை தொக்கு நின்றது. இது உரியர் என்ற குறிப்பு வினையாலணையும் பெயரின் பகுதி தழுவித் தொகைப்பட்டது எல்லாமும் உரிமையாகப் பெற்றவர் என்று இப் பெயரை எழுவாயாகச் செல்லும் தொகைக்கூறாகவோ, எல்லாவற்றையும் உரிமையாகப் பெற்றவர் என்று இரண்டாம் வேற்றுமை உருபு தொக்க சொல்லாகவோ கொள்ளல் தகும்.

அன்புடையார் என்பது பெயர்ச் சொல். இது இரண்டாம் வாசகத்தின் எழுவாயாய், என்பும் பிறர்க்கு உரியர் என்ற தொகையைப் பெயர்ப் பயனிலையாகக்கொண்டது.

உடையார் என்பது உடைமை என்ற பண்படியான பலர்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். 'ஆர்' பலர்பால் விகுதி. பண் பிறுதி கெட்டு யகர உடம்படுமெய் இடையே வந்தது.

அன்புடையார் என்பது அன்பினை உடையார் எனப் பொருள் படும் இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆகும்.

என்பும் பிறர்க்கு உரியர் என்பது பெயர்ச்சொல். இது இரண்டாம் வாசகப் பெயர்ப் பயனிலையாய், அன்புடையார் என்பதை எழுவாயாகக்கொண்டது.

உரியர் என்பது உரிமை என்ற பண்படியாக வந்த பலர்பால் வினையாலணையும் பெயர். 'அர்' பலர்பால் விகுதி. பண்பீறு கெட்டு, இடையே யகரம் உடம்படு மெய் ஆயிற்று. தொகை பயனிலையாதலின் இச் சொல் உரியர் ஆவர் என்ற பொருள் கொண்டது.

பிறர்க்கு என்பது நான்காம் வேற்றுமைப் பெயர். 'கு' அவ் வேற்றுமை உருபு. இதன் ககரம் இரட்டிற்று. பிறர் என்ற பெயர்ச் சொல் பிற என்ற உரிச்சொல்லடியான பலர்பாற் பெயர். அர் விகுதியின் அகரத்தின் முன் உரிச் சொல்லீற்றின் அகரம் கெட்டது. இவ் வேற்றுமைப் பொருள் உரியர் என்ற குறிப்பு வினையாலணையும் பெயரின் வினைப்பொருள் கொண்டு முடிந்து தொகைப்பட்டது.

என்பும் என்பதில் உம்மை இழிவு சிறப்பும்மை. என்பு என்பதும் எலும்பு என்பதும் ஒரே சொல்லின் இரு வடிவங்கள். இப் பெயர்ச் சொல் உரியர் என்ற குறிப்பு வினை தழுவியது ஆகும். என்பும் உரியர் என்ற தொகையில் என்பும் உரியதாகக் கொள்ளுபவர் ஆவர் என்ற பொருளில் என்பு என்ற பெயர் உரியர் என்பதன் வினைப் பொருளுக்குரிய எழுவாயாகித் தொகைப்பட்டது என்றோ; என்பையும் உரியதாகக்கொள்பவர் ஆவர் என்ற பொருளில் இத் தொகைவினை இரண்டாம் வேற்றுமை உருபும் வினைப் பொருளும் உடன் தொக்க தொகை ஆயிற்று என்றோ கொள்ளுதல் தகும்.

வி-ரை: அறவாழ்வின் மழை வளத்துக்குரிய பயிர் வளப் பண்பான அன்புடைமையின் சால்பு முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், இக்குறட்பாவை மையமாகக்கொண்ட அதிகாரத்தின் முதல் மூன்று குறட்பாக்களும் (71—73) அதன இன வாழ்வுத் தொடர்பே வலியுறுத்துவனவாகும், அவ் வழி இக் குறட்பா, அன்புடைமையின் சால்பே இன வாழ்வின் அடிப்படைப் பண்பு என்பதையும்; அப் பண்பின் முகடெய்திய சான்றோர் அவ்வினத்

துக்காகவே வாழ்ந்து அதற்காகவே உயிரையும்கொடுப்பவர் ஆவர் என்பதையும்; அது அறவே இயலாதவர் தமக்கென வாழும் இன அழிவுக்காரராகிய கயவர் என்பதையும்; அப் பண்பில் குறைபட்ட பலபடியான இடைநிலை மக்களே சான்றோரால் இயக்கப்பட்டு அப் பண்புடைமையின் சால்பைக் குறிக்கொண்டு வாழும் இயல்புடையோராகிய நன்மக்கள் என்பதையும் விதந்தோதுகின்றது.

இவ்வதிகாரத்தில் என்பு என்ற சொல் இக்குறட்பாவிலேயே முதல் முதலாக வழங்குகிறது. ஆனால், அதிகாரத்தினுள்ளேயே அது மீண்டும் மீண்டும் மூன்று தடவை வருகிறது. இந்த நான்கிடங்களிலும் (இக் குறட்பா, 73, 74, 81) அதன் வழக்காற்றுச் சிறப்பும், தனித்தனி பொருள் வளமும், குறிப்பு வளமும் அவ்வக் குறட்பாவுரைகளில் கூறப்படுகின்றன.

அன்பு இலார் என்பது 'அன்பு சிறிதும் அற்றவர்கள் அதாவது கீழ்மக்கள் என்று கூறத் தக்கவர்கள்' என்று பொருள்படும்.

அன்பு அற்றவர் என்று கூறாமல், அன்பு இலார் என்று கூறியதனாலேயே அன்பு சிறிதும் இல்லாதவர்கள், கீழ்மக்கள் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஏனெனில் இலக்கணக் குறிப்புரையில் தெரிவித்தபடி, இத் தொகை அன்பு இல்லையாகப் பெற்றவர்கள் என்றோ, அன்பை இல்லையாகப் பெற்றவர்கள் என்றோ விரிவுறுவது. இதில் முதல் இலக்கண விளக்கமே சிறப்புடையது. அது தரும் பொருள் 'அன்பு ஒரு சிறு பொட்டும் இல்லாதவர்கள்' என்பதே.

அன்பு இலார் என்பதன் நலிவிசைப்பு மூலம், 'அன்பு சற்றும் இல்லை என்ற நிலை மனித இனத்தில், சிறப்பாக நாகரிக மனித இனத்தில் இருக்க முடியாது: இருந்தாலும் அந்நிலை நீடிக்காது' என்பது சுட்டிக்காட்டப்பட்டது. கீழ் மக்கள் அல்லது கயவர் இனப்பகைவர், இனக்கொலைஞர் ஆதலால், கயவர்கள் தோன்றும் நிலையை உண்டுபண்ணி விட்ட இனங்கள், ஒன்று அக்கயவர்களைக் கொன்று தாம்

வாழ வேண்டும், அல்லது அக் கயவர்களை வளரவிட்டுத் தாம் அழிய வேண்டும்; உண்மையில் உலகில் எகிப்தியர், சுமேரியர், கிரேக்கர், ரோமர் முதலிய மாண்ட பேரினங்களின் வாழ்வை உற்றுராய்ந்து நோக்கினுல், அந் நாகரிகங்கள் பல வற்றிலும் அறிவும் கலையும் வீரமும் ஆற்றலும் மிக்கிருந்தாலும், அன்புடைமை என்ற ஒரு பண்பும், அதன் இன்றியமையாத உடன் கூருன சமத்துவப் பண்பும் மட்டும் இல்லாதிருந்ததனைக் காணலாம்.

அன்பிலா இனங்கள் மட்டுமல்ல, அன்பிலாமையை வளரவிட்ட இனங்களும்; அன்பிலார் ஆளும் இனங்கள் மட்டுமல்ல; அன்பிலாரை வளரவிட்ட இனங்களும் அழிவது உறுதி (80).

அன்பிலார் என்பது கீழ்மக்களை அல்லது கயவரைக் குறித்த சொல் என்பதைப் பின்வரும் அன்பிலார் இயல்பு அல்லது இலக்கணம் காட்டவல்லது.

அன்பு இலார் என்பது பண்பி. அவர் பண்பு அல்லது இலக்கணமே பின் கூறப்படுகிறது. அன்பிலார் என்ற பண்பியே எழுவாயாய் வந்ததனுல், இங்கே அன்பிலார் என்று கூறத்தக்கவர்கள் என்ற பொருள் பெறப்பட்டது. அத்தகையவர்கள் உலகில் பலரல்லர், சிலர்; சிலரிலும் அருகலானவரே. ஏனெனில் சான்றோர் பண்பின் உச்ச உயர்நிலையினராதல் போல, இவர்களும் இழிபு உச்ச நிலையினரேயாவர்.

அன்பு இலார் அல்லது கீழ்மக்கள் அல்லது கயவரின் இலக்கணம் இக்குறட்பாவின் முதல் வாசகப் பிற்பகுதியாகிய பயனிலைத் தொகையில் கூறப்படுகிறது. 'எல்லாம் தமக்குரியர்' என்பதே அது.

எல்லாம் தமக்குரியர் என்பது 'உலகின் எல்லா நலங்களையும்—தம் உழைப்பால் வந்தன, பிறர் உழைப்பால் வந்தன ஆகிய எல்லாவற்றையும் ஒரு சிறிதுகூடப் பிறருக்கு விடாமல் முற்றிலும் தமக்கே உரியவனவாக ஆக்கிக்கொள்ள முனைபவர் ஆவர்' என்று பொருள்படும்.

எல்லாம் என்ற பெயர்ச் சொல் இயல்பாகவே பன்மைச் சொல்லாகவும், இயல்பாகவே முற்றும்மையைத் தன்னகம் தொக்கு நிற்கக்கொண்ட சொல்லாகவும் விளங்குவது. இங்கே இரண்டாம் வேற்றுமை உருபும் தொக்கு நின்ற தனால், எல்லாம் என்பது இங்கே எல்லாவற்றையும் என்ற சொற் பொருள் தந்தது.

எல்லாம் என்பது உலகத்திலுள்ள எல்லாவற்றையும், உலகத்திலுள்ள வளங்கள் எல்லாவற்றையும் என்று பொருள்படும், உலகத்திலுள்ள எலலாவற்றையும் எவரும் சொல்லளவில் பெற்றுவிட முடியாது. சொல், செயல், எண்ணம் ஆகியவற்றில்கூட இந்த எல்லையை எட்டிவிட முடியாது. ஆகவே, எல்லாம் என்பது இங்கே அன்பிலாரின் குறிக்கோள்—அன்பிலாரின் கால இடவாய்ப்பு எல்லைகள் கடந்த குறிக்கோள். சான்றோர் உட்பட எல்லாரும் இந்த எல்லையை அணுகுவதற்கு உரிமையுடையவரே; ஆனாலும் இதைக் குறிக்கோளாகக் கொண்டவரும், இதனைச் செயற் படுத்த முழு மூச்சுடன் முனைபவரும் கயவர், கீழ்மக்களே யாவர்.

அன்பிலார் என்பது கயவர், கீழ்மக்களைக் குறிக்கும் என்பது இதனால் பெறப்படுகிறது.

எல்லாம் என்ற சீர் இரண்டு காய்ச் சீர்களுக்கிடையே வந்து, இரண்டாம் அசை ஏற்றிசைப்பாக நீண்டும் அழுத்த மாகவும் இயன்றதனால், அது வளங்களெல்லாவற்றையும், ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் என்ற குறிப்புத் தந்தது.

தமக்கு என்ற சொல் அன்பிலாரையே குறித்தது என்பது இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டது. ஆனால், இங்கே இது உண்மையில் 'தாம் தமக்கு' என்ற குறிப்புடையதாகும். ஏனெனில் அன்பிலார் ஒவ்வொருவரும் தமக்கேயன்றி, பிறர் எவர்க்கும் உரியதாகக் கொள்ள விரும்பமாட்டார்கள்.

தமக்கு என்பதன் முதலசை எடுத்திசைத்து, பிற்பகுதி குறுகி விரைந்து நலிந்து இறங்கிசைப்பானதன் குறிப்பாக, அச் சொல் தமக்கு மட்டுமேயன்றி, பிறர் எவர்க்குமே

இன்றி, பிறர் எவரிடமிருந்தும் கூடிய மட்டும் பெற்றுப் பிறர் எவருக்கும் கூடிய மட்டும் கொடுக்காமல்' என்ற பொருள் தந்தது.

கயவர் இலக்கணத்தை இதுவும் வலிபுறுத்துவது காண்க.

கொடுக்கத் தெரியாதவர், வாங்க மட்டுமே தெரிந்தவரை இன்றும் தமிழர் 'மண் வெட்டிக் கைகள்' என்று கூறுவதுண்டு. மண் வெட்டி தன் கைப்புறமாக மண்ணை வெட்டி வாருவதன்றி எதிர்புறமோ, பக்கவாட்டிலோ கூடத் தள்ளாது. இது மட்டுமன்று. வாரியதைக்கூட அது பின்தள்ள உதவாது. கயவர் பண்பை இது நன்கு உருப்படுத்திக் காட்டுகிறது. வாங்கியதைக்கூட, வாங்கியதின் ஒரு சிறு பகுதியைக் கூட, வேறு போக்கிலா நிலை அமைந்தாலன்றி, அவர்கள் தொடுக்க மாட்டார்கள். ஆயிரம் பொன் வரவுக்காக ஐந்து பொன் கொடுக்க விரைவர், அதற்காகத் தொள்ளாயிரத்துத் தொண்ணுற்றைந்து கொடுக்கக்கூட முனைவர் — ஆனால், ஆயிரம் பெற்றபின் அதில் ஒன்றுகூடத் திருப்பிக் கொடுக்கவிரும்ப மாட்டார்கள்.

தமிழ் மொழியில் கயவர் நாடும் பொருள் மாற்றுக்குத் 'தா' என்ற சொல்லும்; பண்பாளர் நாடும் பொருள் மாற்றுக்குக் 'கொடு' என்ற சொல்லும்; சான்றோர் நாடும் பொருள் மாற்றுக்கு 'ஈ' என்ற சொல்லும் அமைந்துள்ள அருமைப்பாடும்; திருக்குறளிலும் தொல்காப்பியத்திலும் காணப்படும் இவ் வேறுபாட்டு நுட்பம் சங்க காலத்திலேயே பெரிதும் மறக்கப்பட்டு, பிற்காலங்களில் பேரளவு மாறுபட்டுக் குழப்பமுற்ற நிலையும் கூர்ந்து கவனிக்கத் தக்கன ஆகும்.

உரியர் என்பது இக்குறட்பாவில் இருதடவை வருகின்றது. முதலில் வரும் உரியர் என்பது 'தமக்குரியர்' என முதலசை எடுத்துவந்த சீரின் ஒருபகுதியாக விரைந்து சுருங்கியஇசைப் பாகவும்; இரண்டாவது உரியர் என்பது 'தானே முழுச் சீராய் நலிந்த நீடிசைப்பாகவும் வந்தது காணலாம். கயவர்

எதனையும் ஆய்வாராய்வின்றித் தம் மடியில் கொட்டும் விரைமுயற்சி முனைப்பையும்; சான்றோர் எதனையும் தம தாகக் கொள்ளத் தயங்கி, யாருக்குக் கொடுப்பது மிகு இனப் பயனுடையதாகும், யாருக்குக் கொடுத்தல் மிக இன்றி யமையா இனக் கடன் என்பதற்கே தயங்கி ஆய்வாராய்வு செய்து காலம் தாழ்த்தும் நிலையையும் இந்த இரு 'உரியர்' களின ஓசை வேறுபாடு படம்பிடித்துக் காட்டுவதாகும்.

உரிமை என்ற சொல்லுக்குக் கடமை எதிர்சொல்லாகும் ஆனால், இச் சொல்லின் உண்மைத் தமிழ்ப் பண்பும், பழந் தமிழ்ப் பண்பும் வேறு — இக் காலத் தமிழ்ப் பண்பும், இக் கால உலகப் பண்பும் வேறு.

இக் காலப் பொருளில் உரிமை என்பது கீழ்திசையில் வழங்கும் மண்வெட்டி போன்றது—அது தன்னை நோக்கி, தன்னல நோக்கி எல்லாவற்றையும் திருப்பும். கடமை என் பதோ மேல்திசையில் வழங்கும் மண்தள்ளி[1] போன்றது— அது புறநோக்கி எல்லாவற்றையும் தள்ளுவது. இது இக் காலச் சொற் பொருளேயன்றி, இக் காலப் பண்பு அன்று. ஏனெனில் உரிமையைவிட, கடமை மேலானது என்பதை எல்லோரும் ஒத்துக்கொண்டாலும், இயல்பாக எல்லாரும் விரும்புவது உரிமையே—கடமை ஆற்றுபவர் மேலோர் என்ற உரை வாழ்வில் இல்லா வேதாந்த உரை, எங்கும் உரிமை உடையவர் உயர்ந்தோர், உரிமையற்ற கீழோரே கடமையாற்ற வேண்டும்—கடமை பெரிது என்பதுகூட இதனால் இப் போலி மேலோர் போலிக் கீழோருக்குரைக் கும் வேதாந்த உரை ஆகிவிடுகிறது.

உரிமை, கடமை எல்லோருக்கும் உண்டு, ஒப்பாக உண்டு என்பதும் இன்று வாய் வேதாந்த உரையாய் வழங்குகிறது. ஆனால், இதனை உண்மை வேதாந்த உரை ஆக்கும் பண்பு இன்றைய மனித நாகரிகத்தில் இல்லை, திருக்குறளிலேயே உண்டு—அதை நோக்கி இன்றைய மனித நாகரிகம் தட்டித் தடவி நடைபோட்டுவருகிறது.

1. Spade

தமிழ் மரபிலும் வள்ளுவ மரபிலும் உரிமை, கடமைகள் எதிர் பண்புகள் அல்ல — ஒரே பண்பின் இரு திசைத் திறங்கள் ஆகும்.

உரி என்பது தோல், உரிமை தோல் கடந்து படிப்படியாக விரிந்து செல்லும் அன்புப் போக்கைக் காட்டும். நான் எனது என்று இரண்டாகச் சமய வாணர்களால் கூறப்படும் பற்றுக்கள் இதன் அடிப்படையாகத் தோன்றியவையே. தோலுக்குப் புறமே உடை, உடைக்குப் புறமே அணிமணிகள், அதற்குப்புறமே உடைமைகள், அணிமைகள் சேய்மைகள் என அன்புப் பாசம் விரிந்து செல்லும் இல்லற முறையை இது எடுத்துக் காட்டுகிறது.

கடம் என்பது உடம்பு, கடமை உடம்பு கடந்து படிப்படியாக அக நோக்கி, அதாவது ஆன்மா அல்லது இனம் நோக்கிச் செல்லும் போக்கைக் காட்டும். தான், தனது என்று இரண்டாகச் சமய வாணர்களால் கூறப்படும் தன் முனைப்புக்களின் போக்கை இது குறிக்கும். தான் கடந்த நிலை பேரின்ப நிலை, இன நிலை, அருள் நிலை. தனது கடந்த நிலை இன்ப நிலை, சமுதாய நிலை, பண்பு நிலை. இது இன உடல் கடந்து, சமுதாய உடல் கடந்து, இனமாகிய தன்னை நோக்கி வரும் நிலை குறித்தது.

விலங்குநிலைப் பண்பான தன்னலம், சமுதாயப் பண்பான அன்பு, இனப் பண்பான அருள் என விரிந்து செல்லும் இல்லற நிலையே உரிமை நிலை. இது உரிமையிலிருந்து கடமை நோக்கி மலர்ச்சியுறும் நிலை. இதற்கு மாறாக, தெய்வநிலை அல்லது இனப்பண்பான அருள் நிலை, அதன்பின் மனித நிலை அல்லது அன்பு நிலை, அதன்பின் விலங்கு நிலையான தனிநிலை என விரிந்து செல்லும் துறவு நிலையே கடமை நிலை. இது கடமையிலிருந்து உரிமை நோக்கிச் செல்லும் நிலை.

துறவிகளும் தமக்குரியர், ஆனால் இது அவர்கள் இறுதி நிலை: இல்லறத்தாரும் பிறர்க்குரியர், ஆனால் இது அவர்கள் இறுதி நிலை. இவை விரைவு நீட்டிப்பு வேறுபாடு, ஓசை வேறுபாடுகளால் காட்டப்பெறுகின்றன. முதல் 'உரியர்', 'உரியர்' என எடுத்திசைத்து உரிமை நிலையினையும், இரண்

டாவது 'உரியர்', படுத்திசைத்துக் 'கடவர்' என்ற பொருளுடன் கடமை நிலையினையும் குறித்தது. ஏனெனில் முதலது தமக்கு உரியது மட்டுமன்று, தனக்கேயுரியது—தன் னலத்திலிருந்து தொடங்குவது மட்டுமன்று. தன்னலத்துட னேயே முடிந்துவிடுவது. ஏனெனில் அது பொது நிலை உரிமை நிலையன்று, இழிவு நிலை உரிமை நிலையான கயமை நிலை. இரண்டாவதோ, பொதுநலத்துடன் தொடங்குவது மட்டு மன்று, பொதுநலத்திலேயே முடிந்துவிடுவது—ஏனெனில் அது துறவு நிலை மட்டுமன்று, உச்சநிலைத் துறவு நிலையான தியாக நிலை, தவநிலை.

அன்புடையார் என்பது, 'அன்பிலார்' பற்றி முன் சொன்ன தற்கு நேர்மாருக, அன்வுடைமையின் சால்பை முழுவதும் தமக்கேயுரிய பண்பாகக் கொண்டவர், அதாவது சான்ரேர் அல்லது சான்ரேர் நிலையினும் உயர்ந்தவராகிய தவநிலை யினரான அந்தணர் என்று கூறத்தக்கவர்கள் என்று பொருள்படும்.

முதல்வாசகம் அன்பிலார் பற்றிக் கூறிப்பின் இப்போது அன்புடையார் என்று தொடங்கியதனுலும்; முன்னது நலி விசைப்பாகவும் இறங்கிசைப்பாக்வும் வந்ததற்கு மாருக, பின்னது நலிவிசைப்பின்பின் திடுமெனப் படுப்பிசைப்பாய்த் தொடங்கி, நீள் சீராய் ஓசை நீட்டித்ததுடன் எடுப்பிசைப் பாக முடிந்ததனுலும், நேர்மாருக என்ற இணைப்புப் பொரு ளும், அன்புடைமையின் சால்பு நிறையுடையார் என்ற பொருளும் பெறப்பட்டன.

அன்புடையார் எல்பது பண்பி. இதன் பின்னே இதற்குரிய பண்பு அல்லது இலக்கணம் கூறப்படுகிறது. பண்பியே எழுவாயாய் வந்ததனுல், அன்புடையார் என்று கூறத்தக்கவர் என்ற பொருள் தொனித்தது, சால்பு நிறை வுடையார் என்பதையும் இதுவே சுட்டிக்காட்டிற்று, அன் பிலார், சால்பு அல்லது பண்பின் இழிமுகடாவது போலவே, இவர்கள் பண்பு அல்லது சார்பின் உச்சமுகடு ஆவர்.

அன்புடையாரின் இலக்கணம் இரண்டாம் வாசகத்தின் பிற்பகுதியில், அதாவது இரண்டாம் அடியில் 'என்பும் பிறர்க்கு உயிர்' என்பதனுல் கூறப்பட்டது.

என்பும் பிறர்க்குரியர் என்பது, 'தம் உழைப்பின் மூல முதற் கருவியும், தம் வாழ்வின் மூலமுதலுமான உடம்பின் கடைசிக் கூறுன எலும்புக்கூடுகூட மன்பதை உயிர்களுக்கே உரியதாகப் பெற்றவர்களே யாவர்' என்று பொருள்படுவ தாகும்.

என்பு என்பது எலும்பு என்ற தமிழ்ச் சொல்லின் மிகப் பழமை வாய்ந்த வடிவம். எல்லு என்ற வடிவம் மலையாள மொழியிலும் குமரி மாவட்டப் பேச்சு வழக்கிலும் வழங்கு கிறது. உடல் என்பதற்கு உடம்பு என்ற வடிவம் இருப்பது நோக்குக; எல், உடல் என்ற பழய வடிவங்களினுடன், 'உறுப்பு'ப் போன்ற ஏதோ ஒரு சொற்பகுதி இணைந்தே எலும்பு, என்பு, உடம்பு முதலிய வடிவங்கள் தோன்றி யுள்ளன என்னலாம்.

எல் என்பது ஒளி. என்பு உடம்பிற்கு ஒளியூட்டும் பகுதி என்னலாம். எலும்பு அல்லது என்பு போன்ற பகுதிகளின் வெளித்தெரியும் கூறுகளெல்லாம்—பல் நகம் போன்றவை—ஒளியுடையதாதலும்; பல் நகையெனவும், நகம் நகமெனவும் பெயர் பெறுதலும் இப் பொருளுண்மையை வலியுறுத்து வதாகும்.

உடலழிந்த பின்னும் அழியாது நீடிக்கும் உடற் பகுதி எலும்பு, ஒருசில உயிர்களிலன்றிப் பெரும்பாலானவற்றில் எலும்பே உடலின் உட்கூறு ஆகும். இது மட்டுமன்று. தனிஉயரின் உடம்பிலும், உயிர் மலர்ச்சியிலும் முற்பிறந்தது எலும்பே என்று கூறத்தகும். உயிர் நூலார் முதுகெலும்பு டையன, எலும்புடையன, எலும்பற்றன ஆகியவை ஒன்றுக் கொன்றுமுற்பட்டதெனகூறுகின்றனர் என்பது உண்மையே. ஆனல், உயிர் மலர்ச்சியின் மறை உண்மை இதுவன்று. எலும்புடைய உயிர்கள், சிறப்பாக எலும்புக் கூடுடைய உயிர்கள் என்பவை, உடன்மேல் உடலாக ஈருடல் பெற்ற உயிக்களே. இதில் அக உடலாகிய எலும்புக்கூடு, எலும்

பிலாப் பருவத்திற்குரிய உடலின் பின் மலர்ச்சியான மாறுத லேயாகும். புறத்தோடுடைய உயிர்களில் இதனை நாம் தெளிவாகக் காணலாம். ஏனெனில் புறத்தோடு எலும்பு போல் கடுமையுடையதாயினும். அது பாதுகாப்புக்காக உயிர் பின் மலர்ச்சியாக வளர்த்துக் கொண்டதேயாகும். எலும்புயிர்களில் புறத்தோடு மென்மையாக வளர்ந்து, தசை நரம்புகளை வெளியே வளர்த்துக்கொள்கிறது. புறத் தோட்டுயிர்களிலோ, இவை அகப் பகுதியிலேயே அமை கின்றன.

எலும்பு இவ்வாறு உடலின் உயிர் போன்ற பகுதியா கிறது. அது உடலின் முன்பிறந்தது, இறந்த பின்னும் நீடிப்பது.

இக்குறட்பாவில் என்பும் என்பது இதனாலேயே (எலும்பு கூட—தம் உழைப்பின் மூலக்கருவியும் தம் வாழ்வின் மூல முதலுமான) உடம்பின கடைசிக் கூறான எலும்புகூட என்று பொருள்படுகிறது.

உடம்பு என்பது உயிரின் கோயில்; வாழ் முதல் வளம் நோக்கி, இனவாழ்வு என்னும் கடல் கடந்து செல்வதற்குரிய மரக்கலம்; வாழ்க்கைத் தொழிலுக்குரிய கருவி கலப் பட்டறை. அதன் அடித்தளக் கூறும் கடைசிக் கூறும் எலும் புக் கூடு, எலும்பே.

என்பும் என்ற உம்மை எச்சப்பொருள் கலந்த உயர்வு சிறப்பும்மை யானதால், மற்றெல்லாம் உரியர், உடல் முழு தும் உரியர். அதன் கடைசி அடிப்படைக் கூறான எலும்பும் உரியர் என்ற பொருள் பெறப்பட்டது.

வரு குறட்பாக்களில் (93, 77, 80) தொடர்ந்து வழங் கப்படும் என்பு என்ற இச்சொல் வகையில், என்பு உயிரின் கருவியான உடலின் அடிப்படை உயிர் நிலை உறுப்பு என்ற கருத்தை இக் குறட்பாவும்; இதனுடன் தொடர்புடைய கருத்துக்களையே ஆங்காங்கு மற்றக் குறட்பாக்களும் விளக்கு கின்றன. இவை அவ்வக் குறட்பா வுரைகளில் விளக்கப்பட விருக்கின்றன.

எலும்பின் வளர்ச்சிக்கு முற்றிய, ஆனல், புற வளர்ச்சி தூண்டி, அக வளர்ச்சிக்குப் பாதுகாப்பும் ஆக்கமும் தருகிற என்புத் தோட்டையே நாம் எலும்பு என்கிறோம். அதன் உள் வளர்ச்சிக்குரிய முதிரா இன வளர்ச்சிக் கூறுகளே மச்சை என்றும் மூளை என்றும் நரம்பு நாடிகள் என்றும் விரிவுற்ற உயிரின் அகவாழ்வு முழுவதும் இயக்குகின்றது.

என்பும் என்பதனல் இங்ஙனமாகத் தம் புதுவாழ்வும் அகவாழ்வும் என்பது பெறப்பட்டது.

பிறர்க்கு என்ற சொல் இங்கே மன்பதை உயிர்களுக்கே என்ற பொருள் தருவதாகும்.

பிறர்க்கு உயர்திணையாயினும், என்பும் என்ற குறிப்பால் அது எலும்பும் உடலும் உடைய எல்லா உயிர்க்கும் என்பது சுட்டிற்று.

மேலே தமக்கு என்பது பிறர்க்கன்றித் தமக்கு மட்டுமே என்று பொருள்பட்டது. தமக்கு என்பது எடுப்பிசைப்பாகி ஒரு சீரின் பகுதியாய், உரியர் என்பது பின்தொடர, பிறர்க்கு என்பதோ அதற்கு எதிரிணையாகி, தலிந்து தனிச் சீராகி, உரியர் என்பதைப் பின்னூர்ந்து வந்தது. இதனல் இதில் தமக்கன்றிப் பிறர்க்கே என்னும் பொருள் தொனித்தது.

உரியர் இவ்விரண்டாம் வாசகத்தில் கொள்ளும் பொருள் முதல் வாசகத்தின் இறுதியில் உள்ள உரியர் என்பதன் கீழே கூறப்பட்டது. இம் முறையில் முதலாவது உரியர் உரிமை நிலை சுட்டியது போலவே, இரண்டாவது உரியர். கடமை நிலை சுட்டி, கடமையாகக் கொண்டவர் என்னும் பொருள் உடையது ஆகும்.

சிறப்புரை: இனப்பண்பின் அளவுகோல் அன்பே. அப் பண்பின் மூச்சாய் விளங்குபவர் முழு அன்புடையோர். இவர்கள் தம் உழைப்பெல்லாம் இனத்துக்கு அளித்து, தம் வாழ்வையே மறந்த தியாகச் செம்மல்கள் ஆவர். இவர்களே இனத்தை ஆட்சி செய்பவர்கள்; சமுதாயத்தை நிலைநிறுத்துபவர்கள்; அறத்தை, அற

ஆழியை இயக்குபவர்கள். அவர்களது வாழ்வு மட்டுமென்றி, மாள்வும் இனம் வளர்க்கிறது. அறத்துக்கும் சமுதாயத்துக்கும் இனத்துக்கும் உரிய வளர்ச்சியின் அடிப்படை அவர்களே.

தன் முனைப்பை நேராக்கி, தன்னலத்தை நிலமாக்கி அந் நிலத்தில் நின்று அன்புடைமை நோக்கி, அன்புடையார் இயக்க இயங்குபவரே இன சமுதய வாழ்வில் மிகப் பெரும்பாலாரான நன்மக்கள். சமுதாய வாழ்வு என்னும் கட்டடத்தையும் இன வாழ்வு என்னும் மோட்டையும் நிலைநிறுத்த உதவும் தூண் போன்றவர்களே அவர்கள். அவர்கள் வாழ்வால் சமுதாயம், இனம் வளரும்: அவர்கள் தாழ்வால், அவை தாழும். ஆனால், மேலோர் அவர்கள் தாழ்வையும் வாழ்வாக்கப் பாடுபட்டு அவர்களையும் சமுதாய இனங்களையும் வாழ்விப்பவர் ஆவர்.

தன் முனைப்பை வாழ்வாக்கி, தன்னலத்தை உயிராக்கி, அன்புடைமை சிறிதுமில்லாது வாழ்பவர் உண்டானல், அவர்கள் இனமழிக்கும். சமுதாய உருவழிக்கும், அற மொழிக்கும் கயவரேயாவர். அவர்கள் வாழ்வு இன, சமுதாய அறங்களை வேரறுக்கும். அவர்கள் மாள்வும் அவற்றின் உரம் கெடுக்கும். மேலோரிடையே இனத் தலைவராகிய அந்தணர் அவர்கள் மாள்வையும் தம் மாள்வாக்கித் தடுத்து, அவர்கள் தாழ்வை வாழ்வாக்கி, இன அழிவு தடுக்க முனைபவர் ஆவர். அதே சமயம் சமுதாயத் தலைவராகிய ஒழுக்கத்து நீத்தாரும், சான்றோரும் அவர்கள் வாழ்வு தடுத்து அழித்தேனும் சமுதாய இனம் காக்கப் பாடுபடுவர்.

பொருள்வளம்: (1) இக்குறட்பாவில் அன்பிலார் என்ற கூவிளமாகிய முதற் சீரின் கவிவிறங்கிசைப்பு அன்பிலார் மக்களல்ல, மாக்கள்—இன அழிவாளரான கயவர் என்பதையும்; நல்ல காலமாக மனித இனம்

முழுமையிலும் அன்பிலாக் கயவர் மிகமிகக் குறைவு, கிட்டத்தட்ட இல்லாததனாலேயே மனித இனம் வாழ்கிறது, மனித இன நாகரிகம் வளர்கிறது என்பதையும்; ஆயினும் கயமை இருக்கும் அளவுக்கு, வளரும் அளவுக்கு அவர்கள் தோன்ற இடமளித்த இனமே அழியும் என்பதையும்; அவர்களை இனத் தலைவராகிய அந்தணர் தம் அன்பாலேயே, தம் தியாகத்தாலேயே உயர்ந்த முயலினும், அவ்வந்தணர் தியாகமும் இனத்துக்கு இழப்பாதலின், சமுதாயத் தலைவராகிய ஒழுக்கத்து நீத்தாரும் பிறரும் அவரைஒறுத்தும் அழித்துமே இனத் தடை நீக்கப் பாடுபடுவர் என்பதையும் ஓசை ஒன்றாலேயே உணர்த்திற்று.

அன்பிலார், அன்பின்மை உடைய அளவில், சமுதாய வாழ்வில் நட்டப்பொறுப்பும், இனவாழ்வில் அழிவுப் பொறுப்பும் உடையராவர். அவர்கள் வாழ்வு சமுதாய வாழ்வை நின்றழிக்கும், இனவாழ்வை அன்றே அழிக்கும்; அறவாழ்வை அவர்கள் தோற்றுவாயே நிலைகுலைத்துவிடும்.

அன்புடையார் என்னும் சீர் கூவிளங்காயாக, 'அன்பிலார்'எபதன் மேல் ஒருநேரசை மிக்கதாய், திடுமெனப்படுப்பிசைப்பாய் உயர்ந்து, நின்று நீண்டு எடுத்திசைத்து ஏற்றிசைப்பாகவும் நிறைவிசைப்பாகவும் நிலவிற்று. இது பண்பின் முகடாய் நின்ற இன முதல்வராகிய சான்றோரும் சான்றோருட் சான்றோராகிய அந்தணரும் இவ்வன்பு நிறைவாலேயே, தாம் ஒரு சிலராயினும், ஒருசிலராகவேயுள்ள கயவர் தோன்றிய வீடத்து, அவர்கள் அழிவைத் தாம் ஏற்று, இன அழிவு தடுக்கத் தாம் மாண்டேனும் இனம் வாழ

உழைக்கும் மாண்பினர் என்பதையும்; அவர் தோன்றி வாழும் பெரும் பேறுபெற்ற இனம் மாளாது வாழும் (உண்டால் அம்ம உலகம் எனத் தொடங்கும் சங்கப் பாடல் காண்க) என்பதையும்; அவர் மாளாது வாழவே, அதன் மூலம் இனப் பொங்கல் வாழ்வு ஊக்கவே ஒழுக்கத்து நீத்தாரும் அவர் வழி நின்ற அரசியல் ஆட்சி மரபினரும் ஒறுப்பும் வன் செயலும் (மறமும்) பின்பற்றுகின்றனர் என்பதையும்; அவர் வாழ்வின் அன்பலை அற அலையாகி, அவர்கள் பிறந்த இனமன்றி, அதனை அடுத்து 'வாழும்' இனங்களும் வாழ அவ்வினங்களிலும் அன்பலை பாயவிட்டு வாழ்வலை பரப்பும் என்பதையும்; அவ்வன்புடையார் ஆட்சி இன ஆட்சி, தெய்வ ஆட்சியாகி, இனத்தை மாளாத் தெய்வ இனம் ஆக்கும் என்பதையும், ஓசையாலேயே விளக்கிற்று.

(2) எல்லாம் என்பதற்கு எதிரிணையாக என்பும் என்பது வந்தது. இரண்டுமே ஏற்றிசைப்பாகவும் நீட்டிசைப்பாகவும் வந்தன. ஆனால், எல்லாம் என்பதன் பின்னசை நெடிலானாலும் அடங்கிச் செறிவுற்று இசைப்பதும், என்பும் என்பதன் பின்னசை குறிலாயினும்விசைத்து நீண்டிசைத்ததும் கவனித்தற்குரியன ஆகும். இதனால் அன்பிலார் உழையாதவர் ஆதலால், உடலையும் உடலுக்குப் புறம்பான பிறர் உழைப்பாகிய எல்லாப் பொருளையும் தமக்கு 'உரிமையிலா' உரிமை யாக்க விரைவர் என்பதையும்; நேர்மாறாக அன்புடையார் நிறை உழைப்புடையவரேயாயினும் (செறிவிசைப்புக் காண்க) அவ்வுழைப்பின் பயனாகிய புறப் பயனை மட்டுமன்றி, உழைப்புக்கு மூலக் கருவியான உடலையும், அவ்வுடலுக்கு ஆதாரமான எலும்பையும்

பிறருக்கே உரியன (கடமைப்பட்டனவாகக் கொள் வர் என்பதையும் சுட்டிய அழகு நல நயம் கூர்ந்து கண்டு உணர்ந்து இன்புறத்தக்கது ஆகும்.

(3) அன்பிலாக் கயவரால் வரும் இன அழிவு தடுப்பதற்கென அன்புடையார் தம் உயிரும் கொடுப் பர் என்பதை 'என்பு' என்ற சொல் வழங்கிடு இங்கே தொலைத் தொனிப் பொருளாகச் சுட்டிக் காட்டிற்று.

தேவர் பகை முடிக்க இந்திரனுக்கு வச்சிரப் படைக்காகத் தம் என்பை அளித்த ததீசி முனிவர் கதை, புறவின் துயர்தீரத் தன் உடலின் தசையறுத் தளித்த சிபிச் சோழன் கதை ஆகியவை திருவள்ளு வர் காலத்துக்கு முற்பட்டனவோ, பிற்பட்டனவோ, யாம் அறியோம். ஆனால், இக் கதைகள் அல்லது நிகழ்ச்சிகள் வள்ளுவர் குறட்பா வழியாகவோ, அல்லது அவர் சிந்தனையின் மூலக்கிளை வழியாகவோ தாம் பிறந்திருக்க வேண்டும் என்னலாம். கீழை யுலகில் உலகிற்குக் கங்கைநீர் கொணரப் பகீரதன் பட்டபாடும், மேலையுலகில் கிரேக்கமரபிலும் உலகுக்கு அனற் கொழுந்து கொணர அருந்துயருழந்த புரொமீ தியஸ் பட்டபாடும் இந்தத் தவம் நினைவூட்டுவனவே யாகும்.

(4) உரியர் என்ற ஒரே சொல் இரண்டடியிலும் வந்து மேலீடாக ஒரே பொருள் தருவதாகத் தோற்று கிறது. எல்லா உரையாசிரியரும் அவ்வாறே கொண் டுள்ளனர், அதில் தவறும் ஒன்றும் இல்லை. ஆயினும் ஓசை மூலம் முந்திய உரிமை, உரிமையின் இழிவு, உரிமை நிலையின் இழிபு அகடு குறிக்கும் நிலையையும், பிந்திய 'உரிமை' உரிமையின் உயர்வு, கடமை நிலை

யின் உயர் முகடு குறிக்கும் நிலையையும் திருவள்ளுவர் குறித்துக் காட்டியுள்ளார் என்பது காணத்தக்கது. இதன் விரிவு விளக்கவுரையில் கீழே காண்க.

'தமக்கு உரியர்' என்ற இரண்டு சொல்லும் ஒரு சீர். அத்துடன் இதில் உரியர் இரண்டாவது சொல். ஆனால், 'உரியர் பிறர்க்கு' என்பதில் 'உரியர்; என்பதும் 'தமக்கு' என்பதும் இரு சீர்கள். 'உரியர்' என்ற முதற்சொல் இவற்றுள் கொண்ட ஓசை வேறுபாடு முன்பே கூறப்பட்டது. இவற்றால் கயவர் பிறரை யழித்துத் தாம் நலமுறுதலை உரிமையாகக் கொள்பவர் என்பதும், மேலோர் தம்மை யழித்துப் பிறர் நலமுறுவித்தலைக் கடமையாக்கிக் கொள்பவர் என்பதும் வலியுறவு பெற்றன.

(7) இக் குறட்பாவில் கயவர் இலக்கணமும், மேலோர் இலக்கணமுமே கூறப்பட்டன. இரு சாராரும் மிகமிகச் சிறுபான்மையினராகவே இருக்க முடியும். முழு மிகையான பெரும்பான்மையர் இடைப்பட்ட நிலையினரே. இதனால் அழிவுக்கும் ஆக்கத்துக்கும் உரிய கூறுகள் கூறப்பட்டு, முன்னது விலக்கிப் பின்னது வலியுறுத்தப்பட்டது.

கயவர் இலக்கணம் முதலிலும், மேலோர் இலக்கணம் பின்னருமே கூறப்பட்டன. கயவர் இனத்தில் அழிக்கப்படாத விடத்து மேலோர் அழிவர், இனமும் நீடித்து நில்லாது அழியும் என்பது இதனால் தெரிவிக்கப்பட்டது. இதுவே அறவாழ்வின் பாதுகாப்புக்கு அரசியலின் இன்றியமையாமையையும் வற்புறுத்தின்று. அரசியலின் ஒரே கடமை, இன்றியமையாக் கடமை, கயமை ஒழிப்பே. அற ஆக்கம் அரசியலின் கடமை

யன்று, உரிமை. அது கயமை ஒழிப்பின் பின்னரே செய்ய வேண்டிய செயல் ஆகும்.

(6) இக் குறட்பாவில் 'என்பு' என்ற சொல் வழக்காற்றின் தனிப் பண்பு வளம பெரிது. அதன் விளக்கத்தை அடுத்த குறட்பாவுரையில் பொருள் வளப் பகுதியில் (5-ல்) காண்க.

தனிக் குறிப்புக்கள்: (1) 'அன்பு இலார்' என்பதற்கு அன்பு இல்லாதார் என்றே பெரும்பாலான உரையாசிரியர்களும் மொழி பெயர்ப்பாசிரியர்களும் கூறியுள்ளனர். பரிதியார் 'மனத்தில் அன்பு இல்லாதவர்' என்றும்; புலவர் ந.சி. கந்தையா பிள்ளை 'உயிர்களிடத்து அன்பு இல்லாதவர்' என்றும் உரைத்தனர். 'அன்பீர நெஞ்சமில்லாதவர் (சிநேஹார்த்ரமாய ஹிருதயம் இல்லாதவர்)' என்று மலையாள மொழிபெயர்ப்பாளர் வெண்ணிக்குளமும்; 'அறவே அன்பு இல்லாதவர்'[1] என்று ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர்கள் ட்ருவும் முந்நீர்ப்பள்ளம் எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையவர்களும் பொருள் கொண்டனர். 'ஒருவர் மாட்டும் தம் நெஞ்சில் அன்பிலாதவர் யாவரோ, அவரே' என்றனர் காலிங்கர்.

இக்குறட்பா வாசகர்களுக்கிடையிலும் 'ஆனால்'[2] என்று ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூவும், 'மாறாக'[3] என்று ஐ. டி. தங்கசாமியும்; 'மற்றவ்வாறன்றி' என்று காலிங்கரும் இடையீடு செய்து பண்பு மாற்றுப் பொருள்கோள் காட்டினர்.

அன்புடையார் என்பதற்குக் கிட்டத்தட்ட எல்லாருமே 'அன்பை உடையார், அன்புள்ளவர்' என்றே பொருள் செய்துள்ளார்கள்.

'என்பும்' என்பதையும் 'எலும்பும்', 'எலும்புகூடு' என்றும்; 'உடம்பும்', 'உடம்புகூட' என்றும்; 'உடம்

1. Those who are destitute of love, the loveless 2. But
3. On the olher nand

புக்கு அங்கமாகிய எலும்பினையும்' என்றுமே பலரும் கொண்டுள்ளனர். பரிமேலழகர் என்பை உடம்புக்கு ஆகுபெயராகவே கொண்டு, 'என்பு, ஆகுபெயர்' என்று விளக்கவுரை தந்தார்.

என்பும் பிறர்க்கு உரியதாக்கும் தியாகச் செயலுக்குச் சிபிச் சோழன் கதையைக் குறிப்பிடும் சங்கப்பாடல் (புறப்பாடல் 43) பரிமேலழகரால் மேற்கோளாகக் காட்டப்படுகிறது.

> தன்கம் புக்க குறநடைப் புறவின்
> தபுதி அஞ்சிச் சீரை புக்கோன்'

என்பதே அவ்வடிகள்.

அன்பிலார், அன்புடையார் ஆகிய இரண்டின் பொருள்கோளிலும் ஓரளவு இம்மணி விளக்கவுரை நோக்கியுள்ளார் கவிஞர் இராமலிங்கனார்.

'அன்பில்லாமையின் உச்சம், எதையும் எக்காரணத்தாலும் இன்னொருவருக்குத் தராது. அன்புடைமையின் உச்சம், பிறருக்கு உதவி செய்யத் தன்னிடத்திலுள்ள எதையும் கொடுத்துவிட எப்போதும் தயங்காது' என்பதும்; 'எதையும் கொடுத்துவிடுவார்கள் என்பது உயிரையும் தருவார்கள் என்ற பொருளில்தான்' என்பதும் அவரது விளக்கவுரைப் பகுதிகள்.

'என்பு என்பதற்கு உடம்பு என்றும் எலும்பு என்றும் அர்த்தம் உண்டு' என்றும் அவர் கூறுகிறார்.

வண்டார் குழலி (மண்டோதரி) இராவணன் மாள்விலும், கோப்பெருந்தேவி பாண்டியன் நெடுஞ்செழியன் மாள்விலும் உடன்கட்டை ஏறிய செய்திகளையும்; கோப்பெருஞ்சோழன் இறக்கப் பிசிராந்தையார் உயிர்விட்ட செய்தியையும் புலவர் குழந்தை இக்குறட்பாவின் வாசகங் குறித்த தியாக விழுப்பத்துக்குச் சான்றுகளாகக் காட்டியுள்ளார்

தியாகச் செயலை வற்புறுத்திப் பிறரும் என்பும் என்பதற்குப் பொருள் விரித்துள்ளனர். 'பொருளேயன்றித் தம் உடம்

புக்கு அங்கமாகிய எலும்பினையும்' என்று மணக்குடவரும்; 'தமது பொருளெல்லாம் கொடுப்பதன்றித் தம் உடம்பு தானும்' என்று காலிங்கரும்; பொருளால், மாத்திரம் அன்றித் தம் உடம்பாலும்' என்று புலவர் ந. சி. கந்தையாவும்; 'அப்பொருள்களேயன்றி உடம்பினையும்' என்று புலவர் குழந்தையும், 'தியாகம் செய்து'[1] என்று எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையும்; ஐ. டி. தங்கசாமியும் விளக்கியுள்ளனர்.

(2) 'எல்லாம்', 'என்பும்' ஆகிய இரண்டிடத்தும் பரிமேலழகர் உம்மை (முன்னதில் தொக்கு) நிற்பதாகக் கொண்டார். முன்னது முற்றும்மை, பின்னது இழிவு சிறப்பும்மை என்றும் கருதினர். அத்துடன் அவர் 'ஆன்' என்ற மூன்றும் வேற்றுமை உருபு தொக்கு நிற்பதாகக் கொண்டு, இவ்விரு சொற்களுக்கும் 'பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளாலும்' என்றும், 'அவற்றானேயன்றித் தம் உடலாலும்' என்றும் பொருள் கூறினர்.

'தமக்கு' என்பதிலும் அவர் பிறர்க்கின்றித் தமக்கு மட்டுமே என்ற பொருளில் பிரிநிலை ஏகாரம் வருவித்துள்ளார்.

(3) 'அன்புடையார்க் கல்லது அறம் செய்தல் அரிது என்றாயிற்று' என்பது மணக்குடவர் கருத்துரை.

'அன்புடைமைதான் மனிதனை மனிதனாக்குவது' என்பது கவிஞர் இராமலிங்கனார் கருத்துரை.

73\. தசையுடன் என்பு: உயிருடன் அன்பு:
உயிர்நூலார் கண்ட இனமலர்ச்சிப் பண்பு இது!

[2]அன்போடு இயைந்த வழக்கு என்ப: [1]ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

பொ-ரை: (இன மேலோராகிய உயிர் மலர்ச்சி நூலோர்) அம் மலர்ச்சியால் ஏற்பட்ட இனப் பண்பில்

---

[1]. Sacrifice

உயர்வுற்றுப் பண்பட்டு, உயர் பண்பாட்டு வளத்தினை எய்திய அருமைப்பாட்டினை உடைய உயர்தர உயிர் இனங்களுக்கு (அவற்றின் தசையுடம்பு) எலும்புக் கூட்டோடு நீடித்துப் பொருந்தி வளர்ந்துள்ள மலர்ச்சி மரபானது (அவ்வுயர் உயிரினங்களின் இன வாழ்வு) அன்பு என்னும் திறந்தோடு ஒத்து நீடித்து இணைந்து வளர்ந்துள்ள பண்போடியைந்த பண்பு மரபே என்று கூறுகின்றனார்.

கு-ரை: உயர் உயிரினங்களில் எலும்போடு தசை கூடி இணைந்து வளர்ந்து வந்துள்ள மரபு அவற்றின் உயிர்நிலை அன்புப் பண்போடு கூடி இணைந்து வளர்ந்து வந்துள்ள மரபுக்கு உவமை யாவது மட்டுமன்று; அவை இரண்டும் மரபில் இணைந்து ஒருங்கு வளர்ந்த காரண காரியத் தொடர்புகள் ஆகும். இரண்டும் ஒரே இன மலர்ச்சியின் ஈரிணையான துணைப் பயன்கள்.

உயிர்நூலாரும் உயிர் மலர்ச்சி நூலாரும் நுணுகி உணர்ந்து ஒப்பாய்வு கண்டு உரைத்த மெய்ம்மை இது.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்றே; ஆனால் அது ஒரு கூற்று வாசகத்தைத் தொகையாக உள்ளடக்கி வந்தது. இதன் சொற்கள் அவாய்நிலைச் சொற்கூறு ஒன்று உட்பட இரண்டே.

அவையாவன:

1. (உயிர் மலர்ச்சி நூலோர்) [இது குறட்பா வாசகத்தின் தோன்றா எழுவாய்].
2. ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு (அவ்வுயிர்க்குத் தம் இன வாழ்வு) அன்போடு இயைந்த வழக்கு என்ப.

இரண்டாவது வாசகத்தில் 'ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு (அவ்வுயிர்க்குத் தம் இன வாழ்வு) அன்போடு இயைந்த வழக்கு' என்ற கூற்று வாசகம் வாசக உறுப்பாய் ஒரு பெயர்த்தொகை நிலையாக வந்தது.

இக் குறட்பாவில் மூன்றும் சீர் மட்டுமே காய்ச்சீர். நான்காம் சீர் மட்டுமே கூவிளம், கடைச் சீர் 'பிறப்பு' வாய்பாட்டுத் தொல்காப்பிய மரபின் நிரைபசை. அன்போடு, என்போடு ஆகிய இரண்டுமே நெடிலீற்றுத் தேமா. பிற புளிமா, மென்புணர்ப்பான நெடுநிரை தொடர்ந்த குறநேரசைச்சீர்.

குறட்பாவில் முதலடியின் முதல் கடைச் சீர்கள் மட்டுமே மோனை. இரண்டாம் அடியில் முதல் இரு சீர்கள் மட்டுமே மோனை.

இயைந்த இரண்டும் சொல்லடுக்கு. என்ப. என்போடு ஒலியடுக்கு. வழக்கு; தொடர்பு ஆகிய இரண்டும் பொருள் அடுக்கு.

இக் குறட்பாவில் னகர பகரங்களும், அ. ஆ, எ ஆகிய அங்காப்பு உயிர்கள், இகர உகர ஐகார யகரங்களாகிய இடுக்கொலிகள் ஆகியவைகளும் இயைந்து யாழிசையினும் இனிய இசையொலி தந்தன. அத்துடன் குறட்பா முழுவதும் மெல்லலைகளென எழுந்தெழும் தமிழும் எழில் நயமுடையதாய் இலங்குகின்றது. அன்போடு. என்போடு ஆகிய சீர்களின் இரண்டாம் அசைகளும், வழக்கென்ப, ஆருயிர்க்கு, தொடர்பு ஆகிய சீர்களின் முதலிரண்டசைகளும் எடுத்திசைத்து, அலைமுகடுகளாய், ஏனையவை அலைப் பள்ளங்களின் மெல் ஏற்ற இறக்க அலைவுகளாய் இயல்வது காணலாம்.

[உயிர் மலர்ச்சி நூலோர்] 'ஆருயிர்க்கு [அவற்றின் தசையுடம்பு] என்போடு இயைந்த தொடர்பு [அவற்றின் இன வாழ்வு] அன்போடு இயைந்த வழக்கு' என்ப என்பது தக்க அவாய்நிலைகள் வருவிக்கப்பட்ட நிலையில் இக் குறட்பாவின் முழு வாசகம் ஆகும்.

[உயிர் மலர்ச்சி நூலோர்] என்பது இம் முழு வாசகத்தின் தோன்றா எழுவாயாய். என்ப என முடியும் முழுக் குறட்பாவாகிய நெடுநீள் தொகையைப் பயனிலையாகக் கொண்டது.

இதில் நூலோர் என்பது நூல் என்னும் பெயரடியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர். ஆர் என்ற பலர்பால் விகுதி இதனுடன் இணைந்து நூலாரின் தொகுதி என்ற பொருள்பட 'ஓர்' என்று திரிந்தது. நூலோர் நூலுக்குரியவர், நூலாய்பவர், நூல் வல்லுநர்களின் தொகுதி என்று பொருள்பட்டது.

நூல் என்பது ஏடன்று, அறிவாராய்ச்சித்துறை.

உயிர் மலர்ச்சி நூலோர் என்பது உயிர் மலர்ச்சியைப் பற்றி ஆராயும் நூலோர் என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

உயிர் மலர்ச்சி என்பது உயிரின் மலர்ச்சி என ஆறும் வேற்றுமைத் தொகையாகவோ, உயிர்களின் இன வகை வளர்ச்சிகளைப்பற்றிய மலர்ச்சி என ஆறும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகவோ கொள்ளத்தக்கதாகும்.

மலர்ச்சி என்பது 'சி' விகுதி பெற்ற தொழிற் பெயர். விகுதியின் சகரம் இரட்டித்தது. மலர் என்ற பெயர்ச் சொல்லே இங்கே முதலுயிரிலிருந்து இரண்டாம் உயிருக்கு அழுத்த மாற்றம் பெற்றதால் வினைப்பகுதியாயிற்று.

உயிர் என்பது உயிர்ப் பண்பு. இது இப் பண்பினையுடைய தனி உயிர்க்கும், அதன் குழுவுக்கும், குழுக்கள் பல அடங்கிய உயிர்ப் பேரினத்துக்கும் படிப்படியாக ஆகிப் பன்மடி ஆகுபெயர் ஆயிற்று. உய்த்து இருப்பது உயிர் என்ற காரணப் பெயராக இச் சொல் பண்டைத் தமிழில் எழுந்தது ஆகும்.

'ஆருயிர்க்கு [அவற்றின் தசையுடம்பு] என்போடு இயைந்த தொடர்பு [அவற்றின் இனவாழ்வு] அன்போடு இயைந்த வழக்கு என்ப' என்பது அதன் ஈற்றுச் சொல்லாய் வந்த என்ப என்பதனை ஒப்ப, மேலே அவாய்நிலையாய் வந்த உயிர் மலர்ச்சி நூலோர் என்பதை எழுவாயாகக் கொண்ட வினைப் பயனிலை ஆகும்.

என்ப என்பது பலர்பால் வினைமுற்று. பகரம் அப்பால் சுட்டிக் காட்டும் காலப் பொதுவாய் வந்த விகுதி. இவ் விகுதி இடைநிலை ஏற்பதில்லை. என் என்ற வினைப் பகுதி கூற்றுப் பொருளுடையது. இதன் எழுவாய் நெடுநீள் தொகையின் எழுவாயாகிய உயிர் மலர்ச்சி நூலோர் என்பதே. இதன் செயப்படுபொருளோ, வழக்கு என முடியும் நெடுநீள் தொகையின் எஞ்சிய பகுதியே யாகும்.

ஆருயிர்க்கு [அவற்றின் நசையுடம்பு] என்பதோடு இயைந்த தொடர்பு. [அவற்றின் இனவாழ்வு] அன்போடு இயைந்த வழக்கு என்ற கூற்றுவாசகம் முழுதும் ஒரே நீள் தொகையான பெயர்ச்சொல்லாய், 'என்ப' என்ற வினைமுற்றின் செயப்படுபொருளாய் நின்றது. என்ப என்பதுடன் சேர்த்து அதனை இரண்டாம் வேற்றுமைத் தொகை என்னலாம்.

ஆருயிர்க்கு [அவற்றின் நசையுடம்பு] என்போடு இயைந்த தொடர்பு என்ற தொகை அதன் ஈற்றுச் சொல்லை ஒப்பப் பெயர்ச்சொல்லாய், கூற்று வாசகத்தின் எழுவாயாய், வழக்கு என முடியும் பின்வரும் தொகையைப் பயனிலையாகக் கொண்டது.

ஆருயிர்க்கு என்பது நான்காம் வேற்றுமைப் பெயர். 'கு' அவ்வேற்றுமை உருபு. இவ்வேற்றுமைப் பொருள் குறட்பா வாசகத்தில் மைய நிலையாய் நின்று, இத்தொகையில் இயைந்த என்பதனையும், பயனிலையான தொகையில் இயைந்த என்பதனையும் தழுவி, பயனிலையாகிய தொகையின் வினைப் பயனுடன் சென்று முடிந்தது. இம் முத்தொடர்பையும் காட்டும் முறையிலேயே, முன்றாவது தொடர்பை அது நேரடியாகக்கொள்ளவிட்டு, எழுவாய்த் தொகையில் அது 'அவற்றின்' என்ற சுட்டு மூலமாகவும், பயனிலைத் தொகையில் 'அவற்றின்' என்ற சுட்டின் மூலமாகவும் இரு தடவை இரண்டு இயைந்த என்ற வினைகளையும் தழுவியதாக இம் மணிவிளக்கவுரையில் வருவித்துக் காட்டப்பட்டது.

ஆருயிர் என்பது அருமை வாய்ந்த உயிர் எனப் பண்புத் தொகை. இதில் அருமை என்பதன் ஈறு கெட்டதுடன், இணைக் குறில் பகுதி

யடியாதலின், அவற்றின் பொது மரபுப்படி வருபெயர் உயிர் முதலின் முன் அடி உகரம் கெட்டு, அடி முதலின் உயிர் நீட்டம் பெற்றது.

அவற்றின் தகையுடம்பு என்ற அவாய்நிலையில், அவற்றின் என்ற சுட்டு ஆருயிர் என்பதனையே சுட்டு முதலாகக் கொண்டது. இன் ஆறும் வேற்றுமை உருபு. அற்று அல்லது வற்று, சாரியை. அவை என்ற பெயர், சாரியை அற்று ஆயின் ஈறுதி ஐ கெட்டும், வற்று ஆயின் இறுதி வை கெட்டும் வந்தது என்னலாம். சாரியை ஈற்றுயிர் உருபுயிர் முன் கெட்டது. தகையுடம்பு தகையாலாகிய உடம்பு என மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. இத்தொகை பெயர்ச் சொல்லாய், இத் தொகையில் வரும் இயைந்த என்பதன் வினைமுதலாகித் தொகைப்பட்டது.

என்போடு என்பது மூன்றும் வேற்றுமைப் பெயர். 'ஓடு' அவ் வேற்றுமையின் உடனிகழ்ச்சிப் பொருள் உருபு. உருபின் உயிர் முன் பெயரீற்று உகரம் கெட்டது. இவ் வேற்றுமைப் பொருள் அடுத்து வரும் இயைந்த என்ற வினை தழுவித் தொகைப்பட்டது.

இயைந்த என்பது பெயரெச்சம். 'அ' அவ் வெச்ச விகுதி. தகரம் இறந்தகால இடைநிலை. இதன் முன் தகரம் சந்தியாய் வந்து நகரமாகத் திரிந்தது என்பர் இலக்கண நூலோர். இயை என்பது வினைப் பகுதி. இப் பெயரெச்சம் தொடர்பு என்ற ஆகுபெயர் தழுவிற்று. அவற்றின் தகையுடம்பு என்பதே இதன் வினைமுதல்.

இயைந்த தொடர்பு என்பது இயைந்த இயையின் தொடர்பு எனப் பொருள்படும் பயன்தொக்க பெயரெச்சம் ஆகும்.

தொடர்பு என்பது 'பு' விகுதி பெற்ற தொழிற் பெயர். தொடர் என்பது வினைப் பகுதி. இங்கே தொடர்தல் என்ற தொழிலின் பெயர், அத் தொழிலால் ஏற்படும் தொடர்ந்த மரபையும், அம் மரபால் ஏற்படும் மரபுப் பண்பையும் இருமடி ஆகுபெயராகச் சுட்டிற்று.

[அவ் உயிரினங்களின் இன வாழ்வு] அன்போடு இயைந்த வழக்கு என்பது கூற்று வாசகத்தின் பெயர்ப் பயனிலையாய், தொடர்பு என முடியும் தொகையை எழுவாயாகக் கொண்டது.

அவ் உயிரினங்களின் என்பதில் அகரச் சுட்டு ஆருயிர்க்கு என்பதையே சுட்டு முதலாகக் கொண்டது. இன வாழ்வு இனத்தை அளாவிய வாழ்வு என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. இது பின்வரும் இயைந்த என்பதன் எழுவா யாயிற்று.

அன்போடு என்பது மூன்றாம் வேற்றுமைப் பெயர். ஒடு அவ் வேற்றுமையின் உடனிகழ்ச்சிப் பொருள் உருபு. பெயரீற்று உயிர், உயிர் முன் கெட்டது. இவ்வேற்றுமைப் பொருள் இயைந்த என்பதன் வினை தழுவிற்று.

இயைந்த என்பது மேல் வந்த இயைந்த என்பதே போன்ற பெயரெச்சம். இலக்கணமும் அதுவே. இது பின் வரும் வழக்கு என்பது தழுவிற்று. அவ்வுயிர்களின் இனவாழ்வு என்பதே இதன் எழுவாய்.

வழக்கு என்பது பெயர்ச்சொல். இது வழங்கு என்ற வினைப் பகுதியின் வலித்தல் விகாரத்தால் வந்த தொழிற் பெயர். வழங்குதல் பரந்து நீடித்து நிலவுதல். இது நிலவும் பண்புக்கு ஆகுபெயராய் வந்தது. வழக்கு என்பது தொடர்ந்த மரபின் மாறா அடிப்படைப் பண்பையும் இடையறா வளர்ச்சியையும் குறித்தது.

வி - ரை : அற வாழ்வின் மழை வளத்துக்குரிய பயிர் வளப் பண்பான அன்புடைமையின் சால்பு முப்பால் வாழ்வு களுடனும் தொடர்புடையதாயினும், இக் குறட்பாவுடன் முடிவுறும் இவ் அதிகாரத்தின் மூன்று குறட்பாக்களும் (71-73) அதன் இன வாழ்வுத் தொடர்பே வலியுறுத்துவன ஆகும். அவ்வழி, இக் குறட்பா உயிரின மலர்ச்சி நூல்[1] காட்டும் ஒரு பேருண்மைக்குப் புதுப் பொருள் கற்பிக் கின்றது.

உயிரின மலர்ச்சியின் நெடுநீள் மரபில் எலும்பும் தண் டெலும்பும், எலும்புக்கூடும் படிப்படியாக உயர் உயிரினங்

1. Biology or the science of evolution of the species of the living beings

களில்தான் மலர்ச்சியுறுகின்றன. அதே சமயம் இதே உயர் படி உயிரினங்களில்தான் காதலும் பாசமும் அன்பும் படிப் படியாக வளர்ச்சி பெற்று மலர்ச்சியுறுகின்றன. ஒருங் கிணைந்து காணப்படும் இந்த இரண்டு மரபு மலர்ச்சிகளையும் திருவள்ளுவர் ஒருங்கிணை மரபுகளாக மட்டுமன்றி, ஒரே மரபின் இருதிசைச் செயல்களாக, ஒன்றை ஒன்று ஊக்கி ஒருங்கு வளரும் மரபுகளாகக் காண்கிறார். இவற்றுள் ஒவ் வொன்றையும் ஒன்றுக்கொன்று உவமை விளக்கங்களாகவும், ஒன்றுக்கொன்று இடைவிடாத நிலையியக்கங்களான காரண காரிய நிகழ்வுகளாகவும் திருவள்ளுவர் தம் பேரின அறி வுணர்வால் புத்திணைப்புச் செய்து காண்கிறார்.

என்பு என்ற சொல் முந்திய [72] குறட்பாவிலும், இவ் வதிகாரத்தில் மேல் வரும் [77, 80, ஒரளவில் 79] குறட்பாக் களிலும் வழங்கப்பெற்றுள்ளது. இக் குறட்பாவில் அச் சொல்லுக்குரிய தனிவளம் இவ் விளக்கவுரையிலும் பொருள் வளப் பகுதியிலும் விரித்துரைக்கப்பட இருக்கிறது.

இக் குறட்பாவுடன் இதே அதிகாரத்தின் ஐந்தாம் (55) குறட்பா சிறப்பாக முதலடியில், சொல்லிலும் பொருளிலும் பேரளவு இணைந்துள்ளது. ஆனால், ஓசை, குரல் காரணமாக வும், இருவேறுபட்ட இரண்டாம் அடியின் விளைவாகவும் இருகுறட்பாக்களிலும் பொருள் விரிவும் பண்பும் தனித்தனி வேறுபடுகின்றன. இவ் வேறுபாடு இரு குறட்பா உரைகளி லும் காட்டப்படுகின்றன.

'உயிர் மலர்ச்சி நூலோர்' என்பது இக் குறட்பா முழுதும் அளாவி 'என்ப' என்று முடியும் ஒரே நெடுநீள் தொகையின் எழுவாயாகவே வருவிக்கப்பட்டுள்ளது. உயிர்க்கு என்ற தனால் உயிர் நூலும், என்ப என்றதனால் உயிர் நூலோரும்; என்பு என்றதன் குறிப்பினாலும் ஆருயிர்க்கு என்றவிடத்தில் 'அருமை' என்ற அடையின் குறிப்பினாலும் உயிர் மலர்ச்சி நூலோரும் பெறப்பட்டது.

இங்கே உயிர் மலர்ச்சி நூலோர் என்று குறிக்கப்படுபவர் வள்ளுவ இன இயலின்படி இன மேலோரேயாவர். இன்று

இனம் சாரா இயல்பை மட்டும் நாடிப் பரு அறிவாய்வா ராய்வால் அறிவு நூலோர் கண்டுவரும் ஆய்வுகள் பண்டைத் தமிழுலகில் இன வாய்மை நோக்குடன் அவ்வின மேலோர் நுண்ணுய்வாராய்வால் உணர்ந்த கருத்துக்களே என்னல் தகும்.

உயிர் மலர்ச்சித் தத்துவம் மேலையுலகில் ஆங்கில நாட்டில் 19-ம் நூற்றுண்டில் வாழ்ந்த சார்லஸ் டார்வின்[1] (1809—1882) என்ற பேரறிஞராலே விளக்கம்பெற்று நிலை நாட்டப்பட்டது என்பது உண்மையே. ஆனாலும் அந் நூற்றுண்டிலேயே அதற்கு முன்னதாகப் பிரான்சு நாட்டில் லமார்க்[2] (1744—1829) என்ற பேரறிஞரால் முதல் நிலைப் பட நிறுவப்பட்டிருந்தது. இருவருக்கும் முற்பட மேலையுலகில் சில நூற்றுண்டுகளாக அது நிறுவப்படா ஒருசார் கோட்பாடாக நிலவியே வந்தது. கீழ்திசையிலோ, சமயம் சார்ந்தும், அறிவுத் துறை சார்ந்தும் அது ஓர் இயற்கை நம்பிக்கைபோல, ஒரு சார்புக் கோட்பாடாக என்றும் நிலவியே வந்துள்ளது. சிற்றுயிரிலிருந்து பேருயிர் நோக்கிச் செல்லும் திருமால் திருப்பிறப்பு வரிசை: அருவப் படிவ மாகிய பிரமத்திலிருந்து எண்பத்து நான்கு நூறுயிரம் பிறப்பு மரபுகளும் படிப்படியாகத் தோற்றம் உற்று, தோன்றியபடியே படிப்படியாக மீண்டும் ஒடுங்குகின்றன என்று கூறும் சித்தாந்த வேதாந்த ஏட்டுரைகள் :

> புல்லாகிப் பூண்டாகிப் புழுவாய் மரமாகிப்
> பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
> எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன் எம்பெருமான் !

என்ற தமிழ்ப் பத்தர் பாடல்களும்; 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து' என்று சங்க ஏடுகள் கூறும் வழக்கும் யாவுமே பண்டைத் தமிழரிடையே நீடித்துப் பரவலாக நின்று நிலவி வந்துள்ள இயன் மலர்ச்சி, உயிர் மலர்ச்சிக் கோட்பாடுகளைக் குறித்துக் காட்டுகின்றன.

---

1. Charles Darwin 2. De Monet De Lamarch

இக்குறட்பாவின் கருத்து முழுவதும் உயிர் மலர்ச்சி நூலாரின் கருத்தாகவே கூறப்பட்டுள்ளது. அதே சமயம் அதன் இரு மரபு இணைப்புக் கருத்துத் திருவள்ளுவரதாகவே அமைந்துள்ளது. இவ் வகையில், இக் கால மேலையுலகிலும், சார்ல்ஸ் டார்வினுக்கு முற்பட உயிர் மலர்ச்சிக் கருத்துப் படிப்படியாக வளர்ந்த பின்னும், மற்றவர்களால் அதன் முதன் மரபு மட்டுமே விளக்கம் பெற்றிருந்தது என்பதும்; உயிர்வகை மரபோடு சேர்ந்த பண்புமரபு பெரிதும் சார்லஸ் டார்வினாலேயே விளக்கம் பெற்றது என்பதும் குறிப்பிடத் தக்கன. முதன் மரபை அவர் 'இனத் தோற்றம்'[1] என்ற ஏட்டிலும், இரண்டாம் மரபை மனிதஇன வரலாறு[2] என்ற ஏட்டிலுமே தனித்தனியே விளக்கியுள்ளது காணலாம்.

திருவள்ளுவரும் சார்லஸ் டார்வினும் கண்ட இந்த இரு மரபுகளிலும் இன்றுவரை முதல் மரபுதான் இயல்நூல் உலகில் அறிவு வளம் தூண்டியுள்ளதேயன்றி. இரண்டாம் மரபு விளக்கம் திருவள்ளுவரும் டார்வினும் விட்ட இடத்திலிருந்து நெடிது முன்னேறவில்லை என்பதும் இங்கே கூர்ந்து கவனிக்கத்தக்கது.

ஆருயிர்க்கு என்பது 'உயிரின் மலர்ச்சியால் ஏற்பட்ட இனப்பண்பில் உயர்வுற்றுப் பண்பட்ட அருமைப் பாட்டினை யுடைய உயர்படி உயிரினங்களுக்கு' என்று பொருள்படுவது ஆகும்.

உயிர் என்ற தமிழ்ச் சொல்லுக்கு உயிர்ப் பண்பு (சீவன்), உயிர் நிலை (ஆன்மா), உயிரி (உயிர்மை அல்லது விலங்கு) என்ற மூன்று பொருள்கள் வழங்குகின்றன. பின்வரும் 'என்பு' என்றதன் குறிப்பால், இங்கே உயிர் எனபது மூன்றுவது பொருளாகிய உடலும் உயிரும் கூடிய உயிரி அல்லது உயிரினம் என்னும் பொருளே சுட்டிற்று.

ஆருயிர்க்கு என்ற பண்புத்தொகையின் முதற்கூறு அருமை என்பதே.

---

1. Origin of Speeies 2. Desoent of Man

அருமை என்பது இங்கே மேலே சுட்டியபடி, 'உயிரின மலர்ச்கியில் ஏற்பட்ட இனப் பண்பில் உயர்வுற்றுப் பண் பட்ட பண்பாடாகிய அருமைப்பாடு' என்னும் பொருளை உணர்த்திற்று. 'அன்போடியைந்த வழக்கு' என்ற தொடர் சுட்டிய அருமைப்பாடு இதுவே.

அருமை என்ற சொல் இன்றளவும் தமிழில் 'எளிதில் பெற முடியாதது' 'கடுமுயற்சியினலேயே கிடைப்பது' 'இக் காரணத்தால் விலையேறியது. அல்லது மதிப்புயவு மிக்கது' 'இவை காரணமாகவோ இயல்பாகவோ மிகுந்த அன்புப் பாராட்டுக்குரியது' 'வருவள நோக்கிப் பண்பு பாராட்டிப் பேணத் தக்கது, 'இடர்பல கடந்தும் காத்துப் பேணற் குரியது', இடர் துணிந்தும் உயிர் கொடுத்துப் காக்கத்தக்கது என்ற பொருள்களில் வழங்குகிறது. அருகலான, அருந்த லான முதலிய சொற்கள் முந்தியபொருளை மட்டிலும்; அரிய என்பது 'கிடைத்தற்கரிய எளிது பெறப்படாத, மிகுவிலை யேறிய என்ற பொருள்களை மட்டிலும் குறிக்கின்றன. இவற் றுடன் தொடர்புடையதாக அருகில், அருகாமையில் என்ற சொற்கள் அணிமையில், பக்கத்தில், சுற்றுச் சூழலில் என்ற பொருள்கள் தருகின்றன. இம் மூவகைப் பொருள்களின் தொடர்பு உலகில் தொலைக்கோடி மேலை மொழிகளிலும் சென்று பரவியுள்ளது என்பது கூர்ந்து கவனித்தற்குரியது. எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் அருமையான என்பதற் குரிய சொல்[1] அப் பொருளேயன்றி, அருந்தலான, விலை யேறிய என்ற பொருள்களையும் குறிக்கின்றது. அணிமைச் சொற் பொருளுடனும்[2] அது விரவி அளாவுகின்றது என் பது கூர்ந்து கண்டின்புறத்தக்கது.

அருமை இங்கே உயிருக்கு அடைமொழியாக வந்த அருமை. ஆயினும் அது பண்பு மூலமாக இருவகையாக வந்த அருமை. அது இனவாழ்வின் எல்லையற்ற இறந்தகால ஊழிகளில் நீடித்துப் பயின்று வந்த, ஆயிரம் காலத்துப் பயிராக வந்த அருமை; இடர்கள் பல, புயல் அழிவுப் பண்பு

1. Dear 2. Near and dear

கள் பல எதிர்த்து அவற்றுக்குத் தப்பிப் பிழைத்து வந்த தென்பதைக் குறிப்பிட்ட அருமை; தெய்வ அருட்கொடை யாகவே அரிதின் அரிதாகவந்து எய்தப்பெற்ற வாய்ப்பருமை ஆகும். அத்துடன் அதுவே வருங்கால இன வாழ்வின் வளத் துக்கு இன்றியமையாத, அவ்வளம் பெருக்கும் ஆற்றல் வாய்ந்த ஆக்கப் பண்பின் அருமை என்பதும் குறிப்பிடத் தக்கது.

நீடித்த இறந்தகால ஊழிகட்கும், நீடித்த வருங்கால ஊழிகளுக்கும் இடைப்பட்ட இந்த அருமை உயர்படி உயிரி னங்களுக்கு மட்டுமே உரியதாகும். ஆருயிர் இதனாலேயே உயர்படி உயிரினங்கள் என்ற பொருள் பெற்றது. அருமை யும் இதனாலேயே 'உயிரின மலர்ச்சியால் ஏற்பட்ட இனப் பண்பில் உயர்வுற்றுப் பண்பட்டு உயர் பண்பாட்டு வளத் தினை எய்திய அருமைப்பாடு' ஆயிற்று.

குறட்பாவில் மேலே கூறப்படவிருக்கும் என்பு மரபும், அன்பு மரபும் இவ்வருமைப் பாட்டின் இரு படிவங்களே— என்பு புறமரபு வடிவம், அன்பு அகமரபு வடிவம் !

இவ்வாறு உயிர் மலர்ச்சி நூல் முழுவதையும் தன் அகட் டில் அடக்கிய இக் குறட்பாவின் கருத்து முழுவதையுமே அருமை என்ற சிற்றடை மொழிச் சொல் தன்னுள் தொகுத் தடக்கி, அவற்றுக்கு முன் குறிப்பாகவும் முனை முகமாகவும் அமைந்துள்ள அருமைப்பாடு காணலாம்.

என்போடு இயைந்த தொடர்பு என்பது '(அவற்றின் தசை யுடம்பானது) எலும்புக் கூட்டோடு நீடித்துப் பொருந்தி வளர்ந்து வந்துள்ள மலர்ச்சி மரபு' என்று பொருள்படு கின்றது.

'அவற்றின் தசையுடம்பானது' என்பது இங்கே 'இயைந்த' என்ற வினையின் வினை முதலாகவே வருவிக்கப்பட்டது. உயிர்க்கு என்றதன் குறிப்பாலேயே உடம்பு என்பதும்; என்பு என்ற குறிப்பாலேயே என்பை உடலுறுப்பாகக் கொண்ட உடம்பு என்ற பொருளில் தசைமண்டலம் அல் லது தசை உடம்பு என்பதும்; ஆருயிர்க்கு என்ற குறிப்பா

லேயே ஆருயிர்க்குரிய தசையுடம்பு என்ற பொருளில் 'அவற்றின் தசைபுடம்பானது' என்பதும் பெறப்பட்டன.

'இயைந்த' என்பதன் பொருள் 'நீடித்துப் பொருந்தி வளர்ந்து வந்திள்ள' என்பதாம்.

இயைந்த என்பதன் வினைமுதலாக 'உயிர்' என்ற சொல் இக் குறட்பாவில் அமைய முடியாது—அது நான்காம் வேற்றுமையில் அமைந்துள்ளது. 'இயைந்த' என்பதை 'வந்தமையப் பெற்ற தொடர்பு' என்ற பொருளில் செயப்படு பொருள் அடையாகக் கொண்டாலும், உயிருக்கும் என்புக்கும் இயைபு இருக்க முடியாது; மேலே நாம் கொண்டது போல 'உயிர்' என்ற சொல்லை 'உயிரி' என்று கொண்டாலோ, அதுவும் என்பு உடையதாகுமேயன்றி என்போடு இயைபு வந்தெய்தப் பெற்றது ஆக முடியாது. என்போடு இயைவது தசை அல்லது தசையுடம்பு மட்டுமேயாகும் என்பது காணலாம்.

இயைதல் என்பது இரண்டாக நின்றே ஒன்றுபட்டு இயங்கும் இரண்டற்ற ஒருமை நிலையைக் குறிக்கும். இரண்டும் ஒஃறாய்விடின் ஒருமைக்கு வலிமை இல்லை. இரண்டும் இரண்டாய் நிற்பின் ஒருமை இல்லை. இயைதலில் இரண்டும் நெருங்கி உறவாடி, செயலில் ஒன்றுபடாமல் செயல் இலக்கில் ஒன்றுபட்டு, ஒன்றை ஒன்று இயக்கியும் ஒன்றால் ஒன்று இயக்கப்பட்டும், ஒன்றை ஒன்று வலுப்படுத்தியும், ஒன்றால் ஒன்று வலுப்படுத்தப்பட்டும், ஒன்றுக்கு மற்றது ஆதாரமாகவும், ஒன்று மற்றதன் ஆதாரமாகவும் செயற்படும் இடையறா இருதிசை இயக்கவளம் நடைபெறுகின்றன.

இயைந்த தொடர்பு என்பது உண்மையில் இயைந்த இயைபின் தொடர்பு ஆதலாலேயே, அது நீடித்த பொருந்தி வளர்ந்து வந்துள்ள என்னும் பொருள் தந்தது.

என்போடு என்பதில் 'ஒடு' உடனிகழ்ச்சிப் பொருளுடைய மூன்றாம் வேற்றுமை உருபு.

ஓடு என்ற உருபின் தெலுங்கு மொழி வடிவம் 'தோ' அல்லது 'தோட' என்பதே. தொடர்பு, தொடு, தோண்டு. தோடு, தோழமை, தொழும்பு, தொண்டு, தொழுகை ஆகிய சொற்களுடன் இவ்வுருபுக்குள்ள உறவை இத் தெலுங்கு வடிவம் நன்கு துலக்கிக் காட்டுகிறது.

'தோடு' என்பதனுடன் இவ்வுருபுக்குள்ள தொடர்பு பொருள்வளப் பகுதியில் விளக்கப்படுகிறது.

என்பும் தசையுடம்பும் இயைந்த என்று கூறுமல், என்போடு தசையுடம்பு இயைந்த என்று குறித்ததனல், என்போடு தசையுடம்பு பின்னிப் பிணைந்து, ஒன்றை ஒன்று இயக்கி, ஒன்றுக்கு ஒன்று ஆதாரமாய் வலிமையூட்டி ஒருங்கு வளரும் இருதிசைக் கூட்டுவளம் இங்கே குறிக்கப்பட்டது.

என்பு இக் குறட்பாவில் எலும்புக்கூட்டைக் குறிப்பதாகும். என்போடு இயைந்த உடல் தசையுடலாவதுபோல, தசையுடலோடு கூடிய என்பு எலும்புக் கூடேயாகும். எல்லா உறுப்புக்களும் அடங்கிய பகுதியையே நாம் உடல் அல்லது கூடு என்கிறோம். தசையும் என்பும் மற்ற உறுப்புக்களைப் போலல்லாது எல்லா உறுப்புக்களுடனும் பரவி நிற்பதனல், உடலின் மொத்தத் தசைப் பகுதியை நாம் தசையுடல் அல்லது தசைக்கூடு என்றும், அதன் மொத்த எலும்புப் பகுதியை நாம் எலும்புடல் அல்லது எலும்புக் கூடு என்றும் கூறுகிறோம்.

தசையுடல் கிட்டத்தட்ட எல்லா உயிரினங்களுக்கும் உண்டு, ஆனல் எலும்போ, எலும்புக் கூடோ எல்லா உயிரிகளுக்கும் கிடையாது. மிகத் தாழ்படி உயிரினங்களுக்கு உடல் முழுதும் தசையுடலே, எலும்பு கிடையாது. தாழ்படியிலேயே சற்று உயர்ந்த உயிரினங்களில் தசையுடல் பொதிந்த ஓர் ஓடு அல்லது தோற்கூடு அல்லது தோடு உண்டு. இது உண்மையில் தோல் திரிந்த ஓடு அதாவது தோலின் கடிதாக்கம்[1] மட்டுமே. இவற்றிலும் சற்று உயர்ந்த கீழ்ப்படி உயிரினங்களில் எலும்புகள் தோன்று

1. Petrification

கின்றன. ஆனால் இவற்றை இணைக்கும் தண்டெலும்பு அல்லது முதுகெலும்பு கிடையாது. உயர்படி உயிரினங்களி லேயே முதுகெலும்பு அல்லது தண்டெலும்பு தோன்றி எலும்புகள் யாவும் ஒரே உடற் கூடாக இணைக்கப்பட் டுள்ளன. முதுகெலும்புடைய இத் தண்டெலும்பினங்களி லேயே எலும்புக்கூடு உண்டு.

ஆருயிர்க்கு என்று மேலே கூறப்பட்ட இடத்தில் ஆருயிர் என்பது தண்டெலும்புடைய தண்டினங்களாலாகிய இந்த உயர்படி உயிரினங்களைக் குறித்த சொல்லே யாகும். ஏனெ னில் தசையுடம்பு எலும்போடு அதாவது எலும்புக் கூட் டோடு இயைந்த உயிரினங்கள் இவையே. எலும்பு மட்டு முடைய உயிரினங்களில் தசையுடலில் எலும்புண்டேயன்றி, தசையுடலோடியைந்த எலும்புடல் இல்லை என்பது கண்கூடு.

தொடர்பு என்பதன் பொருள் 'மலர்ச்சி மரபானது' என்பதே. இயைந்த தொடர்பு அதாவது இயைந்த இயை பின் தொடர்பு அதாவது நீடித்துப் பொருந்தி வளர்ந்து வந்துள்ள தொடர்பு என்ற குறிப்பினாலேயே தொடர்பு மரபு சுட்டிற்று. அதிலடங்கியுள்ள வளர்ச்சிக் குறிப்பினா லேயே மலர்ச்சி பெறப்பட்டது. தொடர்பு என்ற சொல் பொருள் இடச் சார்பில் ஒன்றனுடன் ஒன்றுக்குள்ள தொடர் பையும் காலச் சார்பில் தொடர்ச்சியையும் ஒருங்கே குறிக் கும் சொல்லாதல் காணலாம்.

தொடர்பு என்ற சொல் தொடர் என்ற வினைப் பகுதி யடியாக, 'பு' விகுதி பெற்று வந்த தொழிற் பெயர். விகுதி பெறாத 'தொடர்' என்ற முதனிலைப் பெயர் வடிவமும், 'சி' விகுதியும் 'கை' விகுதியும் பெற்ற 'தொடர்ச்சி', 'தொடர்கை' என்ற சொற்களும் இங்கே மேலே சுட்டியபடி, பொருள் இட உறவு சுட்டிய தொடர்பின் பொருளும், கால உறவு சுட்டிய தொடர்ச்சிப் பொருளும் உடையன. இது மட்டுமன்று. தொடர் (சங்கிலி, விடாது ஒன்றை ஒன்று பற்றித் தொடர்வது), தொடர்கை (இடையறாது நீளுகை) என்ற பொருள்களையும் இது உட்கொண்டது.

தொடர் என்ற பகுதி தொடு (கையால் பற்று, பட்டுக் கிட, சேர்த்திணை, தோண்டு) தொடங்கு, தொகு என்ற பகுதிகளுடனும்; அவற்றின் மூலமாகத் தொடை (மாலை, எதுகை மோனை) தொண்டு (துளை), தொண்டு (சேவை), தோடு (காதணி, வாய்க்கால்), தொண்டி (நிகழ்ச்சியுடன் பொருளை இணைக்கும் தடயம்), தொடக்கம், தொக்கு (தோல்), தொக்கு (தொகையல்), தொக்குத் தொடர்பு, தொடக்கு (இடையுறவு) முதலிய சொற்களுடனும் சொற்பொருள் உறவுடையதாகும்.

தொடுதல் புறத் தொடுபுறம் அணுகுதல், படுதல், தொடர்தல், தொட்டு வருதல், பின்பற்றிச் செல்லுதல் அல்லது வரிசைப்படல், தொடர்ச்சி, தொடை (மாலை) ஆகியவை இவ்வாறு பின்பற்றித் தொடர்ந்தவற்றின் தொகுதி குறித்தன. இவற்றுள் தொடர்ச்சி இடம் சார்ந்த பொருள் தொடர்ச்சியையும், காலம் சார்ந்த மரபுத் தொடர்ச்சியையும் குறிக்கும். தொடர்புக்கும் இதுபோல இடப் பொருள் தொடர்பு அதாவது உறவு, காலத் தொடர்பு அதாவது மரபு என இரண்டு பொருள்கள் உண்டு. அத்துடன் தொடர்பு என்பது, பகுதி தொட்டும் பகுதி விட்டும் நிற்கும் அல்லது இயங்கும் நிலை குறிப்பதாகும். இடப் பொருள் தொடர்பில் இது வேறுபாட்டிடைப் பொதுமை உறவும்; காலத் தொடர்பு அல்லது மரபில், பண்பில் பகுதி மாறாது தொடர்ந்து, பகுதி படிப்படியாக மாறி வளர்ந்து செல்லும் நிலையும் குறிக்கின்றது.

பண்பு தொட்டும் பண்பு விட்டும் தொடரும் தொடர்ச்சி அதாவது மலர்ச்சியையே இங்கே தொடர்பு குறித்தது.

உயிர் மலர்ச்சியில், ஒவ்வோர் உயிரியும் (உயிரினமும்) முன் தலைமுறை உயிரினத்துடன் பெரிதொத்து, தலைமுறை தோறும் சிறிது சிறிதாக வேறுபட்டு முன்னேக்கிய வளர்ச்சி அல்லது மலர்ச்சி பெறுகிறது.

தொடர்பு இங்கே இம் முன்னேக்கிய படிப்படியான வளர்ச்சி அல்லது மலர்ச்சி மரபு சுட்டிற்று.

அன்போடு இயைந்த வழக்கு என்பது '(அவ்வுயிரினங்களின் இன வாழ்வு) அன்பு என்னும் திறத்தோடு ஒத்து நீடித்து இணைந்து வளர்ந்துள்ள பண்போடு இயைந்த பண்பு மரபே யாகும்' என்பதாம்.

அவ்வுயிரினங்களின் இன வாழ்வு என்பது இங்கே 'இயைந்த' என்ற வினையின் வினைமுதலாகவே வருவிக்கப்பட்டது. அன்போடு என்ற குறிப்பாலே இன வாழ்வு என்பதும், மேலே ஆருயிர்க்கு என்ற குறிப்பாலே அவ்வுயிரினங்களின் என்பதும் பெறப்பட்டன.

அவ்வுயிரினங்கள் என்பது மேலே வந்த ஆருயிர்க்கு என்பதையே சுட்டி உயர்படி உயிரினங்களைக் குறித்தது. இன வாழ்வு என்பது அவ்வுயிர்களின் இன மலர்ச்சியைச் சுட்டிற்று.

அன்போடு என்பதில் 'ஒடு' மேலே என்போடு என்பதில் வந்த 'ஒடு' என்பதைப் போன்றே மூன்றும் வேற்றுமை உடனிகழ்வுப் பொருள் உருபு.

அன்பு என்பது உயிர்களின் உள்ளத்தில் அதாவது உயிரின மலர்ச்சி மரபின் அக வாழ்வில் தோன்றி வளர்ந்துள்ள ஒரு மலர்ச்சிப் பண்பு. அதைக் காதல்-பாசம்-அன்பு என்ற அன்பு நோக்கிய மலர்ச்சி என்னலாம்.

மிகத் தாழ்படி உயிரினங்களில் இன வாழ்வு என்பது பசியுணர்வு, சாவும் நோவும் தவிர்த்து வாழ விரும்பும் உய்வுணர்வு, நோவுணர்வு ஆகிய மூவுணர்வுகளால் உந்தப் பட்ட வாழ்வே யாகும். இந்தப் படியில் இன நீட்டிப்பு, இனப் பெருக்கம் ஆகிய இரண்டு நாட்டம்தான் இன வாழ்வில் உண்டு. இன வள நாட்டமோ இன வளர்ச்சி நாட்டமோ இடம் பெறுவதில்லை. ஏனெனில் இவற்றுக்கு வழி வகுக்கும் காதல் உணர்ச்சியோ, அதற்கு அடிப்படையான பாலின உணர்வோகூடத் தொடக்க உயிரினங்களில் கிடையாது. ஓரறிவுயிரான தாவரங்களிலும், ஈரறிவு, மூவறிவுயிர்களான தாழ்படி உயிரினங்களிலும் பாலிலாப் பிறப்பு [1], பாலுயிர்

1, Asexual Reproduction

கள் நேரடித் தொடர்பிலாப் பிறப்பு [1], பாற்புணர்ப்புப் பிறப்பு [2] ஆகியவை விரவியும் படிப்படியாகவுமே தோற்று கின்றன. பாற்புணர்ப்பு நேரடிப் புணர்ப்பான பிறகுகூட பருவ நேர உணர்ச்சி, அதுவும் உறுப்புடன் உறுப்பு அவா வன்றி, வேறு உயிர்ப்பாசம் ஏற்படுவதில்லை. உயிர்ப்பாசம் ஆண் பெண் பொதுவான பருவப் பாசமாயன்றி, ஓராண் ஒரு பெண் நிலைப் பாசமாக வளர்வதற்கு உயிர் மலர்ச்சியில் பலஊழிகள் தேவைப்பட்டன.

எலும்பிலா உயிரினங்களும், தண்டெலும்புடைய உயி ரினங்களில்கூட ஊர்வன, நீந்துவன ஆகியவையும், காதல் பாசமற்றவையாகவே இனப்பெருக்கமுறுகின்றன. ஊர்வன வற்றில் ஒரு கிளையாகவே அமைந்துள்ள பறவை யினத்தில் தான் நாம் காதல் வாழ்வு மேம்படுவது காண்கிறோம். அன்ன மும் குயிலும் அன்றிலும் காதலுக்கு உயர் சான்றுகளாகக் கவிஞரால் பாடப்படுவது காணலாம். நிலவாழ்வுயிர்களில் ஊர்வனவற்றின் படி கடந்து குட்டியிட்டுப் பால் கொடுக்கும் உச்ச உயர் உயிரினங்களில்தான் காதல் குடும்ப உணர்வாக, சமுதாயப் பாசமாக, இன உணர்வான அன்பாக மலர்வது காண்கிறோம்.

'இனவாழ்வும் அன்பும் இயைந்த' என்னுமல் 'இனவாழ்வு அன்போடு இயைந்த' என்ற குறிப்பால், அவ்வுயர்படி உயி ரினங்களில்கூட. உச்ச உயர் படி உயிரினமான மனித இனத் தில்கூட, காதலும், காதல் - பாசம் - அன்பு ஆகிய அன்பு மலர்ச்சியும், அந்த அன்பு கடந்த அன்பு - பண்பு - அருள் மலர்ச்சிகளும் படிப்படியாகத் தோன்றி வளர்ந்து வரு வனவே, நீடித்த பயிற்சி காரணமாகப் படிப்படியாக மலர்ந்து வருவனவே என்பது குறிக்கப்பட்டது.

இயைந்த என்பது மேலே என்போடு இயைந்த என்பதில் வரும் இயைந்த என்பதை ஒப்ப, 'நீடித்து இணைந்து வளர்ந்து வந்துள்ள' என்னும் பொருளுடையது. இது மேலே குறிப் பிட்ட 'அவ்வுயர் படி உயிரினங்களின் இன வாழ்வு' என்ப

---

1. Indirect Sexual Reproduction 2. Sexual Reproduction

தனையே வினை முதலாகக் கொண்டு வந்தது. இயைந்த அதாவது நீடித்து இணைந்து வளர்ந்துள்ள தன்மையின் புறப் பகுதி மேலே இவ் விளக்கவுரையில் ஆருயிர்க்கு என்பதன் கீழும், என்போடு என்பதன் கீழும் விளக்கப்பட்டன. அத் தன்மையின் அகப் பகுதியாகிய அன்பு மலர்ச்சி மேலே அன்போடு என்பதன் கீழ் விரித்துரைக்கப்பட்டது.

மேலே வந்த 'இயைந்த தொடர்பு' என்பது 'இயைந்த இயைபின் தொடர்பு' என்று பொருள்பட்டதனைப்போல, இங்கும் 'இயைந்த வழக்கு' என்பது 'இயைந்த இயைபின் வழக்கு' என்று பொருள்படுவது ஆகும். இதனாலேயே 'இயைந்த' என்பது இங்கே 'நீடித்து இணைந்து வளர்ந் துள்ள' என்னும் பொருள் தந்தது.

'இயைதல் என்பது இரண்டாக நின்றே ஒன்றுபட்டு இயங்கும் இரண்டற்ற ஒருமைநிலையைக் குறிக்கும்' என்ப தும்; 'இயைதலில் இரண்டும் நெருங்கி உறவாடி, செயலில் ஒன்றுபடாமல் செயல் இலக்கில் ஒன்றுபட்டு, ஒன்றை ஒன்று இயக்கியும், ஒன்றால் ஒன்று இயக்கப்பட்டும், ஒன்றை ஒன்று வலுப்படுத்தியும், ஒன்றால் ஒன்று வலுப்படுத்தப்பட்டும்; ஒன்றுக்கு மற்றது ஆதாரமாகவும், ஒன்று மற்றதன் ஆதார மாகவும் செயற்படும் இடையறு இயக்கவளம் நடைபெறு கின்றன' என்பதும் மேலே முன்வந்த இயைந்த என்பதன் கீழ்த்தரப்பட்ட விளக்கங்களே: அவை இங்கே பொருந்தும், இரட்டி மடங்காகப் பொருந்தும். ஏனெனில் முந்திய 'இயைதல்' தசையும் எலும்பும் தம்முள் இயைந்து வந்த இயைபு மரபே சுட்டிற்று. இங்கோ, ஒருபுறம் அப் புற மரபோடு ஒத்த அக மரபாக, இன வாழ்வோடு அன்பு, அன்போடு இன வாழ்வு இயைந்து வந்த மரபும்; அதனுடன் முன் கூறப்பட்ட புற மரபு இயைபோடு ஒத்த இவ்வக மரபு இயைபு ஆகிய இயைபின் இயைபு மரபும் ஒருங்கே குறிக்கப் பட்டன.

வழக்கு என்பது 'பண்போடு இயைந்த பண்பு மரபே' என்பதாம்.

வழக்கு என்ற சொல், முன் வந்த தொடர்பு என்ற சொல்லின் பொருள் மேல் வந்த பொருள் அடுக்கு ஆகிறது. ஏனெனில் அதன் பொருள் தொடர்பின் தொடர்பு, தொடர்பு நீட்டிப்பு என்பதே. இதனால் என்போடு இயைந்த தொடர்பாகிய புறப் பண்போடியைந்த, அன்போடியைந்த அகப் பண்பின் இணை வளர்ச்சி குறிக்கப்பட்டது.

வழக்கு என்பது வழங்கு என்ற வினைப் பகுதியினடியான பெயர்ச் சொல். வழக்கம் என்ற பெயர் வடிவமும் இதே அடிக்கு உண்டு. பழகு, பழக்கம் என்ற சொற்களுடனும், வழி, வாழ்வு என்ற சொற்களுடனும், வழுத்து, வாழ்த்து, வணங்கு என்ற சொற்களுடனும், இது தொடர்புடையதாகும். வழங்குதல் வாழ்வெங்கும் பரப்புதல், எல்லாருக்கும் வரையிலாது கொடுத்தல்; பயன்படுத்துதல் என்னும் பொருள்களை யுடையது. வழங்கி வருதல் இடையறாது தொடர்ந்து உயிர் வழக்கமாகக் கையாளப்பட்டு வளம் தந்து வளம்பெறுதல் ஆகும். ஆகவே வழக்கு இங்கே என்போடியைந்த தொடர்பாகிய பண்பினோடு இயைந்து வளர்ந்து மலர்ச்சியுறும் அன்போடியைந்த தொடர்பு ஆகிய பண்பு குறித்தது.

இக் குறட்பாவில் தொடர் எழுவாயாக, வழக்கு அதன் பயனிலையாக நின்று, அம் முடிவே கூற்று வாசகமாகி, என்ப என்ற கூற்று வினை கொண்டு முடிந்தது.

தொடர்பு வழக்கோடு இணைந்து நடப்பது, அதற்கு உவமையாவது. அதனுடன் காரண காரியத் தொடர்புபடப் பின்னி இயல்வது என்ற கருத்துக்கள் இவ்வெழுவாய் பயனிலைத் தொடர்பினால் ஒருங்கிணைக்கப்பட்டன.

கூற்று உயிர் மலர்ச்சி நூலோர் மீது ஏற்றப்பட்டாலும், அதன் பகுதிகளின் கருத்திணைப்புத் திருவள்ளுவரதே யாகும் என்பதில் ஐயமில்லை.

சிறப்புரை: தசையுடம்பு எலும்பொடு பின்னிக் கிடக்கிறது. அதுபோலவே இனவாழ்வு இனப் பாசமாகிய

அன்பு என்னும் அடிப்படைப் பண்போடு பின்னிக் கிடக்கிறது. உடலுக்கு எலும்புக்கூடே ஆதாரம். அதுவே உடலுக்கு வலிமையும் உருவும் கொடுக்கிறது. அதுபோல இன வாழ்வுக்கு அன்பு ஆதாரம், அன்பே அதற்கு உருவும் வலுவும் கொடுக்கிறது. எலும்பு மூளை, மச்சை, இதயம், நாடி நரம்புகளுக்குப் பாதுகாப்பளித்து; அவற்றின் மூலமே நாடி நரம்புகளை இயக்கி, உடலின் அக வாழ்வு வளர்க்கிறது. அதுபோல, அன்புடைமை இனவாழ்வின் உயிர்நிலைப் பண்புகளான அந்தண்மை, தவம், சான்றாண்மை, பண்புடைமை, குடிமை முதலிய பண்புகளுக்குப் பாதுகாப்பளித்து; அவற்றின் மூலமே இனப் பாச அலைகளை இயக்கி, உயிரின் அக வாழ்வு வளர்க்கிறது.

உயிர் மலர்ச்சியில் எலும்பு பிற்பட்டே தோற்றினும், உயிரின் ஓர் ஊழி கடந்த மறு ஊழி ஊக்குவதுபோல, அன்புடைமை பண்பு மலர்ச்சியில் பின் தோன்றியதாயினும், இன வாழ்வில் ஒரு புது மலர்ச்சியூக்கிப் புத்தூழி இயக்குகிறது.

பொருள்வளம்: *(1)* இக் குறட்பாவின் மெல்லோசை நயம், மெல்லலை பாய்வு நயம் ஆகியவை இலக்கணக் குறிப்புரையிலேயே குறிக்கப்பட்டன. அப்பர் பெருமான் இறையின்ப அனுபூதியுடன் குறித்தபடி, 'மாலை மதிய இள நிலவொளியில், புயல் தடமற்ற அமைந்த கடலிலே வீசு தென்றலினால் ஊக்கப்பட்ட மெல்லலைகள் மீது, அத் தென்றல் மூலம் மூசு வண்டறை பொய்கை நறுமணம் நுகர்ந்தவாறு, துன்பத்தின் அயர்ச்சிமறந்த வீங்கிள வேனிலென்னும் இன்பப் படகில் அமர்ந்து, மாசில் வீணை மீட்டி அவ்விசையுடன் இசையாக மிதந்து செல்லும் பேரின்பவாணன்

போக்கையே இவ் வினிய குறட்பா படம் பிடித்துக் காட்டுகிறது.

அதிகாரத்தின் இன இன்ப வாழ்வு குறித்த மூன்று குறட்பாக்களில் இறுதியாக, இன்ப ஏணி முகடாக அமைந்தது இக் குறட்பா என்பது இங்கே குறிக்கத் தக்கது.

(2) 'ஆருயிர்க்கு' என்பது இக் குறட்பாவின் உயிர்ச் சொல். அதுவே குறட்பாவில் கூற்று வாசகத்தின் எழுவாய் பயனிலையாகிய இரு பகுதித் தொகைகளிலும் வரும் அவாய்நிலைகளுக்குரிய சுட்டுமுதலாய், இரு தொகைப் பகுதிகளிலும் வரும் 'இயைந்த' என்ற இரு வினைகளும் தழுவி, பயனிலை வினைப் பொருளுடனும் முடிந்தது என்பது மேலே கூறப்பட்டது. 'என்ப' என்பதன் எழுவாய் ஆக, 'உயிர் மலர்ச்சி நூலோர்' என்ற கருத்தைக் குறித்துக் காட்டுவதும் அதுவே.

'என்போடு' என்ற குறிப்பினுலேயே இது உயர்படி உயிரினங்களுக்கு என்ற பொருள் விளக்கம் பெற்றது. ஆயினும் அருமை என்ற அடை, என்பாகிய இப் புறப் பண்போடு இயைந்து அன்பாகிய அகப் பண்பு வளர்கின்றது என்ற நயம் சுட்டிற்று.

'ஆருயிர்க்கு' என்பதில் உள்ள அடையாள அருமைக்கும், அன்புக்கும் உள்ள பொருள் தொடர்பியைபைச் சுட்டிக் காட்டுவதுபோல, இரண்டும் (முதலடி முதல் கடைச் சீர்களில்) மோனையாக வந்தன.

(3) என்போடு இயைந்த என்பதிலுள்ள மோனை அன்போடு இயைந்த என்பதில் இல்லை. முன்னது இயற்கையோடியைந்த இயற்பண்பு என்பதையும்,

பின்னது இயற்கைப் பண்பாக எழினும், கடவுட் பண்பாளரால் ஆக்கப்பட்ட ஆக்கப் பண்பினுலேயே முழு மலர்ச்சி யடைவது என்பதையும் இது சுட்டிற்று. அதே சமயம் அன்போடு இயைந்த என்பதே ஆருயிர்க்கு என்பதனுடன் மோனையாக வந்ததனுல், என்போடு இயைதல் புறப்பண்பே, ஆக்கத்துக்கு உதவும் பண்பே என்பதையும்; அன்போடு இயைதல் என்பதே ஆருயிர்க்கு ஆக்கமாக உதவும் ஆக்கப் பண்பு, ஆகூழ்ப் பண்பு என்பதையும் இக் குறட்பா வலியுறுத்தியுள்ளது.

(4) தொடர்பு என்பதன் இரட்டித்த பொருள் அடுக்கே வழக்கு என்பது. ஆனல் தொடர்பு ஒரு தனிச் சீராகவும் வழக்கு தனியே சீராகாது, என்ப என்பதுடன் இணைந்த காய்ச் சீராய் நெருக்கி விரைவு பட்டும் வந்துள்ளன. தொடர்பு புறப்பண்பாதலால் உயிர் மலர்ச்சி நூலாரால் எளிது காணப்படுவது. வழக்கே அத் தொடர்பு மலர்ச்சியின் உள்ளுறை மலர்ச்சியான அகப்பண்பாதலாலும், உயர் உயிரினங்கள் கடந்து மனித இனத்திலேயே, உச்ச உயர்தள மனித இனமான தமிழினத்திலேயே சிறப்புற வளர்வதாதலாலும், வள்ளுவ நோக்குடைய உயிர் மலர்ச்சி நூலாராலேயே காணப்படத் தக்கது. வழக்கென்ப என்ற விசை ஒலிப்புக் காய்ச்சீர் இதனைக் குறித்துக் காட்டிற்று.

(5) என்பு என்ற சொல் இவ் வதிகாரத்திலேயே இரண்டாவது குறட்பாவிலும் (72), இக் குறட்பாவிலும் வரு குறட்பாக்களிலும் (77, 80) பொருள் மலர்ச்சியுற வழங்கப் பெற்றுள்ளது.

முந்திய குறட்பாவில் என்பு உடலின் அடிப்படைப் கூறு என்ற கருத்துச் சுட்டவே பயன்படுத்தப்பட்டது. உடை போன்ற புறப் புறப் பொருள்களாகிய உடைமை புறப் பற்று. உரி (புறத் தோல்) போன்ற அகப் புறப் பொருள்களாகிய உரிமை அகப் புறப் பற்று. இவை இரண்டும் சமய நூலார் கூறும் யான், எனது என்னும் இரு பற்றுக்களிலே, எனது என்னும் பற்றின் இரு வகைகளாகும். முன்னது பொருட்பற்று. பின்னது உறவுமுறைப் பற்று. இவை கடந்த அகத்தின் அகமாகிய 'யான்' எனும் பற்றையே என்பு என்ற சொல் அக் குறட்பாவில் (72) குறித்தது.

'என்பே விறகா இறைச்சி அறுத்திட்டு' என்று திருமூலர் தவ ஒழுக்கம் வருணித்தல் காண்க.

தன் பொருளையும் தன் உறவுகளையும் மட்டுமன்றி, தன்னையும் பிறருக்கே உரியதாக்கி வாழும் தவ ஒழுக்க முடையோன் தியாகத்தை அதாவது தன் மறுப்பைக் குறித்ததே அக் குறட்பா (72).

இக்குறட்பா அத்துறவோர் தியாகத்தின் மலர்ச்சி யான அன்பை, அந்தண்மையைச் சிறப்பிக்க 'என்பு' என்ற சொல்லைப் புதுப் பொருளில் வழங்கியுள்ளது. என்பு புற உடலும் அன்று. அக உடலும் அன்று. அது அக நின்று புற உடலுக்கு வலுத் தருவது. அதே சமயம் அதுவே அக உடலின் (மூளை, மச்சை, இதயம், நாடி, நாளம், நரம்பு ஆகியவைகளின்) பாதுகாப்பும் ஆகிறது.

தசையுடம்பு புற உடம்பு, அது இல்லறத்தாரை அதாவது பொதுவறத்தாரைக் குறிப்பது. உள்ளுடம்பு (மூளை, இதயம் போன்றன) சிறப்பறத்தின் சிறப்பு

நிலையினரான, துறவோருட் சிறந்த துறவோரான அந்தணரைக் குறிக்கிறது. உலக வாழ்வை இயக்குபவர் அவர்களே. அவர்கள் இன வாழ்வின் மூளையும் இதயமும் நாடி நரம்புகளும் குருதி நாளங்களும் ஆவர். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட என்பு அந்தண்மை துறந்த அந்தணராகிய ஒழுக்கத்து நீத்தாரைச் சுட்டுவதாகும். அவர்கள் நேரடியாகவே உலகில் அறங்காப்பவர், சமுதாய சமய அரசியல் ஆட்சியாளரை இயக்குபவர். உடலுக்கு வலுத் தரும் என்பின் நிலை இது. ஆனால் அவர்களே அறங்காப்பதன் மூலம் அற நூலையும் அற வடிவான அந்தணரையும் காப்பவர் ஆவர். மூளையும் இதயமும் குருதி நாள, நாடி நரம்புகளும் காக்கும் என்பின் நிலை இது.

கீழ் உயிர் இனங்களில் சற்று உயர் படியில் (சிப்பி, ஆமை போன்றவற்றில்) எலும்பு தோற்று முன்பே எலும்பு போன்ற கடுமை வாய்ந்த ஓடு அல்லது தோடு தோன்றியுள்ளது காண்கிறோம். இது எலும்பன்று, ஆனால் எலும்பின் ஒரு பாதித் தொழிலை அது செய்கிறது. உள்ளுடம்பை எலும்பு காப்பது போல, இது தசையுடம்பையே காக்கிறது—ஏனெனில் தசையுடம்பு இந்தப் படியிலுள்ள உயிர்களுக்கு உள்ளுடம்பாய் அமைகிறது.

உயிர் மலர்ச்சியின் ஒரு பெரிய மறை வாய்மையை இது நமக்குக் காட்டுகிறது.

உள்ளுடம்பு என்பது பெரிதும் முதிராத, முற்றிவிடாத எலும்புப் பொருளாலானதே. தோட்டுயிரிகளின் தோடு போன்றதே எலும்பு: அவற்றின்

தோட்டினகமுள்ள தசையுடம்பு போன்றதே உயர் உயிரினங்களின் உள்ளுடம்பு.

உயிர் மலர்ச்சியில் தசைப் பகுதியும் தசையுடலும் தான் முற்பட்டது. எலும்பு பின் வந்த ஒரு மலர்ச்சியே யாகும். ஆனால் தோட்டுயிரில் பின் வந்த தோடு புற மலர்ச்சி; எலும்புயிரிலோ பின் வந்த எலும்பு அக மலர்ச்சி. எலும்பு உள்ளுடம்பாகவே தோன்றி மலர்ச்சி யுற்றது என்பதை இது காட்டுகிறது.

உயிர் மலர்ச்சியில் தசையுடலும் தோடும் இரண் டுமே உயிரினத்தின் புற வாழ்வுக்கே பயன்பட்டது, அதன் அக வாழ்வை வளர்க்கப் பயன்படவில்லை. ஆகவேதான் உயர்படி உயிரினங்களில், தோடு கை விடப்பட்டு, உள்ளுடம்பு புது மலர்ச்சி பெற்றது. ஆனால் இந்த உள்ளுடம்பில் புறப் பகுதி ஓர் அகத் தோடாகி, அகவாழ்வுக்குரிய உள்ளுடம்புக்குப் பாது காப்பு அளித்து, அதை ஊக்கி வளர்த்து, புற உடலுக் கும் உறுதியும் உருவும் தந்து, உள்ளுடம்பின் மூலம் அப் புற உடம்பும் இயக்கிற்று.

என்பு அந்தண்மை காக்கும் அந்தண்மையாகிய ஒழுக்கத்து நீத்தார்க்கு இவ்வாறு முற்றுவமையாகிய தும்; அது அந்தண்மை காத்து அகவாழ்வு ஊக்கிப் புற வாழ்வு காக்கும் அந்தணரான ஒழுக்கத்து நீத்தார் உலக வாழ்வில் இயக்கும் காதல்-பாச-அன்பு மலர்ச் சிக்கு ஒரு சின்னமா யமைவதும் இங்கே கண்கூடு.

காதலர் காதல் வாழ்வில் அந்தணர் தாமரை இலையில் தண்ணீர்போல் ஈடுபட்டு, காதல் கடந்த, ஆனால் காதல் பெற்றியுணர்ந்தவராக, மக்களைப் பெறாத பெற்றோராக இயங்குவதைக் கலித்தொகை

போன்ற சங்க ஏடுகள் அழகுபெறத் தீட்டிக் காட்டு வது காணலாம்.

திருவள்ளுவர் இவ்வாறு இக் குறட்பாவில் உயிர் நூல் மெய்ம்மைகளும் உயிர் மலர்ச்சி நூல் மெய்ம்மை களும் மட்டும் கண்டவரல்லர், அவ் இரு சாராரும் காணாத வகையில் எலும்பு வரலாற்றுடன் அன்பு வரலாற்றை இணைத்து, அவ்வுயிர் மலர்ச்சி வரலாற்று மெய்ம்மையுடன் இயைந்த மெய்ம்மையாக, இல்லறத் தார், அந்தண்மையறத்தார், இரு திறமும் காக்கும் ஒழுக்கத்து நீத்தார் ஆகிய மூவர் பண்புக்கும் அவ் என்பு வரலாற்றுவமை, என்பு வரலாற்றுடன் இணைந்து மலர்ந்த அன்பு வரலாற்றுவமை ஆகியவற் றைப் பொருந்த வைத்துக் காட்டியுள்ளார் என்பது காண்டல் தகும்.

இக் குறட்பாவின் அறிவாழ அகல உயர்வுநயம் அளவிட்டுக் காணும் தரத்ததன்று. இவ் ஒரு குறட்பா வையே ஒரு முழு வேத, முழு வேத வேதாந்த, வேத சாத்திர சூத்திர விரிவுரை விளக்கங்களாகிய கடல்களை அடக்கிய அறிவுச் சிமிழ் என்னலாம்.

(6) இக் குறட்பாவுடன் இவ் வதிகாரத்தின் ஐந்தாம் குறட்பா பெரிதும் ஒத்துள்ளது. அடிப்படைக் கருத்திலும் இரு குறட்பாக்களும் ஒருமை உடைய வையே. அவ் வடிப்படைக் கருத்தே உயிர் மலர்ச்சிக் கருத்தாகும். ஆனால் இக் குறட்பா இன வாழ்வு சார்ந்தது; அக் குறட்பா சமுதாய வாழ்வு சார்ந்தது. இவ் வேறுபாட்டுக் கேற்ப, இங்கே ஆருயிர்க்கு என்றும் அன்போடியைந்த என்றும் இனத்தின் உயிர்ப் பருவ மலர்ச்சியே பெரிதும் வலியுறுத்தப்பட்டது.

அங்கே வையகத்து, அன்புற்றமர்ந்த, இன்புற்ருர் என்ற சொற்களால் வருஇன வாழ்வுள நோக்கிய சமுதாய மலர்ச்சியே குறிக்கப்பட்டது. இவற்றின் விரிவு அக் குறட்பாவில் வாதிக்கப்பட இருக்கிறது.

(7) கடைச் சங்க ஏடுகளேயும் தொல்காப்பியத்தையும் திருக்குறளேயும் நம் காலத்தவர் படிக்கும்போது, முன் கூட்டியே தம் உளத்தில் செறிவித்துக் கொண்ட தப்பெண்ணக் கண்ணுடிகளே மாட்டிகொள்கின்றனர். இக் கண்ணுடிகள் மாட்டிக்கொள்ளாமல் இயற்கை அறிவுக் கண்ணேடு பார்க்கும் எவர்க்கும், நமக்கு இன்று வந்து எட்டாமல் அழிந்துபட்ட பல்லாயிர ஏடுகளிடையே அறிவு நூல் ஆய்வேடுகளும் உயர் சமய ஆன்மிக நூல் ஏடுகளும் பலப்பல அத்தொல் பழங்காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது தெற்றெனத் தோற்றவல்லது. நாகரிக உலகம் வேறு எங்குமே இன்றுவரை காணுத முத்தமிழ் மரபும் முச்சங்க மரபும் கண்ட தமிழினத்தினிடம் இது நாம் எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே.

திருவள்ளுவர் நம் காலம் தாண்டியதுபோல, தம் காலமும் தாண்டிய கடவுட் பேரறிவுடையவராகவே இருந்திருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லே. ஆயினும் இக் குறட்பாவில் அவர் தம் காலத்துக்கு முன் இருந்த அறிவை யெல்லாம் பிழிந்து திரட்டி, அதன் மீது தம் காலமுதல் நம் காலம்வரை உலகம் இன்றும் கண்டு முடியாத புது வண்ண மெய்ம்மைகளே யெல்லாம் தோய்வித்துச் சென்றுள்ளார் என்று கூறுதல் தரும்.

தனிக் குறிப்புக்கள்: (1) இக் குறட்பாவில் என்போடு இயைந்த என்ற இடத்தில் என்போடு இயை பொருளாகத் தசையுடம்பையும், அதுபோலவே அன்போடு இயைந்த என்றவிடத்தில் அன்போடு இயையும் பண்பாக இன வாழ்வையும் அவாய் நிலைகளாக வருவித்த உரை இம் மணிவிளக்க வுரை ஒன்றே. பொருள், பண்பு என்று இங்கே சுட்டப்பட்ட இவ்வேற்றுமைகூடக் காணாமல், மற்ற எல்லா உரையாசிரியர்களும் என்போடும் அன்போடும் உயிர்க்கு என்பதையே இரண்டிடத்தும் நேரிடையாக இணைத்துள்ளார்கள்.

ஆனால் பொருள்கோளுக்கு இன்றியமையாதனவான இவ் அவாய் நிலைகளை வருவிக்காதவிடத்தும், அவர்கள் மிகுதி பொருள் காணாமல் அல்லாடிப் பல வகையில் வளைத்து நெளித்துப் பொருள் காண முயன்றவிடத்தும், இம் மணி விளக்கவுரையை ஒரு சார் நோக்கியே செல்வதைக் கீழே தனிக் குறிப்புப் பகுதிகளில் காணலாம்.

(2) ஆருயிர்க்கு என்பதில் அருமை என்ற அடைமொழியை வெறும் கவிதை அடைமொழியாக்கி அதற்கு 'உயிர்க்கு' என்றே பொருள் கூறினர் பரிதியார், மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் ஆகியோர். 'உலகத்தின்கண் பல உயிர்கட்கு' என்று காலிங்கரும், 'அருமையான உயிர்க்கு' என்று பேராசிரியர் முனைவர் மு. வரதராசனும், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் பேராசிரியர் எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையும், இந்தி மொழிபெயர்ப்பாசிரியர்கள் பேராசிரியர் சங்கரராசு நாயுடுவும், வேங்கட கிருட்டினனும். 'பெறுதற்கரிய உயிருக்கு' என மணக்குடவரும்; 'மனிதனிடம்'[1] என ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூவும்; 'மனிதனுடைய அரிய உயிர்க்கு' எனப் புலவர் ந. சி. கந்தையாவும்; 'பெறுதற்கரிய மக்கள் உயிர்க்கு' எனப் பரிமேலழகரும் பேராசிரியர் முனைவர் மு. வரதராசனும் பொருள் கண்டுள்ளனர்.

இவை இம் மணிவிளக்கவுரையை நோக்கி அலைபாய்கின்றன என்று காணலாம்.

---

1. In man

'ஆருயிர்க்கு' என்பதைப் 'பெறுதற்கரிய மக்களுக்கு' எனப் பொருள் விளக்கிப் பரிமேலழகர், அருமை என்ற அடைக்கு மேலும் இலக்கண விளக்கம் தருகிறார். 'பிறப்பினது அருமை பிறந்த உயிர் மேல் ஏற்றப்பட்டது' என்பதே அது.

உயிர்கள் பல பிறப்புக்களில் அருந் தவங்கிடந்து மிக அருமையாகவே மனிதப் பிறப்புப் பெறுவன என்ற பரிமேலழகரின் இக் கருத்து, புத்தர்பிரானுக்குப் பிற்பட்ட இடைக் காலப் பிறப்பு இறப்புக் கோட்பாட்டுக் கருத்தே யானாலும், திருவள்ளுவர் கால உயிர் மலர்ச்சிக் கருத்தின் தடம் அதன் மீது பதிந்துள்ளதும், அக் கருத்து இம் மணிவிளக்கவுரை நோக்குவதும் கண்கூடு.

(3) என்போடு இயைந்த என்பதற்குப் பரிமேலழகர் உடம்போடு உண்டாகிய என்று பொருளுரைத்தார். என்பு என்பதை அவர் ஆகுபெயராகக் கொண்டே உடம்பு என்று கூறியதாகத் தோற்றுகிறது. ஆனால் இதற்கு அவர் இலக்கணம் கூறவில்லை. ஆனால் 'இயைந்த' என்பதற்கு மட்டும் அது 'உபசார வழக்கு' என்று கூறினார்.

கிட்டத்தட்ட எல்லா உரையாசிரியர்கள், மொழி பெயர்ப்பாசிரியர்களின் பொருளும் இதுவே.

ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் பேராசிரியர் எம், எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை மட்டும் 'என்போடு' என்பதை என்பாலாகிய உடம்பு[1] என்றார்.

(4) தொடர்பு என்பதற்கு உறவு, இணைப்பு, ஆதாரம் என்று பலரும் பொருள் கூறினர். நட்பு என்றனர், மணக் குடவர். தொடர்ச்சி என்றனர், பரிமேலழகர்.

என்போடு இயைந்த தொடர்பு என்பது முழுவதற்கு மாகப் பரிதியார் 'உடலானது நவதாதுவினால் ஆதாரம் பெற்ற தன்மை போல' என்றார். அன்பினால் உயிர் ஆதாரம் பெறுவதற்கு அவர் இதை உவமையாக்கினார்.

---

1. The body built of bone

தாதுக்கள் ஏழு என்றே பண்டை நூல்கள் கூறும். அவற்றை

> 'தொக்கு உதிரத்தோடு ஊன் மூளை நிணம் என்பு
> சுக்கிலம் தாதுக்கள் ஏழு'

என்ற ஔவை யோகக் குறட்பாவால் காண்க. இவற்றுடன் ஏதோ இரண்டு, முதிரா எலும்பாகிய மச்சை, முதிராத் தசை போன்றவற்றைச் சேர்த்துப் பரிதியார் தாதுக்கள் ஒன்பது என்றாராதல் வேண்டும்.

தொடர்பு, தொடர்ச்சி, ஆதாரம் என்ற முப்பொருள்களும் இயையப் பொருள் கூறிய இம் மணிவிளக்கவுரையை எல்லா உரைகளும் நோக்குவனவே யாகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

(5) 'என்ப' என்பதனை அசைநிலைபோல இடநிறைக்க வந்த சொல்லாக விட்டனர் மலையாள மொழிபெயர்ப்பாளர் வெண்ணிக்குளம், இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் முனைவர் பேராசிரியர் சங்கரராசு நாயுடு ஆகியோர். 'என்று கூறுவர்' என வாளா சொற்பெயர்ப்புச் செய்தமைந்தனர் பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார், சி. இலக்குவனார், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூ ஆகியோர்; 'என்று கூறுவர் நட்பினை' என்றே மணக்குடவரும் முடித்தார். மற்ற உரையாசிரியர்கள் அனைவரும் பரிமேலழகரை ஒப்ப 'என்று சொல்லுவர், அறிஞர்' என்றோ 'என்று கூறுவர் சான்றோர்' என்றோ உரைத்து இம் மணிவிளக்கவுரை நோக்கினர்.

(6) வழக்கு என்பதைச் 'சென்ற செலவு' என்று மணக்குடவரும்; 'இணைப்பு', 'சேர்க்கை', 'தொடர்பு' என ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, ட்ரூ, மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம், இந்தி மொழிபெயர்ப்பாசிரியர்கள் முனைவர் சங்கரராசு, வெங்கடகிருட்டினன் ஆகியோரும்; 'பயன்' என்று ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும்; 'ஒழுக்கம்' என்று புலவர் ந. சி. கந்தையாவும்; 'உயிரின் முறைமை'

என்று காலிங்கரும்; 'நெறியின் பயன்' என்று பரிமேலழகரும் பொருள் செய்துள்ளனர்.

வழக்கு அல்லது வழங்குதல் வழங்கிவந்த நெறிக்கு ஆகி, ஆகுபெயராயிற்று என்பர் பரிமேலழகர்.

(7) இக் குறட்பாவுக்கு உயிர் மலர்ச்சி நூலடிப்படையி லேயே இம் மணிவிளக்கவுரை தெளிவாக வள்ளுவப் பொருள் விளக்கம் செய்ய முடிந்தது. இவ்வடிப்படை கருதாமல், உரையாசிரியர்கள் பலரும் குறட்பாவின் மொந்தக் கருத்துக் காண்பதில் பல்வேறு வகையில் குழப்பமுற்றுப் பல்வேறு படியில் தெளிவு காண முயன்றுள்ளனர். அம்முறையிலும் பலர் உயிர் மலர்ச்சி நூலடிப்படை கொண்ட இம் மணி விளக்கவுரையின் திசை நோக்க நேர்ந்துள்ளது காணலாம்.

மணக்குடவரும் ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும் இக் குறட்பாக் கருத்துடன் புத்தர்பிரானுக்குப் பிற்பட்ட இடைக்காலப் பிறப் பிறப்பு வினைப் பயன் கொள் கையை இணைத்துள்ளனர். 'முற்பிறப்பின்கண் அன்போடு பொருந்தச் சென்ற செலவென்று சொல்லுவர், பெறுதற் கரிய உயிர்க்கு இப் பிறப்பின்கண் உடம்போடு இடைவிடாத நட்பினை' என்பது அவர் பொழிப்புரைக் கருத்து. 'இப் பிறப்பில் பிறருக்கு அன்பு செய்தற்காகவெனக் கிடைத்த உடம்புடன் உயிர் இணையப் பெறுவதானது, முற்பிறப்புக் களில் அத்தகைய அன்பு காட்டி வந்தமையின் பயனேயாகும் என்று கற்றறிந்தோர் வலியுறுத்திக் கூறுவர்'[1] என்பது ஐ. டி. தங்கசாமியின் மொழிபெயர்ப்பு.

மறுபிறப்புக் கோட்பாட்டினை வெளிப்படக் கூறுவிடி னும், பரிமேலழகர் கருத்தும் இதுவே என்று தோன்றுகிறது. 'பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடு உண்டாகிய தொடர்ச்சியினை அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்' என்பது அவர்

---

1. The learned assert that the combination of soul with the body for the exereise of love to others in this life is the result of the manifestation of such love in tne previous birth.

பொழிப்புரை. அத்துடன் 'உடம்போடு இயைந்தல்லது அன்பு செய்தலாகாமையின், அது செய்தற் பொருட்டு இத் தொடர்ச்சி யுளதாயிற்று என்பதாம். ஆகவே இத்தொடர்ச் சிக்குப் பயன் அன்புடைமையாயிற்று' என்று அவர் விளக்க வுரையிலும் எடுத்துரைத்தரர்.

முதலிருவரும் அன்புடைமையின் பயன் உடல் என்றனர். அவ்வாறாயின் முதலில் உடலில்லாமல் எப்படி அன்புடைமை தோற்றிற்று என்பதனை அவர்கள் கருதவில்லை. பரிமே லழகரோ, 'அன்புடைமையின் பயன் உடம்பு, அவ்வுடம்பின் தொடர்ச்சியின் பயன் அன்புடைமை' என இருதிசைக் காரண காரியத் தொடர்பும், இரு திசைப் பின்னல் இழைவு மலர்ச்சியும் காட்டியுள்ளார்.

முற்பிறப்புக் கோட்பாட்டை முனைப்பாகக் குறிக்காமலே பரிமேலழகரைப் போல முதலிருவர் கருத்தையும் தழுவி யுள்ளனர் பேராசிரியர் மு. வரதராசனார், புலவர் குழந்தை ஆகியோர். 'அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்தி யிருக்கிற உறவு அன்போடு கூடி வாழும் வாழ்க்கையின் பயன்' என்று பேராசிரியர் வரதராசனார் பொருள் கொண் டுள்ளார். புலவர் குழந்தையோ, 'அருமையான நமது உயிர்க்கு உடம்போடு பொருந்திய நட்பே, அன்போடு பொருந்திய செயல் என்பர் அறிவுடையோர்' என்று சொற் பொருள் தந்து, 'உயிருக்கும் உடம்புக்கும் உண்டான அன்பே அவை ஒன்றுபட்டு வாழ்தற்குக் காரணமாகும்' என்று கருத்து முடித்தார்.

இங்கே அன்பு உயிர்-உடல் உறவுக்கு உவமையாக்கப் படாமல், அவ்வுறவேயாகத் திரிக்கப்பட்டுள்ளது காணலாம்.

காலிங்கர் உயிருக்கும் உடம்புக்கும் உள்ள உறவுத் தொடர்ச்சியினை உயிருக்கும் உயிர்களிடத்து அன்புக்கும் உள்ள தொடர்ச்சிக்கு உவமையாக்கி யுள்ளார். 'உலகத்தின் கண் பல உயிருக்கும் தான் வைத்த அன்போடு பொருந்திய உயிரின் முறைமை யென்று சொல்லுவர் சான்றோர், அஃது எங்ஙனமெனின், அன்புடையாளனுக்குத் தன் உடம்போடு

பொருந்திய உயிரினது தொடர்ச்சியைப் போல' என்பது அவர் பொழிப்புரை. விளக்கவுரையிலும் அவர், 'அல்லதூஉம் அன்புடைமை நிறைய வருமளவும் உடம்புக்கும் உயிருக்கும் உறவாய் நின்று பின் வீட்டின்பத்தைப் பெறும்' என்றார்.

உயிர் மலர்ச்சிக் கோட்பாட்டை நேரடியாக நோக்காத நிலையிலும், இவ்விளக்கவுரை மூலம் காலிங்கர் இங்கே அது கடந்து வள்ளுவக் கோட்பாடே அணுகியுள்ளார் என்பது காணலாம். ஏனெனில் உடல் உயிர் உறவு அன்பால் நிரம்பி நிறை பேரின்ப நோக்கும் என்பது இங்கே அவர் கருத்தாகத் தெரிகிறது. உடம்போடு முத்தி என்ற யோக நெறியினர் கருத்தை இது நிழலிடுகிறது—அந்த யோக நூலார் கூறாத வள்ளுவ மரபின் தனிக் கருத்தான அன்புப் பண்பையும் இது அதனுடன் இணைக்கிறது.

'உடலாவது நவ தாதுவினால் ஆதாரம் பெற்றதுபோல, உயிர்க்கும் அன்பினாலே ஆதாரம் பெறின் நிலை பெறும்' என்பது பரிதியாரின் யோக நெறியே சார்ந்த அழகிய பொழிப்புரை. இவர் நவதாது என்றது,

> தொக்கு உதிரத்தோடு ஊன் மூளை நிணம் என்பு
> சுக்கிலம் தாதுக்களேழு.

என்று ஔவை யோகக் குறள் எடுத்துரைத்த ஏழு தாதுக்களையோ அல்லது பொன், வெள்ளி, இரும்பு. செம்பு, ஈயம், பித்தளை, தரா (செம்பு காரீயக் கலவை) துத்தநாகம், வெண் கலம் ஆகிய ஒன்பது உலோகங்களையோ என்பது தெளிவுபட வில்லை. முன்னதில் பொருட் பொருத்தம் உண்டு, எண் பொருத்தம் இல்லை. பின்னதில் எண் பொருத்தம் உண்டு, பொருள் பொருத்தம் இல்லை. எதுவாயினும் அவர் முடிவு தெளிவே.

'மனிதனுடைய அரிய உயிருக்கு உடலோடு கூடிய சம்பந்தத்தை அன்போடு கூடிய ஒழுக்கத்தின் பொருட்டே யாகும் என்று அறிஞர் கூறுவர்' என்பது புலவர் ந. சி. கந்தையாவின் பொழிப்புரை. 'அன்பு செய்யாவிடில் பிறப் பினால் பயன் இல்லை' என்பது அவர் முடிவு.

'பெறுதற்கரிய மக்கள் உயிர்க்கு உடம்போடு உண்டாகிய தொடர்பு (அதாவது பிறந்தது) அன்போடு பொருந்திய நெறியின் பயன்' என்று மொழிப்பு தந்து, 'இருவர் கொண்ட அன்பால் பிறந்தோம், நாமும் அன்புடையவராய் வாழ்வோம்' என்று பச்சை உலகியல் கூறி முடித்தார் பேராசிரியர் முனைவர் சி. இலக்குவனார்.

'மனிதப் பிறவி மற்றப் பிறவிகளுக் கெல்லாம் உயர்ந்த பிறவி யென்றும் அடைவதற்கரிய பிறவி யென்றும் சொல்லப்படுவது எதனால் என்றால், மனிதப் பிறவிக்கு அதன் எலும்போடு சேர்ந்து பிறந்திருக்கிற அன்பு உணர்ச்சி யிருக்கிற காரணத்தால்தான்' என்று பொழிப்புரையும்; 'மனிதர்களுக்குத்தான் சேர்ந்து வாழும் சமூக உணர்ச்சி உண்டு. அந்த உணர்ச்சி இயற்கையாகவே மனித சரீரத்தில் எலும்போடு கலந்திருக்கிற அன்பு என்ற குணத்தினால்தான் உண்டாகிறது. ஆருயிர்க்கு என்றதனால் மனிதப் பிறப்பைக் குறிக்கும்' என்று விளக்கவுரையும் தந்தார், கவிஞர் இராமலிங்கனார்.

வள்ளுவ உயிர் மலர்ச்சிக் கோட்பாடும், பண்பு மலர்ச்சிக் கோட்பாடும், அன்பு மலர்ச்சிக் கோட்பாடும் சமயத்துறை, யோகத்துறை, கவிதைத்துறை மரபுகளில் தமிழனுக்குத் தொடர்ந்து வந்து எட்டியிராவிடில், இக் குறட்பாவுக்குத் தமிழுரையாசிரியர் எளிதில் பொருள் கண்டிருக்க முடியாது என்று துணிந்து கூறலாம். ஏனெனில் உடம்புக்கும் உயிருக்கும், அவற்றுடன் அன்புக்கும், நிலைத்த மூவா வாழ்வின் முதலான பேரின்பம் அல்லது கடவுளுக்கும் உள்ள தொடர்பை தமிழ் யோக நூல்களே வலியுறுத்தியுள்ளன.

'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே,
உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே!'

என்று சித்தருள் முதல்வரான திருமூலரும்,

'உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்'

என ஞானக் குறள் இயற்றிய ஔவை மூதாட்டியாரும் முழங்குகின்றனர்.

பரிமேலழகர், புலவர் ந. சி. கந்தையா, காலிங்கர் ஆகியோர் உரைகளில் இக் கருத்துக் கூறுகள் நிழலாடுவது காணலாம்.

உடலுக்கு உயிர் போன்ற தொடர்பே அன்புக்கு உயிர் போன்ற தொடர்பு என்ற காலிங்கரது உவமைக் கருத்து, சற்று மாற்றப்பட்டு, உடலுக்கு உயிர் போன்ற தொடர்பே, உயிருக்கு அன்பின் தொடர்பு எனக் கூறப்பட்டிருப்பின், அழகும் பொருத்தமும் மிகுதியாகும் என்பது காணலாம். ஏனெனில் முன்னது புற உயிர் வாழ்வையும், பின்னது அக உயிர் வாழ்வையும் குறிப்பன ஆகிவிடும். காலிங்கர் உட் கருத்து இதுவே என்பதை அவர் உரையின் பிற்பகுதி காட்டுகிறது.

முற்பிறப்புக் கோட்பாடு குறிக்காமலே இவ்வாறு பல பழய, புதிய உரையாசிரியர்கள் இக் குறட்பாவில் திருவள்ளுவர் கருத்தழகில் ஊடாடியுள்ளது காணலாம். உடலுயிர்த் தொடர்பு அன்புடைமையின் பயன் என்று கூறியவர்களில் சிலர் முற்பிறப்புக் கோட்பாடு உட்கொண்டும் சிலர் அதை வெளிப்படக் கூறியும் சுட்டினாலும், அதைப் பொருத்திக் காட்டவோ, பிறர் கண்ட கருத்தழகு காணவோ செய்திலர். ஆனால் முற்பிறப்புக் கோட்பாட்டை உட்கொண்டு, உடலுயிர்த் தொடர்பை அன்புடைமையின் பயனாகவும், அதுபோலவே அன்புடைமையை உடலுயிர்த் தொடர்பின் பயனாகவும்: அத்துடனாக, இரு தொடர்புகளையும் காரண காரிய இருதிசைத் தொடர்புகளாகவும் கண்ட பரிமேலழகரும்; அன்பினால் வளர்ச்சியுற்று உயர்ந்த இனம் மனித இனம் எனக் கூறிய கவிஞர் இராமலிங்கனாரும்; உடலுக்கு நவதாது ஆதாரமானதுபோல, உயிருக்கு அன்பு ஆதாரம் எனக் குறித்த பரிதியாரும் இம் மணிவிளக்கவுரை நோக்கிப் படிப்படியாக முன்னேறி வந்துள்ளனர் என்பது காணலாம்.

இவ்வுரை கோள்கள் அனைத்தையும் பொருத்திக் காண்பதில் முற்பிறப்புக் கோட்பாடு ஓரளவிலும், உயிர் மலர்ச்சிக் கோட்பாடு பேரளவிலும் பயன்படுவது கூர்ந்து கவனிக்கத் தக்கது. கீழ்திசையெங்கும் உலகில் பரவியுள்ள முற்பிறப்புக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது. இம் முற்பிறப்புக் கோட்பாடு திருவள்ளுவர் காலத்தில் இல்லாத ஒன்றானாலும், அதன் முன்னிழல் தடத்தைத் திருவள்ளுவர் குறட்பாக்களிலே காண்கிறோம். ஏனெனில் முற்பிறப்புக் கோட்பாடு என்பது, வள்ளுவ உயிர் மலர்ச்சிக் கோட்பாட்டு மரபில் வந்த புத்தர்பிரான் காலத் திரிபேயாகும். உலகெங்கும் பரந்துள்ள 'ஊழ்'க் கருத்தும், கீழ்திசையில் மட்டுமே பெரிதும் பரந்துள்ள மேற்குறிப்பிட்ட யோகக் கருத்தும், இம் மூல உயிர் மலர்ச்சிக் கோட்பாட்டிலிருந்து, முற்பிறப்புக் கோட்பாட்டின் உடன்பிறப்புக்களாகப் பிறந்த பிற மரபுகளே யாகும்.

இக் குறட்பாவுக்கு இம் மணிவிளக்கவுரை கண்ட பொருளும், அதற்குரிய வள்ளுவ உயிர் மலர்ச்சிக் கோட்பாடும் இக் குறட்பாவுரைகளுக்கு உரைப்பொருள் விளக்கமாகவும்; மனித இன நாகரிக விளக்கமாகவும்; இந்திய, மேலையுலகச் சமய மரபுகளுக்கு விளக்கமாகவும்; அதேசமயம் லமார்க், டார்வின் ஆகியோர் செயல் முறை ஆராய்ச்சி விளைவுகளுக்கு ஓர் அரிய துணைவிளக்கமாகவும் அமைதல் கண்கூடு.

74. அன்பு, ஆர்வம், நட்பு: அன்புப் பண்பின் சமுதாய மலர்ச்சிப் படிகள் இவை.

> [1]அன்பு [3]ஈனும் [2]ஆர்வமுடைமை: [4]அது [6]ஈனும்
> [5]நண்பு என்னும் நாடாச் சிறப்பு.

பொ - ரை: [1](காதற் குன்றாகிய குடும்பத்திலிருந்து எழுந்து பரவும்) அன்பு என்னும் சமுதாயப் பண்பானது [2](சமுதாயத் தொண்டுகளில் ஈடுபட முந்தும்)

செயல் உணர்வு பொங்கும் உளப் பண்பை [3]உயிர்ப் பண்பாக உண்டுபண்ணி விடும் தன்மையது ஆகும். [4]அவ் உளப் பண்பு [5]நண்பு என்னும் அவா ஆர்வ எல்லை கடந்த பெருமிதச் செயற்பண்பைப் பொங்குமா வளமாகத் [6]தானே படைத்துப் பெருக்கிவிடும்.

கு - ரை : *சமுதாய வாழ்வில் எதுவும் செயல் நோக்கமும் அவா ஆர்வ முயற்சியும் இன்றி ஈடேறுவதில்லை. ஆனால் எவ்வித முன்னோக்கும் முன் முயற்சியும் இன்றிக் காதலிலிருந்து குடும்ப எல்லையில் தானாக அன்பு பிறந்துவிடுகிறது. அது உயிர்ப் பண்பாதலின், வேறு நோக்கின்றி, முயற்சி யின்றி, தானாகவே அது சமுதாயத் தொண் டுணர்வு அல்லது ஆர்வம் என்னும் பொங்கற் பண்பை வளர்த்துப் பெருக்கும். இத் தொண் டுணர்வு அல்லது ஆர்வம் மக்கள் விருப்பெல்லை களை, கனவார்வ எல்லைகளையே கடந்த பொங்குமா வளமாகிய நண்பு என்னும் இன வளப் பண்பைப் பெருக்கிவிடும்.*

இலக். கு: இக் குறட்பாவின் வாசகங்கள் இரண்டு. இதன் சொற்கள் நான்கு.

அவையாவன :

(1) முதல் வாசகம் :

1. அன்பு (இது முதல் வாசக எழுவாய்).
2. ஆர்வமுடைமை ஈனும் (இது முதல் வாசகப் பயனிலை).

(2) இரண்டாம் வாசகம் :

1. அது (இது இரண்டாம் வாசக எழுவாய்).

2. நண்பு என்னும் நாடகச் சிறப்பு ஈனும் (இது இரண்டாம் வாசகப் பயனிலை).

இக் குறட்பாவில் வல்லோசை மிகக் குறைவு. 'வல்லொலியாக வரும் எழுத்துக்களும் சிறப்பு என்ற இறுதிச் சீர் நீங்கலாக, உயிரிடைத் தகரமும் னகர ணகர மென்மைகள் அடுத்த பகரமுமே யாதலால், இடைமையும் மென்மையும் உயிருமே மிக்குள்ளன. இவையும் அழுந்திய இரு ஈகார ஒலிகளும் சேர்ந்து, குறட்பாவுக்கு வீணையின் ஒற்றை நரம்பின் (சுரத்தின்) பல்லிசை அதிர்வு போன்ற தனி நயம் தருகின்றது.

அன்பீனும், அதுவீனும், நண்பென்னும் ஆகிய மூன்றுமே இக் குறட்பாவின் காய்ச் சீர்கள். முதலதில் இரண்டாம் அசையும், இரண்டாவதில் முதலசையும் எடுத்திசைத்தன. மூன்றுவதில் மூவசையும் ஒத்திசைத்தன. ஆர்வமுடைமை என்ற ஒரு சொல் (ஆர்வம், உடைமை என) இரண்டு குறுகிய மாச்சீர்களாய்ப் பிரிந்திசைத்தது. இவற்றுள் முதலதில் மட்டுமே முதலசை எடுத்திசைத்தது. 'நாடா' என்ற சீர் நெடுந் தேமாவாய், அதன் ஈரசைகளும் ஒப்ப நிமிர்ந்திசைத்தன. முழுவதும் படுப்பிசைப்பாக இயலும் இக் குறட்பாவில் இவ் எடுப்பிசைகளும் கூட அடங்கிய எடுப்பிசைப்புக்களே. ஆனால் இறுதிச் சீரான சிறப்பு என்பது மட்டும் வல்லோசையாய், முற்றிலும் எடுப்பிசைப்பாகவே இயன்றுள்ளது.

அன்பு என்பது பெயர்ச் சொல். இது முதல் வாசக எழுவாயாய், 'ஆர்வமுடைமை ஈனும்' என்னும் வினைமுற்றுத் தொகைநிலையைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

ஆர்வமுடைமை ஈனும் என்னும் தொகைநிலை அதன் ஈற்றுச் சொல்லான ஈனும் என்பதனை ஒப்ப, வினைமுற்று. இது முதல் வாசகப் பயனிலையாய், 'அன்பு' என்பதனை எழுவாயாகக் கொண்டு இயன்றது.

ஈனும் என்ற வினைமுற்றின் பகுதி ஈன் என்பது. 'உம்' என்பது காலப் பொதுமை சுட்டும் ஒன்றன்பால் எதிர்கால வினைமுற்று விகுதி. இவ் விகுதி இடைநிலை ஏற்பதில்லை.

ஆர்வமுடைமை ஈனும் என்பது ஆர்வமுடைமையை ஈனும் என்ற பொருளில் இரண்டாம் வேற்றுமைத் தொகை. ஆர்வமுடைமை என்பது இதனால் ஈனும் என்பதன் செயப்படு பொருளாயிற்று.

ஆர்வமுடைமை என்பது முதற்கண் ஆர்வத்தை உடையதா யிருக்கும் தன்மை என இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆகிய பண்புப் பெயராய்; இரண்டாவதாக அத் தொகைநிலை பண்புப் பெய ரடியாக ஆர்வத்தை உடையரா யிருத்தல் என்ற 'மை' ஈறு பெற்ற தொழிற் பெயராய்; மூன்றாவதாக அத் தொழிலின் செய் முதற் பண்பான உளப் பண்புக்கு ஆகித் தொகைப் புறத்துப் பிறந்த மும்மடி ஆகுபெயராயிற்று. ஆர்வம் என்பதும் இங்கே ஆர்வத் தூண்டுதலுக்கு ஆகி நின்றது. இதனாலேயே ஆர்வமுடைமை என்பது இங்கே ஆர்வத் தூண்டுநிலை யுடைய உளப் பண்பு என்னும் பொருள் தந்தது.

உடைமை பண்புப் பெயர், மை ஈறுடையது ஆர்வமும் பண்புப் பெயரே. இது 'அம்' ஈறுடையது. ஆர்வன்மை என்ற மற்றொரு பண்புப் பெயரும், ஆர்வலித்தல் என்ற வினையும் உண்டு என்பது முன் குறட்பாவுரையில் கூறப்பட்டுள்ளது.

அது என்பது இரண்டாம் வாசக எழுவாயாய், 'நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும்' என்ற தொகைநிலை வினைமுற்றைப் பயனிலை யாகக் கொண்டு முடிந்தது.

இச்சொல் படர்க்கை ஒன்றன்பால் இடப்பெயர். இங்கே சுட்டுப் பெயராய்; முன் வந்த 'ஆர்வமுடைமை' என்பதையே சுட்டு முதலாகக் கொண்டு நின்றது. தொல்காப்பிய இலக்கண மரபுப்படி இப்பெயர் உயிர் முன் ஆய்தம் இடையிடப்பட்டு அஃதினும் என்றே வரல் வேண்டுமாயினும், இக் குறட்பாவில் இச் சீரில் முதலசை எடுத் திசைத்ததனாலேயே, மெய்ம்முன் வரும் 'அது' என்ற வடிவம் இடம் பெற்றது என்னல் தகும்.

நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும் என்ற தொகை அதன் ஈற்றுச் சொல்லான ஈனும் என்பதனை ஒப்ப; வினைமுற்று. இத் தொகைநிலை ஆர்வமுடைமை என்பதையே சுட்டு முதலாகக்

கொண்டு, முன் வந்த 'அது' என்பதனை எழுவாயாகக் கொண்டு இரண்டாம் வாசகப் பயனிலையாயிற்று.

ஈனும் என்பது முதல் வாசகத்தில் வந்த ஈனும் என்பதனை ஒத்த இலக்கணமே உடையது.

சிறப்பு ஈனும் என்பதில் சிறப்பு என்பதன் பின் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. சிறப்பு என்பது 'பு' ஈறு பெற்ற பண்புப் பெயர்; 'சிற' என்ற வினைப்பகுதி யடியாக, 'பு' என்ற தொழிற் பெயர் விகுதி பெற்றுப் பகரம் இரட்டித்து வந்த தொழிற் பெயர். இப் பெயர் பண்புக்கு ஆகி வந்தது.

நாடாச் சிறப்பு என்பதில் நாடா என்பது 'நாடு' என்ற வினைப் பகுதியடியான நாடாத என்ற எதிர்மறைப் பெயரெச்சத்தின் 'த' என்ற இறுதி எழுத்துக் கெட்ட வடிவம். நாடாத என்பதில் 'ஆ' எதிர்மறை இடைநிலை, 'த்' எழுத்துப் பேறு. 'அ' பெயரெச்ச விகுதி. எழுத்துப்பேறும் விகுதியும் கெட்ட வடிவம் இது என்பதினும், நாடு சிறப்பு என்ற வினைத் தொகையின் எதிர்மறை வடிவம் இது என்பதே பொருத்தமாதல் சாலும்.

நாடா என்ற எதிர்மறைப் பெயரெச்சப் பொருள் அல்லது எதிர்மறை வினைத் தொகைக்கூறு சிறப்பு என்ற பெயர் கொண்டு முடிந்தது. அதுபோலவே நண்பென்னும் என்பதிலுள்ள என்னும் என்ற பெயரெச்சமும் சிறப்பு என்பதே கொண்டு முடிந்தது.

என்னும் என்பது 'என்' என்ற வினைப் பகுதியடியாக, காலப் பொதுமை சுட்டிய எதிர்காலப் பெயரெச்ச விகுதியாகிய 'உம்' சேர்ந்த வடிவம். இவ் விகுதி இடைநிலை ஏற்பதில்லை. தனிக் குறில் அடுத்த பகுதியீற்று னகரம் விகுதி உயிர் முன் இரட்டிற்று.

என்னும் என்பது பெயரெச்சமாயினும் இங்கே நண்பு, சிறப்பு என்ற இரு பெயர்களையும் ஒரு பொருள் சுட்டிய இரு பெயர்த் தொகையாக இணைக்கும் இடைச் சொல்லாகவே இயன்றது. இவ் வகையில் 'என்' என்ற வினைப் பகுதி கூற்று வாசக விளக்கப் பொருள் பகுதி ஆயிற்று. நண்பென்னும் சிறப்பு என்பது ஒரு பொருள் சுட்டிய இரு பெயர்த் தொகையாக நின்றது.

நண்பு என்பது நட்பு என்பதன் மெலித்தல் வடிவமே யாகும். நண்பன், நண்பர் என்ற சொற்களில் இன்று இம் மெலித்தல் வடிவம் மட்டுமே பயில்வது காண்கிறோம். நட்டார் என்ற உடன்பாட்டு வடிவத்தையும், நள்ளார் என்ற எதிர்மறை வடிவத்தையும், இவை போன்ற மற்றவற்றையும் இலக்கண உரையாசிரியர்கள் குறிப்பு வினைகளாகவே கொள்வர். ஆனால் எதிர்மறை வடிவமிருப்பதை நோக்க, இது குறிப்பு வினையாக மட்டுமன்றி, தெரிநிலை வினையாகவும் திருவள்ளுவர் நாட்களில் வழங்கி யிருக்கலாமோ என்று கருத இடமுண்டு. திருவள்ளுவர் வழங்கும் 'நட்பது' போன்ற வடிவங்கள் (786) வினை வடிவங்களே என்று கருதல் தகும் என்பதை அக் குறட்பாவுரையில் தெளியக் காண்க.

வி-ரை: அறவாழ்வின் மழைவளத்துக்குரிய பயிர்வளப் பண்பான அன்புடைமையின் சால்பு முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடைய தாயினும், இக் குறட்பாவுடன் தொடங்கும் அதிகாரத்தின் மூன்று குறட்பாக்களும் (74-76) அதன் பொருள் வாழ்வு அதாவது சமுதாய வாழ்வுத் தொடர்பு சிறப்பிக்கின்றன. அவ் வழி, இக் குறட்பா குடும்பத்தில் இயல்பாகப் பிறந்த அன்பு, சமுதாய வாழ்விலும் இயல்பாகவே ஆர்வம் அதாவது சமுதாயத் தொண்டுணர்வாகவும், நண்பு அதாவது இனத் தொண்டுணர்வாகவும் படர்ந்து மலர்ச்சியுற்று இனப் பொங்குமாவளம் நோக்கிப் படர்ச்சியுறுவதாகும் என்பதனை விதந்தோதுகின்றது.

அன்பு என்பது 'காதற் குன்றாகிய குடும்பத்திலிருந்து எழுந்து பரவும் அன்பு என்னும் சமுதாயப் பண்பானது' என்று பொருள்படும்.

அன்பு என்ற சொல் தமிழுக்கே சிறப்பான சொல்; அவ் அன்புப் பண்பும் தமிழினமே கண்ட பண்பு ஆகும். ஏனெனில் பிற மொழிகளில் அக் கருத்து உண்டு, ஆனால் பிற பண்புகளுக்குரிய பெயர்களுடன் விரவிய சொல்லன்றித் தனிச் சொல்லும், பிற பண்புகளிலிருந்து பிரித்தறியப்பட்ட தனிக் கருத்து வரையறையும் கிடையாது. அது காதலிலிருந்து

பிறப்பதாயிலும் காதலுக்குரிய பருவ வரையறையோ, பால், இட வரையறையோ உடையதன்று-அருளைப் போலவே அது எல்லையற்றது, ஆனால் திசை மாறித் தன்னல மைய நின்று இன நோக்கிப் பரவுவது ஆகும். காதலுக்குரிய சூழலமைத்து, அதன் நிலைக்களங்களாகக் குடும்பமும் சமுதாயமும் இனமும் வகுத்தமைப்பதும் அதுவே.

அன்பு என்ற சொல் அதிகார முன்னுரையிலும் முதல் மூன்று குறட்பா வுரைகளிலும் பல கோணங்களிலிருந்து விளக்கப்பட்டுள்ளது. ஆனால் முதல் மூன்று குறட்பாக்களும் இன வாழ்வு சார்ந்த பகுதியாதலின், அங்கே இனத்தின் சென்ற கால வாழ்விற்குரிய அன்பு நோக்கிய மலர்ச்சியே—காதல், பாசம், அன்பு என அன்பில் வந்து முடியும் மலர்ச்சியே குறிக்கப்பட்டது. ஆனால் சமுதாயப் பகுதி கூறும் முக் குறட்பாக்களில் முதலதாகிய இக் குறட்பாவில் அன்பின் மலர்ச்சியே, சமுதாயத்திலும் இனத்தின் வருவாழ்விலும் வளர வேண்டும் மலர்ச்சியே—அன்பிலிருந்தே தொடங்கி, அன்பு-பண்பு-இன்பம் என்ற இன்ப நோக்கிய மலர்ச்சியே குறிப்பிடப் பட்டுள்ளது. இது முன்னைய அன்பு மலர்ச்சியின் பிற்பகுதி ஆகும்.

அன்பு இவ்வாறு அன்பின் முழுமலர்ச்சியில் நடுநிலைப் பண்பு ஆகும்; அது மலர்ச்சியின் மலர்ப் பருவம் ஆகும். முன்னைய இனவாழ்வில் தலைமுறை தலைமுறையாகக் குடும்பத்தில் தனி உயிர்கள் இரண்டின் இன்ப வாழ்வாகிய காதலில் வேர்க்கொண்டு தொடங்கிய அது, இன வாழ்வின் வருவளப் பருவத்தில் அன்பு மலர்ச்சியிலிருந்து தொடங்கிக் காய்த்துக் கனிந்து, மீண்டும் புதிய இன்ப வாழ்வின் விதை ஆகிறது என்பது காணலாம்.

அன்பு என்பது அருளுடன் சரி ஒத்த பண்பு, திசை மாற்றம் மட்டுமே உடையது என்பது முதற் குறட்பாவுரையிலும் இக் குறட்பா வுரையிலும் கூறப்பட்டதே. ஆனால் திசை மாற்றத்தால், அது அருளிலும் தளத்தில் குறைந்த தாகிறதே யன்றி, விளைவிலோ பயனிலோ ஆற்றலிலோ

குறைந்ததாகிவிடவில்லை. இவ்வுண்மையை இக் குறட்பாவும் வருகுறட்பாக்களும் விளக்குகின்றன.

அன்பு என்பது இவ்வாறாக, காதல் - பாசம் - அன்பு - பண்பு - இன்பம் என்ற முழு நிறை அன்பு மலர்ச்சியில் நடுப்பருவம், அவ் வன்பு மலர்ச்சியின் மலர்ப் பருவம் ஆகும்.

அன்பும் அருளும் சூழலைகளை ஓயாது பாயவிடும் திறத்தில் ஒன்றுடனொன்று ஒத்த பண்புகளே. ஆயினும் அருள் இன வாழ்விலிருந்து குடும்பமாகிய,வாழ்க்கை மைய நோக்குவது; பொதுநலத்திலிருந்தே தனிநலம் நோக்கிச் செல்வது, இட எல்லையில் அலைபாயாமல் கால எல்லையிலேயே அலைபாய்வது ஆகும். இதனால் அது தலைமுறைதோறும் சமுதாயத் தளம் உயர்த்திச் செல்லுமே யன்றி, சமுதாய ஆட்சிப் பரப்பில் அலைபாய்ந்து பரவும் ஆற்றல் பெறுவதில்லை. அன்போ, இதுவகையில் அருளுக்கு நேர் மாறானது. அது தன்னலத்திலே பிறந்து, தன்னலங்களினூடாகவே பொது நல நோக்கிச் செயலாற்றுவது; குடும்ப மையத்திலிருந்து இன வாழ்வுக்கு, இட எல்லையிலிருந்து கால எல்லை நோக்கிப் படிப்படியாக விரிவுற்றுப் பரவி அலை பாய்ந்து செல்வது. தென்றல் போன்ற பொதுநலத்துக்கு இல்லாத ஆற்றல், புயல் போன்ற அவாவுக்கு உண்டு. தன்னலமளாவிய இன்ப அவாவாகிய காதலிலிருந்து பிறப்பது அன்பு. அதன் அலைகளுக்கு இதனால் அருளலைகளைவிட மிகுதியாகச் சமுதாயத்தை மாற்றியமைக்கும் ஆற்றல் ஏற்பட்டுவிடுகிறது.

இதுமட்டுமன்று.

கதிரவனின் ஒளிக்கதிர் அலைகளுக்கு ஒளியாற்றலும் உண்டு, வெப்ப ஆற்றலும் உண்டு. அக் கதிரலைகள் காற்று மண்டலம் தாண்டியே நிலத்துக்கு வருகின்றன. ஆனால் காற்று மண்டலத்தை அது ஒளியலையாகவே ஊடுருவுகிறது. காற்றை வெப்பப் படுத்துவதில்லை: நிலஞ்சார்ந்த பின்னரே வெப்ப அலை பரப்பி, எதிலும் வெப்பமூட்டுகிறது. நிலஞ் சார்ந்த பின்னரும் காற்றைவிட நீருக்கும், நீரைவிடப் பாறைக்கும் ஒளிக் கதிர் வாங்கி வெப்ப அலைகளாக்கி வெப்ப நிலை அதாவது வெக்கை பரவ விடும் ஆற்றல் மிகுதியாவது

காணலாம். ஒளியலைகள் ஊடுருவும் அலைகள், அருள் போன்றவை, வெப்ப அலைகளே ஆற்றலலைகள், பரவும் அலைகள் என்பதையும்; நெகிழ்வும் நுண்மையும் மிகுந்தோறும் ஒளி மிகுதி செயலாற்றுகிறது, செறிவும் பருமையும் மிகுந்தோறும் வெப்பம் மிகுதி செயலாற்றுகிறது என்பதையும் நாம் இங்கே காணலாகும்.

நெகிழ்வும் நுண்மையும் ஒளி ஊடுருவ விடுகின்றன, பருமையும் செறிவுமே ஒளி தடுத்து, அத் தடுப்பு மூலமே வெப்பாற்றல் ஆகின்றன.

தன்னலத்தைவிடப் பொதுநலம் நுண்ணலை இயக்கமாதலால் அது நீடித்த, நிலைத்த அலைபாய்வுடையது; கால எல்லையில் நெடுந்தொலை செல்வது அது. ஆயினும் புறப்படும் இடத்தில் தன்னலமும், தற்பற்றும், தன் முனைப்பும், அவாவும் இல்லையாதலால், அது ஆற்றலற்றது ஆகிறது. காதலும் அதன் விளைவான அன்பும் புறப்படும் இடத்தில் தன்னலமும் தற்பற்றும் தன் முனைப்பும் அவாவும் நிரம்பியிருப்பதால், அவை ஆற்றல்மிக்க அலைகளாய் எழுகின்றன. அத்துடன் பரவுமிடம் தோறும் அங்குலம் அங்குலம் தோறும், அன்பு தன்னலத்துடனும், தற்பற்றுடனும், தன் முனைப்புடனும், அவாவுடனும் மோதிமோதித் தடைபட்டுத் தடைபட்டு, நுண்நுணுக்க அலைகளாகச் சிதறிப் பெருகுகிறது. தடை இவ்வாறு அலைகளைச் சிதறவிடுவது மட்டுமன்றி, அலை எதிர் அலைகளாகவும் பெருக்குகின்றது. ஆதலால், அன்பு தன்னலத்துடனும் தற்பற்றுடனும் மோதும்போது அன்பலைகளாகி, தன் முனைப்புடன் மோதும்போது ஆர்வ நுண்ணலைகளாக்கி, அவாவுடன் மோதும்போது நண்பென்னும் நுண்நுணுக்க அலைகளாகிச் சிதறியும், அலை எதிர் அலைகள் பாய்வித்தும், அலை நுண்ணதிர்விலும், அலைகளின் தொகையிலும், இருதிசைப் பெருக்கத்திலும் எல்லையற்ற வளர்ச்சிபெற்றுப் பொங்குமாவள அலைகளாகப் பொதுளுகின்றது.

அன்பு இங்ஙனம் திசைமாற்றத்தால்கூட, அருளினும் தளத்தில் குறைந்ததேயன்றி, ஆற்றலிலும் பயன் விளைவிலும்

குறைந்ததன்று என்பதையும்: அருள் நோக்கிச் செல்லும் அதன் மலர்ச்சியில் அது அருளைவிடப் பெருகும் பேராற்றல் வாய்ந்தது என்பதையும் காணலாம். அன்பு·பண்பு-இன்பம் என்ற இன்ப நோக்கிய சமுதாய அன்பு மலர்ச்சியின் முக்கியத்துவம் இதுவே.

ஆர்வமுடைமை என்பது 'சமுதாயத் தொண்டு செய்யும் ஆர்வம் பொங்கும் உளப் பண்பை' என்று பொருள்படுவதாகும்.

ஆர்வமுடைமை என்ற தொகையில் ஆர்வம் என்பது ஆர்வத் தூண்டுதலுக்கு ஆகுபெயர் என்பதும்: ஆர்வமுடைமை என்ற தொகை முதற்கண் ஆர்வத் தூண்டுதலை உடையதாயிருக்கும் தன்மை என இரண்டாம் வேற்றுமைத் தொகையான பண்புப் பகுதியாய், பின் அத் தொகையடியான தொழிற்பெயராய், மூன்றாவதாக ஆர்வத் தூண்டுதலை உடையதா யிருத்தல் என்னும் தொழிலின் செயல் முதலாகிய உளப் பண்புக்கு ஆகுபெயராய் வந்தது என்பதும் இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டன. ஆர்வம் சமுதாயத் தொண்டில் விறுவிறுப்பு உணர்வும் அக்கரையும் ஆகும்: இதனாலேயே ஆர்வமுடைமை, ஆர்வத் தூண்டுதலையுடைய உளப்பண்பை, சமுதாயத் தொண்டு செய்யும் ஆர்வத் தூண்டுதல் பொங்கும் உளப் பண்பை' என்னும் பொருள் தந்தது.

ஆர்வம் அன்பின் மிகுதி. அன்பு முனைப்பு; அது தன்னலக் கோட்டினை கடந்து, ஆனால் தன்னலத்திலும் முனைப்பும் வேகமும் மிக்கதாக, பொதுநலத்தில் புகுந்தாடும் அன்புப் பண்பு ஆகும். இதனை உடையவர் தன்னைக் கடந்து தன்னைச்சார்ந்த பிற பொருள்கள், ,பண்புகள், செயல்கள், ஆட்கள்மீது பற்றுள்ளம் கொண்டு, தமக்காக உழைப்பதினும் மிகுதியாக அவர்களுக்காக, அவற்றுக்காக உழைப்பர், உழைக்க முன் வருவர்; தமக்காக உழைப்பதிலும் பிறர்க்காக, பிறவற்றுக்காக உழைப்பதில் இன்பம் காண்பர்.

ஆர்வன்மை, ஆர்வலித்தல். ஆர்வலர், ஆர் (நிறைவு, சக்கரத்தின் உட்கை), ஆர்தல், (நுகர்தல்), ஆர்த்தல்

(அதிர்ந்து ஒலித்தல்), ஆர்த்தி (உந்துகின்ற அக வேட்கை) முதலிய சொற்களுடனும் சொற்பொருள்களுடனும் ஆர்வம் என்னும் சொல்லும் பொருளும் தொடர்புடையன ஆகும். தற்பற்றும் தன் முனைப்பும் தன்னவாவும் அன்பால் நூண்டப் பட்டு, தன்னைவிட்டுப் பிறரை, பிறிதொரு சமுதாயப் பண் பினையே தான் எனப் பற்றிக்கொண்டு, அம்முனைப்பு, பற்று, அவா ஆகியவற்றின் ஆற்றலை யெல்லாம் அவற்றின் மீது சொரிதலே ஆர்வம் ஆகும்.

தன்னலம்கூட, தற்பற்று, தன்முனைப்பு, தன்னவாக் கூட மடிமை, மடமை, நெடுநீர்மை (நாளை நாளை என்று கடத்திப் போகும் தன்மை), மயக்க மருட்சிகள், உள்ளப் பகைமை, சினம், பேரவா, முதலிய தீய பண்புகளின் கூட் டுறவால் ஆற்றலற்றவையாகவோ, தவறான புயலாற்ற லுடையவையாகவோ அமைதல் கூடும். இவ்விரு தவறுகளும் இல்லாமல், அன்பால் இயக்கப்பட்ட தன்னலம், தற்பற்று, தன் முனைப்பு ஆகிய மூன்றுமே ஆர்வமாகி, ஆர்வத் தூண்டுத லாகி, அன்பின் இனிமையுடன் தன்னலம், தற்பற்று, தன் முனைப்பு ஆகிய மூன்றின் வேகமும் ஆற்றலும் கொண்ட புத்தம் புதிய உணர்வுப் பண்பாகிவிடும். தனித்தனியாகத் தன்னலம், தற்பற்று, தன்முனைப்பு ஆகிய பண்புகளோ, அன்போகூட, ஆற்ற முடியாத அரும்பெருங் காரியங்களை இப் புதிய உணர்வு ஆற்றிவிடும் தன்மையுடையது ஆகும்.

அன்பு இனிமையுடைய பண்பானல், ஆர்வமே இனிமை யுடன் விறுவிறுப்பும் செயல் முனைப்பும் கொண்ட பண்பு ஆகும். அது இனிமை என்னும் தின்பண்டப் பண்புடன் வளர்திறமாகிய பசியும் உணவும் கூடிய புதுக் கூட்டாய், பாயிர முன்னுரையில் குறிப்பிட்ட முக்கூட்டமிழ்தின் முதலிரு கூறுகளும் சேர்ந்த வடிவமாய் விடுகிறது.

இங்கே ஆர்வம் ஆர்வத் தூண்டுதலாதலால், சமுதாயத் தொண்டார்வம் ஆயிற்று.

ஆர்வம் இவ்வாறு இங்கே செயலார்வம், தொண்டு செய்யும் ஆர்வம், பிறருக்காகத் தொண்டு செய்யத் துடிக்கும் சமுதாயத் தொண்டார்வமாக அமைகிறது.

உடைமை என்பது 'ஆர்வத்தை, ஆர்வத் தூண்டுதலை, சமுதாயத் தொண்டு மனப்பான்மையாகிய செயலுணர்வுக் கொழுந்தை நிலவரமாக நின்று எழுப்பவல்ல ஆற்றலை உடைய உளப் பண்பை' என்னும் பொருள் தந்துவிடுகிறது.

ஆர்வமுடைமை இதனால் 'நிலவரத் தொண்டு மனப் பான்மை, சமுதாயத் தொண்டில் ஈடுபட்ட விறுவிறுப் புடைய உள்ளமுடைமை' என்னும் பொருள் உடையது.

செங்கனல் காற்றால் தூண்டப்பட்டு வெள்ளொளி அன லாய் எழுவதுபோல, ஆர்வம் என்னும் வெள்ளொளி அன லாக, தன்னலம், தற்பற்று, தன்முனைப்பு ஆகிய வளிகளால் தூண்டப்பட்டு எழும் உளத்தின் தொண்டு மனப்பான்மை யாகிய செங்கனற் பண்பே இங்கே ஆர்வம் உடைமை எனப் பட்டது.

ஈனும் என்ற சொல் இக்குறட்பாவில் இருமுறை வழங்கி யுள்ளது. இருமுறையிலும் அடிப்படைச் சொற்பொருள் ஒன்றே—'உயிர்ப் பண்பாக உண்டுபண்ணிப் பெருக்கிவிடும்' என்பதே அது. ஆனால் இச்சொல் இருமுறை வந்ததனால், இரண்டாவது ஈனும் என்பதன் பொருள் 'பொங்குமாவளப் பண்பாகப் பெருக்கிவிடும்' என்ற கருத்துத் தருகிறது.

ஆக்குதல், படைத்தல், ஈனுதல் என்ற சொற்கள் படிப் படியான விசைப் பெருக்க வளம் காட்டுபவை ஆகும்.

ஆக்குதல், ஒன்றை ஒன்று ஆக்குதல். படைத்தல் ஒன்று பலவற்றை ஆக்குதல். ஈனுதல் பலவற்றை ஆக்கும் பல வற்றை ஆக்குதல். இதுமட்டுமன்று. ஆக்குதல் வினையில் ஆக்குபவர் உயிர்ப் பொருள். ஆக்கப்படுவது உயிரிலாப் பொருள், அதுவும் உருமாற்றமும் அமைப்பு மாற்றமும் மட்டுமே உடைய பொருளின் ஆக்கமாய் முடிகிறது. படைத் தலில் ஆக்குபவர் உயிர்ப் பொருளாயிருந்தால், ஆக்கப்படு வது உயிரில் பொருளாய், உருமாற்ற, அமைப்பு மாற்ற மட்டுமேயன்றிப் பண்பு மாற்றமும், ஆக்கப் பெருக்கமும் உடையன ஆகின்றன. ஆக்குபவர் பேருயிர்ப் பொருளாய் அதாவது கடவுளாய் அமைந்தால், ஆக்கப்படுபவை உயிரி

கள். ஆனால் இரண்டிடத்திலும் படைப்பவரினும் படைக்கப் படுபவை உயிர்ப் பண்பில் தாழ்ந்தவை. ஆனால் ஈனுதல் இவை கடந்த உயிர்ப் பண்பு—இதில் ஈனும் உயிர் தன்னை ஒத்த உயிரை, தன்னை ஒத்த பல உயிர்களைப் படைக்கும்—தன்னைப் போலவே தன்னை ஒத்த உயிர்களைப் படைத்து, அவ்வுயிர்களும் தன்னையே ஒத்த படைப்பபற்றலுடையன வாதலின், படைத்தல் தொழிலைக் கால எல்லை தாண்டி விரிவு படுத்தி, தன் பண்பே உடைய உயிர்கள் பலவற்றைப் பொங்குமாவளமாகப் பெருக்கும் தன்மை உடையதாகிறது.

அன்பு ஈனும் ஆர்வமுடைமைப் பண்பானது, அன்பைப் போலவே உயிர்ப் பண்பு, அன்பினும் பண்பில் பெருக்கமும் பயனும் மிக்கது. அந்த ஆர்வமுடைமை பின்னும் தன்னைப் போலவே, தன்னிலும் மிக்கதான ஒரு பொங்கற் பண்பை—பின்னர்க் கூறப்படும் நண்பு என்னும் நாடாச் சிறப்பை ஈன்று பொங்கற் பெருக்க மாவளம் தருகிறது.

ஈனுதல் ஈதல் என்ற சொல்லுடனும் தொடர்புடையது.

கொடுத்தல் ஒருவர் ஒருவருக்கு, தாழ்நிலையுடையவர்க்குக் கொடுத்தல் ஆகும், அது திரும்பப் பெறுதலை அல்லது பிற பயனை அல்லது நன்றியுணர்வை எதிர் நோக்கிய செயலும் ஆகும். தருதலும் ஒருவர் ஒருவருக்குக் கொடுத்தலே—ஆனால் இது கொடுப்பவர், பெறுபவர் வேறுபாடின்றி எதுவும் எதிர்பாராது அளித்தல் குறிக்கும். ஈதல் இன்னும் ஒரு படி உயர்ந்தது. அது ஒருவர் பலருக்கு—பலருக்கு வழங்கும் பலருக்கு—கொடுப்பதாகும். ஈதலின் இப் பொங்கற் கொடைப் பொருளை ஈனுதலிலும் காணலாம்.

விலங்குகள் ஈனுதலையே நாம் ஈனுதல் என்கிறோம். மக்கள் வகையில் பெறுதல் என்றே பெரும்பாலும் கூறுகிறோம். இது திருவள்ளுவர் வழக்கன்றாயினும், அவர் பண்புடன் உகந்த தமிழ் மரபே. ஏனெனில் விலங்குகளில், அதுவும் கீழ் விலங்குகளில் நாம் பெரிதும் எண் பெருக்கத்தையும், உயர் விலங்குகளிலும் மனிதரிடத்திலுமே பண்புப் பெருக்கத்தையும் காண்கிறோம். திருவள்ளுவர் இக் குறட்பா

வில் ஈனும் என்ற சொல்லை இரு தடவைகளில் எண் பெருக்கம், பண்புப் பெருக்கம் ஆகிய இரண்டையும் குறிக்கவே வழங்கியுள்ளார். ஏனெனில் ஈனுதல் என்ற சொல்லையே அவர் பெரும்பாலும் பயத்தல், விளைவித்தல் என்ற பொருளிலும், பெறுதல், பெற்றெடுத்தல் என்ற பொருளிலும் வழங்குகிறார் (69, 656, 923, 1047).

அது என்பது ஆர்வமுடைமையை அடுத்து வந்து 'அவ் வார்வமுடைமை, சமுதாயத் தொண்டுகளில் ஈடுபட முந்தும் செயலுணர்வு தூண்டும் அவ்வுளப் பண்பு' என்று பொருள் படுவதாகும்.

ஆர்வமுடைமை என்பது முதல் வாசகத்தில் செயப்படு பொருளாய், அது சுட்டிய சொல்லே அடுத்த வாசகத்தில் எழுவாயானதனால், இதுவும் ஈனும் என்ற சொல்லின் இரட்டிப்புத் தொனிவளமான பண்பிரட்டிப்பாகிய பொங்கு மாவளத்தை முனைப்பாகக் குறித்துக் காட்டிற்று. அத்துடன் இந்தத் தொடர்பே அன்பு—ஆர்வமுடைமை—நண்பு என்ற சங்கிலித் தொடர்பு போன்ற மரபுத் தொடர்ச்சியையும் உருப்படுத்திக் காட்டிற்று.

நண்பு என்னும் நாடாச் சிறப்பு என்பது 'நண்பு என்னும் அவா ஆர்வ எல்லை கடந்த பெருமிதச் செயற் பண்பை' என்று பொருள்படும்.

நண்பு என்பது திருவள்ளுவரால் பொருள் விளக்கம் தரப்படும் சொற்களில் ஒன்று. சொற்பொருட் களஞ்சியங்களில்[1] சொல்லுக்குச் சொல்லாக அல்லது சொற்றொடராகத் தரப்படும் விளக்கம் போலவே, அவர் இங்கே 'நண்பு' என்பதற்கு 'நாடாச் சிறப்பு' என்று பொருள் தருகிறார். சொல்லுக்கும் விளக்கத்துக்கும் இடைப்பட்ட 'என்னும்' என்பது ஒரு பொருள் குறித்த இரு பெயர்த் தொகையில் இரு பெயர்களின் இணைப்பாகவே வந்தது என்பது இலக்கணக் குறிப்புரையில் சுட்டப்பட்டது.

1. Dictionary

நண்பு என்பதன் திரிபாகிய நட்பு என்பதையும் நட்டார், நட்டு, நட்பது என்ற சொற்களையும் திருவள்ளுவர் மிகுதியாக வழங்கியுள்ளார். நண்பு என்ற வடிவத்தை இவ்வொரு குறட்பாவில் மட்டும் வழங்குகிறார். நட்டார் என்ற வினை வடிவத்தை ஒத்த நண்ணார் (நண்ணுதல்) நள்ளா பொருந்தாத) என்ற சொற்களையும் அருகலாக வழங்கியுள்ளார்.

நண்பு என்ற சொல்லின் நேர் பொருள் வழக்காறு கேண்மை, தோழமை என்பதே. ஆனால் அது நண்ணுதல் (அணுகுதல்), நள்ளுதல் (பொருந்துதல்) ஆகியவற்றுடன் தொடர்புடையது என்பதில் ஐயமில்லை. நெருங்கிப் பழகி, அதனால் உளம் பொருந்தியவிடத்துத்தான் நண்பு ஏற்படும்.

நட்பின் செறிவு குறிக்க அதன் வடிவத்தை நட்பு என்றே பெரும்பாலும் குறிக்கும் வள்ளுவர், அதனை இங்கே மட்டும் நண்பு என்ற வடிவுடன் தருதல், அந்நட்பு அன்பின் விரிவான பண்பு என்பது குறித்தற்கும், செறிவுற்ற விடத்து ஓரிருவர் நட்பாகக் குறுகிவிடக் கூடுமாதலால், அங்ஙனம் செறிவுறாத பரந்த நட்புப் பான்மையே இங்கே கருதப்படுகிறது என்பது குறித்தற்குமே என்னலாம்.

நட்புக் குறித்த வேர்ச் சொல்லில் நள்-நண்-நட் என்ற மூன்று வடிவங்களை நாம் காண்கிறோம். ளகர வடிவம் மேவுதல், பற்றிவிடாது எளிதில் விரைந்து நழுவிவிடும் உறவு குறிக்கும். டகர வடிவமோ பற்றி இறுகப் பிடித்து மேல் வளர்ச்சிப் பண்பிழந்து கல்லாய்ச் சமைந்து விட்ட முற்றிய உறவைக் குறிக்கும். ணகர வடிவம் நெகிழ்ந்து பரந்து அலை பாய்ந்து வளரும் பண்பு, முதிரா என்பை ஒத்த பண்பு குறிப்பதாகும்.

ணகர வடிவமான நண்பு நட்புறவு குறிக்க இக் குறட்பாவில் வழங்கப்பட்டதனால், நெகிழ்ந்து பரந்து வளரும் இயல்பு விடாத, கட்டிளமை கடவாத நட்புறவுப் பண்பே இங்கே குறிக்கப்பட்டது என்பது காணலாம்,

இதுமட்டுமன்று,

பின்வரும் நாடாச் சிறப்பு என்ற குறிப்பால், நண்ணாத வற்றையும் நண்ண வைக்கும் திறமுடைய நட்புறவு என்பதும் குறிக்கப்பட்டது. இப் பொருள் வருசொற்களின் கீழ் விரிக்கப்பட இருக்கிறது.

சிறப்பு என்ற சொல் அவா ஆர்வ எல்லை கடந்த பெருமிதச் செயற் பண்பு என்ற பொருள் தருகிறது.

சிறப்பு என்ற சொல் வள்ளுவ வழக்கிலும், தமிழிலும் பொது அல்லாதது. பொதுவில் வேறுபட்டது: பெருமை, உயர்ச்சி, விழா; துறக்கம்; வீடுபேறு, கடவுள் ஆகிய பல் வேறுபட்ட பொருள்களை உடையது. இறத்தல் (கடந்து செல்லுதல், மிகுதல், வாழ்வு கடந்து நிற்றல்) என்ற சொல்லுடன் தொடர்புடைய இச் சொல் அவாவிறந்த பேரின்பம் என்பதையே உயிர்ப் பொருளாகக் கொண்டதாகும்.

நண்பு பெறுதற்கரிய, அவாக்களால்கூடச் சென்றெட்ட முடியாத பேரின்பப் பேறு போன்ற அரும் பண்பு என்பது சிறப்பு என்ற இச் சொல்லால் குறிக்கப்படுகிறது,

அன்பால் இயக்கப்பட்ட தன்னலம், தற்பற்று, தன் முனைப்பு ஆகியவையே அவ்வாற்றல்களைப் பெற்று ஆர்வமுடைமை ஆவதுபோல, அவாவால் இயக்கப்பட்ட ஆர்வமுடைமையே நண்பு ஆகிறது.

ஆர்வம் என்பது, தற்பற்றும் தன்முனைப்பும் தன்னலமும் அன்பால் தூண்டப்பட்டு உருவாகும் பண்பு. அது தன்னை விட்டுப் பிறரை, பிறிதொரு சமுதாயப் பண்பையே தான் எனப் பற்றிக்கொண்டு, தற்பற்று, முனைப்பு, தன்னலம் ஆகியவற்றின் ஆற்றலை யெல்லாம் அவற்றின் மீது சொரிவதுபோல, நண்பு அவாவால் தூண்டப்பட்டு, தன்னைவிடப் பிறிதோர் இனப் பண்பைப் பற்றிக்கொண்டு, அவ்வாற்றல்கள் எல்லாவற்றையும் அதன்மீதே சொரியும் இயல்புடையது ஆகும்.

நாடா என்பது 'அவா ஆர்வம் கடந்த அருமையுடைய' என்ற பொருளும் 'அவா ஆர்வம் கொள்ளாமல் தானே வந்து எய்திவிடத்தக்க' என்ற பொருளும் உடையதாகும்,

நாடு என்பது நள்-நண-நட் என்ற வேர்ச்சொல் மலர்ச்சியுடன் இணைந்த சொல்லே யாகும். நள்ளுதல் எளிதில் மேவுதல், பொருந்துதல்; நண்ணுதல் அணுகுதல், அணுகிப் பெறுதல்; நடுதல், நட்டல் அணுகிப் பெற்றுவிடுதல்; நாடுதல் நண்ணாதது நண்ண வேண்டுமென்று விரும்புதல், நண்ணுமென்ற நம்பிக்கையுடன் முயலுதல், நண்ணும் என்ற நம்பிக்கை யார்வத்துடன் முயற்சியில் விறுவிறுப்புடன் முயலுதல் ஆகும்.

நாடுதலையே உள்ளவா (அபிலாஷா), நம்பிக்கை ஆர்வம்[1] என்ற சமஸ்கிருத, ஆங்கில மொழிச் சொற்கள் சுட்டும்.

நாடா என்பது எதிர்மறைப் பெயரெச்சம். அதற்கு நாம் இரு பொருள்கள் அல்லது மூன்று பொருள்கள் கூறலாம். ஒன்று விரும்பாத என்பது. இங்கே இது பொருளன்று என்பது தெளிவு. படுத்தலோசை மிக்க இரு குறட்பாவில் இச் சொல் மட்டுமே எடுத்திசைத்து இதன் நுண்பொருளை விளக்கியுள்ளது. மற்ற இரு பொருள்கள் 'நாடுதல் கடந்த அதாவது அவா ஆர்வ எல்லை தாண்டிய, எவரும் விரும்பிப் பெற முடியாத, பெற எண்ணாத' என்பதும்; 'விரும்பாமலே எளிதில் வந்தடைகிற' என்பதும் ஆம். இவ் விரண்டினுள் முந்தியது இங்கே நற்பொருள் தருவதே. ஆனால் சிறப்பு என்ற சொல்லே இவ் வடை இன்றி இப் பொருள் பயப்பதாகும். ஆகவே நாடா என்பது இங்கே தரும் பொருள் பிந்திய பொருளே யாகும். 'நண்ணும் என்ற நம்பிக்கையோ, நண்ண வேண்டும் என்ற விருப்போ, அவற்றுக்குரிய முயற்சியோ இல்லாமல் தானே வந்து எய்தப் பெறுகிற' என்பதே இங்கே 'நாடா' என்பது சுட்டும் பொருள் ஆகும்.

'நண்பு என்னும் நாடாச்சிறப்பு ஈனும்' என்பதன் சொற்பொருள் இவ்வாறு 'நண்பு என்ற—அவா ஆர்வ எல்லை கடந்ததாயினும் அவா ஆர்வம் இல்லாமலே எளிதில் தானே வந்து எய்தப் பெறுகிற, அவா ஆர்வ எல்லை கடந்த—அரும்

8, Hope

பெரும் பண்பினைப் பொங்குமாவளமாகப் பெருக்கிவிடும்' என்பதாகும். இதுவே மேலே பொழிப்புரையிலும் இங்கே பதவுரை விளக்கத்திலும் 'நண்பு என்னும் அவா ஆர்வ எல்லை கடந்த பெருமிதச் செயற் பண்பைப் பொங்குமாவள மாகத்தானே படைத்துப் பெருக்கிவிடும்' என்று கூறப் பட்டது.

நண்ணுதது நண்ணுவிக்கும் பண்பாதலாலேயே நண்பு இங்கே நட்பு எனப் பெருமல் நண்பு எனப்பட்டது என்னல் தகும்.

சிறப்புரை: *சமுதாயம் என்பது கீழ் உயிரினங்களில் தம்முள் தொடர்பற்ற தனி உயிர்களின் கூட்டாக மட்டுமே தொடங்குகிறது. அதனைக் குடும்பப் பண்பும் காதலுமே கூட்டமைவுடைய குடும்பங்களின் பெருங் கூட்டாகிய சமுதாயமாக்குகிறது. தலைமுறைதோறும் காதல் குடும்பத்துடன் குடும்பத்தைப் பின்னுவதாலேயே சமுதாயமும் இனமும் அமைகின்றன. ஆனல்: குடும்பப் பண்பு சமுதாயத்துக்கு ஆற்றம் பண்பு இதனுடன் அமையவில்லை. காதலின் கிளையாக அன்பும், அதன் கிளை யாக ஆர்வமுடைமையும், அதன் பயனாக நண்பும் சமுதா யத்தைப் பாசப் பிணைப்பில் ஈடுபடுத்துகின்றன.*

பொருள்வளம்: *(1) இக் குறட்பாவின் உயிர்நிலை யான சொல் நாடா என்பதே.*

முற்றிலும் மெல்லோசையும் அழுந்திய ஈகார ஒலி யும் படுத்தலோசையுமே மிக்குவந்து, அன்பின் மலர்ச் சியால் சமுதாயம் இன்ப நோக்கிப் படரும் மலர்ச்சிப் பண்பைக் குறட்பாவின் பொது ஓசைப் பண்பு சுட்டு கிறது. 'சிறப்பு' என்பதன் வல்லோசையும், நாடா என் பதன் நிறை வல்லோசையும் 'நண்பென்னும்' என்ற காய்ச் சீரின் ஒத்திசைப்பும் இவ்வோசையில் தனிப்

பண்புடன் நிலவுகின்றன. காதல், அன்பு, ஆர்வ முடைமை ஆகிய மூன்றுமே• இயல்பாகக் குடும்பக் குன்றிலிருந்து ஒன்றன்பின் ஒன்ருக எழும் உயிர்ப் பண்புகளாளுலும், இவை பொதுவாக, 'நாடிய வளம் தரும் பண்புகள்' என்றும்; நண்போ நாடாத, எதிர் பாராத, முன் தெரியவராத புத்தம் புதிய இனவளம் தருவது' என்றும் இத் தனியோசைச் சிறப்புச் சுட்டிக் காட்டிற்று.

ஈனும் என்ற சொல் இரட்டுற வந்ததாலும், ஒன் றுக்கொன்று சிறிது ஓசை வேறுபட்டதாலும் வரும் குறிப்பு வளம் விளக்கவுரையில் சுட்டப்பட்டதே.

மனித இன வாழ்வின் வளத்திலும், வளர்ச்சி யிலும் அறிவு, ஆற்றல், தற்பற்று, தன்முனைப்பு, திறமை ஆகிய பல பண்புத் திறங்கள் பங்குகொள் கின்றன. ஆயினும் அதன் தொடர்ச்சிக்கும் நாகரிகத் துக்கும் இன்ப நோக்கிய உயர்ச்சிக்கும் காதல்—அன்பு என்ற தனியொரு மலர்ச்சிப் பண்பே காரணமாகும். இம் மலர்ச்சி மரபையே இன வாழ்வின் என்பு என்ன லாம். குறட்பாவுக்குரிய வீணையின் ஒற்றை நரம்புப் பல்விசையதிர்வு போன்ற தனி இசைப்பு நயம் இதனையே சுட்டிக் காட்டுகிறது.

அன்பினும், அதுவினும் என்ற இரு சீர்களும் காய்ச் சீர்களாக வந்தமை, அன்பு – ஆர்வமுடைமை - நண்பு மலர்ச்சி மரபைச் சுட்டிக் காட்டிற்று. 'நண் பென்னும்' என்ற ஒத்திசைப்பான காய்ச் சீரும் அதுவே சுட்டி, அதன் மகுடமாயிற்று.

அன்பு, நண்பு ஆகியவை இம் மலர்ச்சி மரபின் இரு கோடிகள் ஆகும். இரண்டும் மென்மைபட,

மெல்லெதுகையாக வந்து, இரண்டுமே சமுதாயம் கடந்து இனத்திலும் படியும் அலைப் பண்புகள் என்பதை வலியுறுத்தின. ஆயினும் நடுப்பண்பான ஆர்வமுடைமையே சமுதாய வாழ்வில் செயல்திறப் பண்பாக, நடுநாயகமாய் நின்றது. இச் சிறப்புக் கருதியே ஆர்வமுடைமை என்ற ஒரு பண்பின் பெயரான இவ் ஒரு சொல், இரு குறுகிய தேமாச் சீர்களாய், இரு சொல், இரு பண்புபடக் குறிக்கப் பட்டது. தவிர, விளக்கவுரையில் விரித்துரைத்தபடி, ஆர்வமுடைமை இங்கே இரு திறங்களாக்கப்பட்டு, ஆர்வத் தூண்டுதலான செயல் திறமை ஒரு புறமாகவும், அதனை உடைய உளத் திறம் மற்றொரு புறமாகவும் பிரித்துக் காட்டப் பட்டுள்ளது. அன்பும், நண்பும், அகத்திறங்கள் மட்டுமே. ஆர்வமுடைமை அகப்புறத் திறம், அகத்திற் பண்பாகவும் புறத்தில் செயலாகவும் விளங்குவது என்பதை இது முனைப்பாகச் சுட்டிற்று. நண்பும் அகப் புறத் திறமாயினும், அதன் புறத் திறம் ஆர்வமுடைமையே யாகும். அன்பும் அவாவும் கூடிய பண்பு அதன் அகத் திறமாகவும், அன்பும் ஆர்வமுடைமையும் கூடிய பண்பு அதன் புறத் திறமாகவும் இயல்வன ஆகும்.

(2) உலகின் செல்வங்கள் அனைத்தினும் பெருஞ் செல்வம், எளிதில் கிடைக்காத அருஞ் செல்வம், இனச் செல்வம், ஆர்வமே. அது இல்லாத இடத்தில் அறிவு நீடிக்காது, ஆற்றல் வளராது, உணர்ச்சி பயன் படாது—அது இல்லாமல் பழமை பண்பாகாது, புதுமை இன்பமாகாது. அது இல்லாத மனித இனப் பகுதியில் பண்பாடு இல்லை, நாகரிகம் இல்லை; இனப்

பெருமை இருக்க முடியாது, இன வளர்ச்சி நிலைத்து நீடிக்க மாட்டாது.

அன்பு உள்ளத்தைப் பிற உயிர்கள் பால் உந்த வைக்கும். ஆனால் ஆர்வம் உளநோக்கி உயிர்களை ஈர்க்கும். ஏனென்றால் ஆர்வம் அன்பைப்போல் உளப் பண்பாய் நின்றுவிடாமல், எப்போதும் செயல் தூண்டு தல் தரும் உணர்வாக அமையும் தன்மையுடையது. அன்பு கொடிபோல் படர்ந்து தழைத்து, கொடிபோல் எங்கும் பின்னுவது. ஆனால் அது ஓரிடம் வேர் கொண்டு நிற்பது. நேர்மாறாக, ஆர்வமோ ஆல்போல் படர்வது, விழுது விட்டுக்கொண்டே எங்கும் வேர் விட்டு வேர்விட்டுப் பரவுவது. அன்புநிலை உணர்வுப் பண்பு, பழகிய பின் முற்றி இறுகி வளர்ச்சியற்றுப் போகவல்லது. ஆர்வமோ இயங்குணர்வு, என்றும் புதிது புதிதாகத் தளிர்த்துப் புத்திளமை மாறாது நிலவு வது.

உலகின் மற்றெந்த இனங்களையும்விடத் தமிழ் இனமே இந்த ஆர்வத்தின் அருமை நலங்களை அறிந்து போற்றி உலகில் பரப்பி, உலகுக்குப் புதுப் புது வாழ் வும், சமய, அறிவு, கலை இயல்துறை வளங்களும் அளித்து வந்துள்ளது என்னலாம். ஏனெனில் ஆர் வத்தைக் கெடுக்கும் பண்புகளை, ஒவ்வொன்றாகத் தேடிக் கண்டு விலக்கியும்; அது தோன்றி வளர்வ தற்கு உதவும் பண்புகளை ஒவ்வொன்றாகத் தேர்ந்து உருவாக்கிப் பெருக்கியும் தமிழினம் மனித இனப் பண்பினுட் பண்பாக, தமிழ்ப் பண்பு என்ற பொங் காரமுதம் படைத்துத் தந்துள்ளது. இந்த அமுதப் பண்பை மாந்திய அளவிலேயே மனித நாகரிக சமுதா

யங்கள் பலபடியான வாழ்வு தாழ்வுகள் கண்டுள் ளன என்பதை வரலாறு காட்டுகிறது.

இப்பொங்காரமுதப் பண்பு திருவள்ளுவர் திருக் குறள் முழுவதிலும் உள்ளீடாகவும் பரவலாகவும் கூறப்பட்டுள்ளது; ஆனால் தமிழ் மொழிக்கு மட்டு மன்றி, தமிழர் இலக்கியத்துக்கும், இலக்கியங்களில் காணும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் இலக்கணமான தொல்காப்பியத்தின் பொருளதிகார முழுவதிலும் இது ஒருநிலைப்படத் தொகுக்கப்பட்டும், பல்வகைப் பட விரிக்கப்பட்டும் விளக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆர்வம் கெடுக்கின்ற, விலக்குதற்குரிய பண்புகள் எல்லாம் பொதுவாகப் புறம் என்றும், ஆர்வம் பெருக்குகின்ற, கொண்டு பேணுதற்குரிய பண்புக ளெல்லாம் அகம் என்றும் வகுக்கப்பட்டுள்ளன. மனித வாழ்க்கை இவை இரண்டும் விரவியதே யாதலால், இப் புறப் பாகுபாட்டுள்ளும் அகம், புறம் என்ற பாகு பாடுகள் செய்யப்பட்டு; புறத்திற் புறமாகிய அறமீறிய போரும், பண்பிற் குறைந்த வாழ்க்கைப் பண்புகளும், சமயப் பண்புகளும்; அகத்திற் புறமாகிய ஒவ்வாக் காதல் வாழ்வு, வலிந்த செயற்கைச் சிற்றின்ப வாழ்வு ஆகியனவும் பண்பில் முரண்பட்ட இனப்பழிப் பண்பு களாகவும்; புறத்தில் அகமும், அகத்தில் அகமுமாகிய அகனைந்திணை அல்லது அன்பின் ஐந்திணை ஒழுக்கமே உயிர்த் தமிழ்ப் பண்புடைய சமய, சமுதாய, அரசியல், காதல் வாழ்வுகளின் இலக்கிய மரபாகவும் காட்டப் பட்டுள்ளன.

திருவள்ளுவர் பெருமானின் முப்பால் ஏடு முழு வாழ்க்கை நாகரிக இலக்கியமாகிய வேதம் என்பது

இன்று அறியப்படா திருப்பதுபோலவே, அதற்கடுத்த படியாகத் தமிழ்ப் பண்பின் இலக்கண ஏடு தொல் காப்பியம் என்பதும் உலகத்தில் இன்னும் தெளியப் படாமல் இருந்து வருகிறது. முப்பால் ஏடு முழு வேதம் என அறிந்து ஏற்கப்படும் காலங்களில், அதன் விளக்க வேதாந்தமாக தொல்காப்பியமும்; அதற்குரிய கலை விளக்கங்களாகச் சங்க இலக்கியமும்; அதற்குரிய காவிய விளக்கமாகச் சிலம்பு மேகலையும்; அதற்குரிய தரிசனங்கள் அல்லது சாத்திரங்களாகத் தேவார திருவாசக திரு நாலாயிரங்களும் திருமுறைகளும், சித்தாந்த சாததிரங்கள், பண்டார சாத்திரஙகள், எட்டுச் சிற்றிலக்கியங்கள் ஆகியவையும் கொள்ளப் படும் என்று நம்பலாம்.

இத் தமிழ்ப் பண்பு தமிழகததுக்கு மட்டுமன்று, உலகுக்கே உரியது என்பதை வரலாற்றுராய்வுகள் மட்டுமே காட்டவல்லன. ஆயிரக்கணக்கான ஆண்டு கள் நாகரிக வளம் கண்ட சிந்துவெளி, சுமேரிய, எகிப்திய இனங்கள் நாகரிகம் வளர்த்த அளவு கலையையோ, கலையை வளர்த்த அளவு பண்பையோ வளர்க்கவில்லை. கிரேக்க, ரோம நாகரிகங்கள் கலை இயல் வளர்த்தன, பண்பை ஒரு சிறிதும் வளர்க்க வில்லை. பண்பை வளர்த்த நாகரிகங்களில் தலை சிறந்தவையான தமிழ், சீன இனங்களே இவ்வெல்லா இனங்களும் கடந்து, தற்காலப் புதிய ஐரோப்பிய நாகரிகத்துடன் நாகரிகமாக இன்னும் வாழ்ந்து வரு கின்றன என்பது காணலாம்.

பண்பு என்று இங்கே தனிப்பட நாம் குறிப்பிடு வது திருவள்ளுவரும் தொல்காப்பியரும அடிவரை

யிட்டு வலியுறுததிக் கூறும் அன்பு ஆர்வ நட்பு மலர்ச்சிகளுக்கு அடிப்படையான இரு திசைச் சரிசமத்துவப் பண்பே என்பது குறிக்கொண்டு நோக்கத் தக்கது. சமுதாயத்தில் உயர்வு தாழ்வு, அடிமைநிலை இல்லாத வாழ்வும், குடும்ப வாழ்வில் பெண்ணடிமையில்லாத வாழ்வும் தமிழ்த் திருவள்ளுவப் பண்பிலும் தொல்காப்பிய அகன் ஐந்திணைப் பண்பிலும் உயிர்நிலையாக மிளிர்வது போல, இன்றைய உலக நாகரிகத்தில்கூட மிளிரவில்லை என்பது காணலாம்.

உலகப் பெருஞ் சமயங்களான புத்தம், கிறித்தவம், இஸ்லாம் ஆகியவை உலகில் வளர்ந்துள்ள வேகமும்; பார்சி, யூத, சமண, சைவ, வைணவ சமயங்கள் இந்த அளவில் வளர முடியாத நிலையும் இங்கே ஒப்பிட்டுக் காணத்தக்கன. ஏனெனில் மேலீடாகப் பார்ப்பவருக்குக்கூட, முன் குறிப்பிட்டவை தமிழ்ச் சமத்துவப் பண்புக்காகப் போராடியவை, பின் குறிப்பிட்டவை போராடத் தவறியவை என்பது அங்கை நெல்லிக் கனியென விளங்கும்.

(3) அன்பைவிட அருள் உயர்ந்த பண்பாயினும், உலகியல் வாழ்வில், அதாவது சமுதாய வாழ்வில் அருளின் ஆற்றலைவிட அன்பின் ஆற்றலே பெரிது, சிறந்தது. இதற்குரிய காரண விளக்கமாக அன்பு, அருள் ஆகியவற்றின் ஒப்பீடு மேலே விளக்கவுரைப் பகுதியில், கதிரவன் ஒளிக் கதிர் ஒப்புமை விளக்கத்துடன் தரப்பட்டுள்ளது. ஆயினும், தமிழர் அன்பு-அருள் கோட்பாட்டின் முழுச் சிறப்பும் காண வேண்டுமானால், அதைத் தமிழ்ப் பண்புடன் ஒட்டியே காண்டல் வேண்டும். ஏனெனில் தற்கால உலகில்கூட,

அன்பும் அருளும் தமிழ் அன்பு, தமிழ் அருள் ஆகிய கருத்துக்களின் நிழற் படிவங்களாக நிலவுகின்றனவே யன்றிக் கருத்துப் படிவங்களாக நிலவவில்லை. தமிழ ரின் அருட் பண்பு உலகில்—சிறப்பாக இந்தியாவிலும் ஆசியாவிலும் பரவிய அளவுக்கு, அவர்களது அன்புப் பண்பு பரவாததற்குக் காரணம் இதுவே.

அருள்நிலை உயர்வு தாழ்வுகளையோ, தகுதி, தகுதி கேடுகளையோ பாராட்டுவதில்லை. நட்புப் பகைமைகளை யுமகூடப் பாராட்டுவதில்லை. மேடு பள்ளங்களிலும், வன்மை மென்மை நிலங்களிலும ஒருங்கே பரவும் ஒளிக் கதிர் போன்றது அது. ஆனல் இதே காரணத் தால் அது உயர்வு தாழ்வுகளையோ, நட்புப் பகைமை களையோ நீக்கப் பாடுபடுவதும் இல்லை. நட்புடை யார்க்கும் பகைமையுடையார்க்கும் ஒருங்கே நண்பனு யிருப்பவன், தன்னை யறியாமலே பகைவனுக்கு உடந்தையா யிருப்பதும்: உயர்வு தாழ்வுகளிடையே சமநிலை பேணுபவன், தன்னை யறியாமலே உயர்ந் தவர் சார்பினனுய் இயன்று விடுவதும் கூர்ந்து உல கியலைக் கவனிப்பவர் காணுத செயலன்று. அருள்நிலை, மனித இனத்துக்குத் தாய் போன்ற தன்மை உடை யது. அது அந்தணர்க்கு உரிய பண்பு ஆகும். அது சமத்துவத்தை, நேர்மையை விரும்பினலும்; சமத்து வத்தை, நேர்மையையே போற்றினலும், அவற்றுக் காகப் போராடாது, போராட மாட்டாது, போராட்டத் தில் கலக்காது. புலியையும் ஆட்டையும், பூனையையும் எலியையும், தேனீயையும் தேளையும் ஒருநிலையில் வைத்து நோக்குவதே அதன் பண்பு. இதனல், அது மெல்லியல்பினர்க்கு உதவும், அவர்கள் பாதுகாப்பில் விறுவிறுப்புக் கொள்ளும; மெல்லியல்பினருக்காக

அது தன்னை மறுத்துப் போராடும், தன்னையே தியாகத் திக்கு ஒப்படைக்கும்—ஆனால் வல்லியல்பினர் பொல்லாங்குகளை எதிர்க்காததாலும், மெல்லியல்பினருக்கு வழங்கும் அதே பாதுகாப்பை, உதவியை வல்லியல்பினருக்கும் வழங்குவதனாலும், தீங்கெதிர்த்து, வல்லியல்பினரை எதிர்த்துப் போராடும் பண்பு அவர்களிடம் தலைவுற்று விடுகிறது. தீங்கிற்காக அவர்கள் அழுவர், மாள்வர்—அதைத் தடுக்க இயலாதவர் ஆவர்.

அன்புப் பண்பு அருட் பண்பைப்போலத் தாய்ப் பண்பன்று, அருள் மிகக் கலந்த நிலையில் அதைத் தந்தைப் பண்பு என்று கூறலாம். அருள் சற்றுக் குறைந்து, அன்பு பெருகிய நிலையில் அதனைத் தமக்கைப் பண்பு, தமயன் பண்பு, தங்கை பண்பு, தம்பி பண்பு, தனையை பண்பு, தனையன் பண்பு என்னலாம். நன்மையும் மெல்லியல்பும் கண்டவிடத்து அது அருள் போலவே செயலாற்றும்—தீமையும் வல்லியல்பும் கண்டவிடத்து, தீமையும் வல்லியல்பும் எதிர்த்துப் போராடி, நன்மை நிறுவப் பாடுபடும்.

உலகில் நன்மை பெருக்கும் பணியில் அருள்நிலையின் பொறுப்பு மிகுதி—தீமை தடுக்கும் பணியில் அன்புநிலையின் பொறுப்பே மிகுதி. ஆயினும் இரண்டிலும் அருள் வழி நில்லாத, அருள் கலவாத அன்போ, அன்பு வழி ஊக்காத, அன்பு கலவாத அருளோ பயன் படாது.

தமிழ்ப் பண்பும், தொல்காப்பிய, திருவள்ளுவப் பண்புகளும் தனி அருள்நிலை, தனி அன்புநிலைப் பண்புகளுக்குரிய குறைபாடுகளை அறிந்தவை. தன்னலம்,

தற்பற்று, தன்முனைப்பு, அவா ஆகியவை இன வாழ் வின் அடிநிலைத்தளம்; அன்பு நிலை அதன்மீதமைந்த தூண்கள், சுவர்கள்; அருள்நிலையே அவற்றின் மீது கவிக்கப்பட்ட மோடு. முதலாவது மட்டும் உள்ள இனங்கள் காட்டுமிராண்டி இனங்கள், கணந்தோறும் மாள்பவை. அன்பு மட்டும் உடையவை சமுதாய மாகச் சில காலம் வாழும், இனமாக நீடிக்கமாட்டா. அருள் மட்டும் உடையவை தளமும் தூணும் சுவரும் இல்லாத மோடுபோல், போலி நாகரிகமாகிச் சில காலம் தோன்றி மறைபவை. திட்டமிட்டு இரண்டும் ஒன்றன் மீது ஒன்றாக—அன்புமீது அருளாக, அருள் மீது அன்பாகக் கட்டப்பட்ட இனமே நாகரிக இன மாக வாழும். இப் பண்புகளறிந்த தமிழினச் சால்பின் முகடு கண்ட திருவள்ளுவர் அருளை ஏத்தினாலும், அன்பை ஊக்கி; தன்னல, தற்பற்று, தன் முனைப்பு, தன்னவாக்களை இவற்றை நோக்கி இயக்கி; மனித உலகுக்கு ஒரு புதிய நாகரிகத் தத்துவம் கண்டு; தமிழ்ப் பண்பு என்ற உருவில் அதனை இனப் பண் பாகப் பரப்பி வருவதன் விளக்கம் இதுவே.

கீழ்திசை நாகரிகம் அருள் நிலையை அடிப்படை யாகக் கொண்டது என்றும்; மேல் திசை நாகரிகம் அருள்சாரா உலகியல் நிலையை அடிப்படையாகக் கொண்டது என்றும் சில காலம் பலரால், பல அறிஞ ரால், பல வரலாற்றாய்வாளரால்கூடக் கருதப்பட்டு வருகின்றது. இது முற்றிலும் சரியன்று, முற்றிலும் தவறுமன்று. திருவள்ளுவரது அன்பு – அருள்நெறி உலகில் அலையலையாகவே பரவியுள்ளது. புத்தர்பிரா னுக்கு முற்பட்ட முதல் அலை அருள் கலந்த அன்பலை யாக உலகெங்கும் பரவியுள்ளது. இதுவே இன்று

மனித இன நாகரிகத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது. ஆனால் புத்தர்பிரானுக்குப் பிற்பட்ட அலைகள் படிப்படியாக அன்பு நீங்கிய அருளலைகளாக, இந்தியா வெங்கும், இந்தியா கடந்து ஆசியாவிலும், ஓரளவு ஐரோப்பாவிலும் பரவின. கீழ்திசையின் 'அருள்நிலைப் பண்பு'க் கருத்துக் காரணமான சூழல் இதுவே.

போலி அருளலைக்கு மிகுதி ஆளாகாத சீனமும் சப்பானும் தமிழகமும் ஐயாயிர ஆண்டு வாழ்வுபெற்று வருவதும், அதே நிலையில் அது சென்று பரவாத பண்டைய சுமேரியர், எகிப்தியர் ஆகியோர் ஆயிர, நாலாயிரக் கணக்கான ஆண்டுகள் நீடித்து வாழ்ந்ததும் வரலாறு காட்டும் உண்மைகள் ஆகும். தமிழகமும் இந்தியாவும் இப் போலி அலைக்கு ஆளானாலும், முந்திய அன்பருள் அலையின் அடிப்படை வேர் கொண்டதனாலேயே, இன்றும் வாழ்வு குலைந்தும் என்றும் மாளா உயிர் நாகரிகமாய் இயங்குகின்றன.

(4) இக் குறட்பாவில் மோனை இல்லாச் சீர்கள் முதலடியில் 'உடைமை' என்பதும், இரண்டாம் அடியில் 'சிறப்பு' என்பதுமே. கற்புப் போல, மக்கட்பேறு போல, இவ் விரண்டும் சமுதாயத்துக்குப் புறமான, இன வழி நேர் வரவான செல்வங்கள் என்பதை இது சுட்டிற்று. 'சிறப்பு' என்பதன் தனி நிலைக் குறிப்பு வளங்களை அடுத்த குறட்பாவின் பொருள் வளப் பகுதியின் முடிவில் காண்க. ஏனெனில் இங்கே சிறப்பு அச் சிறப்பு அன்றாயினும் அதற்கு வாயில் ஆகும்.

தனிக் குறிப்புக்கள்: (1) குறட்பாவின் மொத்தக் கருத்தாக, 'அன்பே நட்புக்குக் காரணமாகும்' என்று புலவர் குழந்தை முடித்துள்ளார்.

அன்பிலிருந்து ஆர்வமுடைமையும், ஆர்வமுடைமையிலிருந்து நட்பும் விளைகின்றன என்ற சொல் தொடர்பு கிட்டத்தட்ட எல்லா உரையாசிரியருக்கும் மொழிபெயர்ப்பாசிரியருக்கும் பொதுவேயாகும். இம் மணிவிளக்கவுரையின் போக்கும் இதுவே. ஆனல் ஒவ்வொரு உரையாசிரியர் கருத்துப் போக்கும், பொருளும் அவர்கள் 'அன்பு', 'ஆர்வமுடைமை', 'நண்பென்னும் நாடாச் சிறப்பு' என்ற சொற்களுக்குக் கொண்ட பொருளைப் பொறுத்தவை ஆகும். இதில் வேறுபாடு மிகுதி. ஒவ்வொருவருமே இதில் பொருட் சிறப்புக் காண முடியாமல் அவதியுற்றுள்ளனர் என்பதை இவ் வேறுபாடுகள் காட்டுகின்றன,

கீழ்வரும் தனிக் குறிப்புப் பகுதிகளில் இவை விளக்கப்படுகின்றன.

(2) அன்பு என்பதற்கு அப்படியே அன்பு என்ற பதவுரை தந்தனர் மணக்குடவர், பரிதியார், பேராசிரியர் மு. வரதராசனர் ஆகியோர். 'அன்பு என்பது' என்று பேராசிரியர் இலக்குவனரும்: 'நாம் பிறரிடம் காட்டும் அன்பு' என்று புலவர் குழந்தையும்; 'ஒருவன் உறவுடையார்மாட்டுச் செய்யும் அன்பு'[1] என்று ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும்: 'ஒருவனுக்குத் தொடர்புடையார் மாட்டுச் செய்த அன்பு' என்று பரிமேலழகரும்; 'ஒருவற்கு மனைவி மக்கள் முதலியோரிடத்துச் செய்யும் அன்பானது' என்று புலவர் ந. சி. கந்தையாவும் பொருளுரைத்தனர்.

'ஒருவன் தான் பல உயிரிடத்தும் வைத்த உள்ளன்பானது' என்றுர் காலிங்கர்.

எல்லா உரைகளும் இம் மணிவிளக்கவுரை நோக்குவதையும், காலிங்கர் அதை மிக அணுகி வந்துள்ளதையும் இங்கே காணலாம்.

---

1. A man who loves his kith and kin

மொழிபெயர்ப்பாசிரியர் தத்தம் மொழிகளில் அன்பைக் குறிக்கத் தனிச் சொல் இல்லா நிலையில் காதலன்பு (ஆங்கிலம்; லவ்[1]) (இந்தி: ப்ரேம்); காதல் நட்பு (இந்தி: ஸ்நேஹ்; மலையாளம்: ஸ்நேஹிதம்) ஆகிய பொதுச் சொற்களையே பயன்படுத்தியுள்ளனர்.

(2) மணக்குடவர் ஆர்வமுடைமை என்பதனை ஆர்வமுடைமை என்றே கூறி அமைந்தார். அதனைப் பற்று அல்லது அவா (ஆங்கிலம்: டிசையர்[2]) (மலையாளம்: ஆச, அதாவது ஆசை) எனவே குறித்தனர் ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூ, மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் ஆகியோர். 'அத்தன்மையால் (அதாவது அன்புடைமையால்) பிறர் மாட்டும் விருப்பமுடைமையை' என்று பரிமேலழகரும்; 'பிறரிடத்தில் பற்று உடையவனா பிருக்கையை' என்று புலவர் ந. சி. கந்தையாவும்; 'பிறரிடம் விருப்பமுடையவனாக வாழும் தன்மையை' என்று பேராசிரியர் மு. வரதராசனாரும்; 'தன் அவாக்களை அயலார் அவாக்களாகப் பரப்புதலும்[3]' என்று ஆங்கிலமொழிபெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும் உரைத்தனர். 'பிறரால் விரும்பப்படும் தன்மையை' என்று கவிஞர் இராமலிங்கனாரும்; 'அவர்க்கு (அதாவது பிறர்க்கு) நம் மீது விருப்பத்தை' என்று புலவர் குழந்தையும்; இதுபோலவே, 'பிறரை விரும்ப' என்று பேராசிரியர் இலக்குவனாரும் பொருள் செய்தனர். 'பகைவர் முதலாயவர்களாலும் விரும்பப்படும் உள்ளன்பினை' என்பது காலிங்கர் உரை. 'ஆர்வம் என்று சொல்லப்பட்ட ஆன்மநேயத்தை' என்பது பரிதியார் கொண்ட பொருள். இந்தி மொழிபெயர்ப்பாசிரியர்கள் பேராசிரியர் முனைவர் சங்கரராசு நாயுடுவும், வேங்கடகிருட்டினனும் முறையே 'ஒருவருக்கொருவர் அன்புடையரா யிருக்கும் பண்புடைமை (பாரஸ்பரிக் ஸஹ்ருதயா) என்றும், 'நட்பிணக்க உணர்வு' (மிலன்சார்கே பாவ்கோ) என்றும்

---

1. Love 2. Desire 3- The desire to extend his desire to strangers

பொருள் கொண்டு இம் மணிவிளக்கவுரைக் கருத்துக்கு அணுக்கமாகி யுள்ளனர் என்று காணலாம்.

பரிதியார் 'ஆர்வமுடைமை'க்குரிய பொருளை இம் மணிவிளக்கவுரையும் தாண்டி 'ஆன்மநேயம்' என்றும், அதற்கேற்ப நண்பு என்பதற்குப் 'பிறவா நெறியாகிய முத்தியினை' என்றும் பொருள் கூறினார்.

'உடைமை, உடையனாந் தன்மை' என்பது பரிமேலழகர் விளக்கவுரை.

(3) நண்பு என்னும்' என்பதற்கு 'நட்பு என்னும்' என்றோ, 'நண்பு என்று சொல்லப்படுகிற' என்றோ சொற்பொருள் கூறினர் மணக்குடவர், காலிங்கர், பேராசிரியர் முனைவர் இலக்குவனார், கவிஞர் இராமலிங்கனார், புலவர் குழந்தை, ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரு, இந்தி மொழிபெயர்ப் பாசிரியர்கள் ஆகியோர். மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் அன்பை நட்பு என்றும், ஆர்வமுடைமையை ஆசை என்றும் கூறி, நண்பு என்பதனைக் காதல் (ப்ரேம) என்று முடித்துள்ளார் (இது வியப்புக்குரியதே யாகும்!)

'இவற்குப் பகைமையும் நொதுமலும் இல்லையாய், 'யாவரும் நண்பு என்று சொல்லப்படும்' என்று பொழிப் புரை தந்து, பரிமேலழகர் 'யாவரும் நண்பாதல் எல்லாப் பொருளும் எய்துதற்கு ஏதுவாகலின் நாடாச் சிறப்பு' என்று விளக்கம் தந்தார். சிறிது சொற்போக்கு மாற்றத்துடன் இதே பொருள் தந்தனர் பேராசிரியர் முனைவர் மு. வரத ராசனார், புலவர் ந. சி. கந்தையா, ஆங்கில மொழிபெயர்ப் பாசிரியர் ஐ. டி. தங்கசாமி ஆகியோர்.

'நண்பு என்னும் நாடாச் சிறப்பு' என்பதற்குப் 'பிறவா நெறியாகிய முத்தி' என்றே பரிதியார் பொருள் கொண் டுள்ளது மேலே சுட்டப்பட்டது.

(4) நாடாச் சிறப்பு என்பதற்குப் பரிமேலழகர் 'அளவிறந்த சிறப்பினை' என்று உரை செய்தார். இதற்குத் துலக்கமான அவர் விளக்கவுரை மேலே சுட்டப்பட்டுள்ளது.

'அளவில்லாத சிறப்பு', 'அளவற்ற சிறப்பு', 'மிக்க சிறப்பு' என்று புலவர் ந. சி. கந்தையாவும், பேராசிரியர் முனைவர் மு. வரதராசனாரும், புலவர் குழந்தையும், ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ட்ரூவும்; 'தேடுதற்கரிய சிறப்பினை' என்று காலிங்கரும்: 'ஆராய்தலில்லாத சிறப்பினை' என்று மணக்குடவரும்; 'சிறந்த செல்வத்தை' என்று பேராசிரியர் இலக்குவனாரும்; 'மட்டற்ற புகழ்'[1] என்று ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும்; 'விலையற்ற பெருமை', 'சிறந்த நலம்' (அமூல் மஹான்தா, உத்தம் க்ஷேம்) என்று இந்தி மொழிபெயர்ப்பாசிரியர்கள் பேராசிரியர்கள் சங்கரராசு நாயுடுவும், வெங்கடகிருஷ்ணனும்; அரிய காதலும் (மோஹன ப்ரேமயும்) என்று மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் வெண்ணிகுளமும் உரை செய்தனர்.

'நாடாச் சிறப்பு' என்பதற்குத் 'தேடாமலே சிறந்த உறவை' என்று கவிஞர் இராமலிங்கனார் உரைத்து இம்மணி விளக்கவுரைக்கு மிகவும் அணுக்கமாகியுள்ளார்.

(5) குறட்பாவின் மொத்தக் கருத்துப் பற்றி இத்தனிக் குறிப்பு முகப்பில் சுட்டியுள்ளோம். 'அன்பு', 'ஆர்வமுடைமை', 'நண்பு என்னும் நாடாச் சிறப்பு' என்பவற்றுக்கு வேறு வேறு பொருள் கூறியதன் மூலம் உரையாசிரியர்களின் பொழிப்புரை மிகப் பலவாகத் தோற்றினும், பொருளின் வகையில் பெரும் புதுமை கண்டுவிட முடியவில்லை. அன்பினால் விருப்பமுடைமை, அதனால் நட்பு என்றனர் பலர். அன்பினால் பிறரிடம் விருப்பமுடைமை, அதனால் அவர்களது விருப்பமுடைமையாகிய நட்பு என்றனர் சிலர். அன்பினால் பிறர் தம்மீது விருப்பமுடையராந் தன்மை, அதனால் நட்பு என்றனர் சிலர். அன்பை நட்பாக்கி, நட்பைக் காதலாக்கியவரும் உண்டு. அன்பு காரணமாக ஆன்மநேயம், அதனால் முத்தி என்ற பரிதியார் உரையும் கண்டோம்.

பொருள் காண்பதில் உரையாசிரியர்கள் தட்டித் தடவினும், இம் மணிவிளக்கவுரை கண்ட பொருள் நோக்கியே

1. Unlimited praise

அவர்கள் சிந்தனை செயல்பட்டுள்ளது என்பது காண லாம்.

75. மனித சமுதாயத்தின் நாகரிக முற்போக்கு மனித இன அன்புப் பண்பு மலர்ச்சியின் மரபு விளைவேயாகும்!

[2]அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப, [1]வையத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

பொ-ரை: [1](இன மேலோராகிய பண்பியல் நூலோர் ஆகியோர்கள்),'நிலைபேறுடைய இந்த உலகத்தில் உலக இன்பநாடிப் பாடுபடும் சான்றோர் அடைய இருக்கும் நிறை பேரின்ப வெற்றியானது, [2]மனித இனம் அன்போடு பொருந்தி அதில் நிலைபெற்று நின்று நீடித்து வளர்ந்த பண்பு மரபு அல்லது பண்பாட்டின் விளைவு' என்று கூறுவார்கள்.

க-ரை: காதலின்பத்திலிருந்து பிறந்தது அன்பு. அவ்வன்பு மலர்ச்சியால் தோன்றி வளரும் நாகரிகப் பண்பாடு, சான்றோர் தலைமையில் நின்று உலகின் நிறை பேரின்ப நோக்கி முன்னேறும் தன்மை உடையது.

இலக். கு: கூற்று வாக்கியம் ஒன்று உட்பட இக் குறட்பாவின் வாசகம் ஒன்று. அவாய்நிலைச் சொல் ஒன்று உட்பட அதன் சொற்கள் இரண்டே.

அவையாவன:

முதல் வாசகம்:

1. [பண்பியல் நூலார்] (இது தோன்றா எழுவாய்).
2. வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு அன்பற்று அமர்ந்த வழக்கு என்ப [இது பயனிலை].

இதில் உள்ளடங்கிய கூற்று வாக்கியம்:

வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு அன்புற்று அமர்ந்த வழக்கு [இது பயனிலையாகிய தொகைநிலையில் 'என்ப' என்னும் வினைக்குரிய செயப்படுபொருளாக வந்தது].

இக் குறட்பாவில் மெல்லோசையும் இடையோசையும் நிரம்பி வந்த யாழின் இசைப்பு வாசிப்பவர்க்கு வெளிப்படையானதே யாகும். அத்துடன் குறட்பா முழுவதும் அமர்ந்த படுப்பிசைப்பாகவும்; எல்லாச் சீர்களும் முதலசை சிறிதே எடுத்திசைப்பாகவும் அமைந்துள்ளது காணலாம். இந்நிலையில் இறுதிச் சீரான 'சிறப்பு' என்பது மட்டும் சிறிது வன்மையுற்ற இரண்டாம் எழுத்து எடுத்திசைக்கின்றது.

குறட்பாவில் 'வழக்கென்ப', 'இன்புற்றார்' ஆகிய இரண்டுமே காய்ச் சீர்கள். கடைச் சீர் தவிர மற்றவை விளமாச் சீர்கள். இவற்றுள்ளும் 'வையகத்து' என்பதும், 'அமர்ந்த' என்பதுமே விளமாக வும் மாவாகவும் வந்துள்ள சிறிது நீண்ட சீர்கள் ஆகும்.

பண்பியல் நூலார் என்பது குறட்பா முழுதளாவிய நீள் தொகையாகிய வினைக்குரிய எழுவாயாக வருவிக்கப்பட்ட தொகை நிலைச் சொல் ஆகும். பண்பியல் நூலுக்குரியவர், பண்பியல் நூலார். இது பண்பியல் நூல் என்ற தொகைப் பெயரடியாகப் பிறந்த பலர் பால் குறிப்பு வினைப் பெயர். பண்பியல் நூல் என்ற சொல் அது பயிலும் மாணவரையும், அது பயிற்றுவிக்கும் ஆசிரியரையும், அது வல்லாராகிய அப் பண்பியல் நூல் ஆக்கியோரையும் குறிக்குமாயினும், ஈண்டு ஆக்கியோரையும் வல்லாரையும் ஆசிரியரையுமே பொதுவாகக் குறிக்கும். பண்பியல் நூல் என்பது பண்பியலைக் கூறும் அல்லது பண்பியலைப் பற்றிக் கூறும் நூலென இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

பண்பியல் என்பது பண்பின் இயல் என ஆறும் வேற்றுமைத் தொகை. இயல் என்பது இயல் என்ற வினைப் பகுதியின் முதனிலைப் பெயராய் இயல்பு குறித்து, இயல் அறிவுத் தொகுதிக்கு ஆகுபெயர் ஆயிற்று. பண்பு என்பது 'பு' ஈறுபெற்ற பண்புப் பெயர்.

வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு அன்புற்றமர்ந்த வழக்கு என்ப என்பது அதன் ஈற்றுச் சொல்லான என்ப என்பதனை ஒப்ப வினைமுற்று. இது பண்பியல் நூலார் என்ற தோன்றா எழுவாயின் பயனிலையாயிற்று.

என்ப என்பது பலர்பால் காலப் பொதுவான வினைமுற்று. 'ப' அப் பால் விகுதி. இது இடைநிலை பெறவில்லை. 'என்' கூற்று அறிவிப்பு வினைப் பகுதி.

வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு அன்புற்றமர்ந்த வழக்கு என்ற வாசகம், இங்கே கூற்று வாக்கியமாய், ஒரே தொகைநிலைப் பெயராகி, 'என்ப' என்ற வினைமுற்றின் செயப்படு பொருளாய் நின்றது.

வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு என்பது கூற்று வாக்கிய எழுவாய்.

சிறப்பு என்பது இத்தொகைநிலைப் பெயரின் இறுதியான பண்புப் பெயர். 'பு' பண்பு ஈறு. இதனைப் 'பு' விகுதிபெற்ற 'சிற' என்ற பகுதியடியான தொழிற்பெயரென்றும் கூறலாம். தொழிற் பெயராயின், தொழில் பண்புக்கு ஆகி வந்ததென்று கூறல் வேண்டும்.

எய்தும் என்பது காலப் பொதுப் பெயரெச்சம். 'உம்' இடைநிலை பெறுமலே காலம் காட்டும் அவ்வெச்ச விகுதி. எய்து வினைப் பகுதி. இப் பெயரெச்சம் சிறப்பு என்ற பெயர் தழுவிற்று.

இன்புற்றார் என்ற பெயர் எய்தும் என்ற பெயரெச்சத்தின் வினைப் பகுதியை எழுவாயாகத் தழுவித் தொகைப்பட்டது. இன்புற்றார் என்பது இன்பு உற்றார் எனப் பிரிவுற்று, இன்பினை உற்றார் என இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆயிற்று. முதற் சொல்லீற்று உகரம் உயிர் முன் கெட்டது. உற்றார் என்பது காலப் பொதுவாய் வந்த இறந்தகாலப் பலர்பால் வினையாலணையும் பெயர். உறு, பகுதி. ஆர் அப்பால் விகுதி. இவ் வினைக் கணத்தில் பகுதி யீற்று வல்லுகரத்தின் வன்மை யிரட்டுதலே இறந்தகால இடைநிலை ஆகும். இரட்டிய பின் விகுதி உயிர் முன், இரட்டிய பகுதியின் ஈற்று உகரம் கெட்

டது. இன்பு என்பது பெயர்ச் சொல். இன்பம் என்ற வடிவத்தின் அம் ஈறு இதில் கெட்டது.

வையகத்து என்பதன் ஈற்றில் ஏழாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. வையகத்து இன்புற்றார் எய்தும் என்பது வையகத்தில் இன்புற்றார் எய்துகிற என்ற பொருளினையுடைய ஏழாம் வேற்றுமைத் தொகை. இவ் வேற்றுமைப் பொருள் இன்புற்றார் என்ற தொகைநிலையிலுட்பட்ட வினையையும், எய்தும் என்ற வினையையும் ஒருங்கே தழுவி நின்றது. வையகத்து என்பது வையகம் என்பதன் வேற்றுமை வடிவம். வையகம், பெயர். 'அத்து', சாரியை. பெயரின் இறுதி மகரம் கெட, அதன் முன் நின்ற அகரமும் சாரியை உயிர் முன் கெட்டது.

அன்புற்று அமர்ந்த வழக்கு என்பது கூற்று வாசகத்தின் பெயர்ப் பயனிலை.

வழக்கு பெயர்ச்சொல். இது வழங்கு என்ற வினைப்பகுதியின் வலித்தல் விகாரமாய் வந்தது.

அமர்ந்த என்பது 'அமர்' என்ற வினைப் பகுதியடியான பெயரெச்சம். 'அ' அவ்வெச்ச விகுதி. 'த்' இறந்தகால இடைநிலை. இடைநிலையின் முன் 'த்' சந்தியாக வந்து 'ந்' ஆக மாறிற்று. இப் பெயரெச்சம் 'வழக்கு' என்ற தனது வினைப் பொருட் பெயரே தழுவிற்று. இது ஓடிய ஓட்டம், பேசிய பேச்சு என்பது போன்ற வழக்கு ஆகும். ஏனெனில் அமர்ந்த வழக்கு என்பது அமர்ந்த அமர் வாகிய வழக்கே யாகும்.

'அமர்' என்ற இவ் வினைப் பகுதியின் செயல் முதல் எழுவாய் 'மனித இனம்' என்பதே. இதுவும் இங்கே தொக்கு நின்றது. இவ் வினை முதன்மை அன்புற்று என்பதிலுள்ள வினைக்கும் பொருந்தும்.

அன்புற்று என்பது அன்பு உற்று, அன்போடு உற்று என மூன்றும் வேற்றுமைத் தொகை. அன்பு என்ற பெயருடன் இங்கே உற்று என்ற வினை எச்சம் ஒரு சொல்போல நின்றது. உற்று என்பதன் பகுதி 'உறு' என்பது. வினை எச்ச விகுதி 'உ' என்பதே.

இக்கணத்தில் பகுதி இறுதி உகர மேல் நின்ற வல்லெழுத்து இரட்டு தலே இறந்த கால இடைநிலை. வினையெச்ச விகுதி 'உ'கரத்தின் முன் பகுதி ஈற்று உகரம் கெட்டது.

உற்று என்பதன் வினை முதலாக 'மனித இனம்' என்பது தொக்கு நின்றது என்பது மேலே சுட்டப்பட்டது.

அன்புற்று என்பதில் அன்பு என்பதையே உற்று என்பதன் வினை முதலாகக் கொண்டு, அன்பு உறப்பெற்று என்ற பொருளில் அன்புறு என்பதை ஒரு வினையாக மதித்து அதற்கே 'மனித இனம்' என்பதை வினைமுதலாகக் கொள்ளுதலும் பொருந்தும். இது தமிழ் மொழியின் தனி இயல்பு ஆகும்.

வி-ரை : அற வாழ்வின் மழைவளத்துக்குரிய பயிர்வளப் பண்பான அன்புடைமையின் சால்பு முப்பால் வாழ்வுகளுட னும் தொடர்புடையதாயினும், இக் குறட்பாவும் இதற்கு முந்திய, பிந்திய குறட்பாக்களும் ஆகிய மூன்றும் [74-76] அதன் பொருள் வாழ்வு அல்லது சமுதாய வாழ்வுத் தொடர்பே சிறப்பிக்கின்றன. அவ் வழி இக் குறட்பா மனித சமுதாயத்தின் உலக இன்பம் அதாவது இனப் பேரின்ப நோக்கிய பண்பாடு, மனித இனம் காலப் பரப்பில் அடைந்து வந்துள்ள அன்பு மலர்ச்சிப் பண்பின் நீடித்த மரபு விளைவே என்று விதந்தோதுகின்றது.

பொருள் வாழ்வு அதாவது சமுதாய வாழ்வு குறித்த அதிகாரத்தின் மூன்று குறட்பாக்களில் முதற் குறட்பாவாகிய முந்திய குறட்பாவுடனும், அதற்கு முந்திய இன வாழ்வுப் பகுதியின் இறுதிக் குறட்பாவுடனும், இக் குறட்பா மிக நெருங்கிய தொடர்புடையது.

இன வாழ்வுப் பகுதியின் இறுதிக் குறட்பாவுக்கும் [73] இக் குறட்பாவுக்கும் பொருளில் மட்டுமன்றிச் சொல்லிலும் உள்ள நெருக்கமான தொடர்பு அக் குறட்பா விளக்கவுரை முகப்பிலேயே சுட்டப்பட்டுள்ளது. சிறப்பாக அக் குறட்பா வில் 'அன்போடு இயைந்த வழக்கென்ப' என்ற முற்பகுதியை இக் குறட்பாவில் 'அன்புற்றமர்ந்த வழக்கென்ப' என்ற முற்

'பகுதி கிட்டத்தட்டக் கூறியது கூறல்போல இரட்டித்து வந்துள்ளது. தவிர இரண்டிலும் 'என்ப' என்ற சொல் வந்துள்ளது. 'தொடர்பு', 'வழக்கு' என்ற அதன் சொல் இணை இங்கே 'வழக்கு', 'சிறப்பு' எனச் சங்கிலித் தொடர் மரபாக இயன்றுள்ளது. இவ்விரு குறட்பாக்களிலுமே டார்வின்—லமார்க்கின் உயிர் மலர்ச்சி, மனித இன மலர்ச்சிக் கோட்பாட்டுத் தொடர்பு காணலாம்.

இன வாழ்வுப் பகுதியின் இறுதிக் குறட்பாவுடன் இக் குறட்பாவுக்குள்ள தொடர்பைவிடக் குறைந்ததன்று, முன் குறட்பாவுடன் இதனுக்குள்ள உறவு. முந்திய குறட்பா இன நோக்கிய சமுதாயத்தின் அன்பு—ஆர்வமுடைமை—நண்பு என்ற அன்பின் முதல் மூன்று படி மலர்ச்சிகளை விளக்கிற்று. இக் குறட்பா அவை கடந்த நான்காம் படி மலர்ச்சியாகிய இன்பம் சுட்டிற்று. முன் குறட்பா இன்ப நோக்கிய சமுதாயப் பண்பாட்டை அன்பு மலர்ச்சியாகச் சுட்டிற்று. இக் குறட்பா அதை மனித இனத்தின் அன்பு மலர்ச்சி விளைவு என்று சுட்டிற்று.

இன வாழ்வுப் பகுதியின் இறுதிக் குறட்பா இன வாழ்வு சார்ந்ததாகலின், அது குறித்த அன்பு மலர்ச்சி மனித இன நோக்கிய உயிரின் அன்பு மலர்ச்சி என்பதும்; இக் குறட்பா குறித்த அன்பு மலர்ச்சி உயிரினம் சார்ந்த மனித சமுதாயத்தின் அன்பு மலர்ச்சி என்பதும்; இடைப்பட்ட முன் குறட்பா குறித்த அன்பு மலர்ச்சி சமுதாயத்தில் நிகழும் அன்பு மலர்ச்சி என்பதும் இங்கே பகுத்துணர்ந்து காணத்தக்கது ஆகும்.

பண்பியல் நூலார் என்பது இக் குறட்பாவில் 'என்ப' என்று முடியும் வினைமுற்றுக்குரிய எழுவாயாக அவாய்நிலையாய் வருவிக்கப்பட்டது.

பண்பியல் நூல் என்பது உயிர் மலர்ச்சியியல் நூலின் பகுதியான மனித இனப் பண்பாட்டு மலர்ச்சி நூல் ஆகும். உயிரியலில் உயிர் மலர்ச்சியியல் ஒரு பகுதியாவது போல, இப் பண்பியலும் மனித இன வியலின் ஒரு பகுதியே யாகும்.

நன்மை, வாய்மை, அழகு, நேர்மை, மேன்மை, ஒழுக்கம், அறிவு முதலிய பண்புகள் மனித இனத்தில் எவ்வாறு படிப் படியாக இயல்பாகத் தோன்றின, எவ்வாறு படிப்படியாக அவை உணரப்பட்டன, எவ்வாறு படிப்படியாகச் சமுதாயத் திலும் குடும்பத்திலும் வழிவழியாக இனத்திலும் ஊன்றிப் பரவ வகைகள் காணப்பட்டன என்பவற்றை ஆயும் நூலே பண்பியல் நூலாகும்.

இன வாழ்வுப் பகுதியிலுள்ள மூன் குறட்பாவில் [73] இன மேலோர் உயிர் மலர்ச்சி நூலாராகக் குறிக்கப்பட்டது போலவே, இங்கே அவர்கள் பண்பியல் நூலார் ஆகக் குறிக் கப்பட்டனர். அங்கே உயிர் நூலார் உயிர் மலர்ச்சியுடன் மலர்ச்சியாகக் கண்டு கூறும் என்புடைய உயிரினங்களில் காணும் அன்புக் காதல் மலர்ச்சியே சுட்டப்பட்டது. இது மனித இனம் உயிரினத்திலிருந்து பெற்ற அன்புக் காதல் மலர்ச்சி ஆகும். சமுதாய வாழ்வுப் பகுதிக்குரிய முன் குறட் பாவிலும் இக் குறட்பாவிலும் கூறப்படுவதோ, மனித இனத் திலேயே வளரும் காதல்-அன்பு மலர்ச்சியும், அன்பு-பண்பு-இன்ப மலர்ச்சிகளும் ஆகும். இதிலும் அன்பு-பண்பு மலர்ச் சியே முன் குறட்பாவில் அன்பு - ஆர்வமுடைமை - நண்பு மலர்ச்சியாக விவரிக்கப்பட்டது. அதனை ஒரு படி மேலும் கொண்டு சென்று, வருங்கால இன வளம் நோக்கிய சமுதா யத்தின் பண்பு மலர்ச்சியாக இக் குறட்பா சுட்டியுள்ளது.

பண்பியல் நூலார் கூற்றாக இக் குறட்பா மட்டுமே கூறப் படினும், இரு குறட்பாக்களும் ஒரே மலர்ச்சிக் கருத்தைத் தொடர் கருத்தாகவே கூறுவதால், இரண்டும் பண்பியல் கூற்றாகவே கொள்ளத்தக்கதாகும். இரண்டையும் கூறுபவ ராகக் குறிக்கப்பட்ட உயிர் மலர்ச்சி நூலாரும், பண்பிய லாரும் ஒரே இன மேலோரே யாவர்.

என்ப என்பது 'என்று ஆய்ந்து கண்டு கூறுகின்றனர்' என்னும் கருத்துடையது.

திருவள்ளுவர் 'என்ப' என்ற சொல்லை வழங்கும் இடங் கள் சில, அச் சிலவற்றுள்ளும் முன் அதிகார ஆறும் குறட்பா

வில் [66] கூறப்பட்டது போல, திருவள்ளுவர் தம் மரபின் முன்னோர்களை, அம் மரபுக்குத் துணை செய்யும் இன மேலோரைச் சுட்டும் குறட்பாக்களில் இக் குறட்பாவும் ஒன்று. இதன் விரிவை அக் குறட்பா வுரையில் காண்க.

திருவள்ளுவர் இக் குறட்பாவின் மெய்ம்மையைத் தம் நேர் கூற்றாகவே கூறியிருக்கலாம். ஆனால் தாமே மேற்கோளாக ஏற்று எடுத்துரைக்கும் மேலோர் கூற்றாகக் கூறுவதனால், அதுவும் இவ்வதிகார இன வாழ்வுப் பகுதி இறுதிக் குறட்பாவிலும் [73], இக் குறட்பாவிலும் கூறுவதனால், அக் குறட்பாக் கருத்தும், அதனைத் தொடர்ந்த முன் குறட்பா, இக் குறட்பாக் கருத்தும் வள்ளுவ அடிப்படை மெய்ம்மைகளாக வலியுறவு பெறுதல் காணலாம்.

வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு என்பது 'நிலைபேறுடைய இந்த உலகத்தில் உலக இன்பம் நாடிப் பாடுபடும் சான்றோர் அடைய இருக்கும் நிறை பேரின்ப வெற்றியானது' என்று பொருள்படும்.

வையகத்து என்ற சொல்லுக்குப் பின்னால் ஏழாம் வேற்றுமை உருபு தொக்கு நிற்கிறது என்பதும், இவ் ஏழாம் வேற்றுமைப் பொருள் இன்புற்றார் என்ற தொகையுட்பட்ட வினையையும் எய்தும் என்ற வினையையும் இரண்டையும் தழுவி நிற்கிறது என்பதும் இலக்கணக் குறிப்பில் கூறப்பட்டன.

வையகம் என்ற சொல் வைகுதல், வைகல், வையம் வைப்பு, வைத்தல் என்ற சொற்களுடன் தொடர்புடையது. வைகுதல் என்பது தங்குதல். வைத்தல் தங்கி இருக்கச் செய்தல். வைப்பு சேர்ந்து நிலையாக வைத்துச் சேமித்த செல்வம். வைகல் என்பது மாறா ஞாயிற்றொளியால் மாறும் உலகத்தின் வாழ்வு அளக்கும் காலக் கூறாகிய நாள். வையம், வையகம் இரண்டும் நிலவுலகு குறிக்குமானாலும், முன்னது மட்டுமே தேர் குறிக்கும். இத் தொடர்பு வேறுபாடுகளின் அடிப்படையில் காணின், வையகம் என்பது நிலை பேறுடைய உலகம் குறிக்கும் என்பது தெளிவு ஆகும். கால நெறியில் செல்லும்

தேர் என்ற முறையில் தமிழர் நிலவுலகை வையம் எனவும், அதனிடை மாறாது வளர்ந்து நிலவும் சமுதாயப் பரப்பை வையகம் என்றும் குறித்தனர் எனலாம்.

இன்புற்றார் என்பது இன்பம் பேரின்பமாகிய உலக இன்பம் அளாவி. அதை நாடிப் பாடுபடுவோராகிய சான்றோர் என்று பொருள்படும்.

இன்பம் என்ற சொல் இங்கே வழங்கப்படுவது இன்பத் துக்குரிய காமத்துப் பாலிலன்று, அறத்துப்பாலிலாதலின், சிறு திற இன்பமாகிய சிற்றின்பம் குறியாமல், பேரின்பம் குறித்தது. அவ் வின்பம் அறவோராகிய சான்றோருக்கும் வருங்காலத்திலன்றிக் கை வராத ஒன்றாதலின், அது இங்கே இன்பம் என்று குறிக்கப்படாது, இன்பு எனப்பட்டது. இன் பத்தின் கருவிதைப் பண்பே இன்பு.

உறுதல் நாடுதல், விரும்பிப் பாடுபடுதல். நாடுவது இன்பமே யாயினும், உடனடியாகத் தாம் பெறுவது அதற் குப் பாடுபடுவதால்வரும் பேரின்ப அவாவே யாதலால், அது இன்பு எனப்பட்டது. எனவே இங்கே இன்பு என்பதை வருங்கால உலக இன்பம், வரவிருக்கும் பேரின்பம் என்ன லாம்.

எய்துதல் என்பது வரப் பெறுதல். எய்தும் என்ற காலப் பொது அல்லது எதிர்கால வினையெச்ச வழக்கு பெறவிருக் கிற என்ற பொருள் குறித்தது.

எய்துதல் என்ற வினை எய்தல் என்ற வினையுடன் தொடர் புடையது. எய்பவன் வில்லின் நாணில் அம்பேற்றிக் குறி பார்த்து அம்பு ஏவுகிறான். குறி எய்த பின்னரே எய்த பொருள் அடைகிறான். எய்துதல் இவ்வாறு முயன்று வரப் பெறும்பேறு குறித்தது. இனம் நாடிப் பாடுபடுபவர் இன்பக் குறி நோக்கிப் பாடுபடுகின்றனர். அவர்கள் குறி தவறாதவ ராதலின், கட்டாயம் பெறுபவர், ஆயினும் வருங்காலத்தில் பெறுபவர் என்பதை எய்தும் என்ற வழக்குக் குறித்தது.

சிறப்பு என்ற சொல் தமிழில் சிறந்து அதாவது இறந்து அதாவது கடந்து நின்ற ஒன்று அல்லது கடந்த நிலை அல்லது பண்பு என்பது குறிக்கும். கடவுள், பேரின்ப வீடு, தெய்வங்களுக்கான விழா, உயர்ச்சி, பெருமை, பொது அல்லாதது என்பவை திருக்குறளில் வழங்கப்படும் இதன் பொருள்கள். இவற்றுள் முதல் மூன்றுமே வள்ளுவச் சிறப்புப் பொருள்கள். பிற மூன்றும் அவர் வழங்கும் பொதுப் பொருள்களே.

இங்கே சிறப்பு என்பது முன்வரும் எய்தும் என்ற குறிப்பால் சிறப்பு நோக்கிய பொதுப் பொருள் உடையது ஆகும். பேரின்பம் அல்லது கடவுள் என்பது சிறப்புப் பொருள். பெருமை, உயர்ச்சி ஆகியவை பொதுப் பொருள். ஆகவே 'சிறப்பு' இங்கே 'நிறை பேரின்ப வெற்றி' ஆயிற்று.

வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு என்பது இவ்வாறாக உலகின், மனித இனத்தின் குறிக்கோள்; மனித சமுதாயமாகிய தேர் செல்லும் இனவாழ்க்கைப் பாதை சென்று சேர வேண்டும் இலக்கு என்ற பொருள் குறிக்கின்றது.

(மனித இனம்) அன்புற்று அமர்ந்த வழக்கு என்பது மனித இனம் அன்போடு பொருந்தி அதில் நிலைபெற்று நின்று நீடித்து வளர்ந்த பண்பு மரபு அல்லது பண்பாட்டின் விளைவே யாகும் என்று பொருள்படும்.

மனித இனம் என்ற சொல் இங்கே அன்புற்று, அமர்ந்த ஆகிய இரு வினைகளின் வினை முதலாகவே வருவிக்கப்பட்டுள்ளது.

மனித இனம் என்பது மனித சமுதாய வாழ்வையும், மனித சமுதாயத்தின் முன்னோர் அனைவரின், முந்திய எண்ணிலாத எல்லாத் தலைமுறைச் சமுதாயங்களின் சென்றகால வாழ்வையும், அதுபோல மனித சமுதாயத்தின் வழிவழித் தோன்றல்கள் அனைவரின், எண்ணற்ற வருங்காலத் தலைமுறைச் சமுதாயங்களின் வாழ்வையும் உட்படுத்திய முக்கால அளவையுடையதாகும். சமுதாயத் தலைவராகிய பண்புடையாரும், சமுதாயத்தில் நின்று இனமியக்கும் தலைவர்களாகிய

சான்றோரும் சமுதாயத்தில் வளர்ந்து, சமுதாயப் பண்பே இயக்கினாலும், அதனை வருங்கால இன வாழ்வின் நெறி நோக்கி, அதன் எல்லையிலாக் கால வளர்ச்சி இலக்கு நோக்கியே அதனைச் செலுத்துபவர் ஆவர். ஆனால் சமுதாயத்தில் பண்புடையாரையும் சான்றோரையும் இயக்கும் பண்பும் சால்பும், முந்திய கால மனித இன வாழ்வு படைத்தளித்துச் சென்ற பண்பைப் பொறுத்ததே யாகும்.

இனப் பண்பின் சமுதாய வளம், சமுதாய வளர்ச்சியே பண்பாடு.

இங்கே மனித இனம் என்று கூறப்படுவது இப் பண்பாட்டின் அடிப்படையான இனப் பண்பையே, பல தலைமுறைச் சமுதாயப் பண்பாடுகளின் பயனாக, நடப்புத் தலைமுறைச் சமுதாயத்துக்கு மனித இனம் விட்டுச் சென்ற முந்திய மனித இன வாழ்வைக் குறிப்பதாகும்.

அன்புற்று என்பது அன்போடு பொருந்தி என்று பொருள் படும்.

அன்பு என்பதன் விளக்கத்தை அதிகார முன்னுரையிலும் முன் குறட்பா வுரைகளிலும் காண்க. உற்று என்பது பொருந்தி, விரும்பிப் பழகிப் பயின்று என்று பொருள்படும்.

அன்பு காதலிலிருந்தே பிறப்பதாதலால், அது உயிரினத்தில் காதல் பிறந்த பின்னரே, சிறப்பாகக் காதல் எல்லையாகிய குடும்பம் கடந்த சமுதாயப் பண்பு தோன்றிய பின்னரே பிறந்து வளர முடியும். ஆகவே அன்போடு தொடர்பு கொண்டு பொருந்தி விரும்பிப் பழகிப் பயிலுதலுக்குரிய பருவங்கள் இரண்டு ஆகும். ஒன்று இவ்வதிகார இன வாழ்வுத் தொடர்புப் பகுதியின் இறுதிக் குறட்பா (73) சுட்டிக் காட்டிய என்புடைய உயர் உயிரின வாழ்வுப் பருவம். இரண்டாவது இக் குறட்பாவிலேயே கூறப்படும் மனித இனத்தின் முற்கால வாழ்வு. முந்திய மனித இன வாழ்வு என்பது, முந்திய காலத் தலைமுறைகள் சார்ந்த சமுதாய வாழ்வுகளே யாதலால்தான், முந்திய குறட்பா அன்பின் சமுதாயப் படி மலர்ச்சி வகுத்துரைத்தது.

அமர்ந்த என்பது நிலைபெற்று நின்ற என்று பொருள் படும். 'உயிரினப் பழமையிலும், மனித இனப் பழந் தலை முறைச் சமுதாய வாழ்வுகளிலும் அன்போடு பொருந்திய வாழ்வு அந்த அன்பில் ஊறித் தெளிந்து, அன்பின் மலர்ச்சி கள் படிப்படியாக வளரப்பெற்ற' என்ற கருத்தை இது தந்தது.

அமர்தல் என்பதும் அமர்த்தல் என்பதும் தங்கல், இருத் தல், விரைவும் கலக்கமும் ஒழிதல், ஓய்ந்து நிலை கொள்ளல் என்ற பொருளில் வழங்குவன. கலங்குதலின் பயனை அமைதி யிலும்; ஓட்டம், பயிற்சி ஆகியவற்றின் பயனை ஓய்விலும்; செயற் பொழுதாகிய பகலின் உணவு உழைப்பு ஆகிய வற்றின் பயனை வளர்ச்சியைத் துயிலிலுமே நாம் காண் கிறோம். இவ்வாறு தலைமுறை கடந்த தலைமுறை வளர்ச்சி களும் இடை ஓய்வுத் தலைமுறைகளாக அமைந்த சமுதாய வாழ்விலேயே வளம் ஆக்குகின்றன.

அமர்ந்த என்ற சொல் காட்டும் பண்பு இதுவே.

வழக்கு என்பது 'நீடித்த பயிற்சி விளைவாகிய பண்பு, நீடித்து வளர்ந்த பண்பு மரபு அல்லது பண்பாட்டின் விளைவே யாகும்' என்று பொருள்படுவதாகும்.

வழங்குதல் என்ற தமிழ்ச் சொல் வாழ்தல் என்பத னுடன் தொடர்புடைய இனச் சொல் ஆகும். தொடர்பறு நீடித்தல், எங்கும் பரவுதல், எல்லாருக்கும் கொடுத்தல், வாழ்வுடன் வாழ்வாக இயங்குதல் என்னும் பொருள்களில் அது பயில்வது காணலாம். நீதி மன்றங்களிலுள்ள 'வழக்கு' என்ற சொல்லாறுகூட, ஒருவருடன் ஒருவர் சமுதாய வாழ் வில் அல்லது பொது வாழ்வில் கொள்ளும் உரிமைப் பூசலையே குறிக்கும். இதனாலேயே தொடர்பு, சமுதாய உறவு என்ற பொருளில் 'உனக்கும் எனக்கும் வழக்கு ஏது' என்று இன்றும் ஏதிலரிடம் அல்லது ஏதிலராக நடத்த விரும் புபவரிடம் கூறுகிறோம்.

வழக்கு என்பது இவ்வாறாக இனத்தில் நீடித்து வந்து சமுதாயத்தில் பரந்து பயின்று, இனப் பண்பு மரபில் நின்றே

சமுதாயத்தில் பண்பாடாக வளர்ந்த திறம், அத் திறத்தின் விளைவே என்ற பொருள் தந்தது.

இன வாழ்வில் பல தலைமுறைச் சமுதாய வாழ்வு தாழ்வு அனுபவங்களின் பிழிவாக, சமுதாயத் தலைமுறைதோறும் பாடுபடும் பண்புத் திறங்களிடையே மாறுபடாது நீடித்துத் தொடர்ந்து வரும் வாழ்க்கை முறைமையே பண்பு. ஒவ்வொரு தலைமுறைச் சமுதாயமும் அப் பண்பை ஏற்று வளர்த்துக் கொள்ளும் வாழ்வு வளமே பண்பாடு. பண்பும் பண்பாடும் சேர்ந்த முன்னேற்ற மேற்பரப்பே அல்லது அதன் புறத் தோற்றமே நாகரிகம் ஆகும்.

திருவள்ளுவர் இக் குறட்பாவில் வழக்கு என்றது பண்பாட்டையே. அது உண்மையில் மனித இன நாகரிகம் என்ற பேராற்றில் சமுதாயம் என்னும் படகு இதுவரை கடந்துள்ள பகுதியே.

வழக்கு என முடியும் தொகைப் பாதி, சிறப்பு என முடியும் தொகைப் பாதிக்குப் பயனில்லையாக முடியாதாதலாலேயே, வழக்கு என்பது வழக்கின் விளைவு, பண்பாட்டின் விளைவு என்று கூறப்பட்டது.

சிறப்பு என்பது சமுதாயப் படகு சென்று சேரவேண்டும் இலக்கு. அதை நோக்கி அப் படகை உய்ப்பவர், செலுத்துபவர் 'இன்புற்றூர்' ஆகிய சான்றோர். படகை அதன் மீகாமர் சிறப்பிலக்கு நோக்கி நடாத்துவதற்குரிய நெறி அல்லது ஆற்று நீர் பண்பாடு. ஆதலினாலேயே, இக் குறட்பாவில் இன்புற்றூர் எய்தும் சிறப்பை, அடைய இருக்கும் சிறப்பை, இவ் வழக்கு என்னும் பண்பாட்டினாலேயே விளையத்தக்க பயன் என்று கூறினார்.

சிறப்புரை: மனித சமுதாயத்தை உலக இன்பமாகிய பேரின்ப நோக்கி நடத்திச் செல்வது பண்பாடு. அது அன்பில் தோய்ந்து படிப்படியாக வளர்ந்து வந்துள்ள பண்பு மலர்ச்சியின் விளைவே யாகும். இனப் பொங்குமா வளம் என்னும் கடல் நோக்கிச் செல்லும் இன வாழ்வாகிய

பேராற்றல் பண்பாடே. அன்பு மழைப் பொழிவாகிய நீர்வள நெறியாக, சமுதாயம் படகாக, சான்றோர் நெறியறிந்து செலுத்தும் வலவராக அமைந்து, மனித இன உயிர் எல்லையற்ற அன்பு இன்ப மாகடல் நோக்கிப் பயணம் செய்கின்றது.

பொருள்வளம்: (1) இக் குறட்பாவில் மென்மையும் இடைமையும் கலந்த இன்னிசைப்புத் தனிச் சிறப்புக் குரியது. உலகு அன்பு வழி நின்றால், துன்பமே இல்லை. இன்பமே, கலப்பற்ற நீடித்த, எல்லையற்ற இன்பமே அதன் ஒழுக்காக, பேரின்பமே எல்லையாக அமையும் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது. இன்பம் நீடித்தால் உவர்ப்புத் தட்டுவது இயல்பு. ஆனால் இந்த உவர்ப்பும் மீண்டும் இன்ப நுகர்வுக்கு உதவுவதனால் இன்பப் பண்பே யாகும். தமிழ்மொழி உப்பு என்ற சொல்லுக்கு இனிப்பு என்ற பொருள் கொண்டியங்குவது இதனாலே யாகும். இனிப்பை இனிப்பாக்கும் உப்புக்கும் சேமவைப்பாக உள்ள கடல் இதனாலேயே ஆற்றுவமையில் இன்ப வாழ்வுக் குறிக்கோளான பேரின்பமாயிற்று. சிறப்பு எனப் பன்மையில் முடியும் இக் குறட்பா இம் மெய்ம்மை குறித்துக் காட்டுகிறது. அன்புப் பாகாய்த் தொடங்கி, பண்பு வெல்லமாய் ஒழுகிய இன்பம் பேரின்பமாகிய கற்கண்டாக நிலைபேறு அடைகிறது என்று கூறலாம்.

(2) அதிகாரத்தின் இன வாழ்வுப் பகுதி இறுதிக் குறட்பா (73) 'அன்போடு இயைந்த வழக்கு என்ப' என்று தொடங்கியது போல, இக் குறட்பா 'அன்புற்றமர்ந்த வழக்கு என்ப' என்று தொடங்குகிறது. இரு குறட்பாக்களுக்கும் உள்ள இந்த சொற்

ருடர்பு பொருள் தொடர்பு இணைவு அக் குறட்பா விலும் இக் குறட்பா விளக்கவுரை முகப்பிலும் சுட்டப் பட்டன. இந்தத் தொடர்பு தற்செயலாய் ஏற்பட்டு விட்ட தொடர்பன்று, ஆசிரியரால் திட்டமிட்டு அமைக் கப்பட்ட தொடர்பே. ஏனென்றால் இங்கே அன்பு, வழக்கு, என்ப என்ற மூன்று சொற்களும் மீட்டும் அப்படியே வழங்கப்பட்டுள்ளன. தவிர, 'அன்போ டியைந்த' என்பதற்கும் 'அன்புற்றமர்ந்த' என்பதற் கும் சொல் வேறுபாடும் பொருள் வேறுபாடும் மிகக் குறைவே. கூறியது கூறலாகவே தோற்றும் இந்த ஒருமைப்பாட்டுக்குரிய காரணம், இரு குறட்பாக்களும் (73, 75) அவற்றினிடைப்பட்ட சமுதாய வாழ்வுப் பகுதிக்குரிய முதற் குறட்பாவும் (74) இன நூலாராகிய மேலோர் கண்டுணர்ந்து கூறியுள்ள ஒரே தத்துவத் தின் மூன்று பகுதிகள் என்பதும்; முதற் குறட்பா உயிரின மலர்ச்சியால் ஏற்படும் அன்பு மலர்ச்சியின் முதற் படியையும், இரண்டாம் குறட்பா மனித சமுதா யத்தில் ஏற்படும் அம் மலச்சியின் இரண்டாவது மூன் ருவது படிகளையும், மூன்ரும் குறட்பா மூன்று படிகளை யும் இணைத்ததுடன் நான்காவது படியையும் விளக்கு வதாக அமைந்துள்ளன என்பதே யாகும்.

இசைப் பாடல்களில் தொடர்பு ஒருமைப்பாடு வலியுறுத்திக் காட்ட ஈற்றடிதோறும் இணைக்கப்படும் ஒரு பல்லவியையோ, முதலடி தோறும் இணைக்கப் படும் ஒரு முதல் எடுப்பையோ, முதலிலும் ஈற்றிலும் இணைக்கப்படும் ஒருசீரான அடித் தொடுப்பையோ இசைஞர் மேற்கொள்ளுவதைக் காண்கிறோம். மேற் கூறிய மூன்று பாக்களிலும் முதல் இறுதிக் குறட்பாக் களில் திருவள்ளுவர் மேற்கொள்ளும் இந்தச் சீரடிப்

பகுதி இவ்வாறு மூன்று குறட்பாக்களையும் இணைப்ப தாகும். அதே சமயம் கூறியது கூறலாக வரும் சீரடிப் பகுதி சொல்லிலும் பொருளிலும் கூறியது கூறினும், முற்றிலும் கூறியது கூறலன்று—தொனிப் பொருளில் அவை பெரிதும் மாறுபடுவன. முதற் குறட்பா இன வாழ்வுப் பகுதிச் சார்பானதாலும், ‘என்பு’, ‘ஆருயிர்க்கு’ என்ற சொற்களை மேற்கொண்டதாலும், அன்பு என்ற சொல்லை உயிரின மலர்ச்சியுடன் தொடர்புபடுத்தி, அன்பு நோக்கிய மலர்ச்சி அதாவது காதல்-அன்பு மலர்ச்சியே சுட்டிற்று. இதற்கேற்ப வழக்கு என்ற சொல் அங்கே தொடர்பின் தொடர் பாகிய மரபே குறித்தது. இக் குறட்பாவோ சமுதாய வாழ்வுப் பகுதிச் சார்பானதாலும், ‘வையத்து’, ‘இன் புற்றார்’ ஆகிய சொற்களின் தொடர்பாலும், அன்பு என்ற சொல்லை மனித இன வாழ்வின் பண்பு மலர்ச்சி யுடன் தொடர்புபடுத்தி, அன்பு கடந்த இன்ப நோக்கிய மலர்ச்சியையே குறித்தது. தவிர, கூர்ந்து நோக்குவார்க்கு, இரு குறட்பாக்களிலும் ‘வழக்கு’ என்பதை உட்கொண்ட தொகை பயனிலையாகவே வரினும், முன் குறட்பாவில் அச் சொல் பண்பு மரபு என்ற நேர் பொருள் தரும் பெயர்ச் சொல்லாகவும், இக் குறட்பாவில் ‘வழக்கு’ என்பது பண்பு மரபு அல்லது பண்பாட்டின் விளைவு என்று காரணம் காரி யத்துக்கு ஆகி வந்த பெயர்ச் சொல்லாகவும் அமைந் துள்ளது காணலாம். இவ்வாறு ‘வழக்கு’ என்ற சொல் பண்பு மரபு என்ற பொருளில் உயிரினப் பண்பு மலர்ச்சியின் காரணம் சுட்டி, பின் அப்பண்பின் மலர்ச்சியான காரியமான பண்பாடே பின்னும் அன்பு - பண்பு - இன்பம் அல்லது அன்பு - ஆர்வ

முடைமை-நண்பு-இன்பம் என, இன்ப நோக்கிய பண்பு மலர்ச்சிக்குக் காரணமாதல் கூறிற்று என்பது தெளிவு.

இக் குறட்பா இவ்வாறு முன் (73)குறட்பாவின் தொடர்பாய் உயிர் இன மலர்ச்சி கடந்த மனித இன மலர்ச்சி சுட்டி, முன் இரு குறட்பாக்களை இணைத்தும்; முந்திய (74) குறட்பா குறிப்பிட்ட சமுதாய அன்பு மலர்ச்சியின் முதற் பகுதி கடந்த இரண்டாம் பகுதி கூறி இக் குறட்பாவை அதிகாரத்தின் இன வாழ்வுப் பகுதியுடன் மீட்டும் இணைத்தும், அதிகாரத்தின் முதல் ஐந்து குறட்பாக்களுக்கும் ஒரு தனி முழுமைத் தன்மை அளித்துள்ளது.

சமுதாயப் பகுதிக்கே உரிய அடுத்த குறட்பா அறத்தைக் குறிப்பிட்டு மேல் வரும் அறப் பகுதிக்கு (77-79) வாயில் செய்து, அதிகாரப் பிற்பகுதிக்கு இதுபோல ஒரு தனி முழுமை அளித்தல் காணலாம்.

(3) இக் குறட்பாவில் ‘வழக்கு என்ப’, ‘இன்புற்றார்’ ஆகிய இரண்டுமே காய்ச் சீர்களாய் நீண்ட சீர்களாய் இயல்வன. இவற்றுக்கு அடுத்தபடி நீண்ட சீர் இவற்றை இடை நின்று இணைக்கும் விளச் சீராகிய வையகத்து என்பதே. வழக்கு அல்லது பண்பே காரணமாகிய நெறி என்பதையும்; இன்பம் குறிக்கோள் என்பதையும்; இன்புற்றார் அதற்குரிய வழி காட்டும் தலைவர் என்பதையும்; நெறியும் குறிக்கோளும் தலைவரும் சேரின், அதுவே உலகுக்கு நிலை பேறளிப்பது என்பதையும் இச் சீரொழுங்கு குறிப்புப் பொருளாகத் தந்தது. வழக்கென்ப இரு சொல்லாகவும், இன்புற்றார் ஒரு சொல்லாகவும் சீருள் வந்த

தனுல், வழக்கென்ப என்று கூறுபவர் அதாவது இன மேலோர், இன்புற்ருராகிய சான்ருேர் ஆகிய இவ் இருவரும் ஒரே மரபினரே என்பது சுட்டப்பட்டது.

அன்புற்று, அமர்ந்த, எய்தும் எனும் சீர்கள் குறுகிய மாச்சீர்கள். குறட்பாவுக்குச் சூத்திர நடை ஒத்த வாதத் திறம் தந்து, குறட்பா கூறும் இனத் தத்துவங்களின் பொருண்மை முக்கியத்துவத்தை இச் சீர்நிலை தொனித்துக் காட்டிற்று.

(4) இக் குறட்பாவின் முதலடியில் முன்னிரண்டு சீரும் ஒரு மோனை; பின்னிரண்டு சீரும் வேறு மோனை. அடுத்த அடியிலும் முன்னிரண்டு சீரும் மோனையே. சிறப்பு என்ற கடைச் சீர் மட்டும் மோனையின்றித் தனி நின்றது. அன்புற்று அமர்ந்த வழக்கு என்பது அன்பு மலர்ச்சியில் சமுதாயப் பண்பாட்டுக்கு மூல மான, காரணமான முதற் படி. இது முன் இன வாழ் வுக்குரியது. இன்புற்ருர் எய்தும் சிறப்பு என்பது பண்பாட்டின் பயனுன, காரியமான பிற் படி. இது வரு இன வாழ்வுக்குரியது. மோனைப் பண்பு சுட்டிக் காட்டும் குறிப்புப் பொருள் இதுவே.

(5) 'கண்டவர் விண்டதில்லை' என்பது தமிழ்ப் பத்திக் கவிஞர் வழங்கும் ஒரு பழமொழி. மனித இனக் குறிக்கோள் அதாவது சிறப்பினை எய்தியவர் திரும்ப இன வாழ்வுக்கு வருவதில்லை, அதாவது இறைப் படி எய்தியவர் மீண்டும் பிறப்பதில்லை என்பது இதன் பொருள். இப் பழமொழி ஒருபுறம் வள்ளுவத் தத்துவத்தைச் சுட்டினும், மற்ருெருபுறம் அதை மறைத்துவிடவும் பயன்படுகிறது.

இன வாழ்வின் தொடக்கநிலை தனக்கென வாழ்வது. இதுவே கயமை நிலை. அதன் நடுநிலையையே நாம் பொதுவாகக் காண்கிறோம். இது தனக்காகவும் பிறர்க்காகவும் வாழ்வது. அதன் உச்சநிலை பிறர்க்கென மட்டுமே வாழ்வது. முதல் நிலையும் உச்ச நிலையும் எளிதில் காண முடியாத நிலைகள். ஏனெனில் அவை இரண்டும் இனம் என்றோ கடந்துவிட்ட நிலைகளைக் காட்டும் திசையும், என்றோ அடைய இருக்கும் நிலைகளை நோக்கிய திசையும் மட்டுமே யாகும்.

கண்டவர் விண்டதில்லை என்பது இன்மையை இன்மையால் வகுத்தால் ஒன்று ஈவு வரும் என்று கூறுவது போன்ற இல்பொருள் மெய்ம்மையே யாகும்—ஆனால் விண்டதில்லை என்ற சொல்லின் பொருள் மீண்டதில்லை என்பதன்று, வாய் திறந்து பேசுவதில்லை என்பதே. 'திரும்பி வந்து' என்ற அவாய்நிலையைச் சேர்த்துத் திரும்பி வந்து கூறுவதில்லை என்று பலரும் பொருள் கொள்வதனாலேயே, மீள்தல் கருத்துத் தவறாக ஏற்பட்டது.

உலக இன்ப நிலையைக் கிட்டத்தட்ட அணுகியவர், கடவுள் நிலை அடைந்தவர் உண்டு—பகவர், அந்தணர், ஒழுக்கத்து நீத்தார், பெரியார், துறவிகள், சான்றோர்கள் ஆகிய இனத் தலைமை வரிசையினர் இத்தகையோரே. இவர்கள் பிறர் தன்னலம் கண்டிப்பதில்லை, அத் தன்னலத்தையே பொதுநல வழி திருப்பி இயக்குபவராவர். ஆகவே அவர் அன்பு மலர்ச்சியின் உயர் படியாகிய அருள் நிலை எய்தியபின், மீண்டும் தாழ்படி அன்பு மலர்ச்சிக்கு வருவதே யில்லை.

இம் முறையில் வாயைத் திறந்து பேசார், திரும்பி வந்து வாயைத் திறந்து பேசமாட்டார் ஆகிய இரு பொருளும் உண்மையே யாகும்.

ஆயினும் இல் பொருள் மெய்ம்மையும் மெய்ம்மையே. உலக இன்பமே நோக்கமாகக் கொண்டவர் தன்னல முடையவர் பக்கம் இறங்கி வராமல் தொலை நின்றே இயக்கக்கூடும். பகவர், அந்தணர் ஆகியோர் இத்தகையவர்களே. இவர்கள் நிலையையே பிறவா நிலை, இறவா நிலை, 'விதேக முத்தி' எனச் சமய நூலார் கூறுவர். அவர்கள் உலகை இயக்குபவர், தாம் இயங்கார். ஆனல் இவர்கட்கு அடுத்தபடியினரான ஒழுக்கத்து நீத்தார், பெரியார், துறவிகள், சான்ருேர் ஆகியோர் உலகை இயக்குவர், தாமும் இயங்குவர்.

அந்தணர் மரபினரான முதற் படி இன மேலோருக்கும் ஒழுக்கத்து நீத்தாரான அவரை ஒத்த அடுத்த படியினர்க்கும் உள்ள வேறுபாடு மேலே ஒழுக்கத்து நீத்தார் பெருமை (2-ஆம்) அதிகார முன்னுரையில் விளக்கப்பட்டுள்ளது. ஒழுக்கத்து நீத்தார் அந்தணருக்கு அடுத்த படியினராயினும், உண்மையில் அந்தண்மை முழுவதும் பெற்று அந்தணராகி, அதன்பின் உலகுக்கு உழைப்பதற்காக அந்தண்மையையும் துறந்த அந்தணரே யாவர்.

சிறப்பு என்ற சொல் மோனைத் தொடர்பின்றி, மென்மை இடைமை இசைப்பு நீத்த இக்குறட்பாவில் தனித்து நிற்பதனல் ஏற்படும் தனிப் பெரு மாவளம் இதுவே—கடவுளைப் போலவே, கடவுள் நிலை பெற்றுவிட்ட பகவரும் அந்தணரும் முப்பால் ஆழியில் தாம் இயங்காமல், புற நின்று (சாட்சி மாத்திரமாய் நின்று)

அதனை இயங்குவிப்பர். அந்தண்மை துறந்த அந்தணராகிய ஒழுக்கத்து நீத்தார் கூட ஆழி மையமாக நின்று தாம் முற்றிலும் இயங்காமல் முப்பால் வாழ்வும் இயங்க வைப்பர். இதனால் உயிர் மலர்ச்சி, மனித இன மலர்ச்சியில் பகவர், அந்தணர் முற்றிலும், ஒழுக்கத்து நீத்தார் பேரளவிலும் தனித்தொதுங்கி நின்றே உலக வாழ்வை இயக்குவிப்பவர் ஆவர். இதனைக் குறட்பா முழுவதும் (மோனையுடைமையால்) சமுதாயச் சக்கரமாக, அம் முப்பாலாழி மையமாக நின்று சுழன்றும் சுழலாது நிற்கும் அந்தணரின் தனிமைச் சிறப்பாகச் சிறப்பு என்ற இச் சொல் தனி நின்று காட்டிற்று என்பது காண்டல் தகும்.

சமயங் கடந்த செம்பொருள் ஆகிய சிறப்பு என்ற வள்ளுவச் சொல், சமயங் கடந்த வேதாந்த சித்தாந்தங்களை யெல்லாம் இக் குறட்பாவில் இவ்வாறு குறிப்பு வளமாகவே தருதல் காணலாம்.

(6) சென்ற குறட்பாவில் 'சிறப்பு' செம்பொருள் என்ற பொருளுடைய தன்றாயினும் செம்பொருள் வழி நிற்கும் சிறப்புப் பண்பு குறித்தது. அது இக் குறட்பாவின் சிறப்புக்கு வாயிலாய் நின்றது என்பது அக் குறட்பாப் பொருள் வளப் பகுதி இறுதியில் கூறப்பட்டது. ஆர்வமுடைமை, நண்பு, சிறப்பு என இதனையும் தனிப் பண்பு மலர்ச்சியாகக் கருதலாம். ஞான குரு ஆன்மிக நண்பர் உருவில் வருபவரே என்ற தொல் சமயப் பண்புரை நோக்குக.

தனிக் குறிப்புக்கள் : *[1]* முன் குறட்பாவில் உரையாசிரியர் மொழிபெயர்ப்பாசிரியரிடையே சொற்பொருளும் மொத்தக் கருத்தும் காண்பதில் உள்ள வேறுபாட்டைவிட, இக்

குறட்பாவின் சொற்பொருளும் கருத்தும் காண்பதில் அவர்கள் கொண்டுள்ள வேறுபாடும் குழப்பமும் மிகுதி என்னலாம். சொல்லெளிமையும் கருத்தெளிமையும் உடைய இத்தகு குறட்பாக்களில்கூட இந்நிலை ஏற்படுவதற்கு அவர்கள் திருக்குறளை மொத்தமாகக் காணுமல், எங்கும் பொதுநிலை வெள்ளைப் பொருளே நாடி நின்றதுதான் காரணம் என்னலாம்.

ஆயினும் மூன்று கூறுகளில் எல்லாரிடையேயும் மிகப் பெரும்பான்மை ஒற்றுமை காண முடிகிறது.

முதலாவதாக இம் மணிவிளக்கவுரையைப் போலவே எல்லாரும் இன்புற்றூர் எய்தும் சிறப்பு என்பதையே எழுவாய்க் கருத்தாகவும், காரியக் கருத்தாகவும்; அன்புற்று அமர்ந்த வழக்கு, என்பதைப் பயனிலையாகவும், காரணக் கருத்தாகவும் கொண்டுள்ளனர். வழக்கு என்பதைப் பரிமேலழகர் உட்படப் பலரும் வழக்கின் பயன் என்றே தெளிவாகக் கொண்டுள்ளனர். பரிமேலழகர் 'வழக்கு ஆகுபெயர்' என்றே தெளிவுபட இலக்கணக் குறிப்பும் கூறியுள்ளார்.

இரண்டாவதாக, மொழிபெயர்ப்பாசிரியர்கள் வெண்ணிக்குளம் (மலையாளம்), பேராசிரியர் முனைவர் சங்கரராசு நாயுடு (இந்தி) நீங்கலாக எல்லாரும் 'என்று அறிஞர் கூறுவர்', 'என்று கூறுவர்' என்றே உரைத்துள்ளனர். இம் மணிவிளக்கவுரை நோக்கிப் பரிமேலழகரும் வேறு சிலரும் இதனை அறிஞர் கூற்ருகவே கொண்டுள்ளனர்.

மூன்ருவதாக, காலிங்கர், மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் ஆகிய இருவர் நீங்கலாக ஏனையோர் அனைவரும் வையகத்து என்பதனைப் பின் வரும் இன்புற்ருர் என்பதனுடனேயே இணைத்துப் பொருள் கண்டுள்ளனர்.

[2] 'வையகத்து' என்பதற்கு வாளா உலகத்தில் என்றனர் காலிங்கர், பேராசிரியர்கள் மு. வரதராசனுர், சி. இலக்குவனுர், கவிஞர் இராமலிங்கனுர், புலவர் குழந்தை ஆகியோர். 'உலக வாழ்க்கை' (ஸன்ஸார்) என்றனர் இந்தி மொழி

பெயர்ப்பாசிரியர் சங்கரராசு நாயுடு, பரிமேலழகர், புலவர் ந. சி. கந்தையா, மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம், இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் வெங்கடகிருட்டினன், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர்கள் ட்ரூ, ஐ. டி. தங்கசாமி ஆகியோர்.

வையகத்து என்பதனை 'இப் பிறப்பின்கண் உலகத்து' என்று கூறினர் மணக்குடவர். பரிதியார் கருத்தும் அதுவே.

[3] 'இன்புற்றூர் எய்தும் சிறப்பு' என்பதற்கு 'இன்பம் அடைந்தவர்கள் எய்தும் சிறப்பினை' என்று பேராசிரியர் இலக்குவனாரும், புலவர் குழந்தையும்; 'இன்பமாக வாழ்ந்தவர்கள் அடையும் புகழ்' என்று கவிஞர் இராமலிங்கனாரும்; 'இன்புற்றவராய் வாழ்கின்றவர் எய்தும் செல்வச் சிறப்பு' என்று காலிங்கரும்; 'இன்பமுடன் வாழ்பவரின் மதிப்பு (ஸானந்த் ஜீவன் வ்யதீத் கர்னே வாலோங்கா கௌரவ்) என்று இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராசு நாயுடுவும் கொண்டுள்ளனர்.

இன்பம் என்பதை இல்லற இன்பமாக்கி, ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் பேரறிஞர் எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, 'மண இன்ப நுகர்பவர் அடைந்துள்ள மேன்மை' [1] என்று கூறினூர்.

இன்பத்தை மேலுலக இன்பமாக்கி, 'மேல் உலகத்தில் அனுபவிக்கும் இன்பம்' (பரலோகத்தில் அனுபவிக்குந்த ஆனந்தம்) என்றூர் மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம்.

இன்புற்றூர் என்பதில், இன்பு என்பதை இவ்வுலக இன்பமாக்கி, சிறப்பை மேலுலக இன்பமாக்கி, 'இல்வாழ்க்கையில் இன்பத்தை அனுபவித்தவர்கள் மறுமையில் அடையும் பேரின்பமும்' என்று புலவர் ந, சி. கந்தையாவும், 'இல்வாழ்க்கைக்கண் நின்று இன்ப நுகர்ந்து அதன் மேல் துறக்கம் சென்றெய்தும் பேரின்பத்தினை' என்று பரிமேலழகரும் பொழிப்புரைத் துள்ளனர். அத்துடன் பரிமேலழகர் 'இல்

1. The excellence attained by the conjugal employers

வாழ்க்கைக்கண் நின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடும் கூடி இன்புற்றார் தாம் செய்த வேள்வித் தொழிலால் தேவராய் ஆண்டும் இன்புறுவராதலின் இன்புற்றார் எய்தும் சிறப்பு என்றார். தவத்தால் துன்புற்று எய்தும் துறக்க இன்பத்தினை ஈண்டும் இன்புற்றெய்துதல் அன்பாலன்றி இல்லை என்பதாம்' என்று விளக்கவுரையும் கூறினர்.

வேள்விப் பயன் துறக்கம், வீடன்று என்பதையும், துறக்கம் வேறு, பேரின்ப வீடு வேறு என்பதையும், பரிமேலழகர் தாமே பிறவிடங்களில் குறித்தவராயினும், வேள்விக் கருத்துப் புகுத்தும் ஆர்வத்தில், அவர் அதை இங்கே மறந்துவிடுகிறார் என்பது காணலாம்.

'இப் பிறப்பின்கண் உலகத்து இன்பமுற்றாராய் அதன்மேற் சிறப்பு எய்துவர்' என இதே சொற்பொருளை முற்பிறப்புப் பிற்பிறப்புக் கருத்தாகக் கூறினர், மணக்குடவர். சொல்லும் பொருளும் இங்கே பரிமேலழகரதே யாயினும் கருத்து மிகவும் வேறுபடுவதாகும். இங்கே அவர் (வரும் தனிக் குறிப்புப் பகுதி காண்க) 'முன் பிறப்பில் செய்த அன்பு, மறு பிறப்பில் இல்லற இன்பமும் அத்துடன் (வேறொரு பிறப்பில்) துறக்க இன்பமும் தரும்' என்கிறார்.

அன்பு செய்தலை முற்பிறப்புக்களிலாக்கி, மனிதனாகப் பிறக்கும் பெரும் பேற்றையே அது தொடர்ந்த இப் பிறப்பின் பயனாக்கிக் கூறுகிறார், பரிதியார். 'எழுபத்து நான்கு நூறாயிரம் (யோனி) பேதத்தில் பிறவாமல் மானிடயாக்கையிலே பிறந்த தன்மை சென்ம சென்மங்களிலே தினையத்தனை அன்புண்டான பலன்' என்பது அவர் பொழிப்புரை. 'இன்புற்றார் எய்தும் சிறப்பு' என்பதை அவர் எவ்வாறு 'மானிடனாய்ப் பிறத்தல்' என்று கொண்டார் என்பது விளங்கவில்லை.

'பேரின்பமும் இவ்வுலக இன்பமும் இல்லற வாழ்வில் காதல், ஒழுக்கம் ஆகிய இரண்டாலும் ஏற்படும் பலன்' 1

1. They say that the felicity of heaven and the happiness (of the earth) are the fruits of virtue and love (in the conjugal state)

என்று கருத்துக் கூறுகிறூர், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூ.

[4] 'அன்புற்றமர்ந்த வழக்கு' என்பதற்கு 'அன்புடை யாரால் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயன்' என்ருர் பரிமேலழகர். பேராசிரியர்கள் மு. வரதராசனுர், இலக்குவனுர், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்க சாமி, எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, இந்தி மொழிபெயர்ப் பாசிரியர் வெங்கடகிருட்டிணன் ஆகியோர் கருத்தும் இதுவே. ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூ மேலே காட்டியபடி 'இல்லறத்தில் அன்புடனும் ஒழுக்கத்துடனும் வாழ்ந்ததன் பயன்' என்ருர்.

'அனைத்துயிர்க்கும் பொருந்திய முறையில் மிக அன்பு செய்த அதுவே' என்று காலிங்கரும்; 'யாருக்கும் அன்பாக இருப்பதைக் கடைப்பிடித்து நின்ற தன்மையால்தான்' என்று கவிஞர் இராமலிங்கனுரும்; 'பிறரிடம் அன்புடையராய்ப் பொருந்தி இருந்த செயல்' என்று புலவர் குழந்தையும்; இவர்களை ஒத்தே மலையாள மொழிபெயர்ப்பாளர் வெண் ணிக்குளமும் உரை கூறிச் சென்றனர்.

'முற்பிறப்பின்கண் பிறர் மேல் அன்பு வைத்துச் சென்ற செலவானது' என்று மணக்குடவரும்; 'சென்மங்களிலே தினையத்தனை அன்புண்டான பயன்' என்று பரிதியாரும் கூறினர். பரிதியார் பொழிப்புரை மேலே தரப்பட்டுள்ளது.

[5] 'இது போகம் துய்ப்பர் என்றது' என்பது மணக் குடவரின் கருத்துரை.

'உலகத்தை இன்பமாக அனுபவித்துப் புகழ்பெற்றவர் களுடைய சிறப்பெல்லாம் அவர்கள் அன்பைக் கடைப் பிடித்து நடந்துகொண்ட காரணத்தினுல்தான்' என்பது கவிஞர் இராமலிங்கனுரின் பொழிப்புரை.

'அறமெனப் பட்டதே இல்வாழ்க்கை' என வள்ளுவ வாசகத்தையும் குறட்பாக் கருத்து விளக்கமாகக் கவிஞர் கருத்துரையில் தருகிறூர்.

'லோகத்தில் அன்புற்று ஜீவிச்சதின் பலம்
லோகத்தில் ஆளுமா னந்தம்'

என்பது மலையாள மொழிபெயர்ப்பாசிரியரின் மலையாளக் குறட்பாப் போலியாகிய மொழிபெயர்ப்புக் கவிதை.

[6] இக் குறட்பாவில் பலரும் வெள்ளைப் பொருளே காண முடிகிறது. அதையும் கோப்பாகக் கண்டவர் சிலரே என்பது காணலாம். முந்திய குறட்பாவில் (73) உயிர் மலர்ச்சிக் கொள்கைக்கு அணுக்கமாகி வந்துள்ள உரையாசிரியர்கள்கூட, இதில் உயிர் மலர்ச்சிக் கொள்கை அணுகி நற்பொருள் காணவில்லை. ஆயினும் அன்பைச் சமுதாயப் பண்பாகக் காலிங்கர் முதலியோரும், மறுபிறப்புக் கோட்பாடாக மணக்குடவரும் பரிதியாரும் விளக்க முற்பட்டுள்ளனர். இவர்களும், 'வாழ்க்கை நெறியின் பயன்' என்று கூறிய பரிமேலழகரும் பல கூறுகளில் இம் மணிவிளக்கவுரை நோக்கித் திரும்பியுள்ளனர் என்னலாம்.

76. இல்லறம் துறவறம் ஆகிய இரு வகை அறங்களுக்கு மட்டுமேயன்றி வீர வாழ்வாகிய மறத்துக்குக்கூட அன்பே அடிப்படை.

[2]அறத்திற்கே அன்புசார்பு என்ப [1]அறியார்;
[3]மறத்திற்கும் அஃதே துணை.

பொ-ரை: [1]பகுத்தறிவற்றவர்கள் [2](இல்லறம் துறவறம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய) அறம் ஒன்றுக்கே அன்பு அடிப்படைப் பண்பு ஆகும் சார்பு உடையது என்று கூறிவிடுவார்கள். [3](உண்மை யாதெனில், அறத்துக்கு மட்டுமன்றி) வீர வாழ்வாகிய மறத்துக்கும் (அது சார்ந்த ஆட்சிக்கும் சமுதாய அமைதிக்கும்) அந்த அன்பே தக்க பாதுகாப்பு ஆகும்

(என்பது மெய்யறிவாளர்கள் கண்டுணர்ந்த உண்மை ஆகும்).

க-ரை: அறம் இரு வகை: பொதுவறமாகிய இல்லறம், சிறப்பறமாகிய துறவறம். ஒன்று குடும்பத்தில் நின்று சமுதாய இனவாழ்வு நோக்கிய அற வாழ்வு. மற்றது சமுதாயத்தில் நின்று இனமும் குடும்பமும் நோக்கிய இன்ப, பேரின்ப வாழ்வு. முதலது காதலன்பு அடிப்படையானது, பின்னது அன்பருள் அடிப்படையானது. இங்ஙனம் அறமும் இன்பமும் மட்டும் அன்புச் சார்பானவை என்பதைப் பகுத்தறிவற்ற பொது அறிவின்மாக்களும் அறிவர். ஆனால் இவற்றைச் சமுதாய வாழ்வில் நிலைநிறுத்தப் பாடுபடும் மற வாழ்வு அல்லது வீர வாழ்வும், அதனோடியைந்த அரசியல் வாழ்வும், சமுதாய வாழ்வும் ஆகிய மூன்றுமடங்கிய பொருள் வாழ்வுகூட, அதே அன்பை அடிப்படைப் பண்பாகக் கொண்ட வாழ்வே யாகும். இதை உணர்ந்தவர் இன அறிஞரும் மெய்யறிவாளரும் ஆகிய இன மேலோர் ஆவர்.

இலக். கு: அவாய் நிலையான ஒரு முடிபு வாக்கியத்துடன் சேர்ந்து, இக்குறட்பாவில் கூற்று வாக்கியங்கள் இரண்டை உள்ளடக்கிய இரண்டு இணை வாசகங்கள் உள்ளன. அவாய்நிலைப் பகுதி உள்ளடங்க இதன் சொற்கள் நான்கு.

அவையாவன:

[1] முதலாவது இணைவாசகம்:

1. அறியார் [இது முதலாவது இணை வாசக எழுவாய்].

2. 'அறத்திற்கே அன்பு சார்பு' என்ப [இது முதலாவது இணை வாசகப் பயனிலை].

இந்த முதலாவது இணைவாசகப் பயனிலையில் 'என்ப' என்பதன் செயப்படுபொருளாக, 'அறத்திற்கே அன்பு சார்பு' என்பது முதல் கூற்று வாக்கியமாக அமைந்தது.

[2] இரண்டாவது இணை வாசகம்:

1. (அறிந்தார்) [இது இரண்டாவது இணைவாசக எழுவாய்].

2. 'மறத்திற்கும் அஃதே துணை' (என்ப) [இது இரண்டாவது இணை வாசகப் பயனிலை].

இந்த இரண்டாவது இணை வாசகப் பயனிலையில் அவாய்நிலையாய் வரும் 'என்ப' எனும் வினைமுற்றின் செயப்படுபொருளாக 'மறத்திற்கும் அஃதே துணை' என்பது இரண்டாவது கூற்று வாக்கியமாக அமைந்தது.

இக் குறட்பாவில் வன்மையும் மென்மையும் எடுப்பும் படுப்பும், காய்ச்சீரும் மாச்சீரும் விரவி வந்தன. அறத்திற்கே, அறியார், மறத்திற்கும் ஆகிய மூன்று சீர்களும் வல்லோசையுடையன. மீந்தன, மென்மை அல்லது இடைமை அல்லது உயிர்மை, ஓசைகள். அறத்திற்கே, என்ப என்ற இரு சீர்களே எடுத்திசைத்தன. மீந்தன, படிப்படியாகப் படுத்தும் நலிந்தும் இசைத்தன. இதுபோலவே அறத்திற்கே, மறத்திற்கும் ஆகிய இரு சீர்களும் காய்ச் சீர்களாகவும், அன்பு சார்பு என்ற சீர் நீண்ட விளச்சீர் ஆகவும், மீந்த சீர்களில் தனி நிரையசை மலர் வாய்பாட்டுச் சீரான கடைச் சீர் தவிர ஏனையவை மாச்சீர்களாகவும் அமைந்தன.

எடுத்திசைத்த இரு சீர்களில் அறத்திற்கே ஏற்றிசைப்பாய், இறுதி அசையே முழுதும் எடுத்திசைத்தது. 'என்ப' என்பதில் முதல் அசை எடுத்திசைத்து, அடுத்தது படுத்திசைத்தது. மற்றச் சீர்களில் 'அறியார்' ஒன்று மட்டுமே ஏற்றிசைப்பாய், இறுதி அசை

அழுத்தம் பெற்றது. மற்றவை யாவும் முதலசையிலேயே அழுத்தம் பெற்றன.

அன்பு சார்பு என்ற சீர் தற்காலத் தமிழ் இலக்கணப்படிதான் கூவிளமாகும். தொல்காப்பிய இலக்கண மரபின்படி 'நேர்பு நேர்' ஆகி உரியசைச் சீராய், கிட்டத்தட்டக் காய்ச்சீர் போன்ற ஓசையுடையதாதல் காணலாம்.

அறியார் 'அறத்திற்கே அன்பு சார்பு' என்ப என்பது முதல் இணை வாசகம்.

அறியார் என்பது எதிர்மறைப் பலர்பால் வினையாலணையும் பெயர். 'அறி' வினைப் பகுதி. 'ஆர்' பலர்பால் விகுதி. 'ஆ' எதிர்மறை இடைநிலை. எதிர்மறை இடைநிலை முன் விகுதியின் 'ஆ'காரம் கெட்டது. இப்பெயர்ச்சொல் முதல் இணை வாசகத்தின் எழுவாயாய், 'என்ப' என்ற வினைமுற்றின் வினை முதலாகவும் 'என்ப' என்பத னுடன் முடியும் தொகைநிலை வினைமுற்றினைப் பயனிலையாகக் கொண்ட எழுவாயாகவும் வந்தது.

'அறத்திற்கே அன்பு சார்பு' என்ப என்பது அதன் ஈற்றுச் சொல்லாகிய 'என்ப' என்பதனை ஒப்ப வினைமுற்று. இது முதல் இணைவாசகத்தில் 'அறியார்' என்பதை எழுவாயாகக் கொண்ட பயனிலையாக நின்றது.

என்ப என்பது பலர்பால் வினைமுற்று. இதில் 'ப' பலர்பால் விகுதி. இது இடைநிலை பெறுமலே காலப் பொதுமை காட்டுவது. இவ் வினைமுற்று மேலே 'அறியார்' என்பதனை வினைமுதலாகக் கொண்டு; 'அறத்திற்கே அன்பு சார்பு' என்ற கூற்று வாக்கியமாகிய தொகைநிலைப் பெயரைச் செயப்படுபொருளாகக் கொண்டது.

'அறத்திற்கே அன்பு சார்பு' என்பது தனி நிலையில் ஒரு முழு வாசகம். ஆனால் இது முதலாவது இணை வாசகத்தில் 'என்ப' என்பதன் செயப்படுபொருளாக, ஒரு பெயர் போலத் தொகையாய் வந்தது.

இத் தனி நிலை வாசகத்தில் 'அன்பு' எழுவாய்; 'அறத்திற்கே சார்பு' என்பது பெயர்ப் பயனிலை.

அன்பு பெயர்ச்சொல், பண்புப் பெயர். இது கூற்றுத் தனி நிலை வாசக எழுவாயாய், அறத்திற்கே சார்பு என்பதனைப் பயனிலையாகக் கொண்டு வந்தது.

சார்பு என்பது பெயர்ச்சொல், பண்புப் பெயர். இது பெயர்ப் பயனிலையாய். அன்பு என்பதைப் பயன் முதலாகக் கொண்டது.

அறத்திற்கே என்பதில் ஏகாரம் பிரிநிலைப் பொருளுடையது; அறத்துக்கு மட்டுமே யன்று என்ற பொருள் சுட்டி, இரண்டாம் வாசகத்திலுள்ள மறத்திற்கும் என்பதை எச்சமாக அளாவி நின்றது. இது மட்டும் அன்று. இங்கே ஏகாரம் முற்றுப் பொருளும் உடையது. அறம் முழுமைக்குமே, இல்லறம், துறவறம் என்ற அதன் இரு வகைகளுக்குமே என்பது அதன் குறிப்பு ஆகும். அறத்திற்கு என்பது நான்காம் வேற்றுமைப் பெயர். அறம் பெயர்ச்சொல், 'கு' நான்காம் வேற்றுமை உருபு; இடையே வந்த 'இன்' சாரியையில் ஈற்று னகரம் உருபின் வலி முன் வன்புணர்ப்பாய் றகரமாகத் திரிந்தது. பெயருடன் அத்துச் சாரியை இணைந்து, அதன் முன் பெயரீற்று மகரமும், சாரியை முதலுயிரும் கெட்டன. அத்துச் சாரியையின் ஈற்று உகரமும் இன் சாரியையின் உயிர் முன் கெட்டது.

இவ் வேற்றுமைப் பொருளும் ஏகாரப் பொருளும் சார்பு என்ற பெயர்ப் பயனிலை தழுவித் தொகைப்பட்டன.

[அறிந்தார்] 'மறத்திற்கும் அஃதே துணை' [என்ப] என்பது இரண்டாவது இணை வாசகம். இதில் எழுவாய்ப் பகுதியான 'அறிந்தார்' என்பதும் பயனிலைப் பகுதியின் வினைக்கூறான 'என்ப' என்பதும் அவாய்நிலையாக வருவிக்கப்பட்டன.

அறிந்தார் என்பது 'அறி' என்ற வினைப் பகுதி யடியான பலர்பால் வினையாலணையும் பெயர். 'ஆர்' அப் பலர்பால் விகுதி. தகர மெய் இறந்த கால இடைநிலை. மற்றொரு தகர மெய் சந்தியாக அதன் முன் வந்து விகாரத்தால் நகரமாகத் திரிந்தது. இப் பெயர்

இரண்டாவது இணை வாசகத்தில் 'என்ப' என்ற முடியும் தொகை நிலை வினைமுற்றைப் பயனிலையாகக் கொண்டு தோன்றா எழுவாயாக நின்றது.

'மறத்திற்கும் அஃதே துணை [என்ப]' என்பது அதன் ஈற்றுச் சொல்லான 'என்ப' என்பதனை ஒப்ப, வினைமுற்று. இது இரண்டாம் இணை வாசகத்தின் பயனிலையாய், அறிந்தார் என்பதைத் தோன்றா எழுவாயாகக் கொண்டு வந்தது. 'என்ப' என்ற பயனிலையின் வினைப் பகுதியும் தோன்றா வினையே.

என்ப என்பதன் இலக்கணம் முன்னைய 'என்ப' என்பது போன்றதே. இது 'அறிந்தார்' என்பதை வினை முதலாகவும், 'மறத்திற்கும் அஃதே துணை' என்ற கூற்று வாசகத்தை ஒரே தொகையான பெயர்ச் சொல்லாகவும் கொண்டு அதையே செயப்படுபொருளாகவும் பெற்றது.

'மறத்திற்கும் அஃதே துணை' என்பது தனிநிலையில் ஒரு முழு வாசகம். ஆனால் இது இரண்டாவது இணை வாசகத்தில் 'என்ப' என்பதன் செயப்படுபொருளாக, ஒரு சொல் போலத் தொகையாய் வந்தது.

இத் தனிநிலை வாசகத்தில் அஃதே என்பது எழுவாய். 'மறத்திற்கும் துணை' என்பது பெயர்ப் பயனிலை.

அஃதே என்பதில் ஏகாரம் தேற்றப் பொருளும் பிரிநிலைப் பொருளும் கொண்டது. கட்டாயம் துணை இதற்கும் துணை, வேறு எதுவும் துணையன்று என்பன அப் பொருள்கள். அஃது என்பது அது என்பதன் பிறிது வடிவம். தொல்காப்பிய மரபில் பெயர் வடிவமே ஆய்தமுடையதாகவும் வருமொழியில் உயிர் முன் ஆய்தம் தங்கியும், மெய்ம்முன் கெட்டும் வரும் என்பர். ஆனால் அது என்ற வடிவம் ஒன்றே தற்கால வழக்கில் பெயர் வடிவாய் வழங்குவதால், உயிர் முன் ஆய்தம் வரலாம் என்று நாம் தமிழில் தற்கால விதி அமைத்துக்கொள்ளலாம். தொல்காப்பியருக்கு முற்பட்ட திருவள்ளுவர் கால இலக்கணம் எது என்பது நம்மால் இன்று துணியக்கூடவில்லை; மேல் ஆய்வாராய்வுக்குரியது.

அஃது அல்லது அது என்பது படர்க்கை ஒன்றன்பால் பெயர். 'து' அப்பால் விகுதி என்றும், 'அ' அல்லது 'அவ்' சுட்டுப் பகுதி என்றும் கூறலாம். ஆய்தத் தோற்ற நிலையின் வரலாற்று விவரம் மேலே கூறப்பட்டது. 'அவ்' என்ற வடிவுடன் 'து' சேர்ந்தே புணரியல் இலக்கணப்படி 'அஃது' தோன்றியது என்பதும் பொருந்தும்.

இது கூற்று வாசகத்தில் 'துணை' என்பதைப் பெயர்ப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

துணை என்பது பெயர்ச்சொல், இங்கே பெயர்ப் பயனிலையாகி 'அஃதே' என்பதைப் பயன் முதலாகக் கொண்டது.

மறத்திற்கும் என்பதில் உம்மை எச்சப்பொருளும் மிகைப் பொருளும் கொண்டது. அறத்திற்கே யன்றி மறத்திற்கும் என்று இது பொருள் சுட்டியுள்ளது. மறத்திற்கு என்பது நான்காம் வேற்று மைப் பெயர். 'கு' அவ் வேற்றுமை உருபு. இதன் முன் வந்த இன் சாரியையின் ஈற்று னகரம் உருபின் வலி முன் வன்புணர்ப்பாய் றகர மாயிற்று. மறம் என்ற பெயர் வடிவம் அத்துச் சாரியை பெற்று, பெயரின் ஈற்று மகரமும் சாரியையின் முதல் அகர உயிரும் கெட்டன. அத்துச் சாரியையின் ஈற்று உகரம் இன் சாரியை உயிர்முன் கெட்டது.

இரண்டாவது இணை வாசகத்தை, 'மறத்திற்கும் அஃதே துணை என்பது அறிந்தார் கண்ட மெய்ம்மை' என அவாய்நிலை புணர்த்துக் கொள்ளுதலும் சிறப்புடையதே யாகும். இலக்கணப் புணர்ப்பு எது வாயினும் பொருள் தொனி இதுவே.

•

வி - ரை : அற வாழ்வின் மழைவளத்துக்குரிய பயிர்வளப் பண்பான அன்புடைமையின் சால்பு முப்பால் வாழ்வுகளுட னும் தொடர்புடையதாயினும்; இக் குறட்பாவுடன் முடி யும் அதிகாரத்தின் மூன்று குறட்பாக்களும் [74-76] அதன் பொருள் வாழ்வு அல்லது சமுதாய வாழ்வுத் தொடர்பே சிறப்பிக்கின்றன. அவ் வழி இக் குறட்பா பொருள் வாழ்வின்

இரு கோடிக் கூறுகளான அற வாழ்வு அதாவது பொதுவற வாழ்வு, இன்ப வாழ்வு அதாவது சிறப்பற வாழ்வு ஆகிய வற்றுக்கு மட்டுமன்றி, அதன் மையக் கூறான வீர வாழ்வுக்கும் அரசியல் வாழ்வுக்கும்கூட அன்பே அடிப்படைப் பண்பாகும் என்பது விதந்துரைத்தது.

திருவள்ளுவர் முப்பால் வாழ்க்கைத் தத்துவத்தை, அவர் உள்ளம் கண்டபடியே நாமும் காணும்படி படம் பிடித்துக் காட்டவல்ல வள்ளுவத் தத்துவக் குறட்பாக்களில் இது ஒன்று. அம் முறையில் இது அதிகாரத்தின் முதற் பகுதியாகிய இன்ப வாழ்வுக் கூறு மீது ஒளி வீசி, பிற்பகுதியாகிய அற வாழ்வுக் கூற்றுக்கு வாயிலாகி, அவற்றுடனமையாமல் பொருட்பால் பகுதி மீதும், திருக்குறளேட்டின் பொருட்பால் பகுதி முழுவதன் மீதும் விளக்கப் பேரொளி பரப்புகின்றது.

அறியார் என்பது பொருள்களின் நன்மை தீமை திரித் தறியாதவர், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று மேலீடாகக் கருதும் வெள்ளை யறிவுடையோர், பகுத்தறி வற்றவர்' என்று பொருள்படுவதாகும்.

மூடர் என்றோ அறிவிலி என்றோ உடன்பாட்டில் அல்லது வற்புறுத்து எதிர்மறையில் கூறாமல், அறியார் என்று செயல் எதிர்மறையாக மட்டுமே இங்கே கூறப்பெற்றதனால், அறி யார் ஆழ்ந்த அறிவற்றவர் என்று மட்டுமே பொருள் தருவ தாகும். ஏனெனில் 'அறத்திற்கே அன்பு சார்பு' என்று கூறு வது தவறான உண்மையுமன்று, தாழ்ந்த உண்மையுமன்று. ஏனெனில் இன்றைய உலகில்கூட அறம் வெற்றாரவார வினை முறை சார்ந்தது என்பாரும்; சாதி வருண ஆசாரங்கள் சார்ந்தது என்பாரும்; ஈகை என்பாரும்; மேலுலகப் பெரு நன்மைக்காக இவ்வுலகில் செய்யப்படும் சிறு நன்மை என்று வாணிக முறையில் கருதுவாரும் உண்டு. இக் குறட்பாவின் முற்பகுதிக் கருத்து இவற்றைப் பார்க்கிலும் எவ்வளவோ மேம்பட்டது. ஆயினும் குறட்பாவின் பிற் பகுதி கூறும் வள்ளுவ வானுயர் உண்மை நோக்கியே, இங்கு முற்பகுதி மெய்ம்மைக் கூற்றுக்கு உரியவர் அறியார் என்று கூறப் பட்டனர்.

அறியார் என்ற சீர் ஏற்றிசைப்பாய், முதலசை படுத்தும், பின்னசை சற்று எடுத்தும் வந்தது. இவ்வோசையே 'அறி' என்று பகுதியில் அழுத்தமின்மை மூலம் அறியாரை ஏளனம் செய்தது—அத்துடன் இவ் ஓசைக் குறிப்பே அடுத்த வாக்கியத்தில் அறிந்தார் என முன்னசை எடுத்தும் பின்னசை படுத்தும் வந்து அறிந்தாரைப் பாரித்துரைக்கும் சொல்லை அவாய் நிலையாக வருவித்து உதவிற்று.

அன்பு என்பது இங்கே அன்பு ஈன் குழவியாகிய அருளையும் உள்ளடக்கிய அடிப்படை அன்புப் பண்பு ஆகும்.

அன்பு, அருள் ஆகிய இரண்டு பண்புகளும் திசைமாறிய பண்புகளானாலும் உண்மையில் ஒரே அடிப்படை அன்புப் பண்புதான். ஏனெனில் அவை இரண்டுமே காதலில் கருநிலையில் தொக்கு நின்று விரிமலர்ச்சியுறும் பண்புகளாகும். இவற்றுள் எது முந்தியது என்றுகூடக் கூற முடியாத நிலையில், அவை குடும்ப வாழ்வில் மாறி மாறிப் பின்னி வருவன ஆகும். தந்தை தாயர் ஒருவர்மீதொருவர் கொண்ட காதலே பழுத்து அன்பாகி, பிள்ளைகள் மீதும் படர்கின்றது. இது மக்கட் பற்று, அன்புடைமையின் முதற்படி, முதல் அலை. மக்கள் ஒருவருடன் ஒருவர் கொள்ளும் பாசமும், உடன் பிறந்தான் உடன் பிறந்தானுடனும், உடன்பிறந்தாளுடனும்; உடன் பிறந்தாள் உடன்பிறந்தானுடனும், உடன்பிறந்தாளுடனும் கொள்ளும் உடன்பிறப்புப் பாசம் இதன் இன்னோரலை. தாய் வழி தந்தை வழி உறவினருடன் தாய் தந்தை பிள்ளைகள் கொள்ளும் பாசம் மூன்றும் அலை. இப்படியாக அன்பு சமுதாயத்தில் பரவுகிறது. ஆனால் இத்தனையும் காதலிலிருந்து பிறந்த பாசம், குருதிப் பாசமாகிய அன்புப் பாசம் மட்டுமே. இவை எதுவும் காதல் பாசம் அல்ல. ஏனெனில் காதல் பாசம் குருதி எல்லை கடந்து குதிக்கும் பாசம் ஆகும். குருதிப் பாசமாகிய அன்பின் எல்லை கடந்து, அதாவது அதன் திசை கடந்து, அவ் வெல்லைக்கப்பாலுள்ள ஒருயிரை நாடிச் செல்லும் எதிர் திசைப் பாசமாகிய காதல், அன்புப் பண்போடு ஒத்த பாசமன்று, அருட்பண்போடு ஒத்த பாசமாகும். ஏனெனில் அது குருதி யெல்லை தாண்டி ஒருவர் மீது பாயும் பாச

மன்று. அந்த ஒருவரின் குருதி உறவெல்லை முழுவதிலுமே விரிவுற்றுச் செல்வதாகும்.

தமிழ்ப் பண்பாட் டடிப்படையிலும், அதுபோலவே உலக முழுவதும் அளாவிய பண்டை மக்களினப் பண்பாட் டடிப்படையிலும், காதலாலேயே உண்டாகும் இந்த இரு வகை உறவும்—அன்புறவும், அருளுறவும்—பங்காளி உறவு என்றும், கொண்டான், கொடுத்தான் உறவு என்றும் வேறு படுத்தப்பட்டுள்ளது காணலாம். பங்காளி உறவுக் குழுவே நாளடைவில் கோத்திரம் என்றும், கொண்டாள் கொடுத் தான் உறவுக் குழுவே நாளடைவில் குலம் என்றும் சாதி என்றும் இந்தியாவில் வழங்கின.

இந்தியாவில் மட்டும் சாதி முறைகள் இருப்பதும்' உலகில் அது இல்லாமையும் வரலாற்றாசிரியர்களை முற்றிலும் குழப்பி உண்மை காணாது செய்துவிட்ட ஒரு செய்தி ஆகும். உண்மை யாதெனில் உலகெங்கணும் கோத்திரம், சாதி என்ற இரு பிரிவுகளும் முற்றிலும் குலைவுற்றுவிட்டன. குடும்ப அடிப்படையாக, அன்படிப்படையாக மனித சமுதா யமும்; சமுதாய அடிப்படையாக, காதலடிப்படையாக மனித இனமும் அமைந்தன என்ற வள்ளுவ மெய்ம்மையை மறந்து, தனி மனித அடிப்படையே மனித சமுதாயமும் இனமும் என்ற தப்பெண்ணமே உலகெங்கும் கோத்திர சாதி மறைந்துவிட்டதற்குரிய காரணப் பண்பு ஆகும். இந்தியா வின் நிலையோ இன்னும் குழப்பமானது. ஏனெனில் இங்கே இதே குழப்பம் அரைக் குழப்பமாகி, கோத்திரம் சில இடத் திலும், சாதி சில இடத்திலும், இரண்டும் சில இடத்திலும் குலைவுற்று, அரைகுறையாக இடிந்து விழுந்த மாட கூட கோபுரங்கள் போல், பழங் குட்டிச் சுவர்களாகக் காட்சியளிக் கின்றன.

குறுகிய காதல் அதாவது ஒருவன்-ஒருத்தி என்ற காதல் மீது அமையும் நெறியே காதல் நெறி. அதுதான் பொதுவற மாகிய இல்லறத்தில் குடும்பத்தில் அன்பாகத் தோன்றி, சமுதாயத்தில் பாசமாக், பண்பாகப் பரவி, இனத்தில் அருளாகவும் இன்பமாகவும் படர்கிறது. அகன்ற காதல்

அதாவது ஒருவனும் சரி, ஒருத்தியும் சரி, நேரடியாக இனத்துடன் காதலிலீடுபட்டு, ஒருவர் இனத்துக்காக, இனம் ஒருவர்க்காக [தற்காலப் பொதுவுடைமைக் கருத்து முறையில் எல்லாரும் ஒருவருக்காக, ஒருவர் எல்லாருக்குமாக] என்று வாழும் வாழ்வு நாடும் இனக் காதல் வாழ்வே அருள் வாழ்வு, துறவறம், பேரின்ப வாழ்வு!

அன்பு இக் குறட்பாவில் சிற்றின்பக் காதலிலிருந்து எழும் சிற்றன்பையும், பேரின்பக் காதலிலிருந்து எழும் பேரன்பாகிய அருளையும் ஒருங்கே உள்ளடக்கிக் குறித்தல் இவ்வகையிலேயே ஆகும்.

அறத்திற்கே என்பதிலும் அறம் என்ற சொல் பொதுவறமாகிய இல்லறம், சிறப்பறம் ஆகிய துறவறம் ஆகிய இரண்டையும் குறித்து வந்ததாகும்.

இல்லறத்தையும் துறவறத்தையும் ஒருங்கே குறிக்கத் தமிழில் அறம் என்ற ஒரு சொல் உண்டு. 'அறம்' என்ற சொல்லைச் சேர்த்து இரண்டையும் தமிழில் குறிக்கவும் முடியும். இந்த இரண்டு பண்புகளையும் நாம் சமஸ்கிருதத்திலும் பார்க்கிறோம். இல்லறம் [கார்ஹஸ்த்ய தர்மம்], துறவறம் [ஸந்யாஸ தர்மம்] என்று அம் மொழியிலும் இரண்டையும் அறம் [தர்மம்] என்ற ஒரே சொல்லுடன் சேர்த்துக் குறிக்கலாம்.

தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் மட்டுமுள்ள இந்தப் பண்பு உலகின் வேறு எந்த மொழிக்கும் இன்னும் ஏற்படவில்லை—அறம் என்ற சொல்லோ, அதற்குரிய கருத்தோ உலகின் வேறு எந்த மொழிகளிலும் இன்னும் அமையவில்லை என்பது குறித்து நோக்கத் தக்கது.

இந்திய எல்லை கடந்து இன்னும் பரவி விடாத வள்ளுவப் பண்பு, அந்த இந்திய எல்லையிலும் இரண்டாயிர ஆண்டுகளாக மறக்கப்பட்டு வரும் ஒரு பண்பு ஆகும். இதற்குத் திருவள்ளுவர் காலத்திலேயே வழங்கப்பட்டுவிட்ட இல்லறம், துறவறம் என்ற சொற்களே காரணமாய் அமைந்தன என்னலாம். ஏனெனில் 'இல்லறம் என்பது பொதுவறம்; துற-

வறம் என்பது சிறப்பறம்' என்ற கருத்து. புத்தர்பிரான் கால முதலே, இரண்டாயிர மூவாயிர ஆண்டுகளாகப் படிப்படி யாக மறக்கப்பட்டு வருவது காண்கிறோம். இதனால், பொது வறத்துக்கு மூலமான தன்னலம் தற்பற்று தன்முனைப்பு ஆகியவற்றைத் துறந்ததே துறவறம் என்ற வள்ளுவ மூலக் கருத்துச் சிறிது சிறிதாக மறைந்து, இல்லறத்தையோ இன் பத்தையோ துறந்து, தன்னலத்தையும் தற்பற்றையும் தன் முனைப்பையும் மட்டுமே பெருக்கிக் கொண்ட நெறி துறவறம் என்ற கருத்துப் படர்ந்தது.

துறவறம் என்ற சொல்லுடன் இந்த இழிபுற்ற கருத்து இன்று உலக முழுவதும் பரவிவிட்டது என்று கூறத் தேவை யில்லை. புத்த சமண, சைவ வைணவ, கிறுத்துவ இசுலாமிய மரபுகள் யாவும் இதற்குச் சான்று பகர்கின்றன. ஆனால் இதுவே உலகெங்கும் இயல்பாக என்றுமுள்ள கருத்து என்று பலர், பல அறிஞர், எண்ணியிருப்பது சரியன்று என்பதை இந்தியப் பொது மரபில் வேத கால வழக்கும், சீன நாட்டில் கன்பூசியஸ் கால வழக்கும், மேலையுலகில், கிரேக்க ரோம நாடுகளில், கிறித்துவ இசுலாம் சமயங்கள் புகுவதற்கு முற் பட்ட வழக்குகளும் காட்டும். ஏனெனில் துறவறம் என்ற பிற்காலம் போலித் துறவு மரபோ, வேறு எத்தகைய துறவு மரபோ இத் தொல்பழங்காலத்தில் உலகெங்குமே கிடை யாது.

வள்ளுவ மரபில் உலகெங்கும் பரவியுள்ள மனித நாக ரிகப் பண்பின் ஒரு கூறாக அவ் வள்ளுவ மரபின் ஒரு சறுக்கலே இக்கால உலகின் போலித் துறவைத் தோற்றுவித்துள்ளது என்று காணலாம்.

அறத்திற்கே என்று இக் குறட்பாவில் முற்றுப் பொருள் ஏகாரம் தொடுக்கப்பட்டதன் முழுக் குறிப்பு இதுதான்: அறம் என்பது இல்லறம் மட்டும் குறிப்பதன்று என்பதை வலியுறுத்துவதற்கே திருவள்ளுவர் அறத்திற்கு என்னாமல், அறத்திற்கே என்றார் என்பது தெளிவு. அறத்திற்கே என்ற சீரில் ஏகாரம் முழு இசைப்புப் பெற்றதும் இதனை அழுத்த முறக் காட்டுகின்றது. இன்றைய பேச்சு வழக்கில்கூட, பிரிவு

நிலை ஏகாரமும் எச்ச ஏகாரமும் எடுத்திசைக்காமல், முற்று ஏகாரமே எடுத்திசைக்கப் பெறுதல் காணலாம்.

இசைப்பின் குறிப்பால் சொற்கள் வேறுபடுவதை நாம் உலகில் எல்லா மொழிகளிலும் காணலாம். ஆனால் எல்லா மொழிகளையும் போலவே தமிழிலும் அது நெடுங்காலம் மறக்கப்பட்டு வந்துள்ளது. தமிழர் பேச்சு வழக்கை ஆராய்ந்தும், திருக்குறளை ஆராய்ந்துமே அதைப்பேரளவில் காணலாம்—உம்மை, ஏகாரம் ஆகியவற்றில் இசைப்புப் பண்பு உயிர் முக்கியத்துவம் உடையது. உலக மொழிகளிலும் தமிழிலும் உள்ள இப் பழம் பண்பை இன்று நமக்கு விளக்கும் மொழி சீனமே—தமிழோடொத்த பழமையுடைய அம் மொழி உலகும் தமிழகமும் இழந்துவிட்ட, இழந்து வருகிற அப் பண்பை முனைப்பாகக் காட்டுகிறது. தமிழில் ரகர றகரங்கள், னகர நகரங்கள், லகர ளகர ழகரங்களின் வேறுபாடு பொருளுக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுக்கு சீன மொழியில் எடுத்தல் படுத்தல் நலிதல் இசைப்பே பொருள் வேறுபாட்டுக்கு முக்கியத்துவம் உடையதாகும்.

சார்பு என்பது இக் குறட்பாவில் அடிப்படைப் பண்பு என்னும் சிறப்புப் பொருள் உடையது ஆகும்.

சார்பு ஓர் உறவு குறித்த சொல். ஆனால் இவ்வுறவு இருதிசை ஒத்த உறவன்று. ஒரு பொருள் இன்னொரு பொருளைச் சார்ந்திருக்கும்போது, சார்பு உடைய முதற் பொருள் சிறு பொருள். அச் சார்பை ஏற்றுக் கொள்ளும் இரண்டாவது பொருளே அடிப்படைப் பொருள். இதனாலேயே நாம் உயிர் கடவுளைச் சார்ந்திருக்கிறது என்று கூறலாம். கடவுள் உயிரைச் சார்ந்திருக்கிறார் என்று கூற முடியாது. மோடு தூணைச் சார்ந்திருக்கிறது என்று கூறலாம், தூண் மோட்டைச் சார்ந்திருக்கிறது என்று கூற முடியாது.

இக் குறட்பாவில் சார்பு என்ற சொல்லின் கருத்து அறம் அன்பைச் சார்ந்திருக்கிறது என்பதே—அன்பு அறத்தைச் சார்ந்திருக்கிறது என்பதன்று.

அறம் எவ்வளவோ பெரிது—இதனை இன்றும் எல்லா மொழியினரும் ஒப்புக்கொள்வர். ஆனால் அன்பு எவ்வளவு பெரிது என்பது இன்று உலகம் அறியாத கருத்து ஆகும்—திருவள்ளுவர் கருத்தே அது. ஏனெனில் எவ்வளவோ பெருமை உடைய அறம் அதனினும் பெருமை உடைய அன்பைச் சார்ந்தே வளர்கிறது.

சார்பு என்ற சொல் இக் குறட்பாவில் சார்புறவையும் குறிக்கவில்லை, சார்ந்த பொருளையும் குறிக்கவில்லை, சார்புக்கு அடிப்படையான பண்பே குறிக்கிறது.

சார்பு என்ற இச் சொல்லுக்கு இங்கே கூறப்பட்ட இலக்கணமும் பொருளும் பின்வரும் துணை என்பதற்கும் பேரளவு பொருந்துவதாகும்.

மறத்திற்கும் என்பதில் மறம் என்பது வீர வாழ்வு குறித்தது. இது அறத்திற்கு எதிரிணையாக வந்த குறிப்பால், வீர வாழ்வை மட்டுமன்றி, அது சார்ந்த அரசியல் வாழ்வையும், இரண்டும் சார்ந்த சமுதாயப் பண்பாட்டு வாழ்வையும், இம் மூன்றையும் சார்ந்த காதல் கற்பு வாழ்வுகளையும் ஒருங்கே குறிப்பதாகும்.

திருவள்ளுவர் வழக்கிலும் தமிழிலும் மறம் என்ற சொல் அறம் என்பதற்கு எதிரிணையான வழக்கன்றி, எதிர்மறையான வழக்கன்று. இதனால் அதன் வள்ளுவப் பொருளும் தமிழ்ப் பொருளும் வீரம், வீர வாழ்வு என்பது மட்டுமே. ஆனால் பிற்காலத்தார் எதிரிணைக்கும் எதிர்மறைக்கும் வேறுபாடு காணாமல், அதனை அறத்தின் எதிர்மறையாகக் கொண்டு, பழி, பாவ நெறி என்ற இழிபுப் பொருள் கொண்டுள்ளனர்.

திருவள்ளுவர் மற்ற எல்லாக் குறட்பாக்களிலும் மறம் என்பதை வீரம் என்ற பொருளிலேயே பயன்படுத்தியிருப்பதைக் கண்டும், உரையாசிரியர்கள் இக் குறட்பாவில் மறம் என்பதற்கு வீரம் என்று பொருள் கூறத் தயங்கியுள்ளதன் காரணம் அறிய முடியவில்லை.

மறம் என்பது வீரம் என்ற பொருளிலேயே, மறவர், வீரர் ஆகின்றனர். அதைப் பழியென்று கொண்டால், மறவர் என்பதன் பொருள் பழிகாரர் என்றாகிவிடும். தமிழகத்தில் தலை சிறந்த ஒரு வீர மரபினர், ஆண்ட மரபினர் மறவர். அவர்கள் நாடாகிய தென் பாண்டி வரலாற்றில் மறவர் நாடு எனப்படுகிறது. பழிகாரர் என்ற பொருள் பண்டு இச் சொல்லுக்கு இருந்திருக்க முடியாது என்பதை இது காட்டுகிறது.

தமிழகத்தின் மக்கட் சாதியினரையும் சாதிப் பெயர்களையும் இழிபுறுத்தும் வழக்கம் அணிமைக் காலத் தமிழ் வாழ்வின் கோளாறு ஆகும். மறவரோடு நெருங்கிய தொடர்புடைய வகுப்பினர் கள்ளர், அகம்படியர் ஆகியோர். மறவர் என்பதைப் பழிகாரர் என்று பொருள் கொண்டதற்கேற்ப, பிற்கால வழக்கில் கள்ளம் என்பதனைப் பொய், திருட்டு என்றும்; கள்ளர் என்பதைப் பொய்யர், திருடர் என்றும் கொள்ளத் தொடங்கியுள்ளனர். ஆனால் கள்ளம், களவு என்பதன் தமிழ்ப் பொருள் மறை [இரகசியம்] என்பதே தமிழர் வாழ்வில் மூன்று வகையான மறை உண்டு. ஒன்று சமயச் சார்பான உச்ச உயர் போதனை. இதற்குரியவர் மறையவர் என்ற அந்தணர் ஆவர். இரண்டாவது மறை காதல் வாழ்வுக்குரியது. இது கூறும் துறை களவுத் துறை, களவியல் என்று கூறப்பட்டது. மூன்றாவது மறை அரசியல் வாழ்வில் ஒற்றர்க்குரியது. கள்ளர் பண்டைத் தமிழரசரிடம் வேவு பார்த்த ஒற்றர் துறையின் மறவர்களே யாவர்.

கள்ளர், மறவர், அகம்படியர் மூவரும் இன்று ஒரு குலத்து முப் பிரிவினராக, முக்குலத்தோர் என்றே வழங்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. மூவரும் ஒரே வீர மரபினரே, கள்ளர் ஒற்றர் துறை அல்லது வேவுத்துறையினர். மறவர் காவல்துறை, படைத்துறை வீரர். அகம்படியர் அரண்மனை எல்லைக்குள்ளிருந்து பணி செய்யும் காவலர், காவல் வீரர். அகம்படி என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பொருள் அரண்மனை மேலார்[1] என்பதே. இந்த அகம்படித்

1. Chamberlain

துறையின் முதல்வரே வள்ளுவர் [உள்படு கருமத் தலைவர்] ஆவர். இவர் அரசரோடொத்த, அரசருக்குரிய சிறப்புக்கள் அனைத்துக்குமே உரிய பெருந் தலைவர் ஆவர் என்பதை எல்லா நாட்டு வழக்குகளும் குறிக்கும்.

வள்ளுவர் என்பதற்குரிய சமஸ்கிருதப் பெயர் [கஞ்சுகி] அவரும் வீரத் துறையினர் என்பதைக் காட்டுகிறது. ஏனென்றால் அந்தச் சமஸ்கிருதச் சொல்லின் பொருள் சட்டை அணிந்தவர் என்பதே. பண்டைத் தமிழர், இந்தியர் வாழ்வில் அரசரோ, பொதுமக்களோ, பெருமக்களோகூடச் சட்டை அணிவதில்லை. வீரர், காவலர், மெய்காவலர் மட்டுமே சட்டை அணிவது வழக்கம்.

மறம் என்ற சொல் வீரம் ஒன்றே சொற்பொருளாகக் குறிப்பதாயினும், வீரத்தின் அடிப்படையாகவே தண்டமும், நீதியும், ஆட்சியும், சமுதாய அமைதியும் நிகழ்கின்றன வாதலாலும்; மேற்கூறியபடி இங்கே மறம் என்பது அறத் துக்கு எதிரிணையாக அதற்கிசைந்த பண்புகள் யாவும் குறிக் கும் முழு நிறை பொருளில் வழங்கப்பட்டதனாலும், இக் குறட்பாவில் இச்சொல் வீர வாழ்வு, தண்ட உரிமை நீதிகள், ஆட்சி, சமுதாய வாழ்வு ஆகிய அனைத்தும் ஒருங்கே தொகை யாகக் குறித்து நின்றது.

அறத்திற்கே என்பதிலுள்ள ஏகாரம் போலவே, மறத் திற்கும் என்பதிலுள்ள உம்மையும் எச்சப் பொருளும் மிகைப் பொருளும் மட்டுமன்றி, முற்றுப் பொருளும் உடைய தாய், மேற்குறிப்பிட்ட மறத்தின் முழுநிறை விரிபொருட் கூறுகளான வீர வாழ்வு, தண்ட நீதி, உரிமை நீதி, ஆட்சி, சமுதாய அமைதி ஆகிய மற வகைகளை எல்லாம் ஒருங்கே உள்ளடங்கலாகக் காட்டிற்று.

என்ப என்பது இக் குறட்பாவில் ஒரு தடவையே முனைப் பாக வெளிப்பட வந்தது. இது அறியார் என்பதன் பயனிலை யாக நின்றது. அறியார் என்பதில் பின்னசை எடுப்பால் வந்த அதே ஏனைத்தொனி, 'என்ப' என்ற வினையிலும் முன் னசை எடுப்பாலும் அமைந்தது காணலாம். ஏனெனில் என்ப

என்ற வினையில் பலர்பால் விகுதியான 'ப' எடுத்திசைத்தால் அது உயர்திணையையும் உயர்வையும்; அது படுத்து அல்லது நலிந்திசைத்தால் 'ப' என்பதன் நலிவொலியான 'வ' என்ற வடிவமொத்து [என்னுவ] என வந்து அஃறிணையையும் இழிவையும் உணர்த்தும் தன்மை உடையது. வெளிப்பட வந்த என்ப இவ்வாறு 'அறியாரின்' ஏளனம் வலியுறுத்துவதுடனன்றி, அவாய்நிலையாக 'ப' விகுதியே எடுத்திசைத்த 'என்ப' என்பதனையே அறிந்தார் என்பதன் வினையாகக் குறிப்பாற் சுட்டிற்று.

அஃதே என்பது அந்த அன்பே என்று பொருள்படும், இவ் ஏகாரமும், 'அதுவே, பிறிதன்று' எனப் பிரிநிலை எச்ச மிகைப் பொருள்களும், 'இது தெளிக' என்ற தேற்றப் பொருளும் கொண்டு நின்றது.

இன சமுதாய வாழ்வுகளில் அறத்தின் அகக் கூறுகளான பொதுவறம், சிறப்பறம் ஆகியவையும், அதன் புறக் கூறான மறமும் மறம் சார்ந்த வாழ்வும் அன்பே சார்ந்தவை என்றதனால், மனித இன நாகரிகப் பண்பாடு முழுவதுமே அன்படிப்படையானது என்பதும்; அன்பு சாராத வாழ்க்கைக் கூறு அறந்திற்கு எதிர்மறையான பழி ஒன்றே என்பதும் பெறப்பட்டன.

துணை என்பது தக்க பாதுகாப்பு ஆகும் என்னும் பொருளையுடையது.

மேலே அதிகார மூன்றும் குறட்பாவில் மேலீடாகக் கிட்டத்தட்ட ஒரே பொருள் கொள்ளத்தக்க நிலையில் தொடர்பு, வழக்கு என்ற சொற்கள் வந்து; முதலதன் விசைப் பெருக்கமாகப் பின்னது தொடர்பின் தொடர்பு என்று பொருள் கொண்டது போல, இக் குறட்பாவிலும் அதே நிலைப்பட வரும் சார்பு, துணை ஆகிய இரு சொற்களில் பின்னது முன்னதன் விசைப் பெருக்கமாய், சார்பின் சார்பு என்ற பொருள் தருதல் காணலாம்.

அறத்துக்கு நேரடியான சார்புக்குரிய பண்பு அதாவது அடிப்படைப் பண்பு அன்பு என்பது முதல் வாசகத்தில்

கூறப்பட்டது. இது 'அமர்பவனுக்கு இருக்கை ஆதாரம்' என்பதுபோன்றது. சக்கரம் அமைந்த இருக்கை போன்ற ஊர்தியே ஆதாரமாக முடியும், அல்லது நீரில் மிதந்து செல் லும் இருக்கை போன்ற படகே ஆதாரமாக முடியும். ஆனால் பாதை யின்றி ஊர்தியோ, நீர் நெறியின்றிப் படகோ பயன் படாது. பாதையும் நீர் நெறியும் இங்கே ஆதாரத்தின் ஆதாரமாகின்றன: இயங்காதாரம் ஆகின்றன. மறத்துக்கு அன்பு நேரடியான ஆதாரம் அன்று, இத்தகைய இயங்கா தாரமே. ஏனெனில் மறத்துக்கு ஆதாரம் வலிமை, அறிவு, திறமை; அந்த வலிமை, அறிவு, திறமை ஆகியவற்றுக்கு ஆதாரம் அன்பு.

வீரத்தால் ஒருவனை அடிக்க முடியும், ஒரு நாட்டைப் பிடித்துவிட முடியும். ஆனால் இதுமட்டும் செய்தால் அது வீரமாகாது, வெற்றியாகாது. பிறரை அடிமைப்படுத்தி ஆள்பவன், ஆள்பவன் அல்லன், முள் மேல் ஏறி யமர்பவன் போல, தீயை இரு கையால் கட்டி அணைப்பவன்போல, அவன் தனக்குத் தீராப் பகைமையை, வளரும் பகைமையை, ஏற்படுத்திக் கொள்கிறான். வென்ற பின் அன்பு காட்டுபவர் கூட, பகைமையைப் புற நட்பாக்க முடியுமேயன்றி அக நட்பாக்க முடியாது. ஏனெனில் இங்கெல்லாம் மறத்திலே அன்பில்லை, ஆர்வமுடைமையும், நண்பும் ஏற்பட முடியாது. அன்போடு கூடிய மறம் ஒன்றே அக ஆட்சி செய்யும்—இந்த அக ஆட்சியில் ஆளுபவர்—ஆளப்படுபவர் வேறுபாடு கிடை யாது—கொடுக்கல் வாங்கல் சமத்துவமே நிலவும்.

அறமும் மறமும் எதிர்மறைகளாகாது எதிரிணைகள் ஆதல் போலவே, வன்மையும் மென்மையும் எதிர்மறைகள் அல்ல, எதிரிணைகளே. மென்மையாலாகாதது வன்மையா லாகும். ஆனால் அதுபோலவே, வன்மையாலாகாதது மென் மையாலாகும்.

'வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல் பஞ்சில் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்!

என்ற நீதிவெண்பா இதனைத் தக்க உவமைகளுடன் கூறுகிறது. 'யானையே கோட்டை தகர்த்து உட்புக முடியும்; ஆனால் பூனையே பலகணி வழியாக உட்புக முடியும்' என்பதும் காணத் தக்கது ஆகும்.

வன்மை மென்மையை வெல்வதெல்லாம். வன்மையால் சாதிக்க முடியாதவற்றை மென்மையால் சாதிப்பதற்கே யாகும். வென்ற பின் வன்மை மென்மைக்கு உதவி, வளம் அளிக்கிறது. வெல்லப்பட்ட மென்மை, வென்றதுதானே என்பதை உணர்கிறது. புகட்டப்பட்ட பாலை உண்ட குழந்தை பசி தீர்ந்து இயல்பான தன்னையறியா நன்றியுணர்வுடன் தாயிடம் கொஞ்சுவதுபோல, மென்மை தன்னை ஆட்கொண்ட வன்மையைத்தான் ஆட்கொள்ள முனைகிறது.

வன்மை ஆண். மென்மை பெண். முன்னது பண்படா இயற்கைப் பண்பு. பின்னது பண்பட்ட மயற்கைப் பண்பு.

மறம் ஆண். அறம் பெண்.

அறம் நேரே அன்பில் வளர்வது. மறம் அன்பின்மை எதிர்த்து, அன்புக்குப் பாதுகாப்பளித்து, இறுதியில் தானே அன்பின் பாதுகாப்பில் வளர்வது.

துணை சார்பின் சார்பாகி, பாதுகாப்பு ஆவதன் மறை திறவு இதுவே.

சிறப்புரை: அன்பு மூவகைப்படச் செயலாற்றும் திறம் உடையது. நேர்முக அன்பு என்பது காதலன்பு அல்லது அன்புப் பண்பு. மறிமுக அன்பு என்பது இன அன்பு அல்லது அருள். மறைமுக அன்பு என்பது உருக்கரந்து நின்று அன்புக்கு வலிமை தரும் அன்பு ஆகும். இம் மூவகை அன்புகளையும் உள்ளடக்கிய நிறை பண்பை நாம் பேரன்பு என்னலாம். மனித இன நாகரிகப் பண்பாட்டினைத்தையும் பேணிக் காத்து வளர்ப்பது இப் பேரன்பே. நேர்முக அன்புருவில் நின்று அது பொதுவறம் வளர்க்கிறது. மறிமுக அன்புருவில் நின்று அது இனம் வளர்க்

கிறது. மறைமுக அன்புருவில் நின்று அது சமுதாயத்தை நிலைநிறுத்துகிறது.

பொருள்வளம்: (1) நாடகங்களில் விறுவிறுப்பான நாடகக் காட்சிகள் அரங்கில் நடைபெறும்போது, அரங்கிலும் திரைகளிலும் துரிதமான அலை மாறுபாடுகளை உண்டுபண்ணுவதற்காக ஒளிமுகப்பாளர் பல்வண்ண ஒளியாழியைச் சுழற்றி வண்ண ஒளி நிழல் திறங்களை மேடையில் மாறிமாறி விரைந்து சுழன்றாட வைப்பது போல, திருவள்ளுவர் இக் குறட்பாவில் வன்மையும் மென்மையும், படுப்பும் எடுப்பும், காய்ச்சீரும் மாச்சீரும், சுழன்று சுழன்று அலைபாய விட்டுள்ளார். இவற்றின் பொருள்வளங்களை விரித்துரைத்துக் காட்டப் புகின், இக் குறட்பாவுரைக்கே ஒரு தனிப் பேரேடு வேண்டி வரும். ஆயினும் இவற்றுட் சில மேலே விளக்கவுரையிலேயே குறிப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மீந்த ஒரு சிலவே ஈண்டுச் சுட்டப்படுகின்றன.

இக் குறட்பாவில் றகரங்களும் ஆய்தமும் வந்து வன்மையினும் வன்மையாக்கப்பட்ட சீர்கள் 'அறத்திற்கே', 'அறியார்', 'மறத்திற்கும்', 'அஃதே' என்பவை. மென்மையினும் மென்மையாய், மெலிந்து நலிந்தியையும் சீர்கள் 'அன்பு சார்பு', 'என்ப', 'துணை' ஆகியவை. இவ்விரு பால் ஓசைப் பண்புகளும் சுட்டும் குறிப்பு வளமே ஒரு முழுக் கலைத் தத்துவம், ஒரு முழு உலக வாழ்க்கைப் பண்பாட்டு விளக்கம், ஒரு முழு வேதாந்தம், வேதமாக விளங்குவது ஆகும்.

இயற்கை கொடும் பாறைகள் நிரம்பிய ஒரு வெஞ் சூறைப் பாலைவனம், ஓர் அழிவுக்காடு. அதில்

ஒரு சிற்பி தோன்றினன். பாறைத் துண்டுகளையே முரட்டுக் கருவிகளாகக் கொண்டு அவன் பாறையிடையே சூறையழிப்பாட்டிலிருந்து பாதுகாப்புத் தர வல்ல ஒரு முரட்டுக் கோட்டை அமைத்தான். பின் பாதுகாப்பாக இருந்துகொண்டு, கருவிகளைச் செப்பஞ் செய்து, முரட்டுக் கற்கோட்டையில் வீடு தெரு, நாடு நகரம், தென்றல் வீசும் பூங்காக்கள், இனிய மலர்க் காவணங்கள் முதலியன வேய்ந்தான்.

இந்த இயற்கை வெஞ்சூறைப் பாலையே உயிரின வாழ்வு. கடவுள், இனப் பண்பெனும் தெய்வமே, அன்பே, அதில் இடம் கொண்ட கலைஞன். முதலில் மறம் என்னும் முரட்டுக் கருவிகள் கொண்டு அவ் அன்பெனும் கலைஞன் சமைத்த முரட்டுக் கற் கோட்டையே சமுதாயம், அரசியல் வாழ்வு. அறம் என்னும் செப்பமிக்க கருவி கலங்கொண்டு அக் கோட்டையிலே அதே கலைஞன் சமைத்த பூங்கா நகரமே இன வாழ்வு அல்லது இன்பம்.

அன்புப் பண்பு அழிவினின்று ஆக்கிய முதல் முரட்டுக் கோட்டையே மறம். அதில் மேலும் செதுக்கி மென்மைப்படுத்தி ஆக்கிய பூங்கா நகரமே அன்பின் உறைவிடமான இன்பம், அன்பறம்.

அறத்திற்கே, அறியார், மறத்திற்கும் ஆகிய வன்மைகள் உயிர் வாழ்வில் அன்பின் முதற் பணியாக மறம் ஏற்பட்டது என்ற கருத்தையும், அந்த மறமே பின்னும் அறத்துக்குப் பாதுகாப்பு, அதன் அடிப்படை என்பதையும் ஓசையால் காட்டின. மறத்தை அறமாகச் செப்பனிட்ட பின் அதிலிருந்து தோன்றும் இன்பப்

பண்புகளையே 'அன்பு சார்பு', 'என்ப', 'துணை' ஆகிய சீர்களின் மென்மைகள் காட்டின.

அன்பு அறத்துக்குச் சார்பு என்றவிடத்து அன்பு மென்மைப் பண்பு. அதுவே மறத்துக்குத் துணை என்ற விடத்து, அன்பும் வன்மைப் பண்பாகிறது. அன்பு என்ற மென்மையான பண்பைக் குறிக்க அன்பு என்ற மென்மையான சொல் அறத்துடனும்; வன்மையான பண்பு என்பதைக் குறிக்க, மறத்தினிடமாக அது அந்த அன்பையே சுட்டிய அஃதே என்ற வன்மைச் சொல்லுடனும் கூறப்பட்ட நயம் கூர்ந்து காணத் தக்கது ஆகும். உயிரற்ற கருங்கற்பாறையை அழகு உயிர்ச் சிலையாக்கிய கல்தச்சன், தன் கலைத் திறனுக் காட்ட ஒரு மூலையில் மூலப் பாறையின் ஒரு பகுதியை அப்படியே செப்பனிடாது விட்டு வைத்தாலொத்த நயத்தை, அன்பு சுட்டிய அஃதே எனும் கடுஞ்சொல் இங்கே குறித்தது என்பது கவனிக்கத் தக்கது ஆகும்.

சார்பு என்ற சொல்லைவிடத் துணை (சார்பின் சார்பு) என்ற சொல் ஓசையிலும் பண்பிலும் மென்மை மிக்கது. அன்பின் மென்மைப் பண்பைப் பேணி மேலும் மென்மைப் பண்பாக்குவது மறம், அதற்கு உதவும் அன்புப் பண்பு புறம் கடிதாயினும் அகத்தே இன்னும் மென்மை சான்றது என்பதை இது குறித் துக் காட்டிற்று.

'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்பது ஒரு பழமொழி. காதலர் காதற் பாசத்திலும் பெற்றோர் பாசம் மெல்லிது என்பதை இது காட்டும். அரசனின் மறம் என்பது பெற்றோரின் பாசத்தோடு ஒப்பானது என்பது இங்கே கருதத் தக்கது.

துணையாய் இருக்க வேண்டும் பண்பு புறத்தே வலிமையுடனும் அகத்தே மென்மையுடனும் இருத்தல் வேண்டுமென்பது தெளிவு.

(2) சார்பு என்ற சொல்லுக்குப் பெரும் பொருளைச் சார்ந்திருக்கும் சிறு பொருள் என்றும், சிறு பொருளுக்குச் சார்பு அல்லது ஆதாரமான பெரும் பொருள் என்றும் இரு பொருள்கள் இருப்பது விளக்கவுரையில் சுட்டப்பட்டது. இக் குறட்பாவில் சிறு பொருளுக்குச் சார்பு ஆன ஆதாரப் பொருள் என்பதே சார்பு என்பதன் சொற்பொருள் என்பதும் அங்கே கூறப்பட்டது.

மெய்யுணர்வு அதிகாரம் 9-வது குறட்பாவில் (359) திருவள்ளுவர் சார்பு என்ற சொல்லை இப் பொருளில் ஒரு தடவையும், இரண்டாவது பொருளின் திரிபாக மற்றொரு தடவையும் பயன்படுத்தியுள்ளார். 'சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின்' என்ற அக் குறட்பாவின் முற் பகுதியில், முதல் வரும் 'சார்பு' சார்பு அல்லது ஆதாரமான செம்பொருள் அல்லது மெய்யறிவு என்ற பொருளில் வழங்குகிறது. ஆனால் இது உயிருக்குச் சார்பான ஆதாரம் ஆகும். இரண்டாவது சார்பு என்பதோ, உயிரைச் சார்ந்த பண்பு என்ற பொருள் கொள்கிறது. இதுமட்டுமன்று. உயிருக்குச் சார்பான பண்பு எப்போதும் நல்லதாகவே இருப்பது. ஆனால் உயிரைச் சாரும் பண்போ, நல்லதாகவும் இருக்கலாம், கெட்டதாகவும் இருக்கலாம். குறிப்பிட்ட குறட்பாவில் அது கெட்ட பண்பே குறிக்கிறது.

இக் குறட்பாவில் முதல் வாசகத்தில் சார்பு என்ற சொல் அறத்துக்கு அன்பு சார்பு என ஆதாரம் என்ற பொருளிலும், நற்பண்பு என்ற பொருளிலுமே வந்தது

என்பது தெளிவு. ஆனால் பின் வரும் மறத்துக்கும் அன்பு சார்பு என்றால், அது நற்பண்போ, அற்பண்போ எனும் ஐயத்துக்கு இடம் தந்துவிடும். திருவள்ளுவர் அதனாலேயே 'சார்பு' என்பதினிடமாக இரண்டாவது அடியில் துணை என்ற சொல்லையே பெய்துள்ளார். அது சார்பின் சார்பு என்ற பொருளும் பாதுகாப்பு என்ற குறிப்பும் உடையது என்பது விளக்கவுரையி லேயே சுட்டப்பட்டது.

அறத்தின் சார்பு நற்பண்பே குறித்தது. ஏனெனில் அது இன்றியமையாப் பண்பு. ஆனால் மறத்தின் சார்பு அவ்வாறன்று. அது அன்பு சாரலாம், சாராமல் இருக்கலாம். அன்பு சாரின் அது வளரும். அன்பு சாராவிடின், அது அழியும். இரண்டாம் அடியில் நற் பண்பு என்ற கருத்து வற்புறுத்தும் முறையில் 'சார்பு', 'துணை' ஆக நின்றதன் விளக்கம் இதுவே.

(3) அறத்திற்கே, மறத்திற்கும் ஆகிய இரு சீர் களும் எதுகையாகவும் எதிரிணையாகவும் வந்ததுடன், இரண்டும் மட்டுமே காய்ச் சீர்களாக நின்றன. இந்த இரண்டும் தவிர, இன வாழ்வில் எதுவுமில்லை, அவை வாழ்வு முழுவதனையும் குறித்த சொற்கள் என்பதை இது சுட்டிற்று. ஆனால் 'அன்பு சார்பு' என்பது கிட்டத் தட்டக் காய்ச் சீர் போல நின்ற நீண்ட விளச்சீர். அறம் அன்படிப்படையின்றி நடைபெறுவதன்று, மறமோ அன்படிப்படையின்றிச் சிறக்காது, அறமும் பயவாது என்ற நுட்பத்தை இது சுட்டிற்று. 'என்ப' என்பதன்பின் குறட்பா முழுவதும் படுத்தும் நலிந் திசைத்தும் செல்வது இதனையே வலியுறுத்துகிறது.

தனிக் குறிப்புக்கள்: (*1*) கிட்டத்தட்ட எல்லா உரையாசிரியர்களும் மொழிபெயர்ப்பாசிரியர்களுமே முதல் வாசகத்தைக் கூற்று வாசகமாகக் கொண்டனர்—'அறியாதார்' என்பதையே முதல் வாசகத்தில் 'என்ப' என்றதன் எழுவாயாகவும் ஏற்றனர். கவிஞர் இராமலிங்கம் பிள்ளை கொண்ட பொருளும் இலக்கணமும் வேறு. அவர் என்ப என்பதனைப் பெயராக்கி எழுவாயாகவும், அறியார் என்பதனை அதன் பெயர்ப் பயனிலையாகவும் கொண்டார். இதனால் அறத்துக்கே அன்பு சார்பு என்பதை அவர் முதல் வாசகமாகக் கவி கூற்றாக்கி, இரண்டாம் வாசகத்தை மறத்துக்கும் அஃதே துணை என்று கூறுபவர் அறிவில்லாதவர் என்று முடித்தார். 'மறம்' என்பதை அவர் 'பழி' என்று கொண்டார் என்பது தெளிவு.

பரிதியார் ஒருவர் மட்டுமே 'என்ப' என்பதை அசை நிலை போல் விட்டுவிட்டு, 'அறியார்' என்பதனை மறத்திற்கே என்பதனுடன் சேர்த்து அறிவில்லாதார் செய்யும் மறத்தையும் என்று அதனை ஆறும் வேற்றுமைத் தொகையாக்கினர். இவரும் மறம் என்பதைப் பழி எனவே கொண்டவர் ஆவர்.

இந்த மணிவிளக்கவுரைபோல எவரும் இரு வாசகங்களையும் இணைக் கூற்று வாசகங்களாகக் காணவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

(2) மறம் என்பதை இம் மணிவிளக்கவுரை வீரம் என்று கொண்டது. 'மறத்திற்கும்' என்பதை 'அதர்மத்திற்கும்' என்று கவிஞர் இராமலிங்கனாரும் மலையாள மொழிபெயர்ப்பாளர் வெண்ணிக்குளமும், இந்தி மொழிபெயர்ப்பாளர் வெங்கடகிருட்டினனும் கொண்டனர். 'ஒழுக்கக் கேடு'[1] எனக் கிட்டத்தட்ட அதே கருத்தே கூறினர் ஆங்கில மொழிபெயர்ப்பாளர் ட்ரூ, ஐ. டி. தங்கசாமி ஆகியவர்கள். 'ஈண்டுப் பாவமாகிய மறத்திற்கும்' என்று உரை செய்தார் காலிங்கர்.

---

1. Vice

'மறத்திற்கும் அஃதே துணை' என்பதற்கு 'மறத்தையும் அன்பு வெல்லும்' என்று சொற்பொருளுக்குக் கருத்துப் பொருத்தம் காட்டினர் பரிதியார்.

பரிமேலழகர் இதே பொருளுக்கு இன்னும் பொருத்தம் காட்டி விளக்கம் தருகிறார், 'ஏனை மறத்திற்கும் அவ்வல்பே துணையாவது' என்று பொழிப்புரைத்து, 'ஒருவன் செய்த பகைமை பற்றி உள்ளத்து மற நிகழ்ந்துழி, அவனை நட்பாகக் கருதி அவன் மேல் அன்பு செய்ய அது நீங்குயாதலின், மறத்தை நீக்குதற்குத் துணையாம் என்பார், மறத்திற்கும் அஃதே துணை என்றார்' என்ற அழகிய விளக்க முடிபும் அவர் தந்தார்.

மேலும் பரிமேலழகர், 'துணை' என்பதற்கு 'நீக்குதற்குத் துணை' என்று வலிந்து தாம் கொண்ட பொருளுக்கு ஆதரவாக, சிட்டத்தட்ட அச் சொற்பொருள் தொனிக்க இச் சொல்லைத் திருவள்ளுவரே வழங்கியுள்ளதை எடுத்துக் காட்டினர். 'துன்பத்திற்கியாரே துணையாவார்' [1299] என்ற இன்பத்துப் பாலின் 'நெஞ்சோடு புலத்தல்' அதிகாரத்தின் ஒன்பதாம் குறட்பாப் பகுதியே அது.

பரிமேலழகர் உரையையே பின்பற்றித் தீமையை ஒழிப்பதற்கு என்று புலவர் ந. சி. கந்தையாவும், 'தீமைக்கு எதிராகப் பாதுகாப்பு'[1] என்து ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் பேராசிரியர் வி. ஆர். ஆர். தீட்சிதரும், 'தீமையைப் போக்குவதற்கு' என்று புலவர் குழந்தையும் பொருள் கொண்டனர்.

'ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும்' என்று பேராசிரியர் முனைவர் மு. வாதராசனும்; 'வீரத்தை வெளிப்படுத்துவதற்கு' என்று பேராசிரியர் முனைவர் சி. இலக்குவனும்; 'ஆனல், மெய்ம்மையில் வீரத்திற்கு' (பரந்து, வாஸ்தவ்மேங் வீரதாகா) என்று இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் பேராசிரியர் முனைவர் சங்கரராசு நாயுடுவும் உரைத்துள்ளனர்.

---

1. Defence against evil too

பரிதியாரைப் பின்பற்றியவர்கள், பரிமேலழகரைப் பின் பற்றியவர்கள், பேராசிரியர் மு. வரதராசனாரைப் பின் பற்றியவர்கள் என இக் குறட்பா உரையாசிரியர்களை முத் தொகுதியினராகக் கொள்ளல் தகும்.

உரையாசிரியர்களின் இந்த முத் தொகுதியினரிடையே யும் முதல் தொகுதியினரிடம் இல்லாத சொற்பொருளின் கருத்து விளக்கத்தை இரண்டாவது தொகுதியினரிடம் காண்கிறோம்.

இரண்டாவது தொகுதியினுள்ளும் கருத்து விளக்கத் திலும் கருத்தழகினும் பரிமேலழகருரையே தலைசிறந்தது என்னலாம். ஏனென்றால் 'மறத்தை அன்பு வெல்லும்' என்று கூறிய பரிதியார் அது எப்படி வெல்லும் என்று காட்ட வில்லை. 'தீமையைப் போக்குவதற்குத் துணை செய்யும்' என அதைப் பின்பற்றிக் கூறியவர்கூட, எப்படிப் போக்கும் என்று விளக்கவில்லை. ஆனால் எப்படி வெல்லும், எப்படிப் போக்கும் என்ற இரண்டும் விளக்கியதனுடன், 'பகைவரை நட்பால் வெல்ல அன்பு உதவும்' என்ற அழகிய வள்ளுவக் கருத்தினை யும் பரிமேலழகர் உரைக் கருத்தாகத் தந்துள்ளார்.

இவ்வாறு உரைக் கருத்தில் பரிமேலழகர் சிறந்தாலும், இக் குறட்பாவுக்கு அவர் கண்ட உரை இக் குறட்பாவில் வள்ளுவர் உள்ளக் கருத்தைக் கூறிற்று என்று சொல்ல முடி யாது. ஏனென்றால் மறத்திற்குத் துணை என்பதை அவர் வலிந்து மறத்தை நீக்குதற்குத் துணை என்று கூறியுள்ளார். இவ் வலிந்துரைக்கு ஆதரவாக அவர் எடுத்துக்காட்டிய [1299-ம்] குறட்பாகூட இவ் வலிந்துரைக்கு வலுத் தருவ தாகக் கொள்ள முடியாது. ஏனென்றால் அக் குறட்பாவில் 'துன்பத்திற்கு' என்பதனை அவரே 'ஒருவர்க்குத் துன்பம் வந்துழி' என்று உரை செய்துள்ளார். இது இயல்பானது. 'மறத்திற்கும்' என்ற இக் குறட்பாப் பகுதிக்கு அவர் இத் தகைய இயல்பான உரை காண முடியவில்லை என்பது தெளிவு.

மூன்றுவது தொகுதியினராகக் குறிக்கப்பட்ட உரையாசிரியர்கள் இம் மணிவிளக்க உரைக் கருத்தே நோக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது ஆகும். மறம் என்பதற்குப் பரிமேலழகரும் பிறரும் கண்ட பொருள் தவறு என்று அவர்கள் கடியவில்லையாயினும், இக் குறட்பாவிலேனும் அப்பொருள் சால்புடையதன்று என்று அவர்கள் கருதியுள்ளனர் என்று காணலாம்.

[3] இக் குறட்பாவில் 'துணை' என்பதற்குப் பெரும்பாலோர் துணை, உதவி [1], (ஸஹாயக்), தோழன் [2], பாதுகாப்பு [3] (த்ராண்கரே) என்றே பொருள் உரைத்தனர். 'மறத்திற்கு அன்பு துணை' என்பதற்குப் பரிதியார் எப்படியோ 'மறத்தை அன்பு வெல்லும்' என்று கூறினர். இது மேலே சுட்டப்பட்டது.

'துணை, என்பதற்கும் 'சார்பு' என்பதற்கும் உரையாசிரியர்கள் மிகுதி வேறுபாடு கண்டார்கள் என்று கூற முடியவில்லை. ஏனெனில் அதற்குப் பலரும் 'சார்பு', 'துணை', 'உதவி' (ஸஹாயக்) 'நட்பு' [4], தோழன் (சாதீ) என்றே உரைத்தனர்.

'அறத்திற்கே அன்பு சார்பு' என்பதற்கு எப்படியோ பரிதியார், 'தன்மத்திற் பெரிது அன்புடைமை, அது ஆத்துமாவை ரட்சிக்கும், பரகதி கொடுக்கும்' என்று பொருள் கொண்டுள்ளார்.

[4] அன்பு என்பதை அன்பு - காதல் (ப்ரேம்) அன்பு - நட்பு (ஸ்நேஹ்), அன்புடைமை என்று பெரும்பாலோர் பொருள் செய்துள்ளனர். காலிங்கர் மட்டும் 'ஒருவர் அனைத்துயிர் மாட்டும் வைக்கின்ற உள்ளம் பானது' என்று கருத்து விளக்கம் தந்தார். இதனையே கருவாகக் கொண்டு தயவு [5] என்று பொருள் கண்டாரும் உண்டு.

---

1. Help 2. Companion 3. Defence 4. Ally
5. Kindness

77. உயிரினத்துக்கு ஆதாரம் கதிரவனொளி,
அதுவே என்பிலா உடலுயிர்க்கு எமன் :
வாழ்வுக்கு வள ஆதாரம் அறம்,
அதுவே அன்பிலா உயிருக்கு எமன் !

[2]என்பி லதனை [1]வெயில் [3]போலக் [6]காயுமே
[5]அன்பி லதனை [4]அறம்

பொ - ரை : [1]*(உயிரின மலர்ச்சிக்கு மூல ஆதார மான) கதிரவன் ஒளியின் வெப்பமே* [2](புழுப்போன்ற) *என்பில்லாத உயிரிகளின் உடலை* [3](வாட்டி வதக்கி *அழித்துவிடும். அதுவே) போல,* [4](இன வாழ்வின் *வளத்துக்கு மூல ஆதாரமான) அறமே* [5]அன்பின் *தொடர்பு இல்லாத உயிர் வாழ்வினை* [6]*வாட்டி வதக்கி அழித்துவிடும் தன்மை உடையது ஆகும்.*

க - ரை : *கதிரவனொளி வெப்ப ஆற்றலை உடையது. அந்த வெப்ப ஆற்றலே மழையையும் இயக்கி, நிலவுலகில் மண்ணையும் உரத்தையும் ஆக்குகிறது. ஆயினும் உயிரின மலர்ச்சியில் இம் மழை வளமும் நில உர ஆற்றலும் அமைந்த பின்னும் வெப்பம் தாங்கும் மரக்காழ் உர ஆற்ற லாகவும் எலும்புர ஆற்றலாகவும் உடலகத்தே அதை அமைத்துக் கொள்ளாத மெல்லுயிர்கள் அவ் வெப்பாற்ற லெதிர்த்து நீடித்து வாழ முடியாது. ஊழ் ஆற்றலாகிய அறம் இக் கதிரவ னொளி போன்றது. அதன் இயற்கை யாற்ற லாகிய அழிவூழ் கதிரவனொளியின் வெப்பாற்றல் போன்றது. அதன் ஆக்க ஆற்றலாகிய ஆக்க ஊழ்*

அல்லது ஆகூழ் அல்லது அன்பறம், மழை வளம் போன்றது. வெயிலறமாகிய இந்த இயற்கை அறம் மழையறமாகிய இந்த ஆக்க அன்பறம் இயக்கி, உயிரின வாழ்வில் காதல் என்ற நிலவளமும், கற்பு என்ற நில உரவளமும் பெருக்கி, இன உயிரிலே இவற்றின் சேம வைப்பாக மரக்காழ்—என்பு வளமாக அன்புப் பாசத்தையும் ஊக்குகிறது. இயற்கையாற்றலாகிய அறத்தின் அழிவாற்றலுக்கு ஆளாகி விரைந்து மடியாமல், ஆக்க ஊழ் ஆற்றலாகிய அன்பறமே மழை – நில – உர வளங்களின் சேமவைப்பான மரக்காழ்—என்பு வளமாகிய அன்புப் பாசத்தின் மூலம் உயிரின் வாழ்வைப் பேணிக் காக்கிறது. இதனை வளர்த்துக் கொண்ட அளவிலேயே உயிரினமும் இன உயிரும் வாழ்வில் நீடிக்கும், வளரும். இதனை வளர்த்துக் கொள்ளாத உயிரினம், அன்புப் பண்பாடில்லாத உயிரினம், என்பில்லாத உயிரினம் போல், எளிதில் அழிவுக்கு ஆளாகி விடும்.

இலக். கு: இக் குறட்பாவில் பயனிலையாக வரும் தொகை நிலையின் ஒரு கூறுபோல இயங்கும் பகுதியை அதற்குரிய அவாய்நிலைகளை முற்றுவித்து ஒரு தனிச் சார்பு வாக்கியமாகக் கொண்டால், குறட்பாவில் அச் சார்பு வாக்கியம் உட்பட இணை வாசகம் ஒன்றேயாகும். அந்த அவாய்நிலைகளை உன்ளடக்கி அதன் சொற்கள் அப்போது நான்கு ஆகும்.

அவையாவன:

[1] சார்பு வாக்கியம்:

1. வெயில் (இது சார்பு வாக்கிய எழுவாய்).

2. என்பிலதனைக் (காய்வது) போல [இது சார்பு வாக்கியப் பயனிலை].

[2] முடிபு வாக்கியம் :

1. அறம் (இது முடிபு வாக்கிய எழுவாய்).

2. அன்பிலதனைக் காயுமே (இது முடிபு வாக்கியப் பயனிலை).

சார்பு வாக்கியத்தைத் தொகைநிலைக் கூறாகவே கொண்டால், குறட்பாவில் தனி வாசகம் ஒன்று, சொற்கள் இரண்டே யாகும்.

அவையாவன :

1. அறம் (இது எழுவாய்).

2. வெயில் என்பிலதனைக் (காய்வது) போல, அன்பிலதனைக் காயுமே (இது பயனிலை).

இக் குறட்பாவில் 'வெயில்போல' என்பது ஒன்றே காய்ச் சீர். 'காயுமே' என்பது நெடிய விளச் சீர். கடைச் சீர் மலர்வாய்பாட்டு நிரையசைச் சீர். என்பிலதனை, அன்பிலதனை ஆகிய இரு சொற்களும் முறையே இரண்டு அடிகளிலும் முதலிரு சீர்களாகப் பிளவுற்றே வந்தன. பிளவுற்ற வடிவங்களில் முந்திய வடிவங்கள் (முதற் சீர்கள்) குறுகிய தேமா, பிந்திய வடிவங்கள் [இரண்டாம் சீர்கள்] குறுகிய புளிமா ஆகும்.

ஓசை இக் குறட்பாவிலும் ஆற்றொழுக்கான படுப்பிசைப்பே யாகும். ஆனால் வெயில் போல என்பதன் இரண்டாம் அசையும், காயுமே என்பதன் முதல் கடை எழுத்துக்களும், அறம் என்பதன் முதலெழுத்தும் விசைப்பாக எடுத்திசைத்தன.

குறட்பா முழுவதும் மென்மை இடைமை உயிர்மை வண்ணமாகவே அமைந்து, அறம் என்ற இறுதிச் சொல் மட்டும் வன்மை பெற்று இசைக்கின்றது.

சார்பு வாக்கியமாகவோ, பயனிலைத் தொகைக் கூறாகவோ கொள்ளத்தக்க 'என்பிலதனை வெயில் போல' என்ற பகுதியில்

வெயில் என்பதன் பின், போல என்பதன் முன். பின் வரும் காயுமே என்ற குறிப்பால், 'காய்வது' என்ற சொல் அவாய்நிலையாய் வருவிக்கத் தக்கது ஆகும்.

வெயில் என்பிலதனைக் (காய்வது போல) என்பது சார்பு வாக்கியம். காயின் அல்லது காய்ந்தால் என்ற வினை வடிவம் காரணப் பொருள் வினையெச்சமாவது போல, காய்வதுபோல என்பது உவமப் பொருள் வினையெச்சம் என்னலாம். இதனைப் பயனிலைத் தொகையின் கூறாகக் கொண்டால், காய்வது போல என்பது உவமப் பொருள் ஐந்தாம் வேற்றுமைப் பெயர் வடிவமாகும் இரு வழியிலும்போல என்ற இடைச்சொல்லும் அதனுடன் முடியும் இத்தொகைப் பகுதி அல்லது சார்பு வாக்கியமும் முடிபு வாக்கியத்தில் வரும் காயுமே என்ற வினை முற்றுடன் சென்று முடிகிறது.

காய்வது போல என்பதில் காய்வது வினையாலணையும் பெயர். 'காய்' வினைப் பகுதி. 'து' ஒன்றன்பால் விகுதி. இதன் முன் அகரம் சாரியை. வகரம் காலப் பொதுமை குறித்த எதிர்கால இடைநிலை. வினையாலணையும் பெயர்கள் வினை முதலையோ, செய் பொருளையோ, தொழிலையோ குறிக்கக்கூடும். இங்கே காய்வது, காய்தல் தொழிலையே. காயும் செயலையே குறித்து வந்தது. இந் நிலையில் நாம் அதைப் பெயராகவும் கொள்ளலாம், வினையாகவும் கொள்ளலாம். பெயராயின்; போல என்னும் இடைச்சொல்லை, ஐந்தாம் வேற்றுமை உவமப் பொருளுக்குரிய சொல்லுருபாகக் கொண்டதாகல் வேண்டும். வினையாகக் கொண்டால், போல என்பதைச் சொல்லுறுப்பாகக் கொண்ட வினையாக்கி, காய்வது போல என்பதனை உவமப் பொருள் வினையெச்சம் என்னலாம்.

காய்வது போல என்ற எச்சப் பொருள் அல்லது வேற்றுமைப் பொருள் பின் வரும் காயுமே என்பதை ஒரு புறம் தழுவி, வெயில் என்பதன் பயனிலையாகவும் இயன்றது.

என்பிலதனை என்பது இரண்டாம் வேற்றுமைப் பெயர். இது காய்வது போல என்ற வினையின் பகுதிக்குரிய செயப்படுபொருளாய் நின்று தொகைப்பட்டது. என்பிலது என்பதே பெயர்ச்சொல்

வடிவம். 'ஐ' இரண்டாம் வேற்றுமை உருபு. 'அன்' சாரியை. சாரியை உயிர் முன் பெயரீற்று உகரம் கெட்டது.

என்பிலது என்ற பெயர் என்பு தன்பால் இல்லையாகப் பெற்றது என்று பொருள்படும் எழுவாயடுத்த பயன் தொகை ஆகும். 'இலது' என்பது 'இன்மை' என்ற பண்படியான ஒன்றன்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். 'து' அப் பால் விகுதி. அதன் முன் வரும் அகரம் சாரியை. பகுதி ஈற்று மை கெட்டு, முன்னின்ற னகரம் லகரமாகத் திரிந்தது. என்பு எழுவாய்ப்பெயராய், இக் குறிப்பு வினைப் பகுதியின் எழுவாயாக நின்று தொகைப்பட்டது.

என்பிலதனை என்ற இரண்டாம் வேற்றுமைப் பொருள் காய்வது போல என்ற வினை தழுவிற்று. என்பிலதனை என்பதை என்பு இலதனை என்று பிரிக்காமல் என்பில் அதனை என்று பிரிப்பாரும் உளர். இங்கே 'இல்', 'அது' என்பது வினைத்தொகை போல நின்றது என்னலாம்.

வெயில் என்பது வெம்மை. வெப்பம் என்பது போன்ற தொழிற் பெயர் என்றோ, அப் பண்புப் பெயரடியான தொழிற் பெயர் என்றோ கூறத்தக்கது. முந்திய வகையில் 'இல்' என்பது 'மை', 'அம்' போன்ற பண்பீறு. பிந்திய வகையில் அது தொழிற்பெயர் விகுதி. வெப்பமா யிருக்கும் தன்மை, வெப்பமா யிருக்கும் அது என்பது தொழிற் பெயராய், வெப்பமாய் இருக்கும் ஒளி என்பதற்கு ஆகுபெயர் ஆயிற்று என்னல் தகும்.

செய்பொருளாக என்பிலதனை என்பது காய்வது போல என்ற அவாய்நிலை வினை தழுவியதுபோல, வெயில் எழுவாயாகக் காய்வது போல என்பதனையே தழுவித் தொகைப்பட்டது.

அறம் அன்பிலதனைக் காயுமே என்பது முடிபு வாசகம். இதில் அறம் எழுவாய்ப் பெயர். அன்பிலதனைக் காயுமே என்பது பயனிலை.

காயுமே என்பதில் ஏகாரம் தேற்றப் பொருளுடையது, காய்தல் உறுதி என்பதை இது வற்புறுத்துகிறது. காயும் என்பதில் 'காய்'

வினைப் பகுதி. 'உம்' காலப் பொதுவான திணை பாற் பொதுவான வினைமுற்று விகுதி என்றோ, காலப்பொதுவான ஒன்றன்பால் வினைமுற்று விகுதி என்றோ கூறலாம். இரு வழியிலும் இது இடைநிலை ஏற்பதில்லை.

அன்பிலதனை என்பது பெரிதும் என்பிலதனை என்பதனோடொத்த இலக்கணம் உடையது. இது இரண்டாம் வேற்றுமைப் பெயர். 'ஐ' அவ் வேற்றுமை உருபு. அன்பிலது என்பது பெயர். இடையே அன் சாரியை வந்து, சாரியை உயிர் முன் பெயர் ஈற்று உகரம் கெட்டது.

அன்பிலது என்ற பெயர் அன்பு தன்பால் இல்லையாகப் பெற்றது என்று பொருள்படும் எழுவாயடுத்த பயன்தொகை. இலது என்பது இன்மை என்ற பண்படியான ஒன்றன்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். 'து' அப் பால் விகுதி. அதன் முன் வரும் அகரம் சாரியை. அன்பு எழுவாய்ப் பெயராய், இக் குறிப்பு வினைப் பகுதியின் எழுவாயாக நின்று தொகைப்பட்டது.

அன்பிலதனை என்ற இரண்டாம் வேற்றுமைப் பொருள் காயுமே என்ற வினையின் பகுதி தழுவித் தொகைப்பட்டது.

என்பிலதனை என்பதைப் போலவே அன்பிலதனை என்ற இத் தொகையையும் அன்பு இலதனை என்று பிரிக்காமல், அன்பில் அதனை எனப் பிரிப்பாரும் உளர். இவ்வாறு பிரிக்குமிடத்து 'இல்', 'அது' என்றது வினைத்தொகைபோல நின்றது என்னலாம்.

வி - ரை : அறவாழ்வின் மழை வளத்துக்குரிய பயிர் வளப் பண்பான அன்புடைமையின் சர்ல்பு முப்பால் வாழ்வுகளுடனும் தொடர்புடையதாயினும், இக் குறட்பாவுடன் தொடங்கும் மூன்று குறட்பாக்களும் [77-79] அதன் அற வாழ்வுத் தொடர்பு சிறப்பிப்பவை ஆகும். அவ் வழி இக் குறட்பா அன்பிலா வழி அறமே அழிவாற்றலாகிவிடும் என்பதனை வலியுறுத்தி, அற வாழ்வின் ஆக்க வளத்துக்கு அன்புடைமை இன்றியமையா அடிப்படை ஆகும் என்பது விதந்தோதுகின்றது.

இவ் வதிகாரத்தில் 'என்பு' என்ற சொல் திருவள்ளுவ ரால் பயன்படுத்தப்படும் குறட்பாக்கள் நான்கில் இக் குறட்பா மூன்ருவது ஆகும். அன்புக்கும் என்புக்கும் திரு வள்ளுவர் கண்ட அணுக்கத் தொடர்பை இவை வலியுறுத்து கின்றன. ஆனல் ஒவ்வொரு குறட்பாவிலும் திருவள்ளுவர் 'என்பு' என்பதை ஒவ்வொரு தனிக் குறிப்புடனேயே வழங்கி யுள்ளார் என்பது முன் குறட்பாக்களின் உரைப்பகுதிகளி லேயே சுட்டப்பட்டது. இக் குறட்பாவில் இச் சொல்லின் தனிக் குறிப்பும் பிற குறட்பாக்களுடன் அதன் தொடர்பும் ஒப்பீடும் இக் குறட்பா வுரையிலும், பிற குறட்பா வுரைப் பகுதிகளிலும் விரித்துரைக்கப்படுகின்றன.

வெயில் என்பிலதனைக் (காய்வது) போல என்பது 'உயிரின மலர்ச்சிக்கு மூல ஆதாரமான கதிரவனொளியின் வெப்பமே புழுப் போன்ற என்பில்லாத உயிரினங்களின் உடலை வாட்டி வதக்கி அழித்து விடுவதுபோல என்ற பொருளுடையது ஆகும்.

போல என்பது இங்கே உவம உருபாய் வந்த இடைச் சொல். 'போல' என்பதனுடன் முடியும் சார்பு வாக்கியம் அல்லது தொகை முழுவதும் உவமப் பொருள் அல்லது உவ மானம். அறம் அன்பிலதனைக் காயுமே என்ற முடிபு வாக் கியம் முழுவதுமே உவமிக்கப்படும் கருத்து அல்லது உவமே யம். உவமைக்குரிய பொதுத் தன்மை காய்வது என்பதே— அம் முறையில் அது உவமான உவமேய வாக்கியங்கள் இரண் டுக்கும் உரியதாதலினலேயே, உவமான வாசகத்தில் அவாய்நிலையாக வருவிக்கப்பட்டுள்ளது. இவ்வுவமம் காய் தல் என்ற தொழில் சார்ந்ததாதலால் தொழிலுவமம். தொழிலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடந்து முடிவதன்று, என்றுமுள்ள தத்துவம் ஆதலால், இத் தொழிலுவமத்தை இயங்குவமம், தத்துவ உவமம் என்னலாம்.

இவ்வுவமையில் வெயில் அறத்துக்கும்; என்பு அன்புக் கும்; என்பிலது அதாவது எலும்பில்லாத உயிரியின் உடல் அன்பில்லாத உயிருக்கும் உறுப்புவமங்களாய் நின்றன. இதனல் இது நிறை உவமம் ஆகும்.

வெயில் என்ற சொல் கதிரவனொளியின் வெப்பம் குறிக்கும். இது வெம்மை வெப்பம் என்பதனுடன் தொடர்புடையது. அவற்றைப் போலவே பண்புப் பெயராக, பண்படியாக 'இல்' என்ற ஈறு பெற்ற பண்புப் பெயர் அல்லது தொழிற்பெய ரடியாக, வெப்பமுடைய ஒளிக்கு ஆகி வந்த ஆகுபெயரென்பது இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டதே.

வெயில் இக் குறட்பாவில் அறத்துக்கு நேரான உவமக் கூறு என்பதும் மேலே கூறப்பட்டது.

கதிரவன் ஒளிக் கதிர்களுக்கு ஒளியாற்றலும் உண்டு, வெப்பாற்றலும் உண்டு. இரண்டும் ஒரே ஆற்றலின் இரு தோற்றங்களே யானாலும், வெப்பாற்றலே முனைப்பான செயலாற்றல் ஆகும். ஆனால் இச் செயலாற்றலையும் நாம் ஆக்க ஆற்றல், அழிவாற்றல் எனப் பிரிக்கலாம். கதிரவனின் ஆற்றல் பெரிதும் மழை மூலமாகவே ஆக்க ஆற்றலாகச் செயற்படுகிறது. அதனாலேயே திருவள்ளுவர் கடவுளின் ஆக்க ஆற்றலாகிய காதல் - அன்பு - இன்ப மலர்ச்சிக்குரிய சின்னமாக மழையை வான் சிறப்பு அதிகாரத்தில் சிறப்பித்தார். வெயிலே அதன் அழிவாற்றலாக இக் குறட்பாவில் உருவகம் செய்யப்படுகிறது.

உயிரின வளர்ச்சிக்குக் கதிரவன் ஒளியே பல வகையிலும் ஆக்க ஊக்க முதலாகச் செயற்படுகிறது. ஒளி வெப்ப ஆற்றல் நேராகவும், மழை ஆற்றல் மூலமாகவும் இரு வழியிலும் செயலாற்றுகிறது. அத்துடன் அது ஆக்க ஆற்றலாக ஒருபுறமும், அழிவாற்றலாக இன்னொரு புறமும் செயலாற்றுகிறது. இதில் நாம் தெளிவாக மழை ஆற்றலை மட்டுமே ஆக்க ஆற்றல் என்றும், வெப்ப ஆற்றலை மட்டுமே அழிவாற்றல் என்றும் கூற முடியாது. ஆனால் இரண்டில் எந்த ஒன்றும் இல்லாவிட்டாலும், அது அழிவாற்றலேயாய்விடும் என்பது தெளிவு.

நீதிவெண்பா ஒன்று அவ்வுண்மையை அழகுப் பாடலாக்கிக் காட்டுகிறது:

சங்குவெண் தாமரைக்குத் தந்தை தாய் இரவி தண்ணீர்;
அங்கதைக் கொய்துபோட்டால், அழுகச்செய்தந் நீர் கொல்லும்
தங்கவெண் கரையில் போட்டால், சூரியன் காய்ந்துகொல்வான்
தங்கள்தம் நிலைமை கெட்டார் தாழ்வர் இவ்வகையில்தாமே!

ஒளி-வெப்ப ஆற்றலும் மழை-நீர் ஆற்றலும் இணைந்து, அளவாக இணைந்து இருந்தால்தான் உயிருக்கு ஆக்கம் உண்டு என்பதை இப் பாடல் வலியுறுத்துகிறது. இரண்டு ஆற்றல்களும் உண்மையில் அடிப்படையில் கதிரவனொளி யாற்றலே யாதலால், ஆக்க ஆற்றலின் அடிப்படை மழை நீரே என்பதும், மற்ற வெப்பாற்றலின் செயல் அதனை அளவோடு நிறுத்தலே என்பதும் தெளிவு ஆகும்.

வெயில் இக் குறட்பாவில் மழை - நீர்ப் பண்புடன் கல வாத கதிரவனொளி, அதாவது அழிவாற்றலாகக் கற்பித்துக் கூறப்பட்டதன் காரணம் இதுவே.

அன்போடு கலவாத அறமே இக் குறட்பாவில் வெயி லுக்கு உவமக் கூறுக்கப்பட்டுள்ளது என்பது கவனித்தற் குரியது. அவ்வன்புக் கூறே—அறத்தை ஆக்க அறமாக்க வேண்டிய அதன் அன்புக் கூறே, கதிரவனொளியை உயிராக்க ஆற்றல் ஆக்க வேண்டிய மழை நீர்ப் பண்புக்குரிய உவமக் கூறுகும் என்பதும் இங்கே உய்த்துணரத்தக்கது.

என்பிலதனை என்பதில் என்பிலது என்ற சொல் புழுப் போன்ற என்பிலா உயிரிகளின் உடல் என்று பொருள் தருவ தாகும்.

என்பிலது என்ற பெயர், 'து' என்ற விகுதி சுட்டுகிற படி, ஒன்றன்பாற் பெயர் ஆகும். ஆனல் தமிழில் உயிரும் அஃறிணைச் சொல்தான், உடலும் அஃறிணைச் சொல்தான். இரண்டும் இணைந்தால்கூட, மனிதரைக் குறிக்காதவிடத்தில், அது அஃறிணைச் சொல்லே யாகும். ஆயினும் என்பு என்ற குறிப்பால், அது உயிரியின் உடல் என்பது சுட்டப்பட்டது. என்பு இல்லாத உயிரியின் உடல் எனவே, தண்டெலும் புடைய உயரின உயிர்கள் அதாவது பால்குடி உயிர்கள்,

முட்டையிடும் பறவைகள், ஊர்வன[1] ஆகியவை விலக்கப் பட்டன. 'என்பு இலாத' என்ற அதே குறிப்பினாலேயே தசை மட்டும் உடைய உயிர்கள் என்பது குறிக்கப்பட்டது. இதனால் அணுவுயிர்களும் ஓரறிவுயிர்களில் சேர்ந்த பிறிதுயிர்களான தாவரங்களும் விலக்கப்பட்டன. இவை நீரில் வாழ்வதால் நீரிலிருந்தோ, மண்ணில் வாழ்வதால் மண்ணிலிருந்தோ, காற்றில் வாழ்வதால் காற்று நயப்பிலிருந்தோ, வேர் மூலமாக அல்லது மெய்யுறுப்பு மூலமாக வேண்டிய ஈரம் எடுத்துக்கொள்பவை ஆகும்.

வேருடைய செடிகளைப்போலவே, விரைநடைக் கால்கள் உடையவையும், மேல் தோடுடையவையும், [தோடு புற எலும்பேயாகும்] இதனால் விலக்கப்பட்டன.

புழுப் போன்ற என்பிலா உயிரிகளின் உடல் என்பது இதனாலேயே பெறப்பட்டது. இவற்றின் தசையீரம் காக்கத் தோடோ, விரைந்தோடும் கால்களை இயக்க எலும்போ கிடையாது, நேரடியாகப் புறநயப்பை உட்கொள்ளத்தக்க வேர்கள், அல்லது மெய்யுறுப்பும் இவற்றுக்கு இல்லை. தாவரங்களில் வேர் மட்டுமன்றி, வெம்பாலை நிலச் செடி கொடிகளுக்கு, திண்ணிய தோல் தசைக் கொழுப்புகள், திண்ணிய பாலாக அல்லது நெய்ப்பாக மாற்றப்பட்ட சாறு உண்டு. இவை என்புக்கு ஈடான தடுப்பு ஆற்றல்கள் ஆகின்றன.

மேலின உயிர்கள் தடுப்பாற்றலினாலேயே நீடித்து வாழ்கின்றன, இனமும் இனப் பண்பும் பெருக்குகின்றன. மிகக் கீழின உயிர்களோ, கணப்பொழுதே வாழ்கின்றன. மட்டு மீறிய இனப் பெருக்க ஆற்றல் ஒன்றாலேயே அவை இன நீட்டிக்கின்றன—இவை இனப் பண்பு வளர்ப்பதில்லை. இவற்றுள்ளும் புழுப் போன்ற உயிர்கள் மட்டுமே, மிகு வெப்பத்தால் தம் இயல்பான வாழ்வு எல்லைக் குறுக்கம் அடைகின்றன.

---

1. Reptiles

காய்வது போல என்பதில் காய்வது என்ற சொல் 'வாட்டி வதக்கி அழித்துவிடும்' என்பது குறிப்பது ஆகும்.

உயிரின் இயல்பான உயிர்ப்பியக்கம் அதன் நீர்ப்பசைப் பண்பிலேயே அமைவதாகும். தாவரங்களில் இதனைச் சாறு காத்துப் பேணுகிறது. உயிரினங்களில் இதே பணியைக் குருதி ஆற்றுகிறது. சாறோட்டம் தாவரங்களின் உயிரோட்டம்; குருதி ஓட்டமோ உயிரிகளின் உயிரோட்டம், உயிர்த் துடிப்பு. வெயிலின் வெப்ப ஆற்றல், நீரின் பசையாற்ற லுடன் கலவாத விடத்து, உயிர்களை வதக்கிக் கொன்றுவிடும் ஆற்றல் ஆகிவிடுகிறது. உயிரியே தன் உடலுள் தடுப்பாற்றலை வளர்த்துக் கொள்ளும் உயிர்கள்தான் இந்த அழிவாற்றல் கடந்து தாம் நீடிக்கவோ, தம் இனப்பண்பு பெருக்கி இனம் பெருக்கவோ வழி ஏற்படுகிறது.

அறம் என்பது இக் குறட்பாவில் அன்பு நெறி விரவாத அறம் அதாவது இயற்கை யாற்றலைக் குறிக்கிறது.

அறம் இன வாழ்வின் வளத்துககே மூல ஆதாரமானது. அப்படி யிருந்தும் அதுவே உயிர் வாழ்வை அழிக்கும் திற முடையது என்பதே இக் குறட்பா தரும் எச்சரிக்கை ஆகும். அறத்தின் இயல்பு இதுவன்று. சிறப்புச் சூழலே இதற்குக் காரணம் ஆகக் கூடும். அன்பிலதனை என்ற குறிப்பினால் அச் சிறப்புச் சூழல் அன்பு விரவாத நிலை என்பது பெறப்பட்டது.

பொதுவாக அறம் என்பது அன்புடன் விரவிய அறமே— இதுவே கதிரவனொளிக்கு உவமையாகக் கூறத்தக்கது. ஆனால் உவமக் கருத்தான் இந்த அறமோ, அதற்கு நேர் எதிரிணை யான கதிரவனொளியோ இக் குறட்பாவில் வெளிப்படக் குறிக்கப்படவில்லை. வெயில் மழைப் பண்பு விரவாத கதிரவ னொளியைக் குறிப்பதுபோல, அறம் இங்கே அன்பு விரவாத அறத்தையே குறித்தது. அன்புப் பண்புக்கு இவ் வகையில் இங்கே மழைப் பண்பே உவமக் கூறாக வேண்டும்.

அனபிலதனை என்பதில் அன்பிலது என்பது 'அன்பின் தொடர்பு இல்லாத உயிர் வாழ்வினை' என்ற பொருள் தருவதாகும்.

அன்பிலது என்ற பெயர் 'து' என்ற விகுதி சுட்டுகிறபடி, ஒன்றன்பாற் பெயர் ஆகும். ஆனால் தமிழில் உயிரும் உடலும் இரண்டுமே அஃறிணைப் பெயர்கள்தாம். உயிரிகூட உச்ச உயர் உயிரினமான மனிதனைக் குறிக்காதபோது அஃறிணை தான். ஆனால் 'அன்பு இலாத' என்ற குறிப்பால் இது உடலை யும் உயிரையும் விலக்கிற்று. 'உயிரி' என்பது மனித இனத்தையும் உட்படுத்துவதானாலும் இது உயிரினமும் சுட்ட முடியாது. எனவே இது மனித இனம் உள்ளடக்கிய உயி ரினத்தின் வாழ்வு குறித்தது என்பது பெறப்படுகிறது.

இங்கே அன்பு என்பது குறட்பாவில் முன் வந்த என்பு என்பதனுடன் எதிரிணையாய், அதற்கு இணையான உவமக் கூறாக வந்தது.

மேலே அறம் என்பதன் கீழும் வெயில் என்பதன் கீழும் சுட்டப்பட்ட அன்பு வேறு, இவ்வன்பு வேறு. அது அறத் துடன் விரவிய அன்பு, கதிரவனொளியில் வெயிற் பண்புடன் விரவிய மழைப் பண்புக்கே அது சரியிணையான உவமக் கூறாகக் கொள்ளத்தக்கது. இங்கே உயிர் வாழ்வுடன் விரவிய அன்பு, உயிருடன் உயிராகக் கலந்துறையும் அன்புப் பண்பே சுட்டப்பட்டது. இது என்புடன் சரியிணையான பண்பு ஆகும். மழைப் பண்பு கலவா வெயிலின் வெப்பாற்றலிலிருந்து, உடலை என்பு காப்பது போல, அன்புப் பண்பு பரவா அற ஆற்றலிலிருந்து அதாவது அறத்தின் ஊழாற்றலிலிருந்து, உயிரின் அன்புப் பண்பு அதாவது உயிருடன் கலந்த அன்புப் பண்பு உயிரைக் காக்கும் என்பது கருத்து.

என்புக்கும் அன்புக்கும் உள்ள தொடர்பை இவ்வதிகா ரத்தில் திருவள்ளுவர் மீட்டும் மீட்டும் குறிக்கிறார். என்பு உயிர் போன்றது என்று இரண்டாம் குறட்பாவில் குறித்து; உயிர் மலர்ச்சியில் அன்புடன் இணைந்து பிறந்து வளர்வது என்பு என மூன்றும் குறட்பாவில் விளக்கம் தந்து; அவர் இக் குறட்பாவில் அதனை உடலில் உயிரின் அன்பு மலர்ச்சி யாகவும், அன்பின் சின்னமாகவும் விளங்குவது, இன வாழ்வில் அறத்தோடு இயைந்த மழைப் பண்பின் சின்ன மாகவும் அமைவது எனச் சுட்டியுள்ளார்.

வெயிலோடு விரவும் பண்பே, வெயிலிலிருந்து பிறக்கும் பண்பே, மழைப் பண்பு. அதனைத் தனி உயிர் தன் உடலில் சேமித்து வைத்த சேமச் செறிவே என்பு. அது வெயிலின் மழைப் பண்பு விரவாத வெப்பாற்றற் கூற்றினை நீடித்துத் தடுத்து வாழ உடலுக்குத் துணை செய்கிறது. அதுபோல, அறத்தோடு விரவும் பண்பே, அறத்திலிருந்து பிறந்த பண்பே, அன்புப் பண்பு. அன்புடைமை என்பது தனி உயிர் தன் வாழ்வில் அதைச் சேமித்து வைக்கும் சேமச் செறிவுப் பண்பே ஆகும். அது அன்புடன் விரவாத அறத்தின் அழி வாற்றலை, அதாவது ஊழ் ஆற்றலை, அதாவது ஊழின் அழி வாற்றலை எதிர்த்து வெல்ல உயிருக்கு உதவும் துணை ஆகும்.

இக் குறட்பாவில் இங்ஙனம் அன்பும் என்புமே கூறப் பட்டாலும், அன்பு இங்கே அன்புடைமைப் பண்பையே, அதாவது உயிரின் வாழ்வில் இடம்பெற்ற அன்புப் பண்பையே குறித்தது. அதுபோல இக் குறட்பாவில் அறம் என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டாலும், அது அன்புப் பண்பு நீங்கிய அறமே குறித்தது. ஏனெனில் இங்கே அறம் என்பதற்குக் கதிரவனொளி உவமக் கூறு ஆகாமல், வெயில், அதாவது மழைப் பண்பு நீங்கிய கதிரவனொளியே உவமக்கூறு ஆக்கப்பட்டுள்ளது. எனவே கதிரவனொளி அறத்துக்கும்; மழைப் பண்பு அன்புப் பண்புக்கும்; வெயில் அன்பு விரவா அறத்துக்கும் உவமக் கூறுகளாக நின்றன.

இவ்வாறு வெயில் என்ற குறிப்பால் மழைப் பண்பும், அதன் எதிரிணையான அன்புப் பண்பும் அவாய்நிலைச் சுட்டுக் கள் ஆயின. என்பு என்றதன் குறிப்பால், அதற்கு எதிரிணை யாக வந்த 'அன்பு' என்ற சொல் அன்புடைமை காட்டிற்று'

வெயிலும் மழைப் பண்பும் ஒரே கதிரவனொளியின் இரு கூறுகள். அதுபோல அன்பு விரவா அறமும் அன்புப் பண்பும் ஒரே அறத்தின் இரு கூறுகள். தனி உயிரின் உடலிலே மழைப் பண்பின் செறி சேமப் பண்பான என்பு வெயிற் பண்பு தடுத்தாண்டு உடலில் நின்ற உயிர்த்துணை ஆகிறது. அதுபோல தனி உயிர்களின் குடும்ப சமுதாய இன வாழ்வுகளில் அன்புப் பண்பின் செறி சேமப் பண்பான

அன்புடைமை அன்பு கலவா அறப் பண்பின் அழிவிலிருந்து அவ் வாழ்வைக் காக்கிறது.

காயுமே என்பது 'வாட்டி வதக்கி அழித்துவிடும் தன்மை யுடையது' என்ற பொருளுடையது ஆகும். இதில் ஏகாரம் தேற்ற ஏகாரமாய் நின்று, இது உறுதி என்ற வற்புறுத்தல் பொருள் தந்தது என்பது இலக்கணக் குறிப்புரையில் கூறப் பட்டது.

காய்தல் என்பதற்கு இங்கே நாம் கூறிய பொருள்கள் வாட்டுதல், வதக்குதல், அழித்தல் என்பனவாகும். ஆனால் வாட்டுதல், வதக்குதல், அழித்தல் ஆகிய யாவும் (வாடுதல், வதங்குதல், அழிதல் ஆகியவற்றின்) பிற வினைகள். காய்தல் என்பதோ தன்வினை ஆகும். ஆனால் வாடுதல், வதங்குதல், அழிதல் ஆகிய தன்வினைகள் செயப்படுபொருள் குன்றிய, செய்பொருள் ஏலா வினைகள். காய்தலோ பிற வினைப் பொருள்கொண்டு செயப்படுபொருள் குன்றாத, செய் பொருள் ஏற்கும் வினை. அது 'என்பிலதனை', 'அன்பிலதனை' என இரண்டு செய்பொருள்களையே தழுவு சொற்களாகக் கொண்டுள்ளது.

வெயில் காய்கிறது. அக் காய்வுதான் அழிக்கிறது. வெயில் தன் இயல்பிலேயே ஓர் அழிக்கும் ஆற்றலன்று. ஏனெனில் அதுவே ஆக்க ஆற்றலான மழைப் பண்பாகி. அதனை இயக்கித் தானும் ஆக்க ஆற்றல் பெருக்குவதாக இயங்கவல்லது ஆகும். எனவே அழித்தல் ஆற்றலாக இயல்வது காய்தல், அதுவும் ஈரக் கலப்பு இல்லாதவிடத்து நிகழும் காய்தல் ஆற்றல் மட்டுமேயாகும். ஆகவே 'காயுமே' என்பதன் நிறைபொருள் 'ஈரமில்லாத, ஈரக் காப்பில்லாத பொருள் மீது காய்தலால் வாட்டி வதக்கி அழித்தல் என்பதே யாகும். அதுபோல வெயில் என்பதன் நிறைபொருள் 'மழைப் பண்புக் கலப்பற்ற வெயில்' என்பதே. இதனால் இக் குறட்பாவில் 'வெயில் காயுமே' என்பதன் வள்ளுவ நிறை பொருள், 'மழைப் பண்புக் கலப்பற்ற வெயில், ஈரமோ ஈரக் காப்போ அற்ற பொருள் மீது காய்வதால், வாட்டி

வதக்கி அழிக்கும் ஆற்றலாய்ச் செயற்படும்' என்பதே யாகும்.

காயுமே என்ற சொல் தன்வினையாக வந்தே செயப்படு பொருள் கொண்டதன் குறிப்பு வளமும், 'வெயில்', 'காயுமே' என்ற சொற்களின் குறிப்பு வளமும் இவ் வள்ளுவ நிறை பொருளிலேயே காணக் கிடக்கின்றது.

சிறப்புரை: அறத்துக்கு அழிவாற்றலும் உண்டு. ஆக்க ஆற்றலும் உண்டு. எல்லா உயிர்களும் ஆக்க ஆற்றலைப் பயன்படுத்தியே வளர்கின்றன. ஆனால் அன்புடைய உயிர்கள் மட்டுமே அழிவாற்றலை எதிர்த்து நின்று அந்த அன்பின் பாதுகாப்பால் நீடித்து வாழ முடியும். அன்பை எந்த அளவுக்கு ஒருவர் பெருக்கிக் கொள்கிறாரோ, அந்த அளவுக்கே அவர் நீடித்த வாழ்வும் வளமும் பெற முடியும்.

இயற்கையின் அழிவாற்றல்களில் வெயில் ஒன்று. அதை எதிர்த்து எலும்பிலா உயிர் நீடித்து வாழ முடியாது. அதுபோல. இயற்கையாற்றலின் கூறான அறத்தின் அழி வாற்றலை எதிர்த்தும் அன்பிலா உயிர்கள் நீடித்து வாழ முடியாது.

பொருள்வளம்: (1) இக் குறட்பாவின் ஓசை ஆற்றொழுக்கான அமைதியான படுத்தலோசை. அறம் என்ற இறுதிச் சீரொன்றே வல்லிசையுடைய தாகவும், வெயில் போல என்ற சீர் ஒன்றே காய்ச் சீராகவும் வந்து, குறட்பா முழுவதும் முனைத்த மெல் லிசைப்பாகவே இயன்றது.

குறட்பாவின் வாசகப் பொருள் எதிர்மறை போலக் கூறப்பட்டாலும், அது ஆக்கவளப் பொருளே கூறுவதனை இவ் வொழுக்கும் ஓசையும் குறித்துக் காட்டின. 'என்பிலதனை வெயில்போல' என்ற உவம

வாக்கியத்தில் 'காய்வது' என்ற வினை அவாய்நிலை யாக வந்ததும் இதனையே வலியுறுத்திற்று. என்பி லதனை வெயில் காய்வது என்ற மேலீடான அழிவுச் செயல், உண்மையில் என்புளதனை அதே வெயில் வளர்க்கும் செயலே யாகும். ஏனெனில் உயிரின் மலர்ச்சிப் போக்கில் இந்த வெயிலாற்றலின் அழிவு இல்லாவிட்டால், மரக்காழ் ஆற்றல், உரம் ஆற்றல் ஆகியவை தோன்றியிருக்க மாட்டா. இதுபோலவே, அறத்தின் அழிவாற்றல் மேலீடாக அழிவாற்றலாகத் தோற்றினும், அதுவே உயிரினங்களின் காப்பு வள மாகக் காதல், கற்பு, அன்பு என்ற பொதுவுற மலர்ச் சிகளையும், அன்பு - பண்பு - பாசம் என்ற சிறப்புற மலர்ச்சிகளையும் காப்பு வளங்களாக, பேரின்ப நோக் கிய பொங்கல் ஆக்க அன்பு வளங்களாக வளர்ப்பது ஆகும்.

ஓசையின் ஆற்றொழுக்கு இந்த அறத்தின் ஆக்க மலர்ச்சி சுட்டிற்று. அது எதிர்மறையாய் வந்து உடன் பாடு குறித்ததாலும், 'வெயில்', 'அறம்' என்ற வல் லாற்றல்களே எடுத்திசைத்த குறிப்பினாலும், 'வெயில்' என்பதன் பொருட் குறிப்பினாலும் இந்த ஆற் றொழுக்கே ஆற்றொழுக்குவமையின் இருவழிப் படர்வு ஆழி சுட்டிற்று. எவ்வாறெனில், ஆற்றொழுக்கின் நில ஒழுக்கு மலை - நிலம் - கடல் என ஓடி, பின் வெயி லாற்றலால் அதுவே ஆவி வடிவான வான் ஒழுக்காகி, கடல் நீர் - முகில் - மழை என மீண்டும மலை நோக்கு கிறது. அதுபோலவே, அறத்தின் அழிவாற்றலின் செயலாலேயே, நில ஒழுக்குப் போன்ற காதல்–கற்பு- அன்பு என்ற புற மலர்ச்சியும், அன்பு - பண்பு - அருள் என்ற அக மலர்ச்சியும் ஏற்படுகின்றன.

காயுமே என்பதன் ஈற்று ஏகாரம் அசைநிலையன்று, தேற்ற ஏகாரம். தவிர இச் சீரில் முதல் எழுத்தும் இறுதி எழுத்தும் எடுத்திசைததன. திருவள்ளுவரின் வாத முறைப் பாவனையை இச் சீர் இவ்வாறுக எடுத்துக் காட்டுகிறது. 'அன்பிலதனைக் காயுமே அப்பா, நீ அன்பு பெருக்கிக் கொள்ளேன்' என்று திருவள்ளுவர் வாதாடுவது போல இதன் ஓசை அமைந்துள்ளது. இதனாலும் இக் குறட்பாவின் உடன் பாட்டுப் பொருளும் ஆக்கவளப் பொருளும் முனைப்பாகச் சுட்டப்பெறுகின்றன.

(2) என்பிலதனை, அன்பிலதனை ஆகிய இரண்டு சொற்களும் எதிரெதிரிணைகளாக நிறுத்தப்பட்டுள்ளன. இரண்டும் முறையே உயிரின் புற உடலையும், உயிரியின் அக உயிரையும் குறித்தவை. அத்துடன் முன்னது கீழின உயிரியையும் பின்னது மேலின உயிரியையும் மனிதனையும் குறித்தன. இரண்டும் எதிர்மறையாக நின்றதாலும், என்புளதே அன்புளதாதலாலும், என்பிலது, என்புளது, அவ்வென்புளதனிலும் அன்பிலது, அன்புளது என்று இது மேல் மேல் உயர்ந்து செல்லும் உயிர் உயர்வு சுட்டி மேல் மேல் உயிர் மலர்ச்சி நோக்கியது காணலாம்.

என்பிலதனை, வெயிலும், அன்பிலதனை அறமும் காயுமெனவே, என்புளதனை மழைப் பண்பும், அன்புளதனை அன்பறமும் வளர்த்து நீடு வாழ்வளிக்கும் என்பது தருவிக்கப்பட்டது.

என்பிலதனை, அன்பிலதனை ஆகிய இரு சீர்களும் நடுவே பிளவுற்றுத் தனித் தனியான இரு குறுஞ் சீர்களாய் உள்ளன. வெயிலின் செயலும், அறத்தின்

செயலும் புற வாழ்வை, அக வாழ்வை அறுத்தெறி வதை இது தொனிப்படுத்திக் காட்டிற்று. குறுஞ்சீர்கள் புழுப் போன்ற உயிரின் சிறுமையையும், அறத்தின் பேராற்றலையும் நம் முன் நிறுத்தின. 'வெயில்போல', 'காயுமே' என்ற நீள்சீரோசைகள் இப் பேராற்றலைத் துணைகொள்ளின் அதுவே ஆக்க வளமாம் என்பதனை நமக்கு அறிவுறுத்துவனபோல் இயல்கின்றன.

(3) என்பும் அன்பும் இக் குறட்பாவில் எதிரிணை கள். வெயிலாற்றலின் எதிரிணையான மழையாற்ற லின் சேம வைப்பே என்பு ஆவதுபோல, அறத்தின் அழிவாற்றலின் எதிரிணையான ஆக்க ஆற்றலின் சேம வைப்பே அன்பு என்பது தொனிப் பொருளாயிற்று.

எலும்பு இங்கே என்பு என வழங்கப்பட்டது இந்த எதிரிணை ஓசை நயமும் அது சார்ந்த குறிப்புப் பொருளும் தருவதற்காகவே. இதே கருத்துடன் முன் குறட்பாவில் (74) நட்பு என்ற சொல் நண்பு என வழங்கப்பட்டது காணலாம்.

(4) என்பிலது, அன்பிலது ஆகிய இரண்டும் எதிர்மறைகளாகவே வழங்கியதற்கு இன்னொரு காரணமும் உண்டு.

'அன்பிலது' உயர்படி உயிர்களில் தாழ்ந்த நடுத் தர உயிர்களையே குறிப்பது என்பது வெளிப்படை. அன்புளதோ உயர் படியிலும் உயர்தளம் குறிப்பது. அந்த உயர் படி உயர் தளத்திலும் உயர்ந்த மனித இனமே அன்பின் ஆக்க வளத்துக்கு உரியது ஆகும்.

'என்பிலது' இதுபோலவே தாழ் படி உயிர்களில் தாழ் படி குறித்தது. 'என்புளது' அத் தாழ் படியில்

உயர் தளமான இடைத் தர உயிர் குறித்தது. என்புள தனிலும் தண்டெலும்புடையன, எலும்புடையன என்ற இரு படிகள் உண்டு. என்பிலது இங்கே தண்டெலும்பற்ற, எலும்புடையனவற்றையே குறித்தது. ஏனெனில் 'புழு' இந்தப் படிக்கு உரியதே யாகும். வெயில் காய்ந்தழிப்பது இந்தப் படியினையே. இதற்கும் கீழே முற்றிலும் எலும்பற்ற ஓரறிவுயிரிகளும் ஓரணு உயிரிகளும் உண்டு. வெயில் அவற்றைக் காய்வதில்லை என்பது தற்கால அறிவு நூலுணர்ந்த செய்தி. ஏனெனில் அவை மண்ணுள்ளே, காற்றிலே, கடல் நீரிலே எங்கும் வெயிலோ, வெப்பமோ படுமிடமெல்லாம் இருந்து, உணவாற்றலை நேரே கதிரொளியிலிருந்து, காற்றிலிருந்து, மண்ணிலிருந்து, நீரிலிருந்து பெறத்தக்கவை.

சாவா, பிறவா உயிர்கள்—காதலும் பாலினப் பிரிவும் இல்லா உயிர்கள் இவையே.

அன்புளதன் உச்சிமுகடான மனித இனத்திற்கு நேர் எதிரிடையான உயிர்கள் இவை.

மனித இனம் அன்பினால் எய்தும் சாவா, மூவா, பிறவாநிலைப் பேரின்பத்தை இந்த எதிரிடை சுட்டிக் காட்டுகிறது.

ஆனால் ஓரணு வுயிருக்கும் உச்சநிலை மனிதனுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. முன்னவற்றில் உடல் தான் சாவா, பிறவா நிலை உடையது. இது கிட்டத் தட்டக் கல் போன்ற, உயிரிலாப் பொருள் போன்ற நிலையேயன்றி வேறன்று. எனினும் கல்லுக்கு உயிர் இல்லை, வாழ்வில்லை, இந்த அணு உயிர்களுக்கு உயிர்

உண்டு. கல் இனம் பெருக்காது. இந்த அணு உயிர்களோ உயர்தர உயிரிகளைவிட வேகமாக, இரட்டித்து இரட்டித்துப் பெருகவல்லன. மனித இனமும், உயர்தர உயிரினங்களும் இந்த உயிர் வாழ்வு வகையில் அவற்றினிடமிருந்து மேம்பட்ட நிலை பெறுவது, வாழ்வின் நீட்டிப்பிலும் வாழும் வகையிலும் பண்பிலுமே.

உயிர் மலர்ச்சியின் குறிக்கோள், மனித இனத்தின் குறிக்கோள் சாவா மூவாப் பிறவா வாழ்வு—ஆனால் இது உயிரிலாப் பொருளுக்கோ, கீழ்க்கோடி உயிரினங்களுக்கோ உள்ள உடலின் சாவா மூவாப் பிறவா வாழ்வு அன்று—உயிர் வாழ்வின், இன வாழ்வின் சாவா மூவாப் பிறவா நிலையே யாகும். ஓரணுவுயிரின் உயிர் வாழ்வு ஒரு கணமே—அது இன வாழ்வு வாழ்வதில்லை. மனிதனே நீடித்த வாழ்வு, நல்வாழ்வு—என்றும் வளரும் பொங்கல் இன வாழ்வு வாழ்கிறான். அதுவே அவன் குறிக்கோள், இன வாழ்வின் குறிக்கோள்.

என்பிலது, அன்பிலது என்பவற்றின் எதிர்மறை வழக்காறு தரும் முழுப் பொருள்வளம் இது.

(5) காயுமே என்பதில் காயும் என்ற தன்வினை வாட்டி வதக்கி அழிக்கும் என்ற பிறவினைப் பொருள் தந்து செயப்படுபொருளும் கொண்டதனால் ஏற்படும் பொருள்வளம் விளக்கவுரையிலேயே தரப்பட்டது. வெயிலோ, அறமோ இயல்பாக அழிவாற்றல்கள் அல்ல, ஆக்க ஆற்றல்களே; அவற்றின் அழிவாற்றல் கூட உயிர்கள் வகையில் நீடித்த இன ஆற்றல் மலர்ச்சியூக்கும் காப்பு வள ஆற்றல்களே என்பதை இது தொனிப் பொருளாகத் தந்தது.

தமிழில் காய்தல் என்பதன் பிறவினை வடிவம் காய்ச்சுதல் என்பதே. இதன் பிற வினைபோலத் தோற்றும் காய்த்தல் என்னும் சொல், உண்மையில் காய் (முதிராக் கனி) என்ற பெயர்ச் சொல்லிலிருந்து பிறந்த புது வினையேயாகும். ஆனால் இந்த இரண்டினுள் எதுவும் அழிவு குறிக்கவில்லை என்று காணலாம். காய்வித்தல் என்ற சொல் நெல் முதலிய பொருள்கள் வகையில் உயிராற்றல் பேணுவதையே காண்கிறோம். உயிரிலாப் பொருள்களில் ஈரம் புலர்த்தும் இதுவே, உயிர்ப் பொருள்கள் பலவற்றில் உயிராற்றல் சேமிக்கிறது. காய்ச்சுதலும் இதுபோலவே நீர்ப் பொருளில் செறிவூட்டுகிறது. மருந்து நீர்கள் காய்ச்சுவதால் செறிவேறும். கருப்பஞ்சாறு காய்ச்சப்படுவதனால் பலவிதச் செவ்விகள் உற்று வெல்லப் பாகு, பதநீர், வெல்லம், சருக்கரை, கற்கண்டு முதலிய பதன் கெடாப் பொருள்கள் ஆகின்றன.

காய்த்தல் என்ற வடிவம் காய்தல் என்பதனுடன் தொடர்புடைய சொல்லே யாயினும் நேர் பிறவினையன்று. ஆனால் அதுகூட அழகு மலர், அழகன்றிப் பயனும் தரும் விதையாவதை ஒருபுறம் சுட்டுகிறது. மற்றொரு புறம் அது கனியின் முதிராப் பருவம் சுட்டுகிறது.

காயுமே என்ற சொல் வழக்காற்றால் இக் குறட்பாவில் திருவள்ளுவர், அறத்தின் காய்வு அதாவது அழிவாற்றல் அழிவாற்றலன்று, ஆக்க ஆற்றல், இன்பக் கனிவு, பேரின்பக் கனியமுது ஆகியவற்றுக்குரிய ஒரு முன்னீடான முதிராச் செயலே என்ற பேருண்மையைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

(6) என்பிலது என்பதன் ' து ' ஈறு வாயிலாகத் திருவள்ளுவர், காய்வதன் மூலம் அழிவது உயிரின் உடல் என்பதனையும்; அது புழுப்போன்ற கீழின அற்ப உயிரினது உடல் என்ற அவலக் குறிப்பையும் தருகிறார். அதுபோலவே ' அன்பிலது ' என்பதிலும் ' து ' ஈறு மூலம், உயர்தர உயிர்களிலும்கூட அன்பில்லையெனின் அது கீழ்த் தர அஃறிணை உயிர் ஒத்ததேயாகும் என்ற அவலக் குறிப்பையும்; அது உயிர் வாழ்வில் உயராததனால், உடல் வாழ்வே உடையது என்ற குறிப்பையும் தந்து விடுகிறார்.

தனிக் குறிப்புக்கள்; *(1)* 'போலவே' என்பதன் முன் மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் தவிர மற்ற அனைவரும் 'காய்வது' என்ற சொல்லை அல்லது கருத்தை அவாய் நிலையாகப் பொருள்கோளில் சேர்த்தே கூறியுள்ளனர்.

'காயும் அத்தன்மை போல' என்று பரிதியாரும்: 'காய்ந்தாற்போல' என்று பரிமேலழகரும்; 'ஈரம் புலர்த்தி வாட்டி விடுவது போல' (ஜிஸ்ப்ரகார் ரஸ்ஹீன் கர் தேதாஹை) என்று இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராசு நாயுடுவும்; 'உருவழியக் காயுமாப்போல்' என்று காலிங்கரும்; 'சுடுமாறுபோல' அல்லது 'சுடுவதுபோல' என்று மணக்குடவரும், புலவர் குழந்தையும், புலவர் ந. சி. கந்தையாவும், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர்கள் ட்ருவும், ஐ. டி. தங்கசாமியும், வ. வே. சு. ஐயரும்; 'நீறுக்கிவிடும்' (பஸ்ம கரேகா) என்று இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் வெங்கட கிருட்டினனும்; 'எரிப்பது போல' என்று கவிஞர் இராமலிங்கனாரும்; 'காய்ந்து வருத்துவது போல' என்று பேராசிரியர் முனைவர் சி. இலக்குவனாரும் இதனைப் பொழிப்புரைத்துள்ளனர்.

'காயுமே' என்பதற்கு இவ் அவாய் நிலைப் பொருளே எல்லாராலும் இயல்பாகப் பொருளாகத் தரப்பட்டுள்ளது.

அவாய்நிலை கொள்ளாத மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் 'சுடுமே' என்று மொழிபெயர்த்தார்.

(2) 'வெயில்' என்பதற்கு 'வெயில்', 'வெயிலானது', 'வெப்பம்', 'ஆதித்தகிரணம்' என்றே யாவரும் பொருள் உரைத்துள்ளனர்.

வெயில், அறம் ஆகியவை முற்றிலும் அழிவாற்றல்கள் அல்ல என்றும், இரண்டும் இயல்பாக அழிவுக் காரணங்களன்றி, அழிக்கும் ஆற்றல்களல்ல என்றும் இம் மணிவிளக்கவுரை கூறியதற்குப் பரிமேலழகர் உரையும் அதையே பின்பற்றிய ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி பொருளுரையும் ஆதரவு தருகின்றன.

'வெறுப்பின்றி எங்கும் ஒரு தன்மைத்தாகிய வெயிலின் முன் என்பிலது தன் இயல்பாற் சென்று கெடுமாறு போல, அறத்தின் முன் அன்பிலது தன் இயல்பாற் கெடும் என்பதாம். அதனைக் காயுமென வெயில், அறங்களின் மேலே ஏற்றினர், அவற்றிற்கும் அவ்வியல்பு 'உண்மையின்' என்பது பரிமேலழகரின் விளக்கவுரைக் குறிப்பு ஆகும்,

[3] 'அறம்' என்பத்ற்குப் பெரும்பாலோர் 'அறம்', 'அறமானது', 'அறநெறி' என்றே கூறினர். பிற மொழியாளரும் கடமை [தர்மம்] நேர்மை[1] நல்லொழுக்கப் பண்பு[2] என்றே மொழிபெயர்த்தனர். பரிமேலழகரும், புலவர் ந. சி. கந்தையாவும் 'அறக் கடவுளும்' என்றனர்.

'[4] என்பிலதனை' என்பதற்கு, 'என்பில்லாத சீவனை' என்று மணக்குடவரும், 'என்பில்லாத ஆத்மாவை' என்று பரிதியாரும்; 'எலும்பில்லாத உயிரை' என்று புலவர் ந. சி. கந்தையா, கவிஞர் இராமலிங்கனார், மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் [எல்லில்லாப்ராணியே], ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூ[3], ஐ. டி. தங்கசாமி[4],

1. Righteousness 2. Virtue 3. The creature whien is witnout bone 4. Bonless creature

இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் சங்கரராக நாயுடு [அஸ்தி ஹீன் ஜீவ்கோ] ஆகியோரும்; புழுவை என்று பேராசிரியர் மூவர் சி. இலக்குவனாரும்; 'எலும்பில்லாத புழுக்களை' என்று ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் வ. வெ. சு. ஐயர் [1] இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் வெங்கடகிருட்டினன் [கீடே அஸ்திஹீன் கோ] ஆகியோரும்; 'எலும்பில்லாத புழுப் பூச்சிகளை' என்று புலவர் குழந்தையும்; 'எலும்பு இல்லாமல் வாழும் உடம்போடு கூடிய உயிரை' என்று பேராசிரியர் மூவர் மு. வரதராசனாரும்; 'தனக்குள் உறுதியில்லாது முழுதும் குழைந்து இருக்கும் உருவுடைத்தாகிய சிறு புழுவினை' என்று காலிங்கரும் உரை செய்தனர்.

'என்பில்லாத உடம்பை' என்று பரிமேலழகர் பொழிப்புரை தந்தார்.

என்பு என்பதற்குரிய சொல்லுருக் குறிப்பும், தனிப்பட்ட உயிர் மலர்ச்சி நூற்பொருளும் நீங்கலாக மற்றெல்லாக் கூறுகளிலும் இவ்வுரைகள் யாவும் படிப்படியாக இம் மணிவிளக்கவுரை நோக்கியுள்ளது காணலாம்.

'அன்பிலதனை' என்பதற்கும் இதுபோலவே 'அன்பில்லாதாரை', 'அன்பில்லாதவர்களை' எனப் பரிதியாரும், மணக்குடவரும், புலவர் ந. சி. கந்தையா, பேராசிரியர் மு. வரதராசனார், பேராசிரியர் சி. இலக்குவனார், கவிஞர் இராமலிங்கனார், மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் [திஸ்நேஹனே], இந்தி மொழிபெயர்ப்பாசிரியர்கள் பேராசிரியர் சங்கரராக நாயுடு [ஸ்நேஹ்ஹீன் ஜீவ்கோ], வெங்கடகிருட்டினன் [ப்ராணி ப்ரேம விஹீன்கோ], ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர்கள் ட்ரு [2], வ. வெ. சு. ஐயர் [3] ஆகியோரும்; 'யாவர் மாட்டும் வைக்கப்பட்ட அன்பிலாததனை' என்று காலிங்கரும், அதுபோலவே 'பிறருக்கு அன்பு செலுத்தாமல் வாழும் மனிதர்களுடைய ஆன்மாக்களும்' [4] என்று

1. The boneless worm 2, The soul which is without love 3. The man that doth not love 4. The souls of men who live without love to others

ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர்கள் ஜி. டி. தங்கசாமியும் பொருள் கொண்டுள்ளனர்.

'என்பிலதனை' என்பதற்கு உடலையும், 'அன்பிலதனை' என்பதற்கு உயிரையும் பொழிப்புரையில் குறிப்பிட்ட பரிமேலழகர், அதற்கு விளக்கமாக, 'என்பிலது என்றதனான் உடம்பு என்பதூஉம், அன்பிலது என்றதனான் உயிர் என்பதூஉம் பெற்றாம்' என்றார். அத்துடன், 'வெறுப்பின்றி எங்கும் ஒரு தன்மைத்தாகிய வெயிலின் முன் என்பில்லது தன் வியல்பாற் சென்று கெடுமாறு போல, அத்தன்மைத்தாகிய அறத்தின் முன் அன்பில்லது தன் இயல்பாற் கெடும் என்பதாம். அதனைக் காயுமென வெயிலறங்களின் மேல் ஏற்றினார், அவற்றிற்கும் அவ் வியல்பு உண்மையின்' என்று அவர் மேலும் கருத்துரை விரித்தார்.

பரிமேலழகரின் இக் கருத்து காலிங்கர், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஜி டி. தங்கசாமி ஆகியோர் தரும் கருத்து அளாவி இம் மணி விளக்கவுரைப் பொருள் வளமும் நோக்கியுள்ளது காணலாம்.

[5] 'இவ்வாறு அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம் எனப் பிறரும் கூறினர்' என்று பரிமேலழகர் 'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்' என்னும் நான்மணிக்கடிகை வெண்பா [83] அடியையும் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.

[6] 'புழுக்களுக்கு எலும்பில்லாததால் வெயிலில் சிக்கிக் கொண்டால் தப்பி ஓடாமல் துடித்துச் சாக வேண்டியது தான்' என்றும்; 'மனிதனுக்கு அவனுடைய எலும்போடு சேர்ந்து பிறந்திருக்கிறதான......அன்பு இருந்தால், தரும தேவதையின் வெப்பத்துக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்ளலாம்' என்றும் கவிஞர் இராமலிங்கனார் விளக்கம் தந்துள்ளார்.

மேலும் அவரே, 'உடலுக்கு நன்மை தேடிக்கொள்ள உதவுவது என்பு, உயிருக்கு நன்மை தேடிக்கொள்ள உதவுவது அன்பு' என்றும்: 'அப்படி மனிதனுடைய எலும்போடு

பிறந்திருக்கிற அன்பு, எதும்போடு நின்று விடாமல், நெஞ்சத்துக்கு வரவேண்டும்......எந்த அளவுக்கு அது மனத்தில் இடம்பெற்று மணம் வளர்கிறதோ, அந்த அளவுக்குத்தான் அவன் பிறருக்கு உதவி செய்யக் கூடியவன் ஆகிறான்' என்றும் அரிய கருத்து விளக்கங்கள் தந்துள்ளார்.

கவிஞர் விளக்கங்கள் பரிமேலழகர் விளக்கம் தாண்டி, இம் மணி விளக்கவுரை நோக்கித் துழாவுவது கண்டின்புறத் தக்கது ஆகும்.

78, அன்பே உயிரின் உயிர், உயிராற்றல் அதுவே:
இன வாழ்வின் உள்ளுயிர்; அது இல்லாமல்
இன வாழ்வு தழைக்காது.

அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை, வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்து அற்று.

பொ-ரை: அன்பு என்னும் உள்ளீரப் பண்பு (தம்) உள்ளத்தில் உயிர்நிலையாக, நிலைபெற அமையப் பேருத (உயிரிகளின்) உயிரோடு கூடி வாழும் வாழ்க்கையானது, கடும்பாறை நிரம்பிய நீர்த்தடமில்லாத பாலைவனத்தின் நடுமையத்திலே உலர்ந்து பட்டுப் போன மரம் மீண்டும் தளிர்த்தது என்றால் (அது எவ்வளவு நடைபெறக் கூடாத செய்தியோ, அது) போன்ற நடைபெறக் கூடாத தன்மை உடைய செய்தி ஆகும்.

க-ரை: பட்ட மரம் எங்குமே தளிர்க்க முடியாது. பாலைவனத்திலோ நீரில்லாமையால் நல்ல மரம்கூடத் தளிர்க்கவோ, வளரவோ இயலாது. தவிர, பாலை நிலத்திலாவது நீர் பாய்ச்சினால், அல்லது நீர் ஊற்றினால் நல்ல மரம் வளர வழி

யுண்டு. ஏனென்றால் பாலை நிலத்திலே நீர் தவிர மற்ற எல்லா வள வாய்ப்புக்களும் உண்டு. ஆனால் கடும்பார் நிரம்பிய வற்றல் பாலையில் நீர் கொணர்ந்தாலும் நிலம் பயனற்றதாகும். நல்ல மரம் நட்டு நீரும் பாய்ச்சினாலும் அது வாழாது, வளராது, தளிர்க்காது. இந் நிலையில் வன்பாலையில் பட்ட மரம் தளிர்த்தது என்று ஒருவர் கூறினால், அது நம்ப முடியாத, நடக்க முடியாத மும்மடி மும்மைக் கூடாமைச் செய்தியேயாகும்.

உள்ளத்தில் அன்பு இல்லாத உயிர் வாழ்க்கை வளம் பெற்றது என்றால், அது இது போன்ற நடக்க முடியாத, நம்பி ஏற்க முடியாத மும்மடி மும்மைக் கூடாமைச் செய்தியேயாகும். ஏனெனில் அன்போடியைந்த அறமே உயிரின் பிறப்புக்குரிய நிலம், வாழ்வுக்குரிய மழை, வளர்ச்சிக்குரிய உரம் ஆகும். அன்பின்றி உயிர் தோன்றாது; தோன்றிய பின்னும் அன்பின்றி அது தொடர்ந்து வாழ்வு பெறாது; தொடர்ந்து வாழ்வு பெறினும், அன்பின்றி அது தளிர்த்துப் புது வாழ்வு பெற்று வளமுறாது.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்றே. அவாய்நிலைக் கூறுகள் உட்பட இதன் சொற்கள் இரண்டே.

அவையாவன:

1. அன்பு [தம்] அகத்து இல்லா [உயிர்களின்] உயிர் வாழ்க்கை (இது எழுவாய்).

2. வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்து அற்று (இது பயனிலை).

இக் குறட்பா இரு விகற்பக் குறட்பா, ஏனெனில் இதில் முதல் அடியிலேயே முதல் கடைச் சீர்கள் ஒரு வகை எதுகையாகவும் அடுத்த அடி மற்றொரு வகையாகவும் அமைந்துள்ளன. அத்துடன் இதன் முதலடியின் கடைச் சீர் எதுகை பெற்றுத் தனிச் சீர் போல நின்று, பெரிதும் மெல்லோசையுடைய முற்பகுதிக்கும், பெரிதும் வல்லோசையுடைய பிற்பகுதிக்கும் இடையே மென்மை வன்மை இயைந்தும், மூவசையும் நிமிர்ந்தெடுத்தும் நீளிடையிட்ட அமர்ந்த சமன் எடுப்போசை பெற்றும் குறட்பாவிடையே நிறைகோல் போல் நடுநாயக உயிர்ச் சீராய் நின்றது.

இக் குறட்பாவின் நீள் சீர்கள் நான்கு. உயிர் வாழ்க்கை என்பதும் வன்பாற்கண் என்பதுமே நெடுநீள் சீர்களாகிய காய்ச்சீர்கள். அன் பகத்து, மரந்தளிர்த்து ஆகியவையே நீள் சீர்களாகிய விளச் சீர்கள். காய்ச் சீர்களில் முதலது புளி மாங்காய்ச் சீர். இதில் இரண்டாவது நேரசையே எடுத்திசைத்து, அவ்வசை யிறுதியில் வன்புணர்ப்பும் சிற்றிடையீடும்[1] பெற்றது. இரண்டாவது காய்ச் சீர் முற்றிலும் மூவசையும் எடுத்திசைத்துச் சமனோசையாய் அசைதோறும் வல் இடையீடு பெற்று நின்றதென்பது மேலே குறிப்பிடப்பட்டது. இதுபோலவே விளச் சீர் இரண்டிலும் முதலது கூவிளமாய், முதலசை படுத்திசைத்தும், பின்னசை இறங்கிசைப்பாக நலிந்தும், அசைகளிடையே இனிய இடையீடு பெற்றும் வர, இரண்டாவது விளச் சீர் கருவிளமாய் முதலசை எற்றிசைப்பாய் முதலெழுத்து நலிந்தும் மறு எழுத்துப் படுத்தும் இரண்டாமசை இறங்கிசைப்பாய் முதலெழுத்து எடுத்தும் பின்னது படுத்தும் வந்தன. இச் சீரில் அசையிடை இடையீடு சிறிதும் இல்லாததுடன் அசைகள் விரைந்தடுக்குவதும் காணலாம். இவ்வசையின் ஈறு அடுத்த அசைக்கு முன் முறிவுற்றது.

முதலடியில் இல்லா என்ற இரண்டாம் சீரும், இரண்டாம் அடியில் வற்றல் என்ற முதற் சீரும் மட்டுமே தேமாச் சீர்கள்.

---

1. Pause

முன்னதில் பின்னசையும், பின்னதில் முன்னசையும் எடுத்திசைத்தன.

அற்று என்ற இறுதிச் சீர் காசு வாய்பாட்டு அசைச் சீர். இக் குறட்பாவில் இக் கடையசைச் சீரில் முதலெழுத்து எடுத்திசைத்துள்ளது என்பது இக் குறட்பாவுக்குரிய தனிச் சிறப்புக்களில் ஒன்றாகும்.

தெளிந்த பாலை நீர் ஊற்றின் அகல எளிமையுடன், அடியற்ற பேராழமுடையது இக் குறட்பா. இத்தனை ஓசைச் சிறப்புக்களும் பிற பொருட் செறிவு வளங்களும் புறந்தோற்ற வண்ணம் அது கிட்டத்தட்ட உரைநடை போலவே இயலெளிமையுடன் விளங்குகிறது.

அன்பு [தம்] அகத்து இல்லா [உயிரிகளின்] உயிர் வாழ்க்கை, என்ற தொகைநிலை அதன் இறுதிச் சொல்லான 'உயிர் வாழ்க்கை' என்பதனை ஒப்ப, பெயர்ச்சொல். இத் தொகைநிலை குறட்பா வாசக எழுவாயாய், 'அற்று' என்று முடியும் தொகைநிலை வினையைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

உயிர் வாழ்க்கை என்பது ஒரு தனித் தொகைநிலைச் சொல். உயிருடன் வாழும் வாழ்க்கை, உயிர்களோடு அதாவது உயிரிகளோடு கூடி வாழும் வாழ்க்கை என்ற பொருள்களுடன் இரு வழியிலும் இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும். இதில் உயிர் என்பது உய் என்ற வினைப் பகுதி அடிப்படையாக (பயிர், செயிர், மயிர் என்ற சொற்களைப் போல) இர் என்ற ஈற்றை விகுதியாகக் கொண்ட தொழிற் பெயர் என்றோ; உய், இரு என்ற சொற்களின் இணைப்பு என்றோ கூறத்தக்கதாகும். இரு வழியும் பொருள் ஒன்றே; உய்த்து இருப்பது என்பதே.

உயிரிகளின் என்பது முன் வரும் அகத்து என்பதன் குறிப்பால் வருவிக்கப்பட்டுள்ள அவாய்நிலைச் சொல் ஆகும். இதில் இன் ஆறாம் வேற்றுமை உருபு. இவ் வேற்றுமைப் பொருள் 'உயிர் வாழ்க்கை' என்ற தொகையைத் தழுவி நின்றது. உயிரிகள் என்பதில் கள் பன்மை விகுதி. உயிரி என்ற பெயர் உயிர் என்ற பெயரடியாக, உடைமைப் பொருள் விகுதியான இகரம் இணைந்து வந்தது.

இல்லா என்பது இல்லையாகப் பெற்ற என்ற பொருளில் குறிப்புப் பெயரெச்சம். இதில் இன்மை பண்புப் பெயர் அடி. 'ஆ' எதிர்மறை இடைநிலை. அகரம் இறுதியில் பெயரெச்ச விகுதியாய் இணைந்து இடைநிலை உயிரின்பின் கெட்டது. பண்படியின் மை ஈறு கெட்டு. முன் மெய்யான னகரம் லகரமாகத் திரிந்தது. இடைநிலை முன் இந்த லகரம் இரட்டிற்று.

இப் பெயரெச்சப் பொருள் உயிரிகளின் என்ற அவாய்நிலைப் பெயரையும் உயிர் வாழ்க்கை என்ற தொகைநிலைப் பெயரையும் ஒருங்கே தழுவிற்று.

'இல்லா' என்ற இப் பெயரெச்ச வழக்கு தமிழிலக்கணத்துக் குரிய ஒரு சிறப்பு வழக்கு ஆகும். ஏனெனில் இதன் வினை முதலான 'அன்பு' இதன் எழுவாயாகவும், 'இல்லையாகப் பெற்ற' என்ற இதன் பொருளில் தொக்க 'பெறுதல்' என்ற வினையின் வினை முதலான 'உயிரிகள்', 'உயிர் வாழ்க்கை' ஆகியவை இதன் தழுவு முதலாகவும் அமைந்துள்ளன.

அகத்து என்பதன் குறிப்பாலேயே உயிரிகளின் என்ற அவாய் நிலையும், அந்த உயிரிகளையே சுட்டு முதலாகக் கொண்ட தம் என்ற அவாய்நிலையும் வருவிக்கப்பட்டுள்ளன. அம் முறையில் இங்கே அகத்து என்பது உயிரிகளின் அகத்து என்ற பொருள் குறிப்பதாகும் ஆனால் அத்துடன், உயிர் வாழ்க்கை என்ற விடத்து உயிர் என்ற சொல் மிகையாக வழங்கப்பட்ட குறிப்பாலே. அகத்து என்பது உயிர் வாழ்க்கையின் அகத்து என்ற பொருளும் உடையதாகும்.

அகத்து என்ற சொல்லின் பின் ஏழாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. இதில் அகம் என்பதே பெயர் வடிவம். இது வேற்றுமையில் அத்துச் சாரியை பெற்று, சாரியை முன் பெயரீற்று மகரமும், பெயரின் பின் சாரியை முதல் அகரமும் கெட்டு அகத்து என்றாயிற்று.

இவ் ஏழாம் வேற்றுமைப் பொருள் இல்லா என்பதன் வினைப் பொருள் தழுவிற்று.

தம் என்ற சொல் அகத்து என்பதன் குறிப்பால் அதன் இன உறவுச் சுட்டாகவே அவாய்நிலையாக வருவிக்கப்பட்டது. இதன் சுட்டு முதல் அதே அகத்து என்ற சொல்லின் குறிப்பால் வருவிக்கப் பட்ட உயிர்களின் என்ற அவாய் நிலையேயாகும். இச்சொல் திணை பால் பொதுச் சுட்டான படர்க்கைப் பன்மைப் பெயரான தாம் என்ப தன் வேற்றுமை வடிவம். இதன் பின் ஆறும் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. இவ் வேற்றுமைப் பொருள் அகத்து என்ற பெயர் தழுவி நின்றது.

அன்பு என்ற பெயர் எழுவாயாய் இல்லச என்ற பெயரெச்சப் பகுதிக்கு வினை முதலாக 'அன்பு இல்லையாகப் பெற்ற' என்ற பொருளில் வழங்கிற்று.

வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்து அற்று என்பது தொகையின் இறுதிச் சொல்லாகிய அற்று என்பதை ஒப்ப வினை முற்று. இது குறட்பா வாசகப் பயனிலையாய், உயிர் வாழ்க்கை என முடியும் நீள் தொகையை எழுவாயாகக் கொண்டு நின்றது.

அற்று என்பது 'அ' என்ற சுட்டடியாகப் பிறந்த ஒன்றன் பால் குறிப்பு வினைமுற்று. இதில் 'று' ஒன்றன்பால் விகுதி. விகுதி றகரம் இரட்டித்தது. அன்ன; அனைய; அனைத்து என்பவை யும் இதே சுட்டடியான பெயரெச்ச, வினைமுற்று வடிவங்களே. பிற சுட்டு வினாக்களடிப்படையாக இற்று; இன்ன, இனைய, இனைத்து; எற்று, என்ன, எனைய, எனைத்து ஆகிய வடிவங்களும் உண்டு. இவற்றுள் என்ன, என்னது [பேச்சு வழக்கு] ஆகியவை இன்று பெயர்ச் சொற்களாகவே எது. எத்தகையது என்ற பொருள் களில் வழங்குகின்றன.

தளிர்த்து என்பது தளிர் என்ற வினையடியான இறந்தகால வினை எச்ச வடிவம். இதில் 'உ' வினையெச்ச விகுதி தகரம் இறந்த கால இடைநிலையாய் வந்து இரட்டித்தது. இவ் வினையெச்சம் அற்று என்பது தழுவி முடிவுற்றது. தளிர்த்து என்பதைத் தளிர்த் தால் என்ற வினையெச்சத் திரிபாகக் கொண்டு தளிர்த்தற்று என்ப தனைத் தளிர்த்தால் அற்று, தளிர்த்தால் எற்றோ அற்று என்று விரிப்

பது உரையாசிரியர் மரபு. இம் மணிவிளக்கவுரை குறட்பா மூலத்தில் தளிர்த்து அற்று என்று பிரித்துக் காட்டியது இதனைப் பின்பற்றியே யாகும். ஆயினும் தளிர்த்து அற்று என முதற் சொல்லைப் பெயரெச்ச மாகக் கொண்டு, தளிர்த்த அத்தன்மையுடையது எனப் பொருள் கொள்ளல் பொருந்துவது என்று கூறத்தகும். ஏனெனில் தளிர்த் தற்று, வந்தற்று, போயற்று என்றே இவ்வினைப்பு ஒரு சொல்போல வழங்குகிறது.

மரம் என்பது பெயர்ச்சொல், எழுவாயாக நின்று தளிர்த்து என்ற வினையின் முதலாய் நின்றது.

வற்றல் என்பது வற்று என்ற வினைப் பகுதியடியாக, அவ் விகுதி பெற்ற தொழிற் பெயர் ஆகும். தொழிற் பெயர் இங்கே பண்புக்கு ஆகுபெயராயிற்று. இவ்வாறு வற்றல் மரம், வற்றல் பண்பு கொண்ட மரம் எனப் பண்புத் தொகையாயிற்று.

வன்பாற்கண் என்பது ஏழாம் வேற்றுமைப் பெயர். இவ் வேற்றுமைப் பொருள் தளிர்த்து என்னும் பெயரெச்சத்தின் வினைப் பகுதி தழுவிற்று. இதில் கண் ஏழாம் வேற்றுமை உருபு. இவ்வுரு பின் தனிப் பொருள் வளம் விளக்கவுரையில் கூறப்படுகிறது. உருபின் முன் வன்பால் என்ற பெயரீற்று லகரம் றகரமாயிற்று.

வன்பால் என்பதில் பால் என்ற பெயர் பாலை என்ற சொல்லின் சுருக்க வடிவமாகப் பாலை நிலத்தைக் குறித்தது. வன்பால் என்பது பால் என்ற பெயருடன் வன்மை என்ற பண்புப் பெயரிணைந்த பண்புத் தொகை ஆகும்.

வி - ரை : *அறவாழ்வின் மறை வரைத்துக்குரிய பயிர் வளப் பண்பான அன்புடைமையின் சால்பு முப்பால் வாழ்வு களுடன் தொடர்புடையதாயினும், இக் குறட்பாவை மைய மாகக்கொண்ட மூன்று குறட்பாக்களும் [77—79] அதன் அறவாழ்வுத் தொடர்பு சிறப்பிப்பவை ஆகும். அவ்வழி இக் குறட்பா உள்ளத்தில் அன்புத் தொடர்பற்ற உயிரியின் உயிர் வாழ்க்கைக்குரிய ஒவ்வொரு படியிலும், தோற்றம், வாழ்வு, வளம், வளர்ச்சி என்ற அதன் ஒவ்வொரு தளத்*

திலும் அவ் உயிர் இடர்ப்பட்டு இன வாழ்வில் இடம்பெற மாட்டாது கழியும் என்பதையும்; உள்ளத்தில் அன்பு தோயப் பெற்ற உயிரியின் உயிர் வாழ்க்கையின் ஒவ்வொரு படிதோறும், தோற்றம், வாழ்வு, வளம், வளர்ச்சி என்ற அதன் ஒவ்வொரு தளந்தோறும் அவ்வுயிர் பொங்கல் வாழ்வுற முன்னேறிச் செல்லும் என்பதையும் வலியுறுத்தி விதந்தோதுகிறது.

இக் குறட்பாவில் உருவகக் குறிப்பு வளம் பெரிது. புதிய பல பொருள்களும் செறிந்துள்ளன. ஆனால், அதே சமயம் இக் குறட்பா இவ்வதிகாரத்தின் மூன்றும் (73-வது) குறட்பாவுக்கும், இக் குறட்பாவுக்கு முந்திய (77-வது) குறட்பாவுக்கும் உரிய விருத்தியுரைகளை உள்ளடக்கியதோ என்னும்படி அமைந்துள்ளது. ஏனெனில், அவ்விரு குறட்பாக்களிலும் இம் மணிவிளக்கவுரை அவாய் நிலைகளாகவும் உய்த்துணர்வாகவும் வருவித்துரைத்த கருத்துக்களையெல்லாம் இக் குறட்பா தன் குறிப்புச் சொற்களால் புதிது சுட்டி விளக்கம் தருவதனை இவ்வுரையின் வாசகர்கள் எளிது காணலாம்.

அன்பு (தம்) அகத்து இல்லா (உயிர்களின்) உயிர் வாழ்க்கை—அன்பு என்னும் உள்ளீரப் பண்பு தம் உள்ளத்தில் உயிர் நிலையாக நிலைபெற அமையப் பெறாத உயிர்களின் உயிருடன் கூடி வாழும் வாழ்க்கையானது' என்று பொருள்படும்.

அன்பு என்ற சொல்லின் பொருள் விளக்கமும் அருமைப்பாடும் இவ் அதிகார முன்னுரையிலும் முன் குறட்பாவுரைகளிலும் விரித்துணர்த்தப்பட்டுள்ளன. காதல்—கற்பு—பாசம்—அன்பு என்ற குடும்ப மலர்ச்சிக்கும் அன்பு—ஆர்வம் நண்பு—அருள் என்ற சமுதாய மலர்ச்சிக்கும் நடுவே அரிமா நோக்காக நிற்கும் திறம் அது.

அன்புடைமையின் சால்பு என்ற இவ் வதிகாரத்தின் குறட்பா தோறும் அன்பு என்ற சொல் ஆளப்படுதல் இயல்பு, ஆனால் வள்ளுவ மாயம் இதனைக்கூட வெறும் கூறியது கூறலாக விடாமல் உருண்டு செல்லும் பனிக்கட்டியுருளை உருளும்தோறும் பனி வண்டலளைந்து பெரிதாகுமாறு

போல, குறட்பா தோறும் அன்பு என்ற சொல் குறட்பாக் கருத்தளாவிக் குறிப்பு வளங்களில் அளைந்து திரண்டு விரிவுறும்படி செய்துவிடுவது காண்கிறேம். இக் குறட்பா வில் அகத்து, உயிர், வன்பால் ஆகிய சொற்களும்; வரு குறட்பாவில் புறத்துறுப்பு.அகத்துறுப்பு ஆகிய சொற்களும்; இறுதிக் குறட்பாவில் உயிர் நிலை என்ற சொல்லும் பிறவும் இத்திரள் பொருள்வளம் நினைவூட்டி அன்புடைமையின் சால்பும் பீடும் அச் சொல்லின் வளமாகப் பெருக்கிவிடு கின்றன.

இக் குறட்பாவில், பிற் பகுதியில் வரும் உருவகம் அன்பு என்ற சொல்லுக்கு ஒரு புதுப் பொருள் சுட்டுகிறது. மரத் தின் வாழ்வு அதன் உள்ளீரத்தைப் பொறுத்தது. அதுபோல் உயிரியின் வாழ்வும் உள்ளீரப் பண்பாகிய அன்புப் பண்பைப் பொறுத்தது. அன்பு என்பதை அன்பு என்னும் உள்ளீரப் பண்பு என்று இவ்வுரை கொண்டதன் காரணம் இதுவே. மர உருவகத்தின் குறிப்பு இது.

அகத்து, உயிர் என்ற சொற்கள் இக் குறட்பாவில் நேரடியாகக் கூறப்படாத, ஆனல் முன்பின் [72, 73, 77, 80] குறட்பாக்கள் பல படிகளாக, பல திறங்களாக நேரடியர்கக் காட்டிய என்புருவத்தை நினைவுபடுத்துவன ஆகும். உட லினகத்து என்பு இருப்பது போல, உயிரின் அகத்து அன்பு அமைகின்றது என்பதை இது நினைவுபடுத்தி, அந்த அன் பாகிய உள்ளீரப் பண்பு உயிர் வளத்திற்கு இன்றியமையா தது என்பதை வலியுறுத்துகிறது.

இதுமட்டுமன்று.

அன்பு என்பதற் கெதிரிணைச் சொல்வாக, அதனுடன் எதுகையாக இக் குறட்பாவில் நிற்பது வன்பால் என்பது. அன்புக்கு ஒப்பு உள்ளீரம், வன்பாலன்று. ஆயினும் அன் புக்கு உள்ளீரம் மட்டுமன்று, உள்ளீரம் காக்கும் உரமும் உண்டு. ஏனெனில் அது என்புக்கு ஒப்பானது.

அன்பு உள்ளீரம் மட்டுமன்று, உள்ளீரம் காக்கும் வலிமையுடைய என்புரமும் அதுவே என்ற வள்ளுவப்

பொருளிவ், அன்பு என்ற சொல் இக் குறட்பாவில் வழங்கப் பட்டுள்ளது காணலாம்.

தம் என்பது குறட்பாவில் பின் வரும் அவாய்நிலைச் சொல்லான **உயிரினங்களைச்** சுட்டியே, அவாய்நிலையாக வருவிக்கப்பட்டது. அகத்து என்ற சொல்லின் குறிப்பாலேயே உயிரிகளின் என்ற சொல்லும், அகத்து என்பதன் இனவுறவுச் சுட்டடையாகவே இச் சொல்லும் வருவிக்கப் பட்டுள்ளன. தம், உயிரிகள் என்ற சொற்கள் மனித இனத்தையும் மனித இன நோக்கிப் பண்பு மலர்ச்சியில் முன்னேறிய பிற உயிரினங்களையும் உட்படுத்திய சொல். இங்ஙனம், பிற உயிர்களையும் உட்படுத்துவதற்காகவே, 'வாழ்க்கை' என்ற சொல் தனித்து வழங்கப்பெருமல், 'உயிர் வாழ்க்கை' என்ற தொகையாகப் பின்னுல் வழங்கப்பட்டுள்ளது என்பது ஓர்ந்து காணத் தக்கது ஆகும்.

உயிரிகள் அகத்தில் அன்பு தோன்றியிருக்காவிட்டால், உயிர் மலர்ச்சியின் பயனுக மனித இனமே தோன்றியிருக்காது. மனிதரின் அகத்தில் அன்பு தோன்றியிருக்காவிட்டால், மனித நாகரிகமே தோன்றியிராது. மனித நாகரிகம் அன்பை அடிப்படையாகக் கொண்டிராவிட்டால், அது கடவுட் பண்பு நோக்கிய தெய்விக, மனித வாழ்வாக மலர மாட்டாது.

தம் என்ற சொல் பன்மையாயினும் பொதுச் சுட்டாக நின்று உயிரிகளின் என்ற பொருளையும், இனத் தொகுதிச் சுட்டாக நின்று உயிரினத்தின் என்ற பொருளையும் குறிப்பது. இது கீழே விரிக்கப்படுகிறது.

அகத்து என்ற சொல்லின் இனவுறவுச் சுட்டடையாக வருவிக்கப்பட்ட 'தம்' என்பதன் முழுப் பொருள்வளம் இது.

அகத்து என்பது 'உள்ளத்தில் உயிர் நிலையாக, நிலைபேருக' என்று பொருள்படுவதாகும்.

அகம் என்பது தமிழில் மனம் மட்டுமன்று, மனத்தின் அகமாகிய நெஞ்சத்தையும் குறிப்பதாகும். நெஞ்சத்தின்

அகமாகிய உள்ளத்தையும் அது குறிப்பதாகும். மனம் உள்ளத்தின் புறம்; உள்ளம் மனத்தின் அகம் ஆகும். மனம் புறப்பொருள்களை அறியும்; அதனை நுகர்வது நெஞ்சம், உணர்ச்சியின் இருப்பிடம். அறிவையும் உணர்ச்சியையும் உள் நின்று இயக்கும் உணர்வின் பீடம் உள்ளம். இந்த உள்ளத்துக்கும் அகம் உண்டு. அதுவே உள்ளத்தின் உணர்வையும், நெஞ்சத்தின் உணர்ச்சியையும், மனத்தின் அறிவையும் இயக்கி வாழ்வாக்குவது. அதுவே உயிர்ப் பண்பு. இந்த அகத்தின் அகத்தில், உள்ளத்தின் அகத்தில், உயிர் நிலையின் அகத்தில், புற மாறினாலும், அகத்தே தான் மாறாமல், அன்பு இருக்க வேண்டும்; உள்ளத்தில் உயிர் நிலையாக, நிலைபெற இருக்க வேண்டும் என்பதே அகத்து என்ற சொல்லால் திருவள்ளுவர் குறிக்க வந்த பொருள் ஆகும்.

அகம் என்பது தமிழில் உறவு குறித்த சொல். அதன் எதிரிடைச் சொல் புறம் என்பது. இந்த இரண்டு சொற்களின் பொருளையும் சரிவர உணர்ந்து கொள்ளாதவர்கள் உடல் உயிர் பற்றிய தமிழர் கோட்பாட்டை, வள்ளுவர் கோட்பாட்டைக் கண்டு கொள்ளவும் முடியாது. ஏனெனில் உயிர், உடல் என்ற சொற்களும் அகம் புறம் ஆகிய சொற்கள் போன்று உறவு குறித்த சொற்களேயாகும். அகம் புறம் என்ற சொற்களும் சரி, உயிர் உடல் என்ற சொற்களும் சரி-இன்று பலர் கருதுவதுபோல இரு வேறு பொருள்களைக் குறித்த சொற்கள் அல்ல; ஒரே பொருளின் இரு திசைப் பண்புகளைக் குறித்த சொற்கள் ஆகும். வெங்காயத்தின் தொலிகளில் ஒவ்வொரு தொலியும் அதன் அகம் நோக்கப் புறத்தொலியாகவும், அதன் புற நோக்க அகத்தொலியாகவும் விளங்குவது போல; உயிர்-உடல் தொடர்பின் ஒவ்வொரு படியும் அதன் அகம் அல்லது உயிர்த்திசை நோக்க, புறம் அதாவது உடல் ஆகவும், அதன் புற அல்லது உடல் திசை நோக்க அகம் அல்லது உயிராகவும் கொள்ளத்தக்கது ஆகும். தோல் நோக்கத் தசை அகம், உயிர்ப் பண்பு; தசை நோக்கக் குருதி, நரம்பு நாளங்கள் அகம், உயிர்ப் பண்பு; தசை குருதி நரம்பு நாளங்களை நோக்க, என்பு அகம், உயிர்ப் பண்பு; என்பு நோக்க மச்சை அல்லது முதிரா நாடி நரம்புகள், மூளை

ஆகியவை அகம், உயிர்ப் பண்பு. இதுபோலவே நாடி நரம்பு மூளை மச்சை நோக்க என்பு புறம், உடற் பண்பு; என்பு நோக்கத் தசை குருதி நரம்பு நாளங்கள் புறம், உடற் பண்பு; தசை குருதி நரம்பு நாளங்களை நோக்கத் தோல் புறம், உடற் பண்பு.

ஒரு பெண் ஒருவனுக்குத் தங்கையாகவும், மற்றொருவனுக்கு அக்காளாகவும், இருவருக்கும் உடன் பிறப்பு நங்கையாகவும் இருக்க முடியும். அதுபோலவே உயிர்-உடல் கூட்டில் எப் பகுதியும் ஒரு திசை நோக்கில் உயிராகவும், மறு திசை நோக்கில் உடலாகவும், இரு நோக்கிலும் உடலுயிர் என்ற ஒரே பொருளாகவும் அமைவது ஆகும்.

இதுமட்டுமன்று. உயிரின் உயிர் அதாவது இன உயிர் நோக்க, உயிரும் உடலும் கூடிய தனி உயிரியே புறம், உடற் பண்பு. அதுபோல, உலகு நோக்க, உயிரும் உடலும் கூடிய தனி உயிரியே அகம், உயிர்ப் பண்பு.

உலகம் புறம். உயிரி அதன் அகம். இனம் உயிரியின் அகம்.

இவை வள்ளுவக் கோட்பாடு மட்டுமன்று, தமிழ் மொழியில் ஊன்றிய கோட்பாடு.

தமிழில் உரி என்றால் தோல். தோலிலிருந்து தனி மனிதனின் உயிர், அவன் உரிமை வாழ்வு தொடங்குகிறது. அதனகமாக உட்செல்லுந்தோறும் அவன் வாழ்வு உரிமை வாழ்வு, உயிர் வாழ்வு ஆகிறது.

நேர்மாறாக, உரி அல்லது தோல் கடந்த சமுதாய உருவே உடை. இதிலிருந்து அவன் உடல் கடந்த உடைமைகள் தொடங்குகின்றன.

உலகத்துக்கு உயிருடல் அதாவது உயிரியின் உடல் அகம் உடலின் பெயர்களில் ஒன்று கடம். உலகாகிய உடலுக்கு உயிராகிய உடல் கொண்ட உறவே கடமை.

உடை என்பதும் உடல் என்பதும் 'ஐ', 'அல்' என்ற இரு தொழிற் பெயர் விகுதிகளால் மட்டுமே வேறுபட்ட 'உடு' என்ற ஒரே சொல் என்பது கூர்ந்து காணத்தக்கது.

உடை வேதாந்தம்[1] என்ற ஏட்டில் கார்லைல் என்ற ஆங்கில நாட்டறிஞர் இத் தத்துவம் விரித்துள்ளார். உயிருக்கு உடல், உடை; உடலுயிருக்கு உலகம் உடை; உலகத்துக்கு உடலுயிர், உயிர்; உயிருக்கு இறைவன் உயிர் என்பதே அவர் கூறும் வேதாந்தம்.

திருவள்ளுவர் இக் குறட்பாவில் 'அகத்து' என்ற சொல்லினகத்தே இவ்வளவு பொருளைப் புகுத்தி வைந்திருக்கிறார் என்பதை மேலீடாகப் பார்த்தால் காண முடியாது. ஏனெனில் அது, பின்னே காட்டுகிறபடி, இல்லா என்ற சொல்லின் குறிப்பு வளம் ஆகும். இது ஆண்டு விரிக்கப்படவிருக்கிறது.

இல்லா என்பது அமையப்பெறாத என்னும் பொருளுடையது. 'அகத்து இல்லா' என்பதனால் 'உள்ளத்தில் உயிர்நிலையாக நிலைபெற அமையப்பெறாத' என்ற பொருள் தொனிக்கிறது என்பது முன்னரே கூறப்பட்டது.

இல்லா என்ற சொல் பெயரெச்சம். அது பின் வரும் உயிர் வாழ்க்கை என்ற தொகையின் முதற் கூறாகிய உயிர் என்பதைத் தழுவியதாகப் பல உரையாசிரியர்கள் கொண்டிருப்பதைப் பின்வரும் தனிக் குறிப்புக் காட்டும். ஆனால் இது தமிழ் இலக்கண மரபுக்குப் பொருந்தாத செய்தி ஆகும். உயிர் வாழ்க்கை என்ற சொல்லை உரையாசிரியர்கள் கொண்டதுபோல் வேற்றுமைத் தொகையாகக் கொண்டாலும், இவ்வுரை கொள்வதுபோல உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகக் கொண்டாலும் தொகையின் முடிந்த பெயர் உயிரன்று, வாழ்க்கையேயாகும். எனவே, இல்லா என்ற பெயரெச்சம் வாழ்க்கை என்ற பெயரைத் தழுவுவதாகவோ, அவாய் நிலையான உயிரிகளின் என்ற பெயரைத் தழுவுவதாகவேதான் கொள்ள முடியும்.

உயிரிகளின் என்ற சொல்லை அவாய் நிலையாக்கிய திருவள்ளுவர், உயிர் என்ற சொல்லையும் அவாய் நிலையாக்க முடியும். 'அன்பு அகத்து இல்லா வாழ்க்கை' என்று திருவள்ளு

1. Sartor Resartus

வர் கூறியிருந்தாலே, உரையாசிரியர் கொண்ட பொருள் முழுவதையும் இத்தொகை குறித்திருக்க முடியும். உயிரிகளின் என்ற எழுவாய் நிலை வருவிப்பதற்குக்கூட 'உயிர்' என்ற சொல் இன்றியமையாத் தேவையன்று. அது உயிர் என்பதன் குறிப்பு வளம் மட்டுமே. ஆகவே 'உயிர்' என்ற சொல் இங்கே 'உயிரிகளின்' என்ற அவாய் நிலை வருவிப்பதற்குரிய குறிப்பு வளமாக மட்டும் வழங்கப்பட்டதன்று. 'இல்லா' என்ற எதிர்மறை 'வாழ்க்கை' என்பதையும் தழுவி உயிரிகளின் என்பதையும் தழுவ வேண்டும் என்பதற்காகவே அவர் 'உயிர்' என்ற சொல்லை 'வாழ்க்கை' என்ற சொல்லின் முன்னர்த் தொகைக் கூறாக வருவித்துள்ளார் என்று காணலாம்.

'இல்லா' என்ற பெயரெச்சம் உயிரிகளின் வாழ்க்கை அல்லது உயிர் வாழ்க்கை ஆகிய இரு பெயர்களையுமே தழுவியதாக இலக்கணக் குறிப்புரை கூறியதன் விளக்கம் இதுவே.

'இல்லா' என்பதன் இவ்விருமைத் தழுவல் குறிப்பால், அகத்து என்ற சொல் பெறும் குறிப்பு வளம் மேலே சுட்டப்பட்டுள்ளது. தம் அகத்து என்பதனால், உயிரிகளின் அகத்து என்ற மேலீடான பொருள் 'தம்' என்ற இன உறவுச்சுட்டாலேயே பெறப்படுகிறது. ஆனால், அது உயிரிகளை மட்டும் குறித்த சொல் அன்று, உயிரிகளின் உயிர் வாழ்க்கை என்பதையும் குறித்த சொல் ஆகும். அதாவது தனித்தனி உயிரிகளின் அகம் மட்டும் இங்கே குறிக்கப்படவில்லை—உயிரிகளின் தொகுதியான உயிரினத்தின் அகமும் குறிக்கப்பட்டது. இது மட்டுமோ ? அத்தொகுதியின் வாழ்க்கை, உயிரோடு கூடிய வாழ்க்கை, வாழ்க்கையோடு கூடிய உயிர் ஆகியவற்றின் அகமாகவும் அது குறிக்கப்பட்டுள்ளது.

உடலோடு கூடிய உயிர் தனி உயிர், அதன் அகம் என்பது 'உள்ளம்'. ஆனால், உயிரோடு கூடிய வாழ்க்கை என்பது இன வாழ்க்கை—அதன் அகம் என்பது பண்பாடு.

இங்ஙனம், திருவள்ளுவர் 'இல்லா' என்ற இச்சொல் வழக்கு மூலம் அன்பு என்ற உள்ளீரப் பண்பு தனி உயிரியின்

உள்ளத்தில் இருத்தல் வேண்டும் என்பதை மட்டுமன்றி, அந்தத் தனி உயிரியின் சமுதாய, இன வாழ்க்கையிலும் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

உயிர்களின் என்பது உடம்போடு உயிரோடு வாழும் உயிரினங்களின் என்ற பொருளையுடையது. இந்த அவாய் நிலை 'உயிர் வாழ்க்கை' என்றதன் குறிப்பால், 'உயிர் வாழ்க்கை' என்ற பெயருக்குரிய இன உறவுச் சுட்டடையாக வும், 'அகத்து' என்றதன் குறிப்பால், அதன் இன உறவுச் சுட்டடையாக வருவிக்கப்பட்ட 'தம்' என்பதன் சுட்டு முத லாகவுமே வருவிக்கப்பட்டுள்ளது.

இங்கே அவாய் நிலையாக உயிரின் என்பது வருவிக்கப் பட முடியாது. ஏனெனில் இதன் பின்வரும் உயிர் வாழ்க்கை என்ற தொகையுடன் அது பொருந்தாது. அதே சமயம் உடம்பு என்ற சொல்லும் வருவிக்கப்பட இயலாது. ஏனெ னில் இதன் முன்னே அன்பகத்தில்லா என்ற தொகைக் கூறு வருகின்றது. உயிரி என்றோ, அப் பொருளில் உயிர் என்றோ அவாய்நிலை கொள்வது ஒருவாறு பொருந்தும். ஆயினும் உயிரியின் உயிர் வாழ்க்கை என்றவிடத்து, உயிர் என்ற சொல் பொருளற்ற மிகையாய்விடும். உயிரிகளின் என்பது உயிரினத் தொகுதி குறித்து, அவை ஒன்றை ஒன்று கொன்று தின்னுமல், கொல்லாமல், கேடு சூழாமல், ஒன்றன் வாழ்வுக்கு ஒன்று உதவும் முறையில் வாழும் சமுதாய வாழ்வே இங்கே உயிர் வாழ்க்கை எனப்பட்டது.

இப்பொருள் கீழே விரிக்கப்படுகிறது,

உயிர் வாழ்க்கை என்பது 'உயிரோடு கூடிய வாழ்க்கை யானது' என்று பொருள்படுகிறது.

உயிர் என்ற சொல் இங்கே பொருள்வளம் உடையது. உயிரோடு கூடிய வாழ்க்கையன்றி வாழ்க்கை என்று பிறி தொன்று இருக்க முடியாது. வாழ்க்கை என்ற சொல்லிலேயே உயிரோடு கூடிய என்ற கருத்து உள்ளடக்கமாகும். எனவே மேலீடான பார்வையில் இங்கே உயிர் என்ற தொகைக் கூறு மிகையே யாகும். ஆனல் வாழ்க்கை என்பது உயிரோடு

மட்டும் கூடியதன்று. உடம்போடும் கூடியது. உடம்பு மூல மாகவே உயிர் இனத்தில் பிறந்து, சமுதாயத்துடன் தொடர்பு கொள்கிறது. அதுபோல, உயிர் மூலமாகவே உடம்பு சமுதாயத்தில் பிறந்து இனத்துடன் தொடர்பு கொள்கிறது. ஏனெனில் உயிர் என்பது உள்ளுடம்பு மட்டுமே. உடல் என்பதும் புற உயிர் மட்டுமே. ஏற்கெனவே உடல் உயிர்த் தொடர்பில் ஒவ்வொரு கூறும் அதன் புறத்தை நோக்க, அகம் அல்லது உயிர்ப் பண்பு: அதன் அகத்தை நோக்கப் புறம் அல்லது உடற் பண்பு என்பது இவ்விளக்க வுரையில் மேலே சுட்டப்பட்டுள்ளது. இதன் பயனுக. வாழ்க்கை என்பது பொதுவாக உடம்போடும் உயிரோடும் கூடிய வாழ்வையே குறிப்பதானாலும், கீழின உயிரிகளில், உயிராகிய அகப் பண்பைவிட, உடம்பாகிய புறப் பண்பே மிகுதியாகவும், மேலின உயிரிகளில் உடம்பாகிய புறப் பண்பைவிட உயிராகிய அகப் பண்பே மிகுதியாகவும் இடம் பெறுகின்றன. இதனால், மேலே குறிப்பிட்டபடி உயிர்ப்பண்பு ஒரு தனிப்பொருளைக் குறிப்பதன்று, உடல், உயிர் என்ற ஒரே பொருளின் அகத்திசையைக் குறிப்பது மட்டுமன்று. அது அகத்திசைப் பண்பிலும் ஒரு நிலையான இயங்காப் பண்பு குறிப்பதன்று, ஓயாது ஒழியாது இடையறாது இயங்கி வளர்ந்து மலர்ச்சியுற்று வரும் ஓர் இயங்கு பண்பை, வளரும் பண்பை, மலர்வுற்றோங்கி எழும் பண்பைக் குறிப்பதாகும்.

உயிர் என்பது கீழின உயிர்களின் உடற் பண்பிலிருந்து பிறந்து மேலின உயிரிகளின் உயிர்ப்பண்பு நோக்கி வளர்ந்து மலர்ந்து மலர்ச்சியுற்றுக்கொண்டே செல்லும் ஓர் இயக்கம், ஓர் இயக்கப் பண்பு.ஆகும்.

உயிர் வாழ்க்கை என்ற தொகையில் உயிர் என்ற சொற் கூறு சுட்டும் குறிப்பு இதுவே. அது பொதுவான உயிரிகளின் வாழ்க்கை மட்டும் சுட்டுவதன்று, உயிர்ப் பண்பு மலர்ச்சி என்னும் குறிக்கோள் வாழ்வு, உயிர் வாழ்வு மேற் கொண்டுள்ள உயர்தர உயிரிகளின் உயிர் வாழ்க்கை ஆகும்.

அன்பை அகத்தின் அகமாக, அகத்தின் அகமான உயிரின் அகமாக, உயிர் நிலையாக நிலைபெறக் கொண்ட

மேல்தள உயிரினத்தின் வாழ்க்கையே இங்கே உயிர் வாழ்க்கை எனப்பட்டது.

உயிர் வாழ்க்கை என்பதன் குறிப்பினுலேயே உயிரிகளின் என்ற அவாய்நிலை பெறப்பட்டது. அதே குறிப்பினுலேயே 'உயிரிகளின்' என்பதும் 'மேல் நிலை நோக்கிய மேல்தள உயிரிகளின்' என்ற பொருளொளி பெறுவது காணலாம்.

வாழ்க்கை என்ற சொல்லின் பகுதி வாழ் என்பது. இப் பகுதி தன்வினைப் பகுதியாதலால், 'வு', 'கை' விகுதிகள் பெற்று வாழ்வு, வாழ்கை எனத் தொழிற் பெயராதலே இலக்கண முறையில் இயல்பு ஆகும். இவற்றுள் வாழ்கை எப்போதும் தொழிற்பெயராக வாழ்தல் என்ற பொருள் மட்டுமே கொள்வதையும்; வாழ்வு என்பது மட்டுமே வாழ் தல், ஒரு மனிதர் வாழ்வுக்காலம், வாழும் முறை, வாழ்வின் வளம் என்ற பன்மடி ஆகுபெயராகப் பண்புகள் குறிப்பதை யும் காண்கிருேம். வாழ்க்கை என்பதும் இதுபோன்ற ஆகு பெயரே. ஆனல் வாழ்கை என்ற இயல்பான இலக்கண வடிவத்தின் மரபுத் திரிபான இது பிற உயிரிகளுடனும் உயர்தள உயிரிகளுடனும் மனித சமுதாயத்துடனும் இனத் துடனும் கூட்டு வாழ்வு வாழும் பண்பைக் குறித்த சிறப்பு ஆகுபெயர் ஆகும். தான் வாழ்ந்து, குடும்ப சமுதாய இனங் களை வாழ்வித்து; அவற்றின் வளத்தால்தான் மேலும் வளம் பெற வாழ்ந்து, மேலும் அவற்றை வாழ்வித்துச் செல்லல் என்ற வாழ்க்கைப் பண்பின் மலர்ச்சி ஆழி வட்டத்தை இச் சொல் குறிப்பதாகும்.

வாழ்க்கை ஒரு நிலைச் செயல் அன்று', இயங்கும் செயல், மலர்ச்சி வளச் செயல் மட்டும் கூட அன்று—அது சுழன்று சுழன்று திருகி மேலெழுந்தேறிச் செல்லும் ஒரு திருகேணி இயக்கம் ஆகும்.

உயிர், வாழ்க்கை ஆகிய இரு சொற்களும் குறிக்கும் கருத்துக்களின் பண்பு வகையில், உலக மொழிகளிடையிலும் உலக நாகரிக வரலாற்றிலும் தமிழுக்கு ஒரு தனி இடம் உண்டு. இன்றைய மொழிகள் சிலவற்றிலும் பண்டை

மொழிகள் சிலவற்றிலும் உயிர் என்ற பெயர்ச் சொல்லின் வினை வடிவமாகவே [1], சமஸ்கிருதம்: ஜீவ; உயிர்; உயிருடன் வாழ்; ஜீவ்ய; ஜீவித: வாழ்க்கை) அமைந்துள்ளன. ஆனால் தமிழைப்போலவே பல பண்டை மொழிகளில் [2], இரு சொற்களும் வேறு வேறாக அமைந்துள்ளன. உயிருடன் இருத்தல் வேறு, வாழ்க்கை வேறு என்ற தமிழ்ப் பண்புக் கோட்பாடு நாகரிக உலகில் பரவியுள்ள வகையை இது காட்டுகிறது.

வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்து அற்று என்பது 'கடும் பாறை நிரம்பிய நீர்த்தடமில்லாத பாலைவனத்தின் நடுமையத்திலே உலர்ந்து பட்டுப்போன மரம் மீண்டும் தளிர்த்தது என்றால் அது எவ்வளவு நடைபெறக்கூடாத செய்தியோ, அதுபோன்ற நடைபெறக்கூடாத தன்மையுடைய செய்தி ஆகும்' என்பதாம்.

வன்பாற்கண் என்பது 'கடும் பாறைகள் நிரம்பிய நீர்த் தடமில்லாத பாலைவனத்தின் நடு மையத்திலே' என்று பொருள்படுவது ஆகும்.

கண் என்பது இங்கே ஏழாம் வேற்றுமை உருபு. தமிழில் ஏழாம் வேற்றுமை உருபுக்குரிய சொற்கள் நூற்றுக்கணக்கிலிருப்பினும், இல் என்பதே பொது வழக்கான இயல்பான உருபு ஆயினும், அவற்றை வழங்காது இங்கே 'கண்' வழங்கப்பட்டதன் காரணம், அது நடு மைய இடம் குறிப்பது என்பதனாலேயே யாகும். இவ் வழக்கின் வளம் கீழே விளக்கப்படுகிறது.

பால் என்பது இங்கே பாலை அல்லது பாலைவனம் என்பதன் குறுக்க வடிவம். இக்காலத்திலும் அணிமைக் காலத்திலும் பேச்சு வழக்கிலும் இது பாலைவனம் என்ற இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாகவே வழங்குகிறது, தொல்காப்பிய, சங்ககால முதல் இலக்கிய வழக்கில் இந் நிலம்,

---

1. ஆங்கிலம்: Life. உயிர்: வாழ்க்கை; Live; உயிருடன் வாழ். 2. இலத்தீன்: Animus. உயிர்; Vita; வாழ்க்கை; கிரேக்கம்: Animos; உயிர்; Bios; வாழ்க்கை.

இதில் உள்ள பூ, மரம், இதற்குரிய திணை, இந் நிலத்தில் வளர்ந்த இசைக் கூறு [சுரம்], இசைக் கூற்றுத் தொகுதி [சுரத் தொகுதி, தாயி], யாழ், பண் ஆகிய யாவும் பாலை என்றே வழங்கி வந்துள்ளன. திருவள்ளுவர் காலத்தில் இது 'பால்' என்றேகூட வழங்கியிருக்கலாமோ என்று கருத இடமுண்டு. ஏனெனில் 'பால்' என்ற வடிவம் மட்டுமே அவர் வழக்காக இக் குறட்பாவில் நமக்குக் கிடைத்துள்ளது.

பால் என்ற மூல வடிவத்துக்கு மிகப் பல பொருள்கள் இருப்பதனால் அதனுடன் 'ஐ' என்ற அசைச் சொல் சேர்த்தே 'பாலை' என்ற சொல் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் பிரிவு என்ற மூலப் பொருளில் பால் வேறுபாடு, திணை, ஏட்டுப் பிரிவு ஆகியவற்றுக்கு வழங்கிய 'பால்' என்னும் சொல், சிறப்புக் கூறு, உயிர்க்கூறு என்ற பொருளிலேயே தாய்ப்பால், ஆவின் பாலுக்கு ஆகுபெயராகி, அதே முறையிலேயே ஐந்திணையின் நடுத்திணைக்கு, பண்டை தமிழகத்திலேயே உள்நாட்டுக் கடல் போல நடு நிலமாய் அமைந்திருந்த பாலைத் திணைக்குப் பெயராய் அமைந்திருக்க வேண்டும் என்னலாம்.

பால் அல்லது பாலை நிலத்திலேயே எதுவும் வளர்வதில்லை. பாலை நிலத்துக்குரியதாகக் கூறப்படும் பாலை, ஒமை, வேல், வீரை முதலிய நிலையுயிர் வகைகளும், ஓநாய், குதிரை, ஒட்டகை முதலிய விலங்குகளும் நடுநிலமாகிய பாலையின் ஓரங்களில் உள்ள மற்ற நில எல்லைகளிலோ, அடி நீரூற்று அல்லது அடி நீரோட்டக் கசிவு உள்ள இடைவள அரங்களிலோ[1] தான் அரையுயிர் வாழ்வு கொள்ளும். இங்கும் நிலையுயிர்கள் முட்செடி, முள் மரங்களாகவும், விலங்குகள் கடுந்திற வாழ்வுயிர்களாகவுமே இருக்கும்.

பாலையின் உயிர் வாழ்வுக் கூடாமையினும் அரிதான உயிர் வாழ்வுக் கூடாமை குறிக்கவே, ஓரமும் நடுவரங்கமும் விலக்கிய நடுவிடம் குறித்து இக் குறட்பாவில் பாற்கண் என்ற சொல் வழங்கியுள்ளது என்னலாம்.

---

1. Oasis

வன் என்ற பாலையின் பண்புத் தொகைக் கூறான அடை, இந்தப் பாற்கண் என்பதன் இருமடிக் கூடாமையை மும்மடிக் கூடாமையாக்கியுள்ளது.

ஐந்திணைகளில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற மற்ற நான்கு திணைகளும் மழையின்மையால் வறட்சியுற்ற பகுதியே பாலை ஆகும். ஆனால் மழையில்லாப் பாலையும் பள்ளமான இடமாயிருந்தால் அருகலான அடி நீரோட்டத்தாலும், ஆறுகள் பாய்ந்து பரவுவதாலும், கால்வாய்ப் பாசனம் மூலமாகவும் வளம் ஆக்கப் பெறலாம். மேடான இடத்தில் இது கூடாததாகும். ஆயினும் இங்கும் நீர் கொணர்ந்து நீற்றியோ, இயந்திர நீர் ஏற்றத்தாலோ சிறு வளம் ஊக்கலாகும். இவையும் கூடாத இடமே வன்பாலை. இங்கு கடும்பாரும் கடும் பாறையும் இருப்பதால் பெயல் வளமோ, பிற இயல் வளமோ, செயல் வளமோ ஏற்படக் கூடாத நிலை உண்டாகின்றது.

மரம் என்பது நிலமருவி வேரூன்றி வானளாவ நிமிர்ந்து நிற்கவல்ல நிலையுயிர் குறிக்கும். பழந்தமிழ் வழக்கு இத்தகையவற்றினுள் கூடப் புறக்காழனவற்றைப் புல்லென ஒதுக்கி, அகக் காழ் [என்பு போன்ற பகுதி] உடையவற்றையே மரம் என்றது. புல் கருகிவிடும் பாலையில்கூட, இவை நிற்கும் ஆற்றல் உடையவை. ஆனால் இதே காரணத்தால், புல் வளர்வதைவிட இம் மரங்கள் வளர்வது அரிதாகும். தொடக்க வாய்ப்பு இருந்தாலன்றி இத்தகைய மரங்கள் புல் புதர்களைவிடப் பாலையில் அரு வளர்ச்சியுடையவையே யாகும்.

திருக்குறளெங்கும் ஓசை இஸைப்பு வேறுபாட்டின் மூலமே திருவள்ளுவர் பொருள்வளம் பெருக்கியுள்ளதை இம் மணிவிளக்கவுரை குறட்பா தோறும் காட்டிச் செல்வதை வாசகர் கவனித்திருப்பர். சீன மொழியில் ஓசையிசைப்பு இலக்கண வேறுபாட்டுக்கு மட்டுமன்றி, எழுத்தொலியைப் போலவே பொருள் வேறுபாட்டுக்கும் பெரிதும் காரணமாயிருந்து வருகிறது. சீன மொழியில் தளராது நின்று நிலவும் இத் தொல் பழங்கால மொழிப் பண்பு தளர்ந்தேனும்

தமிழிலும் மற்ற உலக மொழிகளிலும் இடம் பெற்றே வந்துள்ளது என்பது கூர்ந்து நோக்குவார்க்கு விளங்கும். ஆங்கில மொழியில் ஆறுதல்[1] என்ற ஒரே சொல் முதலசை யழுத்தத்துடன் பெயராகி ஆறுதல் என்றபொருளும், இரண்டாம் அசையழுத்தத்துடன் வினையாகி ஆறுதல் கூறு என்ற பொருளும் கொண்டு விளங்குதல்போல, தமிழிலும் இன்றும் குடி என்ற ஒரே சொல் முதலசை அழுத்தத்தால் பெயர்ச் சொல்லாய் குடிவகையையும், இரண்டாமசை அழுத்தத்தால் வினைச் சொல்லாய்க் குடித்தலையும், ஈரசை ஒப்பிசைப்பால் மீண்டும் பெயர்ச் சொல்லாய்க் குடும்பத்தையும் குறித்தல் காணலாம்.

திருவள்ளுவர் காலத் தமிழில் இது இன்றைய தமிழை விட மிகவும் முனைப்பாக இருந்திருக்கவேண்டும் என்னலாம்.

இன்றைய தெலுங்கில் அகரம் பல சொற்களில் எடுப்பிசைப்பில் எதிர்மறையாக்வும், படுப்பிசைப்பில் உடன்பாடாகவும் இருப்பது காண்கிறோம். திருக்குறளிலும் [196] 'மகன் எனல், மக்கட் பதடி எனல்' என்ற வாசகத்தில் எனல் என்ற ஒரே சொல்லின் அகரம் முதலில் எதிர்மறையாகவும், பின் உடன்பாடாகவும் இவ்விசைப்பு வேறுபாடு ஒன்றன் மூலமாகவே அமைந்துள்ளது காணலாம்.

மரம் என்ற தமிழ்ச் சொல்லில் இசைப்பு வேறுபாட்டில் இவ்வகை எதிர் எதிர்ப் பொருள் நுட்பம் தொன்று தொட்டே இருந்து வருகிறது என்னலாம்.

மரம் என்ற சொல் மருவுதல் என்ற வினையின் பகுதி அளாவி, நிலத்தில் மருவி நின்ற ஓரறிவுயிர் குறிக்கிறது. இதில் உள்ள இரண்டாவது அகரம் படுத்திசைக்கும்பொழுது அதாவது முதலாவது அகரம் எடுத்திசைக்கும்போது அது இந்த உடன்பாட்டுத் தொனியுடன் உயிருள்ள, வாழும் மரத்தையும்; இரண்டாவது அகரம் எடுத்திசைக்கும்போது அதாவது முதல் அகரம் படுத்திசைக்கும்போது அது எதிர் மறைத் தொனியேற்று மரக்கட்டை அல்லது வெட்டு மரத்

1. Comfort

தையும் குறித்துவிடுகிறது என்பதை இன்றும் ஒலித்துப் பார்த்தே அல்லது தமிழ் பேசுவோர் பேச்சைக் கேட்டே உணரலாம்.

இலக்கியத்திலேயே இவ் வேறுபாட்டு நயத்தை இடைக் கால அல்லது அணிமைக்கால ஔவைப் பிராட்டியாரின் பாடலில் காணலாம்.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நன் மரம்.

இப் பாடலில் முதலில் வரும் 'மரங்கள்' என்ற சொல் முதலசையிலேயே முதலாம் எழுத்து எடுத்தும், இரண்டாவது வரும் மரம் என்பதில் அதே அசையின் இரண்டாம் எழுத்து எடுத்தும் வருவது கூர்ந்து கவனிக்கத் தக்கது. பல குறட்பாக்களில் திருவள்ளுவர் செய்யும் யாப்பு மாயத்தை இங்கே ஔவைப் பிராட்டியாரும் செய்து, மாட்டாதவன் என்ற சொல்லிலிருந்து 'தவன்' என்ற அசையை வெட்டிப் பிரித்து, அதனுடன் நன்மரம் என்ற தொகையின் முதற் கூறான 'நன்' என்பதனை ஒட்டி ஒரு சீராக்கியதன் மூலம் இவ் வோசைப் பொருளை முனைப்பாக்கி, 'நன்' என்பதைப் புகழ்ச்சி போன்ற இகழ்ச்சி ஏளனமாக்கியுள்ளார் என்பது கவனிக்கத்தக்கதாகும்.

இக் குறட்பாவில் திருவள்ளுவர் வற்றல் மரம் என்ற தொகையில் மரம் என்பதை வெட்டியெடுத்து, தளிர்த்தற்று என்ற சொல்லின் முற் கூறான தளிர்த்து என்பதைப் பிரித்தெடுத்து ஒட்டி, மரம் தளிர்த்து என்பதை ஒரு சீராக்கி, அதன் முதலசையாகிய மரம் என்பதை முதலெழுத்து நலிந்து பின்னெழுத்துப் படுத்த ஏற்றிசைப்பாக்கி, அடுத்த அசையாகிய தளிர்த்து என்பதில் நேர் மாறாக முதலெழுத்துப் படுத்துப் பின்னெழுத்து நலிந்த இறங்கிசைப் பாக்கி, ஔவைப் பிராட்டியார் செய்துள்ள மாயத்தினும்

அரு நுண்ணியல் மாயம் ஆற்றியுள்ளார். இதன் குறிப்பு வளம் பொருள்வளப் பகுதியில் விரிக்கப்படும்.

வற்றல் என்பது வற்றுதல் என்ற தொழிற்பெயரே யாயினும், இங்கே மரம் என்பதனுடன் புணர்ந்து வற்றல் நிலையினை யடைந்துவிட்ட மரம் என்று பொருள்பெறும் ஒரு பண்பு குறித்த பெயரடையின் பொருள் தந்து நின்றது. இதன் பொருள் 'உலர்ந்து பட்டுப்போன' என்பது ஆகும்.

வற்று என்ற வினைச் சொல்லும், வன்பால் என்பதில் முதலில் வரும் வன்மை என்ற பண்புச் சொல்லும் தொடர்புடையவைகளே யாகும். வன்பால் நீர் நயப்புக்கு இடமே தராத பாலை, வற்றல் மரமோ, உள் நயப்பு அல்லது உள்ளீரம் இழந்துவிட்ட மரம் ஆகும்.

வற்றல் மரம் என்பது பட்டுப்போன மரம். இது எங்குமே தளிர்க்க முடியாது. நல்ல மரம்கூட வன்பாலையில் தளிர்க்க முடியாது. இதனால் பாலையின் கூடாமையை வன்பாலை இருமடிக் கூடாமை ஆக்குதல்போல, மரத்தின் கூடாமையை இங்கே வற்றல் மரம் இருமடிக் கூடாமை ஆக்கியுள்ளது.

வற்றல் இங்கே ஒரு தனி முழுச்சீராய், எடுத்திசைப்பான ஏற்றிசைப்பாய் வந்தநனால், முற்றிலும் உலர்ந்து வாடி வற்றிப்போன என்ற பொருள் தந்தது.

தளிர்த்து அற்று என்பது 'தளிர்த்தால் அது எவ்வளவு நடைபெற முடியாத நிகழ்ச்சியோ, அதுபோன்ற நடைபெறக் கூடாத தன்மையுடையது ஆகும்' என்னும் பொருளுடையது ஆகும்.

தளிர்த்தல் என்பது தழைத்தல் என்பதன் முன்னோடி நிகழ்வு. இரண்டும் புது வாழ்வு குறித்து, வாழ்வு தாண்டிய செயல்கள் ஆகின்றன. இதனால் தளிர்த்தல் இங்கே ஒரு சொல்லாய் உடன்பாட்டு வடிவில் வந்ததாலும், இரு கூடாமைகளை ஒருங்கே உடன் கூறுவதாய் அமைகின்றது காண்கிறோம். முந்திய கூடாமைகள் அனைத்தும் வாழ்தலையே,

தோற்றுவதையே கூடாமைகளாக்கிக் கூறின. அந்தத் தோற்றுதல் கூடாமைகளையும் வாழ்தல் கூடாமைகளையுமே யன்றி, இச்சொல் புது வாழ்வு பெறல், புது வளர்ச்சி பெறல் ஆகிய இரண்டு இன வாழ்வுக் கூடாமைகளையும் குறித்தது கவனித்தற்குரியது.

இக் குறட்பாவின் பின் பகுதியில் வன்பாற்கண் என்பதில் இரு மடிக் கூடாமை, வற்றல் மரம் என்பதில் இரு மடிக் கூடாமை, தளிர்த்தற்று என்பதில் இரு மடிக் கூடாமை எனப் பன்மடிக் கூடாமைகள் கூறப்பட்ட செறிவு நயம் கூர்ந்து நோக்கத்தக்கது. ஏனெனில் இவற்றை உறழ, எட்டு அல்லது எட்டுக்கு மேற்பட்ட கூடாமைகள் இங்கே எடுத்தியம்பப் படுகின்றன.

இத்தனை கூடாமைகள் இங்கே எதிர்மறைப் பொருள் குறித்து மட்டும் வரவில்லை. 'இல்லா' என்ற எதிர்மறையின் குறிப்பால், 'உள்ள' தன்மை ஏற்பட்டபின், இக் கூடாமைகளே எண்மடிப் பெருக்கப் பொங்குமாவளம் குறிக்கும் என்பது தெளிவு. கூடாமை மேல் கூடாமை என்பது சொல்லழகாகக் கூடுமே யன்றி, கூடாமை வலியுறுத்தாகுமே யன்றி, எதிர்மறை என்ற முறையில் பொருளற்ற மிகையே யாகும். ஆகவே எதிர்மறையின் இந்த வலியுறுத்து குறிப்பாக இவ் வெதிர்மறையின் எதிர்மறையான உடன்பாட்டின் வளத்தின் மேல் வளம் எண்மடிமாக பொங்குமாவளம் குறித்ததே யாகும் என்பதில் ஐயமில்லை.

இந்த எட்டுக் கூடாமைகளும் ஒரே இல்லாமையின் பயன்கள்—உயிர்களின் அகத்தே அன்பு இல்லாத உயிர்களின் உயிர் வாழ்க்கையின் பயன்கள். ஒரே இல்லாமையின் பயன்கள் இந்த எண்மடிக் கூடாமைகள்: எனவே ஒரே உள்ள தன்மை, அன்புடைமை, எண்மடியான பெருக்கப் பொங்குமா வளத்தைப் பயனுகவுடைய பெருவளச் சால்பு என்பது இக் குறட்பாவினுல் எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

பிற்பகுதியின் எண்மடிக் கூடாமைகளும் காரியமாகவும், முற் பகுதியின் இல்லாமை காரணமாகவும் அமைகின்றன. இதனுல் குறட்பா ஒரே காரண காரிய வாசகம் என்று

மட்டுமே மேலீடாக வாசிப்பவர்க்குத் தோற்றும். ஆனால் அதன் உள்ளீடாக ஓர் உவம உருவகம் ஓடுகிறது. இதுமட்டு மன்று. ஓர் அரிய வேதாந்த தத்துவ போதனையும் குறட்பாவி னுள்ளீடாக ஒளி வீசுகின்றது. இவ் விரண்டும் பொருள் வளப் பகுதியிலேயே விளக்கப்பட விருக்கின்றன. இவை இப் பெருங் குறட்பாவின் விளக்கவுரை எல்லைக்குள் அடங்கா தவை ஆகும்.

அற்று என்பது அத்தன்மையது என்பதாம். இதன் அரு வழக்கான எடுத்திசைப்பு எதிர்மறை போல வரும் கூடாமை களின் உடன்பாட்டுக் குறிப்பான பொங்குமாவளம் வலி யுறுத்துவதாகும்.

> சிறப்புரை: இருள் துன்பம் போன்றது. ஒளி இன்பம் போன்றது. இருள் போக்க ஒளி ஒரு சிறந்த சாதனம் ஆகிறது. ஆயினும் உள்ளொளியாகிய கண் ணொளி யில்லார்க்கு உலகியல் புற ஒளியும் புற இருளும் இரண்டும் ஒரே இருட்டுக்குச் சமமானதாகவே அமையும். இன்பமும் அன்பும் இந்தப் புற ஒளி அக ஒளி போன்றவை. உள்ளொளியாகிய அன்பை வளர்த்துக்கொண்ட அளவி லேயே புற ஒளியாகிய இன்பமும், அதன் பயனான, அது நோக்கிச் செல்கிற வாழ்க்கையும் எய்தப்பெறுவன ஆகும்.
>
> அக ஒளி, புற ஒளி ஆகிய இந்த உவமையினும் பார்க்கச் சிறந்த ஓர் உவமையை, உவமைகளே தொடர்ந்த ஒரு தொடர் உவம உருவகத்தை இக் குறட்பாவில் திரு வள்ளுவர் கையாண்டிருக்கிறார். உயிர்களின் உள்ளத்தின் அகத்தே உள்ள அக ஒளி, அக நீர்மை, அக நீர் நயப்புத்தான் அன்பு. அது ஆர்வமுடைமை உருவில் செயலாற்று கிறது. அதே சமயம் புறத்தே உயிர் வாழ்க்கையிலும் இயற்கையிலும் இருதளப்பட்ட புற நீர்மைகள் உண்டு. உயிர் வாழ்க்கையிலுள்ள நீர்மை அகப் புற நீர்மை, அது நண்பு உருவில் செயலாற்றுவது. இயற்கையிலுள்ள நீர்மை

புறப் புற நீர்மை: அது அறத்தின் அருளாற்றலாகச் செய லாற்றுகிறது. உயிரிகளின் உள்ள அக நீர்மையாகிய அன்பு மரத்தின் நீர் நயப்பாகிய உயிர்ப்பால் ஒத்தது. உயிரிகளின் உயிர் வாழ்க்கையகத்தே, அதாவது சமுதாய வாழ்வில் செய லாற்றும் அகப் புற நீர்மையாகிய நண்பு மர வளர்ச்சிக்கு நிலைக்களமான நிலத்தின் நீர் நயப்பும் அடியிலிருக்கும் உரமும் போன்றது. உயிரிகளுக்கும் உயிரிகளுக்கும் நிலைக் களமான உயிர் வாழ்க்கைக்கும் இவை இரண்டுக்கும் ஒருங்கே நிலைக்களமான இயற்கையின் புறப் புற நீர்மை யாகிய அறத்தின் அருளாற்றலே இங்கே மரத்தின் நீர் நயப்புக்கும் நிலத்தின் நயப்பு அடி நீரோட்டம் உரம் ஆகிய மூன்றற்கும் ஒருங்கே ஆதாரமான வானின் மழை நீரொழுக்குக்கு உவமையாகக் கூறப்பட்டது.

புறப் புற நீர்மையாகிய மழை, அருளறம் ஆகிய பண்புகளிலிருந்தே அகப் புறநீர்மையாகிய நயப்பு ஒழுக்கு உரமும், நண்பும், அக நீர்மையாகிய உயிர்ப்பாலும் அன்பும் தோற்றினும், அக நீர்மையாகிய உயிர்ப் பால் இல்லாதவி டத்து ஏனையவை பயனற்றவை ஆகின்றன. அகத்து அன்பு இருந்தால்தான் புறத்து இன்பமுண்டு, வாழ்க்கை உண்டு என்பது இவ்வாறு வன்பாற்கண் வற்றல் மர உருவகத்தால் விளக்கப்பட்டது.

மழை நீர் உயிருமாகி, உயிர்க்கு உணவுமாகி, உணவு சமைக்கத் துணையுமாகி, உண்ணுவோர்க்கு உண்ணும் உறுப்பும் உண்கலமும் அலம்பும் கருவியுமாகிய அருமைப் பாடு காட்டிய வான் சிறப்பு அதிகார இரண்டாம் குறட்பா இங்கே ஒப்பு நோக்கத்தக்கது ஆகும்.

பொருள்வளம்: *(1)* இக் குறட்பாவில் 'அன்பகத் தில்லா உயிர் வாழ்க்கை' என்பது உவமைக்குரிய கருத்துப் பொருள், உவமக் கருத்து. 'வன்பாற்கண்

வற்றல் மரம் தளிர்த்தல்' என்பது உவமம். 'அற்று' ஒப்புமை கூறும் இணைப்புச் சொல். இதனால் குறட்பா முழுவதும் ஓர் உவம வாசகமாகவே அமைந்துள்ளது. ஆயினும் கருத்துத் தொகையின் முடிவாகிய உயிர் வாழ்க்கையும் தளிர்த்தலும் தான் அற்று என்ற சொல்லால் நேரிடையாக இணைக்கப் பெற்றனவாக இயல்கின்றன. இரு தொகைகளிலும் தொகைக் கூறுகளான மற்றச் சொற்கள் யாவும் உவமேயத்துக்கோ, உவமைக்கோ அடைமொழிகளாக மட்டும் தோற்றுகின்றன. ஆனால் உவமம், உவமேயம் ஆகிய இரண்டிலும் வெளிப்படையாகவும் அவாய்நிலையாகவும் குறிப்பாகவும் அமையும் பல சொற்கள், கருத்துப் படிவங்கள், உவம உவமேயங்களின் கூறுகளாக நின்று, உவமத்தையும் உவமேயத்தையும் ஒரே தொடர் உவமை அல்லது தொடர் உருவகம் ஆக்குகின்றன.

ஊன்றி நோக்கினால், தளிர்த்தல் என்பது உயிர் வாழ்க்கைக்கு உவமமன்று. உயிர் வாழ்க்கையின் புது வளர்ச்சிக்கே அது உவமம் ஆகும். அன்பு அகத்து இல்லா உயிரிகளுக்கு வற்றல் மரம் உவமம் ஆகும்.

வற்றல் மரம் என்பதற்கு புது வாழ்வுக்கு வித்தான, விதைப் பண்பான உயிர்ப்பால் வரண்டு போன மரம் என்பது பொருள் ஆகும். இது மரத்தின் நீரியல் பண்பாலும், நேரடியான நீர்ப்பண்பன்று. அதே சமயம் மரத்தின் காழ்ப் பண்புமன்று. ஏனெனில் காழ்ப் பண்பு உயிர்ப்பாலால் வளர்க்கப்பட்ட உயிர்ப்பாலின் செறிவு, அதுவே உயிர்ப்பாலைப் பேணி வளர்க்கும் எலும்புப் பண்பு ஆகும். பாலையிலுள்ள மரங்களுக்கு இவ்வுயிர்ப்பாற் பண்பு மிகுதி. பாலை விலங்கான ஒட்

டகத்துக்கு எலும்பு மட்டுமன்றி, நீர்ச் சேமிப்பும், பாலையில் விரைந்து இடம் விட்டு இடம் பெயர்வதற் குரிய நீள்காலும், வெப்பம் தாங்கும் உறுப்புக்களும், ஆழ்கிணற்றில் நீர் குடிக்க நீள் கழுத்தும் உண்டு. அதுபோல மரங்களும் திண்காழ் மட்டுமன்றி, கள்ளி முதலியவற்றில் இலையின் திரிபான பசுங்கட்டையும் முள்ளும் உண்டு. எனவே வற்றல் மரம் என்பது இப் பாதுகாப்புக்கள் கடந்து உயிர்ப்பால் வற்றிய மரம், இப் பாதுகாப்புக் கூறுகளும் அழிவுற்று உயிர்ப் பால் வற்றிய மரம் என்ற விரி பொருள் தருகின்றது.

வற்றல் மரம் அன்பு அகத்து இல்லா உயிரி களுக்கு உவமம். இதனால் மரம் உயிரிகளுக்குரிய உவமக் கூறு ஆகிறது. உயிர்ப்பால் வற்றிய தன்மை அன்பு அகத்து இல்லாமைக்கு உவமமாகும். உயிர்ப் பால் இல்லாமையே அன்பு இல்லாமைக்கு இணை யாகும் என்பது தெளிவு. ஆனால் அகத்து என்பது இங்கே இவ் வகையில் மிகை ஆகும். அது உண்மை யில் ஒரு புறம் சமுதாய அன்பை, அதாவது மரத்தில் உயிர்ப்பால் வற்றாமல் காக்கும் காழ் முதலிய என்புப் பாதுகாப்பையும், மற்றொரு புறம் உயிரிகளில் உயிரைப் பாதுகாக்கும் என்புப் பண்பாகிய அன்பை, அதாவது ஆர்வமுடைமையையும் குறிக்கும்.

உயிரிக்கு உயிர் தன்னிடம் கொண்ட பற்று ஒன்று உண்டு, அது அன்பின் உயிர். இதையே நாம் தற் பற்று, உயிர் மீது பாசம் என்கிறோம். அதற்கு இன் னொரு பற்றும் உண்டு. தன்னைக் கடந்த உயிர்ப் பற்று. இதுவே ஆர்வமுடைமை; நண்பின் கருமூலம், காத லின் கருமூலம் இதுவே. வற்றல் மரம் என்பது உயிர்ப்

பால் வற்றிய, உயிர்ப்பாற் பாதுகாப்புப் பண்பு வற்றிய மரமாதலால், அந்த உவமையின் இருமை, உயிரிகளி லும் அன்பின் இருமை சுட்டிற்று.

அகத்து என்ற குறட்பாவின் சொல் இவ்வாறு அதிகார முன் குறட்பாக்களின் (72, 73, 77) என்புரு வகம் சுட்டிற்று. அதுபோலவே அது மற்றோர் அதிகார முன் குறட்பாவில் (74) குறிப்பிட்ட அன்பு மலர்ச்சி யில் அகத்தேயுள்ள உயிர்ப்பாற் பண்பாகிய அன்புக் கூறு, உயிர்ப் பாதுகாப்புப் பண்பாகிய அன்புக் கூறு அதாவது ஆர்வமுடைமை ஆகியவற்றையும் சுட்டிக் காட்டிற்று.

இதுமட்டுமன்று. அகத்து என்பது தனி உயிரிகளை மட்டுமன்றி, உயிரின சமுதாயத்தையும் அளாவி அன்பு அகத்தில்லா உயிர்களை மட்டுமன்றி, அன்பு அகத்தில்லாததான உயிரினத்தின் உயிர் வாழ்க்கை யையும் குறித்தல் கண்டோம்.

வன்பால் என்பதில் பால் அல்லது பாலையே உயிரிகளின் உயிர் வாழ்க்கை அதாவது சமுதாய வாழ்வுக்குச் சரியான உவமை ஆகும்.

இங்கே பாலை அதாவது நீரில்லா வற்றல் நிலம் அன்பு அகத்து இல்லாச் சமுதாய வாழ்கைக்கு உவம மாயிற்று. நீரில்லாமை இதில் அன்பில்லாமைக்கும், 'அகத்து' சமுதாய வாழ்க்கைக்கும் சரியிணையான உவமக் கூறுகள் என்பது தெளிவு.

சமுதாயம் என்பது உயிரிகளின் தொகுதி மட்டு மன்று. வாழ்க்கையில் ஒன்றுடன் ஒன்று அளவளாவி ஒத்தும் உறழ்ந்தும் உதவியும் அழிவு எதிர்த்தும் கூட்

டாகவாழும் தொகுதியே சமுதாயம் ஆகும். அவற்றின் வாழ்வே சமுதாய வாழ்க்கை. ஆகவே உயிரிகளின், உயிரினத்தின் அகம் சமுதாய வாழ்க்கையே யாகும். திருவள்ளுவர் இதனையே முன் குறட்பாவில் (74) நண்பு என்றார். இதுவே பண்பு, பண்பாடு ஆகிய மலர்ச்சிகளின் கருக் கூறு—நாகரிகமாக விரி மலர்ச்சி உறுவதும் இதுவே.

அகத்து அன்பு இல்லா வாழ்க்கை என்பதில் அகத்து என்ற சொல்லால் சமுதாயப் பண்பாடு குறிக்கப்பட்டது.

அன்பகத்து இல்லா உயிர் வாழ்க்கை என்பதில் உயிர் என்ற மிகையே 'உயிரிகளின்' என்ற அவாய் நிலையை வருவித்தது என்பது முன்னரே கூறப்பட்டது. ஆனால் அதற்கு இன்னொரு குறிப்பும் உண்டு. வன் பாற்கண் என்பதில் 'வன்' என்ற மிகையுடன் சேர்ந் தும், தளிர்த்து என்பதிலுள்ள புது வாழ்வுக் குறிப் புச் சேர்ந்தும், அதற்கிணையான வாழ்வின் புது வளர்ச்சி யளாவியும் அது ஒரு முழு உவம, உருவகப் பொருளைக் குறிப்பாகக் காட்டுகின்றது. அதுவே இனப் பண்பு, வான மழைப் பண்பு. மரம் உயிர்ப் பாலையும்—தனி உயிரியையும்; பாலை நில நயப்பையும் உயிரினச் சமுதாயத்தையும் சுட்டுவதனால், இம் மூன்றும் பண்பு இவை கடந்த வான் மழைப் பண்பை யும் உயிரினத்தின் இன வாழ்வையும் சுட்டுவதாய் அமைகிறது.

மரம் பட்டாலும் வேறு மரம் நடலாம். பாலையில் நீர் இல்லாவிட்டாலும், நீர் கொண்டு வரலாம். ஆனால் வன்பாலையில் நன் மரம் கொணர்ந்தாலும் பட்ட

மரமாய் விடும். நீர் கொண்டு வந்தாலும் பயனில்லை. மந்திரத்தால் மழை கொண்டுவந்து விட்டாலும் மிகுதி பயனில்லை.—மழை நீரைத் தேக்கி வைத்து இனப் பண்பாக்கும் உரப் பண்பு, எலும்புப் பண்பு, நிலப் பண்பு வன்பாலுக்கு இல்லை.

அன்பகத்து, வன்பால் ஆகியவற்றின் எதுகை மூலம் அன்பின் வன்பாற் பண்பு, அதாவது பாதுகாப் பாற்றல் சுட்டப்பட்டது என்பது விளக்கவுரையில் குறிப்பிடப்பட்டது. ஆனால் இது தனி உயிரியின் என்புப் பண்பு மட்டுமன்று, அது மரத்தின் காழ் போன்றது. அதுஉயிர்ச் சமுதாயத்தின் என்புப் பண்பு. இந்த இரு என்புப் பண்புகளும் அதாவது உரப் பண்பு களும் உண்மையில் இன வளமாகிய மழை வளம், அதாவது அருள்வளம் இன வாழ்வில் ஊறிப் படர்ந்து சமுதாயத்திலும் தனி உயிரிலும் வளர்ந்துள்ள பண்பேயாகும்.

'வன்' என்பதன் பொருளாகக் கூறப்பட்ட 'கடும் பாறைகள் நிரம்பிய' என்ற உவமம் இதனால் நிலப் பண்பும் உரப் பண்பும் மழை நீர் ஊடுருவும் பண்பும் இல்லாத என்ற விரிபொருள் தந்து, அன்பின் இயக்குதிற ஆற்றலாகிய அருள் பரவாத இன வாழ்வு என்ற உவமக் கருத்துக்கு ஈடாகிறது;

இயந்திரம் மனிதனை இழுத்துச் செல்கிறது. ஆனால் அந்த இயந்திரத்தை மனிதன்தான் இயக்க வேண்டும், படைக்க வேண்டும். இயந்திரம் தானாக இயங்காது, தானாகத் தன்னைப் படைத்தமைத்துக் கொள்ளவும் முடியாது. இதுபோலவே, அருள் அன்பை இயக்கும் திறமுடையது. அதே சமயம் அருள்

அன்பிலிருந்து பிறப்பது. நீடித்த அன்புப் பயிற்சியின் மலர்ச்சியாலேயே ஏற்படுவது ஆகும்.

மழை நீர் பயிருக்கு மட்டுமன்று, நிலவளத்துக்கும் ஆதாரம் ஆகும். பயிருக்கு அது உடனடி ஆதாரம்; நிலவளத்துக்கோ அது நீடு பயிற்சி ஆதாரம். ஆயிரக் கணக்கான ஆண்டு மழை நீரும் வெயிலும் காற்றும் கலந்தடிப்பதனாலேயே கடும் பாறைகள் மண்ணாகிப் பொடிந்து, பின்னும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் புல் பூண்டு புதர்க்காடு மர வளங்களின் மக்கிய செறிவாலேயே அம் மண் உரமுடைய மண்ணாய் நில வளமாகிறது. அருள் இதுபோல, உயிரின, மனித இன வாழ்வுகளில் ஆயிர பதினாயிரக் கணக்கான ஆண்டுகளாக, ஊழூழிகளாகப் பயின்ற காதல்—அன்பு—அருள் மலர்ச்சியினாலேயே தோன்றிய பண்பு, அருள் வடிவமெய்திய பின்னும் இம் மலர்ச்சியை ஊக்கும் மழைவளச் செறிவான இன நிலவளமாகவே நீடிக்கிறது.

வன் என்ற அடை இவ்வாறு பாலையில் கூடப் புது வளர்ச்சிக்குக் காரணமான மழைவளச் செறிவான நில வளத்தின் இன்மையைச் சுட்டிக் காட்டி, தளிர்த்தல், அகத்து, உயிர் ஆகிய சொற்களின் குறிப்புக்களோடியைந்து, என்பகத்து நிகழும் உள்ளுயிர் இன வாழ்வுவளப் பண்பை வலியுறுத்திக் காட்டுகிறது.

(2) குறட்பாவின் கருத்துப்பகுதி மூன்று சீர்களில் முடிய, உவமப் பகுதி நான்கு சீர்களாக நீண்டுள்ளது. இது பொருட் செறிவு மட்டும் கருதியதன்று. ஏனெனில், ஒரு பகுதியின் சொற்களே

மற்றப் பகுதியின் அவாய் நிலைக் கூறுகளைத் தூண்டிக் குறிப்பால் தெரிவிக்கின்றன. இவ்வமைவு அகத்தே இன்பத்தின் கூருன அன்பு உடைய உயிர்களுக்குப் புறத்தே அன்பின் கூருன இன்பம் அந்த அகக் கூறள வில் எய்துவதாகும் என்ற பெரிய வேதாந்தத் தத்து வத்தை உணர்த்திற்று. 'அகம் கண்டது புறம்' என்ற தமிழ்ப் பழமொழியும்; 'அண்டத்திலுள்ளது பிண் டத்திலுண்டு' என்ற தமிழ்ப் பழமொழியும் கூறும் கருத்து இதுவே. கருத்துரையில் கண்ணெளி, விண் ணெளி உவமையால் இதுவே விளக்கப்பட்டது.

கண்ணெளி, விண்ணெளி உவமை இக் காலத் தவர் விளக்கத்துக்காக இம் மணி விளக்கவுரை பெய்துரைத்ததேயாகும். ஆனல், அதனினும் சிறந்த உவமை குறட்பாவே தரும் நீர்—நீர்மை—உரவள உவமையே யாகும். ஏனெனில், கண்ணெளி விண் ணெளி என்ற இருமை மலர்ச்சி உவமையை இது மும்மை மலர்ச்சி யுவமையாக்கிக் காட்டுகிறது. தவிர, வான் சிறப்பு அதிகார இரண்டாம் குறட்பாவின் குறிப்பு மூலம் இம் மும்மை மலர்ச்சியே மும்மை எழுமை எழுமும்மை மலர்ச்சியாகி, என்புருவக மூலம் இவ்வதிகார முன் குறட்பாக்கள் சுட்டிய உயிர்மலர்ச்சி —மனித இனப் பண்பாட்டு மலர்ச்சித் தத்துவங்கட்கு அவ் விளக்கமும் தந்துள்ளது. வான் மழை வடிவில் தோன்றிய நீர் உயிரியின் உடலின் ஒரு பெருங் கூருய் இருப்பதனலேயே, அது அதே நீர்க் கூறுடன் கலந்த மண், விண், காற்று வெளி, உணவுப்பொருள் ஆகியவற்றின் வளங்களையும்,நேரடியாக நீரையும் உட் கொள்ள முடிகிறது. உணவின் சமைப்புப் பக்குவச் செயல் ஆகியவற்றிலும், உண்ட பின் உடம்பு கை கால்

உண்கலத் துப்புரவிலும் அதுவே பயன்படுகிறது. நீரில் வாழாது நிலத்திலும் வானிலும் திரியும் உயிரிகள்கூட அவ்வப்போது நீரில் குளித்தன்றி வாழ்வு நலம் காண்பதில்லை. இதுபோலவே நீரில் வாழாது நிலத்திலும் வானிலும் ஊடாடும் உயிரிகள்கூட நீர் நயப்புக் கலந்த காற்றன்றிப் பிற காற்று உட்கொண்டு உயிர்க்க முடிவதில்லை.

உயிர் வடிவமாயிருந்து உயிரின் சூழலுமாய், உயிரின் உணவுமாய், ஊடாட்டமுமாய் அமையும் நீர் போன்றது, அகத்தே அன்புமயமாகவும் புறத்தே அன்பு இன்பமயமாகவும், அகத்தின் அகமாகவும் புறத்தின் புறமாகவும் இனத்தே அருள் மயமாகவும் விளங்குவது, அன்பு-இன்பம்-அருள் என்ற மலர்ச்சிப் பண்பு. பனி, நீர், ஆவி என்ற மூவடிவில் இயங்கும் நீர்ப்பண்பு இம் மூவடிவ அன்புக்கு இயலுவமையாதல் காணலாம்.

(3) அன்பு என்பதன் எதிரிணையாக வன்பால் வந்துள்ளது. நேரே பொருள் தொடர்பற்ற இச்சொற்களின் ஓசைத் தொடர்பும், அத் தொடர்பு காரணமாகக் குறட்பா பெற்றுள்ள இருவிகற்பப் பண்பும் அன்பின் என்புருவகத் தத்துவமே சுட்டி, அன்பு மென் பண்பு மட்டுமன்று, மென்பண்பைப் பேணிக் காக்கும் காப்புவள வன்பண்புமாகும் என்பது சுட்டிற்று. குளிர் மண்டலத்தில் நீரில் வாழ் உயிரிகளுக்கும் சரி, நிலம் வாழ் உயிரிகளுக்கும் சரி, குளிரால் இறுகிய நீரின் வடிவான பனிக்கட்டியே மிகச் சிறந்த, மிக எளிதில் கிட்டுகின்ற குளிர் காப்புச் சாதனமாய் அமைவதை நாம் குறித்துணரலாம். உடலின் மென்பகுதிகளாகிய

உள்ளுறுப்பின் வன்திரியான என்பு அம் மென்மை வாய்ந்த உள்ளுறுப்புப் பேணுவதேயன்றி, புற உறுப்புக்களுக்கும் வடிவும் உறுதியும் உயிர்த் துடிப்பும் உணர்வும் அளிக்கிறது என்ற செய்தியுடன் இது பொருந்தும் மெய்ம்மையாகும். விளக்க வுரையிலேயே இக் கருத்துச் சுட்டப் பட்டாலும், இங்கே இது மீண்டும் மேலும் விளக்கப்படுவதற்குரியது. ஏனெனில், இக் குறிப்பு வளமே மேலே இவ்வதிகாரத்தின் ஆறும் (76) குறட்பாவுக்கு ஒரு புது விருத்தியுரை ஆகும். 'மறம் அறத்துக்கு மாறானதுபோல் தோன்றுகிறது. ஆனால், அது உண்மையில் அறத்தின் பாதுகாப்புப் பண்பே— அறத்தின் என்புப் பண்பேயாகும், என்பது இக் குறட்பாவில்' வன்பால்' என்ற குறிப்பால் சுட்டப்படுகிறது.

(4) இலக்கணக் குறிப்புரையில் முன்பகுதியில் சுட்டப்பட்ட ஒவ்வோர் ஓசை இசைப் பண்பும் இக் குறட்பாவில் தரும் விளக்கங்கள் ஏட்டில் இடம்பெற முடியா விரிவுடையன, பெரிதும் வாசகர் உய்த்துணர்வுக்கே விடப்பட வேண்டியவை ஆகும். அஃபு எனத் தொடங்கும் முற்பகுதியின் ஓசை மென்மை, வன்பால் எனத் தொடங்கும் மறுபகுதியின் ஓசை வன்மை ஆகியவை இயல்பாக உலகில் காணும் மென்மையின் வன்மைப் பண்பு, வன்மையின் மென்மைப்பண்பு— உள்ளுறுப்பு—என்புத் தொடர்புப் பண்பு சுட்டுவதாகும். இதனைப் பிற்கால நீதி நூல்களிலும்

'வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல் பஞ்சில் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்'

என்ற வெண்பா அழகுபெறச் சித்திரித்துக் காட்டியுள்ளது.

இரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட வன் பாற்கண் என்ற இடைச் சீர் முன்மென்மைப் பின் வன்மை பெற்று அவ் இரு கூறுகளையும் இணைத்த அழகு நயம் கூர்ந்து காணத் தக்கது. அத்துடன் இதில் மூன்ருமசை மீண்டும் மென்மையே சுட்டியதும் ஓர்தல் தகும். வன்மையின் முடிபு மென்மையே, ஆனால் அது செறிவு பெற்ற மென்மை என்பதை மூன்று சுழி ணகரம் உருப் படுத்தித் தெரிவித்தலும் கருதற்குரியது.

வன்பாற்கண் என்பதன் அசைகளிடையே உள்ள நீளிடையீடு அன்பின் பெருமை இந்த வன்பிலேயே உள்ளது என்று காட்டிற்று. மலர் போன்ற மெல்லியல் பெண்மையை அணைக்கும் ஆண்மையின் அன்பு தோய்ந்த இரும்புக்கரங்களை இது நினைவூட்டுகிறது.

வன்பாற்கண் என்பதைப் போலவே உயிர் வாழ்க்கை என்பதும் காய்ச்சீர் ஆகும். ஆனால், வன்பாற்கண் தேமாங்காயாய், கடு வன்புணர்ப்புப் பெற்று மூவசைகளும் ஒத்திசைக்க, உயிர் வாழ்க்கை என்பது புளிமாங்காயாய், இரண்டாவது அசை எடுத்திசைத்து, மெல் வன்புணர்ப்பே பெற்று அலைபாய்விசைப்பாய் வந்தது. தனி உயிரியின் உள்ளத்தில் உள்ள அன்பு அல்லது அன்பின்மையே சமுதாயத்திலும் இனத்திலும் அன்பலை பரப்ப அல்லது தடுக்க உதவுவதாதலால், அன்பு அகத்து உடைய உயிரின் வாழ்வும் குடி மரபும் அவற்றின் சமுதாய இனச் சூழலும் சூழல் கடந்து முன்னேறுவதையும்,

அன்பின்மையின் சூழலை முன்னே, பின்னே கடந்து கட்டாயம் மலர்ச்சியுறுவதையும் இது படம்பிடித்துக் காட்டுகிறது.

அன்பகத்து, மரந்தளிர்த்து ஆகிய இரு விளச் சீர்கள் கூவிளங் கருவிளமாய், முன்னது ஏற்றிசைப் பாகியும் பின்னது இறங்கிசைப்பாகியும் வந்ததனால், அன்பின் வளர்ச்சியும் அதன் பயனுன தளிர்த்தலின் உறுதியும் சுட்டப்பட்டன. இதுபோலவே தேமாச் சீர்கள் இரண்டில் ‘இல்லா’ ஏற்றிசைத்தும், ‘வற்றல்’ இறங்கிசைத்தும் காசுவாய்பாட்டுக் கடைச்சீர் எடுத்திசைத்தும் வந்தன. இவற்றுள் ‘இல்லா’ என்பது உயிரியின் கடு வாழ்வும், ‘வற்றல்’ என்பது மர வாழ்வின் கட்டாய நலக்கேடும் குறித்தன. இல்லா என எதிர்மறைப் பொருளே சுட்டிய சீரும் அதன் உவமையின் எதிர்மறை சுட்டிய வற்றல், அற்று என்று சீர்களும் மிகக் குறுஞ்சீர்களாதலால், எதிர்மறை உலகில் இயல்பன்று—அன்பின்மைதானே அழிதலின், அன்புடைமையே இன வாழ்வாகி, பண்பாடாகி, நாகரிகமாகி உலக வாழ்வில் நிலைபெறுகிறது என்பது சுட்டின.

கொடு விலங்குகளும் கொன்றுண்ணும் விலங்குகளும் உலகில் அருகிவருவதும், கேடில் விலங்குகளே உருவிலும் ஆற்றலிலும் வளத்திலும் பெருகி வருதலும் கண்கூடு. அன்பு மற ஆற்றல் வளர்ச்சிக்கும் உதவினும், அன்பறமே மனித இனநாகரிகமாக உலகில் வளர்ந்து வருவதையும் மனித இனவரலாறு காட்டும்.

பிற இனங்கள் கடந்து, அறிவிலும் கலையிலும் சீரிய பல இனங்களின் வாழ்வே கடந்து தமிழினமும்

தமிழினத் தொடர்புடைய இனங்களும் ஆயிரப் பதினாயிரக்கணக்கான ஆண்டுகளாக நீடித்துச் சாவா மூவா வாழ்வு பெற்று வருவதன் காரணம் அவை இந்த அன்பு—அருள்—இன்ப மலர்ச்சி பேணி வருவ தனாலேயே என்னலாம்.

(5) உரை நடைபோல அமைந்து, பாலை நீருற்றுப் போல் ஆழமும் ஆழம் தோன்றாத் தெளிவும் கொண் டது இக் குறட்பா என்பது—விளக்கவுரை முகப்பிலே குறிக்கப்பட்டது. தெளிந்த தோற்றத்துக்குக் காரணம் அது ஒரு தனி உவமைபோல, அன்பின் இன்றியமை யாமையை எண் மடிக் கூடாமையால் ஒட்டற வலியுறுத்திக் கூறும் முறையில் அமைந்திருப்பது தான். ஆனால் இதன் ஆழம், அவ்வுவமையினுள் அடங்கிய எண்மடிக் கூடாமைகளும் உடன்பாட்டுப் பொருளில் எட்டு உவமங்களின் தொகையாக ஒரு தொடர் உவம உருவகமாகிவிடுவதனால் ஏற்பட்டுவிடு கிறது. அது மட்டுமன்று. இந்த எட்டு உவமக் கூறு களின் உள்ளீடாக அன்பு நீர்—நிலவளம்—உயிர்ப் பால் என்ற வான் சிறப்பு இரண்டாம் குறட்பாக் கருத் தின் எதிர் நிழற் பொருளும், 'அகத்து' என்ற குறிப் பின் மூலமும் அதிகாரத்தின் பிற குறட்பாக்கள் மூலமும் திரண்ட என்புருவகக் கருத்துக்களும் ஊடாடுகின்றன. இவையனைத்தையும் கடந்து, சிறப்புரையிலும் மேலே விளக்கவுரையிலும் குறிப்பிட்ட கண்ணொளி—விண் ணொளி வேதாந்தக் கருத்தும் அதே குறிப்பாலும், குறட்பா அமைதிக் குறிப்பாலும் குறிப்பு வளமாகக் குறட்பாவில் மிளிர்கிறது. "உள்ளத்தில் அன்பு இல் லாதவனுக்கு, அன்புப் பண்பை என்புப் பண்பாக, உளப் பண்பாக வளர்க்காதவனுக்கு, சமுதாயத்

திலும் அன்புப் பண்பு, என்புப் பண்பு ஏற்படாது, பயன்படாது; சமுதாயத்தில் அது இல்லாவிட்டால், இனத்தில் அப்பண்பு வளராது, இனத்தொடர்பும் அந்தச் சமுதாயத்துக்கு இல்லாமல் போய்விடும்"— இதுவே இக் குறட்பாவின் வேதாந்தக் கோட்பாடு.

அகத்தே அன்பு, புறத்தே இன்பம்; அக அன்பு புற இன்ப அலைகளைப் பரப்பும்; நீர்ப் பண்புபோல. அன்பு அகமும் புறமும் பரவி, எல்லாப்படியிலும் பொங்குமா வளம் தரும்; அன்பின்மையோ, அன்பிலா உயிரியின் தனி வாழ்வை அழிந்துவிடும்; ஆயினும் அன்புடைய உயிர் வாழ்வே இன வாழ்வாதலால், அன்பிலா உயிர் தானும் தன் சூழலும் அழிதலன்றி, இன உயிரை அழிக்க முடியாது—அன்புடைய உயிரின் சூழலே இனமாக வளரும்.

மேலை உயிர்மலர்ச்சி நூலார் உயிரிகளின் மலர்ச்சியில் 'தகுதி வென்று வாழும்' எனும் கொள்கை உடையவர்கள். திருவள்ளுவரின் கோட்பாடும் அதுவே. ஆனால், தகுதி இங்கே மலர்ச்சியுடைய தகுதி—அன்பு நோக்கி, அன்பின் மலர்ச்சியாகிய இன்பநோக்கிச் செல்லும் தகுதியாகும்.

அன்பிலா உயிர் பரப்பும் அன்பின்மை, அன்பலைகளைச் சிறிது தடுக்கும். ஆனால், அன்பலையே உயிரலையாதலால், அன்பின்மை அலையோட்டம் தடுக்கும் ஒரு இடைத்தீவாக நின்றழிய, உயிரலையோட்டம் சற்றுத் திசை திரும்பிச் சுற்றிச் சென்று அன்பின்மை பின் சென்றொழியத் தான் முன்னேறிச் செல்லும் தன்மையுடையது ஆகும்.

அற்று என்ற இறுதி அசையின் எடுத்திசைப்பு இவ்வுண்மையை வலியுறுத்திக் காட்டுவது ஆகும்.

தனிக் குறிப்புக்கள்: (1) 'அன்பு அகத்து இல்லா' என்பதில் 'அகத்து' என்பதை வெற்றடைமொழிபோல ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் பேராசிரியர் வி. ஆர். ஆர். தீட்சிதரும். இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் பேராசிரியர் சங்கரராசு நாயுடுவும் வாளா விட்டுச் சென்றனர். பரிமலழகரும் பிற பல உரையாசிரியர்களும் 'அன்பு அகத்து' என்பதனைப் பொருள்கோளில் மாற்றி 'அகத்து அன்பு' எனக் கொண்டு, 'அகத்து' என்பதற்கு 'உள்ளத்தில்' என்றே பொருளுரைத்தனர். பரிதியார், கவிஞர் இராமலிங்கனார் ஆகிய சிலர் இம் மணிவிளக்க வுரையைப் போலவே 'அன்பு அகத்து' என்பதனை வரிசை மாற்றுமலே பொழிப்புரைத்துள்ளனர். அவர்கள் பொருள் மட்டும் முந்தியவர்களை ஒப்ப 'உள்ளத்தில்' என்பதே.

'அகத்து' என்பதனை 'உயிர் வாழ்க்கை', என்பதிலுள்ள 'உயிர்' என்பதன் குறிப்பு வளமாக—அகத்து, புறத்து என இரு பாற் பொருளுடையதாக்கி, மனிதனின் அகத்து, வாழ்க்கையின் அகத்து என்றும்; 'அகங் கண்டது புறம்' என்ற குறிப்பு வள அடிப்படையில் உயிரியின் அகத்து அன்பே சமுதாய வாழ்க்கையகத்து அன்புப் பண்பு, இன வாழ்வில் இனப் பண்பு ஆகியவற்றுக்கு மூலம் என்றும் பொருள் வள விரிவு கண்ட உரை, இம் மணிவிளக்கவுரை ஒன்றேயாம் என்பது காணத்தக்கது.

[2] 'அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை' என்ற தொகையில் 'உயிர் வாழ்க்கை' என்ற தொகைக் கூற்றினில் உயிர் என்பதை எழுவாயாக்கி அதனை வாழ்க்கை என்ற தொழிற் பெயரின் வினைப் பகுதிக்குரிய வினை முதலாக்கியவரும் உண்டு. 'உயிரினது வாழ்க்கை' என் அதனை ஆரும் வேற்றுமைத் தொகை ஆக்கினேரும் உண்டு. பலர் இந்த இரண்டில் எதனை இலக்கண வகையில் ஏற்றனர் என்று கூற முடியாதபடி தொகு பொருளே கூறிச்சென்றனர். வாழ்க்கை

என்ற சொல் கை விகுதி பெற்ற தொழிற்பெயர் போலத் தோன்றினும், அது 'வாழ்க்கை' என்ற தொழிற் பெயரின் திரிபே என்பதனையும்; பன்மடி ஆகுபெயராகச் சமுதாய வாழ்வுப் பண்பு அல்லது பண்பாட்டு வளம் குறித்த சிறப்புச் சொல் என்பதனையும் இம் மணிவிளக்கவுரை யாசிரியரன்றி வேறு எவரும் கருதியதில்லை.

இது மட்டுமன்று. சொற்பொருளிலும் உரையாசிரியர்களிடையே வேறுபாடு உண்டு என்பதைக் கீழே காணலாம். உயிர் என்பதைச் சில்ர் உயிர்ப் பண்பு என்று பொருள்படும்படி உயிர் என்றும், சிலர் உயிரி என்ற பொருள்படும்படி உயிர் என்றும், சிலர் மனிதர் என்று பொருள்படும்படி உயிர் என்றும், மனிதர் என்றும் கொண்டுள்ளனர். அது போலவே வாழ்க்கை என்பதனை வாழ்க்கை என்றும், வாழ்தல் என்றும்; உடலோடு கூடி வாழ்தல் என்றும்; இல்லறத்தில், வாழ்தல் இல்லறத்தோடு கூடி வாழ்தல்' என்றும் பல வாருகக் கூறினர்.

இவ் வேறுபாடுகளிடையே வள்ளுவத் தமிழ்க் குருதி மரபில் வந்துள்ள தமிழ் இன உள்ளம் இம் மணிவிளக்கவுரை நோக்கித் தட்டித் தடவி முன்னேறுவதை வாசகர்கள் காணலாம்.

உரை வேறுபாடுகளின் முக்கிய விவரங்கள் வருமாறு:

'உயிர் வாழ்க்கை' என்பதற்குப் பரிமேலழகர் 'உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல்' என்று பொருளுரைத்தார். இங்கே உயிர் என்றது உயிரியை, அதுவும் மனிதனைக் குறித்தது என்பதும், 'உயிர் வாழ்க்கை' என்ப்தில் அவர் 'உயிர்' எழுவாயாக 'வாழ்தல்' என்பதன் வினைப் பகுதியே பயனிலையாகக் கொர்ண்டார் என்பதும் தெளிவு. ஆனல் அதே சமயம் 'வாழ்க்கை' பெயராக, 'இல்லா' என்ற பெயரெச்சம் தழுவ நிற்கின்றது. இதற்கு அவர் எவ்வகை இலக்கண விளக்கமும் கூருது பொருள் மட்டும் பொருத்திக் கூறிச் சென்றுள்ளார். வாழ்க்கை இங்கே இல்லறத்தோடு கூடி வாழும் வாழ்க்கை ஆயிற்று.

காலிங்கர் இதனை ஒத்தே 'உயிர் உடலோடு கூடி வாழ்கின்ற வாழ்க்கை' என்றார். இவரும் இலக்கண விளக்கத்திவ் புகவில்லை யாயினும், வாழ்க்கையைப் பரிமேலழகரைப் போல வேறும் தொழிற்பெயராக்காமல், 'வாழ்கின்ற' என்ற வினையை இடையே சேர்த்து. 'இல்லா' என்பதனை 'இல்லாது' என்ற வினையெச்சமாகப் பொருள் கூறி, 'வாழ்கின்ற' என்பதனை அது தழுவும்படி விடுகிறார்.

புலவர் குழந்தை இலக்கணச் சிக்கலில் புகாமலே, 'இல்லா உயிர்' என்பதனை 'இல்லாதவர்' என இணைத்துப் பொருள் கொண்டு 'இல்லாதவர் வாழும் வாழ்க்கையானது' என்று பொருளுரைத்தார். 'இல்லா உயிர்' என்பதன் பின் இவர் ஆறும் வேற்றுமை உருபு தொக்கதாகவே கொண்டிருத்தல் கூடும்.

பேராசிரியர் மு. வரதராசனார் இம் மணிவிளக்கவுரையைப் போலவே 'உயிர் வாழ்க்கை' என்பதை ஒரு தொகைச் சொல்லாகக் கொண்டார்—வேற்றுமைத் தொகையாகக்கூட அவர் இதனைக் கருதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, 'இல்லா' என்ற பெயரெச்சத்துடன் அதனை இயல்பாகவே இணைத்தும் உள்ளார். ஆனால் உயிர் வாழ்க்கை என்பதற்கு அவர் வாளா வாழ்க்கை என்றே பொருள் கொண்டார். உயிரோடு கூடிய வாழ்க்கை என அவரும் இம் மணிவிளக்கவுரைபோல இதனை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகக் கொண்டிருத்தல் கூடும். ஆயினும் உயிர் என்பதற்கு அவர் இவ்விடத்தில் எத்தகைய தனிப் பொருளும் காணவில்லை. ஏனெனில் வாழ்க்கை என்பதே உயிரோடு கூடிய வாழ்க்கைதான்.

மலையாள மொழிபெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம், இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராசு நாயுடு ஆகியோர் பொருள் இதுவே.

மணக்குடவர் 'உயிரினது வாழ்க்கை' என்றும்; புலவர் ந. சி. கந்தையா, 'உயிரினது இல்லற வாழ்க்கை' என்றும்; கவிஞர் இராமலிங்கனார், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர்

ட்ரூ, ஜ. டி. தங்கசாமி, இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் வெங்கடகிருட்டினன் ஆகியோர் 'மனிதனுடைய இல்லற வாழ்க்கை' என்றும் பொருள் பொருத்தினர்.

உயிர் வாழ்க்கை என்பதை 'வாழ்க்கை வாழ்வதானது'[1] என்று கூறி 'தளிர்த்தல்' என்ற முடிவுக் குறிப்பை ஒரு சிறிதே நோக்கியுள்ளார், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் பேராசிரியர் வி. ஆர். ஆர். தீட்சிதர்.

[3] 'வற்றல் மரம்' என்பதற்கு 'உலர்ந்த மரம்': 'பட்ட மரம்', 'முளைத்து வற்றிப் போயிருக்கிற மரம்', 'வாடிய மரம்' (உணங்ஙி நில்க்குந்ந மரம், ருகே வ்ருக்ஷ[2]) என்றே உரையாசிரியர், மொழிபெயர்ப்பாசிரியர் பெரும்பாலாரும் கூறினர். 'வற்றல்' என்ற தொழிற்பெயர் அப் பண்புக்கு ஆகி வற்றல் பண்புடைய மரம் என்ப் பண்புத் தொகை போல இணைந்ததாகவே இம் மணிவிளக்க வுரையைப்போல இவர் அனைவரும் கொண்டுள்ளனர் என்பது தெளிவு. ஆனால் பரிமேலழகர் மட்டும் இங்கே ஒரு தனி இலக்கண அமைதி கண்டுள்ளார்.

'வற்றலாகிய மரம்' என்று அவர் பொழிப்புரை கூறி, 'வற்றல் பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்' என்று விளக்கவுரையில் இலக்கணக் குறிப்பும் உறியுள்ளார். 'வற்றல் மரம்' என்பது 'வற்றியது ஆகிய மரம்' என்று பொருள்படும் ஒருபொருள் குறித்த இரு பெயர் ஒட்டுத் தொகை என்பது அவர் உட்கோள் என்று தோற்றுகிறது. 'வற்றல்' என்பது திணை பால் குறித்த விகுதியான 'து' ஈறு பெறுத குறிப்பு வினையாலணையும் பெயர் என்றும் அவர் கருதி இருந்தார் எனல் வேண்டும்,

பரிமேலழகர் ஏன் இவ்வாறு புதிய இலக்கண விளக்கம் கண்டார் என்பது தெரியவில்லை. வழக்கமான அவரது நுண் மாண் நுழைபுல அருநயம் காண. இது இன்னும் ஆராயத் தக்கது ஆகும்.

1, To live a life 2. Dry tree, withered tree

[4] 'வன்பாற்கண்' என்பதில் 'வன்பால்' என்ற தொகையில் 'பால்' என்பதை வெற்றுப் பெயர்ச்சொல்லாக, அதாவது 'பகுதி', 'பிரிவு', 'நிலம்' என்ற பொதுப் பொருளுடையதாகக் கொண்டு. 'வன்' என்பதற்கே பொருட் சிறப்பும் உயிர்ப் பொருளும் கற்பித்துள்ளனர் பலர். இவ் வழி 'வலிய பாரிடத்து' என்று மணக்குடவரும், 'வலிய நிலத்தின் கண்' என்று புலவர் குழந்தையும்: 'கடினமான நிலத்தில்' என்று புலவர் ந. சி. கந்தையாவும்; 'கெட்டியான நிலத்தில்' என்று கவிஞர் இராமலிங்கனும்: 'பாறையின் மேல்' என்று பரிதியாரும்; 'கல் தரையில்' என்று மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளமும் பொருள் கண்டுள்ளனர்.

'கற்செறிந்த வறகென்ற தரையின்கண்' என்றார் காலிங்கர்,

பரிமேலழகர் 'வன்பாற்கண்' என்பதற்கு 'வன்பாலின் கண்ணே' என்றே பொருளுரைத்தார். ஆனால் அவர் கொண்ட பொருள் மேற்கூறப்பட்ட உரைகளோடொத்ததே என்பதனை 'வன்பால், வன்னிலம்' என்ற அவர் விளக்கவுரைக் குறிப்புக் காட்டுகிறது.

புலவர் குழந்தையும் பரிமேல்ழகரைப் பின்பற்றி 'வன்பால், வன்னிலம், நீர்வளமற்ற கெட்டியான மேட்டு நிலம்' என்று முடிவுரை கூறியுள்ளார்.

இவ்வுரைகளுக்கு நேர்மாறாக, 'வன்பால்' என்பதில் 'வன்' என்ற அடையையே வெற்றடையாக்கி, 'பால்' என்பதையே இத் தொகையின் பொருள் பொதிந்த உயிர்ச் சொல்லாக்கி; அதற்குப் பாலை என்ற பொருள் கூறியவர்களும் உண்டு. இந்தி மொழிபெயர்ப்பாசிரியர் சங்கரராசு நாயுடு (மருஸ்தல), கவிஞர் வெங்கடகிருட்டினன் (மருபூமி) ஆகியோர் இவ்வாறு 'வன்' என்பதனை வெற்றடையாக விட்டு, பால் என்பதற்கே பாலைவனம் என்று கூறியவர் ஆவர்.

வன்பால் என்ற தொகையில் இம் மணிவிளக்கவுரையை ஒப்ப 'வன்' என்பது, 'பால்' என்பது ஆகிய இரு கூறுகளுக்

கும் சரிசம முக்கியத்துவம் அளித்துப் பொருள் கூறியவர் களும் உளர். 'வளமற்ற பாலைவனத்தில்' என்று பேராசிரியர் மு. வரதராசனார். ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர்கள் வி. ஆர். ஆர். திட்சிதர், ஐ. டி. தங்கசாமி[1] ஆகியோரும்: 'வலிய பாலைவனத்தில்' என்று பேராசிரியர் இலக்குவனார், ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ட்ரூ[2] ஆகியோரும் கூறினர்.

மூவகைப் பொருள் கோளாளர்களும் தனித்தனி ஒவ் வொரு கூறுகளில் இம் மணிவிளக்கவுரையின் கூறுகளை வற்புறுத்தி, மொத்தமாக இவ்வுரை நோக்கி வளர்வது காணலாம்.

[5] 'தளிர்த்தற்று' என்பதற்குத் 'தளிர்த்தால் போலும்', 'தளிர் விட்டதை ஒக்கும்'. 'செழிப்பாகத் தழைப் பதைப் போலத்தான்' என்று உரையாசிரியர்கள் அனைவரும் ஒத்த கருத்தே கூறினர்.

'(தளிர்த்தல், உயிர் வாழ்தல் ஆகியவை) கூடாதென்ப தாம்' என்று பரிமேலழகர் தம் விளக்கவுரையில் கருத்து முடிபு கூறினார் மணக்குடவரும் 'தளிர்த்தற்குக் காரணம் இன்மையால் தளிராது என்றவாறும்' என முடித்தார். பொழிப்புரையின் முடிவிலேயே காலிங்கர் 'வறலாகிய மரம் பின்பு தளிர்த்த அத்தன்மைபோல, இவனுக்கும் வெறும் தோற்றமே யன்றிப் பின் ஆக்கமில்லை என்பது கருத்து' என்று விளக்கினார்.

'பாலை நிலத்தில் வற்றல் மரம் தளிரும் விடாது; அன் பில்லாதவர் இல்லறத்தில் சிறக்க வாழவும் மாட்டார்' என்று பேராசிரியர் இலக்குவனார் உவமமும் கருத்தும் விளக்கிக் காட்டினார்.

'நீர்ப்பசை யில்லாத கெட்டியான தரையில் எப்போதா வது மழை பெய்தபோது முளைத்துவிட்ட மரம் உயிரோடு இருந்தாலும் வற்றித்தானிருக்கும், தழைத்துச் செழித்துப் பிறருக்கு நிழல் கொடுக்காது. அப்படிப்போல நெஞ்சில்

1. Barren desert 2. Hard desert

அன்பென்னும் ஈரம் இல்லாதவன் உயிரோடிருந்தாலும் செழிப்பாக இருக்கமாட்டான். பிறருக்கு நிழலும் தரமாட்டான்' என்பது கவிஞர் இராமலிங்கனாரின் விளக்கம்.

79. வாழ்க்கையின் உயிர்நிலைப் பண்பாகிய அன்பு இல்லாவிட்டால் அழகு, அறிவு, ஆற்றல், வீரம், திறமை, செல்வம் முதலிய வாழ்வின் துணைக் கருவிகளான புறப் பண்புகள் யாவும் இருந்தும், பயன் இல்லை!

[1]புறத்து உறுப்பு எல்லாம் [3]எவன்செய்யும், [2]யாக்கை
அகத்து உறுப்பு அன்பிலவர்க்கு.

பொ - ரை : *(உடம்போடு கூடிய வாழ்க்கைக் குரிய)* **துணைக் கருவிகளான** *(அழகு, அறிவு, ஆற்றல், வீரம், திறமை, செல்வம், கல்வி முதலிய)* **புறப் பண் புறுப்புகள் எல்லாவற்றின் குறைவற்ற நிறைவுகூட,** *(அந்த)* **உடம்போடு கூடிய வாழ்க்கையினை உள்நின்று இயக்கும் உயிர்நிலையான பண்புறுப்பான அன்பு இல்லாதவர்களுக்கு என்ன பயனை உண்டுபண்ணி விட முடியும்?** *(ஒரு பயனும் உண்டுபண்ண முடியாது).*

க - ரை : உடம்போடு கூடியது வாழ்க்கை. அது அந்த உடம்பையே அடிப்படையாகக் கொண்டது. ஆனால் அந்த உடம்பையும் உடம்பு சார்ந்த வாழ்க்கையையும் உள்ளே நின்று இயக் கும் உயிர்நிலைப் பண்பு அன்பு. அந்த உடம்பை யும் வாழ்க்கையையும் பயன் வளமுடையதாக வளர்க்க உதவும் துணைக் கருவிகளான அழகு,

அறிவு, ஆற்றல், வீரம், திறமை, செல்வம், கல்வி முதலிய பல புறப் பண்புறுப்புக்களும் உண்டு.

வளம் பெருக்கும் புறப் பண்புறுப்புக்கள் யாவுமே துணைக் கருவிப் பண்புகள் மட்டுமே யாதலால், உயிர்நிலை அகப் பண்பான அன்பு இல்லாதபோது, அவை யாவுமேகுறைவற நிறைவுற்றிருந்தாலும் எத்தகைய பயனும் உடையவை ஆகமாட்டா. அன்பாகிய அக உயிர்ப் பண்பு இருந்தால் மட்டுமே அவை பயனும் பயன் வளமும் உடையன ஆகும்.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகம் ஒன்றே. அவாய்நிலைக் கூறு உட்பட இதன் சொற்கள் இரண்டு.

அவையாவன:

1. [யாக்கைப்] புறத்து உறப்பு எல்லாம் (இது எழுவாய்).
2. யாக்கை அகத்து உறப்பு அன்பிலவர்க்கு எவன் செய்யும் (இது பயனிலை).

இங்கே யாக்கை என்ற சொல் குறட்பா நடுவில் வந்து, எழுவாய்க் கூறு, பயனிலைக் கூறு ஆகிய இரு புறத்தும் முன்னும் பின்னும் அரிமா நோக்காக விளங்கும் முறையில், பிற்பகுதியுடனன்றி முற்பகுதியுடனும் அவாய் நிலையாகப் பொருளில் இணைக்கப்பட்டது.

இக் குறட்பாவில் இரண்டடிகளிலும் தொடக்கச் சீர்களே நெடு நீள் சீர்கள். ஆயினும் அவை கருவினச் சீர்களே. எனெனில் இரு சீர்களிலும் ஈரசைகளும் வன்மைத் தொடர்புற்றவை. முதலடியின் மூன்றாம் சீரான 'எவன் செய்யும்' என்பது நீள் சீர், புளிமாங்காய்ச் சீர். குறட்பாவின் காய்ச்சீர் இது ஒன்றே. இறுதிச் சீர் பிறப்பு வாய்பாட்டு அசைச் சீர். மற்ற மூன்றும் தேமாச் சீர்கள்.

கருவினச் சீர்கள் இரண்டும் வல்லோசை மிக்கன, முதலடிச் சீர் கடு வல்லோசை. இரு சீர்களிலும் முதலசை எடுத்திசைத்தது—

ஆனால் முதலதில் இரண்டாம் சீர் படுத்திசைத்தும், இரண்டாவதில் அது நலிந்திசைத்தும் வந்தன. புளிமாங்காய்ச் சீரிலும் முதலசை எடுத்திசைத்து அடுத்த இரண்டும் படுத்திசைத்தன. மாச்சீர்களில் 'எல்லாம்' பின்னசை எடுத்தும், 'யாக்கை' முன்னசை எடுத்தும் இரு சீர்களிலும் ஓசை படுப்போசையாகவே அமைந்தது. மூன்றாவது தேமாச் சீராகிய 'அன்பில்' என்பது கடைசிச் சீரைப் பார்க்கிலும் குறுஞ் சீராய் நலிந்திசைத்தது. அதே சமயம் 'அவர்க்கு' என்ற கடைச் சீர் அதனிலும் நலிந்திசைத்து; அதனினும் இறங்கிசைப் பாயிற்று.

யாக்கைப்) புறத்து உறுப்பு எல்லாம் என்ற தொகை அதன் ஈற்றுச் சொற்களிரண்டினையும் ஒப்பப் பெயர்ச் சொல். இது குறட்பாவின் எழுவாயாய், 'எவன் செய்யும்' என்று முடியும் தொகை நிலையை வினைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

எல்லாம் என்பது திணை பால் எண் இடப் பொதுவான பன்மைப் பெயர். இதன் ஈற்றில் முற்றும்மை இயல்பாகத் தொக்கு நின்றது. இதனை முற்றுப் பொருள் என்று கூறுதலும் தகுதி யுடையதே. பெயராயின், இது புறத்து உறுப்பு என்ற பெயருடன் இணைந்து, இரண்டும் ஒரு பொருள் குறித்த இரு பெயர் ஒட்டுத் தொகையாக இயலும். இடைச் சொல்லாயின், அப் பெயருடன் முற்றும்மைப் பொருளுடையதாய் இணைந்தது என்னல் தகும்.

உறுப்பு என்ற பெயர் இங்கே 'எல்லாம்' என்றே குறிப்பால் உறுப்புக்கள் என்று பொருள்படும் பன்மை ஆகும். எல்லாம் என்பத னுடன் இதற்குரிய தொகை இலக்கணத் தொடர்பு மேலே சுட்டப் பட்டது

புறத்து என்பது 'புறத்து உறுப்பு' என்ற தொகுதியின் கூறு. புறத்து உள்ள உறுப்புக்கள், புற நிலையில் கருவியாகவுள்ள பண்புறுப் புக்கள் என்ற பொருளில் இது உருபும் பயனும் உடன்தொக்கதொகை ஆகும். புறத்து, இங்கே புறம் என்ற பெயரின் வேற்றுமை வடிவம். அத்து என்பது சாரியையாய் வந்து, சாரியை முன்னே, பெயரின்

அம் ஈறு கெட்டது. புறத்து என்பதன் ஈற்றில் ஏழாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது.

யாக்கை என்பது பின்வரும் யாக்கை என்பதன் அரிமா நோக்குக் குறிப்பாக, இங்கும் அவாய்நிலையாய் வருவிக்கப்பட்டது. இது இங்கே புறத்துறப்பு எல்லாம் என்ற தொகையுடன் தொகைப் பட்டு, உடம்போடு கூடிய வாழ்க்கைக்குரிய புறப் பண்புறப்புகள் யாவும் எனப் பொருள்பட்டு, உருபும் பயனும் உடன்தொக்க தொகைக் கூறாக இயன்றது.

யாக்கை இங்கும், பின்வரும் யாக்கை என்ற சொல்லை ஒப்ப, யாக்கையோடு கூடிய வாழ்க்கைக்கு ஆகுபெயராய் வந்தது. இதன் சொல்லிலக்கணம் கீழே காண்க.

யாக்கை அகத்து உறுப்பு அன்பிலவர்க்கு எவன் செய்யும் என்ற நீள் தொகை அதன் இறுதி இரு சொற்களையும் முடிபாகக் கொண்டு, வினாப் பொருள் வினையான பயனிலையாய், எல்லாம் என முடியும் தொகையை எழுவாயாகக் கொண்டு முடிந்தது.

செய்யும் என்பது வினைமுற்று. செய் என்பது வினைப்பகுதி. 'உம்' என்பது கால, திணை பால் எண் இடப் பொது வினைமுற்று விகுதி யாகவோ, காலப் பொதுமை சுட்டிய எதிர்கால அஃறிணை வினை முற்று விகுதியாகவோ கொள்ளத்தகும். விகுதியின் முதலுயிர் முன் தனிக்குறிற் கீழ் வந்த பகுதியீற்று யகரம் இரட்டிற்று.

எவன் என்பது எது, யாது, என்ன, எத்தகையது, எதுதான் என்ற பொருளைக் கொண்ட பழந்தமிழ் வழக்கு வினாப் பெயர். இங்கே இதன் ஈற்றில் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நின்று, இதனைச் செய்யும் என்ற வினையின் செயப்படுபொருள் ஆக்கிற்று. இதனைச் செயப்படுபொருளாகக் கொண்டதனாலேயே, செய்யும் என்ற வினைமுற்றும், அதனுடன் முடியும் குறட்பா வாசகமும் வினா வாசக மாயிற்று. அதனுடன் முடியும் 'யாக்கை அகத்து உறப்பு அன்பி லவர்க்கு எவன் செய்யும்' என்ற நீள்தொகை நிலையும் வினாப் பொருள் குறித்த வினைப் பயனிலை ஆயிற்று.

யாக்கை அகத்து உறுப்பு அன்பிலவர்க்கு என்பது முழுவதும் ஒரு தொகைநிலையாகிய பெயர். இதன் நான்காம் வேற்றுமைப் பொருள் 'எவன் செய்யும்' என்ற தொகைக் கூற்றுடன் முடிந்து தொகைப்பட்டது.

இலவர்க்கு என்பது இன்மை என்ற பண்படியாகப் பிறந்த பலர்பால் எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர். 'கு' நான்காம் வேற்றுமை உருபு. இவ்வுருபின் ககரமுன் ககரம் இரட்டிற்று. 'அர்' பலர்பால் விகுதி. எதிர்மறை இடைநிலையான 'ஆ' குறுகி 'அ' ஆகி விகுதி அகரத்தின் முன் வகர உடம்படு மெய் பெற்றது. பண்புப் பெயரின் 'மை' இறுதி கெட்டு, முன்னின்ற னகர மெய் லகரமாயிற்று என்பது தமிழ் இலக்கண நூலார் மரபு.

அன்பு என்றது சொல்லுறுப்பாகி, அன்பிலவர்க்கு என ஒரு சொல்லாய் நின்றது. அன்பை இல்லையாகப் பெற்றவர் என்ற பொருளில் இது ஒரு தொகை. 'அன்பு' என்ற பெயர் இலவர்க்கு என்ற குறிப்பு வினைப் பெயரின் குறிப்பு வினைப் பகுதிக்கு எழுவாயாய் அதனுடன் பகுதியாய் இணைந்து நின்றது என்றலே தகுதி.

உறுப்பு என்பதும் உறுப்பு அன்பு என்ற தொகையின் கூறேயாகும். உறுப்பு ஆகிய அன்பு என இது ஒரு பொருள் சுட்டிய இரு பெயர்த் தொகை ஆகும்.

அகத்து என்பது அகத்து உறுப்பு என்னும் தொகையின் கூறு. அகத்து உறுப்பு என்பது மேலே புறத்து உறுப்பு என்பதனைப் போலவே உருபும் பயனும் உடன்தொக்கதொகை. புறத்து என்பதன் பின் ஏழாம் வேற்றுமை தொக்கு நின்றது. அகத்து என்பது அகம் என்ற பெயரின் வேற்றுமை வடிவம். இது அத்துச் சாரியை பெற்று, சாரியை முன் பெயரின் 'அம்' ஈறு கெடப் பெற்றது.

யாப்பில் அகத்து என்பதன் ஈற்றுகரம் உறுப்பு என்பதன் முன் கெட்டது.

யாக்கை என்பது யாக்கை அகத்துறப்பு என்ற தொகையின் கூறு. இது யாக்கையை உள்நின்று இயக்கும் அகத்து உறப்பு என்ற பொருள்படும் உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

'யாக்கை' என்ற சொல் 'யா' என்னும் வினைப் பகுதியடியாக, 'கை' விகுதி பெற்ற தொழிற்பெயராயிற்று. விகுதியின் ககரம் இரட்டிற்று. 'கட்டுதல்' என்ற பொருளுடைய இத் தொழிற்பெயர் (யாப்பு என்ற இதே பகுதியின் தொழிற்பெயர் வடிவம் எழுத்து, அசை, சீர், தளை, தொடை ஆகியவற்றால் யாக்கப்பெற்ற பாட்டுக்கு ஆகுபெயரானாற்போல தோல், குருதி, தசை, மூளை, நிணம், என்பு, நரம்பு ஆகியவற்றால் யாக்கப்பட்ட உடலுக்கு ஆகுபெயராயமைந்தது. இக் குறட்பாவிலோ, இது மீண்டும் ஆகுபெயராய், உடம்பினால் குடும்ப, சமுதாய, இன உறப்புக்களுடன் இணைக்கப்பட்டு இயக்கும் வாழ்க்கையைக் குறித்தது.

யாக்கை இம் முறையிலேயே குறட்பாவில், மேலே சுட்டியபடி, உடம்போடு கூடிய வாழ்க்கை என்னும் பொருள் தந்து இருமடி யாகு பெயராயிற்று.

வி - ரை: அற வாழ்வின் மழை வளத்துக்குரிய பயிர் வளப் பண்பான அன்புடைமையின் சால்பு முப்பால் வாழ்வு களுடனும் தொடர்புடையதாயினும், இக் குறட்பாவுடன் முடியும் மூன்று குறட்பாக்களும் (77—79) அதவை அற வாழ்வுத் தொடர்பு சிறப்பிப்பவை ஆகும். அவ்வழி இக் குறட்பா வாழ்க்கையின் அக நிலை உயிர் வள விதைப் பண்பான அன்பு இல்லாவிட்டால், வாழ்க்கையின் மற்ற எல்லாத் துணை வளங் களும் கருவி வளங்களும் இருந்தாலும ஒரு பயனும் இல்லை என்பது விதந்தோதுகின்றது.

இவ்வதிகாரத்தில் மூன்றும் குறட்பாவை மையமாகக் கொண்டு சில குறட்பாக்களில் நேரடியாகவும், சிலவற்றில் குறிப்பாகவும் தொடர்ந்து குறிப்பிடப்படும் என்புருவகம், இக் குறட்பாவில் அகத்துறப்பு அன்பு என்ற குறிப்பினாலும் யாக்கை என்ற சொற் குறிப்பினாலும் குறிப்பாக, ஆனால்,

முனைப்பாகச் சுட்டப்படுகிறது. தவிர, யாக்கை என்ற குறிப்பினாலேயே, என்புருவகம் மேலும் விரிவுபடுத்தப்பெறுகிறது. எலும்புக்கூடும் ஓர் அக யாக்கையே. யாக்கையும் என்பும் புறத்துக்கு அகமாக நின்று உள் தூண்டுதலும் செயல் வலிமையும் அளித்து, அதே சமயம் அகத்துக்குப் புறமாக நின்று பாதுகாப்பும் அளித்தல்போல, அன்பு புற வாழ்க்கைக்கு அகமாக நின்று உள் தூண்டுதலும் அளித்து, உள் வலிமையாகவும் அமைந்து, அதே சமயம் அக வாழ்க்கைகுப் புறமாக நின்று அதற்குப் பாதுகாப்பும் அளிக்கிறது என்று இது தெரிவிக்கிறது. என்புருவகம் இவ்வாறு இக் குறட்பாவில் யாக்கை உருவகமாகவும் இணைக்கப்படுகிறது.

(யாக்கைப்) புறத்து உறுப்பு எல்லாம் என்பது 'உடம்போடு கூடிய வாழ்க்கைக்குரிய துணைக் கருவிகளான அழகு, அறிவு, ஆற்றல், வீரம், திறமை, செல்வம், கல்வி முதலிய புறப் பண்புறுப்புக்கள் எல்லாவற்றின் குறைவற்ற நிறைவுகூட' என்று பொருள்படுவது ஆகும்.

யாக்கை என்ற அவாய் நிலைச் சொல் இங்கே பின்வரும் யாக்கை என்பதன் அரிமா நோக்குக் குறிப்பால் வருவிக்கப் பட்டது. இதன் பொருள் உடம்போடு கூடிய வாழ்க்கை என்பதாகும்.

யாக்கை என்பது யா என்னும் வினைப் பகுதியடியான தொழிற் பெயர் என்பதும்; கட்டுதல் என்ற பொருளுடைய இத் தொழிற் பெயர் தோல், குருதி, தசை, மூளை, நிணம், என்பு, நரம்பு ஆகியவற்றால் கட்டப்பட்டுள்ள உடம்புக்கு ஆகுபெயராய் வந்தது என்பதும்: இவ்வகையில் இச் சொல் இதேவினைப்பகுதியடியாக எழுத்து, அசை, சீர், தளை, தொடை ஆகியவற்றால் கட்டப்பட்ட யாப்பு என்ற தொழிற் பெயர் போல்வது என்பதும்; இவ்வாகு பெயர் இக் குறட்பாவில் மீண்டும் மறுபடியாகு பெயராய், உடம்பினால் குடும்ப, சமுதாய, இன உறுப்புக்களுடன் இணைக்கப்பட்டு இயங்கும் வாழ்க்கையைக் குறித்தது என்பதும் மேலே இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டன.

இக் குறட்பாவில் என்புருவகம் நேரடியாகக் குறிக்கப் படாவிட்டாலும் குறிப்பில் தெரிவிக்கப்பட்டே எல்லையிலாக் குறிப்பு வளப் பெருக்கம் உண்டுபண்ணியுள்ள தென்பது மேலே விளக்கவுரை முகப்பில் சுட்டப்பட்டது. ஏனெனில் 'யாக்கை அகத்துறுப்பு' என்பது நேரடியாக 'என்பு'க்கும், 'வாழ்க்கை அகத்துறுப்பு' என்பதே 'அன்பு'க்கும் பொருத்தமாவதாகும். இவற்றைத் தலைமாற்றி 'யாக்கை அகத்துறுப்பு அன்பு' என்றதனால், யாக்கை' என்பது இங்கே உடல் குறிக்காமல், உடலால் குடும்ப, சமுதாய, இனஉறுப்புகளுடன் பிணைக்கப்பட்ட வாழ்க்கை குறித்தது. அதே சமயம் அதே குறிப்பால் 'யாக்கை அகத்துறுப்பாகிய என்பு போன்ற வாழ்க்கை அகத்துறுப்பு ஆகிய அன்பு' என்ற உருவகத்தின் உருவகமான விரிவும் பெறப்பட்டது. இது உருவகத்தின் உருவகம் மட்டுமன்று, ஒரே தொடர் உருவகமும் ஆகும். ஏனெனில் வாழ்க்கைக்கு யாக்கை அகம்; யாக்கைக்கு என்பு அகம்; என்புக்கு அன்பு அகம்; அன்புக்கு உயிர் அகம் என்ற சங்கிலி இதனால் குறிப்பிற் சுட்டப்பட்டது. அத்துடன் மேலே விளக்கவுரை முகப்பிற் குறித்தபடி, யாக்கை, என்பு அன்பு ஆகிய மூன்றுமேபுறம் நோக்க அகமாய் நின்று உயிர்த் தூண்டுதலாகவும் அகவலிமையாகவும்; அகம் நோக்கப் புறமாய் நின்று பாதுகாப்பாகவும் அமைகின்றது என்ற கருத்தும் வருவிக்கப்பட்டுள்ளது.

உடல் என்ற பொருள் சுட்டும் சொற்கள் தமிழில் பிறவும் இருக்க, இக் குறட்பாவில் யாக்கை என்ற சொல்லே வழங்கியதன் காரணம் இச்சொல்லின் வேர்ச்சொற் குறிப்பு வளம் கருதியே யாகும். பல்வேறுபட்ட உடற் கூறுகளையும் உறுப்புக்களையும் ஒருமுகப்படுத்தி ஒன்றுபடுத்தும் உடம்பு போல, பல்வேறுபட்ட உடம்புயிர்களை ஒருமுகப்படுத்தி ஒன்றுபடுத்துவது வாழ்க்கையே. உடம்பில் இவ்வொன்றுபடுத்தும் பண்பு உயிராவதுபோல, உடம் புயிர்களில் இவ்வொன்றுபடுத்தும் பண்பு அன்பு ஆகின்றது. இவ்வொன்றுபடுத்தும் செயலே, உள் நின்று தூண்டுதலளிக்கும் அகப் பண்புச் செயலும் ஆகும்.

புறத்து என்பது புறத்து உறுப்பு என்ற தொகையின் முதற் கூறு ஆகும். இது இங்கே வாழ்க்கையின் புறத்து அதாவது 'வாழ்க்கையின் துணைக் கருவிகளான' என்னும் பொருளுடையது ஆகும்.

புறமும் அகமும் தொடர்புறவு குறித்த சொற்கள் [1], தொடர்புறவின் இரு திசைச் செயற்பாடு குறித்த சொற்கள் [2], தமிழில் உணர்வு, உள்ளம், உயிர் என அகப்பண்புகள் உள் நோக்கி அதாவது இயக்கும் ஆற்றல் திறமாகிய உயிர்த் திசை நோக்கியும்; உடல், உடை, உடைமை, உலகம் எனப் புறப் பண்புகள் இயக்கப்படும் பொருள் திறமாகிய உலகத் திசை நோக்கியும் செல்வன. எல்லாப் படியும் புறம்நோக்க அகமாகவும், அகம் நோக்கப் புறமாகவும் கொள்ளத்தக்கனவே யாயினும், இங்கே புறம் என்பது வாழ்க்கையின் புறமாதலால், வாழ்க்கைக்கே புறமான வாழ்க்கையின் துணைக் கருவிகள் குறித்தது.

புறம் என்ற சொல் ஒரு பொருளின் இருவகைப் புறத் தொடர்பைக் குறிக்க வல்லது. அப் பொருளின் எல்லைக்குள்ளேயே அகம் கடந்த புறம். வெளி எல்லையைக் குறிக்கலாம். இதனை நாம் எல்லைப்புறம் என்னலாம். இன்னொரு தொடர்பு பொருளின் எல்லை கடந்த புறம் குறிக்கிறது. இதனைநாம் புடைப்புறம், அணிமைப்புறம் என்று கூறலாம்.

புறம் என்ற சொல் உறுப்பு என்பது போன்ற பெயர்களுடன் இணையும்போது அத்துச் சாரியை பெறுமல் புற உறுப்பு என்றும் தொகையாகலாம். அத்துச் சாரியை பெற்றுப் புறத்து உறுப்பு என்றும் தொகையாகலாம். இக் குறட்பா புற உறுப்பு என்ற தொகை வழங்காமல், புறத்து உறுப்பு என்றே வழங்கியுள்ளமை காணலாம். இதன் பொருள் வளம் கீழே உறுப்பு என்பதன் கீழ்த் தரப்படுகிறது.

உறுப்பு என்ற சொல் இக் குறட்பாவில் இரு தடவைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சொல் ஒன்ருனாலும் இது இரு

1. Relative terms 2. Relative terms denoting direction of function

தடவைகளிலும் தொனிக் குறிப்பால் சிறிதே வேறுபட்ட பொருள்களைக் குறிக்கிறது.

உறுப்பு என்ற சொல் உறு (தொடு, நீண்டு, நிகழ், நிகழ்த்து, தொடர்பு கொள், அணுகு, அன்பு கொள்), உறு (பெரிய), உறுத்து (நிகழ்த்து, அழுத்து, அரிப்பு உண்டு பண்ணு, செயற்படுத்து), உறவு, (தொடர்பு, தொடர்பு முறை, இடைத் தொடர்பு, இடை ஒப்புமை) உரு (நிறம், வடிவம், அழகு) முதலிய சொற்களுடன் தொடர்புடையது.

பொருளின் அல்லது உடலின் பகுதிகளை எல்லாம் நாம் உறுப்புக்கள் என்பதில்லை. களிமண் அல்லது சுண்ணம்போல ஒரே படித்தான பொருளின் பகுதிகளைப் பகுதி என்று மட்டும் கூறுவோம். வேறுபட்ட பொருண்மைகள் உள்ள பொருளில்தான் ஒவ்வொரு வேறுபட்ட பொருள் மையையும் கூறு என வழங்குகிறோம், இவ்வாறு கலவை மண்ணில் மணல் ஒரு கூறு; களி ஒரு கூறு. உடலிலும் தோல், தசை, குருதி, என்பு முதலியன கூறுகள் ஆகும். ஆனால், பகுதியாக, கூறாக மட்டுமன்றி, தனி உருவும், பண்பும், தனிச் செயற் பாடும்[1] உள்ள உடற் பகுதியையே நாம் உறுப்பு என்கிறோம். கை, கால், குடல், உணவுக் குழாய், கண், செவி: இதயம், மூளை ஆகியவை இத்தகைய உறுப்புகள்.

உறுப்புக்களுள்ளும் கை, கால் முதலியவை புற உறுப்புக் கள். இதயம், மூளை முதலியன அக உறுப்புக்கள். குடல், உணவுக் குழாய் ஆகியவை புற நோக்கிய அக உறுப்புக்கள் அதாவது அகநிலைப் புற உறுப்புகள். கண், செவி முதலியன, அகப்புற உறுப்புக்கள். அறிவுறுப்புக்கள் அதாவது புறநிலை அக உறுப்புக்கள்.

உறுப்பு என்ற சொல் புறத்து உறுப்பு என்ற தொகை யில் புற உறுப்பு என்று கூறப்படாமல், புறத்து உறுப்பு என்றே அத்துச் சாரியையுடன் வழங்கியதனால், அது மேலே புறத்து என்பதன் கீழ்க் குறிப்பிடப்பட்ட இரு பொருள்

1. Function

களில் பிந்திய பொருளே சுட்டியது ஆகிறது. அதாவது அது எல்லைக்யுட்படட புறமன்று. எல்லை கடந்த புறம். வாழ்க்கையின் புறப் பண்புகள் உடலின் செயலுறுப்புச் சார்ந்த செயலாற்றல்கள் உழைப் பாற்றல்களே-இவை புறக் கருவிப் பண்புகள். உடலுறுப்பாகிய கையின் ஆற்றலை, மண்வெட்டி, வாள், இயந்திரங்கள் முதலிய புறப்புற ஆற்றல்கள் அல்லது கருவி ஆற்றல்கள் வளம்பட பெருக்குவதுபோல, இந்த உழைப்பாற்றலை அகக் கருவியாற்றல்களான பண்பாற்றல்கள் பல வளம்படப் பெருக்குகின்றன. அழகு, அறிவு, ஆற்றல், வீரம், திறமை, செல்வம், கல்வி முதலியன புறப்புற ஆற்றல்கள், ஆயினும், இவை அகக் கருவிப் பண்புகளால் வளம் பெருக்கும் புறப் பண்புறுப்புக்கள் ஆகும். புறத்துறுப்பு எனப்படுபவை இவைகளே.

பின்வரும் எல்லாம் என்பதன் குறிப்பால், புறத்து உறுப்பு என்ற தொகையும் புறத்து உறுப்புக்கள், புறப் பண்புறுப்புக்கள் என்ற பன்மைப் பொருள் பெற்றது.

புறத்து உறுப்பு என்ற தொகையில் உறுப்பு என்ற சொல் உறு (மிகை) என்ற வேர்ச் சொற் பொருள் பெற்று. புறப்புற உறுப்பாயினும் வளம் பெருக்கும் அகக் கருவிகள், வளம் பெருக்கும் கருவிப் பண்புகள் என்ற பொருள் பெற்றது.

உறுப்பு என்ற சொல் அகத்து உறுப்பு என்ற தொகையில் அக உறுப்பை மட்டும் குறிப்பிடவில்லை. அக உறுப்பு என்னுமல், அகத்து உறுப்பு என்றதனுல், அகப்பண்புறுப்புக்களுக்கு வளந்தரும் அகவள ஆக்கப் பண்புறுப்பு, உள்நின்று இயக்கும் உயிர் நிலைப் பண்புறுப்பு என்ற பொருள் பெற்றது.

முதல் 'உறுப்பு' எல்லாம் என்ற குறிப்பால் பன்மைப் பொருள் தந்ததாயினும், இரண்டாம் 'உறுப்பு' அவ்வாது பன்மைப் பொருள் பெறுமல், அன்பு என்பதன் குறிப்பால் ஒருமைப் பொருளே தந்தது. புறத்து உறுப்பு புறப் புற உறுப்பாவதுபோல, இங்கும் அகத்து உறுப்பு அக உறுப்புக்க

ளல்ல, அக உறுப்புக்களையும் இயக்கும் அகநிலை அக உறுப்பு என்பது பெறப்பட்டது. புற உறுப்புக்களை வளமாக்கும் புறப் புறப் பண்புகள் பல. ஆனால் அக உறுப்புக்களை உள் நின்று தூண்டும் அகநிலை அகப் பண்பு ஒன்றே—அதுவே அன்பு என்ற குறட்பா உட்கருத்து ஊன்றி நோக்கத்தக்கது ஆகும்.

எல்லாம் என்பது 'எல்லாவற்றின் குறைவற்ற நிறைவு கூட' என்ற பொருள் தந்தது.

எல்லாம் என்பது பெயர்ச் சொல்லானால், முற்றும்மை தொக்க வடிவம் என்பதும்; இடைச் சொல்லானால், முற்றும்மைப் பொருளே உடையதென்பதும் மேலே இலக்கணக் குறிப்புரையில் கூறப்பட்டது. இதனால் எல்லாம் என்பது புறத்து உறுப்புக்கள் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் என்ற தொகுதிப் பொருள் தந்தது. ஆனால் 'எல்லாம்' என்பது தேமாச் சீரே யாயினும், நெடுநீள் சீராகிய கருவிளச் சீருக்கு (புறத்து உறுப்பு என்பதற்கு)ப் பின்னும், நீள் சீராகிய ஒரு காய்ச்சீருக்கு (எவன் செய்யும் என்பதற்கு) முன்னுமாக இடைப்பட வந்தது. பின்னசை கிட்டத்தட்ட அளபெடுத்தாற் போன்று நீண்டு முரிவுடன் எடுத்திசைத்தது. இக்காரணங்களால் ஏறத்தாழ ஒரு காய்ச் சீரே போன்று இசைக்கும் ஓசைப் பண்புக் குறிப்பால் இது எல்லாவற்றின் 'குறைவற்ற முழு நிறைவுகூட' என்ற பொருள் பெற்றது.

புறப் பண்பு வள உறுப்புக்கள் பலப்பல. அகப் பண்பு வள உறுப்போ ஒன்றுதான். ஆனாலும் அந்த அகவளப் பண்பு ஒன்று இல்லாவிட்டால், புறப் பண்புவள உறுப்புக்கள் ஒன்றோ, பலவோ, எல்லாமோ முழுதுறக் குறைவற இருந்தாலும் பயனில்லை என்ற நிறை பொருளும் இதே ஓசைப் பண்பின் குறிப்பு வளம் ஆகும்.

யாக்கை என்பது உடம்போடுகூடிய வாழ்க்கை என்ற பொருளுடையது என்பதும் அதன் பிற பண்பு வளங்களும் மேலே அவாய்நிலைச் சொல்லான யாக்கை என்பதன் கீழே

தரப்பட்டுள்ளது. யாக்கை என்ற சொல் குறட்பா நடுவில் வந்து அரிமா நோக்காக முன்னைய எழுவாய்த் தொகையுடனும், பின்னைய பயனிலைத் தொகையுடனும் சேரும் குறிப்பாலேயே, குறட்பாத் தொடக்கத்திலும் 'யாக்கை' என்ற சொல் அவாய் நிலையாகக் கொள்ளப்பட்டது என்பதும் முன்னரே குறிக்கப்பட்டுள்ளது.

அகத்து என்பது 'உள் நின்று இயக்குகிற உயிர் நிலையான' என்னும் பொருளுடையது. மேலே உறுப்பு என்பதன் கீழ் இது விரிக்கப்பட்டுள்ளது.

உறுப்பு அன்பில்லவர்க்கு என்பது 'உறுப்பாகிய அன்பு இல்லாதவர்களுக்கு' என்று பொருள்படும்.

உறுப்பு என்பதன் பொருளும் பண்பும் மேலே உறுப்பு என்பதன் கீழ் விளக்கப்பட்டது.

'முன்னைய உறுப்பு' என்பதற்கும் இந்த இரண்டாவதான 'உறுபபு' என்பதற்கும் உள்ள பொருள் வேறுபாடு புறத்துறுப்பு, அகத்துறுப்பு என்பவற்றில் இரண்டாம் அசை முன்னதில் எடுத்தும், பின்னதில் படுத்தும் வந்த ஓசை வேறுபாட்டின் வளம் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்பில்லவர்க்கு என்பது ஒருசொல்லே யாயினும் இருசீராக (அனபில் என்றும் அவர்க்கு என்றும்) பிளவுற்றும், முதற் சீர்ப்பாதி பின்னும் நலிந்தும் இடை முரிவுற்றும் வந்ததனால், அன்பில்லாதவர் வாழ்வு வளம் பெறாது என்பதும், வாழ்வதாகத் தோற்ற நேர்ந்தபோது, அது இன அழிவுக்கு அடிகோலும் புறப் பூச்சுப் போலி வாழ்வேயாகும் என்பதும் குறித்துக் காட்டப்பட்டது.

எவன் செய்யும் என்பது 'என்ன பயனை உண்டுபண்ணிவிட முடியும்' என்ற கேள்விப் பொருளையும், 'ஒரு பயனும் உண்டு பண்ணிவிட முடியாது' என்ற தொனிப் பொருளையும் உடையது. 'எவன்' என்பது இங்கே 'என்னதான்' என்னும் பொருள் தருவது ஆகும்.

தனியுரை: இக் குறட்பாவில் பிற உரையாசிரியர்கள் அனைவருமே யாக்கை என்பதற்கு வாளா உடல் என்றும்;

உறுப்பு என்பதை அதற்கேற்ப உடல் உறுப்பு என்றும் பொருள் கொண்டுள்ளனர். இம் மணிவிளக்கவுரை மட்டுமே யாக்கை என்பதை உடம்போடு கூடிய வாழ்க்கை என்றும்; உறுப்பு என்பதை அதற்கேற்பச் சமுதாய உடம்பாகிய வாழ்க்கை, அதன் கூறாகிய தனி உயிர் வாழ்க்கை ஆகியவற்றின் பண்புக் கூறுகள் என்று பொருள் கூறியுள்ளது.

இத் தனிப் பொருள்கோளுக்குரிய விரிவான விளக்கம், விளக்கவுரையாலும் பின்வரும் பொருள்வளப் பகுதியிலும் தரப்பட்டுள்ளது. ஆயினும் இக் குறட்பாவின் வாசகச்சொல் அமைதிகள் மூலமே வள்ளுவ உட்கோள் உரையாசிரியர் விளக்கத்துக்கு இசைவிணக்கம் அளிக்காமல், இம் மணி விளக்கவுரைக்கே இசை விளக்கம் அளிக்கிறது என்ற செய்தி இங்கே கருதத் தக்கது ஆகும்.

முதலாவதாக, உறுப்பு என்ற சொல் இக் குறட்பாவில் இரு தடவை வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டு மன்று. இரு தடவையும் புறத்து, அகத்து என்ற அடைகளுடன் இருவகை உறுப்புக்கள் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. யாக்கை என்ற சொல் ஒரு தடவையே வரினும், உறுப்பு என்ற சொல்லுடன் தொடர்புடையது என்பது வெளிப்படை. உறுப்பு இரு தடவை புறத்து, அகத்து என்ற அடைகளுடன் வருவதனால், யாக்கை என்ற சொல்லும் இரண்டு அடையடுத்த சொற்களுடனும் தொடர்புடையதாய், பொருள்கோளில் இரட்டிப்பதாகும் என்பது தெளிவு.

இரண்டாவதாக, புறத்துறுப்புப் பற்றி எதுவும் கூறப் படாவிட்டாலும் எல்லாம் என்பதன் குறிப்பால், புறத் துறுப்பு ஒன்றல்ல, புறத்துறுப்புக்கள் பல என்பது தெரிவிக் கப்பட்டுள்ளது. அதே சமயம், புறத்துறுப்பு எது அல்லது புறத்துறுப்புக்கள் எவை என்று கூறப்படாவிட்டாலும், அகத்துறுப்பு எது என்பது ஐயத்துக்கிடமில்லாமல் வெளிப் படையாகக் கூறப்பட்டுள்ளது. புறத்துறுப்புக்கள் போல, அகத்துறுப்புக்கள் பல அல்ல; அகத்துறுப்பு ஒன்றே; அதுவே அன்பு.

சிறப்புரை: அன்பு தனி உயிரியின் உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமான பண்பு மட்டுமன்று. அதுவே சமுதாய இன வாழ்க்கைகளை வளப் படுத்தும் புற வளக் கருவிப் பண்புகளாகிய வீர வாழ்வு, அழகுணர்வுக் கலை, கல்வி, அறிவியல் ஆகிய 'ஆகூழ்' வளங்களுக்கும் உயிர் நிலையான வள ஆதாரமாகும். வாழ்க்கைக்கு உயிராதாரமான அன்பு இந்த வாழ்க்கை வளத் துணைக் கருவிப் பண்புகளுக்கும் உயிராதார மானதாகும்.

பொருள் வளம்: *(1)* இக்குறட்பாவில் 'யாக்கை' என்ற முதலடியின் கடைச் சீர் குறட்பாவின் நடு மையமாக வந்து அமைந்து, முன்னும் பின்னும் எழுவாய்த் தொகையிலும் பயனிலைத் தொகையிலும் இணைந்து, அக்குறிப்பால் எழுவாய்ப் பகுதியிலும் 'யாக்கை' என்ற அவாய் நிலை வருவித்தது என்பதும்; அது இருமடி ஆகு பெயராய் நின்று கட்டுதலமைந்த உடம்பு மூலம் கட்டுதலமைந்த வாழ்க்கை என்ற பொருள் தந்து நின்றது என்பதும்; இவ்வகைகளால், அது குறட்பாவின் உயிர்ச் சொல்லாய் அமைந்தது என்பதும் ஏற்கெனவே இலக்கணக் குறிப்புரையிலும் விளக்கவுரையிலும் சுட்டப்பட்டன.

முதற்சீரில் நெடு நீள் சீராகக் கருவிளமும், நீள் சீராகச் காய்ச்சீரும் வந்து, ஒன்றுவது மூன்றுவது தேமாச் சீர்களாகிய மற்ற இரண்டையும் நீட்டின. இவ்வகையில் 'எல்லாம்' என்பதன் பின்னசை நீட்சியும் முறிவும் சுட்டிய பொருள் வளம் விளக்கவுரை யிலேயே கூறப்பட்டது. இது பொருட் பரப்பு வளம் ஆகும். யாக்கை என்ற தேமாச் சீரும் இவ்வாறே

முதலசை எடுத்தும் நீண்டும் முறிவுற்றும் வந்து பொருளுயர்ச்சி தந்து, யாக்கை என்பதற்கு மேலே கூறப்பட்ட இருமடி ஆகுபெயர்ப் பொருளை வற்புறுத் திற்று. அத்துடன் இங்கு வாழ்க்கை சிறப்பாக உடல் கடந்த உயர்படி வாழ்க்கை, சமுதாய இன வாழ்க்கை குறித்தது என்பதும்; அதனாலேயே புறத்துறுப்புக்கள் என்பது சமுதாய இன வாழ்க்கை வளக் கருவிகளான அழகு, அறிவு, ஆற்றல் முதலிய இன வளப் பண்பு களையும், அவை வளர்க்கும் வீர வாழ்வு, அழகுக் கலை, அறிவியல், கல்வி ஆகியவற்றையும் குறித்தன என் பதும் இந்த ஓசையுயர்ச்சிப் பண்பின் குறிப்பு வள மாகவே தெரிவிக்கப்பட்டன.

(2) 'யாக்கை' என்ற சீருக்கு அடுத்தபடி, அதவிற் குறையாத குறட்பாவின் உயிர்ச் சொற்கள் புறத் துறுப்பு, அகத்துறுப்பு என்பன. இரண்டும் விளச் சீர்கள் மட்டுமேயானாலும் இரு நிரையாகிய கருவிள மாய், இரு நிரையும் மெய்ப்படுத்து, அதுவும் வல் லெழுத்தடுத்து, இரண்டுமே வல்லெழுத்தடுத்து உயிர் வருகையால் மட்டுமே மறைவுற்ற குற்றிய லுகரம் பெற்று, இவ்வகைகளால் காய்ச்சீரிலும் மிக்க நெடு நீள் சீர்கள் ஆயின. அத்துடன் இரண்டு சீர் களிலும் முதலசைகள் எடுத்திசைத்தன.

புறத் துறுப்பு, அகத் துறுப்பு இரண்டுமே வாழ்க்கை வளத்துக்கு இன்றியமையாதவை என் பதை இவ்வோசைப் பண்புகள் சுட்டின.

புறத்துறுப்புகள் கலையும் கல்வியும் இயலும் வீரமும் உள்ளடக்கிய பெருமையுடையன என்பதனைப்

புறத்து உறுப்பு என்பதன் முதலசை இரண்டா மெழுத்து எடுப்பிசைப்பு எடுத்துக் காட்டுகிறது. அதே சமயம் அகத்துறுப்பு என்பதன் முதலசை இரண்டாம் எழுத்துப் படுத்திசைப்புமூலம், புறத்துறுப்புக்கள் எவ்வளவு பெருமையுடையனவானாலும், எவ்வளவு பலவானாலும், வளமுடையனவானாலும்; அகத்துறுப்பு ஒன்றே யானாலும், அப்பெருவளப் பண்புகளுடன் தொடர்புடையதாகத் தோற்றாத எளிய பண்பானா லும், அது முற்றிலும் இல்லாமல் அப்பெருவளப் பண்புகள் ஒரு சிறிதும் பயன்படமாட்டா. அவ்வகத் துறுப்புப் பண்பு ஒரு சிறிது இருந்தால்கூட, அப்பெரு வளப் பண்புகள் அந்த அளவுக்குப் பெரும் பயன் வளம் உடையனவாகும். அந்த அகப் பண்பு நிறைவோ, அப்பெரு வளப் பண்புகளை எல்லையற்ற பொங்குமாவளப் பண்புகளாக்கும்.

அகத்துறுப்பு என்பதன் இரண்டாம் அசைப் படுப்பிசைப்பும், அன்பி லவர்க்கு என்ற இரு சீர்களின் தொடர்ந்த நலிவிறங்கிசைப்பும் தரும் தொனிப் பொருள் வளங்கள் இவை.

(3) 'யாக்கை அகத்து உறுப்பு' என்று தொடங்கி 'என்பு' என்பார்போல 'அன்பு' என்று கூறப்பட்ட நயமும்; பின் 'அன்பு' என்று கூறப் போகிறவர் 'வாழ்க்கை அகத்துறுப்பு' என்று தொடங்காமல் 'யாக்கை அகத்துறுப்பு' என்று கூறிய நயமும்; இந்த இரட்டை நயத்தால் 'அன்பு என்பு' உருவகத்தை நினை வூட்டிய அழகு வளமும்; வாழ்க்கை-யாக்கை-என்பு-அனபு-உயிர் என என்புருவக வேதாந்தம் என்பு-

யாக்கை உருவகமாக விரிவுற்று இரட்டை வேதாந்தக் கருத்து வளம் தந்த அரு வளமும் விளக்கவுரையி லேயே விரித்துரைக்கப்பட்டுள்ளன,

என்பு என்பது உடலுக்குள் உடலே. அது புற உடலுக்கு அகமாகவும், புற உடல் இயக்கும் அக உட லுக்குப் புறமாகவும் விளங்குவதுபோல; வாழ்க்கைக்கு உயிராக விளங்கும் உடம்பே, வாழ்க்கையை இயக்கும் அக உயிர்ப் பண்புகளுக்குப் புற உடலாகவும் அமைந் துள்ளது. உடலுக்கும் என்புக்கும் உரிய இதே அக உடற்பண்பு அன்புக்கும் உரியது; அது சமுதாய வாழ்க்கைக்கு ஆதாரமான அக உடல், இன வாழ்க்கைக்கு ஆதாரமான வளங்களுக்கு உயிர்; அது மட்டுமன்றி, அதுவே இன உயிருக்குப் புற உடலாக வும் அமைகிறது---இக்குறட்பா கூறும் இரட்டை வேதாந்த விளக்கம் இதுவே.

தனிக் குறிப்புகள்: (1) இக்குறட்பாவின் உரை நடை வரிசையை எல்லா உரையாசிரியர்களும் 'யாக்கை அகத்து உறுப்பு அன்பிலலர்க்கு புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும்' என்றே கொண்டனர். இவ் வரிசையால் பொருள் கேடு எதுவுமில்லை. ஆயினும் இம்மணி விளக்க வுரை தான் மேற்கொண்டுள்ள தொகை இல்க்கண மரபு பின்பற்றியே இதனை '(யாக்கை) புறத்து உறுப்பு 'எல்லாம், யாக்கை அகத்து உறுப்பு அன்பிலவர்க்கு எவன் செய்யும்' என்று கொண்டுள்ளது.

(2) யாக்கை என்பதை அரிமா நோக்காகவே இம்மணி விளக்கவுரையைப் போல அனைவரும் கொண்டுள்ளனர். இம்மணி விளக்கவுரை அக்குறிப்பால் யாக்கையை எழுவாய்ப்

பகுதியில அவாய் நிலையாகக் கொண்டது. பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார், இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் பேராசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடு ஆகியோர் அதனை இரு வாசகத்திலும் இரு தடவை வெளிப்படையாகச் சேர்த்துப் பொருளுரைத்தனர். மற்றப் பெரும்பாலானவர்கள் இரு தடவையும் இணைவதாகக் கொள்ளினும், ஒரு தடவையே வெளிப்படக் குறிப்பிட்டனர்.

நால்வர்—பரிதியார். ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர்கள் வ. வே. சு. ஐயர், ஐ. டி. தங்கசாமி மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் கவிஞர் வெண்ணிக்குளம் கோபாலக் குறுப்பு ஆகியோர் மட்டுமே—அசை நிலைபோல அதற்கு ஒரு தடவை கூடப் பொருள் தராமல் விட்டனர்.

இறுதியில் கூறப்பட்ட நால்வர் செயல் இக்குறட்பா வகையில் வாசகர்க்குக் கண் விழிப்பூட்டுவதாய் அமைந்துள்ளது. ஏனெனில் 'யாக்கை' என்ற சொல்லை இரு தடவை கூறினாலும், ஒரு தடவை கூறினாலும், அசை நிலையாகப் பொருளற்றதாக விட்டு விட்டாலும்கூடக் குறட்பாவின் பொருள் ஒரு சிறிதும் கெடுவதில்லை, மாறுவதில்லை. ஏனெனில் இவ்வனைவரின் பொருளிலும் உறுப்பு என்பதே உடலுறுப்பாதலால், 'யாக்கை' என்ற சொல் அவர்கள் கொண்ட பொருளின்படி இக்குறட்பாவில் 'மிகைபடுசொல்' அல்லது பயனில் சொல் ஆகிறது.

யாக்கை என்பதற்கும் உறுப்பு என்பதற்கும், குறட்பா முழுமைக்குமே அனைவரும் கொண்ட பொருளின் பொருத்தமின்மையையும், அதே சொல்லுக்கு இம்மணி விளக்கவுரை தரும் பொருளின் சீரிய வள்ளுவச் சிறப்பு வளத்தின் சால்பையும் வாசகர் இதனால் எளிது காணலாம்.

(3) 'அகத்து உறுப்பு' என்பதற்கு 'அகத்துள்ள உறுப்பு', 'உள்ளுறுப்பு' என்றே மிகப் பெரும்பாலார் உரைத்துச் சென்றனர். இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் பேராசிரியர் முனைவர் சங்கரராஜு நாயுடுவும் 'அந்தக் கரணத்தில்' (அந்தஃ கரண்மேங்) என்றே கூறினர். (அந்தக் கரணம்

என்பது உள்ளத்தின் நான்கு கூறுகள், மனம், புத்தி, சித்தம், அகங்காரம்; சில தமிழ் நூல்கள் உள்ளம் என்பதைச் சேர்த்து இவற்றை ஐந்தாகக் கூறுவதுண்டு).

'உள்ளே அமைய வேண்டிய அங்கமாகிய' என்றார் கவிஞர் இராமலிங்கனார்.

'இதயத்தில அமைய வேண்டிய ஆன்மாவின் அணிகலம்'[1] என்று அழகுடன் கூறினர், ஆங்கில மொழி பெயர்ப்பாசிரி யர் வ. வே. சு. ஐயர்.

பரிமேலழகரும் அவரையே பின்பற்றி ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும் 'அகத்தின் கண் நின்று இல்லறத்தார்க்கு உறுப்பாகிய' என்றனர். அகம் என்பதை இவ்விருசாராரும் உள் என்றோ, மனம் என்றோ கொள்ளாமல் இல்லறத்திற்குரிய வீடு[2] என்று கொண்டுள்ளனர்.

புறத்தின்கண் என்பதற்குப் பிறர் கூறிய பொருளே இவர்களும் கூறுவதனல், இவ்விரு சாரார் பொருளும் சிறப் பற்றது, பொருத்தமுமற்றது என்றே கூறுதல் வேண்டும்.

(4) அகத்து உறுப்பு அன்பு என்பதனை 'உறுப்பாகிய அன்பு', 'அன்பாகிய உள் உறுப்பு' என்றே இம்மணி விளக்க வுரை ஒப்பக் கிட்டத்தட்ட அனைவரும் கொண்டனர். அந்தக் கரணத்தில் அன்பு என்ற இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் முனைவர் சங்கரராஜுவின் பொருள் ஏற்கனவே சுட்டப் பட்டுள்ளது.

(5) 'புறத்து உறுப்பு எல்லாம்' என்பதில் புறத்து உறுப்பு என்பதற்குப் 'புற உறுப்புக்கள்' 'புறத்து உறுப்பு', 'வெளியேயுள்ள உறுப்புக்கள்' 'வெளியே காணப்படுகிற மற்ற அவயவங்கள்', 'அழகிய புறத் தோற்றம்' என்றே உரை யாசிரியர்கள், மொழி பெயர்ப்பாசிரியர்கள் பொருள் கூறினர்.

1 *The soul's ornament in the heart.*

2 *House hold*

எல்லாம் என்பதைச் சிலர் வாளா விட்டும், சிலர் வாளா 'எல்லாம்' எனவே உரைத்தும், பின்னும் ஒரு சிலர் விளக்கியும் உள்ளனர்.

விளக்கம் கூறியவர்களுள் பரிதியார், 'புறத்து உறுப்பாகிய மெய் வாய் கண் மூக்கு செவி' என்றும்; காலிங்கர், 'புறத்து உறுப்பாகிய மார்பும் தோளும் முகமும் மயிர் முடியும் பிறவும்' என்றும் விரித்தனர். பரிமேலழகர் 'ஏனைப் புறத்தின்கண் நின்ற உறுப்பாயின எல்லாம்' என்று பொழிப்புரைத்து, 'புறத்து உறுப்பாவன: இடனும் பொருளும் ஏவல் செய்வாரும் முதலாயின' என்று விளக்கவுரை கூறினார். அவர் விளக்கவுரையிலே கூறியதை பேராசிரியர் இலக்குவனார், ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி ஆகியோர்—பொழிப்புரையிலேயே பெய்துரைத்தனர்.

இறுதியுரைகள் இம்மணி விளக்கவுரை அணுகி வந்துள்ளது காணலாம். ஏனெனில் அவை யாக்கையை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்த முனைகின்றன.

(6) புறத்து உறுப்பு என்பதற்குப் பரிதியார், காலிங்கர் உரைகளைப் பரிமேலழகர் கண்டிக்கிறார்! 'யாக்கையில் கண் முதலிய உறுப்புக்களெல்லாம் என்ன பயனைச் செய்யும், மனத்தின்கண் உறுப்பாகிய அன்பில்லாதவர்க்கு' என்று உரைப்பாரும் உளர். அதற்கு இல்லறத்தோடு யாதும் இயைபில்லாமை அறிக' என்று கூறி, அவர் தம் கோள் நிறுவுகிறார். ஆயினும் இல்லறத் தொடர்பு இங்கே பரிமேலழகர் வருவிப்பதேயாகும் என்பது காணலாம்.

(7) 'எவன் செய்யும்' என்பதற்கு 'யாதினைச் செய்யும்' என்று மணக்குடவரும்; 'என்னபயன் (க்யாபல்ஹோ)?' என்று இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் வெங்கட கிருட்டினனும்; 'என்ன பயன் செய்யும்' என்று பேராசிரியர் மு. வரதராசனும்; 'யாது பயனைச் செய்யும்' என்று புலவர் ந. சி. கந்தை

யாவும்; 'பயன் யாது' என்று ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர்கள் வ. வெ. சு. ஐயரும 1 ட்ருவும் 2 இந்தி மொழி பெயர்ப்பாசிரியர் பேராசிரியர் சங்கர ராஜு நாயுடுவும் (க்யா லாப் சித்த ஹோ சக்தா ஹை), மலையாள மொழி பெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளமும் (எந்தாணு சாதிக்கான் உள்ளது); 'இருந்தும் பயனைத் தரா' என்று பேராசிரியர் இலக்குவனும் பொருள் உரைத்தனர்.

'சால நல்ல எனினும் அவை அங்ஙனம் தோன்றிக் கெடுதலல்லது இவர்க்கு ஒரு நன்மை செய்வதில்லை' என்பர் காலிங்கர்.

'அலங்கார மாயிருந்தும் என்ன பிரயோசனம்' என்று பரிதியாரும்; 'எவ்வளவு அழகாக அமைந்தாலும் என்ன பயன்' என்று கவிஞர் இராமலிங்கனும் உரை தந்துள்ளனர்.

'அவ்வறம் செய்தற்கண் என்ன உதவியைச் செய்யும்?' என்று பரிமேலழகரும், ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமியும்; 'பிறர்க்கு என்ன பயனைச் செய்யும்?' என்று புலவர் குழந்தையும் தனிப் பொருள் கண்டனர்.

அன்புக்குரிய பயன் தமக்கே என்று பெரும்பாலாரும்; பிறர்க்கு அறம் செய்ய என்று கடைசியாகக் கூறப்பட்டவரும் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது

(8) 'ஞானமில்லாதவனும் மரப்பாவையும் ஒக்கும்' என்று பரிதியார் கருத்துரை கூறுகிறார். புறத்தழகு, அகத்தன்பே குறித்த இவர், ஞானம் என்ற சொல்லை எப்படி வருவித்துக் கொண்டார் என்று தெரியவில்லை.

மனத்தில் அன்பில்லாதவர்கட்கு வெளி அவயவங்களால் பயனில்லை என்பது புலவர் ந. சி. கந்தையாவின் கருத்துரை. இந்த முடிவின் கருத்துப் பொருத்தத்தை அவர் விளக்கவில்லை.

---

1. *Of what avail.* 2. *What will avail.*

'புறத்து உறுப்பு கை கால் முதலியன. அதத்து அன்பு இல்லையேல், பிறர் துன்பங் கண்டவிடத்துப் புறத்து உறுப்புக்கள் யாதொரு உதவியும் செய்ய முயலா' என்று முடிவுரை கூறி, புலவர் குழந்தை கருத்துப் பொருத்தம் காண முயன்றுள்ளார். ஆயின் இங்கும் கருத்து முடிவு தெளிவாயில்லை.

புறத்துறுப்பு என்பதற்குப் பரிமேலழகரும் பிறரும் கூறிய பொருளைக் கவிஞர் இராமலிங்கனார் ஏற்காது, 'புறத்துறுப்பெல்லாம் என்பதற்கு இடம் பொருள் ஏவல் என்ற அங்கங்கள் என்று பொருள் பொருந்தாது' என்ற அவர் கண்டிக்கிறார். பரிமேலழகர் கண்டிக்கும் உரைகளின் கருத்தையே அவர் ஏற்கிறார். ஆயினும் அவரும் பயன் என்பது பிறர்க்குப் பயன் என்றே கொண்டார். 'அவயவங்களை வேலை செய்யத் தூண்டுவது உடலுக்கு உள்ளிருக்கிற அங்கமாகிய உள்ளம். அந்த உள்ளத்தில் அன்பு இருந்தால்தான் நல்ல காரியங்களைச் செய்யத் தூண்டும்' என்பது அவர் கருத்து விளக்கம்.

பல உரையாசிரியர்கள் இம்மணி விளக்கவுரை அணுகி இயல்பாக வந்தும் 'யாக்கை' என்பதற்கு 'வாழ்க்கை' என்ற தொனிப்பொருள் காணாத ஒரு காரணத்தாலேயே, கொண்ட பொருள்களில் தெளிந்த முடிவு காணாமல் அலமரலுறுகின்றனர் என்னலாம்.

80. அன்பின் மலர்ச்சியே இனவாழ்வு :

அன்பு இல்லாதவரின் வாழ்வு உயிரற்ற வெற்றுடம்பு வாழ்வது போன்றதேயாகும்.

அன்பின் வழியது உயிர்நிலை : அஃது இலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

பொ-ரை : *அன்பறத்தின் பயனாக மலர்ச்சியுறும் வாழ்வே உயிர் நின்று நிலை பேறடைவதற்குக் காரணமான இன வாழ்வு: அந்த அன்பறம் செயற்*

படும் நிலை இல்லாதவர்களுக்கு (வாழ்வு என்பது) எலும்பினைத் தோல் மட்டுமே மேற்கவிந்து நின்ற, உயிரற்ற வெற்றுடம்புத் தோற்றமட்டுமேயுடைய உடல் வாழ்ந்தால் ஒத்த போலி வாழ்வாகவே அமைய முடியும்.

கு-ரை : அன்புடையார் உடம்பைக் கருவியாகக் கொண்டு இனவாழ்வு வளர்த்து உடம்பின் பயனும் இன வாழ்வின் மலர்ச்சிப் பயனும் எய்தப் பெறுவர். அன்பில்லாதவர்களோ, எலும்புச் சட்டத்தின் மீது தோல் கவித்த பொம்மை உருக்கள் போல, வாழ்வது போன்ற போலித் தோற்றம் மட்டுமே உடையராவர். அவர்கள் வாழ்வு பொம்மையின் போலி வாழ்வு ஆகும்.

இலக். கு: இக் குறட்பாவின் வாசகங்கள் இரண்டே. அவாய் நிலைகள் உட்பட இதன் சொற்கள் நான்கு.

அவையாவன :

(க) முதல் வாசகம் :

1. அன்பின் வழியது (இது முதல் வாசக எழுவாய்)
2. உயிர் நிலை (இது முதல் வாசகப் பயனிலை)

(உ) இரண்டாம் வாசகம் :

1, அஃது இலார்க்கு (வாழ்வு) [இது இரண்டாம் வாசக எழுவாய்]
2. என்புதோல் போர்த்த உடம்பு (இது இரண்டாம் வாசகப்பயனிலை)

இக் குறட்பா காய்ச்சீரற்றது. நெடுநீள் சீர் எனத்தக்கது கூவிளமேயாகிய 'அஃதிலார்க்(கு)' என்பதே. மற்ற நீள்சீர்கள்கூவிளம் (தொல்காப்பிய மரபின் நேர்பு நேர்) ஆகிய 'என்பு தோல்' என்பதும் கருவிளம் ஆகிய 'உயிர்நிலை' என்பதுமே. பிறப்பு வாய்பாட்டுக்கடைசிச் சீர் தவிர, மற்றவை யாவும் தேமாச் சீர்கள்.

குறட்பா பெரிதும் வல்லோசையற்றது. தேமாச் சீர்களில் போர்த்த என்பதும், கூவிளங்களில் அஃதிலார்க்கு என்பதும் மட்டுமே வன்மை அல்லது ஆய்த ஒலிகள் பெற்றன.

இக் குறட்பாவில் அஃதிலார்க்கு என்ற சீரின் முதலசை மட்டுமே எடுத்திசைத்தது. அதற்கு முன் முதலடி முழுவதும் படுத்தும், இரண்டாம் அடி முழுவதும் நலிந்தும் இசைத்தன.

இவற்றின் குறிப்புவளம் பொருள் வளப் பகுதியில் கூறப்படுகிறது.

'அன்பின் வழியது' என்பது ஒரு தொகை மட்டுமன்று, ஒரு சொல். அது பெயர்ச் சொல்லாய், குறட்பா முதல் வாசகத்தில் உயிர்நிலை என்ற பெயர்ப் பயனிலை கொண்டு முடியும் எழுவாயாய் நின்றது.

'அன்பின் வழியது' என்ற சொல் ஒரே பெயர், வினையாலணையும் பெயர், இதில் 'அன்பின் வழி' என்பது பெயர்ப் பகுதி. 'து' என்பது ஒன்றன் பால் விகுதி. விகுதி முன் அகரம் சாரியையாய் வந்தது. பகுதி ஈற்று அகரத்தின் பின் சாரியையாய் வந்த உயிரின் முன், யகரம் உடம்படு மெய்யாய் வந்தது.

'அன்பின் வழி' என்ற இவ்வினைப் பகுதி ஒரு தொகை ஆகும். அன்பின் என்பதன் பின் ஆரும் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. இதில் அன்பு பெயர்ச் சொல், அது இன்

சாரியை பெற்று வேற்றுமை வடிவமாயிற்று. அன்பின் வழி என்பதை வேற்றுமைத் தொகையாகக் கொள்ளாமல், இன் என்பதை ஆறும் வேற்றுமை உருபாகக் கொண்டு, வேற்றுமைத் தொடர் என்றும் கூறலாம். இரு வழியும் 'இன்' என்பதன் முன் பெயரீற்று உகரம் கெட்டது, அத்துடன் அன்பின் வழி வேற்றுமைத் தொடராயினும் ஒரே சொல்லுறுப்பாதலால் தொகைப்பட்டதாகவே அமைகின்றது.

வேற்றுமைத் தொகையடிப்படையில் மட்டுமன்றி, வேற்றுமை விரி அடிப்படையிலும் தொகையும் பகுபதச் சொல்லும் அமைவது திராவிட மொழிகளுக்குரிய சிறப்புப் பண்பு ஆகும். சம்ஸ்கிருத மொழியிலும் இப்பண்பு காணக் கிடப்பதேயாகும். (தமிழ்: கறிக்கு வெட்டு, கூடியாட்டம்; சம்ஸ்கிருதம்; கந்துகாம, போக விரும்புபவர்; விச்வம்கத, உலகு சுற்றியவர் என்பன காண்க.)

தற்கால ஆங்கில மொழியிலும் இப்பண்பு[1] பரவி வருவது காணலாம்,

அன்பின் வழியது என்ற வினையாலணையும் பெயர் அன்பின் வழியினையுடையது, அன்பின் வழியில் வந்தது, அன்பின் வழியில் மலர்ந்தது என்ற இலக்கண விரி பொருளும், அன்பின் வழியில் மலர்ந்த வாழ்வு என்ற பொருள் விரிவும் உடையது ஆகும்.

உயிர் நிலை என்ற பெயர் குறட்பா முதல் வாசகத்தில் அன்பின் வழியது என்ற எழுவாய்க்குரிய பயனிலையாய் முடிவுற்று நின்றது. நீர் நிலை என்ற சொல் நீர் நின்று நிலை பெறுவதற்குக் காரணமான அல்லது ஆதாரமான இடம் என்று பொருள் படுவதுபோல, இத்தொகையும் உயிர் நின்று நிலை பேறு அடைவதற்குக் காரணமான இன வாழ்வு என்ற பொருளையுடையதாய், நின்ற என்ற வினையும்

---

1. Day-to-Day, நாளுக்கு நாள்

நிலைக்குக் காரணமான இனவாழ்வு என்ற வினைப் பயன் விரியும் தொக்க தொகை ஆயிற்று.

'வழியது உயிர் நிலை' என்ற வாசக முடிவு 'வழியது ஆகிய வாழ்வு, 'உயிர் நிலைக்குக் காரணமான இனவாழ்வு' என்று பொருள்படுவது காணலாம். இவ்வாறு எழுவாய் பயனிலை ஆகிய இரண்டிடத்தும் இவ்வாசகத்தில் அவாய் நிலைக் குறிப்பாக வாழ்வு, இன வாழ்வு ஆகிய கருத்துக்கள் வந்தது குறிப்பிடத்தக்கது. இவையே குறட்பாவின் இரண்டாவது வாசகத்திலும் பரவி, ஆங்கும், கீழே சுட்டுகின்றபடி, குறிப்பு வளங்களை விரிவுபடுத்தியுள்ளன.

'அஃதிலார்க்கு வாழ்வு' என்பது, அதன் ஈற்றுச் சொல்லான வாழ்வு என்பதை ஒப்பப் பெயர்ச் சொல். இது குறட்பாவின் இரண்டாவது வாசக எழுவாயாய், 'என்பு தோல் போர்த்த உடம்பு' என வந்த தொகை நிலைப் பெயரைப் பெயர்ப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

'அஃதிலார்க்கு வாழ்வு' என்ற முழுத் தொகை 'அஃதிலார்க்குரிய வாழ்வு' எனச் சொல் விரிவுற்று, 'அஃதிலார்க்கு அவர்கள் வாழ்வதற்குரிய வாழ்வு' என்ற பொருள் விரிவுடையதாய், உருபு தொடர்ந்து பயனும் பயன் விரியும் தொக்க தொகை ஆயிற்று.

முதல் வாசகப் பகுதியில் அவாய் நிலையாக வந்த வாழ்வு, இன வாழ்வு என்ற சொற்களின் குறிப்பு வளமாகவே வாழ்வு என்ற சொல் இங்கும் இவ்வாசக எழுவாய்ப் பகுதியிலும், பயனிலைப் பகுதியிலும் வருவிக்கப்பட்டு, குறட்பா முழுவதன் தோன்ற அடிப்படை உயிர்ப் பண்புச் சொற்கள் ஆகியுள்ளன. வாழ்வு என்ற இச் சொல் வாழ் எனும் வினைப் பகுதியுடன் 'வு' என்னும் தொழிற் பெயர் விகுதி சேர்ந்த வடிவம் ஆகும்.

அஃதிலார்க்கு என்பதில் 'கு' நான்காம் வேற்றுமைஉருபு. அஃதிலார் வகையில் என இவ்வுருபு இங்கே தொடர்புறவுப் பொருள் சுட்டியது. இவ்வேற்றுமைப் பொருள் முழுத்

தொகையில் இடையே தொக்கு நின்ற 'உரிய' என்ற குறிப்பு வினைப் பெயரெச்சப் பகுதியுடன் சென்று முடிந்தது. உரிய என்ற அவாய்நிலைப் பெயரெச்சமும் இதுபோல, அவாய் நிலையாய் நின்ற வாழ்வு என்ற பெயர்ச் சொல் தழுவிற்று.

அஃது இலார்க்கு என்பது 'அதனை இல்லையாகம் பெற்றவர்' அல்லது 'அதனை உளதாகப் பெறாதவர்' என இடையே இரண்டாம் வேற்றுமை உருபும் பயன் விரியும் தொக்கத் தொகை ஆகும். இலார் என்பது இன்மை என்ற பண்படியான எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர். இதில் ஆர் விகுதி. 'ஆ' எதிர்மறை இடைநிலையாகத் தோன்றிக் கெட்டது. 'மை' ஈறு கெட்டது.

அஃது என்பது இங்கே முதல் வாசகத்தின் பொருள் முடிவாகிய 'அன்பின் வழியது ஆகிய உயிர்நிலை' என்பதையே சுட்டு முதலாகக் கொண்டது. 'அவன் வந்து விட்டானே, அதை நீ காணவில்லையா?' என்ற பேச்சு வழக்கு வாசகத்தில், 'அது' என்ற சொல் இன்றும் 'அவன் வந்து விட்டான் என்பது' என்ற முடிவு சுட்டுவது காணலாம்.

என்புதோல் போர்த்த உடம்பு என்ற தொகையும் அதன் ஈற்றுச் சொல்லான உடம்பு என்பதனை ஒப்பப் பெயர்ச் சொல்லாய், இரண்டாவது குறட்பா வாசகத்தில் 'அஃதி லார்க்கு (வாழ்வு)' என்ற பெயர்த் தொகை நிலைக்குரிய பெயர்ப் பயனிலையாய் அமைந்தது.

இத்தொகைநிலை உடம்பு என முடிவதாயினும், உடம்பு என்ற சொல்லே என்புதோல் போர்த்த உடம்பினை உடைய வாழ்வு அல்லது அத்தகைய உடம்புடன் கூடிய வாழ்வு போன்றது என்ற பொருள் விரிவினை உடையது.

போர்த்த என்பது போர் என்ற பகுதியடியான பெயரெச்சம். 'அ' அவ்வெச்ச விகுதி. 'த்' இறந்தகால இடைநிலை. இடைநிலை முன் மற்றும் ஒரு தகரம் சந்தியாய் வந்தது. இவ்வினைப் பகுதி இந்நாட்களில் போர்த்து என

உகரவீற்று வினைப்பகுதியாகவே வழங்கப்படுகின்றது. (போர்த்தது, போர்த்த, போர்த்து என்ற வினை வடிவங்கள் இதனால் போர்த்திற்று, போர்த்திய, போர்த்தி என்றுதல் காணலாம்). ஆனால் இது உண்மையில் சொல் மாற்றம் அன்று, வினைவகைமாற்றம் மட்டுமேயாகும். போர் என்பது தன் வினைப்பகுதி. போர்த்து என்பது பிறவினைப்பகுதி; பொருளும் வேறுபாடு உடையது. போர்த்துதல் கம்பளத்தைக் கொண்டு மனிதன் உடலைப் போர்த்தும் செயல். போர்த்தலோ, உடலைப் போர்த்து நிற்கும் கம்பளத்தின் செயல். எனவே இக்குறட்பாவில் போர்த்தல் என்பதைத் தோலின் செயலாகவே இம்மணி விளக்கவுரை இலக்கணமும் பொருளும் கூறுதல் பொருத்தமுடையதாதல் காணலாம்.

போர்த்த என்ற பெயரெச்சம் உடம்பு என்ற பெயரே தழுவிற்று. ஆயினும் இதன் வினைப்பகுதிக்கு மேலே சுட்டிய படி வினை முதல், 'தோல்'; வினைப் பொருள், 'என்பு'. எனவே 'உடம்பு' இங்கே செய்வினையும் வினை முதலும், வினைப் பொருளும் சென்று முடிந்த பயன்முற்று பொருளாகவே அமைந்துள்ளது. இதனால் 'என்புதோல் போர்த்த' என்பதை ஒரு தொகை என்று கொள்வதனினும், தொகையே பகுதியாகக் கொண்ட ஒரு சொல் என்பதே பொருத்தம். அது 'என்புதோல் போர்' என்ற தொகைநிலையையே வினைப் பகுதியாகக் கொண்ட பெயரெச்சமாய், 'என்பினைத் 'தோல் போர்த்தப் பெற்ற' அல்லது 'என்பு தோலால் போர்த்தப் பட்ட' என்ற பொருள் விரித்துரைக்கத்தக்க சொல்லாய், 'உடம்பு' என்பதனுடன் இணைந்து தொகைப்பட்டது என்னல் தகும்.

வி-ரை : அறவாழ்வின் மழை வளத்துக்குரிய பயிர்வளப் பண்பான அன்புடைமையின் சால்பு முப்பால் வாழ்வு களுடனும் தொடர்புடையது என்பதைத் தனித்தனி முப்பால் களின் தொடர்புகளின் மூலம் இவ்வதிகாரத்தின் முன் குறட்பாக்களில் விரித்துரைத்த திருவள்ளுவர், அதன்

முப்பால் முழுமைத் தொடர்பையும் முப்பால் கடந்த, முப்பால் முழுமையின் அகப் பாலாகிய வீட்டுப்பால் தொடர்பையும் அதிகாரத்தின் இந்த இறுதிக் குறட்பாவில் விதந்தெடுத்தோதுகின்றார். அவ்வழி உடம்பும், உடம்புக்கு ஆதாரமும், உடம்பு மலர்ச்சியில் அன்போடியைந்த மலர்ச்சியின் நீடு வினைப் பயனும் ஆன என்பும் பிறவும் ஒருவருக்கு அமையப் பெற்றுவிட்டால்கூட, அவ்வன்பு மலர்ச்சியின் பயனை மீ அன்பு மலர்ச்சி அதாவது அருள் மலர்ச்சி தொடரப் பெறுவிடின், அதாவது அன்புடைமையின் சால்பு இயையப் பெறவிட்டால், அவர் உடம்பும் என்பும் யாவும், வெற்றுப் பொம்மை உடம்பும் சட்டமும் போன்றவையேயாகும், அவர் வாழ்வும் அந்தப்பொம்மையின் வாழ்வு போன்ற போலி வாழ்வு ஆகுமேயன்றி, உயிர் வாழ்வு ஆகமாட்டாது என்பதும்; அன்புடைமையின் சால்பு அன்பு மலர்ச்சியின் மீ மலர்ச்சியாக வளர்ந்தால்தான் குடும்ப அற வாழ்வு, சமுதாயப் பொருள் வாழ்வு, இன இன்ப வாழ்வாகிய வீட்டு வாழ்வு ஆகிய உயர் மலர்ச்சிகளுக்கு அடிப்படையான உயிர்ப் பயன் தகுதி அவ்வுடம்பு பெற்றவர்க்கு ஏற்பட்டு அவர்கள் இன வாழ்வு உயிர்வாழ்வு ஆகும் என்பதும் இக் குறட்பாவால் விளக்கப்படுகின்றன.

அன்பின் வழியது என்பது அன்பறத்தின் வழியில் மலர்ச்சியுறப்பெற்ற இன வாழ்வே' என்னும் பொருளையுடையது.

அன்பு என்ற சொல் பின்வரும் வழி என்ற சொல்லின் குறிப்பாலேயே அன்பறம் என்ற பொருள் கொண்டது, ஏனெனில் அன்பு என்பது ஒரு வழி. அது ஒரு நிலைப்பண்பன்று, ஓர் இயக்கப் பண்பு; வளர்ச்சிப் பண்பு, மலர்ச்சிப் பண்பு. வழி என்ற சொல் இதை நினைவூட்டுகிறது.

அன்பு என்ற பண்பு காதல்—பாசம்—அன்பு—ஆர்வம்—நண்பு—அருள் எனக் காதலிலிருந்து அருள் நோக்கிச் செல்லும் மலர்ச்சியின் நடுப் பண்பேயாகும் என்பது முன் குறட்பாவுரைகளில் விளக்கப்பட்டுள்ளது. இதில்

காதல்—பாசம்—அன்பு என்ற முற்பகுதி மலர்ச்சிக்கூறே அன்பு நோக்கிய மலர்ச்சி. அன்பறம் என்பது இதுவே. அன்பறத்தின் விளைவே அன்பு, அது அடுத்த மலர்ச்சிக் கூறுகிய அருளறத்தின் விளை நிலமும் ஆகும்.

இனத்தின் இறந்த காலத்திலிருந்து, குடும்பம் அல்லது குடும்பங்களின் தொகுதியாகிய இனக் குடும்பத்திலிருந்து சமுதாயத்துக்கு வந்துற்ற மலர்ச்சிப் பண்பே, இன அறத்தின் விளைவே அன்பு. புதுப்புதுக் காதற் பண்பாகிய புது மழைப் பண்பின் உரப்பண்பால் ஊக்கப்பட்டு, அது அன்பறமால், அருள் நோக்கித் தொடர்ந்து மலர்ச்சிநடை போடுகிறது.

உயிர்ப் பாசம் என்னும் முகிற் பண்பாக எழுந்த இன அறம், இனப் பாசம் என்னும் மழைப் பண்பாகி, உயிர் மலர்ச்சி வழியாகிய மலைப் பாதைகளினூடாக ஒடி, குடும்பக் கால்வழி களாகிய ஒடைகளாக வழிந்து, சமுதாய மென்னும் சம தளத்தில் தண்பொருநையாக, தடங்காவிரியாக, தண்புனற் பாலாறுக அன்பற உருவில் ஒடி, அருளின்பம் என்னும் மாகடல் நாடுகின்றது.

வழியது என்ற சொல் இங்கே 'வழியில் மலர்ச்சியுறப் பெற்ற இனவாழ்வே' என்னும் முழுப்பொருள் விளக்கி நின்றது.

அன்பு வழி என்று கூருமல், அன்பின் வழி என்று இங்கே கூறப்பட்டதன் குறிப்பாலேயே, வழியது என்ற சொல் 'வழியில் மலர்ச்சியுற்ற இனவாழ்வு' என்னும் பொருள் விரிவு சுட்டிற்று.

வழி என்பது வாழ்க்கை, அன்பறத்தின் வழியாகிய வாழ்க்கை. வழியது என்பது வழியினை உடையது, வழியினை உடைய வாழ்க்கை ஆதலால், அது இன வாழ்வாயிற்று. ஏனெனில் அன்பு அறவழியின் பயனுதல்போல, அன்பு வழியின் பயனுவது அருள் வாழ்வு, இனவாழ்வு ஆகும்.

அன்பறம் என்பது அன்பு நோக்கிய காதல்—பாசம்—அன்பு மலர்ச்சி. அன்பு வழியது ஆகிய வாழ்க்கை இந்த முதற்படி கடந்த அன்பு—ஆர்வம்—நண்பு—பண்பு—அருள் என்ற அருள் நோக்கிய அன்பு மீ மலர்ச்சியாகிய அருளற வாழ்வேயாகும்.

குறட்பா முதல் வாசகத்தில் 'உயிர்நிலை அன்பின் வழியது' என்று கூறப்படாமல், 'அன்பின் வழியது உயிர்நிலை' எ—ப் பண்பு எழுவாயாக' பண்பி பயனிலையாக வழங்கப் பட்டதன் குறிப்பாலும், எழுவாய் 'அன்பின் வழியது' என மீண்டும் பயனிலை 'உயிர்நிலை' எனக் குறிகியும் வந்ததன் குறிப்பாலும் அன்பின் வழியது என்பதன் பின், தேற்ற ஏகாரம் அவாய் நிலையாகக் கொள்ளப்பட்டு, அன்பின் வழியது என்பது 'அன்பறத்தின் வழியில் மலர்ச்சியுறப்பெற்ற வாழ்வே' என்னும் பதப்பொருள் தந்தது.

உயிர்நிலை என்பது 'உயிர் நின்று நிலைபேறு அடைவதற்குக் காரணமான இனவாழ்வு ஆகும்' என்னும் பொருள் உடையது.

நீர் நிலை என்ற தொகை நீரின் நிலை என்று பொருள் படாமல், நீர் நின்று நிலை பெறுவதற்குரிய இடம் என்று பொருள் தருவதுபோல, உயிர்நிலை என்ற தொகையும் உயிரின் நிலை என்ற பொருள் தராமல் 'உயிர் நின்று நிலை பெறுவதற்குக் காரணமான இனவாழ்வு' என்னும் பொருளுடையதாய், வினையுடன் வினைப்பயனும் பயன் விரியும் தொக்க தொகையாய் அமைந்தது என்பது இலக்கணக் குறிப்புரையில் சுட்டப்பட்டுள்ளது.

உயிர்நிலை என்ற சொல் இவ்வள்ளுவச் சொற்பொருள் மரபு அறுமல் கிட்டத்தட்ட இப்பொருளில், மிகச் சிறுசிறு பண்பு மாற்றங்களுடன் வழங்குவது காணலாம். உடலி லேயே வர்மத்தானங்கள் அதாவது உயிர்க்கு எளிதில் ஊறு பாடு விளைக்கத்தக்க அருநிலைத் தடங்கள், மருமத் தானங்கள்

அதாவது மிக மென்மையும் நுண்மையும் உடைய அருநிலைக் கூறுகள் ஆகியவைகள் உயிர்நிலைகள் எனப்படுகின்றன. இதுபோலவே உயிராதாரமாக, உயிருக்கு இன்றியமையா தனவாக உள்ள உறுப்புக்களும், உயிர்த் தொழில்களை உள்ளூர நின்று இயக்கும் அல்லது இயக்கிவிடும் உறுப்புக் களும் உயிர் நிலையான உறுப்புக்கள் எனப்படுகின்றன.

மேலை மொழிகளில் இத்தற்காலத் தமிழ் வழக்குக்குரிய சொல் உயிர்நிலையான, உயிராதாரமான[1] இலத்தீன் மூல மொழியில் 'உயிர்' என்ற பொருள் கொள்ளாமல், வாழ்வு[2] என்ற பொருள் கொள்கிறது என்பது இங்கே கூர்ந்து கவனிக்கத்தக்கது. உயிர்நிலை என்ற வள்ளுவச் சொல்லின் தூராதொலை அலையியக்கப் பண்பினை இது காட்டுகிறது. உயிர் என்பது ஒரு பொருளோ, ஒரு நிலையாற்றலோ கூட அன்று, வாழ்வு என்னும் ஓர் இடையறு இயக்கத்தின் ஊடச்சாய் இயங்கும் ஒரு இடையறு இயக்க விசை, இனமலர்ச்சி விசை என்ற தமிழ் வள்ளுவர் கருத்து வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே மேலையுலகளாவப் பரந்து சென்றிருந்தது என்பதை இத்தகைய இலத்தீன் மொழி மூலச் சொற்கள் காட்டுகின்றன.

அன்பின் வழியது என்பதிலும் உயிர்நிலை என்பதிலும் வாழ்வு என்ற சொல் அவாய் நிலையாகத் தொடர்வதும்; முன்னதில் அது 'வாழ்வு' என்றும், பின்னதில் இனவாழ்வு என்றும் நின்று, அன்பு வாழ்வே இனவாழ்வு, அதுவே வாழ்வின் உயிர் என்று பொருள்பட்டதும்; இந்த வாழ்வு என்ற கருத்தே குறட்பாவின் இரண்டாவது வாசகத்திலும் எழுவாய் பயனிலைகளில் தொடர்ந்து அவாய் நிலைகளாக நின்றதும் இலக்கணக் குறிப்புரையிலேயே சுட்டப்பட்டன. இவற்றின் முழு விரிவும் வளமும் இவ்விளக்கவுரைப் பகுதியிலும் பொருள்வளப் பகுதியிலும் விரித்துரைக்கப்பட இருக்கின்றன.

---

1. ஆங்கிலம்: Vital 2. இலத்தீன்: Vita, வாழ்வு.

'அஃது இலார்க்கு (வாழ்வு)' என்பது 'அந்த அன்பறம் செயற்படும் நிலை இல்லாதவர்களுக்கு வாழ்வு என்பது' என்ற பொருள் தந்து நிற்பது ஆகும்.

அஃது என்ற சுட்டுச் சொல் இங்கே முன் வாசகத்தின் முழு வாசக முடிவையும் சுட்டு முதலாகக் கொண்டு நின்ற அருமைப்பாடு இலக்கணக் குறிப்புரையிலேயே சுட்டப் பட்டது. 'அன்பின் வழியது உயிர் நிலை என்ற நிலை' என்பது இதனால் அதன் குறிப்பு வளம் ஆகிறது. இதன் பொருள் 'அந்த அன்பறம் செயற்படும் நிலை, அதாவது அந்த அன்பறம் அவ்வாறு இனவாழ்வு நிலைபேறடைவதற்குக் காரணமா யிருக்கும் நிலைமை' என்னும் முழுப் பொருள் விரிவு தந்து விடுகிறது.

அஃது இலார்க்கு என்பது அதனை இல்லையாகப் பெற்ற வர்க்கு அல்லது அதனை உள்ளதாகப் பெறும் வாய்ப்பு இல்லாதவர்க்கு என்று பொருள்படும் என்பதும்; அஃது இலார்க்கு வாழ்வு என்பது, அதை இல்லையாகப் பெற்றவர்க் குரிய வாழ்வு என்று பொருள்படும் என்பதும் இலக்கணக் குறிப்புரையிலேயே கூறப்பட்டன.

வாழ்வு என்ற சொல் குறட்பா முதல் வாசகத்தில் அவாய் நிலைகளாய் வந்தது போலவே, இரண்டாம் வாசகத்தி லும் எழுவாய் பயனிலைப் பகுதிகளில் அவாய் நிலைகளாய் வந் தன. ஆயினும் முன்னைய அவாய் நிலைகள் இரண்டும் பெயர் சார்ந்து வந்த பெயர் அவாய் நிலைகளாகவும், பண்பாற் சுட்டப்பட்ட பண்பி அவாய் நிலைகளாகவுமே நின்றன. பிந்திய அவாய் நிலைகள் இரண்டும், முன்னைய அவாய் நிலை களின் குறிப்பாலேயே பெறப்படத்தக்க அவாய் நிலைகளாய், அவற்றிலும் நுண்நிலை அவாய் நிலைகளாய் அமைந்தன. பின்னிரண்டிலும்கூட, முதலாவதாகிய இவ்வவாய்நிலை நான்காம் வேற்றுமைப் பின் நின்று, முற்றிலும் மறை நுண்நிலையுடையதாய் அமைந்துள்ளது.

இதன் முழு நுண்ணிய வளம் பொருள்வளப் பகுதியில் கூறப்படவிருக்கிறது.

என்புதோல் போர்த்த உடம்பு என்பது 'எலும்பினைத்தோல் மட்டுமே மேற்கவித்து நின்ற, உயிரற்ற வெற்றுடம்புத் தோற்ற மட்டுமே உடைய உடல் வாழ்ந்தால் ஒத்த போலி வாழ்வாகவே முடியும்' என்ற பொருள் உடையது.

முதல் வாசகத்தின் எழுவாய் பயனிலைகளில் குறிப்பாகவும் அஃது இலார்க்கு வாழ்வு என்ற இவ்வாசக எழுவாயில் அவாய் நிலையாகவும் வந்த 'வாழ்வு' என்பதன் குறிப்பாலேயே, இங்கும் உடம்பு என்பது 'உடம்பு வாழ்ந்தால் ஒத்த போலி வாழ்வாகவே முடியும்' என்ற பொருள் கொண்டது. அதே சமயம் என்புதோல் போர்த்த என்ற குறிப்பினாலேப்ய 'உடம்புத் தோற்ற மட்டுமே உடைய உடல் வாழ்ந்தால் ஒத்த போலி வாழ்வாகவே முடியும்' என்ற பொருள் பெறப்பட்டது.

தோல் என்ற சொல்லும் போர்த்த என்ற சொல்லும் இங்கே தோற்றம் என்ற கருத்தை வற்புறுத்த மட்டுமே உதவின. என்பு என்பதோ, ஒருபுறம் நிமிர்ந்து நிற்க உதவுவதால் தோற்றம் என்ற கருத்தை வலியுறுத்துவதுடன், என்புக்குரிய மற்ற உள்ளீடான உயிர்ப் பண்பற்ற தன்மையை அதாவது போலித் தன்மையையும் சுட்டுகிறது.

உடலுக்கு என்பு அகம். உயிருக்கு அன்பு அகம். இதனாலேயே உடலுக்கு அகமாகிய என்பு இருந்தாலும், உயிருக்கு அகமாகிய அன்புப் பண்பு இல்லாத இடத்தில் உடலும் என்பும் இருந்தும் பயன் இல்லை. உடல் என்பு இணைவு உடல் தோற்றமே உடையது, உயிரும், உயிரின் பயனாகிய வீட்டின்பமும் உடையதன்று என்பதையே இவ்விரண்டாம் வாசகப் பயனிலைக்கூறு விளக்கிற்று.

சிறப்புரை: உடம்புக்கு உள்ளுறை என்பு. இரண்டுக்கும் உள்ளுறை, இரண்டையும் இயங்க வைத்துப் பயனுடையன ஆக்குவது உயிர். அந்த உயிர் இல்லாமல் இயங்கும் உடல், உடல் போன்ற தோற்றம் உடைய பொம்மை உடலாகவே இருக்க முடியும். பொம்மை நாடகத்தில் அத்தகைய உடல் பொம்மை வாழ்ந்துசெயலாற்றுவதுபோலக் காட்டி விட்டாலும், அது வாழ்வாகாது, வாழ்வின் போலித் தோற்றம் மட்டுமேயாகும். அதுபோல, வாழ்வுக்கு உள்ளுறை, வாழ்வை இயங்க வைத்து, அதற்கு நோக்கமளித்து, அந்நோக்க வழி மலர்ச்சியுறச் செய்து, அதைப் பயனுடையதாக்குவது, அப்பயன் நோக்கி அதனை இயக்குவிப்பது அன்புடைமையின் சால்பு அதாவது அருள் நோக்கிய அன்பு மலர்ச்சியே யாகும். ஆகவே அன்பற வழி நின்று அன்புடைமையின் சால்பு நாடிச் செல்லாதவர் வாழ்வு பொம்மை வாழும் வாழ்வு போல, வெறறுப் போலி வாழ்வேயாகும்.

பொருள் வளம்: *(1)* இக் குறட்பாவில் காய்ச்சீர் இல்லை. விளச்சீர்களும் மாச்சீர்களுமே மிகுதி. இத்துடன் அஃதிலார்க்கு, போர்த்த என்ற இருசீர்களி லன்றி எவற்றிலும் ஆய்தமோ வல்லொலியோ குறைவு. அன்புடைமையின் சால்பு முப்பால் வாழ்வு என்னும் கனியின் இன்கனிச்சாறு போல்வது, வாழ்வின் முடிந்த முடிவான இன்பப் பயனுக்கு இட்டுச்செல்வது என்ற கருத்தை வலியுறுத்தவ இந்தக் குறட்பாவுக்கு இவ்வோசை பொருந்துவதேயாகும். அதே சமயம் இந்த உண்மையை நேரடியாக வலியுறுத்தும் முதல் வாசகத்திலேயே (முதலடி முதல் மூன்று சீர்களிலேயே) இவ்வின்னோசைப் பண்பை நாம் முழுதுறக் காண

கிறோம். அவ்வாசகத்தின் மூன்று சீர்களும் சமனிசைப் படுத்தலோசையாய், நீள்விளங்கூடவராமல் இந்த இனிமையை நிழற்படுத்திக் காட்டிற்று.

இரண்டாவது வாசகம் இதே உண்மையை உவம அணி வாயிலாக வலியுறுத்துகின்றது. இந்த வாசகத்தினுள்ளேயே உவம அணியின் உவமமும், உவமக் கருத்தும் இரண்டும் அமைந்தன என்பது இங்கே கருதத்தக்கது ஆகும். உவமக் கருத்து இங்கே எழுவாய்ப்பகுதியாகவும், உவமம் பயனிலைப் பகுதியாகவும் வந்தது. உவம இணைப்பான போன்றது என்பது அவாய்நிலையாகவே நின்றது. முதல் வாசகத்துக்கும் இந்த உவம அணிக்கும் உள்ள தொடர்பு, உவமக் கருத்துப் பகுதியில் அஃது என்பதனுலேயே பெறப்பட்டது. முதல் வாசகம் உவமக் கருத்தில ஒரு பகுதியேயாயினும், அது இங்ஙனம் ஒரு சுட்டின் முதலாக வந்து தனி நின்றதனுல், தனிக் கருத்துப் போலத் தனி நிற்கும் அழகு நுனித்துணர்ந்து போற்றத்தக்கது ஆகும்.

உவமை கூறும் வாசகம் (முதலடி நான்காம் சீரும் இரண்டாம் அடியும் ஆகிய நான்கு சீர்களும்) எதிர்மறையாகவே வந்ததற்கேற்பவே, அப்பகுதியில் மேலே சுட்டியபடி அஃதிலார்க்கு என்பதில் ஆய்த ஒலியும், போர்த்த என்பதில் வல்லோசையும் வந்தும்; ‘என்புதோல்’ என்ற நீள் விளத்தில் (தொல்காப்பிய மரபின் நிரைபு நேரில்) இடையே குற்றுகரமுரிவு வந்தும், அன்புடைமையின் சால்பு இலாநிலையின் சருகு போன்ற பயனற்ற தன்மை சுட்டப்பட்டது.

குறட்பாத் தொடக்கச் சீர்கள் போலவே இறுதிச் சீரான உடம்பு என்பதும் மெல்லொலியாய் வந்து, உடம்பின் இயல்பான அருமைப் பாட்டினை இன்னிசைப்பு மூலமே சுட்டி நின்றது.

'உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்'

என்ற ஔவை யோகக் குறட்பாவையும்,

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே!'

என்ற திருமூலர் மூவாயிரம் திருமந்திரத் தமிழையும் இங்கே எண்ணிப் பார்த்தல் தகும்.

(2) குறட்பாவின் முதல் மூன்று சீர்கள் படுத்தும், கடைமூன்று சீர்கள் நலிந்தும் வந்ததனால், குறட்பாவின் உயிர்க் கருத்து முதல் மூன்று சீர்களே என்பது சுட்டப்பட்டது. அம்முச்சீர்க் கருத்து முடிவே சுட்டிய 'அஃது' என்பது அஃதிலார்க்கு என்ற சீரில் எடுத்திசைத்து இதுவே குறட்பாவின் உயிர் நிலை என்பதை வலியுறுத்திற்று.

(3) தமிழ் வள்ளுவ வேதாந்த சித்தாந்தத் தத்துவப்படி, உயிர் என்ற சொல்லும் உயிர்நிலை என்ற சொல்லும் இரண்டும் பினைநூட்களில் தமிழர் ஆன்மா என்று குறித்த சொல்லின் பொருளே உடையது. ஆனால் உயிர் என்பது சீவான்மா: உயிர் நிலை என்பது பரமான்மா அல்லது பிரமம்.

உயிர் என்பது உய்த்து இருப்பது, தனி உடல் கடந்தும், தனித் தலைமுறை வாழ்வு கடந்தும் உய்த்து இருக்கும் இன உயிரையே தமிழர் உயிர் என்றும் ஆன்மா என்றும் கூறினர். ஆனால் இது தனி உயிர் மட்டுமே. இந்தத் தனி உயிர் இன உயிராயினும் பொது இன உயிரின் ஒரு கூறேயாகும். இப்பொது இன உயிரே உயிர்நிலை, பரமான்மா.

ஆன்மா என்ற சொல்லிலேயே 'ஆன்' என்பது உயிர்நிலை அல்லது பரமான்மாவையும், மா என்பது தனிஉயிர் அல்லது சீவான்மாவையும் குறிக்கும். ஆன் பின்னாள் தமிழ் வழக்கில் பதி என்றும், 'மா' பின்னாள் தமிழ் வழக்கில் 'பசு' என்றும் உரைக்கப்பட்டன. ஆன்மா என்ற சொல் இவ்வாறு உயிரோடு கூடிய உயிர்நிலையைக் குறித்தல் காணலாம். பரமான்மா இன்ப உருவம். சீவான்மா இன்ப நுகர்வுருவம். ஒன்றின்றி ஒன்று இருத்தல் கூடாது. 'ஆன்மா' என்ற சொல் உணர்த்தும் மெய்ம்மை இதுவே. உயிர்நிலை என்ற சொல்லும் இதனை உணர்த்துகிறது, ஏனெனில் உயிர் அதன உள்ளடக்கமாய் உள்ளது.

இந்த இரண்டும் கூடியவிடத்து மூன்றாவதாகிய இன்பம் தானே வந்தமைகிறது—ஒளியுள்ள இடம் ஒண்மை தானே வந்தமைதல் போன்றது இது. இதனாலே இந்த இரு மெய்ம்மை, பதி பசு பாசம் என மும்மெய்ம்மையாகவும் கூறப்படுகிறது.

பின்னாளைய ஆத்திக வழக்கில் சில சமயம் ஆன் இறைவனாகவும், மா இறைவியாகவும், இன்பம்

சேயாகவும்; சிலசமயம் ஆன் விடையாகவும், மா இறைவனுகவும், இன்பம் சத்தியாகவும் குறியுருப் படுத்தப்பட்டது.

'அன்பின் வழியது உயிர்நிலை' என்ற மும்மொழி மந்திர வாசகத்தில் இந்தச் சமயத் தத்துவங்கள் யாவும் அடங்கியுள்ளது காணலாம்.

(4) அஃதிலார்க்கு என்பதில் வரும் ஆய்தமும் முரிவிசைப்பும், என்புதோல் என்பதில் வரும் குற்றிய லுகர இசைமுரிவிசைப்பும் உவமையின் பொருள் கடந்த உவமக் கருத்தை வலியுறுத்துகிறது—அன்பின் வழி நில்லார் வாழ்வு பொம்மை வாழ்வு என்பது சுட்டிற்று. பொம்மை தனக்கென வாழ்வு அற்ற தாயினும், வாழ்பவர் காணும் கலையின்பம் அளிப்பது—அன்பிலார் வாழ்வுக்கு அதுதானும் இல்லை என்ற ஏளனக் குறிப்பை இது உள்ளடக்கிக் காட்டிற்று.

(5) தோல், போர்த்த என்ற சொற்கள் புறத் தோற்றமே வலியுறுத்திய சொற்கள் என்பது விளக்க வுரையில் விரிக்கப்பட்டது. ஆனால் முழுக் குறிப்பும் காணில் அழகு கடலளவினதாம் என்னலாம். தோலுக்கு உள்ளீடு சதை, அதாவது உயிரியக்க முடைய தசை. குருதியியக்கமும் தசை வெப்பமும் இவற்றுக்கு ஆதாரமான உயிர் மூச்சியக்கமும் இவற்றின் உயிர்ப் பண்பு. இதுபோல என்பின் உள்ளீடு மச்சை, நாடிநரம்புகள், மூளை. உடம்பின் புற உயிரியக்கத்துக்கு இயக்குவிக்கும் பண்பாக;

பலவாக இயங்கும் அவ்வாற்றல்களை ஒரே ஒருமை உயிரியக்கமாக்கும் ஒருமைப் பண்பாக; விருப்பு வெறுப்பு, நினைவு, சிந்தனை, துணிபு, ஆய்வு, ஆராய்வு, உள்ளன்பு ஆகிய படிகள் மூலம் கடவுண்மைநோக்கும் அகஉயிர்ப் பண்பாக இயங்கும் உள்ளுடம்பு இதுவே.

வெள்ளி பொன் மேனியதொக்கும், வினையுடைய
உள்ளுடம்பி னுய ஒளி

என்று ஞான யோகக் குறள் ஔவைப் பிராட்டியார் இவ்வுள்ளுடம்பின் தன்மை பற்றிக் கூறியுள்ளமை காணலாம்.

என்புதோல் போர்த்த உடம்பு என்பது இதனுல் உயிருடம்பாகிய உள்ளுடம்பு அற்ற கூடு என்ற உவமப் பொருளையும், வாழ்வின் உயிர்ப்பயன் இல்லாத வெற்று வாழ்வு என்ற உவமக் கருத்துப் பொருளையும் நன்கு வலியுறுத்தி விளக்கியது காணலாம்,

(6) முதலடியில் உயிர்நிலை என்ற சொற்குறிப் பால், இரண்டாம் அடியில் உயிரிலா நிலை என்ற தொனி வளம் சுட்டப்பட்டது.

தனிக் குறிப்புக்கள்: (1) இக் குறட்பாவில் முதல் வாசகத்தில் எழுவாய், பயனிலை, இரண்டாம் வாசகத்தில் எழுவாய், பயனிலை ஆகிய நான்கு தொகைகளிலுமே வாழ்வு என்ற ஒரே சொல் தொக்கு நின்றதாகக் கொண்டு இம்மணி விளக்கவுரை விளக்கம் செய்துள்ளது என்பதை வாசகர் காண்பர். இத்தொகைநிலைத் தொகு சொல்லையும் இவ் விலக்கண மரபையும் ஒருங்கே பின்பற்றிய பிறிதுரையாசிரியர் எவருமிலர். ஆனல் தொகு சொல் வேருகக் கொண்டு இதே

இலக்கண மரபைப் பின்பற்றியுள்ள உரையாசிரியர் அல்லது உரையாசிரியர்கள் உண்டு.

பரிமேலழகர் எல்லாத் தொகைகளிலும் 'உடம்பு' என்ற சொல்லே தொக்குநின்றதாகக் கொண்டார், பேராசிரியர் மு. வரதராசனர், புலவர் குழந்தை, இந்தி மொழி பெயர்ப்பாசிரியர்கள் சங்கர ராஜு நாயுடு, கவிஞர் வேங்கட கிருட்டினன், மலையாள மொழிப் பெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம் கோபாலக் குறுப்பு, ஆங்கில மொழிப் பெயர்ப்பாசிரியர்கள் ஆர். ட்ரூ, ஐ. டி தங்கசாமி ஆகியோர் ஏறத்தாழ இம் மரபே பின்பற்றினர்.

மணக்குடவர், ந. சி. கந்தையா ஆகியோர் அன்பின் வழியது என்ற முதல் தொகையில் மட்டும் அறம் என்ற சொல் தொக்கு நின்றதாகப் பொருள் உரைத்தார்கள். அன்பின் வழியது என்பதற்குப் பேராசிரியர் இலக்குவனர், கவிஞர் இராமலிங்கனர் ஆகியோர் 'அன்பின் வழி செல்லுதல்' 'அன்பின் வழியில் நடந்து கொள்வது' என்றும்; காலிங்கர் 'அன்பின் கண்ணதே' என்றும் கூறினர்.

பரிதியார் இதனை எப்படியோ ஆண்பாலாக்கி அன்பின் வழியில் நடப்பான் என்றார்.

(2) அன்பின் வழியது உயிர்நிலை என்பதில் அன்பின் வழியது என்பது எழுவாய் என்றும், உயிர் நிலை என்பதே பயனிலை என்றும் இம்மணி விளக்க வுரையைப் போலவே பெரும்பாலான உரைகள் கொண்டன. மணக்குடவரும், ந. சி. கந்தையா பிள்ளையும், ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர் ஆர். ட்ரூவும் மட்டுமே இதனைப் பொருள்கோளில் தலைமாற்றி உயிர் நிலை என்பதை எழுவாயாகவும், அன்பின் வழியது என்பதையே பயனிலையாகவும் கருதினர்.

உயிர்நிலை என்பதற்கு உயிர்நிலை பெற்ற உடம்பே யாகும் என்று பொழிப்புரைத்தாலும், கருத்துரையில்

பதவுரையாகவே உயிர்நிலை—உடம்பு என்று சொற்பொருள் கூறினர், புலவர் குழந்தை.

(3) மேலே சுட்டியபடி உயிர்நிலை என்பதற்குப் பரிமே லழகரும் பிறரும் உயிர் நின்ற உடம்பாகும் என்றே உரைத்த னர். உயிர்க்கு இருப்பிடம் என்றனர் ந. சி. கந்தையா. உயிர்நிலை நிற்கும் என்று எப்படியோ இதனை வினைமுற்றுப் பொருள் படுத்தினர், பரிதியார். உயிருள்ள உடம்பு என்றனர் மலையாள மொழிப் பெயர்ப்பாசிரியர் வெண்ணிக்குளம், இந்தி மொழி பெயர்ப்பாசிரியர்கள் சங்கர ராஜு நாயுடு, கவிஞர் வேங்கட கிருட்டிணன் ஆகியோர் 'உயிருடம்புடன் வாழ்வர்' என்றனர். ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் ஐ. டி. தங்கசாமி. 'உயிர் உள்ளமைக்கு அடையாளம்' என்றும், 'உயிருள்ள உடம்புக்கு அடையாளம்' என்றும் பேராசிரியர் இலக்குவ னும், கவிஞர் இராமலிங்கனும் கூறினர்.

(4) அஃதிலார்க்கு என்பதன் பின் 'வாழ்வு' என்பது தொக்கு நிற்பதாக இம்மணிவிளக்கவுரையும், உடம்புதொக்கு நிற்பதாகப் பரிமேலழகரும் பிறரும் கொண்டது மேலே சுட்டப்பட்டது. பெரும்பாலோர் பின்வரும் பயனிலை நோக்கி உடம்பு என்ற பொருள் பெற வைத்தனராயினும் இலக்கண முறையில் தொகுசொல் எதுவும் கொள்ளவில்லை.

அஃது என்பதை இம்மணி விளக்கவுரை முன்வாசக முடிவு முழுவதும் சுட்டுவதாகக் கொண்டது. உரையாசிரியர் கள் அனைவரும் அஃது என்பதன் கட்டுமுதல் 'அன்பு' என்றே கொண்டனர்.

(5) இரண்டாம் வாசகப் பயனிலையின் பின் 'போன்றது' வருவித்து, குறட்பாவில் உவமையணியைத் தெளிவாகக் கண்ட உரை இம்மணி விளக்கவுரை ஒன்றேயாகும். ஆயினும் இப்பொருள் கிட்டத்தட்ட எல்லா உரைகளிலும் தொனிப் பதேயாகும்.

(6) 'என்பு தோல் போர்த்த உடம்பு' என்பதற்குப் பரிமேலழகர் 'என்பினைத் தோலால் போர்த்தனவாம், உயிர்

நின்றனவாகா' என்று பொழிப்புரைத்து, 'இல்லறம் பயவாமையின் அவை அன்னவாயின' என்றார்.

அன்பின் வழி என்பதைப் பரிமேலழகர் இல்லறமட்டுமே தனிப்படச் சுட்டியதாகக் கொண்டார் என்பது தெளிவு.

காலிங்கர்க்கும் பரிமேலழகர் கருத்தே உடம்பாடு என்பதை அவர் உரை, 'யாவர் மாட்டும் அன்புடைமையாகிய இல்வாழ்வார்க்கு' என்று தொடங்குவதால் அறியலாம்.

ஆனல் இம்மணி விளக்கவுரையை மணக்குடவர் நோக்குகிறர் என்று தோற்றுகிறது. ஏனெனில் அவர் குறட்பாக் குறிப்புரையாக, 'இது வீடு பெருர் என்றது' என முடித்துள்ளார்.

(7) இவ்வதிகார இறுதி நான்கு குறட்பாக்கள் (7-10) சுட்டிப் பரிமேலழகர் 'இந்நாஃகு பாட்டாலும் அன்பின்மை வழிப்படும் குற்றம் கூறப்பட்டது' என்ருர்.

(8) குறட்பாவையே பெரிதும் ஒத்த மலையாள மொழிபெயர்ப்பாசிரியரின் மொழிபெயர்ப்பு, தமிழரும் எளிதுகாணும் அழகுடையது.

> 'உள்ளில் அன்பு உள்ள தாணு உயிர்மேனி; மற்றெல்லாம்
> எல்லினே த் தோல்மூடும் கோலம்'

ஆணு இங்கே ஆகும் என்ற பொருளுடையது. எல்லினே என்பது எலும்பினை என்பதாம். உயிர் மேனி என்பது உயிருள்ள உடம்பு.

(இரண்டாம் பகுதி முற்றிற்று)

★
★★